உபக்ரகிபெம்

என்னும்

பிரபஞ்ச உற்பத்தி

திருமணஞ்சேரி - ருத்ரசாமி முதலியார்.

உலகரகசியம்

என்னும்

பிரபஞ்ச உற்பத்தி

"சிவமஹா மந்திரம், நவக்கிரக மஹா மந்திரம், மூலிகை மர்மம், சிவசொரூப சாஸ்திரம், சுகந்த பரிமள சாஸ்திரம், கனக சாஸ்திரம், மாதர் பூஷணம், விஷவைத்திய சிந்தாமணி, நாரதர் கலகம், பெண்கள் ருது ஜனன ஜாதகம், விவாக சாஸ்திரம், திருநேத்திர சிந்தாமணி"

முதலிய நூல்களுக்கு ஆசிரியர்:

சிறுமணவூர். முனிசாமி முதலியார்

இயற்றியது

B. R. அரங்கசாமி நாயகர்

பதிப்பாளர் :: :: சென்னை.

பதிப்புரிமை] [விலை ரூ. 4

பொருளடக்கம்

முதலாவது

உலகோற்பத்தி காண்டம்

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்
சம்பத்தீவு	7	காலப் பிரிவு	73
பிலட்சத்தீவு	8	வாரங்களின் பிரிவு	74
சான்மலித்தீவு	,,	கல்பாந்தப் பிரளயம்	75
குசைத்தீவு	,,	நைமித்திகப் பிரளயம்	77
கிரௌஞ்சத்தீவு	9	பிராகிருதப் பிரளயம்	78
சாகத்தீவு	,,	ஆத்தியந்திகப் பிரளயம்	82
புட்கரத்தீவு	,,	பிரபஞ்ச அளவைப்பற்றி ஸ்ரீ சரவணப்பெருமாளையரவர்கள் கருத்து	87
பிரமாண்டக் குறிப்பு	10	பூமியின் அளவு	88
ஆதிசேடன் சிறப்பு	11	மேருவின் சொரூபம்	89
நரகலோகம்	13	சமுத்திரநிலை	,,
எமதண்டனை	16	சம்புத்தீப நிலை	,,
எமலோகம்	17	நவ வருடம்	,,
எமலோகமார்க்கம்	18	வருட மலைகள்	90
அண்டகோச அடுக்கு	21	வருடங்களினளவு	,,
மண்டல அடுக்கு	31	யவகோடி முதலாகிய பட்டண நிலை	,,
பிரம சந்ததி	33	பிலட்சாதி தீபங்களும் இட்சு முதலாகிய சமுத்திரங்களும்	91
சூரிய ரதமும் மண்டலமும்	36	பூமியின் விபாவங்கள்	,,
சந்தியா காலம்	41	பூமியிலெங்கே யிருக்கின்றவர்களுக்கும் மேலேயிருக்கின்றோமென்னும் அறிவு	92
தான காலம்	42	பசக்கிர படலம்	93
யாக காலம்	,,	கிரக நட்சத்திர நிலை	94
பரமபதம்	44	கிரகபூமி யந்திரம்	,,
கங்கையின் பிறப்பு	45	கிரகாதி கட்சிகள்	,,
ஆதித்தர் பன்னிருவரும் அவர்களுக்குச் சகாயபுருடனும்	47	கட்சி அளவு	95
கிரியா விசேடம்	49	கட்சியின் விபாகமும் களையும்	,,
சந்திரமண்டலச் சிறப்பு	52	கிராந்தி மார்க்கம்	96
புதன் முதலிய கிரகாதம்	53	பசக்கிர நிலை	,,
அண்ட அளவின் சுருக்கம்	57		
மானிடஜென்ம உற்பத்தி	59		
ஐவகை நிலங்கள்	68		
காலப்பிரமாணம்	70		
கால அளவு	,,		

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்.
துருவ நிலை	96	உதயாஸ்தமோற்றம்	102
பஞ்சாங்க சுழற்சிக்குக் காரணம்	97	திசைகளின் தோற்றம்	104
பஞ்சாங்கத்தின் சுற்றுதல் விதம்	,,	பகலிரவுகளின் தோற்றம்	,,
ராசிகளின் கிழக்கு கடை	,,	சுமேருவாசிகளின் பகலிரவுகள்	105
பகனபூர்ணம்	,,	வடவாமுகவாசிகளின் பகலிரவுகள்	,,
ஆகாசக் கட்சி	98	சுமேரு வடவாமுக வாசிகளுக்குப் பகலிரவுகளின் வேறுபாடு	,,
அண்டப் பரப்பு	98	தென்புலத்தார் பகலிரவுகள்	106
விவகார படலம்	99	சூரிய கிரகணம்	,,
சூரியகதி	,,	சந்திர கிரகணம்	,,
விசுவன் மண்டல நிலை	,,		
விசுவச் சாயை	100		
உத்தரத்தட்சண கிரந்திகள்	101		
வேனிற்பருவ பனிப்பருவங்களின் வெம்மை தண்மை	,,		

இரண்டாவது

மக்கள் காண்டம்

மனிதர்களின் பிராணநிலை	109	தரிசனை இலக்கணம் (சூரிய தரிசனம்)	115
சூரியகலையில் செய்தற்குரிய காரியங்களாவன	110	நெய்யில் தோற்றும் சூரியனுருவமும் பலாபலனும்	116
சந்திரகலையில் செய்தற்குரிய காரியங்களாவன	,,	சந்திர தரிசனம்	118
சரசாத்திர சமாதானம்	,,	கருட தரிசனம்	119
சரசாதனத்திற்கு ஆசனமும் பலனும்	111	சயன லட்சணம் (படுக்குந்திசை)	,,
சரசாதன இயல்பு	,,	படுக்கையின் தானம்	120
சரத்தைக்கொண்டு அறத்தைப்புரிதல் (அதாவது குறி சொல்லுதல்)	112	படுக்கை இலட்சணம்	,,
சூரியக் குறி	,,	நித்திரையின் இரகசியம்	,,
சந்திரக் குறி	113	நித்திரைக்கு ஆகாத இடம்	,,
சூழிமூனைக் குறி	,,	நித்திரைக்குரிய காலம்	121
பிரதானக் குறி	,,	நித்திரையின் பொது லட்சணம்	,,
சரத்தின் பரிபாஷை	114	நித்திரைக்காகாத பாயல்கள்	,,
சரசாதனர் சாப்பாடு	,,	படுக்கையினம்	122
சரயா தரிசனம்	115	மேலோர் படுக்கை	,,
		விழிப்பு தரிசனம்	,,

விஷயம்.	பக்கம்.
நித்திரைவிட் டெழுங்கால் விழிக்கும் பொருள்கள்	123
பார்க்கத்தகாத பொருள்கள்	124
மலசலக் கழிவு	,,
மலம் கழிக்கும் திசை	,,
மலம் கழிக்கும் இடம்	,,
மலசலங்களை அடைக்கலாகா	125
தந்தசுத்தி இலக்கணம் (பற் கோலுக்குரிய மரங்கள்)	,,
பற்கோல் எடுப்பதற்கு மந் திரம்	126
பல் விளக்கும் திசை	,,
பற்கோல் அளவு	,,
பல் துலக்கும் காலம்	127
பல் துலக்க ஆகாதவை	127
பல் துலக்க ஆகாத தினங்கள்	,,
பல் துலக்க விலக்கிய நாட்க ளுக்குச் சாந்தி	128
ஸ்நான விதி	,,
ஸ்நான காரணம்	,,
நீராடுவோன்	129
நீரின் இரகசியம்	,,
வைணவ நித்திய கன்மம்	130
சந்திரக் கிரியை	131
பூசுத்தம்	,,
புராண சமனம்	,,
சங்கற்பம்	132
மார்ச்சனம், சரீரத்தின் புறச் சுத்தி சாதனமாயுள்ளது	133
சலபானம், சரீரத்தின் அகச் சுத்தி சாதமாயுள்ளது	,,
மிருத்தியாசமனம்	134
பிராணயாமம்	135
சந்தியாங்க தருப்பணம்	136
காயத்திரி இலட்சணம்	137
சந்திக்கடனுக்குரிய மார்ச் சனம்	141
உபத்த பானம்	142

விஷயம்.	பக்கம்.
புருடசூத்த நியாசம்	142
சூதக முதலிய காலவிதி	144
காயத்திரிசெபத்தின் சிறப்பு	145
சந்திசெய்யாவிடில் பாவ மென்பது	,,
போசன விதி	146
சைவர் அனுட்டான விதி	148
வருணச்சிரமங்களுக் குரிய விபூதிகள்	149
விபூதியின் ஸ்நாநாதி விதிகள்	,,
திரிபுண்டரஸ்தான விவரம்	150
சைவர்கள் திரிபுண்டரம் தரிக்கும் வகை	,,
நான்கு வருணத்தாரும் தரி க்கும் வகை	151
ஆச்சிரமிகள் அணியவேண் டிய விதி	151
விபூதி அணியுமுன்னம் சை வகிரியாநுட்டான விதி	,,
விபூதிதாரண அனுட்டானம்	152
அங்க மந்திரவிதிகள்	,,
விபூதி மத்தியிற் பொட்ட ணிய வேண்டுவதானால்	154
ஆசமனம்	155
புரோட்சணை	,,
திரிபுண்டர மகத்துவம்	156
மானதபூசைக்குரிய பற்பத் தியானம்	,,
உருத்திராக்க தாரணவிதி	159
உருத்திராக்கோற்பத்தி	,,
உருத்திராக்கம் அணியும் அங்கங்கள்	160
காலைச் சந்தியாவந்தனம்	163
மத்தியான காயத்திரி	164
மாலைச் சந்தியாவந்தனம்	,,
சில பொதுவிதிகள்	166
விவாக விதி	168
முக்கிய குறிப்புகள்	207

விஷயம்.	பக்கம்.
குல தருமம்	208
சாதக கன்மம்	,,
நாம கரணம்	,,
அன்னப்பிராசனம் முதலியவை	209
உபநயனம்	,,
சௌளகன்மம்	,,
இலௌகீக வைதீக பரம சாதனமாயுள்ள நல்லொழுக்கம்	210
வியாதி அணுகா விதி	214
பிரேதசன்ம மடைவோர் தேகநிலையும் புண்ணியச்செய்கையும்	221
ஆன்னிகம், இலௌகிக சிந்தனை	222
காலைக் கடன்	222
பிதுர்தர்ப்பணம்	223
சூரியார்க்கம்	224
வைசுவதேவபூதபலி	,,
சிந்தனை	,,
அதிதிகளை உபசரிக்கை	225
போசனஞ் செய்யுமுறை	225
சிரார்த்த விதி	228
மாளய வைபவம்	232
ஆசௌசம் அல்லது தீட்டு	234
பிறப்பிற்கும் இறப்பிற்கும் உள்ள தீட்டும், பங்காளித் தீட்டும்	235
தேசாந்திரத்தீட்டு	,,
அடக்கவிதி	237
சவம்கொண்டுபோகும் திசை	,,
விருடோற்சனம்	,,
சிரார்த்த தானம்	,,
சிரவணகிரியை	238
சந்தியோதக பலம்	,,
இடசுத்தம்	,,
திலதருப்பணம்	239
தருப்பை	,,
கலசம்	,,
சிரார்த்தாபிசாரம்	,,
சிரார்த்தஞ்செய்யும் விதி	240
சாத்திரபேதம்	247
கலிதருமம்	254

மூன்றுவது

தேவோற்பத்தி காண்டம்

கணேசர் உற்பவம்	259
சுப்பிரமணியர் உற்பவம்	269
வீரபத்திரர் காளி பூதகணங்கள் உற்பவம்	276
பசுவின் அங்கலட்சணம்	278
விஷ்ணு உற்பவம்	282
மச்சாவதாரம்	284
கூர்மாவதாரம்	284
வராகவதாரம்	287
நரசிங்காவதாரம்	308
வாமனவதாரம்	310
பரசுராமாவதாரம்	315
இராமாவதாரம்	322
பலராமாவதாரம்	346
கிருஷ்ணவதாரம்	355
கலிக்காவதாரம்	380
கருடன் உற்பவம்	381
ஆஞ்சனேயர் உற்பவம்	382
சிவகலாரகசியமென்னும் சிவமகாவைபவம்	389

விஷயம்.	பக்கம்.
சுநந்தமுனிவர் முஞ்சிகேச முனிவரெனப் பெயர் பெற்ற காரணம்	428
சாமுண்டி உற்பவம்	429
சிதம்பர இரகசியம்	431
வியாக்கிரபாத மகாமுனிவர் உற்பவம்	434
உபமன்னிய மகாமுனிவர் உற்பவம்	,,
பதஞ்சலி மகாமுனிவர் உற்பவம்	435
திருத்தில்லைக் கனகசபை ஆனந்தத் தாண்டவ தரிசனம்	445
ஸ்ரீநந்திதேவர் உற்பவம்	454
சத்திகள் உற்பவம்	457
சத்திபீடம் - 64	460
தாட்சாயணி திருவவதாரம்	462
பார்வதி திருவவதாரம்	463
தடாதகைப் பிராட்டியார் அவதாரம்	464
உருத்திரர் உற்பவம்	466
தெய்வயானை யம்மையார் உற்பவம்	467
வள்ளியம்மையார் உற்பவம்	469
பாலாரிட்ட தேவதைகள்	472
தருமதேவதைகள் தவப்பிரமாக்களுற்பவம்	473
மசான உருத்திரர் உற்பவம்	474
அச்சரர் உற்பவம்	,,
சத்தகன்னியர் உற்பவம்	,,
முப்பத்து முக்கோடி தேவர்கள் உற்பவம்	475

விஷயம்.	பக்கம்.
அக்கினிதேவர் உற்பவம்	475
பிதிரர்கள் உற்பவம்	,,
சேடன் முதலிய நாகராசர் உற்பவம்	476
சூரியன் இரதசாரதி அல்லது அருணனுற்பவம்	477
நட்சத்திரங்களுற்பவம்	,,
நட்சத்திரங்களைக் காணும் வகை	478
நவக்கிரக உற்பவம்	479
திக்குப்பாலகர் உற்பவம்	480
மன்மதனுற்பவம்	482
இரதி உற்பவம்	485
குபேரன் உற்பவம்	487
கின்னரர், கிம்புருடர் உற்பவ	488
அட்டவசுக்கள் உற்பவம்	,,
கந்தருவர் உற்பவம்	,,
முனி காட்டேரிகள் உற்பவம்	,,
சத்தமுனிவர் உற்பவம்	489
சிவமுனிவர் உற்பவம்	490
வயிரவர் உற்பவம்	,,
ஐயனாரப்பன் உற்பவம்	491
காத்தவராயனுற்பவம்	493
சாளக்கிராம உற்பத்தி	497
மதுரைவீரன் உற்பத்தி	,,
மாரியம்மன்	499
சிரஞ்சீவிகள்	508
உபேந்திரர்	,,
மாப்பிள்ளை வீரன்	,,
பத்தினியம்மன்	,,
ஆண்டாள் உற்பவம்	509
மகாலட்சுமி உற்பவம்	513

மதபேத காண்டம்

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்.
மதங்கள்	516	குணசைவம்	529
இந்துசமயம்	519	நிர்க்குணசைவம்	,,
காலம்	,,	அத்துவாசைவம்	530
இந்துக்கள்	,,	யோகசைவம்	,,
இந்துக்களின் பாஷை	520	ஞானசைவம்	,,
இந்துக்களின் சாத்திரங்கள்	,,	அணுச்சைவம்	,,
தெய்வங்கள்	,,	கிரியா சைவம்	,,
சாதி	,,	நான்குபாத சைவம்	,,
ஆசாரியபீடங்கள்	521	சுத்த சைவம்	531
மதங்கள்	,,	வீர சைவம்	,,
முதலாவது சைவசமயம்	,,	கவுளயாமள மதம்	,,
ஆகமசம்பந்தமான சத்த சைவப்பகுதியில் சிவாத்விதி மதம்	523	உலோகாயதன் மதன்	533
		யோகசாரன் மதம்	,,
		மாயாத்தகன் மதம்	,,
சம்மேளித சைவமதம்	,,	வைபாடிகன் மதம்	,,
பாசுபதி மதம்	524	நிகண்டாவாதி மதம்	534
மகாவிரதி மதம்	,,	ஆசீர்வகன் மதம்	,,
காளாமுதன் மதம்	,,	பஞ்சபூதவாதி மதம்	,,
வாம மதம்	525	பஞ்சகோசவாதி மதம்	,,
வயிரவ மதம்	,,	நவக்கிரகவாதி மதம்	535
சிவசமவாதி மதம்	,,	சூரியவாதி மதம்	,,
ஐக்கவாதி மதம்	526	சந்திரவாதி மதம்	,,
சங்கிராந்திவாதி மதம்	,,	ஊழ்வாதி மதம்	,,
பிரவாகேசுரவாதி மதம்	,,	காலவிதி மதம்	,,
கபாலி மதம்	,,	மந்திரவாதி மதம்	,,
அவிகாரவாதி மதம்	527	எந்திரவாதி மதம்	,,
சைவபேதாபேதவாதி மதம்	,,	அவித்தவாதி மதம்	,,
அனேகசுரவாதி மதம்	,,	சாத்தேய மதம்	536
சோடச சைவபேதம்	,,	கணபத்திய மதம்	,,
அணுசிவம்	528	சைன மதம்	,,
ஆதிசைவம்	,,	சார்வாக மதம்	,,
மகாசைவம்	,,	இந்திரியாத்துமவாதிகள் மதம்	537
பேதசைவம்	529	அந்தக்கரணத்துமவாதிகள் மதம்	,,
அபேதசைவம்	,,		
அந்தரசைவம்	,,		

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்.
பிராணுத்துமவாதி மதம்	537	அங்கோலியர் மதம்	558
சூனியவாதிகள் மதம்	,,	அரக்கான்தேச மதம்	,,
கௌமார மதம்	,,	காபிரிகள் மதம்	559
பிரமசமாச மதம்	,,	தார்த்தாரி மதம்	,,
ஆரியசமாச மதம்	537	ஜப்பான் மதம்	560
தியாசபி மதம்	538	சீய மதம்	,,
வைணவ மதம்	,,	பெருவியன் மதம்	561
பௌத்த மதம்	539	நியூசவுத்துலாந்து, கானடா மதங்கள்	,,
சீனதேசத்து மதங்கள்	540	பைகோ மதம்	,,
சௌராட்டிர மதம்	541	பிலப்பியன் மதம்	562
துருக்கர் மதம்	,,	மலாக்கா மதம்	,,
கிறீஸ்துவ மதம்	549	போர்னீயோ சுமித்திரா தீவுகளின் மதம்	,,
உரோமர் மதம்	552	ஜாவாதேச மதம்	,,
கிரேக்க மதம்	553	இலங்கைத்தீவார் மதம்	,,
எகிப்துதேச மதம்	554	மலாயதீவின் மதம்	563
காத்தினேவியர் அல்லது டியுடனிக் மதம்	555	லரப்லாந்தியர் மதம்	,,
மெக்சிகோ தேசத்தார் மதம்	556	மிசிசிபிதேச மதம்	,,
கினியாதேசத்து மதம்	557	பிலோரிடியன் மதம்	,,
பெனின் அட்டராதேச மதம்	558	காரபிதீவார் மதம்	564
கான்கோ மதம்	,,		

உலகரகசியம்

என்னும்

பிரபஞ்ச உற்பத்தி

முதலாவது

உலகோற்பத்தி காண்டம்

கடவுள் வணக்கம்.

கண்ணனைக் கமலத்தோனைக் கண்கள்மூன் றுடையகோனை
விண்ணவர் பதியைத் தொந்தி விளங்குமைங் கரனைப் போற்றி
மண்டல மிரண்டே முண்ட மகிமையுற் பத்தி சொல்லத்
தண்டமிழ் வாணி திவ்ய தமிழ்ப்பதங் காப்புத்தானே.

அம்மை வேண்ட அரனரு ளியபடி
இம்மை ரகசிய மினிது புகல்வாம்.

ஸ்ரீ கயிலையங்கிரியில் நந்திதேவர், வியாக்கிர பாதர், பிருங்கி, யக்ஷ, கின்னர, கிம்புருட, கருட, கந்திருவர் முதலாகிய மூப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத் தெண்ணுபிர ரிஷிகளும், பூத கணங்களும், தொண்டர் கூட்டங்களும் தன்னைச் சூழ்ந்து சிரங் களின்மேல் கரங்களைக் குவித்துப் பற்பல விதமாகத் துதித்து வணங்க, மின்னலைப் பழிக்கும் பொன்னொளி விளங்க இடப்பாகத்தி லமர்ந்த உமையவள், சிவபெருமானை நோக்கி "ஓ சுவாமி! அடி யாள் இப்பிரபஞ்ச உற்பத்தியையும் இதில் அடங்கியவைகளையும், பூமண்டலத்தின் அளவு உட்பிரிவு சீவர்கள் முதலியவற்றின் இயற் கையையும் அறிய விருப்பங்கொண்டேன் தேவரீர் அறிவிக்கத் திருவுளங் கனிந்தருள வேண்டும்" என்றிறைஞ்சி நிற்க, சிவபெரு மான் புன்னகையுடன் பார்வதியை நோக்கிச் சொல்லத் தொடங்கி னர்:—

கேளாய் பார்வதி! இப்பிரபஞ்ச உற்பத்தியையும், சிருஷ்டிக் கிரமத்தையும், இதில் அடங்கியவைகளையும் பூரணமாய்ச் சொல்

லப் புகின் மீண்டு விரிவாகும்; அன்றி அதைச் சீவர்கள் அறிந்துய்யும் பொருட்டே சொல்லுவதாகும். நாம் சமஷ்டியிலிருந்து செய்யும் விளையாட்டை வியஷ்டியாகிய சீவர்கள் பாசவசத்தினராதலின் அனுபவமாக உணரக்கூடாதவர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால், அதிக விரிவும் சுருக்கமுமின்றி அதை ஒருவாறு கச் சொல்கின்றேன் கேட்பாயாக.

எண்ணிறந்த அண்டங்களிலும் காணப்படாததாகியும், சர்வ லோகங்களிலும் பரிபூரணமாய் நிறைந்துள்ளதாயும், உருவாகியும் அருவாகியும், அருவுருவாகியும், தேவராகியும், மனிதராகியும், நடப்பன, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன முதலிய விலங்காகியும், தாவரமாகியும், ஆணாகியும், பெண்ணாகியும், அலியாகியும், இவையனைத்தும் அல்லனவாகியும் சகல விடத்தும் சாட்சி மாத்திரமாய் நித்தியனாய், சர்வப்பிரகாசனாய், ஆனந்தமயமாய், மனோவாக்குக் கதோசரனாய், ஏகமாய் விளங்கி யிருப்பவன் யானே. இவையன்றி மூலப் பிரகிருதியும், அதினின்று உதித்த சத்துவ ரஜோ தமோ குணங்களும், வித்தையும் இவ்வித்தையாகிய சுத்த மாயையின் கண் தோன்றிய பிரம்ம விஷ்ணுவாதி திரிமூர்த்திகளும், அவித்தையும், இவ் வவித்தையாகிய அசுத்த மாயையினின்று உதித்த கிஞ்சிக்ஞராகிய சீவர்களும், விக்ஷேபம் ஆவரணமுமாகிய சத்திகளும், ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவியாகிய தன்மாத்திரை பூதங்களும், மனம் புத்தி, சித்தம், அகங்காரமாகிய அந்தக் கரணங்களும், சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்ராணமாகிய ஞானேந்திரியங்களும், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தமாகிய கன்மேந்திரியங்களும், இவ் விந்திரியங்களின் தொழில்களும், பிராணன் அபானனாதி பஞ்சவாயுக்களும், தூலபஞ்ச பூதங்களி னின்று உண்டான சத்த தாதுக்களாலான தூலதேகங்களும், இதில் அடங்கிய மற்ற தத்துவங்களும், இவையாவும் யானே. என் சந்நிதானத்தினின்றே இவை உதித்தன; முடிவில் இவையாவும் என்னிலேயே ஒடுங்குகின்றன. இவையனைத்திற்கும் உள்ளும் புறம்புமாய் எள்ளில் எண்ணெய்போலும் உடலில் உயிர்போலும் நிறைந்துள்ள நித்தியன் நான் ஒருவனே.

இன்னுங் கேளாய், ஓ பார்வதி! இப் பூமண்டலம் பத்தொன்பது கோடியே எழுபது லட்சம் சதுரமயில் விஸ்தீரணமுள்ளதாயும்,

ஜம்புத்தீவு, பிலட்சத்தீவு, சான்மலித்தீவு, குசைத்தீவு, புட்கரத்தீவு, சாகத்தீவு, கிரௌஞ்சத்தீவு என்னும் ஏழு தீவுகளாகப் பிரிக்கப் பட்ட உட்பிரிவுகளை யுடையதாயும், உவர் நீர்க்கடல், கருப்பஞ் சாற்றுக்கடல், தேன்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடலீ, சுத்தநீர்க்கட லென்னும் ஏழு சமுத்திரங்களாற் சூழப்பட்டு மிருக்கிறது.

ஜம்புத்தீவு எல்லாத் தீவுகளுக்கும் நடுவிலுள்ளது. அதன் நடுவிற் பொன் மயமான மேரு பர்வதமானது பூமியில் பதினாயிரம் யோசனை வேரூன்றியும், எண்பத்து நான்காயிரம் யோசனை உயர்ந்தும் உள்ளது; அதின் சிகரம் முப்பத்திரண்டாயிரம் யோசனை அகலம் உடையது. மேருமலையானது பூமியாகிய தாமரை மலருக்கு ஒரு பொட்டுப்போல் விளங்கும். ஹிமாசலம் ஏமகூடம் நிஷத மென்னும் மூன்று பர்வதங்களும் மேருவின் தென்திசையிலும்; நீலம், சுவேதம், சிருங்கி யென்னும் மூன்று பர்வதங்களும் மேருவின் வடதிசையிலும்; நவரத்தின மயமான சாரலும் பதுமராகமணிபோன்ற செந்நிறமும் அக்கினிசுவாலை போன்ற பிரகாசமும் பெற்று விளங்குகின்றன.

மேருவின் தென்பக்கலில் பாரதம் கிம்புருடம் அரிவருடமென மூன்று வர்ணம் உள்ளன. இவ்வர்ணங்கள் ஒவ்வொன்றும் ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரணம் உடையன. நடுவிலுள்ள இளாவிரத கண்டத்தின் மத்தியில் மேருமலை மிகவும் நன்றாயிருக்கும். மேருவின் கிழக்கில் மந்தரமும் தெற்கில் கந்த மாதனமும்; மேற்கில் விபுலமும்; வடக்கில் சுபார்ஸ்வமும் என நான்கு பர்வதங்கள் நாற்புறத்திலும் நின்று பதினாயிரம் யோசனை அகலமும் ஒன்பதினாயிரம் யோசனை உயரமுங் கொண்டு அம்மேருவுக்கு உறுதியாக விட்கம்ப சைலங்களாய் நிற்கும். இப் பர்வதங்களில் மந்தரகிரியில் கடப்பமரமும், கந்தமாதன கிரியில் நாவன் மரமும், விபுலகிரியில் அரசமரமும், சுபார்சுவ கிரியில் ஆலமரமும் விளங்கும்; இம் மரங்கள் ஆயிரம் யோசனை விஸ்தீரண முடையன.

மேற்கூறிய மகாமேருவுக்குத் தென்பாரிசத்தில் விளங்குங் கந்தமாதன கிரியிலிருக்கும் ஜம்பு விருக்ஷமென்னும் நாவல் மரமானது இரண்டாயிரம் யோசனை உயரமுள்ளது. நீண்ட அளவுபெற்ற நாவல் மரம் நிற்குந் தன்மையினால் பரதகண்டத்தை நாவலந்தீவு

எனப் பண்டிதர்களால் சொல்லப்படும். அன்றியும், நான்முகனென் னும் பிரமனது வலது புயத்தில் உதித்த சாம்புவென்னும் அரசனது முதற்குமாரனாகிய அங்கதீரனால் அரசாளப்பட்ட இந்த நாவலந் தீவை மேற்படி அங்கதீரனுடைய ஒன்பது புத்திரரில் மூதற் புத்திர னாகிய பரதன் என்பவன் அரசாட்சி செய்து வந்த படியால் பரத கண்டமென்றும் வழங்கப்படுகிறது. இதன் விவரத்தை மேல்வரும் விசேடங்களுடன் விளங்குவோமாக. இந்தத் தீவுக்கு நாவலந்தீவு என்று பெயர். அம்மரத்தின் பழங்கள் ஒவ்வொன்றும் யானையைப் போல் உருவமுடையனவாய்ப் பழுத்து நிலமிசை விழுந்து அப் பழச்சாற்றி னின்று பெருகும் ஆறுனது ஜம்புநதி ஆகிறது. அதன் சாரத்தைப் புசிப்போர் துக்கம், நோய், விருத்தாப்பியம் இந்திரிய நாச முதலியன அடையாமல் எப்பொழுதும் இன்பத்துடன் வாழ்ந்திருப் பார்கள்.

அந்நதிக் கரையிலுள்ள மண் பொன்மயமா யுள்ளது. மேரு வுக்குக் கிழக்கே பத்ராசுவமும் மேற்கே கேதுமாலமும் என இரண்டு மரங்கள் உள்ளன. அவற்றிற்கு இடையிலே தான் இளாவிரத கண்டமுள்ளது; கிழக்கில் மந்தரமலையடியில் அருணமும், தெற்கில் கந்தமாதனத்தடியில் மானத சரசும், மேற்கில் விபுலகிரி யடியில் சீதோதகமும், வடக்கில் சுபார்சுவகிரியடியில் மகா மடுவும் என நான்கு மடுக்கள் உண்டு. இம்மடுக்களில் முறையே சயித்திரக் காவி, சித்திரை, வைப்பிரசை, நிருதாக்கியம் என்னும் நான்கு நந்த வனங்கள் உண்டு. இந் நந்தவனங்களின் நடுவில் முறையே தாமரை மலருடன் கூடிய தடாகமும், குமுதங்களோடு கூடிய மானதசரசும், செந்தாமரையுடன் கூடிய விமலோதகமும், நீலோற்பலத்துடன் கூடிய மனோரதமு மென நான்கு ஓடைகள் உண்டு. சீதரஞ்சனம், குமுதம், குராஹா, மால்யவான் என்னும் பர்வதங்கள் பூர்வ பாகத்திலும், கேசரபர்வதம் தட்சண பாகத்திலும்; திரிகூடம், சிசிரம், பதகம், ரஜதம், நிஷதம் இவைகள் தட்சணபாகத்திலு முள்ளன. மேற்புறத்தில், சிசுவாசலசு, வைதூரியம், கபிலம், கந்தமாதனம், ஜாருதி என்னும் பர்வதங்களும், வடப்பாகத் தில், சங்கசூட மென்றும் ரிஷப மென்றும் கம்ச மென்றும் காலஞ்சர மென்றும் பர்வத கேசரங்களும் உள்ளன. இந்த மேரு மலையின் உச்சியில் பதினாலாயிரம் யோசனை விஸ்தாரத்தோடு

கூடியதா யுள்ளது பிரமலோகம். இதைச் சுற்றிலும் அட்ட திக்குப் பாலர்களின் உலகங்கள் உண்டு. அந்தப் பிரமலோகத் தின் எட்டுத் திக்கிலும் சந்திரமண்டலம் பிரகாசிக்கிறது. விஷ்ணு பாதத்திலுண்டாகிய கங்கையானது அவ்விடத்தில் சீதை யென்றும், அலக நந்தா வென்றும், சுசக்ஷுசு வென்றும், பத்ரா வென்றும் நான்கு திக்குகளிலும் பிரவாகிக்கின்றன. சீதையென்னும் நதி கிழக்கிலும், அலக நந்தா தெற்கிலும், சுசக்ஷுசு மேற்கிலும், பத்ரா வடக்கிலும், பிரவாகித்துப் பர்வதங்களை அதிக்கிரமித்து, சமுத்தி ரத்தை அடைகின்றன.

மேலும் சுநீலம், நிஷதம், மாலியவான், கந்தமாதன மென்று சொல்லப்பட்ட நான்கு பர்வதங்கள் தாமரை மொட்டுப் போன்ற மேருமலையின் நாற்புறத்திலும் உள்ளன. பத்ர, கேதுமால, பதரா சுவ, குரு வென்னும் நான்கு வருஷங்கள் மேருவாகிய தாமரைக்கு இதழ்கள் போல் இருக்கின்றன. அதன் மத்தியில், தேவகூடமும்; தென்னண்டை கந்தமாதனமும்; வடவண்டை கைலாசமும்; முறையே கிழ்மேல் பாகங்களில், நிஷத நீல பர்வதங்களும்; மேரு வின் நான்கு புறத்தின் சிகரங்களில் ஒவ்வொரு பாதத்திலும் இரண்டு கேசர பர்வதங்களும் உள்ளன. அதில் சைலேத்துரோணி யென்னும் ஓர் ஓடை உண்டு; அதைச் சுற்றிலும் மனத்திற்குரிய புட்பங்கள் பூத்த நந்தவனங்களும் காடுகளும் மற்றவையும் உள்ளன.

அந்தக் காடுகளில், எப்பொழுதும் யக்ஷர்களும் கின்னரர்களும் கந்தருவர்களும் விளையாடிக்கொண் டிருப்பார்கள். இதற்குப் பூலோக சுவர்க்க மென்னும் பெயர் உண்டு. தருமஞ் செய்தவர்கள் இந்த உலகத்திலே சுகத்தை அனுபவிப்பார்கள். இதனைப் பாவிகள் பார்க்க வும் அடையவும் கூடாது. கிம்புருஷாதி எட்டு வர்ஷங்களில் வசிப் போர்களுக்கு கோபம், துக்கம், ஆயாசம், துவேஷம், பசி, நரகம், பயம், சோம்பல் முதலியன கிடையா. அவர்கள் எப்போதும் நோயற்ற தேகமும் துக்கமில்லா மனமும், இருபத்திரண்டாயிர வருஷம் ஆயுளு மடைவார்கள்.

அல்லாமலும், கிருதமென்றும் த்ரேதா வென்றும் சொல்லப் பட்ட நதிகள் அப்பூமியில் எங்கும் பிரவகித்துக்கொண் டிருக்கின்ற மையால் மழை கிடையாது. அப்பூமியின் போகம் அளவிடப் பட் டுள்ளது. அதிசமாக அனுபவிக்க முயன்றாலும் பிரயோசனப்

படாது. அப்பூமியின் நதிதீரத்திலுள்ள மணற் பாகங்கள் பொன் னிறமாகவும், புட்பங்கள் சுவர்ண மயமாகவும், கரைப்புறம் இரத் தின மயமாகவும் பசும் புல்லுள்ள திட்டுகள் வைடூரியமாகவும் விளங்குவதால், அங்குள்ளவர்கள் விளையாட்டிலே பொழுது போக்கு வார்கள்.

கேளாய் பார்வதி! இனி இமயபர்வதத்தின் தட்சண பாகத் துள்ள பாரத வர்ஷத்தின் விஸ்தீரணத்தைச் சொல்லுகிறேன். அது ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரணத்தோடு கூடியது; இதற்குக் கர்ம பூமி யென ஒரு பெயருண்டு. இப்பூமியில் இருந்து புண்ணியஞ் செய்தோர் புண்ணிய பூமியாகிய தேவலோகத்தையும், பாவம் பண்ணினோர் நரகத்தையும், ஞானிகள் மோட்சத்தையு மடைவார்கள். அன்றியும், இப் பாரத வர்ஷம் நவகண்டங்களாகப் பிரிக்கப்பட்டு இந்திரத்தினம், கசேரு, தாம்ரபர்ணம், கபஸ்திமான், நாகதீபம், சௌமியத்தீபம், கந்தர்வம், வாருணம், பரத மென்னும் பெயர்க ளோடு வழங்கும். இவற்றில் ஒன்பதாவதாகிய பரத கண்டமானது அனேகமாய்ச் சமுத்திரங்களாற் சூழப்பட்டதும், வடக்குத் தெற்கில் ஆயிரம் யோசனை விஸ்தீரணத்தோடு கூடியதுமாக இருக்கும்.

இக் கண்டத்தின் கீழ்புறத்தில் கிராதகர்களும், மேற்புறத்தில் யவனர்களும், தட்சண பாகத்தில் ஆந்திரரும், வடக்கில் கிறிஸ்தவர் களும் வசிக்கிறார்கள். இக்கண்டத்தின் மத்தியில் மூப்பதுகோடி தொகையுள்ள பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய நான்கு வருணத்தோரும் வசிக்கிறார்கள். இவர்கள் அசுவமேதாதி யாகங்க ளாலும், புண்ணிய தீர்த்த ஸ்நானங்களாலும், தேவதாப் பிரதிட் டைகளாலும், கோதான முதலிய தானங்களாலும் நற்கதி அடைகி றார்கள். இப்பூமியில் மகேந்திர மென்றும், மலயமென்றும், சகிய மென்றும், சுத்திமா னென்றும், ரிட்சண மென்றும், விந்திய மென்றும், பாரியாத்திர மென்றும் ஏழு குல பர்வதங்கள் இருக்கின்றன. வேத ஸ்மிருதி யென்றும், நர்மதா வென்றும், சுரஸாவென்றும் பேர் பெற்ற நதிகள் பாரியாத்திர மென்னும் பர்வதத்தில் உற்பத்தியாகி, நான்கு புறத்திலும் பரவி, இப்பூமியைப் பரிசுத்தஞ் செய்கின்றன.

விந்திய பர்வதத்தினின்று கோதாவரி, பீமா, தாபி முதலிய மகாநதிகள் தோன்றி, தங்களிடம் ஸ்நானபானஞ் செய்வாரது பாவங்களைப் போக்கி, பரிசுத்தஞ் செய்கின்றன. கிருஷ்ணவேணி,

காவேரி முதலிய மகாநதிகள் சகிய பர்வதத்தில் தோன்றி, தட்சண தேசத்தைப் பரிசுத்தஞ் செய்கின்றன. கிருதமாலா தாம்பிரபரணி முதலிய நதிகள் மலயபர்வதத்தில் உற்பத்தியாகி அவ்விடங்களைச் சுத்தி செய்கின்றன.

மகேந்திர பர்வதத்தினின்று ரிஷிகுல்யா என்னும் நதிகள் உற்பத்தியாகி, அப்புரங்களைப் பரிசுத்தம் செய்கின்றன. குமரி யென்னும் நதி, சுத்திமா னென்னும் பர்வதத்தி லுண்டாகிப் பரவுகின்றது. இப்பூமியில் நான்கு வருணத்தாரும் ஸ்நானபானங்களைச் செய்து இந்நதிகளால் சுகத்தையும் பரிசுத்தத்தையும் அடைகிறார்கள். இக்கண்டத்தில் நான்கு யுகம் உண்டு. மற்றத் தீபங்களில் இவ்விக யுகங்கள் இல்லை.

சம்புத்தீவு

இப்பரதகண்டத்திலுள்ள சம்புத்தீவானது கர்மபூமியானதால் அதிலுள்ள ஜனங்கள் கோதான முதலிய தானங்களையும், அக்கினி கோத்திர முதலிய சற்கருமங்களையும், தவமுதலிய யோகங்களையுஞ் செய்து நற்கதி அடைகிறார்கள். ஆகையால் ஒன்பது வகையாகிய வருஷங்களுள் பாரதவர்ஷமே சிறந்தது. மற்றவை யெல்லாம் போக பூமிகளே யன்றிப் புண்ணியஞ் செய்து நற்கதி அடையத்தக்கவை அல்ல.

ஆதலின், ஆன்மா ஜனன மநேகம் எடுத்தாலும் இப்பரத கண்டத்தில் அஃது ஒரு ஜனன மெடுப்பது அருமையிலும் அருமை. ஏனெனில், சுவர்க்க மோட்சங்கள் அடையக் காரணமாயிருப்பது இப் பரதகண்ட மாகையால்; தன்னியர்களாயிருக்கும் தேவர்களும் இப் புண்ணிய பூமியில் தோன்றினால் மறுபடியும் தேவாமிசம் அடையலாமென்று விரும்புகிறார்கள். இவர்கள் இப்பூமியில் தோன்றி என்னைத் தியானித்து உயர்ந்த பதவியை அடைகிறார்கள். ஆகையால் மோட்சலோகத்திற்கு வழிகாட்டும் முதற் கருவியானது, இப் பரதகண்ட மென்றே அறிவாய். ஓ பார்வதி! இப்பரத கண்டத்தின் அளவு முப்பத்து நாலாயிரம் யோசனை விஸ்தீரணமாம். உவர் நீர்க் கடல் இலட்சம் யோசனை விஸ்தீரண முடையதாய்ச் சம்புத்தீவைச் சூழ்ந்திருக்கும்.

பிலட்சத்தீவு

கேளாய், பார்வதி! பிலட்சத்தீவானது மேற்கூறிய ஜம்புத் தீவுக்கு இரண்டு கொண்டதாம். அதில் கோமேதகம், சந்திரம், நாரதம், தந்துபி, சோமகம், சுமனசு, விப்பிரராசம் என வர்ஷாசலங்களுண்டு. அப்பர்வதங்களில் எப்போதும் தேவர் கந்திருவர் முதலாயினோர் சந்தோஷத்துடன் வசிப்பார்கள். அதில் அநுதப்தா, சிகாபாபக்ஷி, த்ருவாதி, கிருபா, அமிருதா, சுகிர்த என்னும் ஏழு நதிகள் பிரவகிக்கும் அநேக சிறு நதிகளும் உண்டு. அங்குள்ளோருக்கு மனோவியாதி தேகபீடை முதலியவை கிடையா. அந் நதிகளில் ஸ்நானம் செய்து நீர் பருகினோர் பதினாயிர வருஷ காலம் சீவித்திருப்பார்கள். அவ்விடத்தில் சம்புத்தீவைப் போல யுகவஸ்துத இல்லை. காலம் முழுவதும் திரேதா யுகத்திற்குச் சமானமாகவே இருக்கும். பிராமணாதி நான்கு வருணத்தார்களும் இருக்கின்றனர். அவ்விடத்தில் என்னியும் நிருமாலியும் பிரமனும் வேத மந்திரங்களாற் பூசிக்கிறார்கள். அது கருப்பஞ்சாற்றுக் கடலாற் சூழப்பட்டிருக்கும்.

சான்மலித்தீவு

அதன் பின்னர், சான்மலித்தீவில் ஸ்வேதம், ஹரிதம், ஜீமுதம், ரோஹிதம், வைத்யுதம், மானவம், சுப்பிரபம் என ஏழுவர்ஷ பர்வதங்கள் உண்டு. அதற்கு சான்மலி என்னும் பெயர் அங்குள்ள விருக்ஷத்தாலேயே உண்டாயிற்று. அதற்கிரட்டிப்பாகச் சுராக்கடல் சூழ்ந்திருக்கும். சுக்லா, ரக்தா, ஹிரண்யா, சந்த்ரா, சகரா, விமோசனி, நிவர்த்தி யென்னும் ஏழு நதிகள் அவ்வர்ஷங்களினின்றும் பெருகும். அப்பூமியில் நான்கு வருணத்தாரும் உண்டு. அவர் எக்ஞ முதலியவற்றால் விஷ்ணுவை வணங்குவர். அவ்விடத்தில் தேவர்கள் உல்லாசமாக வசிப்பார்கள்.

குசைத்தீவு

இத்தத் தீவானது அச்சான்மலித் தீவுக்கு இரண்டு மடங்கு உடையது. இதில் அசுரரும், தேவரும், கந்தர்வர், கிம்புருஷாதிகளும், மானிடருள் நான்கு வர்ணத்தவர்களும் வாழ்வார்கள். ஆசார அநுஷ்டானங்கள் தவிராமாட்டார்கள். இங்குள்ளவர்கள் என்னியும் நிருமாலியும் பூஜிப்பார்கள். குசேசயம், அரி, ஜாதிமான், புஷ்ப

வான், மணிதருமம், மகாகைலம், மந்தராசலம் என்னும் ஏழு பர்வதங்களும், ஸுதபாவை, சிவை, பவித்திரை, சம்மதி, வித்யை, தம்பை, மஹீ என்னும் ஏழு நதிகளும் இன்னும் பல நதிகளும் உண்டு. இஃது இங்குள்ள குசையினாலே இப்பெயருற்றது. இதனை நெய்க் கடல் சூழ்ந்திருக்கும். (குசை - தருப்பை)

கிரௌஞ்சத்தீவு

கேளாய் பார்வதி! முன்சொன்ன தீவுக்குமேலானது, தயிர்க் கடலாற் சூழப்பட்ட கிரௌஞ்சத்தீபம். இதில், கிரௌஞ்சம்-வாமனம்-அந்தகாரம்-திவாவிருத்யம்-புண்டரீகம்-துந்துபி சுகனசு என்னும் ஏழு பர்வதங்களும், பலவிதமான விருட்சங்களும், புட்பவனங்களும், தேவர் காந்தருவர்களும், நான்கு வருணத்தவர்களும், நோயில்லாத வாழ்வை யுடையவராய் இருப்பார்கள். இதில் கௌரீ-குமுகவதி-சந்த்யா-ராத்திரீ-மனோஜவா - கியாதி - புண்டரீகா என்னும் ஏழு நதிகள் உண்டு. இங்குள்ளவர்கள் யோக மார்க்கத்தால் என்னைத் தியானிக்கிறார்கள்.

சாகத்தீவு

பாற் சமுத்திரத்தாற் சூழப்பட்டும், கிரௌஞ்சத்தீவுக்கு இருமடங்கு முள்ள சாகத்தீவானது, உதயகிரி - ஜலதாரம் - பரேதா - சாமம்-அஸ்தகிரி-அம்பிகாகிரி-கேசரி என்னும் ஏழு வர்ஷ பர்வதங்களை உடையது. நான்கு வருணத்தாரும் அங்கே உண்டு.

அதில், சுகுமாரி - குமாரி - நளினி-வேணுமா-இட்சு-ரேணுகா-கபஸ்தி என ஏழு நதிகள் உண்டு. அன்றி, அநேக மலைகளும் நதிகளும் உண்டு. அங்குள்ளவர்கள் தருமவான்களாக இருப்பார்கள். அவர்கள் யாகாதி கருமங்களாற் சூரியனையே எப்பொழுதும் பூசிப்பார்கள்.

புட்கரத்தீவு

அதற் கிரட்டிப்பாயாகிய புட்கரத் தீவானது, மானதசரசு என்னும் ஆயிரம் யோசனை விஸ்தீரணமான தடாகமும், அதில் தாமரை மலர்கள் ஐந்து யோசனை உயர்ந்தும் விளங்கும். அவ்விடத்துள்ளவர்கள் இராகத் துவேஷாதிகளும், உத்தமோத்தம பேதமும் இன்றிச் சத்தியவான்களாய், சுவர்ணமய அலங்காரத்துடன் சமானஸ்தர்களாய், ஜ்வராதி ரோகங்களின்றி, அறுசுவையோடு கூடிய

அன்னபானங்களைப் புசிப்பவர்களாகவும், சுகசீவிகளாகவும் பதினாயிரம் வருஷம் வாழ்பவர்களாயும் இருப்பார்கள். அது சுகமான இடம்.

புஷ்கரம் - தாரகி - கண்டம்-மகாவீதம்-நிபக்ரோதம் என்னும் இடங்களில் தேவாசுரர்களால் பூசிக்கப்பட்டவராய் பிரம்மதேவர் எழுந்தருளி யிருப்பார். அது சுத்த நீர்க்கடலாற் சூழப்பட்டிருக்கும். இவ்வாறு, சப்த சமுத்திரங்களாற் சூழப்பட்டிருப்பன சப்த தீவுக்களாம். சமுத்திர சலம், சந்திரன் விருத்தியாம்போது விருத்தியாகி அவன் குறையும்போது குறைந்துவிடும். சமுத்திரத்தி லுள்ள வடவாமுகாக்கினி அந்த ஜலப்பெருக்கைப் பருகிவிடும். சுத்த நீர்க்கடலுக்குப் புறம்பே, உலகங்கள் இல்லை, பிராணிகளும் இல்லை. ஆயினும், பொன்னிறமான பூமி, அதற் கிரட்டிப்பு விரிவாக ஆயிர யோசனை உயரமாக இருக்கும். அவ்விடத்திற்கு அப்புறம் அண்டச் சுவர் உள்ளது. அதுவரையிலுந்தான் பூமி. இந்தத் தீவுகளும் ஐம்பது கோடி யோசனை விஸ்தீரணமாம். இதுவே எல்லாப் பிராணிகளுக்கும் ஆதார காரணமாக விளங்கும்.

மேலும், சாம்பு என்னும் அரசனுடைய புத்திரர்களாகிய அங்கதீரன் - மேதாதி - வபுட்டு - யதி-புரந்திட்டு-துதிமன்-அவ்வியன் என்னும் எழுவரும் ஏழு தீவையும் ஆண்டார்கள். அவர்களுள் சம்புத்தீவை யாண்ட அங்கீரதன், தன் புதல்வர்களாகிய பரதன்-கிம்புருடன் - கேதுமாலோன் - பத்திவைசுத்தினி - பராவிரதன்-இரவி-அனலன்-இரணியன்-குரு என்று சொல்லப்பட்ட ஒன்பது பேருக்கும் இந்த சம்புத்தீவை ஒன்பது கண்டமாக்கிப் பகுத்து கொடுத்தான். முன் சொன்ன மகாமேருவின் சாரலின் தென்புறத்திலே, காவல் மரம் இருக்குந்தன்மையினாலே, இந்தத்தீவு முற்றும் காவலத்தீவென்னும் ஆஸ்பதமான பெயரைப் பெற்றது. அன்றியும், முன்சொன்ன அங்கதீரன் பிள்ளைகளில் மூத்தவனாகிய பரதன் என்னும் அரசன், இக்கண்டத்தை ஆண்டிருந்தமையால், ஆதியிலிருந்தே இது, பரத கண்டமென்று வழங்கப்பட்டு வருகின்றது.

பிரமாண்டக் குறிப்பு

இவ்வாறு சொல்லக்கேட்ட சர்வலோக மாதாவாகிய உமா பிராட்டியார், மிகுந்த சந்தோஷமடைந்து சிவபெருமானை நோக்கி, "ஓ சுவாமி! பிரமாண்டம் எப்படி உண்டாயிற்று? அஃது எவ்வளவு

விஸ்தீரண முடையது? அதற்கு ஆதாரம் யாது? இவற்றை எனக்கு விளங்கச் சொல்லவேண்டும்" என்று கேட்க, சிவபெருமான் பார்வதியை நோக்கிச் சொல்லுகிறார்:—"ஏ பார்வதி! இந்தப் பிரமாண்டத்தின் விஸ்தீரணத்தையும் உயரத்தையுஞ் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். இந்தப் பிரமாண்டத்திற்குக் காரணமாகியும், அவ்வியத்தமாயும், அநாமயமாயும், எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாயும், எல்லாவற்றிற்கும் லயத்தானமாகியும் விளங்கும். என்னிடத்தினின்றும் ஆகாயம் உண்டாயிற்று; ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்கினியும், அக்கினியினின்று சலமும், சலத்தினின்று பிருதிவும் தோன்றின. பஞ்ச பூதாத்துமகமான பிரமதேவர் உண்டாகிப் பிரமாண்டத்தைச் சிருட்டி செய்தனர்.

ஆதிசேடன் சிறப்பு

அவற்றுள் அதல, விதல, சுதல, தராதல, மகாதல, ரசாதல, பாதலம் என்று சொல்லப்பட்ட கீழுலகங்கள் ஏழும்; பூலோகம், புவர்லோகம், மஹர்லோகம், ஜனலோகம், தபோலோகம், பிதுர்லோகம், சத்தியலோகம் என விளங்கும் மேலுலகங்கள் ஏழும் உள்ளன. ஆகிய இந்த ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் ஆதாரமாக இருப்பவன் ஆதிசேடன். அவன் வெண்ணிறமாக விளங்குவான். அவனே விஷ்ணுவென்றுஞ் சொல்லப்படும். பிரமன் வாக்கின்படி அவ் ஆதிசேடன் சகல உலகங்களையும் தாங்கி நிற்பான்.

அந்தச் சேடனுடைய குணானுபவங்களைத் தேவர் முனிவர் முதலானவர்களாலும் சொல்லி முடியாது. ஆயிரம் சிரங்களும், தேவர் முனிவர்களாற் செய்யப்படும் பூசையும், சித்தர்களாற் சொல்லப்படும் அனந்தனென்னும் பெயரும், எல்லாத் திக்குகளையும் பிரகாசிக்கச் செய்யும் சுவத்திகா பூடணம் போன்ற ஆயிரம் பணமுடிகளும், நெருப்போடு பிரகாசிக்கும் வெண்மலைபோலச் சுவாலையோடு சுழன்றுகொண்டிருக்கும் இரண்டாயிரம் விழிகளும், நவமணிகளிழைத்த கிரீட குண்டலங்களும், திவ்விய மணம் பொருந்திய மலர் மாலைகளும், வெண்ணிறத் தாகாரமும், நீலநிற வத்திரமும், கைலாய கிரியைப் போன்ற உயர்வும், கலப்பை இருப்புலக்கைகளாகிய ஆயுதங்களும், வருணன் கன்னிகையாகிய வாருணி அருகிருந்து செய்யும் உபசரணையும், பிரகாசித்துக் கொண்டிருக்கும் விடச் சுவாலையும், சங்கர்ஷணாத்மகமும், உருத்திர ரூபமும், பிரளய

காலாந்தத்திற் சர்வ லோகங்களையும் தன்னிடத்தே ஒடுக்கும் வல்லபமும், சர்வாண்டங்களையும் ஒரு கடுகுபோலச் சுமக்கும் ஆற்றலும், உடையவனுக விளங்கும் ஆதிசேடனுடைய உருவம் ஒருவராலும் வர்ணிக்கச் சாத்தியப்பட மாட்டாது.

அவனுடைய சிரோ ரத்தினங்களின்மேல் படிந்திருக்கும் பூமியானது, அம் மணிகளின் பிரதிபிம்பத்தினல் குசும மாலைபோல விளங்காநிற்கும். அந்தச் சேடன் சோர்வுற்ற காலில் சமஸ்த பர்வதங்களோடு கூடிய உலக முழுவதும் அசையும்; அதுவே பூகம்பம் எனப்படும். அவனுடைய குண விசேஷங்களைச் சித்தர் - முனிவர் - கந்தருவர் உரகர் - கின்னரர் - யட்சர் - தைத்தியர் - தானவர் முதலானவர்களும் அறியாதவர்களாகி அனந்தனென்று சொல்லுவார்கள். அழிவில்லாதவனுக விளங்கும் அந்தச் சேடன், தன் மார்பில் அணிந்திருக்கும் செஞ்சந்தனத்தைத் தன் பெருமூச்சாற் பறக்கச் செய்து, திக்குகளாகிய மாதர்களை அடையச் செய்ய வல்லவன்.

அவனிடத்தில் இருந்து நிமித்த சாத்திரத்தையும், சகலமான சோதிட சாஸ்திரங்களையும் கர்க்க முனிவர் அநேக காலம் தவம் செய்து அடைந்தனர். பாதல லோகங்கள் ஏழும் தனித்தனி பதினுயிர யோசனை விஸ்தீரணமும், இருபதினுயிர யோசனை உயரமும் உடையன; பாதல லோகங்களில் இரத்தின மயமான பூமியும், இரத்தினங்க ளிழைத்த உப்பரிகைகளும் மதில்களும் தங்கம் வீடுகளும் பூமியும் உண்டு; அவ்விடத்தில் திதி புத்திரர்களான தைத்தியர்களும், நாக ராஜர்களும், இராக்கதர்களும் வசிக்கிறார்கள். ஒளியுள்ள இரத்தினங்களையுடைய பாதல லோகமானது, சந்தோஷத்தை அளவின்றி யுண்டாக்கும். அதற்குச் சமானமான உலகம் இல்லவே இல்லை. தேவதானவ கன்னிகைகளால் உண்டாகும் மோகத்தை விடுத்தவனுக்கும் பாதல லோகத்தில் விருப்ப முண்டாகத் தடையிராது. அவ்விடத்திலே பகலில் சூரிய வொளியும், இரவில் சந்திரகாந்தியும் இல்லை. குளிர்ச்சி வெப்பங்களும் இல்லை. யாவும் இரத்தின ஒளியேயாக விளங்கும். அங்கே தேவாமிர்தத்திற்குச் சமானமான பட்சண போசனங்களும், திருத்தியை உண்டாக்கத்தக்க அன்னபானங்களும், இருது ஆறிலும் புட்பிக்கும் புட்பசாதிகளும், அம் மலர்களிலுள்ள தேனைப் பருகி ரீங்காரஞ் செய்யும் பொன்மய

மான வண்டுகளின் கூட்டங்களும், வைடூரியமான விருட்சத் தளிர் களே உண்டு களித்த கோகிலங்களின் குரலோசையும், படிகத்தினால் செய்த படிகளையுடைய தடாகங்களிற் புட்பித்த சுவர்ண மயமான தாமரை மலர்களும், அமிர்தமயமான ஜலம்பெருகும் நதிகளும், இரத்தின மயமான நீலாம்பர பீதாம்பரங்களைத் தரும் விருட்சங்க ளும், வைர கோமேதங்களாகிய பூஷணங்களைக் கொடுக்கத் தக்க பர்வதங்களும், வாடாமல் மணம் வீசும் மலர்களையும் சந் தனத்தையுங் கொடுக்கும் மரங்களும், வீணை வேணு மிருதங்க முதலிய வாத்தியங்களைச் சதா வாசித்துக் கொண்டும் கானம் செய்திருக்கும் நாககன்னிகைகளும் நிரம்பப் பெற்றுள்ள அந்தப் பாதல லோகத்தில் எவ்வளவு காலம் ஒருவன் வாழ்ந்திருக்கினுங் காலங் கழிந்ததாகவே தோன்றாது.

நரகலோகம்

கேளாய் ஓ பார்வதி! பூமியின் கீழே இருளும், பள்ளமும், தண்ணீரும் உண்டு; அதற்கடியில் பாவிகளை வதைக்கிற நரகதானங் கள் உண்டு, அவற்றைச் சொல்லுகிறேன் கேள்.

அவை இரௌரவம் - சூகரம் - ரோதம் - தாலம் - விசஸனம் - மகா சுவாலம் - தப்த கும்பம் - லவணம் - விலோசிதம் - கிருமிராம்பம் - வைத ரணி - கிருமிசம் - கிருமிபோசனம் - அசிபத்ரம் - கிருஷ்ணம் - லாலாபட் சம் - பூயவகம் - அக்கினி ஜ்வாலம் - அகச்சிரம் - சந்தமிசம் - கிருஷ்ண சூத்திரம் - தமசு - அவிசு - சுவபோஜனம் - அப்பிரதிஷ்டம் எனப் பல ஆகும். இவைகளின் பொருள்; இரவுரவ மென்பது ருருவென்னும் மிருகத்தினால் துன்பப்படுத்துமிடம், சூகரம் என்பது பன்றிகளால் பீடிக்கப்பட்டும் அசையவொட்டாமல் நிறுத்தப்படுமிடம், உரோதம் என்பது பனைமரத்தினின்றும் விழுதல் அதின் மட்டைகளினுலே அறுத்தல், தாலம் கைவாளாலே அறுத்தல், விசஸனம் எரிகிற நெருப்பு, மகாசுவாலம் காய்ச்சின எண்ணெய்க் குடம், தப்தகும்பம் அறுத்தறுத்துக் காய்ச்சின உப்பிடுவது, இலவணம் உதிரத்தை உரியும்படி செய்வது, விலோகிதம் காய்ச்சின இரத்தத்திற் போடு மிடம், ருதிராம்பம் கடப்பதற்கு வருத்தமான உதிர ஆறு, வைத ரணி புழுக்கள் தூக்குமிடம், கிருமிசம் புழுக்களைத் தின்னுமிடம், கிருமிபோசனம் நெருங்கின இருப்பு முட்களின்மேல் நடக்கச் செய் வது, கிருஷ்ணம் இது கார்ஷ்ணயசம் என்றும் சொல்லப்படும் சங்கக்

கூடாத குளிராயிருப்பது, தாருணவு சந்தமிசினி யென்னும் ஆயுதத் தினால் நாக்கைப் பிடுங்குவது, சந்தமிசம் நாற்புறத்திலும் கொடிய கத்திகளைக் கட்டி நடப்பிப்பது, அசிபத்திரவனம் அதிக தூர்க்கந்த மாய்க் கணநேரமும் பொறுக்கக்கூடாத இடம், பூயவஹம் கிருஷ்ண சூத்திரமாவது சக்கரத்தில் ஏற்றிக் கால்விரலில் ஒரு கயிறுமாட்டி உடலெல்லாம் ஒன்றுகும்படி இருக்கிக்கட்டி அறுபடும்படியான இடம். இப்படியே மற்றவைகளையும், அறிந்து கொள்க.

மேற்சொன்ன இரௌரவ முதலான அநேக கோடி நரகங்க ளும் இயமனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கின்றன. அவற்றினிடத்தே ஆயுதபயம், அக்கினிபயம், ஜந்துபயம் முதலான சகல பயங்களும் பாவிகளுக்கு உண்டு. அவைகளில் விழுகின்ற பாவிகள் யாவர் என்னில், பொய்சாட்சி சொல்லுவோன், பட்ச பாதத்தினாலே அநியாயம் பேசுவோன், பொய் சொல்லுவோன் ஆகிய இவர்கள் இரௌரவத்தில் விழுவார்கள். சிசுவைக் கொல்லு வோன், பட்டணத்தை அழிப்போன், மூச்சைத் தினறச் செய் வோன் இவர்கள் உரோதத்தை அடைவார்கள். மத்தியபானம் செய்வோன், பிரமகத்தி செய்வோன், பொன்னைத் திருடுவோன், இவர்களோடு சேர்வோன் ஆகிய இவர்கள் சூகரத்திற் சேர்வார் கள். இராசனைக் கொல்லுவோனும், வைசியனைக் கொல்லுவோனும் குருவின் மனையாளோடு புணருவோனும், உடன் பிறந்தாளைச் சேருவோனும், இராஜன் ஊழியர்களைக் கொல்லுவோனும் தப்த கும்பத்தில் விழுவார்கள். மனிவியை விற்போனும், சற்புருடரைக் காவல் படுத்துவோனும், வலுதிக யோக்கியமான குதிரைகளை விற் போனும், தன்னிடத்தில் அன்போடு காத்திருப்பவனைக் கைவிடு வோனும், அடைக்கலம் புகுந்தோர்களை அடித்துத் தூரத்துவோ னும், தப்த கும்பத்துக்கு ஆளாவார்கள். மருமகள் மகள் முதலா னோருடன் புணர்கிறவன், குருவை அவமதிப்போன், கோபித்து வைபவன் ஆகிய இவர்கள் மகாஜ்வாலயத்தைச் சேர்வார்கள். வேத தூஷணை செய்வோனுக்கும் வேதவிக்கிரயம் செய்வோனுக்கும் சேரக் கூடாத பெண்களுடன் சேர்வோனுக்கும் இலவணமென்பது கிடைக்கும். திருடனுக்கும், உலக ஒப்புரவை அழிப்பவனுக்கும் விலோகிதம் நேரிடும். தேவதூஷணை, பிராமணதூஷணை, பிதுர் தூஷணைகளைச் செய்வோனும் உத்தம பொருளைப் பழிப்போனும்,

பிறருக்குத் தீங்கு செய்வோனும், சூனியம் வைப்போனும் கிரிமிசம் கிரிமிபக்ஷண மென்பவற்றில் விழுவார்கள். பிதுர்க்களும், அதிதி களும் உண்ணும் முன்னமே உண்ணுவோனும், வேடன் முதலா னோருக்கு அம்பு முதலிய ஆயுதங்களைச் செய்து கொடுப்போனும், அவற்றை விற்பனை செய்வோனும் லாலாபட்சத்தில் வதைவார்கள். கர்ணியென்கிற கொடிய அம்புகத்தி முதலான ஆயுதங்களை அயோக் கியருக்குச் செய்து கொடுப்பவனும் அயோக்கியருக்கு விற்போனும் விசஸனத்தைச் சேருவர்.

அயோக்கியரிடத்தில் தானமேற்பவன், வைதிக கருமங்களுக் குத் தகாதவருக்கு அவைகளைச் செய்துவிற்பவன், சோதிட நூலை நன்றாய் உணராமல் பலன் சொல்லுபவன், இப்படிப்பட்டவர்கள் அதோமுகத்தில் வாதை படுவார்கள். சாகசஞ் செய்பவனுக்கும் பிறருக்குக் கொடாமல் தானொருவனே நல்ல வஸ்துவைப் புசிப்பவ னுக்கும், பூயவக வேதனை உண்டாகும். பூனை, கோழி, ஆடு, நாய், பன்றி, பறவை இவற்றை எப்போதும் வாதனை செய்பவனும் அந்த நரகத்தையே அடைவான். கூத்தாடிப் பிழைக்கும் பிராமணன், அல் லது மல்லயுத்தம் செய்து பிழைப்பவன், தூண்டில் முதலானவை கொண்டு மீன் பிடிப்பவன், சூண்டகர் கோளகர் முதலானோரு டைய அன்னத்தை உண்பவன், விடமிடுபவன், கோட் சொல்லு பவன், மனவி செய்கையால் பிழைப்பவன், பருவமில்லாத காலங் களிலே பொருளாசையினாலே பருவச் சடங்கு செய்விப்பவன், வீட்டைத் தீ இடுபவன், சினேகிதனைக் கெடுப்பவன், பறவைகளைக் கொலைக்கு விற்றுப் பிழைப்பவன், ஊருக்காக யாகஞ் செய்பவன், யாகத்திற்குச் சோமம் என்கிற ஆட்டாங்கொடி விற்பவன், இப் படிப்பட்டவ ரெல்லாரும் ருதிராம்பத்திலே போய் விழுவார்கள். யாகத்தை அழிப்பவன், ஊரை அழிப்பவன் முதலானவர் வைத ரணியைப் பொருந்துவார்கள். பணத்தினாலும் வயது முதலான வைகளினாலும் செருக்கடைந்து கிராமத்து எல்லைகளை மாற்றுப வர்களும், சுத்தியில்லாதவர்களும், மோசஞ் செய்து பிழைப்பவர் களும் கிருஷ்ணத்தை அடைவார்கள். வைதிக உபயோகமில்லா மல் வீணைப் பலா முதலிய மரங்களைச் சேதிப்பவனும், ஆடு விற்ப வன் மிருகங்களைக் கொன்று தின்பவன் முதலானோரும், அக்கினி சுவாலயத்திற் பிரவேசிப்பார்கள். தீ இடத்தகாத பாண்டமுதலான

வற்றில் தீ யிடுபவனும் அதிலேயே சேருவான். விருதலோபஞ் செய்பவன், தனக்குரிய ஆச்சிரம தருமத்தை விடுபவன், சந்தமிசத்தில் வீழ்ந்து வாதனை படுவான்.

பிரமசாரிகளாய்ப் பகலிலும் கனவிலும் சுக்கிலத்தை விடுபவரும், புரந்திரராலே ஒதுவிக்கப்படுபவரும், சுவபோஜனத்திற் படுவார்கள். தங்கள் தங்கள் வர்ணச்சிரம விரோதமான காரியங்களைச் செய்தல், மனைவாக்குக் காயங்களினாலே பாதகஞ் செய்தல் முதலான துட்ட கர்மமுடையவரெல்லாம் இந்தப்படியே அந்தந்த நரகங்களிற் சேர்வார்கள். இப்படி அநேகவிதமான பாவத்தொழில்களைச் செய்பவர்களுக்கு வாதை படும்படியான நரகங்கள் அனேகமாயிரம் இருக்கின்றன. நரலோகத்தில் இருக்கிற பிராணிகள் தலை கீழாய் இருந்துகொண்டு சொர்க்கத்திலிருக்கிற தேவர்களைப் பார்த்துத் துன்பப் பட்டுக்கொண் டிருப்பார்கள். தேவர்களும் தலைகீழாய் அவத்தைப்படுகிற நரகத்தாரைப் பார்த்து மிகவும் பயந்துகொண் டிருப்பார்கள். பாவிகள் நரகத்தை அனுபவித்த பிறகு தாவரங்களாயும், புழுக்களாயும், ஜலசரங்களாயும், பக்ஷிகளாயும், மிருகங்களாயும், மனிதராயும், மனிதரில் தருமசீலராயும், தேவராயும், மோட்சமடையத் தக்கவராயும் முறையே சனிப்பார்கள்.

எமதண்டனை

அவர் அவர் பாவங்களுக்கிடாகப் பாவிகளை எமதூதர்கள் தண்டிக்கிறார்கள். எவ்வாறெனில், சிலரை உலக்கையினால் புடைக்கின்றனர், சிலரை பலவித ஆயுதங்களினால் சிதைக்கின்றனர், சிலரைச் சூரிகளினால் சீவுகின்றனர், சிலரைச் செக்கிலிட்டு அறைக்கின்றனர், சிலரை இரும்புச் சலாகையிற் கோத்துப் பெருந்தழலில் வாட்டுகின்றனர், சிலரைக் கண்ட கோடாலியினால் வெட்டுகின்றனர், சிலரைக் கரும்பாலையில் கொடுத்து எலும்புகள் நொருங்கச் சாரம் பிழிகின்றனர், சிலரை நன்றாய்க் காய்ந்த எண்ணெய்க் கொப்பரையிற் போட்டு வற்றலைப்போல வறுக்கின்றனர், சிலரைத் தணலில் போட்டுக் கொளுத்துகின்றனர். மேலும், அங்கே ஆண்பாவையொன்றும் பெண்பாவை யொன்றும் செம்பினாற் செய்யப்பட்டு அக்கினியால் எப்போதும் தபதமாயிருக்கின்றன; தூதர்கள், பரஸ்திரீ கமனம் செய்த ஆடவர்களை நோக்கி, "ஓ பாவிகாள்! தருமமும் மானமும் சிறிதும் எண்ணாமல் பிறர் மனைவியரைப் புணர்ந்த

தற்கு வந்த பயன் இஃது" என்று அதட்டி உதட்டிச் சொல்லி அப்பெண் பாவையைப் புணரச் செய்வர். இதுபோலவே பரபுருடர் களைச் சேர்ந்த பெண்களையும் அவ்வாண்பாவையோடு சேர்ப்பர். புருஷன் தனது மனைவியை யன்றிப் பரமாதரைப் புணர்ந்ததற்கும் பெண் தன் புருடனையன்றிப் பரபுருடனைக் கூடியதற்கும் எமலோ கத்தில் உள்ள தண்டனை மிகவும் கொடியதாயிருந்தும், நல்லெழுக் கத்திலிருக்கும் மாந்தர்களைக் காண்பதரிதாக இருக்கின்றது. உண வாதிகளைத் திருடித் தின்றவர்களின் சிலரை அக்கினியினால் வெதுப் பப்பட்ட இரும்பு-எழுகு குண்டுகளை விழுங்கச் செய்கின்றனர். சிலரை நரகங்களில் தள்ளி பாதலம் வரையும் அழுத்துகின்றனர். கடன்வாங்கி மீண்டுங் கொடாதவரை நேரக்கிக் கடன் கொடுத்தவ னுக்கு கடனைக்கொடாமல் வன்கண்மை பேசிய பாவி என்று எம தூதர் முனிந்து சீறிச் சம்மட்டியினால் மண்டையின்மேல் அடிக் கின்றனர். இத்தன்மையாகப் பாவிகள் படுந்துயரத்தை விரித்துச் சொல்லுவதால் பிரயோசனம் யாது? இன்னவன் தருமி இன்ன வன் அதருமி, இன்னவன் சுவர்க்கம் புகுவன், இன்னவன் நிறை யம் புகுவன் என்று அவரவர்கள் செய்யும் நன்மை தீமைகளினாலே உணரலாகும். தருமம் செய்தவனே சுவர்க்கம் புகுவானென்பது திண்ணமாதலால், யாவரும் தருமஞ் செய்யவேண்டும்.

எமலோகம்

ஓ இமவான் செல்வியே! பாவிகள் வசிக்கும் நரகலோக நிலை மையை நன்குணர்ந்தா யன்றே? அவ்வித நரக லோகத்திற்கு இறைவனாகிய எமனது நகரச் சிறப்பைச் சொல்லுவோம் கேட்பா யாக. குஞ்சரனை யின்ற வஞ்சியே! மக்கள் வசிக்கும் பூலோகத் திற்கும், எமலோகத்திற்கும் இடையே எண்பத்தாறுயிரம் காதம் உள்ளது. ஆயினும், இந்த எண்பத்தாறுயிரம் காதமும் இமைப் போதில் சென்று வரும்படியான வல்லமையை எம தூதுவர்களுக்கு இயமன் கொடுத்திருக்கின்றனன். ஆனால், பாவிகளுக்கு இது நெடுந்தூரமாகவே இருக்கும். இது நிற்க; எம பட்டணமானது தென்றிசைக்கும் நிருதி திசைக்கும் நடுவில் வச்சிரமயமாகவும் தேவர், அசுரர் முதலியோரால் அழிக்கப்படாததாகவும் நடுச் சதுரம் நூறுயோசனை பரப்புள்ளதாகவும், இருபத்தைந்து யோசனை உயரமுள்ளதாகவும் இருக்கும். அச் சதுரத்தினுள் அநேக சால

ரங்களுள்ளதாகவும், துயிற்கொடிகளாலும், முத்துக்கோவைகளாலும், மற்றும் அனேகவித தோரணங்களாலும், அலங்கரிக்கப்பட்டதாயும், சொர்ன மயமாயும் இருக்கும். இவற்றின் நடுவே, எமதருமனுடைய அரண்மனை இருக்கின்றது. அந்த அரண்மனையானது பத்துயோசனை அகல நிகளமுள்ளதாயும், அநேகமாயிரம் வயிரத்தூண்கள் அமைத்ததாயும், சயித்திய சவரம்மிய முள்ள காற்று வீசுவதாயும் இருக்கும். அவ்விடத்தே எப்போதும் ஆடல் பாடலினால் கீர்த்தி விளங்கத்தக்க திவ்வியமான ஒரு மண்டபம் இருக்கின்றது. அம் மண்டபத்தில், தூதர்கள் கரங்குவித்து ஒரு புறம் நிற்கவும், நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகள் ஒவ்வொன்றும் தனித்தனி விகாரரூபத்தோடு ஒவ்வொரு புறத்திலும் புடைசூழ்ந்திருக்கவும், இக் கூடங்களின் நடுவே விசாலம் பொருந்திய மிகப் பெரிதான சிம்மாசனத்தின் மீதில் கண்டவர் அஞ்சும் படி பரந்த விழித்த கண்களோடும், உயிர்கள் நடுங்கும் கதாயுதத்தோடும் எமதருமன் வீற்றிருப்பான். அம்மண்டபத்தின் பக்கத்தில் இருபத்தைந்து யோசனை அகல நிகளமும்; பத்துயோசனை உயரமும், பலவித அலங்காரத்தோடு கூடிய சித்திரகுத்திரன் அரண்மனை இருக்கின்றது. அந்த அரண்மனையின் நடுவில் வயிரங்களால் பிரகாசிக்கப் பெற்றிருக்கும் சிம்மாசனத்தின்பேரில் சித்திரகுத்திரன் வீற்றிருந்து சகல உயிரும் செய்யும் பாவபுண்ணியங்களைச் சிறிதும் விடாமல் கணக்கெழுதுகின்றான்; அவன் எழுதுவதில் சிறிதும் பிழை நேரிடாது. அந்தச் சித்திர குத்திரனுடைய அரண்மனைக்குக் கிழ்ப்புறத்தில் ஜ்வரமும், தென்பக்கத்தில் சூலையுடன் வைசூரியும், மேற்பக்கத்தில் காலபாசத்தோடு அஜீரணமும், வடபக்கத்தில் வயற்றுவலியும், வடகிழக்கில் தலைவலியும், தென்கிழக்கில் மயக்கமும், தென்மேற்கில் அதிசாரமும், வடமேற்கில் ஜன்னியும் கிரகரூபமாக வியாபித்துக்கொண்டு எமதருமன் உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

எமலோக மார்க்கம்

ஓ மயிலனைப்பெற்ற மயிலே! மேற்கூறிய சிறப்பு வாய்ந்த எமலோகத்திற்கும், பூலோகத்திற்கும் இடையுள்ள தூரம் எண்பத்தாறுயிரம் காதம் என்று முன்னமே தெரிவித்தோம். அப் பட்டணத்தில் வாழும் கூற்றுவன், ஆயுள் காலம் முடிந்த உயிர்களைப் பிடித்து

வருமாறு உத்தரவு செய்தவுடன் யாவரும் அஞ்சத்தக்க விகார ரூபமுடையவரும் நெருப்புக்கு நிகரான கண்களை யுடையவரும், கனலிக்காயும் சினமுடையவரும், பாசம் முசலம் தண்டம் முதலிய கொடிய படைகளை யுடையவரும், காரிலுங்கருத்த ஆடை தரித்தவரு மான மூன்று தூதுவர்கள் சென்று ஆயுள் முடிந்த உயிரைப் பிடித்து, காற்றுருவமாகிய தேகத்தில் அடைத்துக்கொண்டு போவார்கள். இவர்கள் கொண்டுபோகும் வழியானது எப்போதும் அக்கினிக்கு மேலானதும் அயத்தை யுருகச்செய்வதுமான வெயிலை யும் இரவில் சரீரத்திலுள்ள உயிரைக் கூற்றுவனுக்கு இதோ கொண்டுவந்தேன் கொண்டுவந்தேனென சிதைக்கத் தக்க நடுக்க லும் ஓடுக்கலும் செய்யும் பனிக்காற்றையும் உடையது. ஓ பார்வதா! இத் துன்பங்கள் எல்லாம் அம்மார்க்கத்தில் பாபிகளுக் கென்றே அமைக்கப்பட்டிருக்கும். அசிபத்திர வனமொன்றிருக்கி றது; அசிபத்திர வனமென்பது, உலோகங்களை அறுக்குங் கூர்மை பொருந்திய வாளைப்போன்ற இலைகள் தழைத்த மரங்களால் இடை வெளியில்லாமல் நெருங்கிய காடாம். தூதுவர்கள் அவர்கள் பற்றிச் செல்லுஞ் சீவர்களைக் கடிந்து துரத்த அச்சீவர்கள் பயந்து அவ் வனத்திற் புகுந்து ஓடுகிறபோது இலைகள் பட்டுத் தேகமெல்லாம் பீறுண்டு அறுபட்டு இரத்தம் பெருகி யோடத் தூதர்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்துப் பசிதாகத்தால் வருந்தி தான் முன்னமிருந்த சுகத்தை நினைந்து நினைந்து அழுகிறபோது தூதர்கள் அவர்களைப் பார்த்து, "அட பாவிகாள் தாகமென்று வந்த ஏழைகளுக்குத் தண்ணீர் கொடாமல் மோரும், பாலும், தயிரும், நெய்யும் அருந் தித் தேகத்தை வளர்த்த லோபிகளே! இதோ இந்தக் குளத்திலுள்ள உதிரத்தைக் குடியுங்கள்" என்று கடு கடுத்துப் பற்களைக் கடித்துப் பலவிதங்களாக அடிக்கிறபோது, அவர்கள் அவ்வடிகளால் துடி துடித்துப் பதை பதைத்து நடு நடுங்கிக் கடகடவென்று புரண்டு அழுது அடிகளைத் தாளமாட்டாமல், ஓவென்று கதறிக்கொண்டே யோடி, அவ்விரத்தத்தைப் பருகுவார்கள். அதைக்கண்ட தூதர்கள் சீவர்களை நோக்கி, "முன்னம் நீர் அனுபவித்த சுகத்துக்கு இந்தச் சுகம் எப்படியிருக்கிறது என்பதை உணர்ந்தீரா? துரோகி களே என வைது அங்கிருந்தும் வெருட்டித் துரத்த சீவர்கள் ஓடுகிற பரிதாபத்தைச் சொல்ல வல்லவர் யாவர்? ஓடி ஓடி கால் சோர்ந்து, அவர்கள் கைசோர்ந்து, மெய்சோர்ந்து, நாவுலர்ந்து,

பசியினால் கீழேமேலிட்டு 'ஆ ஹா!' என்று கதறுகிறபோது தூதர்கள், எஃகினாற் செய்து அக்கினியினால் காய்ச்சப்பட்டிருக்கும் சிறுமுள் குண்டுகளைக் காட்டி, "பசியினால் வருந்தி வேண்டினவர்களுக்கிடாமல் உண்டு சுகித்த கர்மி! அக் குண்டுகளைத் தின்று பசியாறி, முன்னம் நீ அடைந்த இன்பத்திற்கு இவ்வின்பம் எப்படியிருக்கிறது? சொல்லடா என்று புடைக்கிறபோது; சீவர்கள், அந்த அடியைப் பொறுக்க முடியாமல் சக்தியற்று ஓலமிட்டழுது இந்தத் தூதர்களிடத்தில் அகப்பட்டுச் சங்கடம் அடையச் செய்தது நாம் தர்ம காரியங்களைச் செய்யாத குற்றமல்லவோ என்று எண்ணமிட்டுக்கொண்டே அந்த முட்குண்டுகளைப் புசித்து அதனால் மிகவேதனை அடைந்திருக்க, பின்னும் தூதர்கள், பாசத்தால் குரங்கைக் கட்டி யிழுத்துச் செல்வதுபோல அவர்களைக் கட்டி இழுத்துக்கொண்டு செல்லுகிற காலத்தில் அவர்கள் தங்கள் புத்திரர்களை நினைந்து, "அந்தோ! அருமைத் திருமகனே! நான் என்னசெய்வேன், என்னசெய்வேன்; மிகவும் கஷ்டத்தை அனுபவிக்கிறேன்; ஜகதீசன் ஒருவனுண்டு, அவனைத் துதித்துத் தீவினை களைந்து நல்வினைப் பயனை அடையுங்கள்" என்று முறையிடுவதுடன் "பெரியோர்களை அற்பமாகப் பேசி யேசிப் பரிகாசம் புரிந்ததனாலன்றே அவற்றின் பலனை அனுபவிக்கிறோம்" என்று பரிதவிப்பார்கள்.

அன்றியும், "உலகத்தில் யோசனையில்லாத மூடனாக இருந்து நன்மார்க்கமின்றி வீண்காலம் போக்கி, சடலத்தைவிட்டுத் தூதர் கையிலகப்பட்டுப் பஞ்சும்படாத பாடுபடுகின்றோமே" என்று கருதிக்கொண்டே செல்வர். தூதர்கள் இவர்களைக் குரங்கை யாட்டுவதைப்போல ஆட்டிக்கொண்டே போவார்கள். அப்போது பசிதாகத்தால் வருந்தி மெலிந்துவாடிக் கதறுகிற சீவனை தூதர்கள் கண்டு, "அடா பாவிகளில் முதன்மையாகிய கொடும்பாவி! நீ பட்ட கடனுக்காக உத்தம புருடனை முதன்மையாகிக் கையொப்பமிடச் செய்து நீயும் கையொப்பமிட்டுக் கடன் கொடுத்தவனிடத்தில் உத்தம புருடனைக் காட்டிக்கொடுத்து அவன் திரவியத்தை இழக்கும்படி படுமோசம் செய்த குடிகேடா! அந்தச் சுகத்துக்கு இந்தச் சுகம் எப்படி இருக்கிறது? தெரிந்துகொண்டாயா!" என்று கன்னத்தில் புடைத்துக் கையினால் மோதி இழுத்துக்கொண்டே

வந்து அக்கினியாற்றின்மேல் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் எம தருமன் மூன்னம்விட்டுப் பணிவார்கள் என்று இவ்வாறு அருளிச் செய்த திரிபுராரியை நோக்கி பின்னும் பார்வதி வினவுகின்றனள்.

அண்டகோச அடுக்கு

"விதிமுதலோரைப் படைத்த அதிபதியே! மன்னுலகதீதில் அடங்கியவை சத்த தீவுகளென்றும், அவ்வுலகத்திற்கு மகம்மேரு கிரியே அஞ்சுராணி (அகம்செருகு அணி) யாக இருக்கின்ற தென்றும், ஒரு பிரிவினை மாத்திரம் அருள் புரிந்தீரேயன்றி, அண்டங்களிலுள்ள மண்டல அடுக்குகளை விண்டிலீரே" என்று அண்டையில் நின்று வேண்டிய பார்வதா தேவியை ஸ்ரீ கைலாசபதியானவர் திருக்கண்ணேக்க மூற்றுச் சொல்லுகின்றார். சிலையை நிகர்த்த முத லினையுடைய மலைமகளே! கேளாய். நமது கைலையங்கிரிக்கு நிகராக ஸ்ரீ வைகுண்டத்தில் வாழும் காப்புக் கடவுளாகிய அனந்த கலியாண குணனுடைய திருநாபிக் கமலத்திலிருந்து வந்த பிரமாவானவர் ஆதியிற் படைத்த ஆயிரத்தெட்டு அண்டங்களில் இந்த ஒரு பிரமாண்டத்திற்கு உட்பட்ட யாவையும் கருணையுடன் சொல்லுகின்றேன் பத்தியோடு கேட்பாயாக. அண்டமென்பது முட்டையைப் போல் விளங்கி சுவர்க்க மத்திய பாதலமென்று மூன்று பிரிவாகி இருக்கும். இந்த மூன்று பிரிவில் அளவிடப்படாத ஏழுலகம் ஒரு கூறுய் நிற்கும். அவ்வுலகங்கள் யாவையெனில், பூலோகம் - புவலோகம் - சுவலோகம் - சனலோகம் - மகாலோகம் - சத்தியலோகமென இவையாம். இவைகளில் இப்போது நாமிருக்கும் இந்த அண்டத்தின் மதிற்சுவர் வரைக்கும் இப் பூலோகத்தின் விருத்தி அளவு; இதற்குள் இந்திரன் வசிக்கும் கீழ்திசையி லிருந்து சூரிய பகவானுதயமாகும் உதயகிரியும் சமுத்திரங்களும் சக்கிரவாளகிரியும் பொருந்தி யிருக்கின்றன. அப்பால் நிறைந்த பெரும்புறக் கடலளவும் இருட்பூமி யென்று அறிந்துகொள். இப்போது சொல்லி வந்த சக்கிரவாளகிரிக்கு உட்பட்ட இந்தப் பூமியைத் தேவபூமி யென்றும், சுவர்ன பூமியென்றும் சொல்லுவார்கள். இந்தப் பூமியைச் சத்த தீபுமென்று பிரித்திருக்கின்ற தன்மையின்படி புட்கரத் தீவத்தைச் சொல்லுகிறேன். புட்கரத்தீவ மென்னும் அந்தப் பூமி, பத்துகோடி யோசனை விஸ்தீரணமா யிருக்கின்றது. அந்தத் தீவில், தாமரைப் புஷ்பங்களே சிறந்து வளர்ந்து மிகுந்து மலர்ந்து இருக்

கின்றன. பலம் பொருந்திய குமுதவரை யென்னும் ஒரு மலை சூழ்ந்திருக்கின்றது; அந்த மலைக்கு உட்புறத்தில் அறுபத்துநான்கு லக்ஷயோசனை அகலமும் ஆழமுள்ள நன்னீர்கடல் வளைந்திருக்கின்றது. சர்வதோபத்திர மிகுந்திருப்பதால் அதுவே புஷ்கரத்தீவென்றுஞ் சொல்லப்படுகிறது. அதற்கப்பால் அறுபத்துநான்கு லக்ஷயோசனை அகல நிகளமுள்ள சாகத்தீவென்பது ஒன்றுண்டு. அந்தத்தீவை மந்தாகிரி யென்னும் ஒரு மலை சூழ்ந்துகொண்டிருக்கின்றது. அந்த மலைக்கு உட்புறத்தில் மூப்பத்திரண்டு இலக்ஷயோசனை அகல நிகளமும் ஆழமுமுடைய பாற் சமுத்திரம் வளைந்துகொண்டிருக்கின்றது. கீரைத்தண்டுகள் மிகுந்து வளர்ந்திருப்பதினால் அதற்குச் சாகத்தீ வென்று பேர் இட்டிருக்கின்றது. அதற்கப்பால், மூப்பத்திரண்டு லக்ஷயோசனை விசாலம் பொருந்திய கிரவுஞ்சத்தீவமென்பது ஒன்றுண்டு. அந்தத் தீவைக் கிரௌஞ்சகிரி யென்னும் ஒருமலை சூழ்ந்துகொண்டிருக்கின்றது. அந்த மலைக்கு உட்புறத்தில் பதினாறு இலக்ஷயோசனை அகலமும் ஆழமுமுடைய தயிர்க்கடல் வளைந்துகொண்டிருக்கின்றது. அவ்விடத்தில் அன்றில் முதலிய பக்ஷிகள் மிகுந்திருப்பதினால், அது கிரௌஞ்சத்தீவென்று சொல்லப்பட்டது. அதற்கப்பால், பதினாறு லக்ஷயோசனை அகலமும் நிகளமுமுடைய கோமேதகத் தீவென்பது ஒன்றுண்டு. அந்தத் தீவத்தை நீணகமென்னும் ஒரு மலை சூழ்ந்திருக்கின்றது. அந்த மலைக்கு உட்புறத்தில் எட்டுலக்ஷயோசனை அகலமும் ஆழமுமுடைய நெய்க்கடல் வளைந்துகொண்டிருக்கின்றது. அவ்விடத்தில், கோமேதக மலைகளே மிகுந்திருப்பதினால், கோமேதகத் தீவென்று கூறப்பட்டது. அதற்கப்பால், எட்டு லக்ஷயோசனை அகலமும் நிகளமுமுடைய சான்மலித் தீவென்பது ஒன்றுண்டு. அந்தத்தீவை மேரு மந்தரை யென்னும் ஒரு மலை சூழ்ந்திருக்கின்றது. அந்த மலைக்கு உட்புறத்தில், நாலுலக்ஷயோசனை அகலமும் ஆழமுமுடைய மதுக்கடல் வளைந்திருக்கின்றது. அவ்விடத்தில் இலவமரம் மிகுந்திருப்பதினால், அது சான்மலித் தீவென்று கூறப்பட்டது. அதற்கப்பால், இரண்டு லக்ஷயோசனை விசாலமுடைய குசைத்தீவு ஒன்றுண்டு. அந்தத் தீவைப் பாரிசகிரியென்னும் ஒரு மலை வளைந்துகொண்டிருக்கின்றது. அந்த மலைக்கு உட்புறத்தில், இரண்டு லக்ஷயோசனை விசாலமும் ஆழமுமுடைய கருப்பஞ் சாற்றுக்கடல் சூழ்ந்திருக்கின்றது. அவ்விடத்தில் தருப்பைப் புல் மிகுந்திருப்பதால், அது குசைத்

தீவென்று கூறப்பட்டது. இப்பால் ஒரு லக்ஷயோசனை விஸ்தீரண மாய் அயவரை யென்னும் ஒரு மலை சூழ்ந்திருக்கின்றது. அந்த மலைக்கு உட்புறத்தில் லக்ஷயோசனை அகலமும் ஆழமுமுடைய உவர்க்கடல் வளைந்துகொண்டிருக்கின்றது; அங்கே ஜம்பு விருக்ஷ மென்னும் நாவல்மரம் ஒன்று இருப்பதினால், இந்தத் தீவிற்கு ஜம்புத் தீவென்றும், நாவலந்தீவென்றும் பெயர். தேங்கும் கமுகும் நிறைந்த இந்த நாவலந்தீவினுடைய மத்தியில் மகமேருவென்னும் பொன் மலை இருக்கின்றது. தேனே ஒத்த இன்மொழி மாதே! கேளாய், இந்தச் சம்புத்தீவத்திற்கு மத்தியில் மாமேருவாகிய பிரமபீடம் இருப்பதினால், அந்த மாமேருவினுடைய நான்கு திசையிலும் இப் போது நான் சொல்லிவந்த ஏழு தீவமும், ஏழு மலையும் ஏழு பொரு ளும், ஏழு கடலும், ஏழுவகை மரமும், ஏழுபொழிலும், ஏழு பறவை களும், பலவித அதிசயங்களும் பொருந்தியிருக்கும். இதுவுமன்றி, சம்பு நாவற்கனியின் சாற்றினால் அயப்பொடிகள் பொற்சன்னங்க ளாய் நதியின் கரைதோறும் வரம்பாக நிரம்பியிருக்கும் வளத்தினால் மற்றத் தீவுகளைப் பார்க்கிலும், இந்தத்தீவே மிகச் சிறப்புடைத் தென்று நூல்கள் யாவற்றிலும் கூறப்பட்டிருக்கிறது. மேலும், மாமேருவுக்கும் கவிந்திருக்கும் அண்டச்சுற்றிற்கும் மத்தியிலிரா நின்ற பூமியின் விசாலமானது, கிழக்கே ஐம்பதுகோடி யோசனை யும், மேற்கே ஐம்பது கோடி யோசனையும், வடக்கே ஐம்பது கோடி யோசனையும், தெற்கே ஐம்பது கோடி யோசனையுமாகப் பரந்தும், பூமியின் கீழாக நாற்பது கோடி யோசனை தூரம் ஊடுருவியும், ஆகாயத்தின் மீதாக ஐம்பதுகோடி யோசனைதூரம் உயர்ந்தும் இருப்பதாக உன் உணர்வில் அறிந்துகொள்ளக் கடவாய், பெண்ணே! என்றார் பரமசிவன்.

பின்னும் சொல்லுகின்றார்:—இம்மேற்றியும் மேற் சொல்லிய மாமேருவுக்கு வடமேற்கு வடக்கு வடகிழக்கில், நீலகிரி சுவேதகிரி சிருங்ககிரி யென்று மூன்று மலைகள் முறையே உள்ளன. கீழ்த் திசையில் மாலியவான்கிரி என்றொரு மலை நிற்கின்றது. மேற்றிசை யில் கந்தமாதனமென்று ஒரு மலை இருக்கின்றது. தெற்கு தென் மேற்கு, தென்கிழக்கில், முறையே நிடதகிரி ஏமகூடம் இமயவரை என்னும் மூன்று மலைகள் உள. இந்த எட்டு மலைகளைத்தான் அட்ட குலகிரி யென்று யாவரும் உணரும்படி சாத்திரங்கள் முறையிடுவது.

இதுவுமல்லாமல், முன் சொல்லிய பொன்மலையாகிய மாமேருவுக்குக் கீழ்த்திசையில் நிலைபெற்ற மந்திரகிரியும், பருத்துத் தழைத்த சிலைகளையுடைய மாமரங்கள் நிறைந்த ஆம்பிரவனமும் நெருங்கிய நந்தவனமும், பாற்சுனையும், தேவரும் முனிவரும் களிக்கப் பொருந்தி இருக்கின்றன. மேருவுக்குத் தென்றிசையில் மேரு மந்தரமென்னும் மலையும், ஜம்புத்தீவ மென்னும் பெயரைத் தந்த சம்புவிருட்சமும், சயித்திரதவனமும் பெருமைதங்கிய யதுச் சுனையும், அழகுபெற விளங்கிக்கொண் டிருக்கின்றன. மாமேருவுக்கு மேற்றிசையில் பாரிசகிரி யென்னும் மலையும், மலர்ந்து சிறந்த கடம்ப விருக்ஷமும், தலத்திற் கலங்காரமாகிய பிரசப்பெயர் வனமும், சுத்தமும் சுவையும் பொருந்திய கருப்பஞ் சாற்றுச் சுனையும் இருக்கின்றன. மேருவுக்கு வடதிசையில் சூமுதகிரி யென்னும் மலையும், வானமளாவும் உயர்ந்த வட விருட்ச மென்ற ஆல மரமும், சர்வதோபத்திர மென்ற பூந்தோட்டமும், நன்னீர்ச்சுனையும்; எல்லாத் திசைகளினும் மேம்பாடாய் விளங்கிக்கொண்டிருக்கின்றன. மேலும் அந்த மாமேருவானது பதினாயிரம் யோசனை தூரம் நடுவே ஓங்கி, முப்பத்திரண்டு யோசனைதூரம் வானத்தில் உயர்ந்து, எண்பதினாயிரம் யோசனை விசாலம் சுற்றிலும் பருத்து, சந்திர சூரியர் முதலிய நவக்கிரகங்களுக்கு நடுநிலையாய் இவ்வுலகுக்கு அஞ்ஞாணிபோற் பிரகாசித்துக் கொண்டு அநேகங் கோடி சிகரங்கள் பொருந்தி, மூன்று குவடாகப் பிரிந்து அவை அயன் பீடம், அரிபீடம், சிவன்பீடமுமாக அமைந்திருக்கும். மேலும், அந்த மகம் மேருவின் எட்டுத்திக்கிலும் இந்திரன் - அக்கினி - இயமன் - நிருதி - வருணன் - வாயு - குபேரன் - ஈசானன் முதலாகிய அமரர் - சித்தர் - அசுரர் - தயித்தியர் - கருடர் - கின்னரர் - நிருதர் - கிம்புருடர் - காந்திருவர் முதலியோரும் தங்களுக்கு ஏமகூடம்போல நிவாசதலமாய் வீற்றிருப்பார்கள். மேலும், முன்சொல்லிய மகம் மேருவுக்குக் கீழ்த்திசையில் நிலைபெற்றிருக்கும் மந்தரகிரி யென்னும் மலையின்மீது பிணைத்துத் தழைத்துத் தளிர்த்து விளங்கிய மாமரமானது ஆயிரம் யோசனை பரப்பும் உயரமு முடையதாய் இருக்கின்றது. அந்த மாம்பழத்தினின்றும் இழிந்துவரும் இரசத்தைப் புசித்தவர்களுக்கு இடகலை - பிங்கலை யென்னும் சுவாசமானது பத்து யோசனை தூரம் பரிமளித்துக்கொண் டிருக்கும். மேற்சொல்லிய மாம்பழச் சாரானது வழிந்துபோய்ச் சேர்ந்து நிறைந்து நின்ற

தையே சோதக நதியென்று சொல்லுவர். இஃதல்லாமலும், இடகலை பின்கலை யென்னும் சுவாசம் பரிமளித்திருப்பதில் என்ன பிரயோசனமென்றால், சுவாசம் வீணுகிப்போகாமல் நீடித்துப் பர்ய்வதினால் அவர்களுக்கு தீர்க்காயு ளென்றும் அவர்களே நித்திய தத்துவம் பெற்றவர்க ளென்றும் சொல்லப்படும். இஃதன்றியும், கிழக்கு சமுத்திரத்திற்கும் மேற்கு சமுத்திரத்திற்கும் மத்தியிலிருக்கும் பூமியானது, குருகண்டம் என்பது. குற்றமற்ற இந்தச் சிருங்க மலைக்குத் தெற்கு சுவேதமலைக்கு வடக்கு கிழ்க்கடல் மேற்கடலுக்கு நடுவிலிரா நின்ற பூமி இரண்டுவருடம் என்பது. இந்தச் சுவேத கிரிக்கும் நீலகிரிக்கும் கீழ்க்கடலுக்கும் மேற்கடலுக்கும் இடையி லிருக்கும் பூமி நிரமியவருடம் என்பது. இந்த நீலகிரிக்குத் தெற்கு மேருவரைக்கு வட்க்கு மேற்கடல் கீழ்கடலுக்கு மத்தியிலிருக்கும் பூமி இளாவிரதவருடம் என்பது. மேருவரைக்குத் தெற்கு மாலிய வான் பர்வதத்திற்கு மேற்கு கீழ்க்கடல் வரைக்கும் உள்ளது பத்ர வருடம்; கந்தமாதனத்திற்கு மேற்கும் மேற்சமுத்திரத்திற்கு கிழக்கும் இருப்பது கேதுமாலவருடம்; நிடதகிரிக்குத் தெற்கு ஏம மலைக்கு வடக்கு மேற்கடல் முதல் கீழ்க்கடல் வரைக்குமுள்ள பூமி அரிவருடம். ஏமமலைக்குத் தெற்கு இமயமலைக்கு வடக்கு கிழ்க்கடல் முதல் மேற்கடலளவும் தேவபூமிபாகிய கிம்புருட வருடம் உள்ளது. இமயமலைக்குத் தெற்கு தென் கடலுக்கு வடக்கு மேற்கடல் முதல் கீழ் கடலுக்கு நடுவிலிருக்கும் பூமி பாரத வருடமாம். மேலும், நெருப்புப் பொறிகள் பறக்கும் வேலாயுதத்தைத் தாங்கிய தீரகரு கிய அங்கதீரன் பெற்ற ஒன்பது பிள்ளைகளும் தமது பேரால் அரசு செலுத்தி வந்த இந்த ஒன்பது வருடத்தையும் நவகண்ட மென்றும் சொல்லுவார்கள். இந்த நவகண்டத்தின் அகல நீள அளவையும் சொல்லுகிறேன் கேளாய் மங்கையர்க்கு அரசியாகிய பார்வதியே! நெருங்கி யிராநின்ற மாலியவான் மலைக்கும் கந்தமாதன கிரிக்கும் மத்தியிலும், தனுகோடி முதல் வடகோடி வரையிலும் மூன்று வருடம் சேர்ந்த இந்தப் பாரதவருடம் முப்பத்து நாலாயிரம் யோசனை தூரம் அகல நிகள முடைத்தா யிருக்கின்றது. அப்பால் நிடதகிரிக்கு வடக்கு முதல் நீலகிரி வரையிலும் மூன்று வருட மிருக்கின்றன். ஒவ்வொரு வருடமும் ஒன்பதினாயிரம் யோசனை யகல நிகள முடையது. அதல்லாமலும் இந்தப் பாரத வருடத்திற் குச் சிறப்பாகிய ஆறு குலகிரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு

மலையின் அகலம் இரண்டாயிரம் யோசனைதூரம் அடிமுதற் சிகரம் வரைக்கும் பதினாயிரம் யோசனைதூரம் உயர்ந்திருக்கின்றது. ஓ மாதே! இப்போது நான் சொல்லிவந்த ஒன்பது வருடங்களில் எட்டு வருடங்களில் சாரணர்-சித்தர்-கந்திருவர்-வித்தியாதரர்-கிம்புருடர்-விஞ்சையர் முதலானோர் ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு குலத்தர் வாசஞ் செய்வார்கள். அப்படியிருந்தபோதிலும் அவர்கள் இந்தப் பாரத வருடத்தில் வந்திருந்து தருமம், அருச்சனை, பூசை, தவம் இவை முதலிய யாவையும் செய்து நிறைவேற்றிக் கொண்டு தங்கள் தங்கள் பதிசென்று அனுபவித்துக் கொள்ளுவார்கள். அந்த எட்டு வருடத்திலும் வாசம் செய்துகொண்டிருப் போர்களுக்கு ஆயுள் எவ்வள வென்றால், ஒன்றேகால் ஆயுதம் என்னப்படும். ஒன்றேகால் ஆயுதமாவது பன்னீராயிரத் தைந்நூறு வயதென்று தெரிந்து கொள்வாய். பெண்ணே! அப்படியிருக்க இப் பாரதவருடத்தில் இருப்பவர்களுக்குக் குறைந்த ஆயுசு ஏற்படுத்தி யிருப்பது ஏனென்றால், மகா வருத்தத்துடன் வாயுவைக் கும்பித்து வாணாள வளர்த்திக் கொள்ளுவதைப் பார்க்கிலும் இந்த மாம்பழ ரசத்தைப் புசித்து வாழ்நாளை நீடிக்கச் செய்வதே மேன்மையாத லால் அவ்விடத்திலிருப்பவர்களுக்கு ஆயுளை விசேஷமாகச் சொல்லி யது; அப்பால் மேற்கூறிய மகமேருவுக்குத் தென்றிசையில் மேரு மந்தர மென்னும் மலையினிடத்துப் பொருந்திய இரண்டாயிரம் யோசனை பரப்பும் உயரமுமுடைய நாவல் மரத்தின் கனியானது ஐராவதத்தின் தலையத்தனை பெரிதாயிருக்கும்; அப்பழம் நைந்து விழுந்து அதின் தேன்போல் நிறைந்து நின்ற நதியே சம்புநதி யென்று சொல்லப்படும். அந்தச் சம்புநதியானது மேற்சொல்லிய மாமேருவின் மேற்புறமாகச் சுற்றிக்கொண்டு கீழ்த்திசையிற் புகுந்து சமுத்திரத்தின் நடுவேபோய்ச் சாரும்படியாய்ப் பேராசைகொண் டோடிவரும். அந்தச் சம்புநதி தோய்ந்த இடங்கள்தோறும் யாவ ராலும் எடுக்கப்படாத பொற்பாறைகள் நிறைந்திருக்கும். அந்தப் பாறைபாகிய பொன்னால் ஆபரணங்கள் செய்து தரித்துக்கொண்டா லும் அல்லது அந்தத் தீர்த்தத்தைப் பருகினாலும் அவர்களுக்கு நரை திரை மூப்பு வியாதி முதலிய நாசங்களில்லை. மேலும், மாமேரு வுக்கு மேற்றிசையில் இருக்கும் கந்தமாதனச் சாரலிற் பொருந்திய கடம்பமரமானது ஆயிரம் யோசனை அகலந் தழைத்துச் செழித் தது; அதன் மலர்களில் நிறைந்து சொரியும் தேனானது யாவர்க

ளும் வணங்கும்படிக்குக் கடம்ப நதியென்னும் பேர்கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நதியில் ஸ்நானஞ் செய்தாலும், தாகமருந்தினாலும் நூறு யோசனைதூரம் சுவாசமணமும் தேகமணமும் சூழ்ந்துகொண்டிருக்கும். இம்மதன்றியும் மாமேருவுக்கு வடதிசையிலிருக்கும் சுவேதகிரி சாரலில் நூற்றுப்பத்து யோசனை உயரமும் பெருமையும் பரப்புமுடைய ஆலமரமொன்று இருக்கின்றது. அதினுடைய கிளைகள் தோறும் தெருங்கியுள்ள கனியைப் புசித்தால் பால் - தயிர் - தேன் - நெய் இவைகளைக் கொடுப்பதல்லாமலும், அழகிய பொன்னுடை இரத்தினபரணங்கள் முதலிய யாவுங் கொடுத்து ஆற்றைப்போல் சுரப்பும் ஊற்றைப்போல் பெருக்கும் எடுத்தோடிக் கொண்டிருக்கும். இம்மதல்லாமல், இன்னமுஞ் சொல்லுகிறேன் கேளாய் பெண்ணே பார்வதி! சிருட்டி கருத்தாவாகிய பிரமாவானவன் பூர்வத்திற் பெற்ற சுயம்புமனு வென்பவன் மேற்சொல்லிய புட்கரத்தீவம் - சாகத்தீவம் - சான்மலித்தீவம் - கிரௌஞ்சத்தீவம் - கோமேதகத்தீவம் - குசைத்தீவம் - சம்புத்தீவ மென்னும் சத்த தீவங்களை தனது புயபல பராக்கிரமத்தினாலும், மிகுந்த தவத்தினாலும் ஆண்டுவந்தான். அப்படி அரசுபுரிந்து வருகாலையில் அந்தச் சுயம்பு மனுவுக்கு நந்தன் - சயித்திரன் - பிரசன் - சர்வதோபத்திரன் - கரதீரன் - மனுதாரன் - அங்கதீரனென்று ஏழு பிள்ளைகள் பிறந்து கல்வியிற் சிறந்து வளர்ந்து, கருதலரைக் காய்ந்து கடைக்கண் சிவந்து செய்கையிற் சிறந்தவரானார்கள். அக்காலையில் அச்சுயம்புவே ஏழு பிள்ளைகளின் திறத்தைக்கண்டு ஏழு தீவங்களையும் ஒவ்வொரு பிள்ளைக்கு ஒன்றொன்று பகுத்து கொடுத்து பட்டங்கட்டி வைத்தான். அந்தத் தீவங்களை அந்தப் பிள்ளைகள் அரசாட்சி செய்து வந்தார்கள். அந்த ஏழு பிள்ளைகளில் அங்கதீர னென்பவன் இந்தச் சம்புத்தீவை செங்கோல் முறை குன்றுமல் தருமங் குறையாமல் மலைகளைப் பிளக்கும் வச்சிராயுத முதலிய ஆயுதங்களைப் பெற்று இராச்சிய பரிபாலனஞ் செய்து வருகாலையில், குரு - இரணியன் - நீரமியன் - அளாவிரதன் - பத்திரன் - கேதுமாலன் - அரி - கிம்புருடன் - பாரதனென்ற ஒன்பது பிள்ளைகளைப் பெற்று வளர்த்து இந்தச் சம்புத்தீவத்தை ஒன்பது பங்காக்கி ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு பங்கைக் கொடுத்துப் பட்டங்கட்டி அந்தப் பிள்ளைகள் பேரால் நவகண்டத்திற்கும் பேரும் ஏற்படுத்தி வைத்து பத்தினி புத்திரர்கள் முதலிய பூஷணத்திரவியங்களையும் வெறுத்து ஆன்மார்த்

தத்திற்காகக் கனங்குலவிய வனம்புகுந்து தவமிருந்து மனங்குவிந்து மோட்சவீ டடைந்தான்.

அங்கதீர னென்னும் அரசனும், அவனுக்குப் பின்பு அவன் ஒன்பது பிள்ளைகளும் ஆண்டுவந்த ஒன்பது கண்டங்களின் அளவையும் சொல்லுகிறேன்; கேளாய் பெண்ணே பார்வதி! என்று பரமசிவனவர் சொல்லத் தொடங்கினர். "மலைகள் போலும் அலைகள் வீசும் வடக்குச் சமுத்திரத்திற்குத் தெற்காகவும், அணியணியாய் மணிகள் கொழிக்கும் சுனைப் பெருக்குடைய சிருங்கமலைக்கு வடக்காகவும் இருக்கும் இரணியவருட முதலிய பாரதவருடத்தில் இருப்பவர்க ளெல்லோரும் சீக்கிரத்தில் மோட்சம் அடையும்படி ஆயுள் நீடித்திருக்க விடாமல் நூற்றிருபதென்றே விதித்திருக்கின்றது பெண்ணே" என்று சிவபெருமான் சொல்ல; உமையவள் கேட்டு சிந்தை களித்துப் பரமசிவத்தை நோக்கி, "ஓ சுவாமி! மற்ற எட்டு வருடங்களிலும் இருப்பவர்கள் இவ்விடத்தில் வந்து தவஞ் செய்து மேன்மை பெறவும் இவ்விடத்தி லிருப்பவர்கள் சீக்கிரத்திற் கதிசேருவதற்காக ஆயுட் குறுக்கமும்ஆம் என்றுஞ் சொன்னீர்; அப்படிப்பட்ட விசேட நலத்தைக் கொடுக்கும் மகத்துவங்கள் இந்தப் பாரதவருடத்தில் என்னென்ன இருக்கின்றன? அவற்றையும் தெரிவிக்க வேண்டும்" என்று பார்வதா தேவி கேட்க, பரமசிவம் சொல்லுகின்றார், கேளாய் அழகிய திருமேனியையுடைய பெண்ணே! இரமணீயமாகிய பொற்றுமரை மலர்களுடனே ஆகாயத்தினின் றிழிந்து மாமேருவின் சிகரத்திற் பாய்ந்து மூன்று பிரிவாகி, அந்த மாமேருவுக்குச் சமீபமாயிருக்கின்ற கும்பகிரியில் ஒரு பிரிவு விழுந்து அதன் சிகரத்தைப் பிளந்து வரும் நதியானது நான்கு பிரிவாய்ச் சமுத்திரத்திற்போய்க் கலக்கும். இப்பால் மாமேருவுக்குத் தென் புறத்திலிருக்கும் குலகிரியினுடைய சிகரத்தில் வீழ்ந்த மற்றொரு பிரிவானது அம்மலையின் நடுவாகிய வயிற்றைக் கிழித்துப் பெருமை தங்கிய நிலத்தைப் பிளந்து தென் முகமாகத் திரும்பி வராநின்ற கங்கையாற்றுல், இந்தப் பாரதவருடஞ் சிறந்ததென்று சொல்லுவதற்குச் சாட்சியா யிருக்கின்றது. இம்மென்றியும் சரஸ்வதி - யமுனை - கோதாவரி - நர்மதை - கௌசிகை - துங்கபத்திரை - சரயூநதி - பாலி - பெண்ணை - காவிரி - கிருஷ்ணை - தாம்பிரபரணி முதலிய பல தீர்த்தங்களும் பொருந்திய இப் பரதகண்டத்திற்கு

ஒப்பாகிய கண்டமும் உண்டோ? உத்தமியே! இன்னும் திருக் கோயில் - திருவேங்கடம் - திருநெல்வாயில் - திருக்கழிபாலை - திருப் பெருமணம் - திருமயேந்திரபள்ளி - திருமுல்லைவாயில் - வடமதுரை - தென்மதுரை - காசி - காஞ்சி - மாயாபுரி - துவாரகை - அவந்தி - அயோத்தி - திருக்கலிங்காமூர் - திருச்சாய்க்காடு - திருப்பல்லவ னீச்சுரம் - திரு வெண்காடு - கோகரணம் - இராமேச்சுரம் - தென்கயிலை வடவேங் கடம் - திருக்காட்டுபள்ளி - திருக்குருகாவூர் - திருக்காறு - திருக் கோலக்கா - திருவாரூர் - புள்ளிருக்கும் வேளூர் - திருவாவிநன்குடி - திருக்கேதாரம் - ஸ்ரீரங்கம் - திருவானைக்காவல் - திருக்கண்ணர் கோயில் - திருஞாயிறு - திருநின்றியூர் - திருப்புன்கூர் - அன்னியூர் - திரு வேள்விக்கூர் - சீகாழி - சிதம்பரம் - சிற்சபை - திருக்குடந்தை - சகநாதம் - திரிசிரபுரம் - தலைசயனம் - குருக்ஷேத்திரம் இவைகள் முதலாகிய திவ்விய தலங்களும் இக்கண்டத்தில் இருக்கின்றன. இத்தப்பதிக்கு ஒப்பாகிய திருப்பதிகள் எப்பாரினுமில்லை. அறிவுடைய மாதே கேளாய்! இப்போது சொல்லிவந்த தல விசேடத்தினாலும், நதி விசேடத்தினாலும், காட்சி சிறப்பினாலும், தவத்தினாலும், சோடச தானங்களினாலும், சிவார்ச்சனை விஷ்ணுவார்ச்சனைப் பூசைகளி னாலும், சுத்தங்களினாலும், சகலவித வளங்கள் முதலிய நலங்களி னாலும், இந்தப் பரதகண்டம் புனிதமாகிய விசேடம் பெற்றது; இந்தப் புனித விசேடம் பெற்ற பரத கண்டத்தில் குருக்ஷேத்திரம் மேலாகிய பவித்திர முடையது. அநேகங்கோடி நற்குலத்தவர் நற்குணத்தவ ரெல்லாரும் நன்மை பெறச் செய்த யாக சாலைகள் கோடா கோடிக ளிருக்கின்றன. இஃதல்லாமலும், உத்தம க்ஷத்தி ரியகுல போஜராகிய ராஜாக்க ளெல்லோரும் பகை மேற்கொண்டு வெற்றி பெறக் கருதி யுத்தஞ் செய்த மேலாகிய தலம் குருபூமியே ஆகும். இஃதன்றியும், பரசுராமனவன் இராச வமிசத்தைக் கருவறுத்து அவர்கள் தேகத்தினின்று பெருகிய இரத்தத்தினால் சமந்த பஞ்சக மென்னும் தீர்த்த மகத்துவம் உண்டாக்கி, அந்த உதிர தீர்த்தத்தில் தன் தந்தைக்குத் திலதருப்பணக் கடனைக் கழித் தார். இன்னமும், அநேக தருதியுடைய பெரியோர்க ளெல்லோ ரும் தங்களுக்குரிய காரியங்களை இவ்விடத்திலேயே நிறைவேற்றிக் கொண்டார்கள். அப்படிப்பட்ட மகத்துவமுடைய அந்தக் குரு பூமி எவ்விடத்தி லிருப்பதென்றால், கல்வி வளமுஞ் செல்வ வளமும் தருகின்ற சரஸ்வதி நதிக்குத் தெற்கில் இருக்கிறது.

இவ்வாறு சொல்லியதை உமையவள் மிகுந்த சந்தோஷத் துடன் கேட்டுச் சிவபெருமானை நோக்கி "ஓ சுவாமி! நவகண்ட மென்று பிரித்துச் சொல்லி, அவற்றினுடைய விசேடங்களையும், இந்தப் பரத கண்டத்தினுடைய மகத்துவங்களையும் விசால முதலிய தன்மைகளையும் எனக்குச் சொல்லி வந்தீர்; நானும் அதை நன்முகத் தெரிந்துகொண்டேன். மேற்சொல்லிய ஏழு தீவுகளிலே இந்த நாவலந்தீவை நீக்கி மற்ற ஆறு தீவுகளின் விபரங்களையும் சொல்ல வேண்டும்" என்று வினயத்துடன் வேண்டிக்கொண்டாள். இவ் வாறு நயந்து வேண்டிக்கொள்ளும் உமையவளை நோக்கிச் சிவ பெருமான் புன்சிரிப்புடன் சொல்லத் தொடங்கினர்:—

கேளாய் பெண்ணே! முன் சொல்லிவந்த சத்த தீவுகளில் இந் தச் சம்புத்தீவு நீங்க மற்ற ஆறு தீவுகளையும் சுயம்பு மனுவினது ஆறு பிள்ளைகள் அரசு செலுத்தி வந்தார்கள். இந்தத் தீவுகளில் புட் கரமென்னுந் தீவைச் சர்வதோபத்திரன் என்னும் அரசன் ஆண்டு வந்தான்; அவனுக்குப் பிராசீனன் - சுவேதன் - பிரத்தியக்கு - உத் தரனென்று நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். அப்போது, தான் ஆண்டுவந்த புட்கரத்தீவைக் கீழ் விதேகம் - மேல் விதேகம் - வட விதேகம் - தென் விதேகம் என்று நாலுகண்டமாக்கி, அதனை பிள்ளை கள் நால்வருக்கும் கொடுத்தான்; அந்த நான்கு பிள்ளைகளும் துரைத்தனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். ஓ பெண்ணே! பிள் ளைகளின் குணமறிந்து பூமியைப் பங்கிட்டுக் கொடுத்து விடுகின்ற தந்தையானவன் எல்லாத் தேவரிலும் முதற்றேவன்; அப்படிச் செய்யாமல் இறந்துபோகும் தகப்பன், புத்திர மித்திரர் முதலிய யாவருக்கும் பகையென்றும் கொடும்பாவியென்றும் இராச நீதியி லும் நீதி சாஸ்திரத்திலுஞ் சொல்லியிருக்கின்றபடியால் அந்தந்த அரசர்களும் பாவத்திற்குப் பயந்து உடனே பகுந்து கொடுத்து விட்டார்கள். அந்த நீதி முதலிய தருமங்கள் அப்படியிருக்க, மேற் சொல்லிய ஆறு தீவுகளிலும் வாழ்கின்ற மனிதர்களுக்கு ஆயிரம் வருஷம் ஆயுளென்றும் புட்கரத் தீவோர் பிரமாவைப் பூசிப்பார்க ளென்றும், கிரௌஞ்சத்தீவோர் வருணனைத் தொழுவா ரென்றும், பிலட்சத்தீவோர் சூரியனை வணங்குவார்க ளென்றும், சாகத்தீவத் தார் வாயுவை ஆராதிப்பார்க ளென்றும், சான்மலித்தீவத்தினர் சந்திரனைப் போற்றுவா ரென்றும், குசைத்தீவினர் அக்கினியைத்

கொண்டாடுவார்க ளென்றும், நீர்வளம் நெல்வளம்பொருந்திய இந்தச் சம்புத்தீவத்தார் மேலாகிய விதிமுறைகளுடன் கடவுளைத் தொழுதல் - பூசை - சத்தியம் - சௌசம் - ஆசாரம் - வீரகாரம் - ஞானம் - இரக்கம் - யாகம் - ஓமம் - ஔபாசனம் முதலிய வண்ணம் வளங்களுடையவர்க ளென்றும், இவ்வுலகத்தையே தேவபூமியாகச் சொல்லப்படு மென்றும் பரமசிவன் சொல்ல, இதனுடைய தன்மைகளைக் கேட்டுச் சந்தோஷமடைந்து பின்னும் உமையவள் "ஓ சுவாமி! கீழுலகம் ஏழு என்றருளி யிருக்கின்றீ ராதலின் அவ் விவரங்களை நன்கு விளக்கவேண்டும்" என்ன, சத்தியை நோக்கிச் சங்கரன் சொல்லத் தொடங்கினர்.

மண்டல அடுக்கு

கேளாய் பெண்ணே கௌரீ! மனுக்கள் வசிக்கும் பூலோகத்தை ஊடுருவ அதோ முகமாகத் தாழ்ந்து சென்றாலோ அங்கு ஆயிரம் பணமுடியையுடைய ஆதிசேடனும் அஷ்டகசங்களும் சூழ்ந்திருக்கும். அப்புவனத்தை நீங்கி அப்பாற் சென்றால் ஒப்பில்லாத பிலங்களாகிய அதலம் - விதலம் - சுதலம் - தராதலம் - இரசாதலம் மகாதலம் - பாதலமென்று ஏழுலகங்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஒன்பது லக்ஷயோசனை விசாலமுடையது. இந்த ஏழுலகத்தின் கடைசியாகிய பாதலத்தில் விவேகத்தில் மிகுந்த காண்டவ ரென்னும் மகாதபாவர் பொருந்தியிருப்பார். அவ்விடம் நீங்கிச் சென்றால் அள்ளல் - ரௌரம் - கும்பிபாகம் - கூடசாலம் - செந்துகானம் - பூதி - மாபூதி என்னும் பலநிறமாகிய ஏழு நரகபூமி உள்ளது. அந்தப் பூமியை நீங்கினால் தேவர்கள் தொழுமிடமும், நமது கணக் கூட்டமும், ஆதாரமாகிய ஆமையும் அங்கிருக்கின்றன. அந்நிலம் விட்டு நீங்கினால் இந்த அண்டத்தின் கீழ்ச் சுவர் தோன்றும். பெண்ணே! பூலோக முதல் அண்டச்சுவர் வரைக்கும் ஐம்பது கோடி யோசனை தூரமாகும்; இனி, பூலோகமுதல் மேலாகிய ஏழுலகத்தின் சீரும் சொல்லுகிறேன், கேளாய் பார்வதி! "மண்ணுலகத்தில் அளவிறந்த யோனிபேதமாக ஆன்மாக்கள் வாழுமென்று உணர்ந்திருக்கின்றா யல்லவா? பெண்ணே! இவ்வுலகின் மேற் பத்துயோசனைதூரம் வாயுமண்டலம்; பதினாயிரம் யோசனை தூரம் மேகமண்டலம்; இதுவரையிலும் பூலோகம்; அதற்கு மேலாகிய புவலோகத்தில் உமையே! நலமுடைய கிம்புருடர், பல

முடைய கருடர், விஞ்சையர், இயக்கர், சித்தர் முதலியோர்கள் பொருந்தி வாழும் உலகமும் உண்டு. அதன்மேல் ஆகாய கங்கை செல்லுகிறது; அப்பால் லக்ஷயோசனைதூரம் சூரியமண்டலம்; அதுவே முப்பத்து முக்கோடி தேவர்கள் கூடி வழிநடக்க மண்டல வீதியாயிருக்கும்; அதற்குமேல் லக்ஷயோசனைதூரம் சந்திர மண்டலமும்; அப்பால் லக்ஷயோசனை தூரம் நக்ஷத்திர மண்டலம்; அதன்மேல் இரண்டு லக்ஷயோசனை தூரம் புதனுடைய மண்டலம்; அப்பால் இரண்டு லக்ஷயோசனை தூரம் சுக்கிர மண்டலம்; அதன் மேல் இரண்டு லக்ஷயோசனை தூரம் அங்காரகனுகிய செவ்வாய் மண்டலம்; அப்பால் இரண்டு லக்ஷ யோசனைதூரம் குருமண்டலம்; அப்பால் இரண்டு லக்ஷயோசனை தூரம் சனி மண்டலம்; அதன்மேல் லக்ஷயோசனை தூரம் தவத்தையுடைய சத்த ரிஷிகள் மண்டலம்; அப்பால் லக்ஷயோசனை தூரம் துருவ மண்டலம்; இதுவரையிலும் பதினைந்து லக்ஷயோசனை யுடையது புவலோகம். இதன் மேலாகிய சுவலோகமென்பது எண்பத்தைந்து லக்ஷயோசனை தூரமுடையது. அதற்கப்பால் மகா லோகம் இருநூறு லக்ஷ யோசனை தூரமுடையது. அதுதான் தேவேந்திரன் வாழும் தேவ லோகமென்று சொல்லப்படும். அவ்விடத்தில் மார்க்கண்டேயர் முதலாகிய மகா முனிவர்களெல்லோரும் வீற்றிருப்பார்கள். அதற்குமேல் எட்டுக்கோடி யோசனை தூரமுடையது சனலோகம், அவ்விடத்தில் பிதிர் தேவதை முதலிய புண்ணியர் பொருந்தி வாழ்வார். அந்தச் சனலோகத்தின் மீது பன்னிரண்டுகோடி யோசனை தூரமுடையது தவலோகம். அவ்வுலகத்தில் சனக சனந்த சனற்குமார சனதனர் முதலியோரும் வாழ்வார்கள்; இந்தத் தவலோகத்தின்மேல் சிருட்டி கருத்தாவாகிய பிரமதேவன் வாழும் சத்தியலோகம் வரைக்கும் ஏழுலகமென் றுணரக்கடவை. இந்த சத்தியலோகத்தின்மேல் பரமபதமென்பது மூன்றுயோசனை தூரமுடையது; பரிமளங்கொண்ட துளவணிமாயன் பொருந்திய பதம்; அதற்குமேல் மூன்றுகோடி யோசனைதூர முடையது. நாம் பொருந்தியிருக்கும் சாயுச்சியலோகம்; இதற்குமேல் ஒருகோடி யோசனை தூரத்தில் குற்றமற்ற அண்டச்சுவர்வட்டம் கவிழ்ந்திருக் கிறதென் றுணரக்கடவை. இதல்லாமல் தூற்றெட்டு உருத்திரர்கள் வாழும் புவனங்களும், சமுத்திரமத்தியி லிராநின்ற இலங்கைமுதலிய தீவங்களும், பற்பலவாக இம்மேதினியில் இருக்கின்றன. மேலும்,

இந்த அண்டத்தை வலஞ்துகொண்டிருக்கும் சக்ரவாளகிரியின் எட்டுத் திக்கிலும் இந்திரன் - அக்கினி - இயமன் - நிருதி - வருணன் - வாயு - குபேரன் - ஈசானன் என்று சொல்லப்பட்ட திக்குப் பாலர்களும், இவர்கள் பொருந்தி யிருக்கும் பட்டணங்களுமுண்டு. ஆகையால், நான் சொல்லிக்கொண்டுவந்த பூலோகமுதற்கொண்டு அண்ட கோளகை வரைக்கும் பஞ்ச தசக்கோடி அளவென்றும் அறியக் கடவை" என்று உமையவளுக்குச் சிவபெருமான் சொல்லி யருளினர்.

பிரம சந்ததி

கேளாய் பெண்ணே பார்வதி! சிருட்டி தலைவனுகிய பிரமனிடத்தில் அத்திரி, அரீசி, புலத்தியன், கிரன், கிருத்து, புலகன் என்னும் ஆறு புத்திரரும், அப்பிரமன் வலது பாதத்தின் பெருவிரலில் தக்கனும், இடது பாதத்தின் பெருவிரலில் தரணியென்னும் ஒரு பெண்ணும் உதித்தனர். அந்தப்பிரமன் உடலிலுதித்த ஆறு புத்திரர்களுள் அரீசியின் புத்திரர் காசிபர். அக்காசிபரால் இவ்வுலகம் விருத்தியாயிற்று. அஃது எவ்வகையெனின் :—

பிரமன் வலது பாதத்துப் பெருவிரலிலே பிறந்த தக்கன், பிரமன் இடது காற்பெருவிரலிலே பிறந்த தரணி யென்பவளைக் கூடி ஆயிரம் புத்திரர்களைப் பெற்றான். அப்புத்திரர்கள் பிரமசரியத்தை மேற்கொண்டு தவஞ்செய்து ஞானபத மடைந்தார்கள். அதைத் தக்கன் கேட்டு மறுபடியும் தரணி யென்பவளைக் கூடி ஐம்பது பெண்களைப் பெற்றான். அந்த ஐம்பது பெண்களில் சிரத்தை, அலட்சுமி, திருதி, துட்டி, புஷ்டி, மேதை, கிரியை, வித்தி, இலச்சை, வபு, சுசாந்தி, சித்தி, கீர்த்தி என்னும் பதின் மூவரைத் தருமனென்னும் மனுவுக்கும்; அசுவனி, பரணி, கிருத்திகை, உரோகணி, மிருகசிரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்னும் இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும்; அதிதி, திதி, தனு, சத்துரு, அரிட்டை, சுரசை, சுரபி, வினதை, தாம்பிரை, குரோதவசை, மூனி, இனை, கிரீடை என்னும் பதின்மூன்று பெண்களைக் காசிபருக்கும் விவாகஞ் செய்து கொடுத்தான். இவர்களில் அதிதி யென்னும் பெண்ணிடத்தே,

அங்கிசன், தாதா, பகன், துவட்டா, மித்திரன், வருணன், அரிய மான், விவச்சுவான், சவிதா, புடா, இந்திரன், விஷ்ணு என்னும் பன்னிரண்டு புத்திரர் பிறந்தார்கள். திதிக்கு இரணியன் பிறந்தான்; அந்த இரணியனுக்குப் பிரகலாதன் பிறந்தான்; பிரகலாதனுக் குக் கும்பன் - நிருபன் - விநோசனன் என்னு மூவர் பிறந்தார்கள். இவர்களில் விநோசனனுக்குப் பலிச்சக்கிரவர்த்தி பிறந்தான். பலிக்கு பாணசுரன் பிறந்தான். தனுவென்பவனுக்கு விப்பிரசித்தி, நமுகாசு, சங்குவருணன், பலோமன், விலோமன் முதலாகிய நாற்பது குமாரர் கள் பிறந்தார்கள். அந்த நாற்பது பேருக்கும் சந்ததி விர்த்தியாகி அளவற்ற அரசர்கள் உதித்தார்கள்.

காலி யென்பவளுக்கு விநோசன், குரோதன் முதலாகிய ஐம் பது புத்திரர்கள் பிறந்து அபிவிருத்தியானர்கள். ஆயுவுக்கு விசயன், விசரன், வீரன், விருத்திரன் என்னும் நால்கு புத்திரர்கள் பிறந்து விருத்தி யானர்கள். சிங்கியை யென்பவளுக்கு இராகு பிறந்தான். மனு வென்பவனுக்கு வீமசேனன், உக்கிரசேனன் முதலாகிய பதினறு கந்திருவர் பிறந்தார்கள். சுரபி யென்பவளுக்கு மேனகை முதலாகிய ரம்பைப் பெண்களும் தேவசுரபிகளும் பிறந்தார்கள். முனி என்பவளுக்கு கன்னன் பிறந்தான். குரோதை வசைக்கு மகாகணன் பிறந்தான். அனுகை யென்பவளுக்கு சித்தகணங்கள் பிறந்தார்கள்.

வினதைக்கு அருணனும் கருடனும் பிறந்தார்கள். அருண னுக்கும் அவன் மனைவி சேந்திக்கும் சம்பாதி சடாயு பிறந்தார்கள். கத்துருவைக்கு ஆதிசேடன் வாசுகி முதலாகிய நூற்றுநான்கு உரக பதிகளும் சலர்க்கரையென்கிற ஒரு புத்திரியும் பிறந்தாள்; இது காசிபர் சந்ததி. இனி அங்கீசன் சந்ததி கூறுவாம். அங்கீசனுக்குப் பிரகற்பதி தேவகுருவானன். அத்திரிக்கு வேத வேதியர்களும் பிரமரிஷிகளும் பிறந்தார்கள். புலத்தியனுக்கு, விச்சிரவாகு முதலா கிய அரக்கர்கள் பிறந்தார்கள். அதில் விச்சிரவாகு வென்பவனுக் குப் பேரன் பிறந்தான். புலத்தியனுக்கு கின்னரர், கிம்புருடர் பிறந் தார்கள். கிருதுவுக்கு அழிவில்லாத நிலைமையை யுடைய நாலு முனிவர்கள் பிறந்தார்கள். பிரமபுத்திரனுகிய தேவலனென்கிற முனிக்குப் பிரசாபதி பிறந்தான். அந்தப் பிரசாபதிக்கு தூமிரை, புத்தி, மனசுவனி, இரதை, சுசனை, சாண்டிலி, பிரபாசலை என்னும்

ஏழு மனிவிகளுண்டு. அவர்களில் தூமிரைக்கு வருணனும், புத்திக்குத் துருவனும், மனசுவனிக்குச் சோமனும், இரதைக்கு சுகுலனும், சுசனிக்கு அனிலனும், சாண்டிலிக்கு அக்கினியும், பிரசாபலிக்குப் பிரபாசன் பிரதியூசன் முதலாகிய வசுக்கள் பிறந்தார்கள். வருணனுக்குத் திரணவனும், துருவனுக்கு காலனும், சோமனுக்கும் பனிகரமென்னும் பெண்ணுக்கும் புரோசனன், வருச்சிகன், சிசிரன், பிராணன், வருணன் என்னும் புத்திரரும், புரதை என்கிற பெண்ணும் பிறந்தனர். புரதை யென்பவளுக்குப் பதினொரு கந்திருவர் பிறந்தார்கள். சுகுடனுக்குச் சோதி பிறந்தான். அனில னென்னும் வசுவுக்கும் சிவை யென்பவளுக்கும் புரோசனனும் அவிக்கியாகமதியும் பிறந்தார்கள். அக்கினி என்னும் வசுவுக்குக் குமாரன் பிறந்தான். தரத்திரூட னென்னும் வசுவுக்கு முனிவ னாகிய தேவலன் பிறந்தான். பிரபர்சனென்கிற வசுவுக்கும் பிரகஸ்பதி சகோதரியாகிய யோக சித்திக்கும் விசுவகன்மன் பிறந்தான். தர னென்னும் வசுவுக்கு மானச புத்திரர்களாகிய மகாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலோகிதன், ஈசானன், விசயன், வீம தேவன், பவோற்பவன், கபாலன், சவுமியன் என்னும் ஏகாதச ருத்திரர்கள் பிறந்தார்கள். பிரமன் வலதுகையில் தருமனென்னும் மனுப் பிறந்தான். அந்தத் தருமனுக்கு சமன், இராமன், அருடன் என்பவர் பிறந்தார்கள். அந்த மூவர்களும் முறையே அப்பிராபதி, நிருதி நந்தி என்னும் மூன்று மனிவியரோடு வாழ்ந்திருந்தார்கள். சவித்துருக்கும் வடவாக்கினி உருவமாகிய துவட்டரைக்கும் அசுவனி தேவதைகள் பிறந்தார்கள். பிரமன் மார்பிலே பிருகு முனிவர் பிறந்தார். அந்தப் பிருகு முனிவருக்குச் சுக்கிரன் பிறந்தான். அந்தச் சுக்கிரன் அசுரகுரு ஆனான். சுக்கிரனுக்குத் துவட்டரன், தாத்திரி பத்திரி, பத்திரன், கன்னன் என்னும் நான்கு புத்திரர்கள் பிறந்து அசுரருக்குப் புரோகிதர் ஆனார்கள். பிருகு முனிக்குச் சவனகன் பிறந்தான். அந்தச் சவனகனுக்கும் மனுவாகிய யயாதிபுத்திரி சுகன்னிக்கும் சதகன், உருசிகன் முதலாகிய நூறு புத்திரர் பிறந்தார்கள். உருசிகனுக்கு சமதக்கினி பிறந்தான். சமதக்கினிக்கும் இரேணுகைக்கும் புத்திரரும் புத்திரிகளுமாக நால்வர் பிறந்தார்கள். அவர்களில் மூத்தமகன் பிறந்தவனையினன். மறுபடியும் பிரமனிக்குத் தாதை, விதாதை, அலக்குமி என்னும் மூன்று பெண் பிறந்தார்கள். இவர் களில் அலக்குமி அநேக புத்திரர்களைப் பெற்றாள். வருணனுக்கும்

சேட்டைக்கும், தருமனுக்கும் கிஷி யென்பவளுக்கும் மகாபயன், பயன், மிருத்திவு என்னும் மூவரும் பிறந்தார்கள். மற்றும் அத்தருமனுக்குக் கர்கி, சேனை, பாசிகி, திரிதராஷ்டரை, சுதி என்னும் ஐந்து பெண்கள் பிறந்தார்கள். இவர்களில் காகி யென்பவளுக்குக் காக்கைகள் பிறந்தன. சேனை யென்பவளுக்குப் புறுக்கள் பிறந்தன. திரிதராஷ்டிரைக்கு விச்சுளிகள் பிறந்தன. பாசினி யென்பவளுக்குப் பருந்தும், ஆந்தையும் பிறந்தன. சுதி யென்பவளுக்குக் கிளிகள் பிறந்தன. முன் கூறிய காசிபமுனி மனைவியாகிய முனியென்பவளுக்கு மறுபடியும் மிருகை, மக்தை, அரிணி, பத்ரமதி, மாதங்கி, சாரத்தூதி, சுவேதை, சுரசை என்னும் எண்மரும் பிறந்தார்கள். இவர்களில் மிருகை யென்பவளுக்குப் பன்றி முதலாகிய மிருகங்கள் பிறந்தன. மக்தை யென்பவளுக்கு உயிருள்ள பல செந்துக்கள் பிறந்தன. அரிணிக்குக் குரங்கினம் பிறந்தன. மத்திரமதிக்கு ஐராவதம் பிறந்தது. ஐராவதத்துக்குத் தேவகாகம் பிறந்தது. மாதங்கி யென்பவளுக்கு யானைகள் பிறந்தன. சாரத்தூதி யென்பவளுக்குச் சிங்கங்களும் புலிகளும் பிறந்தன. சுவேதை யென்பவளுக்குத் திக்குக் கசங்கள் பிறந்தன. சுரசை யென்பவளுக்கு உரோகணி, பத்திராங்கி கந்திருவை என்ற மூன்று பெண்கள் பிறந்தார்கள். அதில் உரோகணிக்கு மான்கள் பிறந்தன. பத்திராங்கிக்கு மரங்களும், கொடிகளும், புதற்களும் பிறந்தன. கந்திருவைக்குக் குதிரைகள் பிறந்தன. இது தேவவுற்பத்தி யென்று சொல்லப்படும்.

சூரிய ரதமும் மண்டலமும்

"நிங்களைத் தரித்த மங்கள மூர்த்தியே! பூகோளமாகிய உலகப் பரப்பும், அதில் அடங்கிய அடுக்கினங்களும், நரகலோகமும், தருமகூடமும் மிகவும் விளக்கமாய்த் தெரிந்துகொண்டேன். இனி ககன அடுக்குகளும், அதில் அடங்கிய சூரியாதி மண்டலப் பிரிவினைகளும், கேட்க அடியாள் விருப்பங் கொண்டமையால், திருவாய் மலர்ந்தருள வேண்டும்" என்று பார்வதி வணங்கி நிற்க, அப்பார்வதியை நோக்கி, நற்பத்தியிற் சிறந்த பொற்பாவையே! நீ விரும்பியவாறு அருளிச் செய்வோம் கேட்பாயாக" என்று சிவபிரான் சொல்லத் தொடங்கினர்.

சூரியனுடைய இரதமானது, பதினாயிரம் யோசனை விசாலமுள்ளதாய் ஒன்பதினாயிரம் யோசனைவரையில் சூரியமண்டலத்தி

ஞலே வியாபிக்கப்பட்டிருக்கும். அதின் இருபுறத்து இருசுகளையும் கூட்டுகிற கட்டையானது (ஏர்க்கால்) இருபதினாயிரம் யோசனை அளவாயுள்ளது. அதின் ஒரு புறத்து இருசு ஒருகோடியே எண் பத்தேழு லக்ஷம் யோசனையுள்ளது. அதிலேதான் சக்கரமொன்று மாட்டியிருக்கும். அந்தச் சக்கரமானது சம்வச்சர சொரூபமா யிருப்பது அதற்குக் காலே நடுப்பகல் பிற்பகல் என்னும் நாட்பிரிவு மூன்றும் இருசுகோத்திருக்கு மிடமாயிருக்கும் சம்வச்சரம், மரிவச்சரம், இடாவச்சரம், அனுபவச்சரம், இகவச்சரம் என்கிற வருஷபேதங்கள் ஐந்தும் அரங்களாயிருக்கும். இருசுக்கள் ஆறும் சற்று வட்டங்களாயிருக்கும். இப்படிப்பட்ட அவயவங்களுள்ள தாய்க் கேடில்லாதிருக்கிற அந்தச் சக்கரத்திலேதான் காலச் சக்கர முழுதும் தாபிக்கப்பட்டிருக்கின்றது. அந்த இரதத்திற்குக் காயத் திரி, பிருகதி, உஷ்ணி, கசகதீ, திருட்டிப்பு, அனுட்டிப்பு, பத்தி யென்கிற சந்தங்கள் ஏழுமே குதிரைகளாயிருக்கின்றன. அச்சூரிய ரதத்தின் மற்றொரு புலத்தின் இருசு நாற்பத்தையாயிரத்து எண் ணூறுயோசனை அளவுள்ளது. நுகத்தடியின் அளவோ இருநின் அளவேயாம். அந்தச் சிறிய இருசானது தன்புறத்து நுகத்தடியின் பாதியோடு கூட வாயுரூபமான கயிறுகளால் கட்டப்பட்டுத் துருவனை யாதாரமாகக் கொண்டிருக்கிறது. பேரிருசிலே கோக்கப் பட்டிருக்கிற சக்கரமானது மானசோத்திர பர்வதத்தின் மேலிருக் கின்றது. அந்த மானசோத்திர பருவதத்தின் மேல்கிழக்கில் இந்திர னுடைய பட்டணமும் வடக்கில் சோமனுடைய பட்டணமும் விளங்குகின்றன. அவற்றின் பெயர்கள்: வஸ்வோக - சராசமனீ - சுகாவி - பாவரி என்பவைகளாம். ஓ பார்வதி! சூரியபகவான் தென் திசையை அடைந்தபோது சோதிசக்கரத்தின் தடையடைந்தவனைப் எறிந்த அம்பைப்போல விரைவாக ஓடுகிறான். அந்தச் சூரிய பகவான் தான் இராப்பகல்களின் ஏற்பாட்டிற்குக் காரணமாயும் யோகிகளுக்குச் சகல கிலேசங்களும் விடுவிக்கும் காலமாய் முடிவு காலத்தில் தேவயான மார்க்கமாயும் இருக்கிறான். தேவயானம் என்பது அர்ச்சிராதி மார்க்கம்; அதாவது, முதலில் அக்கினி, பின்பு முறையே பகல் - பூர்வபட்சம் - உத்திராயணம் - வருடம் - காற்று - சூரியன் - சந்திரன் - மின்னல் - வருணன் - இந்திரன் - பிரமன் என்ப வர்களுடைய எல்லைகளே யாம்; இவர்களைத் தியானஞ்செய்து மோட்சத்துக்குப் போகும் வழி இதுவே என்றறிவாய்.

ஓ பர்வதராச குமாரியே! இன்னமுங்கேள். அந்தச் சூரியன் நமக்கெப்படி பகலிலே அதிக உஷ்ணமாயும் பிரகாசமாயும் காணப் படுகிறானோ, அப்படியே இரவிலே மற்றெல்லாத் தீவுகளிலும் இருக் கிறானே அல்லது உஷ்ணப் பிரகாசங்கள் குறைந்து எப்போதும் இருப்பதில்லையாகையால் உதயாஸ்தமன பேதங்களில்லை. ஆனால் உதயாஸ்தமனங்களின் விதமென்னவெனில்: திக்கு விதிக்குகள் எதிலும் எவர்களுக்கு எங்கே காணப்படுகிறானோ அவர்க ளுக்கு இங்கே உதயமென்றும்; அதற்கு நேர்க்கோணத்தில் காணப்படாமற் போவதிலேயே அத்தமன மென்றும் உலக விவகாரம் உண்டாயிருக்கின்றது. இப்படி யாகையால், சூரியனுக்கு எப்போதும் உதயாத்தமனங்கள் உண்டாயிருக்கின்றன. இவ் வளவே யல்லாமல், சூரியனுக்குச் சுபாவத்தில் உதயமும் அத்தமன மும் இல்லவேயில்லை. இச்சூரியன் இந்திரன் முதலானோருடைய பட்டணங்களில் எதிலிருந்தாலும் அதனையும், பக்கத்துக் கோணங்க ளிரண்டையும் பரங்களிரண்டையும் பரிசிக்கிறான்.

இவ் வாதித்தனவன் உதயமானது முதல் கிரணங்கள் வளரப் பெற்றிருந்து மத்தியானத்தின்மேல் கிரணங்கள் சுருங்கப் பெற்றவனுய் அத்தமனமாகிறான். உதயாத்தமனங்களைக் கொண்டு தான் கிழக்கென்றும்-மேற்கென்றும் திக்குகளின் ஏற்பாடு உண் டாக்கப் பட்டிருக்கிறது. இதைக்கொண்டே வலப்புறம் தென்திசை யெனவும், இடப்புறம் வடதிசையெனவும் குறிக்கப்படும். சூரியன், எதிரில் எவ்வளவு காய்கிறானோ அவ்வளவு பின்புறத்திலும் பக்கங்களி லும் காய்கிறான். ஆனால், மாமேரு பர்வதத்தின் மேலிருக்கிற பிரமாவின் சபையைக் காய்வதில்லை. ஏனெனில், சூரிய கிரணங்கள் அச்சபையிற் செல்லுமளவில் இதின் கிரணங்களாலே திரஸ்காரப் பட்டுத் திரும்புகின்றமையால் என்றறிவாய். இப்படி உதயாத்த மனங்களினாலேயே கிழக்கு முதலிய திக்குகள் ஏற்பட்டிருப்பத னாலே, மேருகிரியானது சகல வருடங்களுக்கும் வடக்காகவே இருக்கிறது. ஆனதபற்றி மேருவின்மேல் எப்போதும் பிரம சபை யின் காந்தியினால் பகலும், சூரிய சஞ்சார மில்லாமையால் இரவுமா யிருக்கும். அஸ்தமயமாகிற சூரியனுடைய கிரணங்கள் அக்கினி யில் பிரவேசிப்பதால், அவ் வக்கினியானது இரவில் அதிகமாய்ப் பிரகாசிக்கின்றது. அக்கினி கிரணங்கள் பகலில் சூரியனிடத்தில்

பிரகாசிப்பதனாலே சூரியன் அதிகமாய்ப் பிரகாசிக்கின்றான். இப்படியாக உட்டிணப் பிரகாசமுள்ள ஒளியிரண்டும் மாறி மாறி ஒன்றிலொன்று கலந்து விளங்குகின்றன. மேருவின் தென்புற்த்திலும் வடபுறத்திலும் பூமியின் பாதியில் சூரியன் உதயமாகும்போது, இருளான இராத்திரியும் வெளிச்சமான பகலும் முறையே தண்ணீரில் பிரவேசிப்பதனாலே, அந்தத் தண்ணீரானது சிறிது சிவப்பாகியும் வெளுப்பாகவும் ஆகின்றது. இவ்வண்ணம் புட்கரத் தீவின் நடுவினால் பூமியில் முப்பத்திலொரு பங்கைச் சூரியன் கடப்பதனால் நாளில் முப்பத்திலொரு பங்காகிய முகூர்த்தகாலம் உண்டாகின்றது.

குயவனுடைய சக்கரத்திலே திரிகின்ற பூச்சியைப்போல சோதி சக்கரத்திலே திரிகின்ற சூரியன் தென்றிசையை நீங்கி உத்தராயணத்தின் மகரத்திலே வரும்போது, முற்பட்ட பகலிரவுகளைக்காட்டிலும் வித்தியாசமான பகலிரவுகளைச் செய்துவருவன். பின்பு, அப்படியே முறையாய்க் கும்ப மீனம் என்னும் இராசிகளிரண்டையும் கடந்து மேஷராசியிற் பிரவேசிக்கும்போது, பூமத்தியாகிய விஷுவத்தின் கதியைச் சேர்ந்தும் பகலிரவுகளைச் சரியாகச் செய்வான்; அங்கிருந்து சஞ்சரிக்கும்போது நாடோறும் பகல் வளர்ந்துகொண்டே வர, இரவு குறைந்துகொண்டே வரும். இப்படி மிதுனம் வரையிற் சென்று கர்க்கடகராசிக்குத் திரும்ப தட்சணாயணம் உண்டாகும். குயவன் சக்கரத்தில் தூனியிலிருக்கும் பூச்சிபோலே தட்சணாயனத்தில் சூரியன் சிக்கிரமாகச் சஞ்சரித்துக்கொண்டு பன்னிரண்டு முகூர்த்தகாலமான பகலினாலே பதின்மூன்றரை நட்சத்திரங்களையும் பதினெட்டு முகூர்த்தகாலமான இரவினாலே மற்ற பதின்மூன்றரை நட்சத்திரங்களையும் கடக்கின்றனன். மறுபடியும் உத்தராயணத்திற்கு வரும்போது குலாலன் சக்கரத்தின் நடுவிற் கிடக்கும் பூச்சிபோல் மந்தமாகச் சஞ்சரித்துக்கொண்டு முந்திய இராப்பகலுக்கு மாறான இராப்பகல்களைச் செய்கிறான். ஆகவே, உத்தராயணத்தின் பகல்வளர்ச்சி பதினெட்டு முகூர்த்த அளவாயும், இரவின் குறைவு பன்னிரண்டு முகூர்த்த அளவாயும் இருக்கும். சக்கரத்தின் நாபியானது தான் நின்ற நிலை குலையாது இராவுக்கு பிரம்மத்தைப்போல்காட்டி எவ்வளவு வேகமாகச் சுழல்கிறதோ அவ்வாறே, சோதி சக்கரமத்தியத்திலே துருவன் எக்காலும் சுழன்று கொண்டிருக்கின்றான். இப்படி தட்சணா

யன உத்தராயணங்களிலே அந்தந்த இராசி மண்டலங்களைச் சூரி யன் கடக்குந் திரத்தினாலே பகல் வளர இரவு குறைதலும் இரவு வளரப் பகல் குறைதலுமாக இருக்கும். சூரியனே பகலிலும் இரவி லும் அவ்வாறு இராசிகளையே சமமாகக் கடக்கின்றனே யல்லது வேறில்லை; ஆனாலும், இராசிகளின் வித்தியாசத்தினால் இரவு பகல் களில் வித்தியாச முண்டாகிறது. மேலும், இந்த வித்தியாசம் அங் கங்கிருந்து நோக்குகிறவர்களுடைய திருஷ்டியிற்படுகிற உதயாத்த மன பேதத்தினாலுமாம்.

இரவு உஷையென்றும் பகல் வியுஷ்டியென்றும் சொல்லப் படும். இந்த உஷாவியுஷ்டிகளின் நடுப்பொழுது தசாந்தி யென்றும் சொல்லப்படும். இப்படி மிகவுங் கொடியதும் பயங்கரமுமான சந்தி வரும்போது மந்தேகர் என்னும் இராக்கதர்கள் சூரியனைத் தின் னும்படி எத்தனஞ் செய்வார்கள்; அவர்களுக்கு நித்தியம் மரண மும் ஆனால், உடம்பு நாசமாகாம லிருப்பதுமாகப் பிரமதேவ னாலே சாபமிடப்பட்டிருக்கிறது. அவ்வசுரர் சூரியன்மேல் பாயும் போது சூரியனுக்கும் அசுரருக்கும் கொடிய யுத்தமுண்டாகிறது. அதின் நிமித்தம் பிராமணைத்தமர்கள் பிரணவவியாகிருதி காயத் திரி மந்திரங்களாலே அபிமந்திரித்துத் தண்ணீரை எறிகிறார்கள்; அந்தத் தண்ணீரானது வச்சிரம் போலாகி அவ்வசுரரை நாசஞ்செய் கிறது. பின்பு பிராமணர்களாலே அக்கினியோத்திரத்தில் மந்தி ரத்தோடுகூட ஆகுதி செய்யப்படுகிற முதலாகுதியினாலே, ஆயிரங் கிரணங்களுள்ள சூரியனெனுஞ் சோதியானது உலகமெல்லாம் பிர காசிக்கும்படி விளங்குகிறது. கேளாய் பார்வதி! அந்தப் பிரணவ மானது ஸ்ரீ விஷ்ணுசொரூபமாய், வியாகிருதி தேவதைகளுக்கிட மாய், வேதங்களுக்கெல்லாம் அதிபதியாயிருப்பதால், அதன் உச் சாரணை மகிமையாலே, அந்த அசுரருக்கு நாசம் உண்டாகிறது. நிற்க, விசாலமாய் உள்ளே தோன்றுகிற சோதியாயிருக்கிற ஸ்ரீ விஷ்ணுவினுடைய உத்தம அமிசமான சூரியனுகிய அந்தப் பிரண வத்தைப் பொருந்தி யிருக்கிறபடியினாலே அதை அது தெரிவித்துக் கொண்டு அச்சோதி நடத்திக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பிரபாவமுள்ள பிரணவத்தினாலே ஸ்ரீ விஷ்ணுவின் தேசோமயனே சூரியனுய் விளங்கி மந்தேகர் என்னும் பாவிகளைக் கொளுத்திப் போடுகிறது. ஆதலால் சந்தியா வந்தன காரியத்தை எவனும் விட

லாகாது. விடுவதனாலே, சூரியனைக் கொன்ற பாவத்தை யடை வான்; இப்படி வாக்கில்யர் முதலான மகா பிராமணர்களாலே காக்கப்பட்டுச் சூரியபகவான் உலகக் காப்பின்பொருட்டு அப்புறஞ் செல்லுகின்றான்.

சந்தியா காலம்

இனி, சந்தியாகால நிருணயத்தைப்பற்றிச் சொல்லுகிறேன், கேளாய் ஒ பார்வதி! பதினைந்து நிமிஷங்கள் ஒரு காட்டை யென்று சொல்லப்படும். முப்பது காட்டைகள் ஒரு கலையாம்; முப்பது கலைகள் ஒரு முகூர்த்தமாம்; அவை முப்பது சேர்ந்து இரவும் பகலுமாகிய ஒரு நாளாம், இப்படிப்பட்ட நாளில் பெருக் காலையும் சுருக்கமானாலும் அவைகளுக்கேற்ற அளவைக் கொண்டே பதினைந்தாம் பாங்கான ஒரு முகூர்த்தகாலமே சந்தியா காலமாம். உதயகாலந் தொடங்கி சூரியன் மூன்று முகூர்த்தகாலம் செல்லு மளவும் பிராதகால மென்று சொல்லப்படும். அது பகலில் ஐந்தி லொருபங்கும், அதற்குமேல் மூன்று முகூர்த்தகாலம் சங்கவ மென்று சொல்லப்படும். அந்தச் சங்கவ காலத்தின்மேல் மூன்று முகூர்த்த காலமானது அபரான்ன காலமாம். அந்த அபரான்ன காலமான பின்புள்ளது மூன்று முகூர்த்தகாலம் சாளான்ன கால மாம்; இப்படிச் சரியான பதினைந்து முகூர்த்தமுள்ள பகலானது விசுவத் காலத்திலாம். இந்த நாளானது உத்தராயண தட்சணைய னங்களினாலே வளர்ந்தும் குறைந்தும் ஒருபோது பகலினாலிரவு விழுங்கப்பட்டும் மற்றொருபோது இரவினாற் பகல் விழுங்கப்பட்டு மிருக்கும். சரத்து ருதுவின் ஆரம்பமானது துலாராசியில் சூரியன் வருகையிலும் வசந்த ருதுவின் ஆரம்பமானது மேஷராசியில் சூரி யன் வருகையிலும் விசுவம் என்னுங்காலம் உண்டாகின்றது. அது தான் ஏறக் குறைவில்லாத இராப்பகல்களை யுடையது. சூரியன் கடக இராசியிலிருக்கையில் தட்சணையனமும், மகர இராசியிலிருக் கையில் உத்தராயணமு மென்றறிவாய், உமையே! முன்பு நான் முகூர்த்த அளவானது ஒரு நாளென்று சொன்னேனே. அவை பதினைந்து நாள் கூடினது ஒரு பக்ஷம்; இரண்டு பக்ஷங்கள் ஒரு மாதம்; சூரியகதியினாலாகும் இரண்டு மாதங்கள் ஓர் இருது; மூன்றிருது ஓர் அயனம்; இரண்டு அயனங்கள் கூடில் ஒரு வரு ஷம் எனப்பெயர் பெறும். இவ் வருஷமானது சவுரம் - சந்திரம் -

சரவணம் - நட்சத்திரம் என்று நான்குவிதமாக விகற்பிக்கப்படும். இப்படி விகற்பிக்கப்படுகிற வருஷங்கள் ஐந்துகூடி ஆரம்பம்போல் விகற்பமின்றி முடிதலாலே யுகமென்கிற பெயரை அடையும்; அவற்றுள் முதல் சம்வச்சரமென்றும் நான்காவது இத்வச்சரமென்றும் ஐந்தாவது அனுவச்சரமென்றும் சொல்லப்படும்.

தான காலம்

வேறு காலத்தில் அயனவிசுவத் காலங்களுண்டாகிற முகாந்திரங்களைச் சொல்லுகிறேன்; கேளாய் பார்வதி! சுவேத சைலத்திற்கு வடக்கில் சிருங்கவானென்னும் பருவத முண்டென்று முன்னே சொல்லியிருக்கின்றேன், அதற்கு அப்பெயர் வருவதற்குக் காரணமாய் மூன்றுகோடி முடிகளுண்டு; அவற்றுள் ஒன்று தென்புறத்திலும், மற்றொன்று வடபுறத்திலும் இன்னொன்று நடுவிலும் இருக்கின்றன. தென்புறச் சிருங்கத்திற் சூரியன் சஞ்சரிப்பதனால் தட்சணாயனமும், வடபுறச் சிருங்கத்திற் சஞ்சரிப்பதனால் உத்தராயணமும் நடுச்சிருங்கத்தில் வருவதினால் விசுவமும் சூரியனிருக்கையில், சந்திரன் விசாக நட்சத்திரத்தின் நாலாம் பாதத்திலிருப்பான். சூரியன் விசாக நட்சத்திரத்தின் மூன்றும்பாதத்தில் சஞ்சரிக்கும்போது கிருத்திகையின் முதல் பாதத்தில் சந்திரனிருப்பானென்று நிச்சயித்துக் கொள்வாய். இப்படிப்பட்ட காலந்தான் மகா விசுவமென்கிற புண்ணியகாலமாம். அப்போது சிரத்தையுள்ள புருடர், தேவதை, பிதுர் இவர்களை நினைத்துப் பிராமணர்களுக்குத் தானங் கொடுக்க வேண்டும். இதுதான் தானத்திற்குரிய காலமென் றறிவாய். இக்கால மறிந்து தானங் கொடுப்பவன் மகா புண்ணியஞ் செய்தவனாகிறான்.

யாக காலம்

யாககால அளவை அறியும்படி சொல்லுகிறேன் கேளாய். பகல் இரவு அர்த்த மாசமென்னும் பக்ஷம் - கலை - காட்டை-கணம் - பௌர்ணமாவாசை, அமாவாசை, சந்திரன் காணப்படும்படியான கினிவாலி யென்பதும் சந்திரன் காணப்படாத குருவென்பதுமான அமாவாசையின் பிரிவுகள், பூரணச்சந்திரனுள்ள இராசை என்பதுமான பௌர்ணமாசையின் விரிவுகள், தாபம் - தபசியம்மது - மாதவம் - சுக்கிரம் - சுசியென்னும் மாசி முதலான மாதங்களாகிய உத்தராயணர் என்னும் ஆவணி முதலான மாதங்களாகிய தட்சணாயன இருதுக்கள் மூன்று.

இக்காலங்களெல்லாம் முக்கியமாக அறியவேண்டிய யாக காலங்களாம்.

கேளாய், பார்வதி! முன்பு லோகா லோகமென்னும் ஒரு பருவதம் உண்டென்று உனக்குச் சொன்னேனே; அதின் நாற்புறங்களிலும் கர்த்தமப் பிரசாபதியின் குமாரரான சுதன்வா, சங்கபா என்பவர்களும்; இரண்ணியரோமா கேதுமான் என்னும் வேறிருவருமான லோகபாலகர் நால்வரிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் சுகதுக்கங்களும் ராஜத்துவேஷாதிகளுமான தன்பங்களொன்றுமில்லை. இன்னும் கேளாய் பெண்ணே பார்வதி! அகத்திய வீதிக்கு வடக்காயும் அசவீதிக்குத் தெற்காயும் வைசுவானர மார்க்கத்திற்கு வெளியிலிருக்கிற மார்க்கம் பிதுர்யானம். பிதுர்யான மென்பது தட்சண மார்க்கம் தூமாதிமார்க்கம். அதாவது, மூதலில் தூமம் பிற்பாடு கிரமமாய் இராத்திரி அமரபட்சம் தட்சணாயன மாதங்கள் பிதுர்லோகம் ஆகாசம்; இவை சந்திரன் எல்லைகளாம். இவ்வழியிற் போனவர் கன்மலோகானுபவம் முடிந்தவுடனே திரும்பிச் சந்திரனை விட்டு ஆகாசம் - காற்று - புகை - மேகம் - மழைத்தண்ணீர் - விதைகள் இவற்றின் வழியாக ஸ்திரி புருடர்களை அடைந்து கன்மங்களுக்கேற்ற தேகத்தோடு பிறப்பார்கள். இதுவே பிதுர்லோக மார்க்கமாம். அங்கே அக்கினி கோத்திரமுடையவர்களாய் மகானுபாவர்களான சில ரிஷிகள் வாசஞ்செய்துகொண்டு வேதத்தின் கர்ம காண்டங்களைத் துதித்துக்கொண்டு யாக முயற்சிபைச் செய்வித்துக் கொண்டிருக்கிறார்கள். அவ் வுலகத்தை அடைய விரும்புவோர்களுக்குத்தான் பிதுர்யானமென்று முன் சொல்லப்பட்ட தூமாதி மார்க்கமுண்டு, அவ்வுலகத்திலிருக்கிற பிதுர்க்கள் கன்மகாண்டம் அழிந்து போகாமலிருக்கும்படி சந்ததிகளினாலும், ஏற்பாடுகளினாலும், தவசுகளினாலும், வேதாத்தியானங்களினாலும், யுகந்தோறும் தாபித்து வருவதல்லாமல் முந்தினவர் பிந்தினவர்களுடைய வமிசத்திலேயும், பிந்தினவர் முந்தினவர்களுடைய வமிசத்திலேயும் சனித்துக் கொண்டே இம் மூன்றுலகமும் அழியுங்காலமாகிய பிரமன் தினம் வரைக்கும் இருப்பார்கள். மேலும், நாகவீதிக்கு வடக்காயும் சத்த ரிஷிகள்வீதிக்கு தெற்காயுமுள்ள மார்க்கம் தேவயானமென்று சொல்லப்படும். அவ்விடத்திலே இந்திரியசய முள்ளவர்களாய், சித்திபெற்றவர்களாய், நிர்மலராய், பிரம்மசாரிகளான சில மகான்

மாக்க ளிருக்கிறார்கள் அவர்கள் சந்ததியை வெறுத்திருப்பதினாலே மிருத்துவை வென்று நித்தியர்களானார்கள். அந்த எண்பதினாயிரம் இருடிகளும் சூரியனுடைய வடவண்டை வழியை ஆசிரயித்துப் பிரமாவின் ஆயுள்பரியந்தம் யாதொரு துன்பமும் அழிவுமில்லாதவர் களா யிருப்பார்கள். இந்த இருப்பு அமுதத்துவமென்று மோட்சம் மேலே உபவாசமாகச் சொல்லப்படும். ஏனெனில், உலோபமும் அதனடியான குரோதாதிகளும் ஸ்திரீ சம்போகமும் விருப்பமும் வெறுப்புகளு மில்லாமையாலும் கரும சம்பந்தத்தை விட்டிருக்கிற தினாலும் யோகத்தினின்றும் நழுவாமையாலும் சத்தாதி விஷயங் களிற் குற்றத்தைக் காண்கையினாலும் அவ்விடத்திருப்பவர் பிரமன் ஆயுள் முடியுமளவும் நிலைநிற்பரென்றறியவும். இந்தப் பிரமானந்த காலமே பிரமஹத்தியசெய்த பாவத்தின் பயனாக நரகமனுபவிப்பதற்கு ஏற்படுத்திய காலம் ஆகும். அந்தக் காலத்தில் பூமி முதல் துருவ னிருக்கும் தானமளவும் அழிந்துபோய் விடும்.

பரமபதம்

சத்தரிஷிகளுக்கு மேலே வடபுறத்தில் துருவனிருக்கும் இடமே நிவ்வியமாயும் மகாப்பிரகாசமாயு மிருக்கிற மூன்றாவது ஆகாயத் தானம். அது விராட் புருடனுக்கு இருதய ஸ்தானமானது பற்றி அங்கே விஷ்ணு எழுந்தருளி யிருக்கிறாராகையால், அதற்கு விஷ்ணுபதமென்று பேருண்டாயிருக்கிறது. அது கன்மாதி தோடங் களைக் கழித்துப் பரமான்மாவினிடத்தே மனத்தைத் நிடப்படுத்தின யோகிகளுக்குப் புண்ணிய பாவ கருமங்களெல்லாம் அவிந்தபோது அடையத்தக்க தானமாயிருக்கின்றது. யோகிகள் பாப புண்ணியங் கள் ஒழிந்ததனாலே, சுகதுக்கானுபவரூப சமுசாரவேது இல்லாதவர் களாய் எந்த உத்தமமான விடத்திலே சென்று ஆனந்தத்தோ டிருப் பார்களோ அதுதான் ஸ்ரீ விஷ்ணுவினுடைய பரமபதம். உலக சாட்சிகளான தருமன் துருவன் முதலிய மகான்மாக்கள் எங்கே இருந்துகொண்டு அந்த ஸ்ரீ விஷ்ணுவினுடைய ஐசுவரியத்துக்குச் சமானமான இந்திரிய சயனத்தினாலே சீர் பட்டிருக்கிற யோக பிர பாவ முள்ளவர்களாய் விளங்குகிறார்களோ அதுதான் ஸ்ரீ விஷ்ணுவி னுடைய பரமபதமாம். சராசரங்களெல்லாம் எங்கே நெடுக்காகவுங் குறுக்காகவுங் கோக்கப்பட்டவையாய், எங்கே இருப்பனவாய், எங்கே இனி உண்டாவனவா யிருக்குமோ, அதுதான் ஸ்ரீ மகா

விஷ்ணுவினுடைய பரமபதமாம். எது ஆகாசத்திலே பரவி நிற்கிற சூரியனைப்போல மகான்மாக்களுக்குச் சத்த விவேக ஞானத்தினாலே பிரத்தியட்சமாய் விளங்குமோ அதுதான் ஸ்ரீ விஷ்ணுவினுடைய பரமபதமாம். அங்கே சென்றவர்கள் மறுபடியும் சமுசார சம்மந்த மடையாமல் பிரமனோடுகூட மோட்சம் அடைவார்க ளாகையால், அது கிரமமுர்த்தி தானமதுபற்றி மோட்சத்தானமான பரமபத மென்று சொல்லப்பட்டது. அது உலகாதாரமான விதம் சொல்லு கிறேன், கேளாய் மாதே! மகா தேஜசுகள் துருவனனவன் அங்கே நடுக் கூச்சம்போலே தாபிக்கப்பட் டிருக்கிறனன்றே! அந்தத் துருவ னிடத்திலே சகல கிரக நட்சத்திரங்களும் தாபிக்கப்பட் டிருக்கின் றன. அந்தக் கிரக நட்சத்திரங்களில் மேகங்கள் நாட்டப்பட் டிருக்கின்றன. மேக்ங்களிலே மழை ஏற்படுத்தப்பட் டிருக்கின்றது. மழையானது சகல ஓஷதிகளின் மூலமாய்ச் சிருட்டிக்குக் காரண மாயும் தேவதைகள் முதலானோருக்குப் போஷணமாயு மிருக்கின் றது. அதனாலே நெய் முதலிய அவிசொரிகிற ஆகிமூலமாகத் தேவர் கள் திருத்தியடைந்தவர்களாய், உலக சிருட்டிக்கும் திதிக்கும் காரணமாகின்றார்கள் இந்தப்படி இந்த விஷ்ணுபத மென்னும் பரி சுத்தமான மூன்றும் தானமானது மூன்றுலகங்களுக்கும் ஆதார மாயும் விருத்திக்கு ஏதுவாயு மிருக்கின்றது.

கங்கையின் பிறப்பு

கேளாய் பார்வதி! மகாப்பிரபுவான ஸ்ரீ அரிபகவானுடைய சிம்சுமார மென்னும் செந்துபோலே தோன்றுகிற நட்சத்திரக் கூட்டமாகிய உருவம் யாதொன்றுண்டோ அதின் வாலில் துருவ னிருக்கிறன். அந்தத் துருவன் அங்கிருந்து சுற்றிக்கொண்டு சந்திர சூரியாதி கிரகங்களெல்லாம் சுற்றித் திருப்ப, அவைகளும் சக்கரம்போல அவனைச் சுற்றித் திரும்புகின்றன. சந்திர சூரியர்க ளும் மற்றுமுள்ள கிரகங்களும் நட்சத்திரங்களும் காட்டின் வடிவான கயிறுகளினாலே கட்டப்பட்டுத் துருவனிடத்தில் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரக் கூட்டமெல் லாம் சிம்சுமாரமென்னும் செந்துபோல காணப்படுகிறதென்றேனே அதன் இருதயத்தில் சகலதேச லோகங்களுக்கும் ஆதாரபூதனான ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளி யிருக்கின்றன். உத்தான பாத னுடைய புத்திரனான துருவன் அந்த உலகநாதனை ஆராதித்து நட்

சத்திர மயமான அந்தச் சிம்சுமாரத்தின் வாலினிடத்திலே இருக்கப் பெற்றுன். அந்தச் சிம்சுமாரத்திற்கு ஆதாரம் ஸ்ரீயப்பதி; அந்தச் சிம்சுமாரமோ துருவனுக்காதாரம், அந்தத் துருவன் சூரியனுக் காதாரம்; அந்தச் சூரியனே தேவர்-அசுரர்-மனிதர் முதலிய சகலத்துக்கும் ஆதாரமாம். சூரியன் சகல லோகத்திற்கும் ஆதார மான காரணஞ் சொல்லுகிறேன்: பார்வதி! நீ கேட்பாயாக. சூரியன் இரசவத்தான சலத்தை எட்டு மாதங்களினுலே இழுத்து திரும்பவும் பொழிய, அம்மழையினுல் சகல செந்துக்களுக் கும் உபயோகமான உணவுகள் உண்டாகின்றன. அம்மழையினுலே தான் சகல சத்து முண்டாகி வளர்கின்றன. இன்னமும் அதின் விவரஞ் சொல்லுகிறேன். சூரியன் உக்கிரமான தன் கிரணங்களி னுல் உலகத்தி லிருந்து தண்ணீரை இழுத்துச் சந்திரனும் வாயு நாடி மயங்களான வழிகளினுலே புகையும் நெருப்பும் காற்றுமான வடிவுள்ள மேகங்களிலேவிட, அந்த மேகங்களினின்றும் சலமானது உலகத்தில் விழுகிறது. இந்த மேகங்களி னின்றும் தண்ணீர் நழுவி விழாமையினுலே அம் மேகங்களுக்கு அபபிரபங்களென்று பெயர் வந்தது; ஆனலும், காற்றினுல் அம் மேகங்கள் அலைக்கப்பட்ட காலத்தில் உண்டான பரிபாகத்தினுல் அந்தத் தண்ணீர் நின்மலமாகி விழுகின்றது. ஆறுகளில் இருப்பதும் சமுத்திரங்களில் உள்ளதும் பூமியில் ஊறுவதும் உயிர்களால் உண்டாவதுமாகிய நால்வகை நீரையும் கவர்ந்துதான் சூரியன் மழையாகப் பொழிகிறுன். அன்றி யும், ஆகாச கங்கையின் சலத்தைத் தன் கிரணங்களாலே கொண்டு மேகங்களிற் சேர்க்காமலே பொழிவதுமுண்டு. அந்தப் பரிசுத்த தீர்த்தம் படுவதினுலே மனிதன் பாவந் தீர்ந்து நரகமடைவதில்லை; அந்த ஸ்தானம் நிவ்விய ஸ்தானமென்று சொல்லப்படும். ஓ பார்வதி! சூரியன் காணப்பட்டுக் கொண்டே யிருக்கையில், எந்த நீர்மேகமின்றி ஆகாசத்தினின்று விழுகின்றதோ அதுதான் ஆகாச கங்காசலமென்று அறிவாய். அன்றியும், கார்த்திகை முதலான ஒற்றைப்பட்ட நட்சத்திரங்களாலே சூரியன் விளங்கிக் கொண்டேயிருக்க ஆகாசத்தினின்றும் விழுகின்ற தீர்த்தமான தும் குக்குக் கசங்களினுலே வருஷிக்கப்படுகிற ஆகாச கங்காசலமென்று அறியவும். உரோகணி முதலான இரட்டைப்பட்ட நட்சத்திரங்க ளாலே சூரியன் பிரகாசிக்கையில் மேகமில்லாமல் வானத்தினின் றும் விழுகின்ற தண்ணீரை சூரியன் பெய்யும் ஆகாச கங்காசல

மென்று அறியவும். எந்தத் தண்ணீரானது மேகங்களினாலே பெய்யப்படுகின்றதோ அது பிராணிகளின் பிழைப்புக்காக தாவரங்களை வளர்க்கும் அமுதமென்றும் சொல்லப்படும். இவ்விதமாக மழையினாலே ஓஷதிகள் பயன்கொடுக்கும்படி வளர்க்கப்பட்டனவாகி நிற்க; அவைகளைக்கொண்டு சாத்திரக் கண்ணையுடைய மனிதர் வேத விதிப்படி பலவகைப்பட்ட எக்கியங்களைச் செய்து தேவதைகளைத் திருப்தி பண்ணுகிறார்கள்; இவ்விதமாய் யாகங்களும் வேதங்களும் பிராமணரி வருணங்களும் தேவதைகளும் பசுபட்சி மூதலாகிய இந்த உலகமெல்லாம் மழையினாலே விளக்கப்பட்டு வருகின்றன; அன்னபானாதிகட்கு மழையே ஆதாரம்; மழை பெய்வதற்குச் சூரியனே ஆதாரம்; அச் சூரியனுக்கு ஆதாரமானவன் துருவன், அந்தத் துருவனுக்கு ஆதாரம் சிம்சுமார சக்கரம்; அச்சக்கரத்திற்கு ஆதாரம் ஸ்ரீமந் நாராயணன்; இப்படி ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே அந்தச் சிம்சுமாரர் சக்கரத்தின் இருதயத்தி லிருந்துகொண்டு சகலப் பிராணிகளும் உய்யும்படி தாங்கிக் கொண்டிருக்கிறார்.

ஆதித்தர் பன்னிருவரும் அவர்களுக்குச் சகாய புருடனும்

கேளாய் பார்வதி! சூரியன் சஞ்சரிக்கிற தட்சணாயன உத்தராயண எல்லைகளின் நடுவாகிய கிராந்தி விருத்தங்கள், நூற்றெண்பத்து மூன்று உள்ளன. அந்த மண்டலங்களிலே தான், சூரியன் உத்தராயணத்தில் ஏறுவதும், தட்சணாயனத்தில் இறங்குவதுமான முந்நூற்றறுபத்தாறு கதிகளினாலே ஒருவருடத்தைக் கழிக்கிறான். அந்தச் சூரிய ரதமானது சூரியராலும், இருடிகளாலும், கந்திருவராலும், அப்சரசுக்களாலும், இயக்கராலும், சர்ப்பங்களினாலும், இராக்கதராலும் ஏற்பட்டிருக்கும். இப்படி இவ் வெழு கணங்களும் ஒவ்வொரு மாதமும் வரும் விதஞ் சொல்லுகிறேன்.

சித்திரை மாதப் பிரவேச ரதத்தில் தாதா என்னும் சூரியனும், கிறுதத்தலியென்னும் அப்சரசும், புலத்தியர் என்னும் இருடியும், வாசுகியென்னும் சர்ப்பமும், இரதமிருத்து வென்னும் இயக்கனும், எதியென்னும் இராக்கதனும், தும்புருவனெனும் கந்திருவனும் வசித்து நடத்துவார்கள்.

வைகாசி மாதத்தில் அயர்மா வென்னும் சூரியனும், புலகன் என்னும் இருடியும், தஞ்சிதத்தலியென்னும் அப்சரசும், மாதௌசா என்னும் இயக்கனும், கச்சவீரனென்னும் சர்ப்பமும்; நாரத

னென்னுங் கந்திருவனும், பிரகேதி என்னும் இராக்கதனும் வசித்து நடத்துவார்கள்.

ஆனி மாதத்தில் மித்திரனென்னும் சூரியன், அத்திரி, இருடி, தக்க சர்ப்பம், எவருகேய ராக்கதன், மேனகாப்சரசு, ஹாஹாகந் திருவன், அரதசுவயன் இயக்கன் இவ்வேழுபேரும் இருந்து நடத்துவார்கள்.

ஆடி மாதத்தில் வருணனென்னும் சூரியன், வசிட்ட இருடி, சகஜனியை அப்சரசு, ஹூஹூகந்திருவன், நாகமென்னும் சர்ப் பம், இரதராக்கதன், சித்திர இயக்கன், இவ் வெழுவரும் நடத்து கிறார்கள்.

ஆவணி மாதத்தில் இந்திரனென்னும் சூரியனும், விசுவாவசு கந்திருவன், சுரோதா இயக்கன், எலாபுத்திரன் சர்ப்பம், அங் கிரசு இருடி, பிரமலோச அப்சரசு, சர்ப்பி இராக்கதன் இவர்கள் இருந்து நடத்துவார்கள்.

புரட்டாசி மாதத்தில் விசுவான் என்னும் சூரியனும், பிருகு இருடி, அனுமிலோசா அப்சரசு, சங்கபால சர்ப்பம், வியாக்கிர இராக்கதன், உக்கிரசேன கந்திருவன், ஆபூரண இயக்கன் இவர் கள் இருந்து நடத்துவார்கள்.

ஐப்பசி மாதத்தில் பூஷா என்னும் சூரியனும், சுருசு என்னும் கந்திருவன், வாதராக்கதன், தனஞ்சய சர்ப்பம், கவுதம இருடி, கிருதாகி என்னும் அப்சரசு சுவேண யக்கன் இவர்கள் வாசமாய் இருப்பார்கள்.

கார்த்திகை மாதத்தில் பர்ச்சனியென்னும் சூரியனும், வசுவா வசுவென்னும் கந்திருவன், பரத்துவாச இருடி, ஐராவத சர்ப்பம், விசவாசி அப்சரசு, சேனசீத் இயக்கன், ஆபராக்கதன் ஆகிய இவர்கள் வாசஞ் செய்வார்கள்.

மார்கழி மாதத்தில் அச்சனென்னும் சூரியனும், காசிப இருடி, தார்க்க இயக்கன், மகாபத்ம சர்ப்பம், விர்த்தியுத்து இராக் கதன், சித்திரசேன கந்திருவன், ஊர்வசியென்னும் அப்சரசு ஆகிய இவர்கள் இருப்பார்கள்.

தை மாதத்தில் பகன் என்னும் சூரியன், கிரது என்னும் இருடி, ஊக்கிணுவென்னும் கந்திருவன், சுபூர்சராக்கதன், கார்க்கோடக

சர்ப்பம், அரிட்ட நேமியென்னும் இயக்கன், பூர்வசித்தியென்னும் அப்சரசு இவர்கள் இருப்பார்கள்.

மாசி மாதத்தில் அவஷ்மா என்னும் சூரியனும், ஜமதக்னி இருடி, திலோர்த்தமையென்னும் அப்சரஸ், கம்பளசர்ப்பம், பிரமா பேதராக்கதன், இருதசித்து இயக்கன், திருதராஷ்டிர கந்திருவன் இவ் வெழுவரும் வசிக்கிறார்கள்.

பங்குனி மாதத்தில் விஷ்ணு என்னும் சூரியனும், விசுவாமித்திர இருடி, ரம்பையென்னும் அப்சரஸ், சூரியவாச்சஸ் என்னும் கந்திருவன், சத்தியசித்து என்னும் இயக்கன், அசுவதாரனென்னும் சர்ப்பம், எக்கியாபேத இராக்கதன் இவ் வெழுவரும் வாசஞ் செய்வார்கள்.

கேட்டையோ கௌரியே! இப்படி ஒவ்வொரு மாதத்திற்கும் எவ்வெழுவராக இவர்களெல்லாம் ஸ்ரீ விஷ்ணு சக்தியினாலே வியாபிக்கப்பட்டு உலோகப் பிரகாச நிமித்தமாகச் சூரிய ரதத்தில் இருக்கின்றார்கள். இவர்களுடைய செய்கைகளைச் சொல்லுகிறேன். அந்த மண்டலத்தில் பிரகாசிக்கிற சூரியனுக்கு ஒளி பெருகும்படி இருடிகள் துதிக்கிறார்கள்; கந்திருவர் கானஞ் செய்கிறார்கள்; அப்ஸரப்பெண்கள் ஆடுகிறார்கள்; இராக்கதர் சூரியன் பின்னே செல்லுகின்றார்கள்; சர்ப்பங்கள் சுமக்கின்றன; இயக்கர் கடிவாள மூதலானவற்றைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்; இவர்களல்லாமல் வால்கில்லியர் என்னும் மகாரிஷிகள் எப்போதும் சூரியனைச் சூழ்ந்து உபாசித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சூரிய மண்டலத்திலே வாசஞ்செய்கிற ஏழு கணங்களும் அந்தந்தச் சமயங்களிலே பனி - வெப்பம் - தண்ணீர் இவைகளைப் பெய்வதற்குக் காரணமாக இருக்கின்றனர்களென்று அறியக்கடவை.

கிரியா விசேடம்

இப்படி, சிவபெருமான் அருளிச்செய்ததைக் கேட்டு மைது அன்னையாகிய பார்வதியம்மை வினவுகின்றாள்: 'ஓ சுவாமி! சூரிய மண்டலத்தில் பனி - வெப்பம் - மழை இவற்றிற்குக் காரணமாக ஏழு கணங்களிருக்கின்றனவென்றும் அந்தக் கந்திருவர் - இயக்கர் - இராக்கதர் - முனிவர் - வால்கில்லியர் - அப்சரஸ்கள் - நாகர் இவர்களுடைய தொழில் இன்னின்னவென்றும் தேவரீர் அருளிச் செய்த

தைக் கேட்டறிந்தேன். ஆனால்; சூரியனுடைய தொழில்யாது? என்பதை அருளிச்செய்யவில்லையே. அந்தக் கணங்களாலே பனி - வெப்பம் - தண்ணீர் இவைகள் பொழியுமானால் சூரியனுக்குக் காரிய மென்ன? சூரியனாலே மழை உண்டாகிறதென்று முன்னம் அருளிச்செய்தீரே! அன்றியும்; சனங்கள் சூரியன் உதயமாகி உச்சியில் வந்து அத்தமிக்கிறனென்று சொல்லுகிறார்களே! இப்படிப்பட்ட செய்கைகள் இந்த ஏழு கணங்களுக்கும் பொதுவாகவே இருக்குமானால் சூரியனைச் சிறப்பாய்ச் சொல்வது என்ன? இந்த விவரம் அருளிச்செய்ய வேண்டும் என்று கேட்கச் சிவபெருமான் அருளிச் செய்கிறார்.

"ஓ பார்வதி! நீ கேட்ட விடயங்களுக்குச் சமாதானம் சொல்லுகின்றேன் கேளாய்." அந்த மண்டலத்தில் வாசஞ்செய்கிற ஆதித்தன் முதலான கணங்களேழிலும் நடுமயமாய் நின்ற ஆதித்தனே மூலபுருடனாகும். எனெனில், இருக்கு - எசுர் - சாம மென்னும் மூன்று வேதவடிவாகி விசேடமாகிய ஸ்ரீ விஷ்ணு சத்தியே சூரிய உருவமாகிப் பிரகாசித்துக்கொண்டு காய்வதுமல்லாமல், உலகத்தின் பாவச் செயல்களைப் போக்கிக்கொண்டிருக்கின்றன என்றறிவாய். சகல உலகத்தையும் காப்பவனுய் திதியை நடத்துகிற ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியின் சத்தியே இருக்கு - எசுர் - சாம மென்னும் மூன்று வேத உருவமாகிய சூரியனுடைய உள்ளே இருக்கின்றது. அந்தந்த மாதத்தில் வருகிற சூரியனிடத்திலே திரிவேத மயமான ஸ்ரீ விஷ்ணு சத்தியானது பிரவேசித்து விளங்குகிறது; விடியற் காலத்திலே இருக்குகளும், மத்தியான காலத்திலே எசுர்களும், சாயங்காலத்திலே சாமங்களும், சூரிய சரீரகனுப்ச் சூரியனுக்குள்ளே விளங்குகிற ஸ்ரீ விஷ்ணுவை மூன்று வேதங்களும் துதிக்கின்றன. இந்த இருக்கு முதலிய மூன்று வேதங்களும் ஸ்ரீ விஷ்ணுவுக்குச் சரீரமாயிருக்கின்றமையால் விஷ்ணு சத்தியானது சூரியனுக்குள்ளே மாத்திரமன்று, பிரமாதிகளுக்குள்ளும் பிரவேசித்து அந்தக் காரியங்களை நடத்துகின்றது. கேளாய் பார்வதி! சிருட்டியாதில் இருக்கு வேத மயமானது பிரமனுகவும், திதியிலே எசுர்வேதமயமான சிவமாகவும் ஸ்ரீமந் நாராயணனுடைய சத்தியானது பிரகாசிக்கின்றது. ஆதலால், என் சம்பந்தமான சரமத்தொனியானது மற்ற வேதங்கள் ஓதும்போது, ஓதக்கூடாமையாலே அது அசுத்தமான தேச காலாதி

களின் சம்பந்தப்பட்டதை பரிசுத்த வஸ்துக்களைப்போல் மிகவும் சுத்தமென் றெண்ணப்படுகிறது. இவ்வாறு மூன்று வேத உருவ மான ஸ்ரீ விஷ்ணுவினுடைய சுத்தசாத்துவீக சத்தியானது தன் சரீரமாயிருக்கிற ஏழு கணங்களுக்குள்ளே சூரியனிடத்திலே விசே ஷித்துப் பிரவேசித்திருக்கிறதினாலே சூரியன் விசேஷமாய்ப் பிரகா சித்துக்கொண்டு உலகத்தி லுண்டான அந்தகாரங்களை யெல்லாம் நாசஞ் செய்கிறான்.

இப்படிக்கு வேதமயமான ஸ்ரீ விஷ்ணுசத்தியின் அணுப்பிர வேசாதி சயத்தினாலே சூரியன் பிரதானமானதைப்பற்றியே அச் சூரியனை இருடிகள் துதித்துக்கொண்டும், கந்திரவர் பாடிக்கொண் டும், அரம்பையர் ஆட்டத்தினால் களிப்பித்துக்கொண்டும், இராக்க தர் பின்தொடர்ந்துகொண்டும், நாகர் சுமந்துகொண்டும், இயக்கர் கயிற்றைப் பிடிப்பதினால் சேவித்துக்கொண்டும், வால்கில்லியர் உபா சித்துக்கொண்டும் வருகிறார்கள். அந்த மண்டலத்திலே சத்தி சொரூபத்தைத் தரித்திருக்கிற ஸ்ரீ விஷ்ணுவானவர் சத்தகணங் களைப்போலத் தோன்றுவதுமில்லை; அழிவதுமில்லை; அந்தச் சத்த கணமும் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் மாயாசத்திபெற்ற அணுப்பிரவேச விதம் எப்படியென்றால், ஒரு கம்பத்திலிருக்கிற கண்ணாடிக்குச் சமீபத்தில் எவனெவன் வருகின்றானோ அவனவனெல்லாம் தன்னு டைய நிழலை அக்கண்ணாடியிற் காணும்படி அதன் காந்தியை அடை வதுபோல, அம்மண்டலத்திலே திரமாயிருக்கிற விஷ்ணு சக்தியை அங்கே மாதந்தோறும் வருகிற சூரியர் அடைகின்றார். அப்படிப் பட்ட சூரியன், பிதுர் - தேவதைகள் - மனிதர் முதலானோரைத் திருத்தி செய்துகொண்டு இராப்பகலுக்குக் காரணமாய்ச் சுற்றிக் கொண்டிருக்கிறான். பிதுரர் முதலானோருக்குத் திருத்திசெய்யும் விதம் எப்படியென்றால், சூரியகிரணப் பிரபாவத்தினாலே நிறைக்கப் பட்டு அமுதமயமாயும் இருக்கிற சந்திரனைக் கிருஷ்ண பக்ஷத்திலே அக்கினி முதலான தேவதைகள் ஒவ்வொரு கலையாகப் பானஞ்செய் கிறார்கள். இப்படி சதுர்த்தசிவரையில் தேவதைகள் பானஞ்செய்து முடிக்கிறார்கள். இரண்டு கலைகளுள் ஒன்றை அமாவாசையில் பிதுர் பானஞ் செய்கிறார்கள். இதுதான் அவர்கள் திருத்தியடையும் வித மென்று அறிவாய். பூமியிலிருந்து தன் கிரணங்களினாலே இழுக் கப்படும் இரசத்தை மறுபடியும் மழையாகப் பொழிந்து பயிர்களை

விருத்திசெய்து மனிதர் முதலானவரைத் திருத்தி செய்கிறது சூரிய னென்று முன்னமே தெரிவித்திருக்கின்றே னல்லவா? கேளாய் பார்வதி! இவ்விதமாய்ச் சூரியபகவான் தேவர்களுக்குப் பக்கத் திருத்தியும் பிதுர்களுக்கு மாசதிருத்தியும் மனிதர் முதலானவருக்குத் தினத்திருத்தியும் செய்துகொண்டு விளங்குகின்றான்.

சந்திரமண்டலச் சிறப்பு

சிவபெருமான் அருளிச் செய்கிறார், கேளாய் பெண்ணே பார்வதி! சந்திரனுடைய இரதமானது மூன்று சக்கரங்களை யுடைய தாய் முல்லைப்பூ வன்னமான பத்துக் குதிரைகள் இடப்பக்கம் வலப் பக்கங்களில் கட்டப்பெற்றதா யிருக்கின்றது. தருவனே ஆதார மாகக்கொண்டு வேகமுள்ளதாயு மிருக்கின்றது. அத்தேரினாலே சந் திரன் நாகவீதி முதலான வீதிகளில் அடைந்திருக்கும் நட்சத் திரங்களிலே சஞ்சரித்து வருகிறான். சூரியக்கிரணங்களுக்கு எப் படியோ அப்படியே அந்தச் சந்திரனுக்கு உதயாதி காலங் களிலே குறைவு வளர்ச்சியாகிய முறை உண்டு. சூரியரதத்தின் அசுவங்களைப்போலே சலத்திற் பிறந்த அந்தச் சந்திர ரதத்தின் அசுவங்களும் கற்பத்தின் ஆதியிலே ஒரேதரம் இரதத்தில் கட்டப் பட்டு அந்தக் கற்பத்தின் முடிவுவரைக்கும் வசித்துக்கொண்டிருக் கின்றன. தேவதைகளாலே பானஞ் செய்யப்படுவதால் தினத் திற்கு ஒரு கலையாகக் குறைபட்டு முடிவில் ஒரே கலையோடு நிற் கின்றனன் சந்திரன். அதனைக் குறைமதியமென்றும் தேய் பிறை யென்றும் உலகத்தார் சொல்லுவார்கள். ஒளிமழுங்கி ஒரே கலை யோடு நிற்கின்ற சந்திரனைச் சூரியனுனவன் தனது கிரணங்கள் ஒவ்வொன்றினாலும் ஒவ்வொரு கலையாக முன்பு தேவர்கள் பானம் பண்ணிய முறைப்படியே வளரச் செய்கின்றமையால், ஒரு பட்ச மென்னும் பதினைந்தாவது தினத்தில் பழையபடியே சோடசகலை களையும் அடைகின்றான். அன்றையதினத்தில் பூரண சந்திரனென் றும் பௌர்ணமி யென்றும் உலகத்தார் சொல்லுவார்கள். உணர்ந் தனையோ உமையவளே!

இப்படி அரைமாதத்திலே சந்திரனிடத்தில் நிறைக்கப்படுகிற அமுர்த்தத்தைத் தேவதைகள் பானஞ் செய்கிறார்கள். எனெனில், அவர்கள் அமுர்த்தத்தையே உண்பவர்களாகையால் என்றறியவும். அந்தச் சந்திரனைப் பானம்பண்ணுகிற தேவர்கள் முப்பத்து மூன்

ரூயிரத்து மூந்நூற்று மூப்பத்து மூவரென்று அறியக்கடவாய். இவ்வாறு தேவர்களாலே பானஞ் செய்யப்பட்டு இரண்டே கலைகள் மிகுந்தவனுய்ச் சந்திரன் சூரிய கிரணங்களில் மறைவதினுலே சூரிய மண்டலத்தில் பிரவேசித்தவன் போலாகி அரை கிரகணத்தில் வாசஞ் செய்கிறுன்; அதனுலே அந்த நாளை அமாவாசை யென்னப் படும். அந்நாளில் இராப்பகல்களில் சந்திரன் முந்தி தண்ணீரிலும், பிந்தி கொடி முதலானவைகளிலிருந்து பின்பு முறையே சூரியனை அடைகிறுன். ஆனதினுலே, அந்நாளில் எவனுகிலும் கொடி முதலியவைகளைச் சேதித்தாலும் இலையை உதிர்த்தாலும் பிரமஹத்தி செய்த பாவத்தை அடைவான். காலரூபமான பதினைந்தாம் பங்கினுலே சிறிது மிகுத்திருக்கிற அமாவாசையின் அபரான்னத்திலே கூலைந்தவனுன அந்தச் சந்திரனை பிதிரர் அமூர்தபானத்திற்காக உபாசித்து அமூர்தமயமான அந்தப் பதினைந்தாம் கலையைப் பானஞ் செய்கிறுர்கள். சவுமியரென்றும், பர்ஹிதரென்றும், அக்கினிஷ்வர்த்தரென்றும் மூன்று பிரிவாயிருக்கும் பிதிரர் அமாவாசையிலே சந்திர கிரணத்தினின்றும் ஒழுகுகின்ற அமூர்தத்தை உண்டு மேன்மையான மாசத்திருத்தியை அடைகிறுர்கள். இவ்விதமாகச் சந்திரன் அமுத மயங்களாயும் குளிர்ச்சி யுள்ளவையாயு மிருக்கிற ஜல பரமாணுக்களாலே சுக்கில பக்கத்தில் பயிர்களையும் புல் - பூண்டு - கொடி - செடி முதலானவைகளையும் உண்டாக்குவதினுலேயும், தனது கலைகளாகிய ஒளியினுல் உலகமுழுதும் பிரகாசிக்கச் செய்வதினுலேயும், மனிதர் மிருகம் பட்சி முதலானவைகளையும் திருத்தி செய்து கொண்டு வருகின்றன்.

புதன் முதலிய கிரகரதம்

இந்தச் சந்திரன் புத்திரனை புதனுடைய இரதமானது வாயு அக்கினி இவைகளினுலே பூமியிற் பிறந்ததாய், பொன்னிறமான எட்டுக் குதிரைகளோடு கூடிவரும் என்னும் முன் தாங்கும் அவயவமும் அனுகர்ஷமென்னும் அடிதாங்கும் அவயவமும், உபாசங்கமென்னும் உட்காருமிடமும், பாதாகை முதலான மற்றை அவையவமு முடைத்தாகி விளங்குகின்றது. சுக்கிரனுடைய இரதமும் இப்படியே அவயவாலங்காரங்களைப் பெற்றதாய் எட்டுக் குதிரைகள் கட்டினதாய் மிகப் பெரியதாய் பொன்மயமாய் விளங்கும். அங்காரகனுடைய இரதமும் பெரிதாய் அக்கினியிற் பிறந்தவர்களாய்ப்

பதமராகம்போல் சிவந்திருக்கிற எட்டுக் குதிரைகள் கட்டப் பெற்றதாய் பொன்மயமாகி விளங்குகிற பெரிய இரதத்திலே யிருந்து கொண்டு பிரகஸ்பதியானவர் ஒவ்வொரு ராசியில் ஒவ்வொரு வருஷமிருக்கிறார். ஆகாசத்திற் பிறந்த சித்திரவன்னமான இரதத்திலேறிக்கொண்டு சனியானவன் மெல்ல மெல்ல சஞ்சரிக்கிறான். இராகுவின் தேரானது சிறிது வெண்ணிற முடையதாய் வண்டின் நிறமுள்ள எட்டு குதிரைகள் கட்டப்பெற்றதா யிருக்கின்றது; இந்த இராகுவானவன் இப்படிப்பட்ட இரதத்தோடு சூரியனுக்கு மேலே அந்தகாரமான மூன்றும் தானத்திற் சஞ்சரித்துக்கொண்டு பருவகாலங்களிலே அங்கிருந்து திரும்பிப் பூமி முதலானவைகளின் சாயையிலே பிரவேசித்துச் சூரிய சந்திரர்களை மறைக்கிறதினால் அந்தத் தினத்தை முறைப்படி சூரியக் கிரகணமென்றும், சந்திர கிரகணமென்றும் உலகத்தார் சொல்லுவார்கள். அன்றியும், இராப்பகல் விளங்கும் கடவுளரென்ற காட்சிப் பிரமாணத்திலும், உலகினர் யாவரும் அன்றைத்தினம் கிரகணம் பிடித்தது முதல் சர்ப்பங்கள் விடுகிறவரையில் அன்னபானாதிகளை நீக்கினவர்களாய் அதர்வண வேதவாக்கியங்களை ஓதியிருந்து முடிவில் ஆழியில் மூழ்கிச் சிரவணஞ்செய்து 'மீண்டிரோ கடவுளரே' யென்று வேண்டுதலுடையவராய் விவகாரத்தை யடைவார். அப்படியே கேது இரதத்திற் கட்டியிருக்கிற குதிரைகள் எட்டு, அவை செத்தை கொளுத்தின புகை வன்னமாயும் அரக்கு இரசத்தின் வன்னமுடையவைகளாயு மிருக்கும்; இக்கேதுவும் இராகுவைப் போலவே மேற்படி கிரகண காரணமாம்.

இவ்விதமாய்ச் சூரியன் முதலான நவக்கிரகங்களுடைய இரதங்களிருக்கும் விதத்தை உனக்குத் தெரியச்சொன்னேன். இந்தக் கிரக நட்சத்திரங்களுடைய மண்டலங்களெல்லாம் வாயுரூபமான கயிற்றினாலே தருவனிடத்திலே கட்டப்பட்டுத் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சாரத்தின்படி சுற்றிக்கொண்டிருக்கின்றன. ஆகாசத்திலுண்டான மண்டலங்களத்தனையும் காற்றுக் கயிறுகளினாலே கட்டப்பட்டுக் கிழக்கு மேற்காகத் தாங்களும் சுற்றிக்கொண்டே அச்செகத்தையும் சுற்றுவிப்பதுபோல் தாங்களும் சுற்றிக்கொண்டு தங்களுக்கு ஆதாரமான துருவனையும் சுற்றுவிக்கின்றன. அன்றியும், இந்தக் கிரக முதலானவையெல்லாம் காற்றின் வடிவான சக்கிரத்தி

ஞலே திரஸ்தோறும் ஏவப்பட்டுக் கொள்ளிக்கட்டையானது சக்கரம்போலக் காணப்பட்டுச் சுழல்வதுபோலே சுழன்றுகொண் டிருக்கின்றன. ஆதலால், அந்தக் காற்றுக்குப் பிரவாமமென்கிற பேர் உண்டாயிருக்கின்றது. இவை நிற்க, முன்பு நான் சிம்ஸு மாராக்கிருதியான தருவாதார ரூபமொன்று சொன்னேனே அதி லிருக்கும் விதத்தைநன்றாய் கேள். அந்தச் சொரூபத்தைக் காணு கிறவன், அன்று பகல் செய்த பாவத்தினின்றும் விடுபடுவதுமன்றி அந்தச் சிம்ஸுமார சக்கரத்தில் எத்தனை நட்சத்திரங்கள் சேர்ந்திருக் கின்றனவோ அத்தனை வருடங்களினளவும் சுகமாகச் சீவித்திருப் பான். நட்சத்திர ரூபிகளான சில தேவதைகள் அதன் அவயவ மாக விருப்பார்கள். அந்த விவரஞ் சொல்லுகிறேன்; அந்தச் சிம்ஸு மாரத்திற்கு உத்தபாதன் மேல் வாயிலும், எக்கியன் கீழ் வாயிலி லும், பிரமன் சிரத்திலும், நாராயணன் இருதயத்திலும், அசுவினி தேவதைகள் கால்களிலும், வருணனும் அயர்மாவும் பின் தொடை களிலும், சம்வச்சரம் குறியிலும், மித்திரன் அபானத்திலும், அக் கினியும் மகேந்திரனும் காசிபனும் துருவனும் வாலிலும் இருக்கின் றார்கள். இந்த அக்கினி முதலான நான்கு நட்சத்திரங்களும் மற்ற அவயவங்களிலுள்ள நட்சத்திரங்களைப் போலே அத்த மிக்காமல் எப்போதுங் காணப்பட்டுக்கொண்டே யிருப்பன.

ஓ பார்வதி! நீ கேட்டபடி பூமியின் இருப்பும் அதில் உள்ள பர்வதம், சமுத்திரம், தீவு, வருடம் முதலானவைகளின் சிறப்பும் ஆகாசத்திலிருக்கும் சில நட்சத்திராதிகளின் பொருப்பும் சொன் னேன். இன்னும், அதின் சுருக்கம் சொல்லுகிறேன் கேளாய், விஷ்ணுவே யாகியும் யானே விஷ்ணுவாகியு மிருக்கிற எமது சரீர மானது சலத்தினின்றும் தாமரைப்பூப்போலே பூமியானது பருவத சமுத்திராதிகளோடு கூட உண்டாயிற்று; ஆனதால், இந்தப்பூமியும் எம்முடைய சரீரமேயாம். இது மாத்திரமேயன்று சூரியாதி சோதிகளும் பூமி முதலான உலோகங்களும், வனங்களும், மலைக ளும், திசைகளும், நதிகளும், சமுத்திரங்களும் என்றும் உள்ளன வாகச் சொல்லத்தக்க அசித்து யாவும் எம்மிருவர் மயமான சரீரங் களா யிருக்கின்றன; ஞானமே வடிவான சகல சீவன்களாயும் சரீர மாகக் கொண்டிருக்கிற யான் சுத்த சொரூபமல்லது தேவமனுஷி யாதி சொரூபமன்று. ஆகையால், பருவத சமுத்திர பூமியாதி

ரூபபேதங்க ளெல்லாம் சீவன்களுடைய கருமவசத்தினு லுண்டான ஞான வேதத்தைப்பற்றியவையே என்றுணர்வாய். எப்போது இப்படிப்பட்ட அஞ்ஞான ஹேதுவான கருமம் குறைபடுமோ அப்போது ஞானமயமான தன் சொரூபம் சுத்தமானதாகத் தோன்றச் சகலமும் கரும மூலமான நினைப்பின் பேதத்தாலே வெவ்வேறு வண்ணமாகத் தோன்றியதே யல்லாமல் சுபாவமாய் அவ்வத்துக்களில் அந்தப் பேதங்களே இருக்கமாட்டா. ஞான மயமான வத்துவே நிரமாகையாலே (ஆஸ்தி) 'இருக்கிறது - என்று உள்ள பொருளால் சொல்லப்படும் ஞானமில்லாத சடமெல்லாம் மாறிப் போம் ஆகையால், (நாஸ்தி)' இல்லை - என்ற பொருள்களாகச் சொல்லப்படும். ஏனெனில் ஆதியும் மத்தியமும் அந்தமு மில்லாததும் எப்போதும் மாறுமல் ஒரே உருவத்தை உடையதுமான வத்து ஆத்தும சொரூபத்தைவிட வேறொன்றும் இல்லை. நாம ரூபங்களால் வேறுபாட்டையும் மாறுபாட்டையும் அடைவது போலத் தோன்றினும் வத்து ஒன்றே நித்தியமென்பதை விளக்கிக் காட்டுகிறேன். கேளாய் பெண்ணே! பிருதிவியானது முதலில் மண்ணுருண்டையாயிருந்து, பின்பு குடமாகி, அதன் பின்பு அது உடைந்து ஓடாகி, அவ் ஓடு சிறு துண்டாகிப் பொடியாகி, அப்புறம் தூளாகி, அதன்பின் அணுவாகி மாறுகின்றது.

இவையெல்லாம் ஆத்தும சொரூப எதார்த்தந் தெரியாமல் தேவர் மனிதர் முதலிய உருவமாக நிச்சயித்துக் கொண்டவர்களுக்குத் தங்களால் அனுபவிக்கப்படுகிற வெவ்வேறு பொருளாகத் தோன்றுகின்றவனன்றே? இதை யோசித்துப் பார்த்து அவற்றுள் எதை வத்துவென்று சொல்லலாமென நிச்சயிக்குமிடத்து ஞான காரணமென ஆன்ம வத்துத் தவிர வேறே யாதும் இருக்கிறதென்று சொல்லத்தக்க பொருள் இல்லை. பார்த்தாயா? அந்த ஞான காரணமோ அவரவருடைய கரும பேதத்தினுலே மாறுபட்ட சித்தமுடைய ஜனங்களுக்கு தேவாதி சக்கரப் பிரவேசத்தினுலே அந்தந்த உருவமாகத் தோன்றுகின்றது. ஆத்தும சொரூபமானது சுபாவத்தில் கருமமில்லாதது! அதனால் வரும் பிரகிருதி சம்பந்தமான மனமில்லையாகையால் அதை அனுசரித்துண்டாகத் தக்க சோகமோக லோபாதி தோஷ சம்பந்தமில்லாததும், தேய்தல், வளர்தல் முதலியவை இல்லாமல் ஒரே உருவமானதுமாக இருக்கின்றது.

அப்படிப்பட்ட ஞானரூபமான ஆத்துமசொரூபம் ஸ்ரீ வாசுதேவனுடைய சரீரமாகையாலே தன் மயமேயிருக்கின்றது. ஆகலால், அந்த ஸ்ரீ வாசுதேவனும் யானுமல்லாத வத்து ஒன்று மில்லையன்றே? ஓ பார்வதி! இவ்விதமாய் ஞான சொரூபமொன்றே நித்தியமாயிருக்கையாலே சத்திய பதார்த்தமென்றும் மற்றது மாறி மாறி அழிகையாலே அசத்தியமென்றும் எதார்த்தத்தை உனக்கு நான் நன்றாய்த் தெரிவித்தேன்.

அண்ட அளவின் சுருக்கம்

ஓ பெண்ணே! இவ்வாறு பூகோளமும் கோளமும் சொன்னேன். ஆனால் சோதிடசாத்திரங்களிற் சொல்லப்பட்ட விதமோ வேறு. எங்ஙனமெனில், பூமியானது விளாங்கனியைப்போல முற்றும் உருண்டை வடிவுடையதாய், இரண்டு பங்கு சமுத்திரஞ் சூழ்ந்ததாய் இடையில் தெற்கிலிருந்து வடக்குவரையிலும் ஒரு காராசமுருவம் போலிருப்பதுபோலே மேரு பர்வதம் நிற்கப்பெற்றதாய், ஓர் ஆதாரமு மில்லாமல் அந்தரத்திலிருக்கிறது. இதில் சுற்றளவு நாலாயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தேழு காதமாகும். முற்றளவு ஏழு லட்சத்து எண்பத்தையாயிரத்து மூந்நூற்று ஐம்பத்து நான்கு யோசனையாயிருக்கிறது. பூமியின் மத்தியம் இலங்கை அது முதல் தொண்ணூறு பாகங்களில் ஒவ்வொரு பட்டணமாக மூன்று பட்டணங்கள் சூரிய உதய அத்தமன மத்தியான அர்த்தராத்திரங்களுக் குறிக்கு மிடங்களாயிருக்கின்றன. ஆகப் பூமி மூந்நூற்றறுபது பாகமாகப் பிரிக்கப்படும். எங்கிருந்து கணக்கிட்டாலும் இப்படிச் சமானமான மூந்நூற்றறுபது பாகங்களேயாக இருக்கும். இப்பூமியில் வடமூனைக்குச் சுமேருவென்றும் தென் மூனைக்கு மேருவென்றும் பெயர் சொல்லப்படும். இப்பூமியின் மத்தியதானமாகிய இலங்கைக்கு 24 - பாகங்களுள்ள இடத்தில் உத்தராயனரேகை உண்டு. அப்படியே தெற்கில் 24 - பாகங்களுள்ள இடத்தில் தட்சணாயன ரேகை உண்டு. இச் சமுத்திரத்திலே தானே பிரிவுகள் இந்தப் பூமிக்கு மேல் சந்திரமண்டலம், அதன் மேல் புதமண்டலம், அதன்மேல் சுக்கிரமண்டலம், அதன்மேல் பிரகஸ்பதி மண்டலம், அதன்மேல் சனிமண்டலம், இவை யெல்லாவற்றிற்கும் மேல் நட்சத்திரமண்டல மிருக்கின்றது; இவையெல்லாம் பூமியைச் சுற்றித் திரிந்துகொண்டிருக்கும். ஒவ்வொரு கிரகமும் தன் தன் மார்க்கத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சத்துப் பதி

னெண்ணூயிரத்து ஐந்நூற் றெண்பத்தெட்டு யோசனை தூரமே ஓடும். ஆனால் அந்தந்த மார்க்க வட்டங்களின் அளவினாலே கிரகங்களுடைய சிறு சக்கரம் யோககாலம் சிறிதும் பெரிதுமாய் வித்தியாசப்பட்டிருக்கும் ஆகாச மண்டலமெல்லாம் பன்னிரண்டு இராசிகளாகவும், ஒவ்வொரு ராசியும் மூப்பது பாகங்களாகவும், ஒவ்வொரு பாகம் அறுபது கலைகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கும். ஆகையால் ஒவ்வொரு கிரக மார்க்கச் சக்கரமும் ஏற்றபடி சிறியவையும் பெரியவையுமான இராசிகள் கலைகளென்னும் பிரிவுகளை யுடையனவாயிருக்கும். இனிச் சந்திரசாயை, நேராய்ச் சூரியனை மறைக்கும்போது சூரிய கிரகணமும், பூசாயை சந்திரனை மறைக்கும் போது சந்திர கிரகணமும் உண்டாகின்றன. சந்திரன் முதலான சகல கிரக நட்சத்திரங்களுக்கும் சூரிய கிரகண சம்பந்தத்தினாலேயே பிரகாச முண்டாகின்றபடியால் சந்திரன் சூரியனை விட்டுத் திரும்பத் திரும்பச் சந்திரகாந்தி பூமியிலிருக்கிறவர்களுக்குப் படிப்படியாய் விளங்குகிறதினாலே அந்தக் காலம் வளர் பிறையென்றும் - சுக்கிலபக்ஷமென்றும் சொல்லப்படும். மறுபடியும் சூரியனை நோக்கிச் சந்திரன் செல்லச் செல்ல ஜனங்களுக்குச் சந்திரகாந்தி படிப்படியாய்க் குறைந்து வருவதனாலே, அக்காலம் தேய்பிறையென்றும் - கிருஷ்ணபக்ஷமென்றும் சொல்லப்படும். சோதிடநூலும் வேதாங்கமாயிருப்பதனாலே புராணத்தைப்போல வைதிக சாத்திரமாயிருக்கின்றது. இப்படிச் சாத்திரத்திற்கும் அனுபவத்திற்கும் விரோதமாய்ப் பூகோள கிரகங்களைப் புராணத்திற் சொல்லியிருப்பது எனெனில்;

கேளாய் ஓ பார்வதி! இவ்விஷயத்தைப்பற்றிச் சிலர் விசாரித்து எழுதியிருப்பவைகளைச் சொல்லுகிறேன். சோதிடத்தில் பூகோள கோளங்களை விவரிப்பது வருஷ மாச பட்ச திதி நட்சத்திராதி சகல பேதங்களைக் கணித்து ஏற்படுத்துவதற்காக புராணத்திலேயே எமது விசுவரூபத்தை யறிந்து அட்டவித யோகங்களால் ஆன்மஞானிகள் யாவரும் உபாசனை செய்வதற்காக எமது விராட் அளவிலே பூகோள அளவுகள் விரிதமாகும். பல புராண வியாக்கியாதாக்களும் புராணக்காரருக்கு வைராக்கியத்தையும் தத்துவ ஞானத்தையும் உண்டாக்குவதே உத்தேசியமான அபிப்பிராயமன்றிக் கணிதாதிகளில் அப்படிப்பட்ட அபிப்பிராயம் இல்லையென்று தாபிக்கப்பட்டிருக்கு

மாதலின், புராணங்களின் காலாந்தரத்திலிருந்த பூகோளாதிகளைக் கொண்டு உபாசனைர்த்தமாக உத்தேசித்து சொன்னர்களென்றறிய வேண்டும். சூரியாதி சிம்ஸுமார சக்கிர முதலான வன்னங்களை உபாசனைக்காகவே புராணங்களில் சொன்னதாக நேரே வியாக்கியாதரர்களும் எழுதிக்கொண்டார்கள். சிருட்டிகள் கல்பந்தோறும் பேதப்பட்டிருக்கின்றன வென்றும் சாஸ்திரங்களா லறியப்படுகின்றன. இப்படிப்பட்ட ஏதுக்களால் விராட் புருடனுடைய மகிமையை விசேடமாய் விளக்கத்தக்க ஆச்சரியகரமான கோள் விசேடங்களை தூலோபாசனைக்காகவும் ஐசுவரியச் செருக்குடையார்க்குக் கிரியாவைராக்கியங்க ளுண்டாவதற்காகவும் நாம் அருளிச் செய்தோம். சோதிடநூல் கிரகசாரங்களைக் கொண்டும் காலங்களைச் சரியாய் அறிவிக்க வேண்டியதற்காக பூகோள ககோள நிதிகளை உள்ளபடி அறிவித்திருக்கிறோ மென்று தெரிந்து கொள்ளவேண்டும். அன்றியும், இந்த அண்டம் அல்லது உலகினளவை அறியவேண்டிய விதி இருபத்து நான்கு கதிரெழுத்து கொண்டது ஒரு மயிர் நுனி; மயிர் நுனி எட்டுகொண்டது ஈர், ஈர் நாலுகொண்டது ஓர் பேன்; பேன் எட்டுகொண்டது ஒரு நெல்லு; நெல்லு மூன்றுகொண்டது ஒரு தேவாங்குலம்; தேவாங்குலம் இருபத்து நாலுகொண்டது ஒரு மகாகரம்; மகாகரம் நான்குகொண்டது ஒரு தனு; தனு இரண்டு கொண்டது ஒரு தண்டம்; தண்டம் இரண்டாயிரம்கொண்டது ஒரு குரோசம்; குரோசம் நான்குகொண்டது ஒரு யோசனை என்று இவ்வாறு அறிந்து கொள்ளவும் என்று அருளிச்செய்த சிவபெருமானை நோக்கி ஓ சுவாமி! தாங்கள் விவரித்த அண்டபிண்ட பிரமாண்டங்களின் அளவையும் அவைகளுக்குட்பட்ட சூரியசந்திர கிரகங்களின் தொழிலையும் முதலான சகலமும் அறிந்தேன். இவ்வுலகத்தில் மனிதப்பிறப்பு உண்டான விதத்தையும் அதின் காரணத்தையும் கிருபைகூர்ந்து திருவாய் மலர்ந்தருள வேண்டும் என்று துதித்த பார்வதியை நோக்கிச், சிவபெருமான் சொல்லத் தொடங்கினர்.

மானிட ஜென்ம உற்பத்தி

பங்கய முகத்தி னெந்தாய் பார்ப்பதி சிவத்தைநோக்கி
மங்கள வடுக்காமண்ட விண்டலத் தொடர்பை யெல்லாம்
இங்கெனக் குரைத்தி ரையா இனிமனுப் பிறப்பே தென்னத்
திங்களை முடித்த வேணித் திகழ்பர முரைக்க லானர்.

தைக் கடந்த புறச்சுவரைப் பாதாள மட்டில் ஊடுருவப் பொருத்தி, மற்றவையுந் திருத்தி, ஒன்று மழியாதென்று மன மமைவு கொண்டனன். ஆனல் அடுக்கடுக்காக எத்தனையோ அண்டங்களும் மண்டலங்களும் அமைக்கப்பட்டு பின்னெங்கணும் இடமின்றி புறச்சுவரும் பொறுத்தினனே அப்போது நீர் எங்குற்றீரெனச் சந்தேகங் கொண்டாயோ? சத்தியே! அந்தச் சந்தேகத்தில் மனத்தை விடாமல் ஊக்கமாய்க் கேட்பாயாக. பாதலமாகிய பூமியின் அடிப்பரப்பு முதல் மீதலமாகிய மோட்ச லோகத்தின்மேற் கவிழ்ந்த புறச்சுவர் மட்டும் விரிந்த அண்டங்கள் யாவினும் பறந்து நீண்டவன் யானே; எல்லா உலகங்களும் எனது தேகத்திற்றானே இடங்கொண்டிருக்கிறது. எனது தேகமன்றி உலகமில்லை; இந்த இரகசியத்தை மாலும் மாலின் மகனும் அறியமாட்டார்கள், இவை நிற்க; மண் - விண் இரண்டு; அண்டம் - பிண்டம் இரண்டு; அக்கினி - சலம் இரண்டு; நல்வினை - தீவினை இரண்டு; நரகம் - மோக்ஷம் இரண்டு; விஷம் - அமிர்தம் இரண்டு; இருள் - வெளி இரண்டு; சூரியன் - சந்திரன் இரண்டு; தோற்றம் - ஒடுக்கம் இரண்டு; ஆண் - பெண் இரண்டு; சத்தி - சிவம் இரண்டு ஆகிய இவை யெல்லாம் எனது சொரூபத்தினிடமே, அரூபமா யிருந்து பெரு வெளியிலுற்றுப் பரவி நிற்கின்றது. இவ்வாதரத்தைக் கொண்டே பிரமனனவன் சகல சீவராசிகளையும் சிருட்டிக்கும்போது நால்வகை யோனி எழுவகைத் தோற்றம் எண்பத்து நான்கு நூறுயிரம் பேதமான எல்லாப் பிறவிகளிலும் ஆண் - ஒன்றும், பெண் - ஒன்றுமாகச் சிருட்டிக்கப்படுகையில், ஊர்வன, நடப்பன, பறப்பனவாகிய பறவை - விலங்கு முதலிய மிருக சாதிகளுடனே மனித சொரூபத்திலும் ஆண் - ஒன்றும், பெண் - ஒன்றும் சிருட்டித்தான். அப்படிச் சிருட்டிக்கப்பட்ட பெண் - ஆண் இரண்டும் விலங்கினமாகிய மிருகங்களுடன் தானும் ஒரு மிருகம்போலக் காய் - கனி - கிழங்கு முதலியவற்றை ஆகாரமாகப் புசித்து மரத்தின் மீதும் கிளைகளின் மீதும் உறங்கிக் காலம் போக்கிக் கொண்டிருந்தன. ஆனல், பெண் உருவமிருந்த இடம் ஆணுக்கும் ஆண் உருவ மிருந்தயிடம் பெண்ணுக்கும் தெரியாமல் தனித்தனியே நிர்வாணிகளாக மிருகங்களோடு கூடவே சில நூற்றாண்டு கழித்தார்கள்.

ஓ பார்வதி! ஆயுள் மனிதருக்கு ஏதென்னும் சந்தேகமுளதோ? அந்தச் சந்தேகத்திற் கிடங்கொடாதே, பிரதான பிதாமகன் காட்க

ளின் நாட்களில் மனிதர் தேவாங் குலத்தால் எழுநூறடி உயரமும், மூந்நூரடி பெருமனு மூள்ளவர்கள். அத்துடன் பாவமிசைத்தோரு மல்லர். பெண்ணெனும் பேய் பிடித்தோரு மல்லர். விந்து பொழிந்து நெஞ்சழிந்தோரு மல்லர். உயிர் மாற்றி உண்டோரு மல்லர். ஆகையால், அவர்களுக்கு ஆயுள் ஆயிரத்திருநூருகும்.

இவை நிற்க; மேற்கூறியபடி சில நூற்றாண்டு வரையில் கான கத்தில் மிருகங்களோடு திரிந்திருக்கையில் ஒரு நாள் பெண்ணும் ஆணும் சந்தித்தன. அப்படிச் சந்தித்த ஒருவரும் ஒருவரை யொரு வர் உற்று நோக்கி மிகுந்த ஆச்சரியமும் களிப்பும் கருணையும் உண்டாகி 'தன்னினம் தன்னைக் காக்கும் வேலி பயிரைக் காக்கும்' என்பது போல அன்று முதல் மிகத் தொடர்ச்சியை விட்டு, இவ்விரு வரும் ஒன்று சேர்ந்து எங்குந் திரிந்து உணவு உண்டு ஒன்றை யொன்று ஆதரித்து வாழ்நாட் கழிக்கின்றபோது, பெண்ணென்ற மாயை சம்பந்தப் பட்டவுடன் கலவிக்கிட முண்டாகி மருவி வாழ்ந் தன. இவ்வாறு இடை இடை புணரப் பெற்றமையாற் ஆண் - பெண் என்னும் அருவருப் புண்டாகி ஆண்குறி யென்றும், பெண்குறி என்றும் மானுபிமானம் தோன்றி நிருவாண யோக்கியதையற்று, இலை முதலிய சருகுகளால் ஆடைபோன்று அறையில் உடுத்தி நாம் மனிதரென்ற தடிப்புத் தனக்குத்தானே உண்டாயிற்று. வேறு இடத்தி லுதிக்காமல் வேதாவி லோக்கத்தால் கலிபிறப்பாக உதித்த மையால் அந்தப் புருடனுக்கு சுவாயம்பு என்னும் நாமதேயமுண் டாயிற்று. அல்லது சுவாயம்பு மனுவென்று பின்வரும் மனுக்க ளால் வழங்கப்படுகிறது. அந்தச் சுவாயம்பு மனுவுக்கு மனவியா ககக் கிடைத்த மடந்தைக்கு சதரூபை என்னும் காரணப் பெயர் நிருமித்துக் கொள்வதானுர்கள்.

மேலும், இந்தச் சுவாயம்பு மனுவும் சதரூபியும் சதிபுருட கோலமாய்ச் சுகங்களை அனுபவித்து வாழுங்காலத்தில், அந்தக் கானகத்தி னிடமாகத் தம்மைச் சூழ்ந்திருக்கிற ஒவ்வொரு வத்துவும் தம் கண்களுக்கு நூதனமும் ஆச்சரியமுமாய்த் தோற்றுகிற ஓடதி களைப் பார்த்துத் தன் மனதில் தினம்தினம் இச்சையுண்டாகி எல் லாப் புல் பூண்டுகளின் புட்பங்களுடைய மணத்தினுல் இன்ப மேலிட்டு அவைகளினுடைய இளங்காய் செங்காய்களினுடைய ஆச்சரிய உருவம் நன்று தீங்குகளறிந்து அதிற் சில கனிகளையுண்டு

தம்முடைய பசியைத் தீர்த்துக்கொண்டு அதினால் நாவுக்குண்டாகிய உருசியையும் பருகித் தம் பிராணனைப் போஷிக்க வேண்டிய முயற்சியின் கிடத்தைக் கற்பித்துக்கொண்டு மேலும் தம்மைச் சூழ்ந்துக் கொண்டிருக்கிற ஒவ்வொரு பதார்த்தங்களிலும் பல சீவர்களிடமிருந்து உண்டாகிற ஒலியையும் ஓசைகளையும் காதிற்கேட்டு மதிப்புக் கிடமாகிய சீவகாருணிய நற்குணமேலிட்டு, தினந்தோறும் தம் பசிக்கு உணவுகளைச் சேகரிப்பதில் முயன்று ஆரணியத்தில் திரிந்துக் கொண் டிருக்கிறபோது சிலகாலஞ் சென்று இவ்விருவருக்கும் மகப் பேறுண்டாகிப் பிரிய விரதனென்றும் உத்தான பாதனென்றும் சொல்லப்பட்ட இரண்டு புதல்வர்களும், ஆகுதி - தேவஹூதி - பிரகுதி என்ற மூன்று புதல்விகளும் உதித்து நாளுக்கு நாள் செல்வமாகத் தழைத்துச் செழித்திருந்தார்கள். இக் குடும்பம் யாவரும் புசிப்பிக்கு வேண்டிய விலங்கு - புள்ளினம் - காய் - கனி - கிழங்கு முதலானவைகளையும் பலவிதங்களாகிய தானியங்களையும் சமைத்து உண்டுப் பசியைத் தணித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தப்படி காட்டிலிருக்கும் காலத்தில் யாவருக்கும் நாளோட்டத்தில் தமக்குத் தாமே தயை - சாந்தம் - பொறுமை - அறிவு - சொற்றிறமும் - கல்வித்திறமும் உண்டாகி ஞானமுதித்து தங்களுடைய நிலையைத் தாங்களே ஆராய்ச்சி செய்து, பிருதிவி - அப்பு - தேயு - வாயு - ஆகாசமென்கிற பஞ்ச பூதங்கள் செய்யும் படியான நன்று தீதுகளை யறிந்து, மகிழ்ந்து புழ்ந்து அனைவரும் துக்கமின்றிச் சுகமாய் வாழ்ந்து வருகிறபோது இவர்கள் ஒருவரோடொருவர் யோசித்து நாளுக்கு நாள் பசிக்குத்தேடி உண்பதைப் பார்க்கிலும் ஆரணியத்தில் தங்கிடையாய் மேய்ந்து ஆகாரம் - நித்திரை - பயம் - மைதுனம் ஆகிய நான்கு அறிவும் வகித்த செம்மறியாடு - வெள்ளாடு - ஒட்டகம் - பசு - குதிரை - கோழி - பட்சி முதலான சகல சீவன்களையும் பிடித்துக் கூண்டிற்சேர்த்து அவற்றிற்கு வேண்டிய ஆகாராதிகளைப் போட்டுக் காப்பாற்றி அவற்றாலுண்டாகும் பலனை அனுபவித்துக்கொண்டு சுகமாக வாழ்ந்திருந்தார்கள்.

இப்படி யிருக்கிறபோது விண்ணிலும் மண்ணிலும் உண்டாயிருக்கிற சகலவிதப் பொருள்களினுடைய நிலையையும் தங்களுடைய நிலைமையும் பிரித்து உணரும்படியான கால வேற்றுமைகளையும்

பஞ்ச பூதங்களுடைய சன்மை தீமைகளையும் புல் - பூண்டு - காய் - கனிகள் முதலான சகல வத்துக்களினுடைய சுயகுணங்களையும் அறியத்தக்கக் கூர்மையுள்ள தங்கள் புத்தியை விசாலமாகப் பெருக்கிப் பலவித தானியங்களைப் பார்த்து அவற்றில் இவர்கள் தங்கள் சீவனத்திற்குரிய அரிசி - கேழ்வரகு - சோளம் - கோதுமை முதலான் தானியங்களைச் சேகரிக்க யோசித்துப் பயிர் செய்யத் தொடங்கித் தங்களுடைய கருத்தையும் ஜாக்கிரதையையும் ஒருவருக்கொருவர் தங்களுக்குத் தாங்களே மெச்சிப் புகழ்ந்து அடங்கா மகிழ்ச்சியடைந்திருந்தார்கள். அப்போது அவர்களுக்குச் சகல ஆகமசாத்திர கலைஞானங்களும் தமக்குத்தாமே உதித்தன. பின்பு சுயம்புமனு தன் மனைவியுடன் புதல்வர்கள் இரண்டு குடும்பமாகப் பிரிந்தார்கள். மூத்தோனுகிய பிரிய விரதன் குடும்பம் பயிர்மூல ஜீவனஞ் செய்பவர்களானார்கள்; இவர்களுக்குச் சூரியவமிசமென்று மறை பன்னுகின்றது. இளையவனுகிய உத்தானபாதன் குடும்பம் ஆடு மாடு மந்தைகளை மேய்க்கிற இடையர்களானார்கள்; இவர்க்குச் சந்திர வம்சமென்று வேதங் கூறுகின்றது.

கேளாய் பார்வதி! இவ்விரண்டு குடும்பத்தார்களுக் குள்ளே பயிரிடுகிறவர்களுக்கு மற்றவர்கள் வேண்டிய பால் - தயிர் - நெய் - முதலியன கொடுத்துப் பதிலுக்குப் பலவித தானியங்களைப் பெற்றுக் கொள்ளுவது; இந்தப்படியாக ஒருவருடைய வத்துவை மற்றொருவருக்குக் கொடுத்து மாற்றிக்கொள்ளுகிறபடியினாலே வாணிகமுண்டாகியது; அதினால் பயிரிடுகிறவர்களுக்குப் பூ வைசியரென்றும் ஆடு மாடு மந்தைகளை மேய்க்கிறவர்களுக்குக் கோ வைசியரென்றும் பெயருண்டாயிற்று. மந்தை மேய்க்கிறவர்கள் தங்களுக்குக் கிடைத்த பாலைச் சாப்பிட்டு மிகுதியைத் தயிர் தோய்த்துக் கடைந்து வெண்ணெயை நெய் காய்ச்சுவதையும், பயிரிடுகிறவர்கள் வெல்லம் சருக்கரை இவைகளைக் கரும்பு ரசத்தினும், பருத்தியிற் பஞ்சும், எள்ளினும் முத்துக் கொட்டையினும் எண்ணெயும் உண்டாக்க இவ்வண்ணமாக ஒவ்வொரு வத்துக்களையும் பதப்படுத்துகிற குணம் இவர்களுக்குள்ளே சிலருக் குண்டாகி இதுவே தொழிலில் முயன்றிருந்தபடியால், அவர்களுக்குச் சூத்திரரென்று பெயருண்டாயிற்று.

அப்போது இருதிறத்தாராகிய பயிரிடுகிறவர்களும் மந்தை காக்கிறவர்களும் பயிரினுலுண்டாகிய விளைச்சல்களுக்கும் வளர்க்கிற

மிருகங்களுக்கும் துட்ட மிருகங்களாலேயும் விட செந்துக்களாலேயும் ஆபத்து நேரிடாம லிருக்கும்பொருட்டு வாளாயுதங்களே இடையிற் தரித்துக்கொண்டு வெகு சாக்கிரதையாய்ப் பாதுகாத்துக்கொண்டிருந்தமையால் இவர்களுக்கு க்ஷத்திரியரென்று பெயருண்டாயிற்று.

இதில் உத்தானபாதன் வமிசத்தோர்களில் சிலர் தங்கள் மந்தைகளே மேய்த்துக்கொண் டிருக்கிறபோது கோடை காலமான்தால் காடு பற்றிக்கொண்டு தீ யெரிகிறதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுத் தீயடங்கித் தணிந்த பிறகு நெருங்கிப் பார்க்கிறபோது ஒவ்வொரு இடங்களில் பலவிதமான நிறமும் பசுமையும் ஒளியுள்ளதாயும் சிலவிடங்களில் மண்ணைனது உருகிக் கறட்டுச் சிட்டமாகவும் மிகவும் உறுதியும் பலமும் துவரும் கருக்குக் கூர்மையும் தருவு மூள்ள கருவி உருக்கு கட்டிகளுண்டாயிருந்தன இவற்றைப் பார்த்து அவர்கள் இதுவென்ன புதுமையாக இருக்கிறது? இவை எவ்விதமா யிப்படியாயின? இதனே போசிக்குமிடத்தில் நினைப்பதற் கரிய ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் உண்டாக்கச் செய்கிறது. இது மண்ணினுடைய சுபாவகுணமென்று தோன்றுகிறது. தீப்பற்றி எரிந்ததினுல் இந்த மண்ணைனது இப்படிப் பேதப்பட்ட தல்லவா என்று இதனே நன்முயறிவோ மென்று அவற்றைப் பரிசோதித்துப் பார்க்கையில் இஃது இரும்பென்று கருதிய மாத்திரத்திற்முனே அன்றுமுதல் இன்றளவும் அதற்கு இரும்பென்றே உலகத்தில் பேர் வழங்கி வருகிறது. மேலும், பலவித சாத்திரங்களேயும் கடன் கொடுப்பதையும் கடன் வாங்குவதையும் எழுதிவைக்க எழுத்தாணி யாகவும் எதிரிகளே செயிக்கவல்ல சகல ஆயுதங்களும் நன்மைக்கும் தீமைக்கும் உறவினர்க்கும் பகைவர்க்கும் காரணமாக யாவருக்கும் அகத்தியம் தேவையுள்ளதென்று அவற்றைக் கொண்டு சகல ஆயுதங்களேயும் உண்டுபண்ணிப் பின்னும் பஞ்சலோகக் கருவிகளே யும் பாகப் படுத்தினர்கள். இதனுலே இவர்களுக்குக் கருமாரென்று பெயருண்டாயிற்று.

மேலும் இவ்விரு நிறத்தாருக்குஞ் செய்யும்படியான தொழில்க ளினுல் கிடைக்கும் பல்வகைய பால், தயிர், நெய், எண்ணெய் தானி யங்கள் முதலான வத்துக்களே வைத்துக் காப்பாற்றி வைக்கப் பாத் திரங்களும் கதம்பக்கூடு முதலாகிய பாத்திரங்களும் கிடையாதபடி யால் மூங்கிற் குழாய்களிலும் சுரைக் குடுக்கைகளிலும் கொப்பரை

களிலும் சங்கு முதலான பாத்திரங்களிலும் வைத்துக் காப்பாற்றிக் கொண்டு வருகிறதே தவிர வேறு பெருத்த பாத்திரங்கள் கிடையா. மிருகங்களுடைய தோல்களையும் மரங்களுடைய இலை சருகுகளையும் ஆசனமாகவும் உடையாகவும் கைபாண்டு கொண்டு வந்தார்கள்.

அப்போது பிரியவிரதன் வமிசத்தாரில் சிலர் மண்ணினாலே பாத்திரங்களைச்செய்து வெயிலிற் காயவைத்து அவற்றை உபயோகித்து வரும்போது வேக்காடு செய்யாமையினாலே, அவை உடைந்துபோகப் பின்னும் பாத்திரங்களைச்செய்து வைக்கோலும் விரட்டிக் கட்டைகளையுங் கூடச்சேர்த்து அடுக்கி தீயிட்டு எரித்துத் தணிந்தபிறகு பார்க்குமிடத்தில் ஒவ்வொரு பாண்டமும் வெந்து உறுதியாயிருந்தது. இவ்வாறு சூளைபோட்டுப் பாண்டஞ் செய்தவர் களுக்குக் குயவரென்று பெயருண்டாயிற்று.

இன்னும் பிரியவிரதன் வம்சத்தாரில் சிலர் சிலந்தி பூச்சியானது கூடுகட்டிக்கொண்டு நூல் இழைகளினாலே பின்னி அதின் நடுவே கோடைக்கும் வாடைக்கும் தங்கியிருப்பதற்கு அமைத்திருக்கும் சிலந்திப் பூச்சியினுடைய நுண்ணறிவைப் பார்த்து இவர் களும் அந்தப்படியே பஞ்சுநூல் நூற்கவும் வத்திரங்களை நெய்யவும் கற்றுக்கொண்டார்கள். இத் தொழிலினால் இவர்களுக்குச் சேணிய ரென்றும் கைக்கோளரென்றும் இரண்டு பெயருண்டாயிற்று.

கேளாய் பார்வதி! இன்னுஞ் சிலர் களிமண்ணிற்கு மனிதனுடைய சரீரத்தின் அழுக்கைப் போக்குகிற குணமுண்டாயிருப்பதை யுணர்ந்து அந்த மண்ணிற் கூடியிருப்பது என்னவென்று பகுத்தறியுமிடத்தில் உவர்மண் - எண்ணெய் - சுண்ணம்புங் கூடின சவுக்காரமென்று தெரிந்து கொண்டதினாலே வத்திரங்களை வெளுக்கவும் சலவை செய்யவும் ஏற்பட்டார்கள். இவர்களுக்கு வண்ணரென்று பெயருண்டாயிற்று.

அப்போது குயவர்கள் பலவிதமாகிய சிலைகளையும் விக்கிரகங்களையும் வாகனங்களையும் செய்து அவற்றிற்குப் பூசை நைவேத்திய ஊர் புறப்பாடு முதலான ஆடம்பரங்களைச் செய்வித்து வந்தார்கள். இந்தச் சிலைகளையும் விக்கிரகங்களையும் வாகனங்களையும் மற்றவர்கள் வாங்கவும் பூசிக்கவும் ஏற்பட்டபடியால் இவர்களுக்குக் குசப்பூசாரிகளென்று பெயருண்டாயிற்று.

மேலும் கற்சூளைகள் போட்டு அந்தக் கற்களினுலே வீடுகள் கட்டவும் கால்கை யொடிந்து மூட்டு நழுகிப்போனலும் அவற்றைக் கூட்டிச் சேர்த்துக்கட்டிக் குணப்படுத்துவது முதலாகிய அனேக சாமர்த்தியங்களில் பழகித் தேர்ந்தபடியினுலே அவர்களுக்குக் குசப் பூசாரிகள் என்று பெயருண்டாயிற்று.

இவைகளே யெல்லாம் பார்த்த உத்தானபாதன் சந்தோஷமேரிற் சிலர் மரங்களினுலே பலவித பதுமைகளேயும் வாகனங்களேயும் இரதங்களேயும் சூச்திரங்களேயும் செய்து விற்பனை செய்ய ஆரம் பித்தார்கள். அதினுல் இவர்களுக்குத் தச்சர்களென்றுப் பெயருண் டாயிற்று.

இன்னுஞ் சிலர் கருங்கல்லினுல் பல வருவங்களேயும் கட்டடங் களேயுஞ் செய்ய ஏற்பட்டார்கள். இத் தொழில்களினுலே இவர்க ளுக்குச் சிற்பிகளென்றும் கல் தச்சர்களென்றும் பெயருண்டா யிற்று.

அப்பொழுது, பிரியவிரதன் வமிசத்திற் சிலர் சூரியன் சந்தி ராதி கிரக நட்சத்திரங்கள் முதலான சகல கிரக சாரங்களும் தங் கிடையேயிருக்க அதினுல் ஒவ்வொருவருக்கும் உண்டாகும் நன்மை - தீமை - செல்வம் - வறுமை - அதிட்டம் - ஆயுள் - நிரியாணம் முதலான செயல்களும் கிரக இராசியோக காரணங்களில் பிறப்பும் அவற்றின் பலன்களும் அறிந்து ஜாதகங் கணிக்கவும், சகுனம் பொருத்தம், நிமித்த முதலான சகல பலன்களேயுஞ் சொல்லவும்; வானமண்டலத்தில் ஒவ்வொரு நட்சத்திரம் உதயமாகிறதுப், அது திரும்பவும் அத்தமிக்கிறதுப், கருத்தோடு கணிதம் பண்ணி இன்ன காலத்தில் இன்ன வெள்ளி உதயமாகுமென்றும், இன்ன காலத்திலே இன்ன நட்சத்திரம் அத்தமிக்குமென்றும், வசந்தகாலம், கோடை காலம், மாரிகாலம் முதலான காலவேற்றுமைகளுடைய பலன்களே யும் சொல்ல வல்லவராகியும், வியாதியாளருக்கு அவிழ்தம் பத்தியம் நன்மை தீமைகளுக்கு ஓம எக்கிய சடங்குகளே விதிப்படி தங்கள் சகோதரர் சகோதரி முதலான பந்துக்களுக்கு உபதேசஞ் செய்கிற வர்க ளானபடியால் இவர்களுக்குச் சோதிடர், பண்டிதர், கருமத் தலேவர் என்னும் பெயருண்டாயிற்று.

பின்பு உத்தான பாதன் குடும்பத்தாரில் சிலர் ஆடு மாடு முத லான மிருகங்கள் இறந்து போனபோதிலும் அல்லது கொன்று

கின்னப்பட்டபோதிலும் அவற்றினுடைய தோல், மயிர், கொம்பு, முதலியவற்றைப் பழுதுபோக வொட்டாமல் பதனப் படுத்தி அவைகளினால் அங்கி - பாய் - கச்சை - வடக்கயிறு - சால் - வீணை தம்பு - கம்பளம் - தருத்தி - செருப்பு முதலான அநேக சாமான்களை உண்டுபண்ணினபடியால் இவர்களுக்குச் சக்கிலிகளென்று பெயருண்டாயிற்று.

அப்போது பிரிய விரதன் வமிசத்திலுதித்த வள்ளுவர்கள் பயிரிட்டுத் தங்கள் கொல்லைகளில் ஆடுமாடுகள் மேயாதபடிக்கு காய் கனி பல தானிய வகைகளை இராத்திரி காலத்தில் கள்ளர் கவர்ந்துகொண்டு போகாவண்ணம் தங்களுக்குள்ளே பலசாலிகளும் தைரியர்களுமாகிய சிலரைக் கொல்லைகளைக் காவல் செய்யவும் பறையடித்து மிருகம் பறவை முதலானவைகளை ஓட்டவும் நியமித்து இவர்களைக் காவற்காரர் தலையாரிகளென்று ஏற்படுத்தினார்கள். ஆகியிலே இவர்கள் பறையை உண்டுபண்ணி உலகமுழுவதும் பறைசாற்றினபடியால் இவர்களுக்கு வள்ளுவர், பறையர்களென்று பெயருண்டாயிற்று.

இவ்வாறாக மனிதர்கள் சந்ததி மேலு மேலும் விர்த்தியான படியால் அந்தந்த நிலத்தில் குடியேறி யிருந்தார்கள். அந்நிலங்களின் வளப்பத்தையும் அங்கங்கே கிடைக்கிற பதார்த்தங்களையும் புசித்து இந்தப் பூவுலகத்தை ஐந்துவித நிலமாகப் பகுத்து அந்த நிலத்தில் வாசஞ் செய்யப்பட்டவர்களுக்குரிய பெயரும் பெருமையுங் கூறப் படுகின்றது.

ஐவகை நிலங்கள்

குறிஞ்சி நிலம்:—மலைகளைச் சார்ந்த நிலங்களுக்குக் குறிஞ்சி யென்று பெயர். அதில் வாசஞ் செய்யப்பட்டவர்கள் குறவர், கானவர், குன்றவர், புனவர், இறவுனர். அவர்கள் காடை, கவுதாரி, காட்டுக்கோழி முதலியவைகளைப் பிடித்து விற்பனைசெய்து சீவித்து வளைகளிலிருக்கிற எலி - உடும்பு - முயல் - கரி முதலியவைகளைப் பிடித்துச் சுட்டுப் புசித்து வழிப்போக்கர்களை அடித்துப் பிடித்து மலைகளிலும் குகைகளிலும் காடுகளிலும் சஞ்சரித்து காய் கழுதை இவைகளுடன் வாழ்பவர்களேயாம்.

இவர்களில் குறவர்கள் உப்பு, புளி, வற்றல் மயில் எண்ணெய் முதலியவைகளைக் கழுதையின்மேல் பொதி யேற்றிக்கொண்டு

ஊரூராய்த் திரிந்து விற்பனை செய்யப்பட்டவர்கள், இவர்கள் இருப்பிடத்திற்குக் குறிச்சி - சிற்றூர் - சீறூர் என்று பெயர்.

பாலை நிலம்:—புல் பூண்டுகள் விளையாத கல்லுங் கரடும் நிறைந்த வெப்பமான கானல் வீசப்பட்ட நிலம். இதில் வாசஞ் செய்யப் பட்ட வேடர்கள், எயினர், புள்ளுவர், மற்றவர்களாகிய இவர்கள் தெளிவும் வழியறியாக் கோபத்தையும் கானலையும் சலத்தையும் பகுத்தறியமாட்டாத குன்றவரானவர்கள். இவர்கள் வீடானது நாய் குரைக்கும் ஓசையுடன் விளாமரத்தின் கொம்பில் வலையானது தொங்கப் பன்றி கரடி கலைமான் இவை பார்க்கப்பெறுகிறது. அல்லாமலும் கற்பாறையாகிய முற்றத்தில் மலைநெல்லானது உலரும். வழிப்போக்கர்களை யடித்துப் பரித்துப் போசனஞ்செய்யும் வேட ருடைய தினைப்புனங்களைக் கவர்ந்துகொண்ட பல உருவமான மான் கூட்டங்களும், இடிபோல கர்ச்சிக்கும் ஆனைக் கூட்டங்க ளும் நிறைந்திருக்கும், இவைகளைக் கண்ட கறுத்த மேனியையும் வலிய தொழிலையுமுடைய மறவராகிய வேடர் அவற்றினிடத் தில் பயமும் கிருபையு மில்லாதவர்களாய் அவைகளின்மேல் சரங் களைத் தொடுத்துக் கொல்லுவார்கள். என்றும் ஜீவகாருண்ணிய மில்லாதவரும் கள்ளையும் மாமிசத்தையும் உணவாகக் கொள்பவ ரும் விஷமூட்டிய அம்பையுடையவருமாகிய வேடர்களுக்கு வாசஞ் செய்யுமிடம் வேடச்சேரி யென்று பெயர்.

முல்லை நிலம்:—வனங்களைச் சார்ந்த நிலம். இக்காட்டில் வாழும இடையர்கள் படல்களால் மூடப்பட்ட சிறிய குடிசை களில் வாசஞ்செய்வர். காலில் செருப்பும் கையில் தடியும் புள்ளாங் குழலும் விளங்க ஆடு மாடுகளை மேய்த்துக் காப்பாற்றும்படியான இப்புருடர்களுக்கு முல்லையர் - பொதுவர் - அண்டர் - கோவிந்தர் - அனவல்லர் - குடவர் - பாலர் - கோவலர் - கோபாலர் - அமுதர் - ஆயர் - தொறுவர் இடையர் என்றும் பெயர். பெண்களுக்குத் தொறுவி - பொதுவி - ஆய்ச்சி - இடைச்சி யென்றும் பெயர்.

நெய்தல் நிலம்:—கடலுங் கழியுஞ்சேர்ந்த நிலம். இதில் வசிப் பவர்கள் மீன் பிடிக்கும் பரதவர் - நுளையர் - கரையார் - பட்டினர் - கடலர் - கழியர் - திமிலரெனு மவர்களாம். இவர்கள் அலைபொருந் திய கடலோரத்தில் நிலைபெற்று வாழும் பழமையாகிய வலைவளங் களையுடைய உணவினால் நிறைந்த தன்மையாக வாழுங் குடிகள்

கெருங்கிய தூளியர்கள். வலைகளை யிழுப்பவருடைய சத்தமும் மீன் சுப்பலைக் குவித்துச் சேர்த்துக் கூறிட்டு விற்கப்பட்ட தூளச்சிய ருடைய சத்தமும் ஒரு தன்மையான வெள்ளைச் சங்குகளைப் பிடித் துக் குவிக்கும் சத்தமும் இச் சத்தங்களெல்லாம் கடலொலிக் கெதி ரொலிபோன்ற தென்னலாம். இவர்கள் வாசஞ் செய்யப்பட்ட இடத்திற்கு குப்பம், கரையாங்குப்பம், பட்டினம், கடலோரம் எனப் பெயர்.

ம . த நிலம்:—ஊரைச்சார்ந்து நஞ்சை - புஞ்சை - தெங்கு - பலா - வாழை - கரும்பு விளையாநின்ற நிலத்தைச் சேர்ந்தது. ராஜ தானியில் சகல ஜாதிகளின் வாசமும் சர்வ வியாபாரமும் அபி விருத்தியாகி மெத்தை மேடைகளாகிய வீடுகளும் அநில் சுபாசுபங் களும் நடப்பதே மருதநில மெனப்படும்.

காலப் பிரமாணம்

சிருட்டி கருத்தாவென்று சொல்லப்பட்ட பிரமதேவனுக்கு ஏழுகோடி இருபதுலக்ஷம் சதுர்யுகங்களும், தேவமானத்தில் எண் பத்தாறுயிரத்து நானூறுகோடி வருஷங்களும், மநுஷ்ய மானத் தில் முன்னூற்றுப் பதினைலக்ஷத்து நாலாயிரங்கோடி வருடங் களுங்கொண்ட சகாப்தம் ஆகிய முடிவு காலத்திற்கு நடந்திருக் கிற பிரமகல்பத்திலும் நடந்து கொண்டிருக்கிற சுவேத கல்பத்தி லும் இதுவரையில் சென்றிருக்கின்ற சதுர்யுகங்களும் தேவமான வருடங்களும் மனுஷ்யமான வருடங்களும் மநுவந்திரங்களும் தேவராஜாக்களுடைய அதிகாரங்களும் ஆயுட் பிரமாணங்களும் நைமித்யப் பிரளயங்களும் நிரிலோக சிருட்டிகளும் இந்தச் சுவேத வராக கல்பத்திற்கு இனிச் செல்லவேண்டி யிருக்கின்றது. சதுர் யுகங்களும் தேவமானவருடங்களும் மனுஷ்யமான வருடங்களும் மநுவந்தரங்களும் தேவராஜாக்களுடைய அதிகாரங்களும் நைமித் திகப் பிரளயங்களும் நிரிலோக சிருட்டிகளும் எளிதில் தெரிந்துக் கொள்ளும்படி விரித்துரைப்போம்.

கால அளவு

நிமிடம் பதினேந்து கொண்டது ஒரு காட்டை, காட்டை முப் பதுகொண்டது ஒரு கலை; அக் கலை முப்பதுகொண்டது ஒரு முகூர்த் தம், முகூர்த்தம் முப்பதுகொண்டது ஓர் இராப்பகல், இரண்டுங்

கூடியது ஒரு நாள், நாள் பதினைந்து கொண்டது ஒரு பட்சம், சுக்கிலபட்சம், கிருட்டிணபட்சம் இரண்டுகொண்டது ஒரு மாதம், மாதம் இரண்டுகொண்டது ஓர் இருது, இருதுமூன்றுகொண்டது ஓர் அயனம்; தேவர்களுக்குப் பகற்காலமாகிய உத்தராயணம் இரவாகிய தட்சணாயனம் இரண்டுகொண்டது ஒரு மனுஷியமான வருஷம்; ஐந்து வருடம் ஒன்றுக்குத் தேவநாள் ஒன்று, தேவநாள் மூப்பதுக்கு தேவமாதம் ஒன்று. தேவமாதம் பன்னிரண்டிற்குத் தேவமான வருடம் ஒன்று; இந்தப் படி தேவமானத்தில் நாலாயிரத் தெண்ணூறு வருடங்களும் மனுஷியமானத்தில் பதினேழு லட்சத் திருபத்தெண்ணாயிரம் வருடங்களுங் கொண்டது கிருதயுகம்; தேவமானத்தில் மூவாயிரத்தறுநூறு வருடங்களும் மனுஷியமானத்தில் பன்னிரண்டு லட்சத்துத் தொண்ணூற்றாறாயிரம் வருடங்களுங் கொண்டது திரேதாயுகம்; தேவமானத்தில் இரண்டாயிரத்து நானூறு வருடங்களும் மனுஷியமானத்தில் எட்டுலக்ஷத்து அறுபத்து நாலாயிரம் வருடங்களுங்கொண்டது துவாபரயுகம்; தேவமானத்தில் ஆயிரத்திருநூறு வருடங்களும் மனுஷியமானத்தில் நாலுலக்ஷத்து மூப்பத்தீராயிர வருடங்களுங்கொண்டது கலியுகம்; தேவமானத்தில் பன்னீராயிரம் வருடங்களும் மனுஷ்யமானத்தில் நாற்பத்துமூன்றுலக்ஷத்து இருபதினாயிரம் வருடங்களுங்கொண்டது தேவர்களுக்கு ஒரு யுகமென்று சொல்லப்பட்ட சதுர்யுகம் ஒன்று.

இப்படி ஆயிரம் சதுர்யுகங்களும் தேவமானத்தில் ஒரு கோடி இருபது லட்சம் வருடங்களும் மனுஷியமானத்தில் நானூற்று மூப்பத்திரண்டுகோடி வருடங்களுங்கொண்டது பிரமனுக்கு ஒரு பகற் காலமென்றும், இந்தப் பகற்காலத்துக்குள் பதினாலு மனுக்களுடைய அந்தரங்களும் பதினாலு தேவராஜாக்களுடைய அதிகாரங்களும் ஆயுட் பிரமாணங்களும் சம்பூரண மென்றும், அவர்களில் ஒவ்வொருவருக்கும் அதிகாரங்களும் ஆயுட் பிரமாணங்களும் எழுபத்தொரு சதுர்யுகங்களும் தேவமானத்தில் எட்டு லட்சத்து ஐம்பத்தீராயிரம் வருடங்களும் மனுஷியமானத்தில் மூப்பது கோடி அறுபத்தேழு லட்சத்து இருபதினாயிரம் வருடங்களுங் கொண்ட காலங்களென்றும் இரண்டாயிரம் சதுர்யுகங்களும் மனுஷியமானத்தில் எண்பத்தாறு லட்சத்து நாற்பதினாயிரம் வருடங்கள் கொண்டது பிரமதேவனுக்கு ஒருநாள். இது மகாவிஷ்ணுவினுடைய

யோக நித்திரைக்குக் காரணமாகிய இந்த நாளிரவில் நைமித்திகப் பிரளயம் உண்டாகுமென்றும்; அந்தப் பிரளயாக்கினி சுவாலையினல் திரிலோகங்களும் தகிக்கப்பட்டு மறுதினம் பகலில் முன்போலச் சிருட்டிக்கப்படு மென்றும் உணர்ந்து கொள்ளவும்.

மேற்கண்ட பிரமதினம் மூப்பதும் அறுபதினுயிரஞ் சதுர் யுகங்களும் தேவமானத்தில் எழுபத்திரண்டுகோடி வருடங்களும் மனுஷியமானத்தில் இருபத்தையாயிரத்துத் தொளாயிரத்து இரு பதுகோடி வருடங்களும் கொண்டது பிரமனுக்கு ஒருமாத மென் றும், இந்த ஒருமாத காலங்களுக்குள் நானூற்றிருபது மனுவந் தரங்களும் நானூற்றிருபத்தைந்து தேவராஜாக்களுடைய அதி காரங்களும் ஆயுட் பிரமாணங்களும் சம்பூரணமென்றும், இதில் மூப்பதுதரம் நைமித்திக பிரளயத்தால் திரிலோகங்களும் தகிக்கப் பட்டு மறுபடியும் சிருட்டிக்கப்படு மென்றும், மேற்கண்ட மாதம் பன்னிரண்டும் ஏழுலட்சத் திருபதினுயிரம் சதுர் யுகங்களும் தேவ மானத்தில் எண்ணூற் றிருபத்துநான்கு கோடி வருடங்களும் மனு ஷியமானத்தில் மூன்றுலட்சத்துப் பதினேழாயிரத்து நாற்பதுகோடி வருடங்களுங் கொண்டது பிரமனுக்கு ஒரு வருடமென்றும், இந்த ஒருவருட காலத்துக்குள் ஐயாயிரத்து நாற்பது மனுவந்திரங்களும் ஐயாயிரத்து நாற்பது தேவராஜாக்களுடைய அதிகாரங்களும் ஆயுட்பிரமாணங்களும் சம்பூரணமென்றும், இதில் மூன்நூற்றிருபது தரம் நைமித்திக பிரளயத்தில் திரிலோகங்களுந் தகிக்கப்பட்டு மறு படியும் சிருட்டிக்கப்படு மென்றும், மேற்கண்ட வருடம் நூறும் ஏழுகோடி யிருபது லட்சம் சதுர் யுகங்களும் தேவமானத்தில் எண் பத்தாருயிரத்து நானூறு கோடி வருடங்களும் மனுஷியமானத்தில் மூன்நூற்றுப் பதினெரு லட்சத்து நாலாயிரங்கோடி வருடங்களுங் கொண்டது பிரமனுக்குச் சகாத்தமாகிய முடிவுகாலமென்றும் இந்த நூறு வருடகாலங்களுக்குள் ஐந்து லட்சத்து நாலாயிரம் மனுவந் தரங்களும் ஐந்து லட்சத்து நாலாயிரம் தேவ ராஜாக்களுடைய அதிகாரங்களும் ஆயுட் பிரமாணங்களும் சம்பூரணமென்றும், இதில் மூப்பத்தாருயிரந்தரம் நைமித்திய பிரளயத்தில் திரிலோகங்களும் தகிக்கப்பட்டு மூப்பத்தையாயிரத்தி தொளாயிரத்துத்தொண்ணூற் றென்பது தரம் சிருட்டிக்கப்படு மென்றும் அறியக்கடவாய். அந்த அளவை உலகோர் அறியும்பொருட்டு மகாரிஷிகளால் அநேக சுருதி களில் புகட்டி யிருக்கின்றது.

காலப் பிரிவு

கேளாய் பார்வதி! காலமென்பது ஆகாயத்தைப்போல் அகண்டமானதோர் பொருள், அளவின்றிப் பொங்கி வருகின்ற ஒரு பேராற்றிற்குத் துறைக ளில்லாவிடின் அஃது உபயோகப் படாததுபோல இக்காலமும் பிரிவுகளில்லையாயின் எதற்கும் பயன் படாது. ஆனதால், வரைவு உண்டாக்கப்பட்டது.

சூரியன் முதற் சனிவரையிலுமுள்ள ஏழு கிரகங்களும் படைப் புக் காலம்போல மறுபடியும் மேடவிராசியிற் சரியாய்ச் சேருங் காலத்தை யுகமென்று கற்பித்தனர். அதின் தொகை நாற்பத்து மூன்று லட்சத் திருபதினாயிரம். அதனைப் பத்துப்பங்காக்கி முதல் யுகமாகிய கிருதயுகத்திற்கு நான்கு பங்கும்; இரண்டாவதாகிய திரேதாயுகத்திற்கு மூன்று பங்கும்; மூன்றுவதாகிய துவாபரயுகத் திற்கு இரண்டு பங்கும்; கடைப்பட்டதாகிய கலியுகத்திற்கு ஒரு பங்குமாகப் பிரித்து வைத்தார்கள். ஏன் அப்படிப் பிரித்தன ரெனில், தருமமானது அந்தந்தக் காலத்தில் நான்கு பங்கும் மூன்று பங்கும் இரண்டுபங்கும் ஒருபங்குமாக நடப்பதனா லெனவறிக.

கோள மண்டலத்தை ஒருதரஞ் சுற்றிவர சனிக்கு ஏறக் குறைய மூப்பது வருடஞ் செல்லுகின்றமையாலும், குருவுக்குப் பன்னிரண்டு வருடஞ் செல்லுகின்றமையாலும், அங்காரகனுக்குப் பதினெட்டு மாதஞ் செல்லுகின்றமையாலும், சூரியனுக்கு ஒரு வருஷமும், சுக்கிரன் - புதன் இவர்களுக்கு நாலு மூன்று மாதமும், சந்திரனுக்கு இருபத்தேழு நாளும் செல்கின்றமையாலும், இக்கிர கங்களுடைய மத்திம கதியின் சிறுகுணனம் அறுபது வருடமாவது பற்றி அறுபது வருடம் ஒரு சக்கரமென்னும் ஏற்பா டுண்டாக்கப் பட்டது. அவ்வருடங்களுக்கும் பிரபவாதி முதலான பெயர்களோ நாரதருடைய மக்கள் பெயராலிடப்பட்டன.

வருடஞ் சூரியனது இயக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டது. சூரிய னியக்கத்தினாலாவது சௌரமான வருடம் என்னப்படும். அமாவாசைக் கமாவாசை ஒருமாத மெனக்கொண்டு சந்திரனியக் கத்தால் ஏற்படுத்திய வருடம் சாந்திரமான வருடம் என்னப்படும். முந்நூற்றறுபது நாட்கணக்கிட்டு ஏற்படுத்திய வருடம் சாவனவரு டம் என்னப்படும். முந்நூற் றறுபத்தைந்து நாட் கணக்கிட்டு

ஏற்படுத்திய சௌரமான வருடத்தான் உலகத்திற் பெரும்பாலும் உபயோகமானது.

சூரியன் ஓர் இராசியிலிருந்து மற்றோர் இராசிக்குப் போகுங் காலத்தை மாதமெனக்கொண்டு வழங்குகின்றார்கள். அது சௌர மானமாதம். இவைகளுக்கு மேஷமாதம் - ரிஷபமாதம் - மிதுன மாதம் என பன்னிரண்டு இராசிப்பெயர் வழங்குவது உண்டு. சித் திரை முதலான பெயர்களோ வடமொழியிற் சாந்திரமான பெயர் களின் திரிபு, ஆனாலும் சௌரமான மாதங்களுக்கே வழங்குகின் றன. எப்படியெனில், சித்திரை நட்சத்திரத்தோடு கூடிய பௌர் ணமை எந்தமாதத்தில் வருகின்றதோ அது சைத்திரம்; அது சித் திரையென்றாயிற்று. விசாகத்தோடு கூடிய பௌர்ணமையுடைய மாதம் வைகாசம்; அது வைகாசியெனத் திரிந்தது. ஆனி என்பது மூல நக்ஷத்திரம்; அதனோடு கூடிய பௌர்ணமையை யுடையது ஆனி மாதம். தேவதைகளின் பகலுக்குக் கடைசி யாதலால் ஆஹர மென்றாகித் தமிழில் ஆனியெனத் திரிந்த தென்பாரும் உளர். ஆஷாட நக்ஷத்திரத்தோடு கூடிய பௌர்ணமையுடைய மாதம்; ஆஷாட மென்றாகித் தமிழில் ஆடியென்று இடைக்குறையும் இகர வீறுமாக வழங்குகின்றது. இப்படிப் பன்னிரண்டு மாதமும் பன் னிரண்டு நட்சத்திரங்களின் பெயரினாலே வழங்குகின்றன.

வாரங்களின் பிரிவு

வாரங்க ளுண்டான விதம் எவ்வாறெனில், ஒரு தினத்திற்கு இருபத்துநான்கு ஓரைகளுண்டு. ஓர் ஓரை இரண்டரை நாழிகை. அது சோதிட பலனுக்காக ஏற்படுத்தப்பட்டது; அஃது ஓரிலக் கினத்தின் முற்பாதியும் பிற்பாதியு மாகின்றது. முற்பாதியைப் பகலென்றும், பிற்பாதியை இரவென்றுஞ் சொல்லுவார்கள். எந் தத் தினத்திற்கு எந்தக் கிரகத்தின் ஓரை முதலில் வருகின்றதோ அந்தக் கிரகத்தின் பெயரால் அந்தத் தினம் வழங்கப்படும்; சனி குரு, அங்காரகன்; சூரியன், சுக்கிரன், புதன் சந்திரன் என்பது கிரகங்கள் நிற்கும் வரிசையாம். இவ்வரிசைப்படியே ஞாயிற்றுக் கிழமைக்குச் சூரியன் முதல் இருபத்து நான்கு ஓரை எண்ணிக் கழிக்க, மறுநாட்காலை சந்திர ஓரைவரும் அதனால் அது திங்கட் கிழமையாயிற்று. இப்படி முறையே இருபத்துநான்கு இருபத்து நான்காகக் கழித்துப்போக ஏழுவாரங்களும் ஏற்படுகின்றன.

திதிகள் சந்திரன் சூரியனைச் சேர்ந்தும் பிரிந்தும் செல்வதனால் உண்டாயின. மற்றவைகளும் இப்படியே காரணம் பற்றினவை களேயன்றிக் காரணம் இல்லாதவையல்ல கௌரியே! நீ வீரும் பியபடி கால ஏற்பாட்டைச் சொன்னேன். இனிக் கல்பாந்தப் பிரளயமென்னும் கதையை முடிக்கின்றேன்; (கேட்பாயாக) வென்று இயம்பலாயினர்.

கல்பாந்தப் பிரளயம்

கேளாய் பார்வதி! உனக்குப் போதனைசத்தி யுண்டாகும்படி கால அளவை விரித்துச்சொன்னேன். இனி; கற்பத்தின் முடிவை யுஞ் சொல்லுகிறேன் கவனித்துக் கேட்கக் கடவாய். உலகத்தில் மூன்றுவிதப் பிரளயங்களுண்டு அது யாதெனில், நைமித்தக மென்றும் பிராகிருதமென்றும் ஆத்தியந்தகம் என்றும் மூன்று வகைப்படும். கல்பத்தின் அந்தியத்தில் நான்முகனு லுண்டாவது நைமித்திகப் பிரளயமென்றும், இரண்டாவது பரார்த்த அளவா யுள்ள பிரமதேவனது ஆயுளின் அந்தியத்தில் நேரிடுவது பிராகிருத பிரளயமென்றும், சாமானிய மனிதருக்குக் கிட்டாத மேலாகிய மோட்சப் பிராப்தியே ஆத்தியந்த்க பிரளயமென்றும் உரைத்த சிவத்தைப் பார்வதி நோக்கி, ஓ சுவாமி! பிராகிருத பிரளயத்தின் அளவையறிந்து தெளிவடையும்படி பரார்த்தத்தின் கணக்கை அடியாளுக்கு விரித்துரைக்க வேண்டுமென்று வேண்ட, பரமசிவன் அருளிச் செய்கிறார்:—

கேளாய் பார்வதி! ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், இலட்சம், பத்து லட்சம், கோடி, பத்து கோடி, நூறு கோடி, என்று வரிசைக் கிரமமாய்ச் சொல்லப்பட்ட கணக்கின்படியே பதினெட் டாவது தானத்தை பரார்த்தமென்று சொல்லப்பட்டது. இந்தப் பரார்த்தகாலம் இரண்டு கடந்தால் பிராகிருதப் பிரளய முண்டா கும். அத்தருணில் வியத்தமானது தனக்கிடையில் விளங்கும் அவ் வியத்தத்தில் இலயித்துவிடும். மனிதருடைய கண் ணிமைநேரமே நிமிடமென்று சொல்லப்பட்ட ஒரு மாத்திரை; இம்மாத்திரைகள் பதினைந்து கூடியது ஒரு காட்டை; இப்படி முப்பது காட்டைகள் கூடியது ஒரு கலை; இக்கலைகள் பதினைந்து கூடியது ஒரு நாழிகை; இந்த நாழிகை பன்னிரண்டரைப்பலம் நிறையுள்ள சலத்தினால் நாழிகையென்று கணக்கிடப்படும். அது, மகததேசத்தின் ஒரு

படி நீளவாகும்: அதையும் விரிவாகச் சொல்லுகிறேன்; கேளாய் மின்னொளியைப் பழிக்கும் மேனியுடைய பெண்ணே! இருபது குன்றியின் இடையுள்ள பொன்னினல் நான்கு அங்குல நீளமாகச் செய்த ஊசியைக் கொண்டு மகத தேசத்துப் படியைத் தொளை செய்து அதைத் தண்ணீரில் மூழ்குவிக்க எவ்வளவு நேரத்தில் அப் படி நிறையுமோ அவ்வளவு காலம் ஒரு நாழிகையென்று கருதப் படும். அல்லது அப்பாத்திரத்தில் தண்ணீர் விட்டு நிரப்பி அவ்வூசித் துவாரத்தின் வழியாகத் தண்ணீர் முழுமையும் ஒழுகிவிடும் காலம் ஒரு நாழிகை, இந்த நாழிகை யிரட்டித்தது ஒரு முகூர்த்தம்; இந்த முகூர்த்தங்கள் முப்பது கூடியது பகலிரவும் சேர்ந்த ஒரு நாள்; இந்த நாள் முப்பது சேர்ந்தது ஒரு மாதம்; பன்னிரண்டு மாதங் கூடியது ஒரு வருடம்; இந்த வருடம் தேவர்களுக்கு ஒரு இராப் பகல்; அப்படிப்பட்ட இராப்பகல் முந்நூற்றறுபது ஆகில் தேவ வருடம் ஒன்று; அப்படி பன்னீராயிரம் வருடம் சேர்ந்தால் சதுர் யுகம் ஒன்று. அந்தச் சதுர்யுகம் ஆயிரமானல் பிரமனுக்கு ஒருநாள் அதற்குத்தான் கல்பமென்று பெயர். அதின் அந்தியத்தில் சேரிடு வதுதான் சதுர்முக சம்பந்தமான நைமித்திகப் பிரளயம். இனி அதிக உக்கிரமான கல்பப் பிரளயத்தினது பிரபாவத்தைச் சொல்லு கிறேன்.

கேளாய், கலிமகளுங் கொண்டாடும் மலிமகளே! ஆயிரம் சதுர் யுகங்களின் அந்தியத்தில் பஞ்சம்-பசி-தாபம்-நோய் முதலியவைகளாலே மண்ணுலகமானது பெரும்பாலும் நசித்து மிகு கடுமையாய் நூறுவருடங்கள் வரையில் மழையில்லாமல் புல் பூண்டு முதலியன வெல்லாம் நீய்ந்து கட்டாந்தரையாய் இருக்கும். அந்தக் கொடிய தீட்சண்ணியத்தினுலே ஜீவ செந்து தாவரங்களெல்லாம் மடிந்து போகும். பின்பு ஸ்ரீமகா விஷ்ணுவானவர் சங்காரத் தொழி லைப் பூண்டு இரௌத்திராகாரமான உருத்திரவடிவங் கொண்டு அகில பிராணிகோடிகளையும் தமது வயற்றிலிருக்கும்படி வகித்துச் சூரிய னிடஞ்சென்று அவனது கிரணங்களைக் கொண்டு, ஓடை-மடு-கடல்-அருவி முதலானவைகளிலும் பிராணிகளிலும் பூமிகளி லும் உள்ள நீரை யெல்லாம் கிரகித்துத் துளித்தண்ணீரேனும் எங்கு மில்லாமல் உண்டு விட்டபடியினுலே அந்த ஆதித்த கிரணங்க ளேழும் மிகப்பெருத்து விளங்கியது; அதனைக்கண்ட புருடோத்த

மன் ஏழு கிரணங்களையும், ஏழு சூரியர்களாகச் சிருட்டித்துக் கீழ் மேலுமாய்ச் சென்று மூன்று லோகங்களையும் எரித்துச் சாம்பலாகும்படி. கட்டளையிட அவ்வாறே ஏழு சூரியர்களுஞ் சென்று வாட்டுகிறபோது புல் பூண்டு முதலான ஓஷதிகள் யாவும் எரிந்து பொரிந்து காய்ந்து சாம்பலாகி எங்கும் பசையென்பது இல்லாமல் ஆமையோடுபோல் கடுமையாக விளங்கும். அதன்பின்பு ஆதிமத்தியாந் தாதிகள் பாதல லோகத்திற்குச் சென்று ஆதிசேடனது சுவாச வாயுவினுலுண்டாகிய காற்றினுல் காலாக்கினி உருத்திர வடிவங் கொண்டு அப் பாதல லோகங்களை யெல்லாம் சுட்டுக் கருக்கிவிட்டுப் பூமிக்கு வந்து பூமியையுங் கொளுத்தி, அங்கே நின்றும் அந்தப் பிரளய காலாக்கினி சுவாலைமிகுந்த ஆக்கிரஷத்துடன் மேலுலகங்களிற் சென்று புவலோக சுவலோகங்களுஞ் சுட்டுக் கொளுத்திக் கொண்டு அங்குத்தானே உலாவிக்கொண்டிருக்கும். இந்தப்படியாக பிரளய காலாக்கினி சுவாலைகளாலே கவியப்பட்டு மூவுலகங்களினு முள்ள சராசர வத்துக்கள் யாவும் நசித்து மூன்றுலகங்களும் பொரி வறுக்கப்பட்டு கறுகறுத்த சட்டியைப்போல விருக்கும்.

மேலும், கேளாய் பார்வதி! புவலோக சுவலோகங்களில் வசிக்கிற மனுவாதி அதிகாரிகள் அந்தப் பிரளய காலாக்கினி சுவாலைகளினாலே அதிகத் தாபமடைந்தவர்களாகிச் சகிக்கமுடியாமல் மகாலோகஞ் சேருவார்கள். அங்கும் பிரளய காலாக்கினி சுவாலைகளுந்துத் தாளாமல் பெருந் தாபமுற்றவர்களாகி அதற்கு மேன்மையான ஜனலோகத்தை அடைவார்கள். அவர்களுக்குள் யாவர் பரப் பிரமத்தை அடையவேண்டி பக்தி செய்தார்களோ அப்படிப்பட்ட உத்தம புருடர்கள் மேலுங் கீழுமாய்ப் பத்துத்தரம் உலாவி உலாவித் தபோலோக சத்தியலோகங்களை அடைந்து முடிவில் பரப் பிரமத்தை அடைந்து நிரதிசயானந்த சுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். ஆதிமத்தியம் அந்தியமென்று சொல்லப் பட்ட மூன்று உலகங்களிலு மிருக்கப்பட்ட மற்ற பிராணிகள் யாவரும் பிரகிருதியில் இலயப்பட்டிருப்பார்கள்.

நைமித்திக பிரளயம்

இந்தப்படியாக உருத்திர உருவம்பெற்ற ஸ்ரீ விஷ்ணுபகவான் சகல சராசரங்களையும் சாம்பலாக்கித் தன் சுவாசத்தினிடமாய் அநேக மேகங்களை உண்டாக்குவார். அந்த மேகக்கூட்டங்கள்

யானைக் கூட்டங்களைப்போல அதிக பயங்கரமான மின்னல் இடிக ளுடன் கூடிப் பிரளயகால மேகங்களாகத் தோன்றி ஆகாயவீதியிற் சென்று விளங்குகின்றன. அவைகளின் வன்னபேதங்கள் பல வுண்டு. அவை யாதெனில், கரு நெய்தல் மலருக்கு நிகராகிய சில மேகங்களும் ஆம்பலைப்போலச் சிலமேகங்களும், கருஞ்சிவப்பு கலந்த சிலமேகங்களும், பொன்னிறமாகிய சில மேகங்களும், கருமை நிற மாகிய சில மேகங்களும், வைடூரியத்திற் கிணையாகிய சில மேகங்க ளும், இந்திர நீலத்தின் நிறமாகிய சில மேகங்களும், சங்கு முல்லைக ளுக்கு இணையாகிய சில மேகங்களும், மைவண்ணமாகிய சில மேகங்களும், தாம்பூலப் பூச்சிகளைப்போல் சில மேகங்களும், கூந்தற் பணியை யொத்த சிலமேகங்களும், பறவையின் சிறகை நிகர்த்த சில மேகங்களும் தோன்றும்.

இந்தப்படியாகப் பற்பல நிறங்களுடன்கூடிய அந்தப் பெரிய மேகங்களின் பருமன் எவ்வளவெனில், சில நீண்டு விசாலம் பொருந்திய பெருத்த நகரங்களை நிகர்த்தும், சில பர்வதங்களைப் போலவும், கனியைப்போலவும், பரியைப்போலவும் உள்ளன. சிறிய பெரிய உருவங்களைப் பெற்ற மேக கூட்டங்களானவை மகமேருவும் அதிரும்படி கர்ச்சித்துக் கொண்டு விண்முழுதும் மறைத்து நின்று பெருந்தாரைகளையும் பொழிந்து முன்னம் நவின்றது போல மூன்று உலகங்களையும்பற்றி யெரிக்கின்ற அந்தப் பிரளய காலாக்கினி யென் னும் பெருந் தீயைத் தணிக்கின்றன. அந்தத் தீ தணிந்த பின்னும் இராப்பகல் ஓயாமல் மழைகளைக்கொண்டு கொட்டுவதைப்போலப் பொழிந்து அப்பெருந் தாரைகளினுலே பூமி முழுவதையும் சலமய மாக்கிப் பின்பு முறையே புவலோகத்தையும் அதற்கு மேலுலகங்க ளையும் அந்தப்படியே சலமயமாகச் செய்யும். இந்தப்படியாக அந்தக் காளமேகங்கள் சராசரங்கள் அனைத்தும் இருள் மூடிய மூன்றுலகத்திலும் இடைவிடாது நூறு வருஷத்துக்கு மேலும் மழை பொழிந்துகொண்டிருக்கு மென்றறிவாய். பார்வதி! நித்திய னுகியும் உத்தமனுகியும் எத்திசையிலும் வியாபித்துப் பரமான்மா வாகியும் விளங்குகின்ற பரப்பிரமத்தினுடைய மகிமையினுலே கல்ப காலாந்தியத்தில் இந்தப்படி யெல்லாம் ஆகின்றன.

பிராகிருதப் பிரளயம்

கேளாய் பார்வதி! இந்த நைமித்திகப் பிரளய சலமானது சத்த இருடிகள் வசிக்கும் உன்னத தானத்தை அளாவி நிற்கின்றதனுல்

மூன்றுலகங்களும் ஏகார்ணவமாய் நிறைந்து சூழ்ந்திருக்கும். அது கால் பரப்பிரம சொரூப லலாடத்தினின்றும் ஒரு காற்றுண்டாகி விடாத மழையைப் பெய்கின்ற அந்தப் பிரளய காலமேகங்களே ஏல்லாம் பஞ்சுபோலப் பறக்கடித்து நாசஞ்செய்துகொண்டு நூறு வருஷம் வரையில் செஞ்சமாருத மென்னும் காற்று வீசிக்கொண்டிருக்கும். பின்பு சர்வசெந்தையும் தன் குட்சிக்குள்வைத்து இரட்சிப்பவனுகியும் யோகீசுவரர்க்கும் வேதங்களுக்கும் நிதனக்க அரிதாகியும் அநாதி புருடனுகியும் இவ்வுலகத்திற்கு ஆதி அந்த மகதாவாவாகியும் விளங்கும் விராட்புருடனைவன் அந்தச் செஞ்சமாருதக் காற்றைப் புசித்துப் பரப்பிரம சொரூபத்துடன் அந்த ஏகார்ணவ சலப் பிரளயத்திலே ஆதிசேடன்மீது சயனித்து யோக நித்திரையிலிருப்பான்.

அப்போது சனலோகத்தில் வசிக்கும் சனகாதி யோகீச்சுவரர்களும் பிரமலோகத்தில் வசிக்கும் முக்கிக்குரிய முமூட்சுக்களும் வாசுதேவனென்னும் திருநாமத்தைத் தியித்துக் கொண்டாடத் திருக்கண் வளர்ந்தருளுவான். இதற்குத்தான் நைமித்திகப் பிரளய மென்னும் திருநாமம். ஏனெனில், ஸ்ரீ விஷ்ணுவானவன் பரப்பிரம சொரூபந் தரித்து அந்தக் காலத்தில் சேடன்மீது சயனிப்பது காரணமாக இருப்பதனல் என்றறிக.

சர்வான்மகனை அந்தச் செகதீசன் எப்போது துயிலொழிந்து எழுந்திருப்பானே அப்போது உலகங்களெல்லாம் அசையும். அந்தப் பகவான் யோக நித்திரையி லிருப்பானுயின் உலகங்கள் யாவும் அந்தகாரஞ் சூழ்ந்து கண் மூடிப்போம். ஆயிரம் சதுர்யுகம் அளவான பிரமதினம் யாதளதோ அவ்வளவு காலமே இரவாகும். இவ்விரவின் அந்திதயத்தில் ஸ்ரீ அச்சுதன் திருக்கண் விழித்துக் கொண்டு பிரமரூபத்துடன் மறுபடியும் உலகத்தை சிருட்டித் தருளுகிறுனென்று முன்னமே உனக்குச் சொல்லியிருக்கிறேனன்றே? இந்தக் கல்பத்தன் அந்திதயத்தில் செய்யும் சங்காரம்தான் அவாந்தரப் பிரளயம். இஃது நைமித்திகப் பிரளயத்தின் உட்பிரிவாகும்.

இனிப் பிராகிருதப்பிரளயத்தின் விவரத்தைச் சொல்லுகிறேன் கவனித்துக் கேட்பாயாக பார்வதி! முன்னம் யான் சொல்லிய படி மழை பெய்யாமல் பஞ்சம் நேரிட்டுப் பசிதாகமாகி நோய் முதலானவைகளினுலே சகல உலகங்களும் பாதகங்களும் நசித்து மெலி

யும்படியாகச் செகதீசனது நினைப்பினாலே பிரளயம்நேரிடப் பிரதமத்தில் சலம் பூமி இவைகளின் சாரமாகிய சத்தைக் கிரகிக்கின்றது; சத்தைக் கிரகித்தவுடனே பூமியானது இலயப்பட்டதாகி நசித்துச் சலமாய்விடுகிறது. அந்தச் சலம் பெருகி அதிவேகமும் அதிக ஓசையுமுள்ளதாகி யாவற்றிலும் பூரணமாய் நிறைந்துகொண்டு அலைகளுள்ள பிரவாகத்துடன் உலகங்களின் அந்திபமளவும் ஓடியுலாவி நிறைந்திருக்கும் அந்தச் சலத்தின் குண்மான சாரத்தைப் பிரகாசம் கிரகிக்க, அந்தச் சலம் இரச தன்மாத்திரையற்றுப் பிரகாசமாகின்றது. இவ்வண்ணம் சலம் அக்கினியாகி மிகுந்த பிரகாசம் பொருந்தினதாய் யாவற்றிலும் நிறைந்து இருக்கிறது. இப்படி காற்புறமும் சுவாலை மயமாய் நிறைந்திருக்கிற அவ்வக்கினியின் குணமாகிற ரூபத்தைக் காற்று கிரகித்துக்கொள்ளுகிறது. ரூப சாரம் நசித்ததனாலே அக்கினியற்று காற்று மிகவும் வீசுகின்றது. இதனாலே எங்கும் ஒளிபற்றுக் காற்றே பேரிரைச்சலுடன் ஆகாயத்தைப்பற்றி வீசிக்கொண்டிருக்க அதன் குணமாகிய சாரத்தை வானம் கிரகித்துக் கொள்ளுகின்றது. பிறகு வாயு நசித்து வானமொன்றே ஆவரணமின்றி நிற்கும். ரூப ரச கந்த சத்தமே இலக்கமுடையனவாய் அவயமில்லாததாய் மிகவும் பெருத்திருக்கிற அந்த வானமானது யாவற்றையும் சூழ்ந்துகொண்டு விளங்கும். இவ்வண்ணம் எட்டுத்திக்கும் சுற்றும் வட்டமாய் அனைத்தையும் கொள்ளுமிடமாய் யாவற்றையுஞ் சூழ்ந்துகொண்டு நின்ற அந்த ஆகாயத்தின் குணமாகிய சாரத்தை பூதாதி கிரகிக்கின்றது. அந்தப் பூதங்களும் இந்திரியங்களும் கூடிப் பூதாதியில் இலயப்படும். அபிமான ரூபமாகிய இந்தப் பூதாதியானது தமஸ்சைப் பிரதானமாகக் கொண்டதனாலே தாம்சமென்று சொல்லப்படும். இந்தப் பூதாதியென்று சொல்லப்பட்ட அகங்காரத்தைப் புத்தியேட்சணமாகக்கொண்ட மகத்துக் கிரகிக்கின்றது. இந்த அண்டத்துக்குள்ளாகப் பூமியும் மகத்தும் முதலெல்லையும் கடையெல்லையுமாய் இருக்கின்றன.

ஓ மதியில் மிகுந்த பார்வதியே! இந்தப்படியே இவ்வண்டத்திற்குப் புறத்திலுள்ள பிரகிருதி முதல் மகத்தீறுகின்ற ஏழு பிரகிருதிகளும் சங்கார காலத்தில் முன்னுரைத்தபடி தத்தமக்குள்ள வத்துக்களிலே தாம் தாம் இலயப்படுகின்றன. அஃதெப்படியெனில், இவ்வுலகத்தை மூடிக்கொண்டிருக்கின்ற அந்த அண்டரூபமான பிரு

தியானது, அதைச் சூழ்ந்திருக்கும் அப்புவிலும், அவ்வப்பு அகங்காரத்திலும், அகங்காரம் தேஜஸிலும், தேஜசு வாயுவிலும், அவ்வாயு ஆகாயத்திலும், அவ்வாகாயம் பிரகிருதியிலும் கரக்கப்படும். அதிகப்படாமலும் குறைவுபடாமலும் மூக்குணங்கள் சமமாகவிருப்பதுதான் பிரகிருதியென்று சொல்லப்படும். அது மூன்றுலகங்களுக்கும் காரணமாக இருப்பதால் பிரதானமும் ஏதுவுமாகி இருக்கின்றது இந்தப்படி பிரகிருதி வியத்த சொரூபமாகியும் அவியத்த சொரூபமாகியு மிருக்கின்றது. ஆகையால் வியத்தம் இலயப்படுகின்றது. எப்போதும் சாந்தகுணத்தையே பொருந்தினவனுகியும் சீலமாகிய சுபாவனுகியும் மரணமில்லாதவனுகியும் சேதனசேதனங்களின் உள்ளும் புறம்புமாய் வசிப்பவனுகியும் விளங்கும் பதுமநாபன் பரமாணுரூபி யாகையினுலே பிரகிருதியிலும் சம்பந்தப்படத் தக்கவனுகியு மிருக்கிற புருடனும் பிரகிருதிபோலப் பரமான்மாவினுடைய அமிசமாக விளங்குகின்றன். பரமான்மா எப்படிப்பட்டவரென்றால், நாமம் ரூபம் பேதம் முதலாகிய குரோதங்களற்று சுபேதனுகி என்றும் அழிவில்லாமலிருப்பதே இயற்கையாக உடையவனுகி எவர்களும் தன்னைப் பத்திபண்ணி யடையவேண்டிய உன்னத பதவிக்குக் காரண கருத்தாவாகியும் பரமானந்த சொரூபனுகியும் சகதீசனுகி, சர்வ சீவான்மாவுக்கும் மேற்பட்டவனுகி விளங்கும் மகாவிஷ்ணு அந்த விஷ்ணுவே பரப்பிரமம். யோகியானவன் அந்த விஷ்ணுவை யடைந்து மறுபடி திரும்பாமல் கலந்திருப்பான். வியத்தாவியத்த சொரூபமான பிரகிருதியும் புருடனென்று சொல்லப்பட்ட சீவனும் இவ்விரண்டும் அந்தப் பரமான்மாவிலேதான் கலந்துவிடும். அந்தப் பரமான்மாவே யாவற்றிற்கும் காரண காரியமான சர்வேசுவரன் அவன் கன்ம காண்டமான வேதத்திலும், பிரமகாண்டமான வேதாந்தத்திலும் விஷ்ணு முதலிய ஆயிர நாமங்களிலே தோத்திரம் பண்ணப்பட்டவனுகி யிருக்கின்றன். பிரவிர்த்தி மார்க்கமென்றும் நிவர்த்தி மார்க்கமென்றும் இருவகையான வைதிக கருமங்களினுலே சகல தேவதைகள் சொரூபியான அந்த விஷ்ணுவே சகலராலும் ஆராதிக்கப்படுகின்றன். அது எப்படியென்றால், இருக்கு எசுர் சாமம் என்கிற வேதங்களாகிய பிரவிர்த்தி மார்க்கங்களிலே எக்கியே சுரனுகியும் அந்த ஸ்ரீ வாசுதேவன் பஜிக்கப்படுகிறன்.

நிவர்த்தி மார்க்கத்திலே ஞானசொரூபியாகியும் ஞானானந்தமயனுகியும் விளங்கும் அந்த விஷ்ணுவே மோட்சங்கொடுக்க வல்லவ

ஞக ஞான எக்கியத்தைக்கொண்டு யோகிகளால் பஜிக்கப்படுகின் ரூன். மேலும், குறுகலென்றும் நீட்சியென்றும் சொல்லப்பட்ட அசித்தும் வாக்குக்கும் மனதுக்கு மெட்டாத சித்தும், அந்த விராட் சொரூபம் யாங்களேயாம். வியத்தமும் புருடனும் முத்தனும் சகலமும் எம்முடைய சொரூபங்களே. அஃதெப்படியெனில்: ஸ்ரீமந் நாராயணனே ரூபமாகி அகில லோகங்களையும் எனது சரீரமாகக் கொண்டு விளங்குவதனலென்றறிவாய். வியத்த அவியத்த சொரூப மான பிரதானமும் புருடனும் ஒடுங்குகிறார்கள். ஆதலால் அவ் வண்ணம் ஒடுங்குவதற்கிடமான எம் விசுவரூபத்திற்கு இரண்டு பதார்த்தகாலமென்று சொல்லியது ஒரு பகலும், வியர்த்தமெல்லாம் பிரகிருதியிலும், அப்பிரகிருதி புருடனிடத்திலும், அந்தப் புருடன் பரமான்மாவிலும் கலந்திருக்கும் காலம் எவ்வளவோ அது இரவா கும். ஓ பார்வதி! அழிவில்லாத நித்தியனான அந்தப் பரமான்மா வுக்குப் பகலென்பதும் இரவென்பதுமில்லை. ஆகிலும் சிருட்டி திதி சங்காரமென்னும் இக்காரணங்களைக்கொண்டு உபசார வழக்கமாக இராப்பகல் உண்டென்று சொல்லப்படுகின்றது. இந்தப்படியாக நடக்கும் பிராகிருத பிரளயத்தின் பிரபாவத்தைச் சொன்னேன். ஆழியில் துயிலும் மாயன் சகோதரியே கேள்! ரூபம் - அரூபம் என்ற பதம் உனக்குத் தெரியுமாதலால், சிருட்டி திதி சங்கார மென்ற ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலின் கார ணத்தைப் பற்றியே வெவ்வேறு ரூபநாமங்கள் பெற்றுமன்றி முடிவில், விராட்டென்பதும் - பிரமமென்பதும் - பரப்பிரம மென்ப தும் யாமேயென்று அறியக்கடவாய். ஒரு காரணத்தைப்பற்றி உனக்குத் தெரிவிப்பதால் பேதமற்று அளவற்று நீண்ட எமது விராட்டுக்கலியில் ஒன்றுகிய காத்தலுடையோனைக் காட்டிப் போதிப்போமாகையால் வேறுவழியில் மனதைநாட்டி வாட்டங் கொள்ளாது நாட்டமாகக் கேட்பாயாக! இனி ஆத்தியந்திகப் பிரள யத்தின் கிரமத்தைச் சொல்லுகிறேன்.

ஆத்தியந்திகப் பிரளயம்

கேளாய் பார்வதி! எத்திசைகளிலுமுள்ள பத்தர்களும் முத் தர்களும் நித்தநித்தம் துதித்தேத்தும் ஞானசத்தியே! நுண்ணறி வுடைய புருடனைவன் ஆத்தியான்மீகம் ஆதிதெய்வீகம் ஆதி

பௌதீகம் என்னும் தாபங்களில் தீவிர மநியுடையவனுபிருந்து மேலாகிய பதவியை அடைவான்.

ஆத்தியான்மீக மென்பது யாதெனில்: முதலில் ஞானம் இரண்டாவது வைராக்கியம், இவ்விரண்டும் காலுக்குரால் விசேடித்து மோட்சமென்னும் ஆத்தியந்திகத்திற் குள்ளாகி இலயத்தை யடைகிறுன். ஆத்யான்மீக தாபமானது தன் ஆன்மாவையும் தேகத்தையும் பற்றி உண்டாகும் துக்கம். அந்தத் துக்கம் சரீரத்தைப்பற்றியதும் மனத்தைப் பற்றியதுமென இரண்டு வகைப்படும்; அதில் சரீரத்தைப் பற்றிய துக்கம் பலவகைப்படும். அவை யாதெனில், தலைவலி - பீனிசம் - சுரம் - சூலை - சோகை - இரத்தபேதி - மகோதரம் - சுவாசம் - குன்மம் - அதிசாரம் - வாந்தி - குட்டம் - கண் வலி - பேதி முதலாகிய 4448 - ரோகங்களேயாம். மனதைப்பற்றிய துக்கத்தைச் சொல்லுகிறேன், கேளாய் பார்வதி! காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், பயம், சோகம், அவமானம் முதலாகிய பலவகை ரோகங்களோடும் உள்ளது அது. ஆதி பௌதீகமாவது: ஜந்துக்களைப்பற்றி உண்டாவது அது யாதெனில், மிருகம், பட்சி, பிரகாசம், சர்ப்பம், மனிதர் முதலியவற்றால் உண்டாவதினாலே அதுவும் அநேகவித மூள்ளது. ஆதி தெய்வீக மென்பது யாதெனில், அது தெய்வத்தா லுண்டாவதே யாம்; அஃதெவ்வண்ணமெனில்: குளிர், காற்று, வெப்பம், மழை, இடிகளென்னும் பலவிதமாகும். இந்தத் தாபங்கள் மூன்றும் கருவினாலும், பிறப்பினாலும், இறப்பினாலும், மூப்பினாலும், நரகத்தினாலும் பிறந்து அநேக மாயிரம் வகைகளாகின்றன; அவைகளை விவரமாகச் சொல்லுகிறேன்.

கேளாய், பார்வதி! ஒரு செந்துவைப்பற்றி யோசித்துப் பார்க்குமிடத்தில் அந்த செந்துவின் தேகம் வெளிப்பார்வைக்கு மட்டும் அழகாகவும், மெல்லியதாகவும், ஒருவகை தோலால் மூடப்பட்டு விளங்கும். அதைப் பார்க்கப் பார்க்க மிகவும் மேன்மையாகக் காணப்படுகின்றது. அந்தத் தேகத்தினுள்ளே இருக்கின்ற துர்க்கந்தமோவெனில், எலும்பு, தசை, நரம்பு, சீழ், இரத்தம், புழுக்கள் நிறைந்த மல மூத்திரங்களால் நிறைந்து வளர்ந்த மூதுகு கழுத்துகளில் எலும்புடையதாக விளங்கும் தாயின் கருப்பையி லிருந்து கொண்டு சிசுவானது அன்னை உண்ணுகிற புளிப்பு, கசப்பு,

துவர்ப்பு, இனிப்பென்னும் அறுசுவை யுணவுகள் தன்மேல்பட அச்சிசு அளவில்லாத வேதனையை அடைவதுந் தவிர தன் தேகத்தை நீட்டவும் மடக்கவுங் கூடாமல் மலமூத்திரங்களாகிய சேற்றிலே கிடந்து சடராக்கினியினாலே தகிக்கப்பட்டு இப்படியும் அப்படியும் அசைவதற்கு இடமில்லாமல் துன்பமேலிட்டு, மூச்சுவிடமாட்டாமல் அறிவுமேலிட்டுக் கடந்த அநேக சென்மங்களை நினைத்து நினைத்து மகாவிசன முற்றுக் கருமத்தினாற் கட்டுண்டிருக்கும். அச்சிசுவைப் பிறப்பிக்கும் நிமித்தம் பிரமதேவன் ஒரு காற்றை ஏவுகின்றான்; அக்காற்றினால் அச்சிசுவின் எலும்புகள் யாவும் கொறுங்கிப்போகும்படி பிடிக்கப்பட்டு, பின்பு மிகுந்த பலமான பிரசவ வாயுவினால் தலை கீழாகத் திருப்பப்பட்டு; வலி வருத்தத்தினால் மெலிவுண்டு தாயின் உதிரத்தைவிட்டு வெளிப்படுகின்றது. அச்சிசு பூமியில் விழுந்த வுடனே வெளிக்காற்றுபட்டு, பெருமூச்சுண்டாகி முன்னிருந்த ஞானத்தை மறந்து, வெளிப்படும்போது முட்களாலே தைக்கப்பட்டதைப்போலும் துர்க்கந்தமான இரணத்திற் கொப்பாகிய யோனித் துவாரத்தி னின்றும் விழுவதாலும் அச்சிசுவுக்கு உண்டாகும் சிரமத்தைச் சொல்லிமுடியாது. இவ் வண்ணமாகப் பெருத்த கஷ்டத்துடன் பிறந்த அச்சிசு சொரிந்து கொள்ளவும் புரளவும் சக்தியில்லாததாய் ஸ்நானபான ஆகாராதிகளைப் பிறருடைய இச்சையின்படி பெறுகின்றது. மேலும் மூத்திராதிகளினாலே அசுத்தமாகிய படுக்கையிற் கிடந்து எறும்பு, கொசுவு முதலியவைகள் கடிக்கினும் அவற்றைத் தடுக்கமாட்டாமலிருக்கின்றது. இப்படியாக அநேக பிறப்பின் துன்பங்களையும் பிறந்தபின் உண்டாகுந் துன்பங்களையும், மற்றுங் கணக்குமிதமில்லாத துன்பங்களையும் அடைகின்றது; பிறகு நாளுக்குநாள் வளர்ந்து யௌவன பருவமடைந்து. அஞ் ஞானமாகிய அந்தகாரத்தில் மூடுண்டு மூடனாகி, நான் எங்கிருந்து வந்தேன்? இந்த சென்மமெடுத்து எனக்கென்ன பயன்? பிறவித் துன்பத்திற்குக் காரணம் யாது? காரணம் அல்லாததெது? எது சொல்லத்தக்கது? எது சொல்லத்தகாதது? எது தருமம்! எது அதருமம்? என்னும் பகுத்தறிவு இல்லாதவனாகி விடுகிறான்.

மனிதன் இப்படி மிருகங்களைப்போல மூழுமூடனாகி உண்பதும், உடுப்பதும், உறங்குவதுமே முக்கியமானதென் றெண்ணி அஞ் ஞானத்தினாலுண்டாகிய அநேக துக்கங்களை அனுபவிக்கின்றான்.

அஞ்ஞானமென்பது யாதெனில், தாமசகுணத்தின் இயற்கையாதலால், அதுவே மனிதர்களைக் கெட்டகாரியங்களிற் பிரவேசிக்கச் செய்து வைதீக கருமங்களை மாற்றுகின்றது; சற்கருமவாசனையின்மையினாலே நரகமுண்டாகின்றது; ஆகையால், அஞ்ஞானிகளுக்கு இகத்திலும் பரத்திலும் துக்கமுண்டாகின்றது. இவ்வண்ணம் எவ்வனங் கடந்து முதுமை சேரிடும்போது, தேக மெலிந்து கூட்டுத்தளர்ந்து பற்களாடி யுதிர்ந்து நிரைகள் சேர்ந்து நரம்புகள் வெளியாகத்தோற்றி அருகிலிருக்கும் வத்துக்களும் காணப்படாமல் கருவிழி ஆழ்ந்து உள்ளேபோய் மூக்கின் துவாரத்திலிருந்து ரோமங்களுந்திர சரீரம் நடுங்கி எலும்புகள் யாவும் வெளியே தோன்றி முதுகெலும்பு வளைந்துபோக, சீரணமாகாததாலே உணவு செவ்வனே செல்லாமல், ஈளை யிருமல் மேலிட்டு நாளுக்கு நாள் செய்கைகள் குறைந்து படுக்கவும் எழுந்திருக்கவும் பெரும் வருத்தமாகி காதும் கேளாமலும் கண்ணும் தெரியாமலும் வாயினின்றும் நீரொழுகத் தவித்துக்கொண்டிருக்கின்றான். இவ்வாறு சகல இந்திரியங்களும் சுவாதீனமற்று மரணகாலம் சமீபித்திருக்கையில், முன்னம் தான் அனுபவித்த சுகங்களை நினைத்து உருகிக்கொண்டு ஒரு வார்த்தையுஞ் சொல்ல சத்தியற்றுச் சுவாசகாச முண்டாவதனாலே தூக்கமின்றி, மிகுந்த ஆயாசமும் வருத்தமும் துக்கமு முடையவனாகி, எழுந்திருக்கவும் உட்கார்ந்திருக்கவும் அயலார் உதவி வேண்டியதால் வேலைக்காரர் மக்கள் மனைவி முதலாக யாவராலும் நிந்திக்கப்பட்டவனாகி, அசுத்தனாகி, உண்ணவும் உலாவவும் மிகுந்த ஆவல்கொண்டவனாகி, ஊழியர் பரிகாசஞ் செய்யவும் பந்துக்கள் வெறுப்படையவும் தன்னுடைய யௌவனானுபவத்தைப் பூர்வசென்மத்தில் அனுபவித்ததைப்போல் நினைத்து நினைத்து மனத்தாபத்துடன் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறான்.

இந்தப்படியாக மூப்புத்தசையில் பல துன்பங்களை அனுபவித்து மரணமடைகிறான்; அந்த மரணத்தில் நேரிடும் துன்பங்களைக் கேளாய் பார்வதி! கால், கை, கழுத்துகள் கட்டுவிடப்பட்டுப் பெரு நடுக்கமுள்ளவனாகி, சித்த சுவாதீனமற்றுச் சற்றுநேரம் அறியவும் சற்றுநேரம் அறிவழிவு முள்ளவனாகி, அசையும் பொருள் அசையாப் பொருள் முதலானவைகளிற் சித்தப்பிரமைகொண்டு இவையெல்லாம் நமக்குப் பின் எப்படியோ வென்று துக்கித்து விடுமாடு

ஆடு மக்கள் பெண்டீர் தனம் தானியம் முதலானவற்றிலே பெரு மமதை யடைந்து, ஏங்கிக் கலங்கினவனுகி இருக்கையின் திடீ ரென்று எமனுடைய மிகக்கொடிய வாள்களே யொத்த சரங்களாகிய பாசம் தோன்றிட அதைக் கண்ட மாத்திரத்தில் கண்கள் சுழலக் கை கால்களே யுதறிக்கொண்டு நாக்கும் உதடும் உலர்ந்து உதான வாயு எழும்பித் துன்பப்படுத்தக் கண்டமடைத்து கண்கள் பஞ்ச டைந்து குரு குருவென செப்ப சத்தமுண்டாகி அதிக தாபமும் பசி யும் தாகமும் கோரிட்டு எமதூதர்களாலே பிடிக்கப்பட்டு வெகு பிரயா சத்துடன் தேகத்தைவிட்டு பிராணவாயு வெளிப்பட உடனே எம தூதர்கள் யாதனு சரீரத்தில் பொருந்தச்செய்து பாவத்துக்குத் தக்கபடி தண்டிக்கப்படுகிறுன். இது நரகத்தில் அனுபவிக்கும் துக்கம். இந்தப்படி நரகத்தில்தான் துக்கமடைகிறுன் என்று யோசிக்கில், சொர்க்கத்திலும் துக்கமுண்டு; அஃதெப்படியெனில், இவன்செய்த புண்ணிய பலனை அனுபவித்துக்கொண்டு நாளுக்கு நாள் புண்ணியம் நசித்து இனி நாம் சொர்க்கானுபவத்தை விட்டு தள்ளப்படப்போகிறுமே யென்ற நினைப்பினுலே பெரும் துக்கத்தை அடைகிறுனதலால் மனிதருக்கு மோட்சமென்கிற தருவின் நிழலல் லாமல் மற்றெதினுலும் சுகமுண்டாவதில்லை; ஆகையால், கருப்பம் சனனம் பாலிய முதலாகியவைகளிலே உண்டாகும் தாபம் மூன் றுக்கும் அவிஷ்தம் யாதென்றுல், மற்றெந்தச் சுகத்திலும் இன்ப முண்டாகாதிருக்கும்படி ஞானநேத்திரத்தினுற் சேவிக்க சுகாநந்தத் தைத் தருவதாகியும், துக்க ஏது வொன்றுமில்லாதாகியும், என்றும் சனன மரணமில்லாத நித்திய பிராப்தியை அளிப்பதாகியு முள்ள எமது பதவியேயாம்; ஆகையால், தெளிவுடைய மனிதர்கள் துற் குணங்க ளொன்றுமில்லாமல் சகல நற்குணங்களும் பொருந்திய எமது பதவியை அடையும் பொருட்டாகிய தியானித்திலேயே சதா காலங் கழிக்கவேண்டும். தியானமென்பது, சருகாதிகளைப் புசித் தும் மலிவளங்களிலிருந்தும் அட்டாங்க யோகமென்றும் யோகாதி கருமமென்றும், யாகாதிக் கிரமமென்றும், உலகம் பிரமிக்கும் கலக மல்ல. மனமென்னும் ஆலயத்தில் சிவமென்னும் சிலாசாதனம் செய்து இல்லறத்திலிருந்து எல்லாம் அனுபவிப்பதே உயர்ந்த தவ மாகும்; பாவமென்பதற்குப் பயந்து சிவமென்பதை நினைக்க வேண்டும். இதுதான் ஆத்தியந்திகப் பிரளயம்.

பிரபஞ்ச அளவைப்பற்றி ஸ்ரீ சரவணப் பெருமாளைய ரவர்கள் கருத்து

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபராகிய கடவுள் தமது இச்சாரூபமாகிய மாயையினாலே மகத்தத்துவ முதலிய தத்துவங்களைப் படைத்துத் தாம் இரணியகருப்பராகி அந்தத் தத்துவங்களிற் பிரவேசித்து, அவற்றிற்குத் தொழிலையுண்டாக்கி, அவரும் பொன்மயமாகிய வாயில்லாத குடத்தைப்போல உருண்டையாக விருக்கின்ற பிரமாண்டத்தை யுண்டாக்கி, அவ்வண்டத்தினுட் படைத்தற்காக நான்முகனை உண்டாக்கி வைத்தார். அந்த நான்முகனவன் மண்முதலாகிய தத்துவங்களாலே பூலோகத்தையும் கிரக சக்கரத்தையும் உண்டாக்கினன். அந்தப் பூகோளமானது மேற் சொல்லிய பிரமாண்டத்தின் மையத்திலே தருவரிருவருக்கு நடுவிலே ஆதாரமில்லாமல் நிலையாக எலுமிச்சம் பழம்போல உருண்டையாக இரண்டு காந்தக்கல்லுக்கு நடுவே வைத்த இரும்பு உருண்டையைப்போல அசைவில்லா திருக்கின்றது.

சிலர் இந்தப் பூமியானது கூர்மாதிகளின்மேல் அண்டச்சுவர் வரைக்கும் பரப்பாகவிருக்கின்ற தென்பர். அது தகுதியன்று கூர்மாதிகளை ஆதாரமென்றால் அக்கூர்மாதிகளுக் காதாரஞ் சொல்லுதற்கு உடன்படல்வேண்டும். இவ்விதமாக ஆதாரஞ் சொல்லிக் கொண்டு வருகையில் முடிவின்மை அல்லது அனவஸ்தை யென்னுங் குற்றம் விளையும். ஆகையாலே, கூர்மாதிகளை ஆதாரஞ் சொல்லக் கூடாது. இதுவல்லாமலும், இப்பூமி அண்டச்சுவர் வரைக்கும் பரப்பாக விருக்கின்ற தென்றால், பூமிக்கும் அண்டச்சுவருக்கும் இடையிலே கிரக நட்சத்திரங்களுடைய சஞ்சரிப்புண்டாக மாட்டாது. அப்படிச் சஞ்சரிப்பில்லாமற் பகலிரவுகள் உண்டாதலில்லை. ஆதலால் பூமி பரப்பாகவிருக்கின்றதென்று சொல்லக்கூடாது. அப்படியன்று, பரப்பாகவிருக்கின்ற இப் பூமியினடுவே மேருமலை யிருக்கின்றது. அதைக் கிரக நட்சத்திரங்கள் சுற்றிக்கொண்டு வருகின்றன. ஆகையால் அந்த மேருவின் சாயையினாலே பகலிரவுகளுண்டாகுமென்றால், சூரியன் மார்கழி மாதமுடிவில் அக்கினி மூலையில் உதித்து நிருதி மூலையில் மறைகிறதாகக் காணப்படுகின்றான். அதனால் மேருவின் சாயையினாலே பகலிரவுகளுண்டாகலா மென்று சொல்லக்கூடாது. அவ்விடத்துத் தாமரைப் பொகுட்டைபோல

மேலே விரிந்து விசாலமாகிய மேருசிகர மிருக்கின்றது. அதனைற் பகலிரவுகளுண்டா மென்றால், அந்த மார்கழி முடிவிலே பகலினு மிர்வு மூன்றத்தினை யதிகமாக உண்டாயிருக்கவேண்டும். ஆதலால் மேரு மேலே விரிந்து அவ்விடத்திருக்கின்றதென்று சொல்லக் கூடாது. இதுவல்லாமலும், உதயாத்த மயங்களில் சூரியபிம்பம் வடக்கிலே குறைபடாமற் கீழே குறைவாகத் தோன்றுகின்றதினு லும், கிரணகாலத்தில் பூமியினது சாயை சந்திர விம்பத்திலே வட்டமாகத் தோன்றுகின்றதினுலும், சமுத்திரத்தில் வருகின்ற கப்பலினுனி முதற்கொண்டு வரவர அடிவரைக்குந் தோன்றுகின்ற தினுலும், இலங்கையிலிருந்து சுமேருசமீபத்தில் வடக்கு நோக் கிச் செல்கின்றவருக்குத் துருவன் போகப்போக உயரமாகக் காணப் படுகின்றதினுலும், சுமேருவிலிருந்து இலங்கைக்கு வருகின்றவர் கட்குத் துருவன் வரவரக் கீழாகக் காணப்படுகின்றதினுலும், பூமி பரப்பாக விருக்கவில்லை உருண்டையாய் நிராதாரமாகவே இருக் கின்றது.

இன்னுஞ் சிலர் பூமியானது தேருருளையைப்போலச் சுழன்று கொண்டு ஒரு வருடத்திற் கொருதரஞ் சூரியனைச் சுற்றிக்கொண்டு வருகின்றது. அதனலே பகலிரவுகள் இருதுகள் முதலாகிய விவ காரங்களுண்டாகின்றன வென்பர். பூமி தேருருளையைப்போலச் சுழல்கின்ற தென்றால் கிரகங்கள் ராசி நட்சத்திரங்களோடு கூடிக் காணப்படுதலாலே கிரகக்கதி பிரத்தியட்சமாகி யிருத்தலாலும் அதனைற் பகலிரவுகளின் விபாகங்கள் முதலிய விவகாரங்களுண் டாதலாலும், அனுபவித்திற் கொவ்வாத பூமி சுற்றுதலை சொல்லுத லாற் பயன்யாது? பூமி வருடத்திற் கொருதரஞ் சூரியனைச் சுற் றிக்கொண்டு வருகின்றதென்றால் இலங்கையிலிருந்து பார்க்கின்ற வர்களுக்குத் துருவரிருவரும் ஒருகாலுக்கொருகால் சற்றுச் சற்றுச் சாய்வாகக் காணப்படல் வேண்டும். அப்படி காணப்படாமல் எப் போதும் ஒரு தன்மையாகவே காணப்படுகின்றபடியால் பூமி சூரிய னைச் சுற்றுகின்ற தென்று சொல்லக்கூடாது.

பூமியினளவு

இத்தன்மையாகிய பூமி ஐயாயிரத் தறுபது யோசனை தூரமா கிய சுற்றளவை யுடையது. இதனைப் பெரியோர்க ளேம்பதுகோடி யோசனை யளவாகச் சொல்லியிருக்கின்றார்களே யென்றால், முன்

பூமியாண்ட வரசர்கள் செல்வச் செருக்கினுலே தத்துவ விசாரணை யில்லாதவர்களாக விருக்கையால், அவர்களுக்கு வியசனமும் வெறுப்பு முண்டாதற் பொருட்டாக ஐயாயிரத்தறுபது யோசனைப் பிரமாண மாகிய பூமியை ஐம்பதுகோடி யோசனையென்று சொல்லினர்கள். அன்றியுஞ் சில சித்தாந்தங்களில் இவ்வளவிற்குக் குறைவாகச் சொல்லியிருக்கின்றதே யென்னில், அளவு கோல்களின் பெருமை சிறுமையால் அப்படிச் சொல்லப்பட்டதன்றி அனைத்தும் ஒக்கு மெனக் கொள்க.

மேருவின் சொரூபம்

இப்படிப்பட்ட பூமியினடுவே நுழைந்து மேருமலை தெற்கு வடக்குகளிற் காணப்பட்டு எலுமிச்சம்பழ நடுவிற் கோக்கப்பட்டு இருபுறத்தினும் தோன்றுகின்ற நாராசம்போல் இருக்கின்றது. தென்புறத்திற் காணப்பட்ட மேருவை வடவாமுகமென்றும் வட புறத்திற் காணப்பட்ட மேருவைச் சுமேருவென்றுஞ் சொல்லுவர். அச் சுமேருவின்புறம் தேவபாகமென்றும், வடவாமுகத்தின் புறம் அசுரபாகமென்றுஞ் சொல்லப்படும். அயன் அரி அரனென்னுந் திரிமூர்த்திகளுக்கு மூன்று பட்டணங்க ளிருக்கின்றன. அதன் கீழிலே திக்குப்பாலக ரெண்மர்களுக்கு நகரங்களுண்டு.

சமுத்திர நிலை

இப்படி நாராசத்திற் கோத்திருக்கப்பட்ட எலுமிச்சம்பழம் போல மேருவைச் சுற்றிக்கொண்டிருக்கின்ற பூமியுருண்டையின் மேலே இலவண சமுத்திரஞ் சுற்றிக்கொண்டிருக்கின்றது. இச் சமுத்திரந் தரையிலும் அதிகமாகவிருக்கின்றது. அதன் இடைகளில் அங்கங்கே சிறு பூமிகளெழும்பிச் சிறு தீவுகளாகப் பல விருக்கின்றன.

சம்புத்தீப நிலை

இப்படி யிருக்கின்ற சமுத்திரத்திற்கு வடக்காகிய பூமி கண்ட முழுதுஞ் சம்புத்தீபமாகும். இந்தச் சம்புத்தீபம் இரண்டாயிரத் திருநூற் றறுபது யோசனை பிரமாண முள்ளதாகும்.

நவ வருடம்

இச்சம்புத்தீபத்தில் தென்கடற்கரை முதற்கொண்டு வட கடற்கரை யளவும் பாரதவருடவருடம், கிம்புருடம், அரிவருடம், இளாவிருதவருடம், அரமியகவருடம், ஐரண்வதவருடம், குருவரு

டம் என்றேழு வருடங்களும், இளாவிருத வருடத்திற்குக் கிழக்கு மேற்காகிய கடற்கரைகளிலே பத்திராசுவ வருடமும், கேதுமால வருடமும் என இரண்டு வருடமுஞ்சேர்ந் தொன்பது வருடங்களிருக்கின்றன.

வருட மலைகள்

இவ்வொன்பது வருடங்களுக்கு விபாகங்களேற்படுத்திக் கொண்டு எல்லைக்கரைகளேபோல இமயம், ஏமகூடம், நிடதம், நீலம், சுவேதம், சிருங்கி என்று ஆறு மலைகள் கிழக்கு மேற்குச் சமுத்திரங்களை யளாவி யிருக்கின்றன. இளாவிருத வருடத்திற்குக் கிழக்கு மேற்குகளிலே மாலியவந்தம் கந்தமாதனம் என்றிரண்டு மலைகள் நிடதமலை நீலமலைகளை யளாவிக்கொண் டிருக்கின்றன.

வருடங்களி னளவு

இப்படிப்பட்ட வருடங்களிற் பாரத குருவருடங்கள் முந்நூறு முந்நூறு யோசனைகளளவு தெற்கு வடக்கு விரிவுடையனவாம். கிம்புருட, அரி, அரம்மிபக, ஐரண்வத வருடங்கள் தனித்தனி நூற்றைம்பது யோசனையளவு தெற்கு வடக்கு விரிவுடையனவாம். உருமாலை குட்டையைப்போலச் சதுரமாகவிருக்கின்ற இளாவிருத வருடம் மேருவி னடியோடுகூடி எழுநூற்றறுபது யோசனையளவு விரிவுடையதாம். பத்திராசுவ கேதுமால வருடங்கள் கடற்கரைகளில் முந்நூறு முந்நூறு யோசனையளவு தெற்கு வடக்கு விரிவும் மாலிய வந்தங் கந்தமான மலைகளின் சமீபங்களில் எழுநூறு எழுநூறு யோசனையளவு தெற்கு வடக்கு விரிவுடையனவாம்.

இவ்வருடங்களிற் சில பூமிகள் பிற்காலத்துக் கடல்கொள்ளப் பட்டன. ஆதலால் இவ்வளவுகளிற் சில இக்காலத்துப் பிறழ்ந் திருக்கின்றன வென்றறிக.

யவகோடி முதலாகிய பட்டண நிலை

இனி முன் சொல்லப்பட்ட சமுத்திரத்தி னடுவே கிழக்கு முதலாகிய நான்கு திசைகளிலுமுள்ள நான்கு தீபங்களிலே தேவராலுண்டாக்கப்பட்டனவாகிய யவகோடி, இலங்கை, உரோமகம், சித்தபுரி என்று நான்கு பட்டணங்களிருக்கின்றன; அவைகள் சுமேரு வடவாமுகமென்கிற இரண்டு மேருக்களுக்குப் பூமியின் சுற்றளவிற் காற்பங்காகிய ஆயிரத்தி நூற்றறுபத்தைந்து யோசனதூரங்களிலிருக்கின்றன. அன்றியும் அப்பட்டணங்கள் ஒன்றற்

கொன்று பூமியின் சுற்றளவிற் காற்பங்குதூர முள்ளவைகளாயிருக்கின்றன. அவற்றுள் கிழக்கே பத்திராசுவ வருஷத்திற்கு நேராக யவகோடி பட்டணமிருக்கின்றது. மேற்கே கேதுமால வருடத்திற்கு நேராகச் சித்தபுரி யிருக்கின்றது.

பிலட்சாதி தீபங்களும் இட்சு முதலாகிய சமுத்திரங்களும்

இலங்கை முதலாகிய நான்கு பட்டணங்களுக்குந் தெற்கே ஆறு தீபங்களிருக்கின்றன. யவகோடி பட்டணத்திற்குக் கிழக்கோடு சேர்ந்த தென்றிசையிலே பிலட்சத்தீப மிருக்கின்றது. அதற்கு மேற்கே யிருக்கின்ற சமுத்திரத்திற்கு இட்சு சமுத்திரமென்று பெயர். அதற்கு மேற்கே சான்மலித் தீபமிருக்கின்றது. அதன் மேற்கே யிருக்கின்ற சமுத்திரத்திற்குச் சுரா சமுத்திரமென்று பெயர். அதற்கு மேற்கே இலங்கா பட்டணத்திற்கு மேற்கோடு கூடிய தென்றிசையிற் குசத்தீப மிருக்கின்றது. அதன் மேற்கே யிருக்கின்ற சமுத்திரத்திற்குச் சாப்பி சமுத்திரமென்று பெயர். அதற்கு மேற்கே கிரவுஞ்சத் தீப மிருக்கின்றது. அதன் மேற்கே உரோமக பட்டணத்திற்கு மேற்கோடு சேர்ந்த தென்றிசையிலே யிருக்கின்ற சமுத்திரத்திற்கு ததிசமுத்திர மென்று பெயர். அதற்கு மேற்கே சாபத்தீபமிருக்கின்றது. அதன் மேற்கே யிருக்கின்ற சமுத்திரத்திற்கு கூீரசமுத்திரமென்று பெயர். அதற்கு மேற்கே சித்தபுரிக்கு மேற்கோடு சேர்ந்த தென்றிசையிலே புட்கர தீப மிருக்கின்றது. அதன்மேற்கே யிருக்கின்ற சமுத்திரத்திற்குச் சுத்தோதக சமுத்திரமென்று பெயர். இந்தத் தீபங்களுஞ் சமுத்திரங்களு மொவ்வொன்று நாற்பது நாற்பதுயோசனை யகலமும் நானூற்றிருபத்தொரு நானூற்றிருபத்தொரு யோசனை நீளமு முடையவைகளா யிருக்கின்றன. இவைகளிற் சில பூமிகள் கடல் கொள்ளப்பட்டமையால் இக்காலத்துப் பிறழ்ந்திருக்குமென்று அறிக.

பூமியின் விபாவங்கள்

இப்படி யேழு தீபங்களேழு சமுத்திரங்கள் சுமேரு வடவாமுக மென்னு மிவைகளோடு கூடி உருண்டை வடிவமாக விருக்கின்ற பூமி யெப்படிப் பார்த்தாலும் முந்நூற்றறுபது பாகங்களாகப் பகுக்கப் பட்டிருக்கின்றது. அஃதெப்படி யென்றால், இலங்கையிலிருந்து நேராக உரோமகம், சித்தபுரி, யவகோடியென்னும் பட்ட

ணங்களுக்குமேற் பூமியைச் சுற்றிக்கொண்டு இலங்கைக்கு வருகின்றவழி மேகலா ரேகையென்றும், இலங்கையிலிருந்து நேராகச் சுமேரு, சித்தபுரி, வடவாமுக மென்னும் இவைகளுக்குமேற் பூமியைச் சுற்றிக்கொண்டு இலங்கைக்கு வருகின்ற வழி மத்திய ரேகை யென்றும், சுமேருவிலிருந்து நேராக யவகோடி, வடவாமுகம் ரோமகமென்னு மிவைகளுக்கு மேற்பூமியைச் சுற்றிக்கொண்டு சுமேருவுக்கு வருகின்றவழி விர்த்தரேகை யென்றும் பெயர் பெறும். அவற்றுள் விர்த்த ரேகைக்கு மேற்பங்கு முழுதும் ஊர்த்துவ கபாலமென்னும் கீழ்ப்பங்கு முழுதும் அதக்கபால மென்றும் பெயர் பெறும்.

மூன் சொல்லிய மேகலா ரேகைக்குக் குறுக்காகச் சுமேரு வடவாமுகங்களை அண்டும்படியாகப் பூகோள மானத்திற்கும் மூன்நூற்றறுபது தீர்க்கரேகைகளும், மத்தியரேகைக்குக் குறுக்காகச் சுமேரு முதற்கொண்டு வடவாமுகம் வரைக்கும் நூற்றெழுபத் தொன்பது வலயரேகைகளும், உண்டாக்க மூன்சொல்லப்பட்ட ஊர்த்துவ கபாலத்திலே கிழக்கு மேற்குகளில் நூற்றெண்பது பாகங்களும், தெற்கு வடக்குகளில் நூற்றெண்பது பாகங்களுமாகின்றன. இவ்வாறே அதக்கபாலத்திலுமாகின்றன. அதெப்படி யென்றால், ஊர்த்துவ கபாலத்திலே இலங்கைக்கு யவகோடி தொண்ணூறு பாகமும், ரோமகபுரந் தொண்ணூறு பாகமும் சுமேரு தொண்ணூறு பாகமும், வடவாமுகந் தொண்ணூறு பாகமும் ஆகின்றன. இப்படியே அதக்கபாலத்திலே சித்தபுரிக்கு யவகோடி தொண்ணூறு பாகமும் ரோமகபுரந் தொண்ணூறு பாகமும், சுமேரு தொண்ணூறு பாகமும், வடவாமுகந் தொண்ணூறு பாகமும் ஆகின்றன.

பூமியிலெங்கே யிருக்கின்றவர்களுக்கும் மேலே யிருக்கின்றே மென்னும் அறிவு

இப்படிப் பகுக்கப்பட்டிருக்கின்ற விதம்போல மனிதர் வாசஞ் செய்வார். அந்த மனிதரெல்லாந் தாங்கள் பூமிக்குமேலே மேலெடுத்த தலையுடையேமாகி யிருக்கின்றேமென்றும் தமக்குத் தொண்ணூறு பாகத்திலிருக்கின்றவரைச் சாய்வாகிய தலையையுடையவரா யிருக்கின்றாரென்றும், தமக்கு நூற்றெண்பது பாகத்திலிருக்கின்றவரைக் கீழ்நோக்கிய தலையையுடையவரா யிருக்கின்றாரென்றும் நினைப்பார்.

அதெப்படி யென்றால், இலங்கையிலிருக்கின்றவர் தாந்தலே மேலாகவும் கால் கீழாகவு மிருக்கின்றே மென்றும் தமக்குத் தொண்ணூறு பாகத்திலிருக்கின்ற யவகோடி, உரோமம், சுமேரு, வடவா முகங்களி லிருக்கின்றவர் குறுக்காகிய தலையை யுடையவராகவும் நூற்றெண்பது பாகத்திலிருக்கின்ற சித்தபுரியிலுள்ளவர் தலைகீழாக விருக்கின்றே ரென்றும் நினைப்பார். இவ்விதமாகவே உரோமக புரத்தி லிருக்கின்றவர் தாந்தலை மேலாகவுங் கால் கீழாகமிருக் கின்றே மென்றும் தமக்குத் தொண்ணூறு பாகத்திலிருக்கின்ற இலங்கை சித்தபுரி சுமேரு வடவா முகங்களி லிருக்கின்றவர் குறுக் காகிய தலையை யுடையவராகவும் இருக்கின்றாரென் றெண்ணிக் கொள்வார். இப்படியே சித்தபுரியிலிருக்கின்றவர் தம்மைத் தலைமே லுங் கால் கீழுமாக விருக்கின்றவராகவும் ரோமகம், யவகோடி, சுமேரு, வடவாமுக வாசர்களைக் குறுக்காகிய தலையை யுடையவராக வும் இலங்கையி லிருக்கின்றவரைத் தலைகீழாக விருக்கின்றவராகவும் நினைப்பார். இந்தப் பிரகாரமே யவகோடியி லிருக்கின்றவர் தாம் மேலாகிய தலையை யுடையவராகவும் சித்தபுரி, இலங்கை, சுமேரு, வடவாமுக வாசர்களைக் குறுக்காகிய தலையையுடையவராகவும் ரோமகபுரத்தி லிருக்கின்றவரைத் தலைகீழாக விருக்கின்றவராகவும் நினைப்பார். சுமேரு வாசர்கள் தாந்தலை மேலாக நிற்கின்றவராக வும், யவகோடி, இலங்கை, ரோமகம், சித்தபுரி வாசர்களைக் குறுக் காகிய தலையை யுடையவராக எண்ணுவார்கள். ஒழிந்தவர்களு மிப்படியே தாம் தலைமேலாக நிற்கின்றவராகவும், தமக்குத் தொண் ணூறு பாகத்தி லிருக்கின்றவரைக் குறுக்காகிய தலையை யுடையவ ராகவும், நூற்றெண்பது பாகத்தி லிருக்கின்றவராகவும் எண்ணுவார் கள். ஆகையால் இந்தப் பூகோளத்திலே எங்கே யிருக்கின்றவரும் மேலே ஊர்த்துவசிர முடையவர்களா யிருக்கிறதாகவே எண்ணு வார்கள். ஆகாசத்திலிருக்கின்ற இந்தப் பூகோளத்தி லெங்கே யிருக்கின்றவர்க்கும் பூமியிலே காலும் ஆகாசத்திலே தலையு மிருக் கின்றமையாலும் பூமி மறைப்பாகையா லொருபக்கத்தி லிருக்கின்ற ஆகாசமே காணப்படுகையாலும் இந்த விடயத்திலே சந்தேகிக்க வேண்டுவதில்லை யென்றறிக.

பசக்கீரபடலம்

இவ்விதமாகிய பூலோகத்தி னடுவிலிருக்கின்ற மேகலா ரேகைக்கு நேர்மேலாக ஆகாசத்திலே இரிசைச் சுற்றிக்கொண்டு

வண்டிச் சக்கரம் சுழல்வதுபோலப் பூகோளத்தைச் சுற்றிக்கொண்டு பசக்கிரஞ் சுழலுகின்றது. இது சந்திராதி சோதி கணங்களுக்கு ஆதாரமா யிருக்கையாலே சோதிச் சக்கரமென்றும், நட்சத்திர ரூபமா யிருக்கையாலே பசக்கிரமென்றும், மேடாதி ராசிகளோடு யிருக்கையாலே இராசி சக்கரமென்றும், காலத்தைத் தெரிவிக்கை யாலே காலசக்கிரமென்றும், சிமூசுமார சக்கரமென்றுஞ் சொல்லப் படும்.

கிரகநட்சத்திர நிலை

இந்தச் சக்கிரத்தில் அடியிலிருந்து மேல்வரைக்குஞ் சந்திர னும் புதனும் சுக்கிரனும் சூரியனும் அங்காரகனும் குருவும் இராகு வும் சனியும் நட்சத்திரங்களும் முறையாக விருக்கின்றன.

கிரகபூமி யந்திரம்

இந்தச் சக்கரத்திலே பூமிக்கு எவ்வள வெவ்வளவு தூரத்தில் எந்த எந்தக் கிரக மிருக்கின்றதென்றால், சந்திரன் ஐயாயிரத் தெழு நூற்றெழுபத்தேழு யோசனை தூரத்தி லிருக்கின்றது. புதன் சுக்கி ரன் சூரியன் மூன்றுஞ் சற்றேறக்குறைய ஆறுலக்ஷத் தெண்பத் தெண்ணாயிரத் தறுநூற்றிருபத்தேழு யோசனை தூரத்திலிருக்கின் றன. அங்காரகன் பன்னிரண்டு லட்சத்துத் தொண்ணூற்றையா யிரத்துத் தொளாயிரத்துப் பதினெரு யோசனை தூரத்திலிருக்கின் றது. குரு எண்பத்தொரு லட்சத் நிருபத்தாறாயிரத் தெழுநூற்று நாற்பத்தமூன்று யோசனை தூரத்திலிருக்கின்றது. இராகு ஒரு கோடி யிருபத்தெட்டு லட்சத் நிருபத்தெண்ணாயிரத் தெழுநூற் றெழுபத்தொன்பது யோசனை தூரத்திலிருக்கின்றது. சனி இரண்டு கோடி முப்பத்தொரு லட்சத்துத் தொண்ணூற் றேழாயிரத்து முந் நூறு யோசனை தூரத்திலிருக்கின்றது. நட்சத்திரங்கள் நான்கு கோடி பதின்மூன்று லட்சத் தறுபத்துநாலாயிரத் தெண்ணூற்று நாற்பத்தாறு யோசனை தூரத்திலிருக்கின்றது.

கிரகாதி கட்சிகள்

இப்படி யிருக்கின்ற சந்திராதி கிரகங்களுக்கும், நட்சத்திரங் களுக்கும் ஆதாரங்களாகி அந்த அந்தக் கிரக நாமங்களே யுடையன வாகி வலயரூபமாயுள்ள வொன்பது கட்சிகளிருக்கின்றன. அவற் றோடு கூடிப் பூகோளத்தைச் சுற்றித் திரிந்துகொண்டிருக்கின்ற பசக்கிரமானது ஒரு தேவாலயத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்ற

பிரகாரக் கூட்டத்தைப்போலத் தோன்றும். அப்படிப்பட்ட கட்சிகளிலே முன்னே சந்திரகட்சி யிருக்கின்றது. அதன்மேலே புதக் கட்சி யிருக்கின்றது. அதன்மேலே சுக்கிரகட்சி யிருக்கின்றது. அதன்மேலே சூரியகட்சி யிருக்கின்றது. அதன்மேலே அங்காரக கட்சி யிருக்கின்றது. அதன்மேலே குருகட்சி யிருக்கின்றது. அதன் மேலே இராகுகட்சி யிருக்கின்றது. அதன்மேலே சனிகட்சியிருக்கின்றது. அதன்மேலே நட்சத்திரகட்சி யிருக்கின்றது.

கட்சியளவு

அப்படிப்பட்ட கட்சிகளிலே கீழ்கீழாகிய கட்சிகளிலும் மேல் மேலாகிய கட்சிகள் பெரியனவாயிருக்கும். அதெப்படியென்றால், முன்னேயிருக்கின்ற சந்திரகட்சிகள் மூன்றுலட்சத் திருபத்தி நாலாயிரம் யோசனை யளவுடையதாகும். அதன்மேலிருக்கின்ற புத சுக்கிர சூரியகட்சிகள் சற்றேறக்குறைய நாற்பத்துமூன்று லட்சத்து மூப்பத்தோராயிரத் தைந்நூறு யோசனை யளவுடையனவாயிருக்கும். அதன்மேலிருக்கின்ற அங்காரகக்கட்சி எண்பத்தொரு லட்சத்து நாற்பத்தாறுயிரத்துத் தொளாயிரத்தொன்பது யோசனை யளவுடையதாகும். அதன்மேலிருக்கின்ற குருகட்சி ஐந்து கோடி பதின்மூன்று லட்சத் தெழுநூற் றறுபத்துநாலு யோசனையளவுடைத்தாயிருக்கும். அதன்மேலிருக்கின்ற இராகுகட்சி எண்பது கோடி ஐம்பதுலட்சத் தெழுபத்தீராயிரத் தெண்ணூற்றறுபத்துநாலு யோசனை யளவுடைத்தா யிருக்கும். அதன்மே லிருக்கின்ற சனிகட்சி பன்னிரண்டு கோடி யெழுபத்தாறுலட்சத் தறுபத்தெண்ணூயிரத் திருநூற்றைம்பத்தைந்து யோசனை யளவுடைத்தா யிருக்கும். அதன்மேலிருக்கின்ற நட்சத்திரகட்சி இருபத்தைந்து கோடி தொண்ணூற்றெட்டு லட்சத் தொன்பதினாயிரத்துப் பன்னிரண்டு யோசனை யளவுடைத்தாயிருக்கும்.

கட்சியின் விபாகமும் கலையும்

இப்படிப்பட்ட அளவோடு கூடியிருக்கின்ற கட்சிகளெல்லாம் மூன்நூற்றறுபது பாகங்களாகவும், இருபத்தோராயிரத் தறுநூறு கலைகளாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பாகங்களும் அந்தக் கலைகளும் அந்த அந்தக் கட்சிகளுடைய பெருமை சிறுமைகளுக்குத் தகுதியாகப் பெரியனவும் சிறியனவுமாயிருக்கும். அஃதெப்படி யென்றால், சந்திரகட்சியிலுள்ள பாகங்களுங் கலைகளும்

மற்றக்கட்சிகளின் பாகங்களிலும் கலைகளிலுங் குறைவாக விருக்கும், கட்சத்திர கட்சியிலிருக்கிற பாகங்களுங் கலைகளும் மற்றக் கட்சிகளின் பாகங்களிலுங் கலைகளிலும் அதிகங்களாக விருக்கும். இப்படியே யொழிந்த கட்சிகளின் பாகங்களுங் கலைகளுந் தமக்குக் கிழிருக்கின்ற கட்சிகளின் பாக கலைகளில் பெரியனவாகவுந் தமக்கு மேலிருக்கின்ற கட்சிகளின் பாக கலைகளில் சிறியனவாகவுமிருக்கும்.

கிராந்தி மார்க்கம்

இவ்விதங்களாகிய கட்சிக ளெல்லாவற்றிலும் மேகலா ரேகைக்கு நேராகிய நடுவிடத்திலே விசுவன்மண்டல மென்கிற ஒவ்வொரு வழியிருக்கும். அவ்வழி ஓரிடமுதற் கொண்டதற்கு வடக்கே யிருப்பது நாலுபாகம் வரைக்கும் வளைவாகப்போய் அங்கிருந்து திரும்பி வளைவாக வந்து விசுவமண்டலத்தைச் சேர்ந்து அங்கிருந்து முன்சொன்னபடியே அந்த விசுவன் மண்டலத்துக்குத் தெற்கே யிருபத்துநாலு பாகம்வரைக்கும் போய்த்திரும்பி முன் ரைம்பித்த விடத்திலே சேரும்படியாகப் பாம்பு ரூபமாக ஒவ்வொரு கிராந்தி மார்க்கம் அல்லது நடைவழி யிருக்கின்றது.

பசக்கிர நிலை

இவ்விதங்களாகிய அனேக கட்சிகளோடு கூடியுங் கரசரணுகிக ளோடு கூடியிருக்கின்ற சரீரமானது அவற்றின் வேறுகாத விதமாக அந்தக்கட்சிகளின் வேறுகாத பசக்கிரமானது முன்சொல்லப்பட்ட விருத்தரேகை மத்தியரேகைக்கு நேராக மேலிடத்துச் செய்யப் பட்டிருக்கின்ற வலயரூபங்களாகிய இரண்டாதார கட்சிகளாலே இறுகக் கட்டப்பட்டிருக்கின்றது.

துருவ நிலை

அவ்வாதார கட்சிகளிரண்டு மொன்றோடொன்று கலந்திருக் கின்ற இடங்கள் சுவத்திகங்களென்று சொல்லப்படும். அப்படிப் பட்ட சுவத்திகங்கள் சுமேரு வடவா முகங்களுக்கு நேராக விருக் கும். சுமேருவுக்கு நேராக இருப்பது வட சுவத்திகமென்றும் வடவாமுகத்திற்கு நேராக இருப்பது தென்சுவத்திக மென்றும் பெயர் பெறும். இரண்டு சுவத்திகங்களிலு மிருக்கின்ற இரண்டாணி களிலும் இரண்டு துருவரிருக்கிறார்கள். இந்தத் துருவர்கள் சுமேரு வடவாமுகங்களுக்கு நேராக இருக்கின்றார்கள்.

பசக்ரச் சுழற்சிக்குக் காரணம்

பிரமாண்டத்தில் வியாபித்த சரீரமுடையதா யிருக்கின்ற சிமுசுமார மூர்த்தியானவர் இந்தத் துருவரிருக்கும் ஆணிகளிரண்டையும் இரண்டு கைகளாலே பிடித்துக்கொண்டு தன் பின்பக்கத்தினாலே பசக்கிரத்தைத் தாக்கும் வேகத்தினாலே பிரவாக வாயுவைப் பிறப்பிக்கின்றார். அப்படிப்பட்ட பிரவாகவாயுவினாலே அந்தப் பசக்கிரமானது ஒருநாளுக் கொருதரம் பூமியைச் சுற்றுகிறது.

பசக்கிரத்தின் சுற்றுதல் விதம்

பசக்கிரத்தின் சுற்றுகை முன்சொல்லப்பட்ட இலங்கை முதலிய நான்கு பட்டணங்களினு மிருக்கின்றவர்களுக்கு மேற்கு முகமாகவும், சுமேரு வாசிகளுக்குப் பிரதட்சணமாகவும், வடவாமுக வாசிகளுக்கு அப்பிரதட்சணமாகவும் காணப்படும். சுமேருவாசிகளுக்குப் பசக்கிரத்தின் சுற்றுகை பிரதட்சணமாகக் காணப்படுதல் பற்றிச் சூரியன் மேருவைப் பிரதட்சணம் செய்கிறானென்னும் விவகார முண்டாயிருக்கின்றது.

கிரகங்களின் கிழக்குநடை

பிரதட்சணமாகத் திரிகின்ற குலால சக்கிரத்தில் அப்பிரதட்சணமாகத் திரிகின்ற எலும்புகளைப்போல் மேற்குமுகமாகச் சுற்றுகின்ற பசக்கிரத்திலே சந்திராதி கிரகங்கள் தங்கள் தங்கள் கட்சிகளிலிருக்கின்ற கிராந்திமார்க்கத்தினாலே பதினாராயிரத் தெண்ணூற்றைம்பத்தெட்டு யோசனையும், மூப்பத்துநான்கு யோசனையும் கிழக்குமுகமாக நடந்துகொண்டிருக்கும்.

பகனபூரணம்

அவற்றுள் சிறுகட்சியை யுடைய கிரகங்கள் அற்பகாலத்திலே பகனபூரணஞ் செய்யும். பெருங்கட்சியையுடைய கிரகங்கள் மகாகாலத்திலே பகனபூரணஞ்செய்யும். பகனபூரணமாவது: அசுவனி நட்சத்திரமுதல் இரேவதி நட்சத்திரம் இறுதியாகிய இருபத்தேழு நட்சத்திரங்களையுங் கடந்து செல்லுகையாம். அஃதெப்படி யென்றால் எல்லாவற்றினும் அற்பகட்சியை யுடைய சந்திரன் இருபத்தேழு தினங்களுக் கொருதரம் பகனபூரணஞ் செய்கின்றான். எல்லாவற்றினும் பெரியகட்சியை யுடைய சனி மூப்பது வருடத்திற் கொரு

தரம் பகணபூரணஞ் செய்கின்றன். இவ்விதமாகவே மற்றைக் கிரகங்களுந் தங்கட் கட்சிகளின் பெருமை சிறுமைகளுக் கேற்குமாறு புத - சுக்கிர - சூரியர் வருடத்திற் கொருதரமும் அங்காரகன் ஒன்னரை வருடத்திற் கொருதரமும் குரு பன்னிரண்டு வருடத்திற் கொருதரமும் பகணபூரணஞ் செய்கின்றார். இப்படி பகணபூரணங்கள் ஒரு தேவயுகத்திலே அற்ப கட்சியையுடைய சந்திரனுக்கு ஐந்து கோடி யெழுபத்தேழுலட்சத் தைம்பத்துமூவாயிரத்து மூந்நூற்று முப்பத்தாறுகின்றன. பெரிய கட்சியையுடைய சனிக்கு லட்சத்து நாற்பத்தாறாயிரத் தைந்நூற்றறுபத் தெட்டாகின்றன. இவ்விதமாகவே மற்றக் கிரகங்களும் பகணபூரணஞ் செய்வதென அறிக.

ஆகாசக் கட்சி

இவ்விதமாக கிரக கட்சத்திர கட்சிகளுக்கும் ஆதாரமான பசக்கிரத்திற்கு ஆதாரம் இரண்டாதார கட்சிகளாம். அந்த ஆதாரகட்சிகளுக்கும் ஆதாரம் இரண்டு தருவர்களாம். அந்தத் தருவர்களுக்கு ஆதாரம் பரிவேட ரூபமாகிய ஆகாசகட்சியாம். அவ்வாகாசகட்சி ஒரு சங்கம் எண்பத்தேழு கர்வங்கள் ஒரு நிர்ப்புதம் இரு நிற்புதங்கள் எண்ணூற் றெண்பத்தாறு கோடிகள் நாற்பது லட்சங்கள் இவ்வளவு யோசனை யளவுடையது. அந்த ஆகாசகட்சி நுனிவரைக்குஞ் சூரிய கிரணங்கள் வியாபித்திருக்கின்றன.

அண்டப் பரப்பு

அவ்வாகாசகட்சியைச் சுற்றிக்கொண்டு அண்டச்சுவரிருக்கின்றது. அவ் வண்டச்சுவருக்கும் பூமிக்கும் இருபத்தொன்பது சங்கமும், அறுபத்தெட்டு கர்வமும், மூன்று நிர்ப்புதமும், ஓரர்ப்புதமும், மூந்நூற்றுப் பதினெட்டுக் கோடியும், நாற்பத்தொன்பது லக்ஷமும், ஐம்பதினாயிரத்துத் தொளாயிரமும் இவ்வளவு யோசனையும். நாற்பத்தைந்து வியோசனையும் ஆகிய இவ்வளவு அந்தரமிருக்கின்றது. இப்படிப்பட்ட அண்டத்தின் பரப்பு ஐந்து சங்கமுந் தொண்ணூற்று மூன்று கர்வமும், ஆறு நிர்ப்புதமும், ஆறு அர்ப்புதமும் இருநூற்றருபத்துமூன்று கோடியும், அறுபத்தொன்பது லக்ஷமும், தொண்ணூற் றேராயிரத்துத் தொளாயிரமும் இவ்வளவு யோசனையும் மூப்பது வியோசனையு மூள்ளது. அந்தரமென்பது அளவு.

விவகார படலம்

இப்படிப்பட்ட பசக்கிரத்திலிருக்கின்ற சூரியனுக்கு அந்தச் சக்கிரஞ் சுழலுவதனாலே மேற்கு நடையும் தன் கட்சிமார்க்கத் திலே சுபாவமாகச் செல்லுகின்ற கிழக்கு நடையு முண்டாயிருக் கின்றதென்று முன் சொல்லப்பட்டிருக்கின்றதே, அப்படிப்பட்ட சூரிய கதியை ஆசரித்துப் பூகோளத்தி லுண்டாயிருக்கின்ற விவகா ரங்களைச் சொல்லுதற்கு முன்னுகச் சூரியகதியைச் சொல்லுவோம்.

சூரிய கதி

அஃதெப்படியென்றால், முன்னே பசக்கிரபடலத்திலே சொன் னபடியே பிரதட்சணமாகச் சீக்கிரஞ் சீக்கிரமாகத் திரிகின்ற குலால சக்கிரத்தில் அப்பிரதட்சணமாக மெள்ள நடக்கின்ற எறும்புகள் அந்தச் சக்கிரத்தோடு பிரதட்சணமாகத் திரிகின்றனவென்று விவ காரம் உண்டாயிருக்கின்றது போலச் சூரியன் தன் கட்சிமார்க்கத் திலே கிழக்கு நடையை யுடையவனாயிருந்தும், பசக்கிரத்தின் சுற்றுதல் வேகத்தினாலே மேற்கு நடையையு முடையவனென்று விவகார முண்டாயிருக்கின்றது.

ஆகையாலே சூரியனுக்குத் தினந்தோறு மொவ்வொரு தர மேற்கே செல்லுதலுமுண்டு. அப்படியே மாதந்தோறு மொவ் வொரு ராசிக்குக் கிழக்கு நடையினால் செல்லுகின்றான். இப்படிச் சூரியன் வருடந்தோறும் ஒவ்வொருதரங் கிழக்கு நடையினாலே பன்னிரண்டு இராசியையுங் கடக்கின்றான்.

ஆகையால் அவனுக்கு வருடத்திற் கொருதரங் கிழக்கு நடை யுண்டாயிருக்கின்றது. அன்றியுஞ் சூரியன் மேடாயன துலாயன தினங்களிலே முன் சொல்லப்பட்ட விசுவன் மண்டலத்தி லிருக் கின்றான்.

விசுவன் மண்டல நிலை

அது எப்படியென்றால், இவ்விரண்டு தினங்களிலும் விசுவன் மண்டலத்திற்கு நேராகக் கீழிருக்கின்ற இலங்கையாதி புரங்களி னிடத்துப் பன்னிரண்டங்குலமுள்ள சங்கு என்னப்பட்ட ஒரு மரக் குச்சை மத்தியான காலத்திலே சதுரமாகிய நிலத்திலே நிறுத்திப் பார்த்தால், அந்தச் சங்குச்சாயை எந்தப்பக்கத்திலுங் காணப்படாது.

ஆகையால் சூரியன் மேடாயன துலாயன நினங்களிலே விசுவன் மண்டலத்தில் இருக்கின்றனென்று அறிக.

விசுவன் மண்டலமாவது பூ மத்தியத்துக்கு நேராக ஆகாசத்திலிருக்கின்ற மண்டலமாம். அந்த மண்டலத்திற்கு நேராகப் பூ மத்தியத்திலிருக்கின்ற மேகலாரேகைக்கு விசுவத்துரேகை யென்றும் பெயர். விசுவத் என்பது நடுவாம்.

விசுவச் சாயை

அதினாலேயே அந்தத் நினங்களிலே இலங்கை முதலாகிய பட்டணங்களுக்குத் தெற்கு வடக்குகளின் பாகங்களிலிருக்கின்ற தேசங்களிடத்துள்ள கணித நூலோர் தாங்கள் தாங்கள் இருக்கின்ற விடங்களிலே முன் சொன்னபடியே சாயை நிச்சயஞ் செய்வார்கள். அந்தச் சாயை விசுவச்சாயை யென்பார். அப்படிப்பட்ட விசுவச்சாயை எந்தப் பாகங்களிலே எந்தத் தேசங்களிலே எவ்வள வெவ்வள விருக்குமென்றால் அவையெல்லாஞ் சொல்லின் விரியும். ஆயினும் பரதகண்டத்திலிருக்கின்ற பிரசித்தமாகிய சில பட்டணங்களிலே மாத்திரங் காண்பிக்கின்றோம். பின்பு பூகோளபடலத்திற் சொல்லப்பட்ட மத்தியரேகை இலங்கை மேருகளுக்கு நேராக விருக்கின்றமையால் அதைச் சமரேகையென்று சொல்வார்.

அப்படிப்பட்ட சமரேகைக்குக் கிழக்கே முதற்பாகத்தில் இருபத்திரண்டாங்களாயி லிருக்கின்ற திருவாங்கூர்ப் பட்டணத்தில் ஓரங்குலமும், நாற்பத்தேழு வியங்குலமும், விசுவச்சாயை அகப்படும். இந்தத் திசையிலே இரண்டாம் பாகத்தில் இருபத்தைந்தாங்களாயி லிருக்கின்ற மதுரையில் இரண்டங்குலமும் ஆறு வியங்குலமும் விசுவச்சாயை தோன்றும்.

இத்திசையிலே மூன்றும் பாகத்திற் பதினெட்டாங் களாயி லிருக்கின்ற தஞ்சாவூரில் இரண்டங்குலமும், பதினேழு வியங்குலமும் அச்சாயை தோன்றும். இந்தத் திசையிலே இந்த பாகத்திலே ஐம்பத்தொன்பதாங் களாயிலிருக்கின்ற காஞ்சிபுரத்தில் இரண்டங்குலமும், நாற்பத்துமூன்று வியங்குலமும் அச்சாயை தோன்றும். இந்தத் திக்கிலே நாலாம்பாகத்தில் மூப்பத்தைந்தாங்களாயி லிருக்கின்ற சென்னப்பட்டணத்தில் இரண்டங்குலமும் நாற்பத்தேழு வியங்குலமும் அச்சாயை தெரியும்.

இந்தத் திக்கிலே இந்தப் பாகத்திலே எட்டாங்களையி லிருக் கின்ற சோளத்தி நகரத்தில் மூன்றங்குலம் அச்சாயை காணப்படும். அந்தத் திக்கிலே முதற்பாகத்திலே நாற்பத்திரண்டாங்களையி லிருக் கின்ற பெங்களூர்ப் பட்டணத்தில் இரண்டங்குலமும் நாற்பத்தைந்து வியங்குலமும் அச்சாயை காணப்படும். இப்படி விசுவச்சாயை பிரத்தியட்சமா யிருக்கையாலே மேடாயன தலா தினங்களிலே சூரியனுக்கு விசுவன் மண்டலத்திலிருக்கை நிச்சயிக்கப்படுகின்றது.

உத்தரதட்சண கிராந்திகள்

அந்தத் தினங்களிலே அங்கேயிருந்து சூரியன் தன் கிராந்தி மார்க்கத்திலேலே தினந்தினங் கொஞ்சங் கொஞ்சமாக நடந்து கொண்டு மிதுனப்பத்தில் அந்த விசுவன் மண்டலத்திற்கு வடக்கே யிருபத்துநாலு பாகமும், தனுரந்தத்திலே தெற்கே யிருபத்துநாலு பாகமும் போய், அவ்விடங்களிலிருந்து மறுபடியுந் திரும்பி, அந்தத் தினங்களில் விசுவன் மண்டலத்திற் சேர்ந்துகொண்டு அவ்வித மாகவே எக்காலமும் நடந்துகொண் டிருப்பான்.

இது யாதினால் நிச்சயிக்கப்பட்டதென்றால், விசுவன் மண்ட லத்திற்கு நேராகக் கீழேயிருக்கின்ற இலங்கைக்கு வடக்கிலே இரு பத்துநான்காம் பக்கத்திலிருக்கின்ற அவந்திபுரத்தில் வடக்கு நிழலே யல்லாமல் எப்போதும் தெற்கு நிழலில்லை.

இவ்விதமாகவே அந்த இலங்கைக்குத் தெற்கே யிருபத்து நான்கு பாகத்திற்கு மேற்பட்ட இடங்களிலே தெற்கு நிழலே யல் லாமல் வடக்கு நிழல் எப்போதுமில்லை. இந்த நாற்பத்தெட்டுப் பாகங்களுக்குள்ளே அவ்விரண்டு நிழல்களுமுண்டு. ஆகையால், சூரியனுக்கு நாற்பத்தெட்டுப் பாகங்களுக்குள்ளே உத்தரக் கிராந்தி, தட்சண கிராந்திகள் நிச்சயிக்கப்பட் டிருக்கின்றன.

வேனிற்பருவ பனிப்பருவங்களின் வெம்மை தண்மை

இனி ஆனி ஆடிகளிற் சூரிய கிரணங்கள் அதிக வெப்பமாகவும், மார்கழி தைகளில் அதிக குளிர்ச்சியாகவும் இருத்தற்குக் காரணம் என்னவென்றால், ஆனி ஆடிகளில் விசுவன் மண்டலத்திற்கு வட பாகங்களிற் சூரியன் போகின்றான். அப்போது அவன் கிரணங்கள் வடபாகத்தி லிருக்கின்றவர்களுக்குச் சமீபமாகையால் அதிக வெப்ப

மாகவும், தென்பாகத்தி லிருக்கின்றவர்களுக்குத் தூரமாகையாற் சீதளமாகவும் இருக்கின்றன. மார்கழி தைமாதங்களிலே விசுவன் மண்டலத்திற்குத் தென்பாகங்களிற் சூரியன் போகின்றான். அப் போது அவன் கிரணங்கள் வடபாகத்தி லிருக்கின்றவர்களுக்குத் தூரமாகையாற் குளிர்ச்சியாகவும், தென்பாகத்தி லிருக்கிறவர்களுக் குச் சமீப மாகையால் அதிக வெப்பமாகவும் இருக்கின்றன.

உதயாதி தோற்றம்

அப்படி கிழக்குநடை மேற்குநடையோடுகூடிய சூரியனுடைய மேற்கு நடையினாலே உண்டாகின்ற உதயாதிகளின் தோற்றங்க ளைச் சொல்லுகிறேன். அஃதெப்படியென்றால்? உருண்டையாயிருக் கின்ற பூமியில் எங்கே யிருக்கின்றவர்களுக்குஞ் சூரியன் காணப் படுதலே உதயமாம். காணப்படாமற்போதலே அத்தமயமாம். காணப்படுகின்ற காலத்தினடு மத்தியானமாம். காணப்படாத காலத்தினடு அர்த்தராத்திரியாம். ஆகையால் உதயாதி விவகாரங் கள் அனேகப் பிரகாரமா யிருக்கின்றன.

அதெப்படியென்றால் மேகலாரேகைக்கு மேலே பசக்கிரஞ் சுழலுகையால் மேகலாரேகையி லிருக்கின்ற இலங்காபுரி வாசிகளுக் குச் சூரியன் யவகோடி பட்டிணத்திற்கு நேராக வரும்போது காணப்படுகையால் அங்கே உதயமாகும். உரோமகபுரத்துக்கு நேரா கப் போகும்போது காணப்படாமையால் அங்கே அத்தமயமாகும். இலங்கைக்கு நேராக வரும்போது காணப்படுங்காலம் நடுவாகை யால் இங்கே அது மத்தியானமாகும். சித்தபுரிக்குப் போகும் பொழுது காணப்படாதகாலத்தி னடுவாகையால் இங்கே அது அர்த்தராத்திரியாகும். இவ்விதமாகவே உரோமகபுரவாசிகளுக்குச் சூரியன் இலங்கைக்குச் சேரவரும்போது காணப்படுதலால் அங்கே உதயமாகும். சித்தபுரத்திற்குப் போகும்பொழுது காணப்படாமை யால் அங்கே அத்தமயமாகும். உரோமகபுரத்திற்கு வருகும்போது காணப்படாத காலத்தினடு வாகையால் இங்கே அது மத்தியான மாகும். யவகோடிக்கு வருகும்போது காணப்படாதகாலத்தி னடு வாகையால் இங்கே அது அர்த்தராத்திரியாகும்.

இவ்விதமாகவே சித்தபுரவாசிகளுக்கு உரோமபுரத்தில் உதய மும், யவகோடியில் அத்தமயமும், சித்தபுரத்தில் மத்தியானமும் இலங்கையில் நடுராத்திரியு மாகின்றன.

இவ்விதமாகவே யவகோடிவாசருக்குச் சித்தபுரத்தில் உதயமும், இலங்கையில் அத்தமயமும், யவகோடியில் மத்தியானமும் உரோமகபுரத்தில் அர்த்தராத்திரியும் ஆகின்றன. இவ்விதமாகவே மேகலா ரேகையின் இரண்டுபக்கத்திலும் வாசஞ்செய்து கொண்டு பசக்கிரம் மேற்கு முகமாகச் சுற்றுகிறதாகப் பார்க்கின்றவர்கள் எல்லாருக்கும் உதயம் அத்தமயம் மத்தியானம் அர்த்தராத்திரிக ளுண்டாகின்றன.

இனிச் சுமேருவடவாமுக வாசர்களுக்கு உதயாதி விவகாரங் கள் எப்படியென்றால் சூரியன் தன் மேற்குக்கதியினாலே மேடாயன தினங்களிலே மூன்சொல்லப்பட்ட விசுவன் மண்டலமார்க்கத்தி லிருப்பான். அப்போது சுமேரு வாசிகளுக்கு உதயமாகும் வடவா முகவாசிகளுக்கு அத்தமயமாகும். அதுமுதற்கொண்டு ஆனிமாச முடிவு வரைக்கும் அவ்விசுவன் மண்டலத்திற்கு வடக்காக இருபத்து நாலு பாகம்வரைக்குந் தன் கிராந்தி மார்க்கத்தினாலே ஒற்றிவரு வான். அப்போது சுமேருவாசிகளுக்கு மத்தியானமாகும். வடவா முகவாசிகளுக்கு அர்த்தராத்திரியாகும். அங்கேயிருந்து திரும்பித் தன் கிராந்திமார்க்கத்தினாலே ஏறக்குறைய புரட்டாசிமாதம், ககவ ஆகிய துலாயன தினத்திலே விசுவன் மண்டலத்தைச் சேர்வான். அப்போது சுமேருவாசிகளுக்கு அத்தமயமாகும். வடவாமுகவாசி களுக்கு உதயமாகும். அங்கேயிருந்து மார்கழிமாத முடிவுவரைக் கும் அந்த விசுவன் மண்டலத்திற்குத் தெற்காக இருபத்துநான்கு பாகம்வரைக்குந் தன் கிராந்திமார்க்கத்தினாலே போவான். அப் போது சுமேருவாசிகளுக்கு அர்த்த ராத்திரியாகும். வடவாமுக வாசிகளுக்கு மத்தியானமாகும்.

அங்கே யிருந்து திரும்பித் தன் கிராந்திமார்க்கத்தினாலே பங் குனிமாதம் ககவ ஆகிய மேடாயன தினத்தில் முன்னே தான் விட்ட விசுவன் மண்டலத்தினிடத்தே சேர்கின்றான். அப்பொழுது சுமேருவாசிகளுக்குத் திரும்பி உதயமும் உண்டாகின்றது.

இவ்விதமாகவே பசக்கிர பிரதட்சணமாகவும் அப்பிரதட்சண மாகவும் சுற்றுகிறதாகப் பார்க்கின்ற எல்லாரும் சற்றேறக்குறைய உதயாத்தமய மத்தியான அர்த்தராத்திரிக ளுண்டாகின்றன.

திசைகளின் தோற்றம்

உருண்டையாக விருக்கின்ற பூமியில் எவ்விடத்தி லிருக்கின்ற வர்களுக்குஞ் சூரியன் உதயமாகின்ற திக்குக் கிழக்காகும். சூரிய னுக்கு எதிராகிய திக்கு மேற்காகும். இடது திக்கு தெற்காகும். வலது திக்கு வடக்காகும். அதெப்படியென்றால் இலங்கையினிடத் திருக்கின்றவர்களுக்குச் சூரியன் உதிக்கிற யவகோடி பட்டணம் கிழக்கும், அதற்கெதிரிலிருக்கின்ற உரோமகபுரம் மேற்கும், இடது பக்கத்திலிருக்கின்ற வடவாமுகந் தெற்கும், வலது பக்கத்தி லிருக் கின்ற சுமேரு வடக்கும் ஆகின்றன. இவ்விதமாகவே உரோமக புரத்தி லிருக்கின்றவர்களுக்கு இலங்கை கிழக்கும், சித்தபுரி மேற் கும், வடவாமுகந் தெற்கும், சுமேரு வடக்கும் ஆகும். இப்படியே சித்தபுரவாசிகளுக்கு உரோமகந் கிழக்கும், 'யவகோடி மேற்கும், வடவாமுகந் தெற்கும், சுமேரு வடக்கும் ஆகும். இம்முறையாகவே யவகோட்டை வாசிகளுக்குச் சித்தபுரி கிழக்கும், இலங்கை மேற்கும், வடவாமுகந் தெற்கும், சுமேரு வடக்கும் ஆகும்.

இதுவன்றியும், மேகலாரேகைக்கு வடக்கிலுந் தெற்கிலும் பசக்கிரமானது மேற்கு முகமாகச் சுற்றுகிறதாகக் காணப்படுகின்ற எந்தப் பாகங்களி லிருக்கின்றவர்களுக்கும் இவ்வாறே திக்கு விவ காரங்களுண்டாகும். இனி பசக்கிரமானது பூமியைப் பிரதட்சண மாய்ச் சுற்றுகிறதாகப் பார்க்கின்ற சுமேருவாசர்களுக்குச் சூரிய னுதயமாகின்ற மேகலாரேகையிலுள்ள நான்கு பட்டணங்களுக்கு கிழக்கும், அவற்றிற் கெதிராகவிருக்கின்ற வடதுருவன் மேற்கும், அவற்றிற்கு இடதுபக்கந் தெற்கும்; வலதுபக்கம் வடக்கும் ஆகின் றன. இப்படியே பசக்கிரமானது பூமியை அப்பிரதக்ஷணமாகச் சுற்றுதலாகப் பார்த்துக் கொண்டிருக்கின்ற வடவாமுக வாசர்க ளுக்கு இலங்கை முதலிய நான்கு பட்டணங்களுங் கிழக்கும், அதற் கெதிராக விருக்கின்ற தென்திசைத் துருவன் மேற்கும், இடது பக்கந் தெற்கும், வலதுபக்கம் வடக்கும் ஆகின்றன. இவ்விதமாகவே எல்லாப் பாகங்களுக்கும், எல்லா விடங்களுக்கும், அங்கங்கே தக்க படியே திக்கு விவகாரங்களைச் செய்க.

பகலிரவுகளின் தோற்றம்

பகலிரவுகளின் விவகாரம் எவ்வாறென்னின், பகலென்பது சூரியன் காணப்படுகின்ற காலமாம். இராத்திரி யென்பது சூரியன்

காணப்படாத காலமாம். பகலிரவுகள் அநேகப்பிரகாரமாக விருக்கும். அதெப்படியென்றால் மேகலா ரேகையினிடத்தும், அதற்கடுத்த விருபக்கத்திலு மிருக்கின்றவர்களுக்குச் சூரியனானவன் சற்றேறக்குறைய மூப்பதுநாழிகை காணப்பட்டும், மூப்பதுநாழிகை காணப்படாமலு மிருக்கின்றமையால் அவர்களுக்கும் பகலிரவுகள் அறுபதுநாழிகை யாகின்றன. மனிதருக்கு இப் பகலிரவுகள் ஒரு நாளாம். இது பதினைந்து கூடினால் ஒரு பட்சமாம். அந்தப் பட்சம் இரண்டு கூடினால் ஒரு மாதமாம். அம்மாதம் இரண்டு கூடினால் ஒரு பருவமாம். அந்தப் பருவம் மூன்று கூடினால் ஓரயனமாம். அவ் வயன மிரண்டு கூடினால் ஒரு வருடமாம்.

சுமேரு வாசிகளின் பகலிரவுகள்

சுமேருவாசிகளுக்குச் சூரியன்மேடாயன தின முதற்கொண்டு துலாயனதினம் வரைக்குங் காணப்பட்டும் துலாயனதின முதற் கொண்டு மேடாயனதின வரைக்குங் காணப்படாமலும் இருக்கின் றமையால் அவர்களுக்கு உத்தராயணம் ஒரு பகலும், தட்சணாய னம் ஓரிராத்திரியுமாகும். ஆகையால் ஒரு வருடம் சுமேரு வாசிக ளுக்கு ஒரு நாளாம். இது முறையே மூன் சொல்லப்பட்டபடி பட்சம், மாதம், பருவம், அயனம் வருடமாம்.

வடவாமுக வாசிகளின் பகலிரவுகள்

அவ்விதமாகவே வடவாமுக வாசிகளுக்குச் சூரியன் துலாயன தினமுதற்கொண்டு மேடாயனதினம் வரைக்குங் காணப்பட்டும் மேடாயனதின முதற்கொண்டு துலாயனதினம் வரைக்குங் காணப் படாமலும், இருக்கின்றனகையாற் மேருவாசர்களுக்குச் சொல்லி யதுபோலவே பகலிரவுகளின் விவகாரங்களும், பட்சங்களும், மாதங் களும், பருவங்களும், அயனங்களும், வருடங்களும் ஆகின்றன.

இப்படியே அந்தந்தப் பாகங்களுக்குத் தக்கபடியே பகலிரவ களின் ரூற்றங்களை யறிக.

சுமேரு வடவாமுக வாசிகளுக்கு பகலிரவுகளின் வேறுபாடு

சுமேரு வடவாமுக வாசர்களில் ஒருவர்க்கொருவருக்குப் பக லிரவுகள் மாறுகவிருக்கின்றன. அஃதெப்படியென்றால் சுமேரு

வாசர்களுக்கும் பகலாகிய உத்தராயணம் வடவாமுக வாசிகளுக்கு இரவாகும். அந்தச் சுமேருவாசிகளுக்கு இராத்திரியாகிய தட்சணாயனம் வடவாமுக வாசிகளுக்குப் பகலாகின்றது. இவ்விதமாகவே வடவாமுக வாசிகளின் பகலிரவுகள் சுமேருவாசிகளுக்கு இரவு பகலாகும்.

தென்புலத்தார் பகலிரவுகள்

பிதிரர்களுடைய பகலிரவுக ளெப்படி யென்றுற் பசக்கிரத்திலே முன்னேயிருக்குஞ் சந்திரமண்டலத்தில் பிதிரரென்னுந் தென்புலத்தாரிருக்கின்றார்கள். அந்தச் சந்திரன் தன்னிலும் பெரிய கட்சியாக உள்ள சூரியனொரு ராசியைக் கடக்குங் காலத்திற் பன்னிரண்டு இராசியுங் கடந்து செல்லுகின்றான். ஆகையால், அப்படிப்பட்ட சந்திர மண்டலத்திலிருக்கின்ற பிதிரர்களுக்குச் சூரியன் பதினைந்து திதிகள் காணப்பட்டும், பதினைந்து திதிகள் காணப்படாமலு மிருக்கின்றமையால் அவர்களுக்கு ஒருமாதம் ஒருநாள் ஆகின்றது. இப்படிப்பட்ட அகோராத்திரிகளாலே முன் சொல்லப்பட்டபடியே பட்சம், மாதம், பருவம், அயனம், வருடம் ஆகின்றன.

சூரிய கிரகணம்

சூரிய கிரகணத்தின் விவகாரத்தைச் சொல்லுகின்றோம். முன் சொல்லப்பட்ட பசக்கிரத்திலே நடக்கின்ற சந்திரன் சந்திரபாதமென்கிற இராகுவினாலே தெற்குவடக்கு வழிகளிலே சூரியனுக்கெதிர்முகமாக இழுக்கப்பட்டு அமாவாசையின் முடிவிலே சூரியனிருக்கின்ற கலைக்குச் சரியான கலையிலே கரணமார்க்கத்திலே சேர்ந்தபோது சந்திர பிம்பமானது மேகத்தைப்போலவே சூரிய பிம்பத்துக்கு மறைவாதலினாலே சூரியகிரகண முண்டாகின்றது.

சந்திர கிரகணம்

சந்திர கிரகணத்தின் விவகாரத்தைச் சொல்லுகின்றோம். சூரியன் பௌர்ணமி முடிவிலே சந்திரனிருக்கிற இராசிக்கு ஏழாமிராசியில் பசக்கிரத்தி னடுப்பாதியாகிய பதினயிரத் தெண்ணூறுவது கலையிலே சேர்ந்து கரணமார்க்கத்தினாலே எதிராகும்பொழுது நடுவிலிருக்கின்ற பூமியினிழலாகிய தமோகிரகமானது சந்திரபிம்பத்தை மறைக்கிறபடியினாலே சந்திரகிரகண முண்டாகின்றது.

சந்திரபிம்பத்திலும் சூரியபிம்பம் பெரிதானபடியினாலே சூரியனுக்கு ஒருபோதும் பூரணகிரகணமில்லை. சந்திரபிம்பமானது சூரியபிம்பத்தினுடைய நடுமையத்துக்கு நேராகச் சென்றபோது கங்கணகிரகண முண்டாகுகையே இதற்குப் பிரமாணமாகும். பூமியின் சாயையானது சந்திரபிம்பத்திலும் ஒருகாலத்திற் சிறிதான தன்மையும் ஒருகாலத்திற் பெரிதான தன்மையு முடைத்தாகிறபடியினாலே சந்திரனுக்கு சற்றேறக்குறைய அரைக்காலே - கால், காலே அரைக்கால், அரை - அரையே அரைக்கால், மூக்கால் - மூக்காலே அரைக்கால், ஒன்று - ஒன்றே அரைக்கால், ஒன்றேகால் - ஒன்றே - காலே அரைக்கால், ஒன்றை - ஒன்றரையே அரைக்கால், ஒன்றேமுக்கால் - ஒன்றேமுக்காலே அரைக்கால் வரையிலும் கிரகணங்கள் சம்பவிக்கின்றன. ஆனால் அமாவாசைதோறும் சூரியனுக்குஞ் சந்திரனுக்கும் சமகலையாதலும் பௌர்ணமிதோறும் சூரியனுக்குச் சந்திரன் ஏழாமிராசியி லிருத்தலுமுண்டா யிருக்கின்றதே கிரகணம் யாதினாலுண்டாக வில்லையென்றால் சந்திரபாதமாகிய ராகு இழுத்தலின் வேறுபாட்டினாலே அமாவாசை பௌர்ணமிதோறுங் கரணமார்க்கத்திற்குச் சரியாகாதபடியினாலே கிரணங்கள் உண்டாகவில்லை.

இரண்டாவது

மக்கள் காண்டம்

மனிதர்களின் பிராண நிலை

இந்தியா அளவு.		பிராதாண நிதானம்.	இங்கிலீஷ் அளவு.	
நாழிகை முதல்	நாழிகை வரையில்	காலையில்	மணி முதல்	மணி வரையில்
நு	க0	சூரியகலை	6	8
க0	கநு	சந்திரகலை	8	10
கநு	உ0	சூரியகலை	10	12
உ0	உநு	சந்திரகலை	12	2
உநு	ங0	சூரியகலை	2	4
ங0	ஙநு	சந்திரகலை	4	6
		மாலையில்		
ஙநு	ச0	சூரியகலை	6	8
ச0	சநு	சந்திரகலை	8	10
சநு	ஞ0	சூரியகலை	10	12
ஞ0	ஞநு	சந்திரகலை	12	2
ஞநு	கூ0	சூரியகலை	2	4
கூ0	கூநு	சந்திரகலை	4	6

அறிவையே ஆதாரமாயுன்னி, ஆரியராகும் சீரியருக்குக் கரு மான் உலகுக்குக் காற்றுவீசும் தருணத்திக்கிணங்க நாசியென்று சொல் லும் நமது மூக்கின் வழியாகப் பழகிவரும் காற்றுக்குக் காற்று ஜீவன் - சுவாசம் - மூச்சு - பிராணன் - ஆவி - உயிர் - உயிர்ப்பு - மனம் - சரம் - இவை முதலாகச் சொல்லப்பட்ட பெயர்கள் பல உளவாம். அன்றியும், ஆன்றோர்களால் இன்னும் பலபெயர்களும் விளக்கப்படு மென்று எண்ணலாம்.

பலவித இயற்பெயர் பூண்டுள்ள நமது ஆன்மாவாகிய பிராண னுக்கு எருதுக்கு மூக்காங் கயிறிருந்து ஆட்டுவதுபோலக் காலை ஆறுமணி தொடங்கி எட்டுமணிவரையிலும் சூரியகலை என்னும் வலது மூக்கின் துவாரத்திலும், எட்டுமணி தொடங்கிப் பத்து மணி வரையில் சந்திரகலையென்னும் இடது மூக்கின் துவாரத்திலும் ஆக

இரண்டு மணிநேரத்திற்கு ஒருகலையாக அல்லும்பகலும் கூடிய அறுபது நாழிகையிலும் ஐந்து நாழிகைக் கொருமுறையாக மாறிமாறி ஓடிக்கொண்டே இருக்கும்.

சூரியகலையில் செய்தற்குரிய காரியங்களாவன

பிங்கலையென்றும் சூரியகலை யென்றுஞ் சொல்லப்படுகிற வலது நாசியில் சரம் ஓடும்போது சம்போகம் - வித்தியாப்பியாசம் - சாக்கிர அப்பியாசம் - மந்திராப்பியாசம் - வாகனம் ஏறல் - யந்திர நிர்மிதம் - சித்திரமெழுதல் - விவகாரம் - ஸ்நானம் - போசனம் - பிரசங்காரம்பம் - தானம் - தருமம் - வேட்டை - கால்நடைகளின் விக்கிரயம் - தம்பனம் - மோகனம் - உச்சாடனம் - மாரணம் - புதுவத் திரமணிதல் - வடக்கு - கிழக்கு - பிரயாண மூதலான காரியங்கள் செய்வது மிகவும் உத்தமம்.

சந்திரகலையில் செய்தற்குரிய காரியங்களாவன

இடகலையென்றும் சந்திரகலையென்றும் சொல்லப்படும் இடது நாசியின் வழியாக சரம் ஓடும்போது தெற்கு மேற்குப் பிரயாணம்- உபுத்தம் - உபநயனம் - சாந்திகழித்தல் - கிரகப் பிரவேசம் - இராச தரிசனம் - விதை விதைத்தல் - ஔதடபிரயோகம் - சற்புருடகோட்டி- யோகாப்பியாசம் - விவாகம் - தேவபிரதிட்டை - தூரதேசப் பிரயாணம் - அலங்காரம் - சுரதொட சிகிச்சைமூதலிய காரியங்களை செய்ய மிகவும் உத்தமமென்று ஆன்றோர்களால் கூறப்பட்டிருக்கிறது.

சரசாத்திர சமாதானம்

இத்தச் சரசாத்திர லட்சணம் தெரியாதவர்களுக்கு விளங்குமாறு சுருக்கமாக எழுதலாயிற்றே யன்றி மற்றவர்களுக்கு போதிக்கயாம் பெரியோமல்ல. ஏனெனில், சரம்பார்ப்பான் பரம்பார்ப்பான் என்பதற்கிணங்க சரயோக அப்பிராசிகளான மகான்கள் சர்வ சீவான்ம கோடிகளுக்கும் அன்றன்றும் நடந்தேற முன்னிற்கும் நிரிகால நன்மை தீமைகளையும் தாங்களே தெரிந்துகொண்டு பரத்தின் திருவிளையாடலைப் பகுத்தறிவார்கள். ஆயினும், பெருமையை விரும்பி தம்மகிமையை அகத்தைக் கடந்து இகத்தியல்பில் செல்லவிடார்கள். அவ்வாறு செல்லவிடாத வல்லோராகிய நல்லோரின் குறியாதெனில், "பாலரோடு பேயர் பித்தர் பான்மை

யென நிற்பதுவே சீலமிகுஞானியர் தம் செய்கை பராபரமே" (தாயுமானவர்) என்பதாம். இங்ஙனம் ஞானிகளுடைய தன்மை களும் சரசாஸ்திரப் பெருமையும் யோகாப்பியாச விவரமும் விவரித் தெழுத அருளில்லாத அபாத்திரனுகையால் இல்லறவாழ்க்கைக்கு இயன்ற தொழில் முகாந்தர சரத்தின் குறிமாத்திரம் வரும் நூலே கொண்டெழுதப்பட் டிருக்கிறது.

சரசாதனத்திற்கு ஆசனமும் பலனும்

மான்றோல்	ஞானம்
தருப்பை	மோட்சம்
புலித்தோல்	செல்வம்
வெள்ளாவஸ்திரம், இரத்தினகம்பளம்	
சித்தராசனம்	சர்வமங்களம்

மற்றெல்லாவித ஆசனமும் தரித்திரத்தை உண்டாக்கும்.

சரசாதன இயல்பு

மேற்கூறிய ஆசனங்களில் தத்தமக்கு எப்பொருள் விருப் பமோ அவ்வாசனத்திலிருந்து சூரியகலையென்னும் வலது நாசியின் வழியாகச் சுவாசத்தை நடக்கச்செய்து இராப்பகல் கூடிய தின மொன்றுக்கு ஒரு முகூர்த்தகாலமாவது தமது இட்ட தேவதாத் தியானம் செய்வோர்கள் பிறர் விரும்பிக் கேட்கும் பிரசினையும் ஆருடமும் மனக்குறையாகிய எல்லாவிதக் கேள்விகளுக்கும் குறி சொல்வதுபோல அவரவர் நன்மை தீமைகளை எளிதில் சொல்லலாம். அப்படிச் சொல்வதற்கு வலது நாசியிலிருக்கும் சுவாசத்தை இடது நாசியில் ஓட்டவும், இடது நாசியிலிருக்கும் சுவாசத்தை வலது நாசியில் ஓட்டவும், இரேசிக்கவும், பூரிக்கவும், தம்பிக்கவும், சத யோக அப்பியாசிகள் தெரிந்துக்கொள்ள வேண்டும். அப்பியாசி கள் கிடைப்பதும் சொல்வதும் சாத்தியமல்லவென்றும் சொல்லு வாரு முளர்; ஆகையால் மேலோட்டை ஆதாரமாகக்கொண்டு உற் பத்தியாகி புளியம் பிஞ்சானது சுவைக்கு சம்பந்தப்படும் பருவம் ஏற ஏற மேலோட்டின் பற்றுதல் சிறிதேனு மில்லாமல் தனித்து நிற் பது போலவும் மண்ணிலும் புழுநியிலும், சேற்றிலும், பூமியிலும் வியாபித்திருக்கும். பிள்ளைப்பூச்சியானது எவ்வாது பற்றற்றிருக்கி றதோ அவ்வாறு போலவும் மானிடமென்னும் சட்டைபூண்டு சமூ

எதிரியை வெல்லலாமா, வியாபாரஞ் செய்யத் தொடங்கலாமா, திருடப்போகலாமா, சூதாடத் துவக்கலாமா, இத்தினகாளாய் நீராத வழக்கு வெல்லுமா, யானை - குதிரை - ஒட்டை - வண்டி இவற்றில் ஏறலாமா, பத்திரம் சாதனம் முதலிய எழுதலாமா, சங்கீதம் கற்கத் துவக்கலாமா, பிரசங்கஞ் செய்தால் செயிக்கலாமா, மந்திரங் கற்றால் சித்தியாகுமா, மருந்து சாப்பிட்டால் பிணி தீருமா, விரூந்து போஜனஞ் செய்யலாமா, பகையாளியை ஜெயிக்கலாமா, இந்த வியாதி நீங்குமா, என்னும் இவ்விதக் கேள்விகளில் எது கேட்ட போதிலும் அது தடையின்றி நடக்கும் அல்லது செய்யலாகு மென்று சொல்லப்படும்.

சந்திரக் குறி

சந்திரக்கலை பூரண்மாய் நடக்கும்போது அதேபக்கத்தில் வந்து நின்றவன்; மணவாங்கலாமா, வீடுவாங்கலாமா, குளங் கிணறு வெட்டலாமா, யான் எண்ணிய விஷயத்தைப்பற்றி தூதனுப்பலாமா, நான்போய் பேசலாமா, புதுவத்திரம் தரிக்கலாமா, ஆபரணம் பூண லாமா, விவாக ஏத்தனம் செய்யலாமா, குடிபோகலாமா, அரசரைக் காணலாமா, இட்டதெய்வம் பிரதிட்டை செய்யலாமா, கல்வி கேட்டுக் கொள்ளலாமா என்னும் இவ்விதக் கேள்விகளைக் கேட்கில், அவை தடையின்றி நிறைவேறும் அல்லது செயமுண்டாகும் என்று சொல்லக்கூடும்.

சுழிமுனைக் குறி

சூரியகலை சந்திரகலை ஆகிய இரண்டு கலைகளிலும் சரமானது சமரசமாய் ஒத்துவருமாகில் அதற்குச் சுழிமுனை யென்று பெயர். அப்படி சுழிமுனை நடக்கும்போது ஒருவன் வந்து யாதாமொரு காரியத்தை உத்தேசித்து கேட்பானகில் அவனைச் சும்மா இருக்கச் சொல்வதே மிகவும் நன்று. அவன் நினைத்தகாரியம் ஒன்றேனும் ஆகாது. இந்தப்பொருள் அகப்படுமா என்றாலும் அகப்படாது. இந்தச் சுழிமுனை நடக்கும்போது நன்மையே கிடையாது. கெட்ட காரியமெல்லாம் சம்பவிக்கும்.

பிரதானக் குறி

சரம் ஓடுகிற பக்கம் பூரணபக்கமென்றும், சரம் ஓடாத பக்கம் சூனிய பக்கம் என்றும் பெயர். ஆகையால், வழக்கு பேசுதல் - தர்க்கம் பண்ணுதல் - பெண்கேட்டல் - அடிமை கொள்ளல் - அரசரைத்

தரிசித்தல் - தனக்கு மேலானவரிடத்தில் வார்த்தையாடல் ஆகிய இத் தொழிற்கெல்லாம் தனக்கு சரம் ஓடாத சூனிய பக்கத்தில் எதிரி நிற்கும்படியாய்த் தான் நின்றுகொண்டு பேசினால் அந்தக் காலங்களில் எதுவேனுந் தடையின்றி நிறை வேறும்.

சரத்தின் பரிபாஷை

சந்திரகலை,	இடது நாசிக்குப் பெயர் இடகலையென்றுஞ் சொல்லப்படும்.
சூரியகலை,	வலது நாசிக்குப் பெயர் பிங்கலையென்றுஞ் சொல்லப்படும்.
சுழிமுனை,	சுவாசமானது இரண்டு கலையிலும் பரவி யோடுதலுக்குப் பெயர்.
சூனியம்,	சரம் ஓடாத பக்கத்திற்குப் பெயர்.
இரேசகம்,	சரத்தை வெளியே நடத்தலுக்குப் பெயர்.
பூரகம்,	சரத்தை உள்ளே இழுத்தலுக்குப் பெயர்.
கும்பம்,	சரத்தைத் தம்பித்தற்குப் பெயர்.

சரசாதனர் சாப்பாடு

இந்தச் சரசாத்திரத்தை விரும்பித் தானே அனுட்டிக்க முயல்வதிலும் குருமூலமாய்த் தெரிந்துகொள்வது சிலமே லெழுத்தாகும். அன்றியும், சரசாதனத்திற்குத் தொடங்குபவர்கள் சந்திரகலை நடக்கும்போது போஜனஞ் செய்யக்கூடாது. சாப்பிட வேண்டுமானால் உட்டினமான பண்டங்களும் உப்பு கசப்பு காரலாகிய பண்டங்களும் வைத்துக்கொண்டு தாகபானத்தை மட்டும் நிறுத்திச் சாப்பிட வேண்டியது. இவ்வாறு சாப்பிடுவதினும் அரை வயிறு உணவே கொள்ள வேண்டியது. அதிக உணவு கொள்வார்களாகில் சீதளத்தைச் சார்ந்த தேக நலிவையும், மந்த புத்தியையும், இது கொடுக்கும் எத்தொழிலும் நடவாது சோம்பல் மேலிடும்.

சரசாதனத்தை அனுட்டிக்க விருப்பமுள்ளவர்களும் அனுட்டித்து வருபவர்களும், ரோடல் முதலிய நித்திய கருமத்திலே தவறாமல் நடந்து சுத்த போஜனத்தையே உண்டு அவ்வாறு உண்ணும் போதும் அன்னம் அரை வயிறும் ஜலம் கால் வயிறுமாகக் குறைந்த அளவையே கொள்ளவேண்டும். அன்றியும், தமக்காக வேண்டிய

விடங்களைப் பற்றிப் பிறரிடத்தில் பேசுதல் முதலிய காரிய மெல்லாம் சூரியகலை நடக்கும்போதே அவர் செய்யவேண்டும்.

சாயா தரிசனம்

ஆகாயத்தில் மேக மறைவுகளில்லாமல் பரிசுத்தமாய் வெய்யில் சாயும்போது, மேடு பள்ள மில்லாத விடத்தில் நின்றுகொண்டு தன் நிழல் ஐந்தடி நிகளம் முதல் பத்தடி நிகளத்திற்கு வளருதற்கு உள்ளாகிய சமயத்திலே தனது நிழலின் முகத்தைப் பார்த்தபடி நின்று, அந்த நிழலின் தலை கழுத்து - கைகள் - கால்கள் இவ் வுறுப்புகளில் ஒன்றைக் கண் சிமிட்டாமல் கால் அரை நாழிகை மட்டும் பார்த்து, அப்படியே ஆகாயத்தை நோக்கிப் பார்த்தால், அங்கே தன்னுருவம் தோற்றும். அவ் வுருவமானது பொன்னிறமாயிருந்தால் செல்வம் வரும்; வெண்மையா யிருந்தால் பிராணபயமில்லை. ஆயுள்வளரும்; செம்மை நிறமாகில் மனக்குறை - சஞ்சலம் - அபாண்டம் முதலியவை சம்பவிக்கும்; கருமையாகில் தேககலி உண்டாகும். அன்றியும், அந்த உருவில் கையாவது காலாவது தோன்றும லிருந்தால், ஆறுமாதத்தில் மரணமுண்டாம். இதுவுமன்றி, தலையே காணுமல் கவந்தமாய்த் தோன்றினுல் மூன்று மாதத்தில் மரணம். இப்படியே சந்திரனிலும் பார்ப்பதுண்டு. இதற்குச் சாயாபுருட தரிசனமென்று சொல்லுவார்கள். இச் சாயா தரிசனத்தை இடைவிடாமல் பன்னிரண்டு வருஷம் பார்த்துக் கொண்டு வந்தால் தன் முன்னிருக்கும் நிழல் தன்னுடன் பேசும். அப்படிப் பேசும் பருவம் நேருங்கால், அதின் முகாந்தரமாய் அட்டமா சித்தியும் பெறலாகும். பெறுவதன்றி, பின்னுஞ் சில நாட்களில், தன்னிழல் உருவமாகித் தன்னுடனே திரியும். படுத்தால், தானும் படுக்கும்; எழுந்தால், தானும் எழும்பும். அன்றியும்; இவனுக்கு நேரிடும் நன்மை தீமைகளை முன்னதாகத் தெரிவிக்கும். இன்னமும் அநேக அற்புதங்களை விளைவிக்குமென்று பெரியோர் சொல்லுகிறார்கள்.

தரிசன இலக்கணம்

சூரிய தரிசனம்

வலருதித் தவன்பால் தெரிசனை விதைதம்
வகுத்திடக்கேண் மாசிமத் யானத்தினில்
இலகியதா மிரவட்டத்தி னறுநெய் பெய்து
இப்புவியின் மேன்வைத் திவனுருவம் பாற்கில்

நிலவசைதல் நிற்றல்கருத்திடல் சிவத்தவிவைகேர்
நிதிபநிவிட்டோட லிறப்பிருப்பின் னோர்குணபாற்
குலமனேந்தனர்தாதை துணியவன் வங்கிசந்தாய்
குடும்பமிவைக் கவ்வாண்டா குலங்குறை வுற்றிடலே.

நெய்யில் தோற்றும் சூரியனுருவமும் பலாபலனும்

ஆநித்தவாரமும் அமாவாசையும் கூடியதினத்தில் காலையி லெழுந்து, குளித்து முழுகி விரதமிருந்து, சூரியபகவான் உச்சியில் பிரகாசிக்கும் மத்தியானகாலத்தில் சமமான நிலத்தை மெழுகிக் கோலமிட்டு, ஒரு தாம்பாளத்தில் நிறையப் பசுவின் நெய்விட்டு அவ்விடத்தில் வைத்து, அதற்கடுத்த மேற்றிசையில் மஞ்சளினால் பிள்ளையார் பிடித்து வைத்து அறுகுசூட்டித் தாம்பூலம் வெல்லம் படைத்து, தேங்காயுடைத்துக் கற்பூர ஆராதனை செய்து கணேச ரையும் கதிரோனையும் தரிசித்து அசைவற்றிருக்கும் தாம்பாளத்தி லுள்ள நெய்யினிடமாகத் தோற்றுகிற சூரியபகவானை, உனது இட்டதேவதா சிந்தனையுடன் தியானித்துச் சுத்தியாகப் பார்க்கக் கடவாய். அப்படி பார்க்கும்போது கீழ்க்கூறியபடி எட்டுத்திசைக் கும் பலனறிக.

சூரியன் ஒளியற்றுப் பரிசுத்த வட்டமாய்த் தோற்றினால், } ஐசுவரியம் உண்டாம்.

அசைந்தசைந்து காணப்பட்டால், இடம் பெயரவரும்.
அசைவற்று நின்றால், வாழ்ந்த வீட்டிலே வாழலாம்.
கருமையாகக் கண்டால், மரணம் வரும்.
சிவந்து தோன்றினால், மனம் துயரடையும்.
கீழ்த்திசையில் குறைந்தால், தன் குலத்திற்கு ஆகாது.
அக்கினி மூலையில் குறைந்தால், தன் மனைவிக்கு ஆகாது.
தென்றிசையில் குறைந்தால், தன் புத்திரருக்காகாது.
நிருதிதிசையில் குறைந்தால், தன் பிதாவுக்காகாது.
மேற்றிசையில் குறைந்தால், தன் சகோதரருக்காகாது.
வடமேற்கில் குறைந்தால், தனக்காகாது.
வடதிசையிற் குறைந்தால், தன் சுற்றத்தாருக்காகாது.
ஈசானியதிசையில் குறைந்தால், தன் தாய் குடும்பத்திற்காகாது.

மேலும், சூரியமண்டலத்தை நோக்கி, வெண்கமல மலரின் மீது செஞ்சோதியமைந்த விருத்தமண்டலத்தின் மத்தியி லிருப்பவ ராய், மாதுளம்பூவன்ன முடையவராய், திருவதன மொன்றீம், திருவிழிகளிரண்டும், திருத்தோள்க ளிரண்டினுமுள்ள விகசித்த வெண்கமல மலர்களின் நாளம் இரண்டையுந் தாங்கும் இரண்டு திருக்கரங்கள் பெற்றவராய், செவ்வாடை யணிந்தவராயிருக்கும் ஆதித்த மூர்த்தியைத் தியானித்து,

"ஓம், திவசூரியாய நமஃ"

என்று செங்கமல மலராகிய செம்மலர்களால் அருச்சித்து,

பேசிடுவெண் டாமரையா சனஞ்சிச் சிவந்த
பேரொளிசேர் தருவிருத்த மண்டலமத் தியனு
யரசறுமா துளங்கமலம் போலுநிறத் தினனு
யலர்ந்தனவா யிருபுயங்க ளடைந்தவெண்டா மரையின்
காசறுநா ளம்பிடித்த கையிரண்டி னோடு
கருதுமொரு நகமிரண்டு கண்களுடை யவனுய்த்
தேசுமலி செய்யவுடை தனையுடுத்தோ னுகித்
திகழ்சிவசூ ரியனெனிதஞ் சிந்தனை செய்திடுவாம்.

விளங்குதண்டி முதலோராற் சேவிக்கப் படுவோன்
விமலன்முத லுற்சிங்க பதாசத்தின் மேலோன்
களங்கமிலாத் தீத்தைமுதற் சத்திகண சகிதன்
கருதருண மணியொளியன் கடோற்காண்ம மூர்த்தி
துளங்கலிறன் னங்கந்தன் னங்கமெனுங் கிரகம்
தொகுமுடுவா தியசூழச் சுவேதகஞ்சத் திவர்ந்தோன்
வளங்கொள்சுவே தாம்பரத்தோட் கரனிருநல் விழியோன்
வருசிவசூ ரியர்காக்க மகிழ்ந்தடியேங் களையே.

என்று துதிசெய்து இருமுறை ஆன்மவலம் வந்து,

ஓம் வைகர்த்தநய நமஃ
ஓம் விவஸ்தே நமஃ
ஓம் மார்த்தாண்டாய நமஃ
ஓம் பாஸ்கராய நமஃ
ஓம் ரவயே நமஃ
ஓம் லோகப்பிரகாசகாய நமஃ
ஓம் லோகசாக்ஷிணே நமஃ
ஓம் திரிவிக்கிரமாய நமஃ
ஓம் ஆதித்தியாய நமஃ
ஓம் மகாசூரியாய நமஃ
ஓம் அம்சுமாலினே நமஃ
ஓம் திவாகராய நமஃ

என்னும் துவாதச நிருநாமங்களைக் கூறித் துவாதச நமஸ்காரம் புரிந்து நின்று தொழுது இச்சித்த வரங்களைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

சந்திர தரிசனம்

குறைவறுசோ மனைப்பூர்ண நிசிமிவலு ணடுமீக்
கொண்டமுக முத்தரமாய்ச் சுசிகொடுநோக் குதலு
நரைமலரா கிபனிற்போ னண்ணிடிலப் பலமாம்
நடுவையிரு கரமடித்து நாட்டியுங் கலப்பாய்
நிறையவிராப் பகற்பொழுதுற் றிடுங்காலம் வடக்காய்
நின்மலவான் பார்க்கநிலா நிறைவிலுறும் நிறைதன்
மறைதல்வியா குலநிதிய மரணமிதன் பல்மாம்
மலியமுனி யேகாதற் கிதன்சொல்லு மதுவே.

கடலுலகு முழுமையுமே விளக்கிக் காட்டும்
கதிர்மதியு மிருவர்களே கடவுளாகும்
உடலுக்குள் இருகலியாய்ப் பிரிந்தே நாளும்
உயிரானோர் இரவிமதி யவரே யென்றும்
இடைவிடா திருநேரம் தெரிசித் தோர்கள்
ஏருலகப் பெருந்தகையை யெழுதப் போமோ
கடலுவகை உடலுலகிற் கருவ மைத்துக்
கதிர்மதியைக் கண்டவரே கடவுளாமே.

சோமவாரமும் பௌர்னமியும் கூடியதினத்தின் இரவில், பதினேந்து நாழிகையில் பூரணச்சந்திரன் ஆகாயத்தின் நடுமத்தியில் வரும்போது வடக்கு முகமாகநின்று அண்ணாந்த பார்வையுமாய்ப் பார்க்க; முன்பு சூரிய தரிசனத்திற் சொன்ன பலன்போல் அவ்வவ் வடையாளங்களுக்குள்ள பலாபலனைத் தெரிந்து கொள்க. அன்றியும் சித்திரை, ஐப்பிசி மாதங்களில் ஆதிவாரமும் பௌர்னமியும் கூடிய தினத்தின் இரவிலாவது, சோமவாரமும் அமாவாசையும் கூடியதினத்தின் நடுநிசியிலாவது ஆகாசம் நின்மலமாயிருக்கும்போது இடையை இரண்டு கரத்தாலும் பிடித்துக்கொண்டு வடக்குநின்று தெற்குமுகமாகப் பார்க்க மேற்கண்ட உருவம் அளவு குறைந்து தோற்றுமாகில், மனைவியாகூலம் உண்டாம். குறையாமல் நிறையாமல் நிறையளவாகத் தோற்றுமாகில், ஐசுவரியம் வளரும். யாதோ ருருவமும் தோற்றுமல் மறைந்து காணுமாகில், மரணம் வரும். இவை வருங்கால தரிசனமெனப்படும். இனி, நிகழ்கால தரிசனம் சொல்வோமாக.

கருட தரிசனம்

அருக்கனிலறியா தியற்றிடுந்திங்குக
ளனைத்துமேவிலகு மரும்பிறைதன்னில்
திருக்குராபுந்தியும் குருவுமேவெற்றி
பிரபலமாம் வெள்ளியுமுடவன்
தரித்திடுமாயுள் பூரணனென்னத்
தவத்தவராலுரைத்த தரிசனமாகுங்
கருடனிதமும் கண்டாரடையும்
காட்சியின்மிக்க காட்சியிலையால்.

நாள்.	தரிசனம்.	பலாபலன்.
ஞாயிறு	,,	தான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவத்தினால் அணுகிய பிணி முதலிய நீங்கும்.
திங்களும் - செவ்வாயும்	,,	மனவியாகூலம் நீங்கி நன்மை உண்டு.
புதனும் - வியாழனும்	,,	தன்மீதுற்ற பகைவரின் வல்லமை செல்லாது தனக்கே வெற்றியுண்டாம்.
வெள்ளியும் - சனியும்	,,	ஆயுள் வளரும் குடும்ப சந்தானம் உண்டாகும்.

இவ்வாறு தரிசித்தல் ஒரு நாளைக்கேயின்றி, பன்னாளும் செய்து வருவோருக்குச் சாலோக சாமீப சாரூப சாயுச்சிய மென்னும் நான்கு பதவிகளிலும் தத்தம்மாலிழைத்த பலனுக்கியையப் பெறுதலுமன்றி இகத்திலுள்ளவும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமுமுள்ள சம்பன்னராய் நீடித்த ஆயுளுடையராய் நாடியோருக்குக் கூடிய பரோபகாரி யாவரென முன்னோர்களால் கூறப்பட்டிருக்கின்றது.

சயன லட்சணம்

படுக்குந் திசை

கிழக்கே தலைவைத்துப் படுத்தால், தன சம்பத்து பெருகும்; தெற்கே தலைவைத்துப் படுத்தால், ஆயுள் விருத்தியாகும்; மேற்கே தலைவைத்துப் படுத்தால், கீர்த்தி வளரும்; வடக்கே தலைவைத்தால், பிணியும் மனச்சஞ்சலமும் தரித்திரமும் அணுகும் என்று கார்க்கேயர் கூறுகின்றார்.

படுக்கையின் தானம்

தன் மனையில் கிழக்கே தலைவைத்தும், பந்துக்கள் மனையில் தெற்கே தலைவைத்தும், வழிநடை அல்லது தேசாந்திரம் செல்லுகையில் மேற்கே தலைவைத்தும் படுத்தல் வேண்டும். எப்பொழுதும் வடக்கே தலைவைத்துப் படுப்பது ஆகாதென்று விஷ்ணு புராணம் விளம்புகின்றது.

படுக்கை இலட்சணம்

ஆவிக்கிசைந்த அறுசுவை யுண்டியை அருந்திய பின்னர், தனது காலடியால் பூமியிற்பொருந்த நூறடி நடந்து பரவியபின், படுக்கை யிடத்திற் சென்று தனக்கு இன்பமாகும் மங்கள திரவியமு மணிந்து தாம்பூலமருந்தி, பல சிந்தனையும் நீத்துத் தனது அறிவை இருவிழிக்கும், நாசிக்கும் மத்தியமாகிய சுழிமுனையில் இமைப்போ தேனும் நிறுத்தி நிருமல நினைவுடையவனுய் அகண்ட பரிபூரண சச்சிதானந்த வத்துவே என்று மனத்தால் கடவுளைத் தியானித்துத் தனது இட்டதேவதையும் தியானித்து, 'பிரமன் - விஷ்ணு - உருத்திரன் - தீக் கடவுள் - சூரியன் - சந்திரன் - செவ்வாய் - புதன் - வியாழன் - வெள்ளி - சனி யாவரும் முன்னிருந்து யான் இன்றிழைத்த இருகருமமும் கைக்கொண்டு, இந்தப் பாவ இரவைத் தேவ இரவாக்கி, சுகநித்திரை யளித்து, யான் விழிக்குமளவில் நல்ல தெரிசனம் கொடுப்பீராக' என்று சிந்தனை செய்து, ஆசாரியர் மூலமாக தீட்சை பெற்றேனுக இருந்தால் அவராலலிக்கப்பட்ட இராத்திரி சூக்தங்களையோதி, சாவித்திரி மந்திரங்களையுஞ் செபித்து, தலை முதல் பாதாதிகேசமட்டும் அழுக்கில்லா ஆடையால் மூக்காடிட்டுப் போர்வைபோர்த்து இடதுகையைத் தலைகீழாக வைத்துக்கொண்டு படுத்துக்கொள்ளக் கடவது.

நித்திரையின் இரகசியம்

மேற்கூறிய வேதவாக்கிய இலட்சணப் பிரகாரம் நித்திரை செய்யும் புண்ணியர்களைத் தியானித்து, நாசமற்ற வியாபகப் பொருளுக்கு வணக்கஞ்செய்து மனத்தை உள்ளத்தின் கண்ணே அசைவற நிறுத்தி இரவில் நித்திரை செய்யவேண்டும்.

நித்திரைக்கு ஆகாத இடம்

சத்திகோட்டத்திலும், ஈசுவரகோட்டத்திலும், குமாரகோட்டத்திலும், முறிந்த கட்டில்மீதும், ஐவகை மரத்தாற்செய்த கட்டி

லின்மீதும், முச்சந்தி - நாற்சந்தி கூடுமிடத்திலும், இடியால் வெந்த மரத்தடியிலும், முனி கன்னி முதலிய இருக்கும் மரத்தடியிலும், ஏரியருகிலும், மணலின்மீதும், புழுதியிலும், செங்கல் சுடக்கு மிடங்களிலும், சிறுவர்கள் நடுவேயும், நடப்பவர் நடுவேயும், வேள்வித் தீயின்மீதும், சாதாரணத் தீயின்மீதும், புற்றடியிலும், வெட்ட வெளியிலும், நிர்வாணியாகவும், ஈரவுடையோடும், அழுக்காடை யோடும், ஒத்தகிலமில்லாத மேடுபள்ளமான யிடத்திலும், பரப்பிய பச்சிலைமீதும், எண்ணெய் தலையோடும், எச்சிலோடும், கீழ்மக்கள் வாயிலும், ஆரியன்மேலும், பகலிலும் படுத்துறங்கலாகாது என்று காண்க. இந்தச் சயனசாத்திர இலட்சணமானது, உசன முனிவ ராலும் மார்க்கண்டேயராலும் விஷ்ணு புராணத்தில் விசிதமாகக் கூறப்படும்.

நித்திரைக்குரிய காலம்

அத்தமானம் தொடங்கிய பிரதோட காலத்தையும் வீண் போக்காது தத்தமது மதங்க ளனுசரித்த அரி அரக் கோட்டங்களிற் சென்று தரிசனம்செய்து ஒரு சாமங் கடந்தபின்பு அறுசுவை உடைய அன்னம் புசித்து, பிறகு இரண்டு சாமம் வரையிலும் இருக்குவேதாதிக் கிரமங்களோயாவது அரி அர கதாப்பிரசங்கமாவது செவியமுதாக உண்டிருந்து கடைசியில் ஒன்றரை சாமமட்டில் அரு நித்திரைகொண்டிருந்து விடிய அரைசாம மிருக்கையில் விழித்துக் காலைக்கடன் கழிக்கக் கடவது.

நித்திரையின் பொது லட்சணம்

தாழை விழுதின் கிற்றுகளாற் பின்னிய பாயிலும், கோரைக் கிற்றுகளாற் பின்னிய பாயிலும் படுத்து நித்திரை செய்பவர்களுக்கு எவ்வித வியாதிகளும் அணுகா, தேகத்தினிடத்தே வாதபித்த சிலேத்துமங்களோ ஒன்றைவிட்டொன்று அளவு கடக்காவண்ணம் அது தடுத்துவிடும். அன்றியும், தலைசுழற்றல் - பாண்டுரோகம் - பித்தரோகம் - நீராமைக்கட்டி - அதிமூத்திரம் - அக்கினிமந்தம் - சுர தோடம் முதலிய நோயாளிகளுக்கு அவ்வியாதியை அதிகரிக்க வொட்டாமல் குறைமதியம்போல நாளுக்குநாள் குறைத்துவிடும்.

நித்திரைக்காகாத பாயல்கள்

சாதிப்பாயென்னும் பிரம்பினால் செய்யப்பட்டதும், பேரீச்சன் சிற்றீச்சன் பனை இவற்றின் ஓலையினால் பின்னிய பாயும், மூங்கில்

தடுக்கும் ஆகிய இவைகள் வனசஞ்சாரியா யிருக்கும் வேடர் வில்லி யர் குறவர் மறவர் வலைஞர் முதலிய கானவர் தேகத்திற்கு ஒத்ததே யன்றி இல்லறத்தானுக்கு எவ்வளவும் இலசந்தவன்று. வறுமைக் கும் பற்பலவாகிய பிணிகளுக்கும் இவ்வகைப் பாயில்கள் வித்தாக முன்னிற்குமென்று அறியக்கடவது.

படுக்கை யினம்

மகப்பேறுடைய இல்லறத்தான் தனது மக்களை வேறு தனி மையாகத் திருத்திய அணையிற் கிடத்தி அதற்கடுத்த இடத்தில் தானும் தன் மனைவியும் படுப்பதே விதியாம். அப்படி யில்லையா யின் தன் மக்களை கடுவேயும் தானும் தன் மனைவியும் இருகடையி லும் சயனிக்கவேண்டும். அன்றியும், குழந்தைகள் தாய்ப்பால் மறந்து அன்னமுண்ண பழகுமளவும் புணர்ச்சியிற் ரேய்ந்த தாய் தந்தையர் குளித்தாலொழிய அக்குழந்தையைத் தீண்டப்படாது.

மேலோர் படுக்கை

ஞானத்தை விரும்பிய மேலோன் மான்ரோலின்மீதும், மோட்சத்தை விரும்பிய மேலோன் தருப்பாசனத்தின்மீதும், செல் வத்தையும் வீரத்தையும் விரும்பிய மேலோன் புலித்தோலின்மீதும், படுத்து உறங்கவேண்டும். தான் கோரிய விருப்பமே கடைப்பிடி யாய்ப்பற்றி மனத்தை இரும்புத்தூணுக்கு நிகரத்திருத்திய வைராகி களை மாத்திரமே இக்கு மேலோரென்று அறையலாயிற்று. சாதா ரண மனிதர்களுக்குக் கோரைப்பாயும் வெள்ளை வத்திரமுமேயன்றி மற்றவை தரித்திரமாம்.

விழிப்பு தரிசனம்

சூரியன் உதயமாவதற்கு அரைசாமம் முன்னிட்டு மூன்றே முக்கால் நாழிகைக்குள்ளாக இரண்டு முகூர்த்தங்களிருக்கின்றன; அவற்றுள், முதலாவது பிராம முகூர்த்தம் இரண்டாவது இரௌத் திர முகூர்த்தமாம்.

மூன்றிய முகூர்த்தமாகிய பிராமமுகூர்த்தத்தில் நாடோறும் விழித்துக்கொண்டு மனத்தையுங் கண்களையுந் தன் விசாரணையை நோக்கச்செய்து தானுகிய கருவிகளிடத்தும் தன்விழிகள் நோக்கும் எல்லாப் பொருள்களினிடத்தும் பூரணமாய் நிறைந்திருக்கும் நாச மற்ற வியாபகப்பொருளையும் நன்கு சிந்தித்து ஓம் சர்வ சம்மத

வஸ்துவே சென்றபொழுதில் யான் என்ன புண்ணியங்களைச் செய்தேன்? என்ன மெய் வார்த்தைகளைப் புகன்றேன்? என்ன வேள்வி செய்தேன்? யார் யாரைத் தரிசனஞ் செய்தேன்? என்று தன்னைத் தான் விசாரித்து தானிழைத்த கருமங்களைக் கடவுளுக்கு ஒப்படைத்தவாறு பூரணசம்மதமாய்த் தோத்தரித்து, என் கை கால் முதலிய கருவிகளிடத்திலும், நாட்டமாகிய விழிபிடத்தும், ஓட்டமாகிய மனத்தினிடத்தும், விருப்பாகிய ஆசையிலும், வெறுப்பாகிய கோபத்திலும், ஏன்னுயிரிலும் மன்னுயிரிலும், எங்கும் நிறைந்த நீக்கமற்ற வத்துவே! இன்றளவில் எனக்கு நல்ல தரிசனங்கொடுத்து, நல்லோர் வரவுதந்து, நல்லோர் உறவுதந்து, நல்ல நினைவுகொடுத்து, நற்கருமங்களிழைக்கச்செய்து, இந்நாளை எனக்கு நல்லநாளாகக்கடவாய். மரணமோ துன்பமோ நோயோ யாது வருமோ அறியேன்! அறியேன்! என்று அஞ்சிப் பயந்து கடவுளுக்கு நமஸ்காரஞ்செய்து நல்ல மனத்துடன் விழித்து மங்கள வத்துக்களைத் தரிசனஞ் செய்யவேண்டும்.

நித்திரைவிட்டெழுங்கால் விழிக்கும் பொருள்கள்

மூன்கூறியபடி முதலாவதாகிய பிராம முகூர்த்தத்தில் தன் விசாரணைகளை ஊக்கமாகச் சிந்தித்துக் கடவுளைத் தியானித்து, இரண்டாவதாகிய இரௌத்திர முகூர்த்தத்தில் விழிக்கக் கடவதென்று காண்க. அவ்வாறு விழிக்குங்கால், செல்வம் பெருமை வீரியம் முயற்சி புகழ் பலிக்கும் வண்ணம் அவ் அறுகுணச் செல்வனை (அரிதாவது கடவுளை), பசுவை, வேள்வித்தீயை, காலைக்கடன் முடித்து வேதமோதி ஆசாரத்துட னுள்ளவர்களைப் பார்க்கின்றவன் சகல பீடைகளினின்று விலக்கப்படுவான்.

தன்னைப் பூசிக்கப்பட்ட தாய், தந்தையர், ஆசாரியன், கிதவ வடிவம், அரசன், அருணவி, பிம்பம், தன்னைக்காக்கும் தலைவன், தீபம், ஆழி, மலை இவைகளைத் தரிசித்தவன், தான் நினைத்தகாரியம் தடைபடாது வெற்றியுறுமென்பர். அல்லது, சென்றவிடம் சிறப்பெய்துமென்று சொல்லுவர். மஞ்சள் - குங்குமம் - பூமாலை - பழவகை - மங்களஸ்திரீ - கண்ணாடி - புகையொழிந்தநெருப்பு - வெள்ளி - பொன் - வலக்கை - தாம்பூலம் - ஆபரணம் - நாற்று - குழந்தைகள் - பூரணகும்பம் - வயல் - வேசி இவைகளைத் தரிசித்தவன் சர்வ மங்கள காரமும் மனச் சந்தோடமும் பெறுவான் என்று காண்க.

பார்க்கத்தகாத பொருள்கள்

வேதத்தால் விலக்கப்பட்ட தொழிலியற்றுவோன் - அங்க வீனன் - ஆசாரமில்லாதவன் - நாத்திகன் - தரித்திரன் - மூக்கறுப் புண்டோன் - மொட்டை - பேடி - கூன் - குருடு - செவிடு - சடை சன்னியாசி - கொலைத்தொழிலோன் - குட்டன் - வடுகன் - இருப்பா யுதம் - ஏணி - வலை - சாணன் - ஆசூசம் - விதவை - பாம்பு - பூனை - சாம்பல் - எருமை - வராகம் இவைகளை அதிகாலையில் விழித்து நோக் கக்கூடாதென சயனசாத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

மலசலக் கழிவு

மேற்கூறியபடி இரவின் முடிவில் சுபலட்சணம்போல் விழித் தெழுந்து சலக்கரைசென்று மூன்று குடிநீர் வாயிற்பெய்து கொப்ப ளித்து உமிழ்ந்துவிட்டு மலசலங்களைப் பிரவர்த்திக்கச் செல்லவும்; புல்லுகளாலாவது உலர்ந்த சருகு இலைகளாலாவது பூமியை மறைத்து ஆடையால் தலையையும் உடம்பையும் மூடிக்கொண்டு வாய்பேசாது மலமூத்திரங்களை விடவேண்டும். விடுங்கால், சுவாசத்தை உள்ளே இழுக்கலாகாது.

மலம் கழிக்கும் திசை

பகற்போதில் வடக்கு முகமாயும், இராப்போதில் தெற்கு முகமாயும், உட்கார்ந்து மலமூத்திரங்களை யொழித்தல் வேண்டும். அக்காலத்தில், பூணூல் உள்ளவனும், தருப்பையால் அமைத்த பௌத்திர முள்ளவனும், அவைகளை வலக்காதில் அணிந்திருக்க வேண்டியது. இல்லறத்தானுயின் பூணூலைக் கழுத்துடன் சுற்றி முதுகின் புறமாகத் தொங்கவிட்டு மல மூத்திரங்களை யொழித்தல் வேண்டும்; அல்லது செவிக்காயினும் சுற்றிவிடலாம்.

மலம் கழிக்கும் இடம்

சூரியனுக்கு எதிரிலும், அக்கினிக்கெதிரிலும், பசுக்களுக்கெதிரி லும், வெட்டவெளியிலும், ஆலயத்திற் கெதிரிலும், வேதியர் நிலத் திற் கெதிரிலும், மலர்பறிக்கும் சோலையிலும், அருந்துதற்குரிய வாவியருகிலும், நடக்கும் வழிகளிலும், கிழக்குமுகமாயும், மேற்கு முகமாயும், எப்போதும் மலம் கழிக்கலாகாது. இந்த விதியைக்

கடந்து அங்ஙனமே பிரவர்த்திக்க முயலுவோர்கள் ஆக்கினையென்னும் சாபத்திற்குப் பாத்திரமாவதன்றிச் செல்வமும் ஆயுளும் குறைந்து நரகலோகத்திற்கு முன்னிற்பார்கள் என்று காண்க.

மலசலங்களை அடைக்கலாகா

மலசலங்களை அன்றுடம் கழிப்பது காலைக்கடனென்பதற்குக் காரணம். இக்கடனை மாலைக்காலத்தில் கழிக்கலாகாது. காலையில் கழிக்க இடமில்லையாயின் மாலையில் கழிப்பதில் தோடமில்லை. அப்படி இருவேளையும் மலசலாதிகளை அடக்குவதால், பிராணனுக்குத் துன்பத்தை உண்டுபண்ணத்தக்க பயத்தை விளைவிக்கும். அதாவது மலம் இறுகுமாயின், வாதம் அதிகப்பட்டு உடந்தையாக உஷ்ணம் சம்பந்தப்பட்டும், சீரணசக்தியைக் குறைவுபடுத்திப் பல பிணிகளுக்கும் வழியாகி விடும்.

> நிண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமல்
> பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல்—உண்ணுங்கால்
> நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
> பேருரைக்கிற் போமே பிணி.

என்று ஆயுள்வேதப் பேராசிரியராகிய தேரையரும் கூறியுள்ளார்.

(இதன் பொருள்) அன்றுடம் மலசலங்களை அடக்காமலும், மாதரின்பால் காதத்தை விசேடித்து விடுக்காமலும், போஜனம் செய்யுங்கால் நீரைக் காய்ச்சியும், மோரை விளாவியும், நெய்யை உருக்கியும் உண்பவர்களின்பேரை உரைத்தாலே பிணிகள் அகன்று ஒழிந்து விடும் என்பதாம்.

தந்தசுத்தி இலக்கணம்

பற்கோலுக்குரிய மரங்கள்

மா-புன்னை - வில்வம் - அத்தி - வேங்கை - கருவேல் - சாதிக்காய் மரம் - கருக்குங்கிலியமரம் - அலரி - நாயுருவி இவைகளால் லமைந்த பற் குச்சுகளால் பல் துலக்கவேண்டுமென சாத்திரம் கூறுகின்றது; இதுவுமன்றி, மணமுள்ள மரங்களும், முள்ளுள்ள மரங்களும், பாலுள்ள மரங்களும், பல்துலக்கப் பயன்படுமென்று இருடிகளால் சொல்லப்படுகிறது.

பற்கோல் எடுப்பதற்கு மந்திரம்

வெண்பா

ஆலாயும் புன்னையுமா யத்தியுமா யுட்புறமும்
பாலாய் நிறைந்த பராபரமே—மேலாகும்
தாபஞ்சேர் காலின் றருவரசே மோட்ச
ஞாபகமே நல்கெஞ் ஞான்றும்.

'காட்டின் தலைவனுகிய ஓ தருவரசே! நீர் எமக்கு ஆயுளையும் ஆற்றலையும் - புகழையும் - ஒளியையும் - மக்களையும் - பசுக்களையும் - பாக்கியத்தையும் - பிரம ஞானத்தையும் - சூட்சும குணத்தையும் கொடுத்துக் காப்பாயாக' என்னும் வாக்கியத்தைச் சிந்தித்தவர்களாய் வியர்த்தமாய் அழியும் பல கிளைகளையும் ஒடித்தெறியாமல் தனக்கு வேண்டியதை மாத்திரம் மந்திரப்பிரயோகத்துடன் தீண்டி யொடித் துக்கொள்ளக் கடவார்கள்.

பல் விளக்கும் திசை

பற்கோலைத் தானே சென்றெடுப்பவர்களும், அல்லது மேற் கூறிய விருட்சத்தினின்றும் ஏவலாளிகள் மூலமாய் கொண்டுவரப் பட்டு உபயோகிப்பவர்களும், அப்படிக் கொணரப்பட்ட பற்கோலைத் தீண்டும்போது மேற்கூறிய மந்திரச்சொற்களை ஒருமுறை உச்ச ரித்து, அதன்பிறகு அந்தப் பற்கோலைத் தீண்டி எடுத்துச் சுத்த ஜலத்தினுல் மூன்றுவிசை அலம்பியபிறகு, வலது கையால் வாயில் வைத்து வாய்பேசாமல் கிழக்கு மேற்கு வடக்கு இந்த மூன்று திசைகளில் எந்தத்திசையேனும் நோக்கி இருந்து பற்றுலக்க வேண்டும். தெற்கு முகம் நோக்கி ஒருபொழுதும் பற்றுலக்கக் கூடாது; நடந்து கொண்டும் பற்றுலக்கக் கூடாதென்றறிக.

பற்கோல் அளவு

வேதியருக்குப் பன்னிரண்டங்குலமும், அரசனுக்கு ஒன்ப தங்குலமும், வைசியனுக்கு ஆறு அங்குலமும், சூத்திரருக்கு நான்கு அங்குலமும், ஆக பற்கோலுக்கு அளவு அமைத்திருப்பதுமன்றி பாலுற்றமரங்களில் தோன்றியதாகவும், சற்றேறக்குறைய கடை விரற் பருமனுடையதாகவும், தலையைவிட கடை சிறுத்துள்ளதாக வும், இருக்கவேண்டியது என்று பெரியோர் கூறுகின்றனர். இதுவு மன்றி, சிறுபற்களை உடையவர்களுக்குச் சிறுகனமுடையதும், நடுத்தரப் பற்களை உடையவர்களுக்கு நடுத்தரப் பற்கோலும், பருத்த

பற்களை உடையவர்களுக்கும் கோணப்பற்களை உடையவர்களுக்கு பருத்த பற்கோலும் ஆக பற்கோலானது மூவகைப்படுமென்று முனியோர் கூறுவர்.

பல் துலக்கும் காலம்

நோயின்றிச் சுகசரீரம்பெற்ற ஆடவர் வனிதைமார் யாவ ரேனும் சூரியவுதயத்திற்கு ஒரு முகூர்த்தப்பொழுது முந்தி பிராத்தக் காலத்திலெழுந்து பல் துலக்கவேண்டியது. அப்படி துலக்குவோர் புரோட்சித்துக்கொள்ள வெடுத்த சுத்த ஜலத்தை அவன் பிதுரர் களும் முனிவர்களும் தாங்களும் கவனித்து அந்தப் புண்ணிய புருடனை ஆசீர்வதித்து 'இக்காலப்போலவே தினதினமும் நல்ல நாளாக நோயின்றி வாழக்கடவாயென வாழ்த்திச் செல்வார்; இம் முறை தவறிக் கதிரேர்னுக்கெதிராக உதகம் உமிழும் பாமரனை நரனை அவன் பிதுர்களும் முனிவர்களும் முகம் காட்டாது பின் திரும்பி, பாவம் நிறைந்த பாத்திரமே! பரலோகமிழந்து நரலோக மடையக் கடவா' யெனக் கோபமுடன் சாபமிட்டேகுவரென ஆன்றோர் அருளிச்செய் திருக்கின்றனர்.

பல் துலக்க ஆகாதவை

கமுகு, தென்னை, நொச்சி, கடம்பு, ஈந்து, கரும்பிசினியுள்ள மூருக்கு, செங்குருஞ்சி, தேவதாரம், செம்பருத்தி, வாழை, இலவு, புல்லு, வைக்கோல், கரி, மணல், சாம்பல், தழைகள், சிறுமுட்கள், கணுவுகள் அகத்தியொத்த சிறுநார் முதலிய உடையனவாய்ப் பல் சந்திற் கொள்வன. தீக்குணமுடைய மூங்கில், சித்திரமூலம், எருக்கு, கள்ளி, சேராங்கொட்டை மரம், கூந்தற்பனை வன்னி, தருப்பை, பனை, கருகாளம், தாழை இந்த வத்துக்களால் ஒருபோதும் பற்றுலக்கலாகாது. பொன்மகள் தலைவனுகிய மகாவிஷ்ணு தூலக் கினபோதிலும் ஐசுவரியமெல்லாம் அழிந்துபோகு மென்று சிரேட்டராகிய தவமுனிகள் கூறியிருக்கின்றனர்.

பல் துலக்க ஆகாத தினங்கள்

அமாவாசை, பூரணை, சூரியகிரணம், மாசப்பிறப்பு ஆகிய இந் நான்கு காலங்களிலும், பெண்புணர்ச்சி செய்யுந்தினம், சிரார்த்தம் செய்யுந்தினம், தான் பிறந்தநாள், மனைவி பிறந்தநாள், விரதநாள், உபவாசமிருக்கும் நாள் இக்காலங்களிலும், பிரதமை, சஷ்டி, அஷ்டமி, நவமி, சதுர்தசி இத்தினங்களிலும், பிதுர்கடன் கழிக்

குக் தினத்திலும் பற்றுலக்கக் கூடாது. இதுவுமன்றி, மண்கட்டி, கற்றாள் ஓடு இவைகளாலும், பெருவிரல் பவுத்திர விரல் இவ்விரண்டு விரலொழிய மற்ற மூன்று விரல்களாலும் பற்றுலக்கக் கூடாது.

பல் தூலக்க விலக்கிய நாட்களுக்குச் சாந்தி

மேற்கூறியபடி பல்தூலக்கக்கூடாத நாள்களில் பழமையில்லாத கேணியிலெடுத்த புதிய சலத்தை வாயிற்பெய்து கொப்பளித் துமிழ்ந்து பவுத்திர விரலினால் பற்களைத் தூலக்கிப் பன்னிரண்டுவிசை மேற் சுத்த சலத்தால் வாய்கொப்பளிக்க வேண்டியது. இவ்விதிகள் யாவும் சாமான்னிய மனிதரால் சொல்லப்பட்டதன்று; கார்த்தியா யனர், உசனஸ், எமன், வியாசர், யாஞ்சவல்கியர் முதலிய நிரிகால முணர்ந்த மகானுக்களால் கூறப்பட்டன.

ஸ்நான விதி

மூன்கூறிய விதிப்படி பற்கோலால் பல் விளக்கிக்கொண்டு சுத்தாசமனஞ்செய்து, முயற்சியோடும் வாய்பேசாது நாடோறும் உதயகாலத்தில் நன்றாக நீராடவேண்டும். உட்டினகாலம் வந்த அளவிலே, உணர்ந்தவன் செய்யத்தக்க ஒருதலையான தொழிற் கடனைமுடித்து விதிப்படிச் சுத்தஞ்செய்து பரிசுத்தமாகிய ஆற்று நீரிலே நீராடவேண்டியது. நீராடாமலே செபம், ஹோமம் முதலிய கருமங்களைச் செய்யலாகாது; வாயினின்றும் வடிநீர், உமிழ்நீர், வியர்வை இவைகளாற் பூசப்பட்ட உடம்பையுடையவன் படுக் கையை விட்டெழுந்து, உடம்பு மிக அழுக்கோடுங்கூடி யொளியற்று ஒன்பது தொளைகளை யுடையதாய் மலங்களை அவற்றின் வழியே இரவும்பகலு மொழுகவிட்டுக் கொண்டிருக்கின்றது. ஆதலின், வைகறையில் நீராடுதல் அவ் வுடம்பினைச் சுத்தஞ் செய்வதாக விருக்கின்றது. அந்த முழுக்கு, கண் காணத்தக்க பயனையும் கண்ணாற் காணக்கூடாத புண்ணியப் பயனையும் தருதலுடைய தென்று பெரியோர் புகழ்ந்து கூறுகின்றனர். காலையில் நீராடு வோன் சுத்தமான உள்ளமுடையவனாதலின் செப தப முதலிய எல்லாக் கருமங்களையுஞ் செய்தற் குரியவனாகின்றான்.

ஸ்நான காரணம்

அறியாமையாலாயினும், ஆசையாலாயினும், இராக்காலத்தில் செய்யப்பட்ட தீய செய்கையால் விளைந்த குற்றங்களை இரு பிறப்

பாளர் காலை முழுக்கினால் கழுவிச் சுத்தஞ்செய்து கொள்கின்றனர். இவ்வாறே, எப்பொழுதும் உஷத் காலையிலெழுந்து பல்விளக்கி, நீரின்மூழ்கி, தேவதருப்பணமும், இருடி தருப்பணமுஞ் செய்ய வேண்டுவது கடமையாம். உஷத் காலங்களிலும் சந்திரகாலங்களிலும், சூரிய வுதயகாலத்திலும், நீராடுதல் பிரஜாபத்தியமென்னும் விரதத்தோ டொப்பானது. எல்லாப் பாவங்களையும் நன்கு ஒழிக்கத்தக்கதாம். அப்படி நீராடி முடிந்தவுடன் இரண்டு கைகளையும் ஒருங்குசேர்த்து நிரம்ப நீரைப்பூரித்துக்கொண்டு பசுவின் கொம்பினுயரமளவாகக் கைமேலெடுத்து, நீர்நிலைநடுவே யந்நீரை யிறைத்தல் வேண்டும். உந்திவரையில் நீரிலிருந்து கொண்டு மேல்நோக்கிய உள்ளத்தால் சிந்தித்துத் தருப்பணம் செய்தல் வேண்டும்., பிறரையும், இருடி கணங்களையும், தேவ கணங்களையும், களிப்பிக்கும்படி நீரினால் தருப்பணஞ்செய்ய வேண்டும், தேவதைகளையும் - தேவகணங்களையும் - முனிவரையும் - முனிகணங்களையும் நீரினால் தருப்பிக்கவேண்டும். நீராடியபின் அந்த நீர் நிலையிற்றானே பிதுர்தேவர்களைத் திருத்திசெய்ய வேண்டும். மேலேறி உடுத்தவாடையைப் பிழிந்து அதன்பின் சந்தியா வந்தனஞ் செய்யவேண்டும்.

நீராடுவோன்

நீராடும்போது ஆடையாலாயினும் கைகளாலாயினும் உடம்பைத் துடைக்கலாகாது; நீராடுகையில், உடுத்தியிருந்த உடையை பிழியவுங் காது தலைமயிரை உதறலு மாகாது.

நீரின் இரகசியம்

வேதக்கிரமமும் சுசிகரமுமுடைய மேலோன் நீராடும்போது தலையினின்றும் வடிகிற நீரைத் தேவர்கள் பானஞ்செய்கின்றனர். முகத்தினின்றும் வடிகிற நீரை பிதரர் பானஞ் செய்கின்றனர். இடைக்கண் ஒழுகுகின்ற நீரையெல்லாங் கந்தருவர் பானம் செய்கின்றனர். மூன்றுகோடியே ஐம்பத்து நாலாயிர உரோமங்களினின்றும் ஒழுகுகின்ற நீரானது எல்லாத் தீர்த்த பாவனையாகின்றது; முடிவில் தேகத்தினின்று பூமியிற் படிந்த நீரானது சகல சீவராசிகட்கும் ஆதாரமாகின்றது. ஆகையால், நீராடினவன் நீராடிய உடையாலாவது கையாலாவது துடைக்கலாகாது.

நீராடிய ஈரவுடையை யுடையவனுப் மலமூத்திரங்களை விடுவானுகில் மூன்றுமாதம் பிராணுயாமஞ்செய்து மறுபடியும் நீராடினு லொழியச் சுத்தனுகமாட்டான்.

பிரமசாரியனுக்குக் காலை ஒரேதடவையும், கிரகத்தனுக்கும் வானப்பிரத்தனுக்கும் காலை உச்சி ஆகிய இரண்டு தடவையும், சந்நியாசிக்கு மூக்காலையும் நீராடல் விதிக்கப்பட்டிருக்கிறது.

வைணவ நித்திய கன்மம்

உபநயனமானபின் மாலைச்சந்தி முதற்செய்து கிரமமாக மற்றைச் சந்திகள் செய்யவேண்டும்.

சூரியோதயத்திற்கு மூன்று நாழிகை யிருக்கும்போது நட்சத்திரம் தோன்றுகிறதுமுதல், சூரியவிம்பம் காணப்படுகிறவரையில், காலைசந்தி அல்லது பிராதஷ் சந்தியா காலம்.

சூரியவிம்பம் அதாவது முதல் நட்சத்திரம் தோன்றுகிறவரையில் மாலைச் சந்தியா காலமாகும்.

மாலைச்சந்தி சூரியனேடு கூடியது உத்தமம்; காலைச்சந்தி நட்சத்திரத்தோடு கூடியது உத்தமம்; மத்தியானசந்தி சூரியன் உச்சியிலிருக்கும்போது உத்தமம்; "காணுமல் கோணுமல் கண்டுகொள்க" என்பதும் இது.

உத்தம காலத்தில் சந்தி செய்கிறவர்கள் விசேட பலனையும் மோட்சத்தையும் பெறுவார்கள் என்றூர் கவுதமர்.

பிறந்தது முதலிய சூதகங்கள் - சித்தப்பிரமை - அவசரம் - பயம் இவைகளொழிய மற்றெல்லாக் காலத்திலும் இரண்டு சந்தியானுட்டானங்களும் செய்யத்தக்கதென்று விஷ்ணுபுராணம் கூறுகின்றது. நோய்த்துன்ப மில்லாதவனும் சுகமாக விருப்பவனுமாகிய இருபிறப்பாளன் சந்தியாவந்தனத்தை விட்டுவிட்டால் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டியவனுகிறுனென்று யோகயஞ்ஞவற்கியர் கூறினர்.

சூதகத்தில் பிராணுயாம முதலிய ஏனைய மந்திரங்களை மனதினுற்செய்து சந்திக்கடனை முடிக்கவேண்டு மென்று மரீசி கூறுகின்றனர்.

விடியற்காலமும் பிரதோடசமயமும் சந்திக்கடனுக்குச் சிறந்த காலங்களாகும்; அது கடத்தலால் கருமத்திற்குரிய பொழுது தவறிப்போதலில்லை என்று விருத்தமது கூறினர்.

சந்திரக்கிரியை

பூசுத்தம் - புராணசமனம் - சங்கற்பம் - மார்ச்சனம் - சலபானம் - மிருகியாசமனம் - பிராணயாமம் - அருத்தியதானம் - சந்தியாங்க தருப்பணம் - காயத்திரிமுக சுருகியாசமனம் - காயத்ரி செபம் - சூரியோபதானம் - காயத்ரீப்ரதாபனம் - புராணசமனம் ஆகிய இக்கிரியைகளை முறையாகச் செய்தல்வேண்டும்.

இவற்றுள் அர்க்கியப் பிரக்கோபனம் - காயத்ரீசெபம் - சூரியோபத்தானம் என்னும் மூன்று முக்கியமானவைகள்.

பூசுத்தம்

'உத்திஷ்டந்துபித பிசாச்சர ஏதேபூமி பரகா ஏதேஷாமவிரோதே நப்ரம்மகம் மசர்மாரபே' என்று சலத்தையள்ளி நிலத்தில் புரோட்டித்துப் பூசுத்தம் செய்யவேண்டும்.

புராணசமனம்

நியமம் வடக்குமுகம் அல்லது கிழக்குமுகமாக உட்கார்ந்து முழங்கால் நடுவில் கைகளை வைத்துக்கொண்டு மௌனமாய்ப் பிரமதீர்த்தத்தினால் ஆசமனம் செய்யவேண்டும்; முழங்காலுக்கு மேலளவான சலத்தில் நின்றுகொண்டு ஆசமித்தல் வேண்டும்; பீடத்தின்மேல் காலை வைத்துக்கொண்டாவது காலை நீட்டிக்கொண்டாவது ஆசமித்தல் கூடாது.

ஆசமிக்கும்போது புல் தருப்பை அல்லது பொன்னினாற் செய்த பவித்திரத்தையுடையவனாய் நதிசலத்தினால் ஆசமனம் செய்யவேண்டும்; நதி இல்லாதபோது பொன் - வெள்ளி - மண் - அத்திக்கட்டை இவற்றாற் செய்த பாண்டத்தில் நிரப்பிய ஜலத்தால் ஆசமனஞ் செய்யவேண்டும்.

மந்திரம்	கிரியை
ஓம் கேசவாய ஸ்வாஹா ஓம் நாராயண ஸ்வாஹா ஓம் மாதவாய ஸ்வாஹா	இம் மூன்றால் சலபானம் செய்கிறது.

ஓம் கோவிந்தாய நமஃ
ஓம் விஷ்ணுவே நமஃ
} இவ்விரண்டால் கரசுத்தி செய்கிறது.

ஓம் மதுசூதனாய நமஃ
ஓம் திரிவிக்ரமாய நமஃ
} இவ்விரண்டால் உதட்டைத் துடைக்கிறது.

சுண்டுவிரல் அடியால் வருகிறதீர்த்தம் பிரசாபதீர்த்தம், சுட்டுவிரல் அடியால் வருவது பிதிர்தீர்த்தம், பெருவிரல் அடியால் வருவது பிரமதீர்த்தம், கைதுனியால் வருவது தெய்வ தீர்த்தம் என்றூர் யாஞ்ஞவற்கியர்.

ஓம் வாமனாய நமஃ
ஓம் ஸ்ரீதராய நமஃ
} இவ்விரண்டால் கைகளை அலம்பிக் கொள்கிறது.

ஓம் இருடிகேசாய நமஃ
ஓம் பத்மநாபாய நமஃ
} இவ்விரண்டால் கால்களை அலம்பிக் கொள்ளுகிறது.

ஓம் ப்ரத்யும்நாய நமஃ சிரசைத் துடைத்துக் கொள்ளுகிறது.

ஓம் சங்கர்ஷணாய நமஃ விரல் நுனியால் மோவாய்க்கட்டை

ஓம் வாசுதேவாய நமஃ
ஓம் ப்ரத்யும்நாய நமஃ
} கடைவிரல் சுட்டுவிரல்களால் நாசி யிரு புறங்கள்.

ஓம் அநிருத்தாய நமஃ
ஓம் புருடோத்தமாயநமஃ
} பெருவிரல் மோதிர விரல்களால் இரண்டு கண்களை தொடுகிறது.

ஓம் அதோக்ஷஜாய நமஃ
ஓம் நரசிம்மாய நமஃ
} கட்டைவிரல் சுண்டுவிரல்களால் நாபி உள்ளங்கையால் மார்பு தொடுவது.

ஓம் அச்சுதாய நமஃ கையைத் தலைமீதுவைத்து

ஓம் ஜநார்த்தநாய நமஃ
ஓம் உபேந்திராய நமஃ
} கை கூப்பிக்கொண்டு

ஓம் அரியே நமஃ
ஓம் கிருஷ்ணாய நமஃ
} இருபுயத்தின்மேல் தொடுகிறது.

சங்கற்பம்

ஸ்ரீகோவிந்த கோவிந்த மகா விஷ்ணோராக்ஞயா - ப்ரவர்த்தமானஸ்ய யாதய ப்ரஹமணைத்விதிய - ப்ரஹ்ராத்த - ஸ்வேதவராஹ கல்பே - வைவஸ்த மந்தரே - கலியுகே - பிரதமபாதே - ஜம்புத்வீபே - பாரதவருஷே - பரதகண்டே - மேரோ தக்ஷிணதிக்பாஹே பாஸ்கர க்ஷேத்ர ஸ்மஸ்ததேவதா - பிராம்மணஸ் ஸந்நிதௌ - அஸ்மின்ன வர்த்தமான - விவகாரிக - சாந்திரமநேந - ஸம்வத்ஸரே - அயநே - ருதௌமாஸே - பக்ஷே - திதே - வாஸரே - ஸ்ரீவிஷ்ணு நக்ஷத்ரே -

விஷ்ணுயோகே - ஸ்ரீபரமேச்வர - முத்திசயம் - மோபாத்த - துரிதக்ஷ யத்வர - ஸ்ரீபரமேஸ்வரப் பிரீதியர்த்தம் ஸந்தியா மூபாஸிஷ்யே.

மார்ச்சனம்

சரீரத்தின் புறச்சுத்தி சாதனமாயுள்ளது

நியமம் - வலதுகையினுல் தருப்பையைக்கொண்டு சலத்தைக் கிரகித்து ஒரே தாரையாய் மார்ச்சனம் செய்தல் வேண்டும்.

மந்திரம்	கிரியை
ஓம் ஆபோஹிஷ்டாம யோயுவஹ	சிரசின்மீதில்,
ஓம் தானஊர் ஜேததாதனு	பாதத்தின்மீதில்,
ஓம் மஹோணுயசக்ஷசே	கீழ்த்தேகத்தில்,
ஓம் யோவஸ்ய சிவத்மோரச்	கீழ்த்தேகத்தில்,
ஓம் தஸ்யபாஜயதேஹன	பாதத்தின்மீதில்,
ஓம் உசதீரிவபதா	சிரசின்மீதில்,
ஓம் தஸ்மா அரங்கமாமவ	சிரசின்மீதில்,
ஓம் யஸ்யயக்ஷயாச ஜின்வத	கீழ்த்தேகத்தில்,
ஓம் ஆமோஜ்னயதாச்சன	பாதத்தின்மீதில்,

புல்லோடு சலத்தைக் கீழேவிடவேண்டியது.

சலபானம்

சரீரத்தின் அகச்சுத்தி சாதனமாயுள்ளது

அக்கினிஸ்ச்ச - மாமன்புஸ்ச்ச - மன்யுபதஸ்ச்ச - மன்யுருக்தேப்ய பாபேப்யோ ரக்ஷந்தாம் - யத்ராத்ரிய பாபமகார்ஷம் - மனசாவாக் காஹஸ்தாப்யாம் - பத்பயா முதரேண சிஸ்நா - அஹஸ்தவலும் பது - எத்கிஞ்சதுரிதம்மயி - இதமஹம் மாமிருதயோ கௌசந்தியே ஜோதிஷி - ஜ-ஹோமி - ஸ்வாஹா என்னும் மந்திரத்தை சாயங் காலையில் உச்சரித்துச் சலபானம் செய்வது.

சூர்யஸ்ச்ச, மாமன்யுச்ச - மன்யுபதச்ச - மன்யுருக்கு தேப்ய - பாபேப்யோ ரக்ஷந்தாம் யத்ராத்ரிய பாபமகார்ஷம் மனசா - வாக்கா ஹஸ்தாப்யாம் - பதப்யா முதரேண சிஸ்நா - ராத்ரிஸ்வலும்பது எத்கிஞ்ச துரிதம்மயி இதமஹம் மாமிருதயோகௌ - சூர்யேஜோ

திவி ஜஹோமி - ஸ்வாஹா என்று காலைச்சந்தியில் சலபானம் செய்வது.

ஆப் புனந்துப்ருதிவீம் - ப்ருதிவீபூதா புனுதுமாம் - எதுச்சிஷ்டம் போச்சியம் யத்வாதுர்ச்சரிதம்மா - சர்வம்புனந்துமா - மாபோஸ்தாம்ச்ச ப்ரதிக்ரஹக ஸ்வாஹா என்று மத்தியானத்தில் சலபானம் செய்வது.

மிருத்தியாசமனம்

ஸ்ரௌதம்

காயத்ரீ ஜெபத்தினாலும் அமாவாசை பருவந்தனிலும் செய்வது.

மந்திரம்

ஓம் தத்ட்து விதுர்வரேண்யம் - பர்கோ - தேவஸ்ய தீமஹி தியேயோ நப்ரசோதயாத்.

கிரியை

உட்கார்ந்து மூன்றுதரம் சலபானம் செய்வது; அச்சலம் பிராமணர் - சத்திரியர் - வைசியர்களுக்கு முறையே நாபி - கழுத்து - தாடைகளைச் சேரவேண்டும்.

மந்திரம்

ஒன்பது மார்ச்சனம் ஏழு வியாகிருதிகள், மூன்று காயத்ரீ பாதம், இரண்டு காயத்ரீ சிரசு.

கிரியை

உதட்டை அடிவிரலால் இரண்டு தரம் துடைத்தல், நீரை வலதுகையில் இடது கையினால்விட்டு, அந்த நீரினால் பாதத்தையும் சிரசையும் ஸ்பரிசித்துக் கட்டைவிரல் மோதிரவிரலால் கண்களை ஒத்திக்கொள்ளல், கட்டைவிரல் அடுத்த விரல்களால் நாசி யிருபுறங்களைத் தொடுதல், கட்டைவிரலால் காதுகளைத் தொடுதல் செய்து கைகளைக் கழுவிக்கொள்ளல்.

சுமார்த்தம்

மூன்றுதரம் சலபானஞ்செய்து வலது கையினால் இடது கையில் சலத்தை நிறுத்திக் கைகளைக் கழுவிக்கொண்டு முகத்தை

இரண்டுதரம் துடைத்துக் கால்களை அலம்பிக்கொண்டு நான்கு விரல்களினால் உதட்டைத் துடைத்து - அங்குஷ்ட தாஜனி (பெருவிரல் - சுட்டுவிரல்) களால் நாசியினிரு புறங்களையும், கட்டைவிரல் நடுவிரல்களினால் கண்களையும், கட்டைவிரல் மோதிர விரல்களினால் காதுகளையும், கட்டைவிரல் சுண்டுவிரல்களினால் நாபியையும், கரதலத்தினு லிருதயத்தையும், எல்லா விரல்களினாலும் சிரசையும், பாகுமூலத்தையும் தொடவேண்டும்.

பிராணயாமம்

அகச்சுத்தி சாதனமாயுள்ளது

நியமம் :—கண்களை மூடிக்கொண்டு வாய்பேசாமல் பிராணயாமம் அப்பியாசிக்கவேண்டும். மூக்குநுனியைக் கிரகத்தவானப் பிரஸ்தன் ஐந்து விரல்களினாலும் - எதி பிருமச்சாரிகள் சுட்டுவிரல் மோதிரவிரல் பெருவிரல்களினாலும் பிடித்துக்கொள்ளல் வேண்டும். இதற்கு ஓங்கார முத்திரையென்று பெயர்.

மந்திரம்

ஓம்பூர் - ஓம்புவ - ஓம்ஸ்வா - ஓமமஷ் - ஓம்ஜன - ஓம்தபஸ் - ஓம்சத்யம் - ஓம்தத்சதவிதுர் வரேண்யம் - பர்கோதேவஸ்யத்தீம ஹித்யோயோன ப்ராசோதயாது - ஓமா போஜ்யோதி - ரசோம்ருதம் - ஓம் பிரம்பூர் புவஸ்வரோம்.

கிரியை

பிரணவ அபிதேயமான கிரம்பத்தை இருதயத்தில் தியானஞ் செய்துகொண்டு மூன்றுதரம் இம்மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு மூக்கினிடத்துச் சுவாசத்தினால் வாயுவைப் பூரித்து இருதயத்தில் அதைச் சலியாமலிருத்தி வலது துவாரத்தினால் வெளிப்படச் செய்வது.

அருக்கியதானம்

சூரியனைப் பாதிக்கின்ற இராக்கதர்களுடைய நாசத்தின் பொருட்டுச் செய்வதாகும்.

நியமம் :—சூரியனைநோக்கிக் காலையில் குனிந்தும், மத்தியானத்தில் சாந்தமாய் நின்றும், மாலையில் உட்கார்ந்தும் அர்க்கிய

தானஞ் செய்தல்வேண்டும். காலை மத்தியானத்தில் தானமாக விடும் நீரைச் சலத்தில் அல்லது சலத்தால் புரோடிக்கப்பட்ட நிலத்தில் விடவேண்டியது. மாலை அருக்கியம் சலத்தில் விடுதல் கூடாது.

மந்திரம்

ஓம் தத்ஸத் விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்யத் தீமஹீ தியோ யோனப்ராசோதயாது.

கிரியை

கைகளாலெடுத்து மந்திரித்து மோந்து தரையில்விட்டு வேறு ஜலத்தில் காயத்திரியைச் செபித்து சூரியனுக்கெதிராக நின்று ஒரு தரம் அருக்கியதானம் மூக்கின் நுனியுயரம் தூக்கிவிடல் வேண்டும்.

சந்தியாங்க தருப்பணம்

நியமம்:—மிருத்தியாசமனம் இருமுறைசெய்து, பிராணயாம பூர்வோக்த விஷ்ணு (சிவ) ப்ரீதியர்த்தம் பிராதஸ் ஸந்தியாங்க தருப்பணம் கர்ஷியே என சங்கற்பித்து,

மந்திரம்:—ஸந்தியாம் தர்ப்பயாமி
காயத்ரீம் தர்ப்பயாமி
ப்ராஹ்மீம் தர்ப்பயாமி
நிமிரூஜீம் தர்ப்பயாமி
மத்தியாஹ்ன சந்தியாங்க தருப்பணங் கர்ஷியே

மந்திரம்:—சந்தியாம் தர்ப்பயாமி
சாவித்ரீம் தர்ப்பயாமி
ரௌத்ரீம் தர்ப்பயாமி
நிம்ருஜீம் தர்ப்பயாமி
சாயம் சந்தியாங்க தருப்பணங் கர்ஷியே

மந்திரம்:—சந்தியாம் தர்ப்பயாமி
சரஸ்வதீம் தர்ப்பயாமி
வைஷ்ணவீம் தர்ப்பயாமி
நிம்ருஜீம் தர்ப்பயாமி
என்று ஜலத்தை அள்ளிவிடல் வேண்டும்.

காயத்திரி இலட்சணம்

காயத்திரி மந்திரத்தினுடைய சந்தசு காயத்திரி, ரிஷி விசுவா மித்திரன், தேவதை சூரியன், முகம் அக்கினி, தலை பிரம்மா, இரு தயம் விஷ்ணு, சிகை உருத்திரன், யோனி பூமி, தேவதத்தன் கூர் மன், தனஞ்சயன் நாகன் சிறுதறன் என்னும் ஐவகையும் பிராணங் களையுடைய பிராணன், அபானன், வியானன், உதானன், சமா னன் என்பன. தேவமாதாவாகிய காயத்திரியானது விசுவாமித்திர இருடீசுவரரால் இருக்குவேத சந்திதை மூன்றும் மண்டலம் கடைசி சூக்தத்தில் தோத்தரிக்கப்பட்டுள்ளது.

காயத்திரி முகம்

ஓமிதியோகாக்ஷரம் பிரம்ஹ அக்கினிதேவதா பிரம்ஹஹித் யார்ஷம் - காயத்ரம் சந்தம் - காமாத்மம் சரூபம் - சயுஜ்யம் விநியோ கம் என்பதாம்.

காயத்திரி ஆவாகனம்

1. ஆயர் துவாதாதேவி அக்ஷரம் - பிரம்ம சம்மிதம் காயத் ரீம்ச்சந்த ஸாமாதேதம் ப்ரம்ஹ்ஜுஷஷ்வமே.

2. எதஹ்னத் குருதேபாபம், ததஹ்னத் ப்ரதிமுச்யதே யத் ராத்ரிசாத் குருதேபாபம் தத்ராமரியாத்ப்ரதி முச்யதே சர்வனே மகாதேவி ஸத்யாவித்யே சரஸ்வதி.

3. ஓஜோஸி ஸஹோஸி பலமஸீப்ராஜோஸி தேவானும் தாம நாமாஸி விஸ்வமஸி விஸ்வாயு, ஸாவமஸி ஸர்வாயு ரபிபூர்வோம் காயத்ரீ மாவாஹயாமி.

4. * சாவித்ரீ மாவாஹயாமி † ஸரவஸ்வதி மாவாஹயாமிச் சந்தருஷி மாவாஹயாமி, ஸரியமாவாஹயாமி, சாவித்திரியாரிஷி விஸ்வாமித்திர தேவி ‡ காயத்ரீ சகந்த பரமாத்மா வேதவா.

---

* ஸவித்ரு மண்டலத்தில் வசிப்பவராதலால் ஸாவித்ரீ.

† பிரபஞ்சத்துக்கு தாயானதால் ஸரஸ்வதி.

‡ பரிசுத்தமான அந்தக் காரணத்தோடு தியானிக்கிறவனைக் காப்பாற்று கிறது காயத்ரீ.

காயத்திரி மந்திரம்

ஓம் பூர்வஸ்வம்மஹாஜனதமஷத்தியம். ஓம் தத்ஸவிதுர்வரேணியம் பர்கோ தேவஸ்யதீமஹி,	வியாக்ருதி பாதம்
தியோயோந ப்ரசேதயாத் ஓமாபோஜ்யோதீ ரசோம்ருதம் ப்ரஹ்மஹீர்ப்புவஸ்ஸுவரோம	சிரசு

பரோரஜ ஸேஸாவதோர்

இது காயத்திரியின் நான்காவது பாதம், அதர்வண வேதத்தில் உள்ளடங்கினது. உபநீதனுக்கு மூன்று பாதங்களுடைய காயத்திரி மாத்திரம் உபதேசிக்கவேண்டியது விதியாதலால், இதை உபநீதன் செபிக்க வேண்டியதில்லை.

காயத்திரி தியானம்

"முத்தாவித்ரு மஹேமநீல தவளச்சாயைர்முகை ஸ்த்ரீக்ஷணை
ருயுக்தாமித்து நிபந்தரத்நமகுடாம் ததவார்சித வர்ணத்மிகாம்
காயத்ரீம் வரதாபயாங்கு சகசாஸ்ஸுபரம்கபாலம்கதா
சங்கம் சக்ரமதார விந்தயுகனம் ஹஸ்தைர்வ ஹந்திம்பஜே."

காயத்திரி செபம்

வாசிகம், உபாம்சு, மானசிகம் எனச் செபம் மூவகைப்படும். அவை யொன்றுக்கொன்று முறையே சிறந்தது; வாசிகம் - வாக்கினலே நன்முக உச்சரிப்பது; உபாம்சு - அன்னியரால் சிறிதும் கேட்கப்படாதது; மானசிகம் - சொல்லின் பொருளைச் சிந்தித்து வாக்கியார்த்தங்களை அனுசந்தானம் செய்வது.

கிரியை—சுருதியாசமனம்

சங்கற்பம்:—பிராணயாமா பூர்வோக்த (விஷ்ணு சிவ) ப்ரீத்யார்த்தம் (காலை - உச்சி - மாலை) சந்தியா சந்தியாங்கம் யதா சக்தி காயத்ரீ ஜெபங் கர்ஷ்யே.

மந்திரம்:—ஓம் தத் ஸவிதுர்வரேணீயம் பர்கோ தேவஸ்யதீமஹீ தீயோ யோந ப்ரசோதயாத்.

தருப்பாசனத்தி லிருந்துகொண்டு தருப்பை பவித்திரத்தைக் கையில் தரித்துச் சூரியமுகமாயாவது அல்லது வடக்குமுகமாயாவது பிரசவகாலத்தில் உந்திக்கு நேராகவும் மத்தியானகாலத்தில்

மார்புக்கு நேராகவும், சாயங்காலத்தில் மூக்கு நுனியிலும், செப மாலையை வைத்து உத்தமபட்சம் ஆயிரமுறை மத்திமபட்சம் நூறு முறை அதமபட்சம் பத்து முறையாக பிரணவ மந்திரத்தோடும் வியாகிருதி மந்திரத்தோடும் கூடிய காயத்திரி மந்திரத்தைச் செபம் செய்யவேண்டும்.

கரன்னியாசம்

தத்சதுர்:—அங்குஷ்டாப்யாம் நம
வரேண்யம்:—தர்ஜநீப்பியாம் நம
பர்கோ தேவஸ்ய:—வத்யமாப்யாம் நம
தீமஹீ:—அனுமிகாப்யாம் நம
பரசோதயாத்:—கரதலகரப்ருஷ்டாப்யாம் நம

ஹ்ருதயந்நியாசம்

தத்ஸவிதுர் - ப்ரம்ஹாத்மனே ஹதயாய நம
வரேண்யம் - விஷ்ணுவாத்மனே சிரசே சுவாஹா
பர்கோ தேவஸ்ய - ஊருத்ராத்மனே சிகாயை வஷ்ட
தீமஹீ - சத்தியாத்மனே சுரோத்ராய கவசாயசும்
தீயோயோந - க்ஞாத்மனே நேத்ராப்யாம் வஷ்ட்
ப்ரசோதயாத் - சர்வாத்மனே ஸ்த்ராயபட்
பூர்புவஸ்வரேம் - இதிதிக் - பந்தஹ

சூரியோபஸ்தானம்

ஸ்மிருத்தியாசமனஞ் செய்து, சந்தியாங்க சூரியோபஸ்தானம் கர்ஷியே என்று சங்கற்பித்து,

1. இமம்மேவருணச்ருதீக வமத்யாச்சம்ருடயத்வாமவஸ்ஸியு ராச்சமேதத்தாமிம்ரம்ஹணவந்த மாஸத்தானசாந்தேயஜமனேஹ விர்ப்பிகி அஹேடமானே வருணே ஹதோத்யுரு ஸக்சமா ஆயு ப்ரமோசூ எக்சித்தி தேவிசோய தாப்ரதேவவருண வ்ரதம் மினீம சித்தவித்யவ.

2. தயத் கிஞ்சேதம்வருண தைவ்யேஜனே பிதுரோஹம் மனுஷ்யாச்சராமசி. அச்சித்தியத்தவதர்மாபு யோபிமமானஸ்த ஸ்மாதேன் சோதவரீரிஷ கிதவாசோபத்ரி ரிபுர்னதிவியத்வாகாச தயமுயன்னவித்ம ஸர்வாத்மா விஷய லிதிரேவதேவதா தேஸ்யாம வருணப்ரியாஸ்.

3. இது சாயம் சந்திய சூர்யோபஸ்தான மந்திரம்.

மித்ரஸ்யச் சர்ஷணீ த்ருதங்ரவோ தேவஸ்ய சானஸீம் சத்யம் சித்ரஸ்ரஸ்தமம் மித்ரோஜனனியாய திப்ரஜாதனமித்ரோ தாதார்ப்ருதிவீ முதத்யாம் மித்ரஹக்ருஷ டூரநிமிஷா பிக்ஷஷடேஸத்யாயஹல் யம்க்குதவத்விதேமப்ர மித்ரமர்கோகஸ்து ப்ரயஸ்வான்யஸ்த ஆதித்ய சிக்ஷதிவ்ரதே னகன்யதே நஜீய தேத்வோதைநமக்கோ அஸநோத் யந்திதோ நதூராத்.

4. இதுவே காலை சூரியோபஸ்தான மந்திரம்.

காயத்திரி வந்தனம்

"யாக்சதா சர்வபூதா நிசராணிஸ் தாவராண்ச்
சாயம் ப்ராதார் நமஸ்யந்தி சாமாசந்தியா பிரக்ஷது"

காயத்திரி பிரஸ்தாபனம்

1. உத்தம தேசிகரேஜாதே பூம்யாம் பர்வத மூர்த்த, ப்ராஹ மணேப் யோப்பனுக்ஞாதா கச்சமேவி யதாசுகம்.

2. ஸ்துதோமயா வரதாவேதமாதா ப்ரதசோதயந்திபவனே த்விஜாதாஆயு, ப்ருதிவ்யாம் த்ரிவிணம் ப்ரஹ்மவற்ஸசம்மஹயம் த்வாப்ரயாதும் ப்ரம்ஹலோகம்.

சுலோகம்

சிவாய விஷ்ணுரூபாய சிவரூபாய விஷ்ணுவே, சிவஸ்யக்ரு தயம் விஷ்ணுர் வீஷ்ணோய்ச் சஹருதயஞ் சிவ, யதாசிவமயோ விஷ்ணுரேவம் விஷ்ணுமயஸ்சிவ யதாந்தரம் நவஸ்யாமி ததா மேஸ் வஸ்திராயுஷி, நமோப்ரஹமண்ய தேவாயகோப்பிராம் ஹணஹி தயாச்ச, ஜகத்திதாய க்ருஷ்ணய கோவிந்தாயநமோக. ஆகாசாத் பதிதம் தோயம், யதாகச்சதிசாகரம், சர்வதே நமஸ் காரகேசவம் ப்ரதிகச்சதி, கேசவம் ப்ரதிகச்சத்யோந் நமயிதி.

அபிவாதனம்

ச்சதுஸ்ஸா காபர்யந்தம் கோப்ராம்ஹணே ப்யஸ்சுபம் பவ துப்ரவான்வித கோத்ரஹ காகாத்யாயீ சூத்ரஹ அஹம்போ அபி வாதயே.

பிராணயாம பேதம்

இஃது பூரகமென்றும், கும்பகமென்றும், இரேசகமென்றும் மூன்றுவகையினை யுடையது. இவைகளில் மூக்கினுலிழுக்கப்பட்ட

மூச்சு பூரகமென்றும், மூச்சடங்குங்காலத்து கும்பகமென்றும், பின்னர் அந்த மூச்சை மெல்லமெல்லக் கீழ்விடுங்காலத்தில் இரேசக மென்றும் யோகயாஞ்ஞவற்கியர் கூறினர்.

சந்திக்கடனுக்குரிய மார்ச்சனம்

ஆபோஹிஹடா என்ற இருக்குவினுல் தருப்பை நீரைப் பிரண வத்தைச் சேர்த்து அம்மரத்தின் எட்டு வாக்கியங்களாலும் எட்டு விசை தேகத்தின் மீது இறைத்துக்கொள்ள வேண்டுவது என்றூர் வியாசர்.

புரோடித்துக்கொள்ளுகை, அருச்சித்தல், பலியேற்பித்தல், உண்டல் ஆகிய இந்த நான்கு கருமங்களையும் தெய்வதீர்த்த முத்திரை யால் செய்யவேண்டும் என்றூர் ஹாரீதர்.

அந்த மார்ச்சனத்தை தாரையாக விழுந்துகொண்டிருக்கும் நீரிற் செய்யலாகாது; தாரையாக விழுகின்ற நீரினுல் சந்தியா வந்தனஞ் செய்வது நிந்திக்கப்பட்டது. அங்ஙனம் செய்வதைப் பிதிரரும் தேவரும் சிறப்பதில்லை; ஆதலின் மார்ச்சனத்தைச் செய்யும் வகையாவது :—

சந்தியாவந்தனத்திற்கு நின்ற தீர்த்தத்தின் கரையிலாயினும், பொன், வெள்ளி, மண் ஆகிய பாத்திரங்களிலாயினும், அத்திமர முதலிய தகுதியுள்ள மரங்களாற் சமைத்த பாத்திரங்களிலாயினும், இடது கரத்திலாயினும் நீரைப்பெற்றுக்கொண்டு அதினுல் சந்தியா வந்தனஞ் செய்யவேண்டும். அங்ஙனமே மார்ச்சனமுஞ் செய்ய வேண்டும்.

மண்பாத்திர முதலியன எடுக்கையில், இடது கை விலக்கின தாம். யாவனெருவன் இடதுகையில், நீர்கொண்டு சந்தியா வந் தனஞ் செய்கின்றனே அவன்செய்த சந்தியை விருஷலி யென்று உணரத் தக்கது; அதனுல் அசுரர் திருத்தியடைவார்.

மண்பாத்திர முதலியன கிடையாவழி இடதுகையிலாவது நீர் வைத்துக்கொண்டு சந்தியாவந்தனஞ் செய்யவேண்டுமென மிருதிவசன மிருப்பதால், அங்ஙனங் கூறிய விதிப்படி மார்ச்சனத் தைச் செய்துகொண்ட பின்பு, மந்திரங்களால் மந்திரிக்கப் பட்ட நீரைப் பருகவேண்டும்.

சத்திதேவதையை உபாசிக்க வேண்டிய விதி :—தீர்த்தத்தின் அருகிற்சென்று அபிடேக ஸ்நானஞ் செய்துகொண்டு, கைகால் சுத்திசெய்து விதிப்படி ஆசமனித்து மாலையில் அக்கினி யஸ்ச்ச என்ற மந்திரத்தோடும், காலையில் சூரியஸ்ச்ச என்ற மந்திரத்தோடும் மந்திரித்த சலத்தைப் பருகிப் பின்பு சூரியமந்திரங்கள், கோமந் திரங்கள், அப்பிலிங்க மந்திரங்கள், வருணமந்திரங்கள், வாயுமந் திரங்கள், ஹிரண்யவர்னமென்னும் அக்கினி மந்திரங்கள் இந்திர மந்திரங்கள், வியாஹிருதி மந்திரங்கள் முதலிய சுத்தமாயுள்ள புண் ணிய மந்திரங்களால் மந்திரித்த நீரைத் தேகத்தின்மேல் தெளித்துக் கொண்டு பரிசுத்தனகின்றுன் என்றூர் போதாயனர்.

மந்திரோதக பானம்

ஸாயமக்கினியஸ்ச்ச மேதுகத்வா பிராதஸ் சூரியேத்யப்பிர் பெத்து; ஆபப்புனந்து மத்தியாந்தே ததஸச்யாசமனச்சரேத் என மாலைப்போதில் அக்கினியஸ்ச்ச காலையில் சூரியஸ்ச்ச உச்சியில் ஆபப்புனந்து என்ற மந்திரங்களால் மந்திரிக்கப்பட்ட சலத்தைப் பானஞ்செய்த பின்பு ஆசமனஞ் செய்யவேண்டும்.

உபத்த பானம்

பிரார்த்தனை

சூரியோபத்தானத்தைத் தன்னுடைய சாகைக்கணுள்ள மந் திரங்களாலே செய்யவேண்டும்.

உபஸ்தானம் ஸ்வகைர்மந்த்ரைராஹித்ய ஸ்பசகார்யேத்தி என சூரியனைப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

புருடசூத்த நியாசம்

புருடசூத்த மென்பது பெரியோரால் பூசிக்கப்பட்டதும், சிறந் ததுமாயுள்ள இரகசியம். பிராணயாமஞ் செய்து சங்கற்பித்துப் புருடசூத்தத்திற்கு இருடியையும், சந்தசுவையும், தேவதையையும் உச்சரித்து, அந்தச் சூத்தத்தில் பதினறு மந்திரங்க ளிருத்தலினல், அவற்றைப் பூசிக்குங் கருத்தால் தன்னுடம்பிலும் தேவதா மூர்த்தியி னிடத்திலும் அங்கநியாசம் செய்கிறேனென்று சங்கற்பித்து விதிப் படி ஒவ்வொரு மந்திரத்தால் ஒவ்வொரு அங்கத்தையும் அபிமந்தி ரித்து, முறையே நியாசஞ்செய்தல் வேண்டும். புருட சூத்திரத்திற்கு

நாராயணரே இருடி; உலக காரணமான விராட்டுப் புருடனே தேவதை; சூத்தம் முதலில் அனுட்டிப்பு என்னுஞ் சந்தசுவையுடையது. முடிவில் திருட்டிப்பு என்னுஞ் சந்தசுவையுடையது. நியாசத்துள் இடதுகை முதல் மந்திரம்; வலதுகை இரண்டாவது, இடக்கால் மூன்றுவது, வலக்கால் நான்காவது, இடது முழங்கால் ஐந்தாவது, வலது முழங்கால் ஆறுவது, இடப்புறத்து இடை ஏழாவது, வலப்புறத்து இடை எட்டாவது, நாபி ஒன்பதாவது, உள்ளம் பத்தாவது, கழுத்து பதினொராவது, இடதுதோள் பன்னிரண்டாவது, வலதுதோள் பதின்மூன்றுவது, வாய் பதினான்காவது, கண் பதினைந்தாவது, தலை பதினாறுவது இங்ஙனம் அந்தந்த உறுப்புகளில் அந்தந்த எண்களுடைய இருக்கு மந்திரங்களைத் தன்னிடத்திலும் விஷ்ணு மூர்த்தியினிடத்திலும் நியாசம் செய்பவன் தானே விஷ்ணுவாகின்றன்.

புருட சூத்தத்திலுள்ள பதினாறு இருக்கினால் விஷ்ணுமூர்த்தத்துக்குப் பதினாறு உபசாரத்தோடும் பூசிக்கவேண்டும்.

முதலாவது இருக்கினால் அத்தேவரை ஆவாகனம் செய்ய வேண்டுவது, (ஆவாகனம் - அழைத்தல்) 2 - வது ஆசமனம் - பீடம் கொடுத்தல், 3 - வது பாத்தியம் - திருவடிக்கு நீருதவுதல், 4 - வது அருக்கியம் - கைக்கு நீருதவுதல், 5 - வது ஆசமனம் - குடி நீருதவுதல் (முகசுத்தியின்பொருட்டு), 6 - வது ஸ்நானம் - அபிஷேகம், 7 - வது பரிவட்டம் - அணிவதற்கு ஆடை, 8 - வது பூணூல், 9 - வது சந்தனம், 10 - வது புட்பம், 11 - வது நமஸ்காரம், 15 - வது வலம் வருதல், 16 - வது சயனம். இக்கணக்கினையுடைய இருக்கு மந்திரத்தால் இந்த உபசாரங்களைச் செய்யவேண்டும்.

மகுடம், காதுக்கு மகரக்குழை, தோளுக்கு வாகுவலயமென்னும் ஆபரணங்களுடையவராய்க் கையில் சங்குஞ் சக்கரமும் பிடித்துப் பொன்போலும் ஒளிவிடும் திருக்கோல முடையவராய்க் கமல பீடத்தின்மேல் வீற்றிருக்கும் நாராயணன் எப்பொழுதும் சூரிய மண்டலத்தின் நடுவே யிருப்பதாகப் பாவித்துத் தினந்தோறும் விஷ்ணுவை நன்றாகப் பூசிக்கவேண்டும். இவ்வாறு செய்தால் ஒருவன் ஆறு தினங்களிற் சித்தி யடைவன்.

விஷ்ணேப்பரமம் என்னு மந்திரத்தால் பூக்களையும், இராவத் என்னு மந்திரத்தால் அக்ஷதையும், சாவித்திரியா என்னு மந்திரத்

தால் தூபத்தையும், உத்தீப்பியஸவ என்னு மந்திரத்தால் தீபத்தை யும், தேவஸியத்துவா என்னு மந்திரத்தால் நைவேத்தியத்தையும் அர்ப்பிக்கவேண்டும்.

அன்றியும், கேசவாய என்றதுமுதல் தாமோதராய என்றவரை யிலுமுள்ள மந்திரத்தால் பன்னிருமூர்த்தி தெய்வங்களுக்கும், சங்க ராய என்பதுமுதல் துஷ்டியை என்றவரையிலு முள்ளதனால் பத்து அங்கதேவதைகளுக்கும், 'நம' என்னு மந்திர பல்லவத்தோடு நாம மந்திரங்களைத் தனித்தனி பூக்களால் பூசிக்கவேண்டும்.

விஷ்ணுவை ஆராதிப்பதினும் சிறந்த புண்ணியமுடைய வைதிக கருமம் யாதொன்றுமில்லை; ஆதலின் நாடோறும் இருபிறப்பாளன் காலையேயாயினும் உச்சிக் கண்ணையாயினும் அவ்விஷ்ணுவை "தத் விஷ்ணு" என்ற மந்திரத்தினாலும் புருடசூத்தத்தினாலும் ஆராதிக்கக் கடவன்.

சூதக முதலிய கால விதி

சூதகமுதலிய உபாதி யுண்டாகிய காலத்தில் சந்தி முதலிய கரு மங்களை விடவேண்டுமென மரீசிமுனிவர் கூறியுள்ளார்.

வேறு விதி

சந்தியாவந்தனத்தையும், வைஸ்வதேவ கருமத்தையும், சற்கருமத் தையும், ஹோம கருமத்தையும் உயிருடம்போடுகூடி யுள்ளவரையில் செய்யவேண்டு மெனவும்; சூதககாலத்திலும் விடலாகாதெனவும்; விட்டவன் கீழ்ப்போகின்றானெனவும் புலஸ்தியர் கூறியுள்ளார். ஆகவே, சூதகமுதலிய உபாதிகள் நேர்ந்தபோது சந்தி முதலிய நித்திய கருமங்களை மனத்துள்ளே செய்யவேண்டு மென்பது புலப் படுகின்றது.

பிறந்த சூதகமும் இறந்த சூதகமுமாகிய இரண்டினுள்ளும் சந்திக்கருமத்தை விடலாகாது. இரு பிறப்பாளன் அப்பொழுது பிராணயாம மொழிய ஏனைய மந்திரங்களை யெல்லாம் மனத்திற் சிந்திக்கவேண்டுவது. இதனை உணர்ந்து விரத நியம முடையவ னைச் சந்தியை உபாசிக்கின்றவன் தீர்க்காயுளைப் பெறுகின்றான்; எல்லாப் பாவங்களினின்றும் விடப்படுகின்றான் என மரீசி முனிவர் கூறுகின்றனர்.

காயத்திரி செபத்தின் சிறப்பு

காயத்திரி மந்திரம் பத்துலிசை செபிக்கப்பட்டால், மூன்று தினத்திற்செய்த சிறு பாவங்களெல்லாம் ஒழியும். இக் கருத்தை வேறு சிந்திக்க வேண்டுவதில்லை. நூறுதரம் செபிக்கப்பட்டால், பாவராசிகளைச் சாந்திசெய்யும். ஆயிரமுறை நியமமாக செபிக்கப் பட்டால், உபபாதங்களையெல்லாம் நாசஞ்செய்யும். நூறுயிர முறை செபித்தால், மகா பாவங்களையெல்லாம் ஒழிக்கும். கோடிதரஞ் செய்த செபத்தால், இச்சித்த பலனெல்லாம் அடையக்கூடும். என வியாசபகவான் கூறுகின்றனர்.

இயமன்:—செபஞ்செய்ய காயத்திரியினும், மேற்பட்டுள்ள மந்திரமொன்றுமில்லை. காயத்திரியினுஞ் சிறந்த பொருளுமில்லை; சிறந்த தானமில்லை; சிறந்த வேள்வியுமில்லை.

மனு:—நாடோறும் தவறாது சோம்பலும் உறக்கமுமின்றி இக்காயத்திரி மந்திரத்தை அத்தியயனஞ் செய்பவன் வாயு ரூபத்தால் தேகத்தை அடைந்தவனைப் பரமனை அடைகின்றான்.

கௌதமர்:—இக் காயத்திரியை முயற்சியோடும் அமைந்த சித்தமுடையவனைப் நாடோறும் செபிப்பவன் இம்மையில் மிக்க போகங்களையும் உண்டி முதலிய சுகத்தையும், மறுமையில் முத்தி யையும் பெறுகிறான்.

சந்தி செய்யாவிடின் பாவமென்பது

சந்தியாவந்தன மில்லாதவன் அசுசியுடையவனைப் நித்தமும் எல்லாக் கருமங்களுக்கும் தகாதவனே ஆகிறான். அன்றியும் வேறு எக்கருமஞ் செய்யினும் அதன்பயனை அவன் அடையமாட்டான் என்றார் தக்ஷர். சந்திக்கருமத்தை உணராதிருப்பினும், முறையே உபாசிக்காதிருப்பினும் தான் பிழைத்திருக்குங் காலத்திற்றானே சூத்திரனாகின்றான். இறந்த பின்னர் நாயாகப் பிறப்பான் என்றார் கோபிலர்.

யாவனொருவன் மாலைச் சந்திக்கடனை அனுட்டிப்பதில்லையோ அப்படிப்பட்டவனான்மா இருணரகத்திற்குப் போவான் என்கின் றது விஷ்ணு புராணம். சந்தியாவந்தனத்தை விடுத்து வேறு தரும காரியங்களில் முயற்சி செய்பவன் உத்தமனை இரு பிறப்பாளனே யாயினும் பதினாயிரம் நரகத்தினுக்குஞ் செல்கின்றான் என்று கூர்ம

புராணம் கூறுகின்றது. எந்த இரு பிறப்பாளன் சுகமாகவிருக்குங் காலத்தும் சந்தியாவந்தனஞ் செய்வதில்லையோ, அவன் இம்சை செய்தவனே யாகின்றன் என்றார் அத்திரி.

போசன விதி

தலைமேலாடையோடாயினும், இடதுகாலின்மீது கை வைத்தா யினும் புசிப்பவனது அன்னத்தை அரக்கர் புசிக்கின்றனர்.

மெழுகப்பட்டுச் சுத்தமாயுள்ள ஒத்தநிலத்தில் உண்டியின் பொருட்டு வேதியனுக்குச் சதுரமாயும், அரசனுக்கு முக்கோண மாயும், வைசியனுக்கு வட்டமாயும், சூத்திரனுக்குப் பிறைவடிவா யும் மண்டலம் விதித்துள்ளது.

இருபிறப்பாளன் கோவமின்றிக் கைகால் வாய் இம் மூன்று உறுப்புகளையும் நனைத்து ஆசமனஞ்செய்து வாய்பேசாது கிழக்கு முகமாக விருந்துகொண்டு சுத்தமான பாத்திரத்தில் புசிக்க வேண்டும்.

சாதத்தை நோக்கி முன்னர் வணங்கி அஞ்சலியத்தனைய் "இஃ தெமக்கு நித்தியமாகுக" என்று கூறிப் பத்தியோடுந் தொழவேண் டும் என்று பிரமாண்ட புராணம் பேசுகின்றது.

வியாகிருதி - காயத்திரியாகிய இம்மந்திரங்களை மந்திரித்து அன்னத்தின்மீது நீரைத் தெளித்து, இரவில் 'ருதந்துவா' என்னும் மந்திரத்தையும், காலையில் 'சத்தியந்துவா' என்னும் மந்திரத்தை யும் கூறி, உண்கலத்தை வலமாக நீர்வளையக்கட்டி எல்லா உயிர்களி னுடைய இருதயத்திலும் பிராணவடிவனாய் உலவுகின்றாய் என்பது முதலிய கடவுள் துதியே பொருளாக வுடைய அந்தச்சரதி என்றது முதல் வியாகிருதிப் பிரணவம் வரையிலுமுள்ள மந்திரத்தைத் தியானித்து 'அமிர்தோபஸ்தரணமசி' என்னும் மந்திரத்தைச் சொல்லி நீர்குடித்து 'தசஹோதரு' மந்திரங்க ளைக் கூறி அவ் வன்னத்திலிருந்து சிறிதெடுத்து பிராணன் முதலிய ஐந்து வாயுக்களுக்கும் சுவாஹாத்தோடு உள்ள மாகிய கேள்விக்குண்டத்தில் பிராணனாகிய தீயில் அன்னமாகிய அந்த அவிசுவினை ஓமஞ்செய்து தியானிப்பதே பிராணாக்கினி ஹோத் திர கருமமாகும்.

இங்ஙனம் பரிடேசனம் செய்தபின்பு கலத்தில் படைத்திருக்கும் அன்னத்திலிருந்து எடுத்துத் தருமனுக்கும் சித்திர குத்தனுக்கும் பலிகொடுத்து 'எவ்விடத்தாயினும் பசிதாகத்தோடும் வருந்தியிருக்கும் பிரேதங்கட்குத் திருத்தியுண்டாகுமாறு இந்த நீர்கெடாமல் வளர்க' என்று நீர்விட்டுப் பின்பு ஆபோசனம் கொள்ளவேண்டும் என்று பௌடிய புராணமும்; வியாகிருதியால் நீரை அன்னத்தின்மேல் தெளித்து 'அமிர்தோபஸ்தரணமஸி' என்று ஆபோசனம் கொள்ளவேண்டும் என்று கூர்ம புராணமும் கூறுகின்றன.

அன்னத்தைப் பழுது கூறுமனும்; புறத்தெரியாமனும்; வாயிலிடும்போது சிந்தாமனும் அதனிடத்து மனம் வைத்துப் புசிக்க வேண்டு மென்பர் பெரியோர்.

ஆசாந்த புனராசமே தாயங்கௌரிதி மந்திரதகத்ருபதாம் வாத்திரி ராவத்திய சர்வபாபபிராணஹினீசம், பிராணனுக்ரம் திரஸீக்யா லபேத்ருத யந்ததஹ ஆசமியங்குஷ்ட மானீய பதாங்குஷ்டேது தக்ஷிணே; நிஸ்ரா வையேத்தஸ்ததிலா மூர்த்தவ ஹஸ்ததகி சமாஹீத உதாணுமந்த்ர ணம்குரியா ஸ்ச்ரத்தாயா மிதமந்திரதஹ அட்டர கூஷரே ஹ்யாத்மானம் போஜகூஷத் ப்ரம்மணீதி சஹசர்வேஷா மேவயாதாஞ மாத்மயாக பரஸ்ருதஹ யோனெனவிதி நாகுரியாஸ்தி யாதப் பிரம்மணஹ்பதம்.

என ஆசமனம் செய்தவன் 'ஆயங்கௌ' என்ற மந்திரத்தை உச்சரித்து மறுபடியும் ஆசமனஞ் செய்யவேண்டும்.

எல்லாப் பாவங்களையும் போக்கவல்ல 'த்ருபதா' எனவே 'சிவேதம' என்னு மந்திரத்தை மூன்றுதரம் செபித்து 'பிராணனும் க்ரந்திர சிருத்ரஹ' என்னு மந்திரத்தால் இதயத்தைத் தொட்டு அபிமந்திரித்துப் பின்னரும் ஆசமனஞ் செய்யவேண்டும். அந்தச் சேடமாகிய நீரை மேல்பக்க மிருக்கும் தன் கைப்பெருவிரல் மூலையால் வலக்கால் பெருவிரன்மேற் படும்படி விடல்வேண்டும். எனவே உண்ட உணவைத் தேவதைப் பிரீதிசெய்யும்படி மந்திரங்களோடு பிரார்த்திப்பது. இந்தக் கருமத்தை 'சிரத்தாயாம்' என்றது முதலிய மந்திரங்களாற் செய்த பின்னும் அட்டாக்க மந்திரங்களால் தன் ஆன்மாவைப் பிரமத்தில் கலப்பிக்கவேண்டும். இந்த ஆன்ம யாகம் எல்லா யாகங்களினும் சிறந்தது. இந்த விதியால் பிராணாக்கினி கோத்திரத்தை செய்பவன் பிரமலோக மடைகின்றான்.

சைவர் அநுட்டான விதி

எல்லாச் சைவ மரபினரும் அநுஷ்டிக்கத்தக்க போது நியமங்கள்

இப்பொழுது விபூதி சேகரிக்கும் விதியை விரிக்கின்றேன். அபரிசுத்தமாயும், நோயுள்ளதாயும், பித்துக்கொண்டதாயும், அங்கக் குறைவும் அளவுக்கு மீறிய அங்கத்தை யுடையதாயும், மலடாயும் அதிக அன்புடையதாயும் அசுத்தமான வத்துக்களை யுண்ணுவதாயு முள்ள பசுவை நீக்கி, நல்ல அழகையுடைய கோவின் சாணத்தை எடுத்து உருட்டி உலர்த்தி வெண்மையாக்குந் தன்மையுடைய உமி முதலியவற்றால் நன்கு மூடி வைதிகாக்கினியினாலாவது, யாகாக் கினியிலாவது, சமயல்செய்யு மக்கினியிலாவது, தகித்து வில்வக்கனி யளவுள்ள மண்பாத்திரத்தில் வைத்துக்கொண்டு ஈசானாதி பஞ்ச பிரம்ம, மந்திரத்தைச் செபித்து மாநஸ்தோகே என்னும் மந்திரத்தை உச்சரித்து நடுவிரல் ஆள்காட்டிவிரல் பெருவிரல் இந்த மூன்று விரல்க ளால் பற்பத்தை பெடுத்து மௌனமாகத்தானே சலஞ்சேர்த்துக் குழைத்து லலாடத்திலும், மார்பிலும், இரண்டு புயத்திலும், கழுத்தி லும், வயற்றிலும், சிரசிலும், அந்தணர் முதலினோர் தினந்தோறும் திரிபுண்டரம் அணியவேண்டும்.

அக்கினியில் சமஸ்காரஞ் செய்யப்பட்ட பற்பத்தை 'ஸத்யோ ஜாதாதி' ஐந்து பிரமமந்திரத்தினால் செபித்தெடுத்து இடது கையில் வைத்துக்கொண்டு வலதுகையினால் மூடி பன்னிரண்டு தடவை பிரண வத்தைச் செபித்துச் சலத்தால் நனைத்துச் சிரசிலும் நெற்றியிலும், மார்பிலும், தோளிலும், குறுக்காக மூன்று ரேகைகளாக அணிந்து கொள்ளவேண்டும். இந்தச் சாம்பவ விரதமானது எல்லா வேதங் களிலும் விதிக்கப்பட்டிருக்கிறது ஆதலால், மறுபிறப்பில்லாம லிருப்பதற்காக இந்தப் பற்பதாரணத்தை மூன்று ரேகைகளாகக் கொள்ளவேண்டும்; நெற்றியில் இரண்டு கண்களின் புருவத்தின் மூனைவரையில் தரிப்பதுதான் திரிபுண்டரமென்று சொல்லப்படுவது. எவ்வகைப்பட்ட வித்துவானும் பிரமசாரியும் கிரகத்தனும், சந்நியாசி யும் திரிபுண்டர தாரணஞ்செய்து கொள்ளுகிறானே அவன் சமத்த பாதகத்தினின்றும் புனிதனாகிறான். தன் னிட்டதேவதையைத் தியா னித்தவனாகிறான். சகல சம்பத்துகளிலும் நிறைந்தவனாகிறான். சமத்த சாம்பவ மந்திரத்தை எப்பொழுதும் செபித்தவனாகிறான். இல்லறத்

தில் எல்லாப்போகங்களையும் அனுபவித்து, தேகத்தைவிட்டுச் சிவ சாயுச்சியம் அடைகிறனென்றும், பழையபடி இக்கன்ம பூமியில் பிறப்பதில்லை யென்றும், தேவாதி தேவனை பரமசிவனருளினர்.

வருணச்சிரமங்களுக்குரிய விபூதிகள்

பிரம, க்ஷத்திரிய, வைசியர்களுக்கு அக்கினிஹோத்திர விபூதி யோக்கியமாம். கிரகத்தாச்சிரர்களுக்கு விரசாகலாக்கினி ஹோப்ர சராக்கினிகளின் விபூதி யோக்கியமாம். பிரமசாரிகளுக்குச் சமிதாக் கினியின் பற்பம் யோக்கியமாம். சூத்திரர்களுக்குச் சுரோத்திரியா கார பசுகாக்கினியின் பஜிதம் யோக்கியமாம். மற்றையோருக்குத் தாவாக்கினியில் உதித்தபற்பம் யோக்கியமாம். யதிச்சுரர்களுக்கு எல்லா விபூதியும் யோக்கியமாம். அதிகாச்சிரமிகளுக்கு சானபற்பம் யோக்கியமாம். சமத்தருக்கும் தேவாலய ஜதிதபஜிதம் யோக்கிய மாம்.

விபூதியின் ஸ்நாநாதி விதிகள்

அந்த விபூதி ஸ்நாநம், உத்தூளனம், தாரணம் என மூன்றும். ஸ்நாநமாவது :—அதை ஆசரிக்கிறவன், முதல் அத்தபாதஞ் சுத்தி செய்து, பின் பஸ்மஸ்நாநஞ் செய்கிறேனென்று சங்கற்பித்துக் கொண்டு திடமான சூத, வில்வ, அசோக, சிலா, வஸ்திராதி ஆதனங் களிலிருந்து, இரசிதமான ஆதாரத்தில் சுவத்திதமாக இருக்கின்ற ஸ்ரீமத் விபூதியைக் குரங்க முத்திரையினல் சத்யாதி பஞ்சபிரம மந்திர பூருவமாக எடுத்து வாமஅத்தத்தில் வைத்துக்கொண்டு, நமஸ்கார மந்திரத்தை உச்சரித்து, தட்சண அத்தத்தினலேமூடி வலது தொடையின்மேல் வைத்து மூலமந்திரத்தினல் அல்லது அக்கினி நிருதிமுதலான மந்திரங்களினலாவது ஏழுதர மந்திரித்து, மாநஸ்தோகதேயென்னும் மந்திரத்தினலெடுத்துச் சிரசு, முகம் இரு தயம், குய்யம், பாதம் சர்வாங்கமென்னும் ஆறு ஸ்தானங்களில் அந் தந்த மந்திரோச்சாரணத்தால் கிரமத்தில் ஈசாநாதி பஞ்சப்பிரம பிரணவ மந்திரங்களினல் சிருட்டி, திதி சங்காரக் கிரமங்களை அறிந்து சங்புரோட்சணங்கள் செய்வதே ஸ்நாநமாம்.

உத்தூளனமாவது :—மற்றும் அந்தச் சிரமுதலிய ஆறுதானங்க ளில் அந்தந்த மந்திரோச்சாரணக் கிரமத்தினல், நான்கு, அல்லது ஐந்து, எட்டு, பதின்மூன்றுதரம் ஓரேவேளையில் இலேபனஞ் செய் வதே உத்தூளனமாம்.

தாரணமாவது :—சீதளமானமந்திரோதகமிகரமான விபூதியை மூலமந்திரம், திரியாயுஷ்மந்திரம், திரியம்பகமந்திரங்களை உச்சரித்துச் சிவமூர்த்தி தியானயுத்தனுகித் திரிபுண்டரதாரண ஸ்தானங்களில் தரித்தலாம்.

திரிபுண்டர ஸ்தான விபரம்

திரிபுண்டர ஸ்தானங்களெவையெனின் : மூர்த்தினி, லலாடம், கன்னத்துவயம், நேத்திரத்துவயம், நிராணம்முகம், வாகுத்துவயம், புஜத்துவயம், மணிபந்தத்துவயம், ஸதநத்துவயம், வக்ஷம்உதரம், பாரிசத்துவயம், நாபி, கண்டம், பாயு, புருஷ்டம், ஊருத்துவயம், சானுத்துவயம், சங்கத்துவயம், பாதத்துவயம் என்னும் முப்பத்திரண்டு தானங்கள் ஆகும்.

அல்லது மத்தகம், அளிகம், நிரவம், வாகுத்துவயம், இதயம், கன்னத்துவயம், மணிபந்தத்துவயம், புஜத்துவயம், அபரம், நாபி என்னும் பதினாறு தானங்களும் ஆம்.

அல்லது சிரசு, பாலம், கண்டம், வாகுத்துவயம், கண்டம், புஜத்துவயம், வக்ஷம், புருஷ்டம், நாபி, நிராணம் என்னும் பதினெரு தானங்களுமாம்.

இவற்றுள் பதினெரு ஸ்தானங்களே முக்கியமாகும். ஸ்நித பத்மாசந சீநரான, சுத்தபடிக சங்நிபரான, கர்த்த; சந்நிரகலா பிரசந்நவதா, நீலக்நிரீவ, க்ஷௌமாம்பர சர்ப்பாபரணங்களுள்ள, மிருகிடங்க வரதாபய பாணிபான சர்வபக்ஷண சம்பந்நரான பரமாத்மா, சிவ, மநேச்வர, ருத்நிர, ஸ்ரீகண்ட, சம்பு, ருத்நிரர்க ளைச் சிரசு முதலான ஏகாதசதானங்களிலும் இருத்நி, ஸ்மரித்துத் திரிபுண்டரந் தரிப்பதே தாரணமாம். பிராமணரான சாதுராச்சிரமி களுக்குச் சருவாங்க உத்தூளனமும், க்ஷத்நிரியருக்கு முகம் தவிர சருவாங்க உத்தூளனமும், வைசியருக்கு லலாடமாத்நிரம் உத்தூளனமும், சூத்நிரருக்குத் தாரண முரித்தாம்.

சைவர்கள் திரிபுண்டரம் தரிக்கும்வகை

திரிபுண்டர தாரணம் செய்யும்வகை தட்சணகரத்தின் தர்ச் சனி, மத்நிமை, அநாமிகை யென்னும் அங்குலித்நிரயங்களால் அலோம-விலோமமாக அகாரமே அநாமிகை, உகாரமே மத்நி மை மகாரமே தற்சநி என்னும் பாவனையின் நிரியங்குலிகளால்

அங்கத்திரயம் - அரூபத்திரயம் - குணத்திரயம் - லோகத்திரயம் - ஆத்துமத்திரயம் - வேதத்திரயம் - காலத்திரயம் - ரூத்திரத்திரயம் என்னும் தேவதாத்திரயாத்துமகமே அநுசந்தான பூர்வமாகத் திரி ரேகையும் ஷடாங்குலப் பிரமாணமாக நேத்திரயுக்தப் பிரமாணமாக லலாடகந்தம் - கடினமலின - வக்ர - சிந்த - தூர - கூடினதாகிய ஆறு தோடரகிதங்களாய் நய - சுப்பிர - நிரல - சாந்திர - சமீப - பிந்நமென் னும் ஆறு லட்சணங்களே யுடையதாய்த் தரிப்பதாம்.

நான்கு வருணத்தாரும் தரிக்கும்வகை

பிராமணர் ஆறங்குலப் பிரமாணமும், சூத்திரியர் நான்கங் குலப் பிரமாணமும், வைசியர் இரண்டங்குலப் பிரமாணமும், சூத்திரர் ஓரங்குலப் பிரமாணமும், திரிபுண்டரம் தரிப்பது காரணே யாகும்.

ஆச்சிரமிகள் அணியவேண்டிய விதி

மேலும் கிரகத்தரும் ஸ்திரீகளும் திரிசந்தியாகாலமும் சலமி சிரமாக விபூதி தரிக்கவேண்டும். எதிச்சுரா எப்போதும் சலமி சரமில்லாமல் தரிக்கவேண்டும். வானப்பிரத்தரும், கன்னிகை களும் தீட்சையற்றவரும், மத்தியானம் வரையில் சலமிசிரமாக வும் அதன்மேல் கேவல விபூதியையும் தரிக்கவேண்டும்.

விபூதி அணியுமுன்னம் சைவ கிரியாநுட்டான விதி

விபூதியைத் தூளிதமாய் இடுமுன்னர் இடது உள்ளங்கையில் பரவவைத்து வலதுகை நான்காவது பவித்திரவிரலால் 'நமச்சிவாய' என்னும் நகாரத்தையும் சிகாரத்தையும் எழுதி வலதுகையால் மூடிக் கொண்டு ஓம் நமச்சிவாயஃ தூலாய நமசிவய நமஃ சூட்சுமாய நமஃ சிவாயகாரணாய நமஃ சிவமஹாகாரணாய நமஃ என்று அபிமந்திரித்து வலதுகரத்தின் பெருவிரல், நடுவிரல், ஆழிவிரல் இம்மூன்று விரல் களின்மேல் விபூதியைத் தடவிக்கொண்டு விரல்களைக் குவித்தும் விரித்தும் ஆணவ, கன்மம், மாயை முதலியதை நீக்கிப் பத்தி சிரத்தையோடு அந்த விபூதியை ஆறங்குல நீளமாகப் பொருந்தத் தரிப்பதே சிவசொரூபமென்றும்; சிவப்ரசாதமென்றும்; அந்த விபூதியை என்றும் அணிவதனால், கன்மம் அணுகவிடாது; முன் னிற்றலே திரோபவயம் யென்றும் அந்த விபூதி சருவாங்க தூளித மாய்த் தரித்து சுத்தப் பிரமபாவனையோடு அணிந்திருத்தலே கன்மத்

தையும் ஆணவ காமிய மாயா மலங்களையும் இந்த ஜென்மத்தையும் போக்குவதாகிய ஈச்சுவர அருட்பிரகாச அனுக்கிரக மயமென்றும் உணர்க.

விபூதிதாரண அனுட்டானம்

விபூதியைத் தூளிதமாய் அணியும்போது அனுட்டிக்கவேண்டிய மந்திரங்கள்

சிரசில், ஓம் - சுஷும்முனை சதுர்கலாகார சுத்தப் பிரமதத்துவமே சுவயப்பிரம்மாய நமாஃ என்றும்,

நெற்றியில், ஓம் - சுழுமுனை சோடசலாகார ஈஸ்வரத்துவமே வயப் பிரம்மாய நமாஃ என்றும்,

மார்பில், ஓம் - துவாதச சுழுமுனை பிரணவகாத ஸக்தி மாயா காரத்துவமே சுவயப்பிரம்மாய நமாஃ என்றும்,

வலது புஜத்தில், ஓம் - துவாதச இடகலாவாசி சுவாஸ ஜீவா காரத்துவமே சுவயப்பிரம்மாய நமாஃ என்றும், நியான இலட்ச ணம் மாறுமல் அணியவேண்டும். இது பிரம நிட்டைக்குரிய விபூதி தூளித தாரண அனுட்டான விதியாம்.

விபூதியை சலத்தோடு கலவாமல் தனியாய்த் தூளிதமாகத் திரிபுண்டரமாய்ப் பிரம நிட்டாகாலத்தில் அணியவேண்டுமாயின்; அக் காலத்தில் அனுஷ்டிக்கவேண்டிய,

அங்கமந்திர விதிகள்

உச்சியில்:—ஓம் சுழுமுனை திரிகிருத்திய சாக்ஷிமாத்திர பிரம் மேஸ்வரா சுவயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

நெற்றியில்:—ஓம் சுழுமுனை திரிகிருத்திய வியாபகமாத்திர ஆத்மோசுயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

இருதயத்தில்:—ஓம் சுழுமுனை திரிகிருத்திய சூன்யமாத்திர ஜீவோஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

உந்தியில்:—ஓம் சுழுமுனை திரிகிருத்தியவிர்த்தி விஷயமாத்திர மாயாசக்தி யாகரோஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

வலது புஜத்தில்:—ஓம் பிங்கலா திரிகிருத்திய கர்ம விஷயா மாத்திர ஆத்ம ஜீவகலாகரோ ஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

இடது புஜத்தில்:—ஓம் இடகலா திரிகிருத்திய கர்ம விஷயா மாத்திர ஆத்ம சக்திகலாகரோ ஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

வலது முழங்கையில்:—ஓம் பிங்கலா திரிகிர்த்திய கிரியா விஷய மாத்திர ஜீவ சிவகலாகரோ ஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

இடது முழங்கையில்:—ஓம் இடகலா திரிகிர்த்திய விஷ்யா மாத்திர மனோஜீவ கலாகரோ ஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

வலது மணிக்கட்டில்:—ஓம் பிங்கலா திருகிருத்தியா கிர்த்திய விஷயாமாத்திர மனோஜீவகலாகரோ ஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

இடது மணிக்கட்டில்:—ஓம் இடகலா திரிகிர்த்திய விஷய மாத்திர மனோசக்தி கலாகரோ ஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

முதுகின் வலது புஜத்தின் மேற்பாகத்தில்:—ஓம் கும்பக திரி கிர்த்திய ஊர்த்தமுக லய விர்த்திமாத்திர ஸர்வ சிவகலாகரோ ஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

முதுகின் இடதுபுய மேற்பாகத்தில்:—ஓம் கும்பக திரிகிர்த்திய ஊர்த்த முகலய விர்த்திமாத்திர சர்வசக்திகலாகரோ ஸ்வயம் பிரம் மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

முதுகின் வலதுபுய கீழ்ப்பாகத்தில்:—ஓம் கும்பக திரிகிர்த்திய அதோமுக சிருஷ்டி விர்த்மாத்திர ஸர்வகலாசரோ ஸ்வயம் பிரம் மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

முதுகின் இடதுபுய கீழ்ப்பாகத்தில்:—ஓம் கும்பக திரிகிர்த்திய அதோமுக சிருஷ்டி விர்த்மாத்திர சர்வ சக்திகலாகரோ ஸ்வயம் பிரம்மாக்கியங்கரோ நமாஃ என்றும்,

வலது முழங்காலில்:—ஓம் ரேசக திரிகிர்த்திய அதோமுக சிருஷ்டி விர்த்திமாத்திர சர்வசிவகலாகரோ ஸ்வயம் பிரம்மய்க் கியங்கரோ நமாஃ என்றும்,

இடது முழங்காலில்:—ஓம் பூரக திரிகிர்த்திய அதோமுக சிருஷ்டி விர்த்திமாத்திர சர்வ சக்திகலாகரோ ஸ்வயம் பிரம்மய்க் கியங்கரோ நமாஃ என்றும்,

வலது கழுத்தில்:—ஓம் ரேசக திரிகிர்த்திய ஊர்த்தமுக லய விர்த்திமாத்திர சர்வ சிவகலாகரோ ஸ்வயம் பிரம்மய்க்கியங்கரோ நமாஃ என்றும்,

இடது கழுத்தில்:—ஓம் பூரக திரிகிர்த்திய ஊர்த்தமுகலய விர்த்திமாத்திர சர்வ சக்திகலாகரோ ஸ்வயம் பிரம்மய்க்கியங்கரோ நமாஃ என்றும்,

விபூதிமத்தியிற் போட்டணிய வேண்டுவதாலுல்

ஓம் அகண்ய பிரம்மஞான நிருஷ்டியேக நேத்திர புரதிஷ்டாய நமாஃ என்றும் நியமத்தோ டணியவேண்டும்.

இவ் விபூதியைக் குழைத் தணியவேண்டிய சமயத்தில் மேற் படி மந்திரங்களின் முடிவில் கரோஸ்வயம் பிரம்மயக்கியங்கரோ நமாஃ என்னும் உச்சரிப்பை நீக்கி, முறையே சுத்தப்பிரகாசாய நமாஃ என்று சேர்த்து உச்சரிக்கவேண்டும்.

கணபதி, சுப்பிரமணியர், தேவி, விஷ்ணு வாதிய பூஜாகால அநுட்டானங்களில் விபூதியைக் குழைத்திடும்போது,

ஓம் சுழுமுனை	சாட்சிமாத்திர பிரம்மாய நமாஃ	என	சிரசிலும்,
,,	ஆத்மேஸ்வர	,,	நெற்றியிலும்,
,,	மாயாசிவப்	,,	இருதயத்திலும்,
,,	சூட்சுமநாதப்	,,	உந்தியிலும்,
ஓம் பிங்கலா	ஆத்மசிவகலா	,,	வலப்புயத்திலும்,
ஓம் அடகலா	ஆத்மசக்திகலா	,,	இடப்புயத்திலும்,

ஓம் பிங்கலா ஜீவசிவகலா பிரம்மாய நமாஃ என்று வலது முழங்கையிலும்,

ஓம் இடகலா ஜீவசக்திகலா பிரம்மாய நமாஃ என்று இடது முழங்கையிலும்,

ஓம் பிங்கலா சூட்சமசிவ கலாப்பிரம்மாய நமாஃ என்று வலது கை மணிக்கட்டிலும்,

ஓம் இடகலா சூட்சம சக்திகலா பிரம்மாய நமாஃ என்று இடதுகை மணிக்கட்டிலும்,

ஓம் கும்பக ஊர்த்தமுக சிவகலா பிரம்மாய நமாஃ என்று வலது முதுகிலும்,

ஓம் கும்பக ஊர்த்தமுக சக்திகலா பிரம்மாய நமாஃ என்று இடது முதுகிலும்,

ஓம் கும்பக அதோமுக சிவகலா பிரம்மாய நமாஃ என்று வலது இடுப்பிலும்,

ஓம் கும்பக அதோமுக சக்திகலா பிரம்மாய நமாஃ என்று இடது இடுப்பிலும்,

ஓம் இரேசக வீர்த்தி சிவகலா பிரம்மாய நமாஃ என்று வலது முழங்காலிலும்,

ஓம் பூரகவீர்த்தி சக்திகலா பிரம்மாய நமாஃ என்று இடது முழங்காலிலும்,

ஓம் இரேசகலய சிவகலா பிரம்மாய நமாஃ என்று வலது கழுத்திலும்,

ஓம் பூரகலய சக்திகலா பிரம்மாய நமாஃ என்று இடது கழுத்திலும்,

விபூதி மத்தியில் பொட்டாகவேனும் அல்லது வேறு ரேகை வடிவமாகவேனும் விபூதி, சந்தனம், குங்குமம் இவற்றிலொன்றை அணிய நேருமாயின், அக்கால், ஓம் கும்பகலயப் பிரகாச பிரம்ம நேத்திராய நமாஃ என்றும் அணியவேண்டும். இவ்விதமாக கிரியா மந்திர நியமத்தோடு விபூதிதாரண அனுட்டான முடிந்தவுடனே பின்வரும் ஆசமனமும், புரோடணையும் செய்யவும்.

ஆசமனம்

ஓம் கங்கை, யமுனை, ஸரஸ்வதி, நருமதை, காவேரி, கிருஷ்ணை, கோதாவரி, (சிந்து, தாம்பிரபரணி, துங்கபத்திரி, கிட்டணி) ஸர்வ தீர்த்த ஆசமனத்துவாரா ஸர்வபாப விமோசனய நமஃ என்று ஆசமனஞ் செய்யவும்.

புரோட்சணை

ஓம் கெங்கா, யமுனை, ஸரஸ்வதி, நர்மதா, காவேரி, கோதாவரி, கிருஷ்ணை, ஸர்வதீர்த்த புரோட்சண ஸ்நானத்துவாரா ஸர்வ ஜென்மரகித புண்ணியஞான மோட்சப் பிராப்தியாய நமஃ என்று புரோட்சணை செய்துகொள்ளவும்.

திரிபுண்டர மகத்துவம்

திரிபுண்டரம் அணியாதவனுடைய ஆசாரமும், சத்தியமும், தயீமும், ஓமமும், புண்ணியதீர்த்த ஸ்நானமும், சிவபூசையும் பலன் இன்றாகும். இராக்கதர், பைசாசம், பிரேதகணம், எமதூதர், டாகினி, ஜாகினி முதலான தூர்க்கிரகங்கள் விபூதி அணிந்தவர்களைக் கண்டவுடன் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிப்போம்; விபூதி யணிந்து போசனஞ் செய்பவர்களுடைய வீட்டில் மகாதேவர் பார்வதிசமேத ரிஷபாரூடராய்ப் போசனஞ் செய்கிறார் என்று ஆகமங்கள் முறையிடுகின்றன. ஆகையால், புருடர்களுக்கு முத்தி என்னும் பொருளை வசியப்படுத்த விபூதி ஒன்றே பரமௌஷதம். பஞ்சாட்சர விபூதியைச் சருவாங்கமும் தரித்து நடப்போன் எக் குலத்தனாயினும் ஈசனுள் ஐக்கியமாவான்.

முற்கூறிய ஸ்நான உத்தூளன தாரணங்களைக் கிரமத்தினால் விதியுத்தமாக ஸ்ரீமத்விபூதி தரிப்பதே சிரோவிரத மென்றும், பாசுபத விரதமென்றும் பெயர்பெற்றுத் தோடரோகாதி பீதிகளை விடுவிக்கும் போகமோட்சப் பிரதாவென்று வேதாகம புராணங்களில் பிரசித்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே சமத்த மது மூர்ச்சுர தேவதைகளும், அறவிசிட்ட மென்று விபூதி தரிப்பார்கள். அதஞ்ஞாகிருஞ்ர்த்தம் மங்களார்த்தம் பௌத்திரார்த்தம் சிவார்த்தமாகப் பிராமணராதி வருணத்தவரும், பிரமசரியாதி ஆச்சிரமிகளும், சாங்கியாதி மதாபிமானிகளும், சர்வதா ஸ்ரீமத் விபூதி தரிக்கத்தக்கதென்று விசுவாசிக்கவேண்டும்.

மானத பூசைக்குரிய பற்பத் தியானம்

மானச பூசாரம்பத்தில் ஏகாந்த தானத்தில் சுகாசனத்தில் இருந்துகொண்டு நிர்ச்சங்க நிர்ச்சலனமாய் மனதை லலாடத்தான பாவனையாய் மவுனமாய் நிலைநிறுத்தித் தேகபாவகிரியா பூசானுட்டானங்களைச் செய்யவேண்டும். அப்படிச் செய்யப் புகும்போது மனத்தை அங்கபாவனையால் நிறுத்தி கீழ்க்கண்ட அங்கமந்திரங்களைக் குறித்து விபூதி யணிவதாகப் பாவிக்கவேண்டும்.

லலாட மத்தியத்தில், 'ஓம் நம சிம் வம் யம் ஈஸ்வரா ஆத்ம மேல் ஆருதார சுத்தியாய நமா மெய்ஞ்ஞானப் பிராப்தியாயநமா: என்றும்,

நாசி மத்தியில், ஓம் யகாரப்பிரணவ சதாசிவாய ஆக்ஞா சர்வ திரிமலாத்மக ஜீவசுத்தியாய (வம்) நமா மெய்ஞ்ஞானப் பிராப்தி யாய நமாஃ என்றும்,

நாவின் மத்தியில் "ஓம் வகாரப் பிரணவ மகேஸ்வராய விசுத்தி சர்வ திரிகுணத் ஜீவசுத்தியாய (வம்) நமா மெய்ஞ்ஞான ப்ராப்தியாய நமஃ" என்றும்,

கண்டமத்தியில், "ஓம் சிகாரப் பிரணவ ருத்ராய அனுகத சர்வ அந்தக்கரணத்ம ஜீவசுத்தியாய (சிம்) நமா மெய்ஞ்ஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

இருதய மத்தியில், "ஓம் மகாரப் பிரணவ விஷ்ணுவாய மணி பூரக சர்வ கோச அவஸ்த்ராக த்வேஷாத்மக ஜீவசுத்தியாய (மம்) நமா மெய்ஞ்ஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

உந்தி மத்தியில் "ஓம் நகாரப் பிரணவ பிரம்மாய சுவாதிஷ் டான சர்வ இந்த்ரியாத்ம ஜீவசுத்தியாய (நம்) நமா மெய்ஞ் ஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

குண்டலிநாபி மத்தியில், "ஓம் ஓங்காரப் பிரணவ சிருட்டி கணபதியாய மூலாதார சர்வ பூதாத்ம ஜீவசுத்தியாய (ஓம்) நமா மெய்ஞ்ஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

இடது நாசித்துவார மத்தியில், "ஓம் பிராணரேசக சந்திர கலாசர்வ தத்வாம்ச சக்திஸ்வரூப சத்தியாய (சிவா) நமா மெய்ஞ்ஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

வலது நாசித்துவார மத்தியில், "ஓம் பிராணபூரக சூரியகலா சர்வ தத்வாம்ச சிவஸ்வரூப சுத்தியாய (ஹம்) நமா மெய்ஞ்ஞா னப் பிராத்தியாய நமாஃ" என்றும்,

இடதுகண் மத்தியில், "ஓம் கலாமய ஞானமய சூக்ஷமாய அகண்ட நாஞவியாபகாறிவுபதேசலன் சர்வபகிர்பாவ தரிசன ஜீவ சம்பந்த திருஷ்டியாய (உம்) பீஜப் பிரணவ ஜீவோசர்வசுத்தியாய நமா பிரமஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

வலதுகண் மத்தியில், "ஓம் கலாமய ஞானமய காரணய சூக்ஷமாதிய அகண்ட நாஞவியாபகாறிவுபேத சங்கற்ப சர்வ பகிர் முக அந்தர்முக பாவதரிசன ஆத்ம அஞ்ஞாஞபிமான திருஷ்டியாய

(இம்) பீஜப் பிரமாண ஆத்மசர்வ சுத்தியாய நமா பிரம்மஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

புருவமத்திய கண் மத்தியஸ்தானத்தில் ஐம் கலாமய ஞானமய மகா காரணமய அகண்டஞான சாக்ஷிய றிவுபேத தன்னறிவாகார பேத அபேத சாக்ஷாத்கார ஈஸ்வர ஞானபிமான திருஷ்டியாய (அம்) பீஜப்பிரணவ ஈஸ்வர சர்வ சுத்தியாய நமா பிரம்மஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

இடதுசெவி மத்தியில், "ஓம் நாதாமய ஞானகாய வாசிஸ்வ ரூபகண்டாகண்ட ஆக்ருஷ்ண சத்திகலே ரேசக இடகலா காரணய (மம்) பீஜகாரண நாதாய சக்திசுத்தியாய நம பிரம்மஞானப் பிராப்தியாய நமஃ" என்றும்,

வலதுசெவி மத்தியில், "ஓம் நாதாமய ஞானமய வாசிஸ்வ ரூப கண்டாகண்ட ஆக்ருஷ்ண சிவகலே பூரக பிங்கலாகாரணய (உம்) பீஜகாரண நாதாய சகதிசுத்தியாய நமா பிரம்மஞானப் பிராப்தி யாய நமாஃ" என்றும்,

இடதுபுய மத்தியில், "ஓம் இடகலா ரேசக பிரணவகிரியா சக்திகலே சர்வகர்மாதி காரத்வ சுத்தியாய (சிங்) பீஜாய நமா பிரம்மஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

வலதுபுய மத்தியில், "ஓம் பிங்கலா பூரக பிரணவகிரியா சிவ கலே சர்ம கர்மாதிகாரத்வ (வங்) பீஜாய நம பிரம்மஞானப் பிராப் தியாய நமாஃ" என்றும்,

இடது முழங்கால் மத்தியில் "ஓம் இடகலா ரேசக பிரணவ விஷயா சிவகலே விர்த்தியாதிகாரத்வ சுத்தியாய (இம்) பீஜாய நமா பிரம்மஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும்,

வலது முழங்கால் மத்தியில், "ஓம் பிங்கலா பூரக பிரணவ விஷயா சிவகலே விர்த்தியாகிகாரத்த சுத்தியாய (அம்) பீஜாய நமா பிரம்மஞானப் பிராப்தியாய நமாஃ" என்றும் வலதுகை பெரு விரல், இரண்டாம் விரல்கள் சின்முத்திரை விரலால் தொட்டு மனத் தினல் தியானிக்கவும்.

பிரமாந்திர மத்தியதானத்தில் ஆகாயமெங்கும் அண்ட வெளி யாகிய அறிவு வியாபக சாட்சி திருட்டியாய்ப் பாவித்து மனோபவ

னத் தியான சொரூபமாய் "ஓம் அஹம் சுவயப் பிரம்மமே நமஹ" என்று தியானிக்கவும்.

தியான மகாமந்திரம்

ஓம் - ஸ்ரீம் - கிரீம் - நமசிவாய நமஃ

இவ்வாறு விபூதிதாரணம் முடிந்தபின்பு கீழே விதித்தபடி உருத்திராக்க தாரணஞ் செய்துகொள்ள வேண்டும்.

உருத்திராக்க தாரணவிதி

விபூதியும் உருத்திராக்கமும் சிவச்சின்ன மாகையால் அவ்விரண்டுமே தரிக்கவேண்டும். இதுவுமன்றி, விபூதியானது சில வேளை வியர்வை மழை முதலியவற்றால் குலைந்துபோனாலும் உருத்திராக்க மிருந்தால் தோஷமில்லை. அதனால், இராக்கதரால் பீடிக்கப் படும் பாவம் அணுகாது.

பரமசிவன் திரிபுரசங்காரம் செய்யப்போன காலத்தில் கோபாவேசத்தினால் அவருடைய நேத்திரங்களில் இருந்து நீர்த்துளி விழ அதனால் உண்டாகியது; இந்தக் காரணத்தினால், அதற்கு உருத்திராட்ச மென்னும் பேருண்டாகியது; (உருத்திரன் - சிவன்; அட்சம் - கண்) அதற்குக் கண்மணியென்று பொருள். சிவபூசை செய்கின்றவர்கள் கழுத்தில் உருத்திராக்க மில்லாமலே பூசித்தால், அந்தப் பூசையைப் பரமசிவன் அங்கீகரித்துக் கொள்ள மாட்டார். ஆதலால் சிவபூசை முதலிய சிவவிரதாதிகளைச் செய்கின்றவர்கள் அவசியம் உருத்திராக்க கண்டிகை தரித்துக்கொள்ள வேண்டும்.

உருத்திராக்கோற்பத்தி

ஆதலால் உருத்திராக்க தாரணமே கருத்தவியமாகும். அந்த விதானமும் சுத்த சைவன் அறியவேண்டும்; அது திரிபுரதகனன் லீலாசமயத்தில் ஈச்சுரன் சந்திரசூரியாக்கினி ரூபலோசனத்திரயத்திலான சலபிந்துக்களிலிருந்து கிரமத்தில் சுப்பிரவர்ணத்தில் சோடசவிதமாயும், இரத்தவர்ணத்தில் தசபேதமாயுமிருக்கும் உருத்திராக்கங்களுடைய நாமோச்சாரண, தரிசன, பரிசன, தாரணத்தினால் உத்தியோத்தரமான அதிக புண்ணியங்களைக்கொடுக்க உலோகோபகாரமாகப் பிறந்த உருத்திராக்கங்களைக் கோவை செய்யும்போது,

அதன் தேவதைகளும் பயனும்

ஏகமுகமணி பரமசிவன், பிரமகத்தியாதி பாதகங்களைக் கெடுத்துச் சர்வசித்திகளைக் கொடுக்கும். துவிமுகமணி ஈச்சுவரன், ஈசுரி நியர்கள்: கோகத்தியைப் பரிகரிக்கும். திரிமுகமணி அக்கினி; ஸ்திரீகத்தியைக் கெடுக்கும். சதுர்முகமணி பிரமன், புருஷாதி கத்தியைத் தொலைக்கும். பஞ்சமுகமணி சதாசிவன், அபக்ஷிபாபக்ஷணாதி தோஷங்களை நிவர்த்திக்கும். சண்முகமணி சண்முகன்; புரூண கத்தியாதி பாதங்களைக் கெடுக்கும். சத்த முகமணி அநந்தன், கோகத்தி சுவர்ணஸ்தேயாதி சகல கன்மசங்தோஷங்களையும் கெடுக்கும். அட்டமுகமணி விக்கினேச்சுரன், சமத்த பாகங்களையும் சர்வ விக்கினங்களையும் நிவர்த்திசெய்து முத்தி கொடுக்கும். நவமுகமணி வைரவன்; சகல கன்மசங்களையும் களைந்து புத்திமுத்திகளைக் கொடுக்கும். தசமுகமணி மாதவன்; பூதபேதாளமாரி கணபிரமராட்சச பங்காதி பீதிகளை விடுக்கும். ஏகாதசமுகமணி ஏகாதசருத்திரர்; அச்சுவமேதாதி புண்ணியங்களைக் கொடுக்கும். துவாதசமுகமணி துவாதசாதித்தர்கள்; அக்கினிசோரி வியாக்கியம் கட்காதிபாதைகளைக் கெடுக்கும்; திரயோதசமுகமணி மகேச்சுவரன்; துற்கிருத்தியங்களை நீக்கி விவகாரசித்தி, சுவர்ணதாதி பலன்கள். ரச ரசாயன வாதவசிபாதிகளைக் கொடுக்கும். சதுர்த்தசமுகமணி மறுக்கள்; சகலதேவதா பூச்சிபத்துவப் பிரதாயியென்று அறிவது.

உருத்திராக்கதாரணம் முடிந்தபின்பு கீழே குறித்தபடி நியமத்தோடு அந்தந்த இடத்தை தொட்டு தியானிக்கவும்.

அங்கசுத்தி

ஓம் அம் - யம் - வம் - சிம் - மம் - நம் - ஓம் என்று உச்சியையும்,
ஓம் யம் என்று நாசி மத்தியையும்,
ஓம் வம் என்று வாயின்மேல் உதட்டையும்,
ஓம் சிம் என்று கண்டமத்தியையும்,
ஓம் மம் என்று இருதய மத்தியையும்,
ஓம் நம் என்று உந்தி மத்தியையும்,
ஓம் ஓம் என்று நாபி குண்டலி கமலத்தையும்,
ஓம் சிவோ என்று இடதுநாசி துவாரத்தையும்,
ஓம் ஹம் என்று வலதுநாசி துவாரத்தையும்,
ஓம் வோம் என்று நாசித் தண்டையும்,

ஓம் அரி என்று இடது கண்ணையும்,
ஓம் ஷங் என்று வலது கண்ணையும்,
ஓம் அம் என்று லலாட மத்தியையும்,
ஓம் உங் என்று இடது காதையும்,
ஓம் உம் என்று வலது காதையும்,
ஓம் சிங் என்று இடது புயத்தையும்,
ஓம் வங் என்று வலது புயத்தையும்,
ஓம் இங் என்று இடது முழங்காலையும்,
ஓம் அங் என்று வலது முழங்காலையும் விரலால் தொட்டும்,

ஓம் இம் என்று சிரசு உச்சியில் மனத்தை நிறுத்திச் சொல்லப் பட்ட பாவனையின்பேரில் கீழ்வரும் முத்தி பஞ்சாட்சரத்தைத் தியானிக்கவும்.

முத்தி பஞ்சாட்சரம்

ஆராதார தேவதாய நமா ஓம் ஸ்ரீம் கிரீம் நமசிவாய மகா தேவதேவேஸ்வர நமஃ

அங்கசுத்தி பிரயோசனம்

இவ்விதமான அங்கசுத்தி யாதெனில், சிரசு - காது - கண் - மூக்கு - வாய் - கரங்கள் - சரீரம் - மனம் - குய்யம் - உபத்தம் முதலிய அங்கங்களும் தனித்தனியாய்ப் பாவகிருத்திய விவகாரங்களில் பிர வேசிக்காது அதற்குப் புண்ணிய தபோகிருத்திய விவகாரங்களிலே இராகின்றதே அங்க சுத்தியாகும்.

காயத்திரி

பிரமாந்திரத்தில் பிரமஞான பாவனையிலிருந்துகொண்டு (பின் வரும்) இந்தக் காயத்திரி மந்திரங்களைத் தியானிக்கவும்.

மஹாபிரம காயத்திரி
பிராதகால தியான மந்திரம்

ஓம்பூஹ ஓம்பூவஹ ஓம்ஸுவஹ ஓம்ஜனஹ ஓம்மஹஹா ஓம் தபஹ ஓம்சத்தியம் ஓம்ததஸ் விதுர்வரேண்ணியம் பார்க்கோ தேவஸ்ஸிய தீமஹீதியோ யோனஹ பிரசோதயாத் ஓமா, போ ஜோதிரஸோ - பமதம் - பிரமஹ பூர்ஜுவஸ்ஸுவரோம்.

ஓஜோ ஸி - ஸஹோஸி - பலமஸிப்ரா ஜோஸிதேவானும் தாமனு மாஸி - விஸ்வமஸி விஸ்வாயுஹு ஸர்வமஸி ஸாவாயுஹு அபிபூரோ

கம் காயத்ரிமாவாஹயாமி ஸாவித்ரி மாவாஹாயாமி சரஸ்வதி மாவாஹயாமி சந்தருஷிமாவாஹயாமி ஸ்ரீயமாவாஹயாமி, பல மாவாஹயாமி.

தத்விதுஹ்ரூ அங்குடாப்பியாம் நம - வரேண்ணியம் தாஜஜீப் பியாம்நம - பர்கோதேவஸ்ஸிய மத்தியமாப்பியாம் நம - தீமஹி அனு மிகாப்பியாம் நம - தியோயோனஹ - கனிஷ்டிக்காப்பியாம் நம - பிர சோதையாத் கரதல கசப்புருஷ்ட்டாயாம் நமஃ

தத்ஸவிதுர் பிர்மாத்மனே ஹருதராயநம வரேண்ணியம் விஷ்ணுவாத்மனே சிரஸ்ஸ்ரூவாஹா - பர்கோதேவஸ்ஸியருக்தி ராத்மனே ஸிகாயைவஷட் - தீமஹிசத்தியாத்மனேஸ்ரூ ரோத்தி யாகவசாயஹம் - தியோயோஹ விக்கிஞா னத்மனே நேத்ராப்பி யாம்வஸட் - பிரயோதயாத் - ஸர்வாத்மனே - அஸ்த்ராயபட்பூர்ப் புவஸ்ரோ - மிதி - திக்கசந்த்ஹா.

சிவாய விஷ்ணுரூபாய விஷ்ணுவே சிவஸ்ஷிய ஹிருதயம் - விஷ்ணுதர் விஷ்ண்ணுஞ்ச ஹிருதயக்ஸிவஹா - யாதாசிவ - மயோ விஷ்ணுரேவம்விஷ்ணு மயஸிவஹாஃ

சூரியத் தியானம்

மந்திரஸ்ஸிய சர்ஷ்ஷனி திருத ஸ்ரவோ தேவஸ்ஸியஸான ஸிம் ஸத்தியம் ஸித்திரா ஸ்ரவஸ்தவம் மித்தோஜன்னியாசுத்ய திவிரஜானன் மித்திரோ தாதார பிரிதிபி முதததியாம் மித்திர ஹாகுருஷ்டிர் நிமிஷாபி சஸ்ட்டேஸத்தியா அவ்வியம் திருதவத் விதேமபிரஸ மித்திரமர்த்தோ அஸ்த்து, அரயஸ்ஸ்ரூதாம்யஸ்த்த ஆதித்திய சிட்க்ஷதி விரஜேன நஹனந்தியே - நஜீயதே - துவதோஸை நமக் - ஹோ அன்னித்தியமதிந்து - தோந்தூராத் என்று தியானிக்க வும்.

காலைச் சந்தியாவந்தனம்

விஷ்ணு துதி

ஓம் கேசவாயஸ்வாஹா
ஓம் நாராயணஸ்வாஹா
ஓம் மாதவாயஸ்வாஹா
ஓம் கோவிந்தாயநமஹா
ஓம் விஷ்ணுதேவன் நமஃ
ஓம் மதுசூதாயன நமஃ
ஓம் திரிவிக்கிரமாய நமஃ
ஓம் வாமகாய நமஃ

ஓம் ஸ்ரீதராய நமஃ ஓம் நாரசிம்மாய நமஃ
ஓம் ரிஷீகேஸாய நமஃ ஓம் அச்சுதாய நமஃ
ஓம் பத்மநாபாய நமஃ ஓம் ஜனர்த்தனய நமஃ
ஓம் தாமோதராய நமஃ ஓம் உபேந்திராயேன நமஃ
ஓம் ஸங்கர்ஷணய நமஃ ஓம் ஹரயேன நமஃ
ஓம் அதோட்க்ஷஜாய நமஃ ஓம் ஸ்ரீகிருஷ்ணனயேன நமஃ

மத்தியான காயத்திரி

அபஹா புணந்து புருணிவீன் பிரிதிவீ பூதா புனுதுமாம் புணர்க்கியாபிரதானம் ஹக் சச்சு ஷத்வஸுரம் தரிட்க்ஷஸைத்தேம் தாவேதி க்ஷநதிதிர்த்து ரோசணத் மிருஸத்வரஸதருதஸவியோம ஸதப்ஜா கேஜாருத ஜாத்திரி ஜாருதம் புருஹத்.

ஓம் மித்தியே காட்க்ஷிரம் பிரம்மஹா அக்னிர்தேவதாபிரம் மஹா, யத்தியா த்க்ஷர வாய்த்திரம், சந்தனம் பரமாத்மம், ஸ்வ ரூபம் ஸாயுஜ்ஜியம் வினியோகம்.

ஆயாதுவர தாத்தேவியக்ஷரம் பிரம்மஸம்மிதம் காயத்திரி சந்தசாமேதேதபிரம்ம சுஷஸ்வமே யதக்ஞேயித்குருதே பாபம் தத்க்ஞே பிரதி முக்சதே யத்திராத் திரியாத் குருதேபாபம் தத்ராத் திரியா பிரதிமுச்சதே சர்வர்ண்ணே மகாதேவி ஸந்தியவித்தியே ரைஸ்வதி.

மாலைச் சந்தியாவந்தனம்

ஓம் தஸ் - விதுர்வரேண்யம் - பர்கோ - தேவஸ்ஸிய தீமகித்தியோ னப்ரஜோ தயாத் ஓம் மாமோ ஜேதி ரசோ மிருதம்பிரம்ம - ஹ்யூர்ப் பவஸ்சுவரோம் - பூர்வோக்த பிரீதியக்தம் - சந்தியாங்கணம் எதா சக்தி காயத்திரி மந்திரம் ஜபங்கரிஷியே.

நமஸ்காரம்

ஓம் யோதேவோச்நௌமோபசு யோவீச்வம்புவனமாவிவே சயஓதிதீஷுயோ வனஸ்பதீஷுதஸ்மை தேவாயநமோ நமஃ

ஆராதனை

ஓம் சத்யம் ஞானமனந்தம் பிரம்ம ஆனந்தரூப மமிர்தம்யத் விபாதி சாந்தஞ் சிவமத்வைதம்.

காயத்திரி தியானம்

ஓம் பூர்புவ ஸுவுதத்ஸ விதுர்வரேண்ணியம் பர்கோதேவஸ்
யதீ மஹிதியோயோந ப்ரயசாவயாத்.

அடைக்கலம்

ஏஸோஷ்யபரமாகதி ரேஷாஸ்ய பரமாஸ்பதேஷோஸ்ய பரமே
லோக ஏஷோஸ்ய பரமானந்த ஏதஸ்யை வாநந்தஸ்யாந் யர்நிபூதா
நிமாத்ரதமுப ஜீவந்தி.

தோத்திரம்

1. ஓம் நமஸ்தே ஸ்தேதே ஜகத்காரணுய நமஸ்தேஸிதேசர்வ
லோகாரயா நமோத்வைத தத்வாய முக்திப்ரதாய நமோபிர்ஹ
மணே வ்யாபிநேசாச்வதாய.

2. த்வமேகம் சரண்யம் த்வமேகம் தரேண்யம் த்வமேகம்
ஜகத் பாலகம் ஸ்வப்ரகாசம் த்வமேகம் ஜகத்தர்த்ரு பாத்ருப்ர
ஹர்த்ரு த்வமேகம் பரம் நிச்சலம் நிர்விகல்பம்.

3. பயாநாம் பயம்பீஷணம் பீஷ்ணாம் கதிப்ராணி நாம்பவ
நம்பாவநாநாம், மஹோச்சைப்பதாநாம் நியந்த்ருத்வமேகம் - பரே
ஷாம்பரம்ரக்ஷணம் ரக்ஷணாம்.

4. வயம்த்வாம்ட்மரர்மோவயம் த்வாம்பஜாமோ, வயம்த்
வாம் த்ஸாக்ஷிருபம்நமாம ஸதேகம் நிதாநம்: நிரலாம்பமீசம் பவாம்
போதிபோதம் சுரண்யம் வரஜாம.

பிரார்த்தனை

அஸ்தோம் ஸத்சமய தமஸோமா ஜ்யோதிர்கமயம் ருத்யோ
ஜகர்மா அம்ருதங்கமய ஆவிராவீர்மஎதி ருத்ரா யத்தே தக்ஷ்ணம்
முகம் தேநமாம் பாஹிநித்யம்.

ஆசீர்வசனம்

ஓம் யரகோவர்ணேபஹுதாசத்தியோ காத்வர்ணுதே காந்தி
இதார்த்தேத்தாதி விசைதிசாந்தே விச்வமாதௌ ஸதேவஸநேபுத்யா
ஸுபயாஸம் யுதக்து.

சாந்தி வசனம்

ஸ்வருக்ஷகாலக்ருதிபி பரோந்யோவஸ்மாத் ப்ரபஞ்ச பரிவர்த்த
தோயம் தர்மமாஹம் யாபதுதம்மகேசம் ஞாத்வாத்ம ஸ்தமமர்தம்

விச்வதாம விச்வஸ்யைகம் பரிவேஷ்டாரம் ஞாத்வசிவம்; சாந்தி மத்யந்தமேதி.

சில பொது விதிகள்

விபூதி அணியலாகாத இடங்கள்

கடவுள் அக்கினி ஆசாரியன் பாவிகள் சிவசிந்தை செய்வோர் பூப்புள்ளோர்கள் இவர்கள் முன்னம் விபூதி அணியப்படாது. அன்றி மேற்படியார் வசிக்குமிடம் - அசுத்தநிலம் - நடக்கும்போது இவ்விடங்களில் விபூதியைத் தொடுவதும் மாபாதகமாம்.

விபூதி அணியுங்காலம்

விபூதி புண்ணிய சொரூபமாதலால் எப்போதும் தீட்டென்பது கிடையாது. அன்றி மேற்சொன்ன இடமே தவறன்றி விபூதிக்குக் காலத்தவறு கிடையவே கிடையாது.

அணியத்தகா விபூதி

கோமயத்திலே தீட்சாகிரமத்தோடேயே மகா சிவவிரதிகளாற் செய்யப்பட்டதாயினும், பால்வெண்மையில்லா விபூதி உதவாது. அதனைக் கட்டாயம் பெறவேண்டியதாயின் வாங்கிய விபூதியை நமஸ்காரத்தோடு பத்திர புட்பங்களால் அருச்சித்துப் பெற வேண்டும்.

விபூதி அணியத் தகாதவர்கள்

கௌபீன மற்றவர், நிருவாணமாயுள்ளவர், தேகமலினமாயுள்ளவர், அழுக்காடையுடையோர் முதலியவர் விபூதியணியப்படலாகாது.

விபூதியைக் குழைத்திட வேண்டியவர்கள்

சமயி காலியினும், புத்திரன் காலைமாலைகளிலும், சாதகன் காலை மாலை மத்தியானங்களிலும், ஆசாரியன் காலை மாலை மத்தியான அர்த்தராத்திரிகளிலுமே விபூதியை நீரிற்குழைத்துத் தரிக்க வேண்டும்.

விபூதி குழைப்பதற்கேற்ற சலம்

ஊற்றுநீர் அல்லது, ஆற்றுநீராய்க் குளிர்ந்த சலமாய் வடிகட்டியதா யிருத்தல் வேண்டும். அப்படியல்லாது, உவர்நீர் - வெந்

நீர் - பழையநீர் - பாசி - குமிழி - நுரை - கலங்கல் - புழு முதலியவை யுள்ள அசுத்தநீர் இவைகள் ஆகா.

விபூதியணிவோர் சூரியோதயத்திற்குமுன் எழுந்து மலசலங் கழித்து, தந்தசுத்தி செய்தபின் சிவத்தியானத்தோடு விபூதியணிந்து கொள்ளவேண்டும்.

விபூதியைப் பெறுங்கால் வந்தனோபசாரத்துடன் இரண்டு கையாலும் பெற்று, திரிபுண்டரம் உத்தூளமாகத் தரிக்கவேண்டும். சதுரமாகவும் பொட்டாகவும் இரேகைப் பழுதாகவும் தரிக்கப் படாது.

விபூதி யணியுங்கால் கிழக்குமுகமாய் நின்று மூன்று விரலால் நெற்றில் பொருந்தும்படி தலைநிமிர்ந்து மனச் சந்தோடத்துடன் தரித்தல்வேண்டும்.

ஸ்திரீகள் பூப்புநாள்களைக் கழித்துச் சுத்தமாய் அனுட்டானஞ் செய்து சத்தியோசாத மந்திரத்தை நூறுரு செபித்து அணிய வேண்டும்.

விபூதியாதி சிவானுட்டானங்களை ஏனைய சைவரும் அனுட் டிக்குமாறு ஒருவகையாகக் கூறப்பட்டது. மற்ற விடயங்களை விரி வாகக் காணவேண்டின், ஆசாரியாபிடேக தீட்சாதி கிரமமாகத் தெரிதலே உசிதம்; அன்றி, சைவநெறியினுங் காணலாம்.

குறிப்பு

இவ்வித சிவவிரதானுட்டனை சைவன் பஞ்சாட்சராதி மந்திர செப நியதிகளை அறியவேண்டின் அறுவிதகாரணம் - பஞ்ச சிவ மந்திரம் - திரிவித சங்கார மந்திரம் - பஞ்ச பிரணவ மந்திரம் - பஞ்ச பஞ்சாட்சர மந்திரம் - பஞ்சாஸ்திர மந்திரம் - பஞ்ச பிரம்ம மந்திரம் - ஆதிமகாசத்தி மந்திரம் - சல்லிய தந்திராதி சித்த மந்தி ரம் முதலிய மந்திரங்களையும், காயத்திரி மிருத்தியுஞ்சய மூர்த்தித் தூவ நீலகண்ட சரபவீர விக்கினேசுவர விசாக வித்யேசுர பிரம விஷ்ணுக்களுக்குரிய வைரவாதி மகாமந்திரங்களும், கர்மாதிகளுக் குரிய பல்லவாதி கிரியாபேத விதிகளும் மந்திர மந்திரோத்த பீஜ கணித சதசகத்ராதி லிகித நியதிகளும் தெரியவேண்டிய தவசியம்.

இவ்வாறு மந்திரங்களை அனுட்டிப்போர் செபிக்குமிடம் செப சங்கியாபலன், செபபேத தேசகால திதி நட்சத்திர கிரக வார

யோக ஓரா விதிகளும்; எக்கியாதி கிரியா பாவங்களும், திக்கு ஆசன சமூக விஷயங்களும் செபமாலிகை செபமணி செபிப்போரது ஷிதி செபவர்ணரூபம் கற்பத்திரயாதிகள் பிரயோசனாதிகள் சுத்திக் கிரியைகள் அத்திராதி முத்திரை பேதங்கள். பீஜா திரவியாவிதி கள் ஆவாகனாதி உபசாரங்கள் பத்தி சொரூபம் அத்தாங்கபூஜா விதி சுத்தசைவ லட்சணங்கள் சிவவிரத நெறிகள் தீட்சா விதிகள் இலிங்கம் பிரமாண சூத்திரவிதி முதலியவைகளைக் கிரமமாக மிக்க சுருக்கமாய் எழுதத் தொடங்கினும் பெரிய கிரந்தமாக முடியும். இவை விளங்கக் கிடப்பது ஆகமங்க ளிலேயே ஆனதால், சமயதீட்சையேனும் பெற்று ஆசாரியரால் எல்லாந் தெரிந்துகொண்டால் அதிக எளிதாகவும் சம்பிரதாயமாகவு மிருக்குமாதலால், இவ்வளவிலேயே நிறுத்தி விவாகவிதியைக் கூறத் தொடங்குவாம்.

விவாக விதி

குறிப்பு:—கீழ்வரும் பக்கங்களில் 'மணப்பிள்ளை' என்பதை 'மாப்பிள்ளை' என்றும், 'மாணிக்கு உற்றாள்' என்பதை 'மாணிக் கத்தாள்' என்றும், வேறு சில மொழிகளுக்கும் மரூஉமொழியாக உபயோகித்து, படிப்போருக்கு எளிய நடையாக இருக்கும் பொருட்டு என்க.

விவாகமென்பது இவ்வுலகத்துள்ள ஆடவர் மகளிர் இருவரும் ஒருவரோடொருவர் அன்னியோன்னியமாய், அளவளாவி இல்லறம் நடாத்தும்பொருட்டு ஏற்படுத்திக்கொள்ளும் ஓர்வித உடன்படிக்கை, இது இகபரசாதனங்கட்குரிய எவ்வித சுகத்தையும் அடைவதற்கு முதற்காரணமாயிருக்கின்றது. ஆதலாலன்றே, இதற்கு விவாகம் மணம் சுபம் மங்களம் மன்றல் என்னும் சிறந்த பெயர்கள் அமைந் திருக்கின்றன. கலியாணம் என்பது கடவுளாலேயே விதித்தவிதி யன்றி விலக்கல்ல. அவருடைய விதியே என்பதை ஆண்பெண் என்னும் இருவகுப்பாய்ப் படைத்திருப்பதனாலேயே அறியலாம். எல்லாச் சீவராசிகளையும் இவ்வாறே படைத்திருக்கினும் மானிடர்க ளாகிய நமக்கு மாத்திரமே பகுத்தறிவளித்திருக்கின்றனர். அஃ தொன்றில்லாவிடின், மிருகாதிகளைப்போன்றே நாமும் தாயென்றும் தமக்கையென்றும் தங்கையென்றும் தாரமென்றும் தாரதம்மியம்

நோக்காது நடக்க முயன்று அதனாற் பல கெடுதிகள் நேரவும் செய்துகொள்வோம். அப்படிக்குத்தறிவுடைமையினாலேயே மிருகாதிகளுக்கு நடக்கவியலாத அறிய விதிகளெல்லாம் நமக்கு விதித்திருக்கின்றார். அவ் விதிகளைக் கடைப்பிடித்தொழுகி இல்லறம் நடாத்திப் புத்திரப்பேறடைந்து குடும்ப விருத்திபுரிந்து சுகமாய் வாழும் பொருட்டுத் தான் விவாக விதியைக் கடவுள் விதித்திருக்கின்றார். வீடுகட்டும் ஒருவன் அவ்வீடு நெடுநாள் அழியாதிருக்கும்படி உறுதியாய்க் கட்டுவதற்கான முயற்சிகள் பலவற்றையும் முன் சாக்கிரதையாய்ப் புரிவதுபோல, ஒரு விவாகம் நியமிக்கும்போது மணமகன் மணமகள் என்னும் இருவரும் இகலோகத்தில் ஒற்றுமையாய்ச் சுகஜீவிகளாக வெகுகாலம் வாழும்பொருட்டும், இவ்வில்லறத்தால் பரலோகத்திலே சதானந்தம் அனுபவிக்கும் பொருட்டும் இன்றியமையாதனவாயுள்ள ஒழுங்குகளனைத்தையும் புரியவேண்டியது அத்தியாவசியகம். விவாகமானது சதிபுருடர் இருவரின் மன ஒற்றுமையாற் பாக்கியத்திற்கும், மனவேற்றுமையால் தௌர் பாக்கியத்திற்கும் அத்திவாரம்போலாகின்றது, குடும்பத்திற்கு அது கூலம் பாக்கியமும் பிரதிகூலம் தௌர்பாக்கியமுமாமென்பது சர்வ சன சம்மதமாதலின், அவ்விரண்டும் முறையே மனவொற்றுமையாலும் மனம் வேற்றுமையினாலுமே விளையக்கூடுமென்பது ஆபாலவிருத்தர்களு மறிவாரன்றே? அது பற்றிவிரித்துக்கூறவேண்டியது அநாவசியம். தாதனகுடும்பிகளாகிய மணமகன் மணமகள் என்னும் இருவர்க்கும் விவாகம் ஆகிய நாள்முதற்கொண்டே பாக்கியமாயினும் தௌர்ப்பாக்கியமாயினும் தொடர்ந்துகொள்வது தேற்றமாகையால், அக்காலமுதல் அத்தகை பாக்கியம் விருத்தியாகவும் தௌர் பாக்கியம் நிவிர்த்தியாகவும் அவசியமான ஒழுங்குகள் எவைகளோ, அவைகளை அவ்விருவரைப் பெற்றோரேனும் சுற்றத்தினரேனும் செவ்வனே யூகித்து, ஒவ்வொன்றையும் திருத்தமாய் நடத்திவைக்க வேண்டியது முக்கிய கடமையாம்.

கலியாணஞ் செய்யுங் காலம்

சில சாத்திரிகள் ஆடவர்களுக்கு இருபத்தைந்து வயதிலும், மகளிர்களுக்கு இருபது வயதிலும் விவாகம் முடிப்பது தகுதியென்றும்; ஆடவர்களுக்கு இருபத்தைந்து வருடம் வரையில்தான் வளர்ச்சியென்றும், மகளிர்களுக்கு இருபது வயது வரையில் அவயவங்கள் பூரணபக்குவ மடைகிறதென்றும், இவ் வயதிற்கு முந்தி

விவாகம் முடித்தல் இருவருடைய சரீரசவுக்கியத்திற்கும் பிரதிகூல மென்றுங் கூறுகின்றார்கள். சிலதேசங்களில் சீதோஷ்ணவேறு பாட்டிற்கும் தேகசுவாபீகத்திற்குத் தக்கபடியும் ஆடவர்களுக்கு இருபத்திரண்டு வயதிலும், மகளிர்களுக்கு பதினெட்டுவயதிலும் விவாகம் முடிப்பது தகுதியெனச்சில சாத்திரிகள் கூறுகின்றார்கள்; நமது முன்னோர்கள் காலத்திலே இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்டு முப்பது வயதிலேயே விவாகம்முடித்து வந்ததாகவும் அதுவரையில் அவர்கள் சிற்றின்பம் அறியாதவர்களாயிருந்ததாகவும், அதற்கேற்றபடி அவர்களனைவரும் நீடித்த ஆயுளுடையவர்களாயும் நோயற்ற திடகாத்திரமுடையவர்களாயும் இருந்ததாகவும் கேள்விப் படுகின்றோம்.

புருடனுக்குப் பெண்கொடுக்க நிச்சயித்தல்

ஒருவனுக்கு ஒருபெண்ணை நிச்சயப்படுத்துவதானால், அப் பெண்ணின் தாய்தந்தையர் கவனிக்கவேண்டிய முக்கியாமிசங்களாவன :—

புருடன் பெண்ணின் பெருமைக்குத்தக்க நல்ல வமிசத்திலுள்ளவனென்றும், அவன் அல்லது அவன் தந்தை மேகம் காசம் முதலிய வியாதிகளில்லா திருக்கிறார்களாவென்றும், கல்வியில் தேர்ந்து நன்னடக்கையிற் பயின்று விவேகம் புத்தி தாட்பம் அடக்கம் ஒழுக்கம் சாந்தம் வணக்கம் தயை தாட்சணியம் முதலிய சற்குணங்களமையப் பெற்றவனென்றும்; பெண்ணுக்குத் தக்க வயதுள்ளவனென்றும், இலௌகீகவிஷயங்களில் தேர்ந்து தன் குடும்பத்தைக் காப்பதற்குத்தக்க பொருள் சம்பாதிக்கும் திறமையுள்ளவனென்றும் நன்றாய் விசாரித்துப் பலவழியிலும் ஆராய்ச்சிசெய்து பார்த்துப் பலநாள் ஆலோசித்துத் திருத்தியான பின்னரே பெண்ணைக் கொடுக்கச் சம்மதிக்கவேண்டும். அப் புருடனுக்கு மேகம் முதலிய தொத்துவியாதிகளிருந்தால் அவ் வியாதி நாளடைவில் அவன் மனைவிக்கேறி, "அசமரத்தைப் பிடித்த பிசாசு பிள்ளையாரையும் பிடித்தது" போல யாதோர் அநுபவமும் அறியாமல் அவர்களது வயிற்றிற்பிறந்த பிள்ளைக்கும் பிடித்துக்கொள்ளும். ஆதலால் அவ்வித ரோகமுடையவனுக்குப் பெண் தரலாகாது. சயரோகமுடையவன்; உன் மாதவமிசத்திற் சேர்ந்தவன், குடியன் என்னும் இவ்வகையினரைப் பெண்கள்

மணம்புரிந்துகொண்டால், அவர்கள் வாழ்நாளளவும் துக்கமும் துன்பமும் அநுபவித்துக்கொண்டே யிருக்கவேண்டும். சில புருடர்கள் தங்களுக்குள்ளே மேகம் முதலிய வியாதிகளைக் கலியாணகாலம் வரை இரகசியமாய் ஒளித்து வைத்துக்கொண்டிருப்பார்களாதலால் அப்படிப்பட்ட விடயங்களை அவர்களுக்குரிய சிநேகிதர்களைக் கொண்டு லளிதமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். திரவியவந்தனாயிருக்கின்றானென்று வியாதியுள்ளவனுக்கும் மூடசிகாமணிக்கும் கிழவர்களுக்கும் பெண்ணைக் கொடுக்கச் சம்மதிக்கலாகாது. மூடன் கையிற் சிக்கியபொருள் பைத்தியக்காரன் கையிலிருக்கும் கத்திக்குச் சமானம். பைத்தியக்காரன் எப்படி அக்கத்தியால் தனக்கும் பிறர்க்குங் கேடு விளைப்பானோ அதுபோலவே மூடனும் தன் கையிற் சிக்கிய பொருளால் பிறர்க்குக் கேட்டைத் தேடித் தானுங் கெட்டுத் திண்டாட்டமுற்றுத் தெருவில் நிற்பான். ஆதலால், ஒரு பெண் அவ்வித அறிவில்லாப் பாக்கியவானுக்கு வாழ்க்கைப்படுவதை விட அறிவுள்ள தெளர்பாக்கியனுக்கு வாழ்க்கைப்படுதலே அதிக நன்மை. திரவியவந்தனை தீராரோகஸ்தனுக்கு வாழ்க்கைப்பட்டுச் சிந்தை கலங்குவதைவிட அரோக திடகாத்திரமுள்ள ஏழைக்கு வாழ்க்கைப்படுவதே ஆனந்தம். ஐசுவரியமுள்ள கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு, வாழ்நாள் யெல்லாம் சுகானுபவமின்றி அல்லற்பட்டு அழுங்குவதைவிட வாலிபனை ஏழைக்கு வாழ்க்கைப்பட்டுச் சுகானுபவத்திற் சோர்வின்றி யிருத்தலே அதிக மேன்மை.

பேராசையுள்ள பெற்றோர்களே! நீங்கள் ஊட்டிவளர்த்த இளங்கிள்ளையைப் பூனைவாயி லொப்பித்தாற்போல, அருமையாகப் பெற்றெடுத்த அரிவைமார்களை முற்கூறிய தரத்தினருக்குப் பேராசையாலும் மௌடீகத்தாலும், கொடுத்துவிட்டுப் பரிதவிக்க விடாமற் செவ்வையாய் ஆராய்ச்சிசெய்து, ஏழையா யிருந்தாலும், அரோக திட காத்திரனுகவும், வாலிபனுகவும், சற்குண சம்பன்னனுகவும், கல்வியறிவுள்ளவனுகவும், இலௌகீகனுகவும், குடும்பத்தைக் காப்பதற்குப் போதுமான வருவாயுள்ளவனுகவும், அல்லது இனிமேல் சம்பாதிக்கத்தக்கவனுகவும் உள்ளவனையே தேடி உங்கள் பெண்ணைக் கொடுங்கள்; கண்மூடித்தனமாய்க் கொடுத்துவிடாதீர்கள்.

புருடனுக்குப் பெண் பார்த்தல்

முற்கூறியபடி இவ் விந்துதேசத்தில் தாய்தந்தையரே தங்கள் பிள்ளைகளுக்குப் பெண் பார்த்து விவாகம் முடிப்பது வழக்கத்தில்

வந்திருப்பதால், அதற்குரிய இலட்ஷணங்களை அடியிற் கூறுவாம்: "இனம் இனத்தைச்சேரும்" என்றபடி தாய்தந்தையர் தங்கள் இனத்திற் சேர்ந்து தங்கள் பெருமைக்குத் தக்கதாயுள்ள பெண்ணைக் குறிக்கவேண்டும் அதன்பிறகு "தாயைத் தண்ணீர்த் துறையிற் பார்த்தால் வீட்டில் பெண்ணைப் பார்க்கவேண்டியதில்லை" என்ற பழமொழிப்படியே அப் பெண்ணின் தாய்தந்தையர் சகோதரர்கள் இவர்கள் கல்வி - அறிவு - ஒழுக்கம் - அடக்கம் - பொறுமை - சாந்தம் - உண்மை - அரோக திடகாத்திரம் முதலிய சற்குணங்களமையப் பெற்றவர்களா யென்று தெளிவாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். அதன்மேல் அப்பெண் கல்வி - அறிவு - புத்திதுட்பம் - சாந்தம் - அமைதி - அடக்கம் - ஒழுக்கம் - வணக்கம் முதலிய சற்குணங்களமையப்பெற்று, சௌந்தரிய முடையவளாய், வாய்ப்பட்டியா யிராமல் அமர்ந்த வார்த்தையும் - அன்னடையும் - குளிர்ந்த பார்வையும் - சத்தியவாசகமும் - உள்ளும் புறம்பும் ஒத்த நடவடிக்கையும் - பாவத்திற்கஞ்சுதலும் - சரீரசுசியும் - பரிசுத்த வஸ்திரமுடுத்தலும் - சதா கடவுள் தியானமும் - எவ்வுயிரும் தன்னுயிர்போ லெண்ணும் எண்ணமும் - வேலையிற் சுறுசுறுப்பும் - வீட்டுச்செய்தியை வெளி விடாமையும் - பிறர்நிந்தை கூறுமையும் - அதனைப் பிறர் கூறக் கேளாமையும் - சமையற்பாகத் தேர்ச்சியும் ஆகிய இவ்வித குணங்களமையப்பெற்றவளா என்று அவள் வீட்டுக்கு அண்டை அயலிலுள்ளவரைச் செவ்வையாய் விசாரித்துத் திருத்தியான பிறகுதான் அப் பெண்ணை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வித ஏற்பாடே முடிவான விதியென்று உணர்ந்தாலும், தேசத்திற்குத் தகுந்தபடி பலவிதமாக முடிவு செய்துக்கொள்ளுகின்றனர், ஆகிலும், நமது இந்து சமயாசாரப்படி சாத்திரங்களுள் விவாக முடிவை எட்டுவகையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஆனல், உலகில் வழங்கும் நால்வகை சாதியாரல்லாத மற்ற இழிகுலத்தாருள் அவ் விவாகம் அனேகவிதமாக நடந்தேறுகின்றது. அதினிலக்கணம் அதைச் சொல்லவேண்டிய அவசரமும் அநாவசியமாதலின், அவற்றை நீக்கி மேற்சொன்ன அட்டவித விவாகமும் இவை என்றும், அவற்றுள் வைதிக சம்பந்தமாய் ஏனையோரும் ஏக தேசமாய் அனுட்டித்து வருவது இஃதென்றுமே கூறத் தொடங்குவோம்.

விவாக பேதம்

1. பிரமம்.
2. பிரசாபத்தியம்.
3. ஆரிடம்.
4. தெய்வம்.
5. காந்தருவம்.
6. அசுரம்.
7. இராக்கதம்.
8. பைசாசம்.

என எட்டுவகைப்படும். அவற்றுள்,

1. பிரம மணமாவது : மங்கைக்குரிய தாய்தந்தையோர் முருகனின் தாய்தந்தையோர் அநுமதி யில்லாமல் பிரமசாரியான மணாளனுக்கு ஓமாக்கினி முன்னிலையில் தத்தஞ்செய்து கொடுப்பதாம்.

2. பிரசாபத்தியமாவது : கன்னிகையைப் பெற்றோரும் பிள்ளையைப் பெற்றோரும் மனமொருமித்து, பந்து மித்திரரோடு மணம் முடிப்பதாம்.

3. ஆரிடமாவது : பெண் வீட்டில் இரண்டு எருதுகளைக் கொண்டுபோய் மாப்பிள்ளை வீட்டார் கட்டிவைத்து வந்தவுடன் அவர்கள் எருதை பெற்றுக்கொண்டால், பெண் கொடுக்கிறோமென்பதற்குச் சாட்சியாக எண்ணி முருகனது தேவி வள்ளியென மங்கையை மனமாரக் கொடுக்கப்பெறுவது. அவ்வெருதை யேற்றுக் கொள்ளாராயின் பெண் கொடுப்பதில்லை யென்ற குறிப்பாம்; இது ஒருவகை தேசாசாரம்போலும்.

4. தெய்வமாவது : மணவாளனில்லாமல் மணாளன் காமேஷ்டியாகம் நடத்தி, பெண்ணை காருகபத்தியமென்னும் அக்கினிக்கு முன்பாக நிறுத்தி புத்திரவரத்திற் பிறந்த புதல்வனுக்குத் தத்தஞ் செய்வதாம்.

5. காந்தருவமாவது : மைந்தனும் மடந்தையும் ஒருவர் கொடுப்பதின்றியே ஒரு தனி இடத்தே சந்தித்து இருவரும் ஏக வைபோகமாக மனமொத்து சித்தமுருகுவதாம்.

6. அசுரமாவது : கன்னிகைக்கு தங்க பூடணங்களும் ஆடைகளும் அணிவித்து அன்னதி பட்சணமும் அளித்து ஆசாபாசங்களை யுண்டாக்கி, பெண்ணின் தாய்க்குப் பொற்பணி பொற்றாசு பொற்காசு முதலியவைகளைக் கொடுத்து உபசரித்துப் பழக்கமாய பிற்பயந்திருந்து வஞ்சத்தோடு மருவுவதாம்.

7. இராட்சசமாவது: ஒருவன் ஒரு பெண்ணின்மே லிச்சை யுண்டாகி விசாரிக்கும்போது பெண்ணும் பெண்ணின் தாய்தந்தை யரும் சம்மதியாராயின், அக்கால் அப்பெண்ணை தந்திரமந்திராதி களால் வலிதி லெடுத்துச்சென்று மனரம்மிதமாகும்படி இன்சொற் பேசி பண்டு பலாதிகளைக் கொடுத்து மாலையணிந்து மணப்பதாம்.

8. பைசாசமாவது: பெண்ணின் உற்றாரும் மற்றோரு மறி யாது பெண் மதிமயங்கிய காலத்தே மருவுவதாகும்.

அதாவது, மூத்தாளிடத்தும், துயில்வாளிடத்தும், களித்தா ளிடத்தும் பெறுவதாம்.

இந்த எட்டுவகை விவாக பேதங்கள் மிருதியாகிய சாத்திரங் களில் சொல்லியிருத்தலினால் இவை பிரமாணமே என்று அங்கீ கரிப்பன அல்ல; அப்படி அங்கீகரிப்பது யுக்தமுமல்ல; இவ் வாறு நடப்பதாக வேதாதி கலைகளில் கண்டபடி கூறியதே யல்லாமல் அவ்விதம் நடக்கவேண்டுமென்றல்ல. என்னையெனின்? மேற்சொன்ன நாலுவித விவாகம் நீங்கியவை கரும்புலையரும் விரும்பத் தகாதது; அஃது பேய் பிரேத முதலிய அசம்பிரதாயி களுக்கே சிறப்பாம். ஆதலின் வேதசம்மதமாக உயர்குலத்தாரால் வெகு சனப்பிரியமாய் அங்கிகரித்துவரும் பிரமம், பிரசாபத்தியம் என்னும் இரண்டுமே சிறந்ததாம்.

அவற்றுள் பிரமம் என்னும் விவாகம் தற்கால பிராமண ருள்ளும் ஏகதேசமாக நடந்தேறுகையாலும் ஆசிரமாதிகள் நிலை தவறியுள்ளதாலும் 'சமயம் வந்தபோது பேசிப்போம்' என நிறுத்தி இப்போது யாவராலும் கொண்டாடத்தக்க பிரசாபத்திய மணத்தினது இயல்பைமாத்திரம் இங்கு கூறுகிறோம்.

பெண்களின் அசுப லட்சணம்

அரிய பெரும் புகழை வாய்ந்த இல்லறத்திற்குக் காரணம் பெண்களே. இவ்வித ஸ்திரீகள் எத்தகைய குணவதிகளா யிருக்க வேண்டு மென்னின் ஸ்திரீ புருஷ அவயவ லக்ஷணங்களைக் குறிக்கும் சாமுத்திரிகாலக்ஷணம் முதலிய நூற்கள் ஒருவாறே குறிக்கின்றவாயினும், அங்க விலக்கணத்தையே கூறினவன்றி குணதி சுபலட்சணங்களைக் கூறவில்லை. அன்றி, அங்க அளவி லேயே குணலக்ஷணம் கூறுதல் அடாது. என்னையெனின், அங்க

சுபாவமானது நோய், வைரூரி, தேமல், ஆசாரம், ஒளடத முதலிய வைகளால் மாறுபடுவதாகலின் அவ்வவ் அவசரங்களில் வேறுவே றிலக்கணங்கூற நேரிடும். குணமோகாலாதீதமாகக் கற்பிப்பதன்றி, அங்க அளவினலென்பது அசம்பிரதாயமாகும். எனவே குணங்க ளும், தேகமும், காலமும், இடமும், சார்பும் மாறுபடுவ தாகலான் ஆன்றோர் கூறிய வடிவிலக்கணம் ஏகதேசமன்றி முற்றும் நிடமாகா என்னை அந்நூலாசிரியர்கள் அபிப்பிராயம் எம்மரபார்க்கும், எவ்வூ ரார்க்கும், பொதுவாகாது ஒருசார்பேயாம். இங்ஙனமாக ஸ்திரீ களை ஆஸ்வோர் நூலளவையைப் பிரமாணமாகக்கொண்டு அந் நூற்களில் விலக்கான அவயவத்தாரை வைதும், புறங்கூறியும், அவ நெறிகளைக் கற்பித்துச் சிந்தித்தும், ஒற்றுமையைக் கெடுத்தல் அறி வின்மையென முக்காலுமறிவாராக. ஆயினும் இங்கு ஸ்திரீக ளிலக்கணங் கூறவேண்டுவது அவஸ்யமேயாதலானும் ஆன்றோரால் அத்வசியமாகக் கொள்ளக்கிடக்கும் ஒருவகை இலக்கணம் கூறுதும்.

மரம் - பட்சி - நதி - குப்பை - கிரிப்பெயருள்ளவளும், பெரு வயிறு - உயரம் - குள்ளம் - கூன் - சிவந்தமயிர் பிரட்டைத்தலை-வங்கு முகம் - குழிகண் - செங்கண் - சப்பைமூக்கு-முறக்காது-தொங்குதடு - எறுபல் - கரிகழுத்து - ஏற்றத்தாழ்வான குசம் - வளைதடிபோன்ற கை - தோள் - சுபரேகையில்லாத உள்ளங்கை - புள்ளி தழுதணை-மயிருள்ள உடம்பு - பருத்த இடை - குத்துகால் - ஏற்றத் தாழ்வான கால்விரல் - விரலோடு விரல் மூட்டாமை - நிலமதிர - நடத்தல் - பிடி வாதம் - பேருண்டி - தேகங்குலுங்க நடத்தல் - வெடிகுரல் - ஈனசுரம்-விரைந்தநடை - சுசியிலாமை - தயையின்மை - சதாபெருங்கூச்சலிடல் இத்தகைய தூர்க்குணமுடையவளை மணஞ்செய்யலாகாது.

பெண்களின் சுப லட்சணம்

சமஉயரம் - மிருதுதேகம் - ஒழுங்காகிக் கறுத்தமயிர் - வட்ட முகம் - பெருத்தகண் - நேர்நாசி - சிறுத்தவாய் - சிவந்த உதடு - நிலவு போன்ற தந்தபத்தி - சங்கக்கழுத்து - நெடுந்தோள் - அங்குசம் - சங் கம் - துவசம் - பதுமாதி சுகரேகையுள்ளகரம் - சிறுத்தவிரல் - ஒத்த பயோதரம்-சமவயிறு-சிறுத்த இடை - விருத்தசகநம் - நுண்தொடை-அழகு கணைக்கால் - மிருதுவானபாதம் - உரோமரகிதமான தேகம்-அற்ப நித்திரை - விரைந்தபணிவிடை - இனியகுரல் - கலகமறியாமை-கடுஞ்சொல்லில்லாமையுமாகிய குணங்களுடையவளை வரிக்கலாம்.

சகுனம்

மாப்பிள்ளைக் குரியவர்கள் இட்டபத்துக்களுடன் வடக்கு நோக்கி இவ்வளவுதூரம் போய்த் திரும்புவதென்று ஒரு எல்லை ஏற்படுத்திக்கொண்டு அந்த எல்லைக்குள் இன்னவிதசகுனம் ஆக வேண்டுமென்று உத்தேசம் பண்ணினவர்களாகப்போய் தாங்க ளெண்ணியவண்ணம் சகுணம் சரிப்பட்டால், திரும்புங்காலியில் கிராமதேவதைக்குப் பூசைசெய்து தேங்காய் வாழைப்பழம் தூப தீபவுபசாரம் பண்ணித் தொழுது தங்கள் வீட்டிற்குப் போக வேண்டியது. சகுனம் பார்க்கவேண்டிய வழக்கமில்லாதவர்கள் தெய்வ சங்கிதானத்தில் பூ வைத்துப் பார்ப்பதுமுண்டு.

பொருத்தம்

அந்தப் பழக்கமில்லாதவர்கள் பிள்ளைக்கும் பெண்ணிற்கு முள்ள சனனக்குறிப்பையாவது பெண்ணின் இருதுக்குறிப்பையாவது பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படி சனனக்குறிப்பும் இருதுக் குறிப்பு மில்லாமற்போனால், சோதிடரால் முன் சொல்லிய தசவிதப் பொருத்தங்களைப் பிரதானமாகக்கொண்டு முகூர்த்தம் நடத்தும் முயற்சியைத் தேடவேண்டியது.

பரியம்

நட்சத்திரம் - திதியாதிகள் பொருந்திய சுபதினத்தை ஏற் படுத்திக்கொண்டு 'இத்தினத்தில் நாங்கள் பெண்பார்க்கவருகிறோ' மென்று பெண்வீட்டாருக்கு முன்னதாகச் சொல்லி யனுப்பி வைத்து, சில மாங்கலியப் பெண்களுடன் போய்ப் பெண்ணைப் பார்த்து தாங்கள் கொண்டுவந்த மஞ்சள் - புட்பம் - தாம்பூலம் - வாழைப்பழம் - தேங்காய் - குங்குமாதிகளைக் கலியாணப் பெண்மடி யிற் கட்டி வாழ்த்திவிட்டு பெண்வீட்டார் உபசரித்துக் கொடுக்குந் தாம்பூல புட்பங்களை பெற்றுத் தாங்கள் வீட்டிற்கு வரவேண்டியது. அப்பால் பெண்வீட்டுக் காரர்கள் தாங்கள் ஒரு நல்ல நாள் பார்த்துக் கொண்டு மாப்பிள்ளையைப் பார்க்க வருகின்றோமென்று பிள்ளை வீட்டாருக்கு முன்னமே சொல்லி யனுப்பிவைத்து தாங்கள் ஏற் படுத்திக்கொண்ட சுபநட்சத்திர சுபலக்கினத்தில் மாப்பிள்ளை வீட் டிற்குப்போய்க் கலியாணப்பிள்ளையைக்கண்டு கல்விப்பொருள் செல் வப்பொருள் முதலிய நடையுடை பாவனைகளையும் கருதி பிள்ளை வீட்டார் உபசரித்துக் கொடுக்கின்ற தாம்பூல சந்தன புட்பங்களைப்

பெற்று, தங்கள் வீட்டிற்கு வருவதமுண்டு. பின்பு மாப்பிள்ளைக் குரியவர்கள் பெண்ணிற்குப் பரியம் போடுவதற்காக ஒரு நல்லநாள் ஏற்படுத்திக்கொண்டு பெண் வீட்டாருக்கு முன்னமே தெரிய வைத்து நாட்டார்கள் முதலாக வீட்டாரும் பந்துமித்திரர்களும் சில மங்கிலியப் பெண்களும் வரிசைகொண்டு வரும்படியாகப்போய் குலாச்சார முறைமைப்படி பரியச்சீலை - ஆபரணம் - புட்பம் - மஞ் சள் - சந்தனம் - தேங்காய்த்தொகை - வாழைப் பழவகை இவைகளைப் பெண் வீட்டிற் கூடியிருக்கின்ற பெரியதனக்காரரின் சபையில் வைத்து, புரோகிதரால் விநாயகபூசை புரிந்து மாபிள்ளை வீட்டார் கொண்டுவந்த வரிசையை மதித்தல்.

உறுதிப் பத்திரம்

பெண்வீட்டிற்கூடிய சபையார் பெரிதனக்காரர் புரோகிதரால் பரியவோலை யெழுதி, அதற்கு மஞ்சட்காப்பணிந்து குங்குமார்ச்சனை புரிந்து விநாயகருக்கு முன்வைத்துத் தூபதீபங்கொடுத்து வணங்கி வாழ்த்தியெடுத்து, 'இன்ன கோத்திரம் இன்னர் பிள்ளைக்கு இன்ன கோத்திரம் இன்னர் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொடுக்கச் சம்மதித்தோ' மென்று பெண் வீட்டாராற் சொல்லிவைத்து பிள்ளை வீட்டாரும் அதேபிரகாரஞ் சொல்லி ஒப்பிக்கொள்ளும்போது, பரியம் இவ்வளவென்று புரோகிதரால் சபையோர் அறியக்கூறி வைத்தல்.

சாட்சி

அப்பால் மதுவில் புரோகிதன் முதற்சாட்சியானதால் அவர் களின் குலாசாரப்பிரகாரம் பரியத்தொகை வகை இவ்வளவென்று நாட்டார் முதலியோர்களுங் கண்ணுட்டமிட்டதைப் புரோகிதரால் மூன்றுதரஞ் சொல்லவைத்து, அந்தப்படிக்கே பணிசெய்வோன் ஓச்சன் இவர்களுங்கூவிச் சொல்லி, சங்குகுறிக்க வேண்டியது. அன்றி மனுவிஞ்ஞான விதிப்படி கலியாண விசேடத்தில் பஞ்சாங் கக் காரனும் பணிசெய்வோனும் நோக்கனும் பூச்சனும் பெருஞ் சாட்சிப் பேசியிருப்பதனல், இந்தப் பெண்ணுக்கு இட்டபரிய மிவ்வளவென்று முக்கியம் இவர்கள் அறிவதுடன் கூடமுதலிய விடத்திலிருப்பவர்களுக்கும் கேட்கும்படி தொழிலாளிகளினூற் கூறச்செய்வதுமன்றி மும்முறை சங்கு முழக்கி வைக்கவேண்டுவது. அவ்வாறு சங்கு முழக்கி வைப்பதில் அந்தந்த இனத்தாருக்குத்

தகுந்தபடி ஒற்றைச் சங்கு இரட்டைச்சங்கு மூன்றுசங்கு பணி செய்வோன் நோக்கன் புபூச்சன் இவர்களால் முழங்கப் பண்ணுவித்த பின்னர், பஞ்சாங்ககாரர் மங்களாசனம் பண்ணிப் பாக்கு வெற்றிலை மஞ்சள் புட்பங்களுடன் புடவையையும் பூஷணப் பொருள்களையும் பெண்ணினிடத்திற் கனுப்பிவைத்து, உடனே புனையச்செய்து சபை தாம்பூலம் நடத்தி, புரோகிதருக்குத் தட்சணை கொடுத்தனுப்பிவிட்டு, விருந்து போசனமருந்தி சந்தன புட்ப தாம்பூலம் பரிமாறவேண்டியது.

பந்தக்கால்

அப்பால் பரியத்தினின்று குறித்த முகூர்த்த நாளுக்கிணங்க நன்னாட்கொண்டு, பந்துமித்திரர்களுடன் பெண்வீட்டிலும் பிள்ளை வீட்டிலும் பந்தக்கால் நாட்டவேண்டியது. இரண்டு வீட்டிலும் பந்தக்கால் நாட்டினாலும், மாப்பிள்ளை வீட்டில் மற்ற வேடிக்கைகளெல்லாம் செய்தாலும் விவாகமாத்திரம் பெண்வீட்டிற்கு மாப்பிள்ளையை அம்மான் மணக்கோலத்துடன் கொண்டுபோய்த் திருமங்கிலியம் தரிப்பித்து வைப்பது பெருமையும் உரிமையும் சாம்பிரதாயமுமாம்.

பந்தல்

பிள்ளைவீட்டார் பெண்வீட்டார் ஊரார் நாட்டார் முதலிய உரிமையோர்களும் பெருமையாகவந்து பஞ்சாங்கக்காரர் நியமித்த திதி நட்சத்திர சுபலக்கின சுபயோகத்தில் பந்தற்கால் நாட்டி, பிள்ளைக்கும் பெண்ணிற்கும் நலங்காதி திருமஞ்சனமாட்டி, விருந்து முதலிய அருந்தப்பண்ணி, உறவின்முறையோரியாவரும் விவாகவிழாக் கொண்டாடி, அன்றுதொடங்கி ஊரார் முதலிய இஷ்டர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் தாம்பூலம் வைப்பதும் பந்தற்போடுவதும், விந்தையான விநோத வேடிக்கை செய்வதும், கண்ணாடி பட்டங்கள் - கமல வட்டங்கள் - காயிதமொட்டுத் திட்டங்கள் - இரசக்குண்டு விட்டங்கள் - ஜாலர்கட்டுஞ் சட்டங்கள் - சரிகவேலை சகலாத்து மேற்கட்டியின் மட்டங்கள் - வாழை கமுகு நிலைகள் - கரும்புத்தலைகள் - தேங்காய்க்குலைகள் - மாங்காய்க்குலைகள் - பலாக்காய்கள் - கூந்தற்பனைகள் இவைகளெல்லாங்கட்டி, தோரணம் கொடி முதலிய சம்பிரமங்கள் எதெது செய்ய வேண்டியதோ அவற்றுடன்கூட மணவறையில் மலர்ப்பந்தலும் திட்டாணிமேடையுஞ் சிங்காரிக்கத்தக்கது. இது கெலிப்பின்மேல் சிரிப்பென்பது போலாம்.

திட்டாணி மேடை

திட்டாணிமேடை போடவேண்டிய தெப்படியெனில், களி மண்ணும் இறுமண்ணுங்கலந்து மூன்றங்குல உயரம் மேடையிட்டு; அதன் நான்கு திசையிலும் வழிவிட்டு மூன்றங்குலந் திண்ணை போட்டு அம்மேடையின் புறத்தில் செங்காவிக் கோலந்தீட்டி, உட் புறத்தில் ஒன்பது வீடாக மாக்கோலங்காட்டி, நடுவில் ஓமாக்கினிக் கிடம்வைத்து, அதன்மேற்புரத்தில் கலியாணப் பிள்ளையும் பெண்ணு மிருப்பதற்கு மணப்பீட முதலிய ஆசனங்களும் இரத்தினக் கம்ப ளங்களும் விரிக்கவேண்டியது.

சிகை கழித்தல்

பின்னர் அம்பட்டனால் மாப்பிள்ளைக்குப் பிரும்மசரிய விரதங் களைந்து, சிகை கழித்து நலங்கிட்டு, ஸ்நானஞ் செய்வித்து திவ்விய அலங்காரத்துடன் யானை குதிரை அல்லது பல்லக்குவாகனத்தி லேற்றிப் பற்பல விருதுகளுடனும், சர்வ வாத்தியங்களுடனும், ஆடல் பாடல்களுடனும், வேதியர்களுடனும் வெண்கவிகை அல்லது அவரவர்கட் குரிய தண் கவிகை கவிக்க, மணக்கோலமாகப் பலரும் கூடிப் புறப்பட்டு, சந்தன மாலை தாம்பூலத்துடன் சதிராகப் பெண் வீட்டார் எதிர்கொண்டு வந்தழைக்கப்போய் நல்லவேளையில் பெண் வீட்டில் புகவேண்டியது. அவ்வாறே பெண்வீட்டிலும் பரிகாரி யினால் கலியாணக் கட்டிலமைக் கன்னிகைக்கு கரசரணதிகளிலுள்ள நகம் வாங்கி, சிகைச்சடங்காதி நலங்குகளிட்டு, ஸ்நானம் பண்ணுவித் துப் பட்டுப்பட்டாவளி பூணந்து பெண்ணை அலங்கரிக்கவேண்டும்.

பிதிர்த் தேவதைப் பூசை

அதன்பின் பெண்வீட்டில் சுத்தமுள்ள மங்கிலியப் பெண்க ளால் பொங்கலிட்டு வைத்திருப்பதைக் கிராமதேவதை பிதிர்த் தேவதை முதலியோர்களுக்கும் பிரீதியார்த்தமாகப் பாலுந் தயிரும் பழமும் வெல்லமும் வைத்துப் பள்ளம்போட்டு, கலியாணப் பிள்ளையி னலும், கலியாணப் பெண்ணினலும் படைப்பித்து நீர்மாற்றித் போற்றித் துதித்து வணங்கி வாழ்த்தி உடனே விடுதியில்வந்து வாழைப்பழம் நீர்மோரருந்தி இளைப்பு களைப்பு தீர்த்துக்கொள்ளலாம்.

மாப்பிள்ளையும் பெண்ணும் களையாறுவதற் குள்ளாகவாவது பிள்ளை மணக்கோலம் வருவதற்கு முன்னுகவாவது, பிள்ளையின்

தக்தையும் பெண்ணின் தக்தையும் ஸ்நானம்பண்ணி, மடிவத்திர முடுத்தி, வைதிகமாய்க் கல்யாணமண்டபத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள் இருடிகள் முதலியவர்களை வேதவிதிப்படி மந்திராபூதி யுடன் தாபிக்கவும்.

விவாகம் நடத்தவேண்டியவர்

தக்தை அல்லது அப்மான் - அண்ணன் - தம்பி - அக்காள் புரு டன் - தங்கை புருடன் - சிற்றப்பன் முதலிய முக்கிய உறவினர் கருத் தாவாக ஏற்பட்டு விவாக மகோற்சவத்தை நடத்தவேண்டியது.

விவா கருத்தர் பஞ்சாங்கக்காரரால் நவக்கிரகம் திக்குப் பாலகர் தேவர்கள் முதலியவர்களை வேதமந்திர சகிதமாக தாபித்துப் பூசித்து சங்கற்பம் பண்ணிக்கொள்ளவும்.

மணவறை

அதாவது, கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்காகிய நாலுமூலை யிலும் நாட்டிய பந்தற்காலுக்கு நடுவில் இருபத்துநான்கு சிற்பி யங்குலம் மேடையிட்டு, நான்குபுறமும் தொண்ணூற்றுறங்குலம் சரிப்படுத்திச் சமைத்த மணவறைப் பந்தலுக்குக் கீழ்த்திசையில் தாபிக்க வேண்டியது.

தத்துவ சதுக்கம்

சிற்ப வலங்காரத்திலே ஒருசிற்பி யங்குலமாவது பெருவிரல் மூணைக்கடுத்தவரை யளவு என்க. இவ்வாறு இருபத்து நான்கங் குலம் ஒரு அங்கணத்திற்கு அமைப்பதால் நான்கு அங்கணத்திற்குந் தொண்ணூற்று றங்குலமாகும். இதுதான் தத்துவசதுக்கம். இத்தத் தானத்தில் விவாகம் நடக்கவேண்டிய மூலத்தம்பம் விதிப்பர்.

திக்குப் பாலகர்

கிழக்கில் தேவேந்திரனையும், தென்கிழக்கில் அக்கினிபகவானை யும், தெற்கில் எமதருமனையும், தென்மேற்கில் நிருதிதேவனையும், மேற்கில் வருணனையும், வடமேற்கில் ஈசானபூர்த்தியையும் வேத மந்திரங்களாய் ஆவாகனம் பண்ணிப் பூசைசெய்து பொருத்த வேண்டும்.

கீழ் விளக்கு

எப்படி யென்றால், கிழக்கில் தேவேந்திரனைச் சகல வாத்தியங்க ளுடன் வேதமந்திரம் பண்ணி, ஆயிரங் கண்ணுடையானுக்குப்

பிரதியார்த்தமும் அதிதேவதா ரூபமுமாக அநேக முகமுள்ள கீளை விளக்கேற்றி வைத்து தூபதீப நைவேத்தியங்கொடுத்துப் பூசித்துத் தொழுது சங்கற்பம் பண்ணிக்கொள்ள வேண்டும்.

குட விளக்கு

பின்னர்த் தென்கீழ்த்திசையில் தீக்கடவுளை விதியுடன் அத்தேவனுக்குப் பிரதியார்த்தமாகவும் அதிதேவதையாகவும் குட விளக்கேற்றி வைத்து வந்தனோபசார தூபதீப நைவேத்தியங்களுடன் பூசித்துச் சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும்.

புரோகிதர்

அதன்பின் தென்திசையில் மந்திரங்களால் எமதருமனை ஆவாகனம்பண்ணி அவருக்குப் பிரதியார்த்தமாகவும், அதிதேவதா ரூபமாகவும் தன்ம கன்ம பாவ புண்ணியங்களுக் குரிய புரோகிதரை அழைத்துப் பூசித்து வணங்கி, சங்கற்பம் பண்ணிக்கொள்ளவும் வேண்டியது; இது வியாச புரோக்தம்.

மாணிக்கத்தாள்

தென்மேற்குத் திசையில் நிருதிதேவனை வேதமந்திரங்களால் ஆவாகனம் பண்ணி தூபதீப நைவேத்தியஞ் செய்து சங்கற்பித்து வணங்கி, அத் தேவனுக்குப் பிரதியார்த்தமாகவும் அதிதேவதா சொரூபமாகவும் மாணிக்கத்தாளை நிறுத்தி, பெண்ணிற்கு உபசாரத் தோழியாக்கி வைக்கவும்.

கும்ப கலசம்

உலக விருத்திக்குரிய வருணனை மேற்குத்திசையில் வேத மந்திரத்தால் நிலைபெறவைத்து தூபதீப நைவேத்தியத்துடன் பூசித்துத் தொழுது, அந்த வருணனுக்குப் பிரதியார்த்தமாகவும் அதி தேவதையாகவும் இல்லற தர்மத்திற் கிசைந்த கல்யாணப் பிள்ளையைக் கொலுக்கொண்டிருக்கச் செய்யவேண்டியது.

தோழிப்பிள்ளை

வடமேற்குத் திசையில் வாயுபகவானை மந்திரார்த்தங்களுடன் தாபித்து, தூபதீப நைவேத்தியங் கொடுத்து, சங்கற்பஞ் சொல்லி வணங்கி, அந்த வாயுதேவனுக்குப் பிரதியார்த்தமாகவும் அதி தேவதா சொரூபமாகவும் மாப்பிள்ளை தோழனை வைத்து விசிறி

கொண்டு கலியாணப்பிள்ளைக்கு வீசி காற்று முதலிய உபசாரங்களைச் செய்யச் சொல்லவும்.

பாக்கியவான்

வடதிசையில் குபேரனை மந்திரங்களுடன் மருவச்செய்து தூப தீப நைவேத்தியங் கொடுத்துத் தொழுது சங்கல்பம் பண்ணிக் கொண்டு ஆவாகனஞ்செய்த குபேரனுக்குப் பிரதியார்த்தமாகவும் அதிதேவதையாகவும் மனத்திற் குறித்தாகப் பணப்பை வைத்திருக்கின்ற (பாக்கியவானை யமர்த்தி) பொற்பூரி கொடுக்கப் பொருத்த வேண்டியது.

அம்மிக் குழவி

வடகிழக்கு மூலையில் சாமவேத சட்டையுடன் ஈசான மூர்த்தியை ஆவாகனஞ்செய்து, தூபதீப நைவேத்தியமேற்றித் தொழுது சங்கல்பம் பண்ணிக்கொண்டு அந்த ஈசானனுக்குப் பிரதியார்த்தமாகவும் அதிதேவதா சொரூபமாகவும் அம்மியையும் குழவியையும் அபிடேகமாட்டி, அரிச்சந்தனட்சதை பூமாலை சூட்டி வடக்கிழக்கு திசையில் வைத்துப் பூசித்தல்.

முளை கட்டல்

இப்போது செய்யத்தொடங்கிய கலியாண நாளுக்கு முன்னை நாள் நவதானியங்களை முளைகட்டி நவக்கிரகங்களுக்கு உரிய தானியங்களை அந்தந்தக் கிரகங்களுக்கு உவப்பாகக் கிரமங்களினால் மண் மடக்கில் வைத்து திக்குப்பாலகர் எண்மரில் ஈசான மூர்த்தியாக அமைத்திருக்கின்ற அம்மிக் குழவிக்குத் தென்பாரிசத்தில் பச்சை யரிசி பரப்பி, ஒன்பது வீடாகக் கீறி நிரப்பி, சூரியகிரக முதல் கேதுக்கிரகம் வரையிலும் பொருத்தி, தருப்பையினாலாவது முப்புரி நூலினாலாவது பட்டு முதலிய மஞ்சள் துணியினாலாவது பந்தித்து, தூபதீப நைவேத்தியம் வைத்துச் சந்தித்து, சங்கல்பம் பண்ணி வந்தித்தல்.

சத்த கலசம்

மண்கரகம் ஏழு கொண்டுவந்து நால்சுற்றி மாவிலை தருப்பை மாலை தேங்காய் வைத்து சத்த இருடிகளையும் வேதமந்திரங்களினால், ஆவாகனம்பண்ணித் தாபித்து நவக்கிரக பாலிகை நாட்டிய தானத்திற்கும் அக்கினிபகவானை அமைத்த தானத்திற்கும் நடுவில் வைத்து

தூபதீப நைவேத்தியங் கொடுத்துச் செபித்து சங்கல்பம் பண்ணிக் கொள்க.

சாலமைக்க வேண்டிய விதி

கட்டிளமையுள்ள கன்னியர்கள் தலைமுழுகி மஞ்சளணிந்து, குங்குமந் தரித்து, புட்பமுடித்து, சுத்தமாகச் சென்று கங்கை, யமுனை, சுரசுவதி, நருமதை, காவிரி, கன்னியாகுமரி, கோதாவரி இவ்வேழு தீர்த்தங்களையுங் கொண்டுவந்து ஒரு பெரிய சாலிற்கு விபூதி அணிந்து மஞ்சள், குங்குமஞ் சாற்றி, பூமாலை தரித்து, கிழக்கில் இந்திரனுக வமைத்த கலசவிளக்கு முன்னே மணலைப் பரப்பி அந்தச் சாலை வைத்து அந்தந்தத் தீர்த்தங்களுக்குள்ள மந்திரங்களைச் செப்பி அழகிய சாலில்விட்டு, தூபதீப நைவேத்தியங் கொடுத்துத் தொழுது ஒரு கரகத்திற்கு விபூதி குழைத்திட்டு சந்தனுட்சதை குங்குமந் தரித்து அந்தக் கரகத்தை சத்த தீர்த்தங்களடங்கிய சாலிற்கு மேல்மூடியாக மூடிவைத்து, சங்கல்பம்பண்ணி வணங்கவேண்டியது. இதுவே சாலுங் கரகமும் என்பது.

சத்த தீர்த்தங்கள்

ஏழு தீர்த்தங்கள் எட்டாதபோது தேவாலயம் பிரமாலயம், விஷ்ணுவாலயம், சிவாலயம், நந்தவனம், மேற்கு ஓடுகின்ற நதி, கிழக்கு ஓடுகின்ற நதி, இந்தத் தானங்களிலிருந்து கொண்டுவந்து பூசிக்கலாகும். மேலும், ஏழு கன்னிகைகள் போய்க்கொண்டு வருவதற் கில்லாவிடில், முதல் மூவரும் பின்பு நால்வரும் போய்க் கொண்டுவரலாம்.

அரசாணிக்கால்

அரசாணிக்குக் காலென்னும் அரசின்கொடி ஆலின்கிளை கலியாண முருக்கின்கொம்பு இம் மூன்றையுந் தருவித்து, சுத்தோதகம் பால் தயிர் தேன் சந்தனாதிகளினால் அபிடேகம் பண்ணி தருப்பைப் புல்லாற் பந்தித்து, திரிமூர்த்திகட்குள்ள மந்திரங்களைச் சொல்லி நிந்திக்கவேண்டியது.

அரசு பிரம்மா; ஆல் விஷ்ணு; கலியாணமுருக்கு உருத்திரன்; இவைகள் மூன்றும் குணத்தினாலும் தழைப்பினாலும் ஆகாரத்தினாலும் கடுமையினாலும் காந்தியினாலும் மும்மூர்த்திகளென்று முனிவர்கள் மொழிந்திருக்கின்றனர். மேலும், வைவச்சுத மநுவிஞ்ஞா

னத்திலும் மும்மூர்த்தி சொரூபமான அரசானிக்குக் கால்நாட்ட வேண்டுமென்று கலியாண விதியில் முதலெடுத்துக் கொண்டதுந் தவிர, சிருட்டி திதி சம்மார மென்னும் முத்தொழிலையுடைய முத் தேவரும் பிரபஞ்ச வாழ்க்கைக்குச் சாட்சியாயிருந்து தாட்சியின்றி காட்சியாகி, அதுக்கிரகஞ்செய்து சர்வ சாட்சியாகத் தக்கதென்று சுவாயம்பு மநுவிலும் சொல்லியிருக்கின்றது. ஆதலால் முத்தேவரின் காட்சி, கலியாணத்திற்குத் தகுந்த சாட்சி.

பிரம சொரூபம் அரசின் கன்மூனதால், அதற்குப் பால் தேன் முதலியவற்றால் நீராட்டிவைத்து அரிசந்தனாதி யட்சதை தரித்து புட்பம்பொருத்தி வெண்பட்டு முதலிய வெண்படாமணிந்து தாமரை மணிமாலை சாத்திச் சந்தனங்கோபியிட்டு வந்தனை புரியவேண்டும். விஷ்ணு சொரூபமான ஆலிற்குச் சுத்தோதகம் கஸ்தூரி பன்னீர் வெட்டிவேர் வாசங்களினால் திருமஞ்சனமாட்டி நாமமிட்டு நீலவஸ்திரம் மஞ்சள் வஸ்திரந் தரித்துத் துளசி துளசிமணிமாலை சாத்தித் தொழ வேண்டும். உருத்திர சொரூபமாகிய கலியாணமுருக்குக்கு அரிசந்தனாதி அபிடேகஞ் செய்துவைத்துத் திருநீறு சந்தனந் தரித்துச் சிவப்பு வஸ்திரம் காவிவஸ்திரம் புனைந்து உருத்திராக்கமணி வில்வம் புட்பமாலை முடித்துத் தூபதீப நைவேத்தியமும் கொடுத்து வந்தனை யுடன் எடுத்து காட்டவேண்டியது.

தேவேந்திரனுக்குப் பிரதியார்த்தமாக வைத்த ஆயிரங்கிளை முகவிளக்கிற்கும் சத்த தீர்த்தங்கள் விட்டிருக்குஞ் சாலுக்கும் நடுவில் பன்னிரண்டங்குலம் பள்ளந்தோண்டி, நீர் பால் தேன்விட்டு நவரத்தினங்கள் அல்லது பொன் வெள்ளி தாமிரம் அல்லது நவதானியங்கள் ஏதாகிலும் அந்தக் குழியில்போட்டு முதிர்ந்த மங்கிலிப் பெண்கள் மூவர்களை நிறுத்தி சரசுவதி இலட்சுமி பார்வதி இம் மூவராக அவர்களைப் பாவனைபண்ணிச் சந்தனாதி யட்சதை புட்பங் கொடுத்து அந்த மூவராலும் அரசாணிக்குக் காலை யெடுப்பித்துப் பன்னிரண்டங்குலப் பள்ளத்தில் விடுத்துப் பூவாரம் பொன்னாரம் முத்தாரம் பூட்டித் தீபங்காட்டி, அந்தக் குழியை நெல்லினால் மூடி நீர் பால் தேன் தெளித்துப் பணிந்து சங்கற்பம் பண்ணிக்கொள்க.

மும்மூர்த்திகளாகத் தாபித்த அரசானிக்குக் காலை மூன்று சத்தியின் பாவனையாகக்கொண்டு ஊன்றிய அந்த மங்கிலிய மாதர்களுக்குச் சந்தன தாம்பூலங் கொடுத்துப் பண்டு பலாதிகளுடன்

தாகசாந்தி செய்துவைத்து, அவர்களே மேளதாள முழக்கத்துடன் அழைத்துப்போய், பிரமாலயம் தேவாலயம் அல்லது கடைந்தெடுக் கப்பட்டு மூட்டி வைத்திருக்கின்ற அக்கினியைப் பூசித்துப் புகை யாமல் சிகையுடன் வாத்திய முழக்கத்தோடு கொண்டுவந்து ஓம குண்டத்திலிட்டு, அக்கினி பகவானுடைய மந்திரங்களைச் சொல்லி ஓமாக்கினியை விருத்தி பண்ணிவைத்து; சகலவித உபசாரத்துடன் பூசித்து அருக்கியங்கொடுத்துத் தொழுது, சங்கல்பித்துக்கொண்டு, அத்தீயையும் அத்தீயை வலக்கரத்திற்றுங்கிய வேதியர்களையும், சபையினிறைந்த பெரியோர்களையும் பணியவேண்டியது.

மாப்பிள்ளையின் தந்தையும் பெண்ணின் பிதாவும் அல்லது இக் கலியாணத்திற்குரிய பெரியவர்களும் ஊக்கத்தோடும் முயற்சி யோடும் முகூர்த்த லக்கினத்திற்கு ஐந்து ஏழு நாழிகைக்கு முன் றொடங்கிப் பொருமையாகக் குறைவில்லாமற் செய்யத்தக்க முக்கிய விதிகள்; 'செய்யுங் கரும மந்திரம் தப்பாதே' 'செய்வனதிருந்தச் செய்' 'கையில் பொருள்கள் கரந்தவராயினுஞ் செய்யுங் கருமந்திரி யாகியற்றுக' என்னும் விதிகள் அவர்கள் கவனிக்கவேண்டியன.

மாப்பிள்ளை வரவேண்டிய விதி

விவாக முகூர்த்த லக்கினத்தை முன்னிட்டுக்கொண்டு மாப் பிள்ளைத் தோழன் மாப்பிள்ளைக்கு மாலையிட்டு; சுண்டுவிரற்கோத்து வந்து, மணப்பந்தலைப் பிரதட்சணம்பண்ணி, கலியாண வாசலில் ஆவாகனஞ் செய்திருக்கின்ற அதிதேவதைகளை யெல்லாம் காட்டி வணங்கினவுடன், மணவரைமனையில் பாம்பின் மண்டலம்போலச் சர்ப்பவடை போட்டிருக்கச் செய்யவேண்டியது. இதைத்தான் சப்பணம் போடுவ தென்பார்கள்.

புரோகிதர் கலியாணப்பிள்ளை கையால் விநாயக பூசை தேவ தார்ச்சனை புரியவைத்து அட்சதை புட்பமாலை யணிந்து உபயன மான உபதேசமும் அனுட்டானவிதியும் அங்க நியாச கரநியாசமுங் காட்டி ஓமத்தீ மூட்டி உபசரிக்க வேண்டியது.

பரதேசம் போவது

இவ்வாறெல்லாம் நடாத்துகின்ற கருமங்களைக்கண்ட கலியா ணப்பிள்ளை பிரும்மசாரி விரதத்தை அனுட்டித்து வாசித்துக்கொண் டிருந்தவ ளுகையால், அவனுக்கு இவை யாவும் விந்தையும் விநோத

மும் விபரீதமுமாகத் தோன்ற, தன் தோழனை நோக்கி, 'இப்படி யெல்லாஞ் செய்வது என்னதத்திற்காக வென்று வினவினான்; அதற்கு அத்தோழன், ஓ எனது நேயனே! வாழ்க்கைத்துணை நலத்திற்குரிய நாயகியான கன்னியுடன் இல்லற விரதம் பெற்று வாழ்வதற்கு இதுதான்வழி' என்றான். அச் சொல்லைக் கேட்டவன் விவேகத்தினை யுன்னி, 'ஆ இது பழியே! கன்னிமேற் காதல் படாப்படா' தென்றும், 'சமூசாரஞ் சள்ளை' யென்றும்,

வெண்பா

"கள்ளிக்கு மாலாகிக் காலிற் றளைபூட்டி
பிள்ளைக் கடையாணி பின்னிறுத்தி—மெள்ளக்
கடுவுண்ட சோணைசன் கற்பித் துயிரைப்
படுகுழியில் வீழ்த்தினதைப் பார்."

என்றும் இருப்பதனால், இந்தச் சங்கடம் எனக்கு வேண்டா மென வெறுத்து வெளியே புறப்படுவதுதான் பரதேசம்போவ தென்பது.

சமூசாரம்

தாய்தந்தை, பெண்சாதி, பிள்ளை, அண்ணன், தம்பி, அம்மான், மைத்துனன்மார், அக்காள், தங்கை, பெரியப்பன், சிற்றப்பன், கொண்டான், கொடுத்தான் முதலிய யாவரும் வரப்போக வாழ்வ தும் கூடிக் கலந்திருப்பதும் சமூகவிசாரமாம். இதைத்தான் சமூசார மென்பர்.

பரதேசியை அழைத்தல்

சமூகவிசாரஞ் சாகரத்துக்கமென்று சலித்துச் சென்ற சற் குணப்பிள்ளையை அம்மான் முன்னும் அத்தையும் மைத்துனரும் பஞ்சாங்கக்காரரும் பின்தொடர்ந்துபோய் அடித்து, தடுத்து, உலகப்பழக்கத்தைப் போதித்து, அனுபவத்தையுஞ் சுருதிப் பிரமா ணத்தையுஞ் சொல்லி,

"உலகத்தார் உண்டென்ப இல்லென்பான் வையத்
தலகையாய் வைக்கப் படும்."

"உலகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்." —குறள்.

"இல்லற மல்லது நல்லற மல்ல." —ஔவையார்.

என்பன முதலிய இதோபதேச மேற்றித் தாய் தந்தைகளினுற் பயமும் புகட்டி, சர்வ வாத்தியங்களுடன் அழைத்து வந்து,

கால் மேட்டு

மகாசனங்கள் நிறைந்த சபையில் மணவறைப் பலகையி லிருத்தி, அம்மானும் அத்தையும் வியந்து தாங்கள் பண்ணிக் கொண்ட கலியாண வைபவத்தை நயந்துபேசி, தங்கள் குமாரத்தி யைக் கொடுப்பதாகச் சொல்லி மகிழ்ந்து, "அப்பா மருமகனே! இதோ வெள்ளி மோதிரம் இட்டுக்கொள்" யென்று புகழ்ந்து மருமகன் காலைப்பிடித்து, பெரிய தாம்பாளத்தில் வைத்து மஞ்ச னீராட்டி வெள்ளிமெட்டைக் கால்விரலிற் பூட்டுதல்.

பாத பூசை

வெள்ளிமெட்டாகிய விலங்கில் அகப்பட்ட மணவாளன் அம் மானும் அத்தையும் தனது காலைப்பிடித்துத் தடைமெட்டு இட்டார் களே யென்று தனது பாதத்தைப்பற்றிய பழியும் பாவமும் தீரும்படி யாய் அம்மான் திருவடியையும், அத்தையம்மாள் பாதத் தூணையை யும் பெரிய தாம்பாளத்தில் வைத்து நீரோடு பால் தேன் அபிடே கஞ்செய்து வத்திரத்தினால் ஈரந்துவட்டி சந்தனுட்சதை புட்பம் சாத்தி, தூபதீபத்துடன் வணங்க; அவர்கள் தங்கள் மருமகப் பிள்ளையை ஆதரித்தெடுத்து வாழ்த்தி, தங்கள் பாதங்களில் அருச் சித்த புட்பாச்சதைகளை யெடுத்து மாப்பிள்ளையின் சிரத்தில் வைக்க அவன் முடிதாழ்த்திப்பெற்று ஆசிவசனமுற்று அம்மானுக்கும் அத் தைக்கும் சந்தன புட்ப தாம்பூலங் கொடுத்துச் சரணம் புரிதல்.

காப்பு

உடனே பஞ்சாங்கக்கார துவிசன் கணுவில்லாத முலைமஞ்சள் இரண்டெடுத்து, கன்னிகை இழைத்தநூல் ஒன்பதிழைக்கு மஞ்சள் பூசி, நவக்கிரகமந்திரஞ் சொல்லி ஒன்பது முடிபோட்டு தூபதீபங் கொடுத்து, கலியாணப்பிள்ளையின் வலதுகைக் கணுவில்கட்டி, இப் போது நீர் தொடங்கும் காரியங்கள் நிறைவேறுகின்ற வரையிலும் விரதசீல பயபக்தியாக இருந்து நடத்துவதற்காகக் கங்கணங் கட்டிக் கொண்டபடியால், மிக்க ஜாக்கிரதையுடன் நிலைநின்று முடிவுபெறச் செய்யவேண்டுமென்று வற்புறுத்தி மகிமை கூறவேண்டும்.

அல்லது வேதியர் பண்ணிய வேதமந்திரநூலால் காப்பு கட்ட வேண்டியது. அதுவும் அகப்படாதபோது கடைநூல்கொண்டு வந்து தண்ணீரிற்றோய்த்துக் கசக்கி கஞ்சிநீர் போக்கி, மஞ்சள் தடவி உபயோகிக்கலாம்.

கலியாணப் பெண்ணைத் தோழிப்பெண் துணையாக மாலை தரித்து அரசானிக்குக் கால் முதலிய தேவதைகளைப் பிரதட்சணம் புண்ணி வணங்கிக் கொண்டவுடன், கலியாணப்பிள்ளைக்கு வலப் புறத்தி லிருக்கச்செய்து, நூற்கட்டிய மற்றொரு மஞ்சள் மாப் பிள்ளை கையினல் கலியாணப் பெண்ணின் இடது கரத்திற் கட்டு வித்து விபூதி குங்குமம்வைத்து, காப்புக் கட்டிக்கொண்ட இருவருக் கும் புரோகிதர் சங்கற்பம் பண்ணிவைத்தல்.

சங்கற்பம்

பிள்ளையின் கையைக்கட்டி வலப்புறத் தொடையிலும் பெண் ணின் கையைச் சேர்த்து அவளது இடப்பக்கத் தொடையிலும் வைக்கப்பண்ணி, "வைவச்சுதே மன்வந்தரே கலியுகே பிரதமபாதே புண்ணியருது." வென்று வருடம் மாதம் பட்சம் வாரம் திதி நட் சத்திரம் இவைகளெல்லாம் படித்து முடித்து மாப்பிள்ளையை நோக்கி இது காலத்தில் உன் அம்மானுடன் அத்தை முதலிய சுற்றத்தார் முன்னிற் செய்யத்தொடங்கிய கலியாண சடங்குகள் யாவும் தாட்சி யில்லாமல் நடாத்துவதற்காக விரதம்பூண்டு கங்கணங் கட்டிக் கொண்டபடியே ஒரே மனதா யிருந்து இந்த வைபவ காரியங்களை நிறைவேற்றிக் காண்பதற்கு உதவியும் கருணைக் கடாட்சஞ்செய்து காக்கவேண்டும் என்று புரோகிதர் புகலல்.

கூரை யணிதல்

மாப்பிள்ளையும் பெண்ணும் மணவறைச்சாலையை வலம்வந்து பணிந்து கலியாணப் பீடத்திலிருந்து ஓமாக்கினியைப் பூசித்து அப் பால், பஞ்சாங்கக்காரரெழுந்து பெரிய தாம்பாளத்தில் வேட்டியும் புடவையும் மணமாலையும் பாக்கு வெற்றிலையுடன் வைத்து தேவதா பூசைசெய்து வேதியர் முதலிய சாதியருங் கரங்களினுற்றொட்டு மங்களாசனஞ் சொல்லி வாழ்த்திக் கொண்டுவந்து புட்பாட்சதை யுடன் மாப்பிள்ளைகையிற் கொடுத்து அந்தக் கூரையைப் பிள்ளையும் பெண்ணுந் தரித்துக்கொள்ளும்படிக்குச் செய்யவேண்டியது.

மாப்பிள்ளைக்குக் கலியாணவேட்டி யுடுத்தி, கலியாண மாலை புனைந்து, சிறுவிரற் பற்றிய மாப்பிள்ளைத் தோழனுடன் சகல வாத்தி யங்களும் முழங்கக் கலியாண மண்டபத்தை வலஞ்சூழ்ந்து வந்து மணவரை மீணமேலிருக்கச்செய்து; அப்பால் கூறைப்புடவை யுடுத்திக்கொண்ட கலியாணப் பெண்ணையும் மாணிக்கத்தாளவது

தோழிப்பெண்ணைவது மாலை யணிவித்து, மங்கள வாத்தியத்துடன் அழைத்துவந்து, சபையைப் பணிவித்து கலியாணப்பிள்ளைக்கு வலது பக்கத்திற் கொலுவாக வைக்கவேண்டியது.

மங்கிலிய பூசை

மணவரையிலிருந்த பிள்ளை ஆசிரியருக்குப் புதுவஸ்திரதானம் பண்ணிப் பூசிக்கவும், பந்து மித்திரர்கள் புகழவும், தாய் தந்தையர் கள் மகிழவும், மற்றுள்ளோர் கொண்டாடிப் பூரிக்கவும், கலியாண முகூர்த்தத்திற் கேற்படுத்திய லக்கினம் சமீபித்தகாலத்தில் புரோகி தர் பெரிய தாம்பாளத்தில் முத்து இரத்தினங்கள் பரப்பி அதன்மீது பாக்கு வெற்றிலை புட்பம் குங்குமம் அட்சதை மஞ்சள் வைத்து ஆன் மதத்துவம்போல இருபுத்துநான்கு இழை சேர்த்து முறுக்கில்லாமல் தாலியிலேற்றி, அந்தத் தாலியை ஒரு தேங்காய்க்கு மஞ்சள் குங்கு மம் அட்சதை யணிந்து அதன்மேற் சாத்திப் புட்பாட்சதைகளினற் பூசித்தேற்றி, தூபதீப நைவேத்தியத்துடன் நீர்மாற்றி, தாம்பாளத் தில் வைத்து, பஞ்சாங்கக்காரர் கரத்திலேந்தி ஸ்ரீ விஷ்ணு மந்திரஞ் செபித்துத் துதித்து, விப்பிரர்களும் பந்துமித்திரர்களும் இரு கரங் களிற்றொட்டு இட்ட தெய்வங்களைக் கும்பிட்டு வாழ்த்துதல் சொல்ல வும் வேதியர்கள் மறைமொழி மந்திரங் கூறவும் வாத்திய முழங்க வும் சங்கத்தொனி வழங்கவும் தாலியைப் புரோகிதர் கொண்டுவந்து மாப்பிள்ளைக்கும் பெண்ணிற்கும் நேராக முக்காலியின்மேல் வைத் துத் தாபன மந்திரஞ் சொல்லி யருச்சித்தல்.

தாரை வார்த்தல்

கலியாணப் பெண்ணின் தாய்தந்தையும், மாப்பிள்ளையின் தாய் தந்தையும் கலியாண மண்டபத்திற்குமுன் வந்திருந்து சங்கு முழங்கு வித்து, சங்கற்பம்பண்ணி விநாயகமூர்த்தியைப் பூசித்தேத்தி, பெண் ணின் தந்தை தமக்கியன்ற எதாசத்தி இரத்தினம் பொன் வெள்ளி நாணயப்பொருள் இவைகளுடன் தேங்காய் மஞ்சள் புட்பம் வாழைப்பழம் வைத்து, இன்ன கோத்திர சூத்திரமுள்ள என் குமா ரத்தியை வாக்குத்தத்தம் பண்ணியிருந்த வசனப்பிரகாரமும் நிச்சய தாம்பூல மாற்றிக்கொண்ட நெறியின்படிக்கும் தாராதத்தம் பண் ணிக்கொடுத்தேனென்று மும்முறை புகன்று மாப்பிள்ளைக்கு இட்டு நீர்வார்த்துக் கொடுத்து, சந்தன தாம்பூலம் பெற்றுக் கலியாண

வாசலிற் கலந்திருக்கின்ற, தேவதைகளையும் குருக்களையும் சபைத் தலைவர்களையும் விருப்பத்துடன் வந்தனைசெய்து மகிழ்தல்.

மாப்பிள்ளைக்குரியவர்கள் முன்னமே பெண்ணைப்பேசி நிச்சய தாம்பூலத்துடன் பரியம்போட்டு, பருப்புசாதமும் புசித்து ஒருவர்க் கொருவர் மனங் கலந்திருக்க, பந்தற் சிங்காரித்துக் கலியாண வாச லில் வந்து விவாகவிதி நடந்தேறி வரும்போது, தாராதத்தம் பண் ணிக் கொடுக்கவேண்டிய தென்னவென்றால் :

குலகோத்திரக் குடிப்பிறப்புடையவர்கள் பெண்ணைக் கொள்ள வும் பெண்ணைக் கொடுக்கவும் பொருந்தியபோது பொருளினாலும் பரிய மிகுதியினாலும் பந்து விரோதத்தினாலும் சொந்தமுள்ள பந்தத் தினாலும் மரியாதை வாஞ்சைகளினாலும் வார்த்தைகள் பிசகினாலும் சாதி சமயம் பிறந்து நடந்த தன்மை விசாரணையினாலும், 'நான் பெண்ணைக் கொடுக்கமாட்டே' னென்று பூததேசப் புணர்ப்பினா லும், ஆணவ மலசூத்திரங்களினாலும், விரோதங்கள் நேரிடு மென்று அடிக்கடி பிரமாணங்களினால் நடப்படுத்தி வந்தும், இப் போது கெட்டியாகச் சகல தேவதைகளும் சகல சாதியாரும் பந்து மித்திர சபையாருஞ் சேர்ந்திருக்கிற தருணத்தில் தாராதத்தம் பண் ணிக் கொடுக்கவும், அந்தத் தாரையை, 'நான் ஏற்றுக்கொண்டே' னென்று மாப்பிள்ளை சொல்லவும், அதை ஏற்புறுத்துவதற்காகப் பற்பலவிதத்தினும் பாராட்டுவதாம்.

"மூன்று முடியும் முடிந்து முப்பது இலையுங் குப்பையில் வீழ்ந்த போதைக்கல்லவோ கலியாண நிச்சய" மென்பதும், "ஒரு வன் பெண்சாதி மற்றொருவனுக்குத் தாய்" என்பதுவும்,

"நிதியுங் கணவனும் நேர்படினுந் தன்றன்
விதியின் பயனே பயன்."

என்பதுவும், பழமொழிகளாகையின் எல்லாம் தெய்வ வசத்ததே யன்றி வேறில்லை யென்றறிந்து முயல்வது போலுமாம்.

மங்கிலியம் அணியும் விதி

இப்பால் தாராதத்தம் பெற்றுக்கொண்ட மாப்பிள்ளை யெழுந்து, கலியாணப் பெண்ணிற்கு நேரில் முக்கால் அறுகாலிட்ட பீடத்தின் பேரிலிருந்து, பஞ்சாங்கஞ் சொல்லுகின்ற ஐயரால் தாலியைக் கரத்தில் வாங்கிக்கொண்டு, மாப்பிள்ளையின் தமக்கை தங்கை

இவர்களிலொருவர் மகாலட்சுமிவைத்த விளக்கைப் பிடித்துக் கலியாணப் பெண்ணிற்குப் பின்புறத்தில் வந்து கலியாணக் கன்னிகையின் உட்கழுத்துக் கருமணி களையவும், வேதியர்கள் வேத ஒலி பண்ணவும், சுசாதியர்கள் திருமால் திருநாம கோவிந்தம் போடவும், தாய் தந்தையர்கள் மனமும் வயிறும் குளிர்ந்து மகிழ்ச் சியி லூறவும், வந்திருக்கும் பந்து சனங்கள் கண்களிகூறவும், மித்திரர் முதலியோர்கள் பத்திராட்சதை யிறைக்கவும், இலாலி மங்கலவாழ்த்தொலி யீறவும், தமர முதலிய பேரிகளின் சங்கீதங்களை நிறுத்தி அந்தந்தக் குலத்தாருக்குரிய ஒற்றைச்சங்கு இரட்டைச் சங்கு மூன்று சங்கு இதுகளை ஓமென்னும் பிரணவநாத மொலிக்கும் படியாக முழங்கவும், கலியாணப்பிள்ளை கலியாணப்பெண்ணின் செவியில் தாறுமாறுன வேறுநாதங் கேட்கும்படிக் கில்லாமற்செய்து மாப்பிள்ளை கரத்தில் தாங்கிய திருமங்கிலியத்தைக் கலியாணப் பெண்ணின் களத்திற் சேர்க்கும்போது, நாத்தியார் மூத்தமாமியார் அந்த மங்கிலியத்தைத் தாங்கித் தங்கள் சாதியாசாரப்படிப் பெண் ணின் மார்பில் எவ்வளவு நிலைநிற்கவேண்டியதோ அவ்வளவு நிற்க வைத்துப் பிடிக்க, சகல வைபவ சம்பிரமங்களுடன் மணவாளப் பிள்ளை மணக்கன்னிகை மகிழத் திருப்பூட்டி பெண்ணின் பிடரியில் நூன்முடிபோடுகின்ற சுபலக்கினத்தில், புரோகிதர் பிரமமந்திரஞ் சொல்லி முடி யிரண்டும் உருத்திரமந்திரஞ் சொல்லி முடி மூன்றும் போட்டுவைக்க வேண்டியது.

மும்மூர்த்திகளின் மந்திரஞ்சொல்லி மூன்றுமுடியும் போட்ட கலியாணப்பிள்ளை அந்தத் தாலியின் நூல்முடியை இடதுகரத்திற் பிடித்துக்கொண்டு இறைவனைத் தியித்து வலக்கரத்தில் விபூதிவாங்கி அம்முடியின்பேரில் வைத்து துற்சோபம் - துற்பயங்கரம் - துற்மர ணம் - துற்வியாதி நீங்கவும் - சகலபாவரோக நிவாரணமாகவும் - சம்பத்தர சாதுசங்கம் - சாத்திரலீலா மகத்துவ முண்டாக்கும் பஞ் சாட்சரத்தைச் செபம்பண்ணி, மாப்பிள்ளை தன் நெற்றியில் விபூதி தரித்துக்கொண்டு பெண்நெற்றியிலும் திருநீறுபூசிப் பெண்ணின் வலதுசெவியில் விப்பிரர் சொல்லுமந்திரஞ் சொல்லவேண்டும்.

உபதேச மந்திரம்

புரோகிதர் புகலுகின்ற மந்திரமாவது: "மங்கலியந்தந்தனே னேனு - மமஜீவனவேதுனு" என்பதாம். இந்த மந்திரத்தைப்

பெண்செவியிலோதிய பின்பு, பிள்ளையெழுந்து மணவறையி லிருக்க லாம். உடனே கலியாணப் பெண்ணை யெழுந்திருக்கச்செய்து தோழிப்பெண் சகிதமாகப் புருடனிவணங்கி மாப்பிள்ளைக்கு இடது பாகத்திலிருக்கச் செய்யவேண்டியது.

பட்டங் கட்டல்

மாப்பிள்ளைக் குரியவர்களும் பெண்ணிற் குரியவர்களும் மூத்த இரத்தினங்களினுலாகிய பொற்பட்டங்கள் கட்டி பட்டு பட்டாவளி தம்பலம் சரிகைவேட்டி சரிகைசோமன் புடவை ஆபரணங்கள் அன்னமுதலிய அநேக வத்துக்களை வரிசைவண்மைகளாக வழங்க வேண்டியது.

சேடை

நித்தியவிதி தப்பாதியற்றியக் காயத்ரி செபித்துச் சத்திய வாக்கியம்பெற்ற உத்தம வேதியர்களால் நவக்கிரக வோமம் பண்ணிவித்து, சந்தன தாம்பூல தட்சணையுங் கொடுத்து, விசேட சேடையிட்டு பலராலும் பிள்ளையும் பெண்ணும் வாழ்த்திப் போற்றச் செய்யவேண்டியது.

பொன்மோதிர மிடல்

அக்கினிபூசையாற்றி, பிள்ளையும் பெண்ணுமெழுந்து தோழன் தோழியுடன் அரசானிக்குக்காலை பிரதட்சணம் பண்ணி வரும் போது, ஒவ்வொரு சுற்றிற்கும் மைத்துனன் பொரிவாரிக்கொடுக்க கலியாணப்பெண் கரத்திலேற்றுப் புருடன் கரத்தில் விடுக்க, அந்த நாயகன் அந்தணர் சொல்லிய மந்திரத்தின்படி அக்கினியிற்சொரிய, இவ்வாறு மூன்றுதரம் வலஞ்சுழ்ந்துவந்து ஓமாக்கினிக்குப் பூரணாகுதி கொடுத்துப் போற்றி வாழ்த்தி யேத்திறைஞ்சி, பொரிவாரியிட்ட மைத்துனன் கரத்திற்குப் பொன் மோதிரமிட்டு மணவறையிற் பொருந்தி யிருக்கவேண்டியது.

மாலை மாற்றுதல்

பிள்ளையும் பெண்ணும் பூமாலையாற்றிப் பூச்சென்டெறிந்து சந்தனம்பூசிச் சரசம்பேசிக் காலையியீந்து கடைக்கண்பாய்ந்து கரமேற்சாய்ந்து சற்றுநேரம் வினையாடிக் கொண்டிருந்து மாணிக்கத்தாளால் நீராஞ்சனமாகிய ஆலஞ்சுழற்றுவித்து இருவரும் விரல் கோத்தெழுந்து மாப்பிள்ளைத்தோழன் முன்னும் மணவாளன் பின்

னும் பெண்ணுந்தோழியும் அட்டமங்கலத்துடன் அரசானிக்குக் காலைப் பிரதட்சணம் புரியவேண்டியது.

அட்டமங்கலம்

கைவிளக்கு - பூரணகும்பம் - கண்ணாடி - அங்குசம் - வெண்சாமரம் - இணைக்கயல் - அவரவர்கட்குரிய விருதுக்கொடி - முரசு இவ்வெட்டும் அட்டமங்கல மென்பதாம். இவை பெதும்பைப் பருவமுள்ள பெண்களெடுத்துக்கொண்டு பூமியதிராமல் நடந்து மூன்று சுற்று வந்தபின், அப் பெண்களுக்குச் சந்தன தாம்பூல புட்பங்களுடன் பழங்களும் தனங்களுங் கொடுத்துவிட்டு, பிள்ளையும் பெண்ணும் வணங்கி, கிழக்குமுகமாகிய அரைவீட்டிற் புகவேண்டியது.

அம்மி மிதித்தல்

பிள்ளையும் பெண்ணும் அரசானிக்குக்கால் வலஞ்சுற்றி வரும் போது அம்மிமிதி அருந்ததி தரிசனென்று சொல்லுகிறார்களே அதென்னவெனில், அம்மியுங் குழவியும் அட்டதிக்குப் பாலகரில் ஈசான மூர்த்தியாக வேதமந்திரங்களினால் முன்னமே ஆவாகனம் பண்ணிப் பூசித்துச் சிவசத்தி சொரூபமென் றேற்படுத்தி வைத்திருப்பதை மிதிக்கக்கூடுமா? மேலும் வீடு கட்டவும் பந்தக்கால் நாட்டவும் மற்ற எந்தவேலை செய்யவும் ஈசானியமூர்த்தியைத் துதித்து அந்த மூலையை திரமானதென்று தொடங்குவது உலக மார்க்கம்; இதுவுந்தவிர, வடதேசத்தில் தாயை அம்மி யென்பது பெருவழக்காம்; இவ்வாறு தாயாகிய ஆதிமூல சிவசத்தியைக் கலியாணப்பெண்ணின் காலினால் மிதிக்கும்படிக்குப் புருடன் தூக்கி வைப்பது விதித்தவறு; இவ்வாறு செய்யும் பார்ப்பாருக்கும் இதை வேடிக்கைப் பார்ப்பாருக்கும் தந்தை தாயை நிந்தித்ததைத்த பாவமும் பழியுஞ் சம்பவிக்கும்.

பெரியோர்கள் உலோபகாரமாகச் செய்து வைத்திருக்கின்ற புராணங்களுஞ் சாத்திரங்களும் ஒன்று சொன்னபடி யொன்று சொல்லாமலும், சமயபேதம் சாத்திரபேதம் தருமபேதம் முதலிய வற்றால் அதுவோ இதுவோவென்று கவலைகொண்டலையும்படி உலகத்தை மாயைக் கட்டுப்பாட்டில் விடுத்து, தாங்கள் கொண்ட கருத்தை முடித்து, 'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டில' ரென்னுங் கட்சியெடுத்து தன்மதங் கோடலென்னுந் தன்மை பிடித்து, தாங்களெடுத்ததை முடித்து, தங்கள் காலத்தைப் போக்கிக்

கொண்டார்களே யன்றி, வேண்டுமென்னும் விருப்பம் வைப்பார்களாகில் கைத்தலத்தில் வைத்த முத்துப்போற் காட்டுவார்கள்; ஆயினும் அவர்கள் கூறிய நுட்பங்களைச் சன்மாந்தரவத்தையுடைய அதிதீவர பக்குவ முள்ளவர்கள் கற்பூர தீபம்போற் காண்பர். அப்படி சுருதியுக்தி சுகானுபவமுணர்ந்த தூயர்களுக்கு இவ்வுலகம் வேண்டத் தக்கதன்று. ஆதலால், 'உலகத்தோ டொத்துவா' ழென்னும் நீதிக்கிணங்க நிகழ்த்திய விதியே யல்லது வேறில்லை. புத்தி நுட்பத்திறற் குறித்தவர்களென்று இப்போதிருக்கின்ற நுண்ணறிவாளர் மதித்தி மதியைப் பதித்துப் பார்க்கும்போது அம்மியதி அருந்ததி துதி, அநுபவவிதி யென்பதை அறிந்துட் கொள்வார்கள். அவ்வளவு புத்திமான்கள் அதிகரித்திருக்கின்றார்கள். முயன்றால், உண்மையறிந்து கொள்ளக்கூடும்; அப்பால் வினைதான்.

மாப்பிள்ளையும் பெண்ணும் அட்டமங்கலங்களுடன் அரசானிக்குக் காலை வலஞ்செய்யும்பொழுது, முதற்சுற்றில் ஈசானமூர்த்தியாக மந்திரார்த்தங்களினால் ஏற்படுத்திய, 'அம்மியினிடத்தில் பெண்ணும் பிள்ளையும் வந்துநின்று தேங்காயுடைத்து, கைவேத்தியம் வைத்து, தூபதீபங் கொடுத்து, புட்பாட்சதைகளால் அர்ச்சித்துப் பூசித்துப் போற்றிக் கலியாணப் பெண்ணிற்கு அந்தச் சரித்திர மகத்துவத்தை உரைக்கவேண்டியது.

அம்மி மதித்தல்

அம்மியையுங் குழவியையுஞ் சுட்டிக்காட்டி, "ஓ கலியாணப் பெண்ணே! இந்த அம்மிக் குழவியினுருவமும் ஆதிசிவமும் ஆதிசத்தியும் அர்த்தநாரியாக வமைந்தவாறு; இதுபோல் நீயும் நானும் உடலும் உயிரும் ஒன்று பொருந்தி பிரியாப் பிரியத்துடன் மருவி வாழ்க்கை பெறவேண்டியதென்று போதித்து, "இதோ நீ எனக்கிடப்பாக மாயினை" யென்று குறிக்கும் வண்ணம் கலியாணப் பெண்ணின் வலதுகாற் பெருவிரலை மாப்பிள்ளையின் இடதுகாற் பெருவிரலாலும் ஆள்காட்டி விரலினுலும் பற்றி, "இந்த ஈசான மூர்த்தியோடு இறைவிபொருந்தி அந்த இறைபோ லிருக்கவேண்டு" மென் றியம்பிச் சேரவேண்டியது.

அருந்ததி காட்டல்

ஒரு சுற்றிலுரைத்துவிட்டு வணங்கி மறுசுற்று வரும்போது வடதிசையைத் துதித்து, "இதோ அருந்ததி; துதி!" "வசிட்ட

ரும் அருந்தியுங்கூடி இல்லறதருமம் நடத்தியதுபோல் நீயும் நானும் இல்லறதருமத்திலிருந்து வாழவேண்டு" மென்று அவர் களின் சரிதையை யெடுத்து விரித்து, தூபதீப நைவேத்தியங்க ளுடன் தொழுது வணங்கவும்.

தேவாசீர்வாதம்

மூன்றுந்தரம் வலஞ்சுழ்ந்து வரும்போது, மணவரையில் வந்துநின்று தென்றிசையில் எமதருமனே ஆவாகனம் பண்ணிய தானத்திலிருக்கும் புரோகிதரைப் பூசித்து வணங்கியபோது, அவர் ஆசிகூறி உலகப்பழக்கத்தையும், பாவபுண்ணிய வகுப்பையும் பிதுர் தேவாதி பூசை தருமதானம் முதலியதையுஞ் சொல்லி,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்
றைம்புலத்தா ரோம்ப றலை"

என்பதுபோன்ற சாட்சி எடுத்துங்காட்டி இல்லற தருமங்களிலும் கிரகத் தாசிரமத்திலும் அன்புண்டாக்கவேண்டும்.

பின்னர்ப் பெண்ணின் சுண்டுவிரல்பற்றி, கிழக்குப் பார்த்த வீட்டில் வலதுகாலை முன்வைத்து நுழைந்து இருவரும் பாயின் மேல் அமர்ந்து மாலைமாற்றிப் பால்பழமுண்டு தாம்பூலங்கொண்டு மைத்துன மைத்துனிகளோடு விளையாடிச் சுபசம்பிரமத்தோடு சபை யோரை உபசரித்துச் சாதமுண்ணுதல் முதலிய சவுக்கியாதிகளைக் கவனிக்கவேண்டியது.

சபையோருக்கு உபசாரம்

மேற்சொன்னபடி மணவாளர்கள் அந்தப்புறம் சென்றவுடன் மற்றோர் யாசகர் வேலைக்காரர் பிராமணர் புரோகிதர் முதலியவர்க ளுக்குப் பூரி முதலியவைகளைக் கொடுத்து, பின்னர் சபை தாம்பூலம், சம்பந்தி தாம்பூலம், கிராமத்தாம்பூலம், புட்பம் சந்தனம் பன்னீர் முதலியவற்றுல் வந்தவர்களை உபசரித்துப் பந்திபோசனம் நடத்திச் சந்தோஷப்படவேண்டும்.

கங்கண விசர்ச்சனம்

அதன்பின் முகூர்த்தலக்கினந் தொடங்கி மூன்றுவேளை ஓமம் பண்ணி, ஔபாசனங்களைத் தேவதா பூசையோடு நடத்தி, மண வாளருக்குப் புரோகிதரால் காப்புக்களைதல் செய்வித்து முதிர்ந்த பெண்ணைகவிருந்தால் ஊஞ்சல், பந்தாடல், ஆடல்பாடல், கச்சேரி

முதலிய சில விளையாடல்களையும் சத்தியானுசாரம் நடத்திவைக்கலாம்.

ஆனால், சிலர் ஐந்துநாள் எழுநாள் ஒமம் முதல் பலவாறாக மனம்போனபடி ஆறுமாத கலியாணமும் நடத்துகிறார்கள். இது பார்ப்பாருக்கும் வேடிக்கைப் பார்ப்பாருக்கும் இலாபமாம்; அன்றியும், "ஐஸ்வரியம் உடையவன் ஈசுரன்" என்பதுபோல, அவர்கள் எப்படி செய்தாலும் செய்யலாம். அப்படிச்செய்ய விதி தந்தம்காரியார்த்தமாகத் தேடிக்கொண்ட மறையோர் வாக்கியமே.

அன்றி, தாலிகட்டியதினமே காப்புக்களைவது என்னெனில், திரவியமில்லாதவர்கள் மற்ற கிரியாதிகளைச்சுருக்கி முருக்கிய விதி யுத்தமாகச் செய்வதாம்; அதனால், யாதொரு கெடுதியுமில்லை புரோகிதருக்கு அவ்வளவாக மந்திரவேலை இராது.

பந்தல் பிரித்தல்

பந்தல் பிரித்தலாவது, மணவாளர்களின் தந்தை முதலிய உரியவர்களும், பஞ்சாங்கக்காரரு மிருந்து முன் ஆவாகனஞ் செய்த ஆரோகண மந்திரம்போல, தூபதீப நைவேத்தியாதிகளுடன் நமஸ்கரித்து அவரோகண மந்திரங்களினால் அந்தந்தத் தேவதைகளை எதாத்தானத்திற்கு எழுந்தருளச்செய்து சாந்தியோமம் முடித்து, அரசாணிக்கால் முதலியவற்றை அசைத்து விடுதல்.

பின்னர், அவ்வரசாணிக்காலை நந்தவனங் கோயில் முதலிய விடங்களில் சுத்திசெய்து தனித்தனிநாட்டிச் சாலினுள்ள சத்த கங்காசலத்தையும் வார்த்து, அவை தளிர் தழை மலர் முதலியவைகளோடு செழிக்கத் தினம் பாதுகாத்து மணவாளர்கள் பின் சிலாக்கிய முறுவதைக் கவனிப்பதாம்.

பாலிகை விடுதல்

இதன்பின் பாலிகையிலுள்ள நவதானியமுளையை அரசாணிக்காலின் சமீபத்தில், புட்பமாலை மாவிலை தருப்பை முதலியவற்றை ஒரு கூடையில் வாத்தியங்களுடன் பந்துசனம் மணவாளர் முதலினோரோடு கொண்டுபோய் மஞ்சணீர், குங்குமம், கதம்பம் முதலியதோடு விளையாடி ஆறு ஏரி குளம் இவ்விடங்களில் விட்டுப் பூசித்து வரவேண்டியது.

ஓமாக்கீனி விடுதல்

மங்கலியதாரணம் பண்ணும்போது வளர்த்திய அக்கினியை கங்கண விசர்ச்சனஞ் செய்தவுடனே தீபதூப ஆராதிகளோடு வாயகன்ற சட்டியி லெடுத்துப்போய்ப் பயிர்ப்புல மில்லாவிடத்தில் வைக்கவேண்டியது.

கருப்பாதானம்

பின்னர்ச் செய்யவேண்டியதாவது கருப்பாதானமாம்; அதாவது, இட்ட சனக்கூட்டத்துடன் விருந்தருந்தி வரிசைகள் நடத்தி, சாந்தியோம முதலிய சடங்குகளை முடித்து மணவாளர்களை அலங்கரித்துச் சுபலக்கினத்தில் இரவில் மர்மமாக 'இலை மறைவோ காய் மறைவோ' வென்னும் பழமொழிக்கிணங்கப் புணர்த்தவேண்டியது.

இப்படியல்லாமல் இருது சாந்திகாலத்திலும் சோபன காலத்திலும் ஊர்நாடெல்லா மறியும்படி பத்திரங்களால் பிரசித்தஞ்செய்து மேளதாள முழக்கத்தோடு பொருளை விரையப்படுத்திக் கொண்டாடுவது பிசகாம்; என்னென்றால், எறும்பு கடையான சகல சீவராசிகளுக்குங் காமமுண்டாயினும், நெடுநாள் பழகிய நாயகனிடத்தில் அதராகம் விளக்கும்போதும் நாணமிருக்க வேண்டுவது ஸ்திரீகளுக்கு முழு ஆபரணமென் றிருப்பதால் குடிப்பிறப் புடையவர்கள் உற்றூர் பெற்றூர் முதலினர் செய்யத்தக்க சடங்குகளைப் பகலில் செய்து முடித்து இரவில் பெண்கள் சாங்கியமாகச் செய்வது நியாயமும் சுபாவமுமாகும். நமது தேசத்தில் வழங்கும் சாத்திரங்களுள்ளும் இதை அந்தரங்க காரியங்களென்றே சொல்லுகின்றது.

தகாத இருதுசாந்தி

மேற்சொன்ன முறையைத்தவறி பத்துநாள் ஒருமாதம் வரையில் பற்பல வேடம்போட்டு ஊரார்களை யழைத்துப் பெண்ணைநிரே உட்காரவைத்தும் தாசிகள் அல்லது பாப்பாத்திகளைக்கொண்டு அகந்தையாகப் பாடவைத்தும் கொப்பிதட்டிக் கூத்தாடி நடிக்கச் செய்தும் சந்தோடப் படுகிறார்கள். இதென்ன விபரீதம்? ஐயோ! சனியனை விலைக்கு வாங்கிக்கொண்டதுபோல விவேகங்கெட்டு இவ் வாறுஞ் செய்யலாமா?

ஓ! ஓ! கனவான்களே! தத்தம் அருந்தவத்தால் வருந்திப் பெற்ற பெண்களுக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும்

ஐந்து முதல் ஒற்றைப்பட்ட இராத்திரிகளில் சேர்ந்தால் பெண்களும் பிறக்கின்றது. ஆகையால், புத்திர விருப்புள்ளவன் இரட்டை தினத்திற் சேரவேண்டியது. புருஷனுக்குச் சுக்கிலம் அதிகமாக, வெளிப்படுமானால் புத்திரனுகவும், மாதர்க்குச் சுரோணித மதிகமாக விருந்தால் ஸ்திரீயாகவும், இருவருக்கும் சரியாயிருந்தால் பேடியாக வும், இருவருக்கு மில்லாமலிருந்தால் அல்லது சொற்பமாயிருந்தால் கெற்போர்பத்தி யில்லாமையும் உண்டாகிறது. நீக்கவேண்டிய தான நாலுநாளையும், ஏகாதசி, திரயோதசி, அமாவாசி, பௌர்ணமா வாசி இந்த நாளையும் நீக்கி எவன் மற்ற தினத்திரவினில் தன் மனைவியுடன் சேருகிறானே அவன் கிரகத்தனுக விருப்பினும் பிரும்ம சாரியாகவே சொல்லப்படுகிறான்.

பிள்ளைகள்மேல் வாஞ்சையுடைய ஆடவர், தாங்கள் உண்ட உணவுகள் சரியாய்ச் சீரணித்து தேகபல னடைவதற்குச் சராசரி நான்கு மணிநேரம் நித்திரைசெய்து பிறகு மாதர்களைப் புணர்வது மிகவும் நன்று; அன்றிரவில் சாப்பிட்டுப் படுத்தவுடனும், பருவ காலங்களிலும் நெடும்பிரயாணஞ் செய்தபிறகும், ஸ்நானம் செய்த பிறகுஞ் சரியாய்ச் சீரணியாத சமயத்திலும், மாதர்களோடும் சையோகிப்பதனால் பல வியாதிகள் சம்பவிக்கும்; பாக்கியங்களில் முக்கியமான புத்திர பாக்கியத்தைப்பெற விரும்புவோர் வசந்த காலத்தில் புணர்ச்சிக்கவேண்டும். ஏனெனில்; அப்பருவத்தில் தருக்கள் தளிர்ந்து சுத்தமான வாயு வீசுகிறபடியால் சீக்கிரத்தில் கருப்பக் கருத்தரிக்குமென்று மனுகூறியபடியே சோதிடசாத்திர சகிதமாக புருடனுக்கும் பெண்ணுக்கும் தேககால லட்சணங்கள் தெரிந்து ஆயுள் வேதியரால் ஒப்பத்தக்க தினத்தை யறிந்து முதல் நிஷேக முகூர்த்தஞ் செய்வதே சிறந்தது.

உலகத்துள்ள ஆண்பாலர் பெண்பாலராகிய இருபாலரும் கலந்து மகிழ்ச்சியடைந்து நுகரும் ஓர் சிற்றின்பத்திற்கே சம்போ கம் புணர்ச்சி எனப் பெயராம். இதைச் சில அறிவிலிகள் காம விச்சையை ஒழிப்பதற்காகத்தான் பெண்களே உற்பத்தியாக்கப்பட் டிருக்கின்ற தென்றும், அவர்களிடத்திற் சம்போகிப்பது தங்க ளிச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்குத்தா னென்றும் தப்பபிப் பிராயப் படுகிறார்கள் "நெல்லுக்கிரைத்தநீர் வாய்க்கால் வழி யோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்" என்பதுபோல; சந்தான

விருத்திக்காக ஏற்படுத்தப்பட்ட சம்போகத்தில் ஒருவித இன்பத்தையும் கடவுளுண்டாக்கி யிருக்கின்றாரே தவிரக் காம விச்சையை யொழித்துக் கொள்வதற்காக மட்டுமல்ல. கடவுள் நமது நன்மைக்காகப் பூலோகத்தில் சிருட்டித்திருக்கும் சகல பொருள்களையும் அவரால் நிர்ணயித்திருக்கப்பட்ட பிரமாணத்தின்படி நாம் அனுபவிப்போமேயானால், அது நமக்கு நன்மையைச் செய்யுமே தவிரத் தீமையை ஒருபோதும் விளைக்காது; ஔடதத்திற்கு உபயோகிக்கும் பாஷாணத்தை அதற்குத் தக்க பிரமாணப்படி சேர்த்தால் நன்மையே செய்யும். பிரமாணத்திற் கதிகமாய்ச் சேர்த்தால் தீமை விளைவிக்கு மென்பதற்குச் சந்தேகமென்ன? அதுபோலச் சந்தான விருத்திக்காக ஏற்படுத்தப்பட்ட சம்போகத்தை பிரமாணத்துடன் நடாத்தி வந்தால் அநேகவித நன்மைகளை அது விளைக்கும். அவ்வாறின்றிக் காமவிச்சாதிக்கத்தின் நிமித்தியம் அப்பிரமாணமாய்ச் சம்போகித்தால் பல்வித தீமைகளை விளைவித்துவிடும். இன்னும் நம்முடைய சீவனைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கடவுள் நமக்குப் போசனத்திற்குரிய பதார்த்தங்களைச் சிருட்டித்திருக்கின்றார். அப்பதார்த்தங்களைப் புசித்தால் அவைகள் நமக்கு சீவதாரமாயிருப்பதுடன் அவைகளை உண்ணுகையில் ஒவ்வோர் உருசி தோன்றுகின்றது; அவ்வுருசியை நாமறிவதற்காகத்தான் இவை சிருட்டிக்கப்பட் டிருக்கின்றனவென்று அமிதமாய்ப் புசித்தால் அவைகள் கெடுதி விளைக்குமென்பதிற் றடையாது? 'இதனால் அப் பதார்த்தங்களின் உருசியை நாமறிவதற்கு மாத்திரமே பதார்த்தங்கள் சிருட்டிக்கப்பட்டன அல்லவென்று நமக்குப் புலப்படுகின்றதல்லவா? அதுபோலவே ஸ்திரீகளின் சம்போக்கும் சந்தான விருத்திக்காகவே உண்டாக்கப்பட்டிருக்கிற தென்று உணரவேண்டும். இவ்வித நற்செய்கையை பிரமாணுதிக்கத்தால் தூர்ச்செய்கையாக்கிக் கொண்டு சிலர் அதனால் அநேகவித கெடுதியை அடைவதைக் காமம் என்னும் அதிகாரத்திற் கூறியிருக்கிறோம். ஆதலாற் சம்போகத்தைக் கிரமமாகவும் ஒழுங்காகவும் நடத்தவேண்டியது ஒவ்வொருவருக்கும் கடமையா யிருப்பதுகொண்டு அச் சம்போகத்திற்குரிய காலப் பிரமாணத்தை அடியிற் கூறுவாம்.

அதாவது ஸ்திரீகளின் பதினேந்தாம் வயதிற்கு மேற்பட்டு இருபது இருபத்தொன்றும் வயதுவரையில் அவர்களின் சரீரத்திற்

கேற்ற எலும்பு முதலியன வளர்ந்து பூரண பக்குவம் அடைகின்ற படியால், மூற்கூறிய இருபதாம் வயதிற்குமேலே சம்போகிக்கத் தொடங்கவேண்டும். அதற்கு முந்திச் சம்போகஞ் செய்யத் தொடங்கிவிட்டால், அவர்கள் உறுப்புகள் பூரண வளர்ச்சி யடை யாமையால், அவர்களுக்குக் கருப்பந்தரித்து முற்றிப் பிரசவிக்குங் காலத்தில் சகல சங்கடங்களும் ஆபத்துகளும் நேரிடுவதன்றி அவர்க ளுக்கு பிறக்குங் குழந்தைகள் எலிக்குஞ்சுகளைப்போன்றும் பூனைக் குட்டிகளைப்போன்றும் அவ்வளவு பலவீனமாய்ப் பிறப்பதன்றி, அவர்களும் துர்ப்பலப்பட்டுப் பல வியாதிகட்கு ஆளாகின்றார்கள். சம்போகம் மாதத்திற் கொருதரமென்றும் இரண்டுதரமென்றும் நான்குதரமென்றும் பிரமாணமிருப்பதால் தேகபலத்திற்கும் வய திற்கும் தக்கபடி விரும்புவதே உசிதம். ஐம்பது வயதுக்கு மேற் பட்டு மாதத்திற் கொருதரமாகிலும் இரண்டு மாதத்திற் கொருதர மாயினும் நான்கு மாதத்திற் கொருதரமாயினும் அவரவரின் தேக பலத்திற்குத் தக்கபடி புரிவது நலம். இருபதாம் வயதிற்குமேல் மூப்பத்தைந்தாம் வயதுவரைக்கும் பிரசவிப்பதற்கு அவ்வளவு வருத் தம் இராது; ஆனால் முப்பத்தைந்தாம் வயதுவரையிற் சம்போகமே யில்லாமல் அதன்பின் சம்போகஞ்செய்து கருப்பந்தரித்தால், அந்த முதிர்ந்த ஸ்திரீகளின் சரீர உறுப்புகளின் மிருதுவான பாகங்களெல் லாம் வேண்டியவரையில் வளையக்கூடாதபடி தடித்துப்போவதுடன் கருப்பாசயம் சுருசுருப்பின்றி மந்தப்படுதல், கருப்பை கிழிந்து போதல், உதிரம் பெருகுதல், தளர்வடைதல், தாபமடைதல் முதலிய அளவில்லாத உபாதிகளால் பிரசவ காலத்தில், அந்த ஸ்திரீகள் துன் பப்படுவார்கள். இருபதாம் வயதுமுதல் மூப்பத்தைந்தாம் வயது வரையில்தான் பிரசவத்திற்குத் தக்க காலம்; அக்காலத்தில் சுக மாய்ப் பிரசவமாவதுடன் மரணம்நேர்வதும் அபூர்வம்; இன்னும் பத்துப் பன்னிரண்டு வயதில் இருதுவாய்க் கருப்பந்தரித்துப் பிர சவகாலத்தில் அநேக ஸ்திரீகள் படும் துன்பத்தை அநேகர் பார்த் தும் கேட்டுமிருக்கலாம். அதனால் நேரும் மரணத்தின் அளவை யாவர்தான் அறியார்கள்? இவ்வித பிரசவத்தில் தப்பிப்பிழைத்த ஸ்திரீகள், தங்கள் சரீர உறுப்பின் வளர்ச்சி பூரணமா யமையப் பெறுமையால், அதுமுதலாகவே நோயாளிகளா யிருந்து இளம் வயதில் மரணமடைகின்றார்கள். இவ்வித காரணங்களால் இருபது வயதிற்கு மேற்பட்ட காலத்தையே சம்போக காலமாகக்கொள்வது

உத்தமம்; நாம் சாப்பிடும் ஆகாரம் சீரணமாவதற்கு ஏறக்குறைய நான்குமணிநேரம் செல்லுமாகையால், ஆகாரஞ்செய்து நான்கு மணிக்குப் பிறகே சம்போகம்செய்வது நன்று.

ஆகையால், நாயகனும் நாயகியும் தேகத்தைச் சுத்தி செய்துக் கொண்டு பரிசுத்த வஸ்திரந்தரித்து களபகத்தூரிகளைப் பூசி இதய சுத்தியடைந்து மனதைக் கனலி சஞ்சலம் முதலியவைகளில் அலைய விடாமல் அமரிக்கையாய் நிறுத்தி, ஏகாந்தமாய் அன்னத்விமஞ்சத்தில் சயனிக்கையில் தாம்பூல தாரணஞ்செய்துகொண்டு பலவித மனக்களிப்பைத் தரத்தக்க வார்த்தைகளாடி இருவரும் ஓரே மனதுள்ளவர்களாய், சந்தோட சித்தத்துடன் சம்போகம் ஆரம்பிக்க வேண்டும். அப்படிச் செய்யுங்காலத்தில் வேறு யாதொரு எண்ணங்களும் மனதில் தோன்றுதவண்ணம் கடவுளிடமாக பத்தி வைக்கவேண்டும். இவ்விதம் புரியின் கருப்பவதிக்கு யாதொரு விக்கினமின்றிச் சற்குணமுள்ள பாலரைப் பெறுவார்கள்; சில மூடர்கள் தங்கள் நாயகிகளுடன் சம்போகிக்குங் காலத்தில் வேறு ஸ்திரீகளின்மேல் மனதைச் செலுத்துவார்கள் அப்படிச்செய்வதால், அவர்கள் விபசாரக்குற்றத்திற் குள்ளாவதுடன் கருப்பக்குறைவும் நேரிடுகின்றது. இதுபோலவே ஸ்திரீகளும் இதர விடயங்களில் மனதைச் செலுத்தாமலிருக்க வேண்டும். சம்போக காலத்தில் நாயகிக்கு ஆச்சரியம் சஞ்சலம் பயம் அதிருத்தி முதலியவைக ளுண்டாயின், கருத்தரித்தலுக்கு விரோதமாகையால், கூடியவரையில் அவைகளை நீக்கி அவன் மனதிற்குச் சந்தோடத்தையும் உற்சாகத்தையும் விருப்பத்தையும் விளைவிக்கவேண்டும். தந்தை தாயின் மனோ வியாபாரமே பிள்ளையுண்டாவதற்கு முக்கிய காரணமென்று விவேகிகள் கூறியிருக்கின்றார்கள். ஆகையால், அக்காலத்தில் அவர்களுடைய மனது எவ்வளவு தெளிவாயும் பரிசுத்தமாயு மிருக்கின்றதோ அவ்வளவு சௌந்தரியமுள்ள குழந்தைகளைப் பெறுவார்கள். இவ்வாறு சம்போகித்த பிறகு ஸ்திரீகள் ஸ்நானஞ்செய்து வேறு யாதொன்றையும் நோக்காது தனது கணவன் முகத்தையாவது அல்லது கண்ணடியில் தன் முகத்தையாவது அல்லது அழகுள்ள படங்களையாவது பார்க்கவேண்டும். இப்படிச் செய்வதால் தன்னுருவத்தைப் போன்றுவது தனது கணவனுருவத்தைப் போன்றுவது சௌந்தரியமுள்ள பிள்ளை பிறக்கும். ஸ்திரீ ஸ்நானஞ் செய்தவுடன்

குரூபியான ரூபங்களைப் பார்க்க நேரிட்டால் குழந்தையும் குரூபியாகவே பிறக்குமென்று சாத்திரங்கள் கூறுகின்றன. இதற்குச் சரியாய் அநேக திருட்டாந்தங்கள் உலகத்தில் நடந்துவருகின்றன. மாதர்கள் அணிந்திருக்கும் ஆபரணங்களுள் ஒன்றில் ஊசிக்காந்தத்தைப் பதித்துச் சதா போட்டுக்கொண்டிருந்தால், கருப்பந்தரிக்குங் குணமுண்டாவதுடன் சதி புருஷாளிருவரின் மனவொற்றுமை எக்காலத்தும் மாறுதிருக்குமென்றும் கல்விமான்கள் கூறுகின்றார்கள்: மிகப் புணர்ச்சி செய்யும் விலைமாதருக்குப் பிள்ளையுண்டாவதரிதாயிருப்பதும், நெடுநாட் பிரிந்த கணவன் வந்தவுடனே சம்போகித்த மாத்திரத்தில் கருப்பந்தரிப்பதும், அனுபவமாயிருத்தலின், அதில் சம்போகத்தினால் மாந்தர்களுக்குக் கருவை வளர்க்கும் சக்தி குறைந்து கருத்தரிப்பதற் கேதுவில்லாமற் போகுமென்பது திண்ணமாம்.

விளையாடல்

கலியாண வாசலில் வெகு சனங்களுக்குமுன் விளையாடச் செய்வது என்னவென்றால், விவாகமாகாததற்கு முன்னும் பின்னும் மணமகனும் மணமகளும் கூச்சப்படுவது வழக்கம். சிலர் கலியாணஞ்செய்து இரண்டு மூன்று வருடமாகியும் நாணமாயிருப்பார்கள்; சின்னவீட்டுச் செய்தி சீமந்தத்தில் தெரியுமென்றபடி வயிறு புடைத்துக் காட்டியபோது புருடனும் பெண்சாதியும் பேசுகிறார்களென்று தெரியலாம்; அப்போதும் புருடனைக் கண்டால் வெட்கப்படுவார்கள் சிலர். ஆனதால், அந்நாணமும் வெட்கமும் நீங்கும்படியாகச் சாலில் ஆழியிட்டு எடுக்கச்செய்தும், சாலுக்குள் ஒருவர் கையை ஒருவர்பற்றி முருக்கித் திருப்பி பொம்மையை எடுக்கச் செய்வதும், பிள்ளையைப் பெற்றேமென்றும், 'பிள்ளையைப் பிடியுங்கள் எனக்கு வேலையிருக்கிற' தென்றும், 'புருடன் பிள்ளையைப் பிடி' யென்றும், 'பால்கொடு' வென்றும், 'ஏணையிற்போட்டு தாலாட்டுங்க' ளென்றும், 'மூத்திரம்பேய்ந்த தென்றும், தாம்பூலந்தா' வென்றும், மாலைமாற்றென்றும், பூச்சண்டெறிதலென்றும், மஞ்சணீர் விளையாட்டென்றும், வெகுசன மத்தியில் விளையாடச் செய்து கூச்சத்தைத் தெளியச் செய்வதாம். இப்படி விளையாடியும் ஆறுமாதம் ஒரு வருடம்வரையிலும் கூச்சத்தோடிருப்பவர்களும் சிலர் உண்டு. இவர்களை இட்டர்களாலும் தாசிகளாலும் போதித்து நாணத்தை நீக்குவதுமுண்டு. இதன்பொருட்டே உற்றார் உறவினர்

தோழிப்பெண், நிலம், ஏர் முதலியவற்றைக் கொடுத்து வந்தார்கள்; அக்கால் தோழிப்பெண்ணைத் தோழன் மாப்பிள்ளை கலியாணஞ் செய்வது வழக்கம். அந்த நெறியாக மைத்துனனிருக்கவேண்டும்.. இது பூர்வ நியதி.

தாலியி னுருவம்

தாலியாவது, தாலி என்பது தாள்+நீ=தாணி என்ற பதமாம். அது தாலியென மருவி வழங்குகின்றது. அதனுருவம் புருட னுடைய பாதம்போலாம்—சிலர் பொட்டாக அணிகிறார்களே யென்றால், அதுவும் புருடனுடைய பாதந்தான். எவ்வாறென்னில், பாத தாமரைபோல வடிவம் பண்ணிவைப்பதாம்.

குலாலமரியாதை

குலாலனைச் சால் கரகாதிகளைச் சுபவேளையில் வாத்தியத்தோடு கொண்டுவரும்படிசெய்து, அவனுக்குப் படியரிசி தாம்பூலம் முதலிய கொடுத்து உபசரிக்கவேண்டும்.

விசுவப் பிரமோபசாரம்

கலியாண தினத்திற்கு ஏழு ஒன்பது தினத்திற்குமுன் தட்டா னிடம் பொன்கொடுத்து, தாலிசெய்து மூன்று தினத்திற்கு முன்ன தாகக் கொண்டுவரச்செய்து குலத்தேவதா பூசைகளை நடத்தியபின் அவனை உபசரிக்கவும்.

நாத்தினர் விளையாட்டு

சிலர் கலியாணப்பெண்ணும் பிள்ளையும் அறைவீட்டிற் போம் போது நாத்தினர் முன்னதாகக் கதவைச் சாத்திக்கொண்டு விளை யாடுகிறதினால், நல்ல லக்கினம்போய் இராகு தியாச்சிய உச்சம் வந்துபோம்; ஆதலால், மாப்பிள்ளை பெண் அறைவீட்டிலிருந்து பால்பழமுண்டு மங்கள லாலிவரிசை நடந்து எழுந்து வரும்போது கதவைச் சாத்திக்கொண்டு வெகுநேரமட்டும் விளையாடுவது மிக உத்தமமாகும்.

பரிய விடயம்

பெண்ணைப் பெற்றோர் பரியம் வாங்கிக்கொண்டு பெண்ணைக் கொடுப்பது விற்றுவிட்டதுபோலும்; ஆதலினால், பரியம் வாங்கு வது தவறென்று சர்வசாத்திரங்களும் கூறுகின்றன.

சீதன விடயம்

விவாகமானபின் பெண்ணைப் பெற்றவர்கள் அப்பெண்ணின் அருமை பெருமைகளை யுணர்ந்து அதன் சீவனுசார விருத்திக் கென்று வீடு - நிலம் - பணி - ஆடை - பொன் முதலிய சொத்துக்களைக் கொடுப்பது உசிதம். இவ்வழக்கம் நெடுங்காலமாய் எல்லாச்சாதியா ருள்ளும் சக்தியானுசாரம் நடந்தேறி வருகின்றது. இந்தச் சொத் துக்களைத் தாய் தந்தை யல்லது கணவன் முதலினோர் அபகரிப்பது கூடாது. அப்படி செய்யின் அதோகதி அடைவரென்று மிருதிகள் கோஷிக்கின்றன.

இப்படியாக அட்டதிக்குப் பாலகர்கள், அவர்களதி தேவதை கள், பூதேவி - சரஸ்வதி - சூரியசந்திரர் - அருந்ததி - கிரகாதி கள் - உற்றார் - உறவினர் - ஊரார் - பிராமணராதி சர்வசனங்க ளின் முன்னிலையில் சத்தரிஷிகள் - நவதீர்த்தங்கள் முதலிய எல்லாங் காணும்படி தாய் தந்தையர் தாரை வார்த்துக் கொடுக்க எல்லா தேவர்களையுஞ் சாட்சிவைத்து பெண்புருடனை நோக்கி "இதுவரை யிலும் நான் என் தந்தை தாயின் பாதுகாப்பில் இருந்தேன் : இன்று முதல் தங்கள் பாதுகாப்பிலிருந்து தங்கள் குலத்தை விருத்திசெய்ய வும், தங்களது சுகதுக்க பாவபுண்ணியமாகிய சர்வத்திற்கும் சுதந் திரியாகவும், இன்று என் தேகத்தையும், உயிரையும் சர்வசுதந்திரங்க ளோடு தங்களுக்காக தத்தஞ்செய்கிறே" னென்றும், அப்படியே புருடன் பெண்ணைநோக்கி "நீ என் குலவிருத்திக்கும், எனது புண் ணிய பாவாதிகளுக்குஞ் சுதந்திரத்திற்கும் என் பிதுரர்கள் முதலி னோர்களுடைய போஷிப்பிற்கும் பெருந்துணையா யிருக்கும்படி இப் பெருந்தேவசன மகாசபையார் சாட்சியாக வதுவித்துக் கொண்டேனுகையால், என் தேகத்தையும் அத் தேகத்தினாலாகும் எல்லா விஷயங்களையும் உனக்கே இம் மகா தேவஜன முன்னிலையில் தத்தஞ்செய்து கொடுக்கிறே" னென்றும் பிரமாணத்தோடு சத்தி யஞ்செய்து கொடுத்து, அதற்கு உறுதிப்பத்திரம் போலும் மங்கிலிய முத்திரையை யேற்படுத்தியபின் ஒன்றிவாழ்கின்ற கருத்தே விவாக மானதால் இக்கெறியைப் பிறழ்ந்து நடக்கும் ஸ்திரீபுருடர்களுக்கு என்ன கதி கிடைக்குமோ?

இரண்டாவது விவாகம்

மதுபானஞ் செய்பவள், தீயநடையுள்ளவள், கணவனுக்கு மாறுபாடு செய்பவள், தீராப்பிணியினள், மிகுந்த கொடுமை யுடை

யவள், பொருளை யழிப்பவள் இவ்வகை மனைவியரை சீவனத்திற்குக் கொடுத்து நீக்கிவிட்டு இரண்டாவது விவாகஞ்செய்க.

மலடியான மனைவியை எட்டுவருடத்திற்கு மேலும், சாப்பிள்ளைபெறுவாளைப் பத்து வருடத்திற்குமேலும், பெண்ணையே பெறுவாளைப் பதினைறு வருடத்திற்கு மேலும்; தீங்குசொல்பவளை அப்பொழுதேயும் நீக்கி, வேறு விவாகஞ் செய்துகொள்க. இந்த மனைவியர்களுக்கு மனமகிழப் பொருள் கொடுக்கவேண்டியதில்லை.

கணவனுடைய நன்மையை விரும்பினவளாயும் நல்லொழுக்க முடையவளாயும் இருந்த மனைவி, பிணியுள்ளவளானால் வேறு விவாகஞ்செய்ய விரும்பினவன், அந்த மனைவியின் அனுமதிபெற்றுக் கொண்டு அவ்வாறு செய்க. அவளை யொருபோதும் அவமதிக்கக் கூடாது என்று மனு கூறியிருக்கிறார்.

முக்கிய குறிப்புகள்

விவாகத்தில் பாணிக்கிரகணம் முதலிய மந்திரங்கள் கன்னியாப் பெண் விவாகத்திற்கு மாத்திரமேயாம்.

பாணிக்கிரகண மந்திரஞ்சொல்லி விவாகஞ் செய்துக் கொண்டாற்றான், தருமபத்தினியாவள். அதிலும் தீவலஞ்செய்யும்போது மனைவியை ஏழடி வைக்கச்செய்து அம்மி மிதிக்கிற மந்திரத்தைக் கணவன் சொல்லுகிறதினால், அந்தத் தருமபத்தினியின் பெருமை அறியத்தக்கதா யிருக்கிறது.

பிராமணனுக்குப் பிராமம் முதல் காந்தருவம் வரையில் கிரமமாக ஆறும், க்ஷத்திரியனுக்கு ஆசுரம்முதல் பைசாசம்வரையில் நான்கும், வைசிய சூத்திரர்களுக்கு மேற்சொன்ன நான்கில் இராக்கதம் நீங்கலான மூன்றும் தருமத்தைக் கொடுக்கத்தக்க விவாகமென்றறிய வேண்டியது.

இதுவரையினுஞ் சொல்லிவந்த விவாக விதிகளே முக்கியமானவைகள்; இவ்விதிகளைக் கடந்தும், தேசாசார காலாசார மதாசார ஜாதியாசார அனுட்டானமாக அநேகவகையால் சில விதியுத்தமாகவேயும் நடந்து வருகின்றன. அது பெரும்பாலும் இந்து மதமல்லாத புறமதங்களிலேயே காணப்படுகின்றது. இது எம் மதத்தார்க்குமாத்திரமே சிறந்தவையான அவசியங்களைத் தொகுத்தும், அனாவசியமானவைகளை விடுத்தும் கூறநேர்ந்தது. புனர்விவாக

விஷயங்களையும், மிருதிசாரங்களையும், முற்றும் விரிக்கப்புகின் சற்று மிந்நூல் தரிக்கப் பெறுமையால் இவ்வளவிற்றனே விடுத்து குல தருமங்களை ஒருவாறு கூறுகின்றேம்.

குல தருமம்

கருப்பதான மந்திரத்தினலும், சீமந்த ஓமத்தினலும் - சாத கன்மம் - நாமகரணம் - அன்னப்ராசனம் - சௌளம் - உபநயனம் ஆகிய இவைகளினலும் சம்போகஞ் செய்யக்கூடாத தினத்தில் தவறிச்செய்ததா லுண்டாகும் தோடமும், தாயினது கருப்பத்தி லிருந்ததா லுண்டாகும் தோடமும் நீங்குகின்றன. அன்றியும், வேதமோதலினலும், கொல்லாமையும் புலாலுண்ணுமையுமாகிய இவ்விரதங்களைக் கைக்கொண்டிருப்பதினலும், ஔபாசன ஓமங்களி னலும், தேவ இருடி பிதுர்தருப்பணத்தினலும் பஞ்சமா எக்கியத்தி னலும் நமது ஆன்மா மோட்சத்திற் குரியதாகின்றது.

சாதக கன்மம்

பிறந்த மகவினுடைய கொப்பூழ்க்கொடி அறுப்பதற்கு முன்னர் சாதகன்ம சம்ஸ்காரம் செய்யவேண்டும். அக்காலை அந்தக் குழந் தைக்கு நெய் தேன் இவற்றில் தங்கத்தை மந்திரத்தோடிழைத்து நாவினில் தடவவேண்டியது. அக்குழந்தை பிறந்த பத்தாவது அல் லது பன்னிரண்டாவது தினத்தில் புண்ணியதிதியில் சுபமூகூர்த்தத் தில் நல்ல நட்சத்திரத்தில் தக்க நாமகரணஞ் செய்க.

நாம கரணம்

அங்ஙனம் நாமகரணமிடுங் காலத்து, பிராமணனுக்கு மங் களத்தையும் க்ஷத்திரியனுக்குப் பலத்தையும், வைசியனுக்குப் பொரு ளையும், சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டும்படியான பெயரை யிடவேண்டியது. பிராமணனுக்குச் சன்மனெனவும், க்ஷத் திரியனுக்கு வன்மனெனவும், வைசியனுக்கு குத்தனெனவும் தத்த னெனவும், சூத்திரனுக்குத் தாசனெனவும் தொடர்பெயராக இடவேண்டியது. பெண்களுக்கு நாமகரணமிடும்போது, அழகு, மங்களமாயும் தீர்க்காக்கரத்தை (நெட்டெழுத்து) யுடையதாயும், அன்னியராற் சுகமாகக் கூப்பிடுவதாயும் ஆசீர்வாதத்தைத் தருவ தாயும் இடவும்.

அன்னப்பிராசனம் முதலியவை

குழந்தை பிறந்த நான்காம் மாதத்தில், அதனை வீட்டினின்றும் வெளியிற் கொண்டுவந்து சூரியனுக்குக் காட்டல் வேண்டும். ஆறும் மாதத்தில் அன்னப்பிராசனம் நடத்தல் வேண்டும். பிறந்த முதல் வருடத்திலாவது, மூன்றும் வருடத்திலாவது வேதத்திற் கூறியுள்ள வாறு சௌளகன்மஞ் செய்தல்வேண்டும். ஐந்தாவது வயதில் கல்வியையும், ஏழாவது வயதில் தனுர்வித்தையும் பயிற்றல்வேண்டும்.

உபநயனம்

நூற்கப்பட்ட மூப்புரியையுடைய இழைகள்கூடி, இடது தோளின்மேலிருந்து வலதுதோளின் கீழ்த் தொங்கத்தக்க பூணூலைப் பிராமணன் பருத்த நூலினாலும் க்ஷத்திரியன் பட்டுநூலினாலும் வைசியன் வேறு நூலினாலும் தரிக்கக்கடவன். மேற்கூறியவை கிடையாவழி பூணூல் ஆடையினாலாயினும், ஆடை கிடையாவழி மூன்றிழை நூலினாலாயினும் தரித்துக்கொள்ளலா மென்பது பராசரம். மணம்புரியாதவர்கள் ஓர் சூத்திரத்தையும் மணம் புரிந்தவர்கள் இரண்டு சூத்திரத்தையுந் தரித்தல் வழக்கு. ஆடைபங்கப் பிராயச் சித்தார்த்தமாக மற்றொன்று சேர்த்து மூன்றுமுடி தரித்தலும் வழங்குகின்றது. மூத்திர புரீடங்களைச் சுழிக்குங்காலத்தில் மாலையாகத் தொங்குகின்ற பூணூலை முதுகின்புறமாக விடல்வேண்டும். ஒரே ஆடையுடையவனுக யிருக்கிறவன் பூணூலை வலது செவியிற் சுற்றல்வேண்டும்.

இருபிறப்பாளர்கள் உத்திரியத்தையேனும் பூணூலையேனும் இடது தோள்மேலும் வலதுகையின் கீழும் போட்டுக்கொண்டால் உபவீதமென்றும், வலது தோள்மேலும் இடதுகையின் கீழும் போட்டுக்கொண்டால் பிரசியினவீதமென்றும் கண்டத்து மாலையாகப் போட்டுக்கொண்டால் நிவீதமென்றுஞ் சொல்லப்படுகின்றது. மூன்று வருணப் பிரமசாரிகளும் தங்கள் பூணூல் அபரிசுத்தமாயினும் அல்லது பின்னமாகப் போயினும் தண்ணீரிற் புதைத்துவிட்டுப் புதிதாய் மந்திரங்கூறித் தரிக்கவேண்டியது.

சௌள கன்மம்

குடுமி பூணூல் இல்லாமற்செய்யும் ஸ்ரௌத ஸ்மார்த்த கருமங்கள் வீணாகுமென்று பிருகுசொன்னர். குடுமியை முடிந்துகொண்டவனுக்குச் சந்திக்கிரமத்தை ஆசரித்தல்வேண்டும். குடுமியைப் பற்றக்

கூடுதல் தருமவிரோதமென அறிக; அங்ஙனம் செய்து வருபவர் வேதவைதிக தேவேடர்கள்போலும்; குடுமி வைத்தலாகிய சவுன கன்மம் பிள்ளை பிறந்த மூன்றும் ஆண்டிலும், ஐந்தாம் ஆண்டிலும் செய்யத்தக்கது.

பிராமணனுக்கு எட்டாவது வயதிலும், வைசியனுக்குப் பன்னிரண்டாவது வயதிலும் உபநயன கருமம் நடத்தல்வேண்டும். உபநயனம் இரண்டாம் பக்கமாகச் செய்யுமிடத்து, பிராமணன் பதினாறுவயது வரையிலும், க்ஷத்திரியன் இருபத்திரண்டு வயது வரையிலும், வைசியன் இருபத்துநான்கு வயதுவரையிலும் செய்து கொள்ளலாகும். ஆகவே, இதனைக்கடந்து மூன்று வருணத்தாரும் உபநயனம் செய்துகொள்ளுவரேல், அவர்கள் காயத்திரி மந்திரத்தினின்று நீக்கினவர்களாயும், விராத்தியரென்னும் பெயருள்ளவர்களாயும், பெரியோரால் வைதிக காரியங்களினின்று நீக்கப்பட்டவர்களாயு மெண்ணப்படுகிறார்கள். இங்ஙனமுள்ளவர்களுக்கு வேதம் சொல்லிவைக்கவும் அவர்களிடத்துப் பெண் வாங்கவும் கூடாது.

கருப்பதானம் - புமிசவனம் - சீமந்தம் - சாதகன்மம் - நாமகரணம் - உபநிஷ்கிரமணம் - அன்னப்பிராசனம் - சௌளம் - உபநயனம் - மகாநாமியம் - மகாவிரதம் - உபநிஷத்து - சோபனம் - உத்துவகனம் - மிருதி என பதினெட்டு இதனோடு யசன யாசன அத்தியயன தான பிரதிக்கிரக மென்பவற்றையும் சேர்த்து இருபத்து நான்காக கொள்ளுவதுமுண்டு. இஃது உத்தம பிராமண விதியாம்.

இலௌகீக வைதிக பரமசாதனமாயுள்ள கல்லொழுக்கம்

முன்னர்க் கிரகத்தாசிரமத்திற்கு வேண்டிய கன்னிகா மங்கலியதாரண விதியையும், பின்னர்க் கன்னிகையோடு கூடி வாழுங்கால் அத்தியாவசியமாய் நடத்தவேண்டிய குல தருமத்தையும் ஒருவாறு கூறினேம்; அவ்வாறு இல்லற நெறியைக் கடைபிடித்த காலையில் இலௌகிக வைதிகானுகூலமாக நடந்துகொள்ளவேண்டிய நீதியைச் சிறிது கூறத்தொடங்குகிறோம்.

உலகில் தேகாதிகாரியாய் சீவிக்கவேண்டிய ஒருவன் சார்பாலுஞ் சேர்க்கையாலும் வயதாலும் வாழ்க்கையாலும் தொழிலாலும் செய்கையாலும் வாக்காலும் பரிசுத்தனுய் யாதொரு தீமையுள்ளும்

தலைப்படாது தர்மார்த்தனுய் வாழவேண்டியதாகலின் வேதாகமாதி சாத்திரோபதேச சகிதமாக ஆன்றோரால் அனுமதிக்கப்பட்டது நீதியேயாம். அவற்றை அவமதித்தோர் தீரா நரகை அடைவ ராதலால், யாவரும் கவனிக்கவேண்டியது நீதியேயாம். அவை யாவை எனில்:—

மாதா பிதா குரு தெய்வம் அந்தணர் பசு அக்கினி சித்தி பெற் றோர் கற்றவர் வயதாலும் குணத்தாலும் நிறைந்த பெரியோர் முதலியோர்களைப் பூசிக்கவேண்டும்; முக்காலங்களிலும் சந்தியை வணங்க வேண்டும்.

சுசியான வத்திரம் சுகபோசனம் சுகநித்திரை சந்தோடமான மனசு மிருதுவான நடை இனிய வசனம் கோபமில்லாமை தன் னேத்தான் தண்டித்தல் வறுமையிலும் தைரியம் ஈசுரபத்தி முதலிய பரம நிரவியங்களை ஒரு இமையளவும் விடாது உடலுக்குக் கண் ணெப்படியோ, அதைப்போல இவைகளை மனதுக்குக் கண்ணுக வைத்திருக்கவேண்டும்.

சாத்திரவிசாரணை சாதுசங்கப்பழக்கம் ஆலயசேவை அடியார் பத்தி உயிர்கள்மீதுஅன்பு குடும்பவொற்றுமை சகோதரவாஞ்சை நம்பினோரைக் காத்தல் தன்னைப்போல் பிறரை மதித்தல் முதலிய குணங்களை உயிர்போல மதித்தல்வேண்டும்.

பொய் - கள்குடித்தல் - சூதாடல் - பிறர்மனையாளை இச்சித்தல் - புறங்கூறல் - உயிர்வதைசெய்தல் - சொன்னசொல்லை மறத்தல் - கற் றதை மறத்தல் - அடுத்தோரைக் கெடுத்தல் - பேருண்டி - சோம்பல் மிகுதியில் இவைகளில் ஒன்றையுடையவனுனும் அவனது மூன்று தலைமுறையும் நரகலோகத்தை அடைந்து வருந்துமாதலால், அவை களை விடம்போல நினைத்து விடவேண்டும்.

பகையை விரும்பல், துட்டவாகன மேறுதல், தூஷிப்போன், மந்தன் - பித்தன், பலரோடு பகைகொண்டவன், பாவி, நயவஞ்ச கன், கோபமுள்ளவன், இரக்கமில்லாதவன், விபசாரியையுந் தன் மனைவி யல்லாளையுஞ் சேர்பவன், அற்பன், அங்கசுசியற்றவன், அழுக்காடையுடையோன் இவர்களைச் சிநேகித்தல் இவைகளெல்லாம் பாமர சொரூபமானதால் இம்மையிலும் மறுமையிலும் பயனற்றவ ராகின்றூர்கள்.

தனிவழி போகக்கூடாது : வெள்ளத்திற் கெதிரே நீந்தலாகாது; அக்கினிபட்ட வீட்டில் நுழைவதும், மரத்திலுனியி லேறுவதும், பல்லிக் கடிப்பதும், மூக்கைத்தூக்கி யிழுப்பதையும் தவிர்க்கவும்.

வாயைமூடாமல் கொட்டாவி விடுவதும், பெருமூச்சிடுவதும், தாண்டுவதும், இரைச்சலிட்டுச் சிரிப்பதும், பிறரறியும்படி அபான வாயுவை விடுவதும், மீசையைக்கடிப்பதும், உதட்டைக் கசக்குவதும், கீழ்க்கண் பார்த்தலும், கண்சிமிட்டல் முதலியதுஞ் சிறிதுஞ் செய்யாதொழியக்கடவர்.

அசுத்தமூர், அயோக்கியமான எளிமையும், அம்மணமான ஸ்திரீகளையும், உதய அத்தமன காலத்துச் சூரியனையும், ஒருசீவனை இமிசித்தலையும், விகார ரூபங்களையும் பார்க்கப்படாது.

நீர்ச்சுழி, சவத்தைப் பூசிக்குமிடம், பூசிக்கும் வருடம், மயானம், உத்தியானவனம், கெட்டப் பெண்களிருக்குமிடம், குடியர் துட்டர்களிருக்குமிடம் முதலிய விடங்களிலெக்காலும் நெருங்கக் கூடாது.

பெண்கள் நடக்குங்காற்று, சுடலைப்புகை, மேகயிடி, அசுத்தநீர் இவைகள் படும்படி கொள்ளப்படாது.

பூசிக்கத்தக்கவர், தேவர், பிராமணர், ஆசாரியர், எசமான் இவர்கள் நிழலில் எப்போதும் நடக்கப்படாது.

மயிர், எலும்பு, முள்ளு, அசுத்தர் சாம்பல் இவற்றைத் தூரத் தில்விட்டு ஒதுங்கிப் போகவேண்டும்.

கொடிய விடசெந்துக்கள், மிருகங்கள், யுத்தசமூகம், பாழ்வீடு, ஆற்றுப்பெருக்கு இவைகளினெதிரில் தூங்கல், உட்காரல், நின்றிருத்தல் முதலிய காரியங்களைச் செய்யப்படாது.

காலாலும், பல்லாலும், கொம்பாலும், பாய்ச்சலாலும், பறத்தலாலும், துன்பஞ்செய்யும் பட்சி மிருகங்களையும், பனி, எதிர்காற்று, வெயில் இவைகளையும் அணுகக்கூடாது.

அம்மணமாயும், அழுக்காடையாயும், உன்மத்தமாயும் குளித்தல், பூசித்தல், தூங்கல், ஆசமனம் முதலிய கிரியைகள் செய்தல், பெரியோர் முன் போதல் முதலிய தகாத காரியங்களைச் செய்தலாகாது; இப்படியே ஒற்றை வத்திரத்தோடிருந்தும் செய்யக் கூடாது.

குழந்தை, பெண், தெய்வம், ஈசமான், உபாத்தியாயர், மாந்திரிகன், வித்துவான், அரசன், பசு, யானை, ஆட்டன், பெரியோர் இவர்களிடத்தில் பகை கொள்ளலாகாது.

பிறர்வாழ்க்கையில் சந்தோஷமும், பகைவரிடத்தில் மரியாதையும், உத்தியோகத்தில் மதிப்பும், இராஜாங்கத்தில் அபிமானமும், சுயகாரியத்தில் சாக்கிரதையும், ஆழ்ந்தயோசனையும், எண்ணிச் செய்யுஞ் செய்கையும், ஒருவனுக்கிருக்குமானால் எல்லா விரதங்களிலும் சிறந்த தருமவானுவான்.

முழுகியவுடனே கையினுலுடம்பைத் துடைக்காமல் வத்திரத்தினுல் துடைக்கவேண்டும்; பிறர்மேல் நீர்தெரிக்கும்படி உதறலாகாது; தனது பாகத்தை மற்றொரு பாகத்தால் மிதித்திருக்கக் கூடாது; ஆலயம் பெரியோர் முதலியவற்றை வலமாகச் சுற்ற வேண்டுமேயல்லாமல், இடஞ்சுற்றிப் போகக்கூடாது.

சூரியன், சந்திரன், அக்கினி, காற்று, தீபம், சலம், பெரியோர், கடவுள், கோயில், வழி இவைகளின் மூன்பு எச்சில் - மலம் - சலம் - தம்பலம் - சையோகம் - அம்மணம் முதலியவற்றைச் செய்யக் கூடாது.

நின்றபடி சலம்விடுதல், சாதத்தைச்சிந்தல், பூசையில்லாமல் உண்ணல், கையூன்றியுண்ணல், ஒரெறும்புக்கேனும் விருந்தின்றியுண்ணல், கோழை மலமூத்திரம் தம்பலம் முதலியவற்றை மிதித்து நடத்தல் ஆகிய இவை ஸ்திரீயத்தியைச் செய்த பாதகத்தில் சேர்க்கும்.

பெண்களையும் பெரியோர்களையும் சாத்திரங்களையும் அவமதித்தல், அன்னத்தைப் பழித்தல், வெறுத்துப்பேசல் முதலிய குணத்தை உடையவரிடத்தில் மூதேவி குடிகொண்டு அவர்களை மிகக் கட்டப் படுத்துவள்.

வெளியிற் போகும்போது, மனிஷிமக்களை மகிழ்ச்சியாக இருக்கச்செய்து, தெய்வம், புட்பம், இரத்தினம், பெரியோர் இவற்றிலொன்றைப் பூசித்துப் போகவேண்டும்.

மெலிந்தோருக்கு அனுகூலஞ் செய்தல், விகாதப்பட்டவரைச் சமாதானப் படுத்தல், அதிதிகளை உபசரித்தல், விருத்தினரைக் கொண்டாடல், சுதேசசேஷமத்தை அனுசரித்தல், பயந்தவர்களைத்

தேற்றுதல், வித்தை விவேகம்- நல்லொழுக்கம் - நம்பிக்கை - நயம் இவைகளை யுடையவனுயிருத்தல், காம குரோத லோபாதிகளுக் குட்படாதிருத்தல், மனமடக்கல் முதலியவைகளை எவனுடையவனை அவன் மோட்சபதவியைச் சொந்தமாகக் கொள்ளுகிறன்.

வெளியிற் போகும்போது குடை - தடி - பாதரட்சை - உத்தரியம் முதலியவற்றோடு ஒருபுறமாய் - மெதுவாய் செம்படவன் வலை வீசிய அளவுக்கு கவனித்துப் பார்த்துக்கொண்டு போகவேண்டும்.

இவ்வித ஆசாரங்களில் எவனொருவன் தவறுபடாதிருக்கின்றனை அவன் இம்மை மறுமை யின்பத்தைக் கொள்ளுவதோடு கீர்த்தியும் புகழும்பெற்று, உலகிற் பிரசித்தனுகிறன்; ஆனதால், அவன் உலகிற்குத் தாய் தந்தை முதலிய பந்துவாகக் கொள்ளப்படுகிறன். ஆகையால், அத்தியாவசியம் ஒவ்வொரு மனிதனும் இவ்விதிகளைக் கைக்கொள்ள வேண்டும்.

வியாதி அனுகாவிதி

உலகில் தேகத்தைப் பெற்றபொழுதே பிணி, பசி, காமாதி, துக்கங்கள் உளதாதலானும், உண்பன அளவற்ற காலத்தில் நோய்க்கு உரித்தலானும், ஒவ்வொருவரும் உண்பன உறுவனவைகளில் அளவுபட அனுட்டிக்கவேண்டும்; அந்த அளவைக் கிரமமாக வைத்தற்கென்றே ஆயுள்வேதம் தனுர்வேதம் முதலியவை ஏற்பட்டுள்ளன. அவற்றுள் அவிழ்தங்களைக் கொண்டும், சிலம்பம் மல்ல யுத்தாதி சாதனங்களைக் கொண்டும், அருந்தல் பொருந்தலாகியவைகளைக் கொண்டும், அளவுபடுத்தலாம்; அவை யளவுறப்பட்டிருப்பினும், முதற்கண் எளிதாக விளங்கப்படுவன அருந்தல் பொருந்தல்களே ஆனமையான், இங்ஙனம் அவற்றின் சில முக்கிய விதிகளை மாத்திரம் கூறுவாம்.

வியாதியால்வரும் கேடு

ஒருவனுக்கு வியாதி சம்பவித்தால் உடனே அவன் தேகம் கெடும்; கெடவே, விந்துகெடும் விந்துகெடவே, சந்ததிகெடும்; அதனல் குடும்பக்காப்பு கெடும்; பின்னர் தொழில், ஆசாரம் முதலியவை கெட்டு, சோம்பல், வறுமை, குடும்பக்கலகம் முதலிய அநேக இடையூறுண்டாய்ப் பாதைப்பட்டுப் பலவகையிலும் துக்கமாகும். ஆனதால், விவேகிகள் நோயில்லா வாழ்வைக் கைக்கொள்க.

வியாதிவருவதற்குக் காரணம்

முனிவர் சாபத்தாலும், முறையீடாலும், செய்கைத் தவறுதலும், காலபேதத்தாலும், இடமாறுதலாலும், உண்டி தவறுதலும், பிறர் மனதை வருத்துவதாலும், தேகத்தை வெறுப்பதாலும், பழவினை சம்பந்தத்தாலும், தாய் தந்தையர்களின் சம்போகத் தவறுதலும், பெரியோர்களையும் மாதரையும் அவமதிப்பதாலும், ஓரம்போசலாலும், பாவமான காரியங்களைச் செய்வதாலும், தெய்வ தூடணையாலும், பேயாலும், தருமகாரியங்களைக் கெடுத்தலாலும், இழிதொழிலாலுமே வியாதி சம்பவித்துத் தேகத்தையும் குலத்தையும் கெடுக்கின்றது. அது யாவருக்கும் மனப்பூர்வகமான பிரத்தியட்சந்தானே! இவற்றுள் தனது அருந்தல், பொருந்தல் முதலிய பாவமில்லா வீழியிற் கிடைத்த வியாதிகளை அவிழ்த்தத்தாலும், இப்பிறப்பில் பாவசம்பந்தமாக உண்டாகும் வியாதிகளையும், செய்கை யாதிகளால் உண்டாகும் வியாதிகளையும், ஆசார அனுட்டானம் ஈசுரபத்தி பெரியோரைப் பணிதல் தருமகாரிய மியற்றல் இவற்றாலும், பழவினை சம்பந்தமாகக் கிடத்ததை தருமயாகாதி யோக ஞானங்களாலும் நீக்கலாமேயல்லது, வேறு வழியால் ஒருகாலும் நீக்கலாகா. பூர்வவினையினால் மாபாதக சம்பந்தமாகக் கிடைத்த வியாதியானால் எந்த விதத்தாலுந் தீரவே தீராது; ஆனதுபற்றி, இனிவரும் பிறவியின் சுகத்துக்காகவே நல்வழியினின்று ஈசுரனைத் தியானிக்கவேண்டு மென்று வேதத்துள்ளே கூறப்பட்டிருக்கிறது.

தானே தேடிக்கொள்ளும் வியாதிகளுக்கு முக்கிய காரணங்கள்

மலசல மடக்கல், அகாலபோசனம், பேருண்டி, மிகுதுயில், கடுஞ்சினம், விந்துநாசம், அசுத்தசலபானம், அசுத்தவாசம், பகற் புணர்ச்சி, பழங் கறிவகைகளைப் புசித்தல், இடந்தவறுதல், கடும்பனி வெயில் மழைகளில் போதல், காரப் பதார்த்தங்களையும்; விரைவில் சீரணமாகாத பதார்த்தங்களையும்; ஊழுங்கு மீன் கருவாடு ஆமை முத லியவைகளையும் மிகுதியாகப் புசித்தல், கடுந்தொழில் புரிதல், பட படத்தோடல், அழுக்காடைத் தரித்தல், கள் அபினி கஞ்சா மாசனம் மதத்து செண்டு புகை இவைகளை அனுசரித்தல், மனோவியாகுலம், மனதிற்கு அதிக சிரத்தையைக் கொடுத்தல், அழுதல், வேலையில் கோம்பலாயிருத்தல், சுசியின்மை, அதிக நடை, நெடுநேரம் பேசல்,

மூச்சை அதிகமாக விடுதல், மனத்தயக்கம், பயப்படுதல், இரவில் நெடுநேரம் விழித்திருத்தல், சதா அவிடத முண்ணல், மூத்தவள் புணர்ச்சி முதலியவைகளே மூக்கிய காரணம்.

வியாதி அணுகா வகை

ஆனதால், தர்மகாரியங்களேயும் பெரியோரையும் வழிப்பட்டு தரும நெறியிலேயே மனதைச் செலுத்தி, முன்தீவினையை ஒழிப்ப தோடு இப்பிறவியையுஞ் சுகப்படுத்தி, திருவருளே யடையவேண்டும். யார் தனக்குடன்பாடல்லாத விஷயத்தில் தலைப்பட்டு குறை கூறு கிறானே அவன் அவசியங் குற்றமுடையவனுகின்றான். ஆனதால், தன் குற்றங்களைக் களையவேண்டுவதே தருமமாகு மென்பதை யோசிப்பது மோட்ச சித்தியாம்.

மனிதராகப் பிறந்தோர் விடியலுக்குமுன் எழுந்து மலசலங் களைக் கழித்தல், காலைதானம் காலைபோசனம் சமயத்திரை மனை தையம் சோம்பலின்மை கைத்தொழில் மனைசாந்தம் நித்தியா னுட்டானம் தேவதாபத்தி முதலியவைகளே அனுசரித்தல் முக்கிய மான வியாதி அணுகா விதியாம்; பதினெண் சித்தர்களில் மகத்துவ முற்ற தேரையர் என்பவர் கூறியுள்ள பாடல்கள் வருமாறு.

விருத்தம்

"பாலுண்போ மெண்ணெய்பெறின் வெந்நீரிற் குளிப்போம்
பகற்புணரோம் பகற்றுயிலோம் பயோதரமு மூத்த
ஏலஞ்சேர் குழலியரோ டிளவெயிலும் விரும்போ
மிரண்டடக்கோ மொன்றைவிடோ மிடதுகையிற் படுப்போம்
மூலஞ்சேர் கரிநுகரோம் மூத்ததயி ருண்போ
முதனளிற் சமைத்தகரி யமுதெனினு மருந்தோம்
ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணேம்
நமனுர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

"உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணேம்
உறங்குவதி ராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்
வாழையிளம் பிஞ்சொழியக் கனியருந்தல் செய்யோம்
பெண்கடமைத் திங்களுக்கோர் காலமன்றி மருவோம்
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்துநீ ரருந்தோம்
நண்புபெற வுண்டபின்பு குறுநடைங் கொள்வோம்
நமனுர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

"ஆறுதிங்கட் கொருதடவை வமனமருந் தமில்வோம்
அடரிநான்கு மதிக்கொருகாற் பேதியுரை நுகர்வோம்
தேறுமதி யொன்றரைக்கோர் தாநசியம் பெறுவோம்
திங்களரைக் கிரண்டுதரஞ் சவளம்விருப் புறுவோம்
வீறுசதுர் நாட்கொருகா னெய்முழுக்கைத் தவிரோம்
விழிகளுக்கஞ் சனமூன்று நாட்கொருகா லிடுவோம்
நாறுகந்தம் புட்பமிவை நடுநிசியின் முகரோம்
நமனுர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

"பகத்தொழுக்கு மாதரசங் கரந்துடப்ப மிவைதூட்
படநெருங்கோந் தீபமைந்தர் மரனிழலில் வசியோம்
சுகபுணர்ச்சி யசனபச னத்தருணஞ் செய்யோம்
துஞ்சலுண விருமலஞ்சை யோகமழுக் காடை
வகுப்பெடுக்கிற் சிந்துகச மிவைமாலை விடுப்போம்
வற்சலந்தெய் வம்பிதுர்ச்சற் குருவைவிட மாட்டோம்
நகச்சலமு மூளைச்சலமுந் தெறிக்குமிட மணுகோம்
நமனுர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

நேரிசை வெண்பா

"திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமற்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல்—உண்ணுங்கால்
நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்புருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமோ பிணி."

பசும்பாலையே யுண்பதன்றி மேதி (எருமை)ப்பாலைக் கனவிலும் நினையோம். எண்ணெய் இட்டுக்கொள்ளில், வெந்நீரில் ஸ்நானஞ் செய்வோம். இரவிக்கொப்பாகிய இளம்பருவ மின்னுர்கள் இலவசத்தில் இசைந்தாலும் பகலில் புணர்ச்சி செய்யமாட்டோம். பகலில் நித்திரையும் செய்யமாட்டோம். தன் வயதுக்கு மேற்பட்ட மாதரையும் இளவெய்யிலையும் இச்சிக்கமாட்டோம். மலஜலங்கள் அடக்கமாட்டோம். இந்திரியத்தை அதிகமாக விடுக்கமாட்டோம். எப்பொழுதும் இடதுகையைக் கீழாகவைத்துப் படுப்போம். கிழங்கு சேர்த்துச் சமைத்த பதார்த்தங்களை அதிகமாகப் புசிக்கமாட்டோம். அமுதத்திற் கொப்பாயிருந்தாலும் முன்னாளில் சமைத்த கரியைப் புசிக்க மாட்டோம். பசித்தாலல்லது சாப்பிடமாட்டோம்.

ஒரு தினத்திற்கு இரண்டுமுறையே யன்றி மூன்றுமுறை புசிக்கமாட்டோம். புசித்தவுடன் நித்திரை செய்வது நன்மையென்று சயன சாத்திரத்தில் சொல்லியிருந்தாலும் அப்படி பகலில்

நித்திரை செய்யமாட்டோம். பெண்களை மாதத்திற்கு ஒரேமுறை புணர்வோம். மிகுந்த தாகமாயினும் போசனம்செய்த முடிவில்தான் சலமருந்துவோம். கருணைக்கிழங்கு தவிர மற்ற கிழங்குகளைப் புசியோம். வாழையின் இளங்கச்சலொழிய மூற்றிய காயையும் பழத்தையும் தின்னமாட்டோம். அன்னம் புசித்தவுடன் ஒரு நடையாக அரையே அரிக்கால் நாழிகை உலாவினு லொழிய எத்தொழிற்கும் புகமாட்டோம்.

ஆறுமாதத்திற் கொருமுறை வாந்திமருந்துண்போம். நான்கு மாதத்திற் கொருமுறை பேதி மருந்துண்போம். ஒன்றரை மாதத்திற் கொருமுறை மூக்கில் நசியம் செய்துக்கொள்வோம். மாதத்திற்கு நான்குமுறை சவரஞ்செய்துக் கொள்ளுவோம். நான்கு தினத்திற் கொருமுறை அப்பியங்க ஸ்நானம்செய்வோம். மூன்று நாட்கொருமுறை கண்களுக்கு மையிட்டுக்கொள்வோம். கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களையும் புட்பங்களையும் நடுராத்திரியில் முகரமாட்டோம்.

பூப்பான ஸ்திரீ நடக்கும்போது பறக்கும் தூசியும், ஆடு, கழுதை, துடப்பம் இவைகளாலுண்டாகும் தூசியும் மேலே படும்படி நெருங்கமாட்டோம். இரவில் தீபநிழலிலும் மனிதர் நிழலிலும் விருட்சநிழலிலும் தங்கமாட்டோம். போசனம் சீரணமான பிறகுதான் புணர்ச்சி செய்வோம். மலசலம், அழுக்காடை, சீப்பிட்டு வாரிய அழுக்கு இவைகளை மாலைக்காலத்தில் நீக்குவோம். தன்னுலாதரிக்கும் பசுவையும், தெய்வத்தையும், பிதுர்களையும், ஆசாரியரையும் மாலைக்காலத்தில் பூசிப்போம். நகச்சலமும் சிகைச்சலமும் தெரிக்குமிடத்தில் நெருங்கோம். ஆதலால் நோயை முன்குறிப்பிட்டும் பின்னுல் தொடரும் எமனுக்கு நாமிருக்குமிடத்தில் என்ன வேலை யிருக்கிறது? ஒன்றுமில்லையே! என்பதாம் மேற்காட்டிய தேரையர் செய்யுளுக்கு கருத்து.

மலசலத்தை அடக்காமலும் விந்துவை அதிகமாக விடாமலும் உண்ணுமிடத்து நீரைக்காய்ச்சி மோரையளாவி நெய்யை உருக்கி உண்ணலும் ஆகிய இத்தன்மையுள்ளவர்களின் நாடித்தை உச்சரித்தலுமே பிணிவிலகும் என்று கூறியிருக்கின்றபடி எமனுக்கு நம்மைப் பற்றியே வேலையின்றி திருவருள் சகாயத்தை யடைவோம். இது வேதாகிகள் சம்மதமான பிரமாணம். இவ்வரிய விஷயங்களைத்

தவருகக் கொள்ளுவோர் நரகவேதனை அடைவாரென்பதை நாம் கூறவேண்டியது அநாவசியம்.

அன்றி, இவ்விதி தேகோற்பவம் முதல் மரணாந்தமாயுள்ள நோய் நோயினிலக்கண முதலியவற்றை இங்கே கூறவேண்டுவது அநாவசியமும் அளப்பரியசாத்திர வாசமும் ஆதலால், அதை நிறுத்திப் பரமசாதனமாயுள்ள பிரேதசன்ம மடைவாரைப்பற்றிக் கூறத் தொடங்குகின்றேம்.

பிரேதசன்ம மடைவோர்

பூர்வசன்மத்தில் மாபாவம் செய்தவனே பிரேதசன்மம் அடைவான். ஒருவன் கிணறும், நடைவாவியும், குளமும், பூஞ்சோலையும், தண்ணீர்ப்பந்தலும், சத்திரமும், தேவாலயமும் உண்டாக்கிப் பலருக்கும் உபயோகமாய்த் தருமம்செய்ய, அவனுடைய குலத்தில் தோன்றிய ஒருவன் பின்பு அவற்றை விலைக்குவிற்பானுபின் அவன் மரித்தவுடனே பிரேதசன்மம் அடைவான்; செய்தவன் தானே அவற்றை விற்பானேனும் அவனும் பிரேதசன்மம் பெறுவான்.

பிறர் பூமியை அபகரித்தவனும், கிராமத்தின் எல்லையையும் பூங்காவின் எல்லையையும் ஆரணிபத்தின் எல்லையையும் மாற்றித் தன்னிலத்தோடு சேர்த்துக் கொண்டவனும், குளத்தைத் தூர்த்து நிலம் சேர்த்தவனும், சண்டாளனுல் அடிப்பட்டிறந்தவனும், சலத்தில் மாய்ந்தவனும், பாம்பேனும் நாயேனும் கடித்து மறித்தவனும், இடிவிழுந்து மாண்டவனும், நெருப்பில் தஞ்சினவனும், மாடுமுட்டி மரித்தவனும், கழுத்தில் சுருக்கிட்டு நான்று மாண்டவனும், விடம் தின்று உயிர்துறந்தவனும், ஆயுதத்தால் மாய்ந்தவனும், சமத்காரம் செய்யத் தன்குலத்தில் ஒருவனும் இல்லாமல் இறந்தவனும், தேசாந்திரங்களில் ஒருவனும் அறியாமல் தஞ்சினவனும், குஷ்டமுதலிய ரோகங்களால் இறந்தவனும், கிருடனுல் மாய்ந்தவனும், விருஷோற்சர்க்கம் செய்யாமல் மாண்டவனும், தாய் தந்தையருக்குச் சிரார்த்தம் செய்யாமலிருந்து இறந்தவனும் பிரேத சன்மம் அடைவர்.

இறந்த பிராமணனுடைய சமத்காரத்தின்பொருட்டு நெருப்பு, விரட்டி, வைக்கோல், அரிசி முதலியவற்றைச் சுடுகாட்டுக்குச் சூத்திரன் கொண்டு செல்வனேல், இறந்த அப்பிராமணனும் கொண்டு போகும் அச்சூத்திரனும் பிரேதசன்ம மடைவார். இறந்த சூத்திரனுடைய சமத்காரத்தின் பொருட்டு மேற்சொல்லிய நெருப்பு முத

லியவற்றைப் பிராமணன் கொண்டு செல்வானேல், இறந்த அச்சூத் திரனுங் கொண்டுபோகும் அப்பிராமணனும் பிரேதசன்ம மடைவர்.

பருவதத்தினின்று விழுந்து மரித்தவனும், சுவரிடிந்து விழுந்து இறந்தவனும், கட்டிலிலே படுத்திருந்தபடியே துஞ்சினவனும், மேல் வீட்டில் உயிர் நீத்தவனும், இராமகிருட்டினனுதியத் திருநாமங்களை உச்சரியாமல் மரித்தவனும், தூரப்பெண் சண்டாளன் முதலியோரைத்தீண்டி ஸ்நானம் செய்யாமல் சூதகத்தில் இறந்தவனும், பூப்பா யிருக்குமபோது மரித்தவளும் பிரேத சன்மமடைவர்.

தாய், மனைவி, பெண், மருமகள் முதலானவர்களுடைய சரீர தோடத்தைக் கண்ணுற்பாராமலே பிறர் வார்த்தையைக் கேட்டு அவர்களைச் சாதியினீக்கியவனும், மனுநூலுக்கு விரோதமாய்த் தீர்மானம் செய்தவனும், ஜனகிதனுக்குத் துரோகம் செய்தவனும், பிராமணனையும் பசுக்களையும் கொல்பவனும், கட்குடித்தவனும், குரு பத்தினியைக் கூடுபவனும், வெண்பட்டையும் பொன்னையும் திருடின வனும், பிரேதசன்ம மடைவர். பிரேதசன்மம் அடைந்தவரெல்லா ரும் பாலிவனத்தில் எப்போதும் சஞ்சரித்து வருந்துவர்.

மரிக்குங்காலத்தில், சீவனைக் கவருவதற்குக் காலன் நியமிக்கப் பட்டிருக்கிறான். சீவரது பலவிதமான தோடங்களால் அச்சீவர் ஆயுட்குறைந்து மாய்கின்றனர். மரித்தவீட்டில் போசனம் செய் கின்றவனும் பிறன் மனைவியைப் புணர இச்சிக்கின்றவனும், தனக் குத் தகாத இழிதொழிலைப் புரிகின்றவனும், வாணிபழிப்பவனும், இகபரத்திற்கு உறுதியாய் நல்வினை செய்யாதவனும், பெரியோர்க ளைப் பூசியாதவனும், தூய்மை யில்லாதவனும், தெய்வபக்தி யில்லா தவனும், பாவங்களையே செய்கின்றவனும் எமலோகத்தில் எப்போ தும் நரகவாசம் செய்வர்.

பிறன்கேடு சூழ்கின்றவனும், பொய் சொல்லுகின்றவனும், சீவகாருணையில்லாதவனும், சாத்திரப்படி நடவாதவனும், தனக்குரிய கருமத்தைத் தவிர்த்துப் பிறனுக்குரிய கருமத்தைப் புரிகின்றவனும் எமலோகத்தில் வாதனைப்படுவர்.

புண்ணியதீர்த்த மாடாதநாளும், செபஜபங்கள் செய்யாத நிவசமும், தேவதாரானம் செய்யாததினமும், புனிதரை வழிபா டியற்றுத பகலும், சாத்திரமுணராத நாளும் வீணளேயாகும்.

தேகநிலையும் புண்ணியச் செய்கையும்

தேகமோ நிலையற்றது, நிராதரமாயுள்ளது, சுக்கில சோணிதங்களால் உண்டாகியது. அன்னபானாதிகளால் விருத்தியடைவது, காலையில் உண்ட அன்னம் சாயங்காலம் நசிக்கும். உடனே பசிக்கும்; மீண்டும் உண்ணவிடின் மெய்குலையும். ஆதலால், சரீரம் அநித்தியமென்றும், அது கருமத்தால் வருவதென்றும் எண்ணி அது மேன்மை யடையும்பொருட்டு நற்கருமம் செய்தல் வேண்டும்.

கருமத்தால் வந்த தேகத்தை யாருடையதெனலாம்? அதனை வீணே சுமந்து மெலிகின்ற சீவனது எனலாமா? அன்ன வத்திரங் கொடுக்கும் தலிவனது என்னலாமா? கருப்பமுண்டுபண்ணும் தந்தையினது என்னலாமா? பத்துமாதம் சுமந்து பெற்ற தாயினது என்னலாமா? தாயைப்பெற்றவளுகிய மாதாமகனது என்னலாமா? பிதாமகனது என்னலாமா? விலைகொடுத்து அடிமைகொண்டவனது என்னலாமா? சாம்பர் செய்யும் அக்கினியினது என்னலாமா? அல்லது ஈர்த்து அயிலும் நரியினது என்னலாமா? சீவன் போயின பின்பு புழுவாகவும் விட்டையாகவும் சாம்பராகவும் அழியும் சரீரம் ஒருவரதும் அன்று என்னும் முற்றுறுதியை யாவரும் ஓர்ந்து சரீரத்தில் ஆசை வைக்காமல் பகவத் பாகவதாசாரிய கைங்கரியங்களைப் புரிதல்வேண்டும்.

பாவங்கள் மனோவாக்குக் காயங்களால் செய்யப்படுகின்றன. அதிக பாவஞ்செய்த சீவன், நாய் நரி முதலிய இழிந்த சன்மமடையும். அதிகம் செய்யாதவன், பூர்வ சென்மமே பெறுவான். சீவன் கருப்பவாசஞ் செய்யுங்காலை, தாயினுடைய மலமூத்திராதிகளாலே அதிகம் துன்புறுவான். இறத்தலிலும் பிறத்தலில் உளதாமே துன்பத்தையும் கருமகதியையும் எண்ணி நல்லாற்றில் ஒழுகுதல் வேண்டும். தாய் வயிற்றினின்று பிறந்தவன் பாலியத்தில் பேதமையால் தனக்கு உறுதியாயதை அறிகின்றுனிலன்; பௌவனத்தில் மன்மத சேஷ்டையால் அறிகின்றுனிலன்; முதுமைப் பருவத்தில் சோர்வாலும் கிலேசத்தாலும் ஒன்றினையும் உணர்கின்றுனிலன். இங்ஙனமே உறுதியுணராமல் ஒழிவோரே பலருளர்.

கருமத்தாலே சீவன் பிறந்து இறக்கின்றுன். பிறந்து அதிக வயதிராமல் ஐந்து வருடத்திற்குள் மரித்தல் மாபாபத்தினுலென்றறிக. கொடும்பாபம் செய்தவனே பிறந்து உடனே மரித்து

மீண்டும் பிறந்து மரிக்கின்றான். அவன் பிறத்தலுக்கும் இறத்தலுக்கும் கணக்கேயில்லை. பூர்வ சன்மத்தில் நன்னெறியில் ஒழுகித் தான தருமங்கள் செய்த சேதனன் புவியில் தோன்றினால், நெடுங்காலம் மானவி மக்களோடு சுகமாக வாழ்ந்து இறுதியில் நல்லுலகடைவான்.

ஆன்மிகம்

இலௌகிக சிந்தனை

புத்திசாலியானவன் பிராம முகூர்த்தத்தில் விழித்து எழுந்திருந்து மனதினுலே தருமத்தையும், அதனோடு விரோதப்படாத அருத்தத்தையும் சிந்திக்கவேண்டும். இவ்விரண்டிற்கும் யாதொரு விரோதமு முண்டாக்காத காமத்தையும் சிந்திக்கலாம். இவற்றை யிப்படிச் சிந்திப்பதினுலே இம்மை மறுமைகளின் பிரயோசனம் கெடாமலிருக்கும். தரும விரோதங்களான அர்த்தகாமங்களை விட வேண்டும். தருமமானாலும் பின்பு சுகத்தை யுண்டாக்கமாட்டாத தாயும், உலோக விரோதமாயு மிருக்குமானால் அதையும் விடவும்.

காலைக்கடன்

இப்படி சிந்தித்தெழுந்தபின், தன்னிடத்திற்கு நிருதிமூலையிலே அம்புபாயு மவ்வளவுதூரத்திற்கு அப்புறமே போய்ச் சலமாதிகளை விடவேண்டும். வீட்டினிடத்தில் கால் கழுவுதல் முதலானவர்களுக்கு எதிரிலிருந்து மலமூத்திரங்களை விடலாகாது. உழுத நிலத்திலும் - பயிர் நடுவிலும் - பசுக்களிருக்கு மிடத்திலும் - சனசமூகத்திலும் - வழியிலும் - ஆறு முதலானவற்றின் கரைகளிலும், தண்ணீரிலும் - மயானத்திலும் மலமூத்திரங்களை விடலாகாது. அன்றி எக்கியோ பவித்திரத்தைக் காதில் சுற்றிக்கொண்டு வத்திரத்தினுல் தலையை மூடிக்கொண்டு பகலில் வடக்குமுகமாயும், இரவில் தெற்குமுகமாயு மிருந்து மலசலம் விடவேண்டும்.

இப்படிச்செய்ய சங்கட மிருக்குமாயின், தகுந்தபடி செய்யலாம். அந்த இடங்களில் நெடும்போதிராமலும், ஒன்றும் பேசாமலும், காரியந் தீர்ந்தவுடனே செத்தைகளினுலே அவ்விடத்தை மறைத்து வரவேண்டும். பின்பு மண்ணினுல் அசுத்தத்தின் நாற்றம் ஒழியும்படியான விதஞ் செய்தல் வேண்டும்.

பின்னர், சுத்தமாயும் அசுத்த பண்டங்களின் சம்பந்தமில்லாத தாய்க் குமிழி கிளம்பாததாயுமுள்ள சலத்தினுலே மும்முறை ஆச

மனஞ் செய்து வாய் துடைத்தல், சிரசில் புரோட்சித்தல், இருதய முதலான அங்கங்களைத் தொடுதல் முதலிய செய்கைகளை விதிப்படி செய்து, பின்பு அகமர்ஷண சூத்தமுதலான மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே நீராடிச் சந்தியாவந்தன முதலான கிரியைகளை விதிப்படி அனுட்டிக்கவேண்டும்.

பின்பு மயிராற்றிக்கொண்டு அலங்கரித்தல் முதலான மங்கள வியாபாரங்களைச் செய்துக்கொண்டு தனக்கு விதிக்கிற வகையாயீத் திரவிய சமாதானஞ் செய்யவேண்டும். சோமசம்ஸ்தைகள் அவிஸ் சம்ஸ்தைகள் பாகசம்ஸ்தைகள் என்று சொல்லப்பட்ட யாகங்களெல் லாம் திரவியங்களைக் கொண்டே சாதிக்கவேண்டிய தாகையால் பிராமணன் தனத்தை சம்பாதிக்கவேண்டும். நியாய வழியினாலே தனத்தைச் சம்பாதிக்கும் முயற்சி செய்துக்கொண்டு மத்தியான மானவுடனே மறுபடியும் நீராடவேண்டும். அப்படி நீராடும்போது, நதிகள் குளங்கள் தேவதா தீர்த்தங்கள் இப்படிப்பட்ட சலங்களிலே நீராடவேண்டும். இவை கிடையாமற்போனால், கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்துக்கொண்டாகிலும், அதற்கும் கூடாதபோது ஒரு பாத்திரத்திற் கொண்டுவந்தாகிலும் நீராடலாம். இப்படி நீராடின பின், பரிசுத்தமான வத்திர முதலானவைகளைத் தரித்துக்கொண்டு தேவதைகளுக்கும் இருடிகளுக்கும் பிதிரர்களுக்கும் அவரவர் தீர்த் தத்தினால் விதிப்படியே தருப்பணம் செய்யவேண்டும்.

பிதிர் தர்ப்பணம்

பிதிரர் - பிதாமகர் - பிறபிதாமகர் - மாதாமகர் - மாதாரு பிதா மகர் - மாதாரு பிறபிதாமகர் என்னும் இவர்களுக்கும் தருப்பணஞ் செய்யவேண்டும். விருப்பம் இருந்தால், தாய் - குருபத்தினி - பாட்டி - குரு - அம்மான் முதலானவர்கள்; இஷ்டன் அரசன் இவர் களுக்கும் திருப்தியுண்டாகும்படி தருப்பணஞ் செய்யலாம். அப் போது செபிக்கவேண்டிய தென்னெனில்:

சிந்தனை:—தேவ - அசுர - யட்ச - நாக - கந்திருவ - ராட்சச - பிரசகுஹய்ய - சித்தகூச்மாண்ட விருக்ஷாதிகளும், சலம் - பூமி - காற்று இவைகளைப்பற்றிய சேந்துக்களும் என்னால் கொடுக்கப்படும் இந்தத் தண்ணீரால் திருப்தி அடையவேண்டும்.

நரகங்களில் பல வாதனைகளி லிருக்கிறவர்களுக்குச் சோர்வு நீங்கும்பொருட்டு இத் தண்ணீரை யான் இப்போது விடுகிறேன்.

"எனக்குப் பந்துக்களா யிருப்பவர்களுக்கும் - பந்துவாகாதவர் களுக்கும் - சன்மாந்தரத்தில் பந்துக்களா யிருந்தவர்களுக்கும் உயிர் களுக்கும் நான் விடுகிறேன். இந்த எள்ளுந்தண்ணீரும் சந்தோட கரத்தோடு திருப்தியுண்டாக்கக் கடவன" என்று சொல்லி நீரிலே தர்ப்பணஞ் செய்யவேண்டும்.

சூரியார்க்கம்

இப்படி தருப்பணஞ் செய்வதனால் சகல உலோகத்துக்கும் பிரீதியுண்டாகும். அதனால் மகா புண்ணியங் கிடைக்கும். இப்படி மனசாட்சியில் சந்தோடகரத்தோடு சிரத்தையுடனே காமிய தருப் பணஞ் செய்து, பின்பு மத்தியான்னிகஞ்செய்து சூரியபகவா னெதிர் நின்று சூரியனை நோக்கி,

சிந்தனை:—"வேதங்களினாலே பிரகாசித்துக்கொண்டு உலோக சிருட்டி கர்த்தாவாய், மகா சுத்தியுள்ளவராய், கன்மசாட்சியாய் ஸ்ரீ விஷ்ணு தேசோமயமாய் விளங்குகிற சூரியபகவானுக்கு நமஸ் காரம்" என்று சொல்லிச் சூரியார்க்கியம் விடவேண்டும்.

வைசுவதேவ பூதபலி

பின்பு தனது கிரகத்திலிருக்கிற தேவதா விம்பத்திற்குத் திரு மஞ்சனம் கந்தபுட்ப தீபதூபாதிகள் நைவேத்தியம் முதலான உப சாரங்களால் ஆராதனை செய்யவேண்டும். இப்படி தேவாராதனம் செய்தபின்பு பிரமாகுதி முதலான வைசுவதேவஞ்செய்து, கிரகங்கள் காசிபர் அனுமதிகளுக்கு அன்னபலியிட்டு அதன் மிகுதியை பிருத் திவீபற்கனியர்களுக்காக ஔபாசன சமீபத்திலிட வேண்டியது, பின்பு கிருகத்தின் துவாசத்தில் தாதா விதாக்களுக்கும் நடுவில் பிரமாவுக்கும் நான்கு திசைகளில் இந்திரன், எமன், வருணன். சந்திரன் என்னும் நான்கு திசைத் தேவர்க்களுக்கும், சகல திசைகளி லும் வாயுவுக்கும், பிரமா சூரியன் இவர்களுக்கும், வடகிழக்கில் தன் வந்திரிக்கும் அன்னபலி யிடவேண்டும்.

அதன்பின் அன்னத்தை யெடுத்து இருதய நிலமையோடு சுத்த மான பூமியிலே சகலமான பூதங்களுக்காகப் போட்டு இப்படிச் சொல்லவேண்டும்.

சிந்தனை

"தேவதைகள் - மனிதர்கள் - மிருகங்கள் - பறவைகள் - சித் தர் - யட்சர் - நாகர் - தயித்தியர் - பிரேதங்கள் - மரங்கள் - எறும்பு

கள் - பூச்சிகள் - புழுக்கள் முதலான சர்வ பிராணிகளுள்ளும் யார் என்னுலே கொடுக்கப்படும் அன்னத்தை இச்சிக்கிறார்களோ அவர்களுக்கும், எவர்களுக்குத் தாய் தந்தை சுற்றத்தார் யாருமில்லாமலும் அன்னங் கிடையாமலு மிருக்கிறதோ அவர்களுக்கும் இதோ இவ்விடத்தில் அன்னத்தைக் கொடுக்கிறேன். இதனால் அவர்கள் திருப்தியடைந்து சுகசந்தோடத்தோடு யிருக்கக்கடவர்.

சகல பூதங்களும் நானும் இந்த அன்னமும் மற்ற எல்லாம் ஈசுவரரூபமே யல்லாது வேறல்லாமையாலே, சகல பூதங்களுக்கும் சரீரமான இந்த அன்னத்தை அவர்கள் சவுக்கியத்திற்காக இங்கே இடுகிறேன்; இது எல்லாவற்றிற்குந் திருப்தியாகக் கடவது.

எட்டுவிதமான தேவகணங்களும், ஒருவிதமான மனுஷியகணமும், ஐந்துவிதமான கிரியக்கு கணமுமான பதினொன்று பூதகணங்களிலுஞ் சேர்ந்த சகல பிராணிகளுக்கும் திருப்திக்காக இந்த அன்னத்தை இங்கே இடுகிறேன்; இதனால் அவர்களெல்லாஞ் சந்தோடமடையக்கடவர்" என்று சொல்லித் தரையில் அன்னத்தை இடவேண்டும்.

இப்பால், நாய் - சண்டாளர் - பட்சி இவைகளுக்காகவும், பதிதர்களானலும், புத்திரனில்லாம லிருக்கிறவர் யாருண்டோ அவர்களுக்காகவும் நிலத்தில் அன்னத்தைப் போடவேண்டும்.

அதிதிகளை உபசரிக்கை

இப்படியெல்லாஞ் செய்தபின் நாலுகாழிகையாவது மேலாவது அதிதிகளுக்காக எதிர்பார்த்திருந்து அதிதிகளை நல்வரவு வினவுதல் முதலானவைகளினாலேயும், காலலம்பத் தண்ணீர் கொடுப்பதினாலேயும், ஆசனங் கொடுத்து உட்காரவைப்பதினாலேயும், அன்போடு அன்னமிடுவதினாலேயும், அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதனாலேயும், போகும்போது பின்சென்று வழி விடுவதினாலேயும் சந்தோடப் படுத்தவேண்டும்.

போசனஞ் செய்யுமுறை

குலமும் பெயரும் தெரியாதவனுய் வேரிடத்திலிருந்து வந்தவனுய் நியதமாயோரிலே வாசஞ்செய்தவனு யிருக்கிற அதிதியை நன்முய்ப் பூசிக்கவேண்டும். அன்னியதேசத்தி லிருந்து வந்தவனுய்த் தனக்கு யாதோர் உறவுமில்லாதவனுய்த் தரித்திரனு யிருப்பவ

னுக்குப் போசனம் ஊட்டாமல் தானே சாப்பிடுகிறவன் நரகமடை வான்.

இப்படியாகவந்த அதிதியை குலகோத்திர சாகாதிகளை விசா காதிகளை விசாரியாமல் சதுர்முகனைப்போலப் பாவித்துப் பூசிக்க வேண்டும். மேலும், சுதேசியாய்ப் பஞ்சயக்கிய பாராயணனுய்க் குலகோத்திர ஆசாரங்களிலே தனக்கு நன்றுய்த் தெரிந்தவனு யிருக் கின்ற ஒருவனேயாகிலும் பிதரர்களுக்காகச் சந்தோடமாய்ப் போசனஞ் செய்விக்கவேண்டும்.

சந்நியாசி பிரமசாரிகளுக்கும் மும்மூன்று கவளங்களுக்குக் குறையாமல் சாதிக்கவேண்டும்; விபவமிருந்தால் தடையில்லா மல் எவ்வளவாகிலும் யாவருக்கும் வேண்டியுமட்டும் கொடுக்கலாம். இப்படியாக முன் சொன்னவர்களுள்ளாக நான்கு வகைப்பட்ட அதிதிகளையும் பூசிக்கிறவன் அதிகடினமான பாதகங்களினின்றும் நீங்குவான்; அதிதியானவன் எவன் கிரகத்துக்கு வந்து தன்னுசை முறிந்துபோகிறுனே அந்தக் கிரகத்தனுடைய புண்ணியங்களை யெல் லாம் அவ்வதிதி எடுத்துக்கொண்டு தன் பாவங்களை அவனுக்கு கொடுத்துவிட்டுப் போகிறுன்.

தாதாவும் - பிரமனும் - இந்திரனும் - வசுக்களும் - அக்கினியும் - சூரியனும் ஆகிய இவர்கள் அதிதியினிடத்திற் பிரவேசித்து, கிரகத் தன் கொடுக்கின்ற அன்னத்தைப் புசிக்கிறார்கள்; ஆதலாலே, அதிதி பூசைசெய்ய முயலவேண்டும்.

எவன் அதிதியை விட்டு உண்கிறுனே அவன் அன்னத்தை யுண்கிறுனில்லை. மற்றும் பாவத்தையே உண்கிறுன்.

பின்பு புத்தகம்போந்த கன்னிகளையும் கருப்பவதியையும் கிழவர் களையும் பாலகரையும் முந்திப் புசிக்கும்படி செய்து பிந்தியே தான் புசிக்கவேண்டும். இவர்களெல்லாம் உண்ணுமலிருக்கத் தான் முந்தி உண்பானுயின், இங்கே பாவத்தையே யுண்டு மரணமடைந்தபின் நரகத்துக்குப் போய்ச் சிலேத்துமத்தை யுண்பான்.

நீராடாமல் உண்பவன் மலத்தை யுண்கிறுன்; செபஞ்செய்யா மல் உண்கிறவன் சீ ரத்தங்களை உண்கிறுன்; வைசுவதேவாதி சுத்தி யில்லாம லுண்கிறவன் மூத்திரத்தை யுண்கிறுன்; பாலர்முதல் உண்ணுமுன் உண்கிறவன் மிருகமலத்தை யுண்கிறுன்; ஓமஞ் செய்

யாமற் புசிக்கிறவன் கிரிமிகளைப் புசிக்கிறான். அதிதிகளுக்குக் கொடாமற் புசிக்கிறவன் விடத்தைப் புசிக்கிறான்.

ஒற்றைவத்திர முள்ளவனுகவும், ஈரமான கைகால்களுள்ளவனுகவும் புசிக்கலாகாது; சுத்தியுள்ளவனுகவும், சந்தோட முடையவனுகவு மிருந்து புசிக்கவேண்டும்; கிழக்கு முகமாகவாகிலும் வடக்கு முகமாகவாகிலும் இருந்து புசிக்கவேண்டும்; மூலிக்கெதிராகப் புசிப்பதும், மனக்கவலையோடு புசிப்பதுங் கூடாது. மேலும், சிறந்ததும் இதமானதுமான அன்னத்தையே சுத்த தீர்த்தத்தினுலே பூரோட்சித்துப் புசிக்கவேண்டும்.

அங்கவீனர் வியாதி பிடித்தவர் முதலானவர் கொண்டுவந்ததும், அருவருப்பா யிருப்பதும், நன்றுய்ச் சாம்பாரஞ் சேர்த்துப் பாகஞ் செய்யப்படாததுமான அன்னத்தைப் புசிக்கலாகாது.

மூக்காலி நாற்காலி முதலானவைகளின்மேல் வைத்திருக்கும் பாத்திரங்களிலேயும், அசுத்தமான தேகங்களிலேயும், சந்தி முதலான காலங்களிலேயும், நானுவித சனங்கள் சேர்ந்த சங்கத்திலேயும் போசனஞ் செய்யலாகாது.

அக்கினிக்கும் பசித்திருக்கிறவர்களுக்கும் யோக்கியர்களுக்கும் இட்டுக் கோப தாபாதிகளில்லாதவனுகிச் சிறந்ததும் சுத்தமுமான பாத்திரத்திலே பழையதல்லாத யோக்கியமான அன்னத்தை மந்திரங்களாலே மந்திரித்துப் போசனஞ் செய்யவேண்டும்.

கனிகள் கிழங்குகள் வற்றல்கள் நெல்லி வடகமுதலான வடகங்கள் இலட்டு முதலான பணியாரங்கள் தவிர, மற்றைப் பழைய உணவுகளையும், சாரமற்ற உணவுகளையும் ஒருபோதிலும் உண்ணலாகாது. மேலும், விவேகமுள்ளவன் தேன்களைத் தவிர, உண்டு மிகுந்த மற்றவைகளையு முண்ணலாகாது.

உண்ணும்போது மதுரமானவைகளை முதலிலும், புளிப்பு உப்பு களை இடையிலும், கைப்பு கார முதலானவைகளைக் கடையிலும் உண்ணவேண்டும். அன்றி, முன்னே நீதவகைகளையும் புசிக்க வேண்டும். இப்படி யுண்பதினுலே பலமும் ஆரோக்கியமும் குறையமாட்டா. போசனாரம்பத்தில் அன்னத்தை நிந்தை செய்யாமலும், மவுனத்தோடு பிராணுதி ஐந்தாகுதிகளை மிகுதியமாய்ச் செய்யவேண்டும். இவ்விதமாக நன்றுய்ச் சாப்பிட்டுக் கைகால்களை அடி

வரையிலும் நன்முய்ச் சுத்தி செய்துகொண்டு, மறுபடி ஆசமனஞ் செய்து சொஸ்தமும் சாந்தமுமான மனதோடு கிழக்குமுகமாய் ஆசனத்தின்மே லுட்கார்ந்து இட்டதேவதைகளைச் சிந்திக்கவேண் டும். அன்றியும், "அக்கினியானது காற்றினாலே வளர்க்கப்பட்டு ஆகாசத்தினால் இடங்கொடுக்கப்பெற்று, அன்னத்தைச் சீரணஞ் செய்து என் தேகத்தை திருப்திபடுத்த; அதனால் எனக்குச் சுகமுண் டாகக்கடவது. அன்னமானது சீரணித்து என் உடற்கூறான பிருதிவி, அப்பு, தேயு, வாயுவுக்கு பலமுண்டாக்க; அதனாலே எனக் குக் குறைவற்ற சுகமுண்டாகக் கடவது. இவ் வன்னமானது என்னுடைய பிராணம் - அபானம் - வியானம் - உத்தானம் - மானம் என்னும் பஞ்சப் பிராணனுக்கும் புஷ்டியுண்டாக்க எனக்கு இடையூ றில்லாத சுகமுண்டாகக் கடவது. உதராக்கினியும், வடவாக்கினியும் நான் உண்ட அன்னத்தையெல்லாஞ் சீரணஞ்செய்து அவ் வன்னத் தின் நிரிவினுண்டான சுகத்தை எனக்கு உண்டாக்கக் கடவது. ஸ்ரீ விஷ்ணு ஒருவரே சகல இந்திரியங்களுக்குந் தேகங்களுக்கும் ஆத்துமாவாகி ஞானசத்திபத ஐசுவரிய வீரியதேச மென்னும் சத்தி உண்டோ அந்தச் சத்தியினாலே நான் உண்ட அன்னமானது எனக்கு ஆரோக்கிய முண்டாகும்படி சீரணமாகக் கடவது" என்று உச்சரித்து வயிற்றைத் தடவிப் பின் எழுந்திருந்து ஆயாசமுண் டாக்கமாட்டாத காரியங்களைச் சோம்பலின்றிச் செய்யலாம்.

சிரார்த்த விதி

சூசனம்

ஒவ்வொருவரும் உலகிற் பிறக்கும்போதே தீட்டிருத்தலாலும், பின்னர்ப் பிறந்தோருக்கும் மனமகவாகிய பந்தங்களின் சனன மரண துக்கங்களுடன்பாடிருப்பதாலும், அயுபந்து சனசகிதமாகப் புண்ணிய பாவங்களுக்கேற்ற நரகமோட்ச சங்கற்ப முண்டாத லாலும், ஆன்றோரால்,

"புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருக்க மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் புறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்"

"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
யாதுவரு மோவறிகிலேன்"

எனக் கூறியுள்ளமையின் பிறவிகளுள்ள தென்றும், அப்பிறவிகள் தோறும் வாக்காலும் மனதாலுங் கரசரணதிகளாலுஞ் செய்யும் வினைக்கீடான துக்கங்களை மறுசனனத்தில் அனுபவிக்க வருமாத லாலும், இது காரணமாக முன் பிறப்பிலிருந்த பந்துக்கள் இறந்தா ரது ஆன்ம சுகத்திற்காகப் பல கிரியைகள் செய்வதுபோல ஒவ் வொருவரும் தத்தம் மூதாதைகளினது ஆன்ம சுகத்தின் பொருட் டும், தம் வாழ்க்கைக் காலத்தில் அடைந்த பிதுரர் சுகத்தையும், இனி மரணமடைவாரது சுகத்தை விரும்பியும், தமது மரணத்தில் நல்லுலகைப் பெறவும் விரூடோற்சனம் முதலிய கிரியைகளை நடத்தவேணுமென்று எல்லா ஸ்மிருதி புராண ஆகம வேதங்களி லும் கூறப்பட்டும், மேலோர்களால் அவ்வாறு அனுட்டிக்கப்பட்டும், அனுட்டிக்கப் படுதற்கு யோக்கியதையாயுஞ் சிறப்புற்ற புருடார்த்த மாயுமுள்ளன சந்தியாகிய சிரார்த்த நியதியேயாகும். ஆதலாலே, இதைச் சிர அர்த்தம்—அதாவது தலைமையான பொருள் என்று கூறப்பட்டது.

இது எல்லா ஆசிரமிகளும், எல்லா பந்துக்களும் தம்பொருட் டும், பிறர்பொருட்டும் செய்துஞ்செய்வித்துஞ் செயப்படுவன வாயு முள்ள பல நிறத்தினவா யிருத்தலால், சந்திக்கிரியை - நிரகரியை, நல்லொழுக்கம் - பிணிவராமை - ஆன்னிகம் முதலியவைகளைச் சொல்லி, பின்னர் இதனைக் கூறத்தொடங்கி, முன்னர்ச் சங்கற்ப விதிவர்க்க தேசாகால கிரியா அதிகார நிரவியவர்க்கங்களை ஏக தேசமாகக் கூறுகின்றேம்.

சிரார்த்தகாலம்

ஒருவன் சிரத்தையோடு சிரார்த்தஞ் செய்வதனாலே, பிரமன், இந்திரன், உருத்திரன், அசுவனிதேவர், சூரியன், அக்கினி, வசுக் கள், வாயு, விசுவதேவர், பிதுரர், இருடிகள், மனிதர், மிருகங்கள், பட்சிகள், நாகங்கள் முதலான ஊரும் செந்துக்கள், மற்றுமுண்டான பூதங்கள் ஆகிய சகலத்தையும் சந்தோடப் படுத்துகிறான்.

மாதந்தோறும் அமரபட்சத்திலும், அமாவாசையிலும், அட் டமிகளிலும் சிரார்த்தஞ் செய்யத்தக்க காமியமான காலத்தைச் சொல்லுகிறேம். சிரார்த்தத்திற்கு யோக்கியமான வத்து கிடைத்த

போதும், யோக்கியமான பிராமணன் நேர்ந்தபோதும், வியதீபாதத் திலும், அயத்திலும், விடயத்திலும், சந்திரசூரிய கிரணங்களிலும், சூரியன் பன்னிரண்டு ராசிகளிற் பிரவேசிக்கிற காலங்களிலும், நட்சத்திர பீடையும், கிரகபீடையு முண்டாகுங் காலங்களிலும், கெட்ட கனவு கண்டபொழுதிலும், புதிதாய்த் தானியத்தைக் கொண்டுவந்தபோதும் காமிய சிரார்த்தங்கள் செய்யலாம்.

அமாவாசையானது அனுடம், விசாகம், சுவாதி, இந்த நட்சத் திரங்களோடு கூடுமேயானல், அப்போது செய்கிற சிரார்த்தம் பிதுரர்களுக்கு எட்டுவருஷத்துத் திருப்தியை யுண்டாக்கும். திருவா திரை, புனர்பூசம் இந்த நட்சத்திரங்களோடு கூடிய அமாவாசையிற் செய்த சிரார்த்தத்தினலும் பிதுரர்கள் பன்னிரண்டு வருடம் திருப் தியைப் பெறுவார்கள். அவிட்டம், சதயம், பூரட்டாதி இவைக களோடு கூடின அமாவாசை தேவர்களுக்கும் கிடையாத புண்ணிய காலம். இந்த ஒன்பது நட்சத்திரங்களிலும் அமாவாசை கூடின போது சிரார்த்தஞ் செய்வதனலே பிதுரர்களுக்கு விசேடமான திருப்தி யுண்டாகும்.

வைகாசி மாதத்தில் சுக்கிலபட்ச திரிதியையும், கார்த்திகை மாதத்தில் சுக்கிலபட்ச நவமியும், புரட்டாசி மாதத்தில் கிருட்டின பட்சத் திரயோதசியும், மாசி மாதத்து அமாவாசையுமாகிய இந்த நான்கு திதிகளும் யுகாதிகளென்றும், அளவற்ற புண்ணியகால மென்றும் புராணங்களினலே சொல்லப்பட்டிருக்கின்றன. இவை களிலும், சந்திர சூரிய கிரணங்களிலும், மூன்று அட்சயகைகளிலும் இரண்டு அயனங்களிலும், எள்ளுடன் கூடிய தண்ணீரையாகிலும் பிதுரர்களே உத்தேசித்து ஒருவன் பக்தியோடு விடுவனுகில், அவன் ஆயிரம்வருடம் சிரார்த்தஞ்செய்த பலனை யடைவான். இது இரக சியமான சங்கதி என்று பிதுரர் சொல்லுகிறார்கள். மாசி மாதத்து அமாவாசை எப்போதாகிலும் சதய நட்சத்திரத்தோடு கூடுமாயின், அது பிதுரர்களுக்கு மகா திருப்திக்கு ஏதுவான்காலம்; அற்ப புண்ணியமுள்ள மனிதருக்கு அது கிடையாது. இந்தக் காலத்தி லேயே அவிட்டம் சேர்ந்ததாகில் அப்போது அன்னமாவது அல் லது ஒருகைத் தண்ணீராவது பிதுரர்களைக் குறித்துக் கொடுத்தவ னுக்குப் பதினுயிரம்வருடம் பிதுர்திருத்தியஞ் செய்த புண்ணியம் கிடைக்கும்; அக்காலத்திலே பூரட்டாதி சேருமாகில் அதிற்செய்த

சிரார்த்தத்தினாலே பிதுரர்கள் திருப்தியடைந்து ஆயிரம் யுகமளவும் சந்தோஷமாகத் தூங்குவார்கள்.

கங்கை, கத்துரு, யமுனை, விபாசை, சரசுவதி, கோமதி என்கிற நதிகளுக்கும், நைமிசம் என்னும் இடத்திற்கும் ஒருவன் சென்று ஸ்நானஞ்செய்து அன்போடு பிதர்பூசை செய்வானுகில், அவன் தன் பாவங்களையெல்லாம் போக்கிக்கொள்ளுகிறான். பிதுரர்கள் 'நாம் எப்போது புரட்டாசிமாதத்தில் புத்திராதியர் செய்த அமரபட்ச திரயோதசி சிரார்த்தத்தினால் திருப்தியடைந்தும், மாசி அமாவாசையிலும் புத்திராதியர்கள் செய்த புண்ணியதீர்த்த சல தருப்பணங்களினாலும் திருப்தியடைவோ' மென்று பாடுகிறார்கள். மனிதருக்குப் பரிசுத்தமான பொருளும், மேன்மையான காலமும், சாத்திரங்களிற் சொல்லப்பட்ட விதியும், சற்குணமுள்ள பாத்திரமும், சிறந்த அன்பும் கூடுமாயின், சகல இஷ்டங்களும் சித்திக்கும்.

எவன் திரவிய வஞ்சனை செய்யாமல் நடக்கும் பிண்டங்களை இடத்தக்கவனை, விபவமுண்டாகில் வஞ்சனையின்றி இரத்தினம், வத்திரம், வாகனம், தனம் மற்றுமுள்ள சகல போகங்களையும் நமக்காகப் பிராமணருக்குத் தானஞ் செய்யும்படியானவனை, அன்னம் போடுவதற்கு மாத்திரமே தகுதியான விபவமுடையவனுகில் இப்படிப்பட்ட காலங்களில் மிகுந்த அன்போடு நல்ல பிராமணருக்கு அன்னமிடத் தக்கவனை, அதற்குஞ் சத்தியில்லாமற்போனால் தனக்கு இயன்ற அளவு தானியத்தையாகிலும் பிராமணருக்கு ஆமமாய்க் கொடுக்கவல்லவனை, அல்லது சிறிது தட்சணையாவது கொடுக்கும்படியானவனை, அதற்குஞ் சத்தியீனனாய் தினகையினாலே சில எள்ளையாவது ஒரு நல்ல பிராமணனுக்கு நமஸ்கரித்துப் பத்தியோடு வணங்கிக் கொடுப்பனை, இதுவுமிசையாதபோது ஏழெட்டு எள்ளுடனே நமக்கு ஓருகைத் தண்ணீரையாவது பூமியில் விடவல்லவனை, இதுவுமல்லாதபோது எங்கிருந்தாலும் பசுக்களுக்குத்தக்க உணவை சம்பாதித்து நம்முடைய உகப்புக்காகச் சிரத்தையுடனே பசுக்களுக்கு கொடுப்பானை, ஒன்று மில்லாதபோதில் காட்டுக்குப்போய்க் கைகளை நன்றுயுயரவெடுத்துக்கொண்டு சூரியன் முதலான உலகபாலகரைப் பார்த்து உரத்த சத்தத்துடனே 'எனக்கு பிதுரர் சிரார்த்தஞ் செய்யத்தக்க தனமாவது மற்றெந்தப் பொருளாவது ஒன்றுமில்லை; என் பிதுரர்கள் திருப்தியடைய வேண்டு

மென்பானேன்' 'துரிச்சையொன்று தவிர மற்றொன்று மெனக்கில்லை' யென்றும், 'இதோ என்னிரண்டு கைகளையும் வாயுவின் மார்க்க மான ஆகாசத்தில் தூக்கிவிட்டேன்' என்று இவ்வசனங்களைப் படிப்பானேன், அப்படிப்பட்ட புண்ணியவானும் புத்திமானுமான ஒருவன் நம்முடைய குலத்திற் பிறக்கவேண்டும் என்று பிதுர்க் கள் பாடியிருக்கிறார்கள். இப்படி பிதுரர்கள் தனமுள்ளபோதும் இல்லாதபோதும் நடக்கவேண்டிய முறையை முன்சொன்னவித மாய்ச் செய்பவன் பூரணமாகச் சிரார்த்தஞ்செய்த பலனை எப்போ தும் அடைவான்.

மாளய வைபவம்

சிரார்த்தமென்பது வருடாந்த மாதாந்திரத்தில் மரணமடைந் தோர் நரகமெய்தாதபடி சுகித்திருப்பதைக் குறித்து தத்தஞ் சமய தெய்வத்தைக் கோரிச்செய்யும் எக்கியாதி கிரியையாம்.

மாளய சிரார்த்தஞ் செய்யுங்காலம்

வருஷருது புரட்டாசிமாத கிருட்டினபட்சத் திரயோதசியில் தேன் பாயசமிவைகளால் வேள்விச் சிரார்த்தஞ் செய்யவேண்டும். அதனால் பிதுரர்களுக்கு அட்சயமான திருப்தியுண்டாகிறது. தன் குலாச்சாரமாக முன்சொன்னபடி திரயோதசியில் அபராணகாலத் தில் தமக்குத் தேன், நெய், பாயாசமாகிய இவைகளுடன் சிரார்த் தஞ்செய்பவன் மறுசனன மடைவானென்றும், பிதுரர்கள் பேரவா அடைவரென்றும் வேதங் கூறுகிறது.

கிருட்டினபட்சத் தசமிமுதல் சதுர்த்தசி நீங்கலாக அமாவாசை வரையிலுள்ள திதிகள் எப்படி மாதச் சிரார்த்தத்திற்குச் சிறந்த வையோ, அதுபோல மற்ற திதிகள் சிறந்ததல்ல; கலியுகத்தில் புலால் நீங்கலாகச் செய்யவேண்டுமென்று வியாக்கிரபாதா நிருணயங் கூறுகிறது.

இரட்டைத் திதி இரட்டை நட்சத்திரங்களில் மாளய சிரார்த் தஞ்செய்பவன் சர்வாபீட்டங்களையும்; ஒற்றைத் திதி நட்சத்திரங் களில் செய்பவன் புத்திரசந்தானத்தையும் மிகுந்த கல்விப்பொருளையு மடைகிறான்.

சிரார்த்தஞ் செய்வதற்குச் சுக்கில பட்சத்தைவிட கிருட்டின பட்சமெப்படி விசேடித்ததோ அவ்வாறே பகலில் முன் பாதியைவிட பின்பாதி உசிதமானது.

பூணூல் இடபாகமிட்டுக்கொண்டு வலக்கை மறித்தும் கையில் பவுத்திரத்துடனும் செய்யத்தக்கதான இந்தப் பிதுரர் சிரார்த்தத்தை மரணகாலம் வரையுஞ் செய்யவேண்டியது.

இரவினும் இரண்டுசந்தியிலும் சூரிய உதயமாயுஞ் செய்கிற யாகம் நித்தியபாகமென்று சொல்வதால், அவை இராக்கதருக்குரியது.

முன்கூறிய விதிப்படி மாதாந்தரம் சிரார்த்தஞ் செய்வதற்குச் சக்தியற்றால், தீரும் ஆண்டில் மருவும் ஏமந்தரது கிரிட்டும ருது இவைகளிலாவது, வஞ்சமா எக்கியத்திற்குப் பின்பு அதில் சேர்ந்த பிதுரர் சிரார்த்தஞ் செய்யவேண்டியது.

பிதுரர் சிரார்த்தத்தில் ஓமஞ்செய்வதைவிட்டு, அக்கினியில் நிறைவேற்றலாகாது; கருத்தாபத்தியுள்ள கிரகஸ்தனு யிருந்தால் அவன் வைதிக அக்கினியினும், இல்லாவிட்டால் பிராமணனிடமும் செய்யவேண்டியது. ஆகிதா அக்கினியுள்ள கருத்தாவானவன் மாதாந்தர சிரார்த்தத்தைக் கிருட்டின பட்சத்தில் அமாவாசையல்லாத மற்றத் திதியில் செய்யக்கூடாது; இறந்ததிதியில் செய்யவேண்டியது சிரார்த்தத்தை மரத்திரமேயாம்.

கொஞ்சமேனுஞ் சக்தியில்லாதவன் ஸ்நானஞ்செய்து சலத்தினால் பிதுரர்களைக்குறித்துத் தருப்பணஞ்செய்வானுகில் நித்திய தருப்பணஞ்செய்த பலனை யடைகிறான்.

பிதுர்வருக்கம்

இறந்துபோனவர்களுள் பிதுரர்களை வசுதேவராகவும், பிதாமகர்களை உருத்திரராகவும், பிறபிதாமகர்களை ஆதித்திய தேவர்களாகவும், மூன்று வகுப்பாகச் செய்யப்பட்டு மேற்படி தேவர்கள் நாமத்தினாலேயே மரணமானவர்களுக்குச் சிராத்தம் செய்யவேண்டுமென மனு கூறுகின்றார்.

சிராத்தஞ்செய்தவன் * விகசத்தையும் அமிர்தத்தையு மூட்கொள்ளவேண்டியது.

---

* விகசம் - சொர்த்தசேடம் (மீதி); அமிர்தம் - எக்கியசேடம். பிதுர் - இறந்தோர்.

தாயாதிகள்

தன்முதல் ஐந்தாம்பாட்டன் வரையிலுமுள்ள ஏழு தலைமுறைக் குட்பட்ட பங்காளிகளாம்.

ஆசௌசம் அல்லது தீட்டு

மரணத்தின் தீட்டு, பங்காளிக ளனைவருக்கும் பொதுவான பிறப்பில் தாய் தந்தையர்களுக்கு மாத்திரம் தொடக்கூடாத தீட்டு; அதிலும், மாதாவுக்கு மாத்திரம் அதிகம்; தந்தைக்குப் பதினோராம் நாள் ஸ்நானத்தோடு தீட்டு நீங்கிவிட்டது.

காமமதிகரித்து வீரியத்தை வெளியில் விட்டவுடன் அவன் ஸ்நானஞ்செய்தால் சுத்தனாவான்; தனக்குப் பிற மனையில் பிள்ளை பிறந்தால் மூன்றுநாள் தீட்டுண்டு.

சாபிண்டர்கள் பத்துத் தினத்திலும், சோதரர்கள் மூன்று தினத்திலும் தீட்சை நிவர்த்தி செய்துகொள்ளுகிறார்கள்.

இறந்துபோன ஆசிரியனுக்கு மாணக்கன் நிலதருப்பணஞ் செய்தால் குருவின் பங்காளிகளைப்போல் தானும் பத்துநாள் தீட்டிருக்க வேண்டும்.

தாயின் கருப்பத்தில் மூன்று மாதமுதல் ஏழு மாதத்திற்குள் ளாகச் சிசு இறந்துபோனால் எத்தனைமாதத்தி லிறந்துபோகிறதோ அத்தனை மாதத்திற்கும் மாதத்திற் கொருநாளாக தீட்டிருக்கவும். உதிரப்பாச்சலுள்ள மங்கைக்கு அவ் வுதிரப்பாச்சல் நின்றவுடன் நாலாம்நாள் ஸ்நானம் செய்தால் பரிசுத்தமாவாள்.

மனிதர்கள் சவளஞ் செய்கிறதற்குமுன் குழந்தை யிறந்தால் ஒருநாள் தீட்டும், உபநயன காலத்திற்குள் இறந்தால் மூன்றுநாள் தீட்டு முண்டு.

இரண்டு வயதுக்குள் குழந்தையிறந்தால் அதை புட்பம் மஞ்சள் முதலியவற்றால் அலங்கரித்து ஊருக்கு வெளியில் பரிசுத்த தலத்தில் புதைக்கவேண்டும். இந்தக் குழந்தையைத் தகனம் பண்ணலாகாது. நிலதருப்பணமுஞ் செய்யலாகாது; விசனமின்றிப் புதைத்துவிட்டுப் பங்காளிக ளனைவரும் மூன்றுநாள் சூதகங் காக்கவேண்டியதவசியம்.

மூன்றுவருடத்திற்குப்பின் குழந்தை இறந்தால் அதற்காக அந்திரவேள்வி செய்யவேண்டியதில்லை; நாமகரணஞ் செய்தபின்

இறந்ததாயினும் அதற்குரிய பழம்பரப்பல் முதலிய கிரியைகளையே பந்தினர் கூடிச்செய்வது நன்று.

தன்னோடு வாசித்தவனுக்கு ஒருநாள் சூதகங் காக்கவேண்டியது; சோதரர்களுக்கு இறப்பிலும் பிறப்பிலும் மூன்றுநாள் வரையில் சூதகமுண்டு.

ஒரு பெண்ணை வதுவைக்கு நிச்சயார்த்தஞ்செய்து, விவாகம் செய்கிறதற்குமுன் இறந்துபோனால், யாருக்கு நிச்சயார்த்தஞ் செய்தார்களோ அவனுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் மூன்றுநாள் சூதகமுண்டு; அப்பெண் தகப்பன் தாய் சுற்றத்திற்கும் மூன்றுநாள் சூதகமுண்டு; இம் மூன்றுநாள் வரையும் மண்ணுப்பு மாமிசம் புணர்ச்சி இவைகளை நீக்கி நதிகளில் ஸ்நானஞ் செய்யவேண்டியது.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் உள்ள தீட்டும் பங்காளித் தீட்டும்

சிசுவிற்குப் பல் முளைக்கும்பொழுதும்; முளைத்த பின்பும் சௌளஞ் செய்தபின்பும் இறந்துபோனால், பங்காளிகளனைவருக்குஞ் சூதகமுண்டு.

சாபிண்டர்களுக்கு இறந்த பத்துநாள் வரைக்குஞ் சூதகமுண்டு. மறையோதி அக்கினியோத்திரஞ் செய்கிறவனு யிருந்தால் அவனுக்கு ஒருநாளும், ஓதினவனுக்கு மூன்றுநாளும், ஸ்மார்த்தாசார முள்ளவனுக்கு நாலுநாளும், இக்கருமாதியொன்று மில்லாதவனுக்குப் பத்துநாளுஞ் சூதகமென்று காண்க.

தேசாந்திரத் தீட்டு

இதுவரைக்கும் கூறிய சூதகங்கள் சமீபித்திருக்கும்பொழுது செய்யவேண்டியது; இனி, தூரதேசத்திலிருக்கும் சாபிண்டரும் சோதரரும் செய்யவேண்டிய சூதகமாவது :—

தேசாந்திரத்தில் தன் பங்காளியின் இறப்பையும் பிறப்பையும் பத்துநாளுக்குள் கேள்விப்பட்டால் அந்தப் பத்துநாளோடே அவன் சூதகம் போய்விடும்.

இறந்தசேதி பத்துநாளைக்கு மேற்பட்டு அறிவானனால் சாபிண்டர்களுக்குக் கேள்விப்பட்ட நாள்முதல் மூன்றுநாள் வரையுஞ் சூதகமுண்டு. ஒரு மாதத்திற்கு மேற்பட்டால் சூதகமில்லை; பத்துப்

பதினெறு நாளோடே அவன் கேள்விப்பட்டால் அச் சூதகமில்லை. ஆனாலும், ஸ்நானஞ் செய்யவேண்டிய தவசியம். பிறந்த வதந்தி பத்துநாளைக்கு மேற்பட்டுக் கேள்விப்பட்டால் சூதகமில்லை.

சாபிண்டர்கள் பங்காளியின் இறப்பைப் பத்துநாளைக்குமேல் கேள்விப்பட்டாலும் கட்டின வஸ்திரத்தோடு ஸ்நானஞ் செய்தால் மற்றவர்களை தொடுகிறதற்கு யோக்கியமாகிறான்.

சாபிண்டரில் பல் முளையாத பாலகனிறந்தாலும், வேறுதேயத்தி லுள்ள சோதரர்களிறந்தாலும் மூன்றுநாளைக்கு மேற்பட்டுக் கேட் டால் கட்டின வத்திரத்துடன் நீராடினால் சூதகம் போய்விடும்.

பத்துநாள் சூதகமுள்ள இறப்பிலாவது பிறப்பிலாவது மறுபடி யும் வேறொருத் தீட்டு நேரிட்டால் முன்னிருந்த சூதகத்தோடே பின் வந்த சூதகம் போய்விடும். ஆனால், பத்துநாள் சூதகமுள்ள இறந்த வீட்டில் முன் சூதகம் போய்விடும். பிறந்த சூதகத்திற்கு இறந்த சூதகமும் ஒக்கும்.

ஆசாரியனிறந்தால் மூன்று தினமும், அவன் மனைவி யிறந்தால், அல்லது மக்களிறந்தால் ஒருநாள் சூதகமுண்டு; இது சாத்திரத்தின் முறையே.

வேதமோதி நன்னடை ஆசாரமுள்ள பிராமணன் தன்வளவி லுள்ளவ ரிறந்துபோனாலும், அம்மானிறந்துபோனாலும் மூன்றுநாள் சூதகமுண்டு. மாணாக்கன் அம்மான் மித்திரர் பந்து முதலியவர்கள் இறந்துபோனால் தொண்ணூறு நாழிகை வரைக்குஞ் சூதகமுண்டு.

இரண்டாம் வருணத்தானாகிய சூத்திரியன் தன் தேசத்தரசன் மரணமடைந்தால், பகலானால் பொழுதுபோகிற வரையிலும், இர வானால் நட்சத்திரம் மறைகிற வரையிலும் அந்தந்தத் தேசத்துப் பிரசைகளுக்குச் சூதகமுண்டு. ஆரணவிதி தெரியாதவன் தன் வளவில் இறந்தாலும் ஓர் தினம் சூதகமுண்டு.

இப்பொழுது மொழிந்த பத்துதினத் தீட்டும் ஆரியராகிய பிராமணர்களுக்கும், அவ்வாறே சூத்திரியருக்குப் பன்னிரண்டு நாளும், மூன்றும் வருணத்தாராகிய வைசியருக்குப் பதினைந்து நாளும், சூத்திரருக்கு முப்பத்தொருநாளும் சூதகமுண்டு.

மேற்சொன்ன விதிப்படி யல்லாமல் சூதக நாட்களை அதி கரித்து வைக்கக்கூடாது. ஔபாசன வைதீக காரியத்தையும் இத்

தினங்களுக்குமேல் நிறுத்தக்கூடாது. இந்திரனையும் அக்கினியையும் தோத்திரம் தினந்தோறும் செய்கிறதாயிருந்தால் தன் பங்காளி இறந்துபோனலும் ஒருநாள் அல்லது மூன்று நாளைக்குமேல் யாதொரு சூதகமில்லை.

அடக்க விதி

மூன்று வயதிற்குள் இறக்கும் பாலகரைப் புதைத்துவிடவேண்டும். அதற்கு மேற்பட்டிறக்கில் தகனமே செய்யவேண்டும்.

சவம் கொண்டுபோகும் திசை

சூத்திரர் ஊருக்குத்தெற்கும், வைசியர் மேற்கும், க்ஷத்திரியர் வடக்கும், பிராமணர் கிழக்குப்பக்கமாகவும் பிரேதத்தைக்கொண்டு போகவேண்டியது.

விருடோற்சனம்

மகம் யாக மிவைகளைச் செய்வதினும், விருடோற்சனஞ் செய்வதே யுசிதம். அதாவது, கார்த்திகை, பௌர்ணமி, உத்தராயண சுக்கில திருட்டினபட்சத் துவாதசியிலாயினும், மற்ற உத்தம காலங்களிலாயினும் தூயமனதோடு உத்தம பிராமணரால் சுப ஓமாதிகளைச் செய்து, பின்னர் மாதுரு தேவாருச்சனை நவக்கிரகபூசை, பூரணாஹுதி, சிரார்த்தகருமம் இவைகளைச்செய்து இடபக்கன்றை வத்திர புட்பாட் சதைகளா லலங்கரித்து நான்கு பசுக்கன்றுகளோடு அக்கினியை வலம்வரச்செய்து வடக்குமுகமாக நின்று, ஓ! தருமசொரூபியே! பிரமசிருட்டியே! என்று துதித்து, இந்தக்கருமம் எவருக்காகச் செய்கின்றதோ அவரைக்குறித்து அதன்வாலில் சலம் விட்டு அந்நீரைக் கரத்திலேந்திச் சிரசில் புரோட்சித்துக் கொள்ளல்வேண்டும். இதுவே விருடோற்சனமாம்.

சிரார்த்த தானம்

இறந்தவனைக்குறித்து விருடோற்சனஞ் செய்யில் உடனே ஏகோதிட்ட சிரார்த்தஞ் செய்யவேண்டும்; தானுள்ளபொழுதே தன்னைக்குறித்து விருடோற்சனஞ் செய்யாதவர்கள் தாம் இறந்த பின்பு புத்திராதிகளால் எவ்வித நன்மைகள் செய்யினும் பயனில்லை; ஆனதால், மரித்த பதினொரு பன்னிரண்டாம் நாளிலேனும் சபிண்டி காரணத்திற்கு முன்னமே சோடச சிரார்த்தஞ்செய்து பிராமணர் கட்குத் தகியாராதனத்தோடு தானங்களுஞ் செய்தல் வேண்டும்.

அன்றி, பருத்தியின்மேல் சாளக்கிராமம் வைத்து அலங்கரித்துக் கொடுப்பது மூண்டு.

மரித்தோர் வைதாரிணியைக் கடக்கும் பொருட்டுக் கரும்பினு லோடஞ் செய்து பட்டுச்சுற்றி நெய்வார்த்த வெண்கலப் பாத்தி ரத்தை அதனுள் வைத்துக் கொடுக்க வேண்டும்.

எள் - இரும்பு - பொன் - பருத்தி - நவதானியம் இவைகளைத் தவி ராது பிராமணருக்குக் கொடுப்பது விசேடம். ஏழைகளாயின் அவற்றிலொன்று கொடுப்பினும் நன்றே. சத்தியானுசாரம் தான மூஞ் செய்யலாம். மரித்தவர்களின் புத்திரரில்லாத காலத்தில் பௌத்திராதிகள் இவ்வாறு செய்வது மிக்க நன்றும்.

சரீரதிடமான காலத்தில் சதியாத்திரை செய்வதும் நன்றே. இறந்தபின் வருடந்தோறும் சிரார்த்தம் செய்யவேண்டியது; மற்ற சகோதர, குரு முதலியவர்களுக்குப் புண்ணியஞ்செய்து கொடுக்க வேண்டியது.

சூத்திரசவத்தோடு பிராமணன் சுடலைக்குப்போனால் அப்பிரா மணனுக்கு மூன்றுநாள் ஆசௌச மூண்டு. அம்மூன்று நாளைக்குப் பின்பு புண்ணியதீர்த்த ஸ்நானத்தால் புனிதனாகிறன்.

சிரவண கிரியை

மரித்த பாபிகளைச் சிரவணர் பாதுகாத்திருக்கும்படி அவன் சந் ததியார் சிரவணரைப் பூசித்து பன்னிரண்டு நீரோடு அன்னத்தை நிறைத்து அச்சிரவணபாவவாச மறையோருக்கு வழங்குதலுத்தமம்.

சந்தியோதக பலம்

இறந்தவரைக் குறித்துச் சுத்தமாய்ச் சந்தியோடு தினந்தோ றுங் கொடுக்கும் உதகத்தால் தூதரும் இறந்தவரும் திருப்தியடை வார்; மாசிகம் முதலியவற்றுல் சீவன் திருப்திகரமாகின்றது.

மரித்தவர், பால விருத்தராயினும் உதக கும்பதானம் அவசி யஞ் செய்தல் வேண்டும்.

இடசுத்தம்

எக்கருமஞ் செய்யத் தொடங்கினும் திருவலகால் துடைத்து கோமயத்தால் மெழுகிக் கோலமிட்டும் பூமியைச் சுத்தஞ் செய்தல்

வேண்டும். அப்படிச் செய்யாவிடில் செய்யுங்காரியத்தைப் பைசாரும் அரக்கரும் குடிகொண்டு முற்றச்செய்வார்கள். பரிசுத்தஞ்செய்த இடமானல் தேவர்கள் பிரீதி கொள்வதோடு பிதிரருக்குச் செய்யுங் கருமமும் பிரீதியாகும்.

திலதருப்பணம்

எள்ளு, சாக்ஷாத்விஷ்ணுவினுடலி லுற்பவித்த பரிசுத்த வஸ்து வானதால், அதனைக் கண்டவுடனே பூதபைசா ராக்கதர்கள் வெருண்டோடுவர். தானங்களில் எள்ளில்லாத தானம் பயன் படாது; சிரார்த்தத்தில் கறுப்பு எள்ளையே சேர்க்கில் சந்தோழிப் பார்கள்.

தருப்பை

குசைப்புல் ஆகாயத்தி லுண்டானது; அதன் அடியில் பிரம னும், அதன் கடையில் சிவனும், நடுவில் விஷ்ணுவும் வசிக்கின்ற னர்; ஆதலால், மூவர் காரணமாக சிரார்த்தங்களில் தருப்பையைக் கொள்ளவேண்டிய தாகின்றது. அப்படி தருப்பையில்லாத கருமம் பயன்படாது. இதுபற்றியே பிராமணர் மந்திரம், விபூதி, அக்கினி, தருப்பை இவைகளுக்கு நின்மாலிய தோடம் கிடையாது. உபயோ கப்படுத்திய தருப்பையையே மறுபடியும் தடையின்றி உபயோகப் படுத்தலாம்.

கலசம்

கலசமாவது இட்ட தேவதா சொரூபமாக புண்ணிய தீர்த்தங் களால் நிறைத்து சொர்ன புட்பாட்சதைகளை அதனுள்விட்டு மேலே நூல் சுற்றி, மஞ்சள் குங்குமபுட்ப அட்சதைகளை அணிவித்து, சந்த னாதி கலவைகளைப் பூசி, தூப தீப நைவேத்தியத்தோடு உபசார வந்தன வணக்கங்களைச் செய்து, தமது கோரிக்கையை விண்ணப் பஞ் செய்வதாம். இவற்றுள் தருப்பைமுடி சிகை; தேங்காய் சிரசு; அம்சதா நிலதம் நேத்திரம்; வத்திரம் சருமம்; சுற்றிய நூல் நரம்பு எலும்புகள்; கலசம் அங்கமாமிசம்; சலம் இரத்தம்; புட்பமே அகவுறுப்பு; சொர்னமே; பிந்துத் தியானம் குண சொரூ பம் என்றிவ்வாறுகக் கொள்ளப்படுவனவாம்.

சிரார்த்தாபசாரம்

தேவகாரியத்தைவிட பிதுர்காரியம் சிறந்தது. முன்னம் விசுவ தேவர்களையும், பின்பு பிதுரர்களையும், முடிவில் விஷ்ணுவையும் கிரம

மாக வருவித்துச் சிரார்த்தஞ் செய்யவேண்டியது. அப்படியல்லா மல் பிதுரர்களை மாத்திரம் வருவித்துச் சிரார்த்தஞ் செய்பவன் வமிசத்துடன் அழிகிறான்.

சிரார்த்த தானம்

சிரார்த்தத்தை நந்தவனம், கோயில், நதிக்கரை, கடற்கரை, பொழில் இவ்விடங்களிற் செய்வதே சிறந்தது. அப்படி சந்தற்பப் படாத காலத்தில் பரிசுத்த இடம் அல்லது சனசங்கையற்ற இடம் இவைகள் உத்தமம்.

சிரார்த்த திசை

சிரார்த்தத்துக்காக வந்த பிராமணர்கள் ஸ்நானஞ் செய்தபின் தேவர்களுக்குக் கிழக்குமுகமாகவும், பிதுரர்களுக்கு வடக்கு முகமாக வும் உட்கார வேண்டும்.

சிரார்த்தஞ் செய்யும் விதி

ஓமம்

இதனை முடித்த பின்னர், பிராமணனை முன் பூசித்து, அவனது வலது கையில் பௌத்திரத்தைவைத்து எள்ளுடன் சலத்தை அர்க் கியமாகக்கொடுத்து; அவன்முன் அக்கினியை வளர்த்தி ஓமஞ் செய்கிறேனென்று அனுமதி பெற்றுக்கொண்டு; அக்கினி, சந்திரன், எமன் இவர்களுக்குத் தனித்தனி அன்னத்தினால் ஓமஞ்செய்து பின் பிதுரர்களுக்கு ஓமஞ்செய்யவேண்டியது.

பிண்டக்கிரியை

பிதுரர்களின்பொருட்டு அக்கினியில் தென்புறத்தில் அன்ன ஓமஞ்செய்து பிண்டப் பிரதானஞ்செய்யும் பூமியில் தெற்கு நுனி யான தருப்பையில் மூன்றிடத்தில் எள்ளுஞ் சலமுங் கைமறித்து விட்டு மிகுந்த சாதத்தை முப்பாகமாக்கிக் கைமறித்து மூன் எள்ளுஞ் சலமும் விட்டவிடத்தில் தென்முகமாயிருந்து பிதுரர்களைத் தியா னித்துக்கொண்டு பிண்டம்வைத்து அவைகளின்மேல் மறுபடியும் எள்ளுந் தண்ணீரும் விடவேண்டும்.

ஒவ்வொருவரும் தத்தம் சூத்திரங்களிற் சொல்லியபடி பிண்டம் வைத்தபின் பாத்திரத்திலும் கையிலும் ஒட்டியிருந்த அன்னங்களைப் பிதுரர் பிதாமகர்களைக் குறித்து முன்வைத்த பிண்டங்களி னருகில்

போட்டு வடக்குமுகமாகத் திருப்பி ஆசமனஞ்செய்து; மும்முறை பிராணயாமஞ்செய்து; அதன்பின் தென்முகமாய் வசந்தரது முதலிய ஆறு ருதுக்களையும் பிதுரர்களையும் மந்திரத்துடன் நமஸ்காரம் புரியவேண்டியது.

எள்ளுந் தண்ணீருமாக முன்விட்ட மீதி சலத்தைத் தொன்னையுடன் கைமறித்தலாகப் பூமியில் விழும்படி மூன்று பிண்டங்களையுந் தனித்தனிச் சுற்றவேண்டியது. அம்மூன்று பிண்டங்களில் கிரமமாகக் கொஞ்சங் கொஞ்சமாக எடுத்துத் தான் தனித்தனி மோந்து போடவேண்டும்.

ஐந்து வயதானவுடனிறந்தால் அதிக மந்திரமின்றி பத்துநாள் பிண்டம்போடவேண்டும். பன்னிரண்டு வயதுக்குள் அல்லது அதற்கு மேற்பட்டேனும் இறந்தவருக்கு விருடோற்சனம் செய்தல் வேண்டும். சபிண்டீகரணம் செய்வது கூடாது; பால் வெல்லஞ் சேர்த்துப் பிண்டம் போடல்வேண்டும். குடை, கடகம், தீபம் முதலிய தானஞ் செய்யவேண்டும்; இதைச் செய்யாவிடில் மரித்தவன் மரமே யாகின்றான்.

ஏகோதிஷ்ட பலன்

திலதருப்பையோடு ஏகோ தீட்டாதி சிரார்த்தஞ் செய்தால் மரித்தவன் மறுபிறப்பில் உத்தம குலத்துதித்துத் தீர்க்காயுளைப் பெறுவான்.

சபிண்டீகரண பலன்

இறந்தவன் வருடாந்தத்தில் சபிண்டீகரணம் செய்து இப்பிண்டத்தை அக்குலத்தில் முன் இறந்தவர்களுடைய பிண்டத்தோடு சேர்த்தல்வேண்டும். அப்படிச் செய்தால், இறந்தவன் பிரேதத்துவம் நீங்கிப் பிதிர்த்தேவரோடு சேர்வான்.

கிரியாதிகாரி

தனது ஆன்மாவே புத்திரனாக உதித்தலால், தந்தைக்கு மகனும், மகனுக்குத் தந்தையும் கிரியை செய்யவேண்டிய விதியாயிற்று.

சொந்த மனைவிக்கே பிள்ளைபிறந்தால், பிதுர்த்தேவர் மகிழ்கின்றார்; ஒருவனுக்குப் பல பிள்ளைகள் பிறந்தாலும்; முதற்பிள்ளையே

கிரியாதிகாரனுகின்றன் என்றுலும்; மற்றப் பிள்ளைகளும் காரியாதி களைக் கட்டாயம் அநுட்டித்தே தீரவேண்டும்.

கன்னிகாதானமாகக் கொடுத்த பெண்வயிற்றுப் பௌத்திர னும் சிரார்த்த காரியங்களுக்கு முக்கியவானுவான்.

வைப்பாட்டி மகன் யாதொரு காரியமும் செய்யக் கூடாது. ஆனல், சில தருமங்களை மாத்திரம் செய்யலாம்; முற்றும் சிரார்த்த விதியைக்கொள்வானேற் செய்தவனும் மரித்தவனும் நரகம் சேர்வர்.

வேசிமகன் தன்னைப் பெற்றவளை மாத்திரங் குறித்து வருடந் தோறுஞ் சிரார்த்தஞ் செய்யலாம். ஆனல், பிராமண போசனுதி தானங்களைச் செய்யலாகாது. மீறிச்செய்த வேசிமகனும், பிராமண னும், அதையேற்கும் பிதுரரும் மீளாநரக மடைவர்.

இறந்த பன்னிரண்டாம் நாள்; மூன்றும் பட்சம்; ஆறு மாதத் தில் சபிண்டீகரணம் செய்யலாம். தந்தைக்குக் கருமாதிகளைச் செய்து சபிண்டீகரணஞ் செய்யாதிருக்கும்போது புத்திரனுக்குக் கலியாணம் நேர்ந்தால்; உடனே சபிண்டீகரணஞ்செய்து மண வினையைச் செய்யவேண்டும். ஏனென்றல், மரித்தவன் சபிண்டீ கரணம் நடத்துமட்டும் பிரேதத்துவத்தோ டிருக்கிறன். அதனல், மகனுக்குச் சிறிது அசுத்தியாம்.

சபிண்டீகரணம் பன்னிரண்டாம் நாளில் செய்வதே உத்தமம். அஃது நடத்தியபின் தாய் தந்தையரின் மூன்று தலைமுறைக்கும் சிரார்த்தஞ் செய்தல் வேண்டும்.

கன்னிகாதானமாக வந்த மனைவியிறந்தால் புருடன் தனது கோத்திரஞ்சொல்லிக், கிரியாதிகளைச் செய்தல்வேண்டும். மாமிச விற் கிரையம்போல பரியங்கொடுத்து வாங்கிய மனைவி யிறந்தால், அவள் பிதாவின் கோத்திரத்தைச் சொல்லிக் கிரியை செய்யவேண்டும்.

தந்தைக்கு மகனே கிரியை நடத்தல் வேண்டும். இல்லாவிடில் அவன் அண்ணன், அல்லது தம்பி, அல்லது அவர்கள் புத்திரரிலாரே னும் செய்யவேண்டியது. மனைவிமக்கள் முதல் யாவருமில்லாத காலத்தில் தாயாதிகள் செய்யவேண்டும். தாயாதியில்லாவிடில் மாணுக்கன் செய்யவேண்டும். அவனுமில்லாவிடில் புரோகிதனே கருமம் செய்யவேண்டும்.

கிரியானுஷ்டிப்பு

பிரேதத்தைக் குறித்துச் செய்யப்படும் சிரார்த்தத்தில் :

1 பிராமணசீர்வாதம்
2 பிராமணக்ஷேமவிருப்பம்
3 இரட்டைக்குசை
4 ஓமம்
5 சேடத்தை நாய் துகரலாக தெனல்
6 சேடத்தையுண்ணல்
7 விகிரம்
8 ஸ்வதா என்ற சப்தம்
9 உடன்சொல்லல்
10 ஆவாகனம்
11 நமஸ்காரம்
12 எல்லோவரையிற் பின்சொல்லல்
13 வலம் வருதல்
14 சம்பிரதாயமாக பூதியணிதல்
15 ஏகோதிஷ்டம்
16 பணவம்
17 பதிற்சப்தம்

ஆகிய இப்பதினேழும் வேண்டியதில்லை; மறந்து செய்யினும் மாநரகவாசமுண்டாகும்.

மரித்தவுடனே கைகால்களைக் கட்டல்வேண்டும்; அங்கு உறவினரெல்லாரும் வந்திருத்தல் வேண்டும்; அப் பிரேதமுள்ள கிராமத்தில் அதைத் தகனஞ்செய்யுமட்டும் அன்னகாரங் கொள்ளலாகாது; உண்டால் மாமிசமுண்ட தோடமும், இரத்தமுண்ட தோடமுமடைவர்; தாம்பூலதாரணம், தந்தசுத்தி, ஸ்திரீசையோகம், தேவபூசை, வேறு சுபகாரிய முதலியவைகள் நடத்தப்பட்டது.

நித்திய சிராத்தம்

நாள்தோறும் ஓர் சற்பாடியனுக்குப் போசனஞ் செய்வித்து அன்னமும் புனலும் ஒரு கடத்தில் நிறைத்து இறந்தவனைக் குறித்துத் தானஞ் செய்வதால் இறந்தவர் மகா சுகத்தை யடைகின்றனர்.

பிராமணனுக்குப் புத்திர னுற்பவித்தாலும், விப்பிரன் மரித்தாலும் பத்துநாள் ஆசௌசமுண்டு; அவர் வீட்டில் யாரு முண்ணலாகாது.

மிருகம் அக்கினி இவைகளாலும், தேசாந்தரஞ் சென்றும் இறந்தவனுக்கு உடனே கருமஞ் செய்யலாகாது; ஆனல், கேட்ட போதே ஸ்நான்மாத்திரஞ் செய்யவேண்டும்.

அரசனுக்கும், தவசிக்கும், யாகம்புரியும் பார்ப்பானுக்கும், அவர்கள் தாயத்தாரிறந்தாலும் ஆசௌசமில்லை.

ஒருவனுக்குப் பெண் பிறந்தால் அவன் தாயத்தாருக்கு ஆசௌசங் கிடையாது; அவன் தாய்க்குமாத்திரம் பத்துநாள் ஆசௌசமுண்டு; தந்தைக்கு ஸ்நான மாத்திரமே போதும்.

மணம், யாகம், உற்சவத்திற்காகக் கங்கணம், பூசை, அதிகவியாதி இவைகளைக்கொண்ட காலங்களில் ஆசௌசங் கிடையாது.

ஒரு ஆசௌசம் வந்தவுடனே இடையில் வேறொரு ஆசௌசம் வந்தால், முன் வந்ததோடு பின்வந்ததும் தாயத்தார்களுக்கு நிவர்த்தியாம்.

ஆசௌசம் வருமுன் பிராமணருக்குக் கொடுக்க உத்தேசித்திருந்தகை ஆசௌசம் வந்தவுடனே கொடுக்கலாம். பிராமணரும் அப்படியே தான் வாங்கவேண்டும்.

ஒருவன், பசு, பிராமணர், மாதர் இவர்களைக் காக்கும் காரியத்தினும், யுத்தத்திலும் உயிர்விடுவானேல், அவனைக் குறித்து அவனை யுற்றவர்கள் ஒருநாள் மாத்திரம் ஆசௌச மிருக்கலாம்; ஒருகால் ஆசௌசமின்றி ஸ்நானஞ் செய்தாலும் போதும்; ஆசௌசமில்லை.

விருடோற்சகம்

தலசுத்தி செய்து பின்னர், அக்கினிப்பிரதிட்டை செய்து ஒரே வருணமுடைய காளைக்கன்று ஒன்றும், அதற்குச் சிறிய கடேறிக்கன்றொன்றும் கொணர்ந்து மஞ்சனமாட்டி அலங்கரித்து வாலில் தருப்பணஞ் செய்துவிடுத்து, சாந்தி சிராத்தம் செய்து ஒரு பட்சமட்டும் அந்தணருக்கு ஆன்ம திருப்தியை யுண்டாக்கி, வெள்ளி, எள்ளு, நீர்க்கும்பம், வஸ்திரம் இவற்றைத் தானம்புரிந்தால் நூற்றொரு தலைமுறையி லுள்ளோர் சுவர்க்கம் புகுவர்.

தந்தை தன் புத்திரனுக்கும், தமயன் தனது தம்பிக்கும் சிராத்தஞ் செய்ய நேரிட்டால், தலைமுறையி லுள்ளோரைக் குறிக்காமல் இறந்தவனைக் குறித்து மாத்திரமே செய்யவேண்டும்.

தாய் தந்தையரைக் குறித்து செய்வானாயின், மூன்று தலைமுறையைக் குறித்தே செய்யவேண்டும். ஆசௌசம் விருத்தி முதலியவை நேரிட்டால் அவை நீங்கியதினத்தில் செய்யலாம்.

கருமஞ் செய்பவன் பஞ்சகாலையில் துயிலலாகாது; இறந்தவன் குணங்களைச் சிறப்பித்துரைக்கவேண்டும். எமனைத் துதித்தல்வேண்

டும். பத்துநாட்களிலும் பிண்டத்தால் இறந்தவன் சரீரமடைகின் றான். இடையில் அல்லது செய்யாவிடின் தேகம்பெறாது வருந்துவன்.

இறந்தவனுக்கு ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதி னொரு நாட்களில் நவசிராத்தம் செய்யவேண்டும். முதல்நா ளெவ் விடத்தில் செய்யப்பட்டதோ அவ்விடத்திலேயே மற்ற பத்துத்தின முஞ் செய்யவேண்டும். அதன்பின் எந்தச் சாதியாருக்கு எத்தனை நாள் ஆசௌசம் விதிக்கப்பட்டதோ அத்தனை நாளும் அவசியம் பிண்டதருப்பணஞ் செய்தல்வேண்டும்.

மாசியம்

எந்தமாதம், எந்த (பக்ஷம்) பக்கம், எந்தத் திதியில் மரிக்கின் றானோ அந்தத் திதியிலே மாசியஞ் செய்யவேண்டும்.

எவன் வருத்தப்பட் டிறக்கின்றானோ அவனைக் குறித்து ஏகோ திட்டசிராத்தஞ் செய்யவேண்டும். அதனால் அவன் இன்புறுகின் றான். அந்தச் சிராத்தஞ் சதுர்தியன் பன்னிரண்டாம் நாளிலும், வைசியன் பதினைந்தாம் நாளிலும் செய்தல்வேண்டும்.

சூத்திரனுக்குத் தாய் தந்தையர் மரிக்கினும் மகவுபிறக்கினும் ஒருமாதம் அல்லது ஒருபட்சம் ஆசௌச முண்டு.

காலம்

அவிட்டமுதல் ஐந்து நட்சத்திரங்கள் சிரேட்டமானதால் அவற் றில் மரிக்கின்றவனுக்குச் சமஸ்காரங்கள் உடனே செய்யலாகாது. அவை கழிந்த பின்னே செய்யவேண்டும். இவ்விதி ஒருவாறே கொள்ளல்வேண்டும். ஏனெனில், உயிர் நீங்கியபின் உடல் வைத் திருக்க உதவாதாதலால், உடனே சமஸ்காரஞ் செய்தல் வேண்டும். கனிட்டா பஞ்சகத்தில் சொல்லியபடி இறந்தகால தோட நிவர்த்தி யின்பொருட்டுச் சில கருமங்களை அதிகமாய்ச் செய்யவேண்டும். மேற்படி நட்சத்திரங்களி லிறந்தவர்களுக்கு நற்கதி கிடையாததால், எள்ளு - நெய் - பொன் - மடி முதலிய தானம் புரியவேண்டும். இவ் வாறு செய்யாவிடில் செய்யவேண்டியவன் தன்பப்படுவான்.

சபிண்டீகரணம் செய்யாமல் மாசியமாத்திரம் செய்துவரும் போது ஆசௌசம் நேரில் அம்மாசியத்தை மறு மாசியத்தோடு சேர்த்து செய்யவேண்டும்.

உபநயன மற்றவன் கிரியைசெய்ய நேரிடின் சங்கற்பவிதமான மாய்ச் செய்யவேண்டும்.

ஒரேகாலத்தில் தூரதேசத்தில் அநேக ரிறந்ததாகக் கேள்விப் பட்டால்; யார் இறந்தானென்று முன்பு கேட்டானே அவனுக்கு முன்பும், மற்றவருக்குப் பின்பும் கிரியை செய்யவேண்டும்.

மரித்தகினங் தெரியாது கேள்விப்பட்டால் அமாவாசையில் சேர்த்துக் கிரியை செய்யவேண்டியது; தினந் தெரிந்தும் மாதந் தெரியாவிடில் ஆடி - புரட்டாசி - மார்கழி - மாசி இம்மாதங்களில் கிருட்டினபட்சத்தில் அட்டமி அல்லது அமாவாசையிலும் செய்ய லாம்.

உபநயன மாவதற்குமுன் தந்தை யிறந்தால் புத்திரன் கருமங் களைச் செய்யலாம்.

புத்திரனைப் பெறுதவளிறந்தால் புருடன் கிரியைசெய்யவேண் டும். கணவனில்லாவிடில் தாயத்தாரல்லது அவர்கள் புத்திரர் அல் லது புரோகிதர் முதலினோர் செய்யலாம்.

சபிண்டீகரணஞ் செய்தபின் எக்காரணத்தாலேனும் மறந்து பிதுர்த்தேவரெல்லாரையும் விட்டு இறந்தவனைக்குறித்து மாத்திரம் சிரார்த்தஞ் செய்யில் மறித்தவன், செய்கிறவன், செய்விப்பவன் மூவ ரும் நரகமடைகின்றார்கள்.

இறந்தவனுக்குப் பல பிள்ளைகளிருந்தாலும்; ஒருவருட மட்டும் ஒருவனே செய்யவேண்டும்.

பாட்டனுயிரோ டிருக்கும்போது தந்தை யிறந்தால் தந்தைக் குச் சபிண்டீகரணஞ் செய்யலாகாது. பின் எப்படியென்றால், பாட்டனிறந்தபின்பு சபிண்டீகரணஞ் செய்து அதன்பின் இறந்த தந்தைக்குச் செய்தல் வேண்டும்.

பிதாவும் பிதாவைப் பெற்ற பாட்டியும் உயிரோ டிருக்கும் போது தாயிறந்தால், அவளுக்குச் சபிண்டீகரணஞ் செய்யலாகாது. அவ்விருவரு மாய்ந்தபின் செய்யவேண்டும்.

கணவனோடு மனைவியும் இறப்பினால், அவ்விருவருக்கும் தனித் தனியே பிராமணரை வருவித்துச் சிரார்த்தஞ் செய்யலாம். பாக

மாத்திர மொன்றுய்ச் செய்யினும் பிண்டமாத்திரம் தனித்தனியே போடவேண்டும்.

பன்னிரண்டாம் நாள் விதிப்படி சபிண்டீகரணஞ்செய்து ஓராண்டு மட்டும் நித்திய சிரார்த்தம்செய்யில் எவனைக் குறித்துச் செய்கின்றதோ அவனும் செய்வித்தோனும் மோட்சமடைவர்.

சிரார்த்தகாலங்களில் சேர்க்கவேண்டிய திரவியங்கள் என்ன வென்றால், காரைக்கீரை, தேன், செந்நெல், வெண்சாமரை, சாமை, வழுத்துணை, பிரண்டை, கிழங்குகள், நவதானியம், எள்ளு, உளுந்து, பயறு, கோதுமை, மலையகத்தி, கடுகு, நெய், பால், கதலி, அவரை, மா முதலியவைகளே சிறந்தனவாம் என்று எல்லா இந்துமதசாத்திரங்களுங் கூறுகின்றன.

சாத்திர பேதம்

சூசனம்

இதுவரையிலும் உலகமும், சீவர்களும் உற்பவித்த விதமும்; சீவர்கள் அனுட்டிக்கவேண்டிய முக்கிய சில பொது விதிகளையும்; ஆசீர்மானுட்டானங்களையும்; நித்திய கருமாதி சமஸ்காரங்களையும்; பிதிரர் காரியங்களையும் கூறினேம். இனி, அவரவர்கள் தேவ-பூஜா விரத-முத்தியிலக்கணங்களைக் கூறத்தொடங்கி, முதற்கண் அவைகளைப்பற்றி விவரமாகத் தெரிவித்திருக்கும் சாஸ்திர சாரங்களைக் கூற ஆரம்பித்தனம்.

சாத்திரங்கள் - தேசத்தாலும், காலத்தாலும், சாதியாலும், சமயத்தாலும், ஆசாரத்தாலும், தொழிலாலும் அவரவர்களின் விவேகவன்மை மேன்மைக்குத் தக்கபடி அளவிறந்ததாய்; விகற்ப சொரூபமாய்; பலபாஷா ரூபமாகக் காணப்படுகின்றன. ஆதலின், நமது இந்து சமயாசார சங்கிதமாய் அனுதியாய் இறைவனுலும், அவ் வழிப்போந்த அறிஞர்களாலும், வழிமுறையே தோன்று நமது சருவானுகூலப் பிரபாவமாய் நமது முன்னோர்களாலும், பின்னோர்களாலும் கைக்கொண் டானந்தித்ததும், நாமும் வழிப்பட் டுய்ய வேண்டியதுமாய் எம்மதத்தாரும் புகழத்தக்கதாய், சருவாதிக்க ஏகேசாய் சித்தி முத்தியாதி ஞான சொரூபமாயுள்ள சாத்திர பேதங்களை மாத்திரங் கூறுகிறேம்.

சதுர்வேதம்

ஆதியில் கடவுள் ஆன்மாக்களின் புண்ணியபாவ விதிவிலக்குகளின்பொருட்டு, பொதுவாய் சிலசாத்திரங்களை எற்படுத்தினர். அதன்பேர் வேதம் என்பதாம். வேதம் என்னும் சொல்லானது, வித் என்னும் தாது அடியாகப் பிறந்து, அறிவு சொரூபம் என்னும் அருத்தத்தைக் குறிக்கும்.

1. இருக்கு
2. எசுர்
3. சாமம்
4. அதர்வணம்

என நான்கு விதமாக உள்ளது.

இவற்றில், இருக்குவேதம் பதிஞ்ஞெரு சாகைகளையும்; எசுர் வேதம் நூறு சாகைகளையும்; சாமவேதம் ஆயிரம் சாகைகளையும்; அதர்வணவேதம் ஒன்பது சாகைகளையுமுடையவைகளா யிருக்கின்றன. இவைகளில் * விதிவாதம் - அருத்தவாதம் - மந்திரவாதம் - நாமதேயம் என்னும் பகுதிகளைக்கொண்டே சருவதருமங்களையும் கூறுகின்றன.

இவைகளுக்கு அதிகாரிகளையும், அதற்குப் பாவியசூத்திராதி காரியங்களையும், பிறசாகைகளையும், அணுவாதி பாகுபாடுகளையும் "போதாயன சம்மிதை" முதலியவைகளிற் காண்க.

வேதம் ஒருவரால் எழுதப்படாதது. அதற்கு "எழுதாக்கிளவி" என்றும், "ஆற்றலழியுமென் றந்தணர்காணு நான்மறையைப்போற்றி யிசைத்தேற்றின் புறத்தொழுதார்" என்றுங் கூறி, அதனுற்றுன் மறையெனவுங் களித்தனரென்றும் ஆன்றோர் பலருங் கூறியிருக்கின்றனர். அது எக்காருத்தாலை தெரியவில்லை என்னெனின்? வேதங்களாதியானே மறையோரா லனுட்டித்தும், அனுட்டிக்கப்பட்டும், அச்சிடப்பட்டு மிருத்தலினாலும், அவற்றின் பாடியங்களும், சூத்திரங்களும், பிறசாகைகளும், அதனங்களும், உபகிடதாதிகளும், கோவிக்கப்பட்டிருத்தலானும், எக்கலைகளும் வேதத்தினின்றே தோற்றிற்றுக் கொள்ளலானும், உண்மையினுள்

---

* விதிவாதம் - பந்தமோட்சாதி விதிவிலக்குகளைக் கற்பித்தல். அர்த்தவாதம் - சத்தியரூபமாக ஈசுரனைத் துதித்தல். மந்திரவாதம் - கிருத்தயங்களை விலக்குதல். நாமதேயம் - கிரியாதிகளின் பெயர்களை விவரித்தல்.

ளதா உத்தேசியாதொழியார். ; இங்ஙனம் ஏனை கற்றுங்கல்லா வழிக்கழிக்கின்ரு ரென்னின், என்னென்பேம்; காலாதீதம் காணப் பெரூது காணுழி வடமொழிக் கண்ணின்றி அவ்வறுமையானுற்ற வேற்றுமையாலென்ப.

வேதாங்கம்

மேற்சொன்ன வேதத்திற்கு ஆறு அங்கங்களுண்டு:

அதாவது, 1. சந்தசு என்னும் பாதங்களும், 2. கற்பம் என்னும் கைகளும், 3. வியாகரணம் என்னும் முகமும், 4. சிட்சை என்னும் நாசியும், 5. சோதிடம் என்னும் விழிகளும், 6. நிருத்தம் என்னும் செவிகளும் ஆகிய பிரதான அங்கங்களிருக்கின்றன. இவற்றுள்:—

சந்தசு மந்திரசுலோகங்களுக்கு அக்கரகணிதமும்; கற்பம் ஆசுவலாயன, போதாமன, ஆபத்தம்பாதி சூத்திரங்களின் எக்கியப்ர யோகாதிகளையும்; வியாகரணம் வைதீகசகத்திரார்த்த சித்தியையும்; சிட்சை சபதபாளிக்கிரண வேதாகதியாயனுதிகளையும்; சோதிடம் திதி-நட்சத்திர-வார-யோக லக்கினுதிகளையும்; நிருத்தம் வைதிக சத்த நிர்வசனத்தையும் கற்பிக்கும்.

வேதோபாங்கம்

அந்த வேதத்துக்கு மிருதி, புராண, நியாய, மீமாஞ்சை என்னும் நான்கும் உபாங்கமாம். இவற்றினிலக்கணம் மேற்சொல்லுதும்.

உபவேதம்

அந்த வேதத்துக்கு "ஆயுள்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேத"மென உபவேதம் நான்குண்டு. அவற்றுள் ஆயுள் வேதம்-வியாதிநிதானம், வியாதிச்சின்னம், மந்திர ஔஷதாதி சிகிச்சைகளால் • ஆயுள் ஆரோக்கியாதிகளைக் காட்டும். அர்த்த வேதம்-தட்சணை, ஆச்சியம், சருமுதலான உபகரணங்களாம். தர்மாதி சதுட்டயத்துக்குச் சாதனமாம். தனுர்வேதம்-சத்துருவை அழிக்கும் தகுதியான மந்திராஸ்திர பிரயோகங்களைக் கற்பிக்கும். காந்தருவவேதம்-சாமவேதாதிகளின் ச-ரி-க-ம-ப-த-நி என்னுஞ் சப்தநிலவர கீதப்பிரபந்தங்களை விவரிக்கும்.

உபநிடத்து

அந்த வேதத்தில் "சீருத்திரம், பிரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காளாக்கினி, சடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கியம், பாற்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, சரசபிந்து, பிரமகபாலம், தோஜோபிந்து, வாசநேயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசியாயநீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பராக்கிரமம், புரோட்யம், முற்கலம், மூண்டகம், மைத்திராயநீயம்" என்னும் மூப்பத்திரண்டு உபநிடத்துக்களும், ஞானங்கமான விபூதி, ருத்திராக்காதிகளையும், பிரம்மஞ்ஞானிகளையும் விவகரிக்கும்.

மிருதி

மிருதிகள் - மது, அத்திரி, ஔரிதர், விஷ்ணு, யாஞ்ஞவற்கியர், உசனர், ஆங்கிர, சத்யமர், ஆபத்தம்பர், சம்வத்தர், காத்தியாயனர், பிரகத்பதி, பராசர், வியாசர், சங்கிலிதர், தட்சர், கௌதமர், சாதாதபர், வசிட்டர் என்னும் பத்தொன்பது பெயராலியற்றப்பட்டு அவர்கள் பெயரே நூற்பெயராக வழங்கும் பத்தொன்பதுமாம். இவையே தருமசாத்திரங்களாம். இவற்றுள் சங்கலிதமென்னு மிருதியொன்றுமாத்திரம் பொதுவாயுள்ளது. மற்றப் பதினெட்டு மிருதிகளுக்குள் கிருதயுகத்தில் மதுமிருதியும், திரேதாயுகதில் கௌதம மிருதியும், துவாபரயுகத்தில் சங்கலிதமிருதியும், கலியுகத்தில் பாரசர மிருதியும் பிரதானமாயிருக்கும்.

இதிகாசங்கள்

அம் மிருதிகளிற் கூறும் விதி விலக்குகளுக்குக் காரணமாகச் சரிதைகள் கூறும் சிவரகசியம், இராமாயணம், பாரத மென்னும் மூன்றும் இதிகாசங்களாம்.

புராணங்கள்

காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடியம், மச்சம், மார்க்கண்டேயம், பிரமாண்டம், சைவம் என்னும் சிவபுராணங்கள் பத்தும்; நாரதீயம், பாகவதம், காருடம், விண்டு என்னும் விஷ்ணுபுராணங்கள் நான்கும்; பிரமம், பதீமம் என்னும் பிரம புராணங்கள் இரண்டும்; பிரமகைவர்த்தம் என்னும் அக்கினி ட்ராணம் ஒன்றும் சேர்ந்து பதினெண் புராணங்களாம். இப்

பதினெண் புராணங்களும் வேதவியாச மகாமுனிவர் நாலுலட்சம் சங்கைகளாக ஓதியுள்ளார்.

உப புராணங்கள்

ஆதித்தியர், காந்தர், சோமர், கபிலர், கௌசிகர், சாம்பர், சிவ சன்மர், துர்வாசர், நாரசிங்கர், நாரதீயர், பராசர், பார்க்கவர், பிர மாண்டர், மாரீசர், மானவர், வசிட்டர், வாயவியர், வாருணர் என்னும் இருடிகளாலியற்றப்பட்டு; அவ்விருடிகள் பெயரால் வழங் கும் பதினெட்டும் உப புராணங்களாம். இவ் வுபபுராணங்கள் பதினெட்டினுள்ளும் வைதிக கருமங்களையே கூறப்படும்.

ஆகமங்கள்

ஆகமங்கள் இருபத்தெட்டு. அவை:—காமிகம் - யோகசம் - சிந்தியம் - காரணம் - அசிதம் - தீர்த்தம் - சூக்குமம் - சகத்திரம் - அஞ்சு மானம் - சுப்பிரபேதம் - விஜயம் - நிவாசம் - சுவயம்புவயம் - அனலம் - வீரம் - இரௌரவம் - மகுடம் - விமலம் - சந்திரஞானம் - விபம் - புரோற்கீதம் - இலளிதம் - சித்தம் - சந்தானசருவோத்தமம் - பார மேச்சுரம் - கிரணம் - பேதம் - வாதுளம் என்பவைகளாம். இவ்விரு பத்தெட்டும் சகுணகிரியா மார்க்கங்களை விசேடமாய் நிரூபிக்கும். இவ்விருபத்தெட்டினுள், காமிகம் முதல் அசிதம் வரையுமுள்ள ஐந்தும் கௌசிக முனிவர்க்காகவும், தீர்த்தம் முதல் சுப்பிரபேதம் வரையுமுள்ள ஐந்தும் பாரத்துவாச முனிவர்க்காகவும், இரௌரவ முதல் விபம் வரையுமுள்ள ஐந்தும் கௌதம முனிவர்க்காகவும், புரோற்கீதம் முதல் வாதுளம் வரையுமுள்ள எட்டும் அகத்திய முனிவர்க்காகவும் ஈச்சுரனார் கூறியருளியதாம்.

உபாகமங்கள்

பாதப்பாரகம் - பரம் - சிவம் - சத்தி - கலி - பிரகாசம் - பாரதந்தி ரம் - சிவாக்கியம் - சொற்பிரகாசம் என்னும் ஒன்பது உபாகமங் களாம்.

சாத்திரங்கள்

மேற்கூறியு வேதங்களும் அவற்றின் அங்கங்களும் உபாங்கங் களும், உபநிடதங்களும், ஆகமங்களும் கூறியுள்ள விடயங்களின் சாராம்சங்களைச் சொல்லும் வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகாரம், பூர்வமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை என்னும் ஆறுமாம்.

கலைஞானங்கள்

கலைஞானங்கள் அறுபத்துநான்கு. அவை:—அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தருமசாத்திரம், யோகசாத்திரம், மந்திரசாத்திரம், சகுணசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்தியசாத்திரம், உருவசாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திரபரீட்சை, கனகபரீட்சை. இரதபரீட்சை, கயபரீட்சை, அசுவபரீட்சை, இரத்தினபரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராமவிலக்கணம், மல்லயுத்தம், ஆக்கிராடனம், உச்சாடனம், வித்துவேடனம், மதனசாத்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவாதம், பைநீலவாதம், கௌத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், மூட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கனனத்தம்பம், கட்கத்தம்பம் அவத்தைப் பிரயோகமுமாம்.

பதினேண் வித்தைகள்

இதுவரையிற்சொல்லி முடித்தவைகளுக்குள்ளே வேதங்கள் நான்கும், வேதாகமங்கள் ஆறும், உபாங்கங்கள் நான்கும், உபவேதங்கள் நான்கும் ஆகக்கூடிய பதினெட்டும் வித்தைகளாம்.

பாடியங்கள்

மேற்குறித்த சாத்திரங்கள் ஆறினுள்ளே மீமாஞ்சை யென்பது மிகவும் விசேடமாய் இருபது அத்தியாயத்திலே இரண்டு பிரிவாகக் கூறும். அவ்விரண்டில் முதற்பாகத்தைச் சைமினி முனிவர் உலகோபகாரமாய்ச் சூத்திரங்களாகப் பன்னிரண்டு அத்தியாயங்களால் வேதாதிகரணமென்னும் பெயரிட்டுச் சாத்திர நியாயத்திலே இயற்றியருளியது. அது பூர்வமீமாஞ்சையென்றும் சைமினி சூத்திரமென்றும் வழங்கும். அச் சூத்திரத்திற்குச் சாபரரென்னும் முனிவர் பாடிய மியற்றினர். அப்பாடியத்திற்குச் சாபர மென்றுபெயர். அப்பாடியத்தைப் பாட்டாசாரியர் வார்த்திக ரூபத்தில் ஒரு மாதாந்தரநூல் செய்தனர். அதற்குப் பாட்டமென்று பெயர். அப்பாட்டாசாரியாரது பிரபாகரீடர் முன்சொன்ன சாபரபாடியத்துக்கே ஒரு மாதாந்தரம் செய்தனர். அதற்குப் பிரபாகரமென்று பெயர். மேற்

படி மீமாஞ்சையின் இரண்டாம் பாகத்தை வியாசமுனிவர் சூத்திர ரூபமாய் எட்டு அத்தியாயத்தில் பரமான்மபிரதிபாதிகமாய் க்கூறினர்; அது வியாசசூத்திர மென்றும் உத்தரமீமாஞ்சையென்றும் சொல்லப்படும்; அதில் முதல் நான்கத்தியாயமும் தேவகாண்டமாம்.

அவைதிக சாத்திரத் திரவியம்

இதற்குமேல் பிரகற்பதி - ஆர்கத - சுகதரென்னும் இவர்களால் முறையே சொல்லப்பட்ட சாருவாக - சைந - பௌத்தமென அவைதிக சாத்திரமு மூண்டு.

சாத்தீக பாஞ்சராத்திரம்

இதற்குமேல் சத்திதத்துவவாசி யென்னும் ஒரு ஆன்மனலும், வாசுதேவனலும் முறையே பிரதிபாதிக்கப்பட்ட அதுக்கிரமத்தில் சாத்தீகம் பாஞ்சராத்திரமென சாத்திராந்தரத்துவய மூண்டு.

இலௌகிக சாத்திரம்

தன்வந்திரியாதிகளாற் சொல்லப்பட்ட ஆயுள்வேதம்; தண்ட நீதி முதலான சாத்திரம் திருட்டபலன்களைப் பிரதிபாதிக்கும்.

வைதிக சாத்திரம்

சைமினி - அக்கபாதர் - கணதரென்னும் இருடீசுரர்களால் முறையே சொல்லப்பட்ட பூர்வமீமாஞ்சை நியாயம் வைசேடிக மெனத் திருட்டாதிருட்ட பலன்களைப் பிரதிபாதிக்கிற சாத்திரத்திரய மூண்டு.

ஆத்தியான்மிக சாத்திரம்

கபிலர், பதஞ்சலி, வியாசரென்னு முனிவர்களால் முறையே சொல்லப்பட்ட சாங்கியம், பாதஞ்சலம், வேதாந்தமென ஆன்ம ஞானபலன்களுள்ள ஆத்தியான்மிக சாத்திரத்திரயமு மூண்டு.

ஆதிமார்க்கிக சாத்திரம்

மாயாதத்துவ, வித்தியாதத்துவ, வாகளான உத்திராற் சொல்லப்பட்ட பாசுபதம், கபாலிகம், மாவிரதமென ஆதிமார்க்கிக சாத்திரத்திரயமு மூண்டு.

மேற்கூறிய சாத்திரங்களுக்குப் பிற்கால் ஒவ்வோர் காலத்தில் வழிநூல், சார்புநூல் முதலிய அநேகங் கிரந்தங்கள் தோன்றி அளவில்லாதனவா யிருக்கின்றன. நூறுவயதோடு தபோவரத்தாற்

பிறந்த ஒரு தீவிரதரன் தன் ஆயுள் மட்டும் சாத்திரங்களை முற்றுங் கற்கப் புகுந்தானெயினும், அந்நூற்பெயர்களை மாத்திரங் கற்பதும் கடினம். எனவே, சாத்திரங்கள் பலவாதலின் "கற்றது கைம்மண் ணளவு; கல்லாதுலகளவென்று உற்றகலைமடந்தை யோதுகின்றுள்" அன்னம்போற் பிறவிப்பயன் யாதொனத்தேறுதலே அவசிய மென்றபடி!

கலிதருமம்

கலியுகத்தில் மனிதருக்கு வருணச்சிரம ஆசாரமுள்ள நடக்கை யிராது. அதில்லாதபோது இருக்கு-எசுர்-சாமம் என்கிற வேதங் களினுலே உணர்த்தப்பட்ட யாகாதி சற்கிரியைகளும் இல்லை. மேலும், கலிகாலத்தில் தருமமான விவாகங்கள் நடக்கமாட்டாது. குருசிஷ்ய கிரமமுங் கிடையாது. தம்பதிகள் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ள வேண்டிய தருமமில்லை. அக்கினியில் செய்யத் தக்கதே எக்கியமென்ற முறையுமில்லை. எக்குலத்தினுலும் பலவா னெவனை அவனே யாவர்க்கும் அரசனுவான். சகல சாதிகளிலே யும் பொருளுள்ளவனே கன்னிகாதானஞ் செய்ய பாத்திரமாவன். அல்லது, கல்வி யொழுக்கங்க ளுடையவ னுகமாட்டான்.

பிராமணன் எந்தவழியிலாவது தீட்சதனுவதே யல்லது, சாத் திரங்களிற் சொன்னவிதியாலே என்கிறதில்லை. கலியில் விதிக்கப் பட்டதே பிராயச்சித்த மென்பதில்லை. எந்தக் கிரியை யாகிலும் பிராயச்சித்தமாக அங்கீகரிக்கப்படும். எவனுக்கு எந்த வாக்யம் பிரியமாயிருக்கிறதோ அவை சகலமும் சாத்திரமே யாய்விடும். காளிமுதலான எதுவுந் தேவதையாகக் கொண்டாடப்படும். இன்ன னுக்கு இந்த ஆச்சிரமம் தருமென்பதில்லை. எவனுக்கும் எந்த ஆச் சிரமும் பிரவேசிக்கலாகும். ஒருவன்தான் வேண்டியபடி பட்டினி யிருப்பதும், வருந்துவதும், கொடுப்பதும், தவமும், சாத்திரங்களிற் சொல்லிய உபவாச கிருத்தியாதிகளைப்போலே தருமமென்று எண் ணப்படும்.

அன்றியும், அற்பமான திரவிய மிருப்பதினுலேயே தாமே கன வான்க ளென்கிற செருக்குச் சனங்களுக்கு உண்டாயிருக்கும். அப்படியே பெண்பிள்ளைகளுக்குக் கூந்தல் செவ்வையா யிருப்பதினு லேயே சவுந்தரிய கருவம் உண்டாயிருக்கும். கலிமுற்ற முற்றப் பொன்னும் மணியும் நல்ல ஆடைகளும் அழிந்துபோகும். மங்கையர்

கூந்தலிலே அலங்காரமாகப் பெற்றிருப்பார்கள். மேலும், பெண் பிள்ளைகள் பொருளில்லாத தம்புருடர்களை விட்டு எவனுகிலும் பொருளுடையவனு யிருந்தால் அவனையே புருடனுகத் தேடிக் கொள்வார்கள். எவன் விசேடமாய்ப் பொருள் கொடுப்பானே அவனையே சனங்கள் சுவாமியென்று கொள்வார்களே யன்றி, நற்குலப்பிறப்பு முதலானவைகளைச் சுவாமியென்பதற்கு ஏதுவாகக்கொள்ளமாட்டார்கள்.

இந்தக் கலியுகத்திலே புத்திக்குப் பயன் பொருள் சம்பாதிப்பதேயன்றி, ஆன்மஞானத்தைப் பயனுகக்கொள்ள மாட்டாது. அந்தப்பொருளும் வீடு முதலானவை கட்ட உபயோகிக்கப்படுமேயல்லது, யாகாதி கருமங்களுக்கு உபயோகிக்கப்படாது. அந்த வீடு முதலானவைகளும் தன் போகத்துக்கு உரியவையாக்கப் படுமேயல்லது, அதிதி முதலானவர்களுக்கு எவ்வளவும் உரியவையாக்கப் படாது. பெண்களெல்லாம் தளுக்கனுயிருக்கிறவனிடத்தில் காதலுற்று விபசாரிகளாய் இருப்பார்கள். புருடரோ அனியாயத்தினுலும் பணஞ் சம்பாதித்தவரிடத்திலேயே மனம்வைத்திருப்பார்கள். எவர்களும் நிநேகிதர் வேண்டிக்கொண்டாலும் மனதிறங்காமல் தங்கள் காரியத்தையே பெரிதாய்ப் பார்த்துக்கொண்டு அரைக்காற் பணத்திற்கும் ஆசைவைத்திருப்பார்கள். சூத்திராதிகள் பிராமணரைத் தங்களைப்போல் சாதாரண மனிதராக நினைப்பார்களேயன்றி விசேடமுள்ளவர்களாக நினைக்கமாட்டார்கள்.

பசுமாடுகளிலும் சனங்களுக்குப் பால் கொடுப்பதைப்பற்றி மேன்மையான எண்ணமே யல்லாது, சாதியைப்பற்றியதா யிராது. இக்கொடிய காலத்தில் பிரசைகளெல்லாம் பெரும்பாலும் மழையில்லாமையைப்பற்றின அச்சமுள்ளவர்களாய்ப் பசிக்குப் பயந்து சேர்ந்தவராய் வானத்திலேயே கண்வைத்துக்கொண் டிருப்பார்கள். மனிதர் தவசிகளைப்போலே காய் கிழங்குகளைப் புசித்துக்கொண்டு மழையில்லாமை முதலானவைகளினுலே தூக்கப்பட்டவர்களாய்த் தங்களைத் தாங்களே கொலைசெய்து கொள்வார்கள்.

கலிகாலத்தார் சுகமும் உல்லாசமும் அற்றவர்களாய்த் திரவியம் குறைந்தவராய் எப்போதும் பஞ்சத்தையும் பலவகைத் துன்பத்தையுமே பெற்றிருப்பார்கள். கலிவளர்ந்து வருகையில் எவர்களும் அக்கினிபூசை, தேவதாபூசை, அதிதி பூசைகளையும், பிண்டோதக

தானரூபமான பிதுர்பூசையையும் செய்யாதவராகி ஒழுகாமலே யுண்டு காலங்கழிப்பார்கள். ஸ்திரீகளும் மிகு ஆசையுங் குறுகின உடம்புமுள்ளவராய்ப் பேருண்டியுண்டு, மிகு பிள்ளைகளைப் பெற்றுச் செல்வமில்லாதவர்களாய் வருந்துவார்கள். மேலும், இரண்டு கைகளினாலேயுந் தலையைச் சொரிந்துக்கொண்டு கணவன் மாமனார் முதலானோருடைய கட்டளையை மிகுந்த அநாதரத்தோடு நிரஸ்காரஞ் செய்துவருவார்கள். இன்னும் பெண்பிள்ளைகள் எப்படி ஆவார்களென்றால், தேகசுத்தியில்லாமல் தங்களைப் போஷிப்பதிலேயே திடமுற்று, ஈனமான எண்ணங்கொண்டு; கடினமாயும் பொய்யாயும் பேசுவர்களாயிருப்பார்கள்.

குலஸ்திரீகள், தாங்கள் தியொழுக்கமுடையவராதலால், அப்படிப்பட்டவரிடத்திலே சினேகித்தவர்களாய்த் தங்கள் புருடனுக்குப் பலவகைப்பட்ட தீங்கையும் செய்துவருவார்கள். பிரமசாரிகள் விரதானுஷ்டானமில்லாமலே வேதாத்தியயனஞ் செய்வார்கள். கிரகத்தரோ சிறிதேனும் ஓமஞ் செய்யாதிருப்பதுமின்றித் தக்க பொருள்களையுங் கொள்வார்கள். வானப்பிரத்தரும் ஊரிலுள்ளவைகளைப் புசித்துவருவார்கள். சன்னியாசிகள் புத்திரமித்திராதிகளிடத்து அன்புடையவர்களாயிருப்பார்கள். அரசரெல்லாம் சனங்களைப் பரிபாலனஞ்செய்வதை முக்கியமாயெண்ணமல்; அந்த வரி இந்த வரியென்று சாக்கிட்டுக் குடிகளுடைய பொருள்களைப் பரித்துவருவார்கள். எவனெவன் யானை குதிரை முதலான சேனைகளை மிகவைத்திருப்பவனே அவனவனே அரசனுவான். பல சூனியனுயிருப்பவன் சேவகனுவான். வைசியர் பயிரிடுதல் வாணிகஞ் செய்தல் முதலான தங்கள் தொழிலைவிட்டுச் சூத்திரர் தொழிலாகிய பல தொழில்களைச்செய்து பிழைப்பார்கள். சூத்திரரோ சன்னியாசிக் குறிகளைத் தரித்தவராய்ப் பிச்சைவாங்கி யுண்டுகொண்டும், அநேகர் தங்களைப் பூசிக்கும்படி செய்துகொண்டும் பாசாண்டவிருத்திகளாயிருப்பார்கள். சனங்கள் பஞ்சத்தினாலும் வரியிருப்பதினாலும் துன்பமுள்ளவர்களாய்க் கோதும்பை ஏலம் என்னும் தானியம் விளையப்பெற்ற நீசதேசங்களுக்குப் போய்விடுவார்கள்.

இப்படி வருணச்சிரம தருமங்கள் கெட்டு வேதமார்க்கமே ஒளித்துப்போய்ப் பாசாண்ட மதங்களைக் கைக்கொண்டு சனங்கள் நடப்பதினாலே அதருமம் விருத்தியாவதுபற்றி ஆயுள் அற்பமாய்

விடும். அரசர்களுடைய குற்றத்தினால் மனிதர் சாத்திரங்களுக்கு விரோதமாய் வீணான தவங்களைச் செய்வதினாலே பாலியத்திலே மரணமுண்டாகும். பெண்பிள்ளைகள் ஆறேழு வயதுக்குள்ளாகப் பிள்ளையைப் பெறுவார்கள். ஆண்பிள்ளைகளோ ஒன்பது பத்து வயதுக்குள்ளே பிள்ளையுண்டாக்குந் திறமுடையவராவார்கள். பன்னிரண்டு வயதினுள்ளே நரைமுதலியவை உண்டாகும்; ஒருவனும் இந்தக் கலிமுதிர்ச்சியில் இருபது வருடங்களுக்குமேல் பிழைத்திருப்பதில்லை. கலிகாலத்தில் சனங்கள் அற்பஞான மூள்ளவர்களாய் வீண் தவவேடங்களைப் பூண்டு, கெட்ட நினைப்புடையவர்களாயிருப்பாராதலால், கொஞ்ச நாளிலேயே நசித்துப்போவார்கள்.

தருமம் எவ்வளவுக்கெவ்வளவு இழிந்து வருகின்றதோ அவ்வளவுக்கவ்வளவும் கலிவிருத்தியாயிற்றென்று புத்திசாலிகள் அறிந்து கொள்ளவேண்டும். மேலும், எப்போது பாசாண்டர் விருத்தியாகிறார்களோ, எப்போது வேத மார்க்கத்தை அனுசரித்த சதிபுருடருக்குத் தீங்கு நேரிடுகின்றதோ, எப்போது தருமவான்களுடைய எத்தனங் கெட்டுப் போகின்றதோ, அப்போது கலிமுதிர்ந்து நிற்கிறதென்றறிந்து கொள்ளவேண்டும். எப்போது எக்கியங்களுக்கு ஈசுரனை ஸ்ரீ புருடோத்தமனை எக்கியங்களாலே சனங்கள் ஆராதிப்பதில்லையோ, எப்போது வேதனூல் சொல்லும் காரியங்களிலே புத்தியில்லாமற் பாசாண்ட வாக்கியங்களிற் பிரீதியுண்டாகின்றதோ, அப்போது கலி மகாபலம் பொருந்தியிருக்கின்றனென்றறியவேண்டும். ஏனென்றால், கலியினால் சனங்கள் பாசாண்டராலே கெடுக்கப்பட்டவர்களாய்; சிருட்டிகர்த்தாவாயும், சர்வேசுரனுமிருக்கிற பகவானை ஆராதிக்கமாட்டார்கள். இன்னமும், பாசாண்ட புத்தியுள்ளவர்களாய், "தேவதைகள் எதுக்கு? வேதங்கள் எதுக்கு? பிராமணராலென்ன? தண்ணீர்விட்டுக் கழுவுவதினாலென்ன சுத்தி?" யென்றுப் பிதற்றித் திரிவார்கள். இப்படிப்பட்ட அதருமங்களினாலே மேகம் அற்பசாரங்களாகவே இருக்கும். வத்திரங்கள் சணற் கோணிகள்போலிருக்கும். மரங்கள் வன்னிமரங்களைப்போலற்பமாகவிருக்கும். ஜாதிகளெல்லாம் சூத்திரசாதிபோலிருக்கும். மேலும், தானியங்கள் அணுக்கள் போலவும், பால் நெய்போலவுமாய்விடும்; ஓ முனிவரே! கலியில் சனங்களுக்கு மாமனார், மாமியார், ஆசாரியர், மைத்துனர், பெண்டாட்டிகள் வேண்டுமான தொகையுள்ளவராய்

இருப்பார்கள். அன்றியும், மாதா பிதாக்களிடத்தில் அன்பில்லாமல் மாமியார் மாமனார்களைப் பிரதானமாயனுசரித்துத் தாய் யார்? தகப்பன் யார்? எவனுக்கெவன்? அவனவன் தன் தன் கருமத்தை யல்லவோ அனுசரித்திருக்கிறான்? என்று பேசிவருவார்கள். இக்காலத்திலே நரர் அற்ப புத்தியுடையவராய், வாக்கு-மனம்-காயம் இம்மூன்றுஞ் சுத்தமில்லாமல், தினந்தோறும் பாவத்தையே செய்துவருவார்கள். சத்திய மில்லாதவர்களுக்கும், சவுசமில்லாதவர்களுக்கும், வெட்கமில்லாதவர்களுக்கும் எந்தத் துக்கங்களுண்டாகுமோ அவையெல்லாம் கலிகாலத்தி லுண்டாகும்.

இக்கிரந்தங்கள் கோடிக்கும் யாதோரிறைவனுண்டோ அப்பரமான்மாவின் இலக்கண ரூபங்களும், லீலாவிரதாதி பரசாதனங்களும், இப்பிரபஞ்சோற்பத்தியின் மூன்றுவது தேவகாண்டத்துள் கூறப்பட்டிருத்தலின், இவ்வளவிலேயே சருவாபீட்ட சித்திப்பிரதாபராகிய எமது தயாவிபவசாட்சாத் திருவருட் சகாயத்தால் இக்காண்டத்தைச் சம்பூரணஞ் செய்கின்றோம். சுபம்! சுபம்!! சுபம்!!!

மூன்றாவது

தேவோற்பத்தி காண்டம்

காப்பு

கலி விருத்தம்

பிரம மானப் பெரும்பொருள் போற்றிமுன்
மரும மாகிய மாமறை யாய்ந்துபின்
சருவ தேவர் சரித்திரஞ் சொல்லமா
தரும தேவதைத் தாட்டுணை யாகுமே.

கணேசர் உற்பவம்

பூர்வம் பிரமதேவனது களத்திர வருக்கத்தில் உதித்த விபுதை யென்னும் இராக்கத ஸ்திரீயானவள் மரகதனென்னும் தவமுனிவ ரைக்கூடி, கயமுகா சூரனென்னும் பிள்ளையைப் பெற்றாள். அக்கய முகா சூரனவன் தனது பருவந்தொடங்கிக் கைலாயத்திற்குத் தென்பாரிசத்தை யடுத்து, ஸ்ரீ உமாமகேஸ்வரனை நோக்கி, அகோர மாகிய தவமியற்றி, எவ்வித ஆயுதத்தாலும், தேவராலும், மனித ராலும் இறவாதிருக்க வரம்பெற்றுக்கொண்டு, அந்த வரத்தின் மகி மையால் தெய்வ சிற்பியாகிய விசுவ கருமாவைத் தருவித்து, தன் பிதாவின் பெயர் விளங்கத்தக்கதாக மரகதபுரியென்னும் பட்டினம் ஒன்று நிருமிக்கச் செய்து தேவர்கள் யாவரும் பணிவிடைசெய்ய அரசாட்சி செய்துகொண்டிருந்தான்.

அன்றியும், அவன் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் கோ விரோதியாகி யாகாதி கிரமங்களைத் தட்டழிப்பவனும், தவனிலைகளைத் தவிர்ப்பவனும், தற்குணமே தலைகொண்டிருப்பவனும், யாவரும் தன்னை வணங்க வேண்டுமென்ற எண்ணமே குடிகொண்டிருப்ப வனுமா யிருந்தான். இவ்வாறு கயமுகா சூரனவன் நீதியற்று, அநீதியாய் அரசுபுரிந்து வருகிற காலத்தில், விசாலம் பொருந்திய வெள்ளியங்கிரி யென்னும் ஸ்ரீகைலாயப் பொருப்பில் முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும், யட்சர், கின்னரர், கிம்புருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர், அட்ட வசுக்கள், அட்டவைரவர்கள், நந்தி, பிருங்கி, நாரதர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், திக்குதேவர்களாகிய இந்திரன், அக்கினி, எமன்,

நிருதி, வருணன், வாயுவு, குபேரன், ஈசானன் முதலிய அத்தரவாசி களும், யோகபூமியரும், அளவிடுதற்கரிய சிவகணங்களும் புடை சூழத்தக்க சிறப்புப்பொருந்திய சித்திரகூடமென்னும் நான்மணிக் கோபுரமும், ஏழுமணிவாயில்களும் அமைக்கப்பெற்ற எண்ணிறந்த பரிதிகளைப்போல ஒளிவீசிய சிம்மாசனத்தின்கண் வீற்றிருக்கும் சிவபெருமானை நோக்கி, அவரது இடதுபாகத்தி லெழுந்தருளிய எமது அன்னையாகிய பார்வதி சொல்லுகிறாள்.

"சுவாமி! நாம் வெளிசஞ்சாரஞ் செய்து வெகுகாலானபடி யால், இன்று அடியாளுக்குப் போய்வர எண்ண மூண்டாகியது. ஆகலால், தயை செய்துவாரும்" என்றாள். அதற்குச் சிவபெரு மான் புன்னகை கொண்டு, "பெண்ணே! உன் கருத்தின்படியே போய்வரலாம் வா!" என்று சொல்லித் தமது பிரதம கணங்கள் யாவையும் நிறுத்திப் பார்வதிசமேதராய் இடபவாகனரூடராய் வெளிப்பட்டு கைலையங்கிரியைச் சூழ்ந்திராநின்ற சில சோலைகளின் வளங்களையும், ஆங்காங்குள்ள தடாகங்கள், மண்டபங்கள், ஓடைகள் முதலானவைகளையும் பார்க்கும்படியாக எமது அன்னையாருக்குக் காட்டிக்கொண்டே வருகிறபோது; வெள்ளியங்கிரிக்குத் தென்புறத் தில் அதிக இரமணீயமாயுள்ள பூஞ்சோலையின் நடுவிலிருக்கும் மண்டபத்தில் சித்திரத்தாலெழுதி யிருக்கப்பட்ட யானையும், அதன்மே லாகிய அற்புதக்கோலமும், துதிக்கையின் நிறமும், மெய்த்திறமுங் கண்ட ஆதிசக்தி பிரமித்து, சிவபெருமானை நோக்கி, "ஓ சுவாமி! கால்கரங்கள் முதலிய அவயவங்கள் ஓர்விதமாகவும், சிரசுமாத்திரம் பிரணவாக்கார ஓங்காரத்திற்கிடாகமௌன யோகத்தைச் சாதித்துப் பிரகாசிக்கின்றதே! ஆகையால், உலகிலுள்ள சகல சீவான்மகோடி களிலும் மிக்க புண்ணியத்தாலுதித்த கண்ணியரூபமென்றெண்ணி இதை மதிக்கின்றேன் நாதா!" வென்று மிகவும் ஊக்கமாகப் பார்க்கலுற்றாள். அப்போது பரமேசுவரனும் சற்றுத் திருவுளங் கனிந்தபடியால் சத்தி பெண்யானையாகவும், சிவன் ஆண்யானையாக வும் திருக்கோலங்கொண்டு, மிருகயோக்கியதைக் கிணங்க அவ் வனங்கள் முழுமையும் ஓடியுலாவித் திருவிளையாடல் புரிந்து; அண்ட மளாவித் தழைத்தோங்கிய ஓர் சோலைசூழ்ந்த குன்றையடுத்து; இதுவே நன்றென மதித்து; மதன்வாளியைத்தடுத்து; மருவிப் புணர்ந்து பிரிவாற்றாது ஒருமித்திருந்து உள்ளமகிழ்ந்து; வெள்ளம்

பெருகிய மரகதபுரிக்கடுத்த ஓர் பள்ளத்தில் நீர்வீளையாடிக்கரை நீத்தபொழுது, 'இருடிபிண்டம் இராத்தங்காது' யென்றும், 'தேவ பிண்டம் தக்கணமே' யென்றும் மொழிவதற்கிணங்க உடனே பிரம சொரூபமும், யாணைமுகமும், சதுர்ப்புயமும், திரிநேத்திரங்களும், வாமனமாயும், ஓங்காரப் பிரணவாக்கரத்தைப்போலப் பிரகாச மூடைய ஒரு சிசு உதித்தது. அச்சிசுவைக் கண்டு ஆதிசக்தி புத்திர வாஞ்சை அதிகரித்து, அச் சிசுவை விட்டுப்பிரிய மனமில்லாதவளாகி மயக்கங் கொண்டிருக்க, இக் குறிப்பினைச் சிவபெருமான்கண்டு, "ஓ பெண்ணே! நீ இச்சிறுவனைக் காக்க இங்கெவருமில்லையே யென்று தைரியத்தைவிட்டுக் கவலை மேற்கொண்டு தவிக்கின்றாய்! உனக்கேன் இந்தத் துயரம்? விரைவாக என்பின் வா! சொல்லுகின்றேன் இதின் மகிமையை" யென்றார். அதற்குப் பார்வதி, "ஓ சுவாமி! தாய் தந்தையர்களில்லாத அனுதைப்பிள்ளையைப்போல இச் சிசுவைத் தனியாய் இங்கு நிறுத்திவிட்டுத் தாய் தந்தையர்களாகிய நாம் போவது தருமமோ? அல்லது, இச்சிசுவை இக்காட்டில் காப் பாற்றப்பட்டவர்கள் ஒருவருமில்லையே! மேலும், தங்களுக்கு இச் சிசுவை விட்டுப் போவதற்கு மனத்துணிவு உண்டாகியதைப்போல் அடியாளுக் குண்டாகவில்லையே! நான் என்னசெய்வேன்? சுவாமி!" யெனப் பரமசிவம் சிரித்து, "அடி பெண்ணே! இச்சிசுவைக் காப் பதற்கு இன்னுஞ் சற்றுநேரத்தில் இந்திராதி தேவர்களும், நமது பிரதம கணங்களும் வருவார்கள்; ஆதலால், உனக்குற்ற பேதமைக் குணத்தைவிட்டுச் சிக்கிரம் என்பின் வருவா" யென, பார்வதி பசுபதி யுடன் போய்க்கொண்டே யிருக்கையில் முப்பத்து முக்கோடி தேவர் களும், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகணங்களும், மற்றுமுள்ள யாவர்களும் வந்து சிசுவைச் சூழ்ந்துகொண்டு, "இனி நமக்கு கயமுகாசுரன் பயம் இன்றோடொழிந்தது; இதி லெள்ளளவும் பிசகில்லை; இச்சிறிய உருவங்கொண்டிருக்கும் இவருக்கும் யாணை முகம்; துட்டனாகிய கயமுகாசுரனுக் கிருப்பதும் யாணைமுகமாதலால், இவரே கயமுகாசுரனை யெதிர்த்து வெற்றிபெறுவர்" என்று யாவரும் களிகொண்டிருந்தார்கள். அப்போது பார்வதி பரம சிவத்தை நோக்கி, "ஓ சுவாமி! நமது பிள்ளைக்கு நாமகரணங்கூடச் செய்யாமல் வந்து விட்டோமே; அங்கு அதையறிந்து நாமகரணஞ் செய்யப்பட்டவர்கள் அந்தத் தேவர்கள் கூட்டத்தில் யாரேனு மூண்டோ?" யென்றனள். அதற்குப் பரமசிவம், "பெண்ணே!

நமது புதல்வனைத் தேவகணங்கள் முதலானவர்களும் சூழ்ந்து கொண்டிருப்பதினாலே; சர்வ தேவாதி தேவகணங்கள் யாவரும் சூழ்ந்து போற்றப் பெறுமாகையால், கணபதியென்ற திருநாமம் அக்கணமே தந்தேன்" எனப் பார்வதி மிகுந்த சந்தோஷத்துடன் சிவபெருமானோடு கைலையங்கிரியை யடைந்தாள்.

தேவகணங்களும் பிரதமகணங்களுஞ் சூழ்ந்திருக்கையில் கணநாதரென்கிற அசரீரி பெற்று அவ்வாறே வாழ்த்தினர்.

இப்பால் கணநாதனைத் தேவர்கள்முதல் யாவருஞ் சூழ்ந்துக் கொண்டிருப்பதை கயமுகாசுரன் தூதர்களும், சில ராக்கதப்பெண்களுங் கண்டு உள்ளேபுக, அங்கு யானைமுகமும், நான்கு கரங்களும், வெண்மையான ஆடையும், பாசம் அங்குசம் தரித்து விளங்கும் சிறு பிள்ளையைக்கண்டு வியப்புற்றதுமன்றித், தேவர்கள் முதலானோருக்கும் உண்டாயிருக்குந் திடதைரியத்தையும் உணர்ந்து அங்கே நின்றும் கயமுகாசுரனுடைய சபைக்குவந்து பணிந்து சொல்லுகிறார்கள். 'ஓ அரக்கர் சிகாமணியாகிய எமநிறைவனே! தங்களுக்கு ஏவல்செய்துகொண்டிருந்த மிகவும் அற்பராகிய தேவகணங்களுக்கும்; முனிவர் கூட்டங்களுக்கும் இன்றையதினம் உண்டாயிருக்கும் சுதாகலத்தையும்; சந்தோடத்தையும் பார்க்குங்கால், இன்றுமுதல் அரக்கர் வமிசத்தை அவர் மதிக்கமாட்டார்போலும்! தமது ஆக்கினையைத் தவறிவிட்டார்கள்போலுந் தோற்றுகிறது. நமது கோட்டையின் அகழிக்குப் புறம்பாகிய பெருவெளியில் அரக்கனுமின்றித் தேவனுமின்றி மனிதனுமின்றிப் பலரூபம்பெற்ற ஓர் சிறுவனைச் சூழ்ந்திருக்கும் தேவகூட்டங்களைக் கணக்கிட எம்மால் முடியாது; அவர்கள் செய்யும் பேரிரைச்சலானது நாம் சுகமடைந்தோம்; பயத்தை யொழித்தோம்; அரக்கர் குலத்தை முடித்தோம்; இனி தவத்தைத் தொடுத்தோம் என்னும் வீராவேசத்தோடு கூடியதாயிருக்கின்றது. அவர்கள் செருக்கைப்பார்த்துப் பயந்து தமதிடம் அடைக்கலம் புகுந்தோம்" என்று மேலுமேலும் அரக்கர்கள் அபயமிட்டோடிவந்த கூக்குரலைக்கேட்ட கயமுகாசுரன் அதிக கோபாவேசம் மேலிட்டவனாய், கண்களானது 'கம்மாளனுலையிலிட்டு உருக்கிய செம்பைப்போலச் சிவக்க, மீசைகள் துடிக்க, புருவம் நெறிக்க, ஆச்சிராகுரோதனாய், 'அமைச்சர்காள்! என்று,

கூவியழைத்துச், 'சிக்கிரம் நமது சேனுவெள்ளத்தைச் சித்தப்படுத்துங்க ளென்று கடுகடுத்துக்கூறி, உடனே கயமுகாசுரன் யுத்த சன்னுத்தனுகி அரண்மனையைவிட்டு வெளிப்படுகிறபோது சில துர்ச்சகுனங்களெல்லா முண்டாயின; அவை யாதெனில்:—ஆகாயத்தினின்று குறைக்கொள்ளிகள் வீழ்ந்தன; இரத்த மழை பெய்தது; நரிகள் ஊளையிட்டன; நட்சத்திரங்களுதிர்ந்தன; ஓர் அரக்கியின் அழுகுரலோசை கேட்டது. இந்தப்படி பற்பல அவசகுனங்கள் யாவும் உண்டாயின; இவைகளையெல்லாம் பார்த்தும் அந்தக் கயமுகாசுரன் கிஞ்சித்தும் மனங்கலங்காமல் வீராவேச மூடையவனுகி, சேனைகளின் நிறங்களுடன் அகழிக்குப் புறம்பேயிருக்கும் பெருவெளியின் சமீபமாகவந்து நின்று, இரணபேரிகை யறையச் செய்தான்.

இவ் வோசையைக்கேட்ட தேவர்களும் இருடிகளும் திடுக்கிட்டு, 'இதுவென்னவோ யுத்தத்திற் காயத்தமான இரணபேரியின் ஓசை கேட்கிறதே' யென்றுப் பார்க்கிறபோது; சேனுவெள்ளங்களுடன் நிரண்டுவந்திருக்கும் கயமுகாசுரனது இரதத்தைக்கண்டு பிரமித்து, ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிறார்கள். அஃதெப்படியெனில், கொடிய துட்டனுகிய இந்தக் கயமுகாசுரன் இச்சிறு பிள்ளையின்பேரில் யுத்தஞ்செய்யச் சித்தப்பட்டு வந்தவனுகத்தோன்றுகிறதே! இதென்ன அநியாயம்! தனக்குச் சமானமுடையவர்களிடத்திலல்லவோ யுத்தஞ்செய்யவேண்டும்! அதைவிட்டு இக் குழந்தைபிறந்து நான்குநாள்கூட ஆகவில்லையே! அன்றி, இக் குழந்தை இவனுக்கு என்ன தீங்குசெய்தது? ஒன்றுங் காணேமே! யென்றும், சிலர் ஐயோ! இச் சிறுகுழந்தை பிறந்ததுமுதல் இவ்விடத்தை விட்டு எங்கும் போகவில்லையே' யென்றும் பலவாறு பேசி முடிவில், 'பிரணவசொரூபியாகிய இச்சிறு குழந்தையினுல் இவ்வரக்கன் மடியக்கடவ' தென்று பலதேவரும் ஆசிகள்கூறி, அன்னவர்கள் யாவரும் அச்சிறு குழந்தையைத் தனியேவிட்டு அருகிருந்த பூஞ்சோலைகளில் மறைந்துகொண்டு, "பரமேசனே! உமது திருக்குமாரனுக்குத் துணையாயிருந்து யாதொரு ஆபத்தும் நேரிடாமல் காத்து இரட்சிக்கவேண்டும்" என்றும், "எமது அன்னையாகிய பருவதராசகுமாரியே! தங்கள் புதல்வரைக் காக்கவேண்டிய கடமை தங்களதே" என்றும் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் கயமுகாசூரனனவன், யுத்தஞ் செய்யும்படி தன் சேனைகளுக்கு உத்தரவுசெய்தான். உடனே சேனவீர ரனைவரும் தங்கள் தங்கள் ஆயுதங்களாகிய பாலா, ஈட்டி, தோமரம், பிண்டி, பாலம், கதை முதலானவைகளைக் குழந்தை வடிவாக யிருக்கும் பிரணத்தின்மீது பிரயோகித்தார்கள். இடையில் விற்றிறம், கைத்திறம், மெய்த்திறமுடைய சில வில்வீரர்கள் தங்கள் தங்கள் வில்லை வளைத்து நாணேற்றிக் குணத்தொனி காட்டி, மோகாத்திரம், நாகாத்திரம், மின்னலாத்திரம், இடியாத்திரம், வாயுவாத்திரம், அக்கினியாத்திரம், பிரமாத்திரம், சிலீமுகாத்திரம், இந்திராத்திரம், சந்திராத்திரம் முதலாகிய அநேகமாயிரம் பாணங்களைச் சோனமாரியாகப் பொழிந்தார்கள். இதைக்கண்ட பிரணவ சொரூபியாகிய சிறுகுழந்தை புன்சிரிப்புடன் தன் கையிலிருந்த அங்குசத்துக்குச் சகல அதிகாரமுந் தந்து தனக்கு முன்னதாய்ப் பூமியில் நட்டுவிட்டு ஒன்று மறியாததுபோ லிருந்தது. அப்போது அரக்கர்களால் விடப்பட்ட அத்திர சத்திரங்கள் யாவும் ஒன்றின்பின் ஒன்றாக வந்தவைகளைப் பிரணவ சொரூபத்தின்மேல் படவொட்டாமல் மூன்னேயிருந்த அங்குசமானது கவளீகரஞ் செய்தது. இதனைக் கண்டு அரக்கர்கள், 'இதுவென்ன ஆச்சரியம்! நமது பாணங்களின் முன்னின்று உயிர் தப்பினவர்கள் நாளதுவரையில் ஒருவருமில்லை; அப்படிக்கிருக்க நாம்விட்ட பாணங்களெல்லாம் விழலுக்கிறைத்த நீரைப்போல் இச்சிறுவன்மேல் கிஞ்சித்தும்படாமல் எப்படி மாயமாய்ப் போய்விட்டதென்று ஆச்சரியமூ மாச்சரியமுங்கொண்டு, மேலும் மேலும் பாணமழை பொழிய; அதில் ஒன்றேனும் கணபதியின்பேரில் படவொட்டாமல் யாவற்றையும் அங்குசம் கவளீகரஞ் செய்துவிட்டது. அதனல் அரக்கர் படைக்கடலுக்கெல்லாம் கையும் மெய்யும் சலித்து, இதுவென்ன புதுமையாக விருக்கிறது! எத்தனையோ யுத்தஞ்செய்து செயமடைந்தோம்! ஒரு காலத்திலாவது நமக்கு இப்படிப்பட்ட ஆயாசமும் அசக்தியும் நேரிட்டதில்லையே! இதைப்பற்றி யோசிக்குமிடத்தில் இச்சிறுவன் மெத்த அசகாயசூரனுகும். ஆதலால், இவன் தனக்கு ஒருவருந் துணையின்றித் தனியே யிருக்கிறன். அன்றியும், இவனுக்கு அத்திர சத்திரங்கள் முதலானவை கிடையாது. மேலும் இவன் இருந்தயிடத்தைவிட்டு எழுந்திருக்கவு மில்லை. இவன் எப்படிப்பட்ட வீரனே! இன்று இவனல் நாம் யாவரும் மடியும்படி நேரிடும் என்று தோன்றுகின்

றது. அரக்கர் குலத்திற்கு நாசமும், தேவர் குலத்திற்கு நன்மையும் உண்டாமென்பதற்கும் தடையே யில்லையென்று நிச்சயித்து, இனி எத்தனை நாள் பூமியிலிருக்கினும் ஒருநாளைக்கிறப்பது உண்மையாதலால், நம்மால் கூடியமட்டும் போர் புரிவோம். செயாப செயத்தின் படி முடிகிறதென்று யோசித்துப் பாணப்பிரயோகஞ் செய்வதற்குச் சித்தப்பட்டிருக்கிறபோது, கணபதியானவர் அருகில் தழைத்திருக்கும் தருப்பைப் புல்லில் ஒருநிரணமளவு கிள்ளி, அதற்குப் பிரணவ மந்திரத்தை யோதி, "வல்லவனுக்குப் புல்லாயுத" மென அரக்கர் மேல் ஏவினர். அந்த அற்பமாகிய புல்லாயுதமானது அதிக உக்கிரமாகச் சென்று, கயமுகாசுரன் சேனைகளையெல்லாங் கொன்று இரணக்களத்தைப் படுகளமாக்கிக் கயமுகாசுரனைக் கொல்லக்கிட்டிய போது, அவன் மேகமண்டலத்தில் போயொளித்திருந்து சேனைகள் யாவும் மடிந்துபோயினதற்காக மெத்தவும் கிலேசப்பட்டு ஒருவாருகத் தேறி, இராக்கத மாயையால் பெருச்சாளி உருவங்கொண்டு, பூமியோடு பெயர்த்துக் கொண்டோட உத்தேசித்துப் பிரணவத்திற்குப் பின்பாகவந்து பூமியைக்கிண்டி மூதுகடைவாய் நுழைந்து அரைக்கின்றபோது, அரக்கனது வஞ்சனைக்குப் புன் சிரிப்புக் கொண்டு கணநாதர் என்னசெய்தா ரென்றால், கள்ளவேடம்புனைந்து வந்த அவனைத் தன்னுடைய பலங்கொண்டு பூமியில் அழுத்துகிற போது; விழிகள் பிதுங்கி நாவைகடித்து பிராணன் நீங்குகிற சமயம் நேரிட்டபடியால், மாயாரூபியாகிய கயமுகாசுரன் கணநாதரைப் பலவாறு துதித்து; 'ஓ சுவாமி! தங்களுக்கு எப்போதும் இதே வாகனமாக இருக்கிறேன். என்னைக் கொல்லாமல் காக்க வேணும்' மென்று வேண்டிக்கொள்ள; கணநாதர் கருணைகூர்ந்து அந்த கயமுகாசுரன் சொற்படியே அவனைத் தனக்குப் பெருச்சாளி வாகனமாகக் கொண்டார். அதைப்பற்றி "ஆகுவாகனன்" என்ற பெயர் அவருக்கு உண்டாயிற்று.

மற்றொரு விதம்

ஆதியில் சிவபெருமான் பருவதராச புதல்வியாகிய பார்வதி தேவியை மணம் புரிந்து திருக்கைலாயகிரியை அடைந்து இருக்கிற போது; ஓர்நாள் பார்வதி தேவியை அவர் தோழி பார்த்துத், 'தாயே! சிவபெருமானுக்குப் பிரதமகணங்கள் கணக்கின்றியிருக்கின்றார்கள். அதுபோல், தங்களுக்கும் ஒருவரிருந்தால் நன்றாக

இருக்குமெனப்; பார்வதி அவள் கருத்துக் கிசைந்து நீராடச் சென்று; அங்கு சேகரித்து வைத்திருக்கும் மேன்மையாகிய தேவ பரிமள சுகந்த சாந்தை இரண்டு கைகளாலும் எடுத்துக்கொண்டு தன் இறைவனுகிய சிவபெருமானது திருவுருவை மனதில் நினைத்தும் துதித்தும் அப்பரிமளச் சாந்தைத் திரட்டிப் பிடித்தபோது உற்பவித்தாரென்றும் சிலர் சொல்லுவார்கள். இக்காரணத்தால் இவருக்குச் "சத்தி விநாயகர்" என்று பெயருண்டாயிற்று

கணேசர் விவாகம்

இவ்வதிசயங்களை யெல்லாம் மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த தேவர்முதல் யாவர்களும், அதிக ஆனந்தமடைந்தவர்களாகி ஒன்று கொண்டாடி, பின்பு கணநாதரை அழைத்துக்கொண்டு கைலயங்கிரியைச் சேர்ந்தார்கள். அப்போது கணநாதர் தாய் தந்தையர்களுக்கு இணங்கி வணங்கி நின்றார். அப்படி வணங்கிய குமாரனைப் பரமசிவம் எடுத்துப் பலவாசிகள் கூறி, பார்வதியிடங் கொடுத்தார். அவ்வன்னையும் கட்டியணைத்து முத்தந் தந்துப் பல மங்களவாழ்த்து வாழ்த்தி, மிகவும் பிரியத்துடன் வளர்த்து வருகிற போது, கணநாதரும் தாய் தந்தையர்களுக்கு அன்புண்டாகும்படி மிகவும் விநயமாய் நடந்துகொண்டுவந்தார். சிவபெருமானும் கணபதியிடத்தில் அதிகமான புத்திரவிருப்பத்தை வைத்திருந்தார். இப்படியிருக்கையில் பார்வதி பரமேசுவரர்களிருவரும் கணபதிக்குத் தக்கவயது வருமளவில் இனித் தாமதமின்றி மணமுடித்துப் பார்க்க வேண்டுமென்ற விருப்பங் கொண்டனர். இப்படியிருக்கிறபோது, திரிலோக சஞ்சாரியாகிய நாரதரெழுந்தருளிப் பார்வதி பரமேசுவரரைச் சேவித்து அவர்களால் மணத்துக்குரிய விசேடங்களைக் கேட்டுச் சந்தோஷித்துச் சிவபெருமானை நோக்கிச் சொல்லுகிறார்: 'தெள்ளமுதாகி தெவிட்டாத வள்ளலே! பிரமதேவன் புதல்விகளாகிய சித்தி புத்தி யென்னும் மிகச் சுந்தரமுடைய கன்னிகைகளை இக்கணபதிக்கு மணம்புரிவித்தால் மெத்த நன்றாயிருக்கு' மென, அதற்குச் சிவபெருமான் சந்தோஷமடைந்து, ஓய் நாரதரே! நீர் சொல்லிய கன்னிகைகள் என் புதல்வனுக்குத் தக்க பெண்களாகையால், விரைவாக நீர்தானே சத்தியலோகத்துக்குச் சென்று இங்கு நடந்தவைகளைப் பிரமனுக்குப் புகன்று, இப்படிச்செய்வது சகலருக்கும் நன்றென்று மகிழப்பேசி யிசையச்செய்து, அவ்விடம் விட்டகன்று இங்குவந்து இந்தச் சுபகாரியத்தை நடத்திவைத்துப்

பின்பு எங்காகிலும் செல்லும் ஏன்ற பரமசிவத்தின் வார்த்தைப் படி நாரதர் சத்தியலோகத்துக்குச் சென்று, சதுர்முகனிடத்திற் கலந்துபேசி முடிவு செய்துகொண்டுவந்து தேவர்கள் முனிவர்கள் நாவலர் பாவலர் காவலர் முதலிய யாவரும் வந்திருந்து, பரமசிவமும் பார்வதியுங்கண்டு களிக்கப், பிரமதேவன் வேதவிதிப்படி ஓமசாந்தி முதலிய சகலமும் நடத்த, சருவாடம்பரத்துடன் கணபதிக்குத் திரு மணமுடித்து, தங்கள் தங்க ளிருப்பிட மேவினர்கள். கணபதியும் சித்திபுத்திகளுடன் கூடிக்கலந்து தழுவி சித்தியென்னும் மனைவியி னிடம் இலக்கன் என்னும் பிள்ளையையும், புத்தியென்னும் மனைவி யிடம் இலாபன் என்னும் பிள்ளையையும் பெற்றுப் பரமானந்தமுற் றிருந்தார்.

பூசாவிரதக் கிரமம்

அதன் பின்னர் ஒருநாள் சிவபெருமான் பிரமன் தேவர்கள் முதலானோர் முன்னிலையில் கணபதியைப் பூசித்தனர். இரண்டா வது மகாவிஷ்ணுவும், மூன்றுவது பிரமதேவரும், நான்காவது பார்வதியும், பின்பு தேவர்கள் யாவரும் மிகுந்த சந்தோடத்துடன் பூசித்தனர். இவ்வாறு யாவரும் பூசித்துச் சகலத்திற்கும் பிரபுவா யிருக்கும்படிச் செய்தார்கள். அப்போது சிவபெருமான் கணேச ருக்குப் பல வரங்களைக் கொடுத்து உன்பெயர் 'விக்கின ஹந்தா' என்றார். (இதன் பொருள் யாதென்றால், விக்கினங்கள் அனைத்தை யும் போக்குபவன்; சகல கணங்களுக்குந் தலைவனை நீ யாவரும் பூசிக்கத்தக்கவனாக வேண்டுமென்பதே) இவ்வாறு சிவபெருமான் ஆசிகூற, சிவகணங்கள் மங்கலவாத்தியங்கள் முழங்க; பெரியோர் கள் யாவரும் ஆசீர்வதிக்க; தேவர்கள் கந்திருவர்கள் அச்சரசுகள் வாத்திய நாட்டிய சங்கீதங்கள் பாடினர்கள். மீண்டும், சிவபெரு மான் சபையி லுள்ளவர்களைப் பார்த்து, ஆவணிமாத சுக்கிலபட்ச சந்திரோதயகாலத்தில், இராத்திரி முதற்சாமத்தில் உச்சிகரக பஞ்சக யோகத்தில் பார்வதிதேவி கணபதியை ஈன்றபடியால், அச்சமயத் தில் கணபதியைப் பூசித்தல் ஓர் உத்தமோத்தம மாதலால், அன்று முதல் மறுவருடம் வரும் அந்தத் திதிவரையில் ஒவ்வொரு சதுர்த்தி களிலும் விரததீதை நியமத்துடன் எமது கட்டளைப்படிச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வோர் தமது குடும்பத்தில் சகல சவுக்கி யங்களையும் பெற்றுச் சுகமடைவார்களென்று கட்டளையிட்டார்.

கணநாதர் பிரபாவம்

மேலும், இவ்விரதமானது வருடந்தோறும் ஆவணி மாதம் அமாவாசைகடந்த வளர்பிறை சதுர்த்தி திதி உச்சிப்போது வரையில் உள்ளதினத்தில் செய்யத்தக்கது. இந்த விநாயக மூர்த்தி 'வரசித்தி விநாயகர்' என்று பெரியோர்களால் துதிக்கப்படுவார். இம்மூர்த்தி மகாகணபதியின் மூர்த்தி பேதமேயாக இவரை உண்மை அறிவு ஆனந்தவடிவாகிய சிவமென்றும், "சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம்" என்னும் பஞ்சகிருத்தியங்களை நடத்தும் சத்திமயமென்றும்; பிரமா விஷ்ணு முதலிய எல்லாத் தேவர்களையும், சகலாண்டங்களையும் தமக்கு வடிவமாகக்கொண்டிருத்தலால் விசுவமூர்த்தி யென்றும், எல்லாக் கலைஞானங்களுக்கும், எல்லாக் காரியங்களுக்கும் மூலகாரணராதலின், வேதமாதாவாகிய பிரணவத்தின் பொருளாயுள்ள இவரைச் சாத்தேயர் 'சத்திக்கணபதி' என்றும், சைவர்கள், 'சிவகணபதி' யென்றும், வைணவர்கள், 'விஷ்ணு' வென்றும், சாங்கியர், 'தத்துவகணநாதபதி' யென்றும், அத்துவைதிகள், 'இந்திரிய கணநாதபதி' யென்றும், பூர்வ மீமாஞ்சிகர், 'தேவகணநாதபதி' என்றும், வையாகரணிகள், 'சத்த கணபதி' யென்றும், ஆயுள்வேதியர், 'மூலகணபதி' யென்றும் பலவாறு அருச்சிக்கின்றனர்.

சிருட்டி எசுர்வேதம் அ - வது பிரணவம் நாராயணோபநிடதத்தில் கூறப்பட்ட பன்னிரண்டு காயத்திரியுள் ஈ - வது காயத்திரி கணபதி காயத்திரியாம்.

அதே சங்கிதை நான்காவது காண்டம் ஸ்ரீ உருத்ர நமோவாகப் பிரசினத்தில் கணங்களுக்கும் கணபதிக்கும் வேதவாக்கிய நமஸ்காரங் கூறப்பட்டுள்ளது.

இருக்கு எசுர் சாமம் என்னும் மூன்று வேதத்தினாலும் கணநாந்துவா, கணபதி சாதனம் என்ற ஒரே கணபதி மந்திரம் கூறப்பட்டுள்ளது.

அன்றியும், கணேச உபநிடதத்து விக்கினஹர்வித்தை, காணபத பிரமவித்தை முதலியன வேதாந்தத்துள் பிரசித்தமாக இருக்கின்றன.

சைவாகமம், காணபதாகமம், பார்க்கவபுராணம், காந்தம் முத லிய நூல்களுள்ளும் பிரம சூத்திரத்திற்குக் கபிலமுனிவர் செய்த காணபதபாடியத்துள்ளும் விரித்துக் கூறப்பட்ட மான்மியங்கள் பல வுண்டு; அன்றியும், இவருக்கு நாமங்களும் அட்டோத்திரவிதி களும் பலவுண்டு. அவை உபதேசமுகத்தால் தெரிந்து கொள்க.

மேலும், இக்கணபதியின் சதுர்த்தி விரதவிதியைப் பதும புராணத்துள் அகத்தியரால் ஸ்ரீராமருக்கும், காந்தத்துள் துர்வாச முனிவரால் ஸ்ரீ கண்ணருக்கும், பவுடியோத்திரத்துள் ஸ்ரீ கண்ண ரால் தருமராசருக்கும், பிரமாண்டத்துள் நாரதரால் பகீரத மகா ராசனுக்கும் உபதேசித்தபடி கூறப்பட்டுள்ளது.

சுப்பிரமணியர் உற்பவம்

துதி

நேரிசை வெண்பா

கந்தா கடம்பா கதிர்காமா நற்சிவ
மைந்தா சரவணேற்ப வாகங்கா—மைந்தாவே
லாகுமரே சாவுமைபா லாசுப்ர மண்யாகு
காகுணநீ தாவாதா கா.

இப்பூமியின்கண் அறுபத்தாறு கோடி இராக்கதர்களுக்கு அரசனுகிய அசுரேசன், நந்திதேவரிட்ட சாபக்கொடுமையினால் கேசவனுலும் தேவந்திரனுலும் அளவற்ற இராக்கதர்கள் மடிந்த படியால்; வன்மைகுன்றித் தன் புதல்வியாகிய சுரசை யென்பவ ளைப் பரிவாக வளர்த்து வருகிறபோது; குரவனை சுக்கிரன் அங்குச்சென்று அவளுக்கு மாயவித்தைக ளனைத்தையும் மந்திர பூர்வகமாகப் போதித்து, அவள் வல்லபத்தைப் பார்த்து; மாயை யென்னும் பெயரிட்டு; இராக்கதர் சிறுமையினையும், தேவர்கள் சிறப் பினையும், அரசனுக்கிருக்குங் கவலையையும் தெளிவுற எடுத்துக் காட்டி, "இனி உன்னுல்தான் இக்குலந் தழைக்கவேண்டும்; உன் தந்தையின் மனவருத்தமுந் தீரவேண்டும்; ஆகிலும், மின்னலி னெளியினுலே தாழைபுட்பிக்கும்; என் மகிமையினுல் மழை பெய் யும், அவைபோலவே உன்னுல் அசுரர்குலம் விருத்தியடையவேண்டி யிருக்கின்றது; ஆகையால், நீ தடை சொல்லாமல் இலக்குமிக்கு மேலான வடிவுகொண்டுபோய் வனத்திலே தவஞ்செய்யும் காசி

பரை மயல்மூட்டி இரவில் அவரைப் புணர்ந்து வலிய பிள்ளைகளைப் பெற்றுப் பெயரிட்டு, பரமசிவத்தைக்கருதிச் சிறந்த வரங்களைப் பெறும்படி அவுணருக்கடுத்த வேள்விகளையும் விரதங்களையும் மந்திர பூர்வமாகப்போதித்துப் பிள்ளைகள் கலத்தைப்பெறவும், விரோதிகளாகிய தேவர்கள் பழியின் மூழ்கவும் அரிய தவங்களைச் செய்ய அனுப்பிப் பின் திரும்பக் கடவா" யென்று சொல்லினர். அதைக் கேட்டு மாயையானவள் சுக்கிராச்சாரியரை வணங்கி, "ஓ சுவாமி! தங்கள் கட்டளைப்படியே சென்று முடித்துவருகிறேன்" என்று தந்தையினிடஞ்சென்று; ஆசானிட்ட கட்டளையையோதி விடை பெற்றுக் காசிபர் தவமியற்றும் வனத்தைநாடி இலக்குமியும், இரதியும், திலோத்தமையும், மோகினியும் ஒரு வடிவங்கொண்டதை யொத்து, உலகிற்கிடையாத மிகுந்த அழகுவாய்ந்த உருகொண்டு, பூதலவாசிகளும் பாதலவாசிகளும் விண்ணுலகத்தாரும் தனது எழில் கலத்தைக் காணப்பெறின், மாரன் கணைகளுக்கிலக்காகி மயங்கி வாடித் தன்னைத்தொடரும்படி அன்னத்தைப்போல மெல்லென உலாவி, அவ்விடத்தில் சுகந்த பரிமளமிகுந்த மலர்கள் வாய்ந்த அழகிய பூஞ்சோலைகள்; மதுரமான சலசமர்த்தியுள்ள தடாகங்கள்; சித்திர மண்டபங்களாதிகளைத் தன் வல்லபத்தினலுண்டு பண்ணி மறைந்திருந்தாள். அப்போது ஐம்புலன்களை யொடுக்கிப் பொறிகளையடக்கிச் சித்தத்தைச் சிவத்தின்கண் செலுத்தித் தவத்தினின்ற காசிபர், கண்களை விழித்து நூதனமாக விளங்குகின்ற சிங்காரங்களைப் பார்த்து அற்புதமடைந்து, இதனை யாவர் நிருமித்தாரெனப் பலதிசையிலும் நாடி ஒருவரையுங் காணாது, மாயையின் வஞ்சகத்திற்பட்டு ஞானவுணர்வை மறந்து பிரமித்துத் திகைத்து, பொன்னுலக மிறங்கியதோ! அளகாபுரம் நழுகியதோ! அல்லது பிரமசிருட்டிதானே! சிவன்செயலோ! இன்னதென்று நிதானிக்கப் படவில்லையே யென்று யாதுந் தோன்றுமல் மனவாட்டமுற்று, தவத்தினைத் தொடங்கத் தமதிடத்துக்குச் சென்றார். அப்போது அதையறிந்த மாயையென்பவள்; இது சமயமெனக்கருதி வயிரக்குன்றினிடத்துச் சோடசகலைகளை வாய்ந்த சந்திரனைப்போலக் காணப்பட்டாள். காசிபர் அவள் வடிவழகை நோக்கி, 'சகத்தினை விளக்கும் இலக்குமியோ! அசுரரை மயக்கிய மோகினிதானே! எனது பேறிவைக் கலக்கிய இவளை யாரென மதிப்பேன்! இவள் காலழகுக்கு இந்திராணியும் ஒவ்வாள்' எனப் பலவிதமாகத் துதித்து;

மெல்லென நெருங்கி, 'இவ்வனத்துக்கோ ரணியாக நிற்கின்ற பெண் ணரசியே! உமது வரவென் பாக்கியவசமாகும். ஆதலால், நினது குலம் இருப்பிடம் பெயர் தாய்தந்தை முதலியவைகளைத் தயவு செய்து சற்றே சொல்லுவாய்!' என்றுகேட்டார். அப்போது மாயை முனிவரைநோக்கி, 'தவத்தினை விரும்பினோர்க்கும் மஹான்மாக்க ளுக்கும் உம்மைப்போன்றவர்களுக்கும் இவற்றால் ஆகவேண்டிய தென்ன? அன்றியும், ஞான அறிவில்லாத மனிதரைப்போலய் பேசிக் கிட்ட நெருங்குவது நீதியல்ல. நீர் தவஞ்செய்யப்போம்' என்று மறுத்தாள். காசிபர் மனங்கரைந்து, 'பெண்கள் சிகா மணியே! தவசித்தி கிடைத்தபின்பும் வருந்துவதேன். பெயர் முத லியதும் பின்னிட்டுத் தெரிந்துகொள்ளுகிறேன். விரைந்து காம னைய் என்னை வருத்துகின்றதால் சற்று தயவுசெய்யவேண்டும்' என்று வேண்டினர். அப்போது மாயை 'ஓ தவசியே! நான் மேரு பருவத தட்சணபாரிசத்திற் பெருகும் கங்கைக்கரையைச் சேர்ந்து பின்பு நலத்தைப்பெற விருப்புற்றவளாதலினால், அவ்வாறே போய் வருவேன் நீர் நில்லு' மென்று சொல்லினாள். அதைக்கேட்டுக் காசிபர் மயங்கி 'ஓ பெண்ணரசியே! கங்கை முதலான நதிகளையும், காசியாதி சிறந்த தலங்களையும், பொன்னுலக முதலிய நாடுகளையும், இன்னு மெவைகேட்பினும் இமைப்போதில் தருவிப்பேன்: ஆனால் என் பிராணனைமாத்திரம் நிற்கும்படித் தாபத்தைத் தீர்த்து காப் பாய்! போகாதே! நில்லும் நில்லும்' என்று தொடர, மாயை தன் மந்திரவலியால் மறைந்திருந்தனள். அப்போது காசிபமுனிவர் பட்ட துயரத்தைச் சொல்லி முடியாது. உடனே சூரியன் மேற் றிசையில் மறைந்து இருள்வந்து சூழ்ந்துகொண்டது. அக்காலையில் பன்னிப்பன்னி இடர்க்கடலிற் படிந்து வருந்துகின்ற காசிபர்முன் னிலையில் சகல துன்பங்களுக்குங் காரணமான மாயையானவள் தான் எண்ணிவந்த எண்ணத்தைப் பெறுவதற்கு இதுவே தருணமென் றெண்ணி, அவர் கண்முன் மின்னற்கொடியைப்போலத் தன்னுரு வம் வெளிப்படக்காட்டிச் சென்று சொர்னமயமான ஒரு மண்ட பத்தைச் சேர்ந்து முதற்சாமத்தில் அவரோடு சரசசல்லாபமாய்க் கலந்தாள்.

:

அப்போது காசிபரும் அவளை மருவியணைத்து களித்தின்ப முற்றார். அதுகாலையில் பிரமன் விண்டு தேவேந்திரன் விண்ணவர்

மூனிவராதியர் தத்தம் உள்ளம் நடுங்கப் புயவலிக்கொப்பில்லாத சூர பன்மன் மாயையிடத்துதிக்க, இவ்விருவருடைய தேகத்திலுண்டாகிய வியர்வையிற் செயசாலிகளாய் வலிபெற்ற முப்பதினாயிரம் வெள்ளம் தானவர்கள் உதித்தனர். இவர்களையும் முதல் புத்திரனையும் அவ்விடத்தில் நிறுத்துவிட்டு காசிபரை மற்றொரு சித்திர மண்டபத்திற் கொண்டுபோய் மாயையானவள் முன்னுருவை மாற்றிப் பெண் சிங்க வடிவுகொள்ள, அவரும் ஆண் சிங்க உருவங்கொண்டு புணர்ந்து இரண்டாஞ்சாமத்தில் ஆயிர முகங்களையும், இரண்டாயிரங் கரங்களையும் பெற்ற சிங்கமுகாசூரன் உதித்தான். அப்போது அவர்களிருவரிடத்திலும் பெருகிய வியர்வையில் நாற்பதினாயிரம் வெள்ளம் சிங்கமுகம்பெற்ற இராக்கதர் பிறந்தனர். அவர்களையும் அவ்விடத்தில் நிறுத்தி வேறொரு மண்டபத்திற்சென்று மாயைப் பெண்யானை யுருப்பெற்று நிற்க, காசிபரும் ஆண்யானை யுருக்கொண்டு கூடினர். உடனே மூன்றாஞ்சாமத்தில் நாற்கோடுகளைப் பெற்ற யானைமுகத்துடன் தாருகாசூரன் உதித்தான். அப்போது அவ்விருவருக்கும் உண்டாகிய வியர்வையில் நாற்பதினாயிரம் வெள்ளம் யானைமுகங்களைப் பெற்ற அவுணர்கள் பிறந்தார்கள். அவர்களையும் அங்கு நிறுத்தி மாயை மற்றொரு சந்திரகாந்த மாளிகையைச்சேர்ந்து செம்மறியாட்டின் பேடாயுருக்கொள்ள, முனிவரும் ஆண் ஆட்டின் உருவங்கொண்டு கூடினர். நான்காஞ்சாமத்தில் அசமுகியென்னும் பெண்ணைவள் அவதரித்தாள். அப்போதுண்டாகிய வியர்வையில் முப்பதினாயிரம் வெள்ளம் அவுணர் பிறந்தார்கள். அவர்களையும் அங்கு நிறுத்தி அவ்விருவரும் மற்ற மண்டபங்கள்தோறும் சென்று யாளி, புலி, குதிரை, மான், கரடிமுதலான மிருகங்களினது வடிவைப்பெற்றுப் புணர விடியற்காலத்தில் அவ்வைந்து முகங்களையும்பெற்று அறுபதினாயிரம் வெள்ளம் அவுணர்கள் தோன்றினர். இவ்வாறு மாயையானவள் காசிபரைக்கூடி சூரன் முதலாகிய நான்கு பிள்ளைகளையும் இரண்டு லட்சம் வெள்ளம் சேனைகளையும் ஓரிரவிற் பெற்றனள்.

•

இவர்கள் உதித்தகாலத்தில் சூரன் பெறவிருக்கிற ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் அளவற்ற துர்நிமித்தங்க ளுண்டாயின. அவ்வண்டங்களி னுள்ளவர்கள் 'இதென்ன! அனர்த்தத்துக்கு சூரபன்மன், சிங்கமுகன், தாருகன் மூவரும் காசிபரை வணங்கி, 'இனி

யாங்கள் செய்யவேண்டியவைகளைக் கட்டளையிட வேண்டுமென்று வேண்டினர்கள். அப்படி வேண்டிக்கொண்ட பிள்ளைகளின்மேல் கருணைகூர்ந்து, 'அப்பா புதல்வர்களே! நான் சொல்லுவதைக் கவனித்துக்கேளுங்கள். முன்னம் நன்மார்க்கத்திலீடுபட்டு, பிரம, தேவ, இராஜ இருடிகள் ஆசானையடுத்துத் தவம் யாகம்முதலிய கிருத்தியங்களைச்செய்து மிகுகாலம் நீடித்து அழியாச் சிரஞ்சீவிகளாக விளங்குகின்றீர்கள். அவர்கள் யாரென்றால், மார்க்கண்டேயர், அசுவத்தாமர், ஆஞ்சநேயர், பலிச்சக்கிரவர்த்தி முதலான சாதுக்கள். இவ்வுலகத்தில் இவரே கேடில்லா வாழ்வைப் பெற்றார்கள். அதுபோலவே நீங்களும் தவம் யாகம் முதலியவைகளினால் சிவபெருமானுக்குத் திருப்தியுண்டாகச் செய்வீராகில், உங்களுக்கொரு தீங்கும் நேரிடாமல் சுகசீவிகளாய் வாழ்வீர்களென்று சொல்லி, பல மந்திரங்களையும் போதித்துப் 'போய்வாருங்களப்பா!' வெனச், சூரன் முதலானோருந் தவஞ்செய்யும் இடத்தை நோக்கிச்சென்று, தவம் யாகங்களை விதிப்படி முடிக்கிறகாலத்தில், தபாக்கினியும் யாகத்தின் புகையும் சகலாண்டங்களிலும் நிறைந்து அங்கங்குள்ளவர்கள் நிலை தடுமாறி நிற்க இடமில்லாமற் றியங்கி மயங்கிச் சிவபெருமானைத் துதித்துப்போற்ற, அப்போது சிவபெருமான் இடபவாகனத்தின் மீது பார்வதி சமேதராய்ச்சென்று, சூரபன்மன் தவநிலையை யடுத்து, தெரிசனங்கொடுத்து, 'அப்பா அரக்கர்குல வேந்தனே! நினது தவத்திற்கும்; நீ செய்த யாகத்திற்கும்; மெச்சினேன்! உனக்கு வேண்டிய வரங்களைக்கேள் தருகிறேன்!' எனச் சூரன் விண்ணப்பஞ்செய்கிறான்: 'சச்சிதானந்தக்கடவுளே! தேவரீருடைய தெரிசனம்பெற்றுச் சிறப்படைந்தேனானது, விசாலமாகிய பூமிகளையுடைய பலபுவனங்களைக் கொண்டிருக்கும் அண்டங்களனைத்தினுக்கும் சக்கிரேசுவரனாய் அரசுசெலுத்தவும், அவைகளைக் காக்கவல்ல ஆக்கிஞைசக்கரமும், நினைத்ததற்குமுன் அவைகளைச் சுற்றிப் பார்த்துவரும் வேகமுள்ள வாகனங்களும், எக்காலமும் அழிவில்லாத வச்சிரதேகமும் தந்தருளவேண்டும். இதன்றியும், அலைகளை வீசுந் திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் கேசவன்முதலானவர் எதிர்த்துப் போர்செய்தாலும் பின்னிடையாமல் அவர்களை வாட்டியோட்டும் பெருவலியும், சமத்ததேவாத்திரங்களாலும் நாசமில்லாமல் என்றும் சிரஞ்சீவியாயிருக்கவும் கடாக்ஷிக்கவேணும்' என்று சூரன் வேண்டிக்கொள்ள, சிவபெருமான் அந்தப்படியே எல்லா

வரங்களும் நூற்றெட்டுயுகங்கள் வரையில் ஆயுளுந் தந்துச் சென்றார். பின்பு சூரபன்மன் சிவபெருமான் தந்தவரத்தின் பலத்தால் செருக்கடைந்து, பிரமன் விஷ்ணு முதலானோரையும் ஏவலராகக் கொண்டு, தவம் எக்கியம் முதலானவைகளைக் கெடுத்துச், சகலரையும் துன்பத்துக்குள்ளாகச்செய்து, தன்னினங்களை மேன்மையாக வகித்து, தனக்கு நிகர் ஒருவருமில்லையென்று இறுமாப்புடன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் தன் ஆக்கினைக்குள்ளாக்கி ஏகசக்கிராதிபதியாய் ஆண்டுவந்தான்.

அப்போது, பிரமன் விஷ்ணு முதலான தேவர்களும், சூரபன்மன் செய்யும் அக்கிரமங்களுக்குத் தாளமாட்டாமல் பரமசிவத்தினிடம் முறையிட்டுக்கொள்ள; சிவபெருமான் தேவர்கள் குறை தீரவும், அரக்கர்கள் எமபுரஞ்சேரவும் தக்கயோசனைசெய்து பின்பு சுப்பிரமணியரை உற்பவிக்கச் செய்தார்.

அதெப்படியெனில், ஆலகால விடத்தினையுண்டு மன்னுயிரனைத்தினையும் காத்தருளிய சிவபெருமான் தமது அனல்விழிகளின் மூலமாய்ப்படைத்த நீட்சண்ணியமுள்ள தீப்பொறிகளை வாய்வுதேவனும் அக்கினிதேவனுலும் சரவணப்பொய்கையிற் சேர்ப்பித்துப் பிரமன் விஷ்ணுமுதலான தேவர்களும் சரவணப்பொய்கையைச் சூழ்ந்து காத்திருந்தார்கள். அப்போது வானவெல்லையிற் செல்லுஞ் சூரியனுக்குப் பிரியமுள்ள வெண்டாமரைகளுடன் செந்தாமரை மலரையும்படைத்துத் தாங்கியிருக்கும் தன்மையைப்போலவே சரவணப் பொய்கையானது சிவபிரான் விழியினிடத்தெழுந்த அனற்பொறிகளையுந் தன்னிடத்தில் தரித்திருந்தது. இப்படிக்கு அருவாய் உருவாய்ப் பலவாய் ஏகமாய்ப் பிரமசொரூபமாய் விளங்கும் சோதிப் பொறிகளானது பின்பு ஒரு உருவத்தினைக்கொண்டு கிருபைவிளங்குஞ் சண்முகங்களையும் பன்னிரு கரங்களையும் படைத்த ஒப்பற்ற முருகக்கடவுளாக உலகங்களனைத்தும் பிழைத்தற்பொருட்டுத் திருவுருவினைப்பெற்று விளங்கினர். அத்தருணத்தில் நன்னிமித்தங்களுண்டாயின. வானத்தில் தேவதுந்துமி முதலாகிய வாத்தியங்கள் பேரொளியைக்காட்டி முழங்கின. நான்கு வேதங்களுந்துதித்து ஆரவாரங்களைச் செய்தன. பிரமன் விஷ்ணு தேவேந்திரனும், முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகள், கருடர் கந்திரு

வர் சித்த வித்தியாதரர் பன்னகர், யட்சர் முதலானவர்கள் பரிமள மிகுந்த பாரிசாத புட்பங்களை வாரி வாரிச் சோணமாரியைப்போலச் சிவகுமாரன்மீது மங்களகரமாகத்தூவி, "கருத்தனே! அடியேங்களிடத்தில் கிருபையுற்றுப் பார்த்து இரசிக்கவேண்டு" மென்று கொண்டாடிச் சரவணப்பொய்கையைச் சுற்றித் சுற்றித் திரிந்துக் கொண்டிருந்தார்கள். அதில் விஷ்ணுவானவர் கார்த்திகை முதலிய கன்னியர்களைத் தருவித்து நீங்கள் குழந்தைவடிவு பெற்றிருக்கும் எமது கடவுளுக்கு உங்கள் கொங்கைகளிற் பெருகும் பாலை உண்ணக் கொடுங்களென, அவர்க ளந்தப்படியே பாலைக்கொடுக்க உண்டு வளர்ந்திருந்தார்.

ஆதிசத்தியாகிய பார்வதி மாந்தளிரினும் மெதுவாகிய தன் பாதங்களிற் றரித்திருந்த சொர்னக் கிண்கிணிகளில் சில கழன்று பூமியில் விழுந்தது. அதனைச் சிவபெருமான் கண்ணுற்ற மாத்திரத்தில் ஒன்பதுபேர் பெண்ரூபந்தரித்துச் சிவபெருமானுக் கெதிரில் நிற்கக், கண்டு அப்பரமசிவத்தின் அருளைக்கினல் அப்பெண்கள் உடனே கருப்பமடைந்து வீரவாகு தேவர் முதல் ஒன்பது வீரர்களுடன் அப்பெண்களின் வியர்வை சலத்தினல் செயசாலிகளாகிய இலட்சம் பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்களனைவரையுங் கண்ட கறைமிடற்றண்ணல் 'குமாரர்களே! கேட்பீராக! நீங்களனைவரும் சயசாலிகளாகமீறி இந்திரன் முதலிய தேவர்களுக்குப் பகைவராகிய இராட்சதர் முதலியோரைக் கண்டதுண்டமாகச் சங்கரித்து வேறக் களையவிருக்கின்ற நமது திருக்குமாரனுகிய குமாரசுவாமிக்குப் படைத்துணைவராக இருக்கக்கடவீர்களென்று அனுக்கிரகஞ்செய்து, வேண்டிய வரங்களைத் தந்து விடைதரப் பெற்றுக்கொண்டு, சரவணப் பொய்கையினிடத்தில் வந்து சண்முகக் கடவுளுடன் கலந்து சென்று, இராக்கதரோடு யுத்தஞ்செய்து தாருகன், யாளிமுகன், சூரபன்மன் முதலிய இராக்கதர்களை வேரறக்களைந்து, தேவேந்திரன் வேண்டுகோளிஞல் தேவலோகத்தை யடைந்து, தேவசிங்காதனத்தில் பட்டாபிஷேகஞ் செய்விக்கத் தேவர் சேனுபதி யென்று பெயர் வகித்து, இந்திரன் புதல்வியாகிய தெய்வயானையை மணம்புரிந்து சூரபன்மனை மயில்வாகனமாகக் கொண்டார்.

வீரபத்திரர் காளி பூதகணங்கள் உற்பவம்

வீரபத்திரர் துதி

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

மூக்கண்ணுஞ் சடைமுடியும் வாளுங் கொண்ட
முன்னவனே மூவேழு வுலகம் பூத்து
செக்கர்வான் மணிமவுலி யிடப்பா லோங்குஞ்
சேயிழையைப் பெற்றுர்த்த மகஞ்சி தைத்த
உக்கிரமா மூர்த்தியனே யுமையா ளன்று
உயிர்த்தமா காளியோ டாடல் கொண்ட
விக்கிரமா வீரனெயெம் வினைவேர் வீழ்த்தும்
வீரபத்தி ரதேவைப்ப ணிந்துய் வாமால்.

சந்திரசடாதர மூர்த்தியாகிய ஸ்ரீசிவபெருமானுக்கு மாமனும், திரிலோகங்களுக்கு அன்னையாகிய பார்வதி தேவிக்குத் தந்தையும் ஆகிய தக்கன் யாகத்தில் சிவபெருமானுக்குத் தரவேண்டிய அவிர்ப் பாகத்தைக் கொடாமலும், பரமசிவத்தை அவமதித்துப் பேசியதா லும், பார்வதி கேட்டு மனம் பொறுமல் கயிலைக் கெழுந்தருளி தன் நாதனிடத்தில் விண்ணப்பஞ் செய்யத் தாமத குணத்தினால் நெற்றிக் கண்ணிலிருந்து உதிர்ந்த அக்கினிப் பொறியொன்றால் சகல உலக மும் நடுங்கிப் பூகம்பமானதுபோல அசைந்தாட, ஆயிரஞ் சிரங்களும், இரண்டாயிரஞ் செவிகளும், ஆயிரம் வாயும், இளம்பிறையையொத்த கோரைப்பற்களும், இரண்டாயிரம் கரங்களும், அவற்றில் குந்தம், வாள், பலகை, வேல், தோமரம், பிண்டி, பாலம், எழு, குலிசம், சூலம், வில், சரம், தண்டம், வச்சிரம் முதலிய படைகள் மின்னலைப் போல சொலிக்கவும், பாதார விந்தங்களில் தண்டை வீரகண்டை யுடன் உதித்தபடியால் இவருக்கு வீரபத்திரரென்னும் பெயருண்டா யிற்று.

அச்சமயத்தில் உமையவளது கோபாக்கினியினால் கண்ணினின் றும் பத்திரகாளி யுதித்தாள். அவ்விருவர் காட்சியைச் சிவபிரான் உமையவளுடன் கண்டு கிருபாநோக்கம் பாலித்தகாலத்தில் அவர்க ளிருவரும் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் வந்தனம்புரிந்து "எங் களுக்கு என்ன கட்டளை" யென்று கேட்டார்கள். அப்போது பரமசிவம் அவர்களை நோக்கி, "நம்மையன்றித் தக்கன் வேள்வி நடாத்துஞ் சாலைக்குட்சென்று அவிர்ப்பாகத்தைக் கொடுத்தால்

வாங்கிவருவீர். தடுப்பானுயின் அவன் சிரத்தைக் கண்டித்து அவனுக்குதவியாய்ச் சூழ்ந்திருக்கும் தேவர்முதல் யாவரையும் அதஞ் செய்து யாகத்தை அழித்து மீண்டும் வரக்கடவீர். அது சமயத்தில் நாமும் அவ்விடத்திற்கு எழுந்தருளுவோ" மென்றுரைத்து, உடனே தனது வியர்வையிலும் மயிர்களிலும் அளவற்ற பூதங்களையும் காளிகளையும் படைத்தார். அவர்கள், யாளி, சிங்கம், கரடி, புலியாதிய கொடிய மிருகங்களின் முகம் ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரம் விளங்க அதற்கிரட்டித்த கரங்களும் பலவாயுதங்களுங் கொண்டு பிரகாசிக்கப், பாதங்களில் வீரகண்டயமும் சிலம்பும் ஒலிக்கப், பசியினால் வருந்தி ஒருகொடியில் உலகங்களத்தனையும் அழிக்கவல்ல பூதங்களும், காளிக்கூட்டங்களும் சூழ வீரபத்திரரான வர் அதிக விரைவாகத் தக்கன் யாகசாலையைச் சூழ்ந்துகொண்டு பூதத்தலைவரை நோக்கி 'இவன் வாசலினிடங்களினும், புறத்தினும், வானவெல்லையினும் நீங்கள் காவல்கொண்டு ஒருவரையும் விடாமல் பாதுகாத்திருங்களென்று கட்டளையிட்டு, தனது வீரமும் பிரதாபமும் யாவருக்கும் தெரியும்படி உக்கிரங்கொண்டு வெகுண்டு சீறி, பிரமன் விஷ்ணு தேவர்கள் முதலானோர் தலைக்காட்டாதபடிக்கு வாட்டித் தக்கனையும் அவன் மனைவியையுங் கொன்று யாகத்தை அழித்துச் சின்னபின்னப் படுத்துகிறபோது, கைகளறுந்தவர்களும், மெய்களறுந்தவரும், கால்களறுந்தோரும், தோள்களறுந்தோரும், சிரங்களறுந்தோரும், உரங்களறுந்தோருமாக வீரபத்திர சுவாமியானவர் சினமிகுந்து இருடி கணங்கள்தவிர, மற்ற தேவர்கள் கூட்டங்களில் ஒருவரையேனும் விடாமல் அடித்துப் புண்படுத்திய போது; பிரமன் சிவபெருமானை வேண்டிக்கொண்டு 'ஓ கர்த்தனே! எனது குமாரனுகிய தக்கனைத் தருவிக்கவேணு' மென்று துதிக்கச், சிவபெருமான் வீரபத்திரரைக் கடைக்கண்ணுற் பார்த்தமாத்திரத்தில் வீரபத்திரர் அக்குறிப்பை யுணர்ந்து தனது கோபந்தணிந்து சந்துட்டராக இருந்தார். உடனே சிவபெருமான் தக்கன் தேகத்தைத் தருவித்து அவ்விடத்தில் வெட்டுண்டு கிடந்த ஆட்டுக்கிடாயின் தலையைப் பொருத்தித் தமது கடாட்சத்தினுல் தக்கனைடு அங்கு மடிந்துக் கிடப்பவர்களை யெல்லாம் எழுப்பி வீரபத்திரர் முதலான பூதகணங்கள் சூழக் கயிலைக் கெழுந்தழிளினர்.

—

பசுவின் அங்கலட்சணம்

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வானுலகு மண்ணுலகும் மறையு மெல்லா
வைப்புமருட் பிரமாதி யாவு மோங்கத்
தானல்குந் தயிர்நெய்மோர்ச் சருமம் கோரோ
சனமயங்கோ சலமாதி யாவுந் தந்திக்
கேனியெக்கி யாதிகட்கு முயிராய்த் தேவ
ரேற்றங்க புண்ணியசொ ரூப மாகி
ஆனெனப்பே ருற்றுமறை யாதி யேற்றும்
ஆதியையெம் பசுத்தேவைப் பணிது மன்றே.

கேளாய் பார்வதி! உலகத்திலுதித்த பசுக்கூட்டங்களுக்குப் புல் முதலாகிய ஆகாரங்களைச் சரியாய்க்கொடுத்துக் காவாமல் எச்சில் தண்ணீர் காட்டுவதும், அவற்றைத் தூரப்பெண் இருக்கு மிடத்திலும், அசுசியான இடத்திலும், புறக்கடையிலும் கட்டுவதும்; கன்றுக்குப் பாலிலிடாமற் கரந்துகொள்வதும், அவை பால்கொடாவிட்டால் அடிப்பதும், வைவது முதலாகிய அக்கிரமங்களையே விருத்தி செய்துகொண்டு அவற்றின் பாலைக் காய்ச்சித் தயிராக்கிக் கடைந்து வெண்ணெயெடுத்து மோரையும் நெய்யையும் விக்கிரயஞ்செய்து மானிடர்கள் சீவனஞ் செய்துக்கொண்டு வருகிறார்கள்.

அப்பசுவின் பெருமை யெப்படியெனில்: பசுவின் நான்கு கால்களில் பிரமதேவன்; பாதங்களில் குபேரன்; இடையில் நாராயணன்; மயிரில் முக்கோடி தேவர்கள்; வாலில் தருமதேவதைகள்; யோனியில் மகாலட்சுமி; மடியில் அமுதகூபாளர்கள்; அடிவயற்றில் பன்னகர்கள்; வயற்றில் அக்கினி; முகப்பில் சாவித்திரி; நெஞ்சில் பகலனென்னும் தேவதை; வரிமடிப்பில் நீ; கண்டத்தில் நான்; தவடையில் அட்டவசுக்கள்; முகவாய்க்கட்டையில் சந்திராதித்தர்; புட்டத்தில் சீவன் முத்தர்கள்; நடுநெற்றியில் சித்தர்கள்; மூக்கில் வாயு; கொம்பில் ஏமன்; செவிகளில் சத்த இருடிகள்; முகத்தில் தேவேந்திரன்; அதினிரத்தம் சந்திரகலை; மாம்சம் சத்தி. இத்தப்படியாக தேவர்கள் இருடிகள் அனைவர்களும் பசுவின் அவயவங்களிற் பொருந்தியிருப்பதால் அதன் மேன்மையாகிய புனிதத்தைச் சாமானிய மனிதர்கள் உணர்ந்து ஆதரிப்பது கடினம்; மிகுந்த தெளிவினையுடைய விவேகிகள் அதனுடைய அருமையும் பெருமையும் தெரிந்து வினயத்துடன் போஷிப்பார்கள்.

ஓ, பார்வதியே! மேலும் கோவைத்தடிக் கொம்புகளினலும், மூப்புரி கயிற்றினலும், பிரம்புகளினலும், மற்றுமெதைக் கொண்டாகிலும் அடிப்பது மாபாதகம்; அன்றியும், நஞ்சை புஞ்சை வயல்களில் மேயும் பசுவைக் கண்டால் ஓசைபடக் கைகளைத் தட்டி அதட்டியோட்டவேண்டும்; இவ் வுபாயத்திற்கும் அசையாவிடில் தருப்பைப் புல்லினலும் வைக்கோலினலும் உதட்டியாய்த் தட்டித் தட்டியோட்டுவது மிகவும் புண்ணியம்; இதற்கு மேற்பட்டுச் செய்யும்படியான தெல்லாம் அதிக பாவமேயாம்; இந்தப்படியாகப் பசுக்களை அடிக்காமலும் கன்றுகளுக்கு எதேட்டமாகப் பாலைவிட்டும் பிரியமாக அருமை பெருமை பாராட்டி அதேகர் சென்மசாபல்யம் பெற்றார்கள். அவர்களில் உனக்கொருமா இருடியின் கதையை விவரமாகச் சொல்லுகிறேன்.. "கேளாய் மலைமகளே! பிரமஞான சம்பன்னராகிய சுமித்திரமா முனிவரென்னும் தவசிரேட்டர் ஒரு பசுவின் கன்றை வளர்த்து வந்தார். அதெவ்வண்ணமெனில்; விடியிற் காலத்தில் இம்முனிவ ரெழுந்தவுடன் பசுவின் கன்றினிடம்வந்து தீர்க்க தெண்டனிட் டெழுந்து சென்று, ஸ்நானுதட்டானங்களை முடித்துக்கொண்டு திரும்பவும்வந்து அப் பசுவை யவிழ்த்துச் சுத்தமாகிய இடத்தில்கட்டிப் புல் முதலாகிய ஆகாரங்கள் எதேட்டமாய்த் தந்து ஆசித்து நேசித்தார். இந்தப்படியாய் அம்முனிவர் பசுவின் மேல் அதிக பிரியம்வைத்துத் தடவிக்கொடுப்பதும், சொரிவதும், குளிப்பாட்டுவதும், புல்லிருக்கு மிடத்தில்விட்டு மேய்த்தும் வருகிற காலத்தில், அங்கொரு எருதுவந்து இப் பசுவுடன் பொலிந்து போயிற்று. அதனல் பசு கருப்பந்தரித்துப் பூரணமாகிக் கடாறிக் கன்றை ஈன்று கன்றைப் பரிவுடன் பார்த்துப் பால் கொடுத்துவர, நாளுக்கு நாள் அக்கன்று விருத்தியடைந்து சில வருடங்களுக்கெல்லாந் தாயொரு கன்றும், தானெரு கன்றும் ஈன்றது. அவை இரண்டும் தழைத்துக் கன்றுகள்போட இவ்வண்ணம் ஒவ்வொரு வருடத்திற்குந் தப்பாமல் கன்றுகள் ஈன்றுவந்ததால், 'பலதுளி பெருவெள்ளம்' என்பதுபோலப் பசுக்கூட்டம் பெருகிப் பெருத்த மந்தையாயிற்று. இதைக் கண்டு சுமித்திரமாமுனிவர் ஆசைமேலிட்டு அன்புடன் அப் பசுக்கூட்டங்களை மேய்ப்பதும், தேய்த்துக் குளிப்பாட்டுவதுமாகிய வேலைகளுக்குக் கிஞ்சித்துஞ் சலியாமல் போஷித்துக்கொண்டு மிருந்தார்.

இந்தப்படியாக நாள்தோறும் பாராட்டிக் கொண்டிருக்கும் சுமித்திரமாமுனிவரிடத்தில் பழகிய பிரியத்தினால், பசுக்கள் யாவும் அம்முனிவர் சென்றால் சென்று, நின்றால் நின்று, படுத்தால் படுத்து இப்படி அவரைவிட்டுப் பிரியாமலிருந்தன. அவரும் அவற்றின் மீது அன்பு மாறாமலும், அவற்றின் குறிப்பறிந்து பசிதாக முதலியதும் அருந்தச் செய்ததுடன், நோயடையாமல் அவிழ்தம் கொடுத்தும் காப்பாற்றிக்கொண்டு அப் பசுக்களின் கன்றுகளைப்போலத் தானும் ஒரு கன்றுப்பசுக்களின் முலையில் வாயைவைத்துப் பாலையுண்டு, தான் மானிடனென்றும், அவை பசுக்களென்றும் பேதமெண்ணமல் அவைகளுடன் விளையாடிக் காலங்கழித்து வந்தார். இவரது நடவடிக்கைகளை அங்கே வசிக்கும் தவசிகள்கண்டு வியப்புற்று, இவருக்குப் பினாகியென்றும் நாதனப்பேரிட்டழைக்கக் காலங்கழித்து வந்தார்.

இவ்வண்ணம் சிலகாலம் பசுக்களை மேய்த்து வருகையில், அமாவாசை கடந்து மூன்றுவதுநாளி லிருந்து சந்திரன் நாளுக்கு நாள் விருத்தி யடைவதுபோல, பசுக்கூட்டங்கள் கன்றுகளை மேலும் மேலும் ஈன்று விருத்தியடைந்து ஆயிரம் பசுக்களாகி, பெருத்த மந்தையாயிற்று. இம்மந்தையை ஒருநாள் மகாமுனிவர் ஓட்டிக் கொண்டுபோய் அங்குள்ள ஒரு மடுவின் கரையோரம் மேயவிட்டுத் தான் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். அப்போது அம்மடுவின் நடுவிலிருந்து சலம் கரைபுரளும்படியாக மிகு ஆரவாரத்துடன் விளையாடிக்கொண் டிருக்குஞ் சில ஸ்திரீகளைக் கரையோரம் மேய்ந்து கொண்டிருந்த பசுக்கூட்டங்கள் கண்டு பிரமித்து; அவர்களை நோக்கி, "நீங்க ளெந்த ஊர்? உங்கள் பேரென்ன? தவசிகள் வசிக்கும் இக் காட்டிற்கு என்ன காரணமாய் வந்தீர்கள்? இவைகளை ஒளியாமற் சொல்லவேண்டு" மென்று வேண்டிக்கொள்ள, மடுவில் குளித்து விளையாடிக் கொண்டிருந்த ஸ்திரீகள் கேட்டு பசுக்கூட்டங்களை நோக்கிச் சொல்லுகின்றார்கள் :—

"கேளுங்கள் ஆனிரைகளே! பூர்வத்தில் நாங்கள் பசுவாக இருந்தோம். யாக பசுவாகி உயிர்விட்டபடியால், இப்போது உத்தமப் பெண் பிறப்பாக இருக்கின்றோம். நாங்கள் வசிக்கும் உலகம் ஆனலகென்றும், பசுலோகமென்றும் சொல்லப்படு" மென்ன, அம்மொழிகளைக் கேட்ட பசுக்கூட்டம் அனைத்தும் அம் மாதர்களை

நோக்கி, "பெறுதற்கரிதாகிய புனித பதவியடைந்த பெண்களே! தயவுசெய்து எங்களையும் நீங்களடைந்த ஆனுலகஞ் சேரும்படியான உபாயத்தைச் சொல்லி, உங்களுடன் சேர்த்துக்கொள்ளும்படி நாங்கள் உங்கள் திருவடியைத் துதித்து வேண்டுகிறோம்" மென்று நயமாகப் பேசிய பசுக்கூட்டத்தின் சொற்களைக் கேட்ட பெண்களுக்குத் தயாளம் பிறந்து, "நீங்களனைவரும் இக்காட்டிற் கடுத்த நாட்டை யடைந்து, அந் நகரத்தையாளும் அந்திராசன் செய்யும் யாக பசுக்களாகி உயிரை விடுவீர்களானால், பரலோகமடைவீர்கள்" என்று தக்க உபாயத்தை நவின்று சென்றார்கள். இந்த இரகசியத்தைக் கேட்ட ஆவினங்களனைத்தும் பிரமானந்தமடைந்து யாகத்தில் பிராணனைவிடத் திடங்கொண்டு, நாட்டுக்குச் செல்ல உத்தேசித்து, மறுபடியும் நாமென்ன நன்றி கெட்டவர்களாக நம்மைக் காப்பாற்றி வந்த சுமித்திரமா முனிவரைவிட்டு யாகபசுவாகி இறந்தபோதிலும், 'செய்தவமறந்தால் கைதவமாளு' மென்றபடி, நமக்கு ஆகாரந்தந்து காலமறிந்துக் காப்பாற்றின முனிவரைவிட்டு நாம் மாத்திரம் புனித பதவியடைவது தருமமல்ல; இம்முனிவரையும் நம்முடன் அழைத்துப்போவதே மிகவும் விசேடமென்று யோசித்து முனிவரிடம்வந்து தங்கள் கருத்தை யறிவிக்க; அவர் சம்மதியாமல் கடுகடுத்துப் பேசியதால் உடனே நாட்டில் வசிக்கும் சில கபிலைப் பசுக்கள் இந்த விருத்தாந்தங்கள் யாவு மூணர்ந்து காட்டில் வசிக்கும் வைதிக பசுக்களை நோக்கி, உங்களுக்கு இம்முனிவரைக் கொல்லத் துணிவுண்டாக மாட்டாது; நாங்கள் கொன்றுவிடுகிறோம்; ஆகிலும், இவரைக் கொல்லுவதினால் எங்களுக்குண்டாகும் பலன் யாது? "விரதங் கெட்டாலும் சுகமுண்டாகவேணும்; சுகங்கெட்டாலும் விரதபலனுண்டாகவேணும்" என்றபடி யெங்களுக்கேதேனும் ஒரு பலன் கிட்டும்படிச் சொல்வீராகில் இம்முனிவரை ஒரு இமைப்பொழுதில் கொன்றுவிடுகிறோமென்ற நாட்டுக் கபிலைப் பசுக்களை நோக்கிக் காட்டு வைதிகப் பசுக்கள், 'ஓ கபிலைப்பசுக்களே! கேளுங்கள்! யாரேனும் எங்களைத் தானங்கொடுத்த பலனைப் பார்க்கிலும் நூறுபங்கு அதிக பலன் உங்களைத் தானம் பண்ணினவர்களுக்கு உண்டாகக் கவடது' என்று வரங்கொடுத்தனு. இவ்வரத்தைப் பெற்றுக்கொண்ட கபிலைப்பசுக்கள் ஆனந்தத்தை யடைந்து களிப்பின் மிகுதியால் முனிவரைப் பாய்ந்து கொன்றுவிட்டன. உடனே, முனிவரது பிராணனை ஆனுலகத்தார் எதிர்கொண் டழைத்துப்போய், பரலோகத்திற் சேர்த்தார்

கள். பின்பு அம்முனிவர் வளர்த்த ஆவினங்கள் குற்றமற்ற அந்தி ராசன் யாக பசுக்களாகி, மரித்து ஆனுலகடைந்து பின் மகரிஷியை யும், அவரைச் சார்ந்தவர்களேயுங் கண்டு வணங்கிப் புனித சென்மம் பெற்றன.

ஆகையால், "ஓ பார்வதி! சகலமான தேவதைகளும் பசுவி னிடத்தில் வசித்திருப்பதால் தேவதைகளைப் பார்க்கிலும் பசுக்கள் மேலாகிய புனிதம் பெற்றன" என்று மகாதேவன் புகலக்கேட்ட ஆதிசக்தி ஆனந்தமடைந்து பரமசிவத்தைப் பணிந்திருந்தாள்.

விஷ்ணு உற்பவம்

விஷ்ணு துதி

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருவருளா லுலகேழு மளித்துக் காத்துத்
தேவரெலாம் பரவுமருட் கடவு ளாகி
அருமறையா றங்கநெறி யருட்கோ லோச்சும்
ஆதியனே யுலகுண்ட மாலே யன்னாள்
அருச்சுனற்குப் பரபோத முபதே சித்த
அண்ணலேப்பூ மாதுவளர் மார்பி னனைத்
திருமாலே யரக்கர்குலத் தேவைத் தேவர்
செல்வத்தைச் சிந்தித்துப் பிறவி தீர்வாம்.

விஷ்ணுவென்பவர் சகல லோகாதிகாரராய்; மும்மூர்த்தி சொரூபராய்; பஞ்சகிருத்திய தாணுவாய்; சகலாண்ட கோடிகளே யும் தனது கிருபாகடாட்சத்தினுல் தனுகரண புவன போகங்களேயுங் கொடுத்துக் காப்பவராய்; வைகுந்த லோகவாசராய்; அவாத்த சமத்தகாமனுய் விளங்கும் மூர்த்தியாகும். இவரை வேதங்களெல் லாம் 'காப்புடைக் கடவு ளென்று' கூறுகின்றன. இவர் சுத்தப் பிரம சொரூபராதலால், பிறப்பிறப்பு, சுகதுக்கம் முதலிய மாயா சம்பந்தங்க ளில்லையாயினும், பத்த பாகவத தீசானுதாசர்களின் உள்ளக் குறிப்பினெறியே எழுந்து காத்த திருவுருவுங்கள் அனந்த மாம். அவற்றுள் முக்கியமானவை பத்து அவதாரங்களாம்.

அந்தப் பத்து அவதாரங்கள் அடைவதற்கு முன்னம் வைகுந் தத்தில் தேவராதி சகல சீவான்மாக்களும் பணியும்படி எழுந்த திரு வுருவம் ஒன்றுண்டு. அதுதான் ஸ்ரீ மகாவிஷ்ணுமூர்த்தி என்று கூறுவது. இவர் திரிமூர்த்திகளில் ஒருவர். இவர் பிரளயகாலத்

தில் சகல அண்டசராசரங்களையும் தமது குட்சியில் வைத்துக் காப்பவர். இவருக்குச் சீதேவி பூதேவி நீளாதேவியென மூன்று மனைவிகளுண்டு. புதல்வர்கள் இருவருண்டு. இவரெடுத்த அவதாரங்கள் பத்து. இவருக்குப் பஞ்சாயுதங்கள். கனகமயமான ஆடையுடுப்பவர். கண்டத்தினிடத்தில் வனமாலை, வனசமாலை, கௌத்துவாபரணந் தரிப்பவர். இவரது மகிமைகள் பலவுண்டு; இவைகள் எல்லாமுடைய மூர்த்திகாரணத்தைச் சுருக்கிச் சொல்லுகிறேன்.

மூன்று மனைவி	இலக்குமி, பூதேவி, நீளாதேவி.
புதல்வரிவர்	பிரமன், மன்மதன்.
வாகனம்	கருடன்.
குணம்	சத்துவம்
ஆயுதம்	சங்கு, சக்கரம், கதா, கட்கம், தண்டம்.
ஆடை	பீதாம்பரம்.
மாலை	துளவம், தாமரை.
கொடி	கருடன்.
ஆபரணம்	கௌத்துவமணி.
இடம்	வைகுந்தம்.
சயனம்	சேடன்.

இம் முக்கியாமிசங்களைப் பரத்துவ பூர்வ பட்சாதி பரமாரிய வேதாகமங்களெல்லாங் கூறின.

ஆதியில் வடவாலித் தளிரின்மேற் படுத்து யோகநித்திரையிலிருந்த விஷ்ணுவானவர் பூமண்டலத்தைச் சிருட்டிசெய்ய வெண்ணிப் பாற்கடலில் ஆதிசேடன்மீது சயனித்திருக்க; அக்காலத்தில் அக்கடலினிடத்திலிருந்து உலகமாதாவாகிய இலக்குமி தோன்றி; விஷ்ணுவினுடைய வலதுமார்பில் தங்கினள். அதற்குக் காரணம் யாதெனில்,—உலகத்தில் பிள்ளைகள் மீது தாய்க்கிருக்கும்படியான பிரியம் தந்தைக்கு மிராது; ஆகையால், புருஷாகாரி வடிவாகியும் ஸ்ரீ விஷ்ணுவின் திருமார்பில் அமர்ந்திருந்தாள்.

தசாவதாரங்களாவன:—

1-வது	மச்சாவதாரம்.	6-வது	பரசுராமாவதாரம்.
2-வது	கூர்மாவதாரம்.	7-வது	இராமாவதாரம்.
3-வது	நரசிங்காவதாரம்.	8-வது	பலராமாவதாரம்.
4-வது	வராகவதாரம்.	9-வது	பௌத்தாவதாரம்.
5-வது	வாமனவதாரம்.	10-வது	கட்காவதாரம்.

மச்சாவதாரம்

துதி

கலி விருத்தம்

வாரிதி யினின்மறை கொடுபுகு சோமுகா
சூரனை யடுமா தவமச் சாவ
தாரணை மாயனை தாமோ தரனையென்
நாரண நாதனை நாடிப் பணிகுவாம்.

பிரமதேவனிடத்திலிருந்த இருக்கு, யசுர், சாமம், அதர்வண மென்னும் நான்கு வேதங்களையும் சோமுகாசூரனவன் திருடிக் கொண்டுபோய் கடலில் ஒளித்துக்கொள்ள பிரமன் மிகவும் துயர முற்று, தேவர்கள் கூட்டத்துடன் பாற்கடலுக்குச் சென்று, மகா விஷ்ணுவைச் சேவித்து வணங்கி, 'சுவாமி அடியோங்கள் கடைத் தேரும் பொருட்டு அனுக்கிரகித்த வேதங்களைச் சோமுகாசூரன் கவர்ந்துகொண்டுபோய், கடலில் ஒளித்துக்கொண் டிருக்கிறான். ஆதலால், தயைசெய்து அவ்வேதங்களை வரவழைத்து ரட்சிக்க வேண்டுமென்று வேண்டிப்போற்ற, மாயன் பிரமனைநோக்கி 'நீ சங்கடப்படவேண்டாம்; உன்னிட்டப்படியே வேதங்களைத் தருவித்துக் கொடுக்கிறேனென்று சொல்லியனுப்ப, பிரமன் விடை பெற்றுச் சந்தோஷமடைந்து தேவர்கள் கூட்டத்துடன் சத்திய லோகஞ் சேர்ந்தான். பின்பு மகாவிஷ்ணுவானவர் பெருத்த சேற்கண்டை உருவமெடுத்துக் கடலிற் புகுந்து சோமுகாசூரனை வதைத்து, வேதங்களைக் கொண்டுவந்து, பிரமதேவனுக்குக் கொடுத்தார். இக்காரணத்தால் இவருக்கு மச்சாவதாரமென்று பெயருண்டாயிற்று.

கூர்மாவதாரம்

துதி

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

மார்பிருந்த மலர்மாது சூடி நீத்த
மாலினனை யவமதித்த மகவா னுக்கம்
பார்பிரித்துப் பாலாழி யுய்ய வேக்கிப்
பண்ணவர்மந் திரநாட்டி யசுர ரோர்பால்

சேர்ந்திழுப்ப வாமையுரு வாகித் தாங்கித்
தேவருக்கு மமுதளித்துக் காத்து ஆளும்
சூர்த்தடிந்த திருமாலை வைகுந் தத்திற்
றுலங்குமா விண்டுதனைத் துதித்து வாழ்வாம்.

மூன்னொருகாலத்தில் தூருவாசமா இருடியானவர் வாசுதேவனைச் சேவிக்கும் நிமித்தம் வைகுந்தத்திற்குப் போகிறபோது, தெய்வப்பெண்கள் மகாலட்சுமி சூடிக்களைந்த மலர்மாலைகளை அன்போடு எடுத்துக்கொண்டு எதிர்வரக்கண்டு அம்மாதர்களை நோக்கி, "ஓ வனிதையர்களே! இந்த மாலைகளில் எனக்கொன்று தரவேண்டும்" என்று கேட்க, அவ்வனிதையர்களோ இவருக்கொரு மாலை கொடாவிடில் மிகுந்த கோபசொரூபராகிய இம்முனிவர் சபிப்பாரென்று பயந்து அம்மாலையில் ஒரு மாலையைக் கொடுக்க, அதனை மிகுந்த பயபத்தி விசுவாசத்துடன் தூருவாசமா முனிவர் இரண்டு கரங்களாலும் பெற்றுக் கண்களில் ஒத்திக்கொண்டு அதிக வினயமாய்க் கையில்கொண்டு வைகுந்தத்திற்குச் சென்று இலட்சுமி நாராயணனைத் தரிசித்து வணங்கிப் போற்றித் திரும்பி, தேவலோகத்துக்கு வருகிறபோது தேவேந்திரன் வெள்ளையானையின்மீது ஏறித் தன் நாட்டை வலம்வருகிற ஆடம்பரத்தைக் கண்டு, தூருவாசகர் சந்தோஷித்து, தவசியாகிய நமக்கே னிந்தப் பூமாலை; இந்த மாலையைத் தரித்துக் கொள்ளத்தக்க பிரபு இவனல்லாது, மற்றவர்கட்குத் தகா' தென்று உற்சாகத்துடன் மலர்மாலையை இந்திரன் கையில் கொடுத்தார். அதை அவன் யானைச்செலுத்தும் அங்குசத்தில் மாட்டியெடுத்து யானையின் மத்தகத்தின்மீது அலட்சியமாய்ப் போட்டான். அதனால் யானைக்கு அருவருப் புண்டாகித் தனது தும்பிக்கையினாலே அம்மாலையை யெடுத்துக் கீழேபோட்டு, அத் தவசியின் முன்னிலையிற் காலினால் துவைத்தது. அதைக்கண்டு தூருவாசகர் இரௌத்திராகாரமாய்க் கண்கள் சிவந்து மிகச் சினந்து உக்கிரங்கொண்டு இந்திரனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

"அடா! இந்திரா! புட்பமாலைகளின் விடயத்தில் மிகுந்த பிரியனும் இதனைத் தரிக்கத் தக்கப் பிரபுவும் நீ என்று மதித்துச் சாட்சாத்து உலோகமாதாவாகிய ஸ்ரீ மகாலட்சுமி சூடிக்களைந்த பூமாலையை உனக்கு யான் கொடுத்தேன். அம்மாலையை நீ அசட்டையாய் வாங்கி யானையின் காலில்போட்டு மிதிக்கச் செய்தாய். இப்படி நீ செய்ததற்குக் காரணம் யாதென்றால், தேவர்களுக்கெல்லாம் இராஜ

னென்றும், இவ்வுலகத்துக்கு அதிபதி யென்றும், காமதேனு கற்பக விருட்சம் முதலான சகல செல்வமும் நமக்கிருக்கிறபோது இந்த மாலை யெம்மாத்திரம்? இது ஒரு லட்சியமோ என்றும் அலட்சிய மாய் உனக்குண்டாகிய செல்வச் செருக்கினால் நம்மைக்கூட இலட்சி யஞ் செய்யாமற் போனாய். ஆதலால், செல்வத்திற்குக் காரணமாகிய லட்சுமி கடாட்ச மில்லாமற் போகக்கடவாய்" என்று சபித்துவிட்டு மனதுக் கிசைந்தபடி சென்றார். உடனே சூரிய சந்திர கிரக நட்சத் திரங்கள் காமதேனு கற்பக விருட்சம் மகாலட்சுமி முதலானதுகளும் போய்ப் பாற்கடலில் மறைந்துபோயின. மூவுலகங்களும் காடாந்த காரமான இருள் சூழ்ந்துகொண்டது. இதுகளையெல்லாங் கண்டு இந்திரன் தனது குருவாகிய பிரகஸ்பதி பகவானிடத்தில் முறையிட, அவர் பிரமதேவனிடத்திற்குச் சென்று அறிவிப்பாயாகில் உனக் குற்ற துயரம் நீங்குமென்றார். அவ்வாறே இந்திரன் தேவர்கள் கூட்டத்துடன் சத்தியலோகஞ் சென்று பிரமதேவனைக் கண்டு வணங்கி, தனக்கு நேரிட்ட குறைகளைச்சொல்லி வேண்டிக்கொண் டான். பிரமன் இந்திரனைநோக்கி, 'இக்காரியம் நம்மாலாகத் தக்க தல்ல. சகல உலகங்களுக்கும் நாதனையும் ஆதிமத்தியாந்த ரகித னையும் விளங்கும் விஷ்ணுவினிடம் போகலாம்; வாரு' மென்றுச் சகல தேவர்களுந்தொழ பாற்கடலுக்குவந்து யோகநித்திரையி லிருக் கும் பகவானை நோக்கி, இரு கரங்களையும் சிரமசைக்கூப்பி, கேசவா! தாமோதரா! மாதவா! இருடிகேசா! புண்டரீகாட்சா! புருடோத் தமா! சனார்த்தனா! கருணாநிதி! ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! ஆதிமூலமே யென்று துதிசெய்யும் முறைகளைக் கேட்டு விஷ்ணு வானவர் அதி யுற்சாகத்துடன் கருடன்மீதேறி வந்து காட்சி தந் தார். அப்போது பிரமன் அஞ்சலிசெய்து தேவேந்திராதி தேவர்க ளுடைய கோரிக்கைகளை விண்ணப்பஞ்செய்து அது முடியு முபாயம் தேடவேண்டுமென்று கோருவதை விஷ்ணுவானவர் கேட்டு யோசித்து, தக்க முயற்சியுடன் அவர்களுடன் கலந்து மந்தரகிரி யைத் தருவித்து, பாற்கடலில் மத்தாக நாட்டி, வாசுகியைத் தாம் பாகப் பூட்டி, தேவர்கள் ஒரு பக்கமும், அசுரர்கள் ஒரு பக்கமுமாக யிருந்து, திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது முதலில் ஆலகாலவிஷம் பிறந்தது. பின்பு சூரியன் சந்திரன் கிரக நட்சத்தி ராதிகள்; ஐராவதம் காமதேனு கற்பகவிருட்சம் நவநிதி ஸ்ரீ மகா லட்சுமி அமிர்த முதலாகிய பொருள்களெல்லாம் பிறந்தன. அந்தக்

காலத்தில் மந்தரகிரியைக் கடலில் மூழ்காவண்ணம் ஆமை யுருவங் கொண்டு திருமால் தமது முதுகிற்றாங்கினர். இது கூர்மாவதாரங் கொண்டதற்குக் காரணம்.

வராகவதாரம்

துதி

அறுசீரடி யாசிரிய விருத்தம்

தாயினுங் கருணை கூர்ந்தித் தாலமே முளந்து மன்பர்
சேயினு மெளிது வந்துஞ் செகமெலா மளித்துக் காத்தும்
நாயினுங் கடையே மெம்மை நல்கியும் நவிலு மெல்லா
மாயிலங் கியவை குந்த வாசனை வணங்கு வாமால்.

இந்த அவதாரம் எடுத்ததற்குக் காரணம் காசிபருக்குந் திதிக்கும் பிறந்த இரணியன் இரணியாக்க னென்னும் புதல்வர் இருவர்களும் மூவுலகங்களையும் தனிச்செங்கோல் செலுத்தித் தேவர்கள், யட்சர், கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்தியாதரர் முதலானோர்களையும் செயித்து, கருவபங்கம்செய்து சந்தோஷத்தட னிருக்கிற போது, இளையவனுகிய இரணியாக்கதன் தவஞ்செய்து பிரமதேவனிடத்தில் கதையும் செயந்திமாலையும் பலவரங்களும்பெற்றுத்தோள்கள் பூரித்து ஆரவாரித்து, தேவர்கள்முதல் யாவரும் தயங்க இப் பூமியை அடியோடும் பேர்த்துப் பாதலத்திற் கொண்டுபோய் வைத்துக்கொண்டு எதிரியெவன் வருவானென்று எதிர்பார்த்திருந்தான். அப்போது சுயம்பு மனுவானவர் இரணியாக்கதன் பூமியைப் பேர்த்தெடுத்துக்கொண்டு போனதைப்பற்றி சீவராசிகள்மேல் தயையுடையவராய்ப் பிரமதேவனிடஞ் சென்று வணங்கிப் போற்றி, "எந்தையே! இரணியாக்கதனுவன் இந்த அவனி முழுதையும் கொண்டுபோய்ப் பாதலத்தில் ஒளித்துவைத்துக்கொண்டான். ஆகையால், நான் அரசுபுரியும் செயலில்லாமல் தேவரீரை வந்தடைந்தேன்" எனத் திசைமுகன் சிந்தித்து அழகுபொருந்திய மேக வண்ணனைப் பணிந்து, "தந்தையே! அவனியை யரு" வெனப் போற்றியபடியால், மாயவன் குறுகிய வராக வுருவமாய்த்தோன்றி அண்டமூகட்டையளாவி அகண்ட மந்தரவரையை நிகர்த்த நான்கு கால்களிலும் நவமணிகளிழைத்த சிங்கங்களிருக்கும் குகைகளையொத்த செவிகளும், வச்சிராயுதத்துக் கொப்பாகிய மயிர்களைச்

சிலிர்த்து செவிகளே நெறித்து வாலிவா னுலகத்தைப் பார்க்கத் தூக்கிக் கிளம்பும்போது, மந்தரகிரியை இடறித்தள்ளி ஆகாயத்தை யளாவிய மகமேரு பருவதமானது தூள்தூளாகிப் போக, உந்தியா னது சகல உலகங்களிலும் அதிக உக்கிரத்துடன் கடலுக்குள் புகுந்து பாதாளலோகத்தை யடைந்து காசினியைத் தமது கோட் டிடை அமைத்து அசையாது கொண்டுவருகிறபோது, இரணியாக்க தன் மறுத்து 'விடு விடு' என்று கதையைச் சுழற்றி யறைந்தான். அதனே வராகமூர்த்தியானவர் வச்சிராயுதத்துக்கு நிகராகிய தமது மயிர்களால் தட்டிவிட்டுத் தீவிரமாக அவனியைக் கொண்டுவந்து பொருந்த அமைத்துவிட்டு; இராணியாக்கதனே எதிர்த்து வடவாக் கினியைப்போலக் கோபமிகுந்து சக்கிராயுதத்தை விடுத்து அவன் சிரசை யறுத்தெரிந்தார். விண்ணவர்கோனுகிய வராகமூர்த்தியா னவர் அத்தருயில் பிரமன், இந்திரன் முதலாகிய தேவகணங்கள் மலர்மழைபெய்து போற்ற, பூமிதேவியானவள் அங்குவந்து சக்கரக் கையனேக்கண்டு பணிந்துத் துதித்துப் புகழ்ந்து கொண்டாடி நிற்க, தந்தையாகிய ஸ்ரீதரன்கண்டு அம்மாதை மணந்துப் பழையபடி பாற்கடலிற் சென்று படுத்து யோகஞ்செய்திருந்தார்.

இவ்வண்ணமாக இரணியாக்கதன் வராகமூர்த்தியினுல் மாண்ட தைக் கேட்டு அவன் மனைவியாகிய சில்லிகைப் பிரலாபித்துக் கொண்டே சென்று பூவராக மூர்த்தியைச் சேவித்து அவரருளினைப் பெற்று நற்கதி யடைந்தாள். இப்பால் இவன் தமையனுகிய இரணி யன் தம்பி மாண்டுபோனதைக் கேட்டுச் சினமிகுந்து மாயனை எவ் விதத்திலேனும் முடித்துப் பழிக்குப்பழி வாங்கவேணு மென்று முயன்று தவவேடம் புனேந்து, வேதத்திற் சொல்லியிருக்கின்ற தவங் களேயெல்லாஞ் செய்து தன் மனதில் நினேத்து வாயினுற் கேட்ட வரங்களெதுவோ அவையெல்லாம் பிரமதேவன் கொடுக்கப்பெற் றுக்கொண்டுவந்து, சிவன், பிரமன், விஷ்ணுவாகிய மும்மூர்த்தி களும் முடிவுகாணப்படாத சகல பூதங்களுக்குள்ளே பலத்தையும் ஒருமிக்கப்பெற்று, எக்காலத்திலும் அழியாமல் நித்தியமா யிருக் கின்றவனென்று வேத வேதங்களால் சொல்லப்பட்ட ஜெகதீசுர னுகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவும், பிரமனும், சடாமகுடத்தையுடைய சிவ னும், படைத்துக்காத்து அழிக்கின்ற இந்த ஒரு அண்டத்தின் மட்டுந்தானே இதற்கு அப்புறத்திலுள்ள அளவில்லாத பல அண்டங்

களிலுள்ளவர்களும் தன் பெயரையே சொல்லும்படி வாழ்ந்திருந் தான். எட்டுத் திக்குகளையுந் தாங்குகின்ற ஐராவத முதலாகிய அட்டகயங்களில் வலதுகையில் ஒரு யானையும், இடது கையில் ஒரு யானையுமாக இரண்டு கையினாலும் இரண்டு யானைகளைச் சுண்டைக் காய்போல அலட்சியமாக எடுத்து ஒன்றோடொன்றை முட்டவிடு வான்; அளவு காண்பதற்கரிதாகிய ஆழத்தையும் அகலத்தையு முடைய ஏழு சமுத்திரங்களையும் தோணி முதலானவைக ளில்லா மல் கணுக்காலளவு ஆழமாக வெண்ணித் தன் காலாலேயே நடந்து கடந்து கரையேறுவான்; ஆகாசகங்கை முதலான மகா நதிகளில் சலங் கொஞ்சமென்று நினைத்து அவற்றின் கிட்டவும் போகான்; சத்தமேகங்களின் சலத்தைக் குளிர்ச்சி போதாதென்று எட்டியும் பாரான்; சமுத்திர சலத்தை உப்பென்று கருதி அதில் மூழ்கவே மாட்டான்; பின்னெப்படி ஸ்நானஞ் செய்வானென்றால், அண்ட முகட்டை உடைத்து அதற்கு அப்புறத்திலிருக்கும் பெரும்புறக்கட லின் சலத்தில் ஸ்நானஞ் செய்வான். இவ்விதமாகப் பெரும்புறக் கடலில் ஸ்நானஞ்செய்து நாகலோகத்திற்குப்போய் நாககன்னிகள் உபசரிக்க அறுசுவை பதார்த்தங்களுடனும் பால், பழம், பஞ்சகச்சா யங்களுடனும் இட்டன்னம் புசித்து, கருப்பூர தாம்பூலங்கொண்டு, கந்த புட்பாதிகளைத் தரித்து இளைப்பாறி இந்திரலோகத்திற்குப் போய் அமிருதபானம்பண்ணி, இந்திராணி முதலாகிய தேவஸ்திரீகள் சத் திரம் பிடிக்க, சாமரம்வீச, காளாஞ்சியேந்த; அரம்பை, மேனகை, முதலாகிய தேவதாசிகள் பரதநாட்டியஞ்செய்ய; தேவேந்திரன் முத லான பல தேவர்களும் ஏவல்கேட்க, அந்த இந்திரனுடைய சுதன்ம மென்னும் மண்டபத்தில் சொர்ணமணிச் சிங்காசனத்திலிருந்து வேடிக்கையாகப் பொழுதுபோக்கி சத்தியலோகத்திற்குப் போய்ப் பிரமனுடனே சனக சனந்தன சனாதன சனற்குமார்களும், மற்று மூள்ள சகல இருடிகளும் புடைசூழ அந்தப் பிரமாவின் திருலோகத்தி லிருந்து சம்பிரமத்துடனிராப்பொழுது போக்குவான். ஒரு சமயத் தில் விமானத்தின்மேலேறிச் சந்திரமண்டலத்திற்குப்போய் அந்தச் சந்திரனைப்போலவே சஞ்சரிப்பான். ஒருவேளையில் தேரின்மேலேறி அதைச் சூரியமண்டலத்திற்கு நடத்திக்கொண்டுபோய் அந்தச் சூரியனைப்போலவே யுலாவுவான். எட்டுத்திசைகளிலும் போய்த் திக்குப் பாலகர்கள் செய்யுங் காரியத்தையும் தான் செய்வான். மக மேருவின் சிகரத்தில் பிரசண்டமாருதம் மோதியடித்தாலும், யுகாந்த

கால இடியிடித்து விழுந்தாலும், மகாபிரளயம் வந்தாலும் சற்றேனும் சலனமில்லாமல் சொன்ன சாயையும் சித்திர விசித்திரமாயு மிருக் கின்ற பெரிய கோட்டைக்குள் நவரத்தின கசிதமாயும் திவ்விய தேசோமயமாயும் பிரகாசிக்கின்ற அழகிய மண்டபத்தில் மாணிக்க சிங்காசனத்தில் சக்கரேசுரனுய் வீற்றிருந்து, அகண்டாதி பத்திய மாக இராஜீகஞ் செய்வான். பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாச மாகிய இவைகளுக்கு அதிதேவதையா யிருக்கின்றவரனேவரையும் தள்ளித் தான் அவர்களுக்குப் பிரதியாயிருந்து அவர்கள் செய்கிற கிருத்தியங்களெல்லாந் தானே செய்வான். கமலக்கண்ணனுகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவும்; அக்கினிக்கண்ணனுகிய சிவனும் இவ்விரண்டு பேருந் தவிர, மற்ற சகல லோகத்தாரும் தன் பெயரையே சொல்லித் துதிசெய்ய, பிராமணர் முதலானவர்கள் மூவகை அக்கினிகளேயுங் கொண்டு வேதோதமாகச் செய்கின்ற யாகங்கள், எக்கியங்கள், கிரு துக்களில் தேவர்களே நோக்கி அவர்களுக்குக் கொடுக்கின்ற அவிர்ப் பாகங்களேயெல்லாம் தனக்குக் கொடுக்கும்படி அந்தத் தேவர்க ளனேவரும் தானேயிருந்துவாங்கி உண்பான். ஆக்குதல், காக்குதல், அழிக்குதல் என்கிற இந்த முத்தொழில்களேயும் மும்மூர்த்திகளுங் கைவிட்டு ஒதுங்கி நிற்கும்படிச்செய்துத் தானே முத்தொழில்களேச் செய்யத்தலேப்படுவான். யோகீசுரர்களெல்லாம் அவனுலே தங்கள் பதங்களே இழந்தார்கள். தேவர்களும் தங்களுக்கு அவனே முக்கிய மான தெய்வமென்று எண்ணி அவன் பாதத்தையே அநுசரிக்கிற தல்லாமல் மற்றெருவரையும் பூசிக்கிறதில்லே. முற்காலத்திலே அம ரர்களும் அசுரர்களுங்கூடி மிகு பிரயாசமாகத்தூக்கி நட்டுத் திருப் பாற்கடலேக் கடைந்த மத்தாகிய மந்தரகிரியை அவன் தன்கையில் ஊன்றுந்தடியாகச் சிலநாள் பிடித்துக்கொண்டிருந்து, பின்பு அது தன் கைக்கு வன்மைபோதாதென்று எறிந்துவிட்டான். சூரியன் உதித்து ஓடுங்குகின்ற ஸ்தானங்களாகிய உதயகிரி அத்தமானகிரி என்கிற இரண்டு மலேகளும் அந்த இரணியனுடைய இரண்டு காது களுக்கும் குண்டலங்களா யிருக்கின்றன என்றல், மற்றும் அவன் பராக்கிரமத்தைச் சொல்லவேண்டியதென்ன? நான்முகப்பிரமன் முதலாகிய தேவர்களும், தேவகுருவாகிய பிரகஸ்பதியும் சதாகால மும் கற்பதுங் கேட்பதும் அவனுடைய கீர்த்திப் பிரதாபமே. அநாதியாகி அழியாதிருக்கும் வேதங்களும், அந்த வேதங்களுக்கு அதிதேவதையும் 'இரணியநம' வென்றே சொல்லுகிறது. செபம்

தபம் முதலானவைகளையும் சகலரும் அவனை நோக்கியே செய்கிறார். அவன் ஓரடி வைத்தால் பூமி தாழ்ந்துபோம். ஆயிரம் பணமுடிகளையுடைய ஆதிசேடனும் முடிசோர்ந்துபோவான். அவன் எழுந்து நின்றால் அண்டமுகடு சிரசிலேமுட்டி அப்பாலுயர்ந்துபோம். அவன் நடந்தால் பஞ்சமாபூதங்களும் நடுங்கிச் சலிக்கும். அவன் பெற்ற வரத்தினாலும், அட்டசித்திகளாலும், ஆணினும் பெண்ணினும் அலியினும் உயிருள்ளனவாகிய சித்துப் பொருள்களாலும், உயிரில்லாதனவாகிய சடப்பொருள்களினும், சகல சராசரங்களினும் சருவாந்தரியாமிபோலப் புகுந்து சஞ்சரிப்பான். மண்ணினும் மடியான்; வானினும் அழியான்; நீரினுஞ் சாகான்; நெருப்பினும் வேகான்; காற்றினும் இறவான்; தேவர்கள் யட்சர்கள் பிரமன் விஷ்ணு உருத்திரன் முதலானவர்களும் அவனைக்கொல்ல எத்தனப்பட்டாலும் உயிர்மாயாது; மற்ற மனிதர்கள் மிருகங்கள் பறவைகள் முதலான பல சீவராசிகளாலும் அவனுக்கு மரணமேயில்லை; அவனுக்கு அகத்தினும் சாவில்லை; புறத்தினும் சாவில்லை; இரவினுஞ் சாவில்லை; பகலினுஞ் சாவில்லை; அண்டர்கள் முனிவர்கள் மற்ற யாவரும் இடுகின்ற சாபங்களும் அவனைச் சேர்கிறதேயில்லை. தெய்வீகமாகிய சக்ராயுதம், சத்தி, வேல், எமதண்டம், எமபாசம், பிரமதண்டம், பிரமபாசம், பிரமாத்திரம், நாராயணாத்திரம், பாசுபதாத்திரம், இந்திராத்திரம், அக்கினியாத்திரம், வருணாத்திரம், நாகாத்திரம், மாயாத்திரம் முதலாகிய அநேகவகை ஆயுதங்களும் அவனைக் கொல்லமாட்டா; எமன்வந்து பிடித்துக்கொண்டு போனாலும் சாகமாட்டானென்றால், பின்னை யாவர்தான் அவன் பிராணனை மாய்க்கின்றவர்கள்? பஞ்சமாபூதங்களும் ஒன்றாகக்கூடி ஒருருக்கொண்டு வந்தாலும் மாளான்; வேதத்திற் சொல்லப்பட்ட மந்திரங்களினாலும், ஔடதங்களினாலும் இறக்கமாட்டான்; பெற்ற பிதாவே அவனைக்கொல்ல ஏற்பட்டாலும் பிராணலயப்படான்; அவனுடைய நிலைமையிதுவாகும். எல்லா உலகங்களுக்கும் தானொருவனே தலைவனாகி யாரும் தனக்கெதிரில்லாமல் மகத்தாகிய தீரசூர பிரதாபத்துடனே வாழுங்காலத்தில், அந்த இரணியேசுவரனுக்கு அறிவுடையவர்களுக்கெல்லாம் மேலாகிய அறிவினையுடையவன்; நல்லோர்களாரினும் மிகவும் நல்லவன்; வேதத்தைக்காட்டிலும் மகா பரிசுத்தமுள்ளவன்; தாயைப்பார்க்கிலும் அதிக அன்புள்ளவன்; அளவிறந்த தவத்தினையுடையவன்; இப்படிப்பட்ட அருமையாகிய நற்குணங்

கள் யாவும் பொருந்திய மகானுபாவன் ஒருவன் அருமைத் திரு மகனாக உற்பவித்து, பிரகலாதனென்ற பெயரினை யுடையவனாய் வளர்ந்து, ஐந்துவயதுள்ள சிறுபிள்ளையா யிருக்குங்காலத்தில் அநேக யுகங்களைக் கடந்தும், அபிவிருத்தியாகிக் கொண்டிருக்கின்ற ஆயுளை யுடையவனாயும், பதினான்கு லோகத்தாரும் தன் பாதத்தை வணங் கும்படி ஏகசக்கிரேசுவரனாயு மிருக்கின்ற இரணியாசுரன் மன மகிழ்ச்சிகொண்டு உருகி மகனைப்பார்த்து, அடா! என் புத்திரசிகா மணியாகிய பிரகலாதனே! நீ சகல சாத்திரங்களையுங் கற்றுக்கொள் ளென்று சொல்லி, அபரிமிதமாகிய கல்வியும் விவேகமுடைய அசுர குருவான சுக்கிராசாரியார் புத்திரன் சண்டமார்க்கனென்பவனை அழைப்பித்து, நீர் என் கண்மணியாகிய பிரகலாதனுக்கு வேதசாத் திராப்பியாசம் செய்துவையுமென்று திட்டப்படுத்தி அனுப்பினன்.

அவ்வண்ணமே அந்த உபாத்தியாயர் பிரகலாதனைக் கூட்டிக் கொண்டுபோய், கல்விச்சாலையிற் சேர்த்து, வேதத்தை யோதுவிக் கத்தொடங்கி, அசுரேந்திரனுடைய தவகுமாரனைப் பார்த்து, ஐயா! 'இரணியநமா' வென்று உன் பிதாவினுடைய நாமத்தை மூன்னே துதிசெய்யென்று சொன்னார். அதுகேட்ட அந்தப் பாலன் தன் னிரண்டு செவிகளையும் கைகளால் மூடிக்கொண்டு, பேரறிவினை யுடைய உபாத்தியாயரே! நீர் இப்படிச் சொல்லுகிறது நன்றல்ல வென்று வேதத்தின் முடிவிலே சொல்லப்பட்ட தத்துவார்த்தமாய் விளங்கி நிற்கும் பிரமசாட்சாத்காரத்தின் திருநாமத்தைப் பிரசித்த மாக "ஹரி ஓம் நமோ நாராயண" என்று நாவினாற் சொல்லி மன துருகித் தப்பாக்கிருதியா யமைவுற்று நின்றுத் தன்னுடைய இரண்டு கைகளையும் தலையின்மேல் அஞ்சலிபண்ணிக்கொண்டு நமஸ்கரித்துத், தாமரைகளுக் கிணையாகிய கண்களில் ஆனந்தக்கண்ணீர் ஒழுகத் தேகம்புளகிக்க மயிர்கூச்செரிய இந்தப்பிரகாரம் ஞானத்திற் சிறந் தவனுகிய பிரகலாதாழ்வான் பக்திபரவசனைப் பகவத்தியானத்தி லிருந்தான். அப்போது சண்டாமார்க்கன் உடல்நடுங்கி "என்னடா பாவி! சண்டாளா! ஐயையோ! என்னையுங் கெடுத்தாய்! இதல்லா மல், உன்னையுங் கெடுத்தாய்! நீ கெட்டதுமல்லாமல் சகலத்தையுங் கெடுத்துவிட்டாயே! அடா கெடுவாய்! குலநாசகா! அந்தப் பிரமா தித் தேவர்களும் சொல்லுகிறதற்கு அடாததாய் அயோக்கியமான தாயு மிருக்கின்ற ஏதோ ஒன்றைச் சொல்லும்படி உனக்கு புத்தி

பிறந்து நாவெழுந்ததே! அதுவென்ன காரணம்? ஓகோ! என்ன அக்கிரமத்தைச்செய்ய நினைத்தா" யென்றான். அதற்குப் பிரகலாதன்; "ஐயா வித்தியாகுருவே! நான் செய்ததென்னவென்றால், முதல் என்னை உய்யும்படி செய்துக்கொண்டேன். பின்பு என் தந்தையை உச்சீவிக்கும்படி செய்தேன். அப்பால் உம்மையும் உச்சீவிக்கும்படிசெய்து; இந்த வுலகத்தையும் உச்சீவிக்கும்படிசெய்ய உத்தேசித்து வேதாத்தியானம் பண்ணுகின்றவர்கள் ஆதியிலும், அந்தத்திலும் அந்த வேதத்தின் முதற்பொருளாகிய ஸ்ரீ ஹரியையல்லவோ துதி செய்கிறது சம்பிரதாயமாயிருக்கிறது. நானும் அந்தப்படியே சொன்னேன். அப்படி நான் சொல்லியதில் என்ன குற்றமென்று கேட்ட பிரகலாதனை நோக்கிச் சண்டாமார்க்கன்; அடா பிரகலாதனே! தேவர்களுக்கெல்லாந் தலைவர்களாயிருப்பவன் இந்திரன்; அந்த இந்திராதிதேவர்களுக்குந் தலைவர்களாயிருப்பவர்கள் திரிமூர்த்திகள்; அந்த திரிமூர்த்திகளுக்குந் தலைவனாயிருக்கின்றவன் உன்னைப்பெற்ற தந்தையாகிய இரணியேசுவரன். அப்படிப்பட்ட முதல்வனுடைய பெயரைச் சொல்லுகிறதற்கு யோக்கியனாயிருக்கிற பிராமணோத்தமனை என்னைப்பார்க்கிலும் நீ என்ன விசேஷமாகத் தெரிந்தவன்? இந்தக் கன்னகடோமாகிய பெயரைச்சொல்லி என் குடியைக் கெடுக்காதே! அப்பா! உனக்குப் புண்ணியமாய்ப் போகிறதென்று சண்டமார்க்கன் சொன்னான்.

அப்போது நின்மல சித்தத்தையுடைய பிரகலாதன் நான் அந்த ஆதிநாயகனுடைய திருநாமத்தையல்லாமல் வேறொன்றையும் அறியேன்; என்னறிவுக்குஞ் சொல்லவேண்டியது பிரிதொன்றுமில்லை. அவனுடைய கடாட்சத்தினாலே எனக்குப் போதிக்கப்படாத பரமார்த்தமும் வேறில்லை. அன்றி, புராதனமாகிய வேதங்கள் கிரமமாக நிச்சயித்துச் சொல்லப்பட்ட பொருளுக்கெல்லாம் முடிவாகிய பரம்பொருளாயிருக்கின்ற ஸ்ரீமந் நாராயணன் எனக்குள்ளே வந்துபுகுந்து என்னுடைய இருதயகமலத்தைத் தனக்கு உறையிடமாகக்கொண்டு எழுந்தருளி யிருக்கிறான்; ஆகையால், அவனைவிட பெறுதற்குரிய பயன் எனக்கு வேறொன்றுமில்லை; யானும், நான் அறியாதது எதாவதிருந்தால் அவை நீங்கிதவறாமல் ஓதுவியும். ஐயா உபாத்தியாயரே! பிரமசிரேட்டர்களெல்லாம் யாரைப்பணிகின்றார்? நான்கு வேதங்களும் எந்தப் புருடோத்தமன்

கலியாணகுணங்களைக் கூறுகின்றது? ஞானிகள் எந்த வஸ்துவைப் போற்றுகின்றார்கள்? உபநிடதங்கள் எதைச் சொல்லுகின்றன? அமரர்களும் முனிவர்களும் துதிசெய்கின்ற அந்த சருவேசுரன் திருநாமத்தைச் சொல்லவேணுமே யல்லாமல், வேறே சொல்லத் தக்க பொருளும் ஒன்றுண்டோ? மகானுக்களானவர்கள் இருக் காதி வேதங்களினாலும்; அக்கினிட்டோமாதி யாகங்களினாலும்; தத்துவஞானத்தினாலும்; மற்றுமுள்ள எவ்வகைப்பட்ட சாதனப் பொருள்களாலாகிலும் சாதித்தும் பெறுதற்குரிய பொருளையே நான் முக்கியமாய்ப் பெற்றிருக்கிறேனுகையால், இனியொருவர் ஒதுவிக் கும்படியும், ஒதிக் கேட்பிக்கும்படியும் கேட்கத்தக்க பொருள் ஒன்று மில்லை. மேலும், ஆரணியவாசஞ்செய்தும், மலை குகைகளிற் சேர்ந் தும், கிருட்டிணசனந்தரித்தும், சிரமுண்டிதஞ்செய்தும், சடை வளர்த்தும், அக்கினிமத்தியிலிருந்து தவஞ்செய்தும், அட்டாங்க யோகஞ்செய்தும், ஞானநிட்டை சாதித்தும் இந்தக் கிரமத்தினால் மோட்சத்தையடைந்த முத்தாத்துமாக்கள் பெற்ற பாக்கியத்திலும் மிகவும் உற்கிருட்டமாகச் சொல்லப்பட்ட பகவத் கடாட்சமாகிய பரமபாக்கியத்தைப் பெற்றேன். இதற்காகிலும் அதிக வருத்தப் பட்டு சம்பாதிக்கவேண்டிய பொருள் என்ன இருக்கின்றது? ஸ்ரீ புருடோத்தமனுடைய அடியார்க்கடியார்களா யிருக்கின்றவர் கள் செவியினற் பல கேள்விகளைக் கேளாதவர்களானாலும், வாயினற் பல நூல்களைப் படியாதவர்களானாலும், தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுக்கின்ற மந்திரங்களைச் சொல்லுகின்ற சதுர்வேதங்களின் பூர் வார்த்த உத்தரார்த்தங்களும் அறிவார்கள். வித்துவசனங்களும் ஆவார்கள். உண்மைப்பொருளையுங் காண்பார்கள். அவர்களுடைய பிரபாவத்தை யாரறிவார்கள்? எனக்கும் சதுர்முகப்பிரமனுக்கும் சகலமானவர்களினு முயர்ந்த தனக்கும் தன்னிலைமை அறியக்கூடா திருக்கின்ற அந்த எம்பெருமான் என்மனதி லெழுந்தருளி யிருக் கின்றமையால், எனக்குச் சகலமும் எளிதிற் கிடைத்திருக்கின்றன. ஐயா உபாத்தியாயரே! உமக்குமிதைவிட உத்தமமானது மற்றொன் றில்லை. இந்தப்படியே எம்பெருமான் திருநாமத்தை நீரும்சொல்லி இந்த அனுட்டானத்தையே கைக்கொண்டு உம்முடைய ஆன்மா உச்சீவிக்கின்ற விதத்தை நாடிக்கொள்ளுமென்று சொன்னன்.

இவ்வாறு பிரகலாதனன் சொல்லக்கேட்டு அந்த சண்டா மார்க்கனென்கிற உபாத்தியாயர் அதற்குப்பதிலாய் யாதொரு

மொழியுஞ் சொல்லாமல் மனது திடுக்கிட்டு, இனி யெனக்கென்ன பெருமை யிருக்கின்றது? என் பிராணனுக்கு முடிவு வந்துவிட்டதே! இதற்கு வகையொன்றும் குறியேனே! இரணியனிடத்திற் குப்போய் அவனைக்கண்டு நல்ல விசேஷத்தைச்சொல்லித் தப்பி வருகிறதே மகாபிரயாசம். அப்படியிருக்க, இக்கொடுமைதங்கிய கொள்ளையை எப்படி மனந்துணிந்து நாவு கூசாமற் சொல்லுவேன்? அப்படியல்லவென்று துணிந்து சொன்னால் அவனென்ன சொல்லுவானே? 'நான் வேதங் கற்பிக்கச் சொன்னால் ஏதேதோ தூர்ப் போதனைகளைப்பண்ணி, என் பிள்ளையின் புத்தியை நீ கெடுத்து விட்டா யென்பானே? கோபங்கொண்டு கொலைசெய்வானே? ஐயோ! நான் இதுவரையிலும் சுகமாக சீவித்திருந்தேனே! இப் பொழுதெனக்குக் கிரகசாரந்தான் போதாதோ? ஐயையோ! இதேது தருமசங்கடமாக யிருக்கிறதென்று எண்ணுதுமெண்ணி, முகம்வாடிக் கிலேசமடைந்து பயந்து நடுங்கிக்கொண்டேபோய் இரணியனைக்கண்டு அதிக பயபத்தி விசுவாசத்துடனே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்து கைகட்டி வாய்பொத்தி வஸ்திரத்தை யொதுக்கிக்கொண்டு நின்று, "ஓ சுவாமி! அடியேனொரு கனவு கண்டேன். அதைத் தேவரீரிடத்திற் சொல்லும்படி வந்தே" னென்று சொன்னன். 'அது என்ன ஐயா' வென்று இரணியன் கேட்க, "எங்களுக்கெல்லாந் தந்தையாயும் குலதெய்வமாயுமிருக்கின்ற இரணியேசுரனே! உம்முடைய குமாரன் இம்மையினாலும் மறுமையினாலும் வாயினாற் சொல்லத் தகாததாயும் மனதினால் நினைக்கக்கூடாததாயு மிருக்கின்ற சொற்களை ஒருவர் சொல்லிக் கொடுக்காமல் தானே சொல்லிக்கொண் டிருக்கிறான். வேதமோ தென்று சொன்னால், ஓயாமல் "நான் முன்னமேதானே சகலார்த் தங்களையும் அறிந்திருக்கிறேனென்று சொல்லுகிறான்" என்று சொன்னன். உபாத்தியாயன் சொல்லைக்கேட்டு இரணியன், "ஐயா சண்டாமார்க்கரே! பிராமணர்களுக்கு யோக்கியமல்லாததாயும், முன்பு யாவருஞ் சொல்லியக் கிரமத்திலே சம்பந்தப்படாததாயும், நீர் வெறுக்கும்படி அவன் தன்னறிவினாலே புதுமையாக எடுத்துச் சொன்னதுதானென்ன? சொல்லு" மென்றான். அதற்குப் பிராமணன் பயந்து சிரசின்மேற் கைகூப்பி வணங்கி சொல்லுகிறான். காதுக்குள்ளே விடநாகம் நுழைவதுபோல மகா கொடூரமாயிருக்கிற சொல்லை அடியேன் தேவரீரிடத்திற் சொல்லுவேனுகில்,

இரௌரவாதி நரகத்திலே போய்விழுவேன். என்னுவும் இப் பொழுதே வெந்து இற்றுவிழுமென்று சொல்ல அதுகேட்டுக் கொடியவனுகிய இரணியேசுரன் ஆச்சரியசித்தனுப் என் குமாரனை அழைத்து வாருங்களென்று ஆக்கியாபித்தான். அந்தக்கணமே தூதர்களோடிப்போ யழைத்து வந்தார்கள். தனக்கு ஒரு துணையும் வேண்டாமலிருக்கின்ற ஏகமூர்த்தியைத் துணையாகப்படைத்த பிரக லாதனன்வந்து தன் பிதாவைக்கண்டு சேவித்தான். அப்படி சேவித்தபுத்திரனை மணியாரம் பிரகாசிக்கின்ற தன் மார்பினிடத்தி லணிந்த பொற்சுண்ண முதலானவை அவன் மார்பிற் படியும்படி அன்பினுலிறுகத் தழுவிப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவனு டைய திருமேனி முழுமையும் பார்த்து, "அப்பா பிரகலாதனு! உன் உபாத்தியாயர் கோபிக்கும்படி பழுதாக நீ என்ன வார்த்தை சொன்னுய்? அதைச் சொல்" என்று இரணியன் கேட்க, ஐயா! வேதமோதும்போது முதலில் சொல்லவேண்டியதை நான் உச்ச ரித்தேன். அறிந்தாலும் நினைத்தாலும் கேட்டாலும் சொன்னாலும் துன்பக்கடலைக் கடப்பதற்கு உரியது இதுவேயாம். இதைவிட மேலாகியது வேருென்றுமில்லை யென்றுப் பிரகலாதனன் சொன் னுன். தேவர்களையும் மற்ற யாவர்களையும் காட்டிலும் தக்க வொழுக் கத்தையுடைய அந்தப் பிரகலாதனன் இவ்வாறு சொல்லவே துட்டனுகிய இரணியன் குற்றமில்லாத உபாத்தியாயர் சொல்லிய படி இவன் ஏதோ விரோதமான மொழியைச் சொல்லியே யிருப் பான்போலத் தோன்றுகின்றது. ஆகிலும், இவனுடைய அபிப்பிரா யத்தை அறிவோமென்றுத் தனக்குத் தானே யோசித்துக்கொண்டு, அடா குழந்தாய்! நீ சொல்லிய சொல்லென்ன? அதைச் சீக்கிர மாகச் சொல்லென்று கேட்க, பிரகலாதனன் சொல்லுகிறுன்.

கேளும், என் தந்தையே! "மனதில் எண்ணினதை யெல்லாங் கொடுப்பதும்; அதை யனுபவித்துக் கடந்தால் மோட்சத்தை யடை யும்படிச் செய்வதும்; ஓமங்கள் யாகங்கள் செய்தவர்களை அவைக ளுக்குரிய பதவிகளிற் சேர்ப்பதும் ஏகவத்துவாகி யிருக்கின்ற பகவா னுடைய திருநாமமேயாம். பூமண்டலத்தில் பிரமலோக பரியந்தம் வாழ்கின்ற எண்ணிக்கையில்லாத பூதபௌதிக சராசரங்கள் யாவற்றி னுளரும் கலங்கு நிறைந்து அந்தக்கரணங்களிலும் பொருந்தி அங்கிருந்து உதிக்கின்ற உணர்வினுல் உணரப்படுவது இந்த

திருவட்டாக்கரமே யல்லது வேறில்லை. திரிநேத்திரங்களையுடைய மகாதேவனும், சதுர்முகப் பிரமாதிகள் தொடங்கி மனிதர் வரையிலும் இந்தத் திருமந்திரத்தை மறந்தவர்கள் இறந்தவர்களே. இதை யொருவர் காண்பிக்க ஒருவரறிவது மகா பிரயாசம். அப்படியானால், எப்படிதான் அறிகிறதென்றால் சொல்லுவதற்குரிய அதிகாரியாகிய சதாசாரியனும் கேட்பதற்குரிய பக்குவனாகிய சீடனும் கூடி ஒருமித்திருந்து காட்டக்கண்டறிந்தால் அறியலாம். மற்றப்படி அநாதிகாரியனாகிய ஆசாரியனும், பக்குவமில்லாதவனாகிய சீடனும் அதன் நிலையைக்காட்டவும், அதன் குணங்களை யறியவுமாட்டார்கள். சன்னமாகிய சமூத்திரத்தில் பழவினையாகிய சுழலினின்றும் கரையேற்றுகின்ற நல்ல மரக்கலமாக இருப்பதும், யாவருக்குங் கிடைப்பதற்கு அருமையாகிய பூஷணமாயிருப்பதும், சொல்லவும் பேசவும் மங்களகரமாயிருப்பதும், இருடிகள் வேதத்தின் முடிவில் சிலாக்கியமாகத் தெளிந்தெடுத்த மெய்ப்பொருளு மிதுவே. இதற்குச் சமானமும் அதிகமும் இதுவேயல்லாமல் மற்றொன்றுமில்லை; உம்முடைய ஆன்மாவுக்கும்; என்னுடைய ஆன்மாவுக்கும்; இவ்வுலகத்திலுள்ள சகல ஆன்மாக்களுக்கும் இதுவே உறுதியான பொருளென்று நான் மதித்துச் சொன்னேன்" என்றுத் தத்துவஞானிகளிற் சிறந்தவனாகிய பிரகலாதாழ்வான் விசிதமாகச் சொல்லவே, இரணியன் சோதிமின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற தன் கையிலேந்திய வீரவேலாயுதத்தைச் சுழற்றிக் கண்களை நெருப்பு சொலிக்க விழித்து, "அடா துஷ்டப்பயலே! நான் பிறந்தநாள் முதல் இந்நாள்வரைக்கும் இந்தப்பெயரைச் சொன்ன வாயையும்; இதை நினைந்த மனதையும் என்னுடைய ஒப்பற்ற சக்கராக்கினியானது தகித்துவிடும். அப்படியிருக்கப் பின்னையா ருனக்கிந்தப் பெயரைச் சொல்லிக்கொடுத்தவர்கள்? நீ எவரிடத்திற் கற்றுக் கொண்டாய் சீக்கிரத்தில் உண்மையைச் சொல்லடா!" என்று காலாக்கினி சொரூபமாய்க் கோபித்து; தேவர் முனிவர் முதலாகத் திரிலோகங்களிலுமுள்ள சகலமானவர்களும் என்னுடைய உபயபாதத்தையே தியானஞ் செய்கிறதும்; என்பெயரையே துதி செய்கிறதும் அவர்களுக்கு விதியாகையால், அவர்களெல்லாம் உனக்கு இதைச் சொல்லுகிறதற்குப் பயப்படுவார்கள். எப்படிதான் நீ அறிந்தாய்? அந்த விஷ்ணுவானவன் என்னிடத்தில் யுத்தஞ்செய்யும்படி அநேகமுறைவந்து எதிர்த்துத் தானேறிய கருட வாகனத்

தின் வேகத்தால் தப்பியோடிப்போய்க் கடலிலேவிழுந்து அமிழ்ந்து இன்னமும் எழுந்திராமல் கிடந்து உறங்குகின்றான். அவ்வாறு உறங்குகின்றவனுடைய பெயரை யுனக்கு உறுதியென்று சொன்ன வர்களைக் காட்டடா? சமுத்திரத்தின் சிறுமணலையெண்ணி அள விட்டாலும் நம்முடைய குலத்திலே கூடிய பெரியோர்களை அள விடக்கூடாது. அத்தனைபேர்களும் அவனொருவனே கொன்று தீர்க்கும்படி மாண்டுபோனார்கள். எலியானது தனக்குக் கூற்றுவ னுகிய கொடியபாம்பின் பெயரைச் சொன்னதனால் அதற்கு என்ன நன்மையுண்டோ? அந்தப்படித்தானிருக்கிறது நீ அந்தச் சத்துரு வின் பெயரைச் சொல்லுகிறது. உனக்கிந்தச் சொற்புத்தி வந்த தற்குக் காரணம் என்னவென்று சொல்லலாம். மேலேழுலோகங் களையுங் கீழேழுலோகங்களையும் தன் வயிற்றிற்குள்ளே அடக்கி வைத்துக்கொள்ளத்தக்க சந்தேகமற்ற பலத்தையுடைய என் தம்பி யாகிய இரணியாட்சனென்பவனை ஒரு பன்றியாக வடிவெடுத்துக் கொம்பினாற் குத்தி யெறிந்தவனுடைய பெயரைச் சொல்லுகிற தற்கோ உன்னை நான் பிள்ளையாகப்பெற்றது? பெற்ற தந்தையின் பெயரைச் சொல்லுகிறதற்கல்லவா? உலகத்திற்கும் அதிலுள்ள யாவருக்கும் எல்லாவற்றிற்கும் நானொருவனே தலைவனாக இருக் கிறேன். சகல உயிர்களையும் ஆக்கல், காத்தல், அழித்தலென்கிற இம்மூன்று தொழில்களும் என்னாலே செய்யப்படுகின்றன. இந்தப் பிரத்தியட்சமாகிய காரியத்தைப் பாராமல் வேறே காரண முண் டென்று நீ சொல்லுகிறது எந்தவேதத்தின் சம்மதமென்று தேறி னாய்? ஆதியந்தமில்லாத அளவிறந்த உலகங்களிலும் வேதம் எந்த மார்க்கமோ அந்த மார்க்கத்தையே சார்ந்து அது சொன்ன விதிப் படியே குற்றமற்ற நல்வினையைச் செய்தவர்கள் மேன்மைப்படுவார் கள்; தீவினையைச் செய்தவர்கள் தாழ்ந்தவராவார்கள்; ஆராயுமிடத் தில் இது எதார்த்தமாம். பூர்வத்தில் மகத்தாகிய தவத்தைச் செய் ததினால் அரியரப் பிர்மாக்கள் திரிமூர்த்திகளென்று யாவருஞ் சொல் லத்தக்க பதத்தைப் பெற்றார்கள். பின்பு நான் அவர்களைப் பார்க்கி லும் விசேடமாகிய தவத்தைச்செய்து உண்மையாகிய நாயகத்து வத்தை வகித்ததனால் அந்தப்பதத்தை அவர்களிழந்து இனி யிச்சித் தாலும் அது கிடைப்பது கூடாதென்று நினைத்துப் பூரணமாகிய என்னதிகாரத்துக்குள்ளடங்கி நடக்கிறார்கள். புத்தியில்லாத இளம் பிள்ளையாகிய நீ இப்பொழுது செய்தபிழையை நான் பொறுத்துக்

கொண்டேன். இனிமே லிப்படிப்பட்ட விரோதமாகிய வார்த்தை களேச் சொல்லாதே! உபாத்தியாயர் என்னசொன்னலும் அதையே இதமாகக் கொள்ளக்கடவாய்!" இனி வாசித்துக்கொள்ள போடா வென்று இரணியேசுவரன் சொல்ல, அதற்கு "ஐயா! உமக்கு நான் அறிவிக்கவேண்டிய சில வார்த்தைகளுண்டு. அதை நீர் சட்டை பண்ணுமல் கேட்டறிய வேண்டும்!

அதென்னவென்றால், வேதமாகிய கடலுக்குக் கரையாகியும், யாரும் கற்கின்ற கல்விக்குப் பிரையாகியு மிருக்கின்றதென்றும், வித் தில்லாத விளேவு ஒன்றுமில்லே. ஆதலால், உம்முடைய பயித்தியத்தை விட்டுவிடுவீராகில் உள்ளங்கை நெல்லிக்கனியைப்போலக் காண்பீர். தனக்குள்ளேயிருந்து. உலகங்களேயெல்லாம் உற்பவிக்கச்செய்தும், தானும் அவற்றிற்குள்ளே கலந்திருப்பது தனக்குப் பின்னுமில்லா மல் முன்னுமில்லாமல் ஏகவத்துவாகி அழியாதிருக்கிறவனுடைய மகிமைப் பிரபாவமானது ஒருவரால் நிச்சயித்துச் சொல்லத்தக் கதோ? விரிந்து சுருங்கியிருக்கின்ற பிருதிவி முதலாகிய தத்துவங் களே யெல்லாம் வெவ்வேருகப் பகுத்துக் காண்கின்ற சாங்கியநெறி யும் யோகநெறியும் என்ற இரண்டு வழிகளுண்டு; அவைகளே அறிந் தவர்களுக்கல்லது மற்றவர்களுக்கு அவனுடைய மேலாகிய உயர்ந்த நிலே இன்னதென்று அறியக்கூடுமா? வேதமுடிவில் சித்தென்று தெளிந்து சொல்லப்பட்ட மெய்ப்பொருளாகிய அவனுடைய தன் மையைத் தம்மைத்தாமறிந்த ஞானசீலர்கள் அறிவார்கள். அப்படி யல்லாமல் விடயங்களேயே பொருளென்று மதித்துக்கொண்டிருக் கின்ற பித்தர்களுண்டு. அவர்கள் தம்மை யறியாமல் அவனுடைய தன்மைகளேயும் அறியார்கள். அவர்கள் மோட்சமும் பெறமாட் டார்கள். பிரத்தியட்சமாகிய பிரமாணங்களால் அளவிடப்படாத தாயும், மனதுக்கு அகோசரமானதாயும், உபநிடதங்களிற் சொல்லப் பட்ட வாக்கியங்களாலும், அந்த வாக்கியார்த்தங்களாலும் அறிவிப் பதற்கு எட்டாததாயுமிருக்கின்ற அந்தப் பரமபுருஷனுடைய இரகசி யத்தின் உண்மையைக் காணுத பாமரர்களில் ஆரறிவார்கள்? கீழ் மேல் நடுவாகிய மூன்றுலகங்களாகியும், மூக்குணங்களாகியும், யாவ ரும் யாவுமாகியும், இவைகளுக்கு வேறுபட்டும் நீக்கமில்லாமலிருக் கின்ற ஒப்பற்ற நிலேமையையுடைய பரம்பொருளாகிய ஒருவனு டைய கிருத்தியங்கள் பிரமாதி தேவர்களாலும், முனீசுவர்களாலும்

அறியப்போமோ? கன்மமும், அந்தக் கன்மத்தாலாகிய பயனும், அப்பயனைத் தருகின்ற கருத்தாவும் தானுயிருக்கின்றான். அவனுடைய அருமையையும் பெருமையையும் ஆரேனும் அறிவார்களாகில், அவர்கள் இகபரமென்கிற கடலைக்கடந்து கரையேறுவார்கள். மந்திரமும் மாதவமும் அவற்றால் வரும் பிரயோசனமும், அவைகளைக்குறித்துக் கிரமமாகச் சொல்லப்பட்ட தெய்வமும், வேதமும் வேள்வியும் ஆகுதியும் அவனே முறைதவறாமல் முன்னே கொடுக்க வேண்டிய பலனை முன்னே கொடுக்கிறதும், பின்னே கொடுக்க வேண்டிய பலனைப் பின்னே கொடுக்கிறதும் அந்த நாராயணன் செய்கையே. அதை அவனுடைய அற்புதமாகிய மாயையினாலே அநேகரறியாதிருக்கிறார்கள். நல்வினையானது நன்மையும், தீவினையானது தீமையுமாகிய ஒவ்வொரு பலனைக் கொடுக்குமல்லாமல் விசேடமாகக் கொடுக்கமாட்டா. அந்தப் பகவானுடைய கருணையின்பிரபாவம் அப்படியல்ல. சனனமரணத்துக்கு ஏதுவாகிய இருவினைகளும் பற்றற்றுப்போம்படிச்செய்து ஆசீரதர்கள் நினைவிலென்னென்ன உண்டோ அவையெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கின்றான். இதையறிந்தும் வேறு திருஷ்டாந்தமும் வேணுமோ? யாககிருத்தியங்களைச் செய்கின்ற சோமயாசிகள் யாகமுடிவிலே அந்தச் சேடசாயிக்கு ஒரு ஆகுதி கொடுப்பாரானால், அது சராசரங்களுக்கெல்லாம் பிரீதியாகும். வேதமும் இப்படியே சொல்லுகின்றது. மூலப்பிரகிருதி யென்னும் மாயையினிடத்திலிருந்து தோன்றிய பஞ்சபூத பௌதிகங்களைத் தந்த முதற்பொருளானது அந்தப் பூத பௌதிகங்களாலாகிய மிருகசாதியும்; அவைகளுக்கு மேலாகிய மனுடசாதியும்; அதுகளுக்கு மேலாகிய தேவசாதியும் ஆகிய இவ்வகையாயுள்ள ஏழுவகைத் தோற்றத்திலும் போக்குவரவற்ற நிலைமையை அடையாதவர்களுடைய அறிவுக்கு எட்டுமோ? பிரமன் முதலான சராசரங்களெல்லாம் அந்தச் சோதிசொரூபியின் திருநாபிக்கமலத்தின் பொகுட்டில் ஒரு புரைக்குள்ளே அடங்கியிருக்கின்றன. காண்கின்றவர்கள் கண்களுக்குள்ளும், காட்டுகின்றவர்களுடைய கண்களுக்குள்ளும் அவனொளித்திருக்கிறான். பஞ்சபூதங்களுக்குள்ளும் நிறைந்திருக்கிறான். சகலருடைய நினைவிலுஞ் செய்கையிலுஞ் சொல்லிலும் வாழ்ந்திருக்கின்றான். இந்திரியங்கள்தோறும் சேர்ந்திருக்கின்றான். இப்படிக்கெல்லா மிருக்கின்றதைத் தானெவ்வளவும் நினைக்கிறதுமில்லை; மூன்று ஏகாட்சரமாகிய பிரணவமும்;

பின்பு துவயாட்சரமாகிய நமசுத்தமும்; அப்பால் பஞ்சாட்சரமாகிய நமசிவாயமும், நாராயணய வென்பதுமாகிய எட்டெழுத்தும், மூன்றுபதமும் இரண்டு சந்தியுமாய்த் தழைத்திருக்கின்றன். காம வெகுளி மயக்கங்களினாலுண்டாகிய பீடைகளையெல்லாம் நிவர்த்தி செய்கின்ற அந்தச் சட்குணபரிபூரணனை எம்பெருமானுடைய திருநாமத்தையும், அதன் மகிமையையும் குறித்துப் பேசாதவர்கள் அவனது இருப்பை எப்படியறிந்து பேசமாட்டுவார்கள்? காலமும் கருவியும் இடமும் பயனும் அந்தப் பயனை யனுபவிக்கின்றவனும், சீலமும் அதுகொடுக்கின்ற சம்பத்தாயும் விகாசமாயுமிருக்கின்றன. சங்கீத வித்துவான்கள் சத்தசுரங்களையும் தங்களுக்குள்ளே உதிக்கின்ற உணர்வினால் முன்பு சிந்தித்துக் கண்டறிந்து பின்பு வீணையினிடத்தில் வாசிப்பதினால் செவிக்கு விடயமாகும்படி அறிகிறது போல; பெரியோர்கள் யோகத்தில் தியானத்தின்வழியாகத் தரிசித்து அந்த யோகநிட்டையிலே புறத்திற் காண்கின்றதனால், அகத்திலுள்ளவனுகியும், புறத்திலுள்ளவனுகியும், ஆகாசமானது மற்ற பூதங்களுடன் சேர்ந்திருந்தும் அதினுடனே கலவாமலிருப்பது போலே; இவன் பிருதிவி முதலான தத்துவங்களுடனே கூடியிருந்தும், அதுகளிலெல்லாம் கலவாமலிருப்பதுபோலே தாக்கற்று நிற்பவனுகியும், வேதங்களும் பிரமிக்கின்ற தன்மையையுடையவனுகியுமிருக்கின்றன். ஓங்காரமாகிய ஓரெழுத்துக்குள் அதனுயிராயுமிருக்கின்றன். அறிவுக்கறிவாயுமிருக்கின்றன். மூவுலகங்களையும் தழுவியிருப்பதனால் பகையும் அக்கினியும்போலவு மிருக்கின்றன். பல பேதமாகிய சமயங்களைப்பற்றி வாதிக்கின்ற சமயவாதிகளுடைய வேறுபாடுகளை யொழித்து ஏகபாவனையாய்ப் பேசுகின்றவர்களுக்கெல்லாம் பல மலர்களைக்கொண்டு தொடுக்கப்பட்ட மாலையினிடத்துள்ள மலர்களைப்போலவும், கடலும் அதனலையுங்போலவும், வேறுபாடில்லாமலுமிருக்கிறன். இப்படிப்பட்ட பரமான்மனை நீரிகழ்ந்து பேசி உம்மைச் சார்ந்திருக்கின்ற செல்வமும், உம்முடைய தீர்க்காயுளும் பெயரற்றுப் போம்படி நீரும் பிராணனை யிழந்துவிடுகிறீரேயென்று நினைத்து நானந்த சகதீசனுக்குத் தெண்டன்சமர்ப்பித்து மங்களாசனமாக அவனுடைய திருநாமத்தைச் சொன்னே" னென்றுப் பிதாவுக்குத் தெரியும்படிச் சொன்னன்.

இவ்வாறு எதிரேநின்று பிரகலாதன் சொல்லவே, அந்த இரணியனுக்கு எவ்வகை யுலகங்களும் அஞ்சும்படிச் சமுத்திரத்திற்றோன்

றிய ஆலகாலவிடத்தைப்போலப் பிரபலமாகிய கோப மூண்டது; சூரியனும், சந்திரனும், ஆகாசமுஞ் சுழன்றன; பூகம்பமுண்டா யிற்று; அவனுடைய கண்கள் உதிரத்தைக் கக்கின; கொடிபோலப் புகையெழும்பி யுகாந்த காலாக்கினியைப்போல உக்கிரமாகிய அக் கினி சொலித்தது; இவ்விதமாகப் பொங்கி அந்த இரணியேசுரன் "என்னுடனே பகைக்கின்றவர்கள் இனி வேறில்லை. உடலுக்குள் நோ தினவுபோல் என்னிடத்தில்தானே பிறந்து என் சத்துருவுக்கே நானடிமை யென்று சொல்லுகின்றான். ஆகையால், இவனைக் கொண்டுபோய் கொலைசெய்யுங்க" ளென்று ஆக்கியாபித்தான். அந்த நிமிஷத்திற்றானே காலனைப்பார்க்கிலும் அதிகமான கொடு மைகளைச் செய்கின்றவர்களாகிய அசுரர் அநேகர் வந்து; ஒரு யானைக்குட்டியைச் சிங்கத்திரள்பிடித் திழுத்துக்கொண்டு போவது போலப்பற்றி இழுத்துக்கொண்டுபோய், மலைபோல் உயர்ந்த இரத் தினகசிதமாகிய வாசலுக்கு வெளியிலே நிறுத்தி, மழு, வாள், சூலம், வேல், குந்தம், கெதை முதலாகிய ஆயுதங்கள் அநேக மாயிரங்கள் கொண்டு, பிரகலாதனன்மேல் பிரயோகஞ்செய்து 'இவனை உயி ருடனே தின்று தீர்ப்போ' மென்று இடியைப்போலக் கொக்கரித் துக் கண்களால் நெருப்பைச் சொரிந்தார்கள். அப்போது சீவகோடி களினிடத்தில் பெற்றதாயைப்போல அன்பைச் செலுத்துகின்ற அந்தப் பிரகலாதனன்மேல் தவத்தைச்செய்யாத பாவிகளாகிய அசு ரர்கள் பிரயோகித்த ஆயுதங்களெல்லாம் நல்லொழுக்கத்தையடைந்த மெய்ஞ்ஞானியின் சகாயத்தைப்பெற்ற ஒருவனை அவன் பகையாளி கள் வைத வசைச்சொல்லைப் போலாய்விட்டன.

அவன் ஒரு தன்மையாகிய வைராக்கிய சித்தத்தை யுடையவ னாய்த் தான் அகக்கண் புறக்கண்களால் தரிசிக்கப்பட்ட தற்பர னாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடியை மறவாமலும், அவன் திருநாமத்தை விடாமலும் தியானம் பண்ணிக்கொண்டிருந்த னால் அவன் மேலெறிந்தனவும், எய்தனவும், அவனை யெற்றியனவும், குத்தியனவும், அரிந்தனவுமான சகலபடைகளும் முறிந்து ஒடிந்து உதிர்ந்து சிறு பொடிகளாய்ப்போயின. அவனுடைய திருமேனியி லுண்டாகிய தினவைக்குறித்துச் சொறிந்த அம்மாத்திரம் உபத்திர வமும் அவை செய்யவேயில்லை. அதையந்த அசுரர்கள் பார்த்து ஆச்சரியங்கொண்டு இரணியனிடத்தில்வந்து 'சுவாமி! எங்களிடத்தி

ஆள்ள ஆயுதங்களெல்லாம் பிரயோகஞ் செய்தோம். அவை யெல்லாந் தவிடுபொடியாய்விட்டன. உம்முடைய குமாரன் சரீரத்துக்கு யாதொரு துன்பமுமில்லை. இனிமேல், நாங்கள் செய்ய வேண்டியதென்ன' வென்றார்கள். அதைக்கேட்டு அசுரேந்திரன் மிகுந்த கோபமுண்டானவனாய்ப் பிரகலாதனன் கபடமான நெஞ்சையுடையவனுகையால், ஏதோ மந்திரக்கட்டினால் அந்த ஆயுதங்களெல்லாம் தன்னுடம்பில் தாக்காமல் முறிந்துபோம்படிச் செய்தான். நல்லது; இப்பொழுது நீங்கள் கடோமான அக்கினியை மூட்டி; அதிலே அவனைக்கட்டித் தள்ளிவிடுங்களென்று ஆக்கியாபித்தான். அப்படியே அந்தத் துட்டர்கள் அதிக நிகளமும் அகலமும் ஆழமுமுள்ளதாக ஒரு பெரிய குழிவெட்டி அந்தக் குழியிலே பருவதம்போலப் பருத்த புளியங்கட்டைகள் மேலும் மேலும் நிறைய அடுக்கி, ஆயிரங்குடம் எண்ணெயும், ஆயிரங்குடம் நெய்யும் கொண்டுவந்து சொரிந்து தணல் மூட்டினவுடன் சுவாலையானது தெய்வலோகமட்டும்போராக் கொழுந்துவிட்டு நெருப்பு பற்றிக்கொண்டு பிரளயகாலாக்கினிபோல எரியும்பொழுது, அங்கிருந்தவர்களெல்லாம் உயிர்சோரும்படி எம் ஐயனுகிய பிரகலாதாழ்வானைக் கையுங்காலுங்கட்டி நிர்த்தாட்சணிய மாய்த் தள்ளிவிட்டார்கள். அவன் உலக பிராட்டியனுடைய திருவடியை நமஸ்கரித்துக்கொண்டே "நாராயண! நாரத பாராயண!" வென்றுத் துதிசெய்து நின்மலசித்தத்துடன் அதிலே விழுந்தான். அதி யுட்டினமாகிய அந்த அனலானது அவனுக்குக் குளிர்ந்து சீதள சந்தனக்குழம்பு போலாய்விட்டது. அப்பொழுது அசுரர்கள் இரணியனிடத்திற்குப் போய், "ஐயா! தேவரீர் உத்திரவின்படி நெருப்புக்குழியில் தள்ளியும், உம்முடைய புத்திரனை அந்தப் பெரு நெருப்பு எவ்வளவுந் தகிக்கவேயில்லை. இனி யென்னசெய்கிற" தென்று கேட்டார்கள். இரணியேசுவரன் விழிகள் கொதிக்கும்படி மிகவும் குரோதத்தைக்கொண்டு "அப்படியா? அந்த அக்கினியை கட்டிச் சிறையிடுங்கள். இந்தத் திருட்டுப்பயலை அட்டமாநாகங்களை விட்டு கடித்து உயிர் குடிக்கும்படிச் செய்யுங்கள். அவன் சாகாம லிருப்பதைப் பார்ப்போ" மென்று ஆக்கியாபித்தான். அனந்தன், வாசுகி, சங்கன், குளிகன், பதுமன், மகாபதுமன், தட்சகன், கார்க்கோடகன் என்கிற தெய்வீகமாகிய சர்ப்பங்களொட்டும் இரணியேசுவரன் நினைத்தமாத்திரத்தில் அதிசீக்கிரமாக வந்து "எங்களுக்கென்ன கட்டளை" யென்று கேட்டுணர்ந்து, அவன் சொற்படியே

கொடிய விஷாக்கினியைச் சிந்துகின்ற வாயினு லிறைச்சலிட்டுச் சிறிப் பிரகலாதனனுடைய அழகிய திருமேனியில் வாள்போல நீண்டு வளைந்து கூர்மையாயிருக்கின்ற பற்களுன்றும்படி மரண மடைவதற் கேதுவாகிய திங்நட்சத்திரங்களில் அதிக கோபமாகக் கடித்தன; கடித்தவுடனே படம்விரித்துக் கொண்டாடின; தரையி லும் புரண்டன; அப்போது பிரகலாதனன் தன் சரீரம் துடிக்கா மல் எம்பிரானுடைய திருநாமத்தை உச்சாடணம் பண்ணிக்கொண் டிருந்தான். பக்கத்தில் நின்றவர்கள் பயத்தினுல் வாயின்வழியாக இரத்தத்தைக் கக்கவும்; பாம்புக்கு வைரியாகிய கருடனும் நடுக் கத்தையடையவும்; சிவந்த மேகத்திற்குள்ளே பாலச்சந்திரன் தழை கிறதுபோலக் கடிமீளாத உருப்புக்களில் காளி, காளாத்திரி, எமன், எமதூதனென்கின்ற நான்கு பற்களும் தைத்து உருவமெழும்பிக் கடித்ததனுல், அந்தப் பாம்புகளின் பற்களெல்லாம் வலியற்று ஒடிந்து உதிர்ந்தன. பிரகலாதனனைக் கடித்தயிடங்களெல்லாம் விடம்பாயா மல் அமுதம் ஊறி ஒழுகத் தலைப்பட்டது.

அதுகண்டு தூதர்களோடி "ஐயா! அட்டநாகங்களுஞ் சூழ்ந்து கடித்தும் அவற்றின்பற்கள் அழுந்தவும் இல்லை. உம்முடைய மைந்த னுக்கு விஷமேறவுமில்லை" என்று இரணியனுடனே சொன்னர்கள். அவன்கேட்டு கோபச்சிரிப்பு சிரித்து "ஐராவத யானை முன்னே இவனைக் கொண்டுபோய் போட்டு, அதன்காலா லிடறச்செய்து விடுங்க" ளென்றான். அந்தப்படியே தூதர்கள் தெய்வீகமாகிய பாசங்கள்கொண்டு பிரகலாதனன் கை, கால், மார்பு, கழுத்துகளி லும் இறுக்கி ஒடுக்கிக்கட்டி எடுத்துக்கொண்டுபோய் வெள்ளையானை முன்னே போட்டார்கள். மின்னலைப் பழிக்கின்ற தன் கொம்பு களினுலே பிரகலாதனனுடைய வயிரமாகிய மார்பில் அது குத்தி யழுத்தியது; அவ்விதமாக அழுத்தவே அந்தத் தந்தங்கள் நான்கும் இளவாழைத்தண்டைப்போல முறிந்துபோய்விட்டன. அதுகண்டு உண்மையில்லாத அசுரர்கள் கண்ணிமைப்பதற்குள்ளாகப் போய் "ஐராவதம் உம்முடைய குமாரனைப்பாய்ந்து குத்தி, கொம்புக ளற்று விழுந்த" தென்று சொல்ல, அசுரேந்திரன் கோடைகாலத் துச் சூரியனைப்போலச் சுடுகின்ற கண்களையுடையவனுய்க் கோபித்து, ஏழு நிலைகளுடைய நமது பெரிய உப்பரிகையின் வாயிற்கோபுரச் சிகரத்தின்மேல் ஏற்றிப் பூமியிலே தள்ளிவிடுங்களென்று உத்தரவு

செய்தான். பிரசண்டவாயுவைப் பார்க்கிலும் அதிக பலத்தை யுடைய கொலையாளர்கள் அவனை அப்படியே கட்டித் தூக்கிக் கொண்டுபோய் மாமேருவைப்போல அண்டபரியந்த முயர்ந்த இர ணியனுடைய வாயிலிலிருக்கின்ற கோபுரச் சிகரத்தின்மேலேற்றி, அங்கிருந்து தலைகீழாக உருட்டித் தள்ளிவிட்டார்கள். அந்தச்சமயத் தில் பூமாதேவியானவள் இரணியனுடைய தம்பியாகிய இரணியாக் கதன் தன்னைப் பாயாகச் சுருட்டிக்கொண்டுபோனபோது வராகமா யவதரித்துக்கொண்டு தன் ஆபத்தை நீக்கிய பகவானுடைய பத்தன் இவனுகையால், இவனுக்கு வந்த ஆபத்தை நீக்கவேணுமென்றெண் ணிப் பிரகலாதனனிடத்தி லிரக்கத்தையுடையவளாய், அவனுக்கு யாதொரு உபத்திரவமுமில்லாமல் மாந்தளிருக்கொப்பாகிய தன் கைகளினுல் அவனை எதிரே ஏந்திக்கொண்டாள். அதை இரணியன் அறிந்து உடல் வெதும்பி; புத்திரவாஞ்சல்லியமென்பது கடுகளவு மில்லாமல் "அடா தூதர்களே! அந்தக் கள்ளப்பயலைப்பிடித்து யாவ ராலும் அசைக்கப்பட்டாத பெரிய மலையுடனே நெருங்கக்கட்டி கரைகாணக்கூடாத சமுத்திரவெள்ளத்திலே விட்டுவிடுங்க" ளென்று ஆக்கியாபித்தான். அவர்கள் அந்தப்படியே பிரகலாதனனைப் பரு வதத்துடனே சேர்த்துக் கட்டிக்கொண்டுபோய், கடலின் நடுவிலே விட்டார்கள். நடுநிலைமையையுடைய ஏகநாயகன் திருநாமத்தைச் சோரவிடாதவனுகையால், பிரகலாதனனுக்குப் பாதலபரியந்தம் ஆழ்ந்த பெரிய சமுத்திரமானது சிறிய மடுவைப்போலிருந்தது. அந்த நெடியமலையும் சுரைக்குடுக்கையைப்போல மிதந்தது. அலை மோதுகின்ற கடலிலே முழுகாமல் மேலேமிதக்கின்ற பருவதத் துடனே அந்தப் பாலன் இருப்பது எப்படியிருந்ததென்றுல், மகா பிரளயத்தின் மத்தியிலே ஆலிலையின்மேல் குழந்தைவடிவுகொண்டு சயனித்திருந்த சகத்ரட்சகனைப்போலே விளங்கினது. அன்றியும், அவன் தீர்க்க வைராக்கியத்தையுடையவனுய்ச் சகதீசனுடைய சகத்திர நாமங்களுஞ் சொல்லித் தலையின்மேல் கைகூப்பிக்கொண்டு பிரமத்துடன் கலந்திருந்தான்.

அதை அசுரர்களாலறிந்த மகா பராக்கிரமசாலியாகிய இரணி யன் "அவனைக் கொண்டுவந்து என்முன்னே விடுங்க" ளென்றுன். அவ்வாறே பருவதத்துடன் சேர்த்துக்கட்டிய கட்டுகளையவிழ்த்துப் பிரகலாதனை விடுவித்துக்கொண்டுவந்து விட்டார்கள். அவனைக்

கண்ட இரணியனுக்குச் சரீரமெரிந்து புழுங்கி "இவனுக்கு விடம் கலந்த அன்னம், பதார்த்தம், பால், பழம், பஞ்சகச்சாயம் முதலாகிய பட்சணங்களையூட்டி இவனைக் கொல்லுங்க" ளென்றான். அந்தப்படியே அநேகவகைப்பட்ட விடான்னத்தையும் ஊட்டினார்கள். அவையும் அவன் உண்டு பகவத்கடாட்சத்தினாலே சீரணஞ்செய்து கொண்டு சாகாமலிருந்தான். அதுகண்டு இரணியன் 'அவனை இருப்புப்பணியின்மேல் வைத்து, கை கால் தலை உடல் முதலானவை சிதைந்து பொடி பொடியாய்ப் போகும்படி, சம்மட்டிகளைக்கொண்டு அடியுங்க" ளென்று ஆக்கியாபித்தான். அவ்வண்ணமே கொலையாளர்கள் பிரகலாதனனைக்கட்டி இருப்புப்பணியின்மேல் வைத்துப் பெரிய இருப்புச் சம்மட்டிகளைக்கொண்டு பலமாக ஓங்கியடித்தார்கள். கணக்கில்லாத அசுரர்கள் கூடி மூச்சுவிடாது ஓயாமலடிக்கவே, 'இனியேது இவன் பிழைக்கிறது? கனவிலுமில்லை' யென்று சகலமானவர்களும் எண்ணும்படியா யிருக்கின்ற சமயத்தில், 'அந்தப் பிரகலாதாழ்வான் தனக்குள்ளே அந்தரியாமியா யிருக்கின்ற எம்பெருமானுக்கு கைகளோ அநேகமாயிரம்; திருவடிகளோ அளவிறந்தன; திருக்கண்களோ எண்ணத்தொலையாதன' என்று அவனுடைய அவயவ முதலாகிய ரூபநாம குணங்களை ஒழியாது தியானித்து மனமுருகிக்கொண்டிருந்தானே யல்லாமல், தன்னை அடிக்கிறார்களென்கிற நினைவு சிறிதாவது கொள்ளவில்லை. என்னசெய்தும் பிராணன் நீங்காததுகண்டு இரணியன் 'இவன் மாயையினால் தன்னுடலுஞ் சிதையாமல், உயிரும் பிரியாமலிருக்கத்தக்க உபாயத்தையுடையவனாகியிருக்கின்ற னாகையால், இனி நானே இவனைக் கொல்லுகிறே' னென்று கோபித்து; உலகங்களெல்லாம் நடுங்கும்படிச் சமீபத்தில் வந்தான். அப்படித் தன்னைக் கொல்லவந்த பிதாவைப் பிரகலாதனன் வணங்கி, "ஐயா! என்னுயிரை வாங்கும்படி நீர் வருத்தப்படவேண்டாம். இது உம்மாலே சாத்தியமாகத் தக்கதல்ல; சகல புவனங்களையும் உண்டாக்கிய ஸ்ரீமந் நாராயணனே கொல்லும்படி யிருக்கின்ற" தென்று சொன்னான். அதைக்கேட்டு இரணியேசுரன் "அடா! உலகங்களை யுண்டாக்கினவர் யார்? என்பெயரைத் துதிபண்ணிக்கொண்டிருக்கின்ற திரிமூர்த்திகளா? அல்லது முனிவர்களா? மற்ற யாவர்கள்? அதைத் தெரியச்சொல்லடா!" என்றான்; அப்படிப்பட்டவனொருவன் உண்டாயிருந்து அவனைக் காட்டுவானாகில், அவனைக் காணலாமென்று நினைத்துத் தனக்

குக் கோபமூண்டெழுந்தும் இரணியன் பிள்ளையைக் கொல்ல வில்லை. அப்போது பிரகலாதனன், 'ஐயா! உலகத்தை யுண்டாக் கினவனுரென்றுக் கேட்டீரல்லவோ? முன் கூறியபடியே உலகங்க ளைப் படைத்தவனும், அவைக்குள் நானுபேதமாகிய உயிர்களைப் படைத்தவனும், அந்த அழியாத உயிர்கள்தோறும் அந்தரியாமியா யிருந்து அங்கங்கே வாசஞ்செய்கின்றவனும், மலரினிடத்தில் மண மும், எள்ளினிடத்தில் எண்ணெயும்போல அளவில்லாத பல பொருள் களிலும் கலந்திருக்கின்றவனுமாகிய ஸ்ரீ மகாவிஷ்ணு என்பவன் தான். அவன் என் கண்களாலே நோக்கிக் காண்பதற்கு எங்கும் நிறைந்திருக்கின்றனென்று சொல்லவே, இரணியேசுரன் தன்னு டைய தந்தங்கள் பிரகாசிக்கும்படி கலகலவென்று சிரித்து, "அடா! உலகத்திலுள்ள பல பொருள்களிலும் அந்த மகாவிஷ்ணு வென்கிற ஒருவன் புகுந்து நிறைந்திருக்கிறனென்று சொன்னையே! அதை நான்கண்டு, பின்பு அதற்குத் தக்கபடி செய்கிறேன்; அப் படியே அந்தத் திருடனிருப்பானுகில், அவனுடைய நிலைமை திருட் டாந்தப்படுத்து பார்ப்போ" மென்று சொன்னன். அதற்குப் பிரக லாதனன், "ஐயா! அந்தப் புருஷோத்தமன் அணுவிலுமிருக்கின் றன்; அந்த அணுவை அநேகங் கூறுகச்செய்யப்பட்ட பரமாணுவி லும் இருக்கின்றன்; மகமேருவிலு மிருக்கின்றன்; இவ்விடத்தில் நிற்கின்ற தூணிலுமிருக்கின்றன்; நீர் சொன்ன சொல்லிலு மிருக் கின்றன். அவனில்லாத பொருளொன்றுமில்லை; இந்த அதிசயத் தைப் பார்க்கவேணுமானுல், சீக்கிரத்தில் சந்தேகமின்றிச் சோதித் தறிந்துகொள்ளும்" என்றன்.

இவ்விதமாகச் சொல்லவே, இரணியன் நல்லதென்று சம்மதித் துப் பின்னுஞ் சொல்லுகின்றன், "தேவர்களுக்கும் உனக்கும் ஒத் தவனுகிய இந்த உலகமெங்கும் நிறைந்திருக்கின்ற அந்த மகா விஷ் ணுவை இங்கே நிற்கின்ற தூணினிடத்திலிருக்கக் காட்டு; காட்டா மற் போவாயானுல், மத்தகத்தையுடைய மதயானையைச் சிங்கமா னது அறைந்து கொல்வதுபோலே உன்னை நான் கொன்று, உன் னுதிரத்தைக் குடித்து உடலையுந் தின்றுவிடுவே" னென்றன்.

அதுகேட்டு அறிவிற் சிறந்தவனுகிய பிரகலாதனன் "கேளு மையா பிதாவே! என்னைக் கொல்லுவேனென்று அடிக்கடிச் சொல்லுகின்றீர்; என்னுயிரை உம்மாலே கொல்லப்படுகிறதற்கு

அத்தனை எளிதாகியதல்லவே! நான் உமக்கு முன்னமே சொன்ன சருவேசுரன் நீர் குறித்த இடங்களிலெல்லாம் அவசியம் காணப்படுகிறான். காணுமற்போவானேயாகில், என்னுயிரை நானே மாய்த்துக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்யாமல், பின்னும் பிராணனுடனிருப்பேனுகில், அவனுக்கு நான் அடிமையல்ல; எனக்கவனுண்டவனுமல்ல" வென்றுப் பிரதிக்கினை பண்ணினான். இரணியேசுரன் தன்னுடைய வச்சிரதந்தங்கள் பிரகாசிக்கும்படி சிரித்து காலாக்கினி போலே மனங்கொதித்து 'நல்லது நல்ல' தென்று சொல்லி, இடி விழுந்ததுபோல அதிக ஆரவாரத்துடன் எதிரேயிருந்த சொர்ண மாகிய நெடியதூணை உருமிப்பார்த்து; வீரகண்டாமணி யணிந்த தன்னுடைய வலதுகாலைத் தூக்கி உக்கிரத்துடன் ஓங்கி யுதைத்து; "இதிலே எவனிருக்கின்றான், காட்டடா?" வென்றான்.

நரசிங்காவதாரம்

துதி

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அரக்கரணிக் குலமாயைச் செயல னைத்து
மாவிகொடு வானவர்பால் மருவிற் றென்ன
மறக்கொடிய விரணியனை மார்பு கீண்டு
வழுதியா மழிபுரக்குந் திருமார் பானை
வரக்குரிசிற் பிரகலா தனனைக் காத்த
மாதவனை நரசிங்க வடிவு கொண்ட
அறக்கருணைத் திருமாலை யமர ரேற்றை
யனவரத மும்துதியாத் துதித்து மன்றே.

இரணியன் அப்படி உரைத்த மாத்திரத்தில் அந்தத் தூணிலிருந்து ஒரு பேரோசையானது எழுந்து திசைகளைக்கிழித்து, அண்டமுகட்டையும் பிறிக்கொண்டு ஊடுருவும்படிச் சிவந்த கண்களையுடைய சிங்கமானது லோகா லோகங்களெல்லாம் கிடுகிடாயமானமாக மிகவும் உக்கிரமாய்ச் சிரித்தது. சருவஞ்ஞனும் சருவ பரிபூரணனுமாகிய எம்பெருமான் அந்தத்தூணில் குறித்த உடனே பிரகலாதாழ்வான் எழுந்து தன்னைமறந்துக் கூத்தாடினான். ஆனந்தக் கண்ணீர்விட்டழுதான்; அவர் விடயமாயிருக்கின்ற திவ்விய சுருதிகள் பாடினான்; நரசிங்மேற் கைகளை அஞ்சலி பண்ணிக்கொண்டு சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தான். அந்தச் சமயத்தில்

சாட்சாத் திருமார்பன் நரசிங்க வடிவுகொண்டு அத்தூணினின்றுப் பலரு மறியும்படியாய் நகைத்தனன். அதைக் கேட்ட இரணியாசுரன் கொக்கரித்து, 'அடடா! தூணிலிருந்து நகைத்தாயோ! நீ யாரடா! இந்தப் பையன் சொன்ன விஷ்ணுதானே? எனக்குப் பயந்து ஓடிப்போய் இதுவரையிலும் நீ யொளித்துக்கொண்டிருந்த சமுத்திரத்தில் இடம்போதாதென்றே இப்பொழுது இத்தூணைத் தேடி இதிலேவந்து ஒளித்துக்கொண்டாய்? ஆகட்டும்; என்னுடனே யுத்தம்பண்ணத்தக்க வல்லமையை உடையவனுனால், தூணைவிட்டுச் சீக்கிரமாகப் புறப்படு; என் காலதாமதஞ் செய்கிறே' யென்று சொல்லிப் பின்னும் அதட்டி ஆர்ப்பரித்தான். அப்பொழுது, அண்டம் வெடித்ததுபோலப் படீரென்று அந்தத்தூணும் பிளந்து உக்கிர நரசிங்கமானது பிறந்தது. பிறந்தவுடனே அதுவளர்ந்தது. அப்படி வளர்ந்தது அட்டதிக்குகளையும், பகிரண்ட முதலானவைகளையும் அளந்துக்கொண்டே போய் நிறைந்தது. ஆயினும், பகிரண்டத்திற்கு அப்பால் நடந்தசெய்தி என்னவோ அதை யாரறிந்துச் சொல்லுகின்றவர்கள்; ஆகாசம் கீழுமேலும் கிழிந்தது. பரிமளம் பொருந்திய துளபமாலையை யணிந்த நரசிங்கமூர்த்தியின் திருவுரு வனத்தை யூடுருவிப் போனதை நாமறியமாட்டோம்; திருவடித் தாமரைகள் பூமியிலே தோயும்படி நின்றபொழுது நெடிதாகிய அண்டமுகட்டில் சத்தியலோகத்திலிருந்த பிரமதேவன் அன்றுதான் அந்த நரசிங்க மூர்த்தியினுடைய திருவுந்திக் கமலத்தில் உற்பத்தியானவன் போல விளங்கியிருந்தான். அப்போது நரசிங்க மூர்த்தியானவர் சேனைகளையெல்லாம் அதாகதம் நாசஞ்செய்து இரணியனைப் பிடித்து அந்திநேரத்தில் அவனுடைய கோபுரவாயிற்படியில் தமது திருத்தொடைகளின்பேரில் இரணியாசுரனைவைத்து வச்சிராயுதம்போன்ற தமது நகங்களினால் அவன் மணிமார்பை இரண்டாகப் பிளந்து; அவனுடைய உதிரங்களையெல்லாம் கொப்பளித்துக்கொண்டு; அவனைச் சம்மாரஞ்செய்து; அவனால் தேவர்களுக் குண்டாயிருந்த துன்பங்களைப் போக்கினர். சகல நற்குணங்களும் பொருந்திய பரமபாகவத சிகாமணியாகிய பிரகலாதனைச் செய்த தண்டனைகள் சகிக்காமல் காப்பாற்றும் பொருட்டும், சகல சராசரங்களிலும் வியாபித்துக் கொண்டிருப்பானென்று யாவருக்கும் நன்றாய்ப் புலப்படும்படிக் காட்டும்பொருட்டும் விஷ்ணுவானவர் நரசிங்காவதாரஞ் செய்து, தேவர்களுக்கும், மற்றியாவர்களுக்கும் உண்டாகிய விடுக்

வேனென்று சந்தோஷமடைய; அப்போது பிரகலாதனன் தன் பேரனுக்குண்டாகிய சந்தோஷத்தை யுணர்ந்து, அழியாத கவசமும் நவமணிமாலையுங் கொடுத்தான். அதை யணிந்துகொண்டு இரதாரோகணஞ்செய்து, மேல்நாட்டையடைந்து, வில்வலீத்து நாணேறிட்டு லோகாலோகங்களும், அட்டதிக்குப் பாலகர்களும், திக்குயானைகளும், ஆதிசேடனும், குலகிரிகளும் நடுங்கும்படி தனுசினதுடங்கார ஓசையைக் காட்டினான். அவ்வொலியைக்கேட்ட தேவர்கள் முனிவர்கள் யாவரும் தேவகுருவாகிய பிரகஸ்பதியினிடம் சென்று வணங்கி, மாவலியினல் செய்யப்பட்ட தனுவோசையினல் தங்களுக்கு நேரிட்ட பயத்தைத் தெரிவிக்கக் கேட்டு பிரகஸ்பதியானவன் அனைவோரையும் நோக்கிச் சொல்லலுற்றான்:—

கேளுங்கள், தேவர்கள் முனிவர்களே! சுக்கிராச்சாரி அந்தணர் சமூகத்துடன் வேதவிதிப்படி விச்சுவசித்தெனும் வேள்வியை முடித்து, அந்த ஓமகுண்டத்திலிருந்துவந்த அழியா இரதமும், அழியாதவில்லும் கவசமும் முதலானவைகளும் மாவலிக்குக் கொடுக்க; அவன் அதையணிந்து இரதத்திலேறித் தேவர்களையும், மற்றியாவர்களையும் வென்று செயம்பெற வெண்ணி யிங்குவந்திருப்பதால், இப்போதவனை வெல்ல உங்களால் ஆகாது. பிரமன், விஷ்ணு, சிவன் மூவரும் ஒன்று கூடிவந்து மாவலியை யெதிர்த்துச் சண்டைசெய்ய முயன்றபோதிலும், அந்த மாவலியை வெல்லுவதற்குத் தக்க யுக்தியை யானென்ன சொல்லப்போகின்றேன். ஆகிலும், யுத்தஞ் செய்வதைவிட்டு மாவலியைச் சிநேகித்துக்கொண்டு வாழக்கடவீரெனக்கேட்டு தேவேந்திரன்முதல் தேவர்கள் யாவரும் மனக் கலக்கங்கொண்டு தேவலோகத்தைவிட்டு ஓடி ஒளித்திருந்தார்கள்.

இதைக்கண்ட மாவலி மகிழ்ந்து, அப்பொன்னகரத்தில் அசுரர்கள் களிக்க, நிருதர்கள் வியக்கத் தேவேந்திரன் ஏறும் சிங்காசனத்தின்மீதேறி, அரம்பை, ஊர்வசி, திலோர்த்தமை, மேனகை, இவர்கள் ஆடவும் பாடவும் வெண்சாமரம் போடவும், மற்றுமுள்ளவர்கள் தன்னைச் சூழ்ந்து நாடவும், தேன் பொருந்திய பாரிஜாதமாலையை யணிந்து சகலரும் கொண்டாடவும் தேவசிங்காதனத்தின்மீது பொருந்தி, திசைகளெல்லாம் தன் கைவசப்படுத்திக்கொண்டு அரசாண்டிருந்தான்; அநேக யாகங்களைச் செய்தும், அளவிறந்த தானங்கள் அளித்தும், யாசகர் முதலாகிய ஏழைகளெங்கு மில்லாத

படிக்குத் தானஞ்செய்தஞ் செயசாலியாகிச் சிறந்து உலகத்தையாளு வதைக்கண்ட அதிதியானவள் சோர்ந்து கண்களில் நீர் பெருகவிட் டுக் கொண்டு தன் கொழுனனுகிய காசிபனைக்கிட்டி, "என் பிராண நாதரே! தேவேந்திராதி தேவர்கள் இடரைப் போக்கவும், அசுரர் குலத்தை நாசமாக்கவும் தக்க ஒரு புதல்வனை பாலிக்கவேணு" மென்று வினயத்துடன் வேண்டிக்கொள்ளக் காசிபர் சொல்லு கின்றார்.

கேளாய் பெண்ணே! அசுரர் மிகுந்த சங்கடத்தை யடையவும், தேவேந்திரன் முதலான தேவர்களும் முனிவர்களும் மகிழ்ச்சி யடைந்து சுகத்தைப் பொருந்தவும், உனக்கொரு சுதன் சூரியனைப் போல பிரகாசத்தைப்பெற்று உதிக்கக்கடவன். அதற்கு ஸ்ரீ மகா விஷ்ணுவின் திருமந்திரத்தைத் தியானித்து விரதமிருப்பாயாகில், உன் மனதுக்கினிய பாலன் உதிப்பானென்று சொல்லக்கேட்டு, அதிதியும் சந்தோஷமடைந்து, பங்குனிமாசத்தில் சூரியனிருக்கும் திதிமுதலாக துவாதசிவரையில் விரதத்தை அனுஷ்டித்துப் பன் னிரண்டு அக்கரத்தோடு மணம் பொருந்திய மலர்களால் மாதவனை யருச்சித்து விரதத்தை முடிக்கப், பகவான் கருடன்மீ தூர்ந்துவந்து அதிதிக்குச் சேவை தந்து நிற்க, அதிதி பலவாறுகப் புருடோத்த மனைக் கொண்டாடித் தன்னைமறந்து ஆனந்தக்கண்ணீருகிர்ந்து உருகி வாடிக் கதறுவதைக்கண்டுப் பகவான் அவள் பக்கிக்கிரங்கி, "உத்தம குணத்திற்சிறந்த பெண்மணியே! உனக்கென்ன வரம் வேணும்? கேள்" என, அதற்கு அதிதி, "ஓ சுவாமி! தேவர்களுக் குண்டாகிய சிரமத்தைப் போக்கும்படியான தீரமுடைய ஒரு புத்திரனையளிக்க வேணு" மென்று வினவியபோது, முராரி, "அம்மணீ! யானுனக் குத் தனயனுய்ப் பிறக்கிறே" னென்று சொல்லி மறைந்தருளினார். பகவான் தோன்றி வரமளித்த விவரத்தைத் தன்னுயகனுக்கு அறி விக்கக் கேட்டுக் காசிபர் ஆனந்தமடைந்து, பரிவோடு தன் மனைவி யைக்கூடின மாத்திரத்தில் கருப்பம் உண்டாகி, கன்னியாமாதம், சுக்கிலபட்சம், துவாதசி திதி, திருவோண நட்சத்திரங் கூடிய சுப தினத்தில் மகாவிஷ்ணுவானவர் வாமனமாகப் பிறந்தார். (வாமன மென்றால் குள்ளம் என்று பொருள்.) அவ்வுருவத்துடன் பிறந்த பிள்ளையை மிகுந்த ஆதரவுடன் எடுத்தணைத்துப் பிரியமாக வளர்த்துச் சாதகம், சவுளம், உபநயனம் செய்வித்து, வித்தை கற்பித்து, வே

சாத்திரத்தில் தேர்ச்சிபெறச் செய்து, பிரகஸ்பதி பகவான் மூப்புரி நூலளிக்கக், காசிபர் தண்டையளிக்க, அதிதி கௌபீனங் கொடுக்க, வியாசர் கமண்டலந்தர, குடையும் மரவடியும் சத்தரிஷிகளீய, மான்றோலை அவனிப் பாவையளிக்க, சூரியசந்திரர்கள் குண்டலங் கொடுக்க, சரசுவதிசெபவடம் அளிக்க, பிரமதேவன் காயத்திரி மந்திரத்தை யோத இத்தியாதி பிரயோசனங்களைப்பெற்று, பிரம சாரி வைதிகத்தை யடைந்து வாமனமூர்த்தியானவர்; அவ் விடத்தை விட்டு நருமதைநதிக்கு வடதிக்கில் பிருகுமகாமுனிவர் ஆசீர்மத்தில் யாகஞ்செய்துகொண் டிருக்கும் மாவலியின்பாற் செல்ல, பிரமசாரியைக்கண்டு மாவலி யெதிர்கொண்டுவந்து அழைத் துப்போய் தருப்பாசனந்தந்து பலவிதமாய்ப் பூசித்து, அவர் திரு வடித்தீர்த்தம் சிரசின்மேற்கொண்டு பணிந்து, "ஓ சுவாமி! தங்கள் தரிசனத்தினால் பாவனமாய் விட்டேன்; இந்த யாகமும் பவித்திர மடைந்தது; இனி தங்களுக்குவேண்டிய வஸ்து எதுவோ அதை யறிவித்தால் தடையின்றி அவசியந் தருகிறேன்" என்ற மொழி யைக்கேட்டு, வாமனமூர்த்தி களிப்படைந்து, அவிகொடுப்பதில் உனக்குச் சமானமாகிய புருடர்களும் உலகத்தில் உண்டோ? மெத்த புண்ணியவான் நீயென்று கேள்விப் பட்டல்லோ உன்னிடத்திற்கு வந்தேன்! ஆகிலும், யான் பொருந்தியிருந்து பகவானே யிடைவிடா மல் தியானிக்கவும், தவஞ்செய்யவும் உன்னுடைய பூமியில் என் னுடைய அடிகளால் மூன்றடி நிலம் மனப்பூர்த்தியாய்த் தானஞ் செய்வாயாகில், உனக்கு மெத்த புண்ணிய முண்டாமென்று சொல் லிய பிரமசாரியின் மொழியைக் கேட்ட மாவலி சந்தோஷமடைந்து, 'அப்படியே தருகிறே' னென்று தன் மனைவியின் கைகளால் எள்ளு டன் சலங்கொட்டி மூன்றடி தத்தஞ் செய்யப்போகிற சமயத்தில், சுக் கிராசாரி அவ்விடத்திற்கு வந்து மாவலியைக்கண்டு சொல்லுகிறார்.

•

கேளாய், சக்கிரவர்த்தியாகிய அரசனே! மூன்றடிநிலம் யாசிப் பவன் சாமானியனென்று நினைத்து அலட்சியமாக இதென்ன அற் பம்; மூன்றடி நிலந்தானே யென்று எள்ளுந் தண்ணீரும் விட்டுத் தானங்கொடாதே! இவன் சாட்சாத்து ஸ்ரீமகாவிஷ்ணுவென்று நின் மனதில் கெட்டியாக நம்பு. இவன் ஏதோ கபடஞ்செய்ய உத்தே சித்து இத்தன்மையாகிய வடிவங்கொண்டு வந்திருக்கிறான். ஆதலால், மூன்றடிநிலம் இவனுக்குத் தானம் கொடுப்பாயாகில், குடி முழுகிப்

போம்! சாக்கிரதையாயிரு என்று தடுக்க, மாவலி சொல்லுகிறான்; குருநாதரே! சகல அண்டபிண்ட சராசரங்களையும் தன் வயற்றில் வைத்துக் காப்பாற்றும் ஆதிமத்யாந்த ரகிதனே இருகரங்களையும் ஏந்தி யாசகஞ் செய்கிறபோது நானெப்படி யில்லையென்று சொல்லுவேன்! மேலுமாக நான் அவருக்குத் தானங்கொடுக்கவும், அவர் பெற்றுக்கொள்ளவும் நான் என்ன பாக்கியம் பண்ணினேனோ? அதன் பலன் வாய்க்கவும் அதனை வேண்டாமென்று யானெப்படி தடுத்துச் சொல்லுவேன். அன்றியும், பரமபதமும் கைலாசமும் ஆகிய இவ் விரண்டு பதவிகள் தவிர, மற்றெதுவாகிலும் வேண்டுமென்று யாசிப்பவர்களுக்குத் தடையின்றிக் கொடுக்கிறேனென்று யான் சங்கற்பம் செய்துக்கொண்டிருப்பதால், அற்பமாகிய மூன்றடி நிலத்தைக் கொடுக்கமாட்டேனென்று கூற என் மனஞ் சம்மதிக்க வில்லை. ஆகையால், எனக்கு எவ்வித கஷ்டம்வந்து சம்பவித்தபோதிலும் அனுபவித்துத் தீர்ப்பேனே யல்லாமல், நியாகி யென்று வருமவருக்கு நாத்தியென்று கனவிலுஞ் சொல்லமாட்டேனென்று சொல்லித் திடசித்தமுடையவனாகித் தான் எள்ளைப் பகவான்கையில் போட்டுத், தன் பத்தினியைத் தண்ணீர்விடும்படிச் சொல்லியபோது, அவ்வுத்தமி செம்பிலிருக்கும் சலத்தை விடும்பொருட்டுச் சாய்த்தாள். அச் செம்பின் மூக்குத்துவாரத்தில் சுக்கிராசாரி வந்து புகுந்து ஒருதுளி சலம்கூட விழவொட்டாமல் அடைத்துக்கொள்ள, அதை யுணர்ந்த வாமனமூர்த்தியானவர் தன் கையிலிருந்த தருப்பைப் புல்லினால் அச்செம்பின் மூக்கில் குத்தினார்; உடனே தண்ணீர் வெளிப்பட்டுத் தன் கைமேல்விழ, மாவலிச்சக்கிரவர்த்தி மூன்றடி நிலம் மனப்பூர்வமாய்த் தத்தம் பண்ணினான். இந்தக்காரணத்தினால் சுக்கிராசாரியருக்கு ஒருகண் பொட்டையாகியது. பின் வாமன மூர்த்தியானவர் திரிவிக்கிரமனாகி பூமியையெல்லாம் ஓரடியாக அளந்து, மற்றோரடியால் ஆகாயத்தை அளந்து, மூன்றாவது அடிக்கு நிலம் எங்கே? இதற்கு வழியென்ன? சொல்வாய் என்று திரிவிக்கிரம மூர்த்தி மாவலியைக் கேட்க, அதற்கு மாவலி யோசித்துப் பல விதமாய் பகவானைக்கொண்டாடி, அண்டத்துக்கும் பிண்டத்துக்கும் ஏக ரூபமாக நின்றதை மாவலியுணர்ந்து, "என்னையனே! அடியேன் சிரசு அன்றி வேறுநிலம் ஊசி நாட்டுதற்குக்கூடக் கிடையாதே; அசத்தியஞ்செய்விட்டேன். இதற்கு யானென்ன செய்வேன்?" என்று கலங்கிவாடும் மாவலியைக் கிருபைக்கண்ணால் பார்த்து, மூன்

ரூவதடியை அவன் சிரசின்மேல் வைத்து அழுத்திப் பாதல உலகத் திற்சேர்த்து தேவேந்திரனுக்குத் தேவலோகத்தைத் தந்ததுபோல மாவலிக்குப் பாதல உலகத்தைத் தந்து, அவனுக்குத் தானும் குபேந் திரனுக இருந்து கடாட்சம் செய்தார். வாமனவதாரஞ் செய்த தற்கு மாவலி காரணமாகும்.

பரசுராமாவதாரம்

துதி

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பாரரச ருயிர்குடித்த வமர ரந்நாள்
படுவரக்க ரோடமர்செய் தாற்ரு நிற்ப
நீரணிசெஞ் சடைக்கடவு ளருளால் வான
நிலந்திருத்தி இரிசிகாவென் பவர்க்கு மூன்று
யோரியிரத் தந்தந்த பெரியா னன்று
ஈன்ரூஉ மாய்த்துசம தக்கி னித்தன்
சிரணிந்த பரசுரா மப்பே ரண்ணல்
திருவடியைக் குருவடிவா யிறைஞ்சு வாமால்.

சந்திரகுலத் தோன்றலாகிய காதிமகாராசன், தன் புதல்வியா கிய சத்தியவதியென்னுங் கன்னிகையை, வேதசாத்திர புராணேதி காசங்களிற் றேர்ந்த இருசிகமாமுனிவருக்குக் கொடுத்து மணம்புரி வித்து மகிழ்ச்சியடைந்தான். அதுகாலையில் காதிமனைவியும், தன் புதல்வியாகிய சத்தியவதியும் தவசிரேட்டராகிய இருசிகமாமுனி வரை நோக்கி, "எங்களிருவருக்கும் மகப்பே றளிக்கவேண்டு" மென வேண்டிக்கொண்டு இறைஞ்சிநிற்க, முனிவர் இரண்டு மந்தி ரத்தினால் உபயருக்கும் புத்திரப்பேருண்டாகும்படி அருளி, அதில் சாந்த குணத்தினையுடைய ஒரு பிள்ளையும், இராசச குணமுடைய ஒரு பிள்ளையும் உதிக்குமென்று சொல்லித், தீர்த்தயாத்திரைசெய்யச் சென்றார். அந்தப்படியே காதியின் மனைவியும் அவள் புதல்வியும் மந்திர விதியின்படி அதுஷ்டித்தவர, அப்போது காதியின் மனை யாள் சாத்துவிக குணத்தினைப் பொருந்திய கருவை யடைந்தாள். இருசிகமாமுனியின் மனைவி சத்தியவதி இராசச குணத்தினையுடைய கருவைத் தரித்தாள். இப்படிக்கிருக்க, தீர்த்தயாத்திரைச்செய்து அம்முனிவர் வந்து இதனையறிந்து மனைவியை நோக்கி, "அடி

பெண்ணே! நினது அன்னை வேதத்திற் சொல்லிய நெறியை யடையும்படியான புதல்வனைப் பெறுவாள்; நீயோ கொடூரமாகிய குணத்தினையுடைய பிள்ளையைப் பெறுவா" யெனச் சொல்லக்கேட்டு, சத்தியவதி மனைவியாகுலமடைந்து, "தவத்திற் சிறந்த முனிவராகிய உமக்குப் பிறக்கும் புதல்வன் சாந்தகுணத்தைப் பெறுமல் கொடூரமாகிய கெட்ட குணத்தை அடைவது நீதியோ" வென்று வாட்டமடைந்திருக்கும் மங்கையை நோக்கி, அம்முனிவர் சொல்லுகிறார்.

"கோளாய் பெண்ணே! உனக்கேன் மனைவியாகுலமும் முகவாட்டமும் நேரிட்டது? இதற்குக்காரணம் கொடூரகுணமுடைய பிள்ளை யுதிப்பானென்று யான் சொல்லியபடியினல்லவோ உனக்கு இக்கவலையுண்டாகியது? இந்த சிந்தனையை விட்டுவிடு; உனக்குச் சாந்தம் தயை முதலாகிய நற்குணங்கள் வாய்ந்த சற்புத்திரனுதிக்கக் கடவன்! அன்றியும், உனக்குப் பிறக்கும் புதல்வன் உலகம் யாவும் நடுங்கத்தக்க காத்திரதேகத்தைப் பொருந்திக் கீர்த்தியையடைவா" னென்று இருகிகமகாமுனிவன் இயம்பக்கேட்டு, சத்தியவதி மிகவும் சந்தோஷமடைந்திருந்தாள். அக்காலத்தில் காதியின் மனைவி அழகிற் சிறந்த புதல்வனைப்பெற்றாள். அச்சிறுவனுக்குக் கௌசிகனெனும் பெயரிட்டு வளர்த்து சகல கலைகளையும் ஓதுவிக்க, அதனல் தெளிவடைந்து தவஞ்செய்ய முயன்று, தனக்குநிகர் ஒருவருமில்லையென்று சொல்லும்படி பஞ்சாக்கினி நடுவிலிருந்து தவமியற்றி மகாமகிமை பொருந்திய விசுவாமித்திரரென்று இரண்டாவது பெயர் வகித்து நற்கீர்த்தியடைந்திருந்தார்.

அதன்பின்பு, இருசிக மாமுனிவர் மனையாளாகிய சத்தியவதி ஒருமகவைப் பெற்றாள். அச்சிறுவனுக்குச் சமதக்கினியெனப் பெயரிட்டுத், தகுந்தகாலத்தில் சௌளம் உபநயன முதலாகிய நற்கருமங்கள் யாவும் முடித்துக், கல்வியிற் பயிற்சியடையச்செய்து, இரேணுகை யென்னும் கன்னிகையை மணம்புரிந்தார்கள். சமதக்கினியும் இரேணுகையைக்கூடி, தருமமார்பனென்றும், சுமதனென்றும் இரண்டு பிள்ளைகளைப் பெற்று, தவசீலர்கள் யாவரும் சந்தோஷிக்க வேதவிதிப்படி அச்சிறுவர்களுக்கு நல்லகாள் பார்த்துச் சாதகம், சௌளம், உபநயனம் முதலான நற்கருமங்கள் நடத்தி கல்வியிற் றேர்ச்சியடையச்செய்து, சமதக்கினிமுனிவர் சந்தோஷத்துடனிருக்கிறகாளில், பூவுலகத்தினில் அரசருங் கொடியவசுரரும் அதருமமார்க்

கங்கள் நடத்திவருவதால், புண்ணியங்குறைந்து பாவம் மேலிட்டபடியால், பூமாது பரதவித்துப் பூமிபாரஞ் சுமக்கமாட்டாது பகவானைக் குறித்து முறையிட்டுக் கதறியழுது புலம்புகிறதைக்கேட்டு, சாட்சாத் பகவான் இரேணுகைவயற்றி லுதித்தும், பரசுராமனெனப் பேர்வகித்தும், சாதகம், சௌளம், உபநயன முதலானவை சமதக்கினிமுனிவர் நடாத்தி, கல்வியிற் றேர்ச்சியடையச்செய்து வருகிறகாலத்தில், பதிவிரதையாகிய இரேணுகை வழக்கப்படி ஒருநாள் நதிக்குச்சென்று ஸ்நானஞ் செய்துக்கொண் டிருக்கிறபோது, ஆகாயமார்க்கமாய் கந்தருவனொருவன் தன் பத்தினியோடுசெல்ல, அவனிழலானீது சலத்திற்றோன்ற, அதைக் கண்டு இரேணுகாதேவி பிரமித்து, 'இப்படிப்பட்ட புருடன்கூட உலகத்திலிருக்கிறனே' வென்று தனக்குத்தானே ஆச்சரியமடைந்துக் கரையேறி மணலிச்சேர்த்து பாண்ட மாகாததால், மனக்கவலையடைந்து இதற்கு நானென்ன செய்வேன்? இது வென்ன மாயமோ தெரியவில்லையே! முனிவர் பூசைவேளையுந் தப்பிப் போகிறதே! நாயகன் என்ன கோபிப்பாரோவென்றுப் பலவாறு சிந்தித்துக் கொண்டே வந்து சமதக்கினி மாமுனிவர் திருவடியில் விழுந்து, சரணாகதியடைந்து, நடந்த உண்மையைச் சொன்னாள். இதைக்கேட்ட சமதக்கினிமாமுனிவரும் தன்னுடைய யோகதிருஷ்டியினால் நடந்த விதங்களையறிந்து, "அடி பெண்ணே! கற்புடைய மாதரசிபோல் அபிநயித்து இங்குவந்து சேர்ந்தாய்! என்னுடைய பூசையைக் கெடுத்ததுமன்றி, நீயும் ஆகாயமார்க்கமாய்ச் சென்ற கந்திருவனைச் சலத்தில் பிரதிபிம்பத்திற் கண்டு ஆசைப்பட்டு, பதிவிரதாதருமங் கெட்டு, விபசாரியாளையென்று விடங்கக்கிய சருப்பத்தைப்போலச் சீறி வெகுண்டுகோபங்கொண்டு, மூத்தகுமாரர்களிருவரையும் நோக்கி, நீங்கள் இவளைக் கொண்டுபோய் இரண்டு துண்டாய் வெட்டி யெறியுங்களென்று கட்டளையிட்டார். அவர்கள் தந்தையின் சொல்லைக்கேளாமல் மறுத்தார்கள். உடனே சமதக்கினி மாமுனிவர் பரசுராமரை நோக்கி, இம் மூவர்களையும் வெட்டி யெறிந்து வரக்கடவாயென்று ஆக்கியாபிக்க, பரசுராமர் தந்தையின் சொற்படி தமையன்மா ரிருவர்களையும், தாயையும்வெட்டி யெறிந்து தந்தையினிடம் வந்து சேர்ந்தார். அப்போது சமதக்கினிமாமுனிவர் பரசுராமர் விஷயத்தில் மெத்த சந்தோஷமடைந்து, அடா புத்திரசிகாமணியே! உனக்கென்ன வரம்வேண்டும்! கேள் தருகிறே' னெனப், பரசுராமர் தந்தையை நோக்கி, "ஐயா! யான் வேட்டி

யெறிந்த தமையன்மார் இருவரும் என் அன்னையும் உயிர்பெற்று வரும்படியான வரந்தர வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, "ஆப் படியே யாகுக" வென்று சமதக்கினி சொல்லிய மாத்திரத்தில், சிரங்கள் பொருந்தி மெய் துலங்க நித்திரையினின்றும் விழித்தவர் போல மூவருமெழுந்து வந்து சமதக்கினிமாமுனிவரைப் பணிந்து அவரனுமதியின்படி நடத்தி வந்தார்கள்.

. அக்காலத்தில் அரசர்களில் மேன்மைப்பட்டவனுகியும், தருமங் குன்றுமல் மநுநீதிப்படி அரசாண்டுவருபவனுகியும், அரிய தவத் தினுல் மிகுந்த வரங்களைப்பெற்றவனுகியும், ஆயிரங் கரங்களாற் சிறந்தவனுகியும் விளங்கும் கார்த்தவீரியார்ச்சுனனென்னும் வேந் தன் மிருக வேட்டையாடும்பொருட்டு இரதகசதுரக பதாதிகளாகிய நால்வகைச்சேனைகள் புடைசூழ நாட்டைவிட்டுப் புறப்பட்டுக்காட்டை யடைந்து முனிவரைக்கண்டு வணங்கி வினயமாகத் துதிசெய்ய; சமதக்கினிமாமுனிவர் கார்த்தவீரியார்ச்சுனனை ஆதரித்து ஆசிகள் கூறி இருக்கச்செய்து, பல வேதமொழிகளைக் கூறி உண்ணும் வேளை யாயிற்றென்று கருதி காமதேனுவையழைத்து வேந்தன் முதல் அனைவரும் அருந்தும்படி அன்னம் பரிமாறக் கட்டளையிட, அந்தப் படியே காமதேனுவானது கார்த்தவீரியனுக்கும், அவனுடைய சேனை அனைத்தினுக்கும் பொற்கலங்களில் அறுசுவை யன்னமுடன் பலகார வகைகளையும் அளித்துப் புசிக்கச்செய்து, சந்தன புட்ப தாம்பூலாதி களை உதவக்கண்ட கார்த்தவீரியார்ச்சுனன் சமதக்கினிமாமுனிவரை நோக்கிச் சொல்லலுற்றன்.

மும்மலங்கள் அகற்றி ஐம்பொறி அடக்கி முதல்வனைத் துதிக் கும் தவசிரேட்டரே! எங்களனைவருக்கும் அமுதுபடைத்த காம தேனுவை எனக்களித்தால் மெத்த நன்மையாக இருக்குமென்று சொல்ல, சமதக்கினிமாமுனிவர் கொடேனென்று மறுக்கக், கார்த்த வீரியார்ச்சுனன் அக்காமதேனுவைப் பிடித்துக்கொண்டு நால்வகைச் சேனைகளுடன் நாட்டுக்குப்போவதைப் பரசுராமர் கண்டு, கோபங் கொண்டு பரசு என்னும் ஆயுதத்தினுல் அவன் சேனைகளை யெல்லாம் வெட்டியபோது அதிலிருந்து பெருகிய இரத்தமானது கடலைப் போலப் பரவ, நிமைப்பொழுதில் பதினேழக்குரோணி சேனைகளும் மடிந்து குறைத்தலை யெழுந்து கூத்தாடுவதையுங் கண்ட கார்த்த வீரியன் கண்களிரண்டிலும் நெருப்புப்பொரிகள் பறக்கக் கனன்

றைழுந்தபோது, ஏழு கடல்களுங்கலங்க மேருகிரிபோற் பாய்ந்து பரசுராமரை எதிர்த்து பிரமாத்திரம், பாசுபதாத்திரம், நாராயணாத்திரம் முதலாகிய அதிக தீட்சண்ணியமான அநேக பாணங்களைப் பிரயோகஞ் செய்தான். அவற்றை யெல்லாம் பரசுராமர் தமது மழுவாயுதத்தினாற் றுணித்து வாழைவனத்தைக் கழிப்பதுபோல அவன் கரங்கள் ஆயிரத்தையுங்களைந்து, சிரத்தையும் வெட்டி யெறிந்தார். அப்போது கார்த்தவீரியன் சுதர்கள் பயந்துப் பரசுராமரை வணங்கிச் சொல்லுதற்கரிய காமதேனுவைக் கொடுக்க, அதைப் பெற்றுக்கொண்ட பரசுராமர் தனக்குண்டாகிய கோபத்தணிந்து தந்தையின் ஆசிரமஞ் சேர்ந்தார். பின்பு கார்த்தவீரியன் சுதர்கள் ஆயிரம்பேர்களுந் தங்கள் நகரஞ் சேர்ந்திருந்தார்கள்.

இங்கே பரசுராமன் தன் தந்தையை வணங்கிக் கார்த்தவீரியனுடன் சேனைகளெல்லாம் மடித்தவிவரத்தை அறிவிக்க, சமதக்கினி முனிவர் மனங்கசைந்து "அடாசுதனே! ஒரு அரசனை வதை செய்தபடியால், உனக்குப் பாவம் சேர்ந்திருக்கிறது. அப்பாவத்தைப் போக்கும் நிமித்தம் ஒருவருடகாலம் தீர்த்தயாத்திரை செய்து வரக்கடவா" யென்று கூற, அந்தப்படியே சென்று நிரிபதை, யமுனை, கவுதமி, சரசுவதி, பம்பை, காவேரி, கன்னியாகுமரி முதலாகிய திவ்விய நதிகளில் மூழ்கிக்கொண்டு வருடமுடிவை யறிந்து வனத்தில் வசித்திருக்கிற காலத்தில், கார்த்தவீரியன் சுதர்கள் ஆயிரம்பேர்களும் பரசுராமன் தீர்த்தயாத்திரை செய்யப்போயிருப்பதை யறிந்து, இது நல்ல சமயமென்றுணர்ந்து வந்து, சமதக்கினிமுனிவர் சிரத்தைக் கொய்துபோக, இதையறிந்த இரேணுகை விபாகூல மடைந்து, ராமா! சீக்கிரம் வரவேண்டுமென்று அழுதாள். அப்போது பரமராமர் சுப்பிரமணியக் கடவுளைப்போலே அங்கு வந்து, சிரமறுபட்டு உயிர் நீங்கிய தந்தையைக்கண்டு விசனப்பட்டு அழுது முடிவில் ஒருவருத்தேறி, அன்னைக்குப் பல நீதிகளை போதித்துத் தேற்றிச் சொல்லுகிறார்:—

"ஓ அம்மணீ! இம்பூமியாளும் வேந்தர்கள் குலத்தை மூவேழு தலைமுறைவரைக்குங் கொன்று என் தந்தைக்குப் பிரேத சமத்காரம் முடிப்பே" னென்று சபதஞ்செய்து, அங்கே நின்றும் வைராக்கிய சீலனைப் புறப்பட்டுக் கார்த்தவீரியன் நாட்டை யடைந்து அவன் புதல்வர்கள் ஆயிரம்பேர்களையும் மழுவாயுதத்தினால் வெட்டியெறிந்து,

அதைவிட்டு நடந்து, அவனியையாளும் அரசர்கள் குலம் இருபத் தொரு தலை முறையையுங் கொன்று, அவர்கள் உதிரத்தைச் சுமந்து பஞ்சகமடுவிற் சேர்த்துத் தந்தையின் தேகத்தைச் சுமந்து வந்து, அக்கினியிற் கிடைத்திச் சடங்குகள் நடத்தி உதிரமடுவில் மூழ்கி, அந்த உதிரத்தில் எள்ளைக்கூட்டித் தருப்பணங் கொடுத்து முடித்து பின்பு, சிரார்த்தங் கொடுக்கவேண்டிக் காசிப முனிவரை நோக்கி, மாமுனிவரே! இச்சிரார்த்தப் பொருள்க ளனைத்தையுங் கைக் கொள்ளு மென்று வேண்ட, காசிபர் "யான் பெற்றுக்கொள்ள மாட்டேன்" னென்று அவமதிப்புசெய்தபடியால், பரசுராமர் கோபங் கொண்டு, காசிபரைப்பார்த்து, "நீர் ஒரு இமைப்பொழுதும் நான் ஆளும்படியான இப்பூமியிலிருக்கக்கூடாது; இதைவிட்டெங்காகிலும் போ" மென்றனன்; அதைக்கேட்டுக் காசிபர் அதி விரைவினிற் பூமியிலுள்ள நகரங்களோறும் கடந்து மனிதசஞ்சாரமில்லாத பருவ தத்தில் வசித்திருந்தார். அவ்விடத்திற்குப் பரசுராமர் சென்று காசி பரைக்கண்டு, ஓ மகான்மாவே! இப்புவிமீது உயர்ந்த இம்மலையின் மீது வசிப்பதோ? ஞாயமோ? வெனக் கேட்க, தருமத்திற் சிறந்த காசிபர் அம்மலையைவிட்டு மேரு பருவதத்திற்குப் போயிருந்தார். பின்னும், பரசுராமன் அங்கேசென்று காசிபரைக் கண்டு பணிந்து சொல்லுகிறான்:—

கேளும் நிகரில்லாத முனிவரே! என்னைப் பெற்ற பிதாவுக்குச் செய்த சிரார்த்த வத்துக்களைக்கொள்ளாமல் என்னை அவமதித்து வந்து இப்பருவதத்தின்மீதிருப்பது தருமமேயானாலும், புவியின் மீதிருப்ப தில்லையென்று நவின்றுவந்து என்னுளுகைக் குட்படாத ஞாலமெதுமோ; அங்குபோய் அமர்ந்திரும். மேலும், எனது காவ லிற்பொருந்தாத அவனிதானுளதோ? கிடையாது; ஆகையால், சிரார்த்த வத்துக்களைப் பெற்றுக்கொண்டு உமக்கிஷ்டமான இடத்தில் சுகித்திரும்; அதைக் கைக்கொள்ளாவிடில், என்னுடைய நாட்டினி லிருக்கத்தகாதென்று சொல்ல, காசிபர் அதைக்கேட்டு, அப்பருவ தத்தையும்விட்டு அப்புறம் உத்தரதிசையை நாடிச்சென்று, அங்கு ஒரு காட்டில் அமர்ந்திருக்கிறகாளில், படிக நிறமுடைய ஆண்கபோ தம் ஓர் பேடையை அடைந்திட ஆசையுற்று கிட்டியபோது, பெண் கபோதம், ஐயா! என்னுடைய நாயகன் சுகத்துடனிருக்கும்போது நீதிதப்பி யென்னைப் புணரவருவது தருமமோ? வென்று சொல்லக்

கேட்டு, ஆண்கபோதம் எனது பராக்கிரமத்தினால் உன்னை யான் பிடித்துப் புணர்ச்சிசெய்தால் உன்னுடைய நாயகன்வந்து என்னை யென்செயக்கூடுமென்று சொல்லப், பெண்கபோதம் இப்புவியின் மீது அரசர் 'குலத்தை கருவறுத்த பரசுராமர் கையாழிவந்துவிடு, மெனப் பகர, உடனே ஆண்கபோதம் பெண்கபோதத்தைப்பற்றிய மாத்திரத்தில் சக்கரம்வந்து ஆண்கபோதத்தின் சிரத்தை அறுத்து விட்டது; இதனை யங்கு வசித்திருந்த காசிபமுனிவர் கண்டு, பரசு ராமர் ஆக்ஞைக் குட்படாத பூமி யில்லையென்று உணர்ந்து, பரசு ராமன் முன்சென்று, நின்னாக்ஞைக்குட்படாத அவனியெங்குமில்லை. ஆகையால், நின் பிதாவின் சிரார்த்தத்திற் குற்ற வத்துக்களைத் தாருமென்று சொன்னக் காசிபர் வசனத்தைக் கேட்டுப், பரசு ராமன் களிப்படைந்து, பலவிதமாய்க் காசிபரைத் துதித்து, பிதா வின் சிரார்த்த வத்துக்களையெல்லாந் தருவித்து காசிபர் முன்னம் வைத்து, பத்தி பூர்வமாய் வணங்கி, "ஓ சுவாமி இவ்வத்துக்களைக் கைக்கொண்டு இன்னமும் ஏதாகிலும் வேண்டியிருந்தால், கேளும் தருகிறேனென்று சொன்ன பரசுராமரை நோக்கிக், காசிபர் சொல்லுகின்றார், "ஓ ஐயா! சிரார்த்தத்திற்குத் தட்சணையாக நினது காவலுக்குட்பட்ட காசினி முழுமையுங் கொடு" மெனப், பரசு ராமன் அந்தப்படியே கொடுக்கப்பெற்றார்.

அப்போது ஆகாயத்தில் வசிட்டர் கவுதமர் முதலிய சத்த இருடிகள் கூட்டத்தில் அமர்ந்திருக்கும் தந்தையைக்கண்டு சந்தோ டத்தை யடைந்திருக்கும் பரசுராமனை நோக்கிக், காசிபர், "ஐயா பூதானங்கொடுத்த புண்ணியவானே! நீ இத்தப் பூமியிலெங்கும் சஞ் சரிக்கக்கூடாது; வேறெங்கேயாகிலுஞ்சென்று வாசஞ்செய்யென்று சொல்லிய உடனே, பரசுராமன் தனக்கு நிற்க நிழலில்லாததால், மிகவுஞ் சங்கடமடைந்து கடல்சூழ்ந்த நாடுகள் காடுகள் கணக்கில் லாத பருவதங்களிலெல்லாம் அமர்ந்திருக்க, காசிபர் அவ்விடங்கள் தோறுஞ் சென்று தடுக்கப், பரசுராமன் தளர்ந்து உளம்வாடி வருணன் முன்சென்று, "என் மழுவாயுதத்தை எறிகிறேன். அது எத்தனை தூரம் போய்விழுகிறதோ அத்தனைதூரம் பூமியை எனக்குக் கொடு" வென, அத்திற்கு வருணன், "அப்படியே கொடுக்கிறே" னென் றிசைந்தவுடன், பரசுராமன் மழுவாயுதத்தை விட்டெறிந்த மாத் திரத்தில், அதுபோய் விழுந்த இடத்தைப் பார்க்கவ குலத்தோன்

வந்து பார்க்குமுன்னமே, வித்தர்கள் எறிந்தார்கள். உடனே வருணன் அம் மழுவாயுதம் விழுந்த நாற்பதுயோசனை நீளமாகிய பூமியைப் பரசுராமருக்குக் கொடுக்க, அது மலையாளப் பெயரினையுடைய சகியநற் பருவதமாக நிகழ்ந்தது. அதில் பரசுராமர் அமர்ந்தார்.

இராமாவதாரம்

துதி

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பொன்னுடும் புகழுமயோத்தி யின்மூ வைப்பும்
புரக்கவரு தசரதமன் னவனற் பேரு
யெங்நாடுங் காத்திரா வணனு ராவிக்
கினியமருந் தாயெம்மைப் புரக்கு மன்பாய்
மன்னிரா மேச்சுரத்தி லருச்சித் தேத்தி
வாழ்வுற்ற மாதவனை முகுந்தன் றன்னை
பன்னிரா மப்பேரெம் பரனை மாலைப்
பண்ணவனைக் கண்ணனையாம் பரவு வாமால்.

அசனெனுமரசன் அழகிய இந்து மதியினைக்கூடித் தசரதனைப் பெற்றான். அத் தசரத சக்கரவர்த்தி சுமந்திரனை மந்திரியாகப் பெற்று, கோசலை, கைகேசி, சுமத்திரையாகிய மூன்று மனைவிகளுடன் கூடி சத்தியம், பொறுமை, தயை, சாந்த முதலிய நற்குணங்களை யுடையவனாய், மதுநீதிக்கிணங்கி, தான தருமங்களை இடைவிடாமற் செய்து, சாம பேத தான தண்டமெனும் சதுர்வித உபாயங்களால் அயோத்திமா நகரை அறுபதினாயிரம் வருடம் ஆண்டு வருங்காலத்தில், மகப்பேறில்லாமல் வியாகூலமடைந்து, குலகுருவாகிய வசிட்டரைப் பணிந்து, தன் மனதிலிருக்கும் புத்திரப்பேறில்லாக் குறையை விண்ணப்பஞ்செய்ய, வசிட்டர் அரசனுக்கு ஆசி கூறி, "அரசனே! விசனப்படவேண்டாம்; உனக்குப் புத்திரப்பேறுண்டாகும்படி ஒரு தந்திரஞ் சொல்லுகிறேன்; அந்தப்படி நீ செய்வாயாகில், அவசிய முனக்குப் புத்திர வியாகூலம் நிவர்த்தியாகு" மென்றார். அதென்னவெனில், விபுண்டகமாமுனிவர் புதல்வராகிய கலிக்கோட்டுமாமுனிவரை வரவழைத்து அவரைக் கொண்டு புத்திரகாமேட்டியாகஞ் செய்விப்பையாகில், நின் மனத்து உதித்த புத்திரக்கவலை நீங்கு மென்பதைக்கேட்டு சந்தோஷவசத்த

ராகி, கலிக்கோட்டு மாமுனிவரை வரவழைக்கும் பொருட்டு சுமந்திர ருடன் சில சைன்யங்களை அனுப்பிவிட்டு, யாகத்துக்கு வேண்டிய சாமக்கிரியங்களைச் சேகரித்துச் சித்தப்படுத்தி வைத்து முனிவர் வரவுக் கெதிர்பார்த்திருந்தார்.

அங்கே சுமந்திரர் சென்று ரோமபாத மகாராசன் கொலுக் கூடத்தில் எழுந்தருளியிருக்கும் கலிக்கோட்டு மாமுனிவரைக் கண்டு வினயத்துடன் வணங்கி தெண்டனிட்டு, தசரத சக்கிரவர்த்தியின் வேண்டுகோளை யறிவித்து; சுவாமி! அவசியம் தேவரீர் அயோத் திமா நகரத்திற் கெழுந்தருள வேண்டுமென்றுப் பிரார்த்திக்க, அதற் குக் கலிக்கோட்டு மாமுனிவர் சம்மதிக்க, நவரத்தினங்களிழைத்த சிவிகையின்மேல் அவரை யேத்திக்கொண்டு, சுமந்திரரானவர் அயோத்திமா நகரத்தின் அருகிலிருக்கும் சோலையில் முனிவருடன் தங்கி, சில வேவுக்காரர்களால் முனிவர் வரவை அரசனுக்குத் தெரி விக்க, சக்கிரவர்த்தியும் அதனையறிந்து உடனே சகல சேனைகளும் புடைசூழ சோலையினிடத்திற்கு வந்து, முனிவரைக்கண்டு வணங் கிப் பலவிதமாய்த் துதிக்க, முனிவர் சக்கிரவர்த்திக்கு ஆசிகள் கூறிப், பிரியமாகச் சிலதருமங்கள் வசனித்துப் பின்பு சோலையை விட்டுச் சக்கிரவர்த்தியுடன் அயோத்திமா நகரத்தையடைந்து யாகத்தைத் தொடங்கி, மந்திராலோபம், கிரியாலோபமின்றி யாகத்தை நடத்து கிறபோது, தேவேந்திராதிதேவர்களுடன் பிரமதேவன் பாற்கடலுக் குச் சென்று, அரவணைமேற் றுயில்கின்ற எம்பெருமானைப் பலவித மாகத் துதிசெய்ய, அன்பர்க்கெளியனாகிய விஷ்ணு, தேவர்களுடன் துதிசெய்யும் பிரமதேவன் முறையைக்கேட்டு, அவரை யன்புட னழைத்து, "உங்களுக்குற்ற குறையென்ன" அதைச் சொல்லு மெனப், பிரமதேவன் சொல்லுகின்றான்:—

"கேளும் எனையீன்ற தந்தையே! அடியேன் வயிற்றிலுதித்த புலத்தியன்றன் புதல்வனாகிய விச்சிரவனுக்கும், சுமாலி புதல்வியாகிய கைகேசிக்கும் பிறந்த இராவணனவன் முனிவர்கள் தேவர்கள் முதலானோரையும் மிகவும் இம்சைசெய்கிறான். இதனால் அவர்கள் மெலிந்து நலிந்து மேனிகுலைந்து பயந்து வாட்டமடைந்து, சிங்க சொப்பனங்கண்ட யானைகளைப்போல நடுநடுங்கி, ஒளித்துக் கொண் டிருக்கிறார்கள்; மேலும், இந்திரனைச் சிறைபடுத்தினான்; சூரியன் இரதத்தை இலங்கையின்வழிப் போகவொட்டாமற் சாய்ந்துபோகும்

படி கட்டளையிட்டிருக்கிறான். சந்திரன் வருணன் முதலானோரை வேலைக்கமர்த்திக் கொண்டான். தேவஸ்திரீகளை அடிமைவேலை செய்ய நியமித்துக்கொண்டான். ஆகையால், அவனைத் தரிதமாகச் சங்கரித்து, யாகம், யோகம், தவம், தானம், தருமம் முதலானவைகளும் தவறுதலின்றி நடக்கும்படிச்செய்து, தருமத்தை நிலைநாட்டி எங்களைக் காக்கவேண்டு" மென்று மிகவும் வினயமாய் நயந்து வேண்டிக்கொள்ள, அதற்குப் பகவான் பிரமதேவனை நோக்கிச் சொல்லுகின்றான்.

"தேளாய் பிரமனே! நிசிசரர்க்கிறைவனாகி அதன்மவழி நடக்கும் அந்த இராவணன் தன் புத்திரமித்திர களத்திராதிகளாகிய இராக்கத குலத்தை வேருடன் களையும்பொருட்டு ஆதிசேடனும் சங்குசக்கிரமும் யானும் மனித அவதாரமெடுக்கும் நிமித்தம் அயோத்திமா நகரத்தையாளும் தசரதசக்கிரவர்த்திக்குத் தனையர்களாய்ப் பிறக்கப்போகிறோம்" மென்று சொல்லி பகவான் மறைந்து போயினர். உடனே பிரமன் தேவர்களை நோக்கி இதுமுதல் நீங்களனைவரும் விரைவாகக் காட்டிற்குச் சென்று கவிக்கூட்டங்களாய் அவதாரஞ்செய்யுங்களென்று சொல்லிப் போயினன். அந்தப்படியே தேவர்களும் மற்ற யாவரும் பிரமதேவனும் ஆரணியத்திற்சென்று கவிகளாய் அவதரித்து விருத்தியடைந்துகொண்டிருந்தார்கள். இங்கே பகவான் அயோத்திமா நகரத்திற்குச்சென்று யாககுண்டத்தில் பாயசரூபமாகியிருந்தார்; யாகம்முடிந்தவுடன் அந்த யாககுண்டத்திலிருந்து ஒரு திவ்வியபுருடன் பாயாசம் நிரப்பிய பாத்திரத்துடன் வெளியில்வந்து அப்பாயசத்தைத் தசரதமகாராஜன் கரத்திற் கொடுத்தான்.

அதைப் பெற்றுக்கொண்ட சக்கிரவர்த்தி கோசலை, கைகேயி, சுமித்திரை இம்மூவருக்கும் பகுந்துகொடுத்தார். அதைப் புசித்த மூவரும் கருப்பம் அடைந்து பத்துமாதமும் நிறைந்து கோசலை பெற்ற பிள்ளைக்கு 'இராம' னென்றும்; கைகேயி பெற்ற பிள்ளைக்குப் 'பரத' னென்றும்; சுமித்திரை பெற்ற பிள்ளைகளிரண்டில் ஒருவனுக்கு 'இலக்குமண' னென்றும்; மற்றொருவனுக்குச் 'சத்துருக்க' னென்றும் திருநாமங்களிட்டு, மிகவுஞ் செல்வமாக நாளுக்குநாள் வளர்த்து வந்தார்கள். ஐந்து வயதாகவே அன்னப் பிராசனம், சௌளம், உபநயன முதலியவைகளை முடித்து வேத

சாத்திர புராண இதிகாசங்களிற் றேர்ச்சிபெறச்செய்து, இன்ப மிகுந்த அன்புடன் போற்றிவருங்காலத்தில் ஓர்நாள், காவிகாம்பர தண்டுகமண்டலதாரியாகிய விசுவாமித்திர மாமுனிவர் தசரதன் சபைக்கெழுந்தருளி, 'இராமனைத் தாரு' மென்று கேட்க, அதற்குத் தசரதன் 'யான் வந்து தங்கள் யாகத்துக் கிடையூறு செய்யும் அரக்கர்களை வதை செய்கிறேன்.' பதினாறு வயதுடைய பாலனை இராமனுக்கு வில்லெப்பிடிக்குந் திறம் நன்றாய்த் தெரியமாட்டாது. ஆதலால், அவனை யனுப்பமாட்டேனென்று மறுத்திடக், கவுசிகர் வெகுண்டுசீறி, இராமனுடைய வீரப்பிரதாபத்தை நீயறியமாட்டாய்; எனக்கு விரோதியும், நின் குலத்திற்குக் குருவுமாகி விளங்கும் வசிட்டமாமுனிவரைக் கேட்டால் தெரியும். ஆகையால், அவரைக் கேட்டாகிலும் அறிந்துகொள்ளும் என்ற கவுசிகர் மொழியைக் கேளாமல் இராமன்மேலிருக்கும் அன்பினால் 'அனுப்பமாட்டே' னென்று மொழிந்த தசரதன்மீது அதிக சினங்கொண்டவராகித் தூஷணை வார்த்தைகளைவிண்டு சபையைவிட்டு நீங்கிப்போயினர். அதைக்கண்ட தசரதன் தன் குருவாகிய வசிட்டருக்குத் தெரிவிக்க, அவர் யோசித்துச் சொல்லிய நியமனப்படி விசுவாமித்திரரை வர வழைத்து, அவரிடத்திற்றூன்புரிந்த அபசாரத்திற்காக இராமருடன் இலக்குமணரையுங் கூட்டி அவருடன் அனுப்பினன். அவர்களை அழைத்துக்கொண்டு அதிக மகிழ்ச்சியுடன் கவுசிகர் முன்னும் இராமன் பின்னும் இராமனுக்குப்பின் இலக்குமணனுமாகப் போயினர்; சுகுமாரமானதேகத்தைப் பெற்றவர்களானதால், சூரியனால் வெப்பமும், கால்கள்நோயும், பசிதாகமும் சேரிடாதிருக்கும்படி பலா அதிபலாயென்ற இரண்டு மந்திரத்தை அவ் விருவர்களுக்கும் முனிவர் ஓதி அழைத்துக்கொண்டு போகிறபோது மார்க்கத்தில் இருண்ட வன மொன்றைக்கண்டு இராமர் கவுசிகரைநோக்கி, "ஓ சுவாமி! இவ்வனமானது யாருடையது? இது இருள்சூழ்ந்து இருக்கவேண்டிய காரணம் என்ன? இது சொல்லவேண்டு" மென்று வினவ, இராமரை நோக்கிக் கவுசிகர் சொல்லுகிறார்.

"சூரியகுலத்தை விளக்கவந்து தோன்றிய இராமா கேளாய்! இவ்வனமானது தாடகையென்னும் அரக்கியும், அவள் புதல்வர்களாகிய மாரீசன், சுபாகுயென்னும் அரக்கரும் வசிக்கும் வனம்; அந்த அரக்கியின் தேகமானது மைநிறமாயிருப்பதால், அச்சாயை

யிலுல் இவ்வனம் முழுதும் இருள் சூழ்ந்துக்கொண்டிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில், ஒருவர் முகம் ஒருவருக்குக் காணப்படாமற்போயிற்று. அப்போது இராமன் கவுசிகரைப்பார்த்து, 'ஓ சுவாமி! இருந்தாற்போலிருந்து இங்கு அதிக இருள் கவ்விக்கொண்டதை யோசிக்கில் இது மெத்த ஆச்சரியமாகவிருக்கிறதே' யென, அதற்குக் கவுசிகர் இராமனைப் பார்த்து, "ஓ ராமா! அதோ பாராய்! பருவதாகாரமான தாடகையானவள் ஆகாயமார்க்கமாய் வருகிறுள்; அவள் வாரா முன்னமே நினது கோதண்டத்தை வளைத்து தீட்சண்ணியமான பாணத்தை வில்லிற் பூட்டிப் பிரயோகஞ்செய்து கொல்லு" என்றார். அதைக்கேட்ட இராமன் 'முதல் பெண்ணின்பேரில் அத்திரப் பிரயோகஞ்செய்வது தருமமல்லவே' யென்று யோசித்துக்கொண்டிருக்க, இதைக் கவுசிகர் குறிப்பினுலறிந்து, 'ஓ ராமா! இவளைப் பெண்ணென்று எள்ளளவும் யோசிக்கவேண்டாம்! இவ்வுலகின்கண் அநேகமாயிரம் உயிர்களைக் கொன்ற மாபாதகியாகுமிவள்; நீ பரிதாபங்கொள்ளவேண்டாம்! சமீபித்து இருள் வருமுன்னே அத்திரத்தைப் பிரயோகித்துக் கொன்றுவிடு' என்ற கவுசிகர் வார்த்தையைக் குரு மொழியாகக்கொண்டு பாணப்பிரயோகஞ்செய்து அவள் சிரசைக் கண்டித்து விட்டான். அதைக்கண்டு கவுசிகர் தேகம்புளகித்து இராமனை ஆலிங்கனஞ்செய்து கொண்டாடி அவ்விடத்தைவிட்டு நடந்து, தன் ஆச்சிரமத்தையடைந்து, யாகத்தைத் தொடங்கிய காலத்தில் மாரீசன் சுபாகுவென்னும் அரக்கர்களிருவரும் ஆகாய வீதியில் நின்று அல்பாசனம் செய்து மாமிசம் எலும்பு முதலானவைகளை யெறிந்தும், இப்படிப் பல விதங்களாகிய அக்கிரமங்களைச் செய்தும், யாகத்தை அழிக்க முயன்றிருப்பதை விசுவாமித்திரரால் சொல்லக்கேட்டு இராமன் சில பாணங்களைவிட்டு சுபாகுவைக் கொன்று மாரீசனை நெடுந்தூரத்திற் கொண்டுபோய்த் தள்ளும்படிச்செய்து, அந்த யாககுண்டத்தில் கொசுக்கூடப் பறவாமலிருக்கும்படி மிகு சாக்கிரதையாய்க் காத்திருந்தான்.

அப்போது யாகத்தை முடித்துக் கவுசிகர் மனக்களிப்படைந்து இராமலக்குமணர் இருவரும் அநேக சமுத்திர அஸ்திரங்களையும், அதற்கனுகூலமாகிய மந்திரங்களையும் போதிக்கப்பெற்று, அவ்வாச்சிரமத்தில்தானே அவ்விருவரும் இருக்கிறபோது, மிதிலை நக

ரத்திலிருந்து சில தூதர்கள் சுயம்வர ஓலையொன்று கொண்டுவந்து விசுவாமித்திரருக்குக் கொடுக்க, அவர் அவ்வோலைச்சுருளைக் கைப் பற்றிப் பிரித்து வாசித்து, சங்கதியை யுணர்ந்து, இராமனைப் பார்த்து, "என் கண்மணியாகிய ராமா! நான் மிதிலை யென்னும் நகரத்துக்குப் போகவேண்டியதாக விருக்கிறது. ஆதலால், நீயும் நின்தம்பியாகிய லக்குமணனும் அயோத்திமா நகரத்திற்குப் போயி ருங்கள்; திரும்பி வருங்காலத்தில் அப்படியே நான் அயோத்திக்கு வந்து உங்களைப்பார்க்கிறேன்" என்று சொல்ல, அதற்கு இராமன் "ஓ சுவாமி! அத்தச் சுயம்வரத்திற்குத் தங்களைமட்டிலுமா வரும்படி ஓலையில் வரைந்திருக்கிறது? தங்கள் சீடர்கள் சமேதராய் விச யஞ்செய்ய வேண்டுமென்று எழுதியிருக்கிறதே! அதைத் தாங்கள் கவனித்துப் பார்க்காமல், சீடர்களாகிய எங்களையுங்கூட அழைத்துப் போகாமல், அடியேங்கள்மீது கிருபையில்லாமல், அயோத்திக்குப் போகும்படி உரைப்பது தருமமோ? தங்களைவிட்டுப் பிரிய மனமில் லாத எங்களை எப்படி அநாதரவு செய்துவிட்டுப்போகத் தங்களுக்கு எப்படி மனத்திடம் முண்டாகியதோ?" என்றிவ்வண்ணம் பலவாறு தாபந்திரியப்படுகின்ற இராமனைப் பார்த்துக், கவுசிகருக்குக் கிருபை யுண்டாகி, இராமா! நீ துயரப்படவேண்டாம். உன்னிஷ்டப்படியே மிதிலைக்கு அழைத்துப் போகிறேன். சிந்தனை வேண்டாமென்று சொல் லித் தேற்றி, விஸ்வாமித்திரர் இராம லக்குமணர்களை அழைத்துக் கொண்டு மிதிலைமாநகரத்தை நோக்கிப் போகிறபோது, இராம னுடைய திருவடிகள் கல்லாயிருந்த அகலிகை சுயரூபம்பெற் றெழுந் திடக்கண்டு, கவுசிகரை நோக்கி, "ஓ சுவாமி! இப்பேருரு யாருடைய மனைவி? கல்லாயிருந்திடக் காரணமென்ன? இது சொல்லவேண்டு" மென்று வேண்டிக்கொண்ட இராமனை நோக்கி நடந்த சவித்தாரங் கள் யாவற்றையும் அறிவிக்கக்கேட்டு, இராமன் கௌதமரை வர வழைத்து, அகலிகையை யொப்பித்து, அவரால் சில ஆசிகளைப் பெற்று, கௌதமர் ஆச்சிரமத்தைக்கடந்த, சரயூநதியைத் தாண்டி மிதிலைமாநகரத்தை யடைந்து சனகமகாராசனால் பூசிக்கும்படியான சிவன் வில்லையொடித்துச் சானகியைத் திருமணம்புரிந்தான். ஊர் மீளலை லக்குமணன் வதுவைசெய்தான். குசத்துவசன் புதல்விக ளாகிய பாண்டவி சுருதகீர்த்தியென்னும் இரண்டு கன்னிகைகளைப் பரதனும் சத்துருக்கனும் மணம் புரிந்து சனகமகாராசனால் விடை தரப்பெற்று அயோத்திமாநகரத்தை நாடிவருகிற மார்க்கத்தில்,

பரசுராமன் எதிர்ப்பட அவனோடு யுத்தஞ்செய்து வென்று, அவனால் கொடுக்கப்பட்ட வில்லையும் தவப் பலனையும் பெற்றுக்கொண்டு அயோத்திமா நகரத்தைச்சேர்ந்து சீதையுடன் கூடிச் சுகித்திருக்கும் நாளில், ஓர்நாள் தசரதமகாராஜன் தன் குலகுருவாகிய வசிட்டரைப் பார்த்துச் சொல்லுகின்றான்.

"கேளும் எங்கள் குலதெய்வமே! யான் கானகமேவித் தவஞ் செய்து பரகதியடையும் மார்க்கத்தை விருப்பங்கொண்டபடியால், தருமம், நீதி, பலம் பராக்கிரமத்திற் சிறந்து நிகரில்லாத எனது சிரேட்டப் புதல்வனுகிய இராமனுக்குத் திருமுடிசூட்டவேணு" மென்ற தசரதன் இஷ்டப்படியே திருமுடிசூட்டும்படி வசிட்டமா முனிவர் நேமிக்கக்கேட்டு, அரசன் சந்தோடவாரியிற்படிந்து; அதற்கு வேண்டிய வத்துக்களையெல்லாம் சேகரித்துத் திருமுடிசூடும் பொருட்டு அந்தப்புரத்திலிருக்கும் இராமனைச் சுமந்திரரால் வர வழைத்து அபிடேகஞ் செய்விக்கத் தொடங்கியபோது, இந்த விருத் தாந்தம் யாவுங்கேட்டுக் கூனியானவள் கைகேசியினிடஞ் சென்று சொல்ல, கைகேசி அரசனிடஞ் சென்று, 'மன்னவரே! முன்ன மெனக்கு நீர் தருகிறேனென்று சொல்லிய வரங்களைத் தாரு" மென்றுப் பின்னுஞ் சொல்லுகிறுள். அதென்னவெனில், பரதன் நாடாளவும், இராமன் பதினான்கு வருடங் காடாளவும், இவ்விரண்டு வரத்தையுந் தாருமெனக் கேட்ட தசரதன் உயிர் நீங்கியதென் றியம் பும்படி மெய்சோர்ந்து நிலத்தில் வீழ்ந்தான். அந்த விதத்தைச் சுமந்திரரால் இராமனறிந்து மரவுரி தரித்துச் சீதையும் இலட்சுமண ரும் பின்வர நாட்டைவிட்டுக் காட்டையடைந்து, குகப்பெருமானுல் ஓடத்தின் மீதேறிவர நதியைக் கடந்து யானைகள் வாசஞ்செய்யும் வனத்திற்குச்சென்று பரத்துவாசர் ஆச்சிரமம் அடைந்து, அவர் மகிழவணங்கி விடைபெற்று, சித்திரக்கூட பருவதத்தை நாடிப் போயினன்.

சுமந்திரன் அயோத்திமாநகரைச் சேர்ந்து, தசரதமகாராசனைக் கண்டு, சானகி இலட்சுமணருடன் இராமர் சித்திரகூடபருவதத்தி லிருக்கிறார்களென்று சொல்லிய மொழியைக் கேட்டவுடன் தசரதன் உயிர்துறந்தான். இதைக்கண்டு வசிட்டமாமுனிவர் நடந்தவர்த்த மானங்களைக் கேகயநாட்டி லிருக்கும் பரதனுக்குச் சொல்லி உட னழைத்து வரும்படிச் சிலதூதர்களை யேவினர். அத்தூதர்கள்

சென்று பரதனைக்கண்டு, "நம்தமையனுகிய இராமருக்கு மகுடஞ் சூடுகிறதால் வாருமையா" வென்று சொல்ல, மிகவுமகிழ்ந்துப் பரதன் சத்துருக்கருடன் அயோத்திக்கு வந்து; தன் அன்னையால் தந்தைமாண்டதும், தமையன் வனத்திற் சேர்ந்ததுவுங் கேட்டுக், கொடியவளாகிய தாயை வைது அவ்விடம் விட்டுச்சென்று, மரித்துக்கிடக்குந் தந்தைக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளனைத்தையும் செய்துமுடித்துக் கலங்கிவாடுகின்ற பரதன்தன்னை வசிட்டர் தேற்றி, முடி சூடிக்கொண்டு நகரத்தை யாளுமென்று சொல்லக் கேட்டு, பரதன் மெய்நடுங்கி, "என் தமையனை யழைத்துவிந்து அவருக்கு முடிசூட்டி அவர்சொல்லும் ஏவலைக்கேட்டு நடப்பதே நீதி" யென்றுரைத்துத் தானுஞ் சடைமுடிதரித்து மரவுரியணிந்து நகரத்திலுள்ள சிலரும் வசிட்டரும் தன் பின்வரச்சென்று, குகன்விடும் ஓடத்திலேறிக் கங்கையைக்கடந்து, மலைகளுக்கு அரசாகத் தோன்றுஞ் சித்திரகூட பருவதத்தை நண்ணி, இராமரது நிகரில்லாத திருவடியில் விழுந்து அழுதுவாடிக், கொடிய பாவியாகிய அடியேனைப் பெற்ற அன்னை செய்த கொடுமையினால் உம்மைப்பிரிந்த விசனத்தினாலே நமது தந்தை மேலுலகை யடைந்தாரென்ற மாத்திரத்தில், இராமர் 'கோ' வென்று கதறியழுது புலம்பக்கேட்டு, வசிட்டர் தேற்றி இராமர் கைகளால் பிண்டமும் எள்ளுந்தண்ணீரும் விடச் செய்து, கருமகாரியங்களை முடித்தார். பின்பு பரதன் தந்தையை நற்கதியடையச் செய்வித்த இராமரை நோக்கி, "அண்ணா! தாங்கள் அயோத்திக்கெழுந்தருளிப் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளு" மென்று மிகவும் வேண்டிக்கொள்ளும் தம்பியாகிய பரதனை நோக்கித், "தம்பி பரதா! பதினான்கு வருடம் கானகத்திற்போக்கிய பின்பு யான் அயோத்திக்கு வருகிறே" னென்று சொல்லக்கேட்டு, பரதன் இராமரது பாதுகையைச் சிரசின்மேற் ஹாக்கிக்கொண்டு அயோத்திமாநகரத்திற் கிடையிலிருக்கும் நந்திக்கிராமம் சேர்ந்து பாதுகைக்கு மகுடஞ் சூட்டி வருடங்களைக் கணக்கிட்டுக்கொண்டிருந்தான்.

இங்கே இராமர் சித்திரகூட பருவதத்தைவிட்டுத் தம்பி இலட்சுமணர் முன்னும், சானகி பின்னும், அவளுக்குப்பின் தானுமாகப் போகிறபோது, மலைப்பாம்பினுருவங்கொண்டுலாவும் விராதனைக் கொன்று, அவன் மேன்மையாகிய கதியைச்சேர அருள் புரிந்து,

சரபங்கர் ஆச்சிரமம்சேர்ந்து, அவரையிணங்கி வணங்கி விடை பெற்றுச்சென்று, சுறுமுனிவரைக்கண்டு பணிந்து நிற்க, அவர் ஆசிகள் கூறிப் பலகணைகளும், தூணீரமும் அளிக்கக் கைக்கொண்டு, விடை தரப்பெற்று பஞ்சவடி தீரத்தையணுகி, சடாயுவைக்கண்டு சூக்ஷமம் வினவி, அந்தப் பஞ்சவடியிற் பன்னசாலை ஒன்றைத் தம்பியினுல் இயற்றி அங்குத் தங்கி யிருக்கும்போது, இந்திரன் புதல்வனுகிய சயந்தனென்பவன் சீதையின் வடிவத்தைக்கண்டு மயல்கொண்டு, காகரூபமாகியோர் மரத்தின்கிளையினில் இருந்து, சமயம் பார்த்துக் கிளையைவிட்டுக் கிளம்பி, சீதையின் தனத்தைக் கீறிவிட, இராமன் முனிந்து அங்கிருந்த ஓர் புல்லைக்கிள்ளி மந்திரத்தை யோதிவிட, அந்தப்பாணமானது காகாசூரனை விடாமற் பின்தொடர்ந்து உலகங்கள் யாவற்றையுந் திரிந்து அலைந்து, முடிவில் அவன் தன்னைச் சரணுகதியடைந்தமையால், சுத்தப்பிரம சொரூபியாகிய இராமர் கிருபாநோக்கம்வைத்து, அக்காக்கையின் ஒரு விழியைப்பிடுங்கி, ஒரு மணியிருபக்கமும் ஓடும்படி கடாட்சஞ் செய்திருந்தார். அது காலையில் சூர்ப்பநகையானவள் நிகரில்லா மோகினிவடிவங் கொண்டுவந்து, "என்னையணந்திடு' யென்று உரைசெய்யக்கேட்டு, இராமன் மறுத்திட, அவள் இலட்சுமணரைக்கிட்டி "என்னைக்கூடி யின்பநல்கு" மென, இலட்சுமணர் சினந்து அவள் நாசி செவி யிவைகளை அறுத்தெறிய, இரத்தம் பீறிட்டு ஓழுக அவள் கரனிடஞ்சென்று அழுது புலம்பி நடந்தவைகளெல்லாஞ் சொல்ல, அவன் அறிந்து வெகுண்டு தூஷணன் திரிசிரன் முதலாகிய பதினலாயிரம் வெண்கல ரதக்காரர்கள் புடைசூழ, யானை, குதிரை, இரதங்களுடன் புறப்பட்டுச்சென்று, இராமருடன் எதிர்த்து யுத்தஞ்செய்து இரத்த வெள்ளம் பெருகியோட, அதில் குறைத்தலைப் பிணங்களாட, அத்திர சத்திரங்களால் அறுபட்டுப் பூமியின்மேல் வீழ்ந்து மடியும்படிச்செய்து செயம் பெற்று இராமர் பன்னகசாலையைச் சேர்ந்து சீதையுடன் மகிழ்வா யிருந்தார்.

இதைக்கண்ட சூர்ப்பநகை மிகவும் பிரலாபித்துக்கொண்டே இலங்கையைச்சேர்ந்து, இராவணன் அடிகளிற்பணிந்து, "அண்ணு! நினக்குப் பழுதில்லா இலட்சுமிக்கு நிகரான பெண்ணைக் கொண்டு வரும்பொருட்டு அவளை யணுகிப்பிடிக்கச் சென்றபோது, இராமனுக்கினைய இலட்சுமணன் எனது செவி மூக்குகளையுங் கொய்தான்;

இச்சேதியை கரனிடஞ் சொல்லி யான் முறையிட, அவர்கள் அனை வரும் வெகுண்டு மனிதருடன் யுத்தஞ்செய்து மடிந்துபோனார்கள் என்று வயிறெறிந்து அழுது புலம்பிச் சொல்லிய சூர்ப்பநகையின் மொழியென்னும் மன்மதன் கணைகள் இராவணன் செவிவழிப் புகுந்து மார்பைத் தொளைக்கச், சீதையின்மேல் மாறுத மயல்கொண் டவனுகி மாரீசனையடைந்து, "விரைவாக நீ பஞ்சவடி தீரத்திற்குச் சென்று சீதையை இங்குவந்து சேரும்படியான முயற்சியைத் தேடும்" என்றான். அந்தப்படியே மாரீசனும் பஞ்சவடியை யணுகி சொன்ன மான்வடிவெடுத்துச் சானகிமுன் திரிய, தன் மாயையால் நிமிடத்திற்கு நிமிடம் வெவ்வேறு வன்னங்களாகத் தோன்றிடும் மானைக்கண்டு சீதை பிரமித்து இராமரை நோக்கி, "ஓ நாதா! இம் மானைப் பிடித்துத்தாரும் சுவாமி" யென்று செப்பிய சீதையின் மொழிக்கிசைந்து, இராமர் மானைத் தொடர்ந்து பிடிக்கச் சென்ற போது, மானனது கைக்கு அகப்படாமல் ஓடி மிகுதூரம் காட்டி னிற்புகுந்து இராமர் கைபாணத்தினுல் அடிபட்டு மாயுருவாக இருந்த மாரீசன் பிராணனை விடுகிறபோது 'சானகி இலட்சுமணு!' வென்று கூக்குரலிட்டு அழைத்துக்கொண்டே உயிர்துறந்தான். அக் கூக்குரலோசையைக் கேட்டு, சானகி இலட்சுமணரை நோக்கி, "நமது அண்ணனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்ததுபோல இருக்கிறது. ஆதலால், விரைவாகச் சென்று பாரும்" என; அதற்கு இலட்சு மணர் "எனதன்னையே! ஸ்ரீராமருக்கும் ஆபத்து நேரிடுவதுண்டோ? ஒருகாலும் தாங்கள் அப்படி நினைக்கவேண்டாம்! மாயுருவெடுத்து வந்த மாரீசனே நம்மை ஏதோ வகைமோசஞ் செய்யும்பொருட்டு கூக்குரலிட்டானேயன்றி, எனதண்ணனுக்கு யாதொரு சங்கடமும் நேரிடவில்லை. அப்படி யேதாகிலும் விபத்து நேரிடும்காலத்தில் உலகமேது? உயிர்களேது? அண்டமேது? சகலமும் அழிந்து போகும்" என்று உமது மனதில் உண்மையாகக் கருதுமென்று செப்பிய இலட்சுமணருடைய மொழிகளைக்கேட்ட சானகி, பதை பதைத்துத் துடிதுடித்து, "எனது நாயகருக்குத் தீங்கு நேரிட்ட தென்று யான்சொல்லியுங் கேளாமல் இவ்விடத்தில் தானே காலம் போக்கிக்கொண்டிருகிறு யல்லவா" வென்று கடுஞ்சினங்கொண்டு துக்கப்பட்டாள். அதை இலட்சுமணர் கண்டு, "இதற்கென்ன செய்வேன்! அண்ணனே அன்னையைக் காத்துக்கொண்டிருக்கும் படி நேமித்துப்போயினர். அன்னையோ அண்ணனைப் போய்ப்

பார்க்கும்படி கட்டளையிடுகிறாள். தருமசங்கடமாயல்லவோ நேர்ந்தது' அன்றியும், அண்ணன் மனைவியைத் தனியேவிட்டுப் போவேனேயாகில், அந்தச் சமயத்தில் அரக்கர்கள் யாரேனும் வந்து அன்னையைக் கொண்டுபோவார்களோ என்று சந்தேகங் கொண்டு அப்பன்னசாலை நான்குபுறமும் கோடுகிழித்து, "அன்னையே! யார் வந்து அழைத்தபோதிலும் இக்கோட்டைத் தாண்டிப் போக வேண்டா" மென்று சொல்லிவிட்டு இலட்சுமணர் தமையனைத் தேடிக்கொண்டு போயினர்.

அப்போது இராவணன் சன்னியாசிவேடம் பூண்டு வந்து பிச்சைகேட்டுச் சீதையை வஞ்சித்து எடுத்து இரதத்தில் வைத்துக் கொண்டு போகிறதைச் சடாயு கண்டு அவனுடன் போர்புரிந்து இராவணன் செய்த வஞ்சனையால் அடிபட்டுக் கீழே விழுந்தான். அதைக்கண்டு சீதை புலம்பியழுது தன் கணவனுக்குத் தன்னை இராவணன் எடுத்துப்போயின சங்கதியைச் சொல்லும் பரியந்தம் உயிருடனிருக்கக் கடவீரென்று சொல்லிப்போனாள். இராவணனோ சீதையைக் கொண்டுபோய் இலங்கையிற் சேர்த்து அசோகவனத்தில் சிறைப்படுத்தி அநேக இராக்கதர்களைக் காவல்வைத்திருந்தான். அவர்கள் நடுவிலே சானகி மெத்தவும் துக்கப்பட்டுக்கொண்டிருந்தாள்.

அவ்விடத்தில் இலட்சுமணர் கானகத்திற் புகுந்து இராமரைக் கண்டு நடந்தவற்றைச்சொல்லி இராமரை யழைத்துக்கொண்டு வந்து பன்னகசாலையில் சீதையைக் காணுமல் மனந்தடுமாறி சடாயுவினால் சங்கதியைத் தெரிந்து அவர் உயிர்பிரிந்திட தகனகாரியங்களை முடித்து, அயமுகி என்னு மரக்கியைக் கண்டு அவள் நாசியையும் இலட்சுமணர் கொய்ததுமன்றி, அக்காட்டிலுள்ள உயிர்களையெல்லாம் வாரிவாரிப் புசிக்கும் கவந்தங்களைக் கொன்று நற்கதியடையும்படி யருள்புரிந்து, மதுரமாகிய கனிகளையளித்துத் தொழுதிடுஞ் சவரிக்குப் பரமபதமளித்துப் பம்பாநதிக்கெய்தி, கவிசிரேட்டனுகிய அநுமானைக் கண்டுபேசி, கதிரவன் சுதனுகிய சுக்ரீவனை நேசித்து, துந்துபி யெலும்பை மிதித்து மிகுதூரம் போகச்செய்து, மராமரமூருவக் கணைதொடுத்து, வாலியை வதைத்து, அநுமானுல் சானகியிருப்பிடமறிந்து, எண்பது வெள்ளம் வானர சேனைகளுடன் சென்

றுத் தென்கடலைச் சேர்ந்திருந்தார்கள். இங்கே இலங்கையில் விபீ ஷணர் இராவணனைப் பணிந்து, "அண்ணா! சிலகாலம் உயிருட னிருந்து இலங்கையை ஆளவிரும்பினால், ஆதிதேவனாகிய ஸ்ரீராமர் தேவியான சீதையை விட்டுவிடும்; இல்லாவிடில் வந்ததைப்படு" மென்று சொல்லக்கேட்டு, இராவணன் வெகுண்டு கோபித்தெழுந்து "சபையைவிட்டுப்போடா" வென்று முடுக்க, விபீஷணர் நான்கு மந்திரிகளுடன் இலங்கையைவிட்டு வெளிப்பட்டு, கடற்கரையிற் றங்கியிருக்கும் ஸ்ரீராமர் திருவடியில் சரணம்புகுந்து வேண்டிக் கொள்ள, ஸ்ரீராமர் கிருபைக்கண் பார்த்துச் "கிரஞ்சீவியாக இருக் கக்கடவா" யென்று வாழ்த்தி, இலட்சுமணரைக்கொண்டு இலங்கை யைப் பாதுகையால் மகுடஞ்சூட்டி, "எனது பேருள்ளமட்டும் அரசு செய்திருப்பா" யென்று சொல்லி, இராவணனுக்குண்டாகிய மூலபலம், இலங்கையின் வரலாறு முதலானவைகளையும் விபீஷணரா லறிந்து வருணன்மேல் அக்கினியாத்திரப் பிரயோகஞ்செய்ய, வரு ணன் நடுநடுங்கி ஸ்ரீராமர் முன்வந்து சரணமடைந்து தன் முதுகின் மேல் அணை கட்டிக்கொள்ளும்படிச் சொல்லிப்போக, ஸ்ரீராமர் வானரக்கூட்டங்களைக்கொண்டு மலைகளைத் தருவித்து சேதுபந்தனஞ் செய்து, வானர சேனைகளுடன் அணையின்மேற் சென்று சுவேலை மலையிற் சேர்ந்திருக்க, அக்காலத்தில் இராவணன் ஏவலினால் சுக சாரணர்களிருவரும் வந்து வானரசேனைகளுடன் கலந்திருப்பதை விபீஷணரறிந்து சோரர்களென்று அவர்களிருவரையும் பிடித்து ஸ்ரீராமரிடஞ்சேர்க்க, இராமர் சுகசாரணர்களைப் பார்த்து இலங் கையை விபீஷணருக்குப் பட்டங்கட்டியதையும், தசரதராமனை தான் வந்திருப்பதையும் அவர்கள் இராசனை இராவணனுக்குச் சொல்லும்படி கட்டளையிட்டு, கட்டுகளை அவிழ்த்துவிடும்படிக் கட்டளை யிட்டார். அந்தப்படியே கட்டுகளை அவிழ்த்துவிட சுகசாரணர்க ளிருவரும் இலங்கையை அடைந்து; இராவணனைக்கண்டு பணிந்து நடந்த வர்த்தமானங்கள் யாவுஞ் சொல்லக்கேட்டு, இராவணன் இரு பது கண்களினின்றும் அக்கினிப் பொறிகள் சிதறப்பற்களைக் கடித்து மீசை துடிக்கச் சினங்கொண்டு, தெற்குக் கோபுரத்தின் மீதேறிச் சுகசாரணர்கள் காட்டப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது இராவணனைச் சூரிய புத்திரனாகிய சுக்கிரீவன் சுவேலை மலையின்மே லிருந்து கண்டு கோபங்கொண்டு, அங்கே நின்றுங் கிளம்பி இராவ ணன்மேற் பாய்ந்து, மல்லயுத்தம் புரிந்து, முடிவில் இராவணன்

சிரசிற்பூண்டிருந்த நவமணிகளிழைத்த கிரீடத்தைக் கொண்டுவந்து ஸ்ரீராமர் திருவடியில் வைத்து வணங்கி நின்றான்.

இப்படி வணங்கிநின்ற சுக்கிரீவனை நோக்கி, ஸ்ரீராமர் "சில நீதிகளை யுரைத்து, வாலியின் குமாரனுகிய அங்கதனை யழைத்து, இராவணனிடத்திற்குச் சென்று, சீதையைவிட்டுப் பிழையென்று" சொல்லி, அவனுரைக்கும் மறுமொழியைக் கேட்டுக்கொண்டு வா வென்று தூதனுப்ப, அவன்சென்று சிலநீதிகளை யுரைத்துங் கேளா மல் மறுத்து யுத்தஞ் செய்வதற்கே யிசைந்திருக்கும் வகையை யறிந்து வந்து சொன்னான்; அதைக்கேட்ட ஸ்ரீராமர் சேனைகளுடன் யுத்தகளத்திற்குச் சென்று, இலட்சுமணரை இராவணனோடு யுத்தஞ் செய்யும்படி அனுப்ப, அவர் விடைபெற்று வானரசேனைகள் சூழப் போய் இலட்சுமணர் இராவணனுடன் போர் புரிகிறபோது, இரா வணன் வெகுண்டு இலட்சுமணர் அசந்து நிற்கும்படி ஓர் கணை ஏவினன், அக்கணையானது வருகிற வேகத்தினைக்கண்டு வாயுகுமார னை அனுமான் ஓர் இமைப்பொழுதில் அக்கணையைத் தடுத்து, இலட்சுமணரைத் தன்கையா லணைத்துப்போக, இதைக்கண்ட தேவர்கள் பாரிசாதமலரைப் பொழிய, முனிவர்கள் துதித்திட, தேவதுந்துமி முழங்கினர்கள். அப்போது பிரகாசம்பொருந்திய தேரின்மீதிருந்து இராவணன் அநேக பாணங்களைச் சோனைமாரி பொழிவதுபோல பொழிந்தான். அந்தப் பாணங்களையெல்லாம் ஸ்ரீராமர் தன் கோதண்டத்தினிடமாகச் சில பாணங்களினுல் இரத கச துரகபதாதிகளை யெல்லாம் பெருங்காற்றி லடிபட்ட பஞ்சைனப் பறக்கச்செய்து, மேலும் சில கணைகளினுல் இராவணனேறிய இரத மும், சாரதி குதிரை அவன் கையிற் பிடித்த வில்மகுட முதலியவை களையும் நிலத்தில்விழ அறுத்தெறிந்து; பின்னும் அவனை நோக்கி, "அடா இராவண! உனது சம்மதி யென்னசொல்லு; நிராயுதனுகி நிலத்தைக் கீரிக்கொண்டு நிற்கிறாய்; இன்றுபோய், நாளை வாடா" வென்று சொல்லியமாத்திரத்தில் இராவணன் நாணமடைந்து இலங்கையைச் சேர்ந்தான்.

இவ்வண்ணம் நிராயுதனுகிவந்த இராவணனைக் கண்டு மாலிய வான் மிகவும்பதைத்து, "அடா ராவண! நான் சொல்லும் புத்தியைக் கேள்; சுகப்படுவாய். அதென்னவெனில், அன்னியன் மனைவியைக் கைப்பற்றுவதே தோஷம். அதிலும் ஸ்ரீராமர் மனைவியைக்

கொண்டுவந்து சிறைவைத்திருக்கிறாய்; அந்த இலட்சுமியின் மனம் நொந்தால் நீ வெந்து சாம்பலாகி விடுவாய்; ஆகையால், அத்திருமகளைக் கொண்டுபோய் ஸ்ரீராமரிடத்தில் விட்டு திருவடியில் விழுந்து சரணாகதி யடைவையேயாகில், நின் புத்திர மித்திர களத்திரங்களுடன் செழித்து வாழ்ந்திருப்பாய்; அப்படி நீ செய்யாவிடில், உனக்குண்டாகிய பராக்கிரமத்துடன் மூலபலம் யாவும் இராம பாணத்துக்கிரையாவது திண்ணம். உனக்குச் சுயபுத்தியில்லாவிடினும், என் சொல் புத்தியையாகிலும்கேட்டு நடந்துகொள்; அப்பா!" வென்று பல பலவிதமாய்ப் படித்துச்சொல்ல, இதைக்கேட்டு மகோதரன் சினங்கொண்டு, இராவணனை நோக்கி, "ஓ சுவாமி! தாங்களிந்தப் பித்தம்பிடித்தக் கிழவன் வார்த்தையைக் கேட்கவேண்டாம்; மிகுபலமுடைய தங்கள் தம்பியாகிய கும்பகன்னனை விடுத்து, கொடும் பகைவராகிய ஸ்ரீ ராமலட்சுமணருடன் வானரசேனைகளையும் நாசப் படுத்தும்படி உத்திரவளிப்பீராகில், அவனால் யாவரும் மடிந்து போவார்கள். பின்பு உமது இஷ்டப்படி சீதையைக்கூடியிருக்கலா" மென்ற மந்திரியின் சொல்லைக்கேட்டு இராவணன் சந்தோஷ மடைந்து, தூதர்களையனுப்பிக் கும்பகன்னனைத் துயில்நீக்கி எழுப்ப; அவன் அண்ணனிடம்வந்து பணிந்து நிற்கக்கண்ட இராவணன் சொல்லுகிறான்:—

"அடா தம்பி! கும்பகன்னா! நீ சென்று சண்டைசெய்து வானர சேனைகளுடன் மனிதர்களையுங்கொன்று செயம்பெற்றுவா" வென்று சொல்லக்கேட்டு, கும்பகன்னன் அண்ணனாகிய இராவணன் சொற்படி யுத்தகளத்திற்குச்சென்று வானரசேனைகளைக் கொன்று, ரத்தவெள்ளம் பெருகியோடும்படிச் செய்து, சுக்கிரீவனைப் போராடிப் பிடித்துப் பிணித்துக் கட்டிக்கொண்டு விரைவாகத் திரும்பி இலங்கையை நோக்கிப் போகுமளவில், ஸ்ரீராமர் கும்பகன்ன மீது சில பாணங்களைத் தொடுத்துச் சுக்கிரீவனை விடுவித்துப் பின்னுஞ் சில கணைகளால் கும்பகன்னனது கைகால்களைத் துண்டித்துச் சிரத்தையும் அறுத்துக் கடலில் விழும்படித் தள்ளினார். அதுசமயத்தில் இராவணன் மருத்தென்னும் அரக்கனைச் சனகமகாராசனைப் போல உருவங்கொள்ளச்செய்து, அவனை யழைத்துக்கொண்டு போய், இராவணன் சீதையின் முன்னம் விடக்கண்டு, வைதேகி தந்தையென்றே நிச்சயித்து இடர்க்கடலில் மூழ்கிவாடி யழுதுபுலம்பு

கிறபோது, தூதர்கள் அவ்விடத்துக் கோடிவந்து இராவணனைக் கண்டு வணங்கி, "ஓ சுவாமி! தங்கள் சகோதரனுகிய கும்பகன்னன், ஸ்ரீராம பாணத்தால் அறுப்பட்டு மாண்டா" னென்று சொல்லக் கேட்டு, இராவணன் இடியோசையைக் கேட்ட நாடகத்தைப்போல யேங்கி யழுதுபுலம்பி, ஒருவாருகத்தேறி, அதிக சினங்கொண்டு அதிகாயனை யழைத்து, யுத்தத்திற்கனுப்ப, அவன் அனேக யானைக் கூட்டங்களுடன் சமர்பூமியை யடுத்து, அனேக கணைகளை விடுத்து வானரசேனைகளை வாட்டுகிறபோது, இலட்சுமணர் சோனுமாரி யைப்போலப் பாணங்களைச் சொரிந்து, முடிவில் பிரமாத்திரத்தினால் அதிகாயன் சிரத்தைக்கொய்து பின்னும் இராவணன் மைந்தர்களை ஒன்றுய்க்கட்டி யெதிர்த்து, அவர்களை இருளைப் போக்கும்படியான இரவியின் சுதனுகிய சுக்கிரீவன் முதலானேரும் கைகளால் சின்ன பின்ன மாகும்படி யடித்துக்கொன்றதைத் தூதுவர்சென்று சொல்ல, இராவணன் கேட்டு பலவாறு துக்கப்பட்டுத் தேவேந்திரனைச் செயித்த இந்திரசித்தை யழைத்து, "நீ போய் யுத்தஞ்செய்து மனிதரையும் வானர சேனைகளையும் வதைத்துச் சிதைத்து வரக்கடவா" யென்று சொல்லியனுப்ப, இந்திரசித்தன் சிவனும் பிரமதேவனும் பயமடையும்படியாகச் சேனைத்திரள்களைக் கூட்டிக்கொண்டு, இரணக்களம் வந்து சினமிகுந்து தன் வில்லை வளைத்து அனேகமாயிரம் கணைகளைத்தொடுத்து, வானர சேனைகளைக்கொன்று வானுலகேற்றி, நாகாத்திரத்தைப் பிரயோகித்து இலட்சுமணருடன் மற்ற வானரங்களையுங்கட்டி யுருட்டிவிட்டு இலங்கையை யடைந்தான்.

இந்திரசித்து போனபின்பு தசரதனுக்குப் புதல்வனுகவந்து தோன்றிய நமதிறைவனும் இராமனுமாகிய சகதீசன் விசனமுற்றழ, சொர்ணமலையைப்போலக் கெருடபகவான் ஆகாயத்தில்வந்து வட்டமிட்ட மாத்திரத்தில் நாகாத்திரகட்டுகள் படபடென்று றறுந்துவிட, இலட்சுமணர்முதல் வானரசேனைகள் உயிர்பெற்றெழுந்து ஆரவாரஞ்செய்ய, இதனைக்கண்டு தூதுவர்களோடி இராவணனிடத்திற் சொல்லக்கேட்டு, இராவணன் சினங்கொண்டு அணுவளவேனும் கருணையென்பதில்லாத கொடியவர்களாகிற கரன் புதல்வர் முதலாகிய சில அரக்கரையேவினன்; அவர்கள் கடலைப்போலத் திரண்டு வந்து எதிர்க்க; அவர்களைச் சூரியகுமாரனுகிய சுக்கிரீவன்முதலான வானரவீரர்கள் சூழ்ந்துக்கொண்டு, இமைக்குள்ளாகக் கணக்கில்

லாத அரக்கர்களே யடித்துக்கொண்டு வீழ்த்தியதைக்கண்ட கரன் புதல்வன் மூப்புரமெரித்தச் சிவனேப்போலக் கோபங்கொண்டு, வருணாத்திரம், வாயுவாத்திரங்களே விடுத்தான். இதைக்கண்ட ஸ்ரீராமர் சில கணைகளால் வருங்கணைகளே நடுபாதியில் கண்டித்து, வேறொரு கணையைவிடுத்துக் கரன் சுதன் சிரத்தை யறுத்திடக்கண்டு, தூது வர்களோடி இராவணனுக்குச் சொல்லக்கேட்டு, அரக்கர்கள்கோனுகிய இராவணன் இந்திரசித்தனே யேவ, அவன் சேனைகள் புடை சூழவந்து இரணக்களம் புகுந்து எதிர்க்க, இலட்சுமணர் சோனமாரியைப்போல அனேக பாணங்களேச் சொரிந்து அறுபதுவெள்ளம் இராக்கதரை மடித்திடக்கண்டு, இந்திரசித்தன் பிரமாத்திரப் பிரயோகஞ்செய்யவெண்ணி, ஆகாயத்தில் மறைந்தான். அச்சமயத்தில் மகோதரனனவன் தேவேந்திராதி தேவர்கள் முனிவர்கள் மனிதர்கள் உருவாய்த் தோன்றிடும்படி மாயை இயற்றியதை இலட்சுமணர்முதல் வானர சேனைகளுங் கண்டு நிகைத்துக்கொண்டிருக்கும் சமயம்பார்த்து, ஆகாயத்தில் மறைந்திருக்கும் இந்திரசித்தன் பிரமாத்திரத்தைப் பிரயோகிக்கக்கண்டு, தேவேந்திராதி தேவர்கள் பயங்கொண்டு கவலையுற, இலட்சுமணருடன் வானரசேனைகள் அடங்கலும் பிரமாத்திரத்தினுற் கட்டப்பட்டு பூமியின்மீது சாய்ந்தார்கள்.

இதனேக்கண்ட ஸ்ரீராமர் மயங்கித்தியங்கி இவ்விதமாய்த் துக்கப்பட்டாரென்று சொல்லமுடியாத துக்கசாகரத்தில் முழுகித் துயரப்படுவதைக்கண்டு, சாம்புவந்தர் நேமனப்படி அனுமான் சொர்ன மலே கடந்து அப்பால் வெகுதூரஞ்சென்று, சஞ்சீவி பருவதத்தையெடுத்துக்கொண்டு வந்திட, அக்காற்றுபட்ட மாத்திரத்தில் பிரமாத்திரம் விடுபட்டு, உயிர்பெற்றுத் தெளிவடைந்தார்கள். இப்பால் இவ்வாச்சரியத்தைக்கண்ட தூதுவர்களோடி இராவணனுக் கறிவிக்கக் கேட்டு, கோபாக்கினி அதிகரித்துத் தன் சுதன்றனே நோக்கி, இனி என்னசெய்கிறதென அதற்கு இந்திரசித்தன் சொல்லுகிறன்:—

"கேளுந் தந்தையே! யான் இரணகளத்திற்குச்சென்று சில மாயையினுல் அவர்களே மயக்கி, நிகும்பலே யாக முடித்து, வானர சேனைகளுடன் ரர்களேயுங் கொன்றுவருகிறே" னென்று சொல்லி, இந்திரசித்தன் இரணகளமேவி மாயையினுல் சீதையைப்போல் ஒரு மாதுதனே இயற்றி அனுமான்முத லனேவருங்காண வெட்டி

யெறிந்து, "இதோ! யான் அயோத்திமா நகரத்துக்குச்சென்று அங் குள்ள அனைவரையும் வதைத்துவருகிறேன்" என்று யாவருங் கேட்கச் சொல்லி, நிகும்பலையை நோக்கிப் போயினன்; கொடியோ னாகிய இந்திரசித்தன் வெட்டினதைக்கண்ட அனுமான் சானகி மாண்டனளேயென்று இராமர்முன்சொல்ல, ஸ்ரீராமர் கேட்டு விசன முற்றிடுமளவில் விபீஷணர் அசோகவனத்திற்குச்சென்று, சானகி யைக் கண்டுவந்து அவைகளேயெல்லாம் விவரித்து ஸ்ரீராமரிடம் செப்ப மகிழ்ந்தார்; மாயைசெய்து நிகும்பலைக்குச் சென்று யாகஞ் செய்யும் இந்திரசித்தை இலட்சுமணர் அனுமானுடன்சென்று கண்டு, அவன் யாகத்தையழித்து, அவனைச் சின்னபின்னப் படுத்துகிற போது, இந்திரசித்தன் சினங்கொண்டு பிரமாத்திரம், பாசுபதாத் திரம், நாராயணாத்திரங்களைத் தொடுத்து இலட்சுமணர்பேரில் பிர யோகிக்க, அவைகளேயெல்லாம் இலட்சுமணர் தக்க கணைகளேயேவி, நடுப்பாதியிற் கண்டித்து, மற்றொரு கணையால் அவனது கையிற் பிடித்த வில்லொடு கரத்தையும் துண்டித்து, மற்றொரு கணையால் அவன் சிரத்தையறுத்துப் பூமியில்விழுத் தள்ளினர். இதைப்பார்த் திருந்த தூதர்கள் ஓடி இராவணனுக்குத் தெரிவிக்க, அதைக்கேட்ட இராவணன் வாடக்காற்றினால் அடியற்றுவிழும் மரத்தைப்போலப் பூமியில் விழுந்து, மகனே! மகனே! யென்று பத்துவாயினாலுங் கத்தி யழுது, அமர்க்களத்திற்குவந்து புதல்வன் தேகத்தை யெடுத்துக் கொண்டு, இலங்கையைச் சேர்ந்து திலத தைலத்தில் அத்தேகத்தை விட்டுக் கெடாமலிருக்கவைத்து, மூலபலத்தை அமர்க்களத்திற் கேவினன்.

இராவணனால் அனுப்பப்பட்ட மூலபலசேனைகள் ஆயிரம்வெள் ளமும் கடல்புரண்டு வருவதையொத்து இரணக்களம்வந்து சேர; அச்சேனைத்திரளைக் கண்ட வானரசேனைகள் பயந்து மனக்கலக்கங் கொண்டோட, அவற்றை அங்கதன் ஓடாமலிருக்கும்படி தடுத்து தைரியங் கூறுகிறபோது, அக்குறிப்பை யறிந்து ஸ்ரீராமர் சேனைத் திரளின்மேல் மோகனாத்திரத்தைப் பிரயோகிக்க, அக்கணையானது சென்று இங்கும் இராமன், அங்கும் இராமன், எங்கும் இராமனுகத் தங்கி தோன்றியதைக் கண்டு, அச் சேனைகள் ஒருவருக்கொருவர் அடித்தும், கடித்தும், இடித்தும், பிடித்தும், எற்றியும், குத்தியும், இழுத்தும், கிழித்தும் பலவாறாக மடிந்து போயினர்கள். இச்சங்கதி

யைத் தூதுவர்களாலறிந்த இராவணன் மணித்தேரின்மீதேறி அமர்க் களம்வந்து வானரசேனைகளைப் பல கணைகளால் வாட்டிக்கொண்டே வந்து, இலட்சுமணர்மீது அமோகமான அத்திரங்களையே வ, அதனை விபீஷணன் மொழியினால் இலட்சுமணர் நாராயணாத்திரப் பிரயோ கஞ்செய்து; அவ்வத்திரங்களை அறுத் தெறிந்தார். அதைக்கண்டு இராவணன் விபீஷணன்மேல் கோபித்து வேலாயுதத்தைப் பிரயோ கித்தான். அந்த வேலாயுதம் வருகிற வேகத்தைக்கண்ட இலட்சு மணர் விரைவாகச்சென்று விபீஷணன்மேல் படவொட்டாமல், தன் மார்பில் படும்படி யேற்றிப் பூமியிற் சாய்ந்தார். இதைக்கண்ட இராவணன் மகிழ்ச்சியுடன் தன் நகர் சேர்ந்தான்.

அப்போது சாம்புவந்தர், அனுமானால் மறுபடியும் சஞ்சீவியைத் தருவித்து இலட்சுமணரை உயிர்பெறச்செய்து, மனங்களித்திருந்தார். அந்த வேளையில் பிரமதேவன் மொழியால் மாவலி இரதத்தைக் கொண்டுவந்து நிறுத்த, கருடன்மீது வரும் ஸ்ரீராமர் கருடாழ்வானை விட்டுக் கீழிறங்கி வைகுண்டத்தின்மீதேறி அரக்கர் குலபதியைப் போலவந்து நிற்கும் மகோதரனைக்கண்டு, ஸ்ரீராமர் சில அத்திரங் களைத்தூண்டி நமனுலகஞ்சேர வாட்டியபோது, இராவணன் கண்டு மந்திரியென்று வெந்துருகிக் கோபாவேசங்கொண்டு, இரதத்தின் மேலேறி அங்குவந்து அநேக அத்திரங்களை வானரசேனையின்மீது பொழிந்தான். அதைக்கண்டு, ஸ்ரீராமர் தமது கோதண்டத்தி னிடமாக அமோகமாக அஸ்திரங்களைப் பிரயோகித்து அவன்விட்ட அஸ்திரங்களையெல்லாம் கண்டிக்கக்கண்ட இராவணன் ஒரு சூலாயு தத்தை விட்டெறிய, அதனை ஸ்ரீராமர் காலாத்திரத்தைப் பிரயோ கித்துத் தூள்படச்செய்து பின்னும் ஆயிரம் கணைகளை விடுத்து இராவணனுடைய சிரங்களையும் கைகளையும் அறுத்திட, இமைப் பொழுதில் சிரங் கரமனைத்தும் கிளைத்திடக்கண்டு வியந்து, இணை யிலாத கணைகளைவிடுத்து அவற்றை அறுத்தறுத்துத் தள்ள, அவை மறுபடியும் கிளைக்க, முடிவில் சதுர்முகாத்திரத்தால் பிரமதேவன் கொடுத்த வரமும் உரமும் அழிந்து பூமியின்மீது விழுந்து இராவ ணன் மடிந்தான். உடனே தேவர்கள் பாரிசாத மலர்களைப்பொழிய, துந்துமி முழங்க, மேலோர்களாகிய முனிவர்கள் நடிக்க, மயன் மக ளாகிய மண்டோதரி யழுது புலம்பித் தானும் மடிந்திட, ஸ்ரீராமர் ஏவலினால் விபீஷணர்சென்று இராவணனுக்கும், அவன் பத்தினிக்

கும் பிரேதச்சடங்குகளை நடத்தி, அக்கினியில் சமஸ்காரஞ்செய்து, வேதவிதிப்படி நிலசலம்விடுத்து, விபீஷணர் ஸ்ரீராமரிடம் மேவியிருக்க, அந்த வேளையில் அனுமான் ஸ்ரீராமர் ஏவலால்சென்று சீதையைக்கண்டு வணங்கி, இராவணன் மடிந்த நலங்கள் யாவற்றையுஞ் சாற்றிடக்கேட்டு, சீதைமகிழ்ந்து நீராடி அணிபணிதரித்துத் திரிசடையுடன் வந்து, ஸ்ரீராமரை வணங்கிநிற்க, அவர் சந்தேகிக்கக் கண்டு, உடனே சீதை அக்கினியில்மூழ்க, அக்கினிதேவன் பயந்து, நடுங்கிச் சீதையைச் சிரத்தின்மேற் சுமந்துக்கொண்டுவந்து, ஸ்ரீராமரைப் பலபிதமாகத் துதித்துவணங்க, கருணையுடன் ஸ்ரீராமர் சீதையைக் ஸ்கப்பற்றுவிதமறிந்து, சிவன், பிரமன், இந்திரன் முதலியோர் துதித்துப் போற்றிவேண்ட, ஸ்ரீராமர் மகிழ்வுடன் சீதையை யங்கீகரிக்க, அமரர்கள் மலர்மழைபொழிய, துந்துமி முழங்கத், தசரதன் அங்குவர, ஸ்ரீராமர் தந்தையை வணங்க, வணங்கின மைந்தனை தசரதன் மார்புறத் தழுவினன். பின்னும், சீதைவந்து வணங்கப் பெரிய அரசன் மருகிக்குப் பல ஆசிகள் கூறிட, இலட்சுமணர் வந்து பணிய, அவரை மார்போடணைத்திடும் தந்தையை நோக்கி, "அண்ணு! துயரமடைந்திருக்கும் பரதனும் அவன் அன்னையுமாகிய இவ்விருவர் மீதும் தங்களுக்கிருக்குங் கோபத்தை மாற்றும்படி வேண்டுகிறேன்; கிருபைசெய்யு" மென, அதற்குத் தசரதன் "குமாரனே! உன்னை வனத்தி லோட்டும்படி விளைத்த கைகேசியையும், அவள் பிள்ளையாகிய பரதனையும் இகழ்ந்தேன்; மேலோனுகிய நீ இவ்வண்ணம் சொல்லும்படியான உன் மொழியினுலே இவர்கள் மீதிருந்த கோபத்தை நீக்கினேன்; மேலாகிய சேல்கெண்டையை யொத்த நேத்திரங்களையுடைய சானகியைக் கூடிவாழ்ந்திரு எனச் சொல்லிப் போயினன்.

பின்பு அமர்க்களத்தில் மடிந்து கிடக்கும் வசந்தனுயிரை அனுமான் சொர்க்க லோகத்திற்குச் சென்று கொண்டுவந்து வசந்தனை எழுப்பிவிட, ஸ்ரீராமர் சீதை லட்சுமணர் சுக்கிரீவன் விபீஷணர் முதலாகிய எழுபத்திரண்டு வெள்ளம் வானரசேனைகளுடன் புட்பக விமானமீதேறிச் சேதுசேர்ந்து, சீதையை நோக்கி ஸ்ரீராமர் சொல்லுகின்றார்.

கேளாய் சானகி! இத்திருவருணையைச் சேவித்தால் சகல பாவங்களையும் போக்கிப் புனிதராகும்படிச் செய்யும் என்று சொல்

லித், தன்னுடைய கோதண்டத்தின் ஓர் முனையினால் சலத்தைக் கிறி இத் தீர்த்தத்தில் மூழ்கினாலும் சகல பாவங்களும் நீங்குமென்று சாற் றிப், பரத்துவாசர் ஆச்சிரமஞ்சேர்ந்து, அவரடியிற் பணிந்து அவ ரளித்திடும் விருந்தைப் புசித்துக்கொண்டிருந்து, ஒருநாள் அநுமானை யழைத்து, நீ விரைவாக அயோத்திக்குச் சென்று, பரதன் சந்தோ ஷிக்கும்படி என் வரவை யறிவித்துவா வென்றனுப்ப, அநுமான் அயோத்திக்குச்சென்று, அக்கினியில் விழுந்திறக்கத்துணிந்த பரத னைத் தடுத்து, ஸ்ரீராமர் வரவைப் புகன்று, மறுபடியுந் திரும்பி வந்து, பரத்துவாசர் ஆச்சிரமஞ்சேர்ந்து, ஸ்ரீராமரை வணங்கித் தான் போய்வந்த காரியத்தைச் சொல்லிக் களிப்புடனிருந்தார்.

அங்கே பரதர் மிகு சந்தோஷத்துடன் ஸ்ரீராமர் வரவை யெதிர்பார்த்திருந்தார். இங்கே, ஸ்ரீராமர் புசித்துப் பரத்துவாச ரிடத்தில் இனிய மொழிகள் புகன்று விடைபெற்று, யாவருடனும் புட்பக விமானமீதேறி அயோத்திமா நகரத்திற்கு அருகிலிருக்கும் நந்திக் கிராமத்திற்குச் சமீபமாகவந்து விமானத்தை விட்டிறங்கிய ஸ்ரீராமரையும் சீதையையும், பரதனும் சத்துருக்கனும் பணிந்துநிற்க, இலட்சுமணர் பரதரைப் பணிந்துபோற்ற, சத்துருக்கன் இலட்சு மணரை வணங்கிப்போற்ற, அவனையெடுத்து அணைத்துப் பல ஆசி கள் கூறினபின்பு, ஸ்ரீராமர், சீதை, இலட்சுமணர், பரதர், சத்துருக் கர், விபீஷணர், சுக்கிரீவர், அநுமான் முதல் வானர சேனைகளுடன் புட்பக விமானமீதேறி, அயோத்திமா நகரத்தையடைந்து, சரயு நதியிற்படிந்து, வேதியர் வேதமோதிட, வசிட்டர் ஸ்ரீராமன் சிரசி னில் மகுடஞ்சூட்ட, சீதை யருகேநிற்க, பரதர் குடைபிடிக்க, இலட் சுமணர் சத்துருக்கர் கவரிவீச, அநுமான் திருவடியைத் தாங்க, மன் னர் மண்டலீகர்கள் முதல் யாவரும் வணங்கிற்போற்ற, ஸ்ரீராமர் அயோத்திமா நகரத்தை தருமமும் நீதியும் மென்மேலும் விசே டிக்க ஆண்டுவருங்காலத்தில் வழக்கப்படி ஒருநாள் நகர்சோதனை செய்துக்கொண்டு வருகிறபோது, வண்ணானொருவன் தன் மனைவி தனிவழியே சென்று ஓரிரவு தங்கி மறுநாள் வந்து வீட்டிற் சேர, அவன் அவளைப் பார்த்து, "அடி விபசாரி! இந்நகரத்தையாளும் இராமன் மனைவி சீதையை இராவண னெடுத்துக்கொண்டு போய் ஆறுமாதம் வைத்திருக்கும் அளவை ஸ்ரீராமன் அறிந்தும், வானர சேனையுடன் சென்று இராவணனை மடித்து மறுபடியும் சீதையை

யழைத்துவந்து மகுடாபிஷேகஞ் செய்துக்கொண்டு வாழ்ந்து வருகி றான். அதைப்போல யானுமுன்னைச் சேர்ந்து உன்னுடன் கூடி வாழ்ந்திருப்பேனே? மெத்த நன்றாக யிருக்கின்றது நினது செய்கை" யென்று சொல்லிப் பழித்தான். இம்மொழியைக் கேட்ட ஸ்ரீராமர் இவ்வாறே சனங்களனைவரும் சொல்லுவார்களெனத் தன் மனதிற்கருதி; அதிக விரைவாகத் தன்னரண்மனையைச் சேர்ந்து இலக்குமணரை யழைத்து, "சானகியை இரதத்தின் மீதேற்றிக் கொண்டு போய்க் கானகத்தில் விட்டுவரக்கடவாயென்று சொல்ல, அந்தப்படியே இலக்குமணர் சீதையை இரதத்தின்மீது ஏற்றிக் கொண்டு போய், மேன்மையாகிய வான்மீகர் வனத்தில்விட்டுத் திரும்பிவந்து நகரம் சேர்ந்தார்.

அங்கே சானகி ஒண்டியாகத் தவித்து அழுது புலம்பிக்கொண் டிருக்கும் அழுகுரலைக் கேட்டு வான்மீகமுனிவர்வந்து, சானகியைக் கண்டு, "நீ ஆரம்மா! உன்னூரெது? பேரென்ன? நினது தாய் தந் தையர்கள் யாவர்? இந்த இருண்ட காட்டிற்கு வந்து தனித்து ஒண் டியா யழவேண்டிய காரணம் யாது? இவைகளெல்லாம் ஒன்றே னும் ஒளிக்காமல் சொல்லுமம்மா!" வென்று வினவி, சானகி வாய் மொழியினால் சகல விவகாரங்களையும் அறிந்து, அம்முனிவர் சானகி யைத் தேற்றிப் பன்னகசாலைக்குள் அழைத்துச்சென்று, "அம்மணி! நீ இங்குதானே யாதொரு கவலையுமின்றிச் சுகமாகயிரு; உனக் கொரு குறையும் வரமாட்டாது; யாவற்றிற்கும் யானிருக்கிறே" னென்று தைரியஞ் சொல்லித் தன்னிடத்தில் மிகுபரிவோடும் வைத் துப் பாதுகாத்து வருகிற காலத்தில், சானகிக்குக் கருப்பம் நிறைந்து இரண்டு குமாரரைப் பெற்றிட, வான்மீகர் தெரிந்து அப்பாலர்களில் மூத்தோனுக்குக் குசலனென்றும், இளையவனுக்கு இலவனென்றும் நாமகரணஞ்சாற்றி, உத்தமர்களாகிய பிராமணர்களுக்குக் கணக்கு மிதமில்லாத தானதருமங்களை வழங்கிச் சாதகம்வரைந்து, மிகவும் பிரியமாக வளர்த்து வந்தார். அச்சிறுவர்க ளிருவரும் வான்மீகமா முனிவர் அனுக்கிரகத்தினால், அதிக பாலியத்தில்தானே வில்வித்தை யிற் றேர்ச்சியடைந்து, காட்டிலிருக்கும் பலவித ழிருக வேட்டைக ளாடி வருகிறபோது, சத்துருக்கனும் அக்காட்டிற்குவந்து வேட்டை யாடிக்கொண்டிருக்க, இலவன்கண்டு, "எங்கள் காட்டில்வந்து வேட்டையாடுகிற நீயா" ரென்று தடுத்து அமோக யுத்தஞ்செய்கிற

பாலனைக் கண்டு, சத்துருக்கன் ஆச்சரியமடைந்து அப்பாலனை நோக்கி மிகநயந்து கேட்டுக்கொண்டும், அப்பாலன் மீறித் தன் சேனைகளையெல்லாஞ் சின்னபின்னப் படுத்துவதைக்கண்டு, சத்துருக்கன் வெகுண்டு கோபமீறிச் சுறுக்காகிய சில பாணங்களைத் தொடுத்து இலவனைக் கொன்று தன்னகரஞ் சேர்ந்தான்.

இது சங்கதியறிந்து வான்மீகர் வேகமாக அங்குச் சென்றுத் தன் தவவன்மையினால் இலவனை யெழுப்பி அழைத்துவந்து, பன்னசாலையிற் சேர்த்துத் தவத்திலிருந்தார். அயோத்தியில் ஸ்ரீராமர் கொலுக்கூடத்தில் மேவிச் சிங்காதனத்தில் வீற்றிருக்கிறபோது, பிராமணனொருவன் தன் புதல்வன் மரித்துக் கிடப்பதையறிந்து மிகவுந் துக்காக்கிரந்தனாகி, மரித்த மகனையெடுத்துத் தோளின்மீது சாத்திக்கொண்டுவந்து, ஸ்ரீராமர் முன்னங்கிடத்தி, "ஓ இராமா! நினது அரசாட்சியில் ஏதோ அக்கிரமம் நடந்திருக்கிறது; ஆகையால் என் புதல்வன் மரணமடைந்தா" னென்றுக் கூக்குரலிட்டுக் கதறியழுதான். அவனை ஸ்ரீராமர் "ஓ பிராமணோத்தமரே! நீர் விசனப்பட வேண்டாம்; இன்னுஞ் சற்று நேரத்தில் உன் புத்திரன் உயிர்பெற்றெழுவான்" என்று சொல்லிப் பிராமணனைத் தேற்றிச் சத்துருக்கனை யனுப்பிப் பார்த்து வரும்படி நேமிக்க, அந்தப்படியே சத்துருக்கன் சென்று தேடிப் பார்த்துக்கொண்டு வருகிறபோது, பஞ்சமனொருவன் தன் குலதருமத்தை விட்டு மேல்குலத்தாரனுட்டிக்கும் தவஞ்செய்வதைக் கண்டு அவனைக்கொன்ற மாத்திரத்தில் பிராமணன் புதல்வன் உயிர்பெற்றெழுந்தான். அதைக்கண்ட பிராமணன் ஸ்ரீராமரை வாழ்த்திப் புதல்வனை யழைத்துச் சென்றான்.

சூரியனைப்போல இப்பூமண்டல மெங்கும் வியாபித்து தருமங்குன்றாமல் நீதிவழுவாமல் அரசு புரிந்திடும் ஸ்ரீராமர் வேதவேதியரும் முனிவர்களு மகிழ முறை நெறிப்படும் அசுவமேதயாகத்தை குற்றமின்றி நடத்துகிறகாலில், சானகியின் சிறுவராகிய குசலவர்களுக்கு வான்மீக மாமுனிவர் சவுளம் உபநயனஞ் செய்வித்து நான் மறைகளையும் ஓதுவித்துத் தான்செய்த இராமாயண சுலோகங்களனைத்தையும் விரித்துரைத்துக் கற்பித்துவைக்க, அவர்களிருவரும் அயோத்திமா நகரத்தையாளும் ஸ்ரீராமரிடத்திற்குச் சென்று இராமகதையைச் சொல்லக்கேட்டு, ஸ்ரீராமர் மிகவும் மகிழ்ந்தும், நீங்களாரப்பா! வென்று வினவுகிறபோது, வான்மீகமாமுனிவர் அங்கு

வந்து ஸ்ரீராமரால் பூசிக்கப்பட்டு ஆசிகள் கூறிச் "சத்திய சந்தன ஞகிய ஸ்ரீராமா! இவ்விரண்டு சிறுவர்களும் நினது புதல்வர்க" ளென்று சொல்லக்கேட்டு, தசரதராமன் முன்னங்கொண்ட மகிழ்ச்சியைவிட எண்மடங்கு அதிக சந்தோஷமடைந்து பூரித்துத் தழுவர்களை இரு கைகளினலும் வாரிச்சேர்த்தணைத்து, சானகியை யழைப்பித்து அக்கினியில் மூழ்குவாயென்ற மாத்திரத்தில் அவ் வுத்தமி அதற்கிசைய அப்போது பிரமாவின் ஏவலினல் பூமாது அங்குவந்து ஸ்ரீராமர் எதிரில் சீதையைத் தன் கைகளா லெடுத் தணைத்துப் புவியைக் கிழித்துக்கொண்டு போயினுள்.

இந்தப்படி பூமாது சீதையை யெடுத்துக்கொண்டு போயின தைக்கண்ட ஸ்ரீராமர் சினங்கொண்டு தவசிகள் முதல் யாவரும் நடுக்கங்கொள்ளக் கோதண்டத்தை வளைத்து, கணைகளைத் தொடுத்து விடுஞ் சமயத்தில், சிவன், பிரமன், தேவேந்திரன்முதல் மூப்பத்து மூக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணுயிரம் இருடிகளுங் கூடி ஸ்ரீராமர் முன்வந்து, அதருமத்தைப் போக்கித் தருமத்தை நிலை நாட்டி எங்களை இரட்சிக்கும் பொருட்டு அல்லவோ, நீர் நர உருவம் பெற்றது? அதைத் தாங்கள் நன்முய் யோசித்துத் தங்களுக் குண் டாகிய கோபத்தை மாற்றிக் காக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். ஸ்ரீராமர் அப்போது அவர்களுக்கு இரங்கி கிருபா நோக்கம்வைத்துச் சினத்தை யடக்கிப் பூமண்டலத்தை பதினேரா யிரவருடம் அரசாண்டிருக்கிற காலத்தில், அன்னையாகிய கோசலை மரிக்க அக்கினி சமஸ்காரஞ்செய்து திலோதகம் விடுத்துச் சுகித் திருக்கிறகாலத்தில், எமன் பிராமண உருவங்கொண்டு தன் முன் வந்து ஆசிகள்கூறி, "நற்குணத்திற் சிறந்த விற்பன விவேகியாகிய உத்தமனே! நானுனக்குச் சொல்லப்போகிற சங்கதிகள் முடியும் பரியந்தம் இங்கு ஒருவரும் வராதிருக்கும்படி நீ செய்யு" மென்ற மாத்திரத்தில், ஸ்ரீராமர் இலக்குமணனையழைத்து, "தம்பி! இலக்கு மண! இங்கு ஒருவரும் வாராதபடிக்கு நீசென்று துவாரத்தில் காத் திரு" வென்று சொல்லியனுப்ப, நிகரொருவருமில்லாத ஸ்ரீராமர் சிங்கத்தின்மீது வீற்றிருக்கிறபோது பிராமண உருவமர்ந்த எமன் சொல்லத் தொடங்கினன்:—

"அகலபுவன கருத்தாவாகிய ஸ்ரீராமா! சிருட்டி திதி சங்கார மூலமாகிய ஐயனே! தேவரீர் பிரமதேவன் வேண்டலால் இராக்கத

குலத்தைச் சங்கரிக்கும்பொருட்டு, நராவதாரஞ் செய்தீ" ரென்று சொல்லிக்கொண் டிருக்குமளவில், கோபமே சொரூபமாகக் கொண்ட தூருவாசமாமுனிவர் விரைவாகவந்து துவாரத்தில் தூழை யக் கண்ட இலக்குமணர், "முனிவரே! இப்போது உள்ளேபோகச் சமயமல்ல" வென்று தடுக்கத், தூருவாசர் கோபித்து, "உன் குல மற்றுப்போகும்படி சபிப்பே" னெனக்கேட்ட இலக்குமணர் பயந்து அம்முனிவரை உள்ளேவிட, முனிவனைக்கண்ட மாத்திரத்தில் பிரா மண உருதரித்துவந்த எமன் மறைந்துபோயினன். தூருவாசமா முனிவரைக்கண்டு ஸ்ரீராமர் சகல உபசாரங்களுஞ்செய்து மகிழ்ந்து வணங்கி நிற்க நோக்கி, தூருவாசமாமுனிவன், "ஸ்ரீராமர! நீ பராபர வத்துவாகிய ஸ்ரீமந் நாராயண" னென்று சொல்லிப்போயினன். உடனே, ஸ்ரீராமர் பிராமணனைக் காணுமல் திகைத்து மயங்கி தூரு வாசமாமுனிவரை உள்ளே விட்டவர்கள் யாவ ரென்று வினவிய சொல்லைக்கேட்ட இலக்குமணர் விசனமடைந்து, 'அண்ணன் சொல்லை மறுத்து தூருவாசமுனிவரை உள்ளேவிட்ட மாபாவியான யான், இனி இப்பூமியி லுயிருடனிருக்க மாட்டே' னென்று கருதி இளையவர் சரயுநதியில் விழுந்து ஆதிசேட னுருக்கொண்டு பரம பதத்தையடைந்தார். இது சங்கதியைக்கேட்ட ஸ்ரீராமர் மிகவும் கவலையுற்று, 'இலக்குமணனில்லாத இப்பூமண்டலத்தில் இனி நான் இருக்கமாட்டே னென்று திடங்கொண்டு, தமது குமாரர்களாகிய குசலவர்களுக்கு விரைவாக முடிசூட்டி, அரசுசெய்ய விதித்து, அனுமானை நோக்கி, 'பரமபதவி பின்பு பெறுவாய்; இன்னுஞ் சில கால மிரு" என்று விடைகொடுத்து, விபீஷணருக்கு "இலங்கைமா நகரத்தை யாண்டிரு" என்று விடைதந்து, பரத சத்துருக்கருடன் சரயு நதியில் படிந்து, பரத சத்துருக்கர்கள் சங்கு சக்கரங்களாகத் தன் கரங்களில் வந்திலங்க, தானும் ஸ்ரீமந்நாராயணனாகி கருடன் மேல் துலங்கி, சுக்கிரீவன்முதல் வானரசேனைகளுடன் அயோத் திமா நகரத்திலுள்ள யானைகள் குதிரைகள் சிற்றெறும்புமுதல் சகல உயிர்களும் பிரமலோகத்தை யடையும்படி கிருபைசெய்து தேவர்கள் மலர்மழை பொழிய, அந்தர துந்துமி முழங்க, விரசையைக் கடந்து போகையில், சானகிவந்து அடிபணிந்து மருவ வைகுண்டமா நகரத்தை யடைந்தார்.

பலராமாவதாரம்

துதி

விருத்தம்

அலகி லாமறை யாகிய கலியெலாம் பயவும்
மலமி லாதபேர் வானநாட் டையனை யானை
விலகி லாமன விண்டுவை வெம்பகை முடித்த
மலமி தாலுறும் புத்திரன் மலரடி பணிவாம்.

மாசிலாத அம்புவியை யாளுகின்ற மன்னர்களில் மிகவுங்கீர்த்தி பெற்ற சந்திரகுலத் தரசனுகிய போசனென்பவன் வடமதுரா புரியை நீதி வழுவாது அரசு புரிந்துவந்தான். அவ்வரசனுக்கு உக்கிரசேனனென்றும் தேவகனென்றும் இரண்டு புதல்வர் பிறந் தார்கள். இவர்களுக்குத் தகுந்தகாலத்தில் சௌளம், உபநயனம், கல்விப்பயிற்சி, வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்ற முத லான சகல வித்தைகளிலும் தேர்ச்சி யுண்டாக்கி, விவாகமுடித்து உக்கிரசேனனுக்கு மகுடஞ்சூட்டி, போசமகாராஜன் திருநாட்டை யடைந்தான். இவ்விக்கிரசேனமகாராஜன் சத்தியம், பொறுமை, தயை முதலாகிய நற்குணங்கள் நிறைந்து, மதுநீதி தவறாமல் வட மதுராபுரியை ஆண்டுவருகிற காலத்தில், ஓர் புத்திரன் பிறந்தான். அவனுக்கு கஞ்சனென்று திருநாமமிட்டு வளர்த்து வந்தார்கள். இச்சிறுவன் கொலை, கள், களவு, காமம், பொய்முதலாகிய தீக் குணங்களெல்லாந் திரண்டு ஒருருவமாகி, அதருமம் நாளுக்கு நாள் மேலிட்டுப் பெருகவும், தருமம் நாளுக்குநாள் தேய்ந்து சுருங்கவும், மாயவஞ்சம் பெருகவே வளர்ந்தனன்; தருமம் நீதி குன்றவே தவழ்ந்தனன். எங்குந் திரண்ட நோய்கள் உயர்ந்திட நடந்தனன். மேலாகிய நன்மார்க்கங்கள் பழுதுறச் சினமுடையவனு யிருந்த னன். மேலும், இவன் தந்தவக்கிரன், சாலுவன், சிசுபாலன், சராசந்தன் முதலான துட்டர்களை நேசித்து, மகததேச வரசன் புதல்விகளிருவரை மணந்து, மனம்போன போக்காய் நடந்துவரு கையில், இவனுக்குப்பின் எட்டுப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்துப் பெண்பிள்ளை யொன்றேனு மில்லையே! என்று ஏக்கங்கொண்டிருந்த உக்கிரசேன மகாராசன் தன் தம்பியாகிய தேவகனுக்குதித்த பெண் பிள்ளையைத் தன் புதல்வியெனப் பாவித்து மிகவும் பிரியமாய்த் தேவகியெனத் திருநாமமிட்டு வளர்த்துவந்தான். அச் சிறுமி யும் மூன்றும்பிறைச் சந்திரனைப்போல நாளுக்கு நாள் விருத்தி

யடைந்து சாமுத்திரிக சாத்திரவிதிப்படி சகல இலட்சணங்களும் பொருந்தி, செந்தாமரை மலரிற்றோன்றிய மகாலட்சுமிக்கு நிகரெனத் தேவகி விளங்கிடும் நாளில், உக்கிரசேன மகாராசன்கண்டு பரிவுறல், இவளுக்குத்தக்க நாயகனைத்தேடி மணமுடிக்கவேண்டுமென்று கருதி, சபைக்குவந்து சிங்காதனத்தின்மீது வீற்றிருந்து மந்திரிகளுடன் யோசனை செய்கிறபோது, மதியிற் சிறந்த மந்திரியொருவன் அரசனை நோக்கிச் சொல்லுகின்றான்:—

"கேளும் எங்களையாண்டு ரட்சிக்கும் சந்திரகுலத்தோன்றலே! சாருகதேசத் தலைவனுகிய சூரசேனமகாராசன் புதல்வன் வசுதேவனெனும்வீரன் ஆச்சரியப்படும்படியான வடிவமர்ந்தவன்; விண்ணிலும், மண்ணிலும் அவனுக்கு நிகரானவர்களில்லை; ஆதலால், அவன் தங்கள் புதல்விக்குத்தக்க நாயகனென்று சொல்லிய மந்திரியின் மொழியைக்கேட்டு, தேகம் புளகித்து வசுதேவரை யழைப்பித்து சுபலக்கினத்தில் தேவகியைக்கொடுத்து மணமுடித்து; ஆயிரத்தெண்ணூறு இரதங்கள், நானூறு யானைகள், பதினாயிரம் குதிரைகள், இருநூறு தோழிப்பெண்கள், இன்னும் பலவித சீதனங்களைத்தந்து, வதூவரர்களை இரதத்தின் மீதேற்றிக் கஞ்சன் இரத சாரத்தியஞ்செய்ய, அனேக மேளவாத்தியங்கள் முழங்க, வடமதுராபுரியை வலமாக வருகிறபோது, ஆகாயத்தில் நின்றும் அசரீரி கஞ்சனை நோக்கி, "அடா கஞ்சா! இத் தேவகியின் மக்களி லெட்டாம்பிள்ளை உன்னுயிரை வாங்குவான்" என்ற மாத்திரத்தில், கஞ்சன் திடுக்கிட்டுக் கண்களில் அக்கினிப்பொறி பறக்கக் கோபங்கொண்டு, "இவளை நமக்குப் பகையாளியாயினு" மென்று கருதி, இடையிலிருந்த வாளையுருவிக் கையில் பிடித்துக்கொண்டு இரதத்தின்மேல் தட்டுக்குச்சென்று, தேவகியின் மீண்ட குழலைப்பற்றி யக்கொடிய பாவி வெட்டிடத் துணிந்த காலத்தில், வசுதேவர் கஞ்சனை நோக்கி, "மைத்துனரே! தீவரப்படாமல் கொஞ்சம் பொறுமையை வகித்திரும். உலகத்தில் அற்பர்செய்யுந் தொழிலை உம்மைப்போலொத்த மேலோர்கள் செய்யத் துணிவது நீதியல்ல; அந்தணர்களைக் கொன்றவர்கள், பெண்களை மடித்தவர்கள் தீராத நரகத்தில் வீழ்வார்களென்று பலநூல்கள் முறையிடுவதை மறந்து; இக்கொடிய காரியஞ் செய்ய நீ முயல்வது தகாது. அசரீரி சொல்லிய மொழியினலன்றோ உமக்கித்தனை கோபமுண்டாயிற்று? நினதுயிர் மாயாவண்ணம்

யான் ஒரு யுத்தி சொல்லுகிறேன். அதென்னவெனில், இந்த தேவகி வயிற்றில் பிறக்கும் எட்டு பிள்ளைகளையுங் கொண்டுவந்து உமக்குக் கொடுக்கிறேன். அவர்களே வேண்டுமானால் கொன்று உமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும். இப்பெண்ணைக் கொல்லாமல் விட்டுவிடு" மென்றும், "அரசனே! உம்முயிரைப்போக்க நாங்கள் நினைப்போமா? ஒருக்காலும் நினைக்கமாட்டோம். அப்படியல்லவென்று உம்மைக்கொன்று மடிக்கும்பொருட்டு, இம் மங்கையின் வயிற்றிற் பிறக்கும் மைந்தர்கள் விளங்கி, எங்களுக்கென்ன பலனைத் தருவார்கள்? உயிருடன் நீர் இருந்தால் நாங்கள் பலவிதத்திலும் பயனைப் பெறுவோம். இது உண்மையாக நம்பு" மென்று வசுதேவர் கூறிய மொழியைக் கேட்டு, கஞ்சன் எல்லையில்லாத மகிழ்ச்சியடைந்து தேவகியைக் கொல்லாமல் சந்தோஷத்துடன் சென்று அரண்மனை சேர்ந்தான்.

இங்கே தேவகியும் வசுதேவரும் தங்கள் நாட்டை யடைந்து, இரவியும் மதனும்போலக் கூடிவாழ்ந்து, ஒரு புதல்வனைப் பெற்றார்கள். அம்மகனை எடுத்துக்கொண்டுபோய் வசுதேவர் கஞ்சனிடங் கொடுக்க, அக்குழந்தையின் வடிவழகையும், வசுதேவருடைய சத்திய வாக்கையும் மிகவாக மதித்து, -'வசுதேவரே! மறுபடியும் உம்முடைய புதல்வனை யெடுத்துக்கொண்டுபோம்; இவனாலெனக்கொரு தீங்குமில்லை; இவனுக்கு எட்டாவது புத்திரனல்லவோ எனக்கு மிகுந்த பகைவன்; அவனைப்பிடித்து நான் மடியச் செய்கிறேன்" என்று சொல்லிப் பாலகனை வசுதேவர் கையில்கொடுக்கப் பெற்றுக் கொண்டு வசுதேவர் கஞ்சனிடத்தில் விடைபெற்று அவ்விடம்விட்டுப் புறப்பட்டு நடந்து, தன்னரண்மனை புகுந்து, அந்தப்புரஞ் சேர்ந்து மனைவியின் கையில் பாலனைக் கொடுத்து, நடந்த விருத்தாந்தத்தைத் தெரியச்சொல்லி, அப்பாலகனுக்குச் சாதகருமமுழுத்து, சுருதகீர்த்தியென்னும் நாமகரணஞ்செய்து வளர்த்துவந்தனர். பின்பு தேவகி ஒன்றின்பின்னொன்றுகப் பல வருடங்கழிய, ஐந்து பிள்ளைகளைப் பெற்றுத் தேறின மனதுடனிருக்க, வசுதேவர் மிக மகிழ்வுடன் உரோகணி மாதைமணந்து அவளுடன் இன்பசுகமடைந்து விதிப்படி வாழ்ந்திருந்தான். அக்காலத்தில் நாரிலோக சஞ்சாரியாகிய நாரதர் கஞ்சனுடைய சமுகத்தில் வரக்கண்டு, அவரை எதிர்சென்று அழைத்துவந்து, தகுந்த ஆசனமளித்து, அவர் திருவடிக்கு விதிப்

படி பூசித்துத் தூபதீபமளித்துத் தீர்க்க தெண்டனிட்டெழுந்து போற்ற, கொடியோனுக்கு நாரதர் சொல்லுகின்றார்:—

"கேளாய் கஞ்சமகாராசனே! உனக் கனுகூலமாகிய ஒரு காரியத்தைச் சொல்லுகிறேன். இது உண்மை. இதனை உன் மனதில் வைத்துக்கொள். அது யாதென்றால், முன்னொருநாள் உக்கிரசேன மகாராசன் வேட்டையாடுவதற்குக் கானகமேவி யிருந்த போது, அவன் மனைவி பூப்பாகி மூன்றுநாள் ஸ்நானஞ்செய்து அன்றுகடந்து, நான்காவதுநாள் நவரத்தினங்களிழைத்தீ பொன் மாளிகைக்குள் புகுந்து பஞ்சணையின்மீதிருந்து, விரும்பித் தன் கணவனுகிய உக்கிரசேன மகாராசனை நினைந்து எதிர்பார்த்து வருந்தி இருக்குங்காலத்தில், கந்திருவர்களில் ஒருவன் தருமனென்பவன் அம்மாதின் மனத்தை யறிந்து, உக்கிரசேன மகாராசனைப் போல உருவங்கொண்டு நடந்து வரக்கண்டு, அம்மாது மகிழ்ந்து எதிர்சென்றழைத்து வந்து உபசரித்து நயவசனங்கள் மொழிந்து, இன்பமடையும் பொருட்டு நாயகனை யணுகி இருந்தபோது, தன் கணவன் பழக்கமாகச் செய்யும்படியான குறிகளில்லாததால், அவ் வணங்கு திடுக்கிட்டு பயந்து, இவன் யாவனென்று நியங்கி மயங்குகிறபோது, அக்கந்தருவன் ஆகாயத்தில் தோன்றினன். அவனைக்கண்டு வஞ்சித்துவந்து என்னைக் கூடிக் கற்பழித்தாயாதலால், அடா நீசனே! நீ யெந்தவுருக்கொண்டு வந்தனையோ அவ் வுருவத்திற்குடைய பிள்ளையினல் நீ மடிவாயென்று சாபமிடப் பெற்று, கந்தருவன் விசனத்துடன் போயினன். அக்கந்தருவன் சுதனென்று நினது அன்னைசொல்ல, உக்கிரசேன மகாராசன் கேட்டு மனத்துயரடைந்து, சோதிடர்களால் சாதகருமம் வழங்கியபோது அவர்களால் சொல்லப்பட்ட நினது கெட்ட குணங்களைக் கேட்டு உக்கிரசேனன் பின்னுங் கவலையுற்றான். அன்றியும், உக்கிரசேனன் தேவன், வசுதேவன், தேவர்கள், விஷ்ணு முதலானோருடன் போர் செய்து மடிந்த காலநேமி யென்னும் அசுரனுகிய நீ, கஞ்சனுகப் பிறந்தாய்; ஆகையால், இவர்கள் அவர்களைக் கொல்வதும், அவர்கள் இவர்களைக்கொல்வதுமாக இருக்கிற விருத்தாந்த மனைத்தையும், நானறிந்தமட்டும் விரித்துச் சொன்னேன். இதுவுமன்றி, நினது தங்கை தேவகிபிள்ளைகளுக்குள் ஒருவன்வந்து உன்னை மடித்துக் கொன்றுவிடுவா" னென்று சொல்லி நாரதமாமுனிவர் போயினர்.

பின்பு கஞ்சன் தனக்குத்தானே இந்தப்படி யோசிக்கிறான்: 'நமக்குத் தாயும்பகை; தந்தையும்பகை; மற்றுமுள்ள பந்துக்களும் பகை; தங்கையும்பகை; அவள் வயிற்றிலுதிக்கும் பிள்ளையும் பகை; யாவரும் பகைவராயிருக்கிறார்கள். இதுவென்ன ஆச்சரியம்!' என்று நிகைத்து, அகம்வாடி வியர்த்து, விரைவாகவெழுந்து திடுதி டென்றோடி, தேவகியின் மீண்ட மனைக்குள் புகுந்து, கண்களில் நெருப்புப் பொறிபறக்க வெகுண்டு, அவள் பெற்றபிள்ளைகள் ஆறு பேர்களையும்பிடித்துப் பற்களைக்கடித்து ஆவியைப்போக்கி, வசுதேவ ருக்குக் கால்கரங்களில் விலங்குபூட்டிட, அவர் துயரப்படக்கண்டு தேவகி மனவருத்தங்கொள்ள, அவளுக்கும் விலங்குபூட்டி உக்கிர சேனனையும்பிடித்து விலங்குபூட்டி, கடுங்காவலிலமைத்து இன் னமும் யாரிருக்கிறார்க' ளென்று யோசித்துக் கொண்டிருந்தான். அச்சமயத்தில் உரோகணிக்கு வசுதேவர் சைகைகாட்ட, அம்மாது திடுதிடென்றோடி ஆயர்பாடியிற் புகுந்து, நந்தகோபன்மனையிற் சென்றிருந்தாள்.

பின்பு கஞ்சன் உக்கிரசேனன் உருக்கொண்டுவந்து, தன்னைச் சேர்ந்த கந்தருவருடன் யுத்தஞ்செய்து, அவனைமடித்து எண்டிசை யும் செயங்கொண்டு, மகுடம்புனைந்து சிங்காதனத்தில் வீற்றிருந்து, வஞ்சனை, சூது, கொலை முதலாகிய துட்டசெய்கைகளை மலைபோலத் தினந்தினஞ் செய்துக்கொண்டு இருக்கிற காலத்தில், இராக்கதர்கள் நீதி நெறியைக்கடந்து அரசர்களை நோகப்பண்ணி, உலகத்துக் கெல் லாம் வேதனையுண்டாகும்படி அக்கிரமம்செய்ய, அதருமமேலிட்டு தருமங்குறைந்தமையால், பூமிபாரத்தைச் சுமக்கமாட்டாமல் பூமாது தேகமெல்லாம் மெலிந்து, மனஞ்சோர்வடைய துக்கப்பட்டு, துட் டர்களாகிய இராக்கதர்களை வேரறச்செய்யவேண்டியதற்குத் தக்க யோசனை யென்ன என்று கருதி மூப்பத்து மூக்கோடி தேவர்களும், நாற்பதினாயிரம் இருடிகளும் புடைசூழ்ந்து போற்றும் பிரம தேவன் சபைக்குச்சென்று, சொரூபந்தரித்து நின்றனள். அவனி மாது ஆவின்வடிவமாய் வரக்கண்ட தேவர் தேவேந்திரன் முனிவர் கள் பிரமன்முதல் யாவரும் திரண்டெதிர் சென்று வத்திப் போற் றிப் பணிந்து, மூலப்பாலைத்தந்து காப்பாற்றும் பசுவைக்கண்டு மகிழும் கன்றைப்போல மனதுருகிச் சொல்லுகின்றார்கள்:— "அன்னையே! நீ வந்தகருத்தை யறிந்தோம். அது யாதெனில்,

வல்லமையில் மிகுந்த அரக்கர்கள், மானிடரிடத்தில் அக்கிரமங்கள் செய்ய, அதனால் மெலிந்து இவ்விடம்வந்தாய்! உனக்கு நேரிட்டிருக்கும் இடர்களைப் போக்குவதற்கு எங்களாலாகாது; ஆதலால், மனக்குறைகளைத் தீர்ப்பவனும், சகமுழுவதையுங் காப்பவனும், பாபலியினிடஞ் சென்று மூன்றடி பூமி தாவென்றுக் கையேந்தி யிரப்பவனும், அண்டரண்ட சராசரங்கள் யாவற்றையும் உண்டு உமிழ்ந்து பாலிக்கும் எம்பெருமான் நினது பாரத்தை நீக்கி இரட்சிக்கும் பெருமையைப் படைத்தவனுகையால், அம்மாயவன் அமர்ந்திருக்கும் பாற்கடலினிடத்திற்கு நாமனைவோரும் போதல் நன்று என்று சொல்லி, பூமாதுடன் யாவரும் பாற்கடலைச்சேர்ந்து பகவானைப் பலவிதங்களாகப் புகழ்ந்து கொண்டாடியபோது, சகதீசன் துயிலெழுந்து கருடன்மீது அமர்ந்து வலமார்பினில் கமலை விளங்கப் புறப்பட்டார். அப்போது ஆகாயத்தில் தந்துமி முழங்க, சூரியனும் சந்திரனும் நியங்கி மயங்க, சூல்கொண்ட மேக நிறத்தை யொத்த திருமேனி பிரகாசிக்க, சங்கு, சக்கரம், தண்டு, வாள், சாரங்கம் கரத்திலிலங்க அனைவருங்காணத் தோன்றினன். அச்சேவையைத் தரிசித்து யாவரும் தங்களை மறந்து ஆனந்தக் கண்ணீர் விட்டுப் பாடியாடினர்கள். அதசமயத்தில் பசுவின் வடிவங்கொண்டிருந்த பார்மகள் எம்பெருமான் திருவடியில் விழுந்து இறைஞ்சியெழுந்து நின்று கைகூப்பி, "என் மனதிற்கினிய மணாளரே! துட்டராக்கதர்கள் இப்பூமியெங்கும் நிறைந்து உண்மையைப் பேசமாட்டார்கள். பொய்வசனங்களையே பிதற்றுவார்கள். வஞ்சம், மாயம், கொலை முதலாகிய அக்கிரமங்களைச் செய்வதற்குச் சிறிதேனும் மனங் கூசமாட்டார்கள். இப்படிப்பட்ட கொடிய துட்டர்களைச் சுமக்கவும், அவர்கள் செய்யும்படியான அக்கிரமங்களை நினைக்கவும் என்தேகம் நடுங்குகிறதே! முன்னம் சானகியை யெடுத்துக்கொண்டு போய் அசோக வனத்திலிருத்திக் கடுஞ்சிறை வைத்த பாவியாகிய இராவணனை வதைத்து, மீண்டும் சானகியை கைப்பிடித்தாண்ட ஸ்ரீராமர் அடியாரைக் கைசோர விட்டால், யானெவ்வண்ணம் உய்வேன்! தேவரீரைவிட இவ்வேழைக்கு கதிவேறில்லையே!" என்று கண்ணீர் விட்டுக் கதறியழுவதை நோக்கி, விஷ்ணுவானவர்:—

"கேளாய் ஆரணங்கே! வசுதேவருக்கும், தேவகி மாதுக்கும் யான் மைந்தனுகப் பிறந்து, பாவிகளனைவரையும் பற்றறுத்து, நினக்

குற்ற பூபாரத்தைப் போக்குகிறேன்" என்று பகவான் திருவாய் மலர்ந்தருளக்கேட்டு, புவிமாது வீரசவன் கமலாசனன் முதலான யாவரும் அப்போது பரமானந்தமடைந்து, ஒருவருக்கொருவர் மலர்களே வாரியிறைத்துக்கொண்டு வெறிகொண்டவர்கள்போல ஆடினர்கள். இந்தப்படியாகத் தேவர்கள் முனிவர்கள் மற்றி யாவர் களும் வணங்கி இணங்கிப் போற்றித் தன்னை மறந்தாடுகின்ற அனை வரையுங் கடாட்சித்துப் புவிமாதைத் தேற்றி, "உங்கள் உலகத்திற் குப் போங்க" ளென்று விடைதந்து, மாதவன் பாற்கடல் நடுவிற் சென்று, தனக்குச் சயனமாகி விளங்கும் அனந்தனை நோக்கி ஒரு வார்த்தை சொல்லுகிறான்.

"கேளாய் சருப்பராசனே! கற்பினிற் சிறந்த தேவகியின் வயற்றில் ஏழுமாதக் தங்கி, கருப்பமாயிருந்து பின்பு உரோகிணி வயிற்றில் மூன்றுமாதம் பொருந்திப் பிறந்து வளரக்கடவாயென்று முன்சொல்லி அனுப்பி, மாயையை வரவழைத்து, "ஆயர்குலக் கொடியாகிய யசோதையின் வயற்றில் நீ போய்த்தங்கிப் பிற்பாடு தேவகியின் வயிற்றிலிருக்கும் ஏழுமாதத்திய பிண்டத்திற்கு யாதொரு அபாயமும் நேரிடாமல் உபாயமாய் வெளிப்படுத்தி உரோ கணியின் வயிற்றினிற் சேர்ந்திடு" வென்று சொல்லிய இலட்சுமி நாயகன் சொற்படியே மாயையானவள் சென்று தேவகியின் வயிற் றில் ஏழுமாதத்திய கருவதாய் விளங்கும் சிசுவை ஒருவருக்கும் புலப்படாமல் தந்திரமாய் வெளிக்கு வாங்கி எடுத்துக்கொண்டு போய், அந்த மாயையானவள் உரோகணியின் வயிற்றிற் பொருந் தச்செய்து, தான்சென்று யசோதையின் கருப்பையிற் றங்கினாள். மற்ற மூன்று மாதமுங் கடந்தபின்பு உரோகணிதேவி பிள்ளையைப் பெற்றாள். அப்பிள்ளை பூமியில் எந்தப்பாகத்தில் விழுந்ததோ அந் தப்பக்கம் தாழ்ந்து மற்றொரு பாகம் உயர்ந்துகொண்டது. இதனால், அப்பிள்ளை மிகுந்த பலமுடையவனென்று கருதிப் பலராமனென்று ஒரு நாமமும், தேவகியின் வயிற்றில் ஏழுமாதமும், உரோகணியின் வயிற்றில் மூன்றுமாதமும் தங்கிப் பிறந்த இக்காரணத்தால் அச் சிசுவுக்கு சங்கர்ஷணனென்று இரண்டாவது நாமமும், கலப்பையை ஆயுதமாகப் பெற்றவனதலால் அலாயுதனென்றும் மூன்று திருநாம முண்டாகியது. இதற்குப்பின் நந்தகோபன் தனக்குமெத்த நேச னாகிய வசுதேவன் மனைவி ரோகணிபெற்ற பிள்ளைக்குச் சாதகருமம்

செய்துமுடித்து, அனேக தானதருமங்களைச் செய்து மிகவும் பிரிய மாக இச்சிறுவனை வளர்த்து, தக்கவயதில் சௌளம், உபநயனம் முதலான கருமங்களைச் செய்துமுடித்து, அப்பாலனை அன்பாகப் பாதுகாத்து வந்தான். பலராமருஞ் சிலநாள் போக்கி, சாந்தீப ரிடத்திற் சென்று வணங்கி மூன்று மாதத்தில் நான்குவேதம், பஞ்ச காவியம், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம் இவைகளை யெல்லாம் ஓதித் தேர்ச்சியடைந்து, மிகவும் துட்டனுகிய பிரலம்பாசுரனை வதைத்து எவ்வனபருவ மடைந்திருக்கிறபோது, ஆவிர்த்தக தேசத்திற் கிறைவனுகிய இரேவக மகாராசன் மகாலட்சுமிக்கு நிகராகிய சுபலட்சணங்கள் வாய்ந்த கன்னிகையைப்பெற்று வளர்த்து, வேத நெறியினை யுடைய மறையோர்கள் ஆசிகூற, மகிழ்ந்திருக்கிறகாலில், இரேவதி கன்னிகை மங்கைப் பருவ மடைந்த காலத்தில், இரேவ கன் இம்மங்கைக்குத் தக்க நாயகனை உலகமெங்குந் தேடிக் காணுமல், இம்மங்கையுடன் இரதத்தின்மே லேறிக்கொண்டு பிரமதேவன் சபைக்குச் சென்றுன்; அங்கே சுவரத்தினங்க ளிழைத்த சொர்னமண்டபத்தில், இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வாயு, வருணன், குபேரன், ஈசானன் என்னும் அட்ட திக்குப் பாலர்களுந்தொழ மங்கைபாகன், நாகர், சித்தர், வித்தியா தரர், தேவர், சாரணர், இயக்கர், சூரியன், சந்திரன், கருடர், கந்தருவர், கின்னரர், கிம்புருடர், தும்புரு, நாரதர் முதலாகிய முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணுயிர முனிவர் களுஞ் சூழ்ந்து; நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்புரா ணஞ் இதிகாசங்களினுல் பலவாறு புகழ்ந்து வாழ்த்த; ஆகிரீட கேயூர முப்புரி நூலுந் துலங்கப் பிரகாசம்பொருந்தி தேகசாயை விளங்க, பங்கய வாசனத்தின்மீது சதுர்முகன் வீற்றிருந்து தேவர்கள் முதலானேருக்கும் விடைதந்து தனது தொழிலாகிய சிருட்டியில் முயன்றிருக்கும்போது, இரேவகமகாராசன் இரேவதி யுடன் சென்று பிரமதேவன் திருவடியில் விழுந்து வணங்கித் துதி செய்து போற்றக்கண்ட பிரமன், அவ்வரசனை நோக்கி, 'நீர் இங்கு வந்த காரணம் யா' தென்று வினவ, இரேவகன் பிரமனை நோக்கி, "எங்களைச் சிருட்டிசெய்த எந்தையே! என்றனுக்குப் பிரிய புதல் வியாகிய இம்மங்கைக்கு தக்கநாயகனை மண்ணுலகிற் காணுமல், இவ ளுக்கு நாயகனுக எந்த ராசனைச் சிருட்டி செய்திருக்கிறீரோ; அதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டுத் தங்களிடத்திற்கு அடி

யேன் வந்தேன்" என்று சொல்லக்கேட்ட நான்முகன் சிரித்துச் சொல்லுகிறான்.

"கேளாய் இரேவக மகாராசனே! நீ பூலோகத்தைவிட்டு என்னிடம் வந்துசேர்ந்த இப்போது கிரேதாயுகங் கடந்து துவாபர யுகம் பிறந்துவிட்டது; இதைவிட்டு நீ பூலோகத்திற்குப் போவதற்குள் துவாபரயுகம் அந்தியமாகும்; அங்கு தனக்கு நிகரில்லாத புய பலபராக்கிரமத்தைப் பெற்ற பலராமருக்கு நின்கன்னிகையைக் கொடுத்து மணம் செய்வித்துச் சுகமுடனிரு" என்று சொல்லி விடைதரப் பெற்றுக்கொண்டு; இரேவகமாராசன் தன் புதல்வியுடன் இரதமேறிப் பூலோகத்திற்கு வந்து இறங்கி மூன்று உலகங்களிலும் இல்லாத போகபாக்கியங்கள் நிறைந்த துவாரகாபுரத்தை யடைந்து; உரோகணியின் சுதனாகிய பலராமனே நோக்கி, "சக்கிரவர்த்தியாகிய பலராமரே! பிரமதேவன் என்னுடன் சொன்ன மொழி பிசகாமல் இம்மண்ணுலகத்தின்கண் நிகரில்லாத அழகு வாய்ந்த பொற்கொடியையொத்த என் புதல்வியை நினக்குத் தந்தேன்" என்று ரேவகமாராசன் மொழியினைக்கேட்ட பலராம சக்கிரவர்த்தி, ஆகாயத்தை யளாவிய உயரமாய் நீண்டு நிற்கும் அம்மங்கையைப் பார்த்து, தன்கையில் விளங்கும் அலாயுதத்தை ஆகாயத்தில் தூக்கி அவள் தோளில்மாட்டி வலிக்க, அம்மங்கை உயரம் நீங்கி குள்ளமாயினள்; தேவர்கள் இவ்விந்தையைக்கண்டு ஆச்சரியமடைந்து மலர்மாரி பொழிந்தனர்; துந்துமிமுழங்கியது; வசுதேவர் மகனை வாரித் தழுவி மகிழ்ந்தான்; தேவகியும் உரோகணியும் யசோதையும் சந்தோஷித்தார்கள்; அங்குவந்திருந்த பிராமணர்களும் முனிவர்களும் பல ஆசிகள் கூறினர்கள்; பணிலம், முரசு, பேரிகை, காளம், சின்னம் முதலான வாத்தியங்கள் முழங்க; கின்னரிதாளங்கள் ஆர்ப்ப; வேலையொத்த கண்களையுடைய மாதர்கள் வீதிகள் தோறும் நவரத்தினங்களினால் ஏராளமாய்க் கோலங்களெழுதித் தங்கள் மாடங்களை யலங்கரித்து அடங்கா மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள்; பூரண கும்பங்கள் நிறைத்து, வாழை கமுகு முதலிய மலர்களினால் அலங்கரித்து, தீபங்களேத்திப் பல மாதர்கள் சோபனம் பாடினர்கள்; மாப்பிள்ளையாகிய பலராமருக்கு மங்களஸ்நானஞ் செய்வித்து; ஆடை யாபரணங்களிலங்க அமைத்து, இரேவதி மங்கைக்குத் திருமஞ்சனஞ் செய்வித்து, அணிபணிகளைப் பூட்டி

மைதீட்டி இருவரையும் மணவரையின் மீதிருத்தி முனிவர்களும் அந்தணர்களுங் கூடி ஓமம் வளர்த்தி ஆகுதி நிறைத்தார்கள்; அப் போது இரேவதியின் கழுத்தில் சங்கை யொத்த திருமேனியை யுடைய பலராமர் மங்கள நாண்சாற்றி மங்கைமார்கள் அனைவரும் மகிழ அம்மி மிதித்துத் தீவலம்வந்து ஆகாயத்திற்றோன்றும் அருந்ததியைத் தரிசித்து, அந்தணர்கள் ஆசிகூற; தவமுனிவர்கள் பல்லாண்டிசைக்க மங்கலவாழ்த்து பெற்றுப் பலராமர் தாய்தந்தை யர்களை வணங்கினர். இரேவதியும் மாமன் மாமிகளைப் பணிந்தும், பலராமருடன் மணமிகுந்த மலர்களை யணிந்து இன்பமடைந்து பிரிய மாகச் செல்வ நீதிகுன்றமல் துவாரகையில் இரேவதி மங்கையும் கூட இன்பங்களை யடைந்து மிகுந்த களிப்புட னிருந்தார்.

கிருஷ்ணவதாரம்

துதி

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வானுலகு மண்ணுலகு மறையு மோரேழ்
வைப்புமரு ணெறியும்வை திகமு மோங்கத்
தானவர்தங் குலமழியப் பார தப்போர்
தமைநடத்த வாயவர்பா லவத ரித்த
வானவனைப் பார்த்தனுக் குபதே சித்த
வள்ளன்மா தவனைமறை நாதன் றன்னைக்
கானமருந் துளவணியு மொப்பி லானைக்
கண்ணனைமா வண்ணனையாங் கருது வாமால்.

ஸ்ரீ மகாலட்சுமியை மார்பினிற்றரித்த விஷ்ணுவானவர் அரவர சனை தேவகிவயற்றி லுதிக்கும்படி யனுப்பிப் பின்பு பாற்கடலை நோக்கி; நீ ஆயர்பாடியிற்சென்று எண்ணில்லாத பசுக்கூட்டங்களாக அவதரிக்கக் கடவாயென்று கிருபைகூர்ந்து அனுப்பி, அண்டர் களை நோக்கி, 'நீங்கள் அவனிக்குப்போய் முனிவர்கள் மார்பினில் யாதவகுலத்தில் அவதரிப்பீ' ரென்று அனுப்பின காலத்தில், பிரம தேவன் அட்டவசுக்களில் முதல்வனுகிய துரோணனென்பவனையும், அவன் மனைவியாகிய தரையென்பவளையும் பார்த்து, மாதவன் தேவகி வசுதேவனுக்குப் புதல்வனுய்ப் பூதலத்தினி லுதிக்கப்போகிறபடி யால், நீங்களிருவரும் யாதவகுலத்தில் நந்தகோபன் யசோதையாக அவனியிற் சென்று அவதாரஞ் செய்யுங்க" ளென்று சொல்லினன்.

அவன் மொழிப்படி அவ்விருவர்களு மிகுந்த சந்தோஷத்துடன் அவ தரித்தார்கள். அந்த யாதவகுல்த்தில் அண்டர்களும், அவர்கள் மாதர்களும், கோபாலரும் கோபிகளுமாய் வந்தவதரித்து; பகவான் கட்டளைப்படி பாற்கடலானது கணக்கில்லாத கோகுலங்களாக அவ தரிக்க; அவற்றைப் பாதுகாத்துக்கொண்டு சீவிப்பதனால் அண்டர் களுக்குக் கோபாலர்களென்று நாமமுண்டாயிற்று. பெண்களெல் லாம் பசுக்களின் பாலைக் காய்ச்சித் தயிர் வெண்ணெய் மோர்படுத்தி விற்பனைசெய்வதால், அவர்களுக்குக் கோபிகளென்ற திருநாமமுண் டாயிற்று. இவர்கள் வசிக்கும் ஊருக்கு ஆயர்பாடியென்று பேர் வழங்கியது.

இந்தப்படியாய் அவரும்வந்து அவதரித்துப் பசுக்களும் விருத்தி யடைந்து செழித்துவர, அந்த ஆயர்பாடிக்குச் சிற்றரசனை நந்த கோபன் தருமம் நீதிதவறாமல் ஆயர்பாடியைப் பாதுகாத்துக் கொண்டு கஞ்சனுக்குப் பகுதிசெலுத்திவந்தான்; இப்படிக்கிருக்கிற போது விஷ்ணுவானவர் தேவகியின் வயிற்றில் தங்கிப் பத்து மாத மும் பூர்ணமாகி யசூஷ கின்னர கிம்புருட கருட கந்தருவ சித்த வித் தியாதராதி முப்பத்துமூக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் வேத சுருதிகளினால் கொண்டாட, துஷ்டர்கள் உயிர் துறக்க; இஷ்டர்கள் மேலு மேலும் செழிக்க; மாசங்களில் அதி சிரேட்டமாகிய ஆவணிமாதத்தில், புதவாரத்தில், கிருஷ்ண பட்சத் தில், அஷ்டமியும் உரோகணி நட்சத்திரமுங் கூடிய நான்காம்பாதத் தில், அமுத யோகத்தில், கௌலவா கரணத்தில், இடபலக்கினத்தில், நடுராத்திரியில் வசுதேவரும் தேவகியுங்கண்டு திருவடிகளுக்கு அருச் சனை புரியவும், ஆகாயத்தினின்றும் தேவர்கள் பாரிசாத மலர்களை இறைக்கவும் அவதாரம் பண்ணினார்.

மேலும், பகவான் அவதாரஞ் செய்த காலத்தில் கிரகங்கள் ஒன்பதும் எந்தெந்த இராசியில் நின்றிருந்ததென்றால், இலக்கினத் தில் குருவும், சந்திரனும்; கடகத்தில் இராகும்; சனி துலாத்திலும்; கேதுவும் அங்காரகனும் மகரத்திலும்; ஆதித்தன் சிங்கத்திலும்; சுக்கிரனும் புதனும் கன்னியிலும் தங்கிய சுபமாச சுபவார சுபதிதி சுப நட்சத்திர சுபயோக சுபகரண சுபக்கோள்கள் அமைந்த சுப வோரையில் நீலமேக நிறத்துடன் அவதாரஞ் செய்தார். எந்த ஊரில் என்றால் மிகவுஞ் சிரேட்டமாகிய இராசதானியாகும் வடமா

மதுரையில் கணக்குக்கடங்காத மஹிமைகளையுடைய திருமாது மணாளன் சிறுபிள்ளை வடிவமாகியும், சகல லுலகங்களையும் தன் வயிற்றிற் குள் வைத்துக் காத்துக்கொண்டும், இராசத தாமத சாத்துவிகமென்னும் முக்குணங்களுக்கும் மேற்பட்ட சுத்த சத்துவ குண நிதியாகிய பகவான் கிருஷ்ணமூர்த்தியாகி அவதாரஞ்செய்து, தேவகி வசுதேவருக்குச் சேவைதந்தார். அச்சேவையில் ஈடுபட்ட தம்பதிகளிருவரும் ஆனந்தம் பிரமானந்தம் பரமானந்தத்தை யடைந்து, விராட்டுச் சொரூபத்தைச் சேவிக்க அவர்களால் முடியாமல், கண்களை மூடிக் கொண்டு பலவிதமாகத் துதித்து முன்போலக் குழந்தை வடிவமாகியிருக்கும்படி வேண்ட, அவ்வாறே பகவானும் சிறுகுழந்தை வடிவமாகிப் பழையபடி சேவைதந்தார். குழந்தையுருவமாகிய பகவானை நோக்கி, தேவகி மொழிகின்றாள்: "கனவான்களாகிய யோகீசுவர்களுக்கும், தவமுனிவர்களுக்கும் ஞானக்கண்ணினால் தேவரீருடைய விராட்டுச் சொரூபத்தைச் சேவிக்க முடியாதென்று பல நூல்களும் முறையிட்டுக்கொண்டிருக்க, ஊனக்கண்களைப் பெற்ற எங்களால் அபாரமான வடிவத்தைத் தெரிசிக்கக் கூடுமோ? கர்த்தனே! தாங்கள் அவதாரஞ் செய்யப்போகிற உண்மையை அசரீரியினால் கேட்டு, கஞ்சன் எங்களை இச்சிறைச்சாலையில் அடைத்ததுமன்றி, விலங்குகளும் பூட்டினான். அன்றியும், நினக்கு மூத்தவர்களாகிய ஆறுபிள்ளைகளையும் கொன்ற அந்த துஷ்டனால் பயமடைந்திருக்கும் எங்களைக் காக்கவேண்டும். யானிழைத்த நோன்பின்பலன் சிறிதும் வீண் போகாமல் பலித்தது" இவ்வண்ணம் சொல்லிக் கண்ணீருங் கையுமாக அழுது புலம்புகிற தேவகி, அண்ணையைக் கண்ணன் தேற்றிப் பயத்தைமாற்றி வசுதேவரை நோக்கி, "அண்ணா! என்னை விரைவினிலெடுத்துக்கொண்டுபோய் ஆயர்பாடியிலிருக்கும் யசோதையின் பக்கலில்கிடத்தி, அவ்வசோதையின் பக்கலிலிருக்கும் யோகமாயாசத்தியைக் கொண்டுவந்து என் அண்ணையின் பக்கலில் கிடத்துமென்று சொல்லிய உலகநாதனை நோக்கி, "அண்டரண்ட சராசரங்களில் வசிக்கும் சகல ஆன்மகோடிகளின் உள்ளும் புறம்புமாக இருந்து வசிக்கும் ஐயனே! தங்களுக்குத் தெரியாத தொன்றுண்டோ? யான் எவ்வாறு நின்னை யெடுத்துக்கொண்டு ஆயர்பாடிக்குச் செல்லுவேன்?" என்ற வசுதேவரை நோக்கி சகதீசன், "அண்ணா! தாங்கள் ஏதுக்கும் யோசிக்கவேண்டாம்! யாதுக்கும் நானிருக்கிறேன். உமது கரத்தினால் என்னைத் தொடுவீரேயாகில்

உடனே உமது கால் கரங்களில் பூட்டியிருக்கும் விலங்குகள் தன் கடை கழன்றுவிடும்" என்று சொல்லக்கேட்டு, வசுதேவர் விரைவி லெழுந்து குழந்தையைக் கையினால் தொட்டவுடனே, விலங்குகள் கழன்று விழுந்தது. இதைக்கண்டு வசுதேவர் மிகவும் சந்துட்டி யடைந்து, அக்குழந்தையை இருகரங்களிலு மெடுத்துக் கொடுக்கும் படியாக யேந்திக்கொண்டு சத்தப்படாமல் நடந்துபோகிறபோது, அங்கு தாழிட்டிருக்கும் கதவுகளெல்லாம் குழந்தையின் பரிசத்தினால் தன்கடை திறந்துகொண்டன. அன்றியும், காவலிருந்த சூரர்கள் அனைவரும் கையில் உருவின வாளாயுதத்துடன் தங்களை மறந்திருந் தார்கள். அந்தச் சமயத்தில் வசுதேவர் குழந்தையை எடுத்துக் கொண்டு நடந்து, யமுனை யாற்றைக்கடந்து ஆயர்பாடிக்குள் புகுந்து, நந்தகோபருடைய வீட்டிற்குட் சென்று, குழந்தையை யசோதையின் பக்கலில் கிடத்தி, அவள் பெற்ற பெண்குழந்தையை யெடுத்துக்கொண்டு மதுரா நகரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

இவ்விடத்தில் வினவொன்றுளது; அவையாதெனில், இவ் வசு தேவர் தன் பிள்ளையைக் கொண்டுவந்து யசோதைபக்கலில் கிடத்தி யசோதையின் பிள்ளையை யெடுத்துக்கொண்டு போகிறபோது, அவ்விடத்தில் காவற்காரர்கள் முதல் யாவரும் நித்திரை செய்து கொண்டே யிருந்தார்களோ? என்பதாம். யசோதை பெற்றபிள்ளை மிகு மாயாசக்தி யாதலால், அவளுடைய மாயையானது காவலர் முதல்யாவரையுங் கப்பிக்கொண்டது. இந்த மாயையால் கட்டுப்பட் டவர்களாகிய அனைவரும் தங்களை மறந்து சொக்கி யிருந்தார்கள். யசோதையும் மாயையினால் கட்டுப்பட்டு மெய்மறந்திருந்தாள். ஆத லால், இத்தனைச் சுலபமாய் வசுதேவர் மாயையை யெடுத்துக் கொண்டு மதுராநகரத்திற்குச் சென்று, காராக்கிரகத்துக்குள் புகுந்துபோகிறபோது கதவுகளெல்லாம் தாமாகவே மூடிக்கொண்டு பழையபடி தாளிட்டதுபோலத் தோன்றியன. இதனைப் பார்த்துக் கொண்டே வசுதேவர் சென்று தேவகியின் பக்கலில் மாயையைக் கிடத்தின மாத்திரத்தில் முன்போல விலங்குகள் தாமாகவே வந்து கால் கரங்களில் மாட்டிக்கொண்டன.

உடனே மாயையாகிய குழந்தை காகாவென்று அழுதது. அவ் வழுகுரலைக்கேட்டுக் காவலர்களோடி அந்தப்புரத்தில் நித்திரை செய் திருக்கும் கஞ்சனையெழுப்பி, "தங்கள் தங்கை தேவகி பிரசவித்

தாள்; பிள்ளை அழுகுரலைக்கேட்டுத் தங்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு இந்த ராத்திரியில் வந்தோ' மென்று சொல்லிய காவலர் கள் மொழியைக்கேட்டு, கஞ்சன் வீராவேசங்கொண்டு இடையில் தரித்திருக்கும் வத்திரம் அவிழ்ந்து பூமியில் விழவும், சிகைமுடி யவிழ்ந்து அலையவும், இரௌத்திராகாரமாக அந்தப்புரத்தைவிட்டு விரைவாக ஓடிவந்து காராகிரகத்தின் கதவுகளுக்குப் போட்டிருந்த முத்திரை சரியாகயிருக்கக்கண்டு, அவற்றை உடைத்துக் கதவுகளைத் திறந்து, "நீ பெற்ற குழந்தையை யெடுத்துக்கொண்டுவா" வென்று சொல்லக்கேட்டு, தேவகி கடுகடுங்கிப் பிள்ளையை யெடுத்துக்கொண்டு கண்களில் நீர் கால்வாயைப்போலப் பெருகியொழுக, கஞ்சனைக் கண்டு, "அண்ணு! இப்பிள்ளை யாணல்ல; பெண்குழந்தை; ஆண் பிள்ளைப் பிறந்தால்லோ உனக்குப் பகையாளி? இது பேதையாகை யால், இப் பெண்குழந்தையினால் உனக்கெதுவுங் கெடுதி சேரிட மாட்டாது! முன்னம் எனது பிள்ளைகள் அறுவர்களைப் பிடித்துப் பதைக்கக் கொன்றுவிட்டையே! அதனால் உனக்குண்டாகிய பிர தாபத்தையும் பிள்ளைகளைப் பரிகொடுத்து வயிறெரிந்திருக்கும் என் மனமும் குளிரும்படி, இப்பெண்பிள்ளையைத் தயைசெய்து எனக் குக்கொடுத்து உலகத்தில் நற்கீர்த்தியையடையும்" என்ற தேவகி யின் துக்கவசனங்களைக் கேட்டுச் சிறிதும் தயாளமில்லாத கடின மனதையுடைய பாவியாகிய கஞ்சன், "பெண்குழந்தையானாலும் ஆண்குழந்தையானாலும் பிடித்து அதைக்கொல்லாமல் விடுவேனே" வென்று சொல்லிக்கொண்டே, தேவகியைக் கிட்டி நெருங்கி அவள் கையிலிருந்த குழந்தையின் கால்களைப்பிடித்து இழுத்துச் சமீபத்தி லிருந்த பாறாங்கல்லின்பேரில் அறைந்து கொன்றுவிட எண்ணங் கொண்டு விட்டெறிந்தான்; அக் குழந்தை மாயாசத்தியானதால் தன்னுடைய மாயையால் கல்லின்பேரில் விழாமல் நின்று ஆகாய மார்க்கத்தில் கிளம்பி ஆடையாபரண அலங்கிருதையாகி பதினாறு கரங்களும் அவைகளில் ஆயுதங்களுமுடையவளாய், பலவித அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை முதலாகிய தேவப் பெண்கள் ஆடல்பாடல் பலவிதங்களாகிய வாத்தியங்கள் முழங்க, சகல ஆடம் பரத்துடன் யோக மாயாசத்தித் தோன்றினாள். அவளைக்கண்டு கஞ்சன் திப்பிரமையடைந்து யாதொன்றும் மனதுக்குத் தோன்றா மல் திகைத்து மயங்கி நின்றான். அவளைப் பார்த்து யோக மாயா சத்தி சொல்லுகிறாள்:—

அடா கஞ்சனே! வஞ்ச நெஞ்சினைக்கொண்டு என்னைக்கொல்ல நினைத்து கல்லின்மேல் விட்டெறிந்தாய். அத்தனை இலேசாக என்னைக்கொல்ல நின்னலாகுமோ? இவ்வெண்ணங் கொண்ட நின்னைக் கொல்லும்பொருட்டு எங்கும் வியாபித்து உள்ளும்புறம்புமாய் வசிக்கும் சகதீசுவரன் அவதாரஞ்செய்து ஒரு நிரகத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறார். இதை யறியாமல் உலகத்திலுள்ள சனங்களைப்போல என்னைக் கேவலமாக நினைந்து பதம்பார்த்தாய்; அன்றியும், நின் தங்கையின் பிள்ளைகளென்றுச் சிறிதும் யோசிக்காமல் ஆறு சிறுவர்களையும் பிடித்துமடித்த மாபாவியாகிய நினது ஊழ்வினையின் பலன் உனது பிராணனை வாங்கச் சேரும் சமயம் சமீபித்து விட்டது. ஆகையால், சாக்கிரதையாய் நினது பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளடா" வென்று சொல்லி மறைந்துபோயினள்.

இப்படியாக யோகமாயா சத்தியானவள் சொல்லக்கேட்ட கஞ்சன் பயந்து மெய்நடுங்கி அந்தோ! நாரதமாமுனிவர் சொல்லைக் கேட்டு, உத்தமர்களாகிய தேவகி வசுதேவர்களைப் பிடித்து விலங்கிட்டுக் காவலில் வைத்ததுமன்றி, அவர்கள் பெற்ற அருமைப் பிள்ளைகள் அறுவர்களையுங் கொன்ற மாபாவி யானேனென்று சொல்லி அவர்கள் திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு, உங்கள் வாக்கினுல் என்னை யொன்றுஞ் சொல்லாமல் யான் செய்த பிழைகளை மன்னித்துக் காக்கவேண்டுமென்று வேண்டிப் பலவித நயவார்த்தைகளைப் பேசி அவர்கள் கால்களிற் பூட்டியிருந்த விலங்கை தரித்துக் காவலினின்றும் விடுவித்து, உக்கிரசேன மகாராசனையும் சிறைச்சாலையை விட்டு நீக்கித் தன்னுடைய அந்தப்புரஞ் சேர்ந்து படுத்துக் கொண்டு நித்திரை பிடிக்காமல் அன்றிரவெல்லாம் மிகவும் மனக்கவலை கொண்டிருந்தான்.

அங்கே ஆயர்பாடியில் யோகமாயாசத்தியை வசுதேவர் எடுத்துப் போனவுடனே மாயைவிலகி அனைவருக்கும் சோகம் நீங்கிச் சுயபுத்தி யுண்டானது. அப்போது யசோதை தன் பக்கலி லிருக்கும் ஆண்குழந்தையின் வடிவழகைக்கண்டு மிகுந்த களிப்பினுல் பூரித்தாள். அன்றிரவு போக்கி மறுநாட் காலையில் ஆயர்பாடி யெல்லாம் யசோதைக்குப் பிள்ளைபிறந்த சங்கதிதெரிந்து, புருடர்களும் பெண்களும் அடங்கா மகிழ்ச்சியடைந்து தங்கள் சத்தியானுசாரம் பால்,

தயிர், வெண்ணெய், நெய் இவைகளை பாணைகளில் நிரப்பிக் காவடிகளில் கொண்டுவந்து கொடுத்து, குழந்தையைப் பார்த்து ஆனந்த பரவசமடைந்து, தங்களை மறந்து ஆடுவதும் பாடுவதும் பல வாத்தியங்களை முழக்குவதுமாக ஆயர்பாடியிலுள்ள சனங்கள் யாவரும் அறிவழிந்து இருந்தார்கள். பின்பு நந்தகோபர் தனக்குப் பிள்ளை பிறந்த ஆனந்தத்தினால் பதினாயிரம் கன்றுகளுடன் பசுக்களை உத்தமர்களாகிய பிராமணர்களுக்குத் தானஞ்செய்து சாதகன்மம்முடித்து பன்னிரண்டாம் நாள் தங்கள் பந்துக்கள் முதலானோரையும் வரவழைத்து, கர்க்காசாரியரால் கிருட்டினனென்று நாமகரணமிட்டு, பூதானம், கோதானம், இரணியதானம், வத்திரதானம் கன்னிகாதான மென்னும் சோடசதானங்களும் அவாரியாகச்செய்து, பந்தினர்களுடன் அனைவருக்கும் விடையீந்து அனுப்பிவிட்டுக், கிருட்டினனை நாளுக்குநாள் செல்வமாக வளர்த்து அதிக பரிவோடும் பாதுகாத்துவந்தார்.

பூதகி வதை

இங்கே மதுராநகரத்தில் கஞ்சன் ஓர் மண்டபத்திலிருக்கும் ஆசனத்தின்மீது வீற்றிருந்து, மந்திரிகளை வரவழைத்து யோகமாயாசத்தி சொல்லி மறைந்து போயின விவரங்களனைத்தையும் விரித்துரைத்து, "என்னுயிர் பிழைக்கும் வகைக்கு வேண்டிய உபாயங்களை யோசித்துச் சொல்லுங்க" லென்று வினவ, கஞ்சனை நோக்கி, தேனுகன், பெலம்பன், கேசிசானூரன், முட்டிகன், சகடன், பகன் முதலாகிய தன்மந்திரிகள் அனைவரும் சொல்லுகின்றார்கள்.

"கேளும் அரசே! இதற்கோ தாங்கள் பயப்படுவது; அந்த அரி குழந்தைவடிவா யிருக்கிறனென்றல்லோ சொன்னீர்! எங்களை யனுப்பினால் நாங்கள் சென்று மூவுலகங்களிலுந் தேடிப் பார்த்துக் கொன்றுவருகிறோம்; விடைதாரு" மெனக், கஞ்சன் கேட்டு, "நீங்க ளிப்போது போகவேண்டாம்! இன்னுஞ் சிலநாள் பொறுத்து அனுப்புகிறேன். அப்போது சென்று அவனைக்கண்டு பிடித்துக்கொன்று வாருங்கள். முதலில் பூதகியை அனுப்புகிறே" னென்று சொல்லிப் பூதகியையழைத்து, "நீ சென்று அவனியிலிருக்கும் மனைகள்தோறும் புகுந்து அங்கங்குள்ள ஒருவருடத்திற்குள்ளாகிய சிசுக்களையெல்லாம் மடித்துவரக்கடவா" யென கட்டளையிட, பூதகியுங் கஞ்சன் சொல்லியவண்ணம் நூதனமாகிய அச்சர

ஸ்திரீயோவென்று ஒவ்வொருவரும் கண்டு மயங்கி நியங்கும்படி மேலாகிய வடிவழகு பொருந்தி இரண்டு தனங்களிலும் ஏராளமாக நஞ்சைபொருந்திக்கொண்டு பலதேசங்களிற் சென்று ஒவ்வொரு மனையிலுமுள்ள பிள்ளைகளுக்கும் தன் தனத்தின் பாலை ஊட்டுவள் போல விடத்திலை கணக்கடங்காச் சிசுக்களைமடித்து, ஆயர்பாடிக்கு வந்து, நந்தகோபன் மனையிற்புகுந்து, யசோதையை யணுகி, "இத்தனை அழகுவாய்ந்த பிள்ளையைப்பெற்ற உனக்கு நிகரான மங்கைகளுலகத்திலுளரோ?" யென்று பலவிதமாகப் புகழ்ந்து, அவளருகிலிருக்கும் பிள்ளையைத் தன் கைகளால் தழுவி, உச்சி மோந்து முகத்தோடு முகம் வைத்து முத்தமிட்டு எடுத்துக்கொண்டு, ஓர் மனைக்குள் புகுந்து, தன்மடியின்மீது சிறுவனைக்கிடத்தி, வஞ்சகி வதை செய்யக்கருதி விடப்பாலை யீந்தனள்; மாதவன் அவள் முகத்தைநோக்கி, இருகைகளாலும் தனத்தைப் பிடித்து வாயில்வைத்துப் பாலையுண்பவன்போல உயிரையும் உண்டான். அம்மாத்திரத்தில் பூதகி தன் சுயரூபமாகிய இராக்கதவடிவுடன் ஆறுயோசனை நிகளத்திற்கு விழுந்தாள்; அவள் விழுந்த இடத்திலிருந்த மனைகள் செடி கொடிகள் அனைத்தும் பொடிப் பொடியாகப்போக, இவ் வோசையினால் ஆயர்களும் உரோகணியும், ஆஹா! இதுவென்ன விந்தையென்று அலரினர்கள். யசோதையோ அக்கினியில் விழுந்த பங்கயத்தைப்போல உடம்பு வெம்பி, அனலிடுமெழுகுபோல உள்ள முருகி, வாடக்காற்றினால் சல்லிவேரற்றுவிழும் மரம்போலப் பூமியில் வீழ்ந்தாள். அப்போது யசோதையைச் சூழ்ந்திருந்த ஆயர் மாதர்கள் பூதகியின் மார்பில் துலங்கிய சிறுவனையெடுத்து மிகுந்த அன்புடன் யசோதையின்கையில் கொடுக்கப், பிள்ளையைக் கையில் வாங்கி அணைத்து உச்சிமோந்து அழுது புலம்பினள். அதைக் கண்டு கண்ணனும் அழுது தேம்பியகாலத்தில் உரோகணியும் மற்றுமுள்ள மங்கையர்களெல்லாஞ் சமீபித்து, பாலக்கிரகதோஷம் பற்றிய படியால் குழந்தை தேம்பித்தேம்பி அழுகிறனென்று கருதி, பசுவின் பாலைக்கொண்டு அயினிகழித்து மறையவர்க்கீந்து, ஆவின் கோமயஞ் சேர்த்துக் கண்ணனுக்குத் திருமஞ்சனமாட்டி, பன்னிரண்டு நாம முஞ்சாத்தி, வேதியர்கள் வேதமந்திர நீர்தெளித்து, கோதானம் பெற்றுச்செல்ல, சில மாதர்கள் பலதரம் கற்பூரம் சுற்றிப்போட்டு, ஆயிர நாமங்களுடைய பகவான் காப்பாற்ற வேணுமென்றுக் காப்பிட்டார்கள்.

அப்போது கஞ்சனுக்கு வருடத்திய பகுதிபணங்கட்ட மதுரா நகரத்திற்குப் போயிருந்த நந்தகோபன் பணத்தைச் செலுத்தி விட்டு அதிவேகமாகவந்து ஆயர்பாடியிற்சேர்ந்து கடந்த விபரீதங் களை அங்குள்ளவர்களா லறிந்து, பருவதாகாரமாய் விழுந்துக் கிடக் கும் பூதத்தைக்கண்டு, மயங்கித் நியங்கி பயந்து ஏங்கி, மகனை யெடுத் தணைத்து முத்தமிட்டு, உச்சிமோந்து, "யாதவகுலத்தரசனுகிய வசுதேவர் இங்கு நடக்கப்போகிற விபரீதத்தை எவ்வாறே தெரிந்து சொன்னர். இதமெத்த ஆச்சரியம்! ஆச்சரிய!!" மென்று சொல்லி, என் மகனைக்காத்துப் பேயி னுயிரையுண்ட எம்பெருமானுக்கு நமஸ் கரிக்கின்றேன் என்று கைகூப்பித் தண்டனிட்டுப் பெருமகிழ்ச்சி யுடன் தரித்து, ஓராதனங்கள் முதலாகியதனுஞ் செய்து பிராமணர்க ளுக்கு அநேக கோதானங்கொடுத்து, மேருபருவத சிகரத்தை யொத்து மடிந்தவளுடைய உடலைக் கண்டகோடாலியினுல் துண்டு துண்டாகத் தறித்து, சுடலையிற் சேர்த்து நீக்கொண்டு கொளுத்தச் சுடுநாற்றமின்றி, பரிமணம்வீச அவள் பரகதியடைந்தாள். விஷப் பாலைக்கொடுத்து உயிரைவாங்கக் கருதிய வஞ்சிக்கு நல்வீடு அளித்த பகவான், இரவும் பகலும் முலைப்பாலைக் கொடுத்து,அன்பாக வளர்க் கும் பெற்ற தாய்க்குப் பரமபதம் கொடுப்பதற்குத் தடையேயில்லை! இதற்கையமில்லை. அதன்பின்பு, நந்தகோபாலன் மிக அருமையாய்க் கண்ணனைப் பாதுகாக்கும்படிச் சட்டநிட்டஞ் செய்ய யசோதையும் மகனைக் கைவிடாது மிகு சாக்கிரதையாய் வளர்த்து வந்தாள்.

சகடாசுரன் வதை

அவ்வருட அந்தியத்தில் நந்தகோபாலன் ஊராரனைவருக்கும் தெரிவித்து வரவழைத்து பத்தரை மாற்றுத் தங்கத்தில் நவரத்தினங் கள் பதித்த தொட்டிலைப் பலவிதமலர்களினுல் அலங்கரித்து வாசனைத் திரவியங்களைத் தெளித்து அத்தொட்டிலில் தன் பிள்ளையாகிய கண்ணனையிட்டு அநேக மேளவாத்தியங்கள் முழங்க, மிகு ஆடம் பரத்துடன் பல பெண்களினுல் இனிமையாகிய பாட்டுகளுடன் தாலாட்டிக் கொண்டிருக்கும் வேளையில், அங்கே மதுராநகரத்தில் பூதகிமடிந்த சமாச்சாரங் கேட்ட கஞ்சன் சகடாசுரனை யழைத்து, "நந்தகோபன் மனைக்குச்சென்று அங்கு மிகவும் வடிவழகமைந்த பிள்ளையைக்கொன்றுவா" வென்றிசைத்தனுப்ப, அவ் வசுரன் அவ்வாறே சென்று அக்குழந்தையை யிட்டிருக்கும் தொட்டிலி

னிடம் மறைந்து சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது நந்தகோபன் யசோதை உரோகணியிவர்கள் அடங்கா மகிழ்ச்சி யடையும் படியாகப் பல இசைவாகப் பாட்டுகளைப்பாடி மங்கள வாழ்த்துகளானவுடன், கண்ணனுக்கு திருட்டிக்கழித்து, பற்பல தானங்களைப் பூசுரருக்கும் மாதர்களுக்கும் யீந்து அனுப்பி, தம்மவர் களுடன் பரிவாக அன்னபானாதி அறுசுவையுண்டு களித்துச், சந் தன புட்ப தாம்பூலாதி பரிமள திரவியங்களை உதவி, விடைதரப் பெற்று வந்திருந்த யாவரும் தங்கடங்கள் இல்லம் சேர்ந்தார்கள். பின்பு நந்தகோபன் முதலானோரும் புசித்து ஆசாசந்தீர்த்துக் கொண்டிருக்கும் வகையையுணர்ந்து, சகடாசுரன் நல்லசமயம் வாய்த்ததென்று அதிகமகிழ்வுடன் கமலக்கண்ணனை வதை செய்யக் கருதி, சமீபமாகச் சென்றான்; அப்படித் தனது சமீபமாகவந்த அசுரனது நிடத்தை யறிந்து கண்ணன் தன்னுடைய மெல்லிய செந்தாமரை யொத்த திருவடிகளினால் அவனை உதைமேலுதையும் இடைவிடாமலுதைக்க, அவ்வுதையினால் அரக்கன் எலும்புகள் முறிந்து, நரம்புகளறுந்து, மெய்யொடிந்து பூமியில் விழுந்து மடிந் தான். அவனது மார்பின்மேலிருந்து கண்ணன் மிகவும் விம்மி விம்மிச் சிறியழ, அவ்வழு குரலோசையைக்கேட்டு யசோதை உரோ கணி முதலிய பலவனிதைகளும் மனமெலிந்து திடுதிடென்றோடி வந்து கண்ணனைப் பார்த்து விசனமுற்றிருக்கிறபோது, ஆயர்கள் பலருடன் நந்தகோபனும் அங்குவந்து, பருவதா காரமாயுருண்டு கிடக்கும் அசுரன் மார்பின்மேற் றுலங்கி, வீறுவீறென்றழுகிற குழந்தையைப்பற்றி எடுத்து, யசோதையின் கையில்கொடுக்க, அவள் வாங்கிப் பிள்ளையைப்பார்த்து, ஏங்கி யணைத்து; பலவித பாட்டுகளை யும், பலவித பராக்குகளைக் காட்டியும் விடாது தேம்பித்தேம்பி யழு கிறதைக்கண்டு யசோதை, "அடியம்மா! நானென் செய்வேன்! குழந்தை யழுதழுதுக் குரலும் கட்டிக்கொண்டதே! வியர்வை வழி கின்றதே! கையிலுங் காலிலும் நிற்கவில்லையே! அடா மகனே! என்று கூவி மெய் சோர்ந்தாள்; அதைக்கண்டு சில மாதர்கள் யசோதையைக் கிட்டிப் பலவித உபசாரஞ்செய்யச், சோர்வு நீங்கி யெழுந்து, பிள்ளைக்குப் பால்கொடுக்கச் சிறுவன் உண்ணுவதைக் கண்டு மனோதுக்கம் நீங்கி மகிழ்ந்திருக்க, நந்தகோபாலன் கண்டு சந்தோஷத்தினால் சிறுவனையெடுத்து மெய்யைத்தடவி உச்சிமோந்து கொஞ்சிவிளையாடிச் சற்றுநேரம் வைத்திருந்து, மறுபடியும் யசோ

தையின் கையில் கொடுத்து வேதமந்திரங்களினால் வேதியர்களால் ஓமம்வளர்த்தி மஞ்சள் நீர் சுற்றி ஸ்நிந்து பூதப்பிசாசுகள் சேராவண்ணம் அட்டவக்கிரத்தை யோகிக் குளிசமெழுதிக் கட்டினபின்பு யசோதை குழந்தையை யெடுத்தணைத்தாள். உடனே நந்தகோபன் அரக்கப்பிணத்தை யெடுத்தப்புறத்தெறிந்து குழந்தையை மிக்க பரிவுடன் பாதுகாத்து வந்தான்.

துருணவர்த்தன் வதை

இப்படிச் சிலநாள் சென்றபின்பு யசோதை கண்ணனுக்கு ஒரு நாள் நீராட்டி மடியின்மேல் வைத்துக்கொண்டு நவரத்தினாபரணங்களைப் பூட்டிக்கொண்டிருக்க, சிறுவன் சுமக்கக்கூடாத பாரமாகியதை யுணர்ந்து நிட்டெனப் பூமியின்மேல் விட்டு, "இவனென்ன பரந்தாமனே? ஆயிரநர்மனே? செகன்னாதனே? வேதனைப்பெற்ற மாதவனே" என்று தனக்குத்தானே யோசித்துக்கொண்டிருக்கிற போது, கஞ்சனுடைய ஏவலால் துருணவர்த்தனென்னும் கொடிய அரக்கன் ஆயர்பாடியை யணுகி உக்கிரமாகிய கோபத்துடன் சுழல் காற்றின் வடிவெடுத்து பூமியெங்கும் நடுங்க, பருவதங்கள் அதிர, பறவைக் கூட்டங்களனைத்தும் மடிய, மேகங்களெல்லாம் பரந்தோட, மரங்களெல்லாம் வேருடன் பஞ்சுபோலக் கிளம்பி ஆகாயத்திற் பறந்துபோய் ஒன்றின்மேலொன்று விழுந்து அடிபட்டு ஓடிந்து தூளாகிக் கருந்தூள் செந்தூள் கிளம்பி ஆகாயத்தை மறைக்க, வானுலகத்தோர்கள், "இதுவென்ன யுகாந்தகாலமுடிவோ? சண்டமாருதமோ? யாதொன்றுந் தெரியவில்லையே?" என்று அஞ்சி நடுக்கமுற்றிருக்க வந்தான் அவ்வரக்கன் இங்கே, ஆயர்பாடியிலிருந்த கோபிகைகள், ஆயர்கள், புதல்வர்கள், பசுக்கள், கன்றுகள் முதலியாவற்றும் புழுதி மழையெனக்கருதி, திசைகளெல்லாம் மாயை கண்டு அழுதுவாடி மெய்குலைந்து ஓடினர்கள். இதைக்கண்ட கொடியனுகிய அரக்கன் இது நல்ல தருணமெனக்கருதி, சிறு குழந்தை வடிவாயிருக்கும் செகதீசனைத் தூக்கிக்கொண்டு, ஆகாயத்திற் கிளம்பி மடிக்க எத்தனிப்பதை யறிந்து, குழந்தை வடிவாயிருக்கும் பகவான், அரக்கனுக்குச் சுமக்கப்படாத பாரமாக விளங்கினர். அரக்கன் சுமக்கமாட்டாமல் பூமியில் விழும்படி விட்டுவிடவே, பகவான் விடாமல் தன் கைகளிரண்டையும் அவன் கழுத்தில் மாட்டிக்கொண்டு நெருக்கத் தொடங்கினர். இதனால் இவ்வரக்கன்

விழிகள் பிதுங்கி நாக்குவெளிப்பட, பற்கடித்துக்கொண்டு பூமியில் விழுந்து உயிரைவிட, அவன் மார்புமீது விளங்கினர்.

அந்த வேளையில் யசோதையானவள் சுழல்காற்றி லகப்பட்டு விறுவிறென்று எழும்பும் மணலினுல் கண்ணைத்திறக்காமல் மூடிக் கொண்டிருந்து, காற்று நின்றவுடன் கண்களைத் திறந்து பார்த்து, குழந்தையைக் காணுமல் தேடி வாடிமுகத்தி லறைந்துக்கொண்டு, கன்றையிழந்த பசுவைப்போலப் பூமிமேல் விழுந்து புரண்டு அழுது புலம்புகிறபோது, அருகிலிருந்த உரோகணி முதலான மடந்தையர் கள் தேற்றத் தேறியெழுந்து, முன்னம் பூதகியின் விடமுலையுண்டு பிழைத்தாய்; இரண்டாவது சகடாசுரனுல் மெலிந்து நொந்து தேக மெலிந்து தேறிவருகிற காலத்தில் பாழாகிய சுழல்காற்றிலகப்பட்டு எங்குபோனுய்? அடா மகனே! அழகான மகனே! உன்னைக் கண் ணுற் பாராமல் இனி யென்னுயிரை உலகில் வாழவைப்பே னென் றென்று புலம்புகிற வேளையில், நந்தகோபனும், ஆயர்களும், அவர் கள் மாதர்களும் வந்து அடித்துமோதி விழுந்தழுது எழுந்து, இப் படிப்பட்ட மாயஞ்செய்து சிறுவனை யெடுத்துக்கொண்டுபோன வல் லமையுள்ளவன் யாவனென்று ஆங்கி யெங்குமோடி வாடித் தேடித் திரிந்துக்கொண்டு வருகிறபோது, அங்கோரிடத்தில் மடிந்து கிடக் கின்ற அசுரன் மார்பின்மீது இருக்கும் மைந்தனைக்கண்டு, சிலர் ஊருக்குட்சென்று சொல்லக்கேட்டு, யசோதை உரோகணி நந்த கோபன்முதல் ஆயர்களும் மாதர்களும் பெருந்திரளாகக் கூடி யோடிச் சிறுவனைக்கண்டு, யாவரும் துயரமுற்றுச் சிறுகையுடன் பல்லாபரணங்களிலங்க நீலமேனியைப்போலப் பிரகாசிக்கும் திரு மேனியையுடையப் புதல்வனை ஆயர்களெடுத்து வந்து யசோதையின் கையில்கொடுக்க, அம்மாது புதல்வனைக்கண்டு அழுது அணைத்து உச்சிமோந்து களித்து அன்புடன் முலைப்பாலூட்ட, உண்ட புதல் வனை சொல்லுவதற்கரிதாகிய மகிழ்ச்சியோடு உரோகணி யெடுத்து மார்புடனணைத்து நந்தகோபனிடங் கொடுக்க, அவரும் மைந்தனை யெடுத்துத் தழுவி முத்தமிட்டு யாவரும் அகம் சேர்ந்து உத்தம பிரா மணர்களை அழைப்பித்து, புதல்வனுக்கு எந்தத் தோஷமும் அணுகா வண்ணம் செய்யவேண்டிய சிகிச்சையாதோ அதைச் செய்யுங்க ளென்றுப் பிரார்த்திக்க, அம்மறையவர்கள் வேத மந்திரங்களை யுச்ச ரித்து தோஷங்கள் சேராவண்ணம் மங்களவாசி கூறி, "ஐயா!

நந்தகோபரே! நீர்செய்யும் அரி நிரு வாராதனையின் பலததால் நினது புதல்வனுக்கு யாதொரு வீபத்தும் நேரிடாமல் உயிர் பெற் றிருக்கிறு' னென்று சொல்லி நடந்தார்கள். பின்பு யசோதை தன் புதல்வனுக்கு நீராட்டி, சீராட்டி, மைதீட்டி, பல பணிகளைப் பூட்டி, மலர்சூட்டி வடிவழகைக் கண்டுகளித்து கொஞ்சிக்கொண்டிருந்தாள்.

அப்போது கிருஷ்ணன் கோட்டாவிவிட, அவ்வாயினிடத்தில் சத்த சமுத்திரங்களும், அட்டகுல பருவதங்களும், அட்டதிக்குப் பாலகர்களும், யானைகளும், சூரிய சந்திர நவக்கோள்களும், முப் பத்து மூக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணுயிரம் இருடிகளும், பல சீவராசிகளும் நிறைந்திருக்கின்ற அண்டபிண்ட பிரமாண்டங் கள் யாவற்றையுங் கண்டு யசோதை நடுங்கி நின்மலனுய்; நித்திய ஆதிமத்தியாந்த ரகிதனுய்; ஆதிமூர்த்தியாய் விளங்கும் விஷ்ணுவே வந்து நமது வயிற்றிற் பிறந்தானென்று நெஞ்சமுருகி ஆனந்த மடைய, உடனே பகவான் 'இவள் நம்மை இன்னவனென்றுத் நிடஞ்செய்துவிட்டால் மோச' மெனக்கருதி, தன் மாயையை யேவி, மகனென்று கருதும்படிச் செய்தார். மாயையினுல் யசோதை கட்டுப்பட்டு பேதைமதியால் மோகமதிகரித்து புத்திர வாஞ்சை மேலிட்டுத் தன் மகனென்றே பாராட்டி அதிக களிப்புடன் போஷித்து வந்தாள்.

குக்குடாசுரன் வதை

இவ்வண்ணமாகக் கண்ணன் நாளுக்கு நாள் வளர்ந்து தவழும் பருவம் அடைந்து இங்குமங்குமாக ஊர்ந்து வருகிறபோது, ஒரு நாள் கஞ்சனுல் ஏவப்பட்ட அசுரனுவன், குக்கிட வடிவமெடுத் துத் தன் முன்னம்வந்து நின்று கொல்லுதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கக்கண்டு, சக்கரத்தை யேந்தும் வலதுகையினுல் அவன் சிரத்தின்மேல் ஓங்கியறையவே, அவ்வறையின் பாதை சகிக்கமாட் டாமல் பதறிப் பதறிக்கூவி அவ்வசுரன் பூமியின்மேல் விழுந்து மாண்டான். அவ்வசுரன் மெய்ப்பதறிக் கூவிய ஓசையைக் கேட்டு நந்தகோபன் யசோதை முதலானவர்களும் மெய்குலைந்து நடுங்கி வேகமாயோடிக் குழந்தையை யெடுத்துத்தழுவி உச்சிமோந்து ஆத ரித்து, ஏமாற்றிபோன்ற அவுணன் யாக்கையைத் துண்டுசெய்து கொண்டுபோய்க் ககனத்தில் விட்டெறிந்து உத்தம பிராமணரைக் கொண்டு வேதமந்திரங்களால் ஓமம் வளர்த்தி பலவித தீபதிருட்டி

கள் சுற்றியெறிந்து மங்கள ஆசிகள் கூறினபின்பு யசோதை கண்ணனுக்குச் சுத்த நீராட்டி, நெற்றிக்குச் சுட்டிமுதல் பல ஆபரணங்களைச் சூட்டி, இணையில்லாத மகிழ்ச்சியுடன் பாலுண்ணக்கொடுத்து ஆனந்த மடைந்திருந்தாள்.

வெண்ணெய் யுண்ணல்

பிறகு கண்ணன் தத்தித் தத்தி நடக்கும் பருவமுண்டாகி நடந்துகொண்டு வீட்டிலிருந்த வண்ணமே ஆயர்கள் வீடுகள் தோறுஞ் சென்று பால், தயிர் வெண்ணெய்களை யுண்டு, வெறும் பாண்டங்களாக்கி விடுவான்; இந்தப்படியாக ஆயச் சிறுவர்களைக் கூட்டிக்கொண்டு தினமுஞ்சென்று, எட்டாமல் உறிமேல் வைத்திருக்கும் வெண்ணெய்ச் சட்டிகளைக் கொம்பினூற் குத்தி வெண்ணெய்களைக் கையில் தாங்கிச் சிறுவர்களுக்கும் குரங்கிற்குங் கொடுத்துத் தானும் புசித்து, வெறும்பாண்டங்களாகச் செய்து வருவதைக் கண்டு ஆயமாதர்கள் எல்லாங்கூடி, 'எவ்விதத்திலாகிலுங் கண்ணனைப் பிடித்துக்கொண்டு போய், யசோதைக்கு மெய்ப்படுத்தி அவனுக்குத் தண்டனை செய்விக்கவேண்டு'மென்று கூட்டத்தில் பேசி முடிவுசெய்துகொண்டு, ஆயமாதர்களனைவர்களும் தங்கள் தங்கள் வீடுகளைமூடித் தாழிட்டு மனைக்குவெளியில் நாற்புறமும் கண்ணனைக் கைப்பிடியாகப் பிடிக்கும்பொருட்டுக் கார்த்திருந்தார்கள். கண்ணன் எப்படியோ புகுந்து பால், தயிர் வெண்ணெய்களைப் புரையிடுவதற்கும் ஒரு துளியேனும் வைக்காமல் புசித்துவிட்டு ஒரு வீட்டில் பாடுவான்; ஆடுவான்; ஒருவீட்டில் பெருகப் பெருகச் சிரிப்பான்; ஒரு வீட்டில் திட்டுவான்; ஒருவீட்டில் நங்குகாட்டுவான்; ஒருவீட்டில் கிளி மொழிவதுபோலப் பேசுவான்; இன்னொருவீட்டில் குயிலைப் போல மொழிவான்; இன்னொரு வீட்டில் மயிலைப்போல அகவுவான்; மற்றொரு வீட்டில் பிராமணத்தியைப்போலும் மொழிவான்; இந்தப்படியாகக் கண்ணன் பலவித பறவைகளைப்போல ஓசையிட்டுப் பின்பு எப்படியோ மாயமாய் அவர்கள் கண்களுக்கு அகப்படாமல் போயிருந்தான். உடனே ஆய மாதர்கள் கதவுகளைத் திறந்து உள்ளேபோய் பார்த்து, ஒருத்தி வெண்ணெயைக் காணுமென்றும், வேறொருத்தி பாண்டத்தில் நிரம்பிவைத்த பாலில் ஒரு துளி தயிர் கூட இல்லையே யென்றும், இந்தப்படியாக ஆயமாதர்களெல்லாம் கூக்குரலிட்டுச் சந்துகளில், மந்தை மந்தையாகக்கூடிப் பேசிக்

கொண்டு வந்து யசோதையைக் கண்டு, "நின் மகன் செய்யும் அக்கிரமங்களை நாங்களென்னவென்று சொல்லுவோம்! இந்த அநியாயம் எங்கேயாகிலும் உண்டா? எங்களைப் பிழைக்க ஒட்டவில்லையே? எட்டாமல் உறியின்மேல் வைத்திருக்கும் வெண்ணெய், பால், தயிர், நெய் இவைகளை எல்லாம் புசித்து வெறும் பாண்டங்களாகச் செய்வதுமன்றிக், கன்றுகளை யெல்லாம் அவிழ்த்துவிட்டு, 'பாலூட்டி விடுகிறது' என்று சொல்லி எங்கள் கணவர்களை எழுப்பியனுப்பி அவர் போக எங்களை கட்டியணைத்து முத்தமிடுகிறான். இந்தப்படி இவன் செய்யும் துன்மார்க்கங்கள் மெத்தவுண்டு; அவைகள் முழுமையுஞ் சொல்லவேண்டு மென்றால், கணக்கு மிதமில்லை. ஆகையால், நாங்கள் எவ்வாறு சீவனஞ்செய்வது? நின் மகனுக்குத் தக்க நீதிகளைச் சொல்லி, தண்டனை செய்வாய்" என்று ஆயமாதர்கள் சொல்லக் கேட்டு, யசோதை சிரித்து கோபிகாப் பெண்களைப் பார்த்துச் சொல்லுகிறாள்,

"கேளுங்கள் ஆயர் மாதர்களே! என்மகனுக்கு அக்கம் பக்கத்திலிருக்கும் வீடுகளுக்குப்போக வழிதெரியாது. எப்போதும் இடைவிடாமல் என்னைவிட்டு எங்கும் போகவுமாட்டான்; இவனை யென் வேலையினிமித்தம் கீழேவிட்டால், சேர்த்துக் கட்டிக்கொண்டு எப்பொழுதும் என்னை விட்டகன்று போகான்; இதுவுமன்றி, இன்னம் கண்களைத்திறந்து நன்றாய்ப் பார்க்க அறியாச் சிறுவன்மீது இத்தனை பேர்களும் கோள்சொல்ல வந்தீர்களே இது மெத்த நன்றாயிருக்கிறது! அதேக நாளாய் மதலைப்பேறில்லாமல் இப்போதுதான் பகவான் கிருபையினால் ஒரு பிள்ளையைப்பெற்று என் ஆவல் தீர வளர்த்து வருகிறேன். இந்த ஒருபிள்ளை எனக்கிருப்பது உங்களுக்கு மனக்காளவில்லையோ? ஒவ்வொரு நாட்டினுமுள்ள குடிகள் அரசனுக்கு நன்மையைக்கருதி "எங்களரசனுக்கு ஒரு புதல்வனை யளிக்க வேணும் பகவானே!" என்று தியானஞ்செய்வார்கள். இந்த நாட்டிலிருக்கும் குடிகளாகிய நீங்கள் அரசனுக்கிருக்கும் ஒரு பிள்ளையைக் கண்டு பொறுமைப்படுகிறீர்கள், இந்நாட்டின் அநியாயத்தைப்போல எந்நாட்டினும் நடவாது" என்று நிட்டூர வார்த்தைகள் பகர்ந்து மேலுஞ் சொல்லுகிறாள்; அடி மாதர்களே! என் மகன் உங்கள் வீட்டிற்கு வந்து பால், தயிர், வெண்ணெய், நெய் இவைகளைத் திருடித் தின்று னென்றல்லவோ சொன்னீர்கள்; மறுபடியும் அவன் அங்கு

வந்து கிருட்டுவேலை செய்ததாகக்கண்ட ஒவ்வொருவரும் அவனைப் பாலுங் கையுமாகப் பிடித்து எண்மூன் கொண்டுவந்து விடுங்கள்; நான் தக்கபடி உங்கள் முன்னிலையிலே தண்டிக்கிறேன் என்று சொல்லக்கேட்ட ஆயர்மாதர்களனைவர்களும், பதில்மொழி சொல்லாமல் தங்கள் தங்கள் அகம்புகுந்து கிருட்டினன் வரவுக் கெதிர்பார்த்திருக்கிறபோது, வழக்கப்படி ஒருநாள் கோபாலச் சிறுவர்களுடன் கிருட்டினன் ஆயர்பாடிக்கு வந்து வெண்ணெய், தயிர், பால், நெய் இவைகளைக் களவுசெய்து புசித்துக்கொண்டிருக்கிறபோது, சில மாதர்கள் கூடிக் கிருட்டினனைப் பிடித்து, ஒரு அறைவீட்டிற்குள் போட்டுக் கதவை பூட்டிவைத்து, அவர்கள் அனைவருங்கூடி யசோதையிடஞ் சொல்லவந்து, யசோதைமடியில் பாலுண்டுகொண்டிருக்கும் கிருட்டினனைக்கண்டு ஆச்சரியப்பட்டு நாணமடைந்து, இதுவென்ன மாயமோவென்று நினைந்து, உண்மையை யசோதையினிடத்திற் சொல்லிவிட்டு போயினர்கள். பின்பு யசோதை தன் மைந்தனை மிகு பிரியமாகக் காப்பாற்றிவந்தாள்.

ததிபாண்ட விகலனம்

ஒருநாள் யசோதை தன் குழலிலைய, மலர்கள்வீழ, காதில் தரித்த தோடுக ளிரண்டும் அசைந்தாட, தனங்களிரண்டும் கச்சையைவிட்டு நழுவி ஊசலாட, கழுத்தில் விளங்கும் நவரத்தின மணிமாலைகள் பிரகாசிக்க, முகத்தினில் வேர்வையானது முத்துக்களைப்போல் விளங்க, இருகரங்களினுந் தரித்த வளையல் கலகலென்று ஒலிக்க, சிரமத்தினால் பெருஞ் சுவாசம்வீச, மத்தினால் தாழியில் இருக்கும் தயிர் கடைந்துக் கொண்டிருக்கும்போது, மிகுந்தபசி கொண்டவனைப் போல கண்ணன், 'அம்மா! பாச்சிகொ' டென்று, மத்தைப் பிடித்துக்கொண்டு அழுது, மத்தைவிடுத்து இருகையாலும் துகிலைப்பற்றியிழுக்க, பசுவானது கன்றுக் கிரங்கி பால் கொடுப்பதைப்போல யசோதை யெடுத்து அணைத்து மனமுருகி உச்சி மோந்து முலைப் பால் கொடுத்துக்கொண்டிருக்கிறபோது, தீ அதிகமாகையால் அடுப்பில் பால்பொங்கி விழுவதைக்கண்டு, சிறுவனை நிலத்தில்விட்டுப் பாலை யிறக்கி வைக்கும்பொருட்டு யசோதைப் போயினாள்; இதைக்கண்ட கண்ணன் மிகுந்த கோபத்தோடு அங்கிருந்த ஓர் கல்லையெடுத்து தயிர் பாண்டத்தை யுடைத்து, அதிலிருந்த வெண்ணெயைத் தின்று விட்டுக் காலிலணிந்திருக்கும் சிலம்பின் ஒளி கேளாவண்ணம் மெல்

லெனச் சென்று ஒருதனி வீட்டிற்குள் நுழைந்து, உரலியுருட்டித் திருப்பி அதன்மேலேறிநின்று உறியின் சிக்கத்தையறுத்துப் பாண்டத்திலுள்ள வெண்ணெயை அள்ளி குரங்கிற்குக் கொடுத்து, பயந்தவனைப்போல அன்னையின் வரவுக் கெதிர் நோக்கிக்கொண்டிருக்கிறபோது, அங்கே யசோதை தீயை அவித்துப் பாலியிறக்கி வைத்துவிட்டுப் புதல்வன் என்னசெய்கின்றான் என்று வந்துபார்க்க, தயிரானது நெய்பெருகியதைப்போலப் பூமியில்நிறைந்து ஓடுவதையும், பாண்டம் பலவோடுகளாய் நொறுங்கி யிருப்பதையுங்கண்டு, வயிறு நிறம்பப் பால் கொடுக்கவில்லை என்ற கோபத்தினாலே தயிர்ப்பாண்டத்தை உடைத்தான்போலக் காண்கிறதென்று யோசித்துத், தானும் மெத்தக் கோபங்கொண்டவளாகிக் கையில் ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டு கண்ணனை எங்குத்தேடியுங் காணமல் மனமுழுதும் ஆராய்ந்து வருகிறபோது, ஓர் அறைவீட்டினுள்ளே வெண்ணெயை அள்ளி அள்ளி நெடுநேரம் குரங்கிற்குக் கொடுத்துக்கொண்டிருக்கும் மைந்தனைக் கண்டாள். அன்னையைப் பார்த்துப்பயந்து ஓடுகிற பாவனையாய் அவ்விடம் நீங்கியோட, இடையிற்றரித்த ஆடை அசைய, குழலவிழ்ந்து மலர்மாலை வீழ, முத்துமாலைப் பவளமாலை இரத்தினமாலைகள் அசைந்தாடி மின்ன, தனங்கள் ஊசலாட, கைகளிலணிந்த வளையல் ஒலிக்க, பாதங்களில் பூண்ட சிலம்பரற்ற அன்ன நடையை யொத்த யசோதை பின்தொடர்ந்து அவனைப் பிடிக்க ஓடியகாலத்தில், கண்ணன் திருவடியில் விழுந்து வணங்கி எழுந்து சொல்லுகின்றான்.

அருந்தவர்களுக்கும் யோகிகளுக்கும் நான்முகனுக்கும் இந்திரனுக்கும் மறைகளுக்கும் அகப்படாத ஆதிமூர்த்தியாகிய நின்னை சேவித்தேன். எனது பாவங்களை யொழித்தேன். இனி யான் அடையவேண்டிய சுகம் வேறொன்றுமில்லை. என் மனதில் குடிகொண்டிருப்பது நின்படை வீடொன்றன்றி வேறொரு கவலையுமில்லை என்று வேண்டும் தனபாண்டரங்கனைக் கண்ணன் பார்த்து, "தாதா! தங்கள் கருத்தின்படியே செய்கிறேன். இப்போது எனதன்னை என்னைப்பிடித்து அடிக்கும்படியாய்ப் பின்தொடர்ந்து ஓடிவருகிறாள்; அவள் வராமுன்னம் என்னைத் தாங்களிந்த சாலில் உள்ளே ஒளித்துவைத்துக் காப்பாற்றும்" என்று சொன்ன கண்ணமூர்த்தியின் கருத்தின்படி தனபாண்டரங்கன் தான் உட்கார்ந்துக்

கொண்டிருக்கும் சாலை எடுத்து அதினுள் கண்ணனை யிருத்திச் சாலைக் கவிழ்த்து முன்போலத் 'தான் அதின்பேரில் உட்கார்ந்துக் கொண்டான். அந்தச் சமயத்தில் யசோதை ஓடிவந்து, "ஐயா ததிபாண்டரங்களே! என் மகன் கண்ணன் இங்கு வந்தானே! அவனெங்கே?" யென்றாள். அதற்குப் பொய்சொல்லா வாசகனுகிய ததிபாண்டரங்கன் இதோ என் புட்டத்தின் கீழிருக்கிறனென, அம்மொழியை யசோதை பொய்சொல்லுகிறனெனக் கருதிச் சுற்றுமுற்றும் பார்த்து எங்கும் காணுமையால், "இவனைப்படிப்போனுன்? நமது கண்முன் இந்த வீட்டில் தானே நுழைந்தான்; இவனென்ன மாயனே? விரலத்தினை சிறுவன் இவன் செய்த இந்திரசாலத்தை யோசிக்கையில் மிகவும் ஆச்சரியகரமாகத்தோன்றுகின்றது; இப்போதே நமக்கு மெத்த களையாகவும் மெய் சலித்துக் காலோய்ந்து விட்டதே; நாம் இவனைப் பிடிப்பது மெத்தவும் அசாத்தியமே!" என்றுத் தனக்குத் தானே யோசித்துக் கொண்டிருக்கிறபோது, ததிபாண்டரங்கன், 'இது நமக்கு நல்லகால' மெனக் கருதி இணையில்லாத ஆனந்த மடைந்திருந்தான். அந்தவேளையில் கண்ணபரமான்மா ததிபாண்டரங்கனை யழைத்து, "தாதா! இனியென்னை விட்டுவிடு" மென, ததிபாண்டரங்கன் "ஓ கபடநாடக சூத்திராவதாரா! குருடாகி இருக்கும் எனக்கு இரண்டு கண்களுந் தெரியும்படிக் கிருபை செய்வாயாகில், உன்னைவிட்டு விடுகிறேன். இல்லாவிடில், நினது தாயிடஞ் சொல்லி உன்னைப்பிடித்துக் கொள்ளச் செய்வே" னென்று பயமுறுத்தினன். சிங்கம் பள்ளையாட்டுக்குப் பயந்து ஓடியது போல சகதீசன் பயந்து ததிபாண்டனுக்கு இரண்டு நேத்திரங்களும் தெரியும்படிக் கிருபைசெய்யத், ததிபாண்டன் தனக்குப் பகவான் கிருபையால் குருடு நீங்கிக் கண்கள் தெரிய மிகுந்த சந்தோஷத்துடன் இரண்டு நேத்திரங்களினுலும் உலகத்தைப் பார்த்து வெறுப்புண்டாகி, "சிருட்டி திதி சங்கார மெத்தொழிலுக்கும் காரணமாகி மூச்சுடராகி ஆதிமுதல்வனுகி விளங்கும் ஸ்ரீகிருஷ்ண! வாசுதேவா! தேவரீர் கிருபைசெய்த இவ்விரண்டு நேத்திரங்கள் மேலுமேலும் பாவத்துக்கேதுவாக இருக்கிறதே யல்லாமல், புண்ணியம் சிறிதுஞ் சம்பாதிப்பது அரிதாகக் காணப்படுகிறது. ஆகையால், நரகவேதுவாகிய இந்த வுலகத்தில் ஒரு இமைப்பொழுதும் இருக்க மனமில்லாத அடியேனுக்குத் தேவரீரது நித்திய விபூதியை யளித்துக் காக்கவேண்டு" மென்றுத் துதிக்க, 'ததிபாண்

டன் கருத்தின்படி உண்டாகக் கடவது' யென்று பகவான் மனத்தில் நினைத்தமாத்திரத்தில், ஆகாயத்திலிருந்து சுவரத்தினமானது தனிபாண்டன் முன் வந்து தோன்ற, தனிபாண்டன் அவ் விமானத்தின் மீதேறி அவ்விமானம் ஆகாயமார்க்கமாய்ப் போகிறபோது, யாதவர்களும், மாதர்களும், யசோதையுங் கண்டு ஆச்சரிய மடைந்து, தனிபாண்டனது உத்தம குணங்களைப் புகழ்ந்து கொண்டிருக்கிறபோது, சாலிற்குள்ளிருந்த கண்ணன் வெளிப்பட்டுத் தன் அன்னையாகிய யசோதையின் முன்வந்து யாதொன்றும் அறியாதவனைப்போலத் தேம்பித் தேம்பி யழுதுக்கொண்டு நிற்க, தன் சமீபத்தில் நெருங்கிய மகனைப்பார்த்து யசோதை இலகுவாய்ப் பிடித்துக் கொண்டு வீட்டிற் கழைத்துப்போய் உரலிற்கட்டி விட்டாள்.

மருதமரச்சாப நிவர்த்தி

அவ்வுரலை இழுத்துக்கொண்டு, புறக்கடையிற் சென்று இரண்டு பிரிவோடுங் கூடிய மருதமரத்தின் சந்தில் நுழைந்துபோகிறபோது, முன்னம் இராமாவதாரத்தில் பாதத்தூள்பட்டுக் கல்லுருவம் பெண்ணுருவ மானதுபோல, மருதமரமானது சல்லிவேருடன் அறுந்த பூமியிற் சாய்ந்து, அதிலிருந்தும் இரண்டு புருடர்கள் தோன்றினார்கள்; அவர்கள் யாரெனில், குபேரன் பிள்ளைகளாகிய நளகூபர மணிக்கிரீவனென்று சொல்லப்பட்டவர்கள். இவர்கள் இருவரும் என்ன காரணத்தினல் இச்சாபத்தைப் பெற்றார்களென்றால், முன்னமொரு நாள் இவ்விருவரும் அதிகமாதர்களுடன் கானகமேவி, மதுபான மாந்தர்களாகி, மனிதசஞ்சாரமில்லாத ஒரு தடாகத்தில் ஆடையில்லாமல் நிகம்பரர்களாகி, சலக்கிரீடை செய்துக்கொண் டிருக்கிறபோது, அம்மார்க்கமாக நிரிலோக சஞ்சாரியாகிய நாரதமாமுனிவர் வரக் கண்டு, மாதர்களெல்லாஞ் சீக்கிரங்கரையேறித் தங்கள் தங்கள் ஆடைகளைத் தரித்துக்கொண்டார்கள். புருடர்களிருவரும் அவரைக் கண்டும், மதிக்காமல், ஆடையில்லாமல் நிகம்பரிகளாய் நின்றிருக்க நாரதர் கண்டு அவர்களை நோக்கி, நீங்கள் செல்வச் செருக்கினலும், "நாம் குபேரனுடைய பிள்ளைகள்; நமக்கு நிகர் இவ்வுலகத்தில் யாருங்கிடையாதென்ற கெருவத்தினலும், மதுபானத்தினலும் அகங்கரித்து நிகம்பரர்களாய் நின்றபடியால், நீங்களிருவரும் பூலோகத்திற்குச் சென்று நூறு தேவவருடம் மருதமரமாகயிருந்து பகவான் நிருவடிப்பரிசத்தினல் பழைய சன்மம்பெறக் கடவீர்க"

ளென்றுச் சபித்துப்போயினர். இக்காரணத்தினால் இவர்களிருவரும் பூலோகத்துக்கு வந்து மருதமரமாகி இருந்து பகவான் பாதம்பட்டுப் பழைய வுருவம்பெற்று சகதீசனுடைய சேவைசெய்து தங்களிருப் பிடஞ் சேர்ந்தார்கள்.

பின்பு மருதமரம் முறிந்த ஓசையைக் கேட்டு யசோதை உரோ கணி நந்தகோபன் முதலானோரும் ஓடிவந்து கண்ணனை வெளியே எடுத்து யசோதையின் கையிற்கொடுத்து, இத்தனை பருத்தமரம் ஒடிந்து விழுவதற்குப் பெருத்தகாற்றும் அடிக்கவில்லை! எவர்களும் வெட்டவுங் காணோம்! இதை யோசிக்குமிடத்து, இப்பிள்ளையால் மரம் முறியத் தள்ளுவதற்குச் சக்தியுண்டோ? இதுமெத்த ஆச்சரி யத்திற்குக் காரணமாக விருக்கிறதென்று யோசித்துக்கொண் டிருக்கையில், உபநந்தன் நந்தகோபனைப் பார்த்து, ஐயா! உமது புதல்வன் பிறந்தநாள்முதல் நாளது பரியந்தம் அவனுக்கு மேலும் மேலும் விபத்துக்கள் சம்பவித்துக்கொண்டே யிருக்கிறது. இதை யோசிக்கையில் உமது புதல்வனுக்கு பூதகி, சகடன், சுழல்காற்று ருக்குடன் முதலான துட்டர்கள் உபத்திரவங்களைத் தெய்வமாகிய அரியே நம்பங்கில் இருந்துக் காப்பாற்றினரென்பதற்குச் சந்தேக மில்லை. இத்தனை விபத்துக்கள் நடந்திருப்பதை நாம் கண்ணாரக் கண்டும், இவ்விடத்திலேயே இருப்போமாகில், இன்னமும் பல துர்நிமித்தங்க ளுண்டாகும்போலக் காண்கின்றது; ஆகையால் நாம் வாசமாயிருக்கும் பதியைவிட்டு அனைவர்களும் யமுனைக்கு கரையி லிருக்கின்ற பிருந்தாவனத்திற்குச்சென்று மாடகூட மண்ட பங்கள் ஆலயங்கள் முதலானவைகளையும் அழகாகக் கட்டிக் கொண்டு, அதில் குடியேறி யிருப்போமாகில் மெத்தவும் நலமுண் டாகுமென்றும்; அன்றியும், அங்குப் பசுக்கள் மேய்வதற்குப் புல்லு அதிகமாக விருக்கிறது; புனலுமுண்டு, கனிகாய்கள் யாவும் எதேட் டமாக இருக்கின்றமையால், தேவலோகத்தைப் போல நன்றாகக் குளிர்ச்சியும் சுகமும் சவுக்கியத்தையுந் தரும்படியான அந்த இடத் திற்கே போவது பலவிடயங்களுக்கும் அனுகூலமாமென்றும் சொல் லினன். உபநந்தன் மொழிகளைக்கேட்ட நந்தகோபன் அவன் இஷ்டப்படிக்கு மாடங்கள், கூடங்கள், மண்டபங்கள், ஆலயங்கள், தடாகங்கள் முதலியவைகளை யெல்லாம் அங்கே கட்டி பெருநாள் கொண்டாடிப் பிருந்தாவனத்தில் குடியேறி இலட்சுமி கடாட்சம் பெருகிச் செழிக்க நந்தகோபன் இனிதமர்ந்திருந்தனன்.

பகாசுரன் வதை

ஒருநாள் நந்தகோபன் பலராமரையும் கிருட்டின மூர்த்தியையும் அழைத்து, "நீங்களிருவர்களும் ஆயர் சிறுவர்களுடன் கூடச் சென்று இளங்கன்றுகளை மேய்த்துக்கொண்டு வாருங்க" ளென்று உரை செய்ய; அந்தப்படியே அவர் இருவரும் ஆயர் சிறுவர்களுடன் கன்றுகளை யோட்டிச்சென்று தன் சொற்படியாவரும் நடக்கும்படி கன்றுகளைக் கண்ணன் மேய்த்துக்கொண்டிருக்கும்போது பூதகி, சகடன், திரிணவர்த்தன், குக்குடன் முதலாகியவர்கள் மடிந்துபோன சமாசாரத்தைக் கேட்டு, கஞ்சன் மிகவும் கொதித்து உள்ளம் பதைத்து ஆலகால விடத்தைப்போன்ற பகாசுரன், அகாசுரன் இவ்விருவர்களையும் நோக்கி, "நீங்கள் சென்று நந்தகோபன் மைந்தனைக்கொன்று வாருங்களென்று சொல்லியனுப்ப; அக்கொடியர்களிருவரும் பிருந்தாவனத்தை யடைந்து, ஒருவன் கொக்காகவும், மற்றொருவன் பசுவின் கன்றாகவும் உருவமெடுத்துக் கன்றுகளுடனே கன்றுருவங் கொண்டவனும், கொக்கின் வடிவங் கொண்டவன் ஓர் மலையின்மேல் பெருத்த வெண்மையான மலையிருப்பதையொத்தும் இருந்தார்கள். அதில் கன்றுருவங் கொண்டவன் துள்ளியோடுவதும், திரும்பிவந்து கன்றுக்கூட்டங்களுடன் சேர்ந்து புல்லைத் தின்னுவதும், தண்ணீர்புசிக்கும் விந்தையையுங் கண்ணன் கண்டு நகைத்து, மெல்லென அந்த அவுணக்கன்றினை பிடித்து அங்கிருக்கும் விளாமரத்தின் கனியுதிரும்படி விட்டெறிந்த மாத்திரத்தில் அவ்வடியினால் கனிவீழ்ந்தது மன்றி, அரக்கனும் மடிந்து பூமியில் விழுந்தான். இதைக்கண்டு கைலையங்கிரிக்கொப்பாகிய பகாசுரன் கொதித்து விரைவாக வந்து மூக்கினாற் கொத்தி, அன்றுலகளந்தவனை விழுங்கின மாத்திரத்தில் அதன் வயிற்றிற்குட்சென்ற கண்ணமூர்த்தி காலாக்கினியைப் போல எரிகிறபோது, அவ்வக்கினியினால் நேரிட்ட வருத்தத்தைச் சகிக்க முடியாமல் அவ்வரக்கன் உமிழ்ந்தவுடனே, மிகுமணம் பொருந்திய துளபமாலையைத்தரித்த கண்ணன் ஆத்திநார் கிழிப்பதைப்போல மாயா கொக்கைப் பிடித்து இரண்டாய்க் கிழித்தெறிந்தான்.

அகாசுரன் வதை

அப்போது பகாசுரன் மடிந்த வகையையறிந்து, அகாசுரன் சினமிகுந்து பற்களைக் கடித்து மீசைதுடிக்க கஞ்சனைநோக்கி, "நான்

சென்று நந்தகோபன் மகனைக்கொன்று வருகிறே" னென்று சொல்லி வெளிப்பட்டு, பிருந்தாவனத்தை யணுகிக், கன்றுகளை மேய்க்கும்பொருட்டு ஆயர் சிறுவர்களும் பலராம கிருட்டின மூர்த்திகளும் வருகிற வழியில் பெருத்த பருவதத்தைப்போலப் பாம்பின் வடிவங்கொண்டிருந்தான். பலராம கிருட்டினர்களுடன் செல்லும் ஆயர் சிறுவர்கள் யாவரும் வழியிலிருக்கும் மலையைக்கண்டு 'நேற்றையத்தினம் இவ்வழியாகத்தானே வந்தோம்; அப்போது இல்லாத மலை இன்றெங்கிருந்து வளர்ந்து விட்டது' என்று ஆச்சரியப்பட்டு, ஆகிலும், 'இது மலையே யன்றி வேறொன்று மல்லவென்று கன்றுகளுடன் யாவரும் அம்மலையின் மீதேறிப் போகும்போது, அகாசுரன் தெருப்புக் காற்றடிப்பதுபோல சுவாசம் வீசி, சுவாசத்தால் கன்றுக் கூட்டங்களுடன் யாவரையு மிழுத்து விழுங்கினன். அவருடன் கிருஷ்ணபகவான் அதன் வாயிடத்தில் புகுந்து நீண்டமாத்திரத்தில் அகாசுரன் தேகம் இரண்டாய்ப் பிளந்து சிரம்வெடித்துச் சீவன் பிரிந்து சிதறி மாண்டான்.

காளிய நிர்த்தனம்

பலராமகிருஷ்ணர்கள் ஆயர் சிறுவர்களுடன் கன்றுகளையோட்டிக்கொண்டு, யமுனைநதியின் சார்பில் விளங்கும் காளியமடுவின் சமீபத்திற்சென்று கன்றுகளைவிட்டு மேய்த்துக்கொண்டிருக்கிற போது ஆயர் சிறுவர்களிற் சிலர் மடுவின் சமீபத்திற்குப்போய் மெய் சோர்ந்து விழுந்துவிட்டதைக்கண்ட கண்ணன், 'இக்காளியன் இங்கிருப்பதால் புல் பூண்டு மரங்களுந்தீய்ந்து காய்ந்துபோவதுடன், ஆகாயத்திலும் பறவைகளும் பறக்கக்கூடாமல் இவன் விட்டச் சுவாலையினல் மடிந்துபோகிறது. இந்த நீர் மனிதர்களுக்கும் பசுக்களுக்கும் உபயோகமில்லாமல் இவனொருவனே இம்மடுவில் சுகித்திருப்பது தருமமல்லவென்று கருதி, அங்குப்பட்டுப்போயிருந்த ஒரு கடப்பை மரத்தின்மீதேறி அம்மடுவின் நடுவில் குதித்தமாத்திரத்தில் சலம் தத்தளித்துத் தளும்பிக் கரைக்குமேல் ஓடிப்பாயிற்று. இவ்வோசையைக் கேட்டு, காளியன் நடுக்கிட்டு, 'இதுவென்ன ஆச்சரியமாக விருக்கிறது! நாம் வசிக்கும் இம்மடுவின் நாற்புறமும் இரண்டுகாத தூரத்திற்கும் எந்தப்பிராணியும் வந்து தலைகாட்டமாட்டாது. அப்படிக்கிருக்கும் நமது விடாக்கினியையும் மீறிவந்தவன் யாவனோ' வென்று சீக்கிரமாக எழுந்து ஆயிரம் சிரங்களின் பக்கத்

தில் விளங்கும் செவிகளாகிய இரண்டாயிரம் கண்களிலும் அக்கினிப் பொறிகள் பறக்க, வாயினின்றும் விடத்தைக் கக்கிக்கொண்டு சீறியோடி வந்து கண்ணனுக அவதாரஞ் செய்திருக்கின்றான் ஆதி தேவன் என்றுணராமல் சாமானிய மனிதனெனப் பாவித்து, மேல் விழுந்து கடித்து, உடலை சுற்றிக்கொண்டு எலும்புதொறுங்கும்படி இருக்கிறபோது, கரைமீதிருந்த ஆயர்பாலர்களும் பலராமரும் கன்றுகளும் விசனப்பட்டு, கண்களில் நீர் பெருகவிட்டு அழுதுவாடியுருகும்போது சில சிறுவர்கள் ஓடி இந்த விருத்தாந்தத்தை நந்த கோபனுடன் சொன்னார்கள்.

அதைக்கேட்டு நந்தகோபன் முதல் கோபாலர்களும், யசோதை முதல் ஆயர் மாதர்களும் ஓடிவந்து மடுவின் கரைசேர்ந்து பாம்பினால் பிணைக்கப்பட்டிருக்கும் கிருஷ்ண மூர்த்தியைக்கண்டு மரா மரங்கள் வேரற்று வீழ்வதைப்போல நந்தகோபன் மெய்மறந்து பூமியில் விழ, யாவரும் வீழ்ந்து முகத்திலறைந்துகொண்டு அழுது கலங்குகிறபோது, யசோதை நானினி யென்மகனை எப்போது காணப்போகிறேன்? மகனைப்பிரிந்து ஒருகணமேனும் உயிர்பெற்றிருக்கமாட்டேன். இந்த மடுவில் விழுந்து என்னுயிரை மாய்த்துக் கொள்ளுகிறே னென் றெழுந்தோடுகிறபோது, இதைக்கண்ட உரோகணிமாது சிரித்து அனைவர்களையுந் தடுத்துத் தேற்றி, 'சற்று பொறுத்திருங்கள். இவ்விடத்தில் நடக்கும் வேடிக்கையைப் பார்த்து நீங்களே சந்தோஷிக்கப் போகிறீர்க' ளென்று சொல்ல, அனைவர்களும் அந்தப்படியே கண்ணிமை கொட்டாமல் கண்ணனைப் பார்த்திருந்தார்கள்.

அப்போது காளியனால் பிணைத்து நெருக்குண்ட கிருஷ்ண பகவான், தேகத்தை வளர்த்து காளியன் காயத்துள்ள எலும்புகள் ஒடியச்செய்து, கட்டுகளை விடுவித்து அவனது சிரத்தின்மீது தன் திருவடிகளால் நடனஞ்செய்கிற காலத்தில், காளியன் படங்களும் ஆயிரம் சிரங்களும் நொறுங்கிக் கதறுகிறபோது, நாகப்பெண்கள் வந்து கிருஷ்ணமூர்த்தியின் பாதங்களில் விழுந்து, தங்கள் நாயகனைக் காப்பாற்றி மங்களியபிச்சைத் தரவேணுமென்று வேண்டிய அம்மாதர்கள் முறைகளுக்கு இரங்கி, அவனைக்காத்து அவ்விடத்தை விட்டு ஓட்டினான். இவைகளை யெல்லாங்கண்ட நந்தகோபன் யசோதை முதலிய யாவரும் என்றுமில்லாத சந்தோஷத்தை

யடைந்து, மகனை வாரித்தழுவி முத்தமிட்டு உச்சிமோந்து யசோதை ஆனந்தித்தாள்; நந்தகோபனும் இப்படியே ஆனந்தித்தான்; மற்ற வர்களெல்லாங் கொண்டாடிச் சென்று இல்லஞ்சேர்ந்து களிப்புட னிருந்தார்கள்.

பின்னொருநாள் ஆயர்மாதர்கள்கூடி யமுனைநதிக்கு வந்து தங்க ளாடைகளைக் களைந்து கரையின்மீது வைத்து நதியிலிறங்கி நீராடிக் கொண்டிருந்தபோது, கிருஷ்ணன் அங்கொருத்தர் கண்களுக்கும் புலப்படாமற் சென்று கரையின் மீதிருந்த ஆடைகள் யெல்லாம் எடுத்துக்கொண்டு, ஒரு புன்னை மரத்தின்மீதேறி, அதன் கிளைகள் தோறும் ஆடைகளைக்கட்டித் தானும் அதன்மீது இருந்தான். மாதர் கள் நீராடிவந்து கரைசேர்ந்து ஆடைகளைத் தேடிக்காணுமல் நான்கு திக்குகளிலும் பார்த்தும் அகப்படாமல், துயரமடைந்து அங்கோர் புன்னைமரத்தின் மீதிருக்குங் கண்ணனைக்கண்டு, ஆடையைக் கொடு மப்பா! வென்று மிகவும் வேண்டிக்கொண்டும் கூறையைக் கொடாத படியால், அம்மாதர்கள் பின்னும் துயரப்படுவதைக் கண்டு, 'நீங்கள் யாவரும் கரையேறி இங்குவந்து இரண்டு கைகளையும் சிரமேற் கூப் பித் தொழுவீர்களானால், உங்களுக்கு ஆடையைத் தருவே' னென்று சொல்ல, மாதர்கள் அந்தப்படியே இரண்டு கைகளையுங் கூப்பித் தண்டனிடக் கண்ணன் சேலைகளை ஆயர்களுக்குக் கொடுத்தனுப்பி னன்.

மறுநாள் நந்தகோபன் ஆயர்களை வரவழைத்து, 'இந்திரனுக்கு பூசைபுரியும் நாள் இன்றுனதால், வேண்டிய பதார்த்தங்களுடன் கொண்டு வாருங்க' ளென்று சொல்லிய மொழியை அருகிலிருந்து கேட்ட கண்ணன் தந்தையாகிய நந்தகோபனை நோக்கி, 'இந்திர னுக்குப் பூசை பொங்கலிடுவது நியாயமல்ல; நமக்குவேண்டிய சகல வத்துக்களையுந் தருகின்ற கோவர்த்தனகிரியை நமது குலதெய்வ மாகையால், இந்திரனுக்கிடும் பொங்கல் பூசையை நிறுத்தி, கோவர்த் தனகிரிக்குப் பொங்கல் பூசை செய்தால் உத்தம' மென்று சொல்ல, கண்ணன் மொழியைக் கேட்டுச் சகலருஞ் சரியென் றேற்று, சகல வத்துக்களுடன் கோவர்த்தனகிரிக்குச் சென்று அம்மலையை உத் தேசித்து பொங்கல்பூசை முடித்து நைவேத்தியம் படைக்க, கண் ணன் மலையுருவத்திற் கலந்து யாவற்றையும் புசித்தான். இதை யறிந்து தேவேந்திரன் மேகங்களைவிடுத்து 'ஆயரும் அவர் மாதரும்

பசுக்களும் அதின் கன்றுகளும் அடியோடு மாய்ந்து போகும்படி ஊழிக்கால மழையைப்போல ஏழுநாள் பெய்யக்கடவா' யென்றுக் கட்டளையிட, அவ்வண்ணமே மேகங்கள் யானைத் துதிக்கையைப் போல சொரிவதினால், ஆயர் மாதர்களும், கோபாலர்களும், கோவினங்களும், கன்றுகளும் அல்லோலகல்லோலப்படுவதைக் கண்டு, கண்ணன் இந்திரன் கருவத்தை யடக்கவெண்ணி, கோவர்த்தனகிரியைச் சுண்டுவிரலினால் தாங்கிக் குடையாகப்பிடித்து, ஆவினங்களுடன் அனைவரையுங் காத்தான். இதைக்கண்ட இந்திரன், 'இவனை நாம் யாதவனென்று அற்பமாக வெண்ணி மேகங்களைவிட்டு மழை ஏழுநாள் பொழியச்செய்தது நமது அறிவின்மை' என்று நடுங்கி பூலோகத்திற்கு வந்து ஐராவதத்தைவிட்டிறங்கி திருவடிகளில் விழுந்து, சரணுகதியடைந்து பலவிதமாகத் துதித்துப் போற்ற, கண்ணன் கடைக்கண்ணினால் கடாட்சித்து விடைதரப் பெற்று வானுலகத்தை யடைந்தான்.

பின்னர் ஒருநாள் நந்தகோபன் அதிகாலையிலெழுந்து, ஏகாதசி விரதமனுட்டிக்கும் பொருட்டு யமுனைநதியில் ஸ்நானஞ்செய்துக் கொண்டிருக்கிறபோது, வருணன் தூதர்கள் நந்தகோபனைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். இந்தச் சமிஸ்தாரத்தைப் பின் சென்றவர்களால் யசோதையறிந்து துக்கப்படுவதைக் கண்ட கண்ணன் அன்னையைத்தேற்றிப் பஞ்சாயுதகரனுக வருணலோகத்திற்குச் சென்று வருணனால் பூசிக்கப்பட்டு நந்தகோபனை யழைத்து வந்து வீட்டிற் சேர்த்தான்.

ஒருநாள் கண்ணன் புள்ளாங்குழலை யூதிய இன்பத்தினால் ஆயர் மாதர்கள் யாவரும் தங்கள் தங்கள் கைவேலைகளை விட்டு மயங்கி மாமி மாமன் நாயகன் இவர்களிடத்தும் பயமற்றுத் தங்களை மறந்து கண்ணனிடஞ் சேர்ந்து அசைவற்றிருந்தார்கள்.

அம்பிகாவனத்தில் வித்தியாதரனுகிய சுதரிசனன் அரவமாகி நந்தகோபனை விழுங்கிவிடக் கண்ணன் தன்காலினால் அவனை உதைத்து நந்தகோபனை மீட்டான். பின்னும் சங்கசூடனன் அங்கெய்தி, ஆயர் மாதர்களிலொருத்தியை எடுத்தேகிடக் கண்ட பலராமர், அவனை விடாது பின்தொடர்ந்து சூலாயுதத்தை யெடுத்துச் சுழற்றியதை யறிந்த சங்கசூடன் பயந்து அம்மாதை விட்டோடக், கண்ணன் கண்டு வேகமாயோடி ஓரறை யறைந்தவனைக் கொன்றான்.

பின்னும், மிதிலாநகரத்தில் வசிக்கும் யசோதைக்கு மூத்தோனை கும்பனென்பவனுக்கு நப்பின்னை யென்னும் வனிதை பிறந்து வளர்ந்து பேதைப்பருவம் நீங்கிப் பெதும்பைப்பருவ மடைந்திருக்கும் நாளில், கும்பனுடைய பசுவின் கூட்டத்தில் காலநேமியின் மைந்தர்கள் ஏழுபேர்கள் இடய உருவாய் நிற்கிறபோது, கும்பன் 'இவ்வேழு இடபங்களையுங் கொல்லுபவனுக்கு என்மகளைத் தருவே' னெனக் கேட்டக், கண்ணன் சென்று அவற்றையும் மடித்து நப்பின்னை நங்கையை மணந்தான்.

அதற்குப்பின் அரிட்டாசுரன் கேசிலியோமணன் முதலானோரைக் கண்ணன் வதைத்துக், கஞ்சன் அனுமதியினால் வந்த அக்குரூரருடன் பலராமர் கண்ணன் நந்தகோபன் இம்மூவருஞ் சென்று மதுராபுரியைச் சேர்ந்தபோது, தாருகனென்னும் வண்ணானை வதைத்து, அவனிடமிருந்த உயர்ந்த ஆடைகளை யெடுத்து உடுத்துக் கொண்டு இராசவீதியாகப் போகிறபோது, கஞ்சனுக்கு மணம் பொருந்திய மலர்மாலைகளைத்தரும் சுதர்மன் அகம்புகுந்து அவன் தந்த மாலைகளைத் தரித்து அவனைக் கடாசித்துக், கஞ்சனுக்கு வாசமிகு சந்தனந்தரும் திரிவக்கிரியினிடத்துச் சந்தனம் பெற்றுக் காப்பணிந்து, அவளையும் பெதும்பைப்பருவ முடையவளாகக் கிருபை செய்து, ஆயுதசாலையிற் புகுந்து தனுசுகளனைத்தையும் ஒடித்தெரிந்து, குவலையாபீடத்தை மடித்துச், சரணுரை வதைத்துக், கஞ்சனுயிரை மாய்த்து உச்கிரசேனனுக்கு முடிசூட்டி, குருதட்சணையீந்து, ஆயர்பாடிக்கு உத்தரரையனுப்பி மாதர்கள் மனத்துயரங்களைப் போக்கி, சராசந்தனைப் பீமனால் மடித்து, துவாரகையை நிருமித்து, விதர்ப்பராசன் புதல்வி உருக்குமணியை மணந்து, பாண்டவர்களுக்குத் தூது சென்று, பதினெட்டுநாள் பாரதயுத்தம் நடத்தி, பூபாரத்தைத் தீர்த்துப் பழையபடி படைவீடு சேர்ந்து இனிது வீற்றிருந்தார்.

கலிக்காவதாரம்

துதி

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

கருமாலை கழியவந்த கடவுளாரைக்
கருப்பறியார் காணவொணாக் ககனத் தேவை
மருமாலைத் துளவணியு மாமார் பானை
மலர்வில்லார் கைப்பாண மாயி னானை

ஒருமாலை யுறம்பேர்த்த வரியை வானோர்
ஒருகணியு மடியாணைப் படிய ளந்த
திருமாலைக் கலிக்காவ தாரன் றன்னைத்
திருப்பதத்தைத் திருக்கறவுற் றிருப்ப மாதோ.

மானிட தேகமும், குதிரை முகமும், ஒருகையில் வாளாயுதமும், மற்றொரு கையில் கேடையமும், இன்னும் இரண்டு கைகளில் சங்கு சக்கரமும் தரித்து; சருவத்திலும் உள்ளும் புறம்புமாய் வசிக்கும் விஷ்ணுவாகிய பகவான் அவதரித்துக் காலமுடிவை எதிர்பார்த்துக் கொண்டு பாவிகளைச் சங்கரிக்கவும், அதருமங்களைப் போக்கவும் சித்தமாக விருக்கின்றார்.

. கருடன் உற்பவம்

விந்தையென்பள் அருணன் கூறியபடி சாக்கிரதையாக மற்றோர் முட்டையைக் காத்து வருவாளாயினள். முன்னம் தேவரும் அசுரரும் அமுதங் கடைந்து உண்டு மிகுந்ததை ஒரு பொற்கலசத்தில் வைத்து அனேக அத்திரங்களையும் தேவர்களையும் காவல்வைத்துப் போயினர்கள். அக்காவலோடும் அமுதகலசமிருந்தது. அப்போது, பாற்கடலிற்றோன்றி இந்திரவாகனமாயுள்ள உச்சைச் சிரவமென்னும் வெள்ளைக் குதிரைக் கடலோரமாக ஒருநாள் வந்திருந்தது; இதனை கத்துரு, விந்தை என்னும் இரு சகோதரிகளும் கண்டனர். இவருள் விந்தையென்பவள் கத்துருவையை நோக்கி, 'தங்கையே! இக் குதிரை மாசற்ற மிக்க வெண்மையோடு என்ன அழகாயிருக்கின்ற' தென்ன, கத்துரு வஞ்சகமாக 'வால்புறத்தே சிறிது கருமையிருக்கின்ற' தென்ன, இருவரும் சரதமுற்று விந்தை 'தங்காய்! பொய் பேசுகின்றனை; வால்புறம் கருமை யிருக்கில் அடிமை யாகின்றேன் காட்' டென்ன, கத்துரு தமக்கையை நோக்கி, 'காளை வந்து பார்ப்போ' மெனக் கூறி, தம் வீட்டையடைந்து தம் புத்திரர்களிடம் கூறி, 'வால்புறம் கருமையை யாரேனும் உண்டாக்குங்க' ளென்ன, அந்நாகர்கள் 'பாற்கடலிற் றோன்றிய மகா பரிசுத்தமான உச்சைச் சிரவத்திற்கு அவ்வாறுண்டாக்குவது கூடா' தென மறுத்தனர். அதனால் கத்துரு சினந்து, 'நீங்கள் இனி சனமேசயன் கருப்பயாகத்தில் றக்கக் கடவீர்க" ளெனச் சபித்தனள். இதைக் கேட்ட ஒருவன் அன்னையின் இஷ்டப்படி கருப்புதோன்றப் பொரும்

தினன். இதனை விக்தைக்குக்காட்டி அடிமையாக்கிக் கொண்டனள். மற்ற சரிதத்தை அமுதங்கொணர்ந்த சரிதத்தில் காணலாம்.

ஆஞ்சனேயர் உற்பவம்

முன்னம் துட்ட இராக்கதர்கள் செய்யும் அக்கிரமங்களினால் புண்ணியம் நசித்துப் பாவமேலிட்டமையால், பூமிபாரத்தைச் சுமக்க மாட்டாமல் பூமிதேவியானவள் கண்ணீர்விட்டுக் கலங்கிவந்துச் சிவபெருமானைச் சரணமடைய, சிவன் தேறுதல் சொல்லி அனுப் பினவுடனே, பிரமனிடம் சென்று அவரை யழைத்துக்கொண்டு தேவர்களுடன் வைகுந்தமா நகரம் சென்று, அங்கு ஆதிசேஷன் மீது சயனித்திருக்கும் பரந்தாமனைக்கண்டு வணங்கி, "இராவணுதி இராக்கதர்கள் தவசிகள் முதலான சாதுக்களை நலியச் செய்யும் அகிருத்தியங்களினால் புண்ணியங் குறைந்து பாவமேலிட்டதால், தரைமாது பூமிபாரத்தைச் சகிக்கமாட்டாமல் மிகவும் துக்கப்பட்டு வாடுகிறபடியால், பாவங்கள் நசித்துப் புண்ணியம் மேலிடும்படித் தக்க யோசனை கிருபைசெய்யவேண்டும். சகதீசா" என்று வேண் டிக் கொள்ளக், கருணாநிதியாகிய திருமால் அருள் சுரந்து "ஓ நான் முகனே! நின் அமிசங்கொண்டு சாம்புவந்தனுகவும், ஓ பசுபதி! நினது அமிசத்தினால் அனுமானுகவும், ஓ தேவேந்திரனே! உனது அமிசத்தினால் வாலியாகவும், ஓ தினகரனே! நின்னமிசத்தினால் சுக்கிரீவனுகவும், அக்கினிதேவா! நினது அமிசத்தினால் நீலனுகவும், உபேந்திரனே! நினது அமிசத்தினால் அங்கதனுகவும், மற்றவர்க ளெல்லாம் எழுபதுவெள்ளம் சைனியங்களாகவும் காட்டில் வானர வடிவுடன் அவதரிக்கக் கடவீர்க" ளென்று கட்டளையிட, அந்தப் படி தேவர்கள் தங்கள் தங்கள் அம்சங்களாகக் காட்டில் அவதரித்து விருத்தியடைந்துவர, அப்போது வாயுதேவன் மகாவிஷ்ணுவைப் பணிந்து, நான் அரூபியாகவிருப்பதால் என்னை யாவரும் பரிசத்தால் உணர்கிறார்களே தவிர, வடிவோடுபார்க்க எவர்களாலு மாகாத தாலே, தேவரீர் எனது பராக்கிரமமும் கீர்த்தியும் உலகில் பிரபல மாகும்படியாக ஒரு பாலனை அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று அவன் வெகுவாக வேண்டிக்கொள்ள, அதற்கு விஷ்ணு, "என தமிசம்பெற்று உனக்கு ஒரு பாலன் உதிக்கக்கடவ" னென்று வரந்தந்தார். அவ்வரத்தைப்பெற்று வாயுதேவன் மிகு களிப்

படைத்து விடைபெற்றுச் சென்று அஞ்சனாதேவியை மருவிக் கலந்து போயின பின்பு அஞ்சனாதேவி கருத்தரித்துப் பூரணமாகிப் பலாட்டிகமான பிள்ளையைப்பெற்றாள். அஞ்சனாதேவி யின்ற படியால் ஆஞ்சனேயனென்று பேர் உண்டாயிற்று. இந்தப்படி யாக அவதரித்த ஆஞ்சனேயன் பிறந்தவுடன், தன் தாயை நோக்கி, "ஓ அன்னையே! எனக்கு மெத்த பசியதிகரித்திருப்பதால் யான் புசிக்கத்தக்கது யாது" எனக்கேட்க, அதற்கவள் அனுமானைப் பார்த்து, "அடா குழந்தாய்! குளிர்ந்த வனங்களிலும் சோலைகளிலும் சிவந்து பழுத்திருக்கும் மதுரமான கனிகளே உன்பசியைத் தீர்க்கத் தக்க பதார்த்தங்க" ளென்று சொல்லித் தன் மகனது பசியைத்தீர்க்க வேண்டி மகனைத் தனியே விட்டுக் கனிகள் கொண்டுவர வனத்திற் குள் போயினாள். இவ்வாறுபோயின அன்னையாகிய அஞ்சனாதேவி வருவதற்குள் ஆஞ்சனேயனுக்கு மிகவுங் கடுமையான பசியுண்டா கியபடியால் அப்பசியின் வருத்தம் பொறுக்கமாட்டாமல் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில் உதயகால மாகியதால் சூரியன் உதித்தான். அந்தச் சூரியவெப்பத்தை இவ்வனுமான் கண்டு தனக்கு அன்னை சொல்லிய கனிவகைகளிலே இதுவுமொரு கனியாமென்று நினைந்து அச்சூரியன்மேல் அதிகவேகமாய்ப் பாய்ந்தான்; அப்போ தந்த வேகத்தைப் பார்த்த தேவர்களெல்லாம் பிரமித்து, 'இவன் குழந்தையாயிருக்கிற இப்பருவத்திலேயே பிதாவினுடைய பலத்தை யும் வேகத்தையும் பெற்றதல்லாமல் கருடவேகத்தையும் பெற்றுச் சூரியன்மேலே இப்படிப் பாய்ந்தானல்லவோ? ஆனாலிவன் சகல பலமும் பொருந்தி நாளுக்குநாள் பிரபலமாவானாகில் நம்முடைய சத் துருக்களாகிய இராக்கதர்கள் அனைவரும் என்ன துன்பத்தை யடை வார்களோ' வென்று ஆச்சரியமடைந்தார்கள். அக்கால் பிதாவா கிய வாயுபகவான் அக்கினிமயமா யெறிக்கும் சூரிய கிரணங்கள் சீதள சந்தனம்போலக் குளிர்ந்திருக்கக் கடவதென்று வரங்கொடுத் தான். அல்லாமலும், சூரியபகவான் தன்மேற் பாய்ந்து கவ்விக் கொண்டிருக்கும் இவ்வனுமான் விளையாட்டுக் குழந்தையென் றெண் ணிக் கோபஞ்செய்யாமலும் தனது கிரணங்களினாலே தகிக்காமலும் தயவாக மகிழ்ச்சிக் கொண்டிருந்தான்.

•

இப்படிக்கிருக்கும் சமயத்தில் கிரணகாலம் நேர்ந்தபடியினாலே சூரியனைப் பற்றவந்த இராகுவானவன் கவ்விக்கொண்டிருக்கும்

அணுமானுடைய பராக்கிரமத்தைக் கண்டு பயந்தோடி தேவேந்திரனிடத்திற்குச் சென்று, 'ஓ ஐய்யா தேவராஜனே! சூரிய சந்திர மண்டலங்களைப்பற்ற எங்களுக்கு முன்னமே வரங்கொடுத்திருக்க, இப்போது வேறொருவனுக்கு அந்த வரத்தை நியாய விரோதமாய்க் கொடுக்கத்தக்கதாக நாங்கள் செய்த குற்றமென்னமோ? என்ன காரணத்தாலிப்படிக்கு அவமரியாதை செய்வித்தீர்' யென்று முறையிட்டழுதான். அதுகேட்ட தேவேந்திரன் அப்பொழுதே மிகவுங் கோபத்துடன் ஐராவதத்தின் மேலேறிக்கொண்டு சூரியமண்டலத்திற்கு அதிவேகமாகச் சென்று நின்று இராகுவை யழைத்து, 'நீ இரதச் சூரியனைப்பிடி' யென்று யேவினன். அவனந்தப்படியே சூரியனை யடுத்து வருவதைக்கண்ட இவ்வனுமான் சூரியவிம்பத்தை விட்டு இராகுவின்மேற் பாய, அந்த இராகுவானவன் பயந்து நடுங்கி யுளறிக்கொண் டோட்டமாயோடி தேவேந்திரன் காலடியில் விழுந்து புலம்பினன். அதுகண்ட தேவேந்திரன் மிகவும் உக்கிரமான கோபத்துடன் ஐராவதத்தைப் பிரசண்ட வாயுவேகமாக நடத்திக்கொண்டு அனுமான்மேற் சீறிவந்தான். அப்போதந்த ஐராவதத்தின் முகத்திலே சிவப்பாய் விளங்குஞ் சிந்தூரப்பொட்டு வருணத்தை இவ்வனுமான் கண்டு இதுவுமொரு கனியென்றெண்ணி அவ்வைராவதத்தின் மத்தகத்தின்மேற் பாய்ந்தான். அப்படி பாய்ந்தவனைக் கண்ட தேவேந்திரன் பலம்பொருந்திய தன்னுடைய வச்சிராயுதத்தினாலே ஓங்கியடித்தான். அந்த அடிபட்ட மாத்திரத்தில் இளங்குழந்தையானதால் அனுமான் மூர்ச்சை யடைந்து பூமியில் விழுந்தான்.

அந்தவேளையில் இவ்வனுமானுடைய பிதாவாகிய வாயு பகவானவன் இந்திரன்மேல் முனிந்து இம் மூன்றுலகங்களையும் கணநேரத்தில் அழித்து வெட்டவெளியாகச் செய்கிறேனென்று சபதங் கூறி, உலகத்திலேயெங்கும் வாயு பிரவேசிக்காம லடக்கிக்கொண்டு தன் புத்திரனைப்பார்த்து மிகவும் விசனமடைந்து எடுத்துக்கொண்டு போய், இமயகிரிச்சாரலில் ஒரு பெருத்த குகையினுள் பிரவேசித்து, அங்கு புதல்வனை காத்துக்கொண்டிருந்தான். அப்போது மூவுலகங்களிலும் வாயுவின் பிரவேசமில்லாததால் எறும்பு கீடையானை எண்பத்துநான்கு இலட்சம் யோனிபேதங்களாயுள்ள சகல பிராணிகளும் வயிறு விம்மி மரணவாதனை பொறுக்கமுடியாமல் துன்பப்பட்டன.

அப்போது தேவர்களும் இருடிகளும் பிரமதேவரிடம் சென்று உலகத்திற்குண்டாயிருக்கும் ஆபத்தைத் தெரிவித்து வேண்டிக் கொள்ள, அவர் அந்தத் தேவர்கள் இருடிகளுடனே வாயுபகவான் இருக்குமிடத்தைத் தேடிவந்தார். அப்போது வாயுபகவான் அந்தப் பிரமதேவரைக்கண்டு எழுந்துவந்து நமஸ்கரித்து வணங்கி நிற்க, அக்கால் பிரமதேவன் அந்த வாயுபகவானுடைய விசனந்தீரும்படி தேறுதலேசொல்லி யுபசரித்து, மூர்ச்சித்துக்கிடக்கும் அனுமானைத் தம் முடைய கையினாலே தடவிக்கொடுத்து மூர்ச்சை தெளிவித்து எழுப் பித் தம்முடனே வந்த தேவர்களைநோக்கி நீங்களெல்லோரும் இந்த அனுமானுக்கு வரங்கள் கொடுப்பீர்களென்று அருளிச்செய்தனர்.

அனுமான் வரம்பெற்றது

அந்தப்படியே சூரியபகவான் 'தன்னுடைய கிரண ஒளியிலே நூற்றிலொருபங்கு பிரகாசமுண்டாகக் கடவதென்றும், சகல வித் தைகளையும் சுலபமாகக் கிரகிக்கத்தக்க நுட்பமான புத்தியும் உண்டா கக் கடவ' தென்றும் வரங்கொடுத்தார்; வருணபகவான் கொடுத்த வரமாவது, 'இவ்வனுமான் யுத்தகளத்திலே சத்துருக்களால் என் னுடைய பாசத்தாற் கட்டுப்பட்டாலும் மரணமடையாதிருக்கக் கடவ' னென்றும், எமதருமராசன் 'இவ்வனுமான்மீது என்னு டைய காலதண்டம் பட்டபோதிலும் மரணமடையாம லிருக்கக் கடவ' னென்றும், குபேரன் 'தன்னுடைய கதாயுதத்தினாலே இவ் வனுமான் சாகாதிருக்கக்கடவ' னென்றும், உருத்திரமூர்த்தி 'தன் னுடைய சூலாயுதத்தினாலே அழிவில்லாதிருக்கக் கடவ' னென்றும், விசுவகருமனானவன் 'சகல தேவர்களின் அத்திர சத்திரங்களினாலும் அபாயமடையாதிருக்கக் கடவ' னென்றும் வரங் கொடுத்தார்கள். பின்பு பிரமதேவர் 'தம்முடைய பிரமதண்டத்தினாலும் நாசமடையா திருக்கக்கடவ' னென்றும் வரங்கொடுத்து, அவ்வனுமானுடையபிதா வாகிய வாயுபகவானை நோக்கி, "ஓ சமீரணனே! உன்னுடைய புத்திரன் இனியிந்தப் பட்டணத்தை யெரித்தழித்து இராக்கதர் குலத்தை வேரறுத்து, ஸ்ரீராமர் சந்தோஷத்தை யடையும்படிக்கு உபசரித்து, அவருடைய அனுக்கிரகத்தினாலே பரமபதத்தையடை யக் கடவனென்று அருள்புரிந்தார்.

அனுமான் சாபமேற்றது

பின்பு அனுமான் மும்மூர்த்திகள் முதல் தேவர்களிடத்திலும் அழிவில்லா வரத்தைப்பெற்ற கருவத்தினாலே இந்தப் பதினொரு

உலகங்களிலும் தனக்கு நிகரானவர்கள் ஒருவருமில்லையென்று அகங்கரித்து நன்று தீதுகளொன்றும் தெரியாமல் மதோன்மத்தனாகி தவசிரேட்டர்களாகிய முனிவர்கள் வாசஞ்செய்து கொண்டிருக்கும் ஆச்சிரமங்களிலும் யாகசாலைகளிலும் புகுந்து அவர்களுக்குச் சேகரித்து வைத்திருக்கும் ஓம திரவியங்களாகிய பால், தயிர், தேன், நெய் முதலானவைகளைக் குடித்தும், கந்தமூலாதிகளைத் தின்றும், அவ்விடங்களை எச்சில்களாக்கியும், சந்தன புட்பங்களை யெடுத்தெறிந்தும், கமண்டல முதலான பாத்திரங்களை யுடைத்தும், எடுத்தெறிந்தும், இப்படிக்கு நானவிதமான பாலிய சேட்டைகளால் யாக எக்கிய ஓமகாரியங்களுக்கு இடையூறு செய்துகொண்டிருந்தான். அதனால் எல்லோரு மொருவாக்காகத் தன்னுடைய பலபராக்கிரமம் தனக்குத் தெரியாமற் போகக்கடவதென்று சபித்தார்கள். அப்படி அந்த மாமுனிகளிட்ட சாபத்தினாலே விஷப்பல்லைப் பிடுங்கப்பட்ட பாம்பு போல இவ்வனுமான் தன்னுடைய அகங்கார கருவமும் கோபமு மடங்கிச் சாந்தத்தையடைந்தவனாகி, அந்த தபோதனர்களுக்குப் பயந்து நாமென்ன காரியஞ்செய்தோம்; நம்முடைய அறியாமையிப்படியிருந்தது; இந்திரன் முதலானவருடைய சாபமும் பெரிதல்ல. திரிமூர்த்திகளின் சாபமும் பெரிதல்ல. அந்தத் திரிமூர்த்திகளுக்கும் சாபத்தைக் கொடுக்கவல்ல தபோதனர்களுடைய சாபத்தைக் கடந்தவர்க ளொருவருமில்லை. இதையறிந்திருந்தும் நாமிந்த மாமுனிவர்களுக்கும் அபசாரஞ் செய்தவனானேம் என்றாலோசித்துத் தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு வெட்கத்தை யடைந்தான்.

அனுமான் சுக்கிரிவனுடன் தோழமைசெய்தது

அதன்பின்பு வாலியென்றும், சுக்கிரிவனென்றும் பேர்பெற்ற இருவரும் தாரையின்பொருட்டு ஒருவருக்கொருவர் விரோதப்பட்டு, சகல லோகங்களிலும் சென்று வெகுகாலமாக யுத்தம்பண்ணிக் கொண்டு வருகிறகாலத்தில், சுக்கிரிவன் வாலியினாலே அடிபட்டுச் சகிக்காமலோடி மதங்கமாமுனிவருடைய ஆச்சிரமத்தை யடைந்த வர்பால் அடைக்கலம்புக, அவர் அந்தச் சுக்கிரிவனுக்கு அபயங் கொடுத்துக்காக்க, அந்தவேளையில் சுக்கிரிவனை இவ்வனுமான் பிராண சினேகிதனாகத் தோழமைகொண்டு, அந்த மதங்கமாமுனிவரையுங் கண்டு வணங்கி, வித்தியார்த்தியாகி வேதாங்கமுதலான சகல சாத்திரங்களையும் அவரால் ஓதுவிக்க வுணர்ந் தனுமதிபெற்றுச் சென்றான்.

அனுமார் சூரியபகவானிடம் நவவியாகரணமும் வாசித்தது

பின்பு அனுமான் சூரியபகவானிடஞ்சென்று வணங்கி எனக்கு நவவியாகரணங்களும் போதிக்கவேணு மென்றுப் பிரார்த்திக்க, அதற்கந்த சூரியபகவான் அனுமானே நோக்கி, "அஞ்சனை சிங்கமே! நான் ஏறியிருக்கும் இரதம் ஒரு சுவாசவேகத்திற்கு இருபத்தோராயிரத்துநூறு யோசனைதூரம் அதிவேகமாகச் சதாகாலமுஞ் சஞ்சரித்துக் கொண்டிருப்பதால், ஓரிடத்திலிருந்தே பாடஞ் சொல்வதற்குச் சாவகாசமில்லை. இப்படியாக ஓய்வில்லாதிருக்கும் என்னிடத்திலே நீ வியாகரணங்கள் கற்றுக்கொள்ளுவதற்கு உனக்கு வல்லமையுண்டாகில், ஓதுவிக்கிறேன்" என்று சொல்ல, அதற் கவ்வனுமான் சூரியபகவானைப் பார்த்து, "தேவரீருடைய அநுக்கிரக விசேடத்தினாலே உம்மிடத்தில் அந்தவித்தையைக் கற்றுக்கொள்வதற்கு எனக்கு வல்லமையுண்டாயிருக்கு" மென்று சொல்லி, உடன்பட்டுக் குருவினிடத்தில் எதிரேயிருந்து பாடங்கேட்பவர்போலச் சூரியபகவானுக்கெதிர்முகமாகவே அந்த இரதவேகத்தினுக்குப் பின்னிடாமல் ஆகாசமார்க்கத்தில் பாய்ந்தபடியாய் ஆறுதினத்திலே நவவியாகரணங்களையும் பூரணமாய்க் கற்றுக்கொண்டான். மேலும் தயாளத்திலும், சாந்தத்திலும், சத்தியத்திலும், ஞானத்திலும், நற்குணத்திலும், பிரயத்தனஞ்செய்த காரியங்களைப் பாதுகாக்கும் மனோதிடத்திலும் இவனுக்குச் சமானமான புருடர்களொருவருமில்லை. இவனாலே தருமங்களெல்லாந் தழைய தேவர்களெல்லாரும் சவுக்கியத்தையடைந்தார்கள். மேலும் பாவங்களனைத்தையும் பரிபாலிப்பவராகிய இராக்கதர்களெல்லாருந் துக்கத்தையடைந்து அழிந்தார்கள். இன்னும் அளவில்லாத மேன்மைபொருந்திய இவ்வனுமானனவன் ஸ்ரீராமருடைய திருவடிப்பணிவிடையை விரும்பி நீங்காதிருந்து, சிரஞ்சீவியாகி விருத்தபிராமண வுருவமுடன் ஸ்ரீமத் ராமாயணக் கதைப் பிரசங்கத்தைக் கேட்க விருப்பமுற்று, எந்த இடத்தில் நடக்கிறதோ அந்த இடங்கள்தோறும் முன்னதாய்ச்சென்று சிரவணம் பண்ணிக்கொண்டிருந்து, கதை நிறுத்தப்பட்டு யாவரும் போன பின்புதான் போவான்.

சிவகலாரகசிய மென்னும்

சிவமகாவைபவம்

சிவவணக்கம்

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அகரமுத லெழுத்தென்ன யெல்லா மாகி
யளவையெலா மிகுந்தெழுவா யின்றி யெங்கும்
நிகரிலருட் பெரும்போக மளித்துக் காக்கும்
நின்மலகிட் களயோம நிரஞ்ச னத்தைப்
பகரருமா மறைகளெல்லாம் வழுக்கிட் டின்னும்
பரவவள ரானந்த வாழ்வை யன்பர்
அகவடிவா யெழுந்தனந்த வடிவா யோங்கி
யாளுகின்ற பரம்பொருளை யணுகி வாழ்வாம்.

சிவப் பிரபாவம்

உலகில் அநாதியாயுள்ள 'சிவ' என்னும் மகாமந்திர ரூபமாகிய சைவ மகாசமய பிரபாவத்தைக் குறித்து அளப்பரிய வேதாகி கலைகள் இன்னும் அறைகின்றன வென்ப. ஆதலால், எமது சிற்றறிவிற் கெட்டிய சிலவற்றைச் சுருக்கமாகக் கூறத்தொடங்குகிறோம்.

உலகில் ஆன்மகோடிகளின் விவேகவன்மை மென்மைக்கேற்ற படி அகச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், புறப்புறச்சமயம் என அநேக சமயங்கள் தோன்றியிருக்கின்றன. அச்சமயங்களுக் கெல்லாம் சிரசாய்; ஒருவராற் செய்யப்படாததாய்; அச்சமயங்களுக்கு மாறிலாததாய்; என்றும் ஒருபடித்தாய்; திருவருட் சொரூபமாய்; வேதாகி கலைகளெல்லாங் கொழித்துக் கோடிக்கும் பெருநெறித்தாய், அத்துவிதமாய் விளங்குவது சைவசமயமேயாம்.

புறச்சமயத் தூவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலாதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்தினுல்லீலைவதா யுடலுயிர்க ணருக்க
னறிவெளிபோற் பிறிவருமத் துவித மாருஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றும்.

—சிவப்பிரகாசம்.

நல்குக வுயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக வுலக மெல்லாம் பூரவலன் செங்கோல் வாழ்க.

—திருவிளையாடல்.

விண்ணவரிந் திரன்முதலோர் நார தாதி
விளங்குசத்த ரிஷிகள்கன வீணை வல்லோ
ரெண்ணரிய சித்தர்மனு வாதி வேந்த
ரிருக்காதி மறைமுனிவ ரெல்லா மிந்தக்
கண்ணகன்ஞா லம்மதிக்கத் தானே யுள்ளங்
கையினெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்
திண்ணியநல் லறிவாலிச் சமயத் தன்றே
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தா ரென்றும்.

செப்பரிய சமயநெறி யெல்லாந் தன்றந்
தெய்வமே தெய்வமெனுஞ் செயற்கை யான
வப்பரிசா ளருமஃதே பிடித்தா லிப்பா
லடுத்தந்நூல் களும்விரித்தே யனுமா னுதி
யொப்பவிரித் துரைப்பரிங்கன் பொய்மெய் யென்ன
வொன்றிலையொன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கு
மிப்பரிசாஞ் சமயமுமா யல்ல வாகி
யாதுசம யமும்வணங்கு மியல்ப தாகி.

இயல்பென்றுந் திரியாம லியம மாதி
யெண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சௌபான பட்சங் காட்டி
மயலறுமந் திரஞ்சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
யயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தி
லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ.

அந்தோவீ தகிசயமிச் சமயம் போலின்
றறிஞரெலா நடுவறிய வணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்று
மிந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கு
மிதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை
சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத்
தக்கநெறி யிங்நெறியே தான்சன் மார்க்கம்.

—தாயுமானவர்.

அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவந் தன்னிற் படுபயன் பலவே - அவற்றுள்
இலைகொண்டு வந்தனர் பலரே யிலையொரீ இத்
தளிர் கொண்டு வந்தனர் பலரே தளிரொரீ இ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டு வந்தனர் பலரே
அவ்வா றுருப்பு மிவ்வாறு பயப்ப
ஒருமவே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தம்.

—குமரகுருபரசுவாமிகள்.

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறை
என்றுஅளவிலா அறிஞர்க ளிசைத்தனர்.

—அருணைக் கலம்பகம்.

இத்தகைப் பெரும் பிரபாவமுடைய தெய்வத் திருநெறிச்சைவ சமயத்திறைவர் யாரோவென்னில், பிறப்பிறப்பின் வசத்தராயுள்ள மும்மூர்த்திகளைப் போலாது,

ஒருநாம மோருருவ மொன்றுமிலாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

—திருவாசகம்.

அகளமா யாரு மறிவதப்பொருள்.

—உந்தியார்.

ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று.

—களிற்றுப்படியார்.

எனக் கூறிப்போந்தபடி நாமரூபகுணங் குறிகளொன்று மில்லாது என்றும் நின்மலம், நிரஞ்சனம், நித்தியம், சதானந்தம், தற்பரம் முதலிய இலக்கணங்களே வாய்த்து அகளமாய் சிவம் என்னும் பெயரினால் விளங்கப்படுவோராம்.

முன்னர், ஏமது தயாவிபவனுகிய சிவபெருமான் ஸ்ரீ நக்கிதேவர் முதலினோருக்கு உபதேசித்த பத்தசாராமுதத்தைப் பின்னர் சவுனக மைமிசாரண்ணியராதி முனிவர்களுக்கு ஸ்ரீ வியாசாதி முனிவரா லனுக்கிரகித்தபடி கூறப்புகின், அதுவே ஓர் பெருநூலாமாதலின், அதில் சிறிதே இங்கே கூறுதும்.

சிவமென்னும் பதம், மகாமந்திர ரூபமாக ஆன்மாக்கள் அஞ் ஞானத்தகாரங்களை யொழித்து முத்தியைத் தருவதே யல்லாது, அதற்கு அருத்தம் இன்னதென்று இன்னும் பலமறைகளே வழக்கிடு கின்றன. அதனை முற்றுமுணர்ந்த முனிவர்களும் அனுபவ பூர்வக மாய் அறியப்படுவதல்லாது, அறிந்தவண்ணஞ் சொல்லப்படுவதல்ல. "அதுவானலதுவே சொல்லும்" என்றும், "அவனருளே கண்ணு கக் காண்பதல்லால் இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்த னிவ னிறைவ னென்றெழுதிக் காட்டொண்ணுதே" என்றும், "சித்தமுஞ் செல்லாச் சேட்சியோன் காண்க" என்றும், கூறிக் களித்தனரே யன்றி, வேறே ரிலக்கணங் கூறவில்லை. அன்றி; சௌபான பட்ச மாகக் கூறிய சைவபேதங்களுள்ளங்கூறுது விட்டனரே யென்னின், தெய்வமொன்றுண்டென்னின், அதன் திருவருட்பிரபாவ மிப்படி யென்று கூறலே வழக்கன்றி, அஃதோர் பொருளென்னில்,

எங்கேயிருப்பது?
அதன்பேரென்ன?
அதன்செயலென்ன?
அதன்குணமென்ன?
அதையீன்றாரார்?
அதிருந்தகாலமெப்போது?
அதன்உறவினரெவர்?

என்பதாகிய குணங்குறியாதியவைகளைக் கூற நேரிடும். நிறம், குணம், பெயர், குலம், செயல், காலம், இடம் முதலிய இவற்றை யுடையதற்குச் சுகதுக்க முதலியன உளவாகலான், அவை கடவுளுக் கிலக்கண மாகா.

சாத்திரங்களும், சர்வஜ்ஞத்துவம், சர்வேச்சுரத்துவம், சர்வ நியந்திருத்துவம், சர்வாந்தர்யாமித்துவம், சர்வகற்பிதத்துவம் என் னுந் தெய்வத் திருவருட் குணங்களையே யன்றி வேறில்லாதலால், சிவமென்னும் மகா வாக்கியத்திற்குப் பிரதியருத்தம் வேறில்லை. ஆயினும், 'அங்கிங்கெ னாதபடி யெங்கும்ப்ர காசமா யானந்த பூர்த்தி யாகி' ஆன்ம கோடிகளுள்ளும் அணுப்பூதமாயிருந் தாண்டருள் புரியும் இறைவர்,

"மறைமுத றனக்கு நாமரூ பங்கள் மருவுத லில்லையே யெனினும்
கரையற விளங்கு மாயையி னுலே கற்பிக்கப் பட்டன வாகு
முறைநமச் சிவன்மா தேவன்மூற் பெயர்களு ருத்திர ணெங்க ளாகு
மறைப்பர பிரம முதற்பெயர் பரத்து வளர்வா சகமா மால்."

—சூதசங்கிதை.

"அகளமா யாரு மறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுன்தீபற
தானுகத் தந்ததென் றுன்தீபற."

—திருவுந்தியார்.

"அறிவரியான் றனியடைய வாக்கையாக்கி
அங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத்தருளால், செறிதலினுல்"

—சித்தியார்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

—குறள்.

எனக்கூறியபடி உலகமுதற் பொருளாம், சிவமுதற் பிருதிவி யீறதாய் விளங்கும் யாவுங் கருணையாலோங்கி நாமரூப வசத்தாய் அவற்றுள்ளும் அபூகமாய், 'அவனன்றியோ ரணுவுமசையா தென்பா'ரை எல்லாமியக்கி,

"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றேஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே."

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதல்
கற்ற கேள்வி
வல்லார்க ணல்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப் பாலா
யெல்லாமா யல்லவுமா யிருந்ததனி யிருந்தபடி
யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம நினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்."

—திருவிளையாடல்.

என்றபடி ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு மூர்த்தி, தலம், தீர்த்தமாயும்; குருலிங்க சங்கமமாயும்; அடியாருள்ளக் குறிப்பிற் கேற்கப் பலவேறு வடிவங்களாயுந் திருவுருக் கொண்ட மூர்த்த பேதங்களும், இலீலாவைபவங்களும்; திருவருட் பிரபாவங்களும்

அனந்தமாகும். அவற்றுள் சிலவற்றை மாத்திரமே எளிதிலுணரு மாறு சங்கிரமாகக் கூறுமாறுற்றனம். என்னை யெனின்,

பிறப்பு

மற்றேனைய தேவர்களைப்போல நமது அருட்பெரும் பரம் பொருளுக்குச் சனனமரண சுகதுக்காதி சங்கற்பங்கள் எக்காலத் திலுமில்லை

> கன்னபுர மாலே! கடவுளினும் நீயதிகம்;
> உன்னிலுமோ நானதிகம்; ஒன்றுகேள்!—முன்னமுற்ற
> உன்பிறப்போ பத்து; வுயர்சிவனுக் கொன்றுமில்லை;
> என்பிறப்போ வெண்ணி லில்லை.

என்றும், 'பிறப்பொடு மிறப்பு மில்லான்' எனவும் புலவர் பெருந்தகையார் அளப்பரியார் இசைத்துள்ளார். ஆயின், ஸ்ரீ வல்லாள மகாராஜனுக்கும், கௌரி யென்பாளுக்கும் (திருவிளையாடலில்), பட்டினத்தடிகளுக்கும், இன்னனையாருக்கும் புத்திராராகத் தோன்றினரே யென்னின், வாயிலா னுணர்த்தார் இல்லையே. சில ரறியாமையாற் கற்பிதமாகக் கூறினரேனும் வேதாதி கலைகளங்கீகரிக்கத் தக்கதாகா. ஆனதாலேயே வேதம் பொதுவாகத் தியான ரூபமாகவும்; ஆகமம் அதனை விரித்து அடியார்கள் சகலரூபமாய் வழிபட்டுய்யுமாறு கிரியாரூபமாகவும்; புராணங்கள் அம்மூர்த்த பேதங்களை யடியாரும் அவர் மரபினரும் சரித்தாபத்தியினரா யடையுமாறு கதாரூபமாகவும் கூறப்பட்டிருக்கின்றன.

ஆனால், சாத்திரங்களுள்ளே அநேக திருவுருவங்களும், அங்க லட்சணங்களும், மணியுடைகளும், மனோமகவாதிசார்புகளும், இடம் தொழிலாதிகளும் கூறப்பட்டுள்ளனவே; அவை யாவோ என்னின், மேற்கூறியபடி தம்மை வழிபடும் அன்பர்கள் கோரியவாறு எழுந் தருளி யாட்கொண்ட மூர்த்திபேதங்களாம். இது காலதேதமாக அடியார் குறிப்புநெறியே வெவ்வேறு வடிவு பூண்டமையால் செய லும், அருளும் பலவாகும். அவைகளங்ஙன முண்டாய தெவ்வா றென்னின்:

இலீலாபேதங்கள்

உலகில் ஆன்மாக்கள் அநேகராயும், அஞ்ஞானிகளாயும், ஞானி களாயும், பாவிகளாயும், புண்ணியராயும், இருவினைக்கீடான அநேக

சரீரமுடையவர்களாயும், புவனபோகங்களை யனுபவிப்பவராயும், கீழ்ப்போன அனந்த சனன மரணவசத்தராயும், யோகிகளாயும், பல வேறு வகைப்பட்டவராயும் வதியும் ஆன்மாக்க ளுய்யுமாறு மானிடர்போலும், மன்னர்போலும், வானவர்போலும், மிருகமாயும், விருத்தராயும், பாலராயும், அடியார்போலும் அனந்த திருவுருவங்களைப் பூண்டு கடாட்சிக்கப் புறப்பட்டு இகபரார்த்தங்களை யடையும் படிக்கு உலகையும், உலகத்துள் ஆன்மாக்களின் சுகத்திற் கேதுவான பதார்த்தங்களையும், அவைகளைத் தெரிந்து அனுபவிக்கத்தக்க விவேகத்தையும், அறிவிற் கெட்டாவிடத் தறிந்து கூடக்குமாறு வேதாதி கலைகளையும், அக் கலைகளிற் சந்தேகந் தோன்றியவிடத்திற் றெளியுமாறு ஆசாரிய பீடங்களையும், இன்னும் உலகிற் காதாரமான எவ்வகை பொருள்களையு மளித்து, ஆன்மாக்களுள்ளந்தோறும் அபூதமா யிருந்தும், ஆன்மாக்க ளுணராவிடத்துத் தாமே அவரவர்க் கதுவதுவாயு மிருந்த திருக்கோலங்களே மூர்த்தபேதங்களாம். அவற்றுள் சிலவற்றைக் கூறுவாம்.

திருவிரிஞ்சையில் ஓர் செட்டியாருக்கு வழிகாட்டி மார்க்க சகாயரென்றும், திரிசிரபுரியில் ஓர் பெண்ணுக்குத் தாய்போலெழுந்தருளி பிரசவ நோயினைத் தீர்த்தமையால் தாயுமானவ ரென்றும், வேளூரில் ஆன்மப் பிணியைத் தீர்த்தலால் வைத்தியநாத ரென்றும், மதுரையில் யானைக்கருளியதால் ஐராவதேச்சுர ரென்றும், காவல் நீழலில் யானையாகிளுக் கருளியதால் சம்புகேசுரரென்றும், பல மூர்த்தங்களைக் கொண்டதன்றி, மாமனுய்வந்து வழக்குரைத்தும், மாணிக்கம் விற்றும், விரகு சுமந்தும், மண்வெட்டியும், வேடவடிவு கொண்டும், பாலின்றி வருந்திய பன்றிக்குட்டிக ளுய்யுமாறு பால் கொடுத்தும், மருத்துவஞ்செய்தும், தண்ணீர்ப்பந்தல் வைத்தும், சோறளித்தும், குதிரையோட்டியும், பொன்கொடுத்தும், அரசாண்டும் இதுபோன்ற அளப்பரிய திருவிளையாடல்களைச் செய்தும் விளங்கினர். அவ்வாறு கொண்ட திருக்கோலங்களில் காணப்பட்ட சிவசின்னங்க ளனந்தமாகும். அவற்றுள்,

கங்கை

ஒருகால் கயிலையி லுமையம்மையார் சிவபெருமான் விழிகளை ஓர் விளையாட்டாகப் பின்வந்து மூடினர். உடனே உலகங்களெல்லாம் இருள் மூடிக்கொண்டது. அதனல் தேவர் முனிவரெல்லாம்

தங்கள் கருமங்களும், பகலிரவாகிய பொழுதுகளும் தோன்றுமை யால் பெருமானிடத்தற்று இறைஞ்ச, அக்கால் பரமன் தமது நுதல் விழியைத்திறந்து பழையபடி உலகை விளங்கச் செய்தனர். இதனை யுணர்ந்த அம்மையார், 'அபசாரம் நேர்ந்ததே' யெனப் பயந்து அச் சத்தோடு கையை யெடுக்க; அக்கால் தம் பத்து விரல்களினின்றும் நீர்த்துளிகள் மகா பிரளயம்போலும் பெருகிக் கடல்வழிகொள்ள நேர்ந்தன. இப்பெரும் வெள்ளப் பெருக்கிற்கு அஞ்சிய பிரமாதி தேவர்களெல்லாம் இறைவன் மாட்டடைந்து தெரிவிக்க, பெருமான் அவ்வெள்ளத்தை யழைத்துச் சடையிற் றரித்து உலகுக்கோர் கெடுதி யும் நேராவண்ணம் காத்தனர். இது அம்மையாருடைய சிறந்த கையினின்றும் உண்டானமையால் கங்கை யெனப் பெயரும், அதை யணிந்ததால், சிவபெருமானுக்குக் கங்காதரர் என்றோர் பெயரும் உண்டாயின. பின்னர் இறைவன் தரித்ததனை அரியயனிந்திராதி கள் தம்பதிகளுக்கும் சிறிதுகொண்டு சென்றனர்.

திருமால் வாமனாவதாரத்தில் மாவலிபால் மூவடி மண்வேண்டி உலகையளந்தபொழுது அண்டம் பிளந்தொழுகிய ஆகாய கங்கை மாளவதேசவழியாய்ச் சமுத்திரத்தை அடைந்தது. இந்தியதியறியா வைணவர் சிவபிரானணிந்தனரெனக் குழறிவழிகின்றனர். அவை மலங்கொழுக்க வாய்பிதற்றும் பித்தென்க.

பூலோக கங்கை

அயோத்தியை யாளும் சகரசக்கிரவர்த்திவிடுத்த அசுவமேதப் புரவியை தம் வாழ்வு அழிவதை நோக்கிய இந்திரன் வஞ்சகத்தாற் பிடித்து, பாதாளத்தில் தவம்புரியும் கபில முனிவரிடங் கட்டிப்போயி னன். இதனை யறியாத சக்கிரவர்த்தியின் மைந்த ரறுபதினாயிர வருடம் எங்குந் தேடிக்காணாது, பாதலத்தைத்தோண்டி முனிவர் பக் கலிலிருக்கக்கண்டு, முனிவர் வஞ்சமெயென முனிவரைத் தூஷிக்க, முனிவர் விழித்து, அவரெல்லாரையும் சாம்பராகச் சபித்தனர்; இதனையறிந்த சகரன் தம் பௌத்திரனால் புரவியைக் கொணர்ந்து யாகத்தை முடித்தனன். அதன்பின் அவன் சந்ததியாரில் பகீரதன் என்பானொருவன் தோன்றி, தம் முன்னோர்களாகிய சகரர்கள் சாம் பராயினமையை யறிந்து பதினாயிரவருடம் பிரமனை நோக்கித் தவ மியற்ற, பிரமன் பிரத்தியட்சமாகி, ஏ பகீரதா! நீ விரும்பிய வாறு தற்குச் சாட்சாத் சங்கரன் சடாமுடியினின்றும் கங்கை பரிசித்தா

லன்றி யாகாது. அங்ஙனம் வருமேல் உலகம் அழியும். அதனை யடக்கற்கு இறைவனன்றி மற்றோராலாவதில்லை. ஆதலின், இறைவனை நோக்கித் தவம்புரிக வெனச் சொல்லிச்சென்றனன். இப்பால் பகீரதன் சிவபிரானை நோக்கித் தவமாற்றலும், பெருமான் கங்கையி லொருதுளி விட்டனர். அக்கங்கை நதி யுருவேற்று, சகரர்கள் சாம்பரிற்படர்ந்து அவர்களை முத்தியிற் சேர்த்தது; அதனால் பகீரதி யென்றும், இக்கங்கை தங்கிய சடலைச் சகரர் தோண்டியதால் சாகர மென்றுங் கூறிய தென்க.

சந்திரன்

தக்கன் அசுவனி முதலிய இருபத்தேழு பெண்களைப் பெற்று, சந்திரனுக்கு மணம்புரிவித்துச் சந்திரனை நோக்கி, "நீ இந்த இருபத் தெழுவரிடத்திலும் பாரபட்சமின்றி யிருப்பா" யென்று கூறினன். சில நாளீங்கிச் சந்திரன் கார்த்திகை, உரோகணி யிவ்விருவரிடத்தில் மாத்திரம் பற்றுடையவனு யிருந்தமையால், மற்ற மாதர்கள் அதனைத் தந்தைபால் கூறத் தக்கன் பின்னும் சந்திரனை நோக்கி வற்புறுத்தினன். சந்திரன் மீண்டும் கேளாது பழையபடியே யிருந்தமையால், மற்ற பெண்களும் தந்தையாகிய தக்கனிடத்து மீண்டுந் தெரிவிக்க, இதைக்கேட்ட தக்கன் சினந்து, "சந்திரன் நாளுக்கொரு கலையாய்க் குறைந்து இறக்கக்கடவ" னெனச் சாபமிடலும், சந்திரனவ்வாறே கலைகளெல்லாங் குறைந்து ஒரு கலையோடு வருந்தி இந்திரனிடஞ் செல்ல, இந்திரன் பிரமனிடம் விடுக்க, பிரமன் அங்ஙனம் சிவன்மாட்டனுப்ப, சந்திரன் கைலைக்கெய்தி கருணாநிதியாகிய பெருமானிடத்து விண்ணப்பிக்க, பெருமான் யாவுங்கேட்டு 'ஏ சந்திரா! நீ நமது சடைமுடியி லிருக்கக்கடவை; இருக்கின், தக்கன் சாபத்தால் நாளுக்கொரு கலைதேய்ந்தும், முடிவில் ஒருகலை மாத்திரமுன்னைவிட்டு நீங்காமலு மிருக்கக்கடவது" யென்று வரமளித்து, சடாமுடியி னிடத்துத் தரித்தருளினர். இதனால் சந்திரசேகரர் எனப் பெயர் பெற்றனர்.

பிச்சாடன மூர்த்தம்

மூன்றாங் கற்பத்தில் தாருகாவனத்தில் வேத வேள்விகளாற் சிறந்த முனிவரர் அநேகரிருந்தனர். அவர்கள் தம்மைத்தானே வல்லவராய்க் களித்து, தாம் பரவும் வேத வேள்விகளே முத்தி தருவனவாக்கருதி, இறைவன்பாற் சிறிதும் பத்தியிலராய் அவமே

பலபகல் கழித்து, தவநெறி யொழித்து நவமாய் எண்ணில்லாத யாகாதிகளைச்செய்து வருங்காலத்தில், உயர்வொப்பிலா உமையொரு பாகன், "ஐயோ! முனிவரர் வீணுள்கழித்து வாணுட் பெயரா நின்றார். எங்ஙன முய்வா" ரெனக் கருணையாலாளத் திருவுளங் கொண்டு திருமாலை நோக்கி, "மாலே! முன் பாற்கடல் கடைந்த நாள் கொண்ட மோகினியுருவைத் தாங்கி முனிவராண்மையை யழிக்கக்கடவை" யென்றிசைத்துத், தாமே ஒரு நவவுருவைத் தாங்கி, கையிற் பலியோடும் சூலமுமேந்தி, இருடிபத்தினிகள் வசிக்கும் வீதியில் மெல்ல நடந்து, இனிய வோசையோடும் பாடிப் பலி யேற்பார்போல ஏகஞ்பியாய்ச் சொல்லுவராயினர். இவ்வினிய பண்ணைசையை அம்முனி மனைவியர் கேட்டு வாயிலில்வந்து பெரு மான் பிச்சாடனத் திருக்கோலத்தைத் தரிசித்து; அவரது பேரழ கையும் இன்னிசையையு முணர்ந்து, இச்சைகூர்ந்து வருந்துவாரும், காமத்தாற் பிணிக்கப்பட் டெதிர்நோக்குவாரும், கலைநெகிழ்வாரும், வளைசோர்வாரும், உள்ளங்கசிந் துருகுவாரும், நாணழிவாரும், அணையப் பிரார்த்திப்பாரும், ஐயமிடுவாருமாயினர். இங்ஙனம் வருந்தும் நங்கையர்பால் இறைவன் மாயசால வித்தையென்ன நாற் பத்தெண்ணாயிரம் புதல்வர் தோன்றி இறைவனைப்பணிய, இறைவன் 'நீவிர் எம்மைக்கோரித் தவம்புரியுங்கள்' எனக் கூறிப் புறம்போயி னர்.

திருமால் பெருமான் திருவாணையைப் பெரிதுவந்து முன்னை மோகினி உருவைத்தாங்கி முனிவரர் பாலெய்த, முனிவர்கள் மோகினியுருவைக்கண்டு கரைகாணுத காமத்தாழ்ந்து, யாகாதி கரு மங்களை விடுத்து, தத்தம் பெண்டிரை அவாவிச் சென்று காணுழிக் கற்பழிந்தாராய்க் காணப்படுதலின், 'ஈதென்ன' வென்றுள்ளத் துணர்ந்து, திருமாலே மோகினி யுருக்கொண்டு மாதர் தவநிலை குலைத்தாரென்றுந் தேறி, 'அந்தோ! பிராயச்சித்தஞ் செய்தற்கு மேலாப் பழுதுறலாயிற்றே! என்றுக்கிரோஷமித்து, சங்கரனை யழிக் கின்றேமெனச் சரதங்கூறி, ஓர் அபிசாரவேள்வி செய்தனர்.

புலியாடை

அதினின்று பேரிடியும் ஊழித்தீயும் ஒன்று சேர்ந்தனவென்று நினைக்கும்படி கருச்சனையோடு அக்கினிக்கண்ணும், உக்கிரரூபமும், மலைபோற் பருத்த உருவும் தாங்கிய ஒரு புலிதோன்றியது. அதனை

நோக்கி, 'நீ விரைவில் உமாபதியைக் கொல்லுக' வென விடுக்க, அவ்வாறே புலி பரமணிநோக்கி உலகமஞ்சும்படி செல்லுகையில், எல்லாம்வல்ல இறைவன் புலியினெதிரே சென்று அதனைக்கொன்று அதன் சருமத்தை யுரித்து ஆடையாக அரையிலணிந்தார்.

மழு

பின்னர் அவ்யாகத்தினின்று ஒரு மழுதோன்றியது. அதனையும் முனிவர், 'சம்புவைச் சங்கரிக்க'வென விடுப்ப, அங்ஙனம் முனிவராணை கடவாது எமது திருவருட்பெருஞ் சோதியினெதிரில் நெருங்கலும், பெருமான் வலக்கையிற்பற்றி 'நற்றவமுடையாய்! இங்ஙனே நமக்கொரு படையாகுக' வெனத் தரித்தருளினர்.

மான்

அதன்பின் அவ்வேமாக்கினியினின்று மீண்டும் ஒரு மான் தோன்றியது. அதனையும் முனிவர் சதாசிவன் அஞ்சாத்திறத்தை யழியக்கடவ தென விடுப்ப, அம்மான் சராசரமனைத்தும் நடுங்க ஆக்ரமித்து ஆகாயவெல்லையி னுலகங்கள் வருந்துமாறுலமிட்டு வருதலுங், கண்ணுதல் கண்டு ஆசிகூறித் தம் இடக்கரத்தேந்தினர்.

அரவம்

பின்னர் ஒருகால், காசிபர் மனைவியரில் கத்துரு, விந்தை யென்னு மிருவரும் தத்தம் அழகைச் சிறப்பித்து, அழகில்லாள் சிறைப்படுவதாகச் சபதமிட்டு முனிவரை யடுத்துக் கேட்டலும், முனிவர் கத்துரு சிறந்தாளென, விந்தை சிறைப்பட்டு, சிறையாற்றது வருந்தி, 'சிறைவிடுக்க' வெனக் கேட்டலும், கத்துரு 'வானுலகிலுள்ள அமுதளிப்பின் விடுப்பா' மென, 'ஆகுக' வெனக்கூறி, விந்தை தன் குமாரனுகிய கருடனுக்குணர்த்த, கருடன் வானவர் காவலையழித்து அமுதங்கொணர்ந்து வருங்கால் திருமால் எதிர் சென்று, 'நீ மிக்க வன்மையன்; யாதுவரம் வேண்டும்?' என, கருடன் 'உம்மைவிட்டுப் பிரியாவரமே வேண்டும்' என்றான். திருமால் சமயமிதுவே யெனக் களித்துக் "கருடனே! நீயென்றும் எனக்கு வாகனமாகவும், சருப்பங்களுக் கமுதூட்டா திருக்கவும் வேண்டு" மென்ன, அப்படியே கருடன் சம்மதித்து பாம்புகட்கு அமுதூட்டாவகை கூறித் தாயினிடம் கலசத்தைக்கொடுக்கச், சிறை விடுத்துத் தனது மாற்றுந்தாயாகிய கத்துருபெற்ற அரவங்களைக்

கொன்று வதைத்தலோடு சிவபூசையும்பெற்று, திருமாலுக்கு வாகனமாயினன். இதையறிந்த பாம்புகள் நாமும் சிவனையடைந்து என்றுங் கருடனாலும் நசிக்காவகை யடைவாமென்று விரும்பி சிவார்ச்சனை செய்தலும், சிவபெருமான் அரவங்களது அருச்சனைக் கிரங்கி பாம்பினங்களை ஆபரணமாக அணிந்தனர்.

கங்கணம், அரைநாண், காலணி,
கடிசூத்திரம்

முன் தாருகாவனத்து இருடிகள் புலி, மான், மழு இவைகளை ஏவிய பின்னர், அவ்வபிசார வேமத்தினின்று பிறப்பித்துச் சிவன் மேல் நாம் ஏவியவையனைத்தும் பயனற்றதாயினவென்று உணர்ந்து, வேண்டிய சருப்பக்கூட்டங்களைச் சிருட்டித் தேவினர்கள். அவ் வரவங்கள் மகாப் பிரளயம்போலும் விடச்சுவாலை வீசி மிக்க ஆவேசத்தோடு நெருங்கலும், சந்திரசேகரர், 'என்னை! கொடுந் தன்மையுற்றீர்? அஞ்சற்க! இதோ யாமணிந்துள்ள சருப்பவினத் தோடும் வாழ்வீராக' வென ஆசிகூறி; அவ்வரவங்களைக் கையி னிடத்துக் கங்கணமாகவும், காலினிடத்து வீரகண்டைபோலும், இடையில் அரைநாணுகவும், கடிசூத்திரமாகவுந் தரித்தனர்.

அன்றிச் சேடன் முதலினோர், ஒரு காலத்தபயமாக வந்து அடைந்தனவாகவும், அவற்றையு மணிந்ததாகவும் பிறசரிதங்களும் மிக்குளவாயினும், என்றும் நீலையால் அணிவகையிற் சிறப்புற்ற வகைகளிவையே யெனக் கூறுப.

பூதகணங்கள்

அத்தாருகாவன மூனிவர்கள் "என்னை? சிவன்மிக்க சால முடையான் போலும்! நாமனுப்பியவனைத்தும் அவன்மூன் பய னற்றவாயின! ஆயினும் ஆகுக" வெனக் கொழுந்தழலினில் பூத வெள்ளங்களைச் சிருட்டித்து, 'குழகனைக் கொல்லுக' வென விடுப்ப, பூதகணங்கள் அஞ்சாதனவாய், வெடிகுலோசையோடும் பட படத்து உக்கிரத்தோ டெதிர்வரலும், சிவபிரான் அவர்களைக் கருணை யோடு மழைத்து, 'நீங்கள் மிக்க நல்லவர்களே! நமதிடம் வந்த மைக்கு ஒருறுதி வேண்டுமன்றே? இன்றுமுதல் நம்மது சேனையாக இருக்கக் கடவீராக' எனக்கூற, அங்ஙனே பூதகணங்கள் இறை வன் திருவாஞ்ஞையைக் கடவாதிருக்கின்றன.

வெண்டலை

பின்னர் முனிவர் தாங்கள் முயன்றபடி யாகாமையின், மிக்க மந்திர வன்மையோடும் பிதிகொள்ளுந் தன்மைத்தாய், புன்னகை யோடு கூடியதாய், ஒருவெண்டலையை யுண்டாக்கி விடுப்ப, அதனைப் பெருமான் கரத்தாற் பற்றிச் சிரசிலணிந்தன ரென்ப.

துடி உடுக்கை

அப்பால் முனிவர்கள் தம்முயற்சிகளனைத்தும் வீணதலைக் கருதி அச்செயலனைத்திற்குங் காரணமாயுள்ள மந்திரங்களைவிடுப்ப, அவையாவும் ஒன்று சேர்ந்து உடுக்கைபோலும் வடிவுடையதாய், பெரு முழக்கத்துடனே கயிலாசபதியின் முன்னேசெல்ல, பெரு மான் கரத்தாற்பற்றி 'இனிய ஓசையை முழக்குக' வென்றனர்.

முயலகன் அக்கினி

மீண்டும் முனிவர்கள் 'எவ்வகையாலுஞ் சிவன்சாகாது அனைத் துந் தன்வயங் கொள்ளுகின்றனன். பேராற்றலுடையான்போலு' மெனச் சரதங்கூறி, மிக்க கோபாவேசத்துடன் மறுபடியும் வேறொரு யாகமியற்ற, அதினின்றும் ஒரு சூரனுதித்தான். அவன் பேர் முயலகன். அம்முயலகனையும் அந்த யாகாக்கினியையும் நோக்கி, "மற்றவைகள்போலாது எவ்விதத்துஞ் சாம்பசிவனைக்கொல் லக்கடவீர்க" ளென விடுப்ப, அவ்வண்ணமே முனிவர் கூற்றைக் கடவாது எதிர்வருதலும், சிவபிரான் அக்கினியைக் கரத்திற் றூங்கி யும், முயலகனைக் கீழேதள்ளித் தமது வலது பாதத்தால் மிதித்தும் அருளினர். முயலகன் வேறுகதியின்றி முதுகையசைத்தலும் சிவனர் தம் பாதத்தாலழுத்தி நடித்தனர். பின்னர் முனிவர்கள் அனேகஞ்சாபமிட, அவைகள் அவரிடஞ் செல்லாமை கண்டு சிவ பத்தராய் நற்றவம் புரிந்து, சைவநெறி நின்று முத்தியடைந்தனர்.

யானைத்தோல்

கயாசுரனென்னு மரக்கனொருவன் பிரமன்மாட்டு அகந்தவரங் களேபெற்று, தாலைவரையும் வானவரையும் இம்சைசெய்து, மண் ணுலகத்தவரையும் வருத்தி, காசிப்பதியையடைந்து தன் ஆண்மை யைக்காட்ட, அதற்கு முன்னமே இவன் கொடுமைகளை வானவர் கள் காசியிலடைந்து சிவபெருமானிடத்து விண்ணப்பித்திருத்தலின், சிவபெருமான் இக்கயாசுரனெதிரில்வந்து வடவாக்கினியு மஞ்சத்

தக்க கோபாவேசத்துடன் அக்கினிகளே விழியினிடமாகச்சிந்தி, கயாசுரனைப் பிடித்துக் கீழேதள்ளி அவன் சிரத்தை மிதித்துத் தம் திருகங்களாற் பிளந்து, அவன் தோலையுரித்துத் தரித்தருளினர். இதனையறிந்து முன்வருந்திய மண்ணுலகத்தவரும், வானோரும், தானவரும் இன்றன்றே நமதிறைவனால் சுகமுற்றனமெனத் தொழுதிறைஞ்சினர்.

கபாலம்

இறைவன் அடியார்மாட்டு மானிட வுருக்கொண்டு அநந்த முறை தோன்றினர். அக்காலங்களில் அடியார்போலும் கையிற் றண்டமும் கபாலமுந் தாங்கினர். அன்றி ஒருகால் தாருகாவன முனிவரிறுமாப்பை யொழிக்குமாறு திகம்பரராய்ப் பிச்சாடனத் திரு வுருவைத் தாங்கி யாசிப்பார்போலும் சென்றனர். யாசிப்பார் கர பாத்திர மேந்துவது முறைமைபற்றிப் பலியேற்பதற்கு ஒருகலந் தாங்கினர் என்க.

சுடலையாடி யென்பது

திருமாலுக்குச் சிவாக்கினையின்படி விஷ்ணுகற்பம் ஒன்று கழி யின், சருவான்மாக்களுடன் சருவலோகங்களும் மயானரூபமாகும். அக்கால் சிவபெருமா னொருவரே நடம்புரிவர். இக்காரணத்தா லேயே இறைவனைச் சுடலையாடி யென்பார்.

தருமவிடை

இத்தகைய தேயுப்பிரளயத்தில் சகல தருமங்கட்கும் அதி தேவதையாகிய தருமதேவதை தாமும் இறக்கவருந் தீங்கினைக் கருதி, ஓர் இடபவடிவையேற்று, சங்கரன் பாலணைந்து, 'ஐயனே! பிரளயஞ்சம்பவித்தலின், இறத்தற்கஞ்சி யடைந்தனன். ஆதலின், அடியேன் இறவாவகையும், சுவாமிகளைச் சுமக்கும்பேறும், சுமத்தற் காம் வன்மையும் பாலித்தருளல் வேண்டு" மென்றிறைஞ்ச, எண் ணினை ரெண்ணியாங் கின்னருள்புரியு முன்னவன் "ஏ! அறத் திருவே! அஞ்சற்க!" வென்றபய மளித்து, அதன் சிரமேற்றமது அபயாத்தத்தைச் சூட்டி "நீ எண்ணியாங்காகுக; யாம் நின்னை நீங் கேம்; நீயே எமக்கு வாகன மாகுக" வென்றிசைத்து அங்கீகரித் தனர். ஆதலால், சிவபெருமான் பரிபக்குவமுற்ற ஆன்மகோடிகட் கருளுநாள் தருமசொரூபத்தோடும் காட்சிதருவார்போலும் இடபத் தோடும் யெழுந்தருளுதலென்க.

மால்விடை

முன்னே ஒரு கற்பத்தில் எமநிறைவன் தேவர்கள் வேண்டு கோளால் திரிபுரதகனஞ் செய்வதற்குச் சூரிய சந்திரர்களையே சக்கர மாகவும், மேருமலையை வில்லாகவும், திருமாலை அம்பாகவுங்கொண்டு இரதத்திலாரோகணிக்கத் திருவுளங்கொண்ட காலத்து அச்சு முறிந் தது. அக்கால் திருமால், எம்பெருமான் திருபா விசேடத்தா லாற்ற அன்பினை யுடையராய் ஒரு வெண்மையாய இடபவுருவாகித் தாங்கி, "ஆ! ஆ!! நாம்பெற்ற பேறே பேறு; நம் தவமே தவம்; நம்மைப்போல் யார் இறைவனைத்தாங்கும் வன்மையினர்? இனி நமக்கு யாதுகுறை" யென்றிவ்வாறு இறுமாப்புற்று மகிழ்ந்தனர். இதனைப் பெருமான் திருவுள்ளக் குறிப்பாலறிந்து ஓர் இலீலையாக நடித்தனர். அதற்காற்றாது திருமால் இறைவனைச் சுமத்தற்கேலாது வருந்தி விழிகள் பிதுங்க, செவி வாய்களி லிரத்தஞ்சிந்த, கால்மடிய, தலைகால் விழுந்து சோர்தலும், வெள்ளிவிடையை நோக்கி, "மாலே! யாதுவரம் வேண்டு" மென, திருமால் "ஐயனே! அபயந்தருளுக! தேவரீருக்கு முன்னமேயே தருமவிடை யொன்றிருப்பினும், மால்விடையென யானுந் தேவரீரைத் தாங்கும் வன்மையையளித்து அருளுக!" வென இரப்ப, அடியாருள்ளக் கோயிலுடைய சந்தான கற்பகமனையாராகும் நமது பரமபதி புன்னகையோடு உவந்து திரு மால் விரும்பியவாறு அரிய வரத்தையளித்து, அன்றுமுதல் வெள் விடையாகித் தாங்கப்பெற்றனர்.

குதிரை வாகனம்

முன் ஒருசமயம் சைவசமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் மதுரை பாண்டியராசனிடம் மந்திரியாக விருந்தகாலத்தில், பாண்டியன் அமைச்சரை நோக்கி, "ஐயா! நம் அரசாங்கத்திற் கழகியான குதிரைகளைக் கொள்ள வேண்டு" மென்ன, "அங்ஙனமே வருவிப்பா" மென்றிசைத்து, வேண்டும் திரவியங்களோடு கீழ்க்கடலை நோக்கிச் செல்ல, சங்கரன் மாணிக்க வாசகரது தீவிரதரத்தை நோக்கித், திருப்பெருந்துறையிற் குரு மூர்த்தமா யெழுந்தருளி உபதேசஞ் செய்தாண்டனர். அதன்பின், சுவாமிகள் மன்னன் திரவியமனைத்தும் அடியார்களுக்கும், சிவதரும காரியாதிகளுக்கும், ஆலய முதலியவைகளுக்குஞ் செலவு செய்து வீற்றிருந்து தம் பரிசனர்களால் மன்னனுக்கு 'ஆடித்திங்களன்று

பரிகளோடும் வருவ" மென்றுரைக்க விடுத்தனர். அவ்வாறே மன்னன் ஆடித் திங்களன்றும் வராமையான் மீண்டும் ஓலை விடுக்க, அவ்வோலையைச் சுவாமிகள் சிவபிரானிடத்து விண்ணப்பிக்க, பெருமான் ஆவணி மூலத்தன்று புரவிகள் வருமென்று ஒரு நிருபமனுப்புக வென்றிசைக்க, அவ்வண்ணமே மாணிக்கவாசகர் ஒரு நிருபம் விடுத்திருக்குநாள் இறைவன் கனவிலெழுந்தருளி, "மாணிக்கவாசக! முன் செல்லுக! பின் புரவிகள் வரு" மென, அவ்வாறே மணிவாசகப்பெருமான் பாண்டியனை யடைந்திருக்குநாள், முன்னிசைத்தபடியே வனத்திலுள்ள நரிகளையெல்லாம் புரவிகளாகச் செய்து ஓட்டிக்கொண்டு வந்தனர். எமது கண்ணுதல் சதுர்வித புருடார்த்தங்களையே கால்களாகவும், வேத காண்ட மிரண்டுமே செவிகளாகவும், பரவுணர்ச்சி யிரண்டுமே விழிகளாகவும், விதியே முகமாகவும், நிடேதமே வாலாகவும், தந்திரங்களே புறவணியாகவும், மந்திரங்களே சதங்கையாகவும், இரவிமதிகளே இடபமாகவும், பிரமதாரகமே கடிவாளமாகவுங்கொண்டு ஒரு புரவியின்மே லாரோகணித்து வந்தனர்.

பாற்கடல் கடைதல்

முன்னே ஒரு கற்பத்தில் தேவர்களும், அசுரர்களும், தாயாதிகளானமையால் தீராப்பகையை மேற்கொண்டு யுத்தஞ்செய்து அனேகர் மாண்டனர். அதனால், தேவர்கள் அமுதுண்டு நரைதிரைகளை யொழித்து நெடுநாளிருந்து யுத்தஞ்செய்து தாங்களே வெற்றி பெறக் கருதி, தங்களுக்குள் ஒரு முடிவு செய்துகொண்டு பிரமனிடங்கூற, பிரமன் திருமாலிடங்கூற, திருமால் 'நல்லது ஆகுக' வெனக் களித்துத் திருப்பாற்கடலை யடைந்து மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியை நாணுகவும், சந்திரனை அடைதூணுகவுஞ் சேர்த்து, ஒருபுறம் வானவரையும், மற்றொருபுறம் தானவரையும் விடுத்து, இருதிறத்தாரிடத்துமுள்ள படைகளினால் ஒருகால் யுத்தத்திற் கேதுவாமாதலால், அப்படைகளை ஒருங்கேவாங்கி ததீசி முனிவரிடம் ஒப்புவித்து வாசுகித்தாம்பை யீர்க்கச்செய்ய, அவ்வாறே தானவர் வானவர் இருபுடைகளினு மாறிமாறி யீர்க்க, அம்மந்திரமலை அசைதலைக்கண்ட திருமால் ஆமைவடிவாகி அம்மலையின் அடியையும் முடியையும் தாங்கிநிற்க, தேவர்கள் நெடுநாள் கடைந்தமையின் அரவமாகிய அட்டநாகங்களிலொன்றுன வாசுகியென்னும் பாம்பு வருந்தி தன்னுலாற்றாது தனது ஆயிரம் வாய்களினின்றும் விஷஞ்சிந்தியது.

விஷபானம்

அவ்விஷம் உலகினைத்தும் இருள் மூடிக்கொள்ளும்படி பரவ, தேவர் முதலானோர் பயந்தோடினர். இக்கதியைத் திருமாலறிந்து அதிவிரைவாக வானவர்க்குத் தைரியங்கூறி அவ்வாலகாலவிடத்தை எதிர்சென்று மறித்தனர். மறித்தலும் அதன் வேகத்துக் காற்றாது திருமால் முதலிய தேவரனைவரும் வேறோராதாரமின்றி, கைலாய பதியினிடமடைந்து விண்ணப்பஞ்செய்து நிற்றலும், சருவதயாபரன் திருமாலை நோக்கி, 'அஞ்சற்க' வென்றபயமளித்து, அருகே நின்ற சுந்தரரால் ஆலாலவிடத்தை வருவித்து, தமதங்கையிற் ருங்கியுண்டனர். உண்டகாலத்து உமையம்மையார், 'ஐயனே! கண்டத்தளவிலேயே நிறுத்துக' வெனக் கோரலும், அங்ஙனமே இறைவன் கண்டத்திற்றங்கக் கொண்டு நீலகண்டரெனப் பெயர் பெற்றனர்.

அதன்பின் தேவர்கள் வேண்டுகோளால் 'சுகமே பாற்கடல் கடைந்து அமுதுண் டுய்வீர்க' ளென வரம்பாலித்தனுப்ப, திருமாலாகிய தேவர்கள் பாற்கடலடைந்து முன்னைப்போல் திருமால் கூர்ம வடிவாகி மந்திரகிரியைத்தாங்க, தேவரும் அசுரரும் வாசுகியை யீர்த்துக் கடைந்தனர்.

பாற்கடலில் தோன்றியவைகள்:

1. மூதேவி தோன்றி, வருணனுக்கு மனைவியாயினள்.

2. தன்வந்திரி தோன்றி, உலக முழுவதுக்கும் மருத்துவனுய்ப் பதினெண் சித்தர்களி லொருவனுமாயினன்.

3. அறுபதுகோடி அரமகளிர்கள் தோன்றி, இந்திரன் பதியையடைந்து இந்திரபோகத்தைச் சுகித்தனர்.

4. சுரைதோன்ற அதனை தேவர்களுண்டு, சுரர் எனப்பெற்றனர். அவுணரதனை வெறுத்தமையால், அவர்களுண்ணப்பெறுது அசுரரென்றிசைக்க நேர்ந்தனர்.

5. உச்சைச் சிரவமென்னும் புரவிதோன்றி இந்திரனுக்கு வாகனமானது. இதனை க்ஷீரவாசி யென்பர்.

6. கௌத்துவமென்னும் மணிதோன்றி திருமாலுக்கு ஆபரணமாக மார்பிட் டமர்ந்தது.

7. அரிசந்தனம், கற்பகம், மந்தரம், சந்தானம், பாரிசாதம் என்னும் பஞ்சதருக்களும் தோன்றி அமராபதியை யடைந்தன.

8. ஐராவதம் என்னும் வெண்ணிறமுடைய ஒரு யானை தோன்றி இந்திரனுக்கு வாகனமாகவும், நிக்காணைகளி லொன்றாகவு மாயிற்று.

9. காமதேனு என்னும் ஒரு தெய்வப்பசு தோன்றி இந்திரனிடத்தும், அவனேவலால் வசிட்டாதி முனிவரிடத்து மாயிற்று.

10. சிந்தாமணி என்னும் எடுக்க எடுக்க எக்காலத்துங் குறைவுபடாத ஓர் இரத்தின கடாரந்தோன்றி * சசிமணாளனுக் குவப்பானது.

11. சங்காகாரமாகவும், பதுமாகாரமாகவும் உள்ள சங்க நிதி பதுமநிதி தோன்றி குபேரனுக்குச் செல்வமாயின.

12. சந்திரன் தோன்றி ஆகாயவீதியி லொளிசெய்தலையும், கிரகாதிகளி லொன்றாதலையும் பெற்றனன்.

13. சரசுவதி தோன்றி பிரமனுக்கு மனைவியாக அவன் நாவி லும், மலராசனத்திலு மமர்ந்ததன்றி, சர்வ கலைகளுக்கும் வித்தியா காரணியு மாயினள்.

14. இந்திராணி தோன்றி இந்திரனுக்கு மனைவியானதன்றி, என்றுங் கன்னிப் பருவத்தையும்; எத்தனை இந்திரர்கள் தோன்றி மறையினும் தானெக்காலத்தும் மாறாத தன்மையையும் பெற்று, கீழ்த்திசைக் கதிதேவதையாயு மாயினள்.

15. இலக்குமி தோன்றி திருமாலுக்கு மனைவியாய், திருமால் மார்பினிடந் தங்கினதன்றி, அட்டைசுவரிய போகாரணியு மாயி னள்.

பின்னர் இவ்வாறளப்பரிய வாளுட்டுச் செல்வங்களெல்லாந் தோன்றின.

கிரகண காரணம்

முடிவில் அமுதந்தோன்றிற்று. இவ்வமுதத்தைத் தானவரும் வானவரும் எமக் கெமக்கென்று வாதிட்டு அனேகர் காலமாயினர். இதைத் திருமால்கண்டு ஒரு மாயைபோலும் மோகினி வடிவங் கொண்டு தேவருக்கு மாத்திரம் அவ் வமுதத்தைப் பருந்தளித்து வருங்கால்; அசுரர் இருவர் அவ்வானவர் கூட்டத்துள் மாறுவடிவா யிருந் தமுதருந்தினர். இதனைச் சூரிய சந்திரரால் திருமாலறிந்து,

* சசிமணாளன் - இந்திரன்; சசி - இந்திராணி.

அவ்விருவர் தலையையும் அறுத்தெறிந்தனர். பின்னர் அத்தானவ ரிருவரும் அழுதுண்ட விசேடத்தா லிறவாமல் சிவார்ச்சனைசெய்து இராகு கேதுவென்னுங் கிரகங்களாய்த் தம்மை வெளியிட்ட செங் கதிர் வெண்கதிர்களைத் தீராத்துயர்செய்து வருகின்றனர்; இவையே கிரகணகாலமாம். சுரர் அழுதருந்திக் தீர்க்காயு ளெய்தி அசுரரை அதஞ்செய்து பொன்னுலகு சேர்ந்து வாழ்ந்திருந்தனர். இது நிற்க,

மீன் கண் அணிந்தது

சோமுகாசுரனெனும் ஓர் அசுரன் சாட்சாத் பரமபதியை நோக் கித் தவம்செய்து அநேக வரத்தைப்பெற்று, தேவர்க ளஞ்சும்படி ஆண்மையுற்றுத் திரிவான்; தன்தோளின் தினவை ஆற்றுமாறு மேலைமலையை யெடுத்து விளையாடுவான்; இத்தகைய பராக்கிரமத் தோடு அஞ்சாஞைப் பிரமபதியை நோக்கி வருஞ்சமயத்து, பிரமன் வெருவி யோடலும், "ஏயே இவன் வன்மை இவ்வளவுதானே" வென்று உதாசினம்பேசி, அவன் மாட்டுள்ள நான்கு வேதங்களையும் களவாடிக்கொண்டு கடலுக்குட் புகுந்து களித்துலாவி யிருந்தனன். இதனையறிந்த பிரமன் பிதாவாகிய திருமாலிடஞ்சென்று, சிருட்டிக் குக் காரணமாகிய ஆரணத்தைச் சோமுகன் சூறைகொண்டா னென் செய்வே மென்றரற்ற, திருமால் சோமுகனிருப்பை யறிந்து திமிங் கில முதலிய மச்சங்களையும் விழுங்கும் வன்மையோடும் ஒருபெரிய மச்சவுருவையேற்று சோகமுகனை வதைத்து, ஆரணத்தைக் கைக் கொண்டு, பிரமன்பா லளித்தனர். அங்ஙனம் மச்சாவதாரன் ஆழி நீரைக் கலக்கி சத்த சாகரமு மொன்றுகும்படி உழக்கித்திரிதலை வானோர் கண்டு, 'மண்ணுலகழியும் போலும் விண்ணுடொருங்கே யொழியும் போலு' மென்றையுற் றிறைவனுக்கிசைப்ப; இறைவன் ஒருவலைஞனைப் போல ஒரு பெருவலைகொண்டு திருமாலாகிய மச்சத் தைப்பிடித்துச் செதுக்கிக் கண்ணைப் பிடுங்கலும்; திருமால் பூர்வ வுணர்ச்சியால் பழய வடிவையேற்று அருச்சித் தகன்றனர். அக் கால் தேவர்கள், "ஐயனே! இன்னைநாள் திருமால் இருமாப்புரு வண்ணம் அம்மச்சவிழியையுந் தரித்தருள வேண்டு" மென்றிறைஞ்ச, அங்ஙனமே சிவபெருமான் அவ் விழிகளை கைவிரல் மோதிரத் தமைத் தருளினார்.

வரக்கோடணிந்தது

இரணியாக்கத னென்னு மசுரன் தவத்தால் பிரமன் மாட்டு அநேகம் வரத்தைப்பெற்று நிகரற்றோனைப் வாழுகாளில், ஒரு நாள்

உலகத்தைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு சமுத்திரத்தில் மறைந்தனன். இக்கூற்றுக்கஞ்சிய அமரர் வேண்டுகோளால் திருமால் வராக வடிவமுற்று கடலைக்கலக்கி இரணியாக்கத னென்னு மசுரனைக் கண்டு அவனைக் கிழித்துக் கொன்றுவிட்டு, பூமியைக்கொம்பின் றுனியால் தூக்கிவந்து சேடனது முடியில் வைத்தனர். அதன்பின் திருமால் மமதையால் வராகரூபத்தோடும் அகிலமெல்லாம் நடுங்கும்படியுலாவி, மேகங்களும், அட்டகுல பருவதங்களும், சுவர்காகங்களும், நாகலோகமும், நானிலமும் தட்டுகெட்டுக் கலங்கும்படியாகத் திரிந்தனர். இதனை ஆற்றுவார் வேறின்றி தேவர்களெல்லாம் வருந்தி, சிவபெருமானிடத்து விண்ணப்பிக்க, கருணாமூர்த்தியாகிய கைலாசபதி கருணையால் உலகுயிர்கள் இரட்சிக்கு மாற்றலால், தேவர்களுக் கபயமளித்துத் தாம் ஒரு வேடவுருவேற்று, தங்கரத்துள்ள முத்தலைச் சூலத்தாற்குத்தி வீழ்த்தி, ஒரு கொம்பை யொடித்தனர். உடனே திருமாலுக்கு முன்னையுணர்ச்சி யுதிக்க, சிவபெருமானைத் துதித்துப் பணிந்து பழைய வுருவை வாய்ந்து சென்றனர். பின்னர் தேவர்கள், வேண்டுதலால் மற்றெக்காலேனும் திருமால் இங்ஙனம் மாலெய்தி வாதைபடா வண்ணஞ் சிந்திக்குமாறு அவ்வராகத்தி னெற்றைக் கொம்பை ஆபரணம்போலுந் தமது திருவுருவிற் றரித்தருளினர்.

பிரமகபாலம்

ஒருகால் மேருசிகரத்தில் வீற்றிருக்கும் பிரம விஷ்ணுக்களைத் தேவ முனிவர்கள் தெருங்கி, "உலகில் சருவகாரணமாய், ஒப்புயர்வில்லராய், நித்தியானந்த சொரூபராய், நின்மலராயுள்ள பிரமம் யாது?" என்று வினவலும், பிரமன் 'யானே' என்ன, திருமால் 'யானே' யென்ன, சண்டையிட்டு யாவராலும் அடக்கற்கரிய மமதையையடைந்து வாதிட்டனர். வேதமும் பிரணவமும் வேறு வேறு உருக்கொண்டு வந்து "வீணே கருவு மடைதலாகாது. யாவற்றிற்கு முதற்பொருள் சாட்சாத் உமாபதியேயாம். நீவிரேன் இவ்வண்ணம் வாதிடுத" லெனக் கூறியுங் கேளாராய் மீண்டும்வாதிட்டகங்கொண்டு அமர் புரியுங்கால், இடையே இவர்களிறுமாப் பழியுமாறும், உலகுய்யுமாறு முள்ளங்கூர்ந்த வெள்ளை சடைமுடிவள்ளலார் ஒரு சோதியுருவமாய் அமர்ந்தனர். இச்சோதி யாதோ வெனப் பிரமன் நிந்தை கூறினன். திருமால் அகிலாண்ட நாயகராகிய பரமசிவக்கடவுளே யெனத் தேர்ந்திறைஞ்சினன். பிரமன் மதி

யாது நிந்தித்தானெனினும், கருணைகரக்கடவுளாகிய பெருமான்பொறுத்து, பிரமன் நடுத்தலை அவமதித்தது ஆகையின், அதன் இறுமாப் பொழியவும், மற்றோர் தருக்கொழியவும் சிந்தித்தலும், உடனே வைரவக் கடவுள்தோன்றி, பிரமன்து நடுத்தலையைக்கொய்து வானவர் முனிவர் நகரங்கடோறும் எதிரப்பலியேற்று, பிரமனுக்கு உயிர்ப் பிச்சையளித்து, இரத்தப்போக்கா லிறந்தோரை யெழுப்பினர். பின் பிரமன் 'சிவாபசாரஞ் செய்தோமன்றே' வென்றிறைஞ்சி சிவ பெருமானே நோக்கி, "ஐயனே! அடியேனவமதித்தலை மன்னித்து என்சிரசைக் கரத்திற்றானே தேவரீர் வைத்திருக்க வேண்டுகிறே" னென்று வேண்டினன். அவ்வாறே சிவபெருமான் பிரமகபாலத்தைக் கையிற்றரித்தருளினர்.

வீணை

ஒருகால் கைலாசத்தி தட்சணை மூர்த்தமாக எழுந்தருளியிருக்கையில் தும்புரு, நாரதர், சுகர்முதலிய இருடிகணங்கள் சாமவேதத்தை யாழிலமைத்துப் பெருமானுவக்கப் பாடுதற் நிச்சைகூர்ந்து சிவபிரானிடத் தடைந்து, இசையிலக்கணத்தைக் கிருபை செய்யும்படி வேண்ட, பத்த ரனுகூலராகிய சிவபெருமான் முனிவர் வேண்டு கோளுக்குவந்து இசையிலக்கணத்தையும், கருவிகளி னிலக்கணத்தையும், அவைகளைப் பாடுதற்கேற்ற கால விலக்கணத்தையும், அதன் பிரயோக பிரயோசன விலக்கணங்களையும் தெளிவுபடக் கூறிய உபதேசத்திற்கேற்ப, தாமே யாழேந்தி இடதுதோளிற் சாத்திப் பாடிக் காட்டினர். அதுமுதல் தேவர் முனிவர் சித்தர் முதலினை ரனுட்டானத்தில் விளங்குகின்றது. அதனாலேயே சாமகீதப் பிரியரென்றும், வீணைதட்சணை மூர்த்தரென்றும், யாழ் வல்லரென்றும் உலகிற் கூறப்போந்தனர்.

புத்தகம்

பார்வதியார் தக்கன் மகளென்னும் வசை நீங்குமாறு பரமபதியின் ஆஞ்ஞையால் பருவதராச குமாரியாகத் தோன்றியிருந்த நாளில், சனகாதி முனிவர்கள் நால்வரும் சிவபெருமானையடைந்து, "கருணை நிதியே! யாவுங் கற்றனம். உண்மை நிலையிதெனத் தெரியாது வருந்துகின்றனம். கிருபைகூர்ந்தருள வேண்டு" மென்றிரப்ப, உமையொருபாகன் "ஆகுக" வெனக்கூறி, தக்ஷிணாமூர்த்தி காப் பிருத்தலைப் புகன்று, ஒரு சிவஞான நூற்கையிற் கொண்டு கிரமப்பட உபதேசித்தனர்.

மன்மத தகனம்

பின்னர் அதனை அனுபவித்துக் காட்டுவார்போலும் ஓர் இமை யளவுநேரம் பதுமாசனத்தில் சின் முத்திராங்குசத்தோடு நிட்டை கூடியிருந்தனர். அதனால், உலகங்களெல்லாம் விவகாரங்களற்று, முத்தொழிலும் நடவாதிருந்தன. இதனைக்கண்ட தேவர்கள் தேவ தேவோத்தமனின் ஞான நிலையைக் கெடுக்கவும், உலகமெல்லாம் பழயபடியே விரிந்து விவகாரங்கள் நடக்கவும் யோசித்து, இந்திர னால் மன்மதனை இறைவன்மேல் மலர்க்கணையை விடுத்து யோகத் தினை யழிக்கச்செய்ய, இறைவன் நெற்றிக்கண்ணைத் திறந்து மதன னைத் தகித்துச் சாம்பராக்கினர். அக்காலருகிலிருந்த இரதிவேண்ட லால், இரதி கண்ணுக்குமாத்திரம் உருவமாகவும், மற்றோர் கண் ணுக்குத் தோன்றுமலு மிருக்க, அவனுக்கு வரமளித்தனுப்பினர். அதனால் இறைவனுக்குக் காமதாசனென்றும், மதனுக்கு அநங்க னென்றும் பெயராய தென்ப.

கலசம்

வேண்டுவார் வேண்டியவண்ணம் விரும்பி நல்கும் வேத வேதாந்த நாயகராகிய சாட்சாத் சம்புவானவர் ஆன்மாக்களின் பாசவொழிபிற்காக, இலகிளேசுர புவனத்தில் அளப்பரிய அநேக கோடி நிகள அகலமுடைய ஏகரூபமாய் ஆசாரிய மூர்த்தமா யெழுந் தருளி யிருப்பார். அவ்வவசரத்தில் வலது கைத்தலத்தில் மழுவும் சூலமும், இடது கைத்தலத்தில் கலசமும் ஏந்தியிருப்பர்.

தண்டம்

சருவ கருத்தத்துவ, சருவமங்கள தேசோமயமாய், அனவரத முந் தமது பத்த நேசர்களது திருவுளக் குறிப்பி னெறியே யொழு கும் ஸ்ரீ பரமபதியின் கிருபா விசேடமன்றி ஆன்மாக்களுக்கு வேறு துணையின்மையால், திருவருட் சொரூபரே அடியார் கோரியவா றெழுந்தருளி கிருபைசெய்வார்; அதனாலேயே அவருக்கு ஆபதோத் தாரண ரென்பர். அங்ஙனம் மானுடச்சட்டை தாங்கி யெழுந்தரு ளும் அவசரத்து இரண்டு கரமும் அங்கரமிரண்டி லொன்றில் கபால மும், மற்றொரு கரத்தில் தண்டமும் ஏந்திவருவர்.

சிரமாலை

பிரம விஷ்ணுக்களை யுண்டாக்கி, அவர்களில் பிரமனைக்கொண்டு உலகத்தைச் சிருட்டித்தும், விஷ்ணுவைக்கொண்டு காத்தும், பின்பு

சங்கரித்தும் பலவாறு இம் முத்தொழில்களைச் செய்கையில், பிரம விஷ்ணுக்கள் முடிவான காலத்தில் சங்கரித்து அவர்கள் எலும்புகளையும் சிரங்களையும் மாலைகளாக அணிந்தருளுவார்.

திருநீறு

முன்பொரு கற்பமுடிவில் இவர்களை யெல்லாம் நெற்றிக்கண் பொறியால் நீறுபடுத்தி அந்தப் பொடியைத் தமது திருமேனியில் தரித்துக் கொண்டருளினர். அன்றி விபூதியானது, பரமசிவனுடைய அக்கினிபோன்ற திருமேனிமேல் இயல்பாகப் பூத்துள்ளது. அது அகாதியான விபூதி. பின்பு தேவர் முதல் சராசரங்களை யெல்லாம் இறுதிகாலத்தில் நீறுக்கித் தம்முடைய திருமேனியில் தரித்தருளினர். அது ஆதிவிபூதி. நெருப்பின்மேல் நீறு பூத்திருப்பது இப்போதுந் திருட்டாந்தமாகக் காணலாம்.

உருத்திராக்கம்

கமலாட்சன் முற்காலத்திலே தாரகன் என்னும் அசுரன் எக்தையாகிய கந்தவேளாற் கொல்லப்பட்டபின்பு, அவன் புத்திரர்களாகிய தாரகாட்சன் வித்துவன்மாலி யென்னு மூன்றசுரர்களும் வரபலத்தினால் முறையே பொன்மதில், வெள்ளிமதில், இரும்புமதில் என்னு மூன்று நகரங்களைப் பெற்றுச் சிவபக்தியுடையராய்ச் சிவபூசையாதியனசெய்தும், தேவர்கள்யாவருந் தமது தந்தையைக் கொல்லுவித்தாராகலின், பழிக்குப்பழிவாங்க நினைத்து அவரை வருத்துவாராயினர். அத் துன்பங்களை யெல்லாஞ் சகிக்காத விஷ்ணு பிரமன் முதலியவர்கள் யாவருஞ் சென்று சிவபெருமானது திருச்சந்நிதானத்தையடைந்து முறையிட்டுப் புலம்பினர். அதனைத் திருச்செவியாற் கேட்டவளவிலே பரமநாதனாகிய சிகண்ட பரமசிவன் அடைக்கலம் புகுந்த தேவர்களை நீக்காது காத்தலும், தம்மீது அன்புடையராய்ப் பூசையாதியன செய்தொழுகும் அசுரரை யொறுக்காது காத்தலும் இறையாமாதலின், மௌனங்கொண்டவராய்த் தேவர்களின் பெருந் துன்பைத் தமது திருவுளத்தடைந்து இரக்கமுற்று, அவர் துன்பம் நீங்குமெல்லையை நோக்கி, ஆயிரம் தேவவருட மளவுந் தமது மூன்று நிருக்கண்களையும் மலர்த்திக்கொண்டிருப்ப, அவைகளி னின்றும் நீர் பொழிந்தது; சூரிய வடிவாகிய வலக்கண் பொழிந்த நீரிலே பன்னிரண்டு உருத்திராக்கமரமும், சந்திரரூபமாகிய இடக்கண் பொழிந்த நீரிலே பதினாறு உருத்திராக்கமரமும், அக்கினி யுருவாகிய நெற்றிக்

கண் பொழிந்த நீரிலே பத்து உருத்திராக்கமரமும் உதித்தன. இடக் கண்ணில் வெண்ணிற உருத்திராக்கந் தோன்றிற்று. வலக்கண்ணினின்று கபிலநிற உருத்திராக்கமும், அதினின்று செந்நிற உருத்திராக்கமும், அதினின்று பொன்னிற உருத்திராக்கமுந் தோன்றின. நெற்றிக்கண்ணிற் பொழிந்த நீரினின்றும் கருநிற உருத்திராக்கந் தோன்றிற்று. அவைகளுள் ஒவ்வொன்றையுஞ் சத்தி, விஷ்ணு, பிரமன், சத்தமாதர்கள், அட்டவித்தியேசுரர், திக்குப்பாலகர், ஏகாதசருத்திரர், அட்டவசுக்கள், அசுவனிதேவர்கள், துவாதசாதித்தர்கள், ஆதிசேடன், முனிவர் முதலிய கணங்கள் யாவரும் பிரீதியாகக் கேட்டுச் சிவபெருமான் ஆஞ்ஞைப்படி தரித்துக்கொண்டனர்.

ஆமையோடு தரித்தது

பாற்கடல் கடைந்தபோது மந்தரமலையாகிய மத்தினைத் தாங்கி நின்ற மாயவன் அவதாரமாகிய ஆமை, கடலேழையும் ஒன்று கூட்டி அதன் வெள்ளம் அவனியை யழிக்கும்படி கலக்கி, சிந்து வைச் சேறுபடுத்தி இலக்கயோசனை மேன்முதுகும் கால்களினளவைக் கணக்கிட்டறிய ஏலாதவிதமா யியைந்ததாதலின், திமிங்கலமுதலிய சலப்பிராணிகளெல்லாம் புசித்தும் பசி தணியாமல், சலத்தையுங் குடித்துத் தரை தெரியும்படி சேற்றையும் நக்கியது. அதனாற் கலங்கி வெளிப்படுத்தப்பட்ட கடல் நீர் யுகாந்தவெள்ளம் போல எங்கும் பரவியது. தாமோதரனுகிய ஆமை தனக்குக் கிடைத்த பல பொருளையுந் தின்னத் தலைப்பட்டது. இதனை யறிந்த சூரிய சந்திரர் கடலிற்குன்றிச் செல்லுவதற் கஞ்சினர். உலகமெங்கும் இருட் பிழம்பாயது. மகபதியும் மலரோனும் வையமழியுமென்று மனங் கலங்கி, ஸ்ரீ கைலாயமலையை யடைந்து திருநந்திதேவ ராஞ்ஞையால் மகா சந்நிதானத்துட் சேர்ந்து, சிவபெருமானைச் சேவித்துத் துதித்து நின்று, 'எம்பெருமானே! எளியேங்கட்கு இடுக்கணெய்தினால், அதனையகற்றி அருள் செய்வோர் யாவர்? அடைக்கலம்! அடைக்கலம்!! அச்சுதன் ஆமை வடிவுகொண்டு ஆர்கலியிலிருந்து அவன் புரியும் அல்லல் அறைதற்பாலதோ; அறியார் போன்றிருப்பது தேவரீரது திருவருளுக் கழகாமோ; விரைவில் அதனை விலக்கி எங்களைக் காக்கவேண்டும்" என்று குறைகூறி யாசித்தனர்.

சிவபெருமான் தேவமாதுடர்கட்குத் திருவருள் செய்யத் திருவுள்ளங்கொண்டு, "அமரரே! அஞ்சன்மின்!" என்று உடன்வரக்

கொண்டு, உதகியையடைந்து தமது திருக்கரத்திருந்த சூலப்படையால் அக் கூர்மத்தின் உடலிச் செகுத்து, அதன் இறைச்சியைக் குடைந்தெரிந்தனர். அதனைப் பார்த்துக்கொண்டிருந்த பண்ணவர்களிகூர்ந்து ஆர்த்து, "கருணாகியே! கமலை கேள்வன் மீண்டுங் கருவமடையாமல் அவ் வோட்டினைத் தேவரீர் திருமேனியிலுள்ள திருவாபரணங்களோடு ஒன்றுக அணிந்துக்கொள்ள வேண்டும்" என்று வேண்ட, அடியாரவாவிய அடைவே அருள்புரியும் அண்ணலார் அக் கூர்மத்தின் முதுகோட்டையுந் தமது திருமார்பிலுள்ள பிரம விஷ்ணுக்களின் சிரமாலைக்கு நடுநாயகமாக வணிந்தனர்.

சிவபெருமானுக்குள்ள சின்னங்கள் இவ்வளவுதானே என்னில், அவைகளை இவ்வளவுதானென் றளவிட்டு கூறுதற் கடங்காது. என்னையெனில், சிவபெருமான் அடியாரபிட்ட பிராத்தமாக,

மாணிக்கம் விற்கச்	செட்டியாகவும்
வைகையையடைக்க	ஒட்டராகவும்
விறகு சுமந்து	வில்லியர்போலவும்
மாமனுக வந்து	தவசிபோலவும்
அரசாள	மன்னராகவும்
அருச்சுனருக்காய்	வேடராகவும்
எல்லாம்வல்ல	சித்தராகவும்
கௌரி யென்பாளுக்கு	விருத்த வேதியராகவும்
சிரகிரியில்	மருத்துவச்சியாகவும்
பன்றிக்குட்டிகளுக்காகப்	பன்றி வடிவமாகவும்
ஸ்ரீ சுந்தருக்காகத்	தூதுவராகவும்
திருமால் மச்சாவதாரத்தில்	வலைஞராகவும்
தமிழ்ச் சங்கத்திற்	புலவராகவும்
பிரம விட்டுணுகளுக்காக	மலைவடிவாகவும்
பிரபுலிங்கலீலையில்	மத்தளம் வாசிப்பவராகவும்
மதுரையில்	வளையல் விற்பார்போலவும்
சிறுத்தொண்டரிடத்து	சங்கமராகவும்
தாருகாவனத்தில்	அதிதியைப்போலவும்

இதுபோல் யோகியாகவும், முனிவராயும், குதிரையோட்டியும், ஓலைகாட்டியும், தண்ணீர்ப்பந்தல் வைத்தும், சோறளித்தும், ஆசாரியராயும், சீடராயும் திருவுருவங்கொண்டு, அவரவர்கள் இட்

டம்போல வேண்டிய போகங்களை யளித்து, இடுக்கண்களை யொழித்து எல்லாச் சித்திகளையு முதவு மொப்புயர்வில்லாத சிவம் இத்தன்மையர் தானெனக் கூறவொண்ணாது. அனந்தமாகும் உருவங்கள் தோறும் தாங்கிய சின்னங்கள் அளவில்லாதனவாகும். ஆனதால், எம்பெருமானுக்கு எல்லாம் சொந்தமே. ஆயினும் ஒன்றுமில்லாதவரே யானதால், அறிஞர்கள் உலகமெல்லாம் இறைவனேயாகும். ஆனதால்,

"அறிவிலா அறிவினர்கள் வேறொரு சமயஞ்செய்தே
அறிவினர் சொன்ன ரேனும் எம்பிராற் கேற்றதாகும்"

—ஆளுடைய அரசு.

"தாவர சங்கமங்க ளென்றிரண் டருவினின்று
மாவரன் பூசையேற்று மன்னுயிர்க் கருளைவைப்பன்"

—சிவஞான சித்தியார்.

என்று கூறியும், அவ்வாறு சமயங்கள் பலவும், அச்சமயங்கள் தோறும் தாங்கி சித்தாந்த பேதங்கள் பலவும், அப்பேதங்கள் தோறும் கொண்ட திருமேனிகள் பலவும், திருவுருவங்கள்தோறும் செய்த அற்புத லீலைகள் பலவும், இலீலைகள்தோறும் தாங்கிய சின்னங்கள் பலவுமாதலின், இன்ன வகையினர்தாமென்று சொல்லப்படுவதல்லாமையாகும்.

"மைப்படிந்த கண்ணுளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் மாசொன் றில்லா
னெப்புடைய னல்லனே ருருவ னல்ல
னேரூர னல்லனே ருவம னில்லி
அப்படியு மந்நிறமு மவ்வண் ணமு
மவனருளே கண்ணுகக் காணி னல்லா
லிப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே" என்றும்,

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

சிவரூபம்

"கோடி மறைகளினுங் கூறரிய வான்பொருளைத்
தேடி யறியுந் திடமெங்கே—நாடி
லவனேநா மாகி யறிவ ரவரே
சிவ மென்பார் வேறில்லை தேர்."

என்றும் கூறப்பட்டனர். ஆனதால், இறைவனது திருவுருவங்களையும், அவர் திருச்சின்னங்களையும் கூறுது, இவ்வளவிலேயேவிட்டு அவர்கொண்ட சிவலீலா பேதங்களைக் கூறத் தொடங்கினேம்.

இலிங்க உருவம்

சிவலிங்க உருவமானது நாமரூபாதி இலக்கண இலக்கியங்களுக் கடங்கு குணரகிதமாய் சருவாதிக்க, சருவேசுவர, சதாசுந்த தற்பரமாயுள்ள சிவம் தம்மை உல்கோர் வழிபட்டுய்வதற்கு இலக்கியமின்றி இலக்கணம் விளங்கப்படாதது போலவும், கண்ணில்லாமல் பிரகாசம் காணப்படாதது போலவும், தாலத்தை மூன்பு காட்டித் தனிப்பிறை காட்டுவார் போலவும், மாணிக்காட்டி மாணிப்பிடிப் பார்போலவும் மூடமாயுள்ள ஆன்மாக்கள் நியானவழி நிற்கு நிமித்தம் ஓர் அறிகுறியாய் எழுந்தருளியதாம். இவ்வுருவம் கூறது சிவத்திற்குள்ளனவாகிய,

. சகளம் (ரூபம்) நிட்களம் (அரூபம்) நிட்களசகளம் (ரூபாரூபம்) என்னும் மூவகையில் நிட்கள சகளமாகும்.

இவ்விலிங்கத்தில் பிண்டிகை சத்தியும், இலிங்கம் சிவமுமாம். எனவே, கிரியாஞான சத்திசொரூபம் சிவலிங்கமெனப்படும். அன்றி இலிங்கரூபத்தை உலகா காரமென்றும், அதனுல் உலகாதி எல்லாம் அவரேயாய் நிற்பர் என்னும் அறிகுறியென்பாரு முளர் என்னினும், சம்மதமே.

இலிங்கம் என்பது, இலிங் - லயம்; கம் - தோற்றம் என்பதாம். எனவே, எல்லாவற்றிற்கும் காரணரூபமாயுள்ளது என்றபடி.

சிவபெருமான், புறத்தே சிவலிங்கமுதலிய திருமேனிகளும் குருவுஞ் சங்கமும் ஆதாரமாகக்கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக்கொண்டு நின்றும், ஆன்மாக்கள்செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், ஆன்மாக்கள் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம். சிவத்துக்குப் பெயராகிய இலிங்கம் என்னும் பதம் உபசாரத்தால், அச்சிவம் விளங்கப்பெறும். ஆதாரமாகிய சைவ முதலியவற்றிற்கு வழங்கும். சிவபெருமான் இவ்விடங்களின் நிற்பர் என்றது, அவர் எங்கும் வியாபகர் என்றதனேடு மாறுபடுமன்றே? மாறுபடாது. சிவபெருமான், எங்கும் வியாபகமாய் நிற்கினும், இவ்விடங்களின் மாத்திரமே தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றை இடங்களிலெல்லாம் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பர். சிவலிங்கம், (பார்த்தலிங்கம்) இட்டலிங்கம் என இருவகைப்படும். சிவபெருமான் சங்காரகாலம்வரையுஞ்

சாந்நித்தியராய் இருந்து ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கப்பெறும் இலிங்கமாம். தாவலிங்கம் எனவும் பெயர் பெறும்.

சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐவகைப்படும். இவைகளுள்ளே சுயம்புலிங்கமாவது தானே தோன்றியது. காணலிங்கமாவது, விநாயகர் சுப்பிரமண்யர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவிகலிங்கமாவது, விட்டுணுமுதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிடலிங்கமாவது, இருடிகளாற் ரூபிக்கப்பட்டது; அசுரர் இராக்கதர் முதலாயினராற் ரூபிக்கப்பட்டதும் அது. மானுடலிங்கமாவது, மனிதராற் ரூபிக்கப்பட்டது. மானுடலிங்கத்தின் உயர்ந்தது ஆரிடலிங்கம், அதனின் உயர்ந்தது தைவிகலிங்கம், அதனின் உயர்ந்தது காணலிங்கம், அதனின் உயர்ந்தது சுயம்புலிங்கம்.

அக்கினி சொரூபம்

சிவபெருமானுக்கு இயற்கையாயுள்ளது அக்கினிவடிவம்; ஆனதாலேயே அவரைச் சோதி சொரூபரென்றும், பரஞ்சோதி யென்றும், அழலாடி யென்றும் கூறுப. மேலும், பஞ்ச பூதங்களிலே முதற்காரணமாயுள்ளது அக்கினி; அக்கினியையன்றி எக்கிருத்தியங்களும் நடவாது; அதுபோலச் சருவபூதங்களுக்கும் பூதமாயுள்ள நீரூர்ந்தமேனிய ராதலால், பூதநாத னென்றும் கூறப்பட்டனர்.

அன்றி, ஒருகால் பிரம விட்டுணுக்கள் நம்மிருவரில் யார் பெரியவரென, பிரமன்யானே பெரியவனென்ன, திருமால்யேயல்ல நானேயெனச் சண்டைசெய்திருந்தனர்; இவர்கள் கருவத்தை யழிக்கும் பொருட்டு இருவர்மத்தியிற் சோதிசொரூபமாய்ச் சிவலிங்காகாரமாக எழுந்தருளி அசரீரியாக உங்களிருவருள் சோதிவடிவாயெழுந்தருளிய இதன் அடிமுடிகளே யார் அறிகின்றீரோ அவரே பெரியோரென்று கூற, அதனைக்கேட்ட பிரம விட்டுணுக்கள் தங்கள் இறுமாப்பை யகலாது அவ்வாறே பிரமன் அன்னரூபமாய் முடியையும், திருமால் பன்றிவடிவாய்ப் பாதலத்தைத்தோண்டி அடியையுங் காணும்படியாய்ச் சென்று யுகக்கணக்காய்த் தேடியும், கைகாலோய்ந்திளைத்தும் காணராய் வருந்திப் பழையபடியே பூமியையடைந்து, ஈது எல்லாம் வல்ல ஏகன் செயலாகும்; ஆனதால், நாம் அவமதித்துத் தேடுவோமெனக் கொண்ட கருவமொழியுமாறும்;

நாம் அறியாமல் நம்மையே பெரியோரெனச் சண்டையிட்ட மம தையை நீக்குமாறும் ஓர் இலிங்கப்பிரதிட்டை செய்து பூசிப்போம் என்று பூசித்தனர். அதற்குச் சிவபெருமான் களித்துக் கைலாயத் திருக்கோலங்களோடு காட்சிதந்து; பின்னர் அயனரிகளின் வேண்டு கோளால் அகண்டமாயிருந்த சோதி ரூபமானது மலையுருவாகி * அருணாசலம் என்னப்பட்டது.

சரப ரூபம்

ஒரு காலத்தில் இரணியாக்கதனென்னு மசுரனுக்குத் தம்பி யாகிய இரணியனென்னும் அசுரன் அனேககாலம் சிவபெருமானே நோக்கித் தவம்புரிந்து எல்லா வரங்களையும் பெற்று ஏகசக்கிராதிப னைத் தேவர்களைத் தன்னேவலுக்குள்ளாக்கி இம்சைசெய்து எல் லாரும் 'இரண்யநமா' வென்றுத் துதித்து வாழுகாளில், இதனைப் பொறுத இமையவர் விண்டுமூர்த்தியைக் கண்டு விளம்ப, சாரங்கன் தனதொருகூற்றை அவனது தவப்புதல்வனைச் சனிப்பித்தனன். அப்புதல்வன் ஐந்து வயதடையப் பள்ளியில் விட்டுப் படிப்பிக்க எத்தனிக்கையில், உத்திரவின்படி உபாத்தியாயர் 'இரண்யாயநம' என்று போதிக்க, சிறுவனுகிய பிரகலாதன், 'நாராயணாயநம' என, ஐயர் அரசனுக்கு அறிவிக்க, அரசன் பலவகைத் தண்டஞ்செய்தும் பயனுறுமையால், 'நீ கூறுகின்ற பரம்பொருள் யாண்டுளது?' எனக் கேட்க, பிதாவை நோக்கிப் பிரகலாதன், "இறைவனெங்கு முளன்" எனக் கூறினன். அதைக்கேட்ட இரண்யகசிபு கோபங் கொள்கையில், நாராயணன் நரவடிவுஞ் சிங்கவடிவுங் கூடிய நரசிங்க மாகத் தூணைப் பிளந்துக்கொண்டு வெளிவந்து அவனுடன் அரும் போராற்றி, அத்தானவத் தலைவனைத் தன் மடியிலிருத்தி, நகங்களால் மார்பைப் பிளந்து குடரைப் பிடுங்கி மாலையாயணிந்து இராப்பகலுக் கிடையாகிய சாயங்காலப்பொழுதில் மேலிட்டு, ஒரு துளி யுதிரமுங் கீழ்விழாமற் கையிலேற்றும், வாய்வைத்துப் பருகியும் உயிர் மாய்த்த னர். அவனைச் சங்கரித்த காலத்தையே இரணியவதை யென்பர். நிருமகள் கொழுநன் அசுரனுதிரமருந்திய வெறியால் அவனிமாக் களை வாரி வாயிற்பெய்து செருக்குற்ற செயல்கண்டஞ்சி தேவர் ஒருதொடியி லுலகமழியுமென வுட்கொண்டோடிச் சென்று, நிருக்

* அருணன் - சோதி, ஒளி, அக்கினி என்பனவாம்.
அருணம் - சிவப்பு, சைலம் மலை. செம்மலை அக்கினி என்பதுபொருள்.

கைலையை யடைந்து திருஞ்சிதேவராற் சிவபிரானுக் குரைப்ப, பரம சிவன் "பயப்படாதீர்கள்" என்று பகர்ந்து இருசிரமும், இணையில்லாச் சிறகும், கூறிய நகமுமுடைய எட்டுக்காலும், நெடிய வாலும், பேரிரைச்சலும், கடுங்கோபமுங் கொண்ட சரபத் திருவுருவுடன் நரசிங்கத்தை நண்ணி, இடிமுழக்குப்போ லிரைந்து, உதிரவெள்ள மூற்றெடுத்தோட சிங்கச் சிரசையும் கைகளையுங் கறித்துத் தள்ளி, மேலுட்கார்ந்து சிங்கத்தின் சருமத்தை யுரித்துத் திருமேனிமேற் போர்வையாகக்கொண்டு வெள்ளிமலையை யடைந்தனர்.

பரமசிவ விநாயகர் ஐந்து யானைமுகமும் பத்துக்கரமும் மயில் வாகனமும் உடையவர்

முன்னொரு கற்பத்தில் மரீசியென்னும் முனிவர், மானதசரசு வென்னும் நதிதீரத்தில் இருபத்தோராயிரவருடம் கணேசரை நோக்கித் தவம்புரிந்து, கணேசர் வரப்பிரசாதத்தால் உலகங்களெல்லாந் தன்னைப் பணியவும், தான் நிகரற்ற அரசாட்சி செய்யவும், பார்வதியாரே புத்திரியாகி அவதாரஞ்செய்யவும், பரமசிவன் விநாயக மூர்த்தமா யெழுந்தருளி மணம்புணரவும், இதுபோலனந்த வரங்களையும் எல்லாத் தேவமுனிவர்களும் பணியுங் கீர்த்தியையு மடைந்து பிரமன் தேவவல்லியென்னும் ஒரு பெண்ணைச் சிருட்டித்துக் கொடுக்க, மணம்புரிந்து வாழும்நாளில், சிவாஞ்ஞையால் யமுனை நதியில் ஒரு தாமரைக் கமலத்துள் உலகமெலா மீன்று காத்தருளும் உமையம்மையார் ஒரு சங்குவடிவா யெழுந்தருளி நாளுக்கு நாள் வளர்ந்து குழந்தைவடிவா யிருக்க, இதனை மரீசிமுனிவர் உணர்ந்து, 'ஓ! ஓ!! நாம் விரும்பிய அகிலாண்டேசுரியா ரவதரித்தனர்போலு' மென்றெடுத்துச் சென்று சீராட்டி, வல்லபையென்னத் திருநாமமிட்டு வளர்த்து வருநாள், அம்மையாருக்குப் பிரிவாற்றாது முனிவராஞ்ஞையால் குற்றேவலர் சூழ, அனேக முனிவர் வசிக்கும் ஒரு வனத்துத் தவச்சாலையை யடைந்து, ஏகாக்கர மந்திரத்தை யுச்சரித்துத் தவம் புரிவாராயினர். அவ்விடத்து இறைவன் சிவவேதியர்போல எழுந்தருளினர். இவர் வருகையைத் தாதிகளால் அம்மையார் தெரிந்து எதிர்கொண்டு வணங்கி, "சுவாமிகள் யாரோ? இவ்விடம் எழுந்தருளிய காரணம் யாதோ?" வென்றுபசரிக்க, பிராமணர், "ஓ பெண்ணே! நாம் உம்மை மணம்புரியும் இச்சையாக வந்தோ" மென்று ஆசீர்வதிக்க, அம்மை அதிக கோபாவேசத்துடன், "அறி

வற்றவனே! என்ன கூறினாய்? எனது சிவபத்தியையும் பாராமல் நீ விரும்புவது தகாது. சருவாதிக்கராயுள்ள சாட்சாத் சங்கரனே யன்றி, மற்றோரைக் கனவிலும் நினையேன். அப்பரம தயாகிதியே என்னை விவாகஞ் செய்யினல்லாமல் மற்றவராகார்" என்று மறுக்க, சுவாமிகள் நிசரூபத்தோடு ஐந்து யானைமுகமும், பத்துத் திருக் கரங்களுமாக மயில்வாகனரூடராய்க் காட்சிதந்து மரீசிமுனிவர் வேண்டுகோளால் சருவாடம்பரத்தோடும் அம்மையாரை மணம் புரிந்தனர். இவரை வல்லபை விநாயகரென்றும், பரமசிவ விநாயக ரென்றும் கூறுவர்.

பஞ்சமுக மூர்த்தி

சாந்தம், சுத்தம், சதானந்தம், நித்தியம், அகண்டம், தற்பரம் என்னும் மங்கள குணங்களை வாய்ந்த சருவாதிக்கராகிய சாட்சாத் பரமசிவம், ஆன்மாக்கள் தியானபரராய் உச்சீவிக்கும் நிமித்தம் சகள ரூபமாய், சருவசமமாக, கன்மசதாக்கிய திருவுருவையுடைய ஐந்து திருமுகமும், பத்துத் திருக்கரங்களும், அக்கரங்கள்தோறும் சூலம், மழு, மணி, தமருகம், வச்சிராயுதம், வாள், கட்கம், நாகம், பாசம், அங்குசம், நீலோற்பலம், அக்கினி, அபயவரதம், படிகநிறம், செஞ்சடாமுடியும், ஒரே தேகமும், உபயபாதமும், பரிவட்டமும், மாலையும், புன்னகையு முடையவரா யிருப்பார்.

இவருக்குக் காமிகாதி வாதுளமீறுகிய ஆகமம் இருபத்தெட் டும்; முறையே திருவடி, கணைக்கால், பாதவிரல்கள், கெண்டைக் கால், முழந்தாள், தொடை, குய்யம், கடித்தானம், முதுகு, கொப் பூழ், உதரம், நாபி, மூலை, கண், கழுத்து, செவி, திருமுடி, கை, மார்பு, முகம், நாவு, கபோலம், நெற்றி, குண்டலம், உபஸ்தம், ஆரம், இரத்தினபரணம், பரிவட்டம் இவைகளாகும்.

ஐந்து முகங்களாவன:—ஈசானம், தற்புருடம், வாமம், அகோ ரம், சத்தியோசாதம் என்பனவாம். இது முறையே பராசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி யென்னும் பஞ்ச சத்திகளால் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரக மென்னும் பஞ்ச கிருத்தியங்களையும் நடத்துவதாம். இதனையே பிரம விஷ்ணு ருத்திர சதாசிவ மயேச்சுரனென்னும் பஞ்சமூர்த்தி சொரூப மென்பர். இம் மூர்த்தத்தை வழிபடுவோர்களுக்கு இம்மையில் பூர்வ

மல நாசமும், ஞானமோக்கப் பிராப்தியும், எல்லாபோகமும் எளிதிற் கைகூடும்.

இச்சதாசிவமூர்த்தி இருபத்தைந்து முகமும், புலியாடை, அரவாபரணம், சங்கு, சக்கரம், வேல், வாள், நாகம், சூலம் முதலிய ஆயுதங்கள் விளங்கப் பிரகாசிப்பர். இவரது வைபவாதிகளை ஆகமாதிகளே விரித்துக்கூறும்.

எமனை யுதைத்தது

மிருகண்ட முனிவர் என்பவர் முற்கலமுனிவர் தவப்புதல்வியாகிய மருத்துவதி யென்னுங் கன்னியை மணந்து நெடுங்காலம் புத்திரரின்மையாற், காசி க்ஷேத்திரத்தை யடைந்து மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து சிவபெருமானை நோக்கிப் புத்திரப்பேற்றினை யவாவித் தவஞ்செய்ய, பெருமான் பிரத்தியட்சமாகி, "முனிவனே! தீக்குணம், ஊமை, செவிடு, குருடு, முடம், தீராப்பிணி, அறிவின்மை யாகிய இவற்றோடு கூடிய நூறுவய துயிர்வாழும் புதல்வன் வேண்டுமா? அல்லது அழகு, நல்வடிவு, நோயின்மை, எமதன்பு முதலியவற்றைப் பெற்று பதினாறு வயது சீவித்திருக்கும் மைந்தன் வேண்டுமா? என, முனிவன் "வயதுகுறைந்து வாழ்வானாயினுஞ் சற்புத்திரனையே விரும்பினேன்" என்று விண்ணப்பிக்க, அவ்வாறே வரமளித்து அந்தர்த்தானமாயினர். பிறகு சிறிதுகாளில் அம்முனிவன் மனைவி கருப்பமுற்று நல்ல சுபமுகூர்த்தத்தில் ஒரு மைந்தனைத் தந்தனள். தேவர் புட்பமாரி பொழிந்தனர். தேவதுந்துபி முதலியன முழங்கின. பிரமதேவன் அச்சிறுவனுக்கு மார்க்கண்டனென நாமகரணஞ் செய்தனன். உபநிட்டானம், சந்தியுபாசித்தல், அன்ன பிராசன முதலியவற்றை முறைப்படிசெய்து, ஒரு வருடத்திற் றலை மயிர்களைந்து, இரண்டாம் வருடங் கன்னவேதனமியற்றி, ஐந்து வயதில் உபநயனம் நடத்தி, வித்தியாப்பியாசஞ் செய்வித்தனர். மார்க்கண்டேயர் வேதாகமமுதலிய நூல்களிற்றேர்ந்து 'சிவபெருமானே உண்மைப்பொரு' ளென்றுணர்ந்து, சிவபத்தியுஞ் சிவனடியாரிடத் தன்பு மதிகரித்தனர். அவ்வாறிருக்கையில் வயது பதினாறுகவே தாய் தந்தையர் இவரைப்பற்றி யெப்போதுந் துன்புற்றிருந்தனர். அதனை யுணர்ந் 'தென்' னெனக் கேட்க, உண்மையுரையாராகிக் கடைசியிற் சிவபெருமான் தனக்களித்த வரத்தைத் தந்தை சொல்ல, 'எந்தையே! யான் சிவார்ச்சனை செய்து பெருமா

னது பேரருளால் எமனைவென்று வருகிறேன் அஞ்சவேண்டாம்" என்று கூறி விடைகொண்டு காசிக்ஷேத்திரத்தில் மணிகர்ணிகைக் கருகே சிவலிங்கப் பிரதிட்டைசெய்து பூசித்து எம்பெருமானால் "எமபயம் நீங்குக" என்னும் வரம்பெற்று, மீண்டும் பூசாகாலந் தவறாது பூசித்து வருகையில், மரணதிசை குறுக, எமனது கட்டளைப்படி ஓரு தூதன்வந்து அவரது பூசாபலத்தினால் சமீபிக்கக் கூடாதவனுய்ச் சயமினி நகரஞ்சேர்ந்து தன் தலைவனுக்குச் சாற்ற, அவன் கோபித்துத் தன் கணிகராகிய சித்திரபுத்திரரை வரவழைத்து அவர் கணக்கை விசாரித்தறிந்து, தன் மந்திரியாகிய காலனை யனுப்ப காலன் போய்ப்பார்த்துத் தன்னலொன்றுஞ் சாயாதவனுய்த் திரும்பிவிட, எமன் ஆலகாலம்போற் கொதித்துத் தன் மகிட வாகனத்தையழைப்பித்துத் தானே அதின்மீதேறி மழு, தண்டம், பாசம், சூலம் இவற்றையேற்று, குடையுங் கொடியுந் தூதர் தாங்கிவர, மார்க்கண்டேயரைக் கிட்டியழைக்க, அவர் வராமையால் வெகுண்டு, நெருப்பெழச் சிரித்துப் பற்களைக் கடித்து, சிரத்தை யசைத்துப் "பிரமாதி தேவர்களும் யானுமே ஒருகாலத்திற் போவோமானால், நீயோ வரமாட்டாதவன்" என்று கோபத்துடன் நீலமலைபோல நின்று கழுத்திற் பாசத்தை வீசியிழுக்க எத்தனிக்கையில், மார்க்கண்டேயர் பயந்து சிவலிங்கக்குறியைத் தழுவி நின்றனர். அப்பொழுதில் ஆபத்து சகாயராகிய சிவபெருமான் "அஞ்சற்க!" என்றருளிச் செய்து, அச்சிவலிங்க மூர்த்தத்தினின்றுந் தோன்றித் தமது இடதுகாலா லுதைக்க, இமைப்பொழுதில் எமன் உயிர் நீங்கினன். பின்னர் பூமியில் மரணவத்தை யின்மையாற் பூதேவி சுமையாற் றளாய்க் குறையிரப்ப, அருட்பெருங் கடல் மீண்டும் அவனை யெழுப்பினர். மிருகண்டு புத்திரராகிய மார்க்கண்டேயரைச் சிரஞ் சீவியாக்கிக் காலனையடக்கிய கோலமே காலாந்தகமூர்த்தமெனப் பெயர்பெறும்.

அர்த்தநாரீசுவரர்

ஒருகால் திருக்கைலையில் சிவபெருமான் சருவதேவ பூசித்தாய்ச் சாட்சாத் உமையம்மையாரோ டெழுந்தருளி யிருக்கையில், மகாமுனி சிரேட்டராகிய பிருங்கியானவர் பார்வதி தேவியாரைப் பணியாமற் சிவபெருமானை மாத்திரம் பணிந்து பலவகையாகப் பாடிப் புகழ்ந்து நிற்பதுகண்ட இமயவல்லி, 'இம்முனிவன் யாவன்?

எம்மைச் சிறிதும் மதித்திலன்' என்று முனிந்து, சத்தியாகிய தனது கூருகவுள்ள உதிரமாமிசங்களே அவருடலிற் சிறிதுமின்றி ஆக்கி ராணித்துக்கொள்ள, அவர் சிவக்கூருகவுள்ள என்பையும் நரம்பையுமே கொண்டதோர் பதுமைபோலத் தள்ளாடிநின்று தம்மைப் பிரார்த்தித்ததுகண்ட தாணு மனந்தரியாராக ஒருகோலையுதவ, பிருங்குமுனி களித்து மூன்றுகாலுடன் முன்னின்று கூத்தாடிப் பல வகையாகப் பாடிச் சென்றனர்.

கவுரியம்மையார், கனவருத்தமுற்றுக் கடுகியெழுந்து கணவராகிய கண்ணுதலே நமஸ்கரித்து எம்பெருமானே! எளியேன் தவமிழைக்க எண்ணினேன். ஏழையேற்கு இன்னருள் புரியவேண்டும் என்று விண்ணப்பித்து விடையேற்றுத் திருக்கையிலை நீங்கி ஐங்கரக்கடவுள் அறுமுகக்கடவுள் சத்தமாதர் மூதலானேர் தம்மைப் புடைசூழ்ந்து நிற்க, ஒரு மலைச்சாரலில் எழுத்தாணின்மேல் நின்று எண்ணற்குமரிய தவத்தை எண்ணிலாக்கால மியற்றினர்.

சிவபெருமான் உமாதேவியார் தவத்திற் கிரங்கித் திருவருள் புரியத் திருவுளங்கொண்டு இடபவாகனரூடராய், சமத்த தேவர்களுந் தம்மைப் புடைசூழ்ந்துவரவும், சருவவாத்தியங்களு மொலிக்கவும், வேதங்கள் கோஷிக்கவும், மலைச்சாரலே யடைந்து எமதன்னையாகிய ஈச்சுவரியின் தவச்செயலைக்கண்டு சந்தோடித்துக் காட்சிதர தேவியார் திருக்கண்களாற் பரிசித்து விழியினின்றும், ஆனந்தபாட்பஞ் சிந்த அடியற்ற மரம்போலச் சாட்டாங்கமாகத் தரைமேல் விழுந்து பணிந்தனர். மாதேவர் மனக்களிப்பு மிக்கவராய், "மாதே! யாதுவரம்வேண்டும்?" என வினவ, மலைமகள் மணவாளனை வணங்கி, "வள்ளலே! தேவரீர் வேறும், அடியாள் வேறுமாக இருப்பதில் வெறுப்புற்றேன். வாமபாகத்தில் அடியாள் கலந்திருக்க வேண்டும்' என, சிவபெருமான் அவ்வாறே தமது திருமேனியில் வாமபாகத்தை அம்மையாருக் கருள்செய்து இடபாரூடராகித் தேவியாருடன் திருக் கைலாயகிரியை யடைந்தனர். பாதி சரீரம் வாமபாகத்தில் உமையம்மையுமாக வீற்றிருக்குந் திருக்கோலமே அர்த்தனாரீசுரமெனப்படும்.

சங்கர நாராயணர்

முன் ஒரு கற்பத்தில் அகிலகாரணராகிய சாட்சாத் விஷ்ணு மூர்த்தி நமது சங்கரனை நோக்கி நெடுநாள் அரிய தவஞ்செய்தனர்.

அத்தவத்திற்குச் சிவபிரான் மகிழ்ந்து பிரசன்னமாகி, "திருமாலே! யாது காரணமாகத் தவம்புரிகின்றாய்? நீயோ மகா தவசிரேட்டன்; இரட்சிப்புக் கடவுள்; அன்றியும், மாயாசால கபடநாடக சூத்திரன் என்று உலகங் கொண்டாடத்தக்க மகத்துவங்களைக் கடாட்சித்திருக்கின்றோம்" என்று கூற, திருமால், "ஓ! சர்வகாரண மூர்த்தியே! சுவாமிகளே இடைவிடாது சிந்திக்கவும், தங்களே விட்டகலாதிருக்கவும் கிருபை செய்யவேண்டு" மென்றுப் பிரார்த்திக்க சங்கரன், "அவ்வாறே நீ சிவத்தியான பரனும், எமது இடபாகத்தில் இருக்கவுங் கடவாய்" என்றுத் திருவாய்மலர்ந்து அந்தர்த்தானமாயினர். அங்ஙனமே திருமால் பராசத்தியாகிச் சிவபிரானுக்குப் பாரியாயினர். அத்திருமால், பார்வதியாயும், புருடராகையால், விஷ்ணுவாயும், குரோதமுற்ற காலத்தில் காளியாயும், போர்முகத்தில் துர்க்கையாயும் விளங்குவர்.

ஆகையால், புருடபாகம் வலதுபக்கமும், பெண்பாகம் இடதுபக்கமுமெனக் கூறுவதுபோலச், சிவபெருமானது வாமபாகத்தை மகாவிஷ்ணு பூசைசெய்து பெற்றுக்கொண்டனர். அதுமுதல் சிவனும், திருமாலும் ஒரே வடிவாய் (அர்த்தநாரீசுரர்போல) வலதுபாகம் செந்நிறமும், மழுவும், அபயகரமும், இடதுபாகம் பச்சைநிறமும், சக்கரமும், வரதகரமுமாக ஏகரூபமாய் ஏகாசனத்தில் எழுந்தருளி யிருப்பர். இவ்வாறு சங்கரரும், நாராயணரும் ஏகரூபமாயிருப்பதுபற்றி சங்கர நாராயணரெனக் கூறப்பட்டது.

"ஆற்றல்வடி வாட்டங்கை யவுணராலு மகல்விசும்பு
தனிபுரக்க வமர ராலு
மற்றரிதா யெவ்வுயிர்க்கு மயங்கச்செய்யு மாயைனைக்
களித்தனமெம் மிடப்பா னீயே
யூற்றிருந்து நறவொழுகுந் துவளத்தாரோ யுனையிகழ்ந்தோ
ரெலையிகழ்ந்தோ ரென்ன வோதி
யேற்றையிருங் கொடியுயர்த்த செக்கர்வேணி யிறைவனுயர்
தடங்கயிலை யெய்தி னனே."

"இடமால்வலநீதானிடப்பாறுழாய் வலப்பாலொண்கொன்றை
வடமாலிடந்துகிரேல வவமாழியிடம்வலமா
னிடமால்கரிதால்வலஞ்சே திவனுக்கெழினலஞ்சேர்
குடமாலிடம்வலங்கொக்கரையா மெங்கள்கூத்தனுக்கே."

என்று கூறும் ஆத்தவாக்கியங்களா னுண்மையறிக.

ஒருகாலத்தில் உமையம்மையார் சிவபெருமானை நோக்கி விரதங்களுட் சிறந்த சோமவார விரதத்தை ஆச்சிரயித்து வசிட்டராதி முனிவர்கட்கு அண்ணமளிக்கையில், இறைவியாரது தவச்செயலைக் காண விரும்பிய எம்பெருமான், விஷ்ணுமூர்த்தி பாரியாகிப் பின்வர, தாம் விருத்தவேடிய வடிவேற்று எழுந்தருளி, விமலியின் விரதத்தைச் சோதித்து, பெருமான் தமது நிசவடிவும், திருமால் முதலிற் பார்ப்பதியுருவும், பின்னர்த்தனது நிசவடிவுங்காட்டத், தேவியார் தரிசித்துக் களித்தனரெனவும் ஒரு சரிதமுளது.

திரிபுர தகனம்

தாரகாசுரன் பெற்ற தனயராகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்துன்மாலி யென்ற மூவரும் பிரமனைநோக்கிப் பெருங்காலந் தவம்புரிகையில், பதுமன் அவர்கட்கு முன்தோன்றக்கண்டு பணிந்து நின்று பலவகையாகத் துதித்து, "அண்ணலே! அடியேங்கட்கழியாவர மருளவேண்டு" மென, மலரோன் "மைந்தரே! மடியாதிருப்போர் வையகத்திலில்லை. கற்பகாலங்கழியின் யானும் இந்திராதி தேவர்களும் இறப்போம்; ஈசனே யிறவாதவன்; ஆதலின், அது நீங்க, மேம்பாடாவது, மோட்சமாவது வேண்டிற்றருவோம்" என, தானவர் பொன் வெள்ளி இருப்பினுலமைந்த மதில்கள் பொருந்திய முப்புரம் பூமி-அந்தர-சுவர்க்கமெனும் மூவுலகங்களிலும் வேண்டும்; அவை ஆயிரவருடத்திற் கொருமுறை விரும்பிய இடத்திற்குப் பெயரவேண்டும். அப்புர மூன்றும் ஒன்றுபட்டபொழுது சிவபெருமானே ஒரு கணையா லழித்தாலன்றி, வேறெவராலு மழியாவரம் வேண்டும் என்றுகேட்க, பிதாமகன் அவ்வாறே பிரசாதித்துத் தனதுலகு சார்ந்தனன்.

தாரகாட்சன் முதலாயினோர் அளவில்லாத அவுணர்சேனையையுடையவராய், மாயன்என்னுந் தானவத்தச்சனை வருவித்துத் தங்கள் விருப்பின்படி பூமியிலிருப்புமதிலும், அந்தரத்தில் வெள்ளிமதிலும், சுவர்க்கத்திற் பொன்மதிலுமாகப் பல வளப்பமும் நிறைந்த முப்புரம் நிருமிக்கச்செய்து, தமக்குவேண்டிய தொன்றுமின்றி, சிவலிங்க பூசனைமுதலியவற்றைக் குறைவறச்செய்து வாழ்ந்திருப்பினும், தமது அசுரகுலத்தியற்கை குன்றுதவராய் வைகுந்த முதலிய தேவ நகரங்களையும், உலகிலுள்ள பலபதிகளையும் திரிபுரத்தோடு சென்று சிதைத்து வருவதாற் சினந்த இந்திரைகேள்வன், இந்திரன்

முதலிய இமையவரை யுடன் கொண்டுபோ யெதிர்த்துத் துன் புற்றுச் சகியாமல், தேவர் குழுவுடன் திரும்பி மேருமலையின் வட பாலிற் பலகாலந் தவஞ்செய்ய, பரமபதி இடபாரூடராய்க் காட்சி தந்தனர். தேவர்கள் நமஸ்கரித்துத் திரிபுரத்தவர் நிலைமையை விண் ணப்பஞ்செய்ய, சிவபிரான், "அவர்கள் நமதடியாராதலின் அவர் களைச் செகுத்தல் அடாது" என்றருளி அந்தர்த்தானமாயினர்.

அப்போது விண்டு வானவர், "தேவர்களே! அஞ்சாதீர்க" ளென்று தாம் புத்தவடிவு கொண்டு, நாரதமுனிவர் சீடராக உடன் வரத் திரிபுரமடைந்து, பிடகாகமம் பிரசங்கித்து, அவரைமருட்டிப் பவுத்தராக்கினர். அம்மாயையிலகப்படாதார் மூவரேயாதலின், திருமால் ஏனையோரைப் பார்த்து, 'நீங்கள் அம்மூவரையும் பாரா தீர்கள். அவர்கள் இழிதொழில் பூண்டோர்' என்று கூறி, நார தருடன் மேருமலை யடைந்து தேவகூட்டத்துடன் சிவபிரானைச் சிக் தித்துத் தவத்திருந்தனர். பெருமான் அம்மறிந்து அருள்வடிவாகிய திருநந்திதேவரை விளித்து, "தேவர்கள் பாற்சென்று திரிபுரத்தவ ரைச் செயிக்க இரதமுதலிய யுத்தகருவிகளைச் சித்தஞ்செய்யக் கட் டளையிடுக' என, நந்தியெம்பெருமான் மேருமலை சேர்ந்து அவ் வாறே அமரர்கட்கு ஆஞ்ஞாபித்துச்சொல்ல, தேவர்கள் களிகூர்ந் தனர்.

மந்தரகேசரி மலைகள் அச்சாகவும், சந்திர சூரியர் சக்கரமாக வும், இருதுக்கள் சந்தியாகவும், பதினைந்து உலகங்கள் பதினைந்து தட்டுகளாகவும், நதிகளும் நதங்களும் காட்டுங் கொடியாகவும், நட் சத்திரங்கள் கல்லிதானமாகவும், மோட்சலோகம் மேல்விரிவாக வும், மரங்கள் சட்டமாகவும், நரள்முதலிய காலத்திரயங்கள் (கடுப் பாகிய) எண்ணெயூற்றும் இடுக்குமரமாகவும், அட்டபருவதங்கள் தூணாகவும், எட்டுத்திக்குக் கயங்கள் இடையிற்றங்கவும், சத்த சமுத்திரம் நிரைச்சீலையாகவும், ஞானேந்திய கன்மேந்தியங்கள் கலன்களாகவும், கலைகள் மூலையாகவும், புராணம் வேதாங்கம் சாத்திரம் மதுக்கள் மணியாகவும், மருத்துக்கள் படியாகவுமமைந்த நிவ்வியமான ஒரு தேரைச்செய்து, வேதங்கள் நான்கையும் நான்கு குதிரைகளாகப் பூட்டி, பிரமனைத் தேர்ச்சாரதியாய் நிறுத்தி, பிர ணவமே குதிரை தூண்டுங் கோலாகக்கொண்டு, கங்கை அதிதி முத லிய தேவநங்கையர் நாற்புறமுஞ் சாமரையிரட்டவும், தும்புருநாரத

ரிசைபாடவு மமைத்து, அரம்பை முதலிய கணிகையர் நடிக்கவுஞ் சமைத்து, மேருமலையை வில்லாகவும், வாசுகியை நாணியாகவும் நியமித்து, திருமால் பாணமும், சரசுவதி வில்லிற் கட்டியமணியும், அக்னி தேவன் அம்பின்கூர்வாயும், வாயு அம்பிற்கட்டிய இறகுமா மேற்படுத்தி திருக்கைலாயகிரியை யடைந்து திருநந்தி தேவரைப் பணிந்து அமரர் அமர்க்கருவிகளை யமைத்துக்கொண்டடைந்த தென்று அருள் வள்ளல் சந்நிதியில் அறிவிக்கவேண்டும் எனப் பிரார்த்தனை செய்தனர்.

அவர் சென்று விண்ணப்பிக்க, இறைவர் தேவியாருடன் இட பாரூடராய் இரதத்தையடைந்து இமையவர் எண்ணத்தின்படி அதிற்காலூன்ற, அதனச்சுமுறிந்தது. அச்சுதன் அக்கணமேவிடை வடிவாகி எம்பிரானை ஏற்றுத் தாங்கமாட்டாமல் தரைமேல் விழ, சிவபெருமான் திருவருண்மேலீட்டாலிறங்கினர். பிரமன் ஸ்ரீவிநாய கக்கடவுளைப் பூசித்தனன். அவரருளால் அவ்விரதம் முன்போலாக அதன்மேற் பெருமான் அம்மைபாருடன் ஆரோகணித்தனர். மூத்த பிள்ளையார்-இளையபிள்ளையார்-திருமால்-இந்திரன் முதலான தேவர் கள் தம்தம் வாகனங்களி லேறிவரவும், முப்பத்து முக்கோடி தேவர் களும், மற்றோரும் எப்பக்கலுஞ் சூழ்ந்துவரவும், சத்த இருடிக ளாசீர்வதிக்கவும், திருநந்திதேவர் பொற்பிரம்பு கொண்டு முன் செல்லவும், பாலகம்பன், வருணன், சங்குகன்னன் முதலிய சிவ கணநாதர்கள் வாத்தியமிசைக்கவும், சிவபெருமான் இரதாரூடராய்த் திரிபுரத்தை சரற்கால சந்திரபுஷ்ப நக்ஷத்திரத்திற் சமீபித்தனர்.

அமரர்கள் அப்பொழுது ஐயனைப் பணிந்து, "அண்ணலே! வில்லெவளைத்துக் கணைவிடவேண்டு" மென்றுப் பிரார்த்திக்க, சிவ பெருமான் தனது திருக்கரத்தேந்திய மேருமலையாகிய வில்லை எடுத்து வளைத்து, வாசுகியாகிய நாணேற்றினர். அதில் அம்பு பூட் டித் திரிபுரத்தை யழிப்பின் அந்தரர் அந்தமில்லாத அகந்தை யுறுவ ராதலின், அவ்வாறின்றி இடப்பால் வீற்றிருக்கும் இமையவல்லி யைக் கடைக்கணித்து, பிறகு புன்னகைசெய்யப் புரமூன்றுந் தீப் பற்றிச் சாம்பராயின.

அவ்வாறு திரிபுரத்தோடு பொருதவரை புரங்கள் தீப்பற்றிச் சாம்பராயின. பிறகு பெருந்தகையினரான சிவனடியே சிந்தித்து வந்த மூவரும் யாதொரு தீமையுமின்றிப் பெருமான்பால் வந்து

பணிய, கண்ணுதல் அவர்களைத் துவாரபாலகராக அருளி, தேவர் கூட்ட அவரவரிடத்திற் கனுப்பித் திருக்கைலையிலிருக்கெழுந்தருளினர். அமரர் துயர் தீரும்படி முப்புரத்தைச் சிரித்தெரித்தலின் சிவபிரான் திரிபுராந்தக மூர்த்தியெனத் திருநாமமுற்றனர்.

விஷ்ணுவுக்குச் சக்கரமளித்தது

உலக முழுவதும் ஒரே செங்கோலினு லரசுபுரிந்து வந்த குபன் என்னும் மன்னன் காரணமாக திருமால், கதிசிமுனிவரை யெதிர்த்துச் சமர்புரிந்து சகிக்க முடியாராய்த் தமது சக்கராயுதத்தை அம் முனி புங்கவன்மேற் பிரயோகிக்க, அது அம்முனிசிரேட்டரது வச் சிரயாக்கையிற்றுங்கி வாய்மடிந்து மீண்டது. அதுகண்ட அச்சு தன் அச்சமுற்று, மாயாரூபமொன்று தன்போலுண்டு செய்தனன். முனிவர் முனிந்து தமது காற்பெருவிரலை யசைக்கக் கணக்கில்லாத விண்டுமூர்த்திகள் வெளியே தோன்றினர். அதனால் அவர் தவவலி மிகுந்தவரென்றும், அவரை வெல்லத்தக்க வல்லமை தன்னிடத்திலில்லை யென்றும் சாரங்கன் தெரிந்து அம்முனிவரைச் சரண்செய்து மீண்டு தன்னுடன்போந்த வானவரை நோக்கி, "யான் தீயரைச் செகுத்து உலகைப் புரக்குந் திறிக்கடவுளாதலின், எனக்கித்தகைய சக்கரம் இன்றியமையாதது. இதுபோல வேறொன்று யாண்டு பெறுவேன்" என்றியைத்து வருந்த, இமையவர் "சலந்தரனென்னுந் தானவத் தலைவனைச் சங்கரன் சங்கரிக்குமாறு திருவடியாற் கீறி நிருமித்த சுதரிசனமென்னுஞ் சக்கரப்படை அம் மாதேவன் பாலுள்ளது" என மறுமாற்றங் கூறினர்.

அதுகேட்ட திருமால் சிந்தைகளித்துச் 'சிவார்ச்சனையா லதனையடைவே' னென்றுள்ளத் தமைத்து ஒரு சிவலிங்கக் குறியைத் தாபித்துப் பாசுபத விரதம்பூண்டு சங்கற்பஞ்செய்து திருவெண்ணீறு தரித்து, அக்கமாலை சூடி, தேவர்கள் பூசைக்குரிய உபகரணங்களைச் சித்தஞ்செய்து கொடுக்கப், பரமபதியைப் பதுமமலர் ஆயிரத்தால் நாடோறும் பவன்முதலிய திருநாமங்களோதி அருச்சிக்கத் தொடங்கினர். இவ்வாறு நிகழ்ந்து வருகையில் பத்திவலியிற் படுவோராகிய பரமேச்சுரன் அவர் அன்பின் முதிர்ச்சியை ஆர்கலி சூழ்ந்த அவனிமாக்கட்கறிவிக்க, ஆயிரங்கமலத்தில் ஒரு கமலத்தை மறைவாக்கினர். விண்டு உணராராகிப் பண்டுபோல பவன்முதலிய சகத்திரந் திருநாமங்களோதி, ஒவ்வொரு கஞ்சமாக வெடுத்துப்

பூசித்துவந்து கடைசியில் ஒரு திருநாமத்திற்கு மலர்காணுராய் "இஃதென்னே யாளாக வுடையார் திருவிளையாட்டு" என்றெண்ணித், தமது பூசை முட்டுப்படாவண்ணம் விழியொன்றைப் பிடுங்கி மலராகப் பாவனைசெய்து அருச்சித்து முடித்து ஆனந்தக்கடலுளழுந்தினர்.

உடனே பிறைசூடிய பெருந்தகையார் களிகூர்ந்தவராகிச் சோதிமயமான பேருருவுடன் தரிசனந்தர, திருமால் அட்டாங்க பஞ்சாங்கமாகப் பலமுறை பணிந்து வேதவாக்கியங்களாற் றுதித்துக் கையேற்று நிற்க, கருணை வள்ளல், "கமலகேள்வ! உன் பூசைக்கு மனங்களித்தோம்; உனது கண்ணை யளித்தோம்; கமலக் கண்ணன் என நாம மடையக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளி, தமது திருக்கரத்திலிருந்த சுதரிசனம் என்னுஞ் சக்கராயுதத்தைப் பிரசாதஞ்செய்து, "எத்தகைய வலியினராயினும் நின்னையெதிர்த்தோரை இது இமையளவிற் கொல்லும் ஆற்றலுடைய" தென்று அதுக்கிரகித்தனர். திருமால் இவ்வரங்களையும், சுதரிசனத்தையும் பெற்றுப் பலமுறைபணிந்து, அருவியாறுபோற் கண்களில் ஆனந்த பாட்பஞ் சிந்தப், பலவகையாகப் பாடி ஆனந்தக் கூத்தாடி, எம்பெருமானது திருவடியை முடியிற்சூடி, வைகுந்தத்தை நாடி இடையருச் சிவபக்தியுடன் வீற்றிருந்தனர்.

சுருந்த முனிவர் முஞ்சிகேச முனிவரெனப் பெயர்பெற்ற காரணம்

ஸ்ரீ வடாரணியத்தின் மகிமையைச் சிவபிரானுற் சொல்லக் கேட்ட சுருந்தமுனிவர், பெருமான் அதுக்கிரகித்த வண்ணந் தாண்டவ தரிசனத்தை விரும்பி ஆங்கடைந்து தவத்திருந்தனர். அவ்வாறிருக்கையிற் கண்ணுதல் கைவிர லணியாகிய கார்க்கோடகன் திருவிரலில் விடத்தைக் கக்க, விடையூர்தி "நம்மை மனதிற் கருதாது மமதையோடு நீ செய்த தீமைக்காகத் திருக்கைலையை நீங்குக" என, நாகம் நடுங்கிப்பணிய, நாதன் "வடாரணியத்தலத்திற் பல வாண்டுகளிருந்து அருந்தவம் புரியுஞ் சுருந்தருடன் சண்டதாண்டவத்தைத் தரிசித்துப் பிறகு வருதி' என, கட்செவி கருடனுக்கஞ்சி முறையிட, இறைவர் "இத்தீர்த்தத்தில் மூழ்கி ஆண்டுள்ள முத்தி தீர்த்தத்தில் மூழ்க்க" என, அரவு அவ்வாறே ஆலவனமடைந்து அருந்தவஞ் செய்யுஞ் சுருந்தரைக்கண்டு தொழுது தனது வரலாற்

றைச் சொல்ல, சுகந்தமுனிவர் மகிழ்ந்து தன் பக்கலிற் றவமியற்றப் பணித்து, பழையபடி நெடுங்காலந் தவத்திருப்ப, முனிவரைப் புற்று மூடி முடிமேல் முஞ்சிப்புல் முளைத்தமையால், அவர் முஞ்சிகேச முனிவரெனப் பெயர் பெற்றனர்.

சாமுண்டி உற்பவம்

நிசும்பன் சும்பன் என்னும் நிசாசரிருவர் செய்துவருந் தீமையைப்பொறுத தேவர்கள், பார்வதியாரை நோக்கிப் பலகால் அருந் தவஞ்செய்ய, இறைவி இமையவர்முன் தோன்றி "அமரரே! நீங்க ளவாவிய அடைவே அவர்களை யழிப்பேன்" என்றருளிச் செய்து, மலைச்சாரலை யடைந்து தவவடிவேற்று வசித்திருக்கையில், சண்டன் முண்டன் என்னுந் தானவரிருவர் சாம்பவியைச் சார்ந்து, "தார் குழலே! தனித்திருப்பானேன்? சாற்றற்கரிய வலிவுடைய சும்பனி டஞ் சேர்க" எனச் சொல்ல, அம்பிகை "அருந்தவ மாற்றும் யான் ஆடவரோடுரையாடேன். அரைக்கணத்தகலுமின்" என்றறைய, அவர்கள் சும்பாசுரன்பால் தேவியின் பொலிவை வியந்து செப்பி, அவனேவலாற் சில படையுடன் மீட்டுஞ் சென்றழைத்தும் வாராமை நோக்கி வலிதிற் கைப்பற்றி யீர்க்கக் கருதுகையில், விமலை வெகுளி கொள்ள, அம்மையார் தோளிலிருந்து அனேகஞ் சேனையும் ஒரு சத்தியும் அவதரித்து அவ்விருவரையுஞ் சேனையுடன் சங்கரித்தனர். "சண்டனையு முண்டனையுஞ் சங்கரித்தமையாற் சாமுண்டியெனப் பெயர் பெற்றுத் தரணியோர் தொழ வாழுதி" என அச்சத்திக் கருளினர். அவற்றை யறிந்த நிசும்பன் சும்பன் என்போர் அநேக அசுரருடன் ஆர்ப்பரித்து வந்து, அம்மையை யெதிர்த்து அத்திரமாரி சொரிய, உமாதேவியார் தமதுடலினின்று சத்த மாதர் களையுஞ் சிவதூதியரையும் உதிப்பித்து, யுத்தத்திற்கனுப்பி அவர்க ளால் அசுரச்சேனையை யழிப்பித்து, தாமே முதலில் நிசும்பனையும் பிறகு சும்பனையு மாய்த்தனர்.

சண்டி அல்லது காளி யுற்பவம்

ஆற்றலுடைய அவ்விரண் டசுரர்கட்கு மனையாளாகிய குரோதி யென்பவள் பெற்ற இரத்தபீசன் தனதுடல் சோரியில் ஒரு துளி தரைமேல் விழுந்தால், அத்துளி தன்னைப்போலத் தானவனுமாறு வரம்பெற்றனன். இவன் இச்செய்தி யறிந்து இமைப்பொழுதி லெதிர்த்தனன். அங்ஙனதனுடன் சமர்செய்கையில் உதிரத் துளி

கட்கு ஒவ்வோர் உருவேற்றது கண்டோடிவந்து உமையம்மையோ டுரைப்ப, தேவியார் சினமிகத் திருத்தோளினின்றும் காளி தோன் றினள். பெண்ணே! யான் இரத்தபீசனைச் சங்கரிக்கையில் உதி ரத் துளியொன்றும் பூமியில் வீழாமல் உன் கைக்கபாலத்தேந்தி யுண்ணக் கடவாய் என்று பணித்து, அவளுதிரபானஞ் செய்துவர, இறைவியார் இரத்தபீசனை இமைப்பி லழித்து, இமையவரை அவ ரவர் நாட்டிற்கேக விசைத்து, காளியைக் களிப்பித்து அவளுக் குச் சண்டியென்று பெயரும், தெய்வீகமும், சிவபெருமானிடம் திருத்தஞ்செய்து அவர் பக்கலில் வசித்தலும் ஆகிய இவற்றை அநுக் கிரகித்து, சத்தமாதர்கட் கருள்செய்து, அந்தர்த்தானமாயினர். காளி அசுரர் உதிரமருந்திய ஆற்றலாலும், இறைவியாரிடம்பெற்ற வரத்தாலு மிறுமாந்து மாமிசம் நிணமுதலியவற்றைப் புசித்து, மோகினி இடாகினி பசாசு பூதங்கள் புடைசூழ ஒருவனத்திலிருந்து மற்றொரு வனத்திற்குப்போய் உலகமுழுவது மூலவி வடாரணி யத் தருகில்வந்து யாவரையும் துன்புறுத்தி வாழ்ந்திருந்தனள். இஃ திவ்வாறிருக்க,

ஒருநாள் திருவாலங்காடு சென்ற நாரதமுனிவருக்குக் காளி யின் தீச்செயல்களைக் கார்க்கோடக முனிவர்கூற, நாரதர்கேட்டுச் செல்லுமளவில் காளி விழுங்கவர, அவர் கரந்துசென்று விண்டு வைக்கண்டு விடயத்தை வாய்விண்டனர். திருமால் சிவபிரான் பால் விண்ணப்பஞ்செய்ய, இறைவர் "இப்பொழுதே அக்காளி யின்வன்மை குன்ற வடவனமடைவோம்" என்று கூறி, சுருந்த முனிவர் கார்க்கோடகமுனிவர்கட்குக் கருணைசெய்யக் கருதி ஆல வன மடைந்தனர்.

காளியோடு நடன மாடியது

மாதேவன் வயிரவடிவு கொண்டமையின், உடன்வந்த பூத கணங்களுடன் காளியின்சேனை எதிர்த்து ஆற்றாது காளிக்கறைய, அவள் அமர்க்கோலங் கொண்டுவந்து ஐயனைக்கண்டு பயந்து 'திரு த்த யுத்தஞ்செய்வோம்' என நிகழ்த்த, முன்னே னிசைந்து முஞ்சி கேச கார்க்கோடகர்கட்குத் தரிசனந்தந்து, திருநடனத்துக்குத் தேவருடன் வந்தனர். அக்காலத்து அமரர் அவ்வவர்கட் கிசைந்த பல வாத்தியங்களை வாசித்தனர். அரவதம், அற்புதம், இரௌத் திரம், கருணை, குற்சை, சாந்தம், சிருங்காரம், பயம், பெருநகை,

வீரிய மென்னும் நவரசங்களும், அபிநயமும் விளங்க வாத்தியங்கட் கொப்பப் பாண்டரங்கமாகிய சண்டதாண்டவத்தைக் காளியுடன் செய்கையில், கருணை நிதியின் திருச்செவியிலிருந்த குண்டலமானது நிருத்தவேகத்தால் நிலத்தில் நழுவ, அதை இறைவரே திருவடி யொன்றினுலெடுத்துத் தரித்துத் திருத்தாண்டவஞ்செய்து காளி யைச் தோல்வியடையச்செய்தனர். அவள்செயலற்று நாணிப்பணிந் தனள். அருள்வள்ளல், "ஈண்டோர் சத்தியாயிருத்தி" என அதுக் கிரகித்து, இருமுனிவரும், எண்ணில்லா அடியார்களும் தமது தாண்ட வக் கோலத்தைச் சருவகாலமும் தரிசிக்கும்படி ஆண்டு வீற்றிருக் கின்றனர்.

சிதம்பர இரகசியம்

பரமாகாய மென்றும், சிற்றம்பல மென்றும், பேரம்பலமென் றும், ஞானகாய மென்றும், பொதுமன்ற மென்றும் கூறுகின்ற இச்சிதம்பர சேஷத்திரத்தின் மகிமையைப் புராணங்களினுலே மாத் திரம் புகழப்படுவதன்று; வேதத்தும் தரிசனேப நிடதத்திலேயும் "சிதம்பரம் இருதயமத்தியிலுள்ளது" என்று ஓதப்பட்டிருக் கின்றது. இதனுல் இது விராட்டுப் புருடனுடைய இருதய தான மென்பது துணிபென்க.

அது பற்றியே புராணங்கள் இவ்வாலயங்கள் கட்டும்பொழுது யோக முதல்வராகிய ஸ்ரீ பதஞ்சலிமுனிவர் சிதம்பரரகசிய மறிந்து அதனை விசுவகன்மாவுக்கு அனுக்கிரகிக்க, அவன் அவராணையைச் சிரமேற்கொண்டு ஆலயஞ் சமைத்தனன் என்று கூறுகின்றன. ஒரு மகாயோகியின் சரீரத்தை வடக்கே தலையும், தெற்கே பாதமு மாகவைத்து நோக்கின், அதுவும் இவ்வாலய அமைப்பும் ஒத்திருக் கும்; இவ்வாலயத்தேயுள்ள ஆயிரக்கான் மண்டபம் தலையின் புறத்திருக்கும் ஆயிரவிதழுள்ள கமலமெனப்படும்; மூலையையும், சிவகங்கை அம்மூலையின் மேற்புறத்துள்ள சந்திரபுட்கரணி யெனப் படும். அமுதவரம்பிகையையும் உவமையாய்ப் பெற்றிருக்கின்றன. சாக்கிராவத்தையிலே ஆன்மாவினுடைய அறிவு மூலையிலே விளங்கு வது இயல்பாதலால், தேவமானத்தில் விடியற்காலமும் பிரதோட காலமுமாகிய மார்கழி ஆனிமாசங்களில் ஆயிரக்கான் மண்டபத் திலே ஆனந்த நடராசமூர்த்திக்கு மகாகும்பாபிடேகம் நடந்து வருகின்றது.

இவற்றின் தென்புறத்திலே ஸ்ரீ குருமூர்த்தியும் சோதிலிங்கமும் எழுந்தருளியிருக்கு மிடம் விசுத்தி தானமாகப் பாவிக்கப்படும் அதற்குத் தெற்கே திருச்சிற்றம்பல மென்னும் மகாசபை யிருக்கின்றது. அங்கே, பிரம, விஷ்ணு, ருத்திர, மகேசுர சதாசிவர்களுக்கென ஐந்து பீடங்களிருக்கின்றன. திருவைந்தெழுத்துக ளைந்தும் ஐந்துபடிகளா யிருக்கின்றன. தத்துவதாது விகங்களாகிய தொண்ணூற்றுறு பதார்த்தங்களும் தொண்ணூற்றுறு பலகணிகளா யிருக்கின்றன. நடுவிலிருக்கும் நான்கு பொற்கம்பளங்கள் நான்கு வேதங்களும், சுற்றியுள்ள இருபத்தெட்டு மரகத கம்பளங்கள் இருபத்தெட்டு ஆகமங்களுமாம். இவைகளுள் அடங்கிய இடத்தைச் சுத்தவித்தை யெனவும், இரகசியமுதல் நடராசமூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடம் வரையில் உள்ளபீடம் பிரணவபீட மெனவும்படும். அப்பிரணவ பீடத்தின்கண்ணே சகளத் திருமேனியுடைய ஸ்ரீமதானந்த நடராசமூர்த்தி யெழுந்தருளி யிருக்கின்றனர். அதன்பின் வாயு பாகத்தில் சகள நிட்களமாகிய வியத்தாவியத்த லிங்கமும், அதன் பின்னே ஆரண ஆகமங்களும் அறிந்தோதவரிபதும், குணவரம்பு கடந்ததும், திருச்சிற்றம்பலம் என உயர்ந்தோராற் புகழ்ந்தேற்றப் படுவதுமாகிய அழியாப் பரஞ்சுடர்ச் சிவவொளிச் சிதாகாச வடிவம் விளங்காநிற்கும்; இச் சிதாகாச வடிவினையே ஊனக்கண்ணுற் கண்டோர் இரகசியமென்பர். கருப்பக்கிரகமாய் இவ்விடத்தே அகில லோக மாதாவாகிய சிவகாமசுந்தரி யென்னும் பராசத்தியாரோடு தூல நடராச மூர்த்தியும், சூக்கும நடராச மூர்த்தியும், சூக்கும மற்றோரிலிங்கமும் உள்ளன.

இரகசியத்தை நிட்களமென்றும், வியத்தா வியத்த இலிங்கத்தைச் சகள நிட்களமென்றும், ஸ்ரீமத் சதானந்த நடராசமூர்த்தியைச் சகளவடிவ மென்றுங் கூறப்படும்.

இப்பால் கீழ்ப்புறத்திலே சண்டேசுவரத் தானத்தில் பிரம தேவரும், தென்புறத்தில் திருமாலும், வடபுறத்தில் வைரவராகிய சங்கார ருத்திரரும் இருக்கின்றனர்.

விமானத்தின்மேலுள்ள ஒன்பது கலசங்களும் வாமை முதலிய நவசத்திகளாம். கைமரங்கள் அறுபத்து நான்கும் கலைகளாம். செப்பேடுகள் இருபத்தோராயிரத் திருநூறும் மனிதர்களால் விடப்படுகின்ற சுவாசங்களாம். அவ்வோடுகளைப் பொருத்தப்பட்டுள்ள

ஆணிகள் எழுபத்தீராயிரமும் அச்சுவாச சஞ்சார ஆதாரமான எழுபத்தீராயிர நாடிகளாம். மற்ற அளவில்லாத இரகியங்கள் முன்னே சொல்லி வந்தவைகளுள் விளக்கப்பட்டிருக்கின்றன.

இச்சபையின் தென்புறத்திலுள்ள கனகசபை முன்னே சொல்லி வந்த சபையின் அநேக பாகங்களே வாய்ந்ததும், பதினெண் மகா புராணங்களேயே பதினெண் கம்பங்களாகப் பெற்றதுமாய்ப் பிரகாசிக்கப்படுகின்றது. இவ்வாறு இங்குள்ள சபைகளெங்கும் பஞ்ச கோசங்களேயும் உணர்த்தும் தெய்வத் தன்மையினவென்று கூறப்படும்.

அவையாவன :—இராசசபை (ஆயிரக்கான் பண்டபம்) அன்னமயகோசமும், தேவசபை (பேரம்பலம்) பிராணமயகோசமும், நிருத்தசபை மனோமய கோசமும், கனகசபை விஞ்ஞானமய கோசமும், சிற்சபை ஆனந்தமய கோசமுமாம். அன்றியும், திரிபுராதகரத்திற் சொல்லிய மூன்று கூடங்களும் மூலகூடம், தேவகூடம், இரகசியகூடம் என இங்கு குறிக்கப்பட்டன. மனிதருடைய இருதயம் சரீரத்தின் நடுவிலிராமல் சிறிது இடபுறத்தே விலகியிருத்தலால், இங்கும் ஆலயத்தின் சரி நடுவுக்குச் சிறிது இடப்புறத்தே கருப்பக்கிரகம் அமைந்திருக்கின்றது. இருதயத்திலே இரத்தம் பிரவேசிக்கும் வழி நேரிலின்றி பக்கங்களிலிருப்பதால் இங்கு வழிகள் கருப்பக்கிரகத்தின் பக்கங்களி லமைந்திருக்கின்றன. இச்சிற்சபையின் தென்புறத்தே மகாவிஷ்ணு தானமும், அதற்குத் தெற்கே சங்கார மூர்த்தி தானமும், அதற்குத் தெற்கே கணபதி தானமும், தருமவடிவாகிய இடபதேவ தானமும், கோபுரமும் இருக்கின்றன. ஐந்து ஆவரண மதில்களும் ஒரே அளவில் அமைந்தன; சரீரத்திலும் பிராணன் பன்னிரண்டங்குலம் அதிகமென்னும் யோகநூற் பிரமாணங்கொண்டே இரண்டாவது மதிலிற் கோபுரம் வைக்கப் பட்டியிருக்கின்றது.

இத்தகைய மகாமேன்மை பொருந்தியது சிதம்பராலயம். இவ்வாலயத்திலே சாத்திரவிதிப்படி மெய்யன்போடு சுவாமி தரிசனஞ் செய்ய, ஞானமுதிக்கும்; பந்தம் நீங்கும்; பூரணத்துவ முண்டாம்; ஆனந்தம் விளையும்; ஆன்மநிலை விளங்கும்; அத்துவைதமுதிக்கும், இத்தலத்தின் மகிமையை வேதாகமாதிகளே சிறிது வச

னிக்குமென்றுலும் ஒருவகையாற் பதஞ்சலி, வியாக்கிரபாத ருற்பவ மும், உபமன்னிய மகாமுனிவ ரவதாரமும், அவர்களின் அரிய தபோமகத்துவமும், அவர்களின் பொருட்டுத் தம்பிரானர் ஆனந்தத் தாண்டவ முண்டாயதும், இத்தல மகத்துவமும், சதாநிருத்த விலக்கணமும் கூறத்தொடங்கினேம்.

வியாக்கிரபாத மகாமுனிவர் உற்பவம்

பிரம இருடிகளி லொருவராகிய மத்தியந்த னென்பவருக்கு வியாக்கிரபாத மகாமுனிவர் புத்திரராக அவதரித்து வேதாகமித் தைகளைக் கற்றுத் தந்தையினுல் சிவரகசியத்தை உபதேசிக்கப் பெற்று, தில்லைவனத்திலே ஒருதில்லை விருட்சத்தின்கீழ் ஒரு சிவலிங் கந்தாபித்து, தமக்கு ஒரு பன்னகசாலையு முண்டாக்கி, இரண்டிடத் தையும் பணிந்து நிரகரணமும் ஒன்றுபட்டவராய் பூசித்துவரும் நாளில், பூசைக்காகச் சேகரிக்கும் புட்பங்களில் சில குற்றமுள்ள புட்பங்களிருக்கக்கண்டு வருந்தி இறைவனைநோக்கி, "ஐயனே! புட் பங்களை விடிந்தெடுக்கில் வண்டுகளால் பிழைபா டுள்ளவைகளா யிருக்கின்றன. விடியுமுன்னமே சென்றெடுப்பமென்றுல் வழிதெரிய வில்லை. புட்ப விருட்சங்கள் உயர்வாயெட்டாம லிருக்கின்றன. அன்றி, மேலேறிப் பறிப்பமென்னில், பனியால் வழுக்குகின்றன. என்செய்வேன்" என்று விண்ணப்பிக்க, சிவபெருமான் முனிவரை நோக்கி, "அன்பனே! நீ விரும்பியபடி விருட்சங்களைப்பற்றி யேறு வதற்குப் புலிக்கால்களும், வழிதெரிந்து நடக்கவும், மலர்களைப்பார்த் தெடுக்கவும், நகங்களிற் கண்களும் அனுக்கிரகஞ் செய்தனம்" என்று மறைத்தனர். அதனுல் அம்முனிவர் வியாக்கிர பாதரெனப் பேர்பெற்று, சிவபிரானைப் பிரிந்த பிரிவாற்றுமையால் ஆடிப்பாடிப் பரவசமுற்று வருந்தி பழமைபோல் புலிக்கால்களையும், கண்க ளமைந்த நகங்களையுங் கொண்டு சிவபூசாவிதிகளைக் குறைபாடின்றி நடத்தித் தம் நிலைமாறுது வாழ்ந்திருந்தனர்.

உபமன்னிய மகாமுனிவர் உற்பவம்

இவ்வாறு இருக்கும் நாளில் இவரது தந்தையாகிய மத்தியந்த னர் புத்திரவாஞ்ஞையால் வந்து கண்டு சந்தோடித்து சந்தஸிக்கி மத்தின் பொருட்டு வசிட்டமாமுனிவர் தங்கையை விவாகஞ்செய் வித்துச் சென்றனர். அதன்பின் வியாக்கிரபாதரும், அவர் மனைவியா

ரும் ஒரு புத்திரனைப்பெற, அதனை அருந்ததி தனது ஆச்சிரமத்திற் கொண்டுபோய்க் காமதேனுவின் பாலூட்டி வளர்த்து வந்தனர். அதன்பின் வியாக்கிரபாதர் அபேட்சையால் புத்திரனைக் கொண்டு வந்து இனிய பதார்த்தங்களைக் கொடுக்க, அக்குழந்தை உண்ணுது அழ, அதனை முனிவர் உணர்ந்து "என்செய்வோம்; தெய்வமேதுணை" யென்று யோசித்து ஸ்ரீ திருமூலத்தானவர் சந்நிதியிற்கொண்டு போய்விட, அவ்விடத்துங் குழந்தை அழுதலால் சிவபெருமான் கருணையினால் திருப்பாற்கடலை வருவித்துக்கொடுக்க, அதை உண்டு குழந்தை சந்தோடித் திருப்பதையறிந்து மகிழ்ந்து, தந்தலிலையையும் சிவபூசைத் திருத்தொண்டையுஞ் சிறிதும் நீங்காது ஸ்ரீகண்ட பரம சிவம் தாருகாவனத்து இருடிகளின் பொருட்டு அனுக்கிரக தாண்டவஞ் செய்தன ரெனத்தெரிந்து, அத்தரிசனத்தை என்று கிடைக்கப் பெறுவோமென வருந்திவாடி இறைவர் திருவருளினையே துணைபற்றிப் பூசித்திருந்தனர்.

பதஞ்சலி மகாமுனிவர் உற்பவம்

இப்பால் திருப்பாற்கடலிற் பள்ளிகொள்ளுந்திருமால், சேட சயனத்தை நீங்கித் தனியே ஓர் ஏகாந்த தானத்தில் யோகியர் போலுமெழுந்தருளி, 'அர அர சிவசிவ, சம்போ!' என்று கண்ணீர் பனித்து உடல் நெக்குவிட்டு மயிர்க்கூச்செறிய ஆனந்த பரவசரா யிருந்தனர். அதனைச் சேடனும் மகாலட்சுமியும் நோக்கி அச்ச முடையராய், பின்னர் திருமாலை நோக்கி, "ஐயனே! முன்போற் பள்ளி கொள்ளாமலும் கவனியாமலும் ஒருவாரு யிருக்குங் கருத்தைத் தெரிவிக்க வேண்டு" மென்றுப் பிரார்த்திருக்க, திருமால் புன்னகையுடையவராய் இலட்சுமியையும், சேடனையும் நோக்கி, "நீங்கள் விரும்பியபடி என் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன்; அது என்னெனில், வைகுந்தத்திற்கும் மனோவதிக்கும் இடையிலுள்ள சோதி சொரூபமாய் உயர்ந்த உத்தர கயிலாய கிரியில் சூக்குமமா யுள்ள பரபதியைச் சென்று நேற்று வணங்கியபோது, அம்மகா கருணாநிதி என்னை அருகழைத்துக் கிருபையோடு அபயாத்தங் கொடுத்தும், தம் வீரசிங்காதனத்தினின்று எழுந்தருளினர். அக்கால் பானுகம்பனால் ஊதப்பட்ட சங்கங்கள் கோஷிக்கவும், வேதங்கள் துதிக்கவும், கணநாதர்கள் சேவிக்கவும், தபோதனர் 'அரகர' வென முழங்கவும், தேவர்கள் சூழ்ந்து பரவவும், அம்மேருகிரியின் அடி

வாரத்துள்ள ஓர் ஏகாந்த மண்டபத்தை யடைந்து * மீமாஞ்சை நெறியைக் கைப்பற்றிய தாருகாவன ரிருடிகளின் அகந்தையை நீக்குமாறு என்னை ஒரு மோகினி வடிவு கொண்டு வரச்செய்து

* மீமாஞ்சநூல் பிரபஞ்சம் அநாதி நித்திய மெனவும், ஆன்மாக்கட்கு வேறாகக் கருத்தா ஒருவரில்லை யெனவும், சிவன் முதலாயினரெல்லாரும் அநித்திய ரெனவும், வேதம் அநாதி நித்தியமெனவும், வேதத்திற் கூறப் பட்ட சிவன் முதலிய சத்தங்களே பிரமமெனவும், அச்சத்தங்களின் வேறு கிய தேவர்களே அச்சத்தங்கள் அறிவிப்பவனல்ல வெனவும், வேதம் விதித்த இட்டி முதலிய கருமங்களே இருமைப் பயன்களையும் பயக்கு மெனவுங் கூறும். இந்நூல் செய்தவர் சைமினி முனிவர்.

தேவதாருவனத்து இருடிகள், மீமாஞ்சைநூலே உண்மைநூலெனக் கொண்ட மயக்கத்தினாலே சுவதந்திராகிய சிவபிரான் மாட்டன்பு செய்தலை யொழித்து, வேதம் விதித்த கருமங்களே அநுட்டித்துத் தங்கள் மனைவியர் கட்கும் மீமாஞ்சக மதத்தைப்போதித்து அவர்களைக் கற்பின்வழி நிறுவிப் பாதந்திரர்களாகிய தங்களைச் சுவதந்திரர்க ளெனத்துணிந்து ஒழுகினார்கள் இதனையறிந்த பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமான் அவ்விருடிகளுக்கும், அவர்களுடைய பத்தினிகட்கும் மீமாஞ்சகமதமே மெய்யெனக்கொண்ட மயக் கத்தை ஒழித்து, அவர்களை ஆட்கொண்டருளத் திருவுளங்கொண்டு, தாம் பிச்சாடன மூர்த்தியாகி, விஷ்ணுவை மோகினியாக்கி யருளினர். இருடிகள் மோகினியினுடைய போழகைக்கண்ட வழித் தாங்கள் காமத்தான் மீதூரப் பட்டு நியமமிழந்து, கருமாநுட்டானங்க ளெல்லாம் கைவிடுத்தமையானும், சிவபெருமானைக் கோறற்பொருட்டுத் தாங்கள்செய்த அபிசாரவேள்வி முத லியனவெல்லாம் பயன்படா தொழிந்தமையானும், தாங்கள்கொண்ட மீமாஞ்சகமதம் பொய்யெனத் தெளிந்து தாங்கள் பர தந்திர ரெனவும், சுத தந்திராகிய கருத்தா ஒருவர் உண்டெனவும், அவர் சிவபெருமானே யெனவும், அவரது திருவருள் வயத்தானன்றிப் பாவதத்தி னீங்கலும், புண்ணியஞ் செய்தலும் இயலாவெனவும், பானடிக்கன் பிலாதார் புண்ணியம் பாவமாகும் எனவுந் துணிந்து, அவரை வழிப்பட்டிருந்தார்கள். இருடி பத்தினிகள் பிச்சாடன மூர்த்தியினுடைய பேரழைக் கண்டவழி முன்னர்க் காமவயத்தர்களாகி மீமாஞ்சகமதம் பொய்யெனத் தெளிந்து, பின்னர்ச் சிவஞானவயத்தர்களாகிப் பேரின்பம் பெற்றுய்ந்தார்கள். இதுகாறுங் கூறிய வாற்றாற் சிவபெருமான் செயதன வெல்லாம் ஆன்மாக்கட்கு முத்தியின்பம் பயத்தற் பொருட்டாமென்பது தெள்ளிதிற் பெறப்படுதலும், அவர் இருடி பத்தினிகளைக் காமித்தலுங் கூடலுஞ் செய்யாமையாலும், அவர் செயல்கள் குற்றமாகாமை தெளிக. (சுதந்திரர் - தம்வயமுடையவர். பாதந்திரர் - பிறர்வய முடையவர்.)

தாம் ஒரு சித்தபிச்சாடன ரூபவை வகித்து மிதியடியும், பிச்சா பாத்திரமும், விபூதிப்பையும், உருத்திராக்கத் தாழ்வடமும், எஞ்ஞோப வீதமும், கோவணவுடையும் தாங்கி மிக்க ரூபலாவண்யத்தோடு தமருகத்தைக் கையினிடங் கொண்டு புன்னகையோடு கண்டஸ்திரீகள் மனதைக் கரைத்து மோகாந்தகாரத்தில் வீழ்த்தும், மாயாவித்தைப்பொருந்தி, காமனுமஞ்சுங் கடிய மோகினியுருவோடு மென்னைப் பின்பற்றிவரக் கட்டளையிட்டுத் தாருகாவனத்து இருடிகள் வாசஸ்தானத்தை யடைந்து எனது மோகினி யுருவத்தால் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் தவநெறியினின்று நீங்கிக் காமவிகாரிகளாகச் செய்து, அம்முனி பத்தினியர்களின் இடங்களைச் சுவாமிகளடைந்தனர்."

"அக்கால், அந்நங்கையர்கள் எமது சுவாமிகளது பிச்சாடனத் திருவுருவை நோக்கி, காமாந்தகாரமே மனே சொரூபிகளாய்க் காமத்தால் மெலிவாரும், பிச்சையிடுவாரும், வளைகழலுவாரும், கலை நெகிழ்வாரும், புணரக் கோருவாரும், பின்பற்றி வருவாரும், ஐயனைக் கேட்பாரும், பிரமிப்பாருமாயினர். இந்நிலையால் ஒவ்வொரு இருடி பத்தினிகளுக்கும் ஒவ்வொரு புத்திரராக நாற்பத்தெண்ணாயிரம் பாலர்களுதித்து இறைவனேவலால் தவநிகளாயினர்கள்."

"இதனை உணர்ந்த முனிவர்கள் இவை சிவன் திருவிளையாடலே யெனத் தெரிந்து ஓரபிசார வேள்வியியற்றி, அதினின்று புலி, மான், மழு, அக்கினி, பாம்பு, பூதங்கள், வெண்டலை. மந்திரங்கள், படைகள் முதலியவைகளைச் சிருட்டித்துச் சிவபிரானைக் கொல்வீர்களாகவென அனுப்பினர். அவைகள் நமது உமாபதியினருகே செல்லுதலும், பெருமான் அவைகளை வதைத்தும், வருத்தியும், ஆடையாகவும், ஆபரணமாகவும், ஆயுதமாகவுந் தரித்தருளினர். இதனை முனிவர்களறிந்து, ஒரு முயலகனைச் சிருட்டித்தனுப்ப, அவனையும் தமது காலினால் மிதித்தும், பின்னர் மந்திர அட்டகருமாதிகளை விட, அவைகளை தமது காற்சிலம்புகளுக்குத் * தரிசாகக்கொண்டும் முனியாராகி அரிய நடனத்தைச்செய்ய விரும்பினர்."

"பின்னர் முனிவர்கள் தங்களால் இனி செய்யத்தக்க காரியங்களொன்றுமின்றி; தபோபலங் குறைந்து, ஓமாக்கினியும், மந்திரங்களும் நீங்கிய விசனத்தாற் சோர்ந்து தம்பிரானர் திருநடனவேகத்

---

* தரிசு - காற்சிலம்பினுள் கலிக்கும் பரல்.

தால் உடல் குழைந்து ஆச்சரியமும் துணிபுமுற்று விழுந்தார்கள். யானும் நிருத்தவேகந் தாளாது வருந்தி வீழ்ந்தனன். அதனைக் கண்டபெருமான், "அஞ்சாதீர்" என என்னைப்பிடித்தனர். அக்கால், இடபாரூடியாக, பார்வதி ஆகாய வீதியாக வந்து சேரலும், சுவாமிகள் அம்மையார்மீது திருக்கண்சாத்தி யருளினர்; தேவர் புட்பமாரி பெய்தனர்."

"அந்த நிருத்த கோலமானது, சுவாமிகளது செஞ்சடை திக் கெங்கு மசையவும், சுவாலாக்கினியை யேந்தியகரம் கொள்ளி வட்டம்போற் சுழலவும், எண்டிசையின் இடியோசையைத் தடி யோசை கொள்ளவும், முயலகனை மிதித்துக் கால்மாறிக் கோடி சூரியோதயம்போல் ஏழுலகும் ஆனந்தமெய்தும்படி யிருந்தது. இதனை நோக்கிய முனிவர்கள் தங்கள் ஆணவமல மொழிந்து மிகுந்த அன்போடு அச்சமும் பயமும் பூண்டு ஆனந்த பாஷ்பம் பொழிய, கமண்டலம், தருப்பை, தண்டு இவைகளைக்கொண்டு இறைவன் சந்நிதியையடைந்து குணலைக் கூத்தைச் செய்தார்கள். அவர் பன்னியர் சிவநெறியைக் களித்துக் கடைபிடித்தனர். தேவர்களெல் லாம் அஞ்சலியத்தராஞர்கள். தும்புரு, நாரதர் வீணைவாத்தியஞ் செய்தனர். பூதகணங்கள் தாளங்கைக் கூத்தாடின; சித்தர், இயக் கர் முதலினோர் ஆனந்தமெய்தினர். அக்கால் அருகேயிருந்து தரி சித்த பேராற்றலாலும், ஆனந்தத்தாலும், அவரது பிரிவாற்றுமை யாலும் யான் சித்தம் ஒருப்பாடுற்றிருந்தனன்."

இவ்வாறு திருமால் சொல்லக்கேட்ட ஆதிசேடன் ஆராத அன் புடையவனுய் இப்போதே நிருத்தங் கண்டவரைப்போல ஆனந்த மடைந்து, ஆனந்தக்கண்ணீர் சொரிந்து சிந்தித்திருக்குங்கால், மீண்டுந் திருமால் சேடனை நோக்கி, "நீ சிவபிரானை நோக்கித் தவஞ் செய்க; உன்னைப் பாயலாகக் கொண்டிருக்கப் பிரியமில்லை. ஆதலின், உனது குமரனை எனக்குப் பாயற்றொழில் செய்யக் கற்பித்து, நீ பரம்பொருளையடைந்து வாழக்கடவாய். அதனுல், நீ மலத்திரை யம் நீங்கி முக்திப்பேற்றை யடைவா" யென ஆசீர்வாதஞ் செய் தனுப்பினர்.

அவ்வாறே ஆதிசேடன் திருமாலனுமதிபெற்று, தேவதேவர் கட்கும் பெறுதற்கரிய உத்தரகைலாய வரையை யடைந்து, ஒருபாரி சத்தில் யாககுண்டமியற்றி, அண்டமுகடளவு அக்கினியைக் கற்

பித்து, தனது பணமுடிதளிலுள்ள ஆயிரமிரத்தினங்களும் ஆதித்த கிரணபத்திகளைத் தள்ள, மகா நியதியோடும் தன் சுவாசத்தை இரேசக பூரகமுஞ் செய்யாது, உணவையுங் கொள்ளாது, வேறொன்றையுஞ் சிந்தியாது, காலகணிதமும் நோக்காது, தனது கரணேந்திரியங்களே யெல்லாஞ் சிவகரணமாகக் கொண்டு அரிய பெருந்தவம் புரிவாராயினன்; அக்கால் சருவாணுக்கிரக சந்திரசடாதர மூர்த்தி பிரமனைப்போல அன்னவாகனரூடரா யெழுந்தருளி, 'யாது காரணம் பற்றித் தவம் புரிகின்றாய்? யாது வரம் வேண்டும்? கே' ளெனச், சேடன், "பிரமதேவரே! எமது இறைவனே யன்றி, மற்றோரை விரும்பினே னல்லன்; ஆதலின், நீர் வந்தது வீணுக்கே" யென, பிரமன், "யார் கொடுத்தா லென்ன? உன் கோரிக்கையைக் கூறுக! தருவே" னென்று கூற, ஆதிசேடன், "பிரமதேவரே! எனக்குப் பதவிகளிலும், சித்திகளிலும், வித்தைகளிலும், வேறு போகபாக்கியங்களிலும், யாதும் விருப்பமில்லை; எமது சாட்சாத்து உமாபதி தேவ தாருகவனத்தில் அருளியதாகிய சருவாணுக்கிரக ஆனந்த நிருத்தத்தை எப்போது தரிசிக்கப் பெறுவோ மென்னும் பேராசையொன்றுபற்றியே தவம் புரிகின்றே" னென்று சொல்லும் போதே வாய்குளறி, மயிர்க்கூச்செறிந்து, ஆனந்த பாட்பஞ் சிந்திப் பரவசமுற்றனன். இதனை யறிந்த பிரமதேவர், "ஓ அரவரசே! சொன்ன மறையுந் தொடர்ந்தறியாச் சோதியனே காண்பதே கடினம்; காணினும் நிருத்தம் புரிவதே கடினம்; ஆதலின், முடியாததை முடிக்கக் கருதுவது பிராந்தியாகும்" என்று நகைத்தருளி, "சேடனே! தாருகாவனத்தில் யார்வேண்டவந்து நடனமாடினர்? நீ முற்றும் பயித்தியமாயினை" என்று கூற, ஆதிசேடன், "அன்னவாகனரே! அனவரதாண்டவஞ் செய்பவர் சிவபிரானன்றே? அவரைத் தரிசிக்காதொழியேன்; ஒருகால் தரிசியாமலே இத்தப் பிறவி எனக்கு நீங்குமேயாயினும், என் சித்தம் நிருத்தங் காணவேணு மென்னும் ஆசையையுடையதா யிருத்தலால், என் சரீரம் நீங்குங்கால் இத்தக்கருத்தே வித்தாக, வேறொரு சரீரங்கொண்டு அந்த நிருத்தத்தைக் காண்பேன். அப்படியிருக்க, நீர் சொல்லுவதடாது" என்று கூற, அவ்வாறு ஆதிசேடன் கூறிய மதிநுட்பலத்தைப் பிரமனுக யெழுந்தருளிய ஸ்ரீ கண்ட பரமேசுரர், தேவகணங்களும், ஊருத்திரர்களும், முனிவர் முதலினோரும் சூழ, உமையொரு பாகராய்ப் பிரகாசித்தனர். இச் சிவசொரூபத்தைச் சேடன் கண்டு, "ஐயனே! சரணம்! அமலனே! சரணம்!

அரனே! சரணம்! ஆதியே! சரணம்!" எனத் துதித்து வணங்கிப் பிரார்த்திக்க, சிவபெருமான் கருணைகூர்ந்து பாவனாதீட்சை பண்ணி, ஸ்ரீயத்தத்தைச் சேடன் சிரமேல் வைத்து, "இத்தகைய அருந் தவத்தாலன்றி நமது நிருத்தம் தரிசிக்கப்படுவதல்ல; நமது சத்தியத் தைக் கேட்பாயாக. நாதாதி பிரிதிவியந்தமான தத்துவமெல்லாஞ் சுத்தமாயை அசுத்தமாயை என்னும் இரண்டு காரணத்திலும் ஆன்மாவின் கன்மசீவன் வழியாகத் தோன்றும். அஃதெங்ஙன மெனில், குடம், சால், கரகமுதலானவை நிமித்தகாரணமான குலாலனே யொழிந்து உண்டாவன அல்லவென்கிற சீலத்தை ஒக்கும். கிஞ்சிக்கினனான ஆன்மா சடத்துவங்களைப் பொருந்திப் புசிக்க அறி வெப்படி புண்டாமெனில்? விளங்கிய பஞ்சகிருத்திய பேதமெல்லாங் கன்மகாமியம் வரும்படி செய்தற்கு அநாதியே பிராணனாக நின்று நாம் நடத்துவோமென் றருளிச்செய்து, சகளநிட்களமும் நமக்குப் பரிக்கிரகரூபமுஞ் சைவதந்திர ரூபமுமாயிருக்கும். இந்த இரண்டு ரூபங்களையும் நீ யின்று விசாரிக்கில் அசுத்தமாயை சுத்தமாயை என்னுமிவைகளை யுபாதானமாகக் கொண்டு பாசவிலங்கை முறிக்கும் படிக்குச் சகலர் பிரளயகாலரிவர்களுடைய கன்மகாமியத்தினிலே யிவர்களைப்போலத் தூல சூக்குமமாய்வந்து சத்திநிபாத முதித்துப் பாசச்சேதம் பண்ணிச், சுத்தமேவலத்திலே கூட்டுகிற கிரியாசத்தி அதிட்டானமான ரூபமொன்று, மற்றொன்று விஞ்ஞான கலரிற் பக்குவரில் பரமுத்தர்க்கு நிராதிகாரமா யிரட்சிக்குமிடத்தில் கலாதீத மூமாய் ஞானமுமாய்க் கண்டிக்கப்படாத ஞானக்கிரியையாயிருக் கும்; அபரமுத்தர்க்கு இரட்சிக்கு மிடத்துச் சாதி காரணரூபாதம் விந்து சொரூபமாயிருக்கும்."

"முன்சொல்லப்பட்ட சகளம் நாலுக்கும் நிட்களம் நாலுக்கு மப்பாலாகி நம்முடைய பிரகாசமான சுபாவசத்தியே நமக்குவடிவு; இதற்கு ஞேயமான பிரணன் நாம்; எமக்குப் பரமபதம், பரம ஞானம், பராற்பரமென்று பெயர்; சங்காரம், இரட்சை, சிருட்டி, திரோபவம், அநுக்கிரகம் என்கிற பஞ்சகிருத்தியம் நம்முடைய கூத்து; அநந்தமான வேதங்களும் அநவரதாண்டவம் நாம் பண் ணுவோமென்று துதியாநிற்கும். ஆனாலும், அவை இன்னகாரணத் தினாலே யென்றும், இன்னகாலத்திலே யென்றும், இன்ன திக்கிலே யென்றும், இன்னவிடத்திலேயென்றும் அறியமாட்டா. அழகு

விளங்கின தேவதாருவனத்தி னடுவே தெரியநின்று நாரணன் முத லோர் காண நிருத்தஞ்செய்தகாள் தேவதாருவனம் பூமிக்குமத்திய மல்லாத பகுதியினுலே அசைந்தபடியைக்கண்டு வெற்றியுடைத்தான நாங்கள் சிறிது பொழுதிற் றீர்ந்துவிட்டோம். உனக்குமிப்போது இவ்விடத்திலேநின்று தரிசிப்பிக்குங் கூத்தன்று. சத்தியமான ஆனந்த நிருத்தத்துக்கு அதிட்டானமான ஞானசபை யொன்றுண்" டென்றருளிச் செய்தார்.

அப்போது ஆதிசேடனும் வணங்கித் துதித்து, "யான் பிறவிக் கடலிலே யாழாமற் கரையேறிப் பிழைக்க, அரிபிரமாதிகள் வேதங் கள் காண்பரிதாய்ப் பிரத்தியட்சம் அநுமானம் ஆகமமென்கிற பிர மாணங்களுக்கும் அப்பாலாம் எப்போதும் எல்லாப் பதார்த்தங்களி லும் விளங்காநிற்கும் ஞானசபை இவ்வுலகத்திலே ஓரிடத்திலே யுண்டாய்; தேவரீருடைய ஆதியந்தமில்லாத பூரண ஞானத்தினுலே காட்டவேண்டுமென்கிற சுட்டறிவுமுண்டாகிச்; சருவவியாபியா யிருக்கிற தேவரீரே ஏகதேசருமாய்ப் போக்கு வரவு முடையவரு மாய் அத்தில்லை வனத்தில் வந்தீராகில், கிருதார்த்தனுவேன் அன்றே?" வென்றுன். அப்போது ஆதிசேடனைப்பார்த்து, தாபர மாயிருக்கிற அண்டசிருட்டியும், சங்கமமான சரீரசிருட்டியு மொக்கு மாதலாலே, சரீரத்தில் இடை நாடி யிடத்திலும், பிங்கலை நாடி வலத் திலும், சுழிமுனைநாடி நடுவிலும் போமாறுபோல, இந்தப் பரதகண் டத்தில் இடைநாடி இலங்கைக்கு நேரேபோம்; இந்த இரண்டு நாடிக்கு நடுவேபோஞ் சுழிமுனைநாடி நன்மைமிகுந்த தில்லைவனத்திற் செவ்வையே போய்க்கூடும்; அந்தப்பதியில் ஸ்ரீ மூலத்தானமுடைய தம்பிரானர் சுயம்புவான குறியுண்டு; அந்தச் சிவலிங்கத்துக்குத் தெற்காக நாலுதிக்கிலுஞ் சூழ்ந்து பொருந்தின வேதங்களுக் கெட்டாதிலைபெற்ற அம்பலமொன்றுண்டு; அவ்விடத்திலே அநவர தத் தாண்டவஞ் செய்வோம். முன்சொன்ன அம்பலமானது சத் தியமான ஞானுகாசமாதலால், நிவர்த்தியாதி பஞ்சகலாசூனியம் பிறந்த மகாசங்காரகாலத்தினு மழியாது ஆதியந்த சூனியமாயெக் காலமும் பொருந்தியுள்ளது. சுத்தாத்துமாக்க ளெண்ணிறந்த சிவ புண்ணியத்தைச் செய்தால் முன்செய்த சிவபுண்ணியத்தினுலே கன்மசாமியம் பிறந்தவளவில் ஆசாரியனுலே சத்திநிபாதமு மல பாகமு முண்டாகிப் பாசச்சேதம்பண்ணி யொழியாத ஞானக்கண்

ணப்பெற்றவரே அரிபிரமாதிகள் நாடுதற்கரிதான சிதம்பரத்தைக் காண்பார்கள்; இப்படிக்காண ஞானதிருட்டி பெறுதவர் எண்பத்து நான்கு நூறுயிரம் அச்சிலும் பிறந்துழல்வர். ஆனதால், ஏ அரவரசனே! நீயோ நஞ்சுநிறைந்த பெரியவாய்களும், மிகுந்த ஒளி விளங்கும் கண்களும், ஆயிரம் முடிகளும், சர்ப்பரூபமுமாக யிருக்கின்றனை; உன்னை உலகத்தார் காணில் அஞ்சுவார்கள். ஆதலால், ஓர் உபாயஞ்சொல்லுகின்றேன் கேட்பாயாக! அதென்னவென்றால்:

முன்னொருகாலத்தில் அத்திரிமகா முனிவரும், அவர் மனைவியாராகிய அனுசூயையென்பாரும், புத்திரபாக்கிய மில்லாமல் உன்னைப் புத்திரனாகப் பெறக்கருதித் திருமாலைநோக்கித் தவஞ்செய்ய அவரெண்ணப்படியே திருமாலளித்தனர். அப்போது வேறுபிறவியெடுக்கப் பயந்து இவ்வனுசூயை இருதுவாய் ஸ்நானஞ்செய்து கரையிலேவந்தேற, அவள் கையிலே ஐந்துதலையோடு கூடிய பாம்பாக வந்தவதரித்தனை. அதனை அவள் கண்டு பயந்த உடனே பாதத்திலே விழுந்தனை. அதனால் உனக்குப் பதஞ்சலியெனப் பெயரா யிற்று. அதுபோல், முன்னை உணர்வுமாறாது அப்பதஞ்சலியென்ற பெயரையே தரித்து நாகலோகத்துக்குப் பொருந்தினவழியே செல்லுவையானால், அந்நாகலோகத்துக்கு நடுவிலொரு மலையுண்டு; அதன் தென்புறத்தில் பிலத்துவாரமுண்டு; அதன் முடிவில் திலலைக் காடொன்றிருக்கிறது. அதனுள் வடபாகத்தில் ஆலவிருட்ச நிழலில் நாமுனக்குச் சொன்ன மலையின் கொழுந்து மூலத்தான மூர்த்தியாய் பொலிவுபெற்றிருக்கின்றது. அவ்விடத்தில் நமது ஆனந்தத் தாண்டவத்தைக் காணவேண்டுமென்று அரிய தவநெறியொடும் நம்மைப் பூசித்துக்கொண்டு வியாக்கிரம பாதரென்று ஒரு மகா முனிவரெழுந்தருளி யிருக்கின்றனர். அவரிடம் நீயும்போய் இருப்பாயாக! நாம் தைப்பூசத்தில் வியாழக்கிழமையோடு கூடிய சித்தயோகத்தில் மத்தியான காலத்தில் நமது நிருத்தத்தைத் தரிசிப்போம் என்றுகூறி அந்தர்த்தானமாயினர்.

இப்பால் ஆதிசேடன் இறைவன் திருவாணையைச் சிரமேற் கொண்டு ஆடிப்பாடி உள்ளம் பூரித்த இறைவர் திருவருளினாலே பழைய சேடவுருவம் நீங்கிப் பதஞ்சலிரூபம் பெற்று இறைவன் திருவாணையின்படியே நாகராசர்கள் பணிபுரியத் திலலைவனத்தை யடைந்து சுகந்தசோலை பொழில் தடாக முதலியவைகளையுங்கண்டு எத்தி

யிறைஞ்சி, பின்னர் அங்கு அரிய, தவக்கோலத்தோடு மெழுந்தரு ளிய வியாக்கிரபாதரது திருவுருவத்தையும், சடாமுடியையுங்கண்டு ஆனந்தித்து, 'நமது கைலாசபதி கூறிய பெருந்தகையார் இவரே போலு' மென்றநிசயித்து, புலிமுன்னிவரருகிற் சென்றனர். அக்கால் புலிமுனிவர் பதஞ்சலி மகாழுனிவர் திருவுருவைக்கண்டு களித்து உபசரித்து, "சைவக்கொழுந்தே! எங்குபோவதற்காகக் குறித்துப் போகின்றீர்கள்? தங்கள் ஊர் பெயர், பெயர், இடம் முதலியவை கள் 'எங்கே" யென்று கேட்க, அவருக்குப் பதிலுத்தரமாக பதஞ் சலிமுனிவர் "ஐயனே! நான் ஆதிசேடன். எமது அளுட்பெருங் கருணைக்கடலாகிய சாட்சாத் பரமபதி தேவதாருகவனத்திலே முன் னம் நிருத்தம்புரிந்த மகா மகிமையைத் திருமால் எனக்கருளி விடை தரப்பெற்று நமது சம்புவை நோக்கி நெடுகாள் தவஞ்செய்தனன். அத்தவத்திற்கிரங்கி அபயாத்தஞ்சூட்டி' அன்பனே! நில்லீவனஞ் செல்லுக; உன் கருத்தையே வாய்ந்த வியாக்கிரபாதரென அங் கோர் முனிவரும் எழுந்தருளி யிருக்கின்றனர். அவரோ டொருமை பாராட்டித் தபோநிலையிலிருப்பின் தைப்பூசம் குருவாரம் சித்த யோகத்தன்று மத்தியான காலத்தில் திருநடனத்தைத் தரிசிப்போ" மென்றருளினர்; அவ்வண்ணம் இங்கு அடைந்தனன் என்று கூறி யிருந்தனர்.

இதைக்கேட்ட புலிமுனிவர் பரவசராய் ஆராமைமீதூரத்தீராக் காதலுற்று, "என் புண்ணியமே! அருட்சுடரே! என்னை யாண் டருளக் கருணை கூர்ந்தனர்போலும்! சோதி சொரூபர் பத்தர் கருத்தை மறவார்போலும்! தேவரீரை யானடையப்பெற்ற பாக்கி யமே பாக்கியம்! என் தவமே தவம்! என் எண்ணமே நல்லெண் ணம்! எனப் பதஞ்சலியாரைக் கட்டித்தழுவி யாடிப்பாடி, பின்னர் என்கருத்தை மலர்ந்த அமுதவாசகரே! வாருங்க" ளென்றழைத் துச்சென்று புண்டரீகப் பொய்கையில் மூழ்குவித்து, ஸ்ரீ திருமூலத் தானர் சன்னதியிலே கொண்டுபோய் வணங்கச்செய்து, அங்குள்ள அற்புத தெய்வ ரகசியங்களைத் தரிசிப்பித்து, சாகமூல பலாதிகளை விருந்தருத்தி, திருப்புலீச்சுரத்துக் கருகிலுள்ள குளத்துக்கருகில் ஒரு பன்னசாலை கட்டுவித்து, ஆங்கு பதஞ்சலி முனிவரை விடுத்து, வியாக்கிரபாதர் தம் நிலையிற்றானே யிருந்தனர்.

திருத்தில்லைக் கனகசபை

ஆனந்தத் தாண்டவ தரிசனம்

நடராசர் துதி

எண்சீர் ஆசிரிய விருத்தம்

குளகம்

அளப்பரிய பகுதியெலா மருளா லோங்கி
அளவையெலாங் கடந்தபரஞ் சோதிக் குன்றை
களமகள நிகளமெனக் கணித்துக் காணக்
காரணத்தைக் காணுதே காண்பார் தங்கள்
உளத்தூறு மமுத்தை யும்பர் வாழ்வை
யுயர்வொப்பொன் றில்லாத தேவை யெங்கும்
விளங்குபர சிவவடிவை யகண்ட மான
மெய்ப்பொருளே வேதமெல்லாம் படிக்கு மொன்றை,

கற்ருரு முடிவேதென் றின்னுந் தேடிக்
கணக்கறியா வானந்தக் கடலிக் கற்ரூர்
சொற்றுறையா னளவுபடாத் துறையை மோனத்
தூமணியை யானந்த நிருத்தங் காட்டும்
நற்றவத்தை நால்வருக்கு மருளி ஞானே
நம்பனெயென் நாயகனைக் கனக மன்றுட்
பற்றுடைய பரனேபர சிவனே ஞானப்
பண்டிதனைப் பாரேழும் படைத்த தாயை,

திருவருளைச் சிவக்கன்றைத் தெய்வத் தேவைத்
திருநெறியைச் சிவஞானக் குருவை யெங்கள்
அருமருந்தை யானந்த வடிவை முத்தி
யரசையடி யார்க்குற்ற தருவை யெல்லாம்
பெருகின்ற பெருமானைப் புலியும் பாம்பும்
பெண்ணரசுங் காணநட மாடுந் தில்லைக்
கருமணியைக் கண்ணுதலைக் கடவு ளானைக்
கான்மாறி நடிப்பாரைக் கருத்துள் வைப்பாம்.

திருச்சிற்றம்பலம்.

இப்பால் பதஞ்சலி முனிவர் தம்பிரானர் திருவடித் தணைப்பற்றி இடையுமாருத அன்புடையவராய்த் தவநெறியைப் பூண்டு வாழும் நாளில், அகோக முனிவர் முதலானோர் புதுமை புதுமையாக வந்து

தம்பிரானுரைப் பணிக்திறைஞ்சி, மரத்தினீழலில் வசித்திருந்தனர். அவர்களும், அவர்களது எலும்பும் உடலும் கரைந் துருகும்படி இறைவன் ஆஞ்ஞையைப் பாராட்டிக்கொண்டு சுகமே வாழ்ந்திருப் பாராயினர்.

இவ்வாறு புலீமுனியும், பதஞ்சலி முனிவரும் அநேககாலம் பூசித்துத் தவகெறியே சிவகெறியென்று உறுதிகொண்டு வீற்றிருக் கும் நாளில் முன்னே வந்திருந்த மூவாயிர முனிவர்களும் அருகே வரலும், அவர்களே நோக்கி, "நீங்களும் இச்சித்த இடம்போக, சுப தினத்திலே நமது இறைவன் நடன தரிசனர்த்தமாக வருவீர்களாக" வெனச் சொல்லி அனுப்பி, 'என்று நடனங்காண்போ' மெனக் கால அளவையைக் கணித்திருக்கும் நாளில், வியாழக்கிழமையும், சித்த யோகமும், தைப்பூசமும் பொருந்த ஓர் நாள் வரலும், அன்று பகல் உச்சிப்பொழுதில் மிக்க ஆவலோடு எதிர்நோக்கி ஆனந்த பரவசராய் 'அரகர' வென்றிசைத்து புளகாங்கிதரா யிருந்தனர். அக்கால் தேவ தேவர் வருகின்றார்; சிவனர் வந்தார்; ஓம் வந்தார்; உமாபதி வந்தார்; மாலயன் தேடற்கரியவர் வந்தார் என்று பேரிகை சத்திக் கவும், பானுகம்பன் தமது ஆயிரம் வாய்களிலும் ஆயிரம் சங்குகளே வைத்து, அதனே மாறுசெய்வதாக, சங்கநாதங்கள் கோஷிக்கவும், காண்டவபேதங்களும், தாளபேத மார்க்கங்களும், ஆயிரந் தோள் களையுடைய வாணசுரன் முழங்குகின்ற 'தொம்' என்னும் குடமுழா வினது அனுகரணவோசையும்; தோற்கருவி; தொளக்கருவி; கஞ்சக்கருவி; மிடற்றுக்கருவி; நரம்புக்கருவி என்னும் பஞ்சகருவி களுங் கோஷிக்கவும், வேதகோஷ்டமும், பெருமான் திருவடித்தாம ரையி லணிந்துள்ள சிலம்போசையும் கேட்டனர்; அன்றித் தேவர் முனிவர் முதலானோரால் வருஷிக்கும் மந்தார மலரைப் பூமியிற் சிந்தக் கண்டார்கள். அதனுல் சொல்லுதற்கரிய ஆனந்தத்தை யடைந்து ஆடிப்பாடினர்கள்; தம்பிரான் எழுந்தருளும் திருநடன வேதவாத்தியாதி கோட்டங்களும் கண்ணுக்குத் தோன்றுமல் மோகித்து விழுந்தார்கள்; மீண்டும் எழுந்து ஆற்றாது முகமெல்லாங் கண்ணீர்சோரப் பரவசமானர்கள்; நமஸ்கரித்தார்கள்; துதித்தார் கள்; திசாதிசைகளைச் சுற்றிப் பார்ப்பார்கள். 'ஈசனே! இறை வனே! ஏகனே! அருள்செய்வாயாக' வென அலறுவார்கள்; இவ் வாறு வருந்திவாடி ஒங்கி இரங்கி சோர்வடையுங்கால், அளவிறந்த

பத்திபொருந்திய வியாக்கிர பாதரும், பதஞ்சலியாரும் இவர்களுடைய பரமகுருவாய் ஸ்ரீகண்ட பரமேசுரர் ஞானநிருட்டியை அதுக்கிரகிக்க, அநாதியே சகசமான ஆணவத்தைநீக்கி இத்தன்மைய தென்று அறியக்கூடாத மிகுந்த ஞானப்பிரகாசமான மன்றில் ஞான சத்தியை அநுட்டித்துத் தம்பிரானர் நிருத்தஞ்செய்யக் கண்டார்கள்.

நின்றருளிய ஸ்ரீபாதமும், தூக்கியருளிய சிவந்த பாதமும், திருவடிகளிற் றரித்தருளிய திருச்சிலம்பும், திருமேனியின் மிகுந்த பிரகாசமும், அழகிய திருத்தொண்டையும் சாத்தியருளிய புலித் தோலாடையும், அநுதரித்த அரையும், அவ்வரையிற் சாத்தியருளிய கச்சினழகும், அழகுநிறைந்த திருவுந்தியிலே பொருந்திய உதரபந்தனச் சேவையும், திருஎஞ்ஞோபவீதம் பொருந்தின திருமார்பும்; வீசியருளிய சிவந்தகரமும், புயங்கம் பொருந்தின ஸ்ரீயத்தத்தைக் கவித்தருளிய பிரகாசமும், பரநாதம் பொருந்தின வளவிய தமருகமும், தீயகலும் முன்னே திரண்டதோளும், நீலவொளி பொருந்தின திருமிடரும், திருத்தோடும், வெள்ளிய சங்கக்குழையும் பொருந்தின திருச்செவியும், வெளிப்படக் குற்றமற்ற திருவாய்பவளமும், நீக்கமறச்சிரித்தருளிய மோகனமும், மேலான தாமரைமலரின் அழகுபோன்ற திருமுகப் பிரசன்னமும், மலர் அணிந்த குழலியார் என்கிற உமாதேவியாரைப் பார்த்தருளுகிற திருநயனங்களின் கடாட்சவிளக்கமும், திருப்புருவத்தின் அழகும், அழகிய திருநெற்றியும், பின்தாழ்ந்து விரிந்த கற்றைச் சடையும், சருப்பமும், நீங்காத கொன்றை மாலையும், கங்கையும், சந்திரனும், திருமேனியிற் பிரம உத்தூளனமும், இருண்டமேகத்தையொத்த திருக்குழலிலே மணம் பொருந்திய மலர்கள் சேர்த்துச் சொருகின திருமுடியும், நல்ல திருநெற்றியும், திலதமும் பொருந்தின இரண்டு வில்லையொத்த திருப்புருவமும், வடித்த வேல்போன்ற விழியும், திருக்காதும், விளங்குங் குமிழ மலர்போன்ற திருமூக்கும், ஆதொண்டைக்கனிபோலும் திருவாயிதழும், முத்துப்போலும் நகையும், பச்சென்ற திருமேனியழகும், கன்னிக்கமுகு போன்ற திருக்கழுத்தில் நித்தியமான பொலிவினையுடைய திருமங்கலநாணின் அழகும், பக்கம் பொருந்தின மூங்கிலைப் பார்க்கிலும் அழகிய தோளும், கைத்தாமரையிலே ஏந்தும் மேலான அழகுவிளங்கின செங்கழுநீர்ப்பூவும், செங்கழுநீர்த் திருமாலையுங் கோங்கின் அரும்புகளை நிந்தித்த

திருத்தனங்களும் திருவாபரணமும், துடியொத்த மருங்கும், பெரும் பாம்புகளின் விரிந்த படங்கூடியதை ஒத்த நிதம்பத்தலத்திற் சாத்தி யருளிய பரிவட்டமும், மிகவும் அசைந்தி நிலையும், சிவந்த ஸ்ரீபாதத் திற் சாத்தின பொற்பாடகத்தின்கீழே ஒளி விளங்கும் திருச்சிலம் பும் பொருந்தின பரமேசுவரியார் அதிசயித்துக் கண்டருள, சத் தியே திருமேனியாகக்கொண்டு சத்திகாண ஆடிய தம்பிரானார் ஆயிரமாதித்தப் பிரகாசம் ஒன்றுகக்கூடின மண்டலம்போலக் குறை வற நிறைந்து, நாடுதற்கரிய ஞானசபையில், நம்போல்வாரை இரட் சிக்கவேண்டி முன்பு பிரம விஷ்ணுக்கள் தேடிக்காணுத சோதி சொரூபத்தை யதுட்டித்து, நிருத்தஞ் செய்தருளக் கண்டார்கள்.

ஒப்பில்லாத அளவற்ற தாண்டவத்தைப் பொருந்துஞ் சிவ பெருமானுடைய நிருத்தம் கண்ணுக்குப் புலப்படத்தெரிந்த வளவில் அவயவத்தில் யாதொரு சேட்டையுமற்றுச் சிரத்திலே கைம்மலர் பொருந்த, விழிநீர்த் தாரைகொள்ள, நடுக்கமுற்று உரைகுழறி வியாக்கிரபாதரும் பதஞ்சலியாரும் இன்பசாகரத்திலே மிதந்தார் கள். இனிவேறே யென் செய்வார்?

சுட்டுணர்வுக் கப்பாற்பட்ட முதல்வரது சத்தியமான சுபாவம் விளங்கின ஞானத்துக்கு மேலான சிதம்பரப் பிரகாசமும், தேவீ ருடைய திருமேனியின் பிரகாசத்துடன் கூடும் அந்தப்பிரகாசமும் பார்வைக் கடங்காதபடியாலே, "ஆச்சரியமான திருமேனியை யுடையவரே! சத்தினிபாதக் குறைவினாலே எங்கள் நினைவுமுடிக்கப் பெறுகின்றோமில்லை" யென்றென்றும் வருந்துகின்றார்கள்.

"சருவகாரணரே! முன்னுள் மதனன்வெந்து வீழத் தீக்கண் ணிற்பார்த்தருளிய பரிபூரணரே! தேவீருடைய புகழ்பொருந்திய நிருத்தமெல்லாருங் காணக்கடாட்சிப்பீராக! இருளையும் மயக்கத்தை யும் நீங்கும்படியான உமது திருபை பொருந்தின திருவடிஞானம் பணித்தருள்வீராக!" வென்று பலவிதமாகச் சங்கைகளினாலே விண் ணப்பஞ்செய்தன வேதங்கள்.

ஒப்பில்லாத சிவபெருமானது சந்நிதியே நின்று விஷ்ணுவும், பிரமாவும், முன் நான்குவேதங்களும் தேசோரூபத்துக் கஞ்சாமல் வேண்டிக்கொள்ளுகிற வழியை ஒன்றும் அறியாத யாங்களுமின்பம் பெறும்படி பிருதிவிமுதல் முப்பத்தாறென்று சொல்லப்பட்டுவரும் பரதநாதத்தின்மேலே நிருத்தஞ்செய்பவரே! பராபரப்பொருளான

வரே! திருச்சிலம்பு தரிந்த ஸ்ரீபரதத்தை யுடையவரே! பணித் தருள்வீராக!" வென்றூர் இந்திராதி தேவர்கள்.

"தத்துவங்களெல்லாம் கூடினலும் விடயங்களை யறியமாட்டா; தத்துவங்கள் கூடாதபொழுது எங்களுக்குக் கேவலம் பொருந்தும்; இவ்விடத்து அருள்நீங்கித் தனித்தவிடத்து எங்கள் வாழ்வு. தேவ ரீர் அருளில்லாவிடத்துத் தரும்பும் அசையாதென்று உண்மையாக வேதாகமங்கள் ஒன்றுகச்சொல்லுதலே அன்றி, அவ்விடம் உம்மு டைய பூரணம் ஒழியவில்லை; ஆதலால், எங்கள் சுதந்தரமான கேவ லக் காணியையும், பூரணமான தேவரீருடைய சுதந்தரச் சத்தியை யுந் திருவுள்ளத்திலே கொண்டருளி, எங்களையும் பிரேரிப்பித் தருள்வீராக!" வென்றூர்கள் அவ்விடத்து நின்ற இருடிகள் முதலா னோர்.

அரிபிரமாதி தேவர்கள் குற்றமில்லாத வேதங்கள் முதலாக உயர்ந்தோராகச்சொல்லப்பட்ட பெரியோர்கள் மூவாயிரம் பிரம விருடிகள், நல்ல சாரணர், குற்றமில்லா நாரதர், பூதகண முதலா னோர், திக்குப்பாலகர், மற்றுமுண்டான இருடிகள்யாவரும் தம்பிரா னுர் நிருத்தத்தைக் கண்டு கண்களுக்குச் சுகம்வரப் பிரத்தியட்ச மாகக் கண்டனர். தங்கள் நினைவு நிரம்பி வழிகிறதுபோலக் கண்ணீ ரும் புளகமுமாகிய குறிகள் நிறைய வேதகீதத்தோடு ஆநந்தக் கூத்தாடி, பரபோகத் தந்தருளும் தம்பிரானுடைய காருண்ணிய சாகரத்திலே மிதந்து கணநாதர், "மேலான பதமுள்ளவரே! கங்கா தரரே! சந்நகத்தைக் கொடுக்கிற ஞானக்கண்ணை எங்களுக்குத் தந் தருள்வீ' ரென்று விண்ணப்பஞ்செய்து புட்பாஞ்சலிபண்ணி அரகர வென்று பரவசராய்நின்று கூத்தாடினர். சில தேவர்கள், "எந்தையே! ஆகமத்துக்குச் சிந்தாமணியே!" யென்று ஓடினர். கண்ணீர்த் தாரைகொண்டார். "மலைபோன்று எங்களை மேலிட்டகொடிய தீவினை தீரயாவரும் தேடுமருந்தே யருளைத்தருவீராக" வென்றூர்கள்.

விளங்குகின்ற செங்குஞ்சித்தலை, நெற்றியிலே திரிபுண்டரம், சங்கக்குழை பொருந்தின காதுகள், சிறிய கண்கள், புன்னகையை யுடைய பற்கள், தாழ்ந்த வயிறு, இரண்டு பிரிவாகிய பிருட்டபாகம் என்னும் இவைகளையுடைய பூதங்கள் பலம் பொருந்திய கால்கள் பூமியிலே பொருந்த உற்புலிதகரணங்கொண்டு ஆடுவன. எரி போல் விரிந்த மயிரையுடைய பெருந்தலையும், குழிந்த கண்க

ளும், ஒட்டிய கன்னமும், வாய்க்குவெளியில் புறப்பட்ட பற்களும், ஒட்டையின் கழுத்துப்போன்ற கழுத்தும், நீண்ட இரண்டு கைகளும், ஈரலுலர்ந்த வயிறும், சிறிய அரையு முடையனவாய் உயர்ந்த தெற்றுதல் பொருந்திய முட்டிக்கர்லுடனே பல பேய்கள் குளித்திடும் குணலைக் கூத்துக்குச் சரியாகக் கைகளைக் கொட்டின. அதன் பிறகு, இதழ் சற்றே நீங்கின புட்பங்கள் நிறைய வள்ளைவைத்துச் செருகின கொண்டைப்புறத்தில் வண்டுகள் யாழோடு கூடச் சத்த சுரமும் மயங்காமற்பாட, தாளுக்குத் தகுதியாகக் கால்வடிம்பிற் பொருந்தின பொற்சிலம் போசையைக் கூட்டி ஆடினர்; பாடாமல் மயங்கினர் பெருமையை யுடைய தேவஸ்திரீகள்.

நீலகண்டரது அகண்ட பரிபூரணமான அநாதிநிருத்தத்தாலே கண்களைச் குளிர்வித்து கமண்டலம் சோமன்கட்டிய தண்டுகள் ஒன்றுக்கொன்று நெருங்கிச் சடையவிழத் திரிபுண்டரம் விளங்க வெகுவிதமாக ஆடினர். பழைய மூவாயிர முனிவர்கள், தும்புரு நாரதர்களும், அழகுபொருந்திய தேவதூதர்களும், மற்றைத் தேவர்களும், காந்தருவ வேதபாரகராகிய வித்தியாதரர் முதலானவர்களும், நீங்காத ஆசையோடு வெற்றியை யுடையவரே! பெரிய மகாமேருவை வில்லாகக் கைகொண்டவரே! வாசனை மிகுந்த கொன்றை மாலையணிந்த பரமசிவமே! நாகத்தை ஆபரணமாக வுடையவரே! எங்களை இரட்சிப்பீராக" வென்று சந்நிதியிலே முறைப்படி வந்து ஆடுந்தொழிலைப் பொருந்தினர்கள்.

பிரதான வாத்தியமான குடமுழாக்கள் கொக்கரை யென்கிற வாத்தியங்கள் சர்வவாத்தியங்களுக்கும் சுருதியான தாளம்-வேய்ங்குழல்கள் - வீணைகள் - தம்பட்டம் - பெரியகத்திரிகை - பம்பை-தவளச் சங்கங்கள் - தமருகம் - கரடிகை - சச்சரி முதலான வாத்தியங்களைக் கைக்கொண்ட மேளத்தோர்கள் கூடிவந்து, மேகங்கள் திடுக்கிடவும், சமுத்திரவொலி குறையவும் முழக்குவித்தார்கள்.

அன்புடன் கூத்தாடுந் தொழிலை யுடையராய்ச் சந்நிதியிலே பொருந்தினர் யாவரும். பெருவாழ்வு பெற்றுவாழ உண்மையைத் தரிசித்துச் சுபாவ குணத்திலே யழுந்தின வியாக்ரமபாதரும் அந்த நிலையைப் பொருந்தின பதஞ்சலியாரும் பரவசராய் நின்றழுதனர். அதனை இறைவர் அங்ஙனம் சந்நிதியிலே நின்றழும் வியாக்ரபாதரையும், பதஞ்சலியாரையும் பார்த்தருளி, "நாம் கொடுக்க உங்க

ளுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்க' ளென்று மகிழ்ந்து திரு வாய் மலர்ந்தருள, அப்போது வியாக்ரபாதர் அன்பினாலே ஆநந்த பாட்பம்பெருக நின்று கைகூப்பித்தொழுது மனமுருகி தேவரீரை நான் காள்தோறும் கிரியா விதிப்படி பண்ணுகிற பூசையை முன் போல உண்மையாகக் கைக்கொண்டருளவேண்டும். இதுவேயன்றி பெறவேண்டியகுறை வேறென்று மில்லை" யென்றார்.

'நீ வேண்டும் வரத்தை உரையாடுக' என்று அவ்விடத்தில் நிருத்தஞ்செய்யும் பரமேசுரர் அருளிச்செய்ய, அன்புபொருந்திய பதஞ்சலி முனிவர் (தன்னைக்கூடும் முடிவில்லாத கொடிய தீவினை யில் நீடிக்கும் ஏதுக்களாகிய துக்கவாதனையாலே இன்னம் மனத் தைவந்து பொருந்துமோவென்று எண்ணியோ தெரியாது பூலோ கத்தைப் பொருந்துஞ் சேடமாயுள்ள ஆன்மாக்கள் பிறவித் துன் பந்தீர என்று எண்ணியோ தெரியாது) "அநந்தராகி முன்போல விளங்கப்பட்ட உடம்பில் வாழும் ஆன்மாக்கள் வெளியாரக்காணும் அக்காலந்தோறும் அம்பலத்தில் பூரணமாய் நிறைந்த ஞானப்பிர காசத்துள் காதலியுடைய தனையாகிய பராசத்தியுடனேகூட இனி இன்றுமுதல் என்றும் நிருத்தத்தைப் புலப்படுத்தி அருள்வீராக" என்றுப் பிரார்த்திக்க, என்னையாளுடைய பரமபதி கிருபா சொரூப ராய்த் தம்பொருட்டோர் கருத்துமின்றி நம்மையே கோரும் இவர் களன்பே யன்பென மகிழ்ந்து, அவர்கள் கோரிய வண்ணம் எக்கா லத்தும் நிருத்தத் தொழிலைச் செய்வதாகவும், அவர்கள் பூசையை யேற்பதாகவும் திருவாய் மலர்ந்தருளினர். இக்கிருபா விசேடத் தைப்பெற்ற வியாக்கிரபாதரும் பதஞ்சலியாருமாகிய இருவரும் ஆனந்தக்களிப்பு மேலிட்டு ஆடினர். மற்றுமுள்ள தேவர்கள் இருடி கள் முதலாயினோர் எழென்று எண்ணப்பட்ட கடலோசைபோல ஆரவாரித்துச் சிரசின்மேல் கையை வைத்துச் சுழலுற்றார்கள். பூமிமட்டத்தில் மலைக்கு ஒப்பாக நிறையும்படி தேவர்கள் புட்பமாரி பொழிந்தார்கள்.

அன்று தொண்டு அரிபிரமேந்திராதி தேவர்களுஞ், சிறப் புடையபதஞ்சலி பகவானும், நிடச்சித்தமுடைய வியாக்ரபாத முனி வர் முதலான சத்த இருடிகளும், திசைகளில் உள்ளவர்களும் வந்து வணங்கி, முத்தியில் வாழ்வதாக மகதைசுவரியமுடைய பரமேசு

வரர் பொன்னம்பலத்தில் எப்போதும் நடனஞ் செய்து பராசத்தி யோடு மகிழ்ந்தருளினர்.

இவ்வண்ணம் பதஞ்சலி முனிவரும், வியாக்ரபாத முனிவரும் என்றுங் காணவும், சர்வான்மாக்களும் உய்யுமாறும் அகம்புற மிரண்டினு மெக்காலத்தினும் காணச் சதானந்தம் புரிவர்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்குப் பெத்தமுத்திகளைத் திரு வருள் செய்தற்பொருட்டும் பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு பஞ்சகிருத்தியத் திருநடனத்தை யெஞ்ஞான்றும் இயற்றி யருளாநிற்பர். அக்கால், சிவபெருமான் மூன்று திருக்கரங்களா லும் இரண்டு திருவடிகளாலும் பஞ்சகிருத்திய மியற்றுகின்றார். எவ்வாறெனில், தமருகமேந்திய கரத்தினுற் சிருட்டியும், அமைத்த அத்தத்தினுல் திதியும், மழுவேந்திய கையினுற் சங்காரமும், முய லகன் முதுகிலூன்றிய திருவடியினுல் திரோபவமும், அநவரத நடம்பயிலும் அடித்தாமரையினுல் அநுக்கிரகமும் புரிந்து, ஏனைய ஆன்மாக்களுக்கும் அநாதியே பந்தித்துள்ள பாசவீக்கம் போக்கி முத்தியடைதற் பொருட்டே. அருள்வடிவாகிய அம்மையார் பத் தாநுக்கிரககாரணமாய், பஞ்சாக்கரவடிவாகிய அவ்வாநந்தத் திரு நடனத்தை வாமபாகத்தினின்றுந் தரிசிப்பர். மேலும், சிவபிரான் நிருத்தகோலங் கொண்ட ஞான்று திருவடியில் நகரமும், திருவ யிற்றில் மகரமும், திருத்தோளில் சிகரமும், திருமுகத்தில் வகர மும், திருமுடியில் யகரமுமாகக்கொண்டு, ஸ்ரீ பஞ்சாக்கரமே திரு வுருவாக நின்று ஆன்மாக்களின்மீதுள்ள கருணையால் ஐவகையான திருத்தியங்களையு மியற்றுநிற்பர்.

அக்கால் திக்குகளெங்குந் துந்துமிமுழங்கச் சங்கங்களின் ஓசைபெருக மயக்கமின்றிப் பேரின்பத்தழுந்தித் தேவர்கள் இருடி கள் முதலானோர் வாழப் பங்கமில்லாத இன்பமிகுந்த ஒப்பற்ற உபதேசம் அன்புடையார் தங்களுக்கு எம்மை அடிமையாகவுடைய தம்பிரானர் அருளிச்செய்வார்.

ஏகாதசி

சிவபெருமான் தேவர் துயரம் தொலையும்படி திருப்பாற்கட லிற்றோன்றிய விடபானஞ் செய்தகாலத்தில், அதனல் தாமொரு தீமையுமடைந்தாரில்லையாயினும், ஒரு திருவிளையாடல் செய்யக்

கருதி ஒரு கணப்பொழுது ஒன்றுங் கூறாராய் உமாதேவியார் தம்மை யுபசரிக்கும்படி மௌனமாய்ச் சயனித்திருந்தனர். அது கண்ட அமரர் அரனை யிருச்சித்தனர். அத்திதியை ஆன்றோர் ஏகாதசி யென்பர். அற்றையநாள் முற்றும் உணவில்லாது அன்றிரவெல்லாம் நித்திரையினின்று நீங்கி, மறுநாளாகிய துவாதசியிற் பண்ணவர் பாரணஞ் செய்தனர்.

பிரதோடம்

அதன்மேற்பட்ட திதியாகிய திரியோதசியிற் சிவபிரான் மலை யரச புத்திரியாராகிய உமாதேவியாரை நிறுத்திச் சூலத்தைச் சுழற்றிக் கையில் தமருகமேந்தி ஒரு யாமகாலம் நிருத்தஞ் செய்தனர். அக்காலத்தையே வேதசிவாகமங்கள் பிரதோடமெனக்கூறும். இது பற்றிப் பதினைந்து தினங்கட்கு ஒருமுறை வரும் திரயோதசியைப் பிரதோடமென்பதன்றி, தினந்தோறும் மாலையு மிரவுங்கலக்கும் ஒரு யாமப்பொழுதையும் பிரதோடகாலமெனவும், வருடத்திற்கு ஒருமுறையெய்தும் மகா சிவராத்திரியை வருடப்பிரதோடமெனவுங் கூறுநிற்பர். ஒவ்வொரு தினமும் உதயாதி இருபத்தாறேகால் நாழிகைமுதல் இரவு மூன்றே முக்கால் நாழிகைவரையும் நாழிகை ஏழரை; இதில் இரசநிமுக காலத்திற் சம்பவிப்பது பிரதோடமெனவும், மத்தியான முகூர்த்தமெட்டினுள் ஏழுகழித்து எஞ்சிய எட்டாவது முகூர்த்தமே பிரதோடமெனவும் ஆகமங்கள் கூறும். இம்முறைபற்றி மாதப் பிரதோடத்தை மாத சிவராத்திரியென்பர்.

"பொங்குங்கங் காதரன் காளமயின் றேயொன்றும்
புகலாம லிருந்தனனோர் கணப்பொழுது புலவோர்
அங்கவனை யிடைவிடா தருச்சனைமுன் புரிந்தா
ரத்திதியே காதசியா மடுத்ததிதி யதனிற்
புங்கவர்பா ரணம்புரிந்தே பூர்த்தியுற்ரு ரதன்மேற்
பொருந்துதிதி தனிலிமவான் பொற்கொடியை வைத்தே
சங்கரன்சூ லஞ்சுழற்றி நடித்தனனோர் யாமஞ்
சதுர்மறைநூ லதுபிரதோ டம்மெனவே சாற்றும்."

என்னும் பிரமாணத்தா னறிக.

இவ்வாறு ஆன்மாக்களின் பொருட்டு சகளீகரித்த பரமேசுரனது திருமேனியில் ஆபிரத்தி லோமசமாக உருத்திரரும், கோடி யமிசத்திலொன்றுக பிரமவிஷ்ணுக்களும், லலாடகேத்திரங்களிலிருந்து சூரிய சோமாக்கினிகளும், பிராணனிலிருந்து வாயுவும்,

கண்டத்தினின்று கணேசரும், இருதயத்தினின்று கந்தரும், நாபியி னின்று தேவர்களும், உரோமங்களினின்று இருடிகளும், மற்ற அங்கங்களினின்று மற்றதேவர் முதலினோரும் உதிப்பார்களென்று வேதசிவாகமங்கள் கூறுகின்றன.

இந்நியாய நிமித்தம் கற்பங்கள்தோறும் அநேககோடி பிரம விஷ்ணுவாதி தேவமுனிவர்களையெல்லாம் சிருட்டித்தும், மீண்டும் தம்மிடத்தில் ஒடுக்கியும், தாம் மாத்திரம் பிறப்பிறப்பில்லாதவராய் என்றும் நித்தியராயிருப்பவர் எனத்துணிபு.

பரமசிவன் திருவுருவைத் திறமாகக்கொள்ளின், மண், நீர், கனல், காற்று, வெளி, இரவி, மதி, உயிர் என்னும் அட்ட மூர்த்த சொரூபமே யென்பதாலும், இவ்வட்ட வடிவையன்றி உலகில் வேறொன் றெண்ணக் கிடையாமையாலும், எல்லாமாய் என்றும் நித்தியமாயிருப்பர் என்பது துணிபாம். ஆனதால், சிவன் பிறப்பி னிலக்கணம் கூறுதுவிட்டனம். மேலும் அவரது லீலாவைபவங்கள் அளவின்றியிருத்தலால், இந்நூல் இடம் தராமைபைச் சிந்தித்து இவ்வளவிலேயே விட்டு இரண்டாஞ் சம்புவென் றிசைக்கும் கந்தியெம் பெருமா னுற்பவ மெப்படி என்பதைச் சிந்திக்கலுற்றும்.

ஸ்ரீ கந்திதேவர் உற்பவம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

தேவாதி தேவர்கடந் தேவை வாணேர்
செல்வத்தை மூவாத மூர்த்தி யானை
ஓவாத வின்பத்தைக் கயிலை காக்கும்
உடையானைச் சூலமான் மழுக்கை யானை
நாவாரக் கலிகளெலாஞ் சொன்ன வாழ்வை
நான்மறையு மிரண்டாஞ்சம் பென்றி றைஞ்சும்
காவானைச் சிலாதரமா முனிவர் பெற்ற
கண்ணுதலைக் ககனனுட் டிறைவன் றன்னை,

பந்தமெலா மறவெறியும் பரசி னானைப்
பார்வதியார் மூலையமுதந் தலைக்கொண் டானை
ஐந்தெழுத்தி னுருவானைத் தருமக் குன்றை
அமரர்களும் ஆரணமும் பரவுந் தேவை

முந்துசமண் மூவரெலாஞ் சிவபோ தத்துண்
மூழ்கவரு முனிவிலா முனிவன் றன்னை
நந்தியெனப் பிரம்புங்கைக் கொண்டெம் மீசர்
நற்பதத்தைச் சுமப்பானைப் பணிந்து வாழ்வாம்.

பிரம, விஷ்ணு, ருத்திரர் முதலான தேவர்களும், கருட கின்னரர் முதலான தேவகணங்களும், சனகாதி இருடிகளும், சித்தர்களும் வலம்வந்து வணங்கவும், வேதங்கள் கோஷிக்கவும், கோடிசூரியப் பிரகாசமாக தேஜோன்மயமாய் மகாமகத்துவ முள்ளதாய் விளங்கும் ஸ்ரீ மகா கைலாசகிரியில் நிருதிமூலையில் மகா தவசிரேட்டராய், சிவசொரூபமாய், வேறொன்றினும் பற்றிலாராய், சிதேந்திரியராய் நீரையுங் காற்றையுமுண்டு அநேககாலம் ஒரு முனிவர் தவஞ்செய்து கொண்டிருந்தனர்.

இவர் அளவற்றகாலந் தவஞ்செய்திருந்தமையால் இவர்மேல் புற்றுகளுண்டாகியும், பின்னர் ஒரு பெரிய மலைபோலும் மேடிட்டது. அதனால் அவரை சிலாதர மகாமுனிவ ரென்பர். (சிலை - மலை, தரம் - சுமத்தல்) இவர் செய்யும் அரிய தவத்திற்குக் கருணாநிதியாகிய சாட்சாத் சிவபெருமான் திருக்கைலையில் வீர சிங்காதனத்தினின்று மெழுந்தருளிவந்து முனிவர் முன்னே பிரத்தியக்கமாகத் தோன்றி, "அன்பனே! யாதுவரம் வேண்டினை" யென்று கேட்க, முனிவர் பகவானைப்பார்த்து ஆனந்த பரவசராய்ப் பரவிப் பணிந்து புகழ்ந்து, 'ஸ்ரீ கைலாசபதியே! எனக்கு வேண்டுவது மற்றொன்றுமில்லை. தேவரீரைப்போல் கருணை, சாந்தம், உயிர்கள்மீது இரக்கம் முதலியவைகளைப் பொருந்தி, சிவநெறியுந் தவவடிவு மாறாது, பரவுணர்வே பயனைக்கொண் டானந்திக்கும் பேற்றினையுடைய ஒரு புதல்வனைக் கடாட்சிக்கவேண்டும். அதாவது, சுவாமிகளது பாத பக்தி யாருக்கு உலகிலில்லையோ அவனது தலையை அக்கணமே துணிக்க விரும்புகின்றேன். அவ்வாறு யான் செய்யுங்காலத்தில் தேவரீர் விலக்கக் கூடாது. விலக்குவீராயின் யான் விரும்பிய புத்திர வரமும் வேண்டுவதில்லை" யென்று விண்ணப்பஞ் செய்தனர்.

அதனைக்கேட்ட பரமபதி நமது பத்திமையின் மிக்கச் சிறந்தோனென்று கருணைகூர்ந்து, "ஏ! சிலாதர! நீர் விரும்பியபடியே நமது அமிசமாகவுள்ள இந்நந்தியைப் புத்திரனாகக் கொடுக்கிறோம். அஞ்சாது செல்க." என்றிசைத்துப் பின்னும் கூறுவார். "இந்நந்தியோ நமது சொரூபமேயாகும். நமக்கு மிவனுக்கும் யாதொரு பேதமு

மில்லை. நம்மைப்போல நித்தியனுய், அநாதியாய் தரும ரூபியாய் பஞ்சாக்கரமே திருமேனியாய் விளங்குபவன்" எனக்கூறி, முனிவருக்கும் விடைகொடுத்தனுப்பிவிட்டு, நந்திதேவரை நோக்கி, "நீ இச்சிலாதருக்குப் புத்திரராகச் செல்வீராக. அல்லது நாமே அவருக்குப் புத்திரராக வேண்டு" மென்று கூற, அவ்வண்ணமே சம்மதித்திருந்தனர். ஒரு பகல் சிலாதமுனிவர் யாகத்திற்கு நிலந்திருத்தும்போது நிலந்திருத்தும் கொழுவழியாக நந்தியெம்பெருமான் அயோனிசராய் அவதரித்தலும், முனிவர் தம்மனையிற் கொண்டுபோய்ச் செய்யுங் கிரியாதிகளைக் கிரமமாகச்செய்து சிவாஞ்ஞையால் நந்தியென நாமகரணஞ்செய்து ஏழு வயதிற்குள் சகல கலைகளையும் பயிற்றப்பயின்று நந்திதேவர் பிரமேந்திராதிகளும் அஞ்சுங் கடுந்தவம் புரிந்தனர்.

அத்தவத்திற்கு சங்கரன் கிருபையோடு மெழுந்தருளி "யாது காரணமாக நம்மை வேண்டுகின்றனை" யென்று கேட்க, நந்திதேவர் ஆராமை மீதூர அஞ்சலியத்தராய் "ஐயனே! வேறெவ்வகைப் பற்றும் சற்றும் வேண்டிலேன். தேவரீரது ஸ்ரீ பாதபக்தியொன்றே நியமத்தோடும் பெற்றுய்யக் கோருகிறேன். அதைத் தந்தருளுவீராக" எனப் பிரார்த்தித்தனர். இவ்விண்ணப்பத்தைச் சிவபெருமான் மிக்க பேரானந்தத்தோடுங் கேட்டு மகிழ்ந்துத் தமது கைகளால் நந்தியெம்பெருமானைத் தழுவி ஆசீர்வதித்து, "அன்பனே! உம்மைப்பரிசிக்க நமக்குள்ள பேருவகையை யாரறிவர்? உம்மிடத்துள்ள கருணையால் முன்னமே உம்மை வாகனமாகக் கொண்டோம். இதை வேதாகமாதிகளுங் கூறும்; இப்போது சருவபூத நாதனும் சருவஞ்ஞத்துவனுமா யென்றும் என்னைவிட்டு நீங்காப் பெரும் பேற்றை யடைவையாக" என்று அனுக்கிரகித்தனர். அவ்வண்ணமே நந்தியெம்பெருமான் கைலைக்குக் காவலராய் பிரம விஷ்ணு முதலிய தேவர்களும் சித்தர்களும் மற்றேனைய சருவ பிராணிகளும் வணங்குந் தலைவராய் காப்புற்றிருந்தனர். அமரர்கள் புட்பமழை பெய்தனர்.

இந்நந்தியெம்மிறைவர் பரூப்பதத்தின் நிருதிமூலையில் தவம் புரிந்த இடம் தரும சொரூபமாய், சருவாபீட்ட சித்திகளும் விளங்குவனவாய் நந்திமண்டலமெனப் பெயர்பெற்றுள்ளது; அன்றி இந்நந்திதேவர் சிவபெருமானிடத்து 'பெற்ற தபோவரத்தால் நான்கு

கரமும், மழு, மான், கங்கை, மதி, சடைமுடி முதலியவைகூடிய சிவ சொரூபமேயாயிருப்பர். இவர் சிவபிரானிடத்து வேதாதி கலைகளையுங் கேட்டுத் தெளிந்து அனேக முனிவர்களுக்கும், இருடிகளுக்கும் உபதேசித்திருக்கின்றனர். இவரை இரண்டாவது சிவம் என அநேக சாத்திரங்கள் கூறுகின்றன. இவரே பின்னர் ஒருகால் கன்னட தேசத்தில் வசுவேசரென அவதாரஞ்செய்து சைனபௌத்த மதங்களின் ஞானங்களை யொழித்து வீரசைவ சமயத்தை விருத்திசெய்தவர். இவரை வழிபடாது சங்கரரை எத்தனையுகம் எத்தகைய பெருமித தருமத்தோடு பூசிப்பாராயினும் பயனே யில்லையாம். ஆகையால் சாட்சாத் சந்நியெம்பெருமானைப் பரவிஞ்ஞருக்கு சருவாபீட்ட சித்தியும் உண்டாகும்.

சத்திகள் உற்பவம்

துதி

எண்சீர் ஆசிரிய விருத்தம்

எழுவாயும் பயனிலையும் பொருளும் போல
எப்பொருட்கு நிமித்தமாய்ப் பேத மாகிப்
பழுதறுமா மணியொளிநீர்த் தண்மை யென்னப்
பரமாகி யகிலாண்ட மெல்லா மான
முழுமுதலே முன்னிலையொன் றில்லா வாதி
மும்முதலைத் தொழுவார்தம் வினைவேர் வீழ்த்தும்
மழுவலத்தா னிடங்காணு மமல வாழ்வை
மறைபரவு முமையையனத் தவிசி லுய்ப்பாம்.

சாட்சாத் பரமபதியின் சந்நிதானத்தில் மலரில் மணமும், எள்ளில் எண்ணெயும், நீரிற் குளிர்ச்சியும், அக்கினியிற் சுடும்போல, அபேதமாய் இறைவர் நிருக்குறிப்பினெறியே பஞ்ச கிருத்தியங்களையும் நடாத்தும் சத்தியே உமையென்பர்.

கருணை சொரூபியாக அவ்வம்மையார் கிருத்தியவகையால் பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என ஐவகைப்பட்டு நிற்கும். அவற்றுள்—பராசத்தி சிவத்தின் ஆயிரத்திலொரு கூறுடையவளாய் பக்குவ பக்குவர்களாகிய ஆன்மாக்களைக் கருணையால் அநுக்கிரகிக்கும்.

ஆதிசத்தி அப்பராசத்தியின் ஆயிரத்திலொரு கூறுடையதாய் ஆணவமலம் பக்குவமாம்படி செலுத்தி விடய சுகத்தைப் பொருத்தும்.

இச்சாசத்தி அவ்வாதிசத்தியின் ஆயிரத்திலொரு கூறுடைய தாய், தனுகரணபுவனபோகாதி காரணமாய் நிருட்டியைச் செய்யும்.

ஞானசத்தி அவ்விச்சாசத்தியின் ஆயிரத்திலொரு கூறுடைய தாய் ஆன்மாக்களினது கன்மங்களையும், அக்கன்மங்கட் கீடான தனுகரண புவன போகங்களையும் உண்டாக்கும்.

கிரியாசத்தி * அந்த ஞானசத்தியினது ஆயிரத்திலொரு கூறு டையதா யிருக்கும்.

"பூவண்ணம் பூவின் மணம்போல"

—திருவிளையாடல்.

என்றபடி அச்சத்தியினின்றும் வேறுகாத சத்தியின் அதுட்டிப்பே நானுவாக விளங்கும். நாமரூபாதிக்குட்பட்ட எல்லாத்தோற்றமு மாம். அன்றி, இப்பஞ்ச சத்திகளின் பத்திலொரு கூறுகொண்ட பேதமே சகல நிட்களமாய் சதாசிவரூபம். இதனாலேயே "சத்திதான் சிவத்தையீன்றும்" என்று கூறப்பட்டது. சத்தியின்றி, சிவாதிக் கம் சங்கற்ப விகற்பாதிகளுக்குடனுகாது. "சிவமென்னும் பொருளு மாதி சத்தியோடு சேரினெத்தொழிலும் வல்லதாமவள் பிரிந்திடி லியங்குதற்கு மரிதரிதெனு மறை யிறைஞ்சிடும்" எனக் கூறியபடி சிவத்தையன்றி சத்திக்கு விகாரமும் இல்லாமையான், சிவமே சத்தியென்று கொள்ளவேண்டும். இவ்வாறு கொள்ளுதற்கெனவே அர்த்தனாரீசுர மூர்த்தங்கொண்டுள்ளது போலும்.

இவ்வகில மாதாவாகிய பார்வதியாருக்குக் காருண்யத்தா லேயே பலவித நாமரூபங்களமையப்பெற்றன. அவற்றுள் சில நாம விலக்கணங்களை மாத்திரம் கூறுகின்றேம்.

பராசத்தி - மேலானசத்தி; நிட்களை - அருவ வடிவத்தை யுடையவள்; கேவலை - தனிமையுடையவள்; மாயாதீதை - மாயைக்கு எட்டாதவள்: மேற்பட்டவள்; சாந்தை - சாந்தமுடையவள்; மகே

---

* இக்கிரியாசத்தியினால் சதாசிவத்தில் ஆயிரத்திலொரு கூறுகொண்டு அநந்தேசுவரரூபமாய் இருபத்தைந்து உருத்திர சமேதமாகி கிருத்தியங்க ளைச் செய்வதுவே உமை என்பதாம்.

சுவரி - மகத்தாகிய ஐசுவரியமுடையவள், அமிர்தை - மரணத்தைத் தவிர்ப்பவள், அசலை - சலனமில்லாதவள், (சலனம் - அசைவு,) சுமங்கலை - நல்ல மங்களத்தையுடையவள். நிவர்த்தி - ஞானமாயிருப்பவள், காளி - கருநிறமுடையவள், கங்கை - பூமியிற்செல்பவள்: கங்காதேவியாயிருப்பவள், பவகரை - பிறவிக்கடற்குக் கரையாயிருப்பவள், மகா மாயை யென்பது மாமாயை எனத் திரிந்து நின்றது. மாய அதீதை மரண அதீதை என்பன மாயாதீதை - மரணாதீதை யென வடநூன் முடிவு, அதீதம் - எட்டாதது. இவை முதலிய நாமங்களி லுள்ள ஐகாரங்கள் பெண்பாற்பெயர் விகுதிகளெனக் கொள்க. பகவதி - ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் அறுகுணங்களையுடையவள், சம்பவை - சம்புவின் மனைவி, இது சாம்பவியெனவும் வரும். மகிடவாகினி - எருமைக்கடா வாகனத்தையுடையவள், எருமைத் தலையையுடைய மகிடாசுரன் தலையில் மிதித்து நிற்றலின் இப்பெயர் பொருந்தியது. அச்சுதை - அழியாதவள், பரமகலை - மேலானகலையா யிருப்பவள், அநாதி - ஆதியில்லாதவள், மகதி - மகத்தாயிருப்பவள், சத்தயோனி - சத்தத்தை யிடமாகவுடையவள், (சத்தம் - ஒலி,) சுத்தயோனி - சுத்தமாகிய இடமுடையவள், பிரதான புருடாசக்தி - பிரகிருதி மாயைக்கும் புருடதத்துவத்திற்கும் தலைமையானவள், மாவிஞ்சை - பெரியசுத்த வித்தையாயிருப்பவள், காந்தை - நாயகி, குகை - அடியருள்ளக் குகையிலிருப்பவள், சருவசித்தி - எல்லாச்சித்திகளையுங் கொடுப்பவள், கலை - கலாரூபமாயிருப்பவள், அவ்வியத்தலக்கணை - சூக்குமலக்கண முடையவள், நிர்க்குணி - முக்குணங்களுமில்லாதவள், பிராமி - பிரமசத்தியாயிருப்பவள், சகமாதா - உலகங்களுக்குத் தாய், விபாலரி - இருளாயிருப்பவள், சின்மயை - ஞானமயமாயிருப்பவள், அகந்தவிபவை - அளவிப்படாத விபூதியையுடையவள், சராதீதை - சங்கமப்பொருளுக்கு மெட்டாதவள், துர்க்கை - துர்க்கத்தை யிடமாகவுடையவள்: துக்கத்தினுல் அறியப்படுப்வள்.

சுருதி - வேதங்களாயிருப்பவள், சருவாணி - எல்லாச்சொற்களுமாயிருப்பவள், சுவாகை - அட்டமூர்த்த சத்திகளுமொன்று யிருப்பவள், உருத்திராணி - உருத்திரனதுசத்தி, யோகினி - யோகத்தையுடையவள், சுந்தரி - அழகுடையவள், அம்பிகை - தாய், உலோபை - பாவ ஒறுப்புள்ளவள், விசுவரூபை - உலகத்தை வடிவாகக்கொண்ட

வள், (விசுவம்-உலகம்,) வரதை-அருட்கொடையையுடையவள், அதி சோபனை-மிக்க மங்களகுணத்தை யுடையவள், மாபலை-பேராற்ற லுடையவள், (பேராற்றல்-அநந்தவீரியம்,) சாந்தி-சத்துவகுண முடையவள், விபாவனை-பாவனையில்லாதவள், வாக்கியை-மகாவாக் கியங்களின் பொருளா யிருப்பவள், அவை தத்தொம்மசி முதலியன, பவானி-பவனுடைய மனைவி, பிரமவிஞ்சை-பிரமவித்தையை யுடை யவள், புருடமோகினி-புருடதத்துவத்தை யிச்சிப்பவள், நாதரூபை-நாதவடிவுள்ளவள், தரை-உலகங்களைத் தரித்திருப்பவள், பிராண விஞ்சை-பிராணவறிவாயிருப்பவள், விஞ்சை-வித்தையுமாம்.

சத்திபீடம் - 64

1 காமகோடி பீடமும்,
2 அன்னபூரணி பீடமும் ஸ்ரீ காஞ்சியிலுள்ளன.
3 இலட்சுமிபீடம், கோபாலபுரத்திலுள்ளது.
4 இரேணுகாபீடமும்,
5 துளசாபீடமும்,
6 சத்தசிருங்கபீடமும் மாதுபுரத்திலுள்ளன.
7 சுவாலாமுகிபீடம் இங்குலியிலுள்ளது.
8 பிராமரிபீடம் சாசம்பரியிலுள்ளது.
9 துர்க்கைபீடமும்,
10 விந்தையாசலபீடமும் ஸ்ரீரர்த்தகிரிசையிலுள்ளன.
11 பீமாதேவிபீடம் விமலியிலுள்ளது.
12 கௌசிகிபீடம் ஸ்ரீ சந்திரகலியிலுள்ளது.
13 நீலாம்பரிபீடம் நீலபருவதத்திலுள்ளது.
14 சாம்புகதேசுவரிபீடம் ஸ்ரீநகரத்திலுள்ளது.
15 இரகசியகாளிபீடம் நேபாளத்திலுள்ளது.
16 மீனாக்ஷிபீடம் மதுரையிலுள்ளது.
17 சுந்தரிபீடம் வேதாரணியத்திலுள்ளது.
18 யோகேசுவரிபீடம் மகாலசத்தியிலுள்ளது.
19 நீலசரசுவதிபீடம் சீனாவிலுள்ளது.
20 வகளிபீடம் வைத்தியநாதத்திலுள்ளது.
21 புவனேசுவரிபீடமும்,
22 காமயோனி மண்டலமென்னுந் திரிபுர பைரவி பீடமும் மணித்தீபத்திலுள்ளன.

23 காயத்ரிபீடம் புட்கரத்திலுள்ளது.
24 சண்டிகைபீடம் அமரேசத்திலுள்ளது.
25 புட்கரேட்சணிபீடம் பிரபாசத்திலுள்ளது.
26 தேவிபீடம் நைமிசத்திலுள்ளது.
27 புருகூதபீடம் புட்காராட்சத்திலுள்ளது.
28 இரதிபீடம் ஆடாடத்திலுள்ளது.
29 தண்டினிபீடம் சண்டமுண்டியிலுள்ளது.
30 பீதிபீடம் பாரபூதியிலுள்ளது.
31 நகுலேசரிபீடம் நகுலத்திலுள்ளது.
32 சந்திரிகைபீடம் அரிச்சந்திரத்திலுள்ளது.
33 சாரதாபீடம் ஸ்ரீகிரியிலுள்ளது.
34 திரிசூலபீடம் பஞ்சநதத்திலுள்ளது.
35 சூட்சுமபீடம் ஆம்பிராதகேசுவரத்திலுள்ளது.
36 சாங்கரிபீடம் மகா காளத்திலுள்ளது.
37 சர்வாணிபீடம் மத்திய மாபிதத்திலுள்ளது.
38 மார்க்கதாயினிபீடம் கேதாரத்திலுள்ளது.
39 பைரவிபீடம் பைரவத்திலுள்ளது.
40 மங்களபீடம் கயையிலுள்ளது.
41 தாணுப்பிரியைபீடம் குருட்சேத்திரத்திலுள்ளது.
42 சுயம்புபீடம் வியபிநாகுலத்திலுள்ளது.
43 உக்கிரபீடம் கனகலத்திலுள்ளது.
44 விசிவேரைபீடம் விமலேசுரத்திலுள்ளது.
45 மஹாநந்தைபீடம் அட்டகாசத்திலுள்ளது.
46 மகாநந்தகைபீடம் மகேந்திரத்திலுள்ளது.
47 பீமபீடம் பீமத்திலுள்ளது.
48 பவானிபீடம் வத்திராபதத்திலுள்ளது.
49 உருத்திராணிபீடம் அர்த்தகோடிகையிலுள்ளது.
50 விசாலாட்சிபீடம் அவிமுத்தத்திலுள்ளது.
51 மகாபாகைபீடம் மகாலயத்திலுள்ளது.
52 பத்திரகாளிபீடம் கோகர்ணத்திலுள்ளது.
53 பத்திரபீடம் பத்திரகர்னிகத்திலுள்ளது.
54 உற்பாலட்சிபீடம் சுவர்ணுட்சத்திலுள்ளது.
55 தாண்வீசைபீடம் ஸ்தாணுவிலுள்ளது.
56 கமலிபீடம் கமலாலயத்திலுள்ளது.

57 பிரசண்டபீடம் சகலாண்டத்திலுள்ளது.
58 கிரிசந்திரிகைபீடம் குரண்டலத்திலுள்ளது.
59 மகுடேசுரிபீடம் மகோடத்திலுள்ளது.
60 சாண்டிகைபீடம் மண்டலேசத்திலுள்ளது.
61 காளிபீடம் காலஞ்சரத்திலுள்ளது.
62 தோனிபீடம் சங்கு கர்னத்திலுள்ளது.
63 தூலபீடம் தூலகேசுரத்திலுள்ளது.
64 பரமேசரிபீடம் சிவஞானிகளிதயகமலத்திலுள்ளது.

இவ்வாறு வடமொழித்தேவி பாகவதத்திற் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு பீடவகையாலும், திருநாமவகையாலும் அவதார வகையாலும், "சிவஞ்சத்தி தன்னே யீன்றும் சத்திதான் சிவத்தை யீன்றும்" என்று கூறுமாற்றலும் பிரம சைதன்னியத்தி லெழுத்துஞ் சொல்லும் பொருளும்போல ஜகசீவ பரமாக விளங்குவது பால்திணையாதிவகைப்பட்டதல்லவென்றும், சிவனைக்குறிக்கும் பெயர்களே சத்தியின் திருநாமங்களா மென்றும் பிரதிபாதிக்கும். ஆகமாந்த பிரமாணங்களா லனன்னியமே அம்மையெனக் கொள்ள வேண்டியதே சித்தாந்தமும் வேதாதி பூர்வபட்சமும் எனத்துணிபு எனக் கொள்ளக்கிடப்பது போலும். 'ஒருபாதி மால்கொள மற்றொரு பாதி யுமையவள் கொள' என்பதும், அர்த்தனாரீசுர கேசவார்த்த மூர்த்தபேதத்தினு முண்மைபோலும்.

தாட்சாயணி திருவவதாரம்

சந்த விருத்தம்

தக்க னுறங்கெட வுக்கிர முற்ற தழற்பாவாய்
தண்டர ளங்கொழி முண்டக மீதுறு சங்கரையே
மிக்கவ ரிடமுறு முக்கணி யேமறை மீதாளே
விண்ணர சாள்தரு பெண்ணர சேமணி மார்பாளே
அக்கர வம்புனை மிக்கவ ளேயரி யேற்றாளே
ஆரணி காரணி நீரணி பூரணி யென்பார்பா
லெக்கண முந்துணை யுறுதாட்சாயணி யெம்மானே
என்று னிணையடி புணைதுணை யருளுக சீர்வாழ்வே.

பிரமதேவன் குமாரனாகிய தக்கனென்பவன் வேதவல்லியென்னும் மனைவியோடு கூடி வாழுநாளில் ஒருநாள் தனது தந்தையாகிய பிரமனிடத்தே, 'சிவபெருமானே பரம்பொருளெனக்' கேட்டுத்

தெளிந்து அரிய தவத்தைச் செய்ய, சிவபெருமான் பிரத்தியட்சமாகி யாதுவரம் வேண்டுமென்ன, தக்கன் தான் நிகரின்றி பிரசித்தமாயரசு செலுத்தவும், உமையம்மையார் புத்திரியாய் அவதரிக்கவும், தாங்கள் மருமகனாக வந்து மணம்புரியவும் வேண்டுமென்ன, அவ்வாறே வரமளித்துச் சென்றனர். பின்னர், உமையம்மையார் யமுனாநதிக் கருகில் காளிந்தி நதியில் ஒரு தாமரை மலரில் சங்குவடிவாயிருந்தனர். அவரைத் தக்கன் ஸ்நானஞ்செய்து வருங்கால் கண்டு எடுத்தலும் மகா சோதிவடிவாகிய ஒரு பெண் குழந்தையா யிருக்கப்பார்த்து மகிழ்ந்து மனைவியிடங் கொடுத்து வளர்த்து வந்தனர். குழந்தை ஐந்துவயதானவுடனே தந்தையிடம் ஒரு தவச் சாலைப்பெற்று ஏவலர் சூழத் தவசுபுரிந்தன. அந்நாளில் விருத்த வேதியராய், சிவபெருமா னெழுந்தருளி தவச்செயலைச் சோதித்து ஏவலரால் தக்கனுக்குத் தெரிவித்து மணம்புரிந்தனர். (மற்ற சரிதங்களை வீரபத்திரர் உற்பத்தியில் காண்க.)

பார்வதி திருவவதாரம்

எண்சீர் சந்த விருத்தம்

அண்டமேழு மீன்றகன்னி யாயஞான வல்லியார்
ஆரணத்தை வைத்தவீச ருக்குமுண்மை யுய்த்தவள்
புண்டரீக ரர்சிரம் பொடித்தவேளை யீன்றவள்
பூவினைய கர்க்குமாதி நாயகிக்கு மென்னையோ
கொண்டயோகி போலுமேரு மன்னன்மங்கை யாயினள்
குழகனுஞ்சி ரர்களென்ன கோலஞானி யென்றுளான்
அண்ணலன்னை மிக்கொர்யாரு மில்லையாத லாசையா
லணுகியாடு மாடல்போலு மம்மையப்பர் பாதமே.

ஒருகால் உமையம்மையார் தக்கனுக்கு மகளாகிய வசை நீங்குமாறு சிவபெருமானைத் துதிக்க சிவபெருமா னவ்வண்ணமே பார்வதியைநோக்கி, "உமையே! நமதன்பன் மேருகிரியில் தவஞ்செய்கின்றனன்; அவனிடத்தவதரிக்கக் கடவை. யாம்வந்து மணம்புரிந்து வருவோம்" என்னு கூறலும், "சுவாமி நானவ்வண்ண மவதரிக்குங்கால் இவ்வுணர்ச்சி மாறுதிருக்கக் கருணை பாலிக்கவேண்டு" மென்றிறைஞ்ச, "அவ்வாறே யாகுகவெனக்கூற" விடைகொண்டு மேருமலையி லொருசார் பொய்கையில், பார்வதியார் புத்திரியாகவும் சுவாமிகள்வந்து மணந்து செல்லவும் தவம்புரிந்திருந்த மலையரச

னுக்கு முன்னே ஒரு தாமரைமலரில், குழந்தைவடிவாக யெழுந் தருளியிருந்தனள். அக்குழந்தையை மலையரசன் கண்டு 'நமது அருந்தவம் முற்றியதுபோலும், நமதுதவமே தவம்' எனச் சந் தோஷித்து ஆடிப்பாடி, 'அகிலகார்த்தியே அவதரித்தனள்' எனக் கொண்டாடி, தமது மனைவி மேனையிடத்தளித்துச் சீராட்டி வளர்க் கும் நாளில், ஐந்துவயது வந்தவுடனே அம்மையார் தந்தையை நோக்கித் தவச்சாலையொன்று பெற்று அருந்தவம் புரிந்தனள். இத்தவச் செல்வியை மலையரையனும் மேனையும் நித்தியவிரதமாகப் பணிந்து துதித்துச் செல்லுவராயினர்கள். அக்காலத்தில் அம்மேரு மலையில் ஒரு முனிவர்போலச் சிவபெருமா னெழுந்தருளி அடுத்த சனகாதிகளுக் குபதேசித்து பின்னரடுத்த மன்மதனைத் தகித்து தேவர்கள் வேண்டுகோளால் ஒரு வயோதிக சைவப் பிராமணர் போல் எழுந்தருளி அம்மை தவத்தை சோதித்து நிசரூபத்தைக் காட்டி அன்பை மேலிடச் செய்வித்து, முனிவர்களால் பருவதராச னிடத்து மணம் பேசுவித்து, எல்லா கணங்களும் புடைசூழ மணம் புரிந்தனர். அன்றுமுதல் பார்வதி யெனத் திருநாமம் பெற்று அம்மையார் சுவாமிகள் இடபாகத்தி லெழுந்தருளி யிருக்கின்றனர்.

தடாதகைப் பிராட்டியார் அவதாரம்

விருத்தம்

முன்னமேழ்கடலமைத்தவருவகையு மிரட்டிவானுலகெலாம்பணிய
அன்னவர்க்கணிமுடிகொடையளித் தவனிடத்திருந்தமறைகொழிக்கும்
கன்னியாகியகௌரியைபாண்டியர் கதிகொளவுற்றமாதவத்தை
பன்னுமாவுலகீனத்துமாயுற்றுரு மம்மையைப்பணிபுரிந்துய்வாம்.

முன்னொருகால் விச்சுவாவசு என்னும் விஞ்ஞையன் மகளான விச்சாவதி என்பவள் பார்வதி மந்திரத்தைத் தந்தையா லுபதேசிக் கப்பெற்று சத்திபீடம் அறுபத்து நான்கில் முதற்பீடமாகிய மது ரையை யடைந்து தைமாதந்தொடங்கி பல விரதங்களை யனுட்டித்து இருபத்தோராம் மாதம் நிறைந்தவுடனே ஒரு வீணையைக்கொண்டு பாடத் தொடங்கினள். இவ்விச்சாவதி பத்திக்கு மீனாட்சியம்மை யார் மகிழ்ந்து மூன்று வயதுடைய ஒரு பெண் குழந்தையாய் எதிரேவந்து 'ஓ விச்சாவதியே! உனக்கு யாதுவரம் வேண்டு' மென விச்சாவதி ஆனந்தமெய்தித் துதித்துப்பணிந்து "ஓ லோகமாதாவே

நின் பாதபத்தியும், நீ எனக்குப் புத்திரியாகி என் மடியி லிருக்கவும் வரம் பாலிக்கவேண்டும்; வேறொன்றும் வேண்டா" மெனத் துதித்து நிற்க, மீனாட்சியம்மையார் விச்சாவதி அன்புக்கிரங்கி, "ஓ விச்சாவதியே! நீ கோரியபடியே நீ மலையத்துவசனுக்கு மனைவியாக காஞ்சன மாலையென்னும் பெயரோடுவருவாய், அப்போது உனக்கு நாம் புத்திரியாகவந்து உன் மடிமேலிருப்போம்" என்று கூறி அந் தர்த்தான மாயினள்.

இப்பால் விச்சாவதி அம்மையாரைத் துதித்து வணங்கி சூர சேன மகாராசனுக்கு மகளாயவதரித்து பொன்மாலைகாஞ்சன மாலை யெனப் பெயர்பெற்று பார்வதி யம்மையார் பாதபத்தியை சிறிது மாறுதவளா யிருந்தாள். அக்காலத்தில், பரதகண்டத்தில் பாண்டி மண்டலத்தை அரசாண்டுவந்த சந்திரகுலத்துப் பாண்டியர்களில் மலையத்துவச னென்பான் அச்சூரிய குலத்தில் சூரசேன மகாராசன் புதல்வி காஞ்சனமாலை யென்பவளோடு கூடி, இல்லற நெறியி னின்று இராச்சிய பரிபாலனஞ் செய்துவரும் நாளில், நமது மதுரை இராசதானியில் எழுந்தருளிய ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளுக் கன்புடை யவனாய் தொண்ணூற்றொன்பது அசுவமேதயாகஞ் செய்து இந்தி ரன் சூழ்ச்சியால் நூறுவது புத்திரகாமேட்டி யாகத்தைச் செய்ய, அதினின்று மூன்று தனத்தோடும் சகலாடம்பர சர்வாபரணாலங் கிருதையாய் சர்வலோக காரணியாகிய உமையம்மையார் உற்பவித் தனர். இதனைக்கண்ட பாண்டியன் பெண்குழந்தையாய் மூன்று தனத்தோடும் அவதரித்ததே யென விசனிக்கலாயினன். அக்கால் அசரீரி, "மன்னனே! இக்குழந்தையைக் குமாரனகையெண்ணி எல் லாச் சடங்குஞ்செய்து தடாதகையெனப் பெயரிட்டு முடிசூட்டுக. அக்குழந்தைக்கு நாயகன் வருங்காலத்தில் ஒரு தனம் மறைந்து போம்" எனக் கூறிற்று. அதனைக்கேட்டு மன்னன் மகிழ்ந்து உல கெலாங் கொண்டாடும்படி எல்லாச் சுபகாரியங்களையுஞ் செய்து முடித்து, தனது அரசையு மொப்புவித்துக் காலமாயினன். அம் மையார் தனது தந்தையினது முடி, வேப்பமாலை, அரசு முதலியவை களைப் பெற்று, மற்றேனைய அரசர்களும் பகுதிதரயேற்று, அர சாட்சி புரியுங்காலத்தில் தக்கவயது சமீபித்திருப்பதை தாயாகிய காஞ்சனமாலையுணர்ந்து, இன்னும் நமது குழந்தைக்கு மணம்மாக திருக்கின்ற காரண மென்னவென்று விசனிக்க, இதைக்கண்ட

அம்மையார், "அன்னையே! விசனிக்கவேண்டாம்; ஆகும்போ தெல்லாமாகும்; யான் திக்குவிசயஞ்செய்து வருகின்றே'' னென்று கூறி, தமது சேனைசனியங்களோடு, எதிர் ஒருவருமின்றி அட்ட திசைகளையும் செயம்புரிந்து கயிலைக்குச்சென்று தேவகணங்களையெல் லாம் போர்புரிந்து அதோகதிப்படுத்த, அதைத் தேவர்கள் சகியாது சிவபிரானிடத்து விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் வெள்விடைமீ தாரோகணித்து எதிரிலே வரவும், அம்மையார் மூன்று தனங்களி லொன்று மறைந்தன. அதனால் அம்மை, 'இவரே நாயகன்போ லும்' என நிலங்கீறிநிற்க, சுமதி என்னும் மந்திரியால், நாயகனே யென நிச்சயித்திருக்கையில், பரமசிவம் "ஓ பெண்ணே! நாளைய திங்கட்கிழமை மதுராபுரிக்குவந்து உன்னை மணஞ்செய்து கொள்ளு கின்றேன். நீ முன்னஞ் செல்லக்கடவா" யென்று கூற, அப்படியே தடாதகையம்மையார் சேனைகளோடு மதுரையை யடைந்து, பரிச னர்களால் விவாக காரியத்தைச் சித்தப்படுத்தியிருக்க, பரமசிவன் குறித்தகினத்தில் தேவர் முதலினோரோடும் வந்து மணஞ்செய்துக் கொண்டனர். அதன்பின் அம்மையார் தனது முடிமாலை அரசு முதலியவைகளைப் பெருமானிடம் ஒப்புவிக்க, அவர் சௌந்தர பாண் டியரெனப் பேர்பெற்று இராசபரிபாலனஞ்செய்து, உக்கிர குமார னென்றோர் புத்திரனைப்பெற்று, அப்பாண்டியர் மரபைக் காத்தனர். அதுமுதல் அம்மையார் இனிதாக வீற்றிருந்தனர்.

உருத்திரர் உற்பவம்

சந்தக் கலி விருத்தம்

திருத்தமிழ் மூன்றெனச் செப்பு முத்தொழிற்
கருத்தன தருளினற் கதித்தெண் மூர்த்தமா
யிருத்தெழு வைப்பினு மிலங்கு மொருத்தனி
யுருத்திரர் பதமல ருளங்கொண் டேத்துவாம்.

மகேசுரமூர்த்தி ஒரு திருவிளையாடலாக சதுர்முக னென்னும் பிரமனுடைய நெற்றியினின்றுந் தோன்றி கல்லை இசையோடழுது ஓடினர். அப்போது பிரமன் பார்த்துத் "தெய்வக் குழந்தாய்! என்ன காரணத்திற்காக உரோதனஞ்செய்து நிராவணஞ் செய்கின் றாய்" என வினவ, அவர் நாமதேயங் கொடுவெனச் சொற்றனர். பிரமன் ஆலோசித்து, "குமாரனே! நீ தோன்றி உரோதனஞ்

செய்து திராவணஞ் செய்தமையால், "உருத்திரன் எனப் பெயர் பெறுவாயாக" வென்றனன். (உரோதனம் - அழுகை, திராவணம் - ஓடுதல், உருத்திரன் : உரு - உரோதனம், திரன் - திராவணஞ் செய்தவன்.) பெயர் இட்டபின்னரும் அவர் எழுமுறை யழுதனர். அவற்றினின்றும் எழுவர் தோன்றினர். அவர்க்குப் பெயர் தானம் சரீரம் மனவியர் என்பவற்றையுஞ் சிருட்டித்துக் கொடுத்து உயிர்க்கு உடல்போல, உத்திரர்களுந் தாம் இருக்குந் தானங்களேயே உருவாகக்கொண்டு எண்வகை யிடங்களேயும் வடிவமாகக் கொண்டிருக்கச் செய்தனன். (பவன் - எல்லாவற்றையுந் தோற்றுவிப்பவன், சருவன் - எல்லாமுடையவன், ஈசானன் - ஐசுவரிய முடையவன், பசுபதி - ஆன்மாக்களுக்குத் தலைவன், வீமன் - திரிலோகங்களும் பயப்படத் தக்கவன், மாதேவன் - மேலானதேவன், உக்கிரன் கோரமுடையவன்.)

இங்ஙனம் சருவனுக்கு மண்ணே யுருவாகவும், பவனுக்கு நீரே யுருவாகவும், பசுபதிக்கு அக்கினியே வடிவாகவும், ஈசானற்கு வாயு வடிவாகவும், வீமனுக்கு ஆகாயமே வடிவாகவும், உருத்திரற்கு இரவி வடிவாகவும், மாதேவற்குச் சந்திரனே யுருவாகவும், உக்கிரற்கு அந்தணனுடலாகவுங் கோடலாம். இதனையே,

"மருவு கணஞ்சேர்ந் தகன்றுவிரி மண்ணி னுருவாஞ் சருவனை
யிரதமன்னித் தெண்ணீரி னுருவா யுறையு மெழிற்பவனை
யுருவம் பொருந்திக் கனல்வடிவா யுற்றே யுறையும் பசுபதியாய்
ஊரு யுலவை யுருவாகி யொழியா துறையீ சானனை
யாரு வொலியாய் வெளியுருவா யமர்ந்தே யுறையும் வீமனை
வீரு ரொளிசேர்ந் திரவியுரு மேவி யுறையு முருத்திரனை
மாரு யத்திரைநீ ரமுதாகி மதியா யுறைமா தேவனை
உரைத்தற் கரியவிய மானனுருவா யோங்கு முக்கிரனை"

என வாயுசங்கிதையும் வரையறுத் துரைத்தது.

தெய்வயானை யம்மையார் உற்பவம்

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

மாதவரு முனிவரரு மறைகள் யாவும்
வாலேடு மண்ணுலகு மரிதா நோற்ற
மாதவமே வல்லியுருக் கொடுவா னுடன்
மங்கையெனப் பூங்காவி லுதித்த மேலா

பிரபஞ்ச உற்பத்தி

மாதவத்தா லமுதத்தைக் கனியைத் தேனை
மாமணியைச் சர்க்கரையைப் பாலைக் கண்டை
மாதவத்தை மறைமுடியை முருகப் பூவை
மணந்தெய்வ யானையினை வழுத்தல் செய்வாம்.

ஸ்ரீசிவ சண்முகக்கடவுள், காமனும் நாணத்தக்கக் கட்டிளமை மாறாத மிக்க ரூபலாவண்யமும், வாலிபமும், அநேக சூரியர் ஒன்று கூடியதுபோல அதிதேசசும் வாய்ந்து மகா அற்புதத்திருவிளை யாடல்களைச்செய்து வருகின்ற காலியில், இவரது அழகும், வன்மை யும், கீர்த்தியும் அகிலாண்டமும் புகழுந் தன்மையினையுடையதா யிருந்ததால் இதைக்கண்ட கபடநாடக சூத்திரதாரனைய திருமால், சாட்சாத் லோகமாதாவாகிய இலக்குமியா ரிடபாகம்பெற்ற அமிர்த வல்லி, சுந்தரவல்லியென்னும் இரண்டுபெண்களும் ஸ்ரீசிவ சுப்ர மணியக் கடவுளையே மணஞ்செய்யவேண்டுமென்று நினைத்து, ஸ்ரீ கைலாயகிரிச்சாரலில் சரவணப்பொய்கையில் தவஞ்செய்து கொண்டிருந்தனர். இத்தவ மகிமைக்கிரங்கி ஸ்ரீசரவணப்பெருமான் பிரத்யட்சமாகி அமிர்தவல்லியை நோக்கி, நீ இந்திரன் மகளாகவும், சுந்தரவல்லியை நோக்கி, நீ ஒரு மான்மகளாகவும் வளர்ந்துகொண் டிருக்கக் கடவீர்கள். அவ்வாறு பிறந்து வளருங்காலத்தில் நாம் வந்து உங்களிருவரையும் மணம்புரிந்து கொள்ளுவோம் என்று அவர்களுக்கு வரமளித்துச் சென்றனர்.

இப்பால் அமிர்தவல்லி யம்மையார் இந்திரனுக்குப் புத்திரியாக அவதரித்து * நான்கு தந்தங்களுடைய ஐராவதமென்னும் வெள்ளை யானையானது வளர்க்க வளர்ந்துக் கொண்டிருந்தனள். இவ்வா றிருக்குங் காலத்தில், சூரபத்மன் முதலிய அசுரர்கள் அகோர தவஞ் செய்து சிவபெருமானிடத்து அரிய வரங்களைப் பெற்று அவ்வரத் தின் பலத்தால் கர்வமடைந்து தேவர்களை வருத்த, அத்தேவர்கள் அரக்கர் கொடுமையைச் சகிக்கக்கூடாமல் அரிபிரமேந்திராதிகளிடம் கூறி யாவரும் ஒன்று சேர்ந்து, திருத்தணியில் எழுந்தருளியிருக்கும் அறுமுகக் கடவுளிடம் விண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீசண்முகக்கடவுள் அத்தேவர்களை நோக்கி, "அப்படியே அசுரரைச் சங்கரித்து ரட்சிக் கிறேன்" என்று விடையளித்து, மற்ற தேவ கணங்களால் சேனாதி

* இந்திரனது யானை வளர்த்தமையால் 'தெய்வயானை' எனப் பெய ராயிற்றென்க.

பத்தியங் கொடுக்கப்பெற்று, தமது வீரவாகு முதலிய சேனைமுத் திரங்களோடும் தாருகன் முதலிய அசுரர்களைச் சங்கரித்து தேவர்க ளெல்லாம் எதிர்கொண்டு வணங்கத் திருச்செந்தூரையடைந்து அவ்விடத்தில் வீற்றிருந்தருளினர்.

இவ்வாறு முருகக்கடவுள் அசுரர் பயத்தை யொழித்து தேவ சேனாபதியெனப் பெயர்பெற்று வானலோகத்தை இரட்சிக்குந் தன்மையைத் தேவேந்திரன் கண்டு சந்தோடித்து, அவரது புயபல பராக்கிரமங்களை மதித்து, அவர் அனுமதியினால் தனது அருந்தவக் கன்னிகையாகிய தெய்வயானையம்மையாரை, சுபவோரை சுபயோக சுபதினத்தில் சகலாடம்பரங்களுடனே, தேவர்களெல்லாம் புடை சூழ, திருப்பரங் குன்றத்தில் திருக்கலியாணஞ்செய்து கொடுத்து, அங்கு ஒரு * விநாயகராலயமும், ஒரு தீர்த்தமும், ஒரு சிவலிங்கப் பிரதிட்டையுஞ் செய்துபோனான். அதன்பின் தெய்வயானை யம் மையாரும் ஸ்ரீசண்முகக் கடவுளும் திருத்தணிகா சலத்திற்றானே வீற்றிருந்தருளினர்.

வள்ளியம்மையார் உற்பவம்

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பாலாழி சுமந்தபணஞ் சுமந்த பச்சைப்
பணஞ்சுமந்த குழலாதி சுமந்த மாதர்
காலாழி சுமந்தகரைத் துண்டன் மிண்டன்
கண்டன்மா வண்டனோர் சண்டன் தண்டன்
பாலாழி தரைகண்டான் பாலே கொண்டான்
பண்ணுண்டா னெண்டோளா னண்டா தண்டான்
காலாழி யானறு முகனர் பாகங்
கதிகொண்டா ளிசைதண்டா மரைகண் டாமே.

இப்பால் சுந்தரவல்லியார் ஸ்ரீகுமாரக்கடவுளிடம் பெற்ற வரம் போல், பரதகண்டத்தில் தொண்டை நாட்டில் மேற்பாடிக்கருகி லுள்ள வள்ளிமலைச்சாரலில் தபாக்கினியை வளர்த்து அதில் மூழ்கி

---

* இதனை செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயிலென்பர். என்னெனில், இந்திரன் ஓர் தீர்த்த முண்டாக்கி அதில் வானுலகத்திலிருந்த செங்கழு நீர்க்கொடிகளைக் கொண்டுவிட்டு அம்மலரால் அருச்சித்தனள். அக்காரணத் தாலென்க.

சூட்சுமதேகத்துடன் அரியதவத்தைச் செய்து கொண்டிருந்தனள். அக்கால், முருகக்கடவுள் பிரத்தியட்சமாகி, "ஓ நங்காய்! நீ இப் பிறப்பில் மான்வயிற்றி லவதரிக்கக்கடவாய். அங்கு யாம் வந்து மணமுடிப்போம்" என்று வரமளித்து அந்தர்த்தான மாயினர்.

இப்பால், முன்னோர் காலத்தில் கண்ணுவமகாமுனிவர் ஏதோ ஒரு காரணம்பற்றிச் சிவவேடங் தாங்கி வந்து திருமால் பூலோகத் தில் மனிதனு யவதரிக்கவும், திருமகள் பெண்மானுய்ப் பிறக்கவும், உபேந்திரன் வேடராதிபதியா யுற்பவிக்கவுஞ் சபித்துச் சென்றனர். அதுபோல் திருமால் திருத்தணிகைக் கருகில் ஓர் ஆரணியத்தில் சிவமுனிவரென்னும் திருநாமம்பெற்று தவம்புரிந்திருந்தனர். அக் கால் திருமகள் அவ்வனத்தில் ஒரு பெண்மானுகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தனள். உபேந்திரன் மேற்பாடிக்கருகிலுள்ள லவலகிரி யில் வேடர் குலத்தில் வேநம்பி என்னும் பெயரோடு மவதரித்து வேடர்களுக்குத் தலைவனுகயிருந்தனன். இவ்வாறிருக்கும் நாளில் ஒரு நாள் திருமகளாகிய பெண்மான் சிவமுனிவ ரருகில்வர முனிவர் அதிகமோகங் கொண்டனர். உடனே அம்மலைச்சாரலில் சூட்சும ரூபத்தோடு தவம்புரிந்து சமயம் பார்த்திருந்த சுந்தரவல்லி யார் ஒரு பெண்குழந்தையுருவாய் அம்மான் வயிற்றிற் சென்றனள். அதனுல், அம்மான் கருப்பமுற்று ஒரு பெண்குழந்தையைப் பெற் றது. அதுதன் சாதியல்லாமல் மானிடப்பெண்ணு யிருந்தமையால் பார்த்து பயந்து அருகில் வள்ளிக்கிழங்கு தோண்டியெடுத்த ஒரு குழியில் விட்டுப்போய் விட்டது. வள்ளிக்குழியில் கிடந்தமையால், வள்ளியம்மையென் றழைக்கப்பட்டனர்.

அப்பால் தணிகாசலத்துக்கு மேற்கேயுள்ள லவலகிரி பருவதத்தி னருகில் பாடிகாகரை யாண்டிருந்த வேநம்பியென்பான் தன் சேனை யுடன் அவ்வனத்தை யடைந்து வேட்டையாடி வருகிறபோது சிவ முனிவ ராச்சிரமத்தில் குழந்தை அழுகை சத்தத்தைக் கேட்டு மற்ற வேடரால் கொண்டுவரப் பெற்று; தனக்கில்லாதிருந்த பெண் புத்திரப்பேற்றைக் கடவு ளளித்தனரென் றெண்ணிக் களித்துச் சென்று தன் மனைவியிடங் கொடுத்து வளர்த்து யுத்தமானவயது வந்தவுடனே குலாச்சாரப்படி அருகிலுள்ள தினைப்புனத்தைக் காக் கும்படி யனுப்ப, அவ்வண்ணம் புனத்தை பட்சி முதலியவை யணுகா திருக்கும்படி காத்துக்கொண் டிருக்கும்போது ஒருநாள் அவ்வழியே

செல்லும் நாரதர் கண்டு சுப்பிரமணியக் கடவுளிடம் வந்து, "ஐயனே! இவ்வழியில் மூவுலகினும் காணரிய குணரூபவதியாய் ஒரு கன்னிகை யிருக்கின்றனள்; தாங்கள் மணம்புரிதல் தகுதியே" என விண்ணப்பித்துச் செல்ல, முருகக்கடவுள் ஒரு வேடன்போ லுருக்கொண்டு வள்ளி நாச்சியாரிடம் சரச வார்த்தைகளைச் சொல் லிக்கொண் டிருக்கையில் வேடராசன் வரலும், சண்முகக் கடவுள் அருகிலோர் வேங்கைவிருட்ச மாயினர்; இதை வேடராசன் கண்டு வள்ளிநாச்சியாரைக் கண்டு இது ஏதம்மா? நூதனவிருட்ச மென்று கேட்க, வள்ளியார், 'நூதனமாகத்தா னிருக்கிற' தென்று சொல்ல, வேடராசன், ஓ! ஓ!! அரிய புத்திர பாக்கியத்தைக் கொடுத்த கடவுள் அக்குழந்தை வெய்யலில் வருந்துதலைக் கருதி, இம்மரத்தை யுண் டாக்கினர்' என்று சொல்லி சந்தோடித்துப் போனன். உடனே முருகக்கடவுள் பழமைபோல வேடவுருவோடு சரச மொழிகளைப் பேசிக்கொண் டிருக்கையில், வேட்டைக்குப்போன வேடராசன் திரும்பி வருவானுயினன். அதனைக் கடவுளறிந்து ஒரு விருத்த வேதியராய் வேடராச னெதிரிற்போய் விபூதியளிக்க, வேடராசன் 'வந்த கருத்தென்ன' வென, * 'குமரியாடவந்தனம்' என சிலேடை யாகக்கூற, வேடராசன் அப்படியே ஸ்நானஞ்செய்து இத்தப் பெண் ணுக்குத் துணையாயிருமென்று சென்றனன். அப்படியே வள்ளி நாச்சியாருக்குச் சண்முகக்கடவுள் விபூதியளித்து அவள் கொடுத்து வரும் தேனும் தினைமாவையுமுண்டு, தமக்குத் தாகம் அதிகரித்தது போல் தோற்றுவித்து, நீர்த்துறையைக் காட்டச்சொல்லிக் கேட்ட னர். அதற்கு வள்ளி இசைந்து ஒரு சுனையிற் கொண்டுபோய்விட, நீருண்பார்போல அபிநயித்து வள்ளியைப் பார்த்து, "ஓ பெண்ணே! தாகவிடாய் தீர்த்தனை; அதுபோற் காமவிடாயுந் தீர்க்கவேண்டு" மென இருகையுங் கூப்பிச்சொல்ல, வள்ளி கோபித்துத் திரும்ப, அதைக்கண்ட முத்தன் வள்ளி யாணைக்கஞ்சுவாளென் றறிந்து, பிர ணவ மூர்த்தியைத் துதிக்க, அவர் யானைவுருவாய் வள்ளியாருக் கெதிரில்வர, வள்ளியம்மையார் பயந்து விருத்த வேதியரை அபய மென்று கட்டிக்கொண்டனள். பின் விநாயகர் அந்தர்த்தானமாயி னர். முருகக்கடவுள் நிசரூபத்தைக் காட்டி மனமொத்திருந்தனர்.

---

* குமரி என்பது - விவாகமற்ற பெண்ணுக்கும், அம்மலையிலுள்ள தீர்த் தத்திற்கும் பெயர். இத் தீர்த்தக்கரையில் வள்ளியம்மையார் மஞ்சளரைத்த வடுக்களே இன்றுங் காணலாம். சிலேடை யென்பது இரண்டு அருத்தம்.

இவ்வாறு சிலகாலங்கழிய வேடர் புனம்அறுத்தெறிந்தபின் வள்ளியம்மையார் தனக்கமைத்த வீட்டிலிருக்கும்போது ஒருகாலிர வில் சரவணபவனழைத்துவந்து ஒரு சோலையில் தங்கியிருந்தார். இவ்வாறு ஒரு வேடன் வள்ளியை அழைத்துச்சென்று ஒருசோலையி லிருப்பதாக வேடராசனுக்குச் சொல்லப்பனஞ் சாதிக்கவே நம்பி எழுந்து பரிவாரத்தோடுஞ் சோலையை யடைந்து இறைவன்மேல் சரமாரி பெய்ய, அக்கால் முருகப்பிரான் சேவலினிணக்க, சேவல் கொக்கரித்த தொனியால் வேகம்பி சேணையோடு மூர்ச்சையாயினன். இதனை வள்ளியுணர்ந்துப் பிரார்த்திக்க, மூர்ச்சையைத் தெளிந்து நிச ரூபத்தைக்காட்டி அவர்கள் பணிபுரிய, தணிகைமலையை யடைந்து பார்வதி சிவபெருமான் முதலினோரால் தேவதச்சனைக் கொண்டு விவாகமண்டபம் நிருமித்து சருவாடம்பரத்துடனே சருவகணங்க ளுஞ்சூழ விவாகஞ் செய்துகொண்டு வீற்றிருந்தருளினர்.

இவ்வள்ளியம்மையையும், தெய்வயானையம்மையையும் முறை யே கிரியாசத்தி, ஞானசத்திகளென்பர். வேறு சிலர் சிற்சத்தியும், பராசத்தியுமென்பர்.

பாலாரிட்ட தேவதைகள்

அசுரரியா யிருக்கும் வேதநெறியைக் கடைப்பிடியாத பாபி களைத் தண்டித்து, நாளுக்குநாள் நல்ல விவேகத்தைக் கொடுத்து இரட்சிக்கும் படியாகக் கடவுளால் சிருட்டிக்கப்பட்டனுப்பிய இரு பத்தெண்கோடி துட்டதேவதைகளில் பாலர்களை யார் கன்முகப் பாதுகாக்காமலும், குலதரும கிரியாதிகளைச் செய்யாமலும், தெய்வம் போற்றுமலும், சிசுத்தன்மையைக் கவனியாமலும் இருக்கின்றார் களோ அவர்களுக்குப் பீடையையும், பாலர்களுக்குப் பிறந்த பத் தாம் நாள் முதற்கொண்டு பதினாறு வயதுமட்டும் தேகவருத்தத் தையும், உண்டாக்கும் பொருட்டா யுள்ளவர்கள். மண்ணை, சந்தி முனி, தந்தைபீஷ்னி, காளிகை, பீமரூபி, அங்குசினி, பூதினி, முத்த கேசி, ஆகாசினி, அரிகேராதினி, சகுனி, பூமாயி, உத்தமி, பிங்களை, கோகர்ணி, பங்கஜை, ஸ்ரீமுதை, சேனி, சம்பகர்ணி, தாபதை, காலார்க்கி, நந்தினி, குரோதினி, தானுனி, தாகினி, பஞ்சாளைகாமினி, மேதினி, களினி, மகாகும்பினி, அரசி, ஆகாசகர்ணி, வாயுவிசிக்கினி, சுகந்தினி, வனதேவி, குண்டனிகளும், பசாசகணங்களும், பக்ஷி ரூபணி, வாயுரூபணி முதலிய வான கில்லியர்களும் பாலாரிட்ட

தேவதைகளாம். இவர்கள் தங்கள் தங்கள் கோரரூபசேட்டைகளால் மனிதராக்கத தேவலோக சஞ்சாரிகளாய் விகாரங்களைக்காட்டி வெவ்வேறான பூசைபலிகளை யேற்பார்கள். அன்றி,

பட்சிதோடம், பறவைதோட்டம், எட்சிதோடம், தேரைதோடம், புருடதோடம், பெண்தோடம், குளிதோடம், கெற்பதோடம், மாந்ததோடம், மலட்டுதோடம், சந்திதோடம், கிரகதோடம் முதலியவைகளும், கரப்பான், கிரந்தி, கணம் முதலிய தேகநோய்களும், பாலகர்களை வருத்தப்படுத்துவனவாம். ஆனதால் பெண் ஆண் தேகங்கள் ஒரே தன்மை யுடையதாயிருக்கப் புணர்ந்து பெற்ற பிள்ளைகட்கு ஆயுள்வேத விதிப்படி நடந்து கொண்டால் இத்தோடங்கள் அணுகா. இதனை பன்னிருவருடமட்டும் தான் பாலக்கிரகதோடங்க ளுண்டென்றும், மூன்று மாதமட்டுந்தான் கரப்பான்களிருக்குமென்றும். ஒருவருட மட்டுந்தான் மாந்தங்களிருக்குமென்றும், பதினைறு வருடமட்டுந்தான் கணங்களிருக்குமென்றும், சில தோடங்களுக்குப் பரிகாரமே யில்லையென்றும் கூறுகின்ற சம்பிரதாயிகள்போல காலத்திற்கேற்க வெவ்வேறு கிரகங்களையும் கிரியா சாந்திகளையும் அநுட்டித்தும் வருகின்றார்கள்.

தரும தேவதைகள் தவப்பிரமாக்க ளுற்பவம்

வெண்டாமரைப்பூவில் வாசனுகிய பிரமதேவன் உலகங்களை யெல்லாஞ் சிருட்டிக்க நினைத்தகாலத்தில், முதற் பிரமனுகிய சதுர்முகன் நேத்திரத்தினின்று மரீசிமுனிவரும், இருதயத்திலிருந்து பிருகு மகாமுனிவரும், சிரசிலிருந்து ஆங்கீரசமகாமுனிவரும், உபானவாயுவிலிருந்து புலத்திய மகாமுனிவரும், விகாயகவாயுவிலிருந்து புலகமகாமுனியும், அபானவாயுவிலிருந்து கிருதுமுனிவரும், பிராணவாயுவிலிருந்து தக்கனும், சோத்திரத்திலிருந்து அத்திரிமகாமுனிவரும், சமானவாயுவினிடத்திலிருந்து வசிட்டரும் பிறந்தனர். இவர்கள் வேதாதிசாத்திர சம்பந்திகளாய் யாவரும் புகழும்படி பிரமனல் வேண்டிய சித்திகளையடைந்து நவப்பிரமாக்களெனப் பெற்றனர். இவருள் அத்திரி, ஆங்கீரசன், வசிட்டன், புலத்தியன் இவர்களை சத்தமுனிவ ருள்ளிட்டாராகக் கூறுவர். இப்பால் அப்பிரமன் சங்கற்பத்திலிருந்து தருமதேவதைக ளுண்

டாயின. இத்தரும தேவதைகளே சர்வாதிகாரமாக லோகபரிபாலனம் பண்ணுவதாம்.

மசான உருத்திரர் உற்பவம்

மசானருத்திரர் என்பவர்கள் மேகராச்சிய பட்டினத்தில் மூன்றுவது பவநாதாரமான வச்சிராங்கபுரியில் உத்தராமிசமாக உற்பவித்து மஞ்சனகாந்திமயமாய், பீகாகாரமானதேக முடையவர்களாய், அனேகவீரர்கள், பூதவேதாளர் முதலியவர்களோடும் பூலோகத்தில் வீரகல்லிய ரூபத்தோடு பதிபூசைகொண்டு வீற்றிருப்பவர்.

அச்சரர் உற்பவம்

மேற்படி பட்டினத்தில் நான்காவது வயித்துதகபுரியில், தேவேந்திரனுல் சிருட்டிக்கப்பட்டு, அவன் ஏவலினுல் ஆயுதம், அக்கினி, சலம், போர், வைராக்கியம் இவைகளால் உயிர்நீங்க, அவர்களைத் தேவகன்னியர்சூழ மணிமய விமானத்திலேற்றி வீரசுவர்க்கஞ் சேர்ப்பித்து, பூலோகவாசமுற்று இந்திரசேவிவர்களாய் வீற்றிருப்பவர்கள்.

சத்த கன்னியர் உற்பவம்

சத்தகன்னிகளாவார் :—பிராமி, மகேசுரி, கௌமாரி, வைணவி, வராகி, மகேந்திரி, சாமுண்டி என்னும் ஏழுமாதர்களுமாம். இவர்கள் முறையே சரசுவதி, பார்வதி, மாரி, திருமகள், வராகி, இந்திராணி, காளி என்பவராவர். இவர்களைக் கன்னியர்க ளென்பதென்ன வெனில், இவர்கள் சத்திபேத மூர்த்தங்களாதலால் என்க. இவர்கள் பெயர், தங்கள் தங்கள் பதிகளின் திருநாமத்தாலேயே பெறப்பட்டன. அதாவது:

1 பிரமன்	மனைவி	பிராமி	5 உருத்திரன்	மனைவி	வராகி
2 மகேச்சுரன்	,,	மகேச்சுரி	6 இந்திரன்	,,	மகேந்திரி
3 குமரன்	,,	கௌமாரி	7 சண்டன்	,,	சண்டி
4 விஷ்ணு	,,	வைஷ்ணவி	என்பனவாம்.		

" பயிறரு முதுமறை நூலைத் தெரிந்தவள்
பகைதொரு திரிபுர மூளச் சிரித்தவள்
பனிவரை பகநெடு வேலைப் பணித்தவள்
படுகடல் புகையெழ வார்விற் குனித்தவள்

எயில்கொ டுழுதெழு பாரைப் பெயர்த்தவள்
எறிதரு குலிசம் விடாம்ற் றரித்தவள்
இடுபலி கொளுமோர் கபாலக் கரத்தின
ளெனுமிவ ரெழுவர்க டாளைப் பழிச்சுதும். "

என்னும் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கால் உணர்க. இச் சத்தமாதர்கள் சரிதங்களை ஆங்காங்கு வந்துழி காண்க.

மூப்பத்து மூக்கோடி தேவர்கள் உற்பவம்

சூரியர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் ஆகமூப்பத்து மூவரும் வகை ஒன்றுக்குக் கோடியாக மூப்பத்து மூக்கோடி தேவர்கள் எனப்பட்டனர். இவர்கள் பிரமசந்ததியாரான காசிபமுனிவர் பாரியராகிய திதி, அதிதி என்பவருள் அதிதியினிடம் பிறந்தவர்கள். இவர்களினின்றே அநேக தேவமுனிவர்க ளுற்பத்தியாயினர்.

அக்கினிதேவர் உற்பவம்

வன்னி என்னும் அக்கினிகடவுள் உலக அபிவிர்த்தியின் பொருட்டு, பிரமதேவனுக்கு முதற்குமாரனாக உற்பவிக்கப்பட்டவன். இவன் மனைவியின் பெயர் சுவாகையென்பர். இவ்வக்கினிதேவன் பஞ்சபூதங்க ளுற்பவித்த காலத்திலேயே, ஆதிபிரமனிடம் தோன்றினானும், சூரிய சந்திராதி சருவகாரண கருத்தாக்களுக்கும் காரணபூதமாயிருந்து எல்லாத்தொழிற்களையு முடியச் செய்பவன். இவனுக்குத் தன்மனைவியிடமாகப் பாவகன், பாவமானன், சுசி என்னும் மூன்று குமாரர்கள் பிறந்தனர். அவருள் பாவமானன் - தீக்கடைகோலில் தோன்றும் அக்கினியும், பாவகன் - மின்னலிற்றோன்றும் அக்கினியும், சுசி - வடவையினின்றும் தோன்றும் அக்கினியுமாம். இம்மூவரும் தனித்தனி பதினைந்து புத்திரர்களைப் பெற்று வன்னியோடு நாற்பத்தொன்பது பேராக விளங்குவர்.

இவருள் பாவகனுக்கு அவ்வியவாகன் தோன்றி தேவர்களுக்கு அக்கினியாகவும், பாவமானனுக்கு கவ்வியவாகன் தோன்றி தென் புலத்தாருக்கு அக்கினியாகவும், சுசிக்கு சகரக்கன் உற்பவித்து இராட்சசர்களுக்கு அக்கினியாகவும் விளங்குவர்.

பிதிரர்கள் உற்பவம்

உலக சிருட்டி காலத்திலேயே சரசுவதி மணாளனாகிய சதுர் முகக்கடவுளிடத்தில் சங்கற்பரூபத்தால் இரண்டு புத்திரர்கள் உற்

பவித்தார்கள். அவர்கள் பெயர் அக்கினிச்சுவத்தன், வருகிடதன் என்பவர். இவர்களை முறையே அக்கிஷவர்த்தன், பர்ஹிதன் என வடநூற் கூறுகின்றது. இவருள் அக்கினிச்சுவத்தன் தேவப்பிதிரனும், வருகிடதன் மானிடப்பிதிரனும் என்க. இவற்றில் அக்கினிசுவத்தன் யாகஞ்செய்தவனும், வருடகிதன் யாகஞ் செய்யாதவனுமாம். இவ்விருவர்களோடு சவுமியன் என்னும் ஒருவகைப் பிதிரர்களையுங் கூட்டி பிதிரர்கள் மூவகையினரென்பர்.

இவ்விருபிதிரர்களும் சுவதை என்பவளைப் புணர்ந்து மேனை வைதரணி என்னும் இரண்டு புத்திரிகளைப் பெற்றனர். இவருள் மேனையென்பார் மலையரையனைத் தழுவி மந்தரன், பார்வதி முதலிய வரைப் பெற்றனர். இதனைச் சந்தகிகாண்க.

சேடன் முதலிய நாகராசர் உற்பவம்

பிரமபுத்திரனாகிய தக்கன் குமாரத்திகளும் காசிப முனிவர் பாரியர்களுமாகிய விநதை, கத்துருவை யென்னுமிரண்டு பெண்களிருந்தனர். இவர்களிருவரும் புத்திரப்பேறில்லாமல் கந்தமாதன கிரியைச்சேர்ந்து தங்கள் கணவனாகிய காசிபமுனிவரை நோக்கித் தவஞ்செய்தனர். அத்தவத்தை மகிழ்ந்து காசிபமுனிவர் கண்ணுக்குத்தோன்றி, "ஏ பெண்ணே! யாதுகாரணமாகத் தவம் புரிகின்றீர்க" ளென்று கேட்க, விந்தையென்பாள் 'எனது அரிய இறைவரே! யான் மிக்க வல்லமையுடைய இரண்டு புத்திரர்களைப் பெற்று சிறப்படைய வரம்புரியவேண்டு" மென்று கேட்டனள். கத்துரு வென்பாளும் அப்படியே நூற்றுநான்கு குமாரர்களையும், ஒரு குமாரத்தியையும் பெறக்கேட்டனள். இவ்விருவர் கருத்தையு முணர்ந்து ஒரு புத்திரகாமேட்டி யாகஞ்செய்து அதிலுண்டான பிண்டத்தை இருவருக்கு மளித்து பழயபடியே கந்தமாதன கிரியையடைந்து தவத்திலிருந்தனர்.

இப்பால் அம்மாதர்கள் பிண்டத்தைப்பெற்று தாங்கள் கோரிய படி விநதை இரண்டு முட்டைகளையும், கத்துரு நூற்றைந்து முட்டைகளையும் பெற்றனர். இம்முட்டைகள் ஐந்நூறு வருடஞ் சென்று விரிந்தன; அதினின்று ஆதிசேடன் முதலிய நூற்றுநான்குபேரும், சலர்க்கரையென்னும் பெண்ணும் தோன்றினர்.

சூரியன் இரத்சாரதி அல்லது அருணனுற்பவம்

விநதை யென்பாள் கத்துருவை நூற்று ஐந்து புத்திரரோடு சுகித்திருப்பதை நோக்கி மனம்பொறாது, 'ஐயோ! நமது முட்டைகளின்னு மலராதிருப்ப தென்' னென்று விசனப்பட்டு ஓர் முட்டையையுடைத்தாள். அதினின்று எல்லா அவயவங்களும் பொருந்தி காலொன்றில்லாத ஒருவன் தோன்றி வணங்கி, "அன்னையே! மகா வல்லமையோடுகூடிய என்னை ஆத்திரத்தால் முட்டையை யுடைத்து முடவனென்னும் இழிபெயரை உண்டாக்கினையே! நீ இவ்வாறு செய்ததால் உன் இளையவளாகிய கத்துருவைக்கு அடிமையாகக் கடவாய்" என்று சாபமிட்டுப் பின்னர், அன்னை வருந்துவதை யுணர்ந்து, "அன்னையே! என் கோபத்தால் சபித்தேனுபினும், இச்சாபம் நீங்குவ தெப்போதெனில், இதோ மற்றொரு முட்டையிருக்கின்றதே; அதையும் ஆத்திரப்பட் டுடைக்காதே; அதினுள் ஒரு மகா வல்லமை யோடு கூடிய ஒரு புருடன் தோன்றுவன். அவனால் நீ கத்துருவையின் அடிமைத்தனம் நீங்கிச் சுகித்திருப்பா" யென்று கூறி யிருந்தனன். இதனை விநதை யென்பாளறிந்து, மைந்தன் சாபத்தைப் புத்திரவாஞ்சையால் சந்தோடித்து அவனுக்கு அருணனெனப் பெயரளித்து அரும் புகழோடும் வளர்த்து வருவாளாயினள். இவ்வாறு அருணன் மகா பராக்கிரமசாலியா யிருப்பதை சூரியபகவானுணர்ந்து வந்து, ஓ அருணு! எனது இரதத்தையும், சத்தமா யென்னும் குதிரையையும் நடத்த தேர்ப்பாகனாக வரவேண்டுமென்ன, அதற்கு அருணன் இசைந்து தாயிடம் விடைபெற்றுச்சென்று, இன்றும் சூரியபகவானுக்கு இரதசாரதியாக யிருக்கின்றனன்.

நட்சத்திரங்களுற்பவம்

பிரமனது வலதுகால் பெருவிரலிற் றோன்றிய தக்கன், வைதரணியென்பவனை மணந்து முதலில் ஆயிரம் மக்களை யீன்றனன். அவர்கள் வேதநெறியைக் கடைப்பிடித்து தவவிரதிகளாய் மோட்சபதமடைந்தனர். அதனால் பின்னரும் வைதரணியைக்கூடி ஐம்பது பெண்களைப்பெற்று, கிரத்தி, இலக்குமி, துருதி, மேதா, புட்டி, சிரத்தை, கிரியை, விருத்தி, இலச்சை, மதி என்னும் பத்து பெண்களைத் தருமனென்னும் மனுவுக்கும், அசுவனி முதல் இரேவதியீறான இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும், அதிதி, திதி, தனு, காலை, ஆயு, சிங்குகை, மனு, சுரபி, முனி, குரோதை, வசை, அதுகை,

அநுதை என்னும் பதின்மூன்று பெண்களைக் காசிபமுனிவருக்கும் மணஞ்செய்து கொடுத்தான். இவ்வைம்பதின்மருள் சந்திரன் மனைவியர்களாகிய அசுவனி முதலிய இருபத்தேழு பெண்களும், தங்கள் கற்பு நெறியாலும், தந்தை முதலினோர் அதற்கிசை வரத்தாலும், தங்கள் நாயகனாகிய சந்திரன் வசிக்கும் மண்டலத்திற்குச் சார்பாக நட்சத்திர மண்டலமென வசிக்கின்றனர். இவர்களை நட்சத்திரங்கள் என கணிதநூலோர் அண்டபிண்ட சராசர லட்சணங்களைக் கணிக்கின்றனர். அந்நட்சத்திரங்களின் கிருத்தியாகிருத்திய பாகுபாடுகளைச் சாத்திரம் ஆறினுள் ஒன்றான சோதிட சாத்திரத்துள் பரக்கக்காணலாம். இந்நட்சத்திரங்களை நட்சத்திர மண்டலத்தில் காணும்வகை யெப்படியெனில்,

நட்சத்திரங்களைக் காணும் வகை

அசுவனி	குதிரைத்தலைபோல	6-நட்சத்திரங்களாயும்	
பரணி	அடுப்புபோல	3	,,
கார்த்திகை	கைத்தலம்போல	6	,,
உரோகணி	ஊற்றுரல்போல	12	,,
மிருகசீரிடம்	தேங்காய்க்கண்போல	3	,,
ஆதிரை	ஒருமணிபோல	1	,,
புனர்பூசம்	புடலம்பூப்போல	1	,,
ஆயிலியம் சதையம்	அம்மிபோல	4	,,
மகம்	முடனுகம்போல	4	,,
பூரட்டாதி பூரம் உத்திரட் உத்திரம்	கட்டில்போல	4	,,
அத்தம்		பல	,,
சித்திரை	புலிக்கண்போல	2	,,
சோதி		1	,,
விசாகம்	துறவுபோல	6	,,
அனுடம்	முடப்பனைபோல	4	,,
கேட்டை	ஈட்டிபோல	4	,,
மூலம்	எக்காளம்போல	7	,,

பூராடம் உத்திராடம்	தோப்பைபோல்	பல	,,
திருவோணம்	உழக்கோல்போல	2	,,
அவிட்டம்		12	,,
இரேவதி	நாவாயைப்போல		,,

இவ்வாறு தோன்றும்; பகலிலும் இரவிலும் நன்றுயறியலாம். ஆனல், மப்பு, மழை இவைகளாற் சிலபாகம் தோன்றுமலு மிருக்கும்; என்றுலும், கடையான சில நட்சத்திரங்கள் நன்றுகத் தோன்றுவது கடினமாம்.

நவக்கிரக உற்பவம்

நவக்கிரகமென்பன:—சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்று கூறும் ஒன்பதுமாம். இவைகளி னுற்பத்தியைப் பலவாருக சாத்திரங்கள் கூறுகின்றன. ஆயினும் சோதிட சாத்திரங்களுள்ளே பிரதானமாகக் கொண்டுள்ள வாறு எப்படியெனில்,

"இரவிசங்கர னீச்சுரி திங்கள்சேய்
இனியகந்த னிசைகிரு மால்புதன்
குருவயன்சுரர் கோன்வெள்ளி சுன்னெமன்
குலவிராகுக் குறிப்பத்ர காளியாம்
மருவுசித்திரா புத்திரன் கேதுவாம்
வானவர்முனி வோராசி மற்றுநா
ளரிமுதற் கிரகத்தர் பரமசிவ
னண்டபிண்டம் படைத்தளித் தாற்றுமே"

—வீமேசுரருள்ள முடையான்.

என்று கூறியபடி சிவபெருமானே சூரியனுகவும்; உமையம் மையாரே சந்திரனுகவும், சிவசுப்பிரமணியக்கடவுளே அங்காரக னுகவும், திருமாலே புதனுகவும், பிரமதேவனே குருவாகவும், இந்திரனே சுக்கிரனுகவும், எமதருமராசனே சனியாகவும், பத்திரகாளியே இராகுவாகவும், சித்திராபுத்திரனே கேதுவாகவும் இருப்பதாகத் தெரிகிறது. சில சோதிட நூல்களிலே அத்தேவர்களமிசங்களே நவக்கிரகங்களாயினவென்று கூறுகின்றன. இதன்றி, தூமாதி பஞ்சக்கிரகங்களுஞ் சொல்லப்படுகின்றன.

திக்குப்பாலகர் உற்பவம்

முதலாவது இந்திரன்

இவன் கிழக்குத் திசைக்குத் தேவன்; இவன் ஒருகால் இராவணன் மகனுகிய மேகநாதனுலே செயிக்கப்பட்டு, குதிரையின் காலில் கட்டுபட்டான். அன்றியும், கௌதம ரிஷியின் மனைவியாகிய அகலிகைபால் மோகங்கொண்டுசென்று அம்மாதினே கௌதமரைப் போல வடிவுபூண்டு வலிகிற்புணர்ந்து பூனையுருவம் புனேந்து ஓடி வரும்போது, கௌதமருடைய சாபத்தினுல் இவனுக்கு ஆயிரம் யோனிக் கண்களுண்டாயின. இவனுக்குப்பத்தினி, இந்திராணி; வாகனம், வெள்ளே யானே; பட்டணம், அமராவதியென்று சொல்லப்படும்.

இரண்டாவது அக்கினி

இவன் தென்கிழக்குத் தேவன். காசிப்பபிரமாவின் குமாரன். இவனுக்குக் குறி புகை. முன்னெருகாலத்தில் பிருகுமுனிவர்மனைவியாகிய பிரிசுவையைக் காக்காதபடியினுலே அம்முனிவர் இவ்வக்கினி தேவனே 'சருவத்தையும் சாப்பிடக்கடவா' யென்று சபித்தார். உடனே பிரமதேவன் 'நீ யெதைப் புசித்தபோதிலும் சுத்தமாகக் கடவ' தென்று வரமளித்தார். இவனுக்கு மனைவி சுவாகாதேவி; வாகனம், ஆட்டுக்கடா; பட்டணம், தேயோவதி.

மூன்றுவது எமதேவன்

இவன் தென்திசைக்குத் தேவன். இவனுக்குக் குறி, சீயம் சிவந்த கண்ணும், பச்சைநிறமும், காவிவேட்டி தரித்திருக்கப்பட்ட தேகமுமாகிய இவனது உருவத்தால் மூவுலகத்தோரையும் பயப்படுத்தி மரணமுண்டாக்கி, மரித்தவர்களே நியாயம் விசாரித்து, நன்மை தீமைகளுக்குத் தக்க பலனைக் கொடுக்கிறன். இவனுடைய கணக்கப்பிள்ளே சித்திரகுத்தன். இவன் மனிதர்களுடைய நடவடிக்கைகளே யெல்லாம் எழுதுகிறவன். ஏமனது மனைவி, சாமளே; வாகனம், எருமைக்கடா; பட்டணம், சமனுவதி.

நான்காவது நிருதிதேவன்

இவன் தென்மேற்குத் திசைக்குத் தேவன். இவனுக்குக் குறி, நாய். இவன் பேய்களுக்கு இராசா; மனைவி, துர்க்கை; வாகனம், தண்மை; பட்டணம், இரட்சோவதி.

ஐந்தாவது வருணதேவன்

இவன் மேற்குத் திசைக்குத்தேவன். புனலுக்கு அரசன். இவனுக்கு குறி, யிடபம். இவனது நாடாகிய வருணலோகத்தில் சிற்றின்பம் தவிர வேறொன்றுமில்லை. முன்ன மொருகால் இவ்வருணலோகத்தில் நேமியென்கிற அரசன் தனக்காகச் சில காரியங்களைச் செய்ய வசிட்டரை அழைப்பித்தான். அத்தருணத்தில் வசிட்டருக்கு வேறு சில வேலைகளிருந்தமையால் போகாமல் நின்று விட்டார். அப்போது நேமியரசன் மற்றொரு ஆசானைக்கொண்டு தன் காரியங்களை நடத்திக்கொண்டிருப்பதை வசிட்டர் அறிந்து அவனுச்சென்று அரசனைச் சாம்பலாகும்படிச் சபித்தார். உடனே அரசன் மரிக்கும் போது வசிட்டரைச் சாம்பலாகும்படி மறுசாபங் கொடுத்தான். அப்போது வசிட்டருடைய ஆன்மா பிரமனிடத்திற்போய், "நான் மறுபடியும் உடலெடுத்துச் சென்மிக்கிறது எப்படி" யென்றுகேட்க, பிரமன் வருணதேவனிடத்திலும் சூரியபகவானிடத்திலும் போவையாகில் புனிதமாகிய சென்மமெடுப்பாயென்று புகல, அத்தப்படியே அந்த ஆன்மா வருணனைத் தேடிப்போகையில், தேவலோகத்தில் ஆடிக்கொண்டிருந்த ஊர்வசி யென்பவளைச் சூரியன் அபேட்சித்து மோகத்தினால் அவளைத் தன்னிடம் வரும்படியழைக்க, அவளும் அவ்வண்ணமே வருகையில், மார்க்கத்தில் கண்ட வருணதேவனும் மோகித்தான். இவ்விருவருடைய மோகத்தினாலே * அகத்திய ரென்கிற முனிவரும், வசிட்டரென்கிற முனிவரும் பிறந்தார்கள். மேற்சொன்ன வருணன் மனைவி, காளிகை; வாகனம், முதலை; பட்டணம், சுத்தாவதி.

ஆறுவது வாயுதேவன்

இவன் வடமேற்குத் திசைக்குத் தேவன். இவனுக்கு குறி கழுதை. இவன் காற்றுகளுக்குத் தேவனும், தேவர்களுக்குத் தூதனுமானவன். இவன் தாயாகிய அதிதி, இவன் இந்திரனிலும் வல்லவனை இருக்கவேண்டுமென்று கோரினபடியே வரம்பெற்றான். இந்திரன் இதைக்கேட்டு அதிதி கருப்பத்திற் பிரவேசித்துச் சிசுவை ஏழுபங்காக்கி, அந்த ஏழுபங்கினையும் ஒவ்வொருபங்கையும் ஏழு பிரி

* அகஸ்தியருடைய உற்பத்தி இன்னும் வேறு விதங்களாகவும் புராணங்களிற் கூறுகின்றமையால், இங்ஙனம் கூறியதே முதற்பிறவி யென்று நாம் ஸ்தாபிக்கவில்லை.

வாக்கினன். அதனல் வாயுதேவனுக்கு ஈற்பத்தொன்பது உருக்க ளாம். இவ்வாயுபகவான் கேசரியென்கிற மந்திரியின் மனைவியாகிய அஞ்சனை தேவியுடன் விபசாரஞ் செய்தபடியால், அனுமந்தன் பிறந் தான். ஆதலால், இவனுக்கு மனைவி, அஞ்சனைதேவி; வாகனம், கிளை மான்; பட்டணம், கந்தாவதி.

ஏழாவது குபேரதேவன்

இவன் வடக்குத் திசைக்குத் தேவன்; இவனுக்குக் குறி, யானை. இவன் நிரவியக் குப்பைகளுக் கதிபதி; இவனது மனைவி, சித்திர ரேகை; வாகனம், குதிரை; பட்டணம், அளகாபுரி.

எட்டாவது ஈசானதேவன்

இவன் வடகிழக்குத் தேவன்; இவனுக்குக் குறி, காகம்; இவன் மனைவி, பார்வதி; வாகனம், இடபம்; பட்டணம், கைலாசகிரி.

மன்மதனுற்பவம்

மேற்றிசையில் வளம் பொருந்திய பப்பிர தேசத்துக் கடுத்த பகவதியென்னும் கிராமத்தில் தபவனனென்றோர் பிராமணன் நான்கு வேதங்களையுங் கற்றுத்தேர்ந்து, இல்லறமநுட்டித்துச் சில னுகி சதா வேதபாராயணஞ் செய்துவருகிற காலத்தில், குலத்தைக் கெடுக்கப்பிறந்த கோட்டானைப்போலவும், கதிர்பிறந்து கரும்பின் மதுரத்தைக் கெடுப்பதைப்போலவும், இப்பிராமணருக்கு ஒரு புத் திரன் பிறந்து செல்வமாய் வளர்ந்து யௌவன திசையை யடைந் தும், தமது குலமரபின் ஆசாரம் காயத்திரி மந்திரம் வேதமோது தல் முதலாகிய வைதீக நன்மார்க்கங்கள் யாவற்றையும் ஒழித்து காமக் குரோத போக மோக மதமாச்சரியங்களாகிய துன்மார்க்கத் தின் வழிநடந்து கொலை களவு காமம் பொய்யென்னும் பஞ்சமா பாதகங்களையுஞ் செய்துகொண்டும், அழகிய பெண்ணைக் காணில் மோகாந்தகாரனுகி விடாது பின்தொடர்ந்தும் புணருவதாய் சிற்றின் பத்தில் தானே காலங் கழிப்பதால், இவனுக்கு அசித்தனென்று பேருண்டாகியது. அன்றி, இவனுக்குத் திருடுவதே தொழில். இவ்வண்ணமாக இவன் அற்பதொழிலுக் குடன்பட்டு நாளைப்போக் கிக்கொண்டு வருகிறகாலத்தில் தந்தையாகிய தபனன் புதல்வனை யழைத்து வேண்டுமான புத்தி மதிகளைச் சொல்லித் தன் மரபில்

உத்தமியாகிய கன்னிகையை பேசி மணஞ்செய்வித்தான். பின்பு அம்மங்கையினிடமேனும் அன்பு பாராட்டி தருமந் தப்பாமல் கருமங்களை நடாத்தி உத்தமனுகாமல், முன்னிருந்ததைப் பார்க்கிலும் எண்மடங் கதிக துட்டகிருத்தியங்களில் முயன்றிருப்பதைக் கண்டு, தாயுந் தந்தையும் வெறுப்புற்றார்கள். இவ்வண்ணமே அவ்வூரி லுள்ளோ ரனைவரும் இவனைப் பரம துட்டனென்று வையும்படியாக இருக்கிறபோது, அவ்வூரில் இந்த அசித்தனுக்கு கிருட்டுப் பலியாதா தால், ஒருநாளிரவில் தன்னூரைவிட்டுத் தாக்கிகமென்னும் மாநகரத்தை நோக்கித் திருடுவதற்காகப் போகிறபோது, கரைபுரண்டு பெருக்கெடுத்து ஓடும்நதி குறுக்கிட, அதனைக்கண்டு பயமின்றி அந்த நடுராத்திரியில் பொருளாசையினால் அதிலிறங்கி நீந்திக்கொண்டே அக்கரையிலிருக்கும் தாக்கிகமாநகரத்தரசன் சங்கரீசனன் என்னும் பிராமணன் அரண்மனைக்குட் சென்று, இந்த அசித்தன் வேண்டிய மட்டும் பொருளெத்திருடி மூட்டைகட்டித் தலைமீதெடுத்துச்கொண்டு அரண்மனையைக் கடந்து ஓடிவருகிறபோது, மார்க்கத்தில் தலையாரிகள் கண்டு இவனைப் பிடித்துப் பின்கட்டுக்கட்டி பலவிதங்களாகப் புடைத்துக்கொண்டு போய்ச் சிறையில்வைத்துப் போனார்கள். பின்பு இந்த அசித்தன் சிறையிலிருந்துகொண்டு பலபல விதங்களாக மனது கலங்கித் துக்கித்து, ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தான். பொழுது விடிந்தவுடன் தலையாரிகள் இவனைக் கொண்டுபோய் இராசசமுகஞ் சேர்த்து, இவன் திருடின சொத்துக்களை யெல்லாம் எடுத்துக்காட்டி, அரசனுக்குத் தெரியப்படுத்தினார்கள். இதைக் கேட்டு அரசன் சினமிகுந்து கள்ளனைப் பார்த்து, விசாரணைசெய்து, இவன் மார்பிற்புரளும் மூப்புரி நூலைக்கண்டு, தான் பிராமணனுதலால், சாதியபிமானம் வைத்ததன்றியும், 'குற்றஞ்செய்தவனுகக் காணப்படினும், பிராமணனைத் தண்டனை செய்யலாகாது' என்று அநேக நூல்கள் கூறுவதாலும், அரசன் இவன்செய்த பிழையைப் பொறுத்து, இவனைச் சமீபத்தில் லழைத்து உட்காரவைத்துக்கொண்டு, "நான் சொல்லும்படியான நீதியைக் கவனித்துக் கேட்கக்கடவாய்! அது யாதெனில்? பிரமகுலத்தின் பெருமையும், வைதீக தருமத்தின் அருமையாகிய சுசி ஆசார முதலான நல்லொழுக்கத்தையும் நீக்கி, இவைக்கு மாறுக விளங்கும் சீவயிம்சை செய்துண்பது, கள்குடிப்பது, களவுசெய்வது, பிறர்மனைவியைப் புணர்வது, பொய்பேசித் திரிவது இவ்வைந்தொழிலையும் விடாதுபற்றி வீண் காலங்கழித்து

உலகத்துக்குக் கொடியவனுகித் திரிவது நமது மேலாகிய பிரமகுலத்துக்குத் தகாது. ஆகையால், இந்த ஐந்து கெட்ட செய்கைகளை விட்டு இன்று முதலாக நமது குலத்துக்குரியவைகளை அனுட்டித்து வருவா" யென்று சில நீதிகளைக் கூறினன்.

இவ்வண்ணம் அரசனுரைத்த நீதிமார்க்கங்களைக் கேட்டு சிற்றின்பத்தில் பற்றுடைய அசித்தன் வெற்றிவேலைத் தாங்கிய அரசனை நோக்கி, "ஓ மகாராசனே! பரஸ்திரி கமனம் ஒன்று தவிர, மற்ற நான்கையும் விட்டொழிக்க என்னுலாகும்; பெண்களைக்கண்டு அவர்களைச் சேராமல் என்மனம் சகியாது. பிராணனும் நில்லாது" என்றும், "மங்கையர்கள் கச்சைக்குள்ளிருக்கும் கொங்கையை யான் காண்பேனுகில், என்தேகம் இத்தன்மையா யிருக்கிறதென்பதை யறியாமல் மறந்துவிடுகிறேன். ஆதலால், பெண்கள் மோகத்தை யொழிக்க என்னுலாகா" தென் றியம்பினன்.

இதைக்கேட்டு அரசன் மிகவும் விசனப்பட்டு, "ஓ அசித்தனே! இதற்கோ ருபாயஞ் சொல்லுகிறேன்; அந்தப்படியாகிலும் நீ நடந்து கொள்வையாகில் புனிதனுவாய். அதென்னெனில், நினது மனைவியின் கொங்கையைப் பீடமாகவும், அதின் காம்பைச் சிவலிங்கமாகவும் கருதி, அந்த லிங்கத்திற்கு அபிடேகஞ்செய்து, ஆடையுடுத்தி, வாசனைத் திரவியங்களைப்பூசி, மலர்மாலைசூட்டி, பலவித மலர்களால் அருச்சித்து, தூப தீப நைவேத்தியமீந்து, வலம்வந்து பணிந்து, அருள் தரவேண்டும் ஈசனே! யென்று தினந்தோறும் போற்றித் துதிசெய்துகொண்டு கூடி மகிழ்வையாகில், உனக்குச் சீக்கிரமே சிவபெருமானது கிருபையுண்டாகு" மெனச் சொல்லி, மிகுந்த திரவியமும் ஆடையா பரணங்களுந் தந்து அனுப்ப, அசித்தனும் அரசனிடம் விடைபெற்று, ஆடையாபரண திரவியங்களை ஒட்டகத்தின் மேற் போட்டுக்கொண்டு தன்னூரைச்சேர்ந்து, வீட்டையடைந்து, பொருள் முதலியதுகளையும் பத்திரப்படுத்தி யிருக்கிறபோது, மனைவி வந்தாள்; அவளைக்கண்டவுடன் கோபமீறி, பிராமணன் அரசன் சொல்லியபடி மனையியின் கொங்கையைப் பீடமாகவும், அதின் நுனியிலிருக்கும் காம்பைச் சிவலிங்கமாகவும் எண்ணி, அதற்கு அபிடேகம் பூசை தூபதீப நைவேத்தியங்கள் முதலான வைகளுஞ் செய்து தோத்திரம் புரிந்து, உடனே அவளைப் புணர்வா

னன்றி, அன்றுமுதல் மதுமாமிச புட்சணங்கள் முதலாகிய கெட்ட விடயங்களையொழித்து காலங்கழித்து வந்தான்.

இந்தப்படியாக அசித்தன் தினமும் தன் மனைவியின் கொங்கையை ஆசித்து நேசித்துச் சிவலிங்கமாக விசுவாசித்துப் பூசித்து வந்தபடியால், பத்திமுதிர்ந்து பாவம் நசித்துப் புண்ணியம் அதிகரித்தது. அதாவது தாமதகுணத்திற் கீடாகிய இரக்த மாமிசங்கள் திருமால் பாகமாகியதால், இவன் பூசைசெய்து வந்ததுள் இடபேதம் பலத்தின்கூறே திருமாலின் திருவுள்ளத்தில் பஞ்சரமானன். உடனே அசித்தன் திருத்துழாய் மாலையணிந்து பாற்கடலில் ஆதிசேடன்மீது யோகநித்திரை செய்யும் திருமாலின் சித்தத்திலிருந்து எவ்வர்னமுடைய சருவலட்சணத்தோடும் கூடி, மறுபடியும் சென்மமெடுத்தபடியினாலே இவனுக்கு சித்தசன் என்ற திருநாமம் புகன்று, தென்றல் காற்றைத் தேராகவும், அதில் மச்சக்கொடியும் விளங்க, கரும்புவில்லும், ஐந்து புட்பபாணமும், மதிக்குடையும் கொடுத்து, உலகெங்கும் சஞ்சரிக்கும்படி மாயவனருள் புரிந்தார். அந்தப்படியே மன்மதன் சஞ்சரித்துக்கொண்டு புருடர்கள்மீதும் வனிதைகள்மீதும் மலர்க்கணைகளை ஏவிக் காமதத்தை யுண்டாக்கிச் சகிக்கமுடியாத விரகதாப மூண்டாகச் செய்துகொண்டிருந்தான். இவனுக்கு மன்மதன் என்று பெயர்.

இரதி உற்பவம்

ஸ்ரீ கைலாசபதியாகிய சிவபெருமான் இடப்பாகத் தமர்ந்தொளிரும் பார்வதாதேவியான நமதன்னை ஒருநாள் தனது தோழிகளுடன் கூடிக் கலியாண மண்டபத்தின் சித்திரங்களைப் பார்க்கக் கருதிச் சென்று, வழியிலிருக்கும் பூங்காவனத்தில் சிறிதுநேரம் விளையாடி, அன்னத்தைப்போலநடந்து வேடிக்கையும் அழகு வாய்ந்த மண்டபத்தினுள் பிரவேசித்து, முத்து, கோமேதகம், வைரம், புட்பராகம், நீலம், வைடூரியம், பச்சை, கொம்பு, மாணிக்கம் என்று சொல்லப்பட்ட நவரத்தினங்களையும் பொருத்தித் தங்கத்தினாலிழைத்து மகாவுன்னதமாகவும் சித்திர விசித்திரமாகவும், காந்தமானது ஊசியைக் கவர்வதுபோல பார்ப்பவர்கள் மனதைக்கிரகிக்கத் தக்கதாயும் விளங்கும் அம்மண்டபத்தின் அலங்காரத்தைப் பார்த்துக்கொண்டே வருகிறபோது, அங்கு வசித்திருக்கும் நிலைக்கண்ணாடியினிடமாக

மின்னற்கொடியைப் போல பிரதி பிம்பங் காணப்பட்டபடியால், பார்வதி பிரமித்து, சற்றுநேரம் நிதானித்து மறுபடியும் அந்தக் கண்ணாடியைப் பார்க்கத் தன்னுடைய ரூபமென்றெண்ணித் தன் வடிவழகைத் தானே அம்மட்டிற் காணுதவளாகையால், மறுபடியும் கண்ணாடிமுன்னின்று தன்னுடைய சௌந்தரியத்தைத் தானேபார்த்து மோகித்துத் தனக்கு நிகரான சுந்தரவதிகளில்லையென்று இருமாப்படைந்திருப்பதைச் சிவபெருமான் அறிந்து, பார்வதியின் கருவத்தையடக்கும்படி மனதில் நினைத்தார். உடனே சாமுத்திரிகா லட்சணத்திற் சொல்லியவண்ணம் உரூபரேகை சௌந்தரியங்கள் பார்வதியைப்போல அமைந்தபெண்ணொருத்தி உதித்துப், பார்வதியின் முன்வந்து பணிந்து எழுந்து நின்றனள். அப்பெண்ணைப் பார்த்து 'இது வென்ன ஆச்சரியம்' நமக்கு நிகரான லட்சணம்வாய்ந்த பெண்கள் உலகத்தில் கிடையாதென்று அகமடைந்த உடனே நம்மைப் பங்கப்படுத்தும் நிமித்தம் சகல லட்சணமும்வாய்ந்த இப்பெண்ணுதித்தனள். "இது சிவத்தின் செயலன்றி வேறில்லை" யென்று பயமும் அச்சமும் நாணமுமடைந்தவளாகி, சித்திர விசித்திரமாகிய கலியாண மண்டபத்தைவிட்டு அப்பெண்ணை யழைத்துக்கொண்டு சந்திரசேகரரிடம் வந்து பணிந்து நடந்த உண்மை சொல்லி, "எம தாண்டவனே! அடியாள் கருதிய பிழையை மன்னித்து காக்க வேண்டு" மென்று வருந்தவும், கங்காதரமூர்த்தியானவர் புன்னகை புரிந்து பார்வதியை நோக்கிச் சொல்லுகிறார்.

"கேளாய் தேனையொத்த இனிய மொழியையுடைய மானே! கலியாணமண்டபத்தில் பொருந்திய நிலைக்கண்ணாடி நிழலில் நின்று சுந்தரத்தைக்கண்டு நீயே பிரமித்த அந்த நிமிடத்திற்றானே இவ்வழகிய பெண்ணுதித்தபடியினாலேயும், சாமுத்திரிகாலட்சணம்வாய்ந்த இப்பெண்ணுக்கு நிகரான கன்னிகைகள் உலகத்தில் ஒருவருமில்லாததாலும் இக்கன்னிகைக்கு ரதியென்ற நாமமிட்டேன்; இன்னுஞ் சிலவருடத்தில் இப்பெண்ணால் உலகத்துக்கு நன்மையான காரியம் ஒன்று ஆகவேண்டியிருப்பதால், நானே நின்னுள்ளத்திலிருந்து இப்பெண்ணை பிறக்கச்செய்தபடியால், இக்குற்றம் நின்னாற் செய்யப்பட்டதன்று; இதற்காக நீ யஞ்சவேண்டா" மென்று சொல்லி உமையவளுக்குண்டாகிய பயத்தைப்போக்கினார்.

பின்பு பார்வதி தன் புதல்வியாகிய ரதியை மிகவும் அன்புடன் பாதுகாத்து வந்தனள். இங்ஙிப்படி ரதிதேவி செல்வமாய்

வளர்ந்துவர, திருப்பாற்கடலில் ஆதிசேடன்மீது பள்ளிகொண்ட மகா விண்டுவானவர் தன் சித்தத்தில் பிறந்த புதல்வனுகிய சித்தசனுக்கு மணஞ்செய்விக்கும் நிமித்தம் யாருடையபெண்ணை இவனுக்கு மனைவியாகச் செய்கிறது. இவ்வேை மிகவும் அழகுடையவன்; இவனழகுக்குத் தக்க பெண்ணெங்கிருக்கிறளென்று ஆலோசித்து, முடிவில் தன் தங்கையாகிய பார்வதியின் புதல்வி இரதி தேவியே இவனுக்குத் தகுந்த நாயகியாமென்றும், அவளுக்குத்தகுந்த நாயகன் இவனேயென்றும் தன் மனத்தில் நிச்சயித்துக் காலத்தை எதிர் பார்த்திருந்தார். அங்கே கைலயங்கிரியில் ஒருநாள் சிவபெருமானும் பார்வதியும் உல்லாசமாக இருக்கிறபோது பார்வதி தன் கணவனுகிய முக்கட்பிரானைநோக்கி, 'ஓ சுவாமி! நமது புதல்வியாகிய இரதி தேவிக்குப் பருவகாலம் சமீபித்தமையால் இவளுக்குத்தக்க அழகு வாய்ந்த புருடன் இவ்வுலகத்தில் யாரிருக்கிறார்கள்? இப்பெண்ணை யாருக்கு மணமுடிக்க யோசித்திருக்கிறீ" ரென, அதற்கு அரவாபரணன் பார்வதியைநோக்கி, களங்கமற்ற என்னுள்ளத்திற்கினிய இளமைதங்கிய கிளிமொழியே! கேளாய்! ஆயிரத்தெட்டண்டங்களிலும் தனக்கு நிகரான வடிவினையுடைய புருடர்கள் ஒருவருமில்லாத ஒப்பற்ற நிவ்விய தேககாந்தியையுடைய சித்தசனென்று சொல்லப்பட்ட குமாரன் ஒருவனிருக்கிறன். அவனுரெனில், நமயனுகிய விஷ்ணுவின் சித்தத்திலுதித்தவன். அவனுக்குத் தகுந்தவளன்றி, நமது புதல்வி மற்றவர்களுக்கு ஈடானவளன்று; ஆதலால் சிக்கிரத்திற்றுனே நமது புதல்வி அவனுக்கு மனைவியாவாளென்று சொல்லிக்கொண்டிருக்கையில், பரந்தாமன் கருடவாகனரூடராகிப் பஞ்சாயுதங்கள் விளங்க, மார்பிற் கௌத்துவாபரணந் துலங்க அங்கெழுந்தருளி வதுவைக்காகுஞ் சில நன்மொழி பகர்ந்து, இரதிதேவியை மன்மதனுக்குத்தந்து மணம்புரிவித்து மனோரஞ்சிதபுரமொன்று நிருமித்து அதிலவர்களைக் குடியேற்றி சுகித்திருக்கும்படி வாழ்த்தித் தங்கள் தங்களிடஞ் சேர்ந்தார்கள். பின்பு மன்மதனும் இரதியும் மனமொத்து வாழ்ந்து சுகித்திருந்தனர்.

குபேரன் உற்பவம்

குபேரனென்பவன் ஆதிபிரம சந்தியாராகிய மகாதவசிரேட்டமுற்ற புலத்திய மகாமுனிவரது புத்திராகிய வச்சிரவாகுக்கும், இவரது பாரியையாகிய இயக்கமாது சிரோமணிக்கும் குமாராராகி

யவதரித்து தேவர்கள் வேண்டுகோளால் குதிரை வாகனத்தையும், யானைக்குறியையும் பெற்று, அளகாபுரிக் கிறையவனுகி சித்திர ரேகையை மணம்புரிந்து, அட்டதிக்குப் பாலர்களில் ஒருவனுய் வட திசையைக் காவல் பூண்டிருப்பவன்.

இவனது மாற்றுந்தாயாகிய கேகினியென்பவளிடமாகப் பிறந்தவர்களே இராவணன், கும்பகர்னன், விபீடணன், சூர்ப்பனகை முதலியவர்கள்.

கின்னரர் கிம்புருடர் உற்பவம்

மேற்படி புலத்தியமா முனிவரது புத்திரர்களே கின்னரர் கிம்புருடர் என்பவர்கள்.

அட்டவசுக்கள் உற்பவம்

அட்டவசுக்களென்பவர்கள் :—அனலன், அணிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூமன், பிரசானன் என்னும் எண்மருமாம். இவர்கள் கிருது என்னும் பிரமன் புத்திரன் மக்கள் நால்வரில் தேவலருக்குப் பிரசாபதியுதிக்க, அவனிடமாக அவனது தூமிரை, புத்தி, மனசுவனி, இரதை, சுசனை, சாண்டிலி, பிரபாசலை என்னும் மனைவிகளில் பிரபாசலைக் குமாரர்களாகத் தோன்றினவர்கள்.

கந்தருவர் உற்பவம்

மேற்படி சோமனென்னும் வசுவுக்கும், மங்கை யென்பவளுக்கும் புரதை யென்பவள் தோன்றி பதினெரு குமாரர்களைப் பெற்றனள். அப்பதினெருவருமே கந்தருவரெனப் பெற்றனர்.

முனி காட்டேரிகள் உற்பவம்

வேதவியாசரின் கட்டளைப்படி பாண்டவர்களில் நடுப்பிறந்தோனுகிய அருச்சுனன் செய்த தவத்துக்கு மகிழ்ந்து, சிவபெருமான் மேலும் அருச்சுனன் மனைதிடத்தை யறியும்பொருட்டும், மூகாசுரனைக் கொல்லும் நிமித்தியமும், சகல கணங்களையும், வேடுவர்களாயும், வேதங்களை நாய்களாகவும், அச்செய்கைக்குரிய வலை முதலியவைகளை யெடுப்பித்துக்கொண்டு தான் வேடுவர்களுக் கெல்லாந் தலைவராகி, சடைகளைப் பின்னலாக்கிப் புறத்திற் றொங்கவிட்டு, நெற்றிக்கண் மறைய மயிலிறகினுலும், பல பறவைகள் இறகினுலும், பல

கரைகளும், வக்காமணிகளும் பூனைந்த மகுடத்தை முடித்து, செவியின் குழைகளில் திவ்ய மலர்களைச் செருகி, நிலத்தைப்போல ஒளி தங்கிய கண்டத்தில் பலகரைக்கோவைகள் மிகவும் பூனைந்து, தந்த மணிமாலைகளை மார்பிற்றரித்து, புயங்களில் வாகு வலயங்களைத் தரித்து, முன்கையில் தந்த கங்கணங்களைச்சூடி, இடையில் புலித்தோல் சல்லடம்பூண்டு, அதின்மேல் புலித்தோல் கச்சையிறுக்கி வரிந்துகட்டி, இரண்டு துடைகளிலும் பலகரைமாலைகள் புரளும்படி பூனைந்து, முழங்கால் வருந்தாதிருக்கத் தோலணிந்து, உடைவாளை இடையிற்றரித்து, திருவடிகளில் பாதரக்ஷை யணிந்து, வீரகண்டாமணி காலிற்றரித்து, அம்புப்புட்டில் முதுகிற்றூங்கி கறுத்தத் திருவுருவத்துடன் வெளிப்பட்டார். உமையவளோ கறுத்த அளகபாரத்தைச் சீவிப் பின்னி, குறுஞ்சி நிலத்துக்குரிய கோட்டு மலர்களை முடித்தத், தந்தக்குழைகளைக் காதிலணிந்து, கழுத்தில் பலகரைமாலைகளைப் பூனைந்து, முன்கையில் தந்தக் கடையங்களணிந்து, காலில் தந்தவளையல்களைப் பூனைந்து, பலகரைமாலைகளை இடையிற் பூனைந்து, பரிமளம்பொருந்திய தழைகளையும், மலர்களையும் செவிகளிலணிந்து, தனங்களிரண்டிலும் பால் சுரந்துவிம்ம சூரபன்மன் முதலான அசுரர்களையுங் கொன்ற வேலாயுதக்கடவுளை இளங்குழந்தையாக்கிக் கரத்திலேந்தி மிகுந்த கறுத்தரூபத்துடன் கருப்பாடையைத் தரித்து, வேட்டுவத்தலைவர்பின் போகிறபோது, அக்காட்டிலுள்ள வேடர்களும், வேடமாதர்களுங்கண்டு வியப்பற்றுப் பின்றொடர்ந்து சென்று, வேட்டுவத்தலைவன் பன்றியைக் கொன்றதும், பின்பு அருச்சுனனுடன் போராடி மறைந்து போயினதையும் பார்த்து பிரமித்து, வேட்டுவத் தலைவரை முனீசுரனென்றும், அவர் மனைவியைக் காட்டேரியென்றும் பூசித்து விசுவாசித்து நேசித்துப் பூசித்து வருகிறார்கள். இன்னுஞ் சிலர் குலதேவதைக ளென்றும், சிலர் அபிமானத்தினாலும் பூசைபோட்டு வருகிறார்கள்.

சத்தமுனிவர் உற்பவம்

ஒருகாலத்தில் சிவனும் பார்வதியும் சம்பாஷிக்கிறபோது சூரிய சந்திராளிருவரும் எனது விழிகளென்ற மொழியைக்கேட்டு சந்தேகங்கொண்ட வுமாதேவியானவள் உண்மையறிவேன் என்று எண்ணித் தனது திருக்கரங்களால் பரமனது இரண்டு நேத்திரங்களையும் புதைத்த மாத்திரத்தில், பிரமவிண்டாதி தேவர்கள் வசிக்

கும் எல்லா உலகங்களும், மற்றைய முனிகள் இருடிகள்முதல் சருவ சீவராசிகட்கும் இரவுபகலென் றறிதற்கரிதாய் இருள்மூடி எல்லாக் கிரியையும் தவறி சருவாண்டங்களிலும் முறையிடுகின்ற முறையை இறைகேட்டு, பரமசிவம் கோபித்து, "ஓ பார்வதி! என்ன பாவம் செய்தனை. இப்பாவம் நீங்குமாறு பூலோகத்திற்சென்று காசி முதலிய சேத்திரங்களின் புனலாடக்கடவா" யென ஆக்கியாபித்தவண்ணம் பார்வதி வருமளவில் காசிக்கடையில் காமபோச னென்னும் பட்டணத்தின் கானவராசன் கண்டு மோகித்து வழிமறிக்கவும், பார்வதியானவள் கோபித்து, "உயிர்பெற்றுப் பிழைக்கக்கடவா" என பலவாறு சொல்லியும் நீங்காதவனுகி, அடா மொழியைப் பகரவும், ஆயுதபாணியாகி யுத்தம் புரியவும், முன்னம் மிக்க தவமியற்றி, சிலவரம் பெற்றவனுகையால் தோல்வியடையானுயினன். பார்வதியார் ஆனமட்டும் ஈடுகொடுத்துக் கடைசியில் தமது தமயனேநோக்கி, "ஓ பரந்தாமா! ஆபத்பாந்தவா! நீ எங்ஙன மிருக்கிறாய்; நீயேனும் என் குற்றத்தைப் பொருத்து இச்சமயம் மீட்காயா" வென்று தோத்திரம் புரியவும், மாயவன் ஓடிவந்து முன்னம் பலயுகங்களிலும் அரக்கரை மாய்த்தவாறு இக்கொடிய ரெழுவரையும் அரைகொடியில் மாய்த்து, 'அம்மனுக்கு அன்றுமுதல் காவலாகக் கடவீ' ரென் றுக்கியாபித்து தானும் இளைய முனியென் றவதாரமெடுத்து நாளும் கார்த்திருக்கின்றனர்.

சிவமுனிவர் உற்பவம்

ஒருகால் கண்ணுவ மகாமுனிவர் வைகுந்தமடைந்த காலையில் திருமாலும், இலக்குமியும் மகியாதிருந்தமையால், இவர்கள் இறுமாப்பை ஒழிக்கும்பொருட்டு திருமால் 'சிவமுனியாக ஊமர்போல வனத்திற் சஞ்சரிக்கக்கடவாய்' என்றும், இலக்குமியை 'பெண்மானுகச் சஞ்சரிக்கக்கடவாய்' என்றுஞ் சபித்தனர். அவ்வண்ணமே திருமாலும் இலக்குமியு முதித்தனர்.

வயிரவர் உற்பவம்

இந்த வயிரவமூர்த்தி சிவபெருமானது சுவாசத்தி லுதித்தவர். இவர் சிவனுக்கு மூன்றுபுத்திரர். தக்கன் யாகத்தை யழிக்கும்படியனுப்பப்பட்டவர். இவருடைய நாமம் வயிரவன், ஆபதோத்தாரணன், ஆரியை தனயன், கருங்குதிரை, யாளி யென்றும் இன்னும் இவருக்கு சில நாமங்களும் உண்டு. தேவர்களுடைய கருவத்தை

யும், பிரமனுடைய கருவத்தையும் அடக்கும்படியானவர். மேலும் பிரமனுடைய தலைகளில் ஒன்றைக் கிள்ளிப் போட்டவர். இவ்வுலகத்தை ஒருகால் அழிக்கும்படி கொக்கரித்துக் கொண்டு வருபவர். அவருக்கு வாகனம், நாய் என்றறியவும்.

ஐயனுரப்பன் உற்பவம்

அரக்கர் குலத்தி லுதித்த பத்மாசூர னென்பவன் சிவனைக் குறித்து, பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவஞ்செய்ய, அவனது தவ சுக்கிரங்கி, உமையவள் சமேதராக இடபவாகனத்தின் மீதேறிச் சென்று சிவபெருமான் காட்சிகொடுத்து, அவனைநோக்கி, "உனக் கென்னவரம் வேண்டும் கேளாய் தருகிறே" னெனப் பதுமாசூரன் மகிழ்ந்து, "ஓ சுவாமி! எனது வலதுகரத்தை எவன் சிரத்தின்மீது வைத்தபோதிலும் அவர்கள் அந்தக்கணமே யெரிந்து பற்பமாய்ப் போகும்படியாய் வரந்தரவேணு" மென்று துதிக்க, சிவபெருமான் மகிழ்ந்து, "நீ கேட்டவண்ணம் ஆகக்கடவ" தென்று வரமீந்தனர். அவ்வரத்தைப் பெற்ற கொடிய துட்டனாகிய அரக்கன் சிவபெருமானை நோக்கி, "ஓ சுவாமி! இதை பரீட்சை செய்யும்படி உமது சிரத்தின்மேல் என்கையை வைத்து பார்க்கிறே" னென்று நெருங்கி வந்தான். இதைக்கண்ட சங்கரன் பயந்து ஓடி ஐவேலங்காயில் புகுந்து ஒளித்துக்கொள்ள, இந்த விருத்தாந்தத்தை யறிந்த மகாவிஷ்ணுவானவர், மோகினி உருவமெடுத்துத் தன்னைப்பார்க்கின்றவர்கள் மனதைக் கொள்ளைகொள்ளும்படியான சுந்தரமும் அழகும் வாய்ந்து பதுமாசூரன்முன் தோன்றினர். இம்மோகினியைக்கண்ட பதுமாசூரன் காமாந்தகாரனாகி அனலிடு மெழுகுபோலுருகி, மோகினியைக் கிட்டித் தன்னைச் சேரும்படி மிகவும் வேண்டிக்கொள்ள, திருமால் அசுரனைநோக்கி, "ஓ அசுரனே! நினது தலை தேகம் முதலான அவயவங்களின்மீது காகங் கழு முதலான பறவைகளின் எச்சமிருந்து அசுசியா யிருப்பதால், நானுன்னை எப்படி பிரியத்துடன் தழுவிக் கொள்வேன்? எனக்கு மெத்த அசங்கியமா யிருப்பதால், நீ சென்று எந்தக் குளத்திலாவது முழுகிக் குளித்து வருவையே யாகில், உன்னை யான் சேருவதற்குத் தடையே யில்லையென்று மொழிந்த மோகினியின் வசனங்களைக் கேட்ட அசுரன் அக்கருத்துக் கிசைந்து ஸ்நானஞ் செய்து வருகிறே னென்று சொல்லிப் போனான். உடனே மோகினி வேடங்கொண்ட பகவான் குளங்

களிலும் நதிகளிலும் கொஞ்சமேனும் சீல மில்லாமற் படிக்குச் செய்துவிட்டார். அசுரனேவெனில், மிகுதூரந் நிரிந்து இளைத்துத் தண்ணீர் அகப்படாமல் திரும்பிவந்து மோகினியைக்கண்டு, ஓ மாதே! எங்குந் தண்ணீர் அகப்படவில்லை. நானென்ன செய்வேன் காமாக்கினியானது என்னை வாட்டுகிறதே! இந்தச்சமயம் என்னைத் தழுவிக்கூடாவிடில், எனது பிராணன் நிற்காதென்று வேண்டிக் கொள்ளும் அசுரனைநோக்கி மோகினிவேடம் புனைந்த மகாவிஷ்ணு சிரித்து, "அசுரேந்திரா! மாட்டுக்குளம்பில் சிறிது தண்ணீரானினும் எடுத்துத் தலையில்தூசி, துடைத்துக்கொண்டு வருவாயாகில், உனக் குண்டாகிய காமநோயைத் தணியச்செய்கிறே" னென, அவ்வண் ணமே அசுரன்சென்று மாட்டுக்குளம்பு சேற்றில் புதைந்து அதில் தங்கிய நீரையெடுத்துத் தன் தலைமீது தூசிக்கொண்ட மாத்திரத்தில், சிவனிடத்தில் பெற்ற வரத்தின்படி தானேஎரிந்துபொரிந்து சாம்ப லாயினன். அதையறிந்த மகாவிஷ்ணு தன் சுயரூபமெடுத்துக் கொண்டுபோய் ஐவேலங்காயி னுட்புகுந்து ஒளித்திருக்குஞ் சிவனை யழைத்து, 'பதுமாசுரன்மடிந்து சாம்பலாயினன். இனி நீர் வெளி யில்வாரு' மென்றழைக்கச், சிவபெருமான் ஐவேலங்காயை விட்டு வெளியில்வந்து மகாவிஷ்ணுவைக்கண்டு, 'பதுமாசுரன் எப்படி மடிந்தா' னென்று வினவ, சிவபெருமானை நோக்கி, 'அவன் கைக் கொண்டே அவன் மடிந்தா' னென, அதெப்படி மடிந்தான்? அதன் விவரத்தைச் சொல்லுமென, விஷ்ணுதேவன் கேட்டு தான் மோகினி யவதாரஞ்செய்து அவனை மோகிக்கச்செய்து அவனை வஞ்சித்துக் கொன்ற விவரத்தை ஒன்றொளியாமற் சொல்லக்கேட்ட சிவபெரு மான் மகாவிஷ்ணுவை நோக்கி, 'யான் காணும்படி மோகினியுருவம் எடுக்கவேண்டு' மெனச் சொல்லிய சிவனது இஷ்டப்படி பகவான் மோகினியுருவமெடுத்துத் தோன்றினர். அவ்வடிவத்தைக்கண்ட சிவபெருமான் மோகலாகிரிகொண்டு மெய்சோர்ந்து சற்றுநேரத்தில் தெளிந்து, மோகினியைக் கூடினமாத்திரத்தில், அத்தலத்தில் ஒரு குழந்தைபிறக்க, அப்புத்திரன் ஹரிக்கும் ஹரனுக்கும் புத்திரனாகிய தால் அரியரபுத்திரனென்று பேரிட்டு அருள் புரிந்து உலகத்தோர் படைக்கும் பூசை பொங்கல்களை வாங்கிப் புசித்திருமென்று வாழ்த் தித் சென்றார்கள்.

இவர் அரிக்கும் அரனுக்கும் பிறந்தவராகையால், அரியரபுத் திரனெனப் பெயர்பெற்றனர். இவருக்கு சிவாஞ்ஞையால் உருத்திர

லோகாதிபதியாய் உருத்திரகணங்களும் மாகாளன் முதலிய பூத கணங்களும் புடைசூழ, வெள்ளையானையின்மீது ஆரோகணித்து, பூரணி, புட்கலையென்னும் இருமனைவியர்கள் இருபுறமும் எழுந் தருளியிருக்கச்செய்து, சர்வலோகாகாரணமாய் நித்தியானந்த பரம சொரூபியாயிருப்பார். இவர் முன்னொருக்கால் சூரபன்மன் முத லிய அசுரர் கொடுமைக்களஞ்சி மூங்கிலுருக்கொண்டிருந்த இந்திர னுக்கும் மற்றோருக்கும் கிருபைபுரிந்து அரக்கர்களை நாசஞ்செய்து வானவரை இரட்சித்துள்ளார்.

காத்தவராயனுற்பவம்

ஸ்ரீ கயிலையங்கிரி வாசராகிய சிவபெருமான் பதினொரு லோ கங்களுக்கும் படியளந்துவிட்டுத் திரும்பி, கயிலாயஞ் சேர்ந்தபோது உமையவள் சிவனைநோக்கி, "சுவாமி! தாங்களெங்குப்போய் வரு கிறீர்" ரென்று கேட்க, பரமசிவன் பார்வதியை நோக்கி, "அடி மாதே! அண்டபிரமாண்டமெனும் மூவுலகங்களிலும் உள்ள சகல சீவராசிகளுக்கும் படியளந்து வருகிறே" னென, ஈச்சுரி சந்தே கித்து, சிவனது மகிமையுணராமல் ஒரு சிமிளில் எறும்பொன்றைப் பிடித்தடைத்துவைத்து மறுநாள் காலையில் சிமிளைத்திறந்துபார்க்க, அவ்வெறும்புவாயில் நொய் கவ்விக்கொண்டிருப்பதை யறிந்து அஞ்சி மிகவும்பயந்து, பரமன் முன்னம்வந்து தண்டனிட்டெழுந்து, கைகட்டி, வாய்பொத்தி, "சுவாமி! தங்களுக்குத் தெரியாமல் ஒரு சிற்றெறும்பைப் பிடித்து சிமிளிலடைத்து மற்றுநாள் சிமிளைத்திறந்து பார்க்க, அவ்வெறும்பு தன்வாயில் நொய்கவ்விக் கொண்டிருந்தபடி யால், தங்கள் திருவடிகளுக்கு அபசாரஞ்செய்த பாவியாகினேன். இவ்வபசாரம் தீரும்பொருட்டு தக்க உபாயஞ்சொல்ல வேண்டும். சுவாமி!" என்று வேண்டிக்கொள்ள, அப்போது பரமசிவன் கோபி த்து, "பெண்ணே! நீ நந்தவனம், பூந்தோட்டம், குளமுதலானவை களை யுண்டுபண்ணுவையேயாகில், இத்தக்குற்றம் உன்னை விட்டு நீங்கு" மென, அவ்வண்ணம் பார்வதியானவள் யாவற்றும் உண்டு பண்ணி இதற்குக்காவல் தக்கமனிதன் வேண்டுமென்று வேண்ட, சிவபெருமான் மனதிலுன்னிய மாத்திரத்தில் ஒரு சிறுவன்தோன்ற, "நீ இத்தோட்டங் காவல்செய்ய வுத்தரவுபடியால் இன்று முதலுனக் குக் காத்தவராயனென்றபேர் வழங்கக்கடவ" தென்றும், "இதைச் சிரார்ப் பாதுகாப்பா" யென்றும் சொல்லிச் சிவன் போயினர். அந்

தப்படியே அவன் காத்துவருகிறகாளில் மலர்கள் குறைந்திருப்பதை யுணர்ந்து, சத்தகன்னிகள் அங்குவந்து ஆடைகளைத்துவைந்து குளத் திலிறங்கிக் குளித்துக்கொண்டிருக்கிறபோது காத்தவராயன்சென்று இளையகன்னியின் ஆடையை யெடுத்துக்கொண்டு சரக்கொன்றை மரத்தின்மீதேறி ஒளிந்திருந்தான். கன்னிகள் நீராடிக் கரைக்கு வந்து ஆறுபேர்கள் ஆடையுடுத்திக்கொள்ள, இளையாள் தன்னுடை யைக் காணமல் தவிக்கக்கண்டு மற்றவர்கள் சிவபெருமானுக்கு அறி விக்க, அவர் சினங்கொண்டு காத்தவராயனை யழைத்து, "பிடியடா சாப" மென்றபோது, உமையவள் காத்தவராயனை நோக்கி, "வேகாத சுடலையில் சாகாதிருப்பா" யென, அப்போது பரமன் சினங்கொண்டு, "என் சாபத்தை நீ யழித்தபடியால் இன்றுமுதல் என் இடப்பாகஞ் சேராமல் அல்கையாய், பேயாய், இருகியாய் போகக்கடவா" யென்று சபித்து, "இந்தச்சாபம் காத்தவராயன் கழுவிலிருக்கும்போது தீரு" மென்று சொல்லிக் கைலையங்கிரிக்குப் போயினர். அப்போது பார்வதி காத்தவராயனை நோக்கி, "நீ சென்று நாலுபிறப்புப் பிறந்துவந்தால் உனக்கு வரந்தருகிறே" னென்று சொல்லி, அவனுக்கு எமதூதர்களையும், பூர்வக்கியானமும் தந்து பார்வதி போயினள். உடனே காத்தவராயன் வடதிசையி லிருக்கும் பிள்ளையார் கோயிலுக்குப் போயிருந்து அங்குத் தண்ணீ ரெடுக்கும் பிராமணத்தியின் கண்கள் முன் எலுமிச்சம்பழம்போலே தோன்ற, அப்பிராமணத்தி எலுமிச்சம்பழத்தைப் புசித்து கருப்ப மாகத் தண்ணீரில் விழுந்திறக்கத் திடங்கொண்டகாலத்தில், அப் பிள்ளை வயிற்றிலிருந்து பூமியில்வீழ, அவளக்குழந்தையைக் கோரைப் புல்லின்மேல் வளர்த்தி, தன்மனையிற் சேர்ந்தாள். அப்போது பறைச்சியொருத்தி குழந்தையை யெடுத்துப்போய் தன் வீட்டி லுள்ள கன்றின்தோல்மேல் கிடத்திவிட்டு தெருப்புக் கொண்டுவரப் போக, உடனே குடிசைபற்றியெரியக்கண் டோடிவந்து, பிள்ளையை யெடுத்துக்கொண்டுபோய், பிள்ளையார் கோயிலில் வளர்த்திவிட்டுத் தன்னிருப்பிடம் போனள். பின்பு பூர்வக்கியானத்தினால் சிவப் புடையானிடம் வளர்ந்து தன் தாயாரைத் தேடிவந்து தாயாரால் எரிந்த சாம்பராகிப் பின்பு, கீரைத்தண்டாகி, அம்மை தெற்றியி லுலாவி, மறுபடியும் அம்மனுலெரிந்து, மூன்றுவது அம்மன்கையிற் பிறக்க, ஆலம்விழுது ஊஞ்சல்கட்டி அதில் பிள்ளையை வளர்த்தித் தாலாட்ட, கொல்லிமலைக் கன்னியர்கள் குழந்தையை யெடுத்துக்

கொண்டுபோய் வளர்த்துவர, பிள்ளை கன்னியர்களிடம் விடை பெற்றுவந்து நமஸ்கரித்து ஆசிபெற்று வனவேட்டை யாடச்சென்று பந்துவிளையாடிவந்து, சப்பாணி அம்மையைப்பனுக்குக் கால்கரங்கள் தன் அன்னையா லுண்டாகச்செய்து, அவனை யங்கு காவல்வைத்து, மறுபடியும் மலையாளஞ்சேர்ந்து ஜோகிவேடம் புனைந்து தொட்டியச் சின்னன் வைத்த மோடியை எடுத்து சின்னனை யிழுத்துக்கொண்டு வந்து தாயாரிடஞ்சேர்த்து அவனுக்கு அன்னம் படைத்து மறுபடி யும் சின்னனுந் தானும் வேட்டையாடும்போது, காத்தவராயன் ஓடையைக்கண்டு, அதின் விருத்தாந்தத்தைச் சின்னனுலுரைத்து, மச்ச வுரு வெடுத்துச்சென்று ஆரியமாலையைக்கண்டு, அவள் கூந்தலால் கட்டுண்டு சின்னனை நினைக்க, அவன் கருடனுகப்பறந்து காத்தவ ராயனைத் தூக்கிக்கொண்டு மணற்பாங்கின்மேல் வைத்து, கட்டுகளை யவிழ்த்துவிட, காத்தவராயன் நிசரூபங்கொண்டு அக்கூந்தலை யளந்து அறுபத்துநான்கு பாகமிருக்கக்கண்டு, மிகுந்த மோகங் கொண்டு ஆரியமாலையைச் சிறையெடுக்கக் கருதித் தன் தாயாரிடம் வந்து பணிந்து, "ஆரியமாலையை சிறையெடுத்து வரும்படி நீ விடை தரவேண்டு' மென்ன, அம்மன் "அவளோ பிராமணத்தி யாகை யால், நீ யாசரிக்கவேண்டாம். அவளழகை எழுதி வருவையாகில் உபாயஞ் சொல்லுகிறே" னென, காத்தவராயன் மாறுவேடம் புனைந்து சின்னரத்தைப் பலவித ராகங்களாலும் மீட்டுகிறபோது, அவ்வோசையை ஆரியமாலையானவள் கேட்டு, தாதிகளைக் 'சின்ன ரக்காரனை யழைத்து வாருங்க' ளென, தாதிகள் சென்று காண, உடனே தாதிகள் கண்களை அவிழ்த்துவிட்டு, சின்னனையழைத்துத் தாதிகள் போகும்வழியில் படுகுழிவெட்டிவிட்டு, அக்குழியில் சாணங் கொட்டி சலம்விட்டு வைத்தான். அம்மார்க்கமாய் தாதிகள் சென்று படுகுழியில் விழுந்து கதறுகிறபோது, சின்னன் அவர்களை யெடுத்து விட்டு, கண்கள் தெரியச்செய்து, காத்தவராயனைக் காட்ட, அத் தாதிக ளனைவருங்கண்டு நெருங்கி, அவர்கள் வசம் ஓலையெழுதி ஆரியமாலைக்கு அனுப்ப; அவ்வோலையை அவர்கள் கொளுத்திவிட்டு ஆரியமாலையைக் கண்டு அவளுக்குபசரித்திருக்க, காத்தவராயன் மறுபடியும் சின்னரம் வாசிக்க, ஆரியமாலை கேட்டுத் தாதிகளை ஆக் ஞைசெய்ய, அவர்கள் வேதியரிடத்திற் சொல்ல, வேதியர்கள் காத்தவராயன் காலைப் பிடித்துக்கொண்டு வவ்வாலைப்போலத் தொங்க, பிராமணர்களை பூமியில்விழத்தள்ளி, தன் தாயாரைக்கண்டு

உரைத்து விடைபெற்று மாறுவேடங்கொண்டு கின்னரங் கைப் பிடித்துக் கடைவீதியிற் சென்று அங்கோரிடத்தில் படுத்திருக்க, பிராமணர் யாவரும் ஓடி அரசனிக்கண்டுரைக்க, அரசன் சேவ கரைக்கொண்டு கின்னரக்காரனைப பிடித்துவரும்படி செய்ய, சேவகர்கள் காத்தவராயனைப்பிடித்து வந்துவிட, உடனே காத் தவராயன் காசிக்குருக்கள் வேடங்கொண்டு வேதியர்களுக்கு ஆருடஞ்சொல்லி, அரசனுல் விலங்குபூட்டிக் காவலில்வைக்க, சின்னனையழைத்து விலங்கையவனுக்கு பூட்டித் தான் வெளிப்பட்டு மாட்டுக்காரப் பையலைப்போல இருக்கிறபோது, அரசன் யானைக்கு அனேக காவலமைத்து இருக்க, காத்தவராயன் மூதேவியை யேவிக் காவலர்களுக்கு நித்திரையுண்டாகச்செய்து யானை யைத் திருடிக்கொண்டுபோய் சாராய பூமியினிடத்தில் வைத்தி ருக்க, இராசனுங் காவலரும் யானையைத் தேடிவந்து பூமியினி டத்திருந்த யானையையும் காத்தவராயனையும் செவப்புடையான் கொண்டுவரும்போது, காத்தவராயன் அந்த யானையின் மீதேறிக் கொண்டு தாயாரிடம்வந்து ஆரியமாலையைச் சிறையெடுக்க விடைதரும்படி வேண்ட, அம்மன் புத்திகளைச் சொல்லியுந் தடுத் துரைக்கும் மகனுக்கு வெண்ணீறளிக்கப் பெற்று, ஆரியமாலைக்கு மங்கிலியந் தரித்துவர, அதை அவள் மனந்தாளாது உயிரை மாய்த் துக் கொள்ளப் போனபோது, அவளைக் கல்லாய்ச் சமைத்து, பின்பு காத்தவராயன் செட்டிப்பெண்ணைச் சிறையெடுத்தும், கருப்பழகியை மணந்து வல்லத்து மாங்காளி வனஞ்சென்று பூதங்களையனுப்பி ஆரியமாலையை யெடுத்துவந்து கொழுந்தாலை வங்குனிதல் வையுங்க ளென்றுசொல்லி, தன் தாயாரிடம் வந்து, ஆரியமாலையைச் சிறை யெடுக்க விடைதரவேணுமென்று வெகுவாய்ப் பிரார்த்தித்தும், அம்மன் தடைசெய்து முடிவில் காளியிடஞ் சென்றுயானுல் இக் காரியம் உனக்கனுகூலமா மென்றுசொல்லி விடைதர அந்தப்படியே காத்தவராயன் காளிகோயிலின் முன்வந்து நின்று அவளாலேயே தக்கை, தமரகம், காதோலை, சூல முதலானவைகளைப்பிடித்து, சோளியில் போட்டடைத்து, மறைவாயிருக்கக் காளி உக்கிரகோபங் கொண்டுவந்து காத்தவராயனை எடுத்து விழுங்கிவிடப் பின், காத் தவராயன் காளியிடம் வரம்பெற்றுக் குழந்தை வடிவாய் வெளிப் பட்டு, சத்தகன்னிகள் வனம் புகுந்து, அவர்களுடன் பலவிதப் பாடுபட்டு, பின்பு கட்டுண்டு மூடிவில் கழுவேறி மூன்று கன்னி

களும் ஏங்கிப் புலம்புகிறபோது, காத்தவராயன் இனியில்லாத கட்டமடைந்து வாடித் தளர்கிற காலத்தில், பரமசிவன் சகல தேவர்களுஞ்சூழப் பூதகணங்களுடன் வந்து காத்தவராயனையும் பார்வதியையுங்கண்டு மிகவுந் துயரமடைந்து, காத்தவராயனைக் கழு மரத்தை விட்டிறக்கி, பார்வதியின் சாபத்தையும் போக்கி, தன் இடப் பாகத்தில் பார்வதியைத் தாக்கி, காத்தவராயனை வாழ்த்திச் சுகமுட னிரு என்று சொல்லிக் கைலைபங்கிரியை யடைந்தார். பரமசிவத்தின் உத்திரவுபடி காத்தவராயன் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்து, ஆரிய மாலை, உகந்தழகி, அன்னமுத்து, மாதகருப்பழகி என்னும் இந் நான்கு வனிதைகளுடன் கூடி, இன்பரசமுண்டு சுகித்திருந்தான்.

சாளக்கிராம உற்பத்தி

இஃது ஓர் ஊரின்பெயர். இது நாவலந்தீவின் கடலோரத்தில் வடதிசையி லிருக்கிறது. * இவ்வூரில் மூன்னொருகால் திருமால் மோகினிபுருக்கொண்டு ஒரு விருட்சத்தின் நீழலில் சிவபெருமானை மணந்தகாலையில், இவ்விருவரும் காரியமிழ்ந்தனர். அவ்வெச்சல் பெரிய சலமாய், பிரவாகித்துச் சென்றது. அதன்பேர் கண்டகி நதியெனக் கூறுவர். அந்நதியினுள்ளும் புறமும் வச்சிரநதியென்று கூறும் குளவிகள் பொன்னிறமா யுற்பவித்து, சக்கரரேகையுடைய வைகளாய் அந்நதியின் மண்ணில் கூடுகளைக் கட்டிக்கொண்டு சிறிது காலம் வசித்து இறக்கும் பின்னர் அக்கூடுகளைச் சிலர் யெடுத்துக் கொண்டுபோய்ப் பொன்னைப் பிரித்தெடுத்துக்கொண்டு அக்கூடுக ளில் காணப்படும் சக்கரரேகைகளைத் திருமாலின் குறிப்பாகத் தபா னஞ்செய்து பூசிக்கின்றார்கள். அது சாளக்கிராமம் என்னும் கிரா மத்திற் காணப்படுதலால், அக்குளவிக் கூண்டிற்கும் சாளக்கிராம மெனக் கூற நேர்ந்ததுபோலும். சிலர் உயிரோடுங் கொண்டு வந்து சிலநினம் வைத்திருக்கின்றனர். அநேக யாத்திரைவாசிகள் கொண்டுவந்து ஆங்காங்கு விற்றும் சீவிக்கின்றனர்.

மதுரைவீரன் உற்பத்தி

காசி தேசத்தையாளும் துளசிமகாராசன் கற்பூர வள்ளியைக் கூடிச் சுகத்துட னிருக்கும்போது, பிள்ளையில்லாக் குறையால் தான தருமங்களைச் செய்து ஓர் ஆண்மகவு உதிக்க, ஆனந்தமடைந்து சோதிட சாத்திரங்களைச் சோதித்து, குடிகோத்திரம் அரசெல்லாம்

* இச்சரிதையை ஐயனு ருற்பவத்திற் காண்க.

இவனுல் நாசமாகுமெனத் தெரிந்து, தாஹிகளால் குழந்தையைத் தாம் பாளத்தி லேந்திக்கொண்டுபோய்க் காட்டில்விட்டுப் போயினர்கள். அந்நாட்டுக் கருகிலுள்ள கிராமத்தில் வசிக்கும் சக்கிலிச்சி யொருத்தி ஆவாரம்பட்டைக்காகக் காட்டிற்சென்று பட்டைகளைச் சேகரித்து வருகிறபோது, பாலனைக்கண்டு ஆனந்தமடைந்து, பொற்றும்பாளத் துடன் குழந்தையை யெடுத்துக்கொண்டு வீடுசேர்ந்து, சக்கிலியனுக் குக் குழந்தை கிடைத்த வரலாற்றைச் சொல்லக்கேட்டு ஆனந்த மடைந்து, வீரனென்று பேரிட்டு வளர்த்துவருகிற காலத்தில், வேவு காரர் அரசனை வணங்கி, மாதிகச்சின்னன் வீட்டில் நமது பிள்ளை வளருகிறனென்று சொல்ல, அரசன் மாதிகச்சின்னனை அழைத்த போது, அவன் பயந்து அந்நாட்டைவிட்டு சம்சாரத்துடன் பிள்ளை யையும் அழைத்துக்கொண்டு, பொம்மண நாய்க்கன் தேசத்தை யடைந்து, அந்நாய்க்கனிடம் காவல் வேலைக்கமர்ந்து, அவன் மகள் பொம்மியம்மாள் புட்பவதியாக அவளைக் காத்திருந்தான்.

பின்னர் மதுரைவீரன் தந்தையைநோக்கி, இன்றையதினம் காவலுக்கு யான் போகிறேனென்று விடைபெற்றுச் சென்று பொம்மியம்மாள் குடிசைக்கருகில் நிற்க, அவன் மழையால் குடிசைக் குள் புகுந்து அவளை நயந்துகூடி மூப்பதுநாள் கடந்தபின்பு அரண் மனைக்குள் புகுந்து பொம்மியம்மாளை யெடுத்துக்கொண்டு, திருச் சிராப்பள்ளியை நோக்கிச்சென்று காவேரியிலிருக்க, இங்கே பொம் மண நாய்க்கன் பொம்மியம்மாளையுங் குதிரையையுங் காணமல் சேனைகள் சூழப் புறப்பட்டுவந்து ஆற்பரிக்க, வீரன் வெளிப்பட்டுச் சகல சேனைகளையும் வெட்டியெறிந்து, பொம்மண நாய்க்கனையுங் கொன்று, அவனுக்குத் தீக்கடன், நீர்க்கடன்க ளனைத்தையும் முடித் துத் திருச்சிராப்பள்ளிக்குட் சென்று, விசயரகுநாத சொக்கலிங்க வேந்தனிடத்தில் சிலநாள் போக்கிக், கிருஷ்ணப்ப நாய்க்கர் மகளு டன்கூடி, 'மாதத்திற் கொருதடவை வருவே' னென்று மொழிந்து இருக்கையிலே, மதுரையிலும், அழகர் கோயிலிலும் கள்ளர் உபத் திரவ மிகுதியை விசயரங்க வேந்தனறிந்து, வீரனை 'அங்கங்குள்ள கள்ளர்களைச் சங்கரித்து வாரு' மென்று சொல்லி சில சேனைகளையுங் கூட்டியனுப்ப, விடைகொண்டு பொம்மியம்மையுடன் சென்று மதுரையைச் சேர்ந்து, திருமலை நாய்க்கரிடம் வரலாற்றைத் தெரி வித்து, கள்ளர்களைப் பிடித்து அடித்து கொன்றுவிட, ஒருநாள் நடு

ராத்திரியி லெழுந்து வெள்ளையம்மாள் வசிக்கும் அரண்மனைக்குள் புகுந்து பார்க்க, அவள் நித்திரையாயிருக்கையில் தூக்கிக்கொண்டு வெளி வருகிறபோது வேவுகாரர் கண்டு, கள்ளனென்று அழைத்து வந்து திருமலை நாய்க்கரிடம்விட், அவர் மூட்டையை யவிழ்த்துச் சோதனைசெய்ய, அதில் வெள்ளையம்மாளிருக்கக்கண்டு, கை கால்களை வாங்கிவிடுங்களென்று கட்டளையிட, அந்தப்படியே கொலைவீரர் வீரனைக் காட்டிற் கழைத்துப்போய், கால் கையை வாங்கிவிட்டார் கள். அப்போது வீரனும் தன் விதியை நினைத்துப் புலம்புகிற போது வெள்ளையம்மாள் நித்திரை தெளிந்து பார்த்து, இனியில்லாத துக்கப்படுகிறகாலத்தில், சில வீரர்கள் ஆணிமுத்து வீரனென் றறிந்து அழுது புலம்பி, திருமலை நாய்க்கனுக்குத் தெரிவிக்க, ஆயா சப்பட்டு இனிய வசனங்கூறிட, பொம்மியம்மாளறிந்து அவ்விடத் திற்குப் போய் வீரனைக்கண்டு அழுது புலம்பி, இனி யிவ்வுடலை வைப்பதில்லையென்று அக்கினிகுண்டம் வெட்டச்சொல்லி அவ்வக் கினியில் விழுந்துவிட்டாள். பின்பு திருமலை நாய்க்கன் மீளுட்சி யம்மனை வேண்டிக்கொண்டதினால் அம்மனுக்குக் கிருபையுண்டாகி, வீரனுக்குக் கை கால்கள் வளர்ந்துவரும்படி செய்தாள். அவ்வாறே கை கால்கள் வளர்ந்தவுடன் நடந்து குளித்து வெண்ணீறணிந்து அம்மனுக்கெதிரில் வந்துநின்று, தன் கழுத்தை வெட்டிக்கொண்டு அம்மன் சன்னிதிமுன் முதல் பூசைகொண்டு மதுரைவீரச்சாமி யென்ற பேருடன் வீற்றிருக்கின்றான்.

மாரியம்மன்

மாரியம்மன் என்பது உலகிற் பலவாறுயிருக்கின்றது. இது வரையிலும் சத்திகள் சரிதத்தைக்கூற ஒரு சாத்திரமும் காணேம். பூசாரிகள் இஷ்டமெல்லாம் சத்திகளாயிருக்கின்றன. என்னெனில்: உலகில் அநேக வீடுகளில் மாரியம்மனுக்குக் கற்பூர ஆராதனை, புட் பம், மஞ்சள் இவைகள் கூடாதென்றும், வேப்பிலை முதலியவைகளே வேண்டுமென்றுங் கூறுகின்றனர். மாரியம்மாள் ஆலயங்களிலோ எல்லாம் வழங்குகின்றன. பூசாரிகள் ஒருவர் ஒரு தலையைமாத்தி ரம் வைத்து இதுதான் மாரியம்மனென்றும், ஒருவன் பத்து பதி னைந்து நாளைக்குப் பூசைவைத்து தினந்தினம் வேறு வேறு அவதா ரங்களைச்செய்து இதுதான் மாரியம்மனென்றும், ஒருவன் அக்கினிச் சுவாலிப்பதுபோலத் தலையிற்செய்து இதுதான் மாரியென்றும், ஒரு

வன் குழவிபோல் வைத்து இதுதான் மாரியென்றும், ஒருவன் விபூதிகாப்பு மாத்திரமிட்டும், ஒருவன் குங்குமகாப்பு மாத்திரமிட்டும், ஒருவன் அம்மனுக்கு முழுரூபங் காட்டியும், ஒருவன் நாலுகையைக் காட்டியும், ஒருவன் இரண்டு கையைக் காட்டியும், அக்கைகளில் வெவ்வேறு ஆயுதங்களைக் காட்டியும், பலவிதமாய் அவர்களுக்கே நிரமாகாது இதுதான் மாரியம்மனென்று கூறிவருகின்றனர்.

அதர்வண வேதத்துள் கருமாதிகளின் பொருட்டுச் சில தேவதைகளைக் கூறியிருக்கின்றன. அன்றி, சிவனை மதியாது பிரமன் செய்த சிருட்டிகள் விர்த்தியடையாது துட்ட தேவதா சொரூபமடைந்ததென்றும் ஒரு நூல் வழக்கு. அல்லாமல் சில சித்தர் முனிவர்களின் சாபத்தால் சில தேவ இராக்கதகணங்கள் துட்டதேவதை வடிவாயினவென்றும் சில பிரமாணங்களுள்ளன. பார்வதியாரது வியர்வையினின்று அனேக காளி, கூளிமுதலிய கணங்களுண்டான வென்றும் சில நூலில் வழங்குகின்றனர். ஆதலால், மாரியம்மனது சரிதத்தை இவ்வகையென்று கூறுதற்குக் கூடாதாயிருக்கின்றது.

மாரியென்பது அகத்தியர் வைசூரி நூலிற்சொல்லும் பெயர்களையெல்லாம் பெயராகவே வழங்குகின்றனர். இவ்வாறு வைசூரிகளை மகமாரியென்று வழங்குவது சமயபுரம், ஊத்துக்காடு, கடம்பாடி, கன்னபுரம், பெரியபாளைய முதலிய இடங்களிலுள்ள தெய்வங்களையே. சில மதுக்கள் பிரார்த்தனை செய்பவர், அக்கினிசட்டி, வேப்பஞ்சேலை, தலைவிளக்கு, அடிதண்டம், செடல், பாவடம், அரிகண்டம், அங்கப்பிரதட்சணம், கோழி ஆடு பலி, மாவிளக்கு, பொங்கல் முதலியவைகளைச் செய்கின்றனர். புத்திரவரம் பிரார்த்தனைக்கு பரசுராமன் சிலையைக்கொண்டு போகின்றனர்.

இரேணுகையின் மகன் பரசுராமனானதால், இரேணுகையே மாரியென்பதாகின்றது. அப்படி கொண்டால் இரேணுகைக்குத் தலைமாத்திரமே உருவமாயிருக்க, சமயபுர முதலான இடங்களில் முழு உருவமாயிருப்பதாலும், இரேணுகை பிராமண ரிஷிபத்தினியானதால், கோழி, பன்றி, ஆடுகளை பலிகொடுப்பதாலும், இரேணுகையைப் பரசுராமனே வெட்டியதால் அவ்வாறவளுக்குக் கெடுதியைச்செய்யும் பிள்ளையைப் பிரார்த்தனையாய்ச் செலுத்துவ தடாதாதலாலும், அன்றி இரேணுகையைப் பரசுராமன் வெட்டியபின்

னும் எழுப்பி, சமதக்கினியோடு யமுனை நதிக்கரையில் வசித்திருந்த தாகச் சரிதமிருப்பதாலும் சந்தேகம் உண்டாகிறது.

இம்மாரியம்மன் தோத்திரத்தில் ஆதிசிவன் தேவியென்றும், நாரணனுர் தங்கையென்றும், ஆயிரங் கண்ணுடையாள் என்றும், பராசத்தி யென்றும், பேச்சியென்றும் துதிக்கின்றனர். ஆயினும், கலியுகத்திற்குச் சத்தியே அரசியென்று கூறியபடியே கல்வி, ஆகாயம், பூமி, நீர், தீபம், உரல், உலக்கை, முறம், படி இவையெல்லாம் பெண்மயமாக வணங்குகின்றனர்; அன்றி கிராமதேவதைகளும், நோய்களும், பெண்மயமாக கூறுகின்றனர்; "சிவமெனுக் பொருளு மாகி சத்தியோடுசேரி னெத்தொழிலும் வல்லதாம், அவன் பிரிந்திடி லியங்குதற்குமரி தரிதெனுமறை யிறைஞ்சிடு" மென்றபடி சிவன் முதலியவர்களையும் அதிட்டித்து விளங்குவது சத்தியென்று கொள்ளப்படுகின்றனர்; ஆதலின், சத்தியின் திருவிளையாட்டே தம தமிசமாகவும், அவை தமதேவலாலும், தமது அதிட்டிப்பாலும் விளங்குகின்றனவாகவும் காணப்படுகின்றன. இதன்விரிவைச் சத்தியினுற்பவத்திற் காண்க.

எல்லம்மாள்

எல்லம்மாளென்பது எல்லைக்கு அரசி; அதாவது கிராமதேவதை என்று பொருள். இது "கோயிலில்லாவூரில் குடியிருக்க வேண்டாம்" என்றபடி சிலர்கூடிய ஒரு கிராமத்தில், கிராமத்தார் தங்களைக் காக்கும்பொருட்டுத் தங்கள் எல்லைக்கு ஒரு தேவதையை ஏற்பாடுசெய்து கொள்ளுவது இயல்பு. ஆனதாலேயே எல்லம்மனெனப் பெயர் பெற்றிருக்கிறது. இது அவரவர்களுக்கு கோர்ந்த குலதேவதையாகிலும், தாங்கள் முன்னிருந்தவூரின் தேவதையாகிலும், தாங்களிருக்குமிடத்தில் யாராலேனும் பூசிக்கப்பட்டிருந்த தேவதையாகிலும், அல்லது உத்தேசப்படி பார்வதி, காளி, மாரி, நாரணி முதலிய தேவதையாகிலும் நியமித்துக்கொள்ளுவது வழக்கமாயிருக்கின்றது. அத்தேவதை தெற்றெருவி லிருக்குமானுல் தெருவிநியம்மனென்றும், சந்திலிருக்குமானுல் சந்தியம்மனென்றும், சோலையிலிருக்குமானுல் சோலையம்மனென்றும், தென்னை, பனை, முதலிய கருக்குகளிலிருக்குமானுல் கருக்கமர்ந்தாளென்றும், வேப்ப நீழலிலிருக்குமானுல் வேம்படியாளென்றும், ஆல நீழலிலிருக்குமானுல் ஆலடியாளென்றும், இதுபோலெவ்விடத்திலிருக்கின்றதோ அவ்விடத்தின் பேராலேயே

வழங்குகின்றது. அன்றி, தாபித்தவர்கள் பெயராலும், இன்னும் பலவகைக் காரணங்களாலும் வழங்குகின்றன. இவர்கள் பிற்காலத்தில் ஒவ்வோர் மகத்துவம் பற்றியும் அனந்தம் பெயர்களை அடைகின்றனர். இவைகளுக்கெல்லாம் சரித்திரங்கள் விசிதமாயில்லாததால், இம்மட்டில் விடப்பட்டது.

பூவாடைக்காரி

பூவாடை யென்பது ஒவ்வொரு குலத்திலும் விவாகமாய் மங்கலியத்துடனிருந்து மரணமான மாதர்களைக் குலதெய்வமாகக் கோடிப்பது; இது ஒவ்வொரு குலத்திலும் குடியிலும் இயல்பாக நடந்தேறிவருகிறது. இத்தெய்வத்திற்கு வேறு நாமரூபாதிகளில்லை. ஆனாலும், பட்டாடை, புட்பம், மஞ்சள் முதலியவற்றை ஒரு பெட்டியில் வைத்துப் பூசிக்கும்விதியால் பூவாடையம்மன் எனப் பெயர்.

கன்னியம்மன்

மேற்சொன்னபடியே ஒவ்வொரு குடியிலும் விவாகமின்றி கன்னிப்பருவத்தில் மரணமான பெண்களைத் தங்கள் தங்கள் சுபகாரியங்களில் சுத்த பூசையாகக் கோடிப்பது இயல்பாக வழங்குகின்றது. அப்பெண்கள் கன்னிப் பருவத்தில் மரணமானதைப்பற்றி கன்னியம்மனெனவும், கன்னிமார்களெனவும் சொல்லப்படும்.

குலமாரி

இதுவும் ஒவ்வோர் குடியிலும் அமங்கலியாய் மரணமான மாதர்களைக் கற்பூர தீபாதிகளின்றி, வெள்ளைச்சீலையும் தின்பண்டங்களுடனும் அவைதிக பூசையாகக் கோடிக்கின்றனர்.

சஞ்சல தேவதைகள்

இதன்றி, அநேகர் தங்கள் குடிகோத்திர சூத்திரம் யாதொன்றுமில்லாது, நீரிலிறந்தவளைப் பாதாள பொன்னியம்மனென்றும், அக்கினியிலிறந்தவளை அக்கினியம்மனென்றும், ஒருத்தியைப் புதைத்த விடத்தில் புத்து மூடிக்கொண்டால் புத்தம்மனென்றும், அப்புத்தில் நாகமிருக்கப்பார்க்கில் அதை நாகம்மனென்றும், எந்தச் சாலியிலேனும் இறந்துகிடப்பவளை சாலம்மனென்றும், மலையிற் சென்றிறந்தவளை மலையாயியென்றும், பனைமரத்தடியில் இறந்துகிடப்பவளைப் பனையம்மனென்றும், இவ்வாறு இநேகவிதமாய்ப் புகழ்ந்து ஊரெல்லாங் கூடிப் பூசிப்பதுண்டு.

அன்றி, வெண்மையான நிறத்தோடிருந்து இறந்தவளே வெள்ளை யம்மனென்றும், கொண்டியாயிருந்திறந்தவளே கொண்டியம்மனென் றும் கூறி கோடிப்பதும் இயல்பாக நடந்தேறி வருகிறது. இது வைதிகசமயங்களும் மகம்மதியராதிகளும் அநுட்டிக்கின்றதில்லை. மற்ற இழிகுலத்தாரும் விவேகசூனியருமே கொண்டாடுவது இயல் பாய் இருக்கிறது. இது முற்றும் மடமையினும் மடமையே.

இத்தெய்வங்களே முன்னம் பிணமென்று சஞ்சலாதி காரியங்க ளைச் செய்துவிட்டு அப்பால் தெய்வமென்று அக்குடும்பத்தார் கொண்டாடுதலும், அதன்பின் சார்ந்தவரும், அப்பால் அவ்வீதியா ரும், அப்பால் அக்கிராமத்தாரும், அதற்கப்பால் உலகத்தார் யாவ ரும் வெருண்டு மருண்டு தெய்வமென்றே பயந்து துதிக்கின்றனர். யாதாமோர் விவேகி தடுக்கினும், 'ஊருடன் ஒத்துவா' ழென்பர்.

பெரியாண்டவன் அங்காளம்மன் அங்காயி

இது வாமமதத்தின் ஒரு பிரிவாம். என்றால், ஒருகாலத்தில் சிவபெருமான் பிரமன்தலை ஐந்திலொன்றைக் கிள்ளியபோது, பிரம பாவம் சிவனைச் சூழ்ந்துகொண்டு, அம்மயக்கத்தால் சஞ்சரித்துச் சுடலையிலிருக்கையில், பார்வதிசென்று தமது நாயகன் கையிலிருக் கும் பிரமகபாலத்தைப் பயறு, உண்டை முதலியவைகளைக்கொட்டி கீழிறங்கச்செய்து, அப்பிரமன் தலையைத் தன் காற்பெருவிரலிற் மிதித்துக்கொண்டு நாயகனது பிரமஹத்தியை நீக்கினள் என்று கூறுகின்றனர். பிரம கபாலத்தை மிதித்துள்ள காரணத்தால் அங் காளம்மன் என்றும், அங்காயி என்றும் பெயர் பெற்றனள்.

இப்பார்வதியார் மகா உக்கிரரூபத்தோடு காளிரூபமுற்றுச் சென்றமையால், மதமாமிசங்களோடும் பூசிப்பதாகத் தெரிகிறது. சிலர் வேறு சில கதையுங் கூறுகின்றனர். அக்கால் பரமசிவம் எல்லாத் தேவமுனிவர்களாலும் பெரியாண்டவனெனப் புகழ்ந்து கூறப்பட்டனராய் மேலும், சுடலையில் நின்று நடித்தபடியால் கூத் தாண்டவனென்றும், பெரியாண்டவனென்றும் கூறப்படுகிறது.

தருமராஜா

பாரதவீரருள் பாண்டுமகாராஜன் புத்திரர்களாகிய பாண்டவர் களில் சேட்டராகியிருந்தவர் தருமராசா. இவர் எமதருமராச னமி சம். பாரத யுத்தவீரர்களில் இவர் ஒருவர்தான் நேராக வைகுந்

தஞ் சென்றனர். இவர் தருமதெறி மாறுது தருமசொரூபமா யிருந்த தால் உலகத்தோர் இவரைப் பூசிக்கத் தொடங்கினர்.

தீபாஞ்சை அல்லது திரௌபதை

இப்பால், திரௌபதை பாஞ்சாலமன்னன் புத்திரியா யுதித்து மேற்படி தருமர் முதலிய பாண்டவரையும் மணம்புரிந்தவளாயினும், பஞ்ச கன்னிகைகளில் ஒருத்தியாய்க் கற்புதெறிமாறுத தெய்வ சொரூபமுற்றவள். இவள் பாஞ்சாலமன்னன் மகளாதலின் பாஞ் சாலி யென்றுங் கூறுகின்றனர். இந்தத் திரௌபதியம்மனுக்கு வருடோற்சவங்களில் அக்கினிப்பிரவேசஞ் செய்வதனால் தீபாஞ்சை யென்றும், தென்னாடுகளில் பெயர் வழங்குகின்றது.

குளுமாயி அல்லது ஓலைப்பிடாரி

சோழ நாட்டில், திருச்சிராப்பள்ளிக்கடுத்த உரையூரில், குட்டிக்குளு மாயி, பள்ளக்குளுமாயி, சட்டிக்குளுமாயி யென மூன்று தெய்வங்க ளிருக்கின்றன. பெயரால் வேறுபட்டாலும், தெய்வம் ஒன்றுதா னென்கிறார்கள். என்னையெனில், பிரதி மாசி மாதங்களிலும் நடக் கும் உற்சவங்களில் சுமார் இலட்சம் கருப்பு ஆட்டுக்குட்டிகளைக் காவு கொடுக்கின்றனர். இதில் குட்டிகளைக் கடித்து உதிரபெலி கொள்ளுதலால் குட்டிக் குளுமாயியென்றும், இரத்தங்களைச் சட்டி யிற் பிடித்துக் குடித்தலால் சட்டிக்குளுமாயி யென்றும், பூமியிற் பள்ளம்வெட்டி அப்பள்ளத்தில் இரத்தங்களை நிரைத்து உண்ணலால் பள்ளக்குளுமாயியென்றும் கூறுவதாம். என்றாலும், இவ்விரத்தங் களை உண்ணுகிறது கருப்பண்ண சுவாமியேயாம். உற்சவ காலங் களில் இரத்தத்தில் இவ்வம்மனை வேறு உருவமின்றி ஓலையினல் பிடாரி ரூபமாகச்செய்து வருவதால் ஓலைப்பிடாரியென்றும் கூறு கின்றனர். இவ்வம்மன் சரித்திரம் நன்றாய்த் தெரியவில்லை. இப் புறங்களில் செல்லாச்சி, பேச்சியாயி, பூமாயி, வீராயி, சடையாயி, மலையாயி, பொம்மக்காள், வெள்ளாயி, இளங்காளி, கருக்காயி, ஒண்டிவீரன், சங்கிலிவீரன், வீராவுத்தன், கருப்பன், சங்கிலிக் கருப்பன், மாமுண்டி, லக்கையர், பனையடியான், மலையாளி, ஒண்டிமுனி, பதினெட்டாம்படி கருப்பு, பாவாடைராயன், செல் லாண்டி, போதராசா, ராசாளி முதலிய தேவதைகள் வழங்குகின் றன; அவைகளின் சரித்திரம் நன்றாய்த் தெரியவில்லை.

காத்தாயி

சிவசுப்பிரமணியக்கடவுள் அக்கினிபகவானுல் சரவணப் பொய்கையை யடைந்த காலத்து பாற்கொடுத்த கார்த்திகையென்னும் இருடி பத்தினியையே காத்தாயியென்றும், அவள் பாலுண்டு சீவித்தமையாலேயே, முருகனுக்கு கார்த்திகேயனென்று பெயராய தெனக் கூறுகின்றனர்.

துற்காயி

காசியில், துற்காசூரனென்னும் ஓரசுரனைப் பார்வதியார் உருத்திராமிசமாக எதிர்த்துச் சம்மரித்தமையால் அவளுக்கே துற்காயி யெனப் பெயராயிற்றென்று காசிகண்டங் கூறுகின்றது.

கூத்தாண்டவர்

திருமால், சிவபெருமானே யருச்சித்துச் சக்கரதானம்பெற்று உலவுங்காலையில், விநாயகர் திருமாலை யழைத்து, அதென்ன காட்டென்று வாங்கிவிழுங்க, அக்கால் திருமால் கெஞ்சிக்கேட்டும் தராமையால் கூத்தாடி வருந்தி நிற்க, விநாயகர் சக்கரத்தைக் கொடுக்கப்பெற்றுச் சென்றதாக, காஞ்சிபுராணங் கூறுகின்றது; கூத்தாடிய காரணத்தினாலேயே திருமாலுக்குக் கூத்தாண்டவரெனப் பெயராயிற்றெனக் கூறுகின்றனர். இவ்வாறு திருமாலின் திருநடனத்தைக் கோணக்கி தாசிரிகளெனச் சிலர் ஆடுகின்றனர்.

கங்கையம்மன்

கங்கையம்மை யென்பது சிவனுடைய ஒரு பத்தினியேயாம். சிவனது முடியிலிருக்கும் கோலமாய்க் காட்டியதால் கங்கை பூவுலகில்வந்து உலகிலுள்ள வெப்புநோய் முதலியவற்றை ஒழித்து குளிர்வித்து எல்லா வளங்களையும் உண்டுபண்ணும் நிமித்தியம் உலகில் ஊட்டினகாலமாகிய சித்திரை, வைகாசி பல மாதங்களில் பலவேடமிட்டு வணங்குவதோடு அங்கங்கு ஆலயமும்கட்டிப் பூசிக்கின்றனர்.

வட்டப்பாய்ச்சி யம்மன்

இந்த அம்மன் சரிதத்தைப் பஞ்சகாவியங்களி லொன்றுன சிலப்பதிகாரமும், கோவலன் கதையும் கூறுகின்றது. இந்த அம்மன் தொண்டைநாட்டில் திருவொற்றியூரில் நியாகர் சன்னிதானத்

தின் மூலத்தானத்தி னருகில் திருக்கோயில் வீற்றிருக்கின்றனள். இந்த அம்மனுக்கு எருமைமாடு ஆடு கோழிகள் இவை வருடத்தில் ஏராளமாய்ப் பலியிட்டு வருகின்றனர். காளி அமிசமாகக் கூறு கின்றனர்; வருடத்தில் பதினைந்துநாள் உற்சவம் மகா உக்கிரமாய் நடக்கின்றது.

(முன்னர்) மதுரை வடபத்திரகாளி கோயிலை ஏதோ ஒரு காரணமாகப் பாண்டியர் சாத்தியிருக்கையில், ஒரு வாணியன் எண்ணெய் விலையாகவேண்டி விளக்கேற்ற பாண்டியரறிந்து அவ் வணிகனை வெட்டி மாய்த்தனர். பின்னர் வணிகன் மனைவி அம்ம னைக் குறைஇரக்க, அம்மன் பாண்டியரைக் குலமறுத்து வருவே னெனப் சபதங்கூறி, அவ்வணிகனை கோவலனாக வன்னமாலை யென்பவள் வயிற்றிலும், அவன் மனைவியை மாதவியென திருக் கடையூர் தாசிவீட்டினு முதிக்கச்செய்து தான் பாண்டியன் புத்திரியாக உதித்து, சாதகரால் பெட்டியில்வைத்து வைகையில்விட, செட்டிகளிடம் அகப்பட்டு வயதுவந்தவுடன் கோவலனை மணம் புரிந்திருக்கையில் கோவலன் மாதகியாகிய தாசியினிடம் சிக்கி, தன் சுயார்ச்சித பிதிராச்சிதங்களை யொழித்து வருந்துங்கால், கண்ணகி புருடனை யழைத்துவந்து தன்னோடுகூடவே பிறந்த காற்சிலம்பைக் கொடுத்து, தாசிகடனையடைத்து வாவென்றனுப்பித் தானும்போய் ஓரிடத்திலிருக்கையில், முன்னர்த் தன்னைப்பெற்ற பாண்டியன் மனைவி தன் காற்சிலம்பைச் சுத்தஞ்செய்து கொடுக்கும்படி தட்டா னிடங்கொடுக்க, அதனைக் கருடன் எடுத்துப் போனதால், கோவலன் விற்கவந்த சிலம்பைத் தங்கள் சிலம்பென்று நினைத்துக், கோவலனை வருத்திக் கொன்றனர். இதனைக் கண்ணகி யறிந்து, தனது சுய ரூபத்தை யெடுத்து, மதுரையைக் கொளுத்திக் கொள்ளைகொண்டு பழிவாங்கியதோடு, அண்டாத பெரு உக்கிரமாக் வருகிறபோது திருவொற்றியூரில் நியாக ராலயத்திற் புகுந்து, சுவாமி கட்டளையால் ஒரு கிணற்றில் நீரருந்துவதற்கு இறங்க, உடனே சாட்சாத் பரம சிவனர் ஒரு பாறைகொண்டு கிணற்றை மூடினர். அதனல் வட் டப்ப நாய்ச்சியார் எனப் பெயர்பெற்றுச் சிறிது சாந்தமாக எழுந் தருளி யிருக்கின்றனள். அவ்வாறு கொள்ளைகொண்டதைப் பிரதி, சித்திரை மாதத்திலும் மதுரையை யெரித்த திருவிழாவென, நடத்தி வருகின்றனர்.

பச்சையம்மன்

இந்த அம்மன் சரிதத்தைக் கஞ்சகிரிபுராணம், கேதார புராணம், திருச்செங்கோட்டுப் புராணம், காஞ்சிபுராணம், அருணாசலபுராணம் முதலிய நூற்களில் முறையே கூறப்பட்டிருக்கின்றது.

பார்வதியார் சிவனோடு அர்த்தபாகம் பெறவேண்டித் தவஞ் செய்ய, அனேக தலங்களை யடைந்து பூசித்து, தன் கோரிக்கையை நிறைவேற்றவந்த கோலமே பச்சையம்மனென்று கூறுகின்றனர். இந்த அம்மன் ஆலயத்தில்,

கருமுனி, செம்முனி, வாள்முனி, முதலிய சத்தமுனிகளும்,

ஒண்டிவீரன்	முடியாலழகி	விநாயகர்
பூங்குறத்தி	முடிமேல் முடியழகி	வள்ளியம்மை
வேங்கையம்மன்	ஆரியசுவாமி	தெய்வானை
காத்தாயி	மன்னுதலிங்கம்	திருமகள்
கருவேங்கை	திருமால்	கலைமகள்
மலைவேங்கை	பிரமன்	கௌதமர்
பூவேங்கை	சுப்பிரமணியர்	சிவபெருமான்

முதலிய தேவதைகளும் பரிவார தேவதைகளாக எழுந்தருளியிருக்கின்றனர். இத்தம்மன் எத்தத்தலத்தில் எழுந்தருளினாலோ அந்தந்த இடங்களிலும் அந்தந்த இருடிகளின் ஆசிரமமிருக்கின்றன. இத்தேவாலயங்களில் சுத்த பூசையும் சத்திய கிருத்தியங்களுமே நடக்கின்றதானாலும் வாள்முனிவருக்கும் ஒண்டிவீரனுக்கு மாத்திரமே ஆடு, கோழி முதலிய பலிகொடுக்கின்றனர். இவ்வாலயங்களில் பெரும்பாலும், சிலம்பு முதலிய வாத்தியங்களேயன்றி, உடுக்கை முதலியவைகள் கிடையா.

பொம்மியம்மை

இதனைப் பொம்மக்காளென மலையாள பிராந்தியங்களிலும், சேலம், கோயம்புத்தூர் முதலிய விடங்களிலும் கொண்டாடுகிறார்கள். இது ஒருசால தேவதையாகக் கூறுவதோடு சில விடங்களில் கிராம தேவதையாகவும், குலதேவதையாகவும் கொண்டாடுகின்றனர்.

பஞ்ச கன்னிகைகள்

பஞ்ச கன்னியர்களாவன:—அகலிகை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி என்பனவாம். இவர்களோடு அருந்ததி,

வாசுகி இவர்களைக்கூட்டிச் சத்த கன்னிகைகளென்றும் கூறுகின்றனர்.

சிரஞ்சீவிகள்

சிரஞ்சீவிகளாவன:—அசுவத்தாமர், அனுமார், ஆஞ்நாதர், அனந்நாதர், கிருபாசாரி, பரசுராமர், விபீடணர் இவர்களோடு மார்க்கண்டேயரையும் கூறுகின்றனர்.

உபேந்திரர்

திருமால் வாமனவதாரங் கொண்டகாலத்தில் உலகமெலாந் துதித்துக் கொண்டாட்டத் தக்கதாக இந்திரனுக்குத் தம்பியாயினர். அதனால் திருமா லம்சமாகிய வாமனருக்கு உபேந்திரரெனப் பட்டது என்று வாமன புராணங் கூறுகிறது.

மாப்பிள்ளை வீரன்

மாப்பிள்ளை வீரன் என்பது இப்புத்தகத்தில் முன் கூறிய சஞ்சல தேவதைகளின் மார்க்கமே யெழுந்தருளிய ஒரு தெய்வ மாம். அதாவது: ஒரு ஸ்நீயும் புருஷனும் விவாகஞ் செய்து கொண்டு மாப்பிள்ளைக்கோலமாக வழிப்பிரயாணம் செல்லுகையில் திடீரென்று காணமற்போனதாகவும், மடிந்ததாகவும் கூறுகின்றனர். இந்தத் தெய்வமிருக்கும் இடத்தில் பிரார்த்தனை செலுத்துவோரில் உண்மை விசுவாசமுள்ள அனேகர் முடியில் வீராவேசமாக எழுந்தருளி, அவரவர் கோரிக்கைக்கியன்ற மறுமொழி சொல்லுகின்றனர். வருடந்தோறும் திருவாரூர், நாகப்பட்டணம் முதலாகத் தென்தேச வாசிகள் யாவரும் பெருந்திரளாய்ச் செல்லுவதன்றியில் ஆடு, கோழி முதலிய உயிர்வதையும் பொங்கல், மாவிளக்கு, தின் பண்டமாதி பூசைகளும் விசேடமாய் நடத்துகின்றனர்.

பத்தினியம்மன்

பத்தினியம்மன் என்பது மேற்கூறியவாறே சஞ்சல தேவதைகளில், ஒன்று ஆயினும் இந்த அம்மன் விவரகம் செய்தபின் மடிந்ததாகத் தெரியவரினும், புருட சஞ்சாரமின்மையால் பத்தினியம்மனெனப் பெயர் பெற்றனள். இந்த அம்மன் நாகப்பட்டணத்திற்குப் புறம்பே உரல், உலக்கை முதலிய சத்தம் கேட்காதபடி ஊரின் புறம்பே பெருவெளியில் மரத்தடியி லெழுந்தருளி யிருக்கின்றனள். கடும்பாடி, பெரியபாளையம் முதலிய விடங்களில் செலுத்தும் பிரார்த்

தனிபோலவே பரசுராமன் சிலை முதலிய சருவவுருக்களுக்கும் எல்லாவித பூசைகளும் நடத்துகின்றனர்.

ஆண்டாள் உற்பவம்

'பார்வண்ண மடமங்கை' யென்கிற பூமிப்பிராட்டி, வேயர் குலத்திலு மொருகால் வளர்ந்தருளத் திருவுளம்பற்றி, ஸ்ரீ வில்லி புத்தூரில் வேதக்கோனை பெரியாழ்வார், ஒருநாள் தமது திரு நந்தவனத்தில் நிருத்துழாய்க்குக் கொட்டெடுத்து கொத்திக் கொண்டுவர, அங்கொரு திருத்துழாய் வேர் மண்ணின்கீழாக கலியாத்தம் தொண்ணூற்றெட்டில் நிகழ்ந்த களவருடத்தில் கற்கடக சூரிய பிரவேச காலமாகிய ஆடிமாசம் ஆறுந்தேதி சுக்கில பட்சம், சதுர்தசி செவ்வாய்க்கிழமை கூடிய பூரநட்சத்திரமாகிய சுபதினத்தில் ஸ்ரீ பூமிப்பிராட்டியின் அமிசையாய் சுவர்ன கவசத்தினுள் அற்புதமான திருவுருக்கொண்டு பிரகாசிக்க, அவர் கண்டு விம்மிதராய், இந்த ஸ்நிரீரத்தினத்தை அதிபிரீதி யுடன் தனக்கு புத்திரியாக வெடுத்துக்கொண்டு, "கரும்பார் குழற் கோதை" என்று திருநாமஞ்சாற்றி, திருமகள்போல ஒளிபெற வளர்த்தார். இங்ஙனமிருக்கையில், பெரியாழ்வார் வடபெருங் கோயி லுடையானுக்காக திருமாலைக் கட்டிப்போகிற விதத்தை அதிக நட்பமாகக் கற்று, சிலநாளைக்குமேல் தாமுமவரைத் தொடர்ந்து, திருநந்தவனத்துக்குப் போய் பூக்கொய்து, புட்டி லிற் சேர்த்துக் கொண்டுவந்து செண்டு மாலை, குழல்மாலை, முடி மாலை, கிளிமாலை, தொங்கல்மாலை, உலாமாலை, வெற்றிமாலை முதலிய நானுவித மாலைகளைத் தந்தை மகிழ்வடையும்படிக் கட்டிக்கொடுத்து வந்து, நாளுக்குநாள் பெருமாள் பக்கல் பிரேமை அதிகரிக்கப் பெற்று ஆழ்வாரில்லாத அவசரங்களிலே கட்டிவைத்திருக்கும் மாலைகளை யெடுத்து சூடிக்கொண்டு, "இந்த வடபெருங் கோயி லுடையானுக்கு நேரொவ்வா திருக்கிறேனே, ஒத்திருக்கிறேனே" என்னுஞ் சொல் வினைத்து, அவைதமை முன்னிருந்தபடியே வைத்து விடுவாள். இப்படி தினமும் நடந்தேறி வருவதைப் பெரியாழ்வா ரறியாதவராகி, புட்பங்களை யெடுத்துக்கொண்டுபோய்ப் பெருமா ளுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருக்க, அந்த புட்பங்கள் பெருமாள் திருமேனியில் சாத்தினவளவிலே என்றுமில்லாத நறுமணத்தை விசத்தலைப்பட்டன. அதைக் கவனித்த அருச்சகரும், திருமுற்றத்

தாரும், ஆழ்வாருடைய கைங்கர்யத்தின் அன்புதான் இப்படி மணங்கமழ்கிறதென்று அவர் திருவடிகளிலே மிகவும் பக்தியுத்தரா யிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் வடபெருங் கோயிலுடையான் தனது நிரேதுக்கடாட்சத்தாலே இவ்விரகசியத்தை வெளிகாணச்செய்து நாச்சியாருடைய அவதார விசேடமிருப்பதை யாவருமறிந்து உய்விக்கத் திருவுளம்பற்றி, ஒருநாள் நாச்சியார் அவனுக்காக வைத்திருந்த மாலைகளைச் சூடிக்கொண்டு கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டிருக்கையில் நினைவைச் சிறிது மாற்றிவிட, அவ்வளவிலே தகப்பனாரான பெரியாழ்வார் பார்த்து வியப்படைந்து, "குழந்தாய் நீ செய்தது அடிமைக்கவத்தம் விளைவதே" என்று கடிந்து, விரைவில் திருநந்தவனம் புக்கு பூக்கொய்துவந்து கட்டிக்கொண்டுபோய் சந்நிதியில் சமர்ப்பிக்க, அருச்சகர் வழக்கப்படியே எடுத்துச் சாத்தப் போகையில், வடபத்திரசாயி முகந்திருப்பங்கொண்டு சேவை சாதித்தான். மாலைகளும் பூர்வம்போல மணங்கமழாதது கண்டு அருச்சகர் விம்மிதராய்விட, அன்றிரவில் வடபத்திரசாயி ஆழ்வாருடைய சொப்பனத்திலெழுந்தருளி "நீர் நமக்குச் சிறிதும் மணமில்லாமலர்களை வகுத்தீ" ரெனவினவ ஆழ்வாரும் "எந்தையே! வழக்கப்படி வகுத்துவைத்திருந்த நறுமணத் திருமாலைகளை, தேவரடிமைச் சிறுபெண் வழங்காவகை கண்டனள். அதனைப் பொறுத்தருளவேண்டு" மென்று திருவடிகளைப் பிடித்துக்கொண்டுப் பிரார்த்திக்க, வடபத்திரசாயி ஆழ்வாரைநோக்கி, "அவளை நமக்குச் சூடிக் கொடுக்கவந்த சுடர்கொடியென்றறியீரோ? இனி அவள் தீண்டமுடித்துக்கொடுக்கும் மாலையே நாம் விருப்புற்ற தென்றறிந்து கொள்ளு" மென்றருளி மறைந்து, சன்னதி முதலியவைகளுக்கு மிப்படியே சொர்ப்பனமருளிப் போயினன். ஆழ்வார் நித்திரைகலைந்து விம்மிதராய் வீற்றிருக்கையில், சன்னதி கார்ப்பாரோடி வந்து தங்கள் சொர்ப்பனமிருந்தபடியை விண்ணப்பஞ் செய்ய, இவரும் தாம் கண்டதை யவர்களுக்கறிவித்து, 'இதனை யாராயக் கடவோமென்று அன்றெடுத்துவந்து கட்டிய புட்பங்களை நாச்சியார் திருமுன்புவைத்து இவைகளைச் சூடிக்கொடுக்கவேண்டுமென, அவ்வண்ணமே நாச்சியாருஞ் செய்ய, அவைகளைக் கொண்டுபோய்ச் சுவாமிக்குச் சமர்ப்பிக்க, அவை தம்மை அருச்சகரெடுத்துச் சாத்தப் போகையில் வடபத்திரசாயி, முன்னுள் திருப்பிக்கொண்ட தன்னு

டைய திருமுகத்தை செவ்வே திருத்தி திருக்கண்களை யலர்த்தி முறுவல்செய்து மகிழ்வெய்தி சேவை தந்தருளினன். அப்போது அருச்சகரும் கோயில் பரிகரத்தாரும் அதியாச்சரிய மடைந்து நாச்சியார் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து, கிருதார்த்தராயினர்கள். ஆழ்வாரும் மிகு களிப்படைந்து தம்முடைய திருமகளாரை அருட்கண்களால் நோக்கி ஆனந்தபாட்பம் பெருக திருவாய்திறந்து 'என்னை ஆண்டாளிவளே!" என்றருளி விசேட பிரதிபத்தி செய்து போந்தார்.

அதன்பின் நாச்சியார் ஈட்டுப் பெண்களேர்டு கலந்து மணலால் சிறு வீடுகட்டி விளையாடுகையில், அழகான மணவாளன் பாலியனுய் வந்து திருவடியாலதைச் சிதைத்தோட, 'சீதாவெங்கள் சிற்றில் வந்து சிதையேலே' என்று பாசுரமிட்டு, அந்த அவசரம் நீங்கின வாறே அவனுடைய கலியாணகுணதிசயங்களை வாயினூற்பாடி மனத் தினூற் சிந்தித்து, வடபெருங் கோயிலுடையானேடே தழுவிப் பரிமாறவேணுமென்று சொல்ல, அருச்சாவதார சமாதியாகையால் நினைத்தபடிக்கவன் முகங்காட்டாமையாலே மிகவும் நொந்து 'அவனேடு பரிமாறப் பெற்றருண்டோ வில்லையோ' வென்றாராய்ந்து தன்னேடாடும் பெண்களை இடைப்பெண்களாகவும், தான் அவர்களில் ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலை நந்தகோபன் திருமாளிகையாகவும், உள்ளுறங்குகிறவனைக் கண்ணனுகவும் அநுசந்தித்து, திருவாய்ப்பாடியில் தன்னுடைய திருவுள்ளங் குடிப்போய் பாவனுபிரகர்ஷத்தாலே அநுராகமுற்ற இடைப்பேச்சும், இடைநடையும், இடைமுடியு முடையவளாய், நிகில உபநிடத சாரதரமான திருப்பாவை முப்பதும் பாடியருளி நோன்புநூற்றும், 'நாச்சி திருமொழி' யென்னும் பிரபந்தத்தை யருளிச்செய்தும், "திருத்துழாயானது பரிமளத்தோடேகூட முளைக்குமாபோல ஆஜந்ய பால்ய யௌவனவஸ்தைகள் தோறும் பரமபுக்தி, பரமக்ஞான பரம பக்திகளை யுடையவளாய்க்கொண்டு" அவன் விடயமான காமபஜனுதிகளைப் பண்ணி வாழுங்காலத்திலே, பெரியாழ்வார் இந்த நாச்சியாருடைய விவேகயோக்கிய பருவத்தைக் கண்டு, வியாகுலாந்தக்காரணராக, அவர் கருத்தையறிந்த நாச்சியார், "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் நான் வாழ்கிலேன்" மாலிருஞ்சோலை யெம்மாயவரல்லால், வேறொருவரை விழியேனென்ன, ஆழ்வார், "நூற்றெட்டு திருப்

பதியி லெம்பெருமான்களில் நீராருக்கு வாழ்க்கைப்படுகிறீ" ரென்ன, 'அவருடைய குணசிசயங்களை குறிப்பிடு' வென்ன, ஆழ்வாரும் வடபெருங் கோயிலுடையான் வைபவமயமாக எம்பெருமான்களின் பைவங்களையெல்லாம் அருளிச்செய்ய, நாச்சியார் கேட்டு ஆனந்த பாட்பந் தூளிக்க, தென்னரங்கத்தின் னமுதருடைய குழலழகு வாயழகு கண்ணழகுகளை மனதில் காட்டி வியாகுலையா யிச்சித்து அழகிய மணவாளனையே காமித்திருக்க, அவனும் நாச்சியாருடைய சொப்பனத்தில் வந்து பாணிக்கிரஹணம் பண்ணிப்போக அந்தக் கனு வைபவத்தாலுண்டான களிப்பு உள்ளடங்காமல் சிந்தையைத் தூண்ட, "நாளைவதுவை மணமென்று நாளிட்டுப் பாளை கமுகு பரிசுடைப்பந்தற்கீழ் கோளரிவாமனன் கோவிந்தனென்பானோர், காளைபுகுதக் கனக்கண்டேன்" என்று பாசுரமிட்டுக்கொண்டு ஒளிய ரங்கத்து ளோங்குமொளியுளரான அணியரங்கத் தம்மானுக்கே தீர்ந்த காதலியுடையளாக, இவ்வளவில் ஆழ்வார் நோக்கி, 'கோதைக்குத் தக்க நாயகன் கோயிற்பிள்ளைதா' னென்று கருதி, 'இது கை கூடுமா யெங்ஙனே' யென்று சிந்தை கலங்கிக் கண்வளர்த்தருளி, திருவரங்கச் செல்வனார் அவர் சொப்பனத்தி லெழுந்தருளி, ஆழ்வீர்! உம்முடைய புத்திரியாகிய கோதையை நம்முடைய திருவரங்கத் திருமுற்றத்தேறக் கொண்டுவாரீர்; நாமே தகுதியாக பாணிக்கிரகணம் பண்ணிக்கொள்ளுகின்றோ' மென்றருளிச் செய்துபோக ஆழ்வாரும் கிர்ப்பரா யிருந்துவிட்டார்.

அவ்வளவிலே திருவரங்கச் செல்வனார் திருமுற்றத்தடியார்களைக் கடாட்சித்து, "நம்முடைய சத்திரசாமாதால விருதாதி சகல பரிசனங்களுடனே ஸ்ரீ வில்லிபுத்தூ ரேறச்சென்று, விஷ்ணு பத்தருடைய திருமகளாரான சூடிக்கொடுத்தாளை அழைத்துக் கொண்டு வாருமென்று அருளிச்செய்தவாறே, அவர்கள் சென்று ஆழ்வாரைக்கண் டடிபணிந்து நம்பெருமான் திருவாக்கை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் ஆச்சரியப்பட்டு வடபெருங்கோயி லுடையான் திருவடிகளை விண்ணப்பஞ்செய்து விடைகொண்டு ஆண்டாளை மணிப் பல்லக்கி லெழுந்தருளுவித்துக்கொண்டு ஆண்டாளை, ஸ்ரீ வல்லபதேவ பாண்டியனும் செல்வ நம்பியும் மற்றுமுள்ளவர்களும் கூடிச் சேவித்துக்கொண்டுவர, அகில வாத்திய கோட்டத்துடனே அனைவரும் காணும்படி நிகளாபுரமென்கிற உறையூரிலே வந்து

தங்க அப்போது அழகிய மணவாளன் சுந்திரசாமராஜி யலங்காரத் தோடு தீர்த்த பிரசாதங்க ளனுப்பிவைக்க, அவைகளே ஆழ்வாரும் திருமகளாரும் அதிபிரீதியுடன் அங்கீகரித்து மற்றதை மற்றவர்களுக் குப் பிரசாதித்து, அங்கிருந்து புறப்பட்டு திருவரங்கன் திருப்பதியுள் எழுந்தருளினவாறே, சூடிக்கொடுத்தாள் வந்தாள்; ஆண்டாள் வந் தாள்; திருப்பாவைபாடிய செல்விவந்தாள் என்று பல சின்னங்கள் பரிமாற வெழுந்தருள்வித்துக்கொண்டு அழகிய மணவாளன் திரு மண்டபத்துள் சென்று நின்று திருப்பல்லக்கின் பட்டுத்திரையை வாங்க, அப்போதே நாச்சியார் அகிலருங் காணும்படி உதறியுடுத்த பட்டுச்சேலையும், பருத்த செங்கழுநீர் மாலையும், திருநுதற் கத்தூரி நாமமும், கயல்போல மிளிர்ந்து காதளவோடிய கடைக்கண் விழி யும் பிரகாசிக்கச், சிலம்பார்க்க, சீரார்வளை யொலிப்ப, அன்ன மென்னடைகொண்டு அணியரங்கத் தம்மான் திருமுன்பே சென்று, கண்களாரக் கண்டுகளித்து, கேசவநம்பியைக் கால்பிடிப்பாளென் னும் பேர்பெற்று உள்ளே புகுந்து, நாகபரியங்கத்தை மிதித்தேறி, திருவரங்கச் செல்வனே சேர்ந்து அவன் திருவடிகளிலே அந்தர்ப்ப வித்தார்.

மகாலட்சுமி உற்பவம்

சகலலோக மாதாவாகிய சாட்சாத் திருமகள் முன்னர் ஒரு காலத்தில், பிருகு மகாமுனிவர் பரியையாகிய கியாதியினிடத்தில் காதா விதாதா என்கிற இரண்டு குமாரர்களையும், ஸ்ரீமந் நாராயண னுக்குப் பிரிய பத்தினியான ஸ்ரீதேவியென்று சொல்லப்பட்ட மகளை யும் பெற்றார்.

பின்னர், தேவரும் அசுரருங்கூடிப் பாற்கடலையடைந்து அமுதங்கடைந்த காலத்தில், அப் பாற்கடலினின்று அதியற்புத மும் அபூர்வமுமான திவ்வியகாந்தி விசேடத்தினாலே திக்குகளெல் லாம் பிரகாசிக்கும்படியாய், மலர்ந்த செந்தாமரைப் பொகுட்டை ஆசனமாகக்கொண்டு, தாமரைப் புட்பங்களையே திருக்கைகளிலும் தரித்துக்கொண்டு சகன் மாதாவான பெரிய பிராட்டியார் திருவவ தரிக்கக் கண்டு; மகா இருடிகளெல்லாம் பரமசந்தோட முத்தர் களாய் நிரீசுக்தங்களைக்கொண்டு பலவிதமாகத் தோத்திரஞ் செய் தார்கள்.

அப்போது பிராட்டியின் சந்நிதியிலே விசுவாவசு முதலான கந்தருவர்கள் கீதங்களைப்பாடினர்கள். கிருதாசி முதலான அச்சரஸ்திரீகள் நிர்த்தனஞ் செய்தார்கள். கங்கை முதலான மகாநதிகள் தங்கள் தீர்த்தங்களைக்கொண்டு அந்தப் பிராட்டியின் திருமஞ்சனத்திற்காக ஸ்ரீரூபந்தரித்துச் சேவித்து நின்றன. திக்கயங்கள் நவரத்தின கசிதமான சொர்ண கலசங்களிலே அந்த நதிதீர்த்தங்களை பெடுத்து சருவலோக மயேசுவரியான அந்தப் பிராட்டிக்குத் திருமஞ்சனம் செய்வித்தன. அந்தச்சிராதி ஒரு புருடரூபத்தைத் தரித்து நித்திய விகசிதமான திவ்விய மாலிகையைத் தாயாருக்குச் சமர்ப்பித்து உடனே விசுவகன்மாவானவன் திவ்விய ரத்தினமயமான திருவாபரணங்களைத் தாயார் திருமேனியிலே சாத்தினான். இவ்விதமாய் அவரவர் செய்த கயிங்கரியங்களைத் திருவுள்ளம்பற்றித் திருமஞ்சனங் கண்டருளித் திருவாபரணம் திருமாலை முதலானவைகளைச் சாத்திக்கொண்டு அந்தப் பிராட்டியானவள் பிரமருத்திரபுரந்தராதி தேவர்கள் பார்த்துக்கொண்டேயிருக்க, அந்தத் தேவசங்கத்தின் நடுவே எழுந்தருளியிருந்த பெருமாளுடைய திருமார்பிலே எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீதேவி பிருகுமகாரிஷிக்குக் கியாதியென்கிற ஸ்திரீயிடத்தில் அவதரித்தாளென்று சொன்னேம். பின் திருப்பாற்கடலிலேயும் அவதரித்தாள். இதுமாத்திரமன்று; உலகநாதன் எப்போதெப்போது உலகங்களில் அவதரிப்பானோ அப்போதெல்லாம் ஸ்ரீதேவியும் அவனோடுகூடவே அவதாரஞ் செய்தருளுவள். நாராயணன் அதிதிக்குக் குமாரனாக அவதரித்தபோது இவள் பதுமையென்கிற திருநாமமுடையவளாயும், அவன் பரசுராமனாக அவதரித்தபோது இவள் தரணியாகவும், அவன் சக்கிரவர்த்தித் திருமகனாகபோது இவள் சீதாபிராட்டியாயும், கண்ணனாக அவதரித்தபோது இவள் உருக்குமணியாகவும் இப்படியே எம்பெருமானை விட்டுப் பிரியாமல் கூடவே அவதரித்து வந்தனள்.

நான்காவது

மதபேத காண்டம்

மதமாவது விவேகிகளால் தங்கள் தங்கள் அறிவின் தன்மைக் கேற்க ஒரு தெய்வத்தையும், ஆசார கிருத்தியங்களையும், நடையுடை யாதிகளையும் ஏற்பாடுசெய்து அவ்வழியே தத்தமது சார்பினரையும் நடக்க வற்புறுத்தி, ஒரு நூலியற்றி யொழுகும் ஒரு முடிபேயாம். அஃது உலகில் அளவிறந்ததாய்க் காணப்படுகின்றது. அவைகளில், சில மதங்கள் பூர்வீகமாகியும், சில மதங்கள் இடையிற்றோன்றிய தாயும், சில மதங்கள் தற்காலத் தண்டானதாயு மிருக்கின்றன. அவற்றுள் சில மதங்கள் விக்கிரகாராதனையோடு கூடியதாயும், சில மதங்கள் ஆராதனை முதலியவைகளில்லாததாயும், சில மதங்கள் தெய்வமே யில்லையென்றும், சில மதங்கள் தாங்களே தெய்வமென் றும் கூறுகின்றன. இதில் அநேக மதங்கள் தங்கள் தெய்வமுண் டென்று கூறினும், அதன் இலட்சணங்க ளின்னதென்று கூறுமலே மனம்போனபடியே சாத்திரங்களின்றி அனுட்டித்து வருகின்றன. அவற்றுள் சில மதம்,

காற்றே	தெய்வமென்றும்	பட்சிகளே	தெய்வமென்றும்
சந்திரனே	,,	சத்தியே	,,
அக்கினியே	,,	தந்தைதாயுமே	,,
தீபமே	,,	பஞ்சகந்தமே	,,
சூரியனே	,,	சுவாசமே	,,
பஞ்சபூதமே	,,	நவக்கிரகங்களே	,,
ஆகாயமே	,,	அறிவே	,,
பூமியே	,,	அரூபமே	,,
மரங்களே	,,	ஆசாரியனே	,,
பாம்புகளே	,,	நட்சத்திரங்களே	,,

இதுமுதல் அனந்தவிதமாகக் கூறி மகிழுகின்றன. வேறு அனேக மதங்கள் சமய சின்னங்கள்; சாத்திரம்; நியமம் முதலியவைக ளின்றி ஆடு, மாடு, பன்றி, கோழி முதலியவைகளைக் கொல்லுதலும், குடித்து வெறித்து ஆடுதலுமே முடிவாகக்கொண்டு காளி, கூளி, அண்ணன்மார்; வீரன்; இருளன்; சாலக்காள்; கருப்பன்;

காளன்; நீலன்; மலியாளி முதலிய தேவதைகளைப் பூசித்தும்; சில மதங்கள் பிறரை வஞ்சித்தல்; கொல்லல்; கிருடல்; வெல்லல்; ஆட்டல்; அடித்தல் முதலிய பிரயோசனங்களையே முடிபாகக் கொண்டு கொள்ளி; குறளி; தூமா; கூட்டேரி; குட்டிச்சாத்தான்; மலக்குட்டி முதலியவைகளையே தேவதையாகக் கொண்டும், சில மதங்கள் யாசித்தல் முதலியவைகளையே பயனாகக் கொண்டு பல வேடமிட்டும்; சில மதம் இன்னதென்று தெரியாமலே உண்டு தங்கியொழிந்தும் வியர்த்தமாகின்றன.

இங்ஙனந் தோன்றிய மதங்களுள் ஒவ்வொரு மதங்களும் ஆசாரிய நாமரூப கிரியாபேதங்களால் அனந்தவகைப்பட் டிருக்கின்றன. அவற்றுள் சிறிஸ்துமத மென்பதொன்று மாத்திரம் ஏறக் குறைய இருநூற்றைம்பது பேதமாயிருக்கின்றது என்றால், மற்ற மதங்களின் பேதபாவங்களை அளவிடக்கூடுமோ?

மதங்கள்

1	சைவம்	20	காளாமுகம்
2	வைணவம்	21	வாமம்
3	சாத்தேயம்	22	பைரவம்
4	கணபத்தியம்	23	பாடணவாதம்
5	கௌமாரம்	24	சாங்கிராந்தவாதம்
6	புத்தம்	25	அவிகாரவாதம்
7	சௌராந்திகம்	26	பரிணாமவாதம்
8	யோகாசாரம்	27	சுத்தசைவம்
9	மாத்துமீகம்	28	பேதாவாதசைவம்
10	வைபாடிகம்	29	ஆதிசைவம்
11	ஆருகதம்	30	நிரீச்சுரவாதம்
12	தார்க்கீகம்	31	சுமார்த்தம்
13	மீமாஞ்சம்	32	வீரசைவம்
14	மாயாவாதம்	33	அத்துவைதம்
15	சாங்கியம்	34	விசிட்டாத்துவைதம்
16	யோகம்	35	ஆத்திகம்
17	பஞ்சராத்திரம்	36	நாத்திகம்
18	பாசுபதம்	37	பிரமசமாசம்
19	மாவிரதம்	38	வரவைணவம்

39 இராமானுசம்
40 மாத்துவாசாரம்
41 பாட்கரம்
42 இராமாநந்தம்
43 வல்லபசாரம்
44 சைனியம்
45 சமணம்
46 பௌத்தம்
47 சார்வாகமம்
48 சாங்கிரம்
49 கிரகாதிகம்
50 பஞ்சபூதாத்துமம்
51 இந்திரியாத்தும்ம்
52 அந்தக்கரணத்துமம்
53 பிரணத்துமம்
54 சூனியவாதம்
55 சிவசமவாதம்
56 அச்சுமாரூவாதம்
57 வேதசமாசம்
58 சீக்கியம்
59 தியாசபிகல்
60 மகம்மதியம்
61 கிறிஸ்து
62 சினம்
63 எகிப்து
64 யூதேயம்
65 கிரீக்கு
66 ரோமன்
67 புரோடெஸ்டாண்டு
68 லூத்தர்
69 பாப்டிஸ்டு
70 வெஸ்லின்
71 ஓபிட்பில்ட்டிஸ்ட்
72 காலவனிஸ்ட்
73 பிரிசிபிடேரியன்
74 அண்டினேமியனர்
75 யூனிடேர்யன்
76 சொஸ்னியர்
77 அரியான்
78 சாபிலயன்
79 லண்டன்மிஷன்
80 ஸ்காட்சுமிஷன்
81 எபிஸ்கோபில்
82 குவர்கர்
83 பிரமேசன்
84 சுவேதன்பர்கியர்
85 பார்சிகம்
86 கிரேக்
87 ரோமகர்
88 ஸ்காந்திநேவியர்
89 மெக்சிகோ
90 தார்தார்யா
91 ஜப்பான்
92 சியம்
93 பெரூவியன்
94 கனடா
95 பைகோ
96 பிலிபியன்
97 மலாகா
98 சுமேத்ராபோர்னியர்
99 ஜாவா
100 மாலாயா
101 லாப்லா
102 காங்கோ
103 அரக்கான்
104 உருத்திரன்
105 பாடாண்டம்
106 மிசிசிபி

107 பிலோரடைன்
108 காரபி
109 கினியா
110 பெனின்
111 கபிரேயன்
112 தாந்தோன்றி
113 லீலாபிரம்மவாதி
114 பிரதிவிம்பவாதி
115 வைதிகவேதாந்தம்
116 சுத்தவேதாந்தம்
117 நீரிசுரசாங்கியம்
118 வைசேஷியம்
119 வையாயிகம்
120 சிவாத்துவிதம்
121 பாஸ்கரியம்
122 சத்தப்பிரமவாதி
123 பாட்டம்
124 கிரீடாப்பிரமவாதி
125 பிரபாமரம்
126 ஆரங்கம்
127 பௌராணிகம்
128 உபக்கிரமவாதி
129 சிவசம்வாதம்
130 அயிக்கவாதம்
131 பாசுபதிமதம்
132 சங்கிராந்தி
133 பிரவாஹேஸ்வராதி
134 சம்மேளிதம்
135 அனேகசுரவாதம்
136 கவுளயாமளவாதம்
137 ஆசீவாதம்
138 சந்திரவாதம்
139 சூரியவாதம்
140 அக்கினிவாதம்
141 ஊழ்வாதி
142 காலவாதி
143 மந்திரவாதி
144 அவிழ்தவாதி
145 எந்திரவாதி
146 அத்துவாசங்கவாதி
147 தர்க்கவாதி
148 தானசங்கற்பவாதி
149 விரதசங்கற்பவாதி
150 கதோளவாதி

முதலிய அனேக மதங்களிருக்கின்றன. அம்மதங்களுக்கு தேசத்தாலும், ஆசாரத்தாலும், இடத்தாலும், ஆசாரியராலும், சாதியாலும் இவ்விதபெயர்களமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதில் யாதொரு காரணமின்றி வைராக்கியத்தாலும் உண்டானதாகவும், யாதொரு ஏற்பாடு மில்லாமலே தோன்றியதாகவுங்கூட சில மதங்களிருக்கின்றன.

அம்மதங்கள்1 அனேகந்தோன்றி யழிந்தும், அனேகம் நூதனமாகத்தோன்றியும், அநேகம் அநாதியாகவு மிருக்கின்றன. இவைகள் உலகம் அனேககாலமா யிருப்பதாலும், இவ்வுலகம் அளவில்லாத இடமகன்ற பெரிய நிலமாயிருப்பதாலும், இந்நிலங்களில் வசிப்பவர்கள் எண்ணற்றவர்களா யிருப்பதாலும், அவர்கள் விவேகம்

பலமாதிரியான தோற்றமாயிருப்பதாலும், இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற உண்டி, உடை, நடைகளைக் கொள்ளவேண்டியதாயிருப்பதாலும், பிறந்தவர்கள் யாவருக்கும் யார் நம்மைப் படைத்தவர்கள் அவர்களல்லவோ தெய்வமென்னு முணர்ச்சியிருப்பதாலும், அவரவர்களிஷ்டப்படி ஒவ்வொரு முடிபாய் மதங்கள் அனேகமாயின வல்லாமல் வேறல்ல. அவற்றுள் நமது இந்துதேசத்தில் தற்காலங் காணப்படும் மதங்களில் சிலவற்றை மட்டுங் கூறுகின்றோம்.

இந்து சமயம்

இந்துதேசம் * இந்து சமயம் என்பது இந்திய தேசத்தில் வழங்கும் சமயங்களே யாம்.

இந்தியாதேசமானது ஆசியாகண்டத்தின் தென் திசையில் வடபாகமாயுள்ள ஒரு பகுதி. இது தெற்கு வடக்கில் பத்தொன்பதினாயிரம் மைல் நீளமும், கிழக்கு மேற்கில் ஆயிரத்தெண்ணூறு மைல் அகலமும், அதாவது: பதினைந்துலட்சம் மைல் சுற்றளவுமாயுள்ளது,

காலம்

இக்கண்டத்தின் காலவரையறையைக் கூறுமிடத்து இந்நாட்டு சாத்திரங்களாலும், பிற்கால ஆங்கிலேய அரசாட்சியில் குடிமதிப்பைச் சபையாரால் பிரசித்தஞ்செய்துள்ள ரிபோர்டுகளாலும் கால கணிதங் கூறக்கூடியதாயில்லை.

இந்துக்கள்

ஆயினும் இராசாங்க கலகங்களாலும், சில அடவிகளைச் சேதித்துக் குடியேற்றும் காரணமாகவும், இடையில் அநேக வேறு தேசத்தவர்கள் குடியேறியதாகத் தெரிகிறது. வேறுசிலர் இத்தேசத்தில் குடியேறிய காலத்தை எந்நூலுங் குறிக்கவில்லையெனக் கூறியும், சிலர் கிறிஸ்து பிறந்த மூன்நூறு வருடத்திற்குமுன்பு மத்திய மாகாணத்தின் கடற்கரையில் இடையர்களாயிருந்த சீக்கிய மங்கோலியர் முதலியவர்கள் முன்னர் துரேனியராய் அப்பால் ஆரியராகி பாரசீக

* இந்துதேச மென்பது இந்து நதிகாரணமாக வழங்குகின்றது. இதை முன்னொருகால் பரதனுண்டமையால் பரதகண்டமென்றும், பரதவருடமென்றும், ஆரியர்கள் வசித்தமையால் ஆரியவர்த்தமென்றும், இத்தேசத்தின் நாவல் விருட்சங் காரணமாக சம்புத்தீபமென்றும் கூறுகின்றனர்.

தேசத்தின்மேல் விழுந்து இந்து தேசத்திற்குவந்து சிந்துநதி தீரத்தில் குடியேறினர். அச்சிந்து நதிக்கு இந்துநதி என்றொரு பேரு மிருந்ததால் அந்நதி தீரத்திலிருந்தவர்களுக்கும் இந்துக்களென்றோர் பெயருண்டானது என்று கூறுகின்றனர்.

வேறுசிலர், கிறிஸ்துபிறந்த ஆயிரத்தைந்நூறு வருடத்திற்கு முன் மத்தியிலிருக்கும் திராவிடர் முதலியவர்களோடு ஆரியர் இந்து தேசத்திற் பரவினரென்றுங் கூறுகின்றனர்.

இந்துக்களின் பாஷை

அவர்கள் குடியேறியபோது நாளாவட்டத்தில் இந்து வங்காளம், மாராட்டிரம், குசராத்தி, பஞ்சாபி, காஸ்மீரம், சிந்தி, ஒரியா, தமிழ், மலையாளம், கன்னடம், காண்டு, தெலுங்கு, கொலோரியன் முதலான பாஷைகளை வழங்கி வந்ததாகவுங் கூறுகின்றனர். ஆனல் தற்காலம் அநேக பாஷைகள் வழங்குகின்றன.

இந்துக்களின் சாத்திரங்கள்

இப்பாஷைகளுக்கெல்லாம் முதற்பாஷையாகவும், யாவரும் புகழத்தக்கதாயுமுள்ளது தமிழ், சமஸ்கிருதம் என்பதேயாம். இச் சமஸ்கிருத பாஷையில் இந்துக்களின் முக்கிய சாத்திரங்களாகிய வேதம், ஆகமம், உபநிடதம், புராணம், இதிகாசம், சாத்திரம் முதலியவைகள் பொருந்தியிருக்கின்றன.

தெய்வங்கள்

இச்சாத்திரங்களில் இந்துக்களுக்குப் பரதெய்வமாயுள்ளது பிரமம், மகேச்சுரன், சதாசிவன், சிவன், உருத்திரன், விநாயகன், கந்தன், பார்வதி, நந்தி, திருமால், பிரமன், இலக்குமி, சரசுவதி முதலிய தேவதைகளும், ஸ்ரீ ஞானசம்பந்தர் முதலிய அடியார்களும், அவர் வழிவந்தவர்களும், அவர்களடியார் பொருட்டுக்கொண்ட திருமேனிகளின் பிரபாவமும் கூறப்படுகின்றன.

சாதி

அவற்றை அநுட்டிப்பவர்கள் பிரம்ம சந்ததியாரான மறையோர், மன்னர், வணிகர், வேளாளர் முதலிய எண்ணற்ற பிறப்பினராம்.

ஆசாரிய பீடங்கள்

இவர்களுக்கு ஆசாரிய பீடங்கள் காசி, காஞ்சி, மதுரை, கும்ப கோணம், திருவாவடுதுறை, தருமபுரம், பொம்மபாளையம், அந்தி யூர், திருக்குமூளம், திருப்பனந்தாள், திருநெல்வேலி, சிங்கேரி, சென்னை முதலிய அனேக இடங்களிலிருக்கின்றன.

மதங்கள்

இவர்கள் தங்கள் ஆசாரியர் மூலமாக மேற்படி சாத்திர நெறியே நின்று மேற்கூறிய தெய்வங்களையே கடைப்பிடித்தவர் களேயாயும், அவருள் பலகொள்கையையும் பல சித்தாந்தத்தையும் கொண்டவர்களாயும் அனேக சமயிகளாயிருக்கின்றனர். அவற்றுள்,

முதலாவது சைவசமயம்

சைவம் என்பது சிவ சம்பந்தம் என்றும், சிவபெருமானே வழி படுவோர்களென்றுமாம். இவர்கள் விபூதி உருத்திராக்க காவியாதி களை பணிந்து, வேதாகம நெறியே வழிபட்டிருப்பவர்கள்.

இவர் உட்சமயங்கள்

ஆகமநெறியாக சொல்லும் சமயங்கள்.

இதில் வேறு சாங்கியத்தோடு அட்டவாதம்	8
,, பேதமாகவுள்ள சமயம்	16
அன்றிப் புறச் சமயம்	3
,, பாடன முதலிய சமயம்	38
,, பாசாண்டமதம்	90

அவற்றுள்,—சைவம், சிவாத்துவிதம், சம்மேளனம், பாசுப தம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் இவைகளே அட்ட சைவமாம். சைவபேதமாயுள்ளது ஊற்றசைவம், அனுதிசைவம், ஆதி சைவம், மகாசைவம், பேதசைவம், அபேதசைவம், அந்தரசைவம், குணசைவம், நிற்குணசைவம், அத்துவாசைவம், யோகசைவம், ஞானசைவம், அவாந்தரசைவம், கிரியாசைவம், சுத்தசைவம், காது பாதசைவம், பேதசைவம் என்னும் பதினுறுமாம்; இவையன்றி, அட்டவாதமாவது சிவசமவாதி, ஐக்கவாதி, சங்கிராந்தவாதி, பிரவாகேசுரவாதி, கபாலிகவாதி, அவிகாரவாதி, பேதாபேதவாதி, அனேக சுரவாதி என்பனவாம்.

வேதாங்கீகாரமான வைதிகத்திற் பேதமானது:—நியாயம், வைசேடிகம், மீமாஞ்சம், சாங்கியம், வைணவம், பாட்டம், பிரபாகரம், சத்தப்பிரமவாதி, புராணீகன் என்பனவுமாம்.

முதலாவது:—மேற்சொன்ன சத்த சைவங்களுள் சைவத்தின் பகுதியே சத்த விதமாயிருக்கின்றன. அவை அஞ்திசைவம், ஆதிசைவம், மகாசைவம், அணுசைவம், அவாந்திரசைவம், பிரவாசைவம், அந்தரசைவம், என்று ஏழுவிதமாயிருப்பன. இவற்றுள்,—

1. சிவனே அஞ்திசைவன்.

2. சிவபெருமான் முகம் ஐந்தில் தீட்சதரான கோப்த சுகாதி இருடிகளே ஆதிசைவர்கள்.

3. மேற்படி இருடிகளின் கோத்திரரும், தீட்சதரான சிவ தத்துவங்களை அனுட்டிப்பவர்களே மகாசைவர்கள்.

4. சிவ சமத்காரங்களை அனுட்டிப்பவர்களான க்ஷத்திரியர்களே அணுசைவர்.

5. சைவதீட்சா சம்பன்னரான சூத்திரர்களே அவாந்திரசைவர்களாம்.

6. சைவதீட்சா சம்பன்னரான அம்பரீட்டுலா வாதிகளே பிரவாசைவர்.

7. தீட்சாவிதரானவர்களே அந்தர சைவரென்று ஆகமஞ் சொல்லுகின்றன.

இரண்டாவது:—இச்சைவம், வாமம், தட்சணம், மிசிரம், சித்தாந்தம் என்று நான்கு வகைப்படும். அவையாவன:—

1. சத்தியே பரமென்பது வாமம்.
2. வயிரவ பரமானதே தட்சணம்.
3. சத்தமாதுற்பவமானதே மிசிரம்.
4. பரமசிவமானதே சித்தாந்தம் என்பர்.

மூன்றாவது:— இச்சைவங்களில் வீரசைவம், சுத்தசைவம், மிசிரசைவம், சாமானியசைவம் என நான்கு வகையாம். அவற்றுள்:—

1. விபூதிதாரண மந்திர சுத்தாத்தமனுய் * இலிங்கங்களைக் கண்டவுடனே நமஸ்கார பிரதக்ஷண பூஜைகளைச் செய்து பத்தி சிரவணுதிகளை மேற்கொண்டு சிவபுண்ணிய விரதசீலனு யிருப்பவன் சாமான்னியசைவன்.

2. † பஞ்சமூர்த்திகளையும் ஆவரண தேவதைகளாய் வைத்து ஆகமப்படி அருச்சித்து அந்தெறியே ஒழுகுபவன் மிசிரசைவன்.

3. ஆதிசைவமரபில் மகாவேதாதி ஆகம சித்தாந்தியா யிருப் பவனே சுத்தசைவன். இவனை வேறு சில பேதமாகவுங் கூறுவர்.

4. வீரசைவமதத்தி னிலக்கணங்களை கேர்ந்தவிடத்தில் இந் நூலிற்காண்க.

ஆகமசம்பந்தமான சத்தசைவப் பகுதியில்

சிவாத்விதி மதம்

சிவபெருமான் நித்த சுத்த முத்தனுய் இரண்டாவதின்றி அறிவே வடிவாயிருப்பன். அலைகடலினுரை நிலையுறுத் தொடுங் குமாபோல, பேதமாய் ஆன்மாக்கள்தோறும் நின்றும் தன்னை மறைத்து உபாதிகளில் சுகதுக்கம்போனின்று தானே வேறின்றி எல்லாமாயிருப்பன்.—முத்திநிலை சாம்பவி தீட்சைபெற்று அனுபவ நிட்டையால் இலயமாய்ப் பெறுவன் என்று கூறும்.

சம்மேளிதசைவ மதம்

நிரிபதார்த்தமும் நிச்சயமே: பாசம் - அனுதியாய் பசுவைப் பந்திக்கும்; பதி - அனுதிமுத்தன்; பாசம் - அனுதி; பசன் - வயிந் துவ சரீரன்; பசு - அனேகமாய், தனுவாதிபோகன்; பாசம் - பந் தம் என்றும், சிவத்தியான ஞானபூசையால் பந்தங்களை நீக்கி சிவனேடைக்கியமாதலே முத்தி என்றுங் கூறும்.

---

* இலிங்கன் என்று பொதுவாகச் சொன்னதனுல் சுயம்புலிங்கம் தேவ லிங்கம் தானலிங்கம் இருஷிலிங்கம் மானசலிங்கம் முதலியவைகளெனக் கொள்க.

† பஞ்சமூர்த்திகளாவன:—சிவன், உமை, குகன், கணபதி, விஷ்ணு என்பனவாம். சிலர் சூரியனையுஞ் சேர்த்து ஆறுமூர்த்திகளாகக் கொள்ளு வதும் வழக்கே.

உதாரணம்:—

பாசமாம் பந்தம் பசுபெத்தன் முத்தனும்
ஈச னனுதி யிவர்ஞான—பூசையா
லம்மோக மாறி யவரொன்றல் வீடென்ருன்
சம்மே ளிதசைவன் ருன்.

பாசுபதி மதம்

பாசுபதமதமாவது—திரிபதார்த்தமே நித்தியமென்று கொண்டு தீட்சைபெற்று ஆசாரியன் மூலமாய் உபதேசம் பெற்று சிவபூசையால் நீரோடு நீர் கூடினற்போலக் கலந்திருப்பதே முத்தியென்று கூறும்.

மகாவிரதி மதம்

சிவனொருவனுண்டு; ஆன்மாக்க ளனுதியில் மலத்திரையங்களோடு கூடி வசிப்பர்; இம் * மும்மலங்களும் அனுதியாயுண்டு; பதி பசு பாசங்கள் நித்தியமே; பதி - தனது ஞானசத்தியால் ஆன்மாக்களைப் பெத்தாவத்தை படச்செய்வது; பசுவானது மும்மலத்தினும் பந்திக்கப்பட்டு சென்னவேது வடைகின்றன; பாசமானது பசுவுக்குப் பந்தமாய் ஞானசத்தியால் பலங்கெட்டுப் பக்குவமாகின்றன.

பந்தநிலை:—அனுதியில் மும்மலத்தில் பந்தப்பட்ட ஆன்மாக்கள் மாயையிடம் தனது கரணங்களை யுண்டுபண்ணிப் பலபக்குவமாக, சனன மரணங்களை யுண்டாக்கி, துக்கங்களை யனுபவிக்கப்பண்ணுவது.

முத்திநிலை:—ஆன்மா ஒரு பக்குவத்தால் தீட்சைவிதியால் மலத்தினின்று நீங்கி ஆகமப் பிரமாதிகளால் பூசித்து, கடைசியில் கருத்தத்துவ சங்காரத்தைவிட்டு நித்திய வியாபக சைதன்னியனான ஆன்மா சிவனது ஞானசத்தியை யுடையதாய்ச் சிவலோகத்தில் ஞானமாத்திரத்துடனே யிருப்பான் என்பது; இது ஓர் உருத்திரரால் ஏற்படுத்தப்பட்டது.

காளாமுதன் மதம்

காளாமுதன் மதமாவது, மேற்படி மகாவிரதியைப்போலவே சொரூப உக்கிரம பெத்த முத்தியெல்லாஞ் சரியென்றறிக. ஆனால்,

* மும்மலமாவன - ஆணவம், கன்மம், மாயை.

மகா விரதிக்கும் இவனுக்கும் பேதமென்னவென்றால், தந்திரபேதம் சிறிதுண்டு. அவை யாதெனில், ஆன்மா நித்திய வியாபக சைதன்னிய னென்பதே.

உதாரணம்:—

அத்தியக்கஞ் சடைமுதலா மடையாளங் கொண்டன்பாற்
பத்தியொடு வழிவிட்டுப் பருகியமங்க டொலையாமன்
மெத்தரிய லவ்வுமேல வினையயாலுடலம் விடும்பொழுது
சித்தாதொருஞ் சிவலோக மடைவர் சிவார்ச்சனையாலே.

—க. நி. போ. சாரம்.

வாம மதம்

இது சத்திமதம். இதை சாத்தேய மதமென்றும் கூறுவர். இம்மதத்தர் சத்தியே பரமென்றும், சத்தியினாலேயே சகல சராசரங்களும் உண்டாய், பஞ்ச கிருத்தியப்படுகிற தென்றும், அம்மையையன்றி வேறொருவரு மிக்கவரில்லை யென்றும், பிரமாதி தேவர்களும் அம்மையினது சிருட்டியே யென்றும் கூறும்.

முத்தி நிலையாவது:—இச்சத்தி வாலை, புவனை, திரிபுரை என்று மூன்றாய் மூன்று சக்கரங்களைக் கொண்டுள்ள தென்றும், அச்சக்கரங்களை பொன் முதலிய லோகங்களில் பூ, மேரு முதலிய விஸ்தாரமாக வார்ப்பித்து மந்திராதிகளால் பூசித்து பிரசன்னத்துவ மாக்கிக் கொண்டு வழிபாடுடையவரா யிருப்பதுவே மோட்சமெனும் அநேக சுரவாதி அநேக தேவராலானதென்றும், வரமிச்சத்தியினாலேயே உண்டானதென்றும் கூறும் பேதமேயன்றி, வேறெவ்வகையிலேயும் பேதமற்றவர்களா யிருக்கின்றார்கள்.

வயிரவ மதம்

வயிரவமென்பது:—வயிரவனையே பரமென்று கூறும். ஆதி வயிரவன் அட்டமூர்த்தமாய், அட்டகலையாய், அகிலமும் பெத்த முத்தியும் சீவராசிகளுமாமென்றும், யோகமும் மூர்த்தமு மென்னும் இரண்டால் நிருவாணமான முத்தியுண்டாமென்றும் கூறும்.

சிவசமவாதி மதம்

சிவசமவாதி மதமாவது:—பதி, பசு, பாசம் மூன்றும் நித்தியமே என்று கூறும். பதியாவது நாமரூப கிரியாரகிதமாய், நித்தியமாய், அநாதியாய், சித்தாய், சத்தாய், நின்மலராய், சுத்தமா யிருப்

பது. பசுவாவது - தன்னையும் தலைவனையு மறியாது அசாதிமல சம்பந்தமாய் அநேக ரூபமாய் நித்தியமாயிருப்பது. பாசமாவது-அனாதி நித்தியமாய், அனந்த வியாபகசத்தியை யுடைத்தாயிருப்பது.

ஐக்கவாதி மதம்

ஐக்கவாதி மதமாவது:—சிவசமவாதி மதம்போல, திரிபதார்த்த நிச்சயங்கூறி, ஆன்மா அனாதிசுத்தமென்றும், ஆணவங்கேவலாவத்தையிலில்லை. மாயையுங் கன்மமுமேயுள்ளது; விசேட தீட்சை பெற்று, சிவார்ச்சனையால் அத்துவாசுத்திபண்ணி, நிருவாண தீட்சையால் கன்மநிர்க்கரஞ்செய்து கன்மம் நீங்க, இரண்டறக்கலப்பதுவே என்றுங் கூறுவது. இது ஓர் உருத்திரரால் உண்டாக்கியது.

சங்கிராந்திவாதி மதம்

சங்கிராந்திவாதி மதமாவது * செக, சிவ, பரம் என்னும் மூன்றில், பதி - அமலமாய், பரிசுத்தமாய், நித்தியமாய், அகண்டமாயிருப்பது. பசு - அனாதி சுத்தநித்தியமாயிருப்பது. பாசம் - சடமாயிருப்பது. இவற்றுள் தடத்தலட்சணமாவது:—பதி - ஒன்றையுஞ் சுட்டாமல் தீபம்போல விளங்கும். பசு - அநேகமாய் சூரியசந்திரானத்தில் காந்தம் இரும்பை வலிக்குந் தன்மையைப்போல மாயாமலத்தால் உடம்பைப்பொருந்தி நிற்கும். பாசம் - தனுகரண புவன போகங்களாய் விரிந்திருக்கும் எனக் கூறுவது.

பிரவாகேசுரவாதி மதம்

ஈசுரன், ஆன்மாக்கள், மாயை, கன்மம் இவைகள் அனாதியிலேயே யுண்டு. ஈசுரன் ஒருவனதிகாரத்துக்கு முத்தான்மாவாகவந்து இரட்சிக்கும்; ஆன்மாக்களுக்கு அனாதிமலமில்லை; மாயை பந்தப்பட்டுத் தத்துவ சேட்டையால் தனு கரண புவன போகங்களாய் விரிந்திருக்கும். பசு மாயாகன்மத்தால் பிறவியையடையும், தீட்சாவிதியால் மாயை கன்மமிரண்டையும் நீக்கி, சுத்தனாய் அடைவர் என்று கூறும்.

கபாலி மதம்

காபாலிக மதமாவது சிவசமயத்துள் மகாவிரதம், காளமுகம் போல, கிராமமுத்தியாதிகளெல்லாம் ஒன்றே யிருக்கின்றது. ஆனு

* செகம் - மாயை, சிவர் - பசு, பரம் - பதி என்பனவாம். இதனையே திரிபதார்த்த மென்பது.

லும், சிலபாகம் பேதமுண்டாம், என்னினும், எல்லாவகையாலும் ஏகதேசமாகப் பொருத்த முண்டாம். இதுவுமோர் உருத்திராால் இயற்றியது.

அவிகார்வாதி மதம்

சொரூப இலக்கணம்:—அதிகார நித்தியேச்சுர ஞெருவனுண்டு. ஆன்மாக்கள் அஞ்ஞானமாய் ஆணவமல விருளிலழுந்தி அனேகராய் இருப்பார். ஆணவமலம் இருளாம். பதி, பசு, பாசம் இம்மூன்றும் அனாதி நித்தியமென்று கூறும்.

தடத்தலட்சணம்:—பதி - நீரும் தண்மையும்போல ஐக்கியப் படுத்தும். பசு - இறைவனது ஞானத்தால் சருவத்தையு மறியும். பாசம் - மறைந்து சிவரூபத்தைக்கொள்ளும்.

இவர்கள் வேட்டம் நரகபால பிட்சாடனமாம். கருத்தருத்தாவே சங்காரமானதால், அது நீங்கி ஞெப்திமாத்திரமானதே மோட்சமாம். இதுவுமோர் உருத்திராற் கற்பிக்கப்பட்டதாம்.

சைவபேதாபேதவாதி மதம்

சைவபேதாபேதவாதி மதமாவது:—சைவாகமத் துட்பட்ட கிருத்திய லட்சண சித்தாந்தமேயானாலும், சத்தியின் பேதத்தாலே சிவனும் - சத்தன் - யுத்தி யுத்தன், பிரவர்த்தனென்னும் மூன்றும் எனக்கூறி, சித்தாந்த இலக்கணங்களேயே பிரமாணமாகக் கூறும்.

அனேகசுரவாதி மதம்

அனேக கடவுளருண்டென்றும், அனேகரால் பஞ்சகிருத்தியம் நடக்கிறதென்றும், ஆன்மா சனனமடையாமல் எப்போதுஞ் சுகத்திற்றானே யிருக்குமென்றுங் கூறும்.

சோடச சைவ பேதம்

ஊர்த்த சைவம்

சிவஞெருவனுண்டு; அவன் தத்துவாதீதன்; இவனே யடைவ தெவ்வாறென்னில்: விபூதி, உருத்திராக்கம், சடை, பூநூல் தரித்து சிவலிங்க பூசைசெய்து பத்தியராய், பஞ்சாட்சரஞ் செபித்து, துறவு அல்லது கிரகத்திலிருப்பதா மென்பர்.

உதாரணம்:—

சொன்னவீரெட்டாஞ்சைவத் தந்திரத்தொழிற்பாடோதி
லுன்னியவூர்த்தசைவர்க் கோதுபல்சடைருத்ராக்கந்
துன்னியவிபூதிபூசை தோன்றுநூலுடனேயீசன்
பின்னமில்தத்வாதீத னெனப்பெயர்பேசலாமே.

அஞ்தி சைவம்

இது நிரிபதார்த்தமாய் அஞ்நிகித்த வியர்த்தமாய் விளங்கும் சிவனே குணவிகற்பமின்றி யுற்று, விபூதி உருத்ராக்க பஞ்சாக்கர குருலிங்கவேடமே பொருளாகக்கொண்டு, பூசையால் பாசங்களி னீங்கி, பதியோடொன்றி ஆன்மா சிவனைக் கும்பிட்டிருத்தல் பரமாய முத்தியென்று கூறும்.

உதாரணம்:—

பதிபசுபாசமூன்றும் பார்த்திடிலஞ்திகித்தம்
விதிபெறுவியாத்தமென்னவிளங்குமுக் குணத்தாலொக்கும்
முதியவேடங்களோடே முடுகுயர்பாசம்நீங்கிப்
பதியுடன்கூடிக்கும்பிட் டிருத்தலேபரமாமுத்தி.

ஆதி சைவம்

இவ்வாதி சைவமதம் பசுவின்பொருட்டு எல்லாவற்றிற்குஞ் சிவனேயாய் பஞ்சகிருத்தியங்களைத் தூலக்கி நிட்களத்தோடு சகள மாகவிருக்கும். இத்தப்பதியோடு போகங்கூடவேண்டில் மோட்ச சாதனங்களுக்கேற்ற வேடங்களும், நடக்கையும்பூண்டு எல்லாஞ் சிவபோகமா யனுபவித்து, சிவவேடத்தின்மேல் விசுவாசமாய் நடந்து பதியோடுகூடி யவனிருந்தாற்போல் அவன் போகமாய் ஆன்மா விருப்பானென்று கூறும்.

உதாரணம்:—

ஆதிக்குஞ்சிவனேயாகி யவன்றன்னுற்கருமமைந்து
மீதுற்றகாதலாலே விளக்கிநிட்களத்தினோடு
கோதற்றசகளமாகும் பதியதுபோகங்கூடி
லாதத்தால்முத்திவேடம் பூணலாலம்மையாவே.

மகா சைவம்

இது மூர்த்தி அமூர்த்திகளான பேருக்கெல்லாம் மேலானது சிவமென வேதாகமங்கள் கூறும். அச்சிவனைச் சன்மார்க்கத்துடனே சமூசாரம் நீங்கி, சடையாதி சிவவேடந் தாங்கி பூசித்துச் சகுண

மாகத்தியானித்து, குருலிங்கமே பொருளெனக்கொண்டு அருள் கூடி முத்திபெறும் ஆன்மா எனக்கூறும்.

பேத சைவம்

இது சிவன் அரூபன், உருபாரூபன், உரூபன் என மூவிதமா யிருப்பன். இச்சிவனே சன்மார்க்கத்துடனேகூடி, சிவவேடம் பூண்டு, குருலிங்கசங்கமத்தை வழிபட்டு, சிவனது மூன்றுவடிவிலும் தியானித்து, வணங்குவதே மோட்சமெனக் கூறும்.

உதாரணம்:—

பேதசைவந்தானீச னுருவருரூபாரூப
மாதலால்வேடம்பூண்டிட் டடைவியலுருவந்தன்னை
நீதியால் வணங்கமுத்தி யெனதடல்... ... ...

என்பதனனறிக.

அபேத சைவம்

இது பேத சைவனைப்போல எல்லாங்கொண்டு வேறுபாடின்றி யிருக்கும்; ஆனலும், சன்மார்க்க நிலையால் சிவனே யறிகிறதே முத்தியென்று கூறும்.

அந்தர சைவம்

இவ்வந்தரசைவம் சிவவேடந்தாங்கி, சிவவியல்பை யடைவதே முத்தியென்றறிவது. வேறொருவித அந்தரசைவரு முண்டு.

குண சைவம்

குணசைவமென்பது:—ஆகம விதியையே பிரமாணமாகக் கொண்டுள்ளதாயினும், சிவபெருமானது அட்டமங்கள குணங்களை யும் தமது எண்குணங்களாலும் வழிபட்டு, சிவவேடம்பூண்டு திரி வதே முத்தியெனக்கூறும்.

நிர்க்குண சைவம்

நிர்க்குணசைவமென்பது—சைவபேதம் பதினறிலும் பொருந் தாது வேதாகமபுராணங்களை ஏகதேசமாகக் கொண்டுள்ளதேனும், இறைவன்குணங்கி நாமரூபரகிதனனதால், அப் பரம்பொருளைப் பேதாபேதமற்று குணமில்லாமலே கூடுவதும் முத்தியாம் எனக் கூறும்.

அத்துவா சைவம்

இது சுத்தாசுத்த நிட்களனுயிருக்கிற சிவபரம்பொருளே, நாம ரூப கிரியா வசத்ததல்லாததால், அதனைச் சத்தினி வந்தவுடன் சீடன் குருவையடைந்து தீட்சதனுகி, சைவத்துக்குள்ள வேடத்தைத் தாங்கி, குருலிங்கமே பொருளெனக்கொண்டு அத்துவாசோதனை செய்து, அவற்றின் முடிவைத் தியானித்து, சகசமாஞ நிட்டைகூடி வழிபடுவதே முத்தியென்று கூறும்.

யோக சைவம்

இது குணுரகிதமான பரமபதியை ஆசாரியரால்றிந்து யோக நெறியைக் கடைப்பிடித்து நிட்டைகூறிச் சாதித்து அட்டமாசித்தி களையறிந் தனுபவிக்கிறதே முத்தியென்று கூறும்.

ஞான சைவம்

சிவனைக் குருமுகமாய்த் தெளிந்து, சிவவேடம் பூண்டு, சிவபர போதமறிந்து, ஆன்மா பரத்தோடுகூடி, சுத்தான்மாவாய், பரத்தோடு கூடுவதே முத்தியென்று கூறும்.

அணுச் சைவம்

சிவபெருமானே யுள்ளும் புறம்புமா யறிந்து, திகம்பரவேடங் கள் பூண்டு, சன்மார்க்க லட்சணத்துடனேகூடி, குருலிங்க வேடமே பொருளாய், சிவன் பஞ்சகிருத்தியங்களையும் தரிசித்து, ஆனந்த மேலிட்டு, அதில் மனுலையமாவதே முத்தியென்று கூறும். வேறு அணுச்சைவருமுண்டு; வந்தவிடத்திற் காண்க.

கிரியா சைவம்

ஆசாரியனுலே சதாசிவ மூர்த்தியை யறிந்து, பின்னர்ச் சமய விசேட நிருவாண கிரியா தீட்சைகளைப்பெற்று, அத்துவாசோதனை செய்து, ஆவாகனுதி பேதங்களையறிந்து, பஞ்சசித்தியுஞ் செய்து கொண்டு, விதிப்படி நித்தமுத்தி பொருந்த, கன்மங்களை சாதித்து சிவார்ச்சனைசெய்து, சோடசோபசார, அட்ட விதார்ச்சனையுஞ் செய் வதுவே மோட்சமெனக் கூறும்.

நான்குபாத சைவம்

இது சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்கையும் ஒவ் வொன்றுய்ச் சாதித்து, சனகாதிக ளடைந்தபடியே ஒரு மொழி

யாற் சமாதி நிட்டைகூடி, பிரமத்தில் ஐக்கியமாவதே முத்தியென்று கூறும்.

சுத்த சைவம்

திரிபதார்த்தமும் நிச்சயமென்றறிந்து, இதிற் சச்சிதானந்தப் பிரம நிச்சயமுண்டாய், சமயங்களெல்லாம் பாசகாலமாக்கி வேதாந்த சித்தாந்த தீர்வாய், பந்தங்களிறந்து நான்கு முத்திரையுங்கடந்து, மகா மவுனமே பொருளாகலயமாய் நிட்டைசாதித்து, பிரமத்தோடு ஏகனுவது மோட்சமென்று கூறும்.

ஆக இந்த ஊர்த்துவமுதல் சுத்தசைவ மீறுகிய பதினாறு சைவ மும் பேதசைவ மென்பர்.

வீரசைவம்

அனாதி மூலத்துக் கப்பாலாய், மகாமூலத்திற்கு மூலமாய், இரண்டாவது பொருளில்லாததாய், மூலசுவாமி யொருவனே என் றும்கூறி, குருலிங்கபத்தியையுடையவனுய் வெவ்வே றிலக்கணங் களைக் கூறிக்கொண்டு சைவத்திற் கன்னியமின்றி யிருக்கும். இது பின்னர் பஞ்சமடக் கருத்தாக்களான அல்லமாப்பிரவு முதலியவர்க ளாலும், வசுவேசர் முதலியவர்களாலும் விசிட்டமாயுள்ளது. இதன் விரிவை வீரசைவ விளக்க விஞவிடை முதலியவற்றிற்காண்க.

கவுளயாமள மதம்

வாமியைப்போல சகலமும் சத்தியாலேயே யுண்டாகி நடக் கின்றதென்றும், கொலையாதி பாதங்களையெல்லாம் உச்சாடனாதி கன்மங்களா லகற்றி, சத்தியைப் பூசித்து, தாரகிட்டியாதிகள் கைவல்லியமானுல் இதுவே மோட்சமென்றும் கூறும். இவைகள் வருவதெப்படியென்னில், சத்திகளில் ஆறுகோடி மாயாசத்தி, சத்த மாதர், சத்ததூர்க்கி, சத்தகன்னி முதலிய பல பேதமுண்டு. ஒருவர் நினைக்கும் சிந்தனைக்கேற்ற சத்திகளும், மாயாமந்திர கிரியைகளும் வெவ்வேறுண்டு. இதனைக்கொண்டு செப வோம தரப்பணாதிகளா லும், தருமாதிகளாலும், தேவபிரசன்னமாய், காரிய கைவல்லியமா மென்றும், ஆனந்த பிராத்தியே மோட்சமென்றும், இதுவே ஆன்மாவென்றும் சொல்லும்.

பிரபஞ்ச உற்பத்தி

வேதாங்கோமான மதங்கள் அனந்தமிருக்கின்றன. அவை களோ வேறு வேறு வகையாக முத்திபேதங்களைக் கூறுமே யல்லது சமயத்தாலொன்று பட்டவைகளே. அவைகளாவன.

கிரீடப்பிரமவாதி	லீலாப்பிரமவாதி	பிரதிவிம்பவாதி
மாயாவாதி	வைதீகவேதாந்தம்	சுத்தவேதாந்தம்
அச்சுமாருதவாதி	சாங்கியம்	நிரீசுரவாதி
பூருவமீமாஞ்சை	வைசேடியம்	நையாயிகம்
பாற்கரியம்	சத்தப்பிரமவாதி	வையாகரணி
பாட்டம்	பிரபாகரம்	ஆறகந்தம்
புராணிகம்	பஞ்சராத்திரியம்	சுத்தசைவம்

என்பனவாம். ஆயினும் அவைகள் சைவ வைணவ சமண மதங்களுக் கன்னியமில்லாமையால், இங்கு விரித்தெழுதுவது அனு வசிய மென்க.

தார்க்கிகன் வித்யா கற்பனை, தோடம், பிரவிருத்தி, சனனம், துக்கமென்பவைகளைத் தனித்தனி நீக்கிச்செல்ல, முடிவினின்ற துக்க மொழியு மென்றும், இதுவே முத்தியென்றுங் கூறுவன். மீமாஞ்ச கன் வேதம் அநாதியென்றும், ஈசனேவேண்டாது கன்மமே பலனைக் கொடுக்குமென்றுங் கூறுவன். மாயாவாதி சுத்தமாகிய பரப்பிரமம் மயோபாதியினாலே வாதிக்கப்பட்டுச் சரீரத்தினுள்ளே சீவான்மா வாக நிற்குமென்றும், சீவான்மாவும் விவேகஞானமடைந்து மாயா வத்தைகடந்து பரமான்மாவோடு சடரகாசமும், மகாகாசமும்போல் அபேதமாய் விடுமென்றுங் கூறுவன். சாங்கியன் புமானுகிய சுத்த புருடன் அறியாமை யுதித்தபோது, பிரபஞ்சமெல்லாந் தானே விரிந்து நிற்பனென்றும், விவேகஞான மெய்தியபோது அவையனைத் தும் பிரகிருதிக்கேயன்றித் தனக்கில்லையென்றுங் கூறுவன். யோகி, நின்மல சத்துவ பரிணாம ரூபமாகிய சித்தவிருத்திகளை உண்முகமா கத் திருப்பி, அவைகளை அவற்றின் முதற்காரணத்தினாலே ஒடுக்கு தலே முத்தியென்றுங் கூறுவன். பஞ்சராத்திரி, நாரயணர் தம்மை வழிப்பட்டவர்களுடைய பாசபந்தத்தை யொழித்து, அவர்களை விர சாந்தியிலே மூழ்குவித்துச் சுத்தர்களாக்கி, வைகுண்டத்திலே தமது சாரூபத்தைக் கொடுத்தருளுவரென்றுங் கூறுவன்.

உலோகாயதன் மதம்

இது, கேடின்றி நித்தியமாயுள்ளது நான்குபூதம். இந்நான்கு பூதமும் சேர்ந்தவிடத்தில் நால்வகையோனி, எழுவகைத்தோற்றமுந் தோன்றும்; நான்கு பூதமும் காணப்படுவதாய் என்று மூள்ளதாலும், பரிச - ரூப - ரச - கந்தம் இந்நான்கும் நித்தியமே; மேற்படி நான்குபூதக் கலப்பால் பொறி, புலன், குணம், புத்தி முதற் பதினாறு காரணமானபோது, அண்டாதிகளெல்லா முண்டாமென்று கூறும்.

அன்றி, மரணமே நிச்சயமோட்சம். பூதம் நான்குமே சொரூபம். இதனிடமாகப் போதம் பிறக்கிறதே தடத்தம். களபகத்தூரி ஸ்திரீ சையோகாதிகளே விட்டதேபந்தம். இதனைநீக்கூடி வாழ்வதே முத்தி என்பது முடிவானசித்தாந்தம். இச்சாத்திரத்தை பிரகற்பதி பகவான் ஒருகால்கூறி, உலோகாயத மதத்தை யுண்டாக்கினர்.

யோகசாரன் மதம்

போதமான காரணேந்திரியாதிகள் பொருளாய்த் தோன்றும். இது தோன்றலால், வாதனை தோடத்தில் கூடி, வலுவில்லாமல் பொருளாயெழுந்து, கனவுபோலச் சகளமாகும். பின்பு போதம் உள்ளறிவாயிருக்கும் என்று கூறும், எனவே மருந்தெண்ணெயில் மருந்து மறைந்து சூக்குமமாகிப் பலிப்பதுபோல, போதம் உள்ளிருந்து தொன்றுதொட்டு பலிக்கும் என்றபடி இவர்கள் தெய்வம் யோனியிற் பிறவாது தாய்வயிற்றைப் பீறிவந்தாரென்று கூறுவர். அத்தெய்வம் புத்தசுவாமியே யாம்.

மாயாத்தகன் மதம்

தேகம் அவயவங்களோடுகூடி ஓராகாரமான பதார்த்தமும், சீவராசிகள் தேகமுமாம். இவ் வவயவங்க ளழிந்துபோனால், அத் தேகத்தி லழியாப்பொரு ளொன்றில்லை. ஆதலால், அதில் சூட்சுமமாயிருக்கிற பொருளைக் கண்டதில்லை. அதனால், அதில் அறிவிக்குமென்ப தொன்றில்லை. தேகமே பொருள்; சுவாமி சுகதுக்கங்களைப் பரிசிக்கமாட்டார். சுத்தஞான வொழுக்கமென்பதே முத்தியாம் என்பர். இவனுக்கு முற்கூறிய புத்தசுவாமியே தெய்வமென்க.

வைபாடிகன் மதம்

ஸ்திரீபுருஷ சைதன்னியத்தி லின்பஞ் சனித்ததுபோல விசாரித்த விடத்திலே சகஞான பொருளாதிகள் தோன்றும். வேறுகக்

கூறுவதெல்லாம் பொய் எனக்கூறும். இவர்கள் புத்தமூராமி சுவத்தி, பஞ்சகந்தங் கெடுவதே முத்தி. ஞானமெல்லா மொழிதலே பதவி. ஆன்மா அணு என்றுங்கூறுவர். இதனைச் செய்தவர் சுகரிஷி.

நிகண்டாவாதி மதம்

அருகக்கடவுள் அட்டகுணாதிசயராய் சருவஞான தேசோமய ராய் பொன்னெயில் வட்டத்தில் எல்லா உலகத்திலிருப்பவர் யோக சித்தியால் முத்தியருளுவ ரெனக்கூறும்.

ஆசீர்வகன் மதம்

இவர், நிகண்டா வாதியைப்போலவே சிறிது வித்தியாசமாக அருளே பரமென்று கூறுவர்.

பஞ்சபூதவாதி மதம்

இப்பஞ்சபூத வாதிமத மானது ஐந்துவகையாக பிருக்கும். அவற்றுள்,

1. பிருதிவி பூதவாதி - மண்ணைத்தவிர வேறொன்றுமில்லை; மண்ணே சகல உலக வடிவும், சகலசீவ ரூபமுமாயிருந்து சகல போகமு மளிப்பதால். மண்ணேதெய்வமென்று கூறுவன்.

2. அப்பு பூதவாதி - சகலமும் சலமின்றி யாகாமையாலும், சகலரும் சலத்தையே எக்காரியத்திற்கும் எதிர் நோக்கலாலும், சல மின்றி வேறெக்காரியமும் நடவாதாகையாலும் சலமே தெய்வ மென்று கூறுவன்.

3. அக்கினி பூதவாதி - அக்கினியே சர்வகிருத்தியங்களையும் நடத்துகையால் அக்கினியைவிட்டு யாதொன்றும் நடவாதாகையா லக்கினியே தெய்வமென்று கூறுவன்.

4. வாய்வு பூதவாதி - காற்றின்றி எக்காரியங்களும் நடவாதா கையால், அக்காற்றே தெய்வமென்று கூறுவன்.

5. ஆகாய பூதவாதி - ஆகாயமில்லாவிடில் வேறொன்று மிராதா கையால், ஆகாயமே பரமென்று கூறுவன்.

பஞ்சகோசவாதி மதம்

அன்னமயம், பிராணமயம், மனோமயம், ஆனந்தமயம், விஞ் ஞானமயம் என்னும் ஐந்துமே பொருள் என்றும், ஆனந்தமயமே முத்திரூபமென்றுங் கூறும்.

நவக்கிரக வாதிமதம்

* நவக்கிரகமே தெய்வ மென்றும், அதனிலக்கணப்படியே உலகமும், உயிர்களும் முத்தியாதியவும் சம்பவிக்கப் பெறுவரென்றும், ஆனதால் நவக்கிரகங்களே கடவுளரென்றும் கூறும்.

சூரியவாதி மதம்

சூரியபகவா னில்லாவிடில் எக்காரியங்களும் நடவா தாதலால் சூரியனே தெய்வமென்று கூறும்.

சந்திரவாதி மதம்

சந்திரனே பரமனென்று சூரியவாதியைப்போல விவரிக்கும்.

ஊழ்வாதி மதம்

கன்மமே பிரமமயம்; அன்னியம் வேறொன்று மில்லையென்று கூறும்.

காலவிதி மதம்

காலம் ஒன்று மாத்திரம் அழியாமல் மற்றெல்லாம் மாறுபடுகையால் காலமே பரமென்று கூறும்.

மந்திரவாதி மதம்

எல்லாத் தேவர்களும் மந்திரவழியே நின்று கட்டுப்பட்டவராதலாலும், மந்திரத்தைவிட்டு எக்காரியங்களும் நடவாததாலும், மந்திரமே தெய்வமெனக் கூறும்.

எந்திரவாதி மதம்

மந்திரம் தேவர்கள் முதலியயாவும் எந்திரங்களால் நிலைபெறுவராதலால், அவைகளுக்கெல்லாம் பரமாயிருப்பது எந்திரமாதலின், எந்திரமே தெய்வமெனக் கூறும்.

அவிழ்தவாதி மதம்

மருந்துகளே சகல வுடலுயிர்களையும் இரட்சிக்கையால் மருந்தே தெய்வமெனக் கூறும்.

---

* நவக்கிரகமாவன:—இரவி, மதி, சேய், புதன், குரு, வெள்ளி, சனி, ராகு, கேது என்பன. இவ்வாதிகள் தாமாதி கிரகங்களையும் உபதேவதைகளாகக்கொண்டு கூறுகின்றனர்.

பிரபஞ்ச உற்பத்தி

சாத்தேய மதம்

சாத்தேய மதத்தர் சத்தியே பிரமமென்றும், அச்சத்தியினிடத்திலிருந்து பிரமன், விஷ்ணு, உருத்திரன், மயேச்சுரன், சதாசிவனென்கிற பஞ்சகருத்தாக்களும், பஞ்சசத்திகளும் உண்டானார்களென்றும், இவர்களாலே சகத்காரியம் உண்டாயிற்றென்றும் சத்திக்குமேலே வேறொரு பரனில்லையென்றும் கூறுவர். இந்த மதம் கபிலருடைய கோட்பாட்டை யனுசரித்துண்டானதாகத் தோன்றுகிறது. இம்மதத்தர்களிற் சிலர் மதுமாமிசத்தையும் வழங்குகிறார்கள். இக்காலத்தில் இவர்கள் அறுகி இருக்கிறார்கள்.

கணபத்திய மதம்

கணபத்திய மதத்தர்கள் கணபதியே பிரமமென்றும், அவருக்குமேல் ஒரு பரனில்லையென்றும், அவராலேயே சகல காரியமும் நடக்கப்படுகின்றனவென்றுங் கூறுவர். அந்த மதத்தர்களும் அபூரூபம்.

சைன மதம்

ஆருகதம் அல்லது அருகனை வணங்கும் சமயத்துக்கு சைன சமயமென்று பெயர். இது சற்றேறக்குறைய புத்த சமயத்தைப் போலவே யிருக்கிறது. ஆனால், சுத்த நாஸ்திக மதமல்ல; இதில் சுவேதாம்புரிகள், திகம்பரிகளென இருவகுப்பார்களிருக்கிறார்கள். இவ்விரு வகுப்பாரும், விக்கிரகங்களுக்கு உடை தரிப்பித்தல் முதலிய சிலவிடயங்களில் வித்தியாசப்பட்டாலும், சைனவேதாகம அங்கங்களை ஒரேவிதமாக நம்பி யனுசரிக்கிறார்கள்.

சார்வாக மதம்

அந்த மதத்தைத் தாபித்தவரின்னரென்று விவரமாகத் தெரியவில்லை. ஆனால், மகாபாரதத்தைச் சார்ந்த சாந்திபருவத்தில் ஆயிரத்து நானூற்றுப் பத்தாவது சுலோகத்தில் ஒரு கதையில் சார்வாகன் என்னும் இராட்சதன் பிராமண பரதேசி வேடம்பூண்டு யுதிட்டிர மகாராசன் செயசீலராக அத்தினபுரத்துக்குப் போகுங்கால் சமயவிடயமான பரிகாசவார்த்தைகளையுஞ் செய்ததாகவும், ஆதலினலவன் இராக்கதனென்று கண்டுபிடித்து, கொல்லுவித்ததாகவும் சொல்லியிருப்பதால், இந்த இராக்கதனே இந்தச் சார்வாக மதாதிபதியா யிருக்கவேண்டுமென்று எண்ணவேண்டி

யிருக்கிறது. இந்தச் சார்வாக மதத்தைப்பற்றி மாத்துவாசாரியாரா லியற்றப்பட்ட, 'சர்வதரிசன சங்கரக' மென்னும் கிரந்தத்தில் விசேடமாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச்சார்வாக மதத்தை உலகாயதமென்றும், பிரகற்பதி கோட்பாடென்றுஞ் சொல்லுவ துண்டு.

இந்திரியாத்துமவாதிகள் மதம்

இந்திரியாத்தும வாதிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் பஞ்சேந்திரியங்களுக்கு மேல் ஈசுரனொருவ னில்லை யென்றும்; ஆன்மா வொன்றில்லையென்றுங் கூறுவர்.

அந்தக்கரணத்துமவாதிகள் மதம்

அந்தக்கர ணத்தும வாதிகள் மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்கிற அந்தக்கரணங்களுக்கு மேல் ஈசனொருவ னில்லையென்றும்; ஆன்மா வொன்றில்லை யென்றுங் கூறுவர்.

பிராணத்துமவாதி மதம்

பிராணத்துமவாதிகள் பிராணவாயுக்குமேல் ஈசுரனொருவ னில்லையென்றும்; ஆன்மா வொன்றில்லையென்றுங் கூறுவர்.

சூனியவாதிகள் மதம்

சூனியவாதிகள் ஈசுரனொருவ னிருந்தால் காணப்பட மாட் டானை, காணப்படாமையால் ஈசுரனில்லை யென்பர்.

கௌமார மதம்

இந்தக் கௌமார மதத்தர் சுப்பிரமணியரே பிரமமென்றும், அவர்க்குமேல் ஒரு ஈசுரனில்லையென்றும், அவராலேயே சகல சகத்து காரியமும் உண்டாகின்றனவென்றுங் கூறுவர்.

பிரமசமாச மதம்

பரப்பிரமத்தையே உபாசனையின் மூலமாக அறிந்து ஆனந்தப் படும் பத்திமார்க்கத்துக்கு பிரமசமயம் அல்லது, பிரமசமாசமென்று சொல்லப்படும். இந்த மதத்தைத் தாபித்தவரின் பெயர் இராசா இராமமோகன் ராய்பஹதூரென்பவர்.

ஆரியசமாச மதம்

ஆரியருடைய வேதங்களையே பிரமாணங்களாகக் கொண்டு பரம்பொருளை வணங்கும் மதத்தார்களுக்கு ஆரியசமாசத்தாரென்று

பெயர். இந்தச் சமாசத்தின் காரணகருத்தர் சுவாமி தயாநந்த சரசுவதி யென்பவர்.

தியாசபி மதம்

1880-ஆம் கனர்ல் ஆல்கட் என்ற ஒரு அமரிக்கா கண்டத்தாரும், மாடம் பிளாவட்ஸ்கி என்னும் உருஷியா தேசத்து மாதும் இந்தியாவில் பம்பாய்க்கு வந்து, இத்தேசத்து பூர்வயோக, மந்திர தந்திர முதலியவைகள் உண்மையெனச் சாதித்து, அநேக மகிமைகளைச் செய்தனர். 1875-ஆம் அமரிக்கா கண்டத்தைச் சார்ந்த நியுயார்க்குப் பட்டணத்தில் தாபிக்கப்பட்ட தியாசபி சங்கத்தைச் சார்ந்தவர்கள். இந்த மதாதிபதிகள் இருவரும் புத்தசமயத்தாராக விருந்தும், அநேக பிராமணர் முதலானவர்கள் இவர்களுடைய கோட்பாட்டை யனுசரிக்க, இந்துதேசத்தின் பலவிடங்களில் சபைகளைத் தாபித்து நடத்தி வருகிறார்கள். இவர்கள் கிருஸ்துமதத்தர்களுக்குச் சன்மவிரோதிகள். சனசுக சகோதரவாஞ்சையை விருத்தியாக்க விரும்புபவர். இந்துமதக் கடவுள் பத்தியில் பற்றுள்ளவர்கள். இதை மந்திர தந்திர மதமென்றும் சொல்லலாம். இப்போது (1926) இக் கூட்டத்துக்குத் தலைவர், மாது ஸ்ரீ. அணிபெசண்ட்டம்மையார்.

வைணவ மதம்

விஷ்ணுவை வணங்கும் மதத்திற்கு வைணவமென்று சொல்லப்படும். இந்த வைணவத்தில், யாதவம், மாயாதவம், இரணியகற்பம், இராமானுசம், பாற்கரம், தத்துவவாதம் என்னும் ஆறு உட்சமயங்களும், பாஞ்சராத்திரம், வைகாநசம் என்னும் இரண்டு ஆகமங்களுமுண்டு. இதுகளைப்பற்றி விவரமாகப் பின்னல் சொல்லுவோம்; இம்மதத்தர்கள் வணங்குந் தெய்வமாகிய விஷ்ணு எங்கும் நிறைந்தவரென்றும், இரட்சகரென்றும், யாவையும் படைத்துக் காத்து வருபவரென்றும், வேதசுருதிகளில் காணும் நாராயணரென்றும், நரகரியென்றும், இராமர், இரங்கர், கிருட்டிணர் என்றுஞ் சொல்லும் புருடனாக வழங்குவார்கள். இவர் சுருதிகளிற் செப்பிய (நாரம்) சலத்திற்கும் பிரதிநிதி யாகையால், நீலவருணமும், சங்கு, சக்கரம், கதை, கட்கங்களேக்கொண்ட நான்கு கைகளையும், மஞ்சள் வத்திர தரிப்பையும், கருடவாகனத்தையும், வைகுண்டம் இருப்பிடத்தையும் உடையவராக புராணங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இவருடைய மனைவியர் இலட்சுமி, பூதேவி, நீளாதேவி என மூவர்.

இவ்வைணவமதத்துள் சில உட்பிரிவுகளிருக்கின்றன. அவைகளாவன:—

இராமானுச மதம்	மாத்துவாசாரி மதம்
பாற்கர மதம்	இராமாநந்த மதம்
வல்லபாசாரி மதம்	சைதனியர் மதம்

முதலியனவாம். இவைகளுள்ளும் சில பேதமிருப்பதாகத் தெரிகின்றது. அவைகளை வைணவ பிரபாவத்துட் காண்க.

பௌத்த மதம்

இம்மதம் கௌதமசங்கிய முனிவரால் தாபிக்கப்பட்டது. இவர் காசிப்பட்டணத்தை யடைந்தகாலத்து பௌத்தர் அல்லது புத்தரென்னும் பெயரைப் பூண்டார். இவர் இருபது வயதையடைந்தபோது அதாவது விவாகமான பத்தாம் ஆண்டில் இரகுலனென்னும் புத்திரனை ஈன்று யாவரும் வியக்கும்படி திடீரென்று மனிவிமக்களையும் துறந்து சமய விசாரணை யொன்றிலேயே சித்தத்தைச் செலுத்திவந்தார்.

ஓரிரவு வியாதியாளன், வயோதிகன், அழிபிணம், துறவி இந்நான்கு ரூபங்களையுங்கொண்டு, ஒரு தேவதூதன் தம் சொப்பனத்தில் நான்குமுறை பிரசன்னமானதே, இளமையும் சௌக்கியமும் கனவேயன்றி வேறல்லவென்றும், அவை மூப்பையும் பிணியையும் தந்து கடையில் மரணத்தையும், தேக அழிவையும் தருமமென்று நிரூபித்து இக்காரணத்தினாலேயே தாம் துறவடைந்ததாகவும் புகன்றனர்.

இந்திரிய நிக்கிரகம், பரோபகாரம் இவ்விரண்டையும் சாதகம் செய்பவர்களே பேரின்பத்தை யடையக்கூடுமென்றும், சாதிபேதமில்லையென்றும், சகலரும் ஒருவருக்கொருவர் சமமுற்றவர்களென்றும், எல்லோரும் முத்தியை யடையக்கூடுமென்றும், மிருகபலியினால் பாவ நிவாரணஞ்செய்ய முடியாதென்றும், சன்மாந்திர முண்டென்றும், திரிகரணங்களால் செய்யக்கூடிய பாபத்தொழில் விலகின் பிறவியினின்றும் விடுக்கக் கூடுமென்றும், இவைகளைச் செய்யச் சாத்தியப்பட்டவன் நிருவாண தசையை யடைவானென்றும் போதித்து வந்தார்.

இக்கோட்பாடுகளை அதுசரிப்பது சாத்தியமா யிருந்தபடியால் இந்தியாவில் அநேகர் இம்மதத்தைத் தழுவினதுடன் சீனா, பர்மா முதலிய தேசங்களிலும், சிம்மளம், ஜப்பான் முதலிய தீவுகளிலும், இக்காலத்தும் காற்றிசையையடைந்து அபிவிர்த்தியாய்க் கொண்டே வருகிறது.

சீனதேசத்து மதங்கள்

உலக சிருட்டியைப்பற்றி சீனர்களின் கருத்து

ஆதியில் சடப்பொருள் மாத்திரம் ஏகபிண்டமா யிருந்தது, பிறகு இரு பிரிவினையடைந்து, ஆண் பெண்ணைய சூக்குமதேகம் மேலும், தூலதேகங் கீழுமாக மாதா பிதாக்களாகி, சகலத்தையும் உண்டாக்கினதாகவும், சகலமும், ஆணும் பெண்ணு மென்றுஞ் சொல்லுகிறார்கள்.

சீனர்களுக்குள் பிரபலமாய் வழங்கும் மதங்கள் மூன்று. அவற்றுள், பெரும்பான்மை தழுவப்பட்டதும், புராதன மூமானது கான்பியூகஸ்மதம். இப்பெயர்கொண்ட மதாதிபதியால் சுமார் ஐயாயிரத்து நானூற்றமுபது வருஷத்துக்கு முன் தாபிக்கப்பட்டது; இவருடைய கொள்கையாவது ஒரேகடவுள் உண்டென்றும், அவரையடைதலே மானிடர்பெற்ற பேறென்றும், வானம் பூமி மனிதர்கள் கூடி ஒரு திரியேகத்துவமென்றும், இப்பொருளில் திவ்விய தாஞதி பதியாகிய மானிடரே மேன்மைப்பட்டவர்களாகையால், பெரியோர்களையும், பிரத்தியட்சக் கடவுளர்களாகிய தாய்தந்தையர்களையும் வணங்கவேண்டுமென்றும், அப்பெரியோர்களிறந்தால் அவர்கட்காக மூன்று வருடகாலம் துக்கங்கொண்டாடி பிறகு மாத்ரு, பிதிரு, மகாலயமொன்றைச் சமைத்து அதில் மக்களும் மற்றுமுள்ள சந்ததியாரும் அப்பெரியோர்களை வழுத்தல் செய்யவேண்டுமென்றும், சிறு வயதுள்ள ஸ்திரீகளை அடிமைகொண்டும், வயதில் முதிர்ந்த ஸ்திரீகளை மரியாதையோடு வணங்கவேண்டிய தென்றும், சந்ததி யிருந்தால் சன்மவிமோசனமாகு மென்றும் முதலிய தருமங்களை விடாது அதுசரித்தல்வேண்டுமென்றும், எல்லோருக்கும் வாய்மை, மெய்மை, ஞானம், ஆசாரம், நீதி, பரோபகாரம் போதித்து வந்தமையேயாம்.

மேற்கூறிய கான்பியூகஸ் காலத்திலிருந்த தத்துவசாஸ்திரியாகிய லவாட்சி என்பவரால் ஏற்படுத்தப்பட்ட டாயிசமதம்.

ஆகாயம், பூமி மனிதர்களாகிய இம்மூன்றும் காரியப்படுவதற்கு காரணமாகிய ஓர் மூலப்பொருள் உண்டென்றும், அது அனாதி நித்தியமென்றும், மும்முறை மனித அவதாரமெடுத்ததென்றும், அப்படி யுண்டாகிய சன்மத்தை யோக நிட்டைகளால் அழிக்க வேண்டியது என்றும் இந்து மதத்தரின் கருத்து; முன் கூறியுற்ற பௌத்தமதமும் வழங்கிவருகிறது.

சௌராட்டிர மதம்

பூர்வ ஆரியவம்சத்தின் ஒரு பிரிவார் குடியிருக்கும் சீர்பெற்ற பாரசீகதேசத்தில் சௌராட்டர் என்பவரால் ஏற்படுத்தியது பாரசிகம் அல்லது, சௌராட்டிர மதமென்று வழங்கும். இவர்கள் வேத நூற்களின்பெயர், சந்தபேதம், புண்டி, சுகியுமாம். இவைகள் வானுதி நட்சத்திர கோத்திரமாகவும், அத்துவைரு பரம்பரையை அநுசரித்ததாகவே யிருக்கும்.

இம்மதத்தின் கோட்பாடாவது, முதற்கடவுள் ஒன்றுண்டென்றும், அவரிந்த உலகத்தையும், அஞ்ஞானம், பொய், கொலை, களவு, காமம் முதலியன தீக்குணங்களை விளைவிக்கும் உபதேவனைப் படைத்ததாயும், இத்தேவனு லுண்டாகும் தீக்கருமங்களை விலக்கி, சுத்தமாக்க மற்றுமோர் தேவனைப் படைத்ததாகவும், இவர்களிருவருக்கும், அதாவது ஞானமும், அஞ்ஞானமும் நெடுநாள் சண்டை செய்து முடிவில் ஞானதேவன் சயமடைந்ததாகவும், ஆகவே உலகத்தார் அந்தகாரமாகிய அஞ்ஞானத்தை நிவர்த்தித்து பரிசுத்த மனதோடுங்கூடி சத்விடயங்களைச்செய்து சுவாதீனராகும் பட்சத்தில் மோட்ச முண்டென்பதே யாம்.

துருக்கர் மதம்

துருக்கர் மதமானது சில்பேதங்களையும், பலவகுப்புகளையு முடையதாயிருப்பதோடு சிலவிகற்பங்களுமுண்டு. இவர்கள் தெய்வம் அல்லாவென்னும் பெயரோடு நாமரூபகிரியாதி குணரகிதனுய் வேறின்றி ஏகனுயிருப்பது. அந்த அல்லாவானவர் தன்னிடத்தில் ஒரு வொளியை யுண்டாக்கி, அதில் அல்லாவானவர் புகுந்து பாதியொளியில் மகுமதரையுண்டாக்கி, மற்றபாதியொளியில் எண்ணிறந்த உயிர்களையுண்டாக்கி, பின்பு நாயன் பாதியொளியில் மகுமதரூயிரை யுண்டாக்கி, அந்தவுயிரை நாயன் பார்த்தவுடனே பதாதி

கேசபரியந்தம் வெயர்வைவர அந்த வெயர்வையில் முதற்பாகத்தை அம்பியா அவுலியாக்க ளுயிரைவ தூத்து, அதிற்சில வெயர்வையில் மசாகுளோக்குயிர் வகுத்து, பின்பு இவற்றில் தானே ஊமினேர்கள் வானுளோர்க ளுயிர்வகுத்து, மிகுந்த வெயர்வையில் பாவிகளுயிர் வகுத்து, இதில் மிகுந்த வெயர்வையில் காபிசின்னுகள் சயித்தா னுயிர்படைத்து, இதில் மிகுந்த வெயர்வையில் மிருக பட்சி ஊர்வன சலவாழுயிர்களைப்படைத்து, இதில் மிகுந்த வெயர்வையில் தாவராதி யுயிர்களைப்படைத்து, இதில் மிகுந்த வெயர்வையில் ஒரு துளியைக் கொண்டு அரிசுங் குருகம் மறையெழுதப்பட்ட கலமான மகுபூதஞ் சொர்க்க நரகமும் படைத்து, இவற்றிலொரு துளி வெயர்வை யிருந்தது. அதிலொரு மாணிக்கமுண்டாக்கி, அதை நாயன் எதிராகப் பார்த்தபோது அந்த மாணிக்கம் அக்கினியாயும், சலமாயும் பிரிவு பட்டு நின்று மீண்டும் ஒன்றுய்க்கூடி வெந்து கொதித்ததில் எழுந்த புகையினுல் விண்ணுலக மேழுதட்டு மூரியடுக்குபோல் படைத்து, (இது ஒன்றுக்கொன்று ஐந்நூறுவருட நடப்பு அகலநீளமாகும்) பின்பு அந்தமணி யொளியாகிற கனல் பரந்தமேகத்தாற் சந்திர சூரிய நட்சத்திரங்களைப்படைத்து, பின்பு தேவலோகமேழும் உரி யடுக்குபோற் படைத்து, மேற்சொல்லிய நீரைக்கலக்க நாயனரு ளாலே வாயுவையுண்டாக்க, அந்தவாயுவால் அலைகளடித்துமோத, அதில் நுரைகளுண்டாய் அந்த நுரைகளாலே கண்டமான பூமி யுண்டாகி, கீழ்மே லேழடுக்காகநிற்க, இந்த வடுக்குகள் நீர்மேலிருக் கையால் அலையிலடுக்கு குலையாமலிருக்க, அட்டகுலபர்வதம் நடுவும், மேருகிரி சுற்றுஞ் சக்கரவாளகிரி முதலிய கிரிகளுஞ் சத்த சமுத் திரத்தில் அனேககிரிகளும் படைத்து, அந்தச் சமுத்திரத்தை பூமிக்கு ஒரு ஆடைபோலாக்கி, இந்த பூமியில் சீவராசிகள் புசித்தற்கு தண்டுலபிண்டி பேதங்களும், கந்தமூல பலாதிகளுமுண்டாக்கி, சூரிய னுல் நாழிகை, நாள், வாரம், மாதம், வருடம் முதலிய காலபேதங் களு முண்டாக்கிப் பின்னும் பஞ்சலோகங்களும், நவரத்தினாதி திர வியங்களும், இன்னுமநேக பதார்த்தங்களையுங் கருத்தர் படைத்தா ரென்றறைவர்.

இதல்லாமல் பின்னுமொரு விதம் நாயன் தன்னொளியினுல் ஞாயிற்றுக்கிழமை - தாவராதி தனுக்களையும், அவற்றிற்கு கந்தமூல பலாதிகளாகிய உணவுகளையு முண்டாக்கி; திங்களில்-சூரியன், சந்தி

ரன், உடுக்கள், இராசிகள், மலைகள், கற்கள் முதலியவற்றை யுண்டாக்கி; செவ்வாயில்-மந்திர, தந்திர, எந்திரங்கள், சற்கருமங்கள், பாம்பு, பில்லி, சூனியம், புதையல், கன்னந்திருட்டு, அவுடதங்கள், சூதம், பரிக்கை முதலியவற்றை யுண்டாக்கி; புதனில்-சூரியகிரணஞ் சந்திர கிரணம் நவரத்தினஞ் திரவியங்களையுண்டாக்கி; வியாழத்தில்-தாவர சங்கமாதிய வுயிர்களையுண்டாக்கி; வெள்ளியில்-இசுலா மார்க்கமாகிய தலுக்குமத முண்டாக்கி, தன்னைவணங்க ஆன்மாக்களை யுண்டாக்கி, சனியில் - தேவலோகமும் கீழ்மேற் பதினலுலோகமும் படைத்து இவற்றைச் சுமக்க வொருமலுக்கை யுண்டாக்கி, இவனைச் சுமக்க ஒரு மாணிக்க மலையைப்படைத்து, இதைச்சுமக்க் எருதைப் படைத்து, இதைச்சுமக்க ஒருமீனைப்படைத்து, இதைச்சுமக்கச் சமுத் திரத்தைப்படைத்து, இதைச்சுமக்க குங்கும மணலாகிய வொரு குவட்டைப்படைத்து, இதைச்சுமக்க ஒரு இரும்பு மலையைப் படைத்து, இதைச்சுமக்க ஒரு மலுக்கைப்படைத்து, இவனைச் சுமக்க வாயுவை படைத்தனர். இவைகளெல்லாம் யுகமுடிவு மட்டும் நிற்கு மென்றறிக.

இப்பால் நாயனை மதியாமல் லிபிவீசு முதலான தேவர்களக் கினிதேக மாகையால் நாங்களே கர்த்தரென்று செருக்குற்றிருந்த படியால், அவர்களைச் செயிக்கும்படியாய் மண்ணை யெடுக்கப் போக, அப்போது பூமியானது ஆணையிட, அதற்கு இரண்டு மலுக்கள் திரும்பிவந்து கூடிய மூன்று மலுக்களும் இசிராகில்லை யனுப்ப, அவரையும் பூமி மூன்முணையிட, அதற்கவர் மறுஆணையிட்டு மண்ணை யெடுத்துவந்து ஆதமாய்ச் செய்யென்ன, அந்த மண்ணினால் மலுக் கள் நால்வரும் புனல் தீவாயுவைவிட்டு உடலைச்செய்து தலை செய்யக்கூடாமற் கர்த்தன் தலைசெய்ய, அப்போது ஆதமனுண் டாய் ஆதமனது ஒரு பாரிசத்தில் சுழலையுண்டால் அதை நாயன் லொல்லாலே ஜெபிர்தீல்போய் நகத்தால்கீற. அதில் சவந்தரமான ஒருபெண் அவ்வாவென்னும் பெயருடன் பிறந்தாள். அவளை ஆதம் என்பவள்கண்டு கைபிடிக்க, அப்போது நாயன்சொற்படி வானவ ரான மலுக்கள் விவாகஞ்செய்து கொடுக்க, நாயன் ஆத்மாக்கள் சொர்க்கத்திலே கோதும்பையல்லாமல் மற்றதெல்லாம் புசிக்கச் சொல்ல அதைக்கேட்டிருந்த லிபிலீசு அவ்வாவுக்கு பிள்ளைகொடுத் தும், கோதும்பை தின்னச்சொல்லியும், அவர்கள் விரதத்தைக்

கெடுக்க, அதைக்கண்ட நாயன் கோபித்து சொர்க்கத்தி லிருந்தவர் களை மண்ணில் தள்ளிவிட்டு அநேகம் பாடுபடுத்தினர்.

அதன்பின்பு ஆகமன் தவஞ்செய்ய அதை நாயகன் கண்டு மகிழ்ந்து மக்காவில் வைத்தார். பின்பிருவரும் கூடி வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் பெற்றார்கள். அந்தப்பெண்ணை அந்த ஆணுக்கே கொடுத்து, மண்ணில் வாசஞ் செய்யச்சொல்ல, அவ்விருவருங்கூடி மனுக்களைப் பெருகச்செய்தார்கள். ஆதியில் கர்த்தன் மனுக்களைப் படைக்கும்போது நான்கு வகுப்பாய் பிரித்து, முதலாவது அம்பி யாக்கள், இரண்டாவது அவுலியாக்கள், மூன்றுவது மூமீனர்கள், நான்காவது காபர்கள், இப்படியாக சீவர்களைப் படைத்த பிறகு, இந்த வுயிர்கள் பயப்பட, அதைக்கண்ட நாயன் ஒரு துளியை யிறக் கினன். அதைக்கண்டு எல்லாவுயிரும் மசூது செய்தார்கள். நான் காவதான காபர்கள், ஒதாமல் நின்றார்களாகையால், ஒதினதெல்லா மொருபகுதி, ஒதாதெல்லா மொருபகுதியாக நின்று இரண்டு வித மானார்கள். இதல்லாமல் அந்த ஒளியை மூந்தவும் பிந்தவுங் கண்ட பேயெல்லா மூமீனைப் பிறந்தார்கள். மூந்தக்கண்டு பிந்தக்காணாத வர்கள் இசிலாமாய் பின் காபராய்ப்பிறந்து இசிலாமாவார்கள். ஒன் றுங்காணாதவர் காபராய்ப் பிறப்பார்கள். இப்படியாகப் படைத்து என்னை வணங்கவேண்டு மென்றார். பின்பு குதிசிலென்னுந் தலத் தில் வைத்து துனியாவிலே நானுபகுதியாகக் கர்த்தன் உண்டாக்கி னர். இந்த துனியாவில் புற்பூண்டி விருகூஹாதிகள் பயிராய், பூமி மேடு பள்ளந் தெரியாமல் மூடிக்கொள்ள அவையழிக்கும் பொருட்டு மிருகாதிகளைப் படைத்தனர். பின்பு, அம் மிருகங்கள் தாவரசங்கமாகிய விருகூஹாதிகளை யெல்லாமழித்து மிருகக்காடாயின. இதுகளையெல்லாங் கொல்லும்பொருட்டு சின் செயித்தானுகிய பூதப் பசாசசேனையை யுண்டாக்க, அவை அம் மிருகங்களைக் கொன்று பூமியெல்லாந்திருத்தி சமனுக்கி, பின்பு சின்செயித்தானே இராச்சிய மாண்டு கர்த்தனை வணங்காமல் கர்வித்திருக்க, இவர்களைக் கொல் லும்படியாய் மிருகங்களி லொன்றுகிய குதிரைகளைவிட, அவை சின் செயித்தான் சேனையை யெல்லாங் கொல்லும்போது, மலக்கி லொரு பெரியோனை வரவிட, அவன் பரிக்கூட்டங்களை யெல்லாங் கொன்று வானலோகத்திற்போய் சுகமேயிருந்தான். பின்பு சொர்க்கமும் தீமை செய்தவர்களு நரகமு மீகையால் இந்த துனியாவாகிற

பூமி நரகத்தாரிருந்து தீமையைச் செய்யவும், சொர்க்கத்தாரிருந்து நன்மையைச் செய்யவும், இவர்கள் சுகதுக்க மனுபவிக்கவும் இடங் கொடுத்திருக்கும் பொதுவில மாகையால் துனியாவென்று சொல்லப் படுவதென்றறிக.

ஆகியிலுண்டான விபரம் கர்த்தாவால் வந்தது உலகம், கல னால் வந்தது அணிபலகை, இப்பலகையால் வந்தது இராசிபீடுக்கு, இவனால் வந்தது ஜெயபீராகிலுக்கு, இவனால் வந்தவர் மகுமதருக்கு போதிப்பவர், மகுமதர் முதல் இசிராயில் கடையாம். பின்பு இசி ராயிலுக்கு அலிபீலதுமா னெழுகிய மகுபூதென்னும் பலகை, இப் பலகைக்கு மக்கா நகராளும் இராசாவே நாயன் சொற்படி யெழு தினது, இனி படைப்புகளுக்கு இரண்டுங் கொடுக்கவும் படைப்பின் றொழில் செய்யவும் செபீர்கீலுக்குத்தரம் அல்லாவுடைய வரிசின் கீழ் தூதுநடந்த மீக்காயுளுக்குத்தரம் மேகங்களை பொரு தலத்திலே கூட்டி மழைபெய்விக்க, இசிராயிலுக்குத்தரம் படைப்புக ளுபிரை யெல்லாம்வாங்க, ஜெபீர்கீலுக்குத்தரம் இவருயிர் வாங்குகிறவர், இசி ராயில் இவருயிர் வைக்கிறவர் ஐந்நூறு வருடத்திற்குப் பிறகு உயிர் வாங்குகிறவர் மீக்காயில் இப்படி யிவர்களுக்குத் தொழிலென்றறிக.

கருத்தனுல் கூறிய வேதமே முதல் வேதம்; தவிரேத்து மூசா நபி பைகம்பரோதினது இரண்டாம் வேதம்; இஞ்சில் இசை யீசா நபியோதினது மூன்றும் வேதம்; ஜபூர், காதர், பூதுநபி யோதினது நாலாம்வேதம்; விசேஷமான மகுமத ரோதினர். இக்கால் வேதமும் இக்கால்வர்களால் தம்பிரான் உண்டாக்கினது இனித்தம்பிரானுல் உலகத்தில் நடக்கவேண்டிய காரியங்களுக்கு ஒரு சத்தம் பிறந்தது. அச்சத்தம் பரம்பரையாக நால்வரிடத்தில் வந்து ஜெபிர்க்கில் மகுமத ருக்குச் சொல்ல அப்படியே காரியங்களை நடாத்துவரென்றறிக.

அல்லாவானவர் சிவர்களைப் படைத்தபின் இவர்களுக்குத் தேகங் களைக் கொடுத்து பந்தப்படுத்தவேண்டி எறும்புகடையில் தமது வர்ம வொளியினுல் ஒரு மாணிக்க முண்டாக்க, அதனை அல்லா வானவர் எதிரிட்டுப் பார்த்தவுடனே அந்த மாணிக்கம் இரண்டு பிரி வாகி அதில் ஒன்று அக்கினியும், ஒன்று நீருமான பின்பு, வாயுவையு முண்டாக்கி, அனலும் நீருங்கூடிக் கொதித்து நுரை யெழும்ப, அது தானே மண்ணைப் இந்த பூதபூதமும் கூடினபோது, ஒரு தன வாகி, "நாயனது சுரோணிதத்திற்றரித்திடு மண்ணுநீரும், பாய்ந்

திடுஞ் சுக்கிலுநித்திடும் பவளமுந்தீ" என்றபடியாகப் பிறந்து நால் வகை சீவராசிகளும் கர்த்தன் கொடுத்த தேகங்களிற் புகுந்து புண் ணிய பாவங்களைச் செய்தாலும், வணங்காத லிபீலிசை வணங்கினு லுங் கர்த்தனை வணங்கலாலுஞ் சுகதுக்கங்களாகிய சொர்க்க நகரங் களில் விழுந்து மறுபிறப்புண்டாகி வருந்துவது உயிர்களின் பந்த மென்றறிக.

இதைப்பார்க்கிலும் காபர்கள் மிகுந்த பந்தப்பட்டவர்களாய் சூரூதி சர்வசங்காரமானபோது நடுவே நாளாவட்டத்தில் மரித்த சீவன்களை மகுமதர் வந்து கேள்விகேட்டு, அச்சீவராசிகள் பூர்வம் எந்தத் தனுவோடு எந்த விடத்தில் மரித்ததோ அந்த விடத்திற் சென்று அத்தனுவோ டெழுப்பி, அவர்களைக் கேள்விகேட்டு லிபீலீ சையும், கல்லுகளையும், பஞ்சலோகங்களையும் கர்த்தனைப் பாவித்து, பூசைசெய்த வுயிர்களுக்கெல்லாம் நரகமும், கர்த்தனது சொரூப மறிந்து நிசமாக நோன்புகளால் வணங்கி அல்லாவாகிய கர்த்தன் ஒருவனே யல்லாமல் வேறு தெய்வமில்லை என்ற வுயிர்களை சொர்க் கத்திலேயும் வைப்பர்.

இனி மிருகபட்சி ஊர்வன ஜலஜெந்து தாவரமாய் மடிந்த உயிர் களையெல்லாம் எழுப்பிக் கேள்விகேட்டு மண்ணோடு மண்ணுக்குவார்; இப்படி பந்தப்பட்ட சீவனில் மலக்குளாகிறது மல்கல் மவுத்துக ளாகின்றன. கர்த்தன் தூதர்கள் இவரிற் பிரதானர். இசிராயீற் முதல் கரல்வர். இனி அக்கினியே தேகமாய் வேறுகர்த்தன் இல்லை யென்று தாங்களே கர்த்தனென்றபேரையும், யுத்தஞ்செய்து கொன்ற பேரையும், அம்பியாக்களாகிறபேரையும், (313) பேரில் பிரதானர் நூறுபேர், அவுலியாக்களாகிறபேர், சாரகத்து வழியிலாவது, கர்த்தனேவலாக வானத்திலிருக்கிறபேர் முசிலீன்கள், மூமீன்களா கிற பெரியவர்கள். மகுதர்முதல் (18070) பேர் ஜெபிரில் அணுகு முதுச்சலாநபி (313) இதல்லாமல், (6619) கேபருமுண்டு. அசா வாக்கள், பெரியவர்கள், மூமீன்கள், தபோதனர், இனி அபூபக்கர், உமர், உதுமான், அலியார், மரலி, அசன், உசன், முருகலானவர், அசாக்கள் (42000) உலல், சுமை, அசும் யில்மதமதை வழிபட்ட தோழர் மஷாகைகள் குறைந்தபேர் வணங்குகிற பேருக்கெல்லாம் கர்த்தனை வணங்கி சொர்க்கம் பெறுவர். வணங்காதபேரெல்லாம் நரகம் பெறுவார்களென்றறிக.

முத்திநிலையானது; சின்செயித்தான் முதலிய பசாத்துபவங்களை முன்னி கேட்குமிடத்தில் இரிஷபகேள்வி யென்றும், பாதாள கேள்வியென்றும், சூரூதுகிற வகைகளும், அதில் சகல சீவர் மடிகிறதும், இதில் மிகுந்து நின்றபேர் ஒருவரைக் கொல்வதும், எல்லாரையும் கொன்றவன் மறிக்கும்போது அதிகவருத்தம் அடைந்து உயிர் விட்டானென்றும், அப்போது கர்த்தனொருவனே நின்று அநேககாலஞ் சென்றபின் மறுபடைப்புண்டாக முதல் நால்வரையுண்டாக்கி அவர்களாலே மறுபடியுஞ் சூரூதுவித்து உலகத்தையுண்டாக்கினரென்றும், கர்த்தாவையறிந்து பின்னொரு தெய்வத்தைப் பணியாமல் நோன்பு விரதங்கள் நிமாசு முதலிய கிரமத்திலிருப்பவனே மோட்சமாகிற சொர்க்கத்தில் வைப்பான்.

இதற்கு புருக்கான் வேதஞ் சொன்னபடி நோன்பு, விரதம், நிமாசு முதலியவற்றுற் றொழவேண்டும். தொழுதலாவது - பரிதி தோன்று முன்னெழுந்து மாயாகுணமெல்லாம் விட்டுத் தொழுதலாம். தபமாவது - பணியும்போது பஞ்சாங்கவிதமாம். அதாவது, முழங்கால் - 2, பாதம் - 2, கை - 2, நெற்றி, மூக்கு - 2, இவ்வெட்டவயவங்களையும் பூமியில் பொருந்த தெண்டனிடுவது. கிழீலாவை நோக்கி நின்றது - 1, மறுக்கு - 2, தொன்னியா - 3, சுசீது - 4, இருப்பு - 5, கலி - 6, தெரிசுகீது - 7, சலாம் - 8, இப்படி 16 - விதமாய்த் தொழுது, மீபாஞ்சிறதே தபம். கர்த்தனை தொழும்போது புறப்பறுது எட்டுண்டு; இதில் முதலாவது, தொழுகைக்கு நேரமறிகிறது, 2 - வது தூய தண்ணீர் தேடி ஒலுச்செய்வது, 3 - வது தூய பிடவை தேடுவது, 4 - வது தூய தலந்தேடுவது, 5 - வது பறுதான பிடவை யுடுப்பது, 6 - வது கிழீவாவுக்கு நேரேநிற்பது, 7 - வது நீயத்துக் கொள்வது, 8 - வது முன்னின தகுபீடர் கட்டுவது. இனி உள்பறுது எழுண்டு. இதில் முதலாவது நிலையில்நிற்க, 2 - வது இஸ்திராத்தோத, 3 - வது றுக்குவிலே நிற்க, 4 - வது சுகிதுசெய்ய, 5 - வது பின்னிப்பிருக்க, 6 - வது அடைவுடனே கொண்டுவர, 7 - வது வலதுபுற மிடதுபுறஞ் சலாங்கொடுக்க, திர்ப்பதிபட ஆ உள்பறுது - 7.

உள்ளும் புறம்புமான விரண்டு பறுது 15 - இனி முழுக்கில் பயது - 3, முதலாவது வாய்கொப்பளிக்க, 2 - வது நாசிக்குத்தண்ணீரேத்த, 3 - வீது உடம்பெங்கு நனைக்க ஆ - 3. இனி ஒதுவிலே

பறுது - 4, இதில் முதலாவது முகந்தடி யுள்பட்க்கழுவுவது, 2 - வது முகங்கை கழுவுவது, 3 - வது தலைகர்லிலொன்று மழுக்குசெய்கிறது, 4 - வது கணைக்கால் பரட்டை யுள்பட கழுவது ஆ - 4, இனியறுப் புப் பறுது - 5, முதலாவது முசுலிமன்னிறிக்து, 2 - வது பிசுமில்லா சொல்லியறுக்க, 3 - வது தொடர்பிடியாயறுக்க, 4 - வது முடிசுத் தலையில் நிற்கக்கூட்டிப் பிடிக்க, 5 - வது நாலு நரம்பு தெறிக்க ஆ-5, இனி நலப்பறுது 12-நாளொன்று தொழுகை 5 - கூறினபறுது பகி னேழுரை ஈமான் இசிலா 11 - தாய் மனதில் பறுது - 2, ஆ - 57. இதனை யறிவார்கள் அல்லாவுடைய தீதாரும், மகுமதருடைய சற் பாத்துஞ் சொர்க்கத்துக் குடையவராவர்.

இனி அல்லா சம்பத்துண்டாக தொழுகையில் சுன்னத்து 312-உண்டு. அதில் நிலையில் 8 - சுன்னத்துண்டு. இதில் முதலாவது, தகுபீர் அழ்வலிலிரண்டு கையுமெடுக்க, 2 - வது தொப்புளின் கீழ்கை கட்ட, 3 - வது இடதுகை கீழும் வலதுகை மேலுங்கட்ட, 4 - வது சசீதிடுந்தலத்தைப்பார்க்க, 5 - வது தானூவோத, 6 - வது அவுது வோத, 7 - வது பிசுமிலோத, 8 - வது ஆமீனுைத, ஆக - 8, இனி றுக்குவிலே சுன்னத்து 8 - முதலாவது தமக்கு பீர்சொல்ல, 2 - வது இரண்டுகையாலு மிரண்டு முழங்காலைப்பிடிக்க, 3 - வது தலையு முது குஞ் சமனுய் நிற்க, 4 - வது சுவாசவானிற் பிறப்பில் வலியுமோத, 5 - வது புறங்காலைப் பார்க்க, 6 - வது கண்ணை விழித்துப்பார்க்க, 7 - வது சமனல்லாகு சொல்ல.

சுசீதில் சுன்னத்து - 8, இதில் முதலாவது தமக்கு பீர்சொல்ல, 2 - வது எட்டுறுப்புந் தரையிற்பட சுசீதிட, 3 - வது மூக்கு தாரை யைப்பார்க்க, 4 - வது சுவனிற் பிலாலவென்று மூக்கால் சொல்ல, 5 - வது கண்ணை விழித்துப்பார்க்க, 6 - வது ஈரக்கையிரண்டுந் தோளிற்குச் சமனுய்வைக்க, 7 - வது உறுப்புகளைக் கிபிலாவுக்கு நேரே திருப்பிக்கொள்ள, 8 - வது சிறு விருப்பிருக்க, ஆ - 8. இனி யிறுப்பில் சுன்னத்து 8 - இவற்றில் முதலாவது, தகுபீர்சொல்ல, 2 - வது இடதுகால் மடித்து வலதுகால் குந்திருப்பிருக்க, 3 - வது கைவிரல் கால்விரல் கிபிலாவுக்குநேரே வைக்க, 4 - வது இரண்டு கையு மிரண்டு துடையிலே வைக்க, 5 - வது மடியைப்பார்க்க, 6 - வது சலவாத்தோத, 7 - வது சலாஞ்சொல்லும்போது வலது தோளைப்பார்க்க, 8 - வது இடது தோளைப்பார்க்க, ஆ 8 இந்நான்கு

நிலையிலும், ருக்குவிலும், சுசீந்திலும், சிறுவிருப்பிலுங்கூடின சுன்னத்த - 32, இனி தொழுகை விபரம் முதலாவது அபூது மில்லாகிமின் ஷெயித்தாள்சின் பிசுமில்லாகிர்ரகுமானிற்றகீம்.

இனி இரண்டாம் தொழுகையடைவு ஓதச்செய்தபின்பு இன்னுகன் கென்னுகு ஓதிநடக்க நீயத்துச் செய்து தகுபீர்கட்டின பின்பு ருக்குவிலே போக, பின்பு துவாஓத, பின்புகியாவிலே தத்வையோத, பின்பு சசீந்திலே தசுவையோத, பின்னிருப்பிலே இருந்து அசுதகயாத்தும் மஷாகத்துக் கலிமாவுஞ் சலவாத்துமோதி சலாங்கொடுக்கவும், 3-வது நோன்பாகிறது நமஞ்சாபிறையிலே வந்தால் 30-நோன்பு பிடிக்கிறது; அது கறிதுகிறதுற மஞ்சான் மாதப்பிறையில் விடிந்து பிடிக்கநீயத் கொண்டபின்பு பொழுதுபுகுத நோன்பு தீர்க்கிறது. விசுமில் ஓதி தீர்க்கவும் 4-வது செக்காத்விதியாகிறது; இருபது பொன்னுக்குமேல் நின்றால், பத்துக்கு வபு வெடுத்து மஞ்சான்மாதத்தில் நாலுபங்காக்கி குருக்களும் பள்ளிக்கும் தருபேசுக்கும் தன்கிளமில் இலேத்தபேருக்குங் கொடுக்கவும் 5-வது மகத்துக்குப்போய் அச்சுச்செய்யவும். 6-வது ஆமீனகு மில்லாகி ஒதுகிறது. இவ்வாறு கர்த்தனை விதிவழுவாமல் ஒதிவந்த ஆத்மாக்களைக் கர்த்தன் முடியில் கேள்விகேட்டு மோட்சந்தருவார். மற்றவர்களுக்கு நரகந்தருவர் என்றும் பலவாறு விரித்துக் கூறுவர்.

கிறிஸ்துவ மதம்

இம்மதத்தர்கள் சுமார் ஆயிரம் வருடத்திற்கு முன்பு பிரபஞ்சம் தோன்றியிருக்க வேண்டுமென்று கணிப்பதுடன், கடவுளால் ஆகியில் வானமும், பூமியும் படைக்கப்பட்ட தென்றும், பின்பு வெளிச்சம், இருட்டு, சலம், சூரியசந்திரர்களையும், தாவரசங்கமப் பொருள்களையும், கடையில் தம் சாயலாக ஆதாம் ஏவாள் என்கிற ஆதிபுருடனையும் ஸ்திரீயையும் முறையே படைத்து தம் கிரியையெல்லாம் முடித்து, ஏழாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைய தினத்தை ஓய்வு நாளாக்கி அதைப் பரிசுத்தப்படுத்தி, தம்மை வணங்கவேண்டுமென்று கட்டளையிட்டதாகவும் கூறுகிறார்கள்.

இதன்றி மண்ணிலே உருவாக்கி சீவசுவாசத்தை நாசியிலே ஊதி, சீவாத்துமாக்களாகிய ஆதாம் ஏவாள் தங்கியிருக்கும்படி அமைத்த ஏதேன் சிங்காரவனத்தில் தம்மால் தடுக்கப்பட்ட நன்மை தீமையறியும் மரத்தின் பழத்தை ஒரு துட்டசர்ப்பத்தின் தூண்டு

தலினல் உருசி பார்த்தகினல் அவர்கள் பாவிகளாகவே அவர்கள் பிள்ளைகளாகிய உலகத்தாரும் அந்தப் பாவமன்னிப்புக்குக் கடவுளை அத்தினத்தில் வணங்கவேண்டு மென்றும் சொல்லுகிறார்கள்.

இவ்வாறு உலகத்தாருக்கு உண்டாகிய பாவத்தை துடைத்து அவர்களை இரட்சிக்கும்பொருட்டு பெத்தலேகமென்னும் தேயத்தில் தச்சவேலை செய்து ஏழை சீவனஞ் செய்துவந்த யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த மரியாளென்னும் கன்னியின் வயற்றில் தீர்க்க தரிசிகள் வாக்கின்படி ஏசு சனித்தார். இவருக்கு * "இம்மானுவேல் ஆதாம்" "செய்யா." என்கிற நாமங்களுண்டு. இவர் தாம் பிறந்த எட்டாம்நாள் சுன்னத்தையடைந்து † இயேசுவென்று நாமம்சூட்டப் பட்டு, நாற்பதாம்நாள் தேவாலயப் பிரதிட்டை யாக்கப்பட்டதாயும், மோசேயின் ஆதியாகமத்தினல் தெரியவருகிறது. உலகத்தில் ஆங்காங்கு தோன்றிய அவதார புருடர்களைப்போல் இவர் அனேக அற்புதங்களைச் செய்தும், எண்ணிறந்த வியாதியஸ்தர்களைச் சுகப் படுத்தியும் வந்ததுடன் தம் பன்னிரண்டாவது வயதிலேயே தேவா லய போதகர்களோடு மாதவிடயமாய் தர்க்கங்களைச் செய்துவந்தார். இன்னும் தம் முப்பதாவது வருடத்தில் உலகப்பிரசித்தமாய் உலகத் தின் அநித்திய வாழ்க்கையைப்பற்றியும், புருடார்த்தத்தைப்பற்றியும் பிரசங்கஞ் செய்துவந்தார். இவர் தாம் பிறருக்குப் போதித்தபடி பரிபூரணமாய் பரம பிதாவினிடத்தில் பக்தி செய்து வந்தமையால் இவரிடத்தில் 12-நற்சீடர்கள் அடைந்தார்கள். 1-பேதுரு, 2-அந்தி ரேயா, 3-யாக்கோப், 4-யோவான், 5-பிலிப்பு, 6-பர்த்தலேமியு, 7-தோமா, 8-மத்தேயு, 9-யாக்கோபு, 10-தடேயு, 11-சிமோன், 12-பகுதா.

இவருடைய முக்கிய விதியாவது பராபரத்துவமாகிய கடவுளை பூரண இதயத்தோடும், பூரண பத்தியோடும், பூரண மனதோடும் விசுவாசித்தும்; நமது அயலாரை நம்மைப்போலும் நேசிக்கவேண்டு மென்பதே யாகையால், அக்காலத்திலிருந்த யூதர்களில் புத்தியீனர் கள் சிலரால் பலவித இடுக்கண்களடைந்து, முடிவில் "யூதாஸ்காரி யோத" என்னுஞ் சீடனொருவனல் காட்டிக்கொடுக்கப்பட்டு சிலு வையி லறையப்பட்டார். இத்தகைய குன்பத்திற்கு ஆளாகிப் பிரா

* தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.

† இரட்சிப்பவர் அபிடேகம் பண்ணப்பட்டவரென்று பொருளாம்.

ணனே விடுங்காலத்தும், 'சீவதாருண்ணியம் நிறைந்த ஓ பரம பிதாவே! தாங்களின்னது செய்கிறோமென்பதறியாத இவர்களே மன்னியும்; என் தேவனே! ஏன் தேவனே! நீர் என்னைக் கைவிட்டதேது' எனவும் முறையிட்டனராம்.

பிறகு தாமிறந்த மூன்றும்நாள் உயிர்த்தெழுந்து, தமது சீடர்களுக்குப் புத்திமதிகளைப் போதித்து, உலகமெங்குஞ் * சுவிசேடத்தை உபதேசஞ்செய்து பரவச்செய்யுமென்று ஆஞ்ஞாபித்து, பரலோகஞ் சென்றார்.

இவர் தாமுள்ள முப்பத்துமூன்று வருடமும் பிரமசாரியாகவே யிருந்து காலங்கழித்தார். இவர் காலத்தில், மகம்மதியரைப்போல சுன்னத்துசெய்கிற வழக்கம் மிகப் பிரபலமாயிருந்தது, கிறிஸ்து அதை மறுத்து † ஞான ஸ்நானத்தைப் பிரசித்தப்படுத்தினார்.

இயேசுநாதர், பரமண்டலஞ் சேருமுன் அப்போஸ்தலர்களாகிய பத்தசன சபையாருக்கு இரவில் ஞான உணவை ஊட்டிவந்தார். தாம் பரமண்டலத்தை யடையும்போது தம்முடைய மாமிசத்தை அப்பமாகவும், இரத்தத்தை இரசமாகவும் கொள்ளக்கடவீர்களென்று தத்துவார்த்தமாய் உபதேசித்ததை அநுசரித்தே தேவாலயங்களுக்கு அப்பத்தையும் இரசத்தையும் காணிக்கையாகக் கொடுத்து, குருமார்களால் தோத்திரம் செய்யப்பட்ட பிறகு பரிசுத்த பக்தி மான்களுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் கொடுப்பார்கள்.

---

* சுவிசேஷம் - என்பது பைபிள் என்னும் கிறிஸ்துவர் வேத புத்தகம்.

† ஞான ஸ்நானமாவது - நீரால் பரமபான ஸ்நானமும், பரிசுத்த ஆவியினால் உண்டான ஸ்நானமும் செய்வதாம். இயேசுநாதர் பரமண்டலப் பிராப்தி யடைந்த பின்பும் அவர் மதத்தை அநுசரிப்பவர்களால் இவ்வழக்கமின்றும் கொண்டாடப்பட்டு வருகிறது; ஆனால், இக்கிரியை பூர்வகாலத்தில் நடந்துவந்ததற்கும், இப்போது நடந்து வருவதற்கும் சிறிது பேதப்படுகிறது. பூர்வத்தில் ஞான ஸ்நானம் பெறுபவனைப் பரிசுத்தமான ஆற்று அல்லது ஊற்றுநீரால் பரிசுத்தப்படுத்தி அசுத்த ஆடையைப்போக்கி, சுத்த ஆடையை உடுப்பித்து, தேவாலயப் பிரதிட்டைசெய்து, ஞானபோதகரால், ஞானஸ்நானங் கிறிஸ்து மார்க்கத்தைப் போதித்து, அக்கூட்டத்தில் ஒருவராக வளர்ப்போமென்று அக்காலத்தில் கூடும் சபையின் முன்னிலையில் வாக்குத்தத்தஞ்செய்து கொடுக்கப்படும். இக்காலத்திலே சிரசின்மேல் மாத்திரம் நீரைத்தெளித்து மற்றக் கிரியை ஈடத்தும் வழக்கம் பிரபலமாயிருக்கிறது.

பிரபஞ்ச உற்பத்தி

இம்மதத்தை ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களுள் அநுசரிக்கும் பெரும்பான்மை யோர்களுக்கும், ஆசியா, ஆப்பிரிக்கா முதலான கண்டங்களில் தொழும் சிறுபான்மையோர்களுக்கும், இன்னும் அங்குமிங்கும் சிறுபான்மை லௌகீக தாரதம்மிய மிருப்பதால், சற்றேறக்குறைய இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட உட்சமயங்களுண்டு. அவைகளில் பிரதானமானவை அடியில்வருமாறு காண்க

கிரேக்குசபை	யூனிடேரியன்சபை
உரோமன்சபை	கொகீனியயூனிடேரியன்சபை
புரோட்டெஸ்டண்டுசபை	லண்டன்மிஷன்சபை
லூத்தரின்சபை	ஸ்கோத்து மிஷன்சபை
பாப்டிஸ்டுசபை	இபுஸ்கோபல்சபை
வெசலின்சபை	குவாக்காசபை.
ஓயிட்பீடிஸ்டுசபை	பிரிமேசனரிசபை
ஆண்டிநோவியர்சபை	சுவீடன்பர்க்கியசபை
பிரிஸ்பிடேரியன்ஸ்சபை	முதலியனவாம்.

உரோமர் மதம்

மேற்படி கிரேக்கதேசத்தைச்சார்ந்த இத்தாலிய தேசத்தில் உரோமபுரி என்றோர் பட்டணமுண்டு. இதிலுள்ளவர்கள், ஆரிய பகுப்பினராக யோசிக்கப்படுகின்றனர். இவர்கள் வசிக்கும் தேசங் காரணமாக இவர்கள் உரோமமதத்தவரெனக் கூறப்படுகின்றனர். இவர்கள் உரோமன் பாஷையைப் பேசுகின்றனர். இவர்கள் அன்னியதேச நடை நொடியாதிகளை அனுட்டிக்கின்றனரேயன்றி, தங்கள் சுயார்ச்சிதமாக யாதுங்காணும்.

உரோமர் மதத்தின் தெய்வங்கள்

1-ஜானஸ் என்னும் தெய்வம் சிருட்டி கர்த்தாவென்றும், அவரேபெரிய கடவுளென்றும், அவராலே உலகமும் வருடமும் உண்டான தென்றும்,

2-ஜூபின் என்னும் ஒரு கன்னிகாதேவதைபால் மாங்கல்லிய கருமங்கள் காக்கப்படுவதென்றும்,

3-மைநீர்வா என்னும் அறிவு பொறுமை விளைவிக்கும் கடவுளென்றும், மூவகையாய்க் கூறுகின்றனர்.

உரோமர் பொது தெய்வங்கள்

மேற்கூறிய மூன்று தெய்வங்களன்றி கிரேக்குமதத்தைச் சார்ந்தவர்கள், அநேக இல்லாத தெய்வங்களையும், சூரியனையும், சந்திரனையும், புயல்காற்றையும், ஊற்றையும், சலத்தையும், பாம்பையும், மேகத்தையும், பஞ்சபூதியங்களையும் வணங்குகிறவர்களாயிருக்கின்றனர். அன்றியும் வருஷம் முந்நூற் றறுபத்தைந்து நாளும் பலவிதத் திருவிழா உற்சவங்கள் செய்வதில் மிகவும் பிரீதியுள்ளவர்களாக இருக்கின்றனர்.

• இந்த உரோமர்கள் அநேக வாலிபஸ்திரீகளைக் கன்னிகாமடங்களிற்சேர்த்து ஆயுள்பரியந்தம் தேவர்களை வணங்கவும், தொண்டு செய்யவும் விடுவார்கள். அவர்களில் யாராவது விபசரித்தால் அவர்களை உயிரோடு புதைத்து விடுவார்களாம்.

இந்த உரோம தேசத்திய தத்துவஞானிகள் மாத்திரம் இவர் வழியில் புகாமல் (ஜெனிகா) என்னும் ஒரே கடவுளுண்டென்று எந்நாளும் தாபிதப்படுத்தி வாதிப்பர்.

கிரேக்க மதம்

கிரேக்கமதம்:—ஐரோப்பா கண்டத்தின் தென்பாகத்தில் கிரிசு என்று ஒரு பெரியபட்டணமிருக்கின்றது. அவ்வூரிலுண்டான மதத்திற்கு இடவாகு பெயராக கிரேக்கமதம் எனக்கூற நேர்ந்தது.

கிரேக்க பாஷை

இவர்களுக்கு இங்கிலீஷ் அக்ஷரரூபமாக பதினேராயிரத்து அறுநூற்று முப்பத்துமூன்று பதங்களையுடைய ஒரு பாஷையிருக்கிறது.

வகுப்பு

இதில் ஒரு இரண்டாயிரம் பதங்கள் சமஸ்கிருதமாக இருத்தலினால் இவர்கள் ஆரிய வகுப்பினர் பகுதியாரென உத்தேசிக்கின்றனம்.

சாத்திரங்கள்

இவர்களுக்குச் சமயாசாரியரும், மத சித்தாந்த சாத்திரங்களும் இல்லாமையினால், இவர்கள் மீதமுடிபும், ஆகாய விலட்சணங்களும் இன்னதெனக்கூற ஏதுவில்லா திருக்கிறது.

கிரேக்க தெய்வங்கள்

இவர்களுள் கவிவாணர்கள் ஒரு கருத்தாகவும், தத்துவஞானிக ளொரு கருத்தாகவும், சாதாரண குடிகள் ஒரு கருத்தாகவும், தெய் வங்களைக்கொண் டிருக்கின்றனர்.

கிரேக்க சாதாரண குடிகள் கருத்து

பூதேவி	இருகட்கடவுள்
அன்புக்கடவுள்	நாட்கடவுள்
மோட்சலோகக்கடவுள்	

இவர்கள் உண்டாய் சகலத்தையும் உண்டாக்கினதாக கூறு கின்றனர். அன்றி இவர்கள் அத்தேவதைகளை இந்துக்களைப்போல அழகிய விக்கிரகரூபமாகத் தாபித்து புட்பாதி அலங்காரமும், சில சமயம் ஆடுமாடுகளைக் கொன்றதின் இரத்தத்தை வாரிப்பூசியும் அதிக உரத்த சத்தமாகப் பிரார்த்திக்கின்றனர்.

கிரேக்க கவிவாணர்களது கருத்து

அழகிய ஸ்திரீபுருஷ கந்தமூல கிருமி முதலியவைகளைத் தேவர்க ளாகப் பாவித்துப் பாடுவார்கள். மேற்படி தேவன், சுமுத்திர தேவன், சூரியன், சந்திரன் முதலியவர்களாகப் படிகமுதலிய விக் கிரக ரூபமாகவைத்து துதிப்பர். இவர்கள் அழகு, அறிவு, சத்திய மிவைகளுள்ள மனிதர்களை எல்லாம் தேவர்களென்றும், இவர்கள் பூமியிலேயே சனித்தவர்களென்றும் இகபரபோகமே உண்மையான சுகமென்றும் கூறுகின்றனர்.

கிரேக்க தத்துவஞானிகள் கருத்து

அம் மதத்துள்ள தத்துவஞானிகள் தெய்வம் ஒருவரே யென் றும், அக்கினியே கடவுளென்றும், பரிசுத்த எண்ணமே கடவுள் என்றும், பலவிதமான கருத்தைக்கொண் டிருக்கின்றனர். ஆயினும் இம் மதத்தவர்கள் ஆலயத்திற்குப் போகும்போது இந்துக்களைப் போலவே ஸ்நானமுதலிய சுத்தியோடு ஆராதனை முதலியவைகளைச் செய்து வருகின்றனர்.

எகிப்துதேச மதம்

ஆபிரிக்காவின் வடகிழக்கில் தொன்றுதொட்டு நாகரீகத்திலும் சாத்திர விசாரணையினும், பிரதாபமடைந்த பூலோக வனமென்று

பல தேசத்தாராலும் புகழும் எகிப்து என்றோர் தேசமுண்டு. இத் தேசத்தில் மூன்றுவித மதங்கள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றுள் 1-வது வகுப்பார்: ஓர் ஆதிகடவுள் உண்டென்றும், அக்கடவுளே சராசர பிரபஞ்சமென்றும், மறுபிறப்பு முண்டென்றும், ஆன்மா அழிவற்றதென்றும், இந்தியாவிலுள்ள அத்துவைத மதத்தர்களின் கொள்கையை யுடையவர்களாயிருந்தும் ஆன்மாவும் தேகமும் ஒன்றென்றே சாதிக்கிறார்கள்.

2-வது வகுப்பார், மூன்று வகையான கருத்தர்களுண்டென்றும், சரியை கிரியையோக முதலானவைகளினால் கன்ம நிவர்த்தியுண்டாகு மென்றும் தாபிக்கிறார்கள்.

3-வது வகுப்பார், புராண சம்பந்தங்களுக்கிணங்க, எண்ணிறந்த சடங்குகளையும், பூசைகளையும், பிராயச்சித்தங்களையும் செய்வதினால் மோட்ச முண்டென்று சொல்லுவதுடன், புதுக்கோவில்களை ஏற்படுத்தி, பல பிராணிகளைப் பாவ நிவர்த்திக்காக பலி கொடுத்தும் வருகிறார்கள். செத்தபிணங்களை ஒசரிஸ் தேவன் சந்நதியில் எழுபது நாள் வைத்திருந்து கடைசியில் அங்குள்ள நிராசில் ஒவ்வொருவரின் புண்ணிய பாவங்களை நிறுத்துப்பார்த்த பின்னர் அடக்கம் செய்கிறார்கள்.

காத்திதேவியர் அல்லது டியுடனிக் மதம்

ஐரோப்பா கண்டத்தைச்சார்ந்த சில சுற்றுப்புறங்களில் குடியேறி வாசஞ்செய்திருந்தவர்களுக்கு காத்திதேவியர் அல்லது டியுடனிக் மதமென்று பெயர். இவர்களை இன்னசாதியாரென்று நிட்டமாய்ச் சொல்லக்கூடவில்லையாகிலும், பூர்வம் ஆரியவமிசத்தினின்று பிரிந்த ஐரோப்பியருடன்கலந்து, ஐரோப்பாகண்டத்தின் மத்திய பாகத்தில் ஆடுமாடுகளைமேய்த்து, கடைசியாக ஜர்மனியராகவும், டச்சுக்காரராகவும், பிரஞ்சுக்காரராகவும், ஆங்கிலோசாக்ஸனர்களாகவும், பின்னும் பலவாறாக ஐரோப்பா கண்டத்தின் பலவிடங்களில் பரவினர். கொலம்பஸ் என்பவர் அமெரிக்கா கண்டத்தை கண்டுபிடிப்பதற்கு ஐந்நூறு வருஷத்திற்கு முன்னமே இந்தக் காத்திதேவியர் அமெரிக்காவைக் கண்டவர்களா யிருக்கின்றரெனச் சில சரித்திரம் சொல்லுகிறது.

இந்தசாதியார் ஜர்மனி முதலிய பாஷைகளிலிருந்து உற்பத்தியான (ஸார்ஸ்) என்னும் பாஷையைப் பெற்றவர்களாயிருக்கின்றார்கள்.

உலக சிருட்டி

ஆதியில் (அபிஸ்) என்கிற பிண்டமானது உத்தர தட்சண உலகமாகயிருந்ததாகவும், இதின்பேரில் (வெனம்) என்னும் மழை பெய்கையில் தட்சணத்திலிருந்து மோதிய காற்றினால் அந்தப் பிண்டம் கரைந்துபோனதாகவும், அப்படி கரைந்த பிண்டத்திலிருந்து (இமிர்) என்னும் இராக்கதன் பிறந்து அவன் மாய்கையினால் ஒரு கொடிய சாதியாரும், (மண்டான்) என்னும் பசுவும் பிறந்ததாகவும், அந்தப் பசுவினிடமாய்ப் போர் ஓடின விலாயென்னும் தேவர்கள் உற்பவித்து, இமிர் என்னும் இராக்கதனைக் கொல்லவும், அந்த இராக்கதன் உடலே வானமும் பூமியுமானதாகவுஞ் சொல்லுகிறார்கள்.

தேவர்கள்

இவருக்கு பதினேந்நுவிதப் பெரிய தெய்வங்களும், அனேக சில்லரைத் தெய்வங்களும் உண்டு. ஓடின் என்னும் முதல் தேவனை 'ஆல்பாதர்' உலகபிதாவென்றும்; சிருட்டி கர்த்தாவென்றும், இவர் ஆஸ்காவென்னும் விருட்சத்தடியில் உட்கார்ந் திருப்பவரென்றும், பூமியே இவருக்கு மனைவியென்றும்; இவருக்கு (தார்) என்னும் ஒரு குமாரனுண்டென்றும், அந்தத் தேவனுக்கு (பிலஸ்கிர்னிர்) என்னுமிடத்தில் ஐந்நூற்று நாற்பது கோயில்கள் உண்டென்றும், ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வோரவதாரமாக இருப்பாரென்றும், இரண்டு ஆட்டுக்கிடாக்களால் இழுக்கப்பட்ட இரதமுடையவ ரென்றும், அவர் அபூர்வமான வெகு சத்தியுடையவரென்றும் சொல்லுகிறார்கள். இவர்களினுட்பிரிவிலுள்ள அனேக சில்லரைத் தெய்வங்களின் வேறுபாட்டால் மதவாதங்களும், ஆசார அநுத்தியங்களும் மாறுபட்டுழலுவதாகச் சொல்லப்படுகிறது.

மெக்சிகோ தேசத்தார் மதம்

மெக்சிகோ என்னும்தேசம் அமெரிக்கா கண்டத்திலிருக்கிறது. அத்தேசவாசிகள் மூரட்டுத்தனமுள்ள ஒருவித காட்டுமனிதர்களாயிருக்கின்றனர். இவர்களில் சிலர் சூரியபகவானையே பராபரவத்துவாக நம்பி வணங்கி வந்தார்களாம். இவர்கள் மலைமீதில் வாசம்

செய்ததாகவும், இவர்களில் சிலர் மிருகரூபமாக இருந்ததாகவும் தெரியவருகின்றது. அக்காலத்தில் விட்ஜிலி புட்வுலி என்னும் வேத புருஷன் அம்மலைமீதில் வந்து பட்சிரூபமாக உட்கார்ந்ததாகவும். அதன்பிறகுதான் மெக்சிகோ என்னும் பட்டணங் கட்டப்பட்டதாக வும் சொல்லுகிறார்கள். மெக்சிகோ என்னும் அப்பட்டணத்தின் பெயரையே வகித்த ஒரு கிரமமான மனிதன் ஏற்பட்டு அவனுல் ஆலயம் முதலியவை கட்டப்பட்டு, மனிதர் என்கிற நாகரீகத்தை யாவருக்கும், தெரியப்படுத்திச் சீர்திருத்தம் செய்ததாகத் தெரிகிறது.

தேவர்கள்

டியாசு என்னும் ஒரு பெரிய தேவன் இருப்பதாகவும், அதற்கு உலகமே சிம்மாசனமாகையால் கோளவடியாய் ஆசனம் செய்து இருபுயத்திலும் சிறுகுகளுள்ளபாவனையாய் உருவு செய்து, அதன் கைகளில் பலவித ஆயுதங்களும், அனேகவித பாம்புகளும் பிடித் திருப்பதாக, பிரதிமைசெய்து வணங்குகின்றார்கள். அன்றியும் மோர்க்குரி என்னும் தெய்வத்தைத் தனதானிய லட்சுமியாக வழங்கி வணங்கி வருகின்றார். அப்பால் பூமியே தேவனுக நம்பி வருடா வருடம் அனேக நரபலிகளும் கொடுக்கின்றனர். இவர் ஆலயங் களில் மனிதர் மண்டையோடுகளைக் கட்டி ஏராளமாய்த் தொங்க விட்டும், பலவித பாம்புகளை அன்பு பாராட்டி வளர்த்துக்கொண்டும், தெய்வங்களுக்கெல்லாம் பூசாரிகளைக் கொண்டே மிகவும் பயபத்தி யுடன் பூசைகளும், சிலசமயம் பத்துநாள் உபவாச விரதமுடன் அலங்கரித்து ஆடிப்பாடி விளையாடும் பண்டிகையும் செய்கிறார்கள்.

கினியாதேசத்து மதம்

இவர்கள் படிப்பும் நாகரீகமும், எவ்வித சாத்திரங்களும், குருக் களுமில்லாதவர்கள். இறந்தவர்களைப் பெண்களே கொண்டுபோய்ப் புதைக்கின்றனர். இராசா சிம்மாசன மேறுவதையே சிறந்த உற் சவமாகக் கொண்டவர்கள். செவ்வாய்க்கிழமையே தொழுகை நாளாக மதித்துத்தொழுது, கோழி முதலானதையும் விசேட நர பலியுமிடுவார்கள். பெட்சிஸ் தேவர்கள் தங்களைப்போலக் கருநிற மாய், தீங்கையே குணமாக உடையவர்களா யிருப்பதாகக் கூறுகின் றனர். இடிவிழுந்த இடங்களில் விக்கிரக ரூபங்களை வைத்து வணங்குகின்றனர். தங்கள் துட்டதேவதைகள் கருநாயைப்போல வந்து தீங்குகளைச் செய்யுமாம்.

பெனின் அட்டராதேச மதம்

இவர்கள் யுத்தத்திலிறப்பதே மோட்சமென்கின்றனர். அதனால் இறப்பவர் கைகளைப் பின்பக்கங்கட்டி நிறுத்தி, வில்லையும் அம்பையும்கொண் டலங்கரித்து, சமாதி செய்கின்றனர். பிரபுக்களும், இராசாக்களும் இறந்தால் அவர்களுக்கு வைகுந்தம் போகத் துணையாய் நாலைந்து ஆள்களையும் கூடப்போட்டு புதைக்கின்றனர். இவருள் மாதரும் பிள்ளைகளும் கடவுளை வணங்குவது கிடையாது. துட்டதேவதைகளுக்கு நரபலியும் மிருகபலியுங் கொடுத்து பாவ மன்னிப்பு முதலிய பிரார்த்தனைகளைச்செய்து வருகின்றனர். ஒரு பெரிய கடவுளிருப்பதாகவும், அவர் நல்லவரென்றும், ஆனதால் அவருக்கு வழிபாடுகள் வேண்டாமென்றும் கூறுகின்றனர்.

கான்கோ மதம்

இவர்கள் இராசனே தேவனென்று வணங்குவதோடு சாம்பார், பாங்கோ என்னு மிரு விக்கிரகங்களையும் வணங்குகின்றனர். அவர் கட்கு 'கொங்காகாம்பரு' என்னும் தேவதை. குறிகளைச் சொல்லும் ஒளவையாரென்று நம்பிப் பூசிக்கின்றனர். இவ்வூரில் மீராம்பர் என்னும் பயங்கர மந்திர விக்கிரகமொன்றிருக்கிறது. இதை சயசீலர்கள் வணங்குகின்றனர். சிலர், பாம்பு, புலி, ஆடு, மாடுகளை வணங்குகின்றனர். இவர்கள் குருக்கள் வியாதியாளரைக்கண்டு வரும்போது, அவர்கள் சுகத்துக்காக ஓர் சிறு விக்கிரகத்தைக் கொடுக்கின்றனர்.

அங்கோலியர் மதம்

இவர்கள் மேற்படியாரைப்போலவே அனுட்டிப்பவராயினும், ஒரு கடவுள் உண்டென்ற நம்பிக்கையும், அனந்த சில்லரைத் தேவ வணக்கமும், தீர்க்கதரிசிகளிடத்தும், குருமார்களிடத்தும் விசுவாச முடையவர்கள். பன்னிரண்டடி நீளமான விக்கிரகத்தைச்செய்து வைத்து வணங்குகின்றனர்.

அரக்கான் தேசமதம்

இவர்கள் பற்பல தேவர்களை நம்பி பூசிப்பவராயினும், அவர்களின் முக்கியதேவனை வினோத விக்கிரக ரூபமாகச்செய்து, வாகனங்களிலேற்றிப் பவனிவருபவர். அக்காலில் அநேகர் பக்கச் செடில் முதலியவைகளைக் குத்திக்கொண்டு இரத்தத்தைச் சிந்த வைப்பர்,

இத்தேவனைப் பொரோமலையில் வைக்கப்பட்டிருக்கிறது. மழை, பனி முதலியதுகளால் தங்கள் தேவர்களுக்கு நோய்வருமென்று கோயில்கட்டி யிருக்கின்றனர். இவர்கள் குருக்கள் சருவாங்க சவரமும், மஞ்சள் வத்திரமும் தரித்துக்கொண்டு சன்னியாசிகளா யிருக்கின்றனர். இவர்கள் நான்கு மனைவிக்கு அதிகமாகவும், அரசர்கள் பன்னிரண்டு மனைவிக் கதிகமாகவும் மணம்புரிகின்றனர். இவர்கள் மறுபிறப்பையும், ஒரு கடவுளுண்டென்பதையும் நம்புகின்றனர். இறந்தவரான்மாவை எமன் கொண்டுபோகாதபடி விசேடக் கொட்டு முழக்கங்களைச் செய்து வருகின்றனர்.

காபிரிகள் மதம்

ஆபிரிகா தென்பாகத்துள்ள காபிரிகளுள் சிலர் முகம்மது சமயத்தையும், சிலர் மூடபத்தியையும், சிலர் கடவு ளொருவருண்டென அனேக விக்கிரகா ரூபமாக உபாசித்தும், சிலர் சூரியர், சந்திரர், நட்சத்திரம் இவைகளை நம்பி வணங்கியும், அண்ணாந்து வானத்தை நோக்கிக் கண்ணைமூடித் துதித்தும் வருவதோடு, ஓர் வித மேபக்கென்னும் பூச்சி விசேட சுகத்தைக் கொடுப்பதென் றுத்தேசித்து அதைப் பாதுகாத்தும் வருகின்றனர். அன்றி தங்கள் தெய்வங்களுக்கு ஆடு மாடுகளைப் பலியிடுவார்கள். இவர்களுக்குச் சிலத்தலும், விவேகத்திலு முதிர்ந்த ஆசாரியர்களுண்டு. விபசாரிகளை உடனே கொலைசெய்வர். விதவைகள் புனர்விவாகஞ் செய்துகொள்ளப் போகும்போதெல்லாம் தங்கள் முன் விரல்களை வெட்டிக் கொள்ளுவார்கள்.

தார்த்தாரி மதம்

ஆசியா வடபாகத்திலுள்ளவர்களைத் தார்த்தாரியரென்று கூறுவது. இவர்கள் மார்ஸ் என்னும் ஒரு தெய்வத்தை விக்கிரகாராதனையோடு குதிரைகளைப் பலியிட்டு வணங்கி வருகிறார்கள். சில வகுப்பார் குதிரை சவுக்கை தெய்வமாக் கொண்டுள்ளார். இவர்கள் கிடிகே என்னும் சிருட்டி கர்த்தாவும், சன்னியாசி குருவும், அவருக்கு இருபத்தினாயிரம் சீடர்கள் லாசாவிலிருப்பதாகவும், மானிபர் என்னும் ஓர் கிராமதேவ ருண்டென்றும், குடுசுடா என்னும் புனருற்பவத்தைக் கொடுக்குந் தேவருண்டென்றும், சிலர் பூமியே தேவனென்றும் கூறி அர்த்தாத்திரியில் பூமியிற் புரளுவரென்றும் கூறுகின்றனர். இவருள் வேறு பிரிவார் இறந்து போனவர்களையே

தெய்வமென்றும், சிலர் சஹமான என்னுஞ் சிருட்டி கர்த்தாவுண் டென்றும், சிலர் சூரிய சந்திரரும், பெரியவருமே தெய்தமென்றும் கூறி, பலியிடு மிருகங்களைத் தலைகீழாய்த் தூக்கி, மரங்களில் கட்டி வணங்குகின்றனர். சிலர், ஆகிடியசீ என்னுஞ் சிருட்டிதேவர் ஆற் றங்கரையிலுண்டென்றுங் கூறி வணங்குகின்றார். இத்தார்த்தாரியர் தாயோடு புணருபவர். ஆனலும், நாற்பது வயதின்மேல் மணம் புரியார்கள். விபசாரிகளைச் சந்தேகித்தால் கரடிமயிரை தொடச் சொல்வர். இறந்தவரைப் புதையாமல் மரத்திற்றொங்கக் கட்டிக் காய்ந்து நெடுநாளானபின் ஆபரணம் பூட்டிப் புதைப்பர்.

ஜப்பான் மதம்

இம்மதம் ஏகதேசத்தில் இந்துமதம்போ லிருப்பினும், சிங்சிச, செடோரியஸ், பாக்குச்சு, ஜிம்மாபோசு முதலிய பகுப்புகளுண்டு. இவர்களுக்கு ஏறக்குறைய இரண்டாயிரத்து ஒருநூற் றிருத்பதேழு தங்வன்ன ஆலயங்களுண்டு. அவ்வாலய வாயப்படிதோறும் பூத தலையைப்போன்ற விக்கிரங்களுண்டு முன்னர்ப் படங்களையும், பின்னர் விக்கிரங்களையும் பூசிப்பவரா யிருக்கின்றனர். இவர்கட்கு ஆறுயிரம் வருடமாக ஏழுதலையோடு குதிரையின்மேலிருந்தாளும், இடமிடாசு இன்னும் பரதேவருண்டாம். இவர்கள் பிராணபலியுந் தருவார்கள். இவர்களுக்கு,

வர்த்தகவிருத்தி	தேவர்	ஜெபிசு
தனதானியம்	,,	டகாகு
நல்லலாபம்	,,	டாசிடோகா
சந்தோடம்	,,	போட்டி
குலம்	,,	சிவரன்
வேட்டை	,,	சவா
பிசாசையோட்டும்	,,	பிட்சுமான்

இவருள் இறந்தவர்களைச் சுட்டுச் சாம்பலைப் புதைப்பார்கள். விபசாரிகளைக் கொலைசெய்வார்கள்.

சீய மதம்

இவர்கள் தேவன் சோமன்கூடம். அவர் புட்பத்தினுற்பவித்து விருட்சத்தின்கீழ்ச் செபஞ்செய்திருப்பார். ஆட்டுக் குட்டிகளைப் பலி யிடுவார். இவர்கள் சருவாங்கசவரஞ் செய்துகொண்டு சந்நியாசியாக

விருப்பார்கள். இவர்களிறந்தவரைச் சப்பான் மதத்தரைப்போற் செய்கின்றனர். கொள்ளிவைத்தலைச் சிறந்ததாக மதிக்கிறார்கள்.

பெருவியன் மதம்

இவர்கள் ஆடுமாடுகளையும், சிலசமயம் நரபலியு மிடுகின்றனர். சிறிது பாவஞ்செய்தவர்கள் தங்கள் மூக்கு, உதடு, விரல் இவைகளை அறுத்து இரத்தத்தை வடியவைக்கின்றனர். சூரிய சந்திரரை வணங்குகிறார்கள். இவர்கள் சிருட்டிகருத்தா பச்சகரமிக்கு என்னுந் தேவர். இவர் மின்னல் இடிகளைத் தூதர்களாகக்கொண்டு துட்டரைச் சிட்டிக்கின்றனராம். இவர்களுக்கு மறுபிறப்பி யுண்டென்னும் நம் பிக்கையும், தங்கை தமக்கைகளை மணம்புரிவதும் உண்டு. இந்துக் களைப்போல் சூரியசந்திர சுக்கிராதிகளை வணங்குகிறார்கள். இவர் களின் சிரஞ்சீவியான தெய்வத்தின்பேர் ஹனகா என்று கூறுகிறார்.

நியூசவுத்துலாந்து, கானடா மதங்கள்

இவர்கள் மாதா, பிதா, குரு, சூரியர்களை வணங்குவோர். அந் நால்வருமொரே தேவரெனவும், அவர் அம்பினால் பூமியைப் பிளந்து அதினின்று ஆண் பெண்களை யுண்டாக்கிப் பின்னால் உலகை யுண்டாக்கினதாகவுங் கூறுகின்றனர். ஆட்டுக்குட்டிகளும், இராசாக் களு மிறந்தபின் தேவர்க ளாவார்களென்றும் கூறுகின்றனர். ஸ்திரீ கள் சூரியனைமாத்திரம் வணங்குவர். பல ஸ்திரீகளை மணம்புரிவர். இறந்தவரைப் புதைத்து அனேக நாளானபின் எலும்பை யெடுத்துப் பூசிப்பார். இவர்கள் நதியைக் கடக்கவேண்டில் நதிபூசை செய்தே போவார்கள்.

பைகோ மதம்

இவர்கட்கு ஐந்து தேவர் உள்ளார்களாம். இதில் நாலாவது தேவன் இரண்டாயிரத் திருநூறு வருடத்துக்குமுன் இறந்தனராம். உலகம் முடிவில் தகனமாகுமாம். நன்மைக்கெல்லாம் பிசாசும் கர்த்தாவாம். இவர்கள் கோயில்களிலொன்றில் 120,000 விக்கிரகங்க ளுண்டாம். தலைகுனிந்து வணங்குவர். சிலர் வருடத்தில் 3-மாதம் பிசாசோடு வசிப்பார்களாம். சோமவாரமே தொழுகை நாளாம். இவர்கள் குமாரர்கள் ஒரே வேளை புசிப்பாராம். உண்ணுங்கால் முதற் கவளத்தை நாய்க்கிடுவராம். துக்கத்தைக் காட்ட சவரஞ்

செய்துகொள்வராம். வேறு சில மதத்தார் பண்டிகைகளையும் கொண்டாடுவாராம்.

பிலப்பியன் மதம்

இவர்கள் சூரியசந்திராதிகளை வணங்குவர். அநேக சில்லரை தேவர்களையு முடையவர்கள். சிலர் அப்பாவென்னுந் தேவனை விக்கிரக ரூபமாக வைத்து வணங்குகிறார்கள்.

மலாக்கா மதம்

இவர்கள் பேரும்பாலும் மகம்மதியமதத்தை அனுசரித்தவர்கள். சிலர் வாயுவே பரமெனக்கூறி வணங்குகின்றனர். இவர்கட்கு அனேக மந்திர தேவதைகளும் துட்டதேவதைகளு முண்டென்று கூறி விக்கிரக ரூபமாக வைத்தும் வணங்குகின்றார்கள்.

போர்னீயோ சுமித்திரா தீவுகளின் மதம்

இத்தீவுகளி லுள்ளோரில் சிலர் தூலுக்குமதத்தையும், சிலர் பிலப்பிய மதத்தையும் அநுட்டிக்கின்றார்கள். பட்சி சகுணம்பார்க்கின்றனர். கலியாணஞ் செய்துகொள்ளவேண்டில் பகைவர் தலைகளை வெட்டிச் சீராகக் கொடுக்கவேண்டுமாம். இறந்தபின் தேகமும் ஆன்மாவும் நிர்மாணத்தைப் பெறுமாம்.

ஜாவாதேச மதம்

இவர்கள் ஆதியில் சந்திர சூரியரை வணங்கி வந்தார்கள். தற்காலம் படலியா முதலிய கிறிஸ்துமதத்தரா யிருக்கின்றனர். ஆயினும், நிசுபேரியன்கள் பிசாசுகளையும், சந்திரனையும் வைத்து வணங்குகின்றனர்.

இலங்கைத்தீவார் மதம்

இவர்கள் சில்லரை தெய்வங்களையும், பிசாசையும் வணங்கி வருகின்றார்கள். இடையில் புத்தமதம் பரவி, விசேடபண்டிகையாகக் கொண்டாடி வருகிறார்கள். நவக்கிரகங்களையும் பூசிக்கின்றனர். இப்போது கிறிஸ்துமதம் பரவி மருவி வருகிறது. எல்லாம் படிப்பாளிகள்.

மலாயதீவின் மதம்

இவர்களி லனேகர் மகம்மதிய மதத்தர். ஆயினும் சிலர் காற்றையும் கடலையும் தெய்வமாக நம்பி, ஆடு கோழிகளைப் பலியிட்டு வருகின்றனர். விசேடகாற்றினும் கடலினும் எச்சில் துப்பலாகா தென்கின்றனர். பிசாசால் வியாதி வருவதாக யோசித்துப் பலியிடுகின்றனர். பஞ்ச பூதங்களையும் தெய்வமாக நம்புகின்றனர். ஆயினும், வேறோர் சிருட்டி கருத்தருண்டென்று பூசித்து வருகின்றார்கள்.

லாப்லாந்தியர் மதம்

இவர்கள் ஜூமாலா, அஜிகா, டொர்ஜன்கரா, பெயுமி என்னும் தேவர்களும், இவர்கட் குதவியாய் அநேக பிசாசுகளு மிருப்பதாக ஆடு கோழி முதலியதைப் பலியிட்டு வணங்குகின்றனர். இவரில் யாராவ திறந்தால் ஆறுமாதம் வீட்டைவிட்டு வெளியில் போகார்கள். அப்போது தகித்து விடுகின்றனர்.

மிசிசிபிதேச மதம்

இவர்கள் சூரியனை வணங்குகின்றனர். உலகங்களெல்லாம் ஒரு பெண்ணல் படைத்ததாகக் கூறுகின்றார்கள். ஓடகாம் என்னும் ஒரு பெரிய தெய்வமுள்ளதாக நம்புகின்றனர். அன்றி, அனேக சில்லரை தெய்வங்களு முண்டாம். ஆற்றில் வெள்ளம்வரில் கரடித் தோலை மரியாதையாகக் கட்டுவார்.

பிலோரிடியன் மதம்

இவர்கள் விக்கிரகாராதனை செய்கின்றனர். பிசாசை வணங்கிப் பல கோயில்களைக் கட்டியிருக்கின்றனர். அக்கோயில்களில் விக்கிரகத்தை வணங்காமல், செத்தவர்களையும், சிறந்த பொருள்களையும் வைக்க உபயோகிக்கின்றனர். சூரியன்முன் முழங்காலிட்டு வணங்கியும், தேனையும் சாம்பிராணி புகையும் ஆராதிக்கின்றனர். இவர்களில் பிலோரிடாசாதியார் தங்கள் முதற் குமாரர்களை ராசனுக்கும், தேவனுக்கும் பலியிடுகின்றனர். இறந்தவரை வாசனையோடு பெட்டிலடக்கி மூன்றுவருடம் பூசிப்பர். மறுபிறப்பும், மோட்சநரகமு முண்டென நம்புகின்றனர்.

காரபிதீவார் மதம்

இவர்கள் ரொட்டியும் நீருமருந்திக் குடிசைகளில் வசிப்பவர். தேகத்தில் பல ஆன்மாவுண்டென்றும்; அவ்வவ் வான்மா செய்த பாவத்தை மறுபிறப்பிலேனும், அது அதுவே அடையுமென்றும் நம்புகின்றனர். துட்ட பிசாசு முதலிய தேவதைகளை விக்கிரக ரூபமாகச் செய்து பூசிக்கின்றனர். வேறோர் சிரேட்ட தேவனும், சிலர் சில்லரை தேவர்களு முண்டென்றும் மிகவாய் உபாசிக்கின் றார்கள்.

பிரபஞ்ச உற்பத்தி முற்றிற்று.

திருமகள்விலாச அச்சியந்திரசாலை, சென்னை:—1939.

புத்தக விளம்பரம்

திருக்குறள் - உரையுடன் திக்கு கடிதம் விலை ரூ **2-0.**

ஷை கிளேஷ் கடிதம் .. விலை ரூ **3-0.**

ஷை 2 வால்யம் பெதர்வெயிட் பேப்பர் விலை ரூ **4-0.**

[மூலமும், பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக் குறிப்புகளுடனும், நாயனர் உருவப் படத்துடன் அழகிய காலிகோ பைண்டு செய்தது]

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளென்னும் இந்நூலானது 1330-குறள் வெண்பாக்களாற் செய்யப்பட்டு, பாஷையின் உயர்வை விளக்குவதாயும், இராஜதந்திர முதலிய பலவகைப் பட்ட சிறந்த நீதிநெறியை ஒருசேர நன்குணர்த்தத் தக்கதாயும், எல்லாச் சமயிகளானும் இனிதேற்றுக்கொள்ளப்பட்டதாயு முள்ளது. மேலும் தமிழ் பாஷையில் விருத்தி யடைய விரும்புவோர்க்கும், முத்திநெறி பெற்றுய்ய விரும்புவோர்க்கும் ஏற்ற நூலாகவும், எனையோருக்குப் பொது நூலாகவும் இருத்தலால் இதன் பெருமை குன்றின்மேலேற்றிய விளக்குபோல் விளங்குகின்றது.

இந்நூல் வேதசாரமா யிருத்தலால் ஆதியில் உரையாசிரியர்களாகிய நச்சினர்க்கினியர் முதலாயினோர் இதற்கு உரையியற்றினரென்றும், அவற்றுள் பரிமேலழகர் இயற்றிய உரை சொற்பொலிவும் பொருணயமும் நிறைந்து விளங்கியதால் சான்றோர் இவ்வுரையையே மேலாகக் கொண்டனரென்றும் வழங்கி வருகின்றன. ஆதலால், தமிழ் வேதமாகிய திருக்குறளும், இதற்குப் பரிமேலழகர் செய்த உரையுடனும், மஹா வித்துவான் திருத்தணிகை சரவணப்பெருமாளையர் அவர்களால் எளிய நடையில் செய்யப்பட்ட தெளிபொருள் விளக்கப் பதவுரையும் சேர்த்து ஒரே புத்தகமாக அச்சிட்டிருக்கின்றமையால், பண்டிதர்களுக்கும், பாமரர்களுக்கும் பயன் தரக்கூடியது.

ஷை திருக்குறள் மூலம் மட்டும் மிகச்சிறிய அளவு சிறந்த அச்சு. அழகான அடக்கவிலைப் பதிப்பு.

ராப்பர் பைண்டு விலை அணா - 3.

ஷை காலிகோ பைண்டு செய்துள்ளது .... விலை அணா - 6.

ஷை மூலமும் பரிமேலழகர் உரையும் பாக்கெட் அளவில் சிறிய எழுத்தில் அச்சிட்டுள்ளது. விலை ரூ 1-8.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

கெ. 41, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.

ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் பாடல்

மெய்கண்ட விருத்தியுரையுடன் விலை ரூ 4-0.

[டெம்மி 1+8 அளவில் 800 - பக்கங்களுக்குமேல், சுவாமிகளின் உருவப் படத்துடன் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு காலிகோ பைண்டு செய்துள்ளது]

திருவருட்பெருஞ் செல்வராகிய **தாயுமான சுவாமிகள்** தமது சுவானுபூதியினிற் பிறந்த அற்புத சின்மய மதுரமான செம்பாடற் றிரட்டினுக்கு அநேகர் பதவுரையும் பொழிப்புரையும் எழுதியிருக்கின்றனர். அவை **தாயுமானர்** உண்மைக் கருத்தைத் தெரிவிப்பனவல்ல. **தாயுமான சுவாமிகள்** வேதாந்த சித்தாந்த சமரசபாவ முடையவராதலால், அவருடைய உண்மைக்கருத்து ஈதென்று ஒவ்வொரு பாடல்களிலும் விளங்கும்படி மதுரைத் தமிழ்ச் சங்கத்து மகாவித்வான் **சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை - கலியாண சுந்தர முதலியாரால்** பதவுரையும், விசேடவுரையும், பிரமாணங்களும், உபநிடதக் கருத்துக்களும் எடுத்துக் காட்டி ஒவ்வொரு பாடலுக்கும் இன்றியமையாத பெரியோர்களுடைய ஞானசாத்திரங்களி லிருந்து மேற் கோட்பாக்கள் உதகரிக்கப்பட் டிருக்கின்றன.

கவனிப்பு:—இதுவரையில் தாயுமானருடைய பாடலுரையைப் படித்த அறிஞர் இந்த **மெய்கண்ட விருத்தியுரையையும்** படிப்பார்களானால், மற்ற உரைகளுக்கும் இவ்வுரைக்கும் உள்ள தாரதம்மியம் இன்னதென விளங்கும்.

64 - படங்களடங்கிய அஷ்டாஷ்ட லீலை யென்னும் தேவி பராக்கிரமம் விலை ரூ 1-8.

[கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஈக்காடு. இரத்தினவேலு முதலியார் அவர்கள் இயற்றியது]

சமஸ்தலோக காரண பூதையாய் ஐம்பெருந்தேவர்க்கு உற்பத்தி லய ஸ்தானமாய் பிரமேந்திராதிகட்கு எய்தமிடுக்கணைக் களைந்தும் அவரவர் இஷ்டசித்தி யருளும் கருணாநிதியாய் விளங்கும் சர்வலோக மாதாவாகிய பராசத்தியின் லீலாவிபூதிகள் தேவீ பராக்கிரம மெனப்படும். இந்நூலைத் தெள்ளிய நடையில் இயற்றி, நேரிற் கண்டாற் போல விளக்கத்தக்க அறுபத்தாநான்கு திருவுருவப் படங்கள் அமைத்து, முக்கியமான இடங்களில் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய வடநூல் மேற்கோளுங் காட்டி யிருக்கின்றன. தேவியின் பிரபாவத்தை உணருமாறு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டி யிருக்கின்றமையால் இதனை வாசிப்பவர்களுக்கு சகல புருஷார்த்தங்களும் கைவல்யமாகும்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.

திருவாசகம் உரையுடன் (புதிய பதிப்பு) விலை ரூ **3-0.**

[இதற்கு உரைபாசிரியர்: திருநெல்வேலி மணிவாசக மன்றத் தலைவரும், சைவ சித்தாந்த பேரறிஞரும், தமிழ்ப் பேராசிரியரும், தாகூர் சட்டவிரிவுரையாளரும், பல சைவசமய சித்தாந்த நூலாசிரியருமாகிய கா. சுப்பிரமணிய பிள்ளை (எம். ஏ., எம். எல்.) அட்வோகேட் அவர்களாவர். இந்நூலின்கண் மாணிக்கவாசக சுவாமிகள் உருவப்படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. 532-பக்கங்கள் கொண்டது: உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் சுத்தப் பதிப்பாக அச்சிடப்பட்டு அழுத்தமான காலிகோ பைண்டு செய்துள்ளது]

இந்நூலின் உரை ஆசிரியர் திருவாளர் **கா. சுப்பிரமணிய பிள்ளை** அவர்களை அறியாத தமிழரிரார். திருவாசகத்திற்கு உரை இதுவரையில் ஒரிருவரால் ஏற்கனவே எழுதப்பட்டிருப்பினும், இன்னுரியற்றிய உரைக்கே தமிழரிடையே பெருமதிப்பு இருந்து வருகிறது. இவ்வுரையை தமிழறிஞர்கள் யாவராலும் ஒருக்கே போற்றுந்தகையதே எனக் கூறுவது மிகையாகாது.

பட்டினத்தடிகள் அருளிய

பிரபந்தத்திரட்டு (விருத்தியுரையுடன்) விலை ரூ **3-8.**

[பட்டினத்தடிகள் திருவுருவப் படத்துடன் உயர்ந்த ஆண்டிக் கடிதத்தில் அச்சிடப்பட்டு காலிகோ பைண்டு செய்துள்ளது]

பட்டினத்தடிகளால் ஆங்காங்கு எம்மனோரை யுய்விக்கு மாத்திரையானே திருவாய்மலர்ந் தருளப்பெற்று நம்பியாண்டார் நம்பிகளால் பதினோரு திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ள பிரபந்தங்களாகிய **கோயினான்மணி மாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூ ரொருபா வொருபஃது** என்பனவற்றிற்கும், கோயிற்றிருவகவல், திருவேகம்பமாலை, திருவிசைப்பா, பொது, முதல்வன் முறையீடு, அருட் புலம்பல், இறந்த காலத்திரங்கல், நெஞ்சொடு மகிழ்தல் என்னு மிவைகளடங்கிய **திருப்பாடற் றிரட்டு, உடற்கூற்று வண்ணம்** என்பனவற்றிற்கும் அநேகர் பதவுரையும், பொழிப்புரையும் சிற்சிலவற்றிற்கு எழுதி யிருக்கின்றனர். அவைபோல் அல்லாது சென்னை பச்சையப்பன் கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதர் சைவத் திருவாளர் ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்களால் பதவுரையும், விசேடம், உதாரணம் இன்னும் இவைகளமைந்த விருத்தியுரையையும் எடுத்துக் காட்டி பெரியோர்களுடைய ஞான சாத்திரங்களிலிருந்து மேற்கோட்பாக்கள் உதகரிக்கப்பட் டிருக்கின்றன.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

எ. 41, வெங்கடாசலமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.

ஸ்ரீ பகவத்கீதை
திராவிட மஹா வியாக்கியானம் விலை ரூ 3.0.

[உயர்ந்த கிளேஸ் கடிதம்: ராயல் 1+8 சைஸ் 628 - பக்கங்கள் கொண்டது: படங்களுடன் அழகான காலிகோ பைண்டு செய்துள்ளது]

இந்த பகவத்கீதையின் மகிமையை அன்னிய தேசத்தாரே அறிந்து கொண்டாடும்போது அதை நம்மவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் வேண்டுமா? அருமையான ஞானத்தோடுகூடிய இந்த மனுஷ்யஜன்மத்தை அடைந்திருக்கும் நாம் இப்போதே இதைக்கொண்டு இந்த ஜனனமரணமாகிய ஸம்ஸார ஸமுத்திரத்திலிருந்து கரையேறும் பொருட்டு, மஹா காருண்ய மூர்த்தியாகிய அந்த பகவான் கிருஷ்ணவதாரஞ் செய்து சகல வேதாந்த சாஸ்திரங்களையும் திரட்டி சுலபமாக முக்தியடையும் வழியை இந்த கீதா சாஸ்திரத்தில் உபதேசித்திருக்கிறார். இதன் பொருளைக் கொண்டு தேரியவர்களுக்குச் சகல புருஷார்த்தங்களும் கைவல்யமாமென்பது எவரும் அறிந்த உண்மை.

ஆனால் இந்த பகவத்கீதையும், அதன் அருமையான பொருளை உணர்த்தும் பாஷ்யங்களும் வியாக்கியானங்களும் ஸம்ஸ்கிருதத்தில் இருப்பதால், அவற்றை எல்லோரும் வாசித்து அறிவது இக்காலத்தில் வெகு சிரமமாத்யமாய் இருப்பதை உத்தேசித்து இப்புத்தகத்தில் கிரந்த அக்ஷரத்தில் ஸ்லோகமும், தமிழ் அக்ஷரத்தில் ஸ்லோகமும், பதம் பதமாய் ஸ்லோகங்களைப் பிரித்து அவைகளுக்கு தமிழில் அர்த்தமும், அதனடியில் விரிவான வியாக்கியானமும் பல உபநிஷத்துமேற்கோளுடன் அத்வைதாவதானம் **ஸ்ரீமான் திருவேங்கிட சுவாமிகளால்** தெளிவாயும், எல்லோரும் அறியும் பொருட்டு இனிமையான தமிழில் விரிவாயும் எழுதப்பட்டிருக்கிறது.

நாரதர் கலகம் (4-பாகங்கள்) விலை ரூ 1-8.

இது கல்விக்களஞ்சியம்! நீதிப்பொக்கிஷம்!! அறிவுக்கடல்!!!

இதைப் படிப்பவர் எல்லா நூல்களையும் கற்ற பெரும் பயனடைவர்.

நாரதர் புரிந்த கலகங்கள் அளவிறந்தன. அக் கலகங்கள் எங்கெங்கு? யார் யாரிடத்தில்? எவ்வெப்போது எதுபற்றிச் செய்யப்பட்டன? அவற்றால் லோகத்துக்கு என்ன நன்மை யுண்டாயிற்று? என்பவைகளை புராணங்கள், உபபுராணங்கள், இதிகாசங்கள், முதலியவற்றை யெல்லாம் ஆராய்ச்சி செய்து **ஸ்ரீமான் சிறுமணவூர் - முனுசாமி முதலியாரால்** திரட்டி எழுதப்பட்டது. இது காலக்ஷேபம், பிரசங்கம் செய்வோருக்கு இன்றியமையாதது. 105 - கதைகள் அடங்கி யுள்ளன.

குறிப்பு:—எல்லா புத்தகங்களடங்கிய கிரய ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இனமாக அனுப்பப்படும்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.